அலகு 2

சமத்துவம் பெறுதல்



கற்றல் நோக்கங்கள்

- முன்முடிவு மற்றும் ஒத்தக் கருத்து ஆகியவற்றின் பொருளை அறிதல்.
- பாகுபாடு மற்றும் சமத்துவமின்மையை பற்றி புரிந்து கொள்ளுதல்.
- பாகுபாடுகளின் எதிர்மறை விளைவுகளைப் பற்றி அறிதல்.

9TI7DN

நாம் வாழும் இச்சமூகம் பல்வேறு வகைகளில் வேறுபாடுகளைக் கொண்ட சமூகக் குழுக்களைக் கொண்டதாகும். நாம் "வேற்றுமையில் ஒற்றுமை" என்பதை நம்புவதால் அத்தகைய வேறுபாடுகளைக் களைந்து பிறருடன் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பன்முகத் தன்மை எப்போதும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதோடு மக்கள் தம்மிடமிருந்து வேறுபடும் பிற மக்களிடம் பகைமை உணர்வைக் கொள்வர். அவர்கள் பிற இனத்தின் மீது ஒரு பொதுவான எண்ணத்தைக் கொண்டிருப்பது சமூகத்தில் பதற்றத்திற்கு வழி வகுக்கிறது. இது போன்ற எண்ணங்கள் பாரபட்சத்திற்கு இட்டுச் செல்கின்றன.

1. முன்முடிவு (பாரபட்சம்)

பாரபட்சம் என்பது மற்றவர்களைப் பற்றி எதிர்மறையான அல்லது தாழ்வான முறையில் கருதுவதாகும். அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளாமலேயே தவறாக முன்முடிவு எடுப்பதாகும். மக்கள் தவறான நம்பிக்கைகளையும் கருத்துக்களையும் கொண்டிருக்கும் போது பாரபட்சம் ஏற்படுகிறது.

Prejudice = pre + judge

(முன்முடிவு = முன் + முடிவு / பாரபட்சம்)

பாரபட்சம் என்ற வார்த்தை முன்முடிவினை குறிக்கிறது. முன்முடிவு என்பது மக்களின் மத நம்பிக்கைகள், அவர்கள் வாழ்கின்ற பகுதிகள், நிறம், மொழி மற்றும் உடை போன்ற பலவற்றை அடிப்படையாக கொண்டுள்ளது. பாரபட்சமானது பாலினரீதியாகவும், இனரீதியாகவும், வர்க்கரீதியாகவும், மாற்றுத்திறனாளிகள் மீதும் மற்றும் பிறவற்றிலும் காணப்படுகிறது.

உதாரணமாக, கிராமப்புற மக்களை விட நகர்ப்புற மக்களின் மனப்பான்மை மற்றும் நடத்தையானது நாகரிகமானது என்பது பாரபட்சமாகும்.

6th _ CIVICS_Unit _2.indd 222 22-03-2018 13:52:24

1.1. பாரபட்சம் உருவாவதற்கான காரணங்கள்

பாரபட்சம் உருவாவதற்கு பொதுவான சமூக காரணிகள்,

1. சமூகமயமாக்கல்

2. நிர்ணயிக்கப்பட்ட நடத்தை

3. பொருளாதார பயன்கள்

4. சர்வாதிகார ஆளுமை

5. இன மையக் கொள்கை

6. கட்டுப்பாடான குழு அமைப்பு

7. முரண்பாடுகள்

9TS3FB

2. ஒத்தக் கருத்து

முன்முடிவு வலுவாக இருக்கும்போது ஒத்தக் கருத்து உருவாகிறது. ஒத்தக் கருத்து என்பது தவறான கண்ணோட்டம் அல்லது ஏதோ ஒன்றைப் பற்றிய தவறான கருத்தாகும். எடுத்துக்காட்டாக, பெண்கள் விளையாட்டிற்கு உகந்தவர்கள் அல்ல என்பது முன்முடிவு கொள்வதாகும். ஒத்த தன்மை பற்றிய தவறான எண்ணங்கள் சிறுவயதிலேயே கற்றுக் கொள்ளப்படுகிறது. மேலும் குழந்தைகள் பொருட்கள், குழுக்கள், கருத்தியல்கள் போன்றவற்றில் வலுவான கருத்துக்களையும் தவறான எண்ணங்களையும் இளம் பருவத்திலேயே வளர்த்துக் கொள்கின்றனர். குழந்தைகள் வளரும் போது அவர்களுக்கு பொருட்கள், மனிதர்கள், நாகரிகம், நம்பிக்கை, மொழி இவற்றின் மீதான விருப்பு வெறுப்புகள் ஒத்தக் கருத்தால் மேலோங்குகிறது.

எடுத்துக்காட்டாக, ரகுவின் கண்ணில் மென்பந்து தாக்கியதால், அவன் அழத்தொடங்கினான். உடனே அவனைப் பார்த்து அனைவரும் சிரிக்கத் தொடங்கினர். ஆனால் ரகுவின் கண்ணில் மென்பந்து தாக்கியபோது அவனது நண்பன் மணிக்கு உண்மையில் வருத்தமாக இருந்தது. ஆனால் அவனும் மற்றவர்களுடன் இணைந்து சிரிக்கத்தான் செய்தான்.



இதிலிருந்து, நாம் ஒருவர் மீதான தவறான எண்ணத்தை ஏற்படுத்திக்கொள்ளும் போது, அங்கு ஒத்தக் கருத்து உருவாகிறது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். மேற்கூறிய எடுத்துக்காட்டிலிருந்து பெண்கள் அழுவார்கள் என்றும் ஆண்கள் அழக்கூடாது என்ற பொதுவான கருத்தை வலியுறுத்துகிறோம். ஆகையால்தான் ரகு வலியால் அழுதபோது மற்ற அனைவரும் அவனை பார்த்து சிரித்தனர். இதுவே ஒத்தக் கருத்துள்ள எண்ணமாகும்.

பாலின அடிப்படையில் ஒத்தக் கருத்தினை பற்றி திரைப்படங்கள், விளம்பரங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களில் சித்தரிக்கப்படுவதை காணலாம். சலவைக்கட்டி, சலவை இயந்திரம், பாத்திரங்கழுவி தொடர்பான அனைத்து விளம்பரங்களிலும் பெண்களையே முன்னிறுத்துகின்றனர். இரு சக்கர வாகனம் போன்ற விளம்பரத்தில் ஆண்களையே முன்னிறுத்துகின்றனர். இவ்வாறு பாலின அடிப்படையில் ஒத்தக் கருத்து இருப்பதை காணலாம்.

3. சமத்துவமின்மை மற்றும் பாகுபாடு

சமத்துவமின்மை என்பது ஒருவர் மற்றொருவரை பாகுபாட்டுடன் நடத்துவது ஆகும். சாதி ஏற்றத்தாழ்வு, மதச் சமத்துவமின்மை, இன வேறுபாடு அல்லது பாலின வேறுபாடு போன்ற பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் பாகுபாட்டை வளர்க்கின்றன.

மக்களுக்கெதிரான எதிர்மறையான செயல்களே பாகுபாடு எனப்படும். நிறம், வர்க்கம், மதம், பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு ஏற்படலாம். வெண்மை

6th _ CIVICS_Unit _2.indd 223 22-03-2018 13:52:25

இன நிற வெறிக்கு முடிவு

உங்களுக்குத் தெரியுமா?

தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபரான நெல்சன் மண்டேலா அவர்கள், 27 ஆண்டுகள் சிறைவாழ்க்கைக்குப்பின் 1990ஆம் ஆண்டு விடுதலையானார். இவர் தென்னாப்பிரிக்காவிலிருந்த இன நிற வெறிக்கு முடிவு கட்டினார். தென்னாப்பிரிக்காவில் உலகளவில் அமைதி நிலவவும், மனித உரிமைகளுக்கான போராட்டத்தில் முன்னோடியாகவும் திகழ்ந்தார்.



தோற்றமுடைய மக்களிடமிருந்து கருப்பு நிற தோற்றமுடைய மக்களை வேறுபடுத்துவதும், தாழ்ந்த வகுப்பினரைக் காட்டிலும் உயர்ந்த வகுப்பினருக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதும், சிறுமியர்களைக் காட்டிலும் சிறுவர்களை திறமை வாய்ந்தவர்களாக இருப்பார்கள் போன்ற கருத்துக்கள் சமத்துவமின்மை எனக் கூறலாம்.

எந்தவொரு குடிமகனுக்கும் எதிராக மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்று இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 15(1) அறிவுறுத்துகிறது.

3.1. சாதி பாகுபாடு

இந்தியாவில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டிற்கான மிக முக்கிய காரணம் சாதி முறை ஆகும். ஆரம்ப காலங்களில் சமுதாயம் என்பது தொழில் அடிப்படையில் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்ததையே வர்ணாசிரம முறை என அறியப்பட்டது.

இந்தியாவில் சாதி ஒடுக்குமுறைக்கெதிராக பலரும் போராடி வருகின்றனர். இவர்களுக்கு முன்னோடியாக

டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கார்

உங்களுக்குத் தெரியுமா?



- இவர் பாபா சாஹேப் என பிரபலமாக அழைக்கப்படுகிறார்.
- இவர் இந்திய சட்ட நிபுணராகவும், பொருளாதார நிபுணராகவும், அரசியல்வாதியாகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார்.
- இவர் 1915 இல் எம்.ஏ. பட்டத்தை பெற்றார். பின்னர் 1927 இல் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி பட்டத்தை பெற்றார். அதற்கு முன்னர் இலண்டன் பொருளாதாரப் பள்ளியில் D.Sc பட்டத்தையும் பெற்றிருந்தார்.
- இவர் அரசியலமைப்பு நிர்ணய சபையின் வரைவு குழுவின் தலைவராக இருந்தார். எனவே, இவர் இந்திய அரசியலமைப்பின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

9U1YGY

- இவர் சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பணியாற்றினார்.
- இவரது மறைவுக்குப் பின்னர், 1990 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

6th _ CIVICS_Unit _2.indd 224 22-03-2018 13:52:26

திகழ்ந்தவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் ஆவார். தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த இவர் சிறுவயதிலேயே சாதிப்பாகுபாட்டின் காரணமாக பெரிதும் பாதிப்புக்கு உள்ளானார். பிறகு இவர் இந்திய மக்களிடையே சமத்துவம் நிலவ பெரிதும் பாடுபட்டார்.

3.2. பாலினப் பாகுபாடு

பாலினப் பாகுபாடு என்பது இந்தியாவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே நிலவும் உடல்நலம், கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியல் சமத்துவமின்மை போன்றவற்றைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக ஒரு பெண் பள்ளிப்படிப்பை முடித்தப்பின் கல்லூரிக்கு செல்ல அனுமதி இல்லை. இதே போன்று பெரும்பான்மையான பெண்கள் அவர்கள் விரும்பும் வாழ்க்கையை தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்படாமல் திருமணத்தில் தள்ளப்படுகின்றனர். இன்னும் ஒரு சில குடும்பங்களில் பெண்பிள்ளைகள் நவீன ஆடைகளை அணிந்திட அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் அக்குடும்பத்தின் ஆண்பிள்ளைகள் அவ்வகையான ஆடைகளை அணிந்திட அனுமதிக்கப்படுகின்றனர். இதுவே பாலினப் பாகுபாடு ஆகும்.

3.3. மத பாகுபாடு

மதம் சார்ந்த பாகுபாடு என்பது நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு தனிநபரின் மீதோ அல்லது குழுவினர் மீதோ சமத்துவமின்றி நடத்துவது ஆகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வெவ்வேறு மதங்களின் மக்களுக்கிடையே பிரச்சினைகள் நிலவுகின்றன. சில மக்கள் பொது இடங்களில் குறிப்பாக, மத வழிபாட்டு தலங்களில் நுழைய அனுமதி இல்லை. ஏனெனில் அவர்கள் வேறொரு மதத்தை சேர்ந்தவர்கள் என்பதால், சில மதத்தவர்கள் தங்கள் சடங்குகள் மற்றும் வாழ்க்கை முறையின் காரணமாக ஒருவருக்கொருவர் முரண்படுகிறார்கள்.

3.4. சமூக-பொருளாதார சமத்துவமின்மை

சமூக-பொருளாதார தளத்தில் வளர்ச்சியின் பயன்கள் சமமாக பரவுவதில்லை. எனினும் மனித மேம்பாட்டின் சமத்துவமின்மையைவிட வருவாய் பிரிவின் சமத்துவமின்மை மிக அதிகமாகக் காணப்படுகிறது. குறைவான தொழிற்வளர்ச்சி, குறைவான வேளாண் உற்பத்தி, குறைவான மனித மேம்பாடு ஆகியவை குறைந்த வருவாய் மாவட்டங்களுடன் தொடர்புடையவை. அதே போல் கல்வியறிவு குறைந்த விகிதம் உள்ள மாவட்டங்கள் குறைவான பாலின விகிதத்துடன் காணப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

எழுத்தறிவு விகிதம் – 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு

அதிகம்			குறைவு		
வ.எண்	மாவட்டத்தின் பெயர்	விகிதம்	வ.எண்	மாவட்டத்தின் பெயர்	விகிதம்
1	கன்னியாகுமரி	91.75%	1	தருமபுரி	68.54%
2	சென்னை	90.18%	2	அரியலூர்	71.34%
3	தூத்துக்குடி	86.16%	3	கிருஷ்ணகிரி	71.46%
4	நீலகிரி	85.20%	4	விழுப்புரம்	71.88%

ஆதாரம் : censusindia.gov.in

6th _ CIVICS_Unit _2.indd 225 22-03-2018 13:52:26

உங்களுக்குத் தெரியுமா?

பாலின விகிதம் – 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு
தலா ஆயிரம் ஆண்களுக்கு நிகரான பெண்களின் எண்ணிக்கை

அதிகம்			குறைவு		
வ.எண்	மாவட்டத்தின் பெயர்	பாலின விகிதம்	வ.எண்	மாவட்டத்தின் பெயர்	பாலின விகிதம்
1	நீலகிரி	1041	1	தருமபுரி	946
2	தஞ்சாவூர்	1031	2	சேலம்	954
3	நாகப்பட்டிணம்	1025	3	கிருஷ்ணகிரி	956
4	தூத்துக்குடி	1024	4	இராமநாதபுரம்	977

ஆதாரம் : censusindia.gov.in

3.5. சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டினை நீக்குவதற்கான தீர்வுகள்:


இந்திய சமுதாயத்தில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டினை அகற்றுவதற்கான தீர்வுகளாக கீழ்கண்டவற்றை மேற்கொள்ளலாம்.

1. அனைவருக்கும் தரமான உடல்நலம் மற்றும் கல்வியினை கிடைக்கச் செய்தல்.
2. தற்போதய பாலின பாரபட்சத்தைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
3. பாலின ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதற்காக பொது வாழ்வில் மற்றும் நிறுவனத்தில் பெண்களின் திறன்களை வெளிப்படுத்துதல்.
4. மற்ற மதங்களை பற்றி தெரிந்து கொள்ளும் வெளிப்படையான மனநிலை வளர்த்தல்.
5. வகுப்பறையில் குழுவாக சாப்பிடுவதை ஊக்குவித்தல் மூலம் சாதி, மதம், பாலினம் ஆகியவற்றின் எந்தவித பாரபட்சமின்றி மாணவர்களை ஒன்றாக இணைக்கச் செய்தல்.
6. பல தரப்பட்ட மக்களிடமும் பேசுதல்.
7. சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துதல்.

3.6 இந்திய அரசியலமைப்பு மற்றும் சமத்துவம்

ஒரு அரசியலமைப்பு என்பது நாட்டின் நிர்வாகத்தை வழிநடத்தும் விதிகள் மற்றும் விதிமுறைகளின் தொகுப்பாகும். இந்திய அரசியலமைப்பின் 14–வது பிரிவு சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்கிறது. மேலும் நாட்டிற்குள் வசிக்கும் அனைவருக்கும் பாதுகாப்பினையும் தேவையற்ற பாகுபாட்டினையும் தடை செய்கிறது.


நமது அரசியலமைப்பு நிலத்தால் வேறுபட்டிருப்பதை கூறுகிறது. எனவே சமத்துவமானது அனைவராலும் ஏற்றுக்



6th _ CIVICS_Unit _2.indd 226 22-03-2018 13:52:29

சாதனையாளர்கள்

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
(1931-2015)



அவுல் பகீர் ஜெய்னுலாப்தீன் அப்துல் கலாம்
இராமேஸ்வரத்தில் தமிழக இஸ்லாமியக்
குடும்பத்தில் பிறந்தார். இவர் இந்தியாவின் பதினோராவது
குடியரசுத் தலைவராகப் பணியாற்றினார்.
இவர் மக்களின் குடியரசுத் தலைவர் என்று
அன்புடன் நினைவு கூறப்படுகின்றார்.

இவர் இராமநாதபுரத்தில் பள்ளிப்படிப்பினையும்,
திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் பட்டப்படிப்பினையும் முடித்தார்.
சென்னை தொழில்நுட்பக் கல்லூரியில் விண்வெளி பொறியியல் படிப்பிற்கு
பிறகு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் சேர்ந்தார்.

இளமைக் காலத்தில் அப்துல் கலாமின்
குடும்பம் வறுமையில் வாடியது.
எனவே, தனது குடும்பத்திற்கு உதவியாக
செய்தித் தாள்களை விற்பனை செய்தார்.

இவர் இந்தியாவின் மிக உயர்ந்த
விருதான பாரத ரத்னா (1997) உள்ளிட்ட
பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார்.

இவர் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்,
அவற்றுள் புகழ் பெற்றவை இந்தியா 2020,
அக்னிச்சிறகுகள், எழுட்சி தீபங்கள்,
தி லூமினஸ் பார்க், மிஷன் இந்தியா.

அவரது சிறந்த பணியால்
"இந்தியாவின் ஏவுகணை மனிதர்"
என்ற பட்டத்தை அவருக்கு அளித்தது.

திரு. விஸ்வநாதன் ஆனந்த்



விஸ்வநாதன் ஆனந்த் சென்னையில் ஒரு நடுத்தரக்
குடும்பத்தில் பிறந்தார். அவரது தாயார் சதுரங்க விளையாட்டில்
ஆர்வம் அதிகம் கொண்டிருந்தபடியால் ஆனந்திற்கும் ஐந்து வயதிலேயே
சதுரங்க விளையாட்டைக் கற்றுக் கொடுத்தார். அதுவே,
அவரது எதிர்கால வாழ்க்கையில் சதுரங்க வீரராக
திகழ அடிப்படையாக அமைந்தது.

ஆனந்த் 2000, 2007, 2008, 2010
மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்
சதுரங்க விளையாட்டின் உலகச் சாம்பியனாக விளங்கினார்.

தனது 14 வது வயதில் உலக இளையவர்
சதுரங்கப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றார்.

1988 ஆம் ஆண்டு இந்தியாவின்
முதல் கிராண்ட் மாஸ்டரானார்.

நாட்டில் விளையாட்டு வீரர்களுக்கு
வழங்கப்படும் உயரிய விருதான
ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதை
1991-92 ல் பெற்ற முதல் வீரராவார்.

2007 ஆம் ஆண்டில் நாட்டின் இரண்டாவது
உயரிய விருதான பத்ம விபூஷன் விருதினைப் பெற்றார்.

செல்வி. செ. இளவழகி



செ. இளவழகி சென்னை வியாசர்பாடிப் பகுதியில்
உள்ள ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவராவார்.
இவரது தந்தை ஒரு ஆட்டோ ஓட்டுநர்.

2008 ஆம் ஆண்டில் பிரான்ஸின் கேனஸ் நகரின்
பாலைஸ் தேஸ் விழாப் போட்டிகளில்
தனது முதல் கேரம் சாம்பியன் பட்டத்தை வென்றார்.

அதே ஆண்டில் தேசிய கேரம் சாம்பியன்
போட்டியில் முந்தைய உலக சாம்பியனான
ரேஷ்மி குமாரியை தோற்கடித்து வெற்றிபெற்றார்.

திரு. மாரியப்பன் தங்கவேலு



மாரியப்பன் தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் பிறந்தவர்.
இவரது தாயார் தனி நபராக இருந்து செங்கல் சூளையில்
வேலை செய்தும் காய்கறிகள் விற்பனை செய்தும் நாள் ஒன்றுக்கு
ரூ.100/- ஊதியம் பெற்று இவரை வளர்த்தார்.

இவருக்கு விபத்தின் காரணமாக வலது காலில்
நிரந்தர பாதிப்பினை ஏற்படுத்தியது. இத்தகைய பின்னடைவு
இருந்தபோதும் பள்ளிக்கல்வியினை முடித்தார்.

இவர், "நான் பிற மாணவர்களைவிட வேறுபாடு
கொண்டவன் என நினைத்ததில்லை" எனக் கூறுகிறார்.

2016 ஆம் ஆண்டு ரியோ பாராலிம்பிக்
ஆண்கள் உயரம் தாண்டுதல் T - 42 போட்டியில்
1.89 மீட்டர் உயரம் தாண்டி தங்கப் பதக்கம் வென்றார்.

மேற்கண்ட சாதனையாளர்கள் பல்வேறுபட்ட பின்புலத்தில் பிறந்து
பிரச்சனைகளை சந்தித்து வாழ்வில் சாதனை படைத்துள்ளார்கள் என்பதை இதன்மூலம் அறியலாம்.

6th _ CIVICS_Unit _2.indd 227 22-03-2018 13:52:30

கொள்ளகூடியதாகும். சமுதாயத்தில் சமத்துவத்தை உறுதி செய்வதற்கான இரண்டு முக்கியமான காரணிகள் பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல் மற்றும் சுதந்திரத்தை உறுதிபடுத்துதல் ஆகும். பல்வேறு வகையான சுதந்திரம் என்பது அவரவர் மதத்தை பின்பற்றவும், மொழியைப் பேசவும், விழாக்களைக் கொண்டாடவும், கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதும் ஆகும்.

அரசியலமைப்பு என்பது விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் சட்டவடிவமைப்பாகும், இதன்படி ஒரு நாடு நிர்வகிக்கப்படும். சமத்துவம் என்பது தீண்டாமையை ஒரு குற்றமாகக் காண்பதாகும். இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவு 17–ன்படி இந்தியாவில் தீண்டாமை ஒழிக்கப்பட்டது. எந்த வகையிலும் தீண்டாமையைப் பின்பற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இன்றும் கூட நாடு முழுவதும் பல்வேறு வகையான பாகுபாடு காணப்படுகிறது. பெண்கள், விவசாயிகள், பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூக வகுப்பினர் உள்ளிட்டோர் இன்னும் இந்தியாவில் சமத்துவத்திற்காகப் போராடி வருகிறார்கள்.

மீள்பார்வை:

- ❖ முன்முடிவு (பாரபட்சம்) என்பது மற்றவர்களைப் பற்றி எதிர்மறையான அல்லது தாழ்வான முறையில் கருதுவதாகும்.
- ❖ ஒத்தக் கருத்து என்பது ஏதாவது ஒன்றைப் பற்றிய தவறான கண்ணோட்டம் அல்லது கருத்தாகும்.
- ❖ பாகுபாடு என்பது மக்களின் மீது ஏற்படுத்திக்கொள்ளும் தவறான செயலாகும். பாகுபாடானது நிறம், வர்க்கம், மதம், பாலினம் போன்றவற்றின் அடிப்படையில் ஏற்படுவதாகும்.
- ❖ சமத்துவமின்மை மற்றும் பாகுபாடிற்கான மிகவும் முக்கிய காரணம் சாதி அமைப்பாகும்.
- ❖ பாலின பாகுபாடு என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான சுகாதாரம், கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியல் ஏற்றத்தாழ்வுகளை குறிக்கிறது.
- ❖ மத பாகுபாடு என்பது மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு தனி நபரையோ அல்லது குழுவினரையோ சமத்துவமின்றி நடத்துவதாகும்.

கலைச் சொற்கள்

முன்முடிவு / பாரபட்சம் - ஒருவர் குறித்து எதிர்முறையாக முடிவு செய்தல் அல்லது தாழ்வாக மதிப்பிடுதல்.

ஒத்தக் கருத்து - நிலையான ஒத்த வடிவத்தை ஏற்படுத்துவது.

பாகுபாடு - மக்களை சாதி, நிறம், மதம், பாலினம் ஆகிய காரணங்களுக்காக சமத்துவமின்றி நடத்துவதாகும்.

சமத்துவமின்மை - சமூக ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ அல்லது இரண்டிலுமோ சமத்துவம் இல்லாமலிருத்தல்.

6th _ CIVICS_Unit _2.indd 228 22-03-2018 13:52:30

அரசமைப்புச் சட்டம் - ஓர் அரசோ அல்லது அமைப்பையோ நிர்வகிக்க அல்லது மேலாண்மை செய்ய முன்கூட்டியே வடிவமைக்கப்– பட்டிருக்கும் அடிப்படை கொள்கைகள்.

பயிற்சிகள்

I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. பின்வருவனவற்றில் எது பாரபட்சத்திற்கான காரணம் அல்ல

அ) சமூகமயமாக்கல்

ஆ) பொருளாதார நன்மைகள்

இ) அதிகாரத்துவ ஆளுமை

ஈ) புவியியல்

2 பாலின அடிப்படையில் நடத்தப்படும் பாகுபாடு குறிப்பிடுவது

அ) பாலின பாகுபாடு

ஆ) சாதி பாகுபாடு

இ) மத பாகுபாடு

ஈ) சமத்துவமின்மை

3. பாலின அடிப்படையிலான ஒத்தக் கருத்து உருவாதல் பெரும்பாலும் சித்தரிக்கப்படுவது

அ) திரைப்படங்கள்

ஆ) விளம்பரங்கள்

இ) தொலைகாட்சி தொடர்கள்

ஈ) இவை அனைத்தும்

4. ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் எழுதிய புத்தகம்/கள்

அ) இந்தியா 2020

ஆ) அக்கினிச்சிறகுகள்

இ) எழுச்சி தீபங்கள்

ஈ) இவை அனைத்தும்

5. ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட ஆண்டு

அ) 1997 ஆ) 1996
இ) 1995 ஈ) 1994

6. விஸ்வநாத் ஆனந்த் முதன்முதலில் கிராண்ட் மாஸ்டரான ஆண்டு

அ) 1985 ஆ) 1986
இ) 1987 ஈ) 1988

7. இளவழகி சிறந்து விளங்கிய விளையாட்டு

அ) செஸ் ஆ) மல்யுத்தம்
இ) கேரம் ஈ) டென்னிஸ்

8. அரசியலமைப்பின் எந்தப்பிரிவின் கீழ், எந்தவொரு குடிமகனுக்கும் எதிராக மதம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் ஆகிய அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது எனக் கூறுகிறது?

அ) 14 (1) ஆ) 15 (1)
இ) 16 (1) ஈ) 17 (1)

9. பி.ஆர். அம்பேத்கார் அவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட ஆண்டு

அ) 1990 ஆ) 1989
இ) 1988 ஈ) 1987

10. 2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் அதிகமான கல்வியறிவு பெற்றுள்ள மாவட்டம்

அ) நாமக்கல் ஆ) சேலம்
இ) கன்னியாகுமரி ஈ) சிவகங்கை

6th _ CIVICS_Unit _2.indd 229 22-03-2018 13:52:30

II. பொருத்துக:

1. பாரபட்சம் – தீண்டாமை ஒழிப்பு
2. ஒத்தக் கருத்து உருவாதல் – மற்றவர்களை காட்டிலும் சிலரை தாழ்வாக நடத்துவது
3. பாகுபாடு – சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்
4. பிரிவு 14 – தவறான பார்வை அல்லது தவறான கருத்து
5. பிரிவு 17 – பிறரை பற்றி எதிர்மறையாக மதிப்பிடுதல்

III. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. _____ என்பது மற்றவர்களைப் பற்றி எதிர்மறையாக அல்லது தாழ்வான முறையில் கருதுவதாகும்.
2. _____ ஆம் ஆண்டு ஏ.பி.ஜே. அப்துல்கலாம் பிறந்தார்.
3. இந்தியாவில் மிக உயர்ந்த விளையாட்டு விருதான ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருதினை முதன் முதலில் பெற்றவர்_____
4. சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர்_____
5. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குறைந்த பாலின விகிதம் உள்ள மாவட்டம் _____

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளி:

1. பாரபட்சம் என்றால் என்ன?
2. ஒத்தக் கருத்து என்றால் என்ன?
3. பாகுபாடு என்றால் என்ன?
4. இந்திய அரசியலமைப்பின்படி எந்த பிரிவுகள் சமத்துவத்தை பற்றி கூறுகிறது?

V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி:

1. பாரபட்சத்திற்கான காரணங்களை கூறுக.
2. பாகுபாட்டிற்கான ஏதேனும் இரண்டு வகைகளை எழுதுக.
3. இந்திய சமுதாயத்தில் சமத்துவமின்மை மற்றும் பாகுபாட்டை நீக்குவதற்கான தீர்வுகளை விவரி.

VI. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள்:

1. வகுப்பறையை சிறு குழுக்களாக பிரித்து, பாகுபாடு ஏற்படுவதற்கான காரணங்களைப் பற்றி கலந்துரையாடி அறிக்கை ஒன்றினை எழுதவும்.
2. பாரபட்சம் மற்றும் பாகுபாடு ஆகியவற்றை எதிர் கொண்ட நபர்கள் பற்றி தகவல்களை சேகரிக்கவும்.

VII. உயர் சிந்தனை வினா:

1. *இந்தியாவில் நிகழும் பல்வேறு பாகுபாட்டினை விவரி.*

VIII வாழ்வியல் திறன்:

1. உங்கள் கிராமத்தில் பாரபட்சம் மற்றும் பாகுபாடுகளுக்கு எதிராக நீங்கள் எவ்வாறு போராடுவீர்.

IX. இணைய வளங்கள்:

1. http://www.ncsc.nic.in/
   (The National Commission for Scheduled Castes)
2. http://ncst.nic.in/
   (The National Commission for Scheduled Tribes)
3. http://www.ncw.nic.in/
   (The National Commission for Women)
4. Censusindia.gov.in

6th _ CIVICS_Unit _2.indd 230 22-03-2018 13:52:30

www.tntextbooks.in

அலகு 1

தேசியச் சின்னங்கள்



கற்றல் நோக்கங்கள்

- இந்தியாவின் இயற்கை தேசியச் சின்னங்களை அறிதல்.
- இயற்கையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளல்.
- இந்தியாவின் பிற தேசிய சின்னங்களை அறிந்து அவற்றைப் போற்றுதல்.
- இந்திய தேசிய விழாக்களை அறிந்து கொண்டாடுவதில் மகிழ்ச்சி கொள்ளல்.

9KKGIL

நுழையுமுன்

இப்பாடம் இந்தியாவின் இயற்கை தேசியச் சின்னங்கள் மற்றும் பிற தேசியச் சின்னங்களைப் பற்றிய தகவல்களை வழங்குகிறது. தேசிய விழாக்களை விவரிக்கிறது.

வேலனும் பொன்னியும் புலிவனம் என்ற காட்டுக்குக் காணுலா சென்றிருந்தார்கள். காட்டுக்குப் போகிறோம் என்ற எதிர்பார்ப்பில் அவர்களுடைய மனது உற்சாகத்திலும் சாகச உணர்விலும் வானத்தில் பறக்க ஆரம்பித்தது. அவர்களுக்கு வழிகாட்டியாக காட்டுயிர் ஆராய்ச்சியாளர் வீணா வந்திருந்தார். அந்தக் காட்டின் ஊடாக பழம்பெருமை வாய்ந்த ஆறு ஒன்று பாய்ந்து கொண்டிருந்தது. கடல் மட்டத்திலிருந்து 2,000 மீட்டர் உயரம் கொண்ட மலைப்பகுதிகளும் அந்தக் காட்டில் இருந்தன.

திட்டமிட்டபடி காட்டின் எல்லைவரை அவர்கள் வாகனத்தில் சென்றடைந்துவிட்டார்கள். "உங்களுக்காகத்தான் காத்திருந்தேன்" என்றபடியே, அந்தக் காட்டைப் பார்க்க ஆவலுடன் வந்திருக்கும் 'குட்டி ஆராய்ச்சி'யாளர்களை வனத்துறை அலுவலர் மணிமாறன் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அவரிடம் வேலனையும் பொன்னியையும் வீணா அறிமுகப்படுத்தி வைத்தார். இனிமேல் காட்டுப் பாதைக்குள் வழக்கமான வாகனங்கள் செல்ல முடியாது. மின்கலன்களால் இயங்கும்

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 173 14/08/18 12:45 PM

புகை வெளியிடாத, கண்ணாடியால் மூடப்பட்ட. வாகனத்தில்தான் செல்லமுடியும். வனத்துறை அலுவலர் மணிமாறனுடன் வீணா குழுவினர் காட்டின் எல்லையில் நின்றிருந்த அந்த வாகனத்தில் ஏறிக்கொண்டார்கள்.

"நாம் இப்போது காட்டுக்குச் செல்கிறோம். புலியைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் உங்களுக்கு இருக்கும். அதிர்ஷ்டமிருந்தால் புலியைப் பார்க்கலாம். ஒரு காட்டின் மையஅச்சு புலிதான் என்றாலும், எண்ணற்ற பறவைகள், பூச்சிகள், ஊர்வன, நீர் – நிலம் இரண்டிலும் வாழும் இருவாழ்விகள் எனப் பலவும் சேர்ந்ததுதான் ஒரு காடு. புலியைப் பற்றி மட்டுமே யோசிக்காமல் காட்டில் தென்படும் உயிரினங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் நேரில் பார்த்து ரசிக்கலாம். அதேநேரம் காட்டுக்குள் சத்தமாக பேசக் கூடாது" என்றார் மணிமாறன்.

அவர்கள் புறப்பட்ட சிறிது நேரத்தில் ஒரு தாமரைத் தடாகத்தைக் கடந்தார்கள். அந்த வாகனம் மெதுவாகவே சென்றது. தாமரைத் தடாகத்தில் தாமரை மலர்கள் அழகுற மலர்ந்து சிரித்தன. "தாமரையில் பல வகைகள் உண்டு. இளஞ்சிவப்பு நிறத்தில் உள்ள தாமரையை செந்தாமரை என்கிறோம். தனித்தன்மை மிகுந்த வடிவமைப்பைக் கொண்டது தாமரை மலர்" என்று வீணா கூறினார்.

அந்தத் தடாகத்துக்கு அருகிலிருந்த ஒரு பெருமரத்துக்குப் பின்னால், மயில் ஒன்று தோகை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. மரத்தின் இந்தப் பக்கம் இருந்து சத்தம் போடாமல் வேலனும் பொன்னியும் அதை ரசித்தார்கள். "மணிமாறன் மாமா, மழை வந்தா மயில் தோகை விரித்து ஆடும் என்று சொல்வார்கள். அப்போ இப்போது மழை வருமா" என்று பொன்னி கேட்டாள்.

"வரலாம் .மழை வந்தால் மயில் தோகை விரித்து ஆடும் என்பது உண்மைதான். மயில் தோகை விரித்து ஆடுவதைக் கண்ட குறுநில மன்னன் ஒருவர் மயில் குளிருக்கு நடுங்குகிறதோ எனக் கருதி தன் போர்வையைக் கொடையாக அளித்தாராம். இவர் பெருமை வாய்ந்த சங்ககால தமிழகத்தைச் சேர்ந்தவரும், கடையெழு வள்ளல்களுள் மதிப்பிற்குரிய ஒருவருமான பேகன் என்னும் குறுநில மன்னன் ஆவார்.



உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாட்டில் புதுக்கோட்டைமாவட்டத்தில் உள்ள விராலிமலையில் மயில்களுக்கான சரணாலயம் உள்ளது.

"மயில் நம் தேசியப் பறவைன்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். நம் பாரம்பரியத்திலும் கலைகளிலும் மயிலுக்கு நீண்டகாலமாக இடம் இருந்திருக்கு. அழகும் கம்பீரமும் நிறைந்த அந்தப் பறவை நாடு முழுவதும் காணப்படுவதே, அது தேசியப் பறவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முக்கியக் காரணம்." என்றார் மணிமாறன்.

அந்த வனத்திற்குள் சிறு இயந்திர ஒலிகூட எழாமல் வாகனம் அமைதியாகச் சென்றுகொண்டிருந்தது. இரு புறங்களிலும் காணப்பட்ட வனத்தின் காட்சிகளைக் கண்கொட்டாமல் ரசித்தபடி வந்தனர்.

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 174 14/08/18 12:45 PM

"இப்ப நாம் ஆற்றின் கரையை நெருங்கிட்டோம். இனிமே சிறிது தொலைவுக்கு ஆற்றின் கரையோரமாகத்தான் போகணும். இந்த ஆற்றில் நீங்கள் எதிர்பார்க்காத ஒரு புதிய விலங்கை உங்களுக்குக் காட்டப் போகிறேன். சத்தமில்லாமல் காத்திருந்தால், நிச்சயமாக அதைப் பார்க்கலாம். எல்லோரும் உங்கள் பைனாகுலரை (Binocular) எடுத்துக்குங்க" என்றார் மணிமாறன்.

காட்டுக்குப் போவதென்றால் பைனாகுலருடன்தான் வரவேண்டுமென்று வீணா முன்னதாகவே சொல்லியிருந்தார். வேலனும் பொன்னியும் தெரிந்தவர்களிடம் அதைக் கேட்டு வாங்கி வந்திருந்தார்கள். பைனாகுலரைக் கண்ணில் பொருத்தி, ஆற்றை நோக்கிச் சாய்ந்தவாறு புதர் போல மண்டியிருந்த ஒரு மரத்தின் இடைவெளி வழியாகப் பார்த்தார்கள். "ஏதோ கரியால் முதலை மாதிரி ஓர் உயிரினம் நீந்திப் போகுது போலிருக்கிறதே" என்று வீணா கூறினார். காலை சூரியன் எதிர்ப்புறத்தில் இருந்து அடித்ததால், தெளிவாகப் பார்க்க முடியவில்லை. "சூரியன் கண்ணில் படாத மாதிரி நின்றுகொண்டு கவனமாகப் பாருங்கள், அது கரியால் இல்லை." என்றார் மணிமாறன்.

"ஆமா, அது ஏதோ மீன் போலல்லவா இருக்கிறது" என்றார் வீணா. "அது மீன் இல்லை, நீர்வாழ் பாலூட்டியான ஓங்கில் (டால்பின்)"

"என்னது டால்பினா? கடலில் தாவித் தாவி விளையாட்டு காட்டுமே, அது எப்படி ஆற்றுக்கு வரும்? " என்று வேலனும் பொன்னியும் ஒரே நேரத்தில் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

"நம் நாட்டில் ஆற்று ஓங்கில்களும் வாழ்கின்றன. தொலைவிலிருந்து பார்க்கும்போது, நீருக்கு வெளியே நீண்டிருக்கும் அதன் நீண்ட வாயும் கரியால் முதலையின் வாயும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும். ஆனால், இரண்டும் வேறுவேறு. வௌவால்களைப் போலவே இந்த ஓங்கில்களும் மீயொலி அலைகளைப் பயன்படுத்தி இரையைப் பிடிக்கின்றன, இவற்றின் பார்வைத்திறன் குறைவு"

" ரொம்ப சுவாரசியமான தகவலா இருக்கே" என்றான் வேலன்.

"அது சரி, நாம் பார்த்துக்கொண்டிருக்கும் இந்த ஆற்றின் பெயர் என்ன தெரியுமா?"

"கங்கை நதிப்புரத்து கோதுமைப் பண்டம்" என்று பாரதியார் புகழ்ந்து பாடினாரே, அந்த கங்கை ஆறுதானே? இங்கே வர்றதுக்கு முன்னாடியே இந்தக் காட்டைப் பற்றி சில விஷயங்களை தெரிஞ்சுக்கிட்டுப் போ என்று அப்பா சொல்லியிருந்தார். அதனால படிச்சு தெரிஞ்சுக்கிட்டேன். நான் சொன்னது சரியா?" என்று கேட்டாள் பொன்னி.

"சந்தேகமே இல்லாமல் சரி."

"2,525 கி.மீ. தொலைவுக்குப் பாயும் இந்தியாவின் நீளமான நதியும் இதுதான் தெரியுமா?" என்று ஆச்சரியப்படுத்தினான் வேலன்.

"பிரம்மபுத்திரா 3,848 கி.மீ நீளமுடையது என்றாலும் அது இந்தியாவில் பாயும் தொலைவு குறைவுதான். அதனால், வேலன் சொன்னதும் சரிதான்" என்றார் வீணா.

"நிறைய விஷயங்களைப் பார்த்துட்டோம். இப்போதைக்கு இந்த மாம்பழங்களைச் சாப்பிட்டுப் பசியாறுங்கள்" என்று மாம்பழத் துண்டுகளை எல்லோருக்கும் கொடுத்தார் மணிமாறன்.

"இந்த மாம்பழம் ரொம்ப சுவையாக இருக்கே. இது என்ன வகை?" என்று கேட்டார் வீணா.

"இமாம்பசந்த். முகலாயர்கள் காலத்தில் ராஜாவுக்காக உருவாக்கப்பட்ட சிறப்பு வகை மாம்பழங்கள். இந்தக் காட்டின்

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 175 14/08/18 12:45 PM



எல்லையில் உள்ள தோப்பில் விளைஞ்சது" என்றார் மணிமாறன். மாம்பழங்களைச் சுவைத்துக்கொண்டே மீண்டும் வண்டியில் ஏறி அவர்கள் புறப்படத் தயாரானார்கள்.

"அடுத்து இன்னொரு ஆச்சரியமான விஷயத்தைப் பார்க்கப் போறோம்" என்றபடியே வாகனத்தைக் காட்டின் ஒரு பகுதியையே ஆக்கிரமித்திருந்த ஆலமர விழுதுகளைச் சுற்றி ஓட்டினார் மணிமாறன். அடுத்தடுத்து விழுதுகள் வந்துகொண்டே இருந்தன. எல்லா விழுதுகளையும் சுற்றி முடித்து, புறப்பட்ட இடத்துக்கே அவர்கள் வந்தபோது "இவ்வளவு பெரிய ஆலமரமா?" என்று வேலனும் பொன்னியும் வியந்துபோனார்கள்.

"ஆமாம், இந்த ஆலமரம் ரொம்பப் பெரிசு. இந்தக் காட்டின் மூதாய் மரம் என்றுகூட இதைச் சொல்லலாம். இந்த மரத்தில் ஆயிரக்கணக்கான பறவைகள் தஞ்சமடைகின்றன. கொல்கத்தாவின் அவுரா பகுதியில் அமைந்துள்ள இந்தியத் தாவரவியல் பூங்காவில் உள்ள உலக சாதனை படைத்த ஆலமரத்தைப் போன்றதொரு ஆலமரம் இது." என்றார் மணிமாறன்.

"அடையாறு தியசாபிகல் சொசைட்டியிலும் ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது. அதை நான் நேரில் பார்த்து வியந்திருக்கிறேன்." என்றாள் பொன்னி.

"கொஞ்சம் பொறுமையா போவோம், ஆலமரத்தின் பின்பக்கமா பாருங்க ஒரு சின்ன யானை மந்தை மலை மேல ஏறிக்கிட்டிருக்கு." என்றார் மணிமாறன்.

" காட்டு யானைகள் ஆக்ரோஷமா இருக்கும்னு சொல்வாங்களே. நமக்கு ஆபத்தில்லையா?" என்று பயத்தை வெளிப்படுத்தினான் வேலன்.

"முதல் விஷயம், காட்டில் எந்த உயிரினத்துக்கும் நாம் தொந்தரவு கொடுக்கக் கூடாது. காடு உயிரினங்களின் வீடு. அதுக்கப்புறம், நம்மை பாதுகாப்பா வைச்சுக்கிட்டு உயிரினங்களை ரசிக்கலாம். அவசர காலத்தில் அறிவுபூர்வமாகவும் சாதுர்யமாகவும் நம்மை எப்படிப் பாதுகாத்துக்கணும்னு தெரிஞ்சிருக்கணும். அதுக்காகத்தான் காட்டுக்குள் போகும்போது காடுகளிலேயே காலம்காலமா வாழ்ந்துவரும் பழங்குடி வழிகாட்டிகளைப் பயன்படுத்துறோம்" என்றார் மணிமாறன்.

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 176 14/08/18 12:45 PM

"எவ்வளவு பெரிய உயிரினம் என்றாலும், அவற்றை மதிக்கிறவரை, நம்மை அவை எதுவும் பண்ணாதுன்னு சொல்ல வர்றீங்களா மாமா?"

"நிச்சயமா, இப்போ அந்த யானைகளைப் போல நாமும் மலை மேல ஏறலாம். மலை மேல இன்னுமொரு ஆச்சரியம் உங்களுக்குக் காத்திருக்கு"

காட்டுக்குள் இருந்த மலைப்பகுதியில் குறிப்பிட்ட தொலைவு அவர்கள் மேல ஏறிய பிறகு, ஒரு சமவெளி போன்ற சிறு பரப்பு வந்தது. அங்கே வண்டியை நிறுத்திவிட்டு, பைனாகுலர் வழியாக ஓரிடத்தைச் சுட்டிக்காட்டினார் மணிமாறன், "அங்கே பாருங்க".

அங்கே தரையில் காய்ந்த இலைகள், சருகுகளைக் கொண்டு கூம்பு வடிவத்தில் கட்டப்பட்ட கூடு போலிருந்தது. "இது எந்த உயிரினத்தோட கூடாக இருக்கும்னு நினைக்கிறீங்க"

"தரையில் பறவைகளும் கூடு கட்டும். ஆனா, இது வித்தியாசமா இருக்கே?" என்றார் வீணா.

"அது ஒரு பாம்போட கூடு, கருநாகத்தின் (King Cobra) கூடு"

"என்னது பாம்பு கூடு கட்டுமா, நாங்க கேள்விப்பட்டதேயில்லையே?" என்றான் வேலன்.

"உலகிலேயே கூடு கட்டி, அதில் முட்டை வைத்து இனப்பெருக்கம் செய்யும் பாம்பு வகை இது. அதேபோல ரொம்ப சாதாரணமா 18 அடி நீளம் வளரும். நஞ்சு கொண்ட பாம்புகளில் உலகிலேயே நீளமானது இது" என்று அவர்களை மேலும் ஆச்சரியப்படுத்தினார் மணிமாறன்.

"அடர்ந்த காட்டுக்குள்ளும் பார்த்துட்டோம், மலை மேலயும் ஏறிட்டோம். ஆனா, புலி மட்டும் இன்னும் தென்படவே இல்லையே" என்று சோர்வுடன் கூறினாள் பொன்னி.

"கவலைப்படாதே பொன்னி, எத்தனையோ ஆச்சரியமான விஷயங்களை இந்தக் காட்டில் நாம பார்த்துட்டோம். புலி ரொம்ப கூச்ச சுபாவம் கொண்ட உயிரினம். அவ்வளவு எளிதா வெளியே வராது. இந்த மலைச்சரிவில் பாறைகள் நிறைந்த ஓர் இடம் இருக்கு. கீழே இறங்கும்போது அங்கே புலி இருக்கான்னு பார்ப்போம்" என்றார் மணிமாறன்.

அவர் சொன்ன இடத்திலும் புலி இல்லை. குழந்தைகள் இருவரும் பல்வேறு ஆச்சரியங்களை அன்றைக்குப் பார்த்திருந்தாலும், புலியைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆசை மட்டும் அவர்களுக்குத் தீரவில்லை.

"நான் போகும் ஒவ்வொரு காடும் புதுசு புதுசாகத்தான் இருக்கு. ஆராய்ச்சியாளரான எனக்கே தெரியாத பல விஷயங்களை இன்றைக்கு மணிமாறன் சாரும், நிறைய பழங்குடிகளும் எனக்குக் கத்துத்தந்திருக்காங்க. ஆராய்ச்சிக்காகப் பல முறை காட்டுக்கு வந்து போயிருந்தாலும் என்னால் புலியைப் பார்க்க முடிந்ததில்லை. இன்னொரு முறை புலியைப் பார்ப்போம், கவலைப்படாதீங்க" என்று அவர்களைச் சமாதானப்படுத்தினார் வீணா.

அவர்கள் திரும்பி வந்த வழியில் ஓங்கிலைப் பார்த்த அதே இடத்துக்கு வந்தவுடன் ஓய்வெடுப்பதற்காக வண்டியை சற்று நிறுத்தினார்கள். பொன்னி கீழே இறங்கி கண்களில் பைனாகுலரை பொருத்தி புதரில் இருந்த இடைவெளிகள் வழியாக ஆற்றைப் பார்த்தாள். அவளால் ஆச்சரியத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "மாமா, மாமா, அங்க பாருங்க, அங்க பாருங்க" என்று கிசுகிசுக்கும் குரலில் கூறினாள். எல்லோரும் கண்களில் பைனாகுலரைப் பொருத்தி புதருக்குப் பின்னால் இருந்து பார்த்தார்கள். புலி ஒன்று தன் மூன்று குட்டிகளுடன் ஆற்றில் நீர் அருந்திக்கொண்டிருந்தது. அழகு நிறைந்த அந்தக் காட்சியைத் தன் கேமராவில் பதிவு செய்துகொண்டார் வீணா. அந்தப் புலிகள் நீர்

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 177 14/08/18 12:45 PM

இயற்கை தேசியச் சின்னங்கள்



ஆலமரம்–1950

இது பெருமையின் சின்னமாகும். மருத்துவ குணம் கொண்டது.

தாமரை–1950

சேற்று நீரில் வளர்ந்தாலும் மிக அழகான மலர்கள் மலர்கின்றன.

மயில்–1963

இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது தோகையைக் கொண்ட பறவை மயில்.

புலி–1973

பூனை இனத்தில் மிகப்பெரியது. உலகின் மொத்த புலிகள் எண்ணிக்கையில் இந்தியா 70 % கொண்டுள்ளது.

கங்கை ஆறு–2008

இது வற்றாத ஆறு. வரலாற்றுப் புகழ் பெற்ற தலைநகரங்கள் இவ்வாற்றங்கரையில் தோன்றி செழித்தோங்கின.

யானை–2010

ஆசியாவைத் தாயகமாகக் கொண்டது. தான் வாழும் காட்டுப் பிரதேசங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆற்று ஓங்கில்–2010

தான் வாழும் ஆற்றின் சூழல் அமைவின் நிலையை உணர்த்தும் கருவியாக செயல்படுகிறது. அருகி வரும் உயிரினமாக உள்ளது.

லாக்டோ பேசில்லஸ் 2012

இது ஒரு தோழமை பாக்டீரியா. இது லேக்டிக் மற்றும் பாக்டீரியாக்களின் குழுவில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ராஜநாகம்

(ஹோஃபியாகஸ் ஹானா) உலகின் நீண்ட விஷம் நிறைந்த பாம்பு. இவை இந்தியாவின் மழைக்காடுகள் மற்றும் சமவெளிகளில் வாழ்கின்றன.

மாம்பழம் 1950

வைட்டமின் ஏ, சி, டி யை அதிக அளவில் கொண்டது. பெரும்பாலும் சமவெளிகளில் விளைவிக்கப்படுகிறது.

இயற்கை தேசிய சின்னங்கள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 178 14/08/18 12:47 PM

அருந்தித் திரும்பும்வரை கண் கொட்டாமல் அவற்றையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"இதுதான் இந்தியக் காடுகளின் நிஜ ராஜா" என்றார் மணிமாறன்.

"நீங்கள் சொல்றது 100 சதவீதம் உண்மை" என்று ஆமோதித்தார் வீணா.

பிறகு வண்டியில் ஏறி காட்டின் எல்லைக்குத் திரும்பும்போது வீணா ஒரு கேள்வி கேட்டார்."குழந்தைகளா இன்னைக்கு நீங்க நேரில் பார்த்த உயிரினங்கள் அனைத்துக்கும் ஒரு ஒற்றுமை உண்டு தெரியுமா?" என்று கேட்டார் வீணா.



"என்ன ஒற்றுமை, என்ன ஒற்றுமை?" என வேலன் கேட்டான்.

"சீக்கிரம் சொல்லுங்க. நாங்க ரொம்ப ஆவலா இருக்கோம்" என்றாள் பொன்னி.

"இன்றைக்கு நாம பார்த்த எல்லாமே, இந்தியாவோட இயற்கை தேசியச் சின்னங்கள் என்கிற சிறப்பு அங்கீகாரம் பெற்றவை".

"ரொம்பச் சரியா சொன்னீங்க வீணா, பாருங்க நான்கூட அதை யோசிக்கலை" என்றார் மணிமாறன்.

தமிழகத்தின் மாநில இயற்கைச் சின்னங்கள்

மாநில விலங்கு	வரையாடு	
மாநிலப் பறவை	மரகதப் புறா	
மாநில மலர்	செங்காந்தள் மலர்	
மாநில மரம்	பனை மரம்	

பிற தேசியச் சின்னங்கள்

தேசியக் கொடி



மூவண்ணக்கொடி நமது தேசியக் கொடியாகும். மூன்று வண்ணங்களும் சம அளவில் கிடைமட்டமாக அமைந்துள்ளன. மேல்பகுதியில் உள்ள காவி நிறம் தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கிறது. கீழ்ப்பகுதியில் உள்ள பச்சைநிறம் செழுமையையும் வளத்தையும் குறிக்கிறது. இடையில் உள்ள வெள்ளைநிறம் நேர்மை, அமைதி மற்றும் தூய்மையைக் குறிக்கிறது. நடுவில்கருநீலநிறத்தில்அமைந்துள்ளஅசோகச் சக்கரம் அறவழியையும் அமைதியையும் வலியுறுத்துகிறது.

தேசியக் கொடியின் நீள, அகலம் 3:2

- இந்திய தேசியக் கொடியை ஆந்திராவைச் சேர்ந்த பிங்காலி வெங்கையா என்பவர் வடிவமைத்தார்.
- விடுதலை இந்தியாவின் முதல் தேசியக் கொடி தமிழ்நாட்டில் உள்ள குடியாத்தத்தில் (வேலூர் மாவட்டம்) நெய்யப்பட்டது.
- இக்கொடியைப் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் (15.08.1947) செங்கோட்டையில் ஏற்றினார்.
- இக்கொடி தற்போது சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 179 14/08/18 12:47 PM

என்ற விகிதத்தில் அமைந்துள்ளது. நடுவில் உள்ள அசோகச் சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டுள்ளது.

உயர்சிந்தனை வினா

இந்திய தேசியக்கொடியைத் தயாரிக்கும் உரிமை யாருக்கு அளிக்கப்பட்டுள்ளது?

உங்களுக்குத் தெரியுமா?

கொடி காத்த குமரன்



திருப்பூர்க் குமரன் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலையில் பிறந்தார். இள வயதிலிருந்தே இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். 1932இல் காந்தியடிகளைக் கைது செய்ததைக் கண்டித்து நாடெங்கிலும் போராட்டங்கள் நடைபெற்றன. காந்தியை விடுதலை செய்யக்கோரி நடந்த போராட்டத்தில் திருப்பூர்க் குமரன் கலந்து கொண்டார். காவல் துறையினரின் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்டு உயிர்துறந்தார். போராட்டக்களத்தில் உயிர்நீத்தபோதும் மூவர்ணக்கொடியைக் கீழே விடவில்லை. இதனால் திருப்பூர்க் குமரன் 'கொடி காத்த குமரன்' என அழைக்கப்படுகிறார். அவரது தியாகத்தை நினைவு கூறும் வகையில் அவரது நூற்றாண்டில் இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

தேசிய இலச்சினை

சாரநாத் அசோகத் தூணின் உச்சியில் அமைந்திருக்கும் நான்முகச் சிங்கம் இந்தியாவின் தேசிய இலச்சினையாக ஜனவரி 26, 1950இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



இதன் அடிப்பகுதியில் 'சத்யமேவ ஜெயதே' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. 'வாய்மையே வெல்லும்' என்பதே இதன் பொருளாகும். தேசிய இலச்சினை மேல்பகுதி, அடிப்பகுதி என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

மேல்பகுதியில் நான்கு சிங்க உருவங்கள் ஒன்றுக்கொன்று பின்பக்கமாக பொருந்தியிருக்குமாறு வட்டவடிமான பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நமது இலச்சினையில் மூன்று சிங்க உருவங்களை மட்டுமே காண இயலும்.

அடிப்பகுதியில் யானை, குதிரை, காளை, சிங்கம் ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன. இவ்வுருவங்களுக்கிடையே தர்ம சக்கரம் அமைந்துள்ளது. இந்த இலச்சினை இந்திய அரசின் அலுவல் முறை கடித முகப்புகளிலும் இந்திய நாணயங்களிலும் கடவுசீட்டுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

அசோகர் காலத்தில் சாரநாத் தூணின் உச்சியில் அமைந்திருந்த நான்முகச் சிங்கம் தற்போது சாரநாத் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது.

தேசியகீதம்

'ஜன கண மன.....' நமது தேசிய கீதமாகும். இது இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைபாட்டிற்கு அடையாளச் சின்னமாக விளங்குகிறது. இப்பாடல் இரவீந்திரநாத் தாகூரால் வங்காள மொழியில் எழுதப்பட்டது. இதன் இந்தி மொழியாக்கம் ஜனவரி 24, 1950இல் இந்திய அரசியலமைப்புச் சபையால் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 180 14/08/18 12:47 PM

உங்களுக்குத் தெரியுமா?

1911, டிசம்பர் 27ஆம் நாள் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது இப்பாடல் முதன் முதலாகப் பாடப்பட்டது.

பாடும்போது பின்பற்ற வேண்டியன

- இக்கீதத்தை சுமார் 52 வினாடிகளில் பாட/ இசைக்க வேண்டும்.
- பாடும்போது அனைவரும் எவ்வித அசைவுகளும் இன்றி நேராக நிற்க வேண்டும்.
- பொருள் புரிந்து சரியாகப் பாடவேண்டும்.

தேசியப் பாடல் – வந்தே மாதரம்

வங்க எழுத்தாளர் பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதிய வந்தே மாதரம் பாடலின் முதல் பத்தி விடுதலை போராட்டத்தில் முக்கியப் பங்களித்தது. இதன் காரணமாக, தேசிய கீதத்துக்கு இணையான தேசியப் பாடல் என்ற சிறப்பு இப்பாடலுக்கு அளிக்கப்படுகிறது என அரசியலமைப்பு சட்ட நிர்ணய மன்றத் தலைவரும் மேனாள் குடியரசுத் தலைவருமான ராஜேந்திர பிரசாத் அறிவித்தார். இப்பாடல் ஆனந்த மடம் என்ற நாவலிலிருந்து எடுக்கப்பட்டது.

தேசிய உறுதிமொழி

"இந்தியா எனது தாய்நாடு....." எனத் தொடங்கும் நமது தேசிய உறுதிமொழியைப் பிதிமாரி வெங்கட சுப்பாராவ் என்பவர் தெலுங்கில் எழுதினார்.

தேசிய நுண்ணுயிரி

நாம் அன்றாடம் சாப்பிடும் தயிர் பாலிலிருந்து உருவாகப் பயன்படுவது லாக்டோபேசில்லஸ் டெல்புரூக்கி எனும் நுண்ணுயிர். 2012–ம் ஆண்டில் இது தேசிய நுண்ணுயிராக அங்கீகரிக்கப்பட்டது. இந்தப் பாக்டீரியா



வேதிவினை புரிந்து பாலில் இருக்கும் புரதத்தை மாற்றுவதால் தயிர் கிடைக்கிறது. தயிர் செரிமானத்துக்கும், வயிற்றுக் கோளாறுகளுக்கும், குளிர்ச்சி தருவதற்கும் அறியப்பட்டது.

இந்திய நாணயம் (INR) ₹

இந்தியாவின் அதிகாரபூர்வ பணத்தின் பெயர் ரூபாய். 16–ம் நூற்றாண்டில் மன்னர் ஷெர்ஷா சூரி வெளியிட்ட வெள்ளி நாணயத்துக்கு 'ரூபியா' என்று பெயர். அதுவே ரூபாய் என்று மருவியுள்ளது. ரூபாய்க்கான சின்னம் ₹. இந்தச் சின்னத்தை 2010–ல் வடிவமைத்தவர் தமிழகத்தைச் சேர்ந்த டி. உதயகுமார்.

தேசிய நாட்காட்டி

பேரரசர் கனிஷ்கர் காலத்தில் கி.பி.(பொ.ஆ.) 78–ல் சக ஆண்டு முறை தொடங்கியது. இளவேனில் கால சம பகல்–இரவு நாளான மார்ச் 22 அன்று இந்த ஆண்டு தொடங்குகிறது. லீப் ஆண்டுகளில் இது மார்ச் 21 ஆக அமையும். சக ஆண்டு முறையையே நமது தேசிய நாட்காட்டி பின்பற்றுகிறது. பிரபல வான் இயற்பியலாளர் மேக்னாத் சாகா தலைமையிலான நாட்காட்டி சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் 1957 மார்ச் 22 முதல் தேசிய நாட்காட்டி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட இந்திய மக்களிடையே நாட்டுப்பற்றையும் ஒற்றுமை உணர்வையும் வளர்த்தெடுப்பதில் தேசிய சின்னங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 181 14/08/18 12:47 PM

தேசிய நாட்கள்

சுதந்திர நாள்



ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 15–ம் தேதி இந்திய சுதந்திர நாள். ஆங்கிலேயர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் நாடு விடுதலை பெற்ற நாள் அது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு உதித்த நாளாகவும் கருதப்படுகிறது.

நாடு விடுதலை பெற்ற நாளன்று மகாகவி பாரதியாரின் 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோமே' என்ற பாடலை அகில இந்திய வானொலியில் பாடிய பெருமையைப் பெற்றவர் மறைந்த கர்னாடக இசைப் பாடகி டி.கே. பட்டம்மாள். சுதந்திர நாள் இன்றைக்கும் நாடெங்கும் கோலாகலமாக அனைத்துத் தரப்பினராலும் கொண்டாடப்பட்டுவருகிறது. அன்றைக்கு நாட்டின் பிரதமர் டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றுவது முக்கிய நிகழ்வு ஆகும்.

குடியரசு நாள்




1950 ஜனவரி 26–ம் தேதி இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. அதைக் கொண்டாடும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது. இந்திய அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்த நாளே, குடியரசு நாள். 1947–லேயே நாடு விடுதலை பெற்றுவிட்டாலும், அதற்குப் பிறகும் பிரிட்டன் அரசியே இந்தியாவின் கௌரவத் தலைவராக இருந்துவந்தார். குடியரசு நாடாக அறிவிக்கப்பட்ட பிறகு, நாட்டின் முதல் குடிமகன் குடியரசுத் தலைவர் ஆவார். குடியரசு நாளில் அவரே செங்கோட்டையில் கொடியேற்றுவார்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியக் குடியரசு நாளின் மூன்றாவது நாளான ஜனவரி 29, அன்று 'பாசறைக்கு திரும்புதல்' என்ற விழா சிறப்பாக நடைபெறும். அந்நாளில் தரைப்படை, கடற்படை, விமானப்படையைச் சேர்ந்த இசைக்குழுவினர் நிகழ்ச்சிகளை நடத்துவர். குடியரசு தலைவர் இந்நிகழ்வின் முதன்மை விருந்தினர் ஆவார். இவ்விழாவின் ஒரு பகுதியாக மாலை 6 மணிக்கு குடியரசுத் தலைவர் மாளிகை மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படும்.

காந்தி ஜெயந்தி



'தேசத் தந்தை' மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2, தேசிய நாட்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுக் கொண்டாடப்படுகிறது. காந்தியின் பிறந்த நாளைச், 'சர்வதேச அகிம்சை நாள்' ஆக 2007 ல் அங்கீகரித்து ஐ.நா. சபை கொண்டாடி வருகிறது.

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 182 14/08/18 12:47 PM

www.tntextbooks.in

கலைச்சொற்கள்

- கரியால் முதலை – கங்கை முதலை
- ஆற்று ஓங்கில் – கங்கையில் வாழும் டால்பின்
- மீயொலி – கேளா ஒலி அலைகள்

மீள்பார்வை

- புலி, யானை, டால்பின், மயில், கருநாகம், ஆலமரம், மாம்பழம், கங்கை, தாமரை ஆகியவை இயற்கை தேசியச் சின்னங்களாகும்.
- இந்திய அரசியலமைப்புச் சபை 1947, ஜூலை 22இல் மூவண்ணக்கொடியைத் தேசியக் கொடியாக ஏற்றுக் கொண்டது.
- தேசியக்கொடி, தேசிய இலச்சினை, தேசிய கீதம், தேசியப்பாடல் போன்றவை பிற தேசியச் சின்னங்களாகும்.
- விடுதலை நாள், குடியரசு நாள், காந்திஜெயந்தி போன்றவை முக்கிய தேசிய விழாக்களாகும்.

பயிற்சிகள்

I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. தேசியப் பாடலான வந்தே மாதரத்தை இயற்றியவர் _____.

அ) பிங்காலி வெங்கையா

ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

ஈ) காந்திஜி

2. இந்தியாவின் தேசியக் கீதம் _____.

அ) ஜன கண மன

ஆ) வந்தே மாதரம்

இ) அமர் சோனார் பாங்கலே

ஈ) நீராடுங் கடலுடுத்த

3. ஆனந்தமடம் என்ற புகழ் பெற்ற நாவலை எழுதியவர் _____.

அ) அக்பர்

ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

ஈ) ஜவஹர்லால் நேரு

4. _____பிறந்தநாளைச் சர்வதேச அகிம்சை நாளாகக் கொண்டாடுகிறோம்

அ) மகாத்மா காந்தி

ஆ) சுபாஷ்சந்திர போஸ்

இ) சர்தார் வல்லபாய்பட்டேல்

ஈ) ஜவஹர்லால் நேரு

5. நம் தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரத்தின் நிறம் _____.

அ) வெளிர்நீலம்

ஆ) கருநீலம்

இ) நீலம்

ஈ) பச்சை

6. இந்திய விடுதலை நாளில் பறக்கவிடப்பட்ட முதல் தேசியக்கொடி _____ அருங்காட்சியத்தில் உள்ளது.

அ) சென்னை கோட்டை

ஆ) டெல்லி

இ) சாரநாத்

ஈ) கொல்கத்தா

7. தேசியக் கீதத்தை இயற்றியவர் _____.

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 183 14/08/18 12:47 PM

www.tntextbooks.in

அ) தேவேந்திரநாத் தாகூர்

ஆ) பாரதியார்

இ) ரவீந்திரநாத் தாகூர்

ஈ) பாலகாங்காதர திலகர்

8. தேசியக் கீதம் பாடுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய கால அளவு _____

அ) 50 வினாடிகள்

ஆ) 52 நிமிடங்கள்

இ) 52 வினாடிகள்

ஈ) 20 வினாடிகள்

9. 1896 தேசிய காங்கிரஸ் மாநாட்டின்போது வந்தே மாதரம் பாடலைப் பாடியவர் _____

அ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) மகாத்மா காந்தி

ஈ) சரோஜினி நாயுடு

10. விடுதலை நாளின்போது டெல்லியில் கொடியேற்றுபவர் _____

அ) பிரதம அமைச்சர்

ஆ) குடியரசுத்தலைவர்

இ) துணைக்குடியரசுத் தலைவர்

ஈ) அரசியல் தலைவர் எவரேனும்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்திய தேசிய இலச்சினை _____ல் உள்ள அசோகத் தூணிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.
2. இந்தியாவின் தேசியக் கனி _____.
3. இந்தியாவின் தேசியப் பறவை _____.
4. இந்தியாவில் தேசிய மரம் _____.
5. 1947 விடுதலை நாளின் போது ஏற்றப்பட்டக் கொடி _____ என்னுமிடத்தில் நெசவு செய்யப்பட்டது.
6. இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் _____.
7. சக ஆண்டு முறையைத் துவக்கியவர் _____.
8. இந்தியாவின் மிக நீளமான ஆறு _____.
9. இந்திய நாணயத்தின் குறியீட்டை வடிவமைத்தவர் _____.
10. தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரம் _____ ஆரங்களைக் கொண்டது.

III. சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

1. நான்முகச் சிங்கம் தற்போது _____ அருங்காட்சியகத்தில் உள்ளது.

   (கொல்கத்தா / சாரநாத்)

2. தேசியக் கீதம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு _____.

   (1950 / 1947)

3. _____ இந்தியாவின் தேசிய நுண்ணுயிரியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

   (லாக்டோ பேசில்லஸ் / ரைசோபியம்)

IV. நிரப்புக.

1. காவி – தைரியம்; வெள்ளை – _____
2. குதிரை – ஆற்றல்; காளை –_____
3. 1947 – விடுதலைநாள்; 1950 –_____

V. பொருந்தியுள்ளவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்

1. ரவீந்திரநாத் தாகூர் – அ. தேசியப்பாடல்
2. பங்கிம் சந்திர சட்டர்ஜி – ஆ.தேசியக்கொடி
3. பிங்காலி வெங்கையா – இ. வான் இயற்பியலாளர்
4. மேக்னாத் சாகா – ஈ. தேசியகீதம்

1	2	3	4
அ). அ	ஈ	ஆ	இ

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 184 14/08/18 12:47 PM

www.tntextbooks.in

ஆ). ஈ அ இ ஆ

இ). ஈ அ ஆ இ

VI. பொருத்தியபின் பொருந்தாதது எது?

1. தேசிய ஊர்வன – புலி
2. தேசிய நீர்வாழ் விலங்கு – லாக்டோ பேசில்லஸ்
3. தேசிய பாரம்பரிய விலங்கு – ராஜநாகம்
4. தேசிய நுண்ணுயிரி – டால்பின்

VII. தவறான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அ) தேசியக் கொடியின் நீள அகலம் 3:2 என்ற விகிதத்தில் உள்ளது.

   ஆ) அசோகச் சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டது.

   இ) அசோகச் சக்கரம் வெளிர் நீல நிறமுடையது.

2. அ) பிங்காலி வெங்கையா தேசியக் கொடியை வடிவமைத்தார்.

   ஆ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி தற்போது கொல்கத்தா அருங்காட்சியகத்தில் உள்ளது.

   இ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக்கொடி குடியாத்தத்தில் நெசவு செய்யப்பட்டது.

VIII. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஆகஸ்டு 15 அன்று விடுதலை நாள் கொண்டாடப்படுகிறது.
2. நவம்பர் 26 அன்று குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது.
3. அக்டோபர் 12 அன்று காந்தி ஜெயந்தி கொண்டாடப்படுகிறது.

IX. விடையளிக்கவும்.

1. தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் குறிப்பன எவை?
2. தேசிய இலச்சினையின் பாகங்கள் எவை?
3. தேசியக் கீதத்தின் சிறப்பு அம்சங்கள் எவை?
4. இந்திய நாணயத்தின் குறியீட்டின் வடிவத்தை வரைந்து வரையறுக்கவும்.
5. தேசிய இலச்சினை எங்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறது?
6. தேசிய உறுதி மொழியை எழுதியவர் யார்?
7. தேசிய இலச்சினையின் அடிபாகத்தில் இடம் பெற்றுள்ள விலங்குகள் எவை?
8. இயற்கை தேசியச் சின்னங்கள் எவை?
9. மயில்கள் சரணாலயம் எங்குள்ளது?

X. செயல்பாடுகள்

- இயற்கை தேசியச் சின்னங்களைக் காட்சிப்படமாக வரைக/கதை உருவாக்குக.
- உன் வகுப்பு / பள்ளிக்கான அடையாளக் குறியீட்டை (Logo) உருவாக்குக.
- அறுகி வரும் உயிரினங்களைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும். கலந்துரையாடுக.
- பள்ளியில் நடைபெற்ற தேசிய விழா / நிகழ்வு குறித்து உள்ளூர் செய்தித்தாளுக்குச் செய்தி அறிக்கை தயாரிக்கவும்.

XI. வாழ்வியல் திறன்

- குறிப்பிட்ட சில உயிரினங்களை மட்டும் தேசியச் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதன் காரணங்களை ஆய்க.

6th_CIVICS_IInd Term_UNIT 1.indd 185 14/08/18 12:47 PM

www.tntextbooks.in

அலகு 2

இந்திய அரசமைப்புச் சட்டம்



கற்றல் நோக்கங்கள்

- இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி அறிதல்.
- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உருவாக்கத்தை அறிந்து வியத்தல்.
- இதன் சிறப்பம்சங்களை அறிந்து போற்றுதல்.
- அடிப்படை உரிமைகளையும் கடமைகளையும் அறிந்து அவற்றைப் பின்பற்றுதல்.

9KUCK9

நுழையுமுன்

இப்பாடம் இந்திய அரசமைப்புச் சட்டம் உருவானதை விளக்குகிறது. இந்திய அரசு நிர்வாகத்திற்கு வழிகாட்டும் மற்றும் இந்திய குடிமக்களின் உரிமைகளையும் கடமைகளையும் உறுதிப்படுத்தியும் பாதுகாத்தும் வருகின்ற இந்திய அரசமைப்புச் சட்டதை விளக்குகிறது.

யாழினியனும் சுடரொளியும் சகோதரர்கள். யாழ் ஆறாம் வகுப்பிலும் சுடர் நான்காம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். யாழ் அடுத்தநாள் தனக்கிருக்கும் வகுப்புத் தேர்விற்காக வாசித்துக் கொண்டிருந்தான். அனைத்து வீட்டுப் பாடங்களையும் செய்து முடித்திருந்த மகிழ்ச்சியில் சுடர் தொலைக்காட்சியில் சிறுவருக்கான திரைப்படம் பார்த்துக்கொண்டிருந்தான். தொலைக்காட்சியின் ஒலியை மிகவும் அதிக அளவில் வைத்திருந்தான் சுடர். அதுமட்டுமின்றி அந்தப் படத்தில் பெரிதும் லயித்தவனாய் சத்தமாய் சிரித்தபடியும் கைகளைத் தட்டியபடியும் ரசித்துக் கொண்டிருந்தான். அந்த இரைச்சல் யாழை அவனது படிப்பில் கவனத்தைக் குவிக்க விடாமல் தடுத்தது.

எனவே அவன் தொலைக்காட்சியின் ஒலி அளவைக் குறைக்குமாறும், சத்தமிடாமல் அமைதியாக பார்க்குமாறும் சுடரைக் கேட்டுக் கொண்டான். யாழினியனது கோரிக்கையைச் சுடரொளி காது கொடுத்து கேட்டானில்லை.

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 187 14/08/18 1:04 PM



திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டும் சுடர் தொலைக்காட்சியின் ஒலி அளவையோ தனது இரைச்சலையோ குறைத்துக் கொள்ளவில்லை. சுடர் மறுப்பதையும் தனக்கு அடுத்த நாள் வகுப்புத் தேர்வு இருப்பதையும் அப்பாவிடம் சென்று முறையிட்டான்.

"அண்ணன் தேர்வுக்கு படிக்கிறான்தானே. அவனைப் படிக்கவிடாமல் தொந்தரவு செய்தால் தவறுதானே" என்றார்.

"நான்தான் திரைப்படம் பார்க்கிறேன்ல. இவன் மட்டும் என்னை படம் பார்க்கவிடாமல் தொந்தரவு செய்யலாமா?" என்றான் சுடர்.

"படிப்பதும் படம் பார்ப்பதும் ஒன்றல்ல தம்பி"என்றார் தந்தை.

ஆனால் இதற்கு உடன்படவில்லை சுடர். யாழிற்கு போலவே இது தனக்கும் வீடுதான் என்றும் அவனுக்குப் படிக்க உரிமை இருக்கிறது என்றால் தனக்குப் படம் பார்ப்பதற்கு உரிமை இருப்பதாகவும் கூறினான்.

இருவருக்குமே வீட்டில் சம உரிமை இருக்கிறது என்பதை அவர்களது தந்தை ஏற்றுக் கொண்டார். ஆனால் ஒருவரது உரிமை அடுத்தவரது சுதந்தரத்தைக் காயப்படுத்தக் கூடாது என்று விளக்கினார். அப்போதும் அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சுடர் அடம் பிடித்தான்.

"இங்க பாரு சுடர். இது உன் வீடு. படத்தைச் சத்தமாகப் பார்க்க உனக்கு உரிமை இருக்கிறது. அப்படித்தானே?"

"ஆமாம் அப்பா"

"அதே போல் இது யாழினியனின் வீடு. அவனுக்குப்பிடித்தபாடலைத்தொலைக்காட்சியில் சத்தமாக வைத்துக் கேட்கலாம்தானே?"

"அதெப்படிப்பா, நான்தான் படம் பார்க்கிறேனே. அவனும் சத்தமாகப் பாட்டு கேட்டால் நான் எப்படி படம் பார்க்க முடியும்?"

"இப்ப புரியுதா உன் உரிமைனு நீ சத்தமா படம் பார்க்கலாம்னா அவனும் பாட்டு கேட்கலாம் என்பதும் அவனது உரிமைதான் சுடர்"

"அப்ப எப்படி நான் படம் பார்ப்பேன்?"

"அப்ப எப்படி அவன் படிப்பான்?"

"ஆமாம்ல. சரிப்பா நான் இனிமே படம் பார்க்கல"

"அப்படி இல்ல சுடர். நீ படம் பார்க்கலாம். ஆனால் அடுத்தவர்களுக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்"

"கோவித்துக் கொள்ளாதடா யாழ். இனி தொந்தரவு தராமல் படம் பார்க்கிறேன். நீ போய் படிடா"

சுடரது தோளைத் தட்டிக் கொடுத்தாவாறே யாழ் புன்னகை தவழ நகர்ந்தான்.

இந்த காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த அவர்களது தாய், "ஏங்க, இந்த சின்ன வீட்ட நிர்வகிப்பதற்கே இத்தனை சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் தேவைப்படுகிறதே. இத்தனை பெரிய இந்தத் தேசத்தைக் கட்டுக்கோப்பாக நிர்வகிப்பதற்கு எத்தனை சட்டங்களும் நெறிகளும் தேவைப்படும்" என்று வியப்பின் உச்சிக்கே சென்றார்.

"அது ஒரு கடல் தீபா. பல மதங்கள், பல மொழிகள், பல இனங்கள், பண்பாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழும் ஒரு நாட்டில் அனைவரையும் சமத்துவமாக நிர்வகிப்பதற்கு

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 188 14/08/18 1:04 PM

வலுவான, தெளிவான சட்டங்களும் வழிமுறைகளும் தேவை. அதைத்தான் அரசமைப்புச் சட்டம் என்கிறோம்" என்றார்.

அடுத்த வேலை நாளில் இருவரும் பள்ளி சென்றனர். அன்று குடியரசு நாளுமாகும்.

அங்குக் குடியரசுதினக் கொண்டாட்டங்கள் களைகட்டியிருந்தன. மாணவர்களும், ஆசிரியர்களும் கொடிமரத்தைச் சுற்றி வரிசையாக நின்றுகொண்டிருந்தனர். கொடியேற்றப்பட்டவுடன் சிறப்பு விருந்தினர் சமூக அறிவியலாளர் ஆறுமுகம் அவர்களுடன் உரையாடல் தொடங்கியது.



"தங்கள் அனைவருக்கும் குடியரசு தின வாழ்த்துகள்!" என்றார் சமூக அறிவியலாளர்.

"தங்களுக்கும் குடியரசு தின வாழ்த்துகள் ஐயா!" என்றனர் மாணாக்கர்கள்.

"நாம் ஏன் குடியரசு தினம் கொண்டாடுகிறோம் என்று தெரியுமா?"

"நமது அரசமைப்புச் சட்டம் 1950–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26–ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அதைத்தான் நாம் குடியரசு தினமாகக் கொண்டாடுகிறோம்." என்றார் வரலாற்று ஆசிரியை மலர்மதி.

"ஆம். தாங்கள் கூறியது சரிதான். ஆனால் அந்த நாளில் நம்முடைய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்கு வேறு பல காரணங்கள் உண்டு. முக்கியமாக 1929–ஆம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழு சுயராஜ்யத்தை (PURNA SWARAJ) அடைவது என்ற முழக்கம் வலுப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 1930, ஜனவரி 26 அன்று முழு சுதந்திர நாளாகக்(Purna Swaraj Day) கொண்டாடப்பட்டது. பின்னாளில் அதுவே நமது குடியரசு தினமாக ஆனது." என்றார் சமூக அறிவியலாளர் ஆறுமுகம்.

"அரசமைப்புச் சட்டம் என்றால் என்ன?" என்று கேட்டான் நத்தர்.



"அதுபற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்னால் நான் சில கேள்விகளைக் கேட்கிறேன். அதற்குப் பதில் கூறுங்கள். பிறகு நான் உங்கள் கேள்விக்குப் பதில் கூறுகிறேன்." என்றார் .

எல்லோரும் "சரி" என்றபடி அவரது கேள்விகளை எதிர்கொள்ளத் தயாராயினர்.

"நீங்கள் உங்கள் வீடுகளில் ஏதேனும் விதிகளைப் பின்பற்றுகிறீர்களா?"

"ஆம்." என்றனர்.

"நீங்கள் உங்கள் பள்ளியில் ஏதேனும் விதிகளைப் பின்பற்றுகிறீர்களா?"

"ஆம்." என்றனர்.

"இரண்டும் ஒன்றா வேறுவேறா?"

"பெரும்பாலும் வேறுவேறானவை."

"பொது இடத்தில் நாம் சில விதிகளைப் பின்பற்ற வேண்டியதிருப்பது அவசியமா?"

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 189 14/08/18 1:04 PM

"ஆம்."

"ஏன் அவை அவசியம்?"

"நாம் அடுத்தவர்களைத் தொந்தரவு செய்யாமல் இருக்க." என்றாள் தமிழ்ச்செல்வி.

"நம்மை அடுத்தவர்கள் யாரும் தொந்தரவு செய்யாமல் இருக்கவும்தான்." என்றான் செல்வா.

"ஆம். நீங்கள் கூறிய காரணங்கள் ஏற்புடையவைதான். அதே நேரம் விதிகளைப் பின்பற்றச்சொல்லி யாரேனும் உங்களைக் கட்டாயப்படுத்தினால் அப்போது எப்படி உணர்வீர்கள்?"

"கொஞ்சம் கஷ்டமாக இருக்கும்."

"உங்களுக்கான விதிகளை நீங்களே உருவாக்கும்போது எப்படி உணர்வீர்கள்?"

"மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கும்."

எல்லோரும் ஆமோதிப்பதைப்போல் தலையசைத்தனர்.

"அரசமைப்புச் சட்டம் ஒரு நாட்டிற்குத் தேவையான சில அடிப்படை விதிகள், கொள்கைகளை உருவாக்கி ஆவணப்படுத்துவதோடு, தனது குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது. பிறகு அச்சட்டத்தின் துணையோடுதான் அந்நாடு ஆளப்படும்."

"இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எவையெல்லாம் இடம்பெற்றுள்ளன?" என்று கேட்டாள் தீபிகா.

"இந்திய அரசமைப்புச் சட்டம்தான் நமது நாட்டின் உயர்ந்தபட்ச சட்டமாக விளங்குகிறது. அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுப்பது, கட்டமைப்புகள், வழிமுறைகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குவது, அரச நிறுவனங்களின் கடமைகளைப் பட்டியலிடுவது, குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்வது, வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவது ஆகியவற்றின் வழியே ஓர் ஒட்டுமொத்தக் கட்டமைப்பை நமக்குத் தருகிறது.

"இதற்கான ஆரம்பகட்டப் பணிகள் எப்போது தொடங்கப்பட்டன?" என்று கேட்டான் கிறிஸ்டோபர்.



"அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 389 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பு 1946–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக முனைவர் ராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்."

"வேறு யாரெல்லாம் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தார்கள்?"

"ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், மௌலானா ஆஸாத், எஸ். ராதாகிருஷ்ணன், விஜயலக்ஷ்மி பண்டிட், சரோஜினி நாயுடு உட்படப் பலர் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர்."

"இந்த அமைப்பில் பெண்கள் எத்தனை பேர் இருந்தனர்?" என்று கேட்டான் குணசேகர்.

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 190 14/08/18 1:04 PM



"15 பெண் உறுப்பினர்கள் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர்."

"எட்டு பேர்கொண்டஅரசமைப்புச் சட்ட வரைவுக் குழு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் இதற்கான ஆலோசகராக பி.என்.ராவ் நியமிக்கப்பட்டார். இக்குழுவின் முதல் கூட்டம் 1946–ஆம் ஆண்டு டிசம்பர் 9–ஆம் தேதி நடைபெற்றது. அன்றே அரசமைப்புச் சட்டத்தை எழுதும் வேலைகள் தொடங்கிவிட்டன."



அண்ணல் அம்பேத்கர் 'இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.

"எதை முன்னுதாரணமாகக்கொண்டு இதை எழுதினார்கள்?"

"இக்குழுவினர் ஐக்கிய இராச்சியம் (United Kingdom), அமெரிக்கா, அன்றைய சோவியத் ரஷ்யா, ஃப்ரான்ஸ், சுவிட்சர்லாந்து உட்பட 60 நாடுகளின்அரசமைப்புச் சட்டங்களை வாசித்து, அவற்றில் இருந்த சிறப்பான பகுதிகளை முன் மாதிரியாகக்கொண்டு நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கினர்."

"ஒரே மூச்சில் இதை எழுதினார்களா?"

"இல்லை.அரசமைப்புச் சட்டம் இறுதி செய்யப்படுவதற்கு முன்னர் சுமார் இரண்டாயிரம் திருத்தங்கள் (amendments) அதில் மேற்கொள்ளப்பட்டன."

"எப்போதுஇச்சட்டம்எழுதிமுடிக்கப்பட்டது?"

"2 ஆண்டுகள், 11 மாதம், 17 நாட்கள் கடந்த நிலையில், 1949–ஆம் ஆண்டு நவம்பர் 26–ஆம் நாள் முழுமையான அரசமைப்புச் சட்டம் தயாரானது."



"இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் நமது அரசமைப்புச் சட்டத்தை அன்றுதான் ஏற்றுக்கொண்டது. ஆகையினால்தான் அந்த நாளை அரசமைப்புச்சட்ட நாளாக ஆண்டுதோறும் நாம் கொண்டாடுகிறோம். இல்லையா?" என்று கேட்டான் கார்த்திகேயன்.

"ஆம்." என்றார் ஆறுமுகம்.

"அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க எவ்வளவு செலவானது?" என்று கேட்டான் நத்தர்.

"64 லட்சம் ரூபாய் இதற்கென செலவிடப்பட்டது."

"நமது அரசமைப்புச் சட்டத்தின் நோக்கம் என்ன?"

"நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தன்செயலுரிமை, சமத்துவத்தை உறுதி செய்வதோடு சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது."

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 191 14/08/18 1:04 PM

"முகப்புரை என்றால் என்ன?"

"அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரைதான் முகப்புரை என்று அழைக்கப்படுகிறது. அது இந்தியாவை இறையாண்மை, சமத்துவம், மதச் சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு என்று வரையறை செய்கிறது."



"இறையாண்மை என்பது எதைக் குறிக்கிறது?"

"அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களிடம் நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது. இப்படியாக ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தையே இறையாண்மை என்கிறோம்."

"மதச் சார்பின்மை என்பது..?"

"மக்கள் தங்கள் விருப்பப்படி வெவ்வேறு இறை, மத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க அனுமதிக்கும் சட்டம், அவர்களுக்கு ஒரே விதமான பாகுபாடற்ற உரிமைகளை வழங்குகிறது. அரசிற்கான மதம் என்று ஒன்று கிடையாது என்பதால் அரசு அனைத்து மதங்களையும் ஒரே தளத்தில் வைத்தே பார்க்கிறது."

"இந்திய அரசு சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) வழியேதான் ஆளப்படுகிறது. இல்லையா?"

"ஆம். இந்திய அரசமைப்புச் சட்டமானது மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் சட்டமன்ற ஆட்சிமுறையைப் (parliamentary form of government) பின்பற்றி ஆட்சி செய்ய வழிவகை செய்துள்ளது. இந்த அமைப்பின்படி, நிறைவேற்று அதிகாரம் சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) கூட்டுப்பொறுப்பாக இருக்கும். அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சியமைக்கும்."


"அடிப்படை உரிமை என்றால் என்ன?"

"ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத்தேவையான உரிமைகளே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன."

"அவை என்னென்ன?"

"சம உரிமை, சுதந்திரமாகச் செயல்படும் உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, சுதந்திர சமய உரிமை, கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை, சட்டத்தீர்வு பெறும் உரிமை

அடிப்படை உரிமைகள்



6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 192 14/08/18 1:04 PM

ஆகியவை இன்றியமையாத உரிமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன."

"வழிகாட்டு நெறிமுறை என்று கூறினீர்களே. அப்படி என்றால் என்ன?"

"அரசுகள் சட்டமியற்றும்போதும், ஆட்சி செய்யும்போதும் கவனத்தில் கொள்ளவேண்டிய சில வழிகாட்டல்களை அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இவை கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை அல்ல என்றாலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை."

"ஓட்டுரிமை என்பது?"

"பதினெட்டு வயது பூர்த்தியான இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் ஓட்டளிக்கும் உரிமையைப் பெறுகிறார்கள். இந்த உரிமையை அவர்கள் பெறுவதற்கு ஜாதி, மதம், பாலினம், பொருளாதார அடுக்கு உட்பட எதுவும் தடையாக இருக்க முடியாது."

"உரிமைகளைப் போலவே ஒவ்வொரு குடிமகனுக்குமான கடமைகளும் இருக்கும் இல்லையா?"

"ஆம். இருக்கின்றன. தேசியக்கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடப்பது, எல்லா குடிமக்களும் அரசியல் சட்டத்தை மதித்து பேணுவது, சுதந்திரத்திற்காகப் போராடிய நமது தலைவர்களைப் பின்பற்றி நடப்பது, நாட்டைப் பாதுகாப்பது, நாட்டுக்காகத் தேவைப்படும் போது சேவை செய்ய தயாராக இருப்பது, சாதி, மத, மொழி, இன, எல்லை கடந்து அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் இருப்பது, நமது பழம் பெருமை மிக்க பாரம்பரியத்தை காப்பது, காடுகள், நதிகள், ஏரிகள் உள்ளிட்ட இயற்கையையும் வன விலங்குகளையும் பாதுகாப்பது, அறிவியல், மனிதாபிமானம், சீர்திருத்த உணர்வுகளை வளர்ப்பது, வன்முறையைத் தவிர்த்து அரசு சொத்துக்களை பாதுகாப்பது, குழந்தைகளின் பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ, தமது குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை 6–14 வயதுக்குள் தருவது ஆகியவற்றை அரசியல் சட்டம் நமது கடமைகளாக அறிவித்துள்ளது." என்று முடித்தார் சமூக அறிவியலாளர் ஆறுமுகம்.

தகவல் பேழை

- அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் பி. ஆர். அம்பேத்கர், என்.கோபாலசாமி. கே.எம்.முன்ஷி, சையத் முஹம்மது சதுல்லா, பி.எல்.மிட்டர், என். மாதவ ராவ், டி.டி.கே, டி.பி.கேதான் ஆகிய சட்ட வல்லுனர்கள் இடம்பெற்றிருந்தனர்.
- அக்குழுவின் தலைவரான பி. ஆர். அம்பேத்கர் நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக் கருதப்படுகிறார்.
- நமது அரசியல் சட்டம் உருவானபோது, 395 உறுப்புகள், 22 பகுதிகள் மற்றும் 8 அட்டவணைகள் இடம்பெற்றிருந்தன. தற்போது 448 உறுப்புகள், 25 பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள் இடம்பெற்றுள்ளன.
- அரசமைப்புச் சட்டம் 16.9.2016–வரை 101 முறை திருத்தப்பட்டுள்ளது.

சிந்தனை வினா

உடனடியாக செய்ய வேண்டிய கடமைகளாக நீ எவற்றைப் பட்டியலிடுவாய்?



இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 193 14/08/18 1:04 PM

www.tntextbooks.in

கலைச்சொற்கள்

மக்களாட்சி – மக்களால் மக்களுக்காக நடத்தப்பெறும் அரசாங்கம்

வரைவுக்குழு – அரசமைப்புச் சட்ட வரைவை உருவாக்க அமைக்கப்பட்ட குழு

முகப்புரை – இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கான அறிமுகம்

மதச்சார்பின்மை – அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களையும் சமமாக நடத்துதல்

சமத்துவம் – அனைத்து மக்களுக்கும் சமத்துவ பொருளாதார நிலை சமத்துவ வாய்ப்பு அளித்தல்

இறையாண்மை – அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள முழு அதிகாரம்.

மீள்பார்வை

- ஜனவரி 26 குடியரசு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- இந்திய அரசமைப்புச் சட்டம் அடிப்படை கருத்துகளையும் கொள்கைகளையும் சட்டத்தையும் கொண்டுள்ளது.
- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் ஆவார்.
- அரசமைப்புச் சட்டத்தின் முகவுரை நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை வலியுறுத்துகிறது.
- இந்தியா ஒரு இறையாண்மையுடைய சமய சார்பற்ற மக்களாட்சி குடியரசு நாடாகும்.
- அனைத்து குடிமக்களும் அவரவர் மதத்தைப் பின்பற்றலாம்.
- நிர்வாகத்துறை சட்டமன்றத்திற்கு முழு பொறுப்புடையதாக உள்ளது.
- அடிப்படை உரிமைகள் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.
- அரசு நெறிமுறை கோட்பாடுகள் மக்களுக்கு வழிகாட்டுகிறது.
- வயது வந்தோர் வாக்குரிமை 18 வயதை அடைந்தவர்கள் வாக்களிப்பதற்கான உரிமையை வழங்குகிறது.
- அனைத்து குடிமக்களுக்கும் சில அடிப்படை உரிமைகளும் உண்டு.

பயிற்சிகள்

9KXZ96

I. சரியான விடையை தேர்வு செய்க:

1. அரசமைப்புத் தினம் கொண்டாடப்படும் நாள் _____.

அ) ஜனவரி 26 ஆ) ஆகஸ்டு 15

இ) நவம்பர் 26 ஈ) டிசம்பர் 9

2. அரசமைப்புச் சட்டத்தை _____ ஆம் ஆண்டு அரசியல் நிர்ணயசபை ஏற்றுக்கொண்டது.

அ) 1946 ஆ) 1950

இ) 1947 ஈ) 1949

3. அரசமைப்புச் சட்டத்தில் இதுவரை _____ சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

அ) 101 ஆ) 100

இ) 78 ஈ) 46

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 194 14/08/18 1:04 PM

www.tntextbooks.in

4. இஃது அடிப்படை உரிமை அன்று_____.

அ) சுதந்திர உரிமை ஆ) சமத்துவ உரிமை

இ) ஒட்டுரிமை ஈ) கல்வி பெறும் உரிமை

5. இந்தியக் குடிமக்களின் வாக்குரிமைக்கான வயது _____.

அ) 14 ஆ) 18

இ) 16 ஈ) 21

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. அரசியல் நிர்ணய சபையின் தலைவராக _____ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை என போற்றப்படுபவர் _____.
3. நம் அடிப்படை உரிமைகளை உறுதிசெய்யவும் பாதுகாக்கவும் செய்வது _____ ஆகும்.
4. நம் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் _____.

III. பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. சுதந்திர தினம் – அ. நவம்பர் 26
2. குடியரசு தினம் – ஆ. ஏப்ரல் 1
3. இந்திய அரசமைப்பு தினம் – இ. ஆகஸ்டு 15
4. அனைவருக்கும் கல்வி உரிமை – ஈ. ஜனவரி 26

	1	2	3	4
அ.)	இ	அ	ஈ	ஆ
ஆ.)	இ	ஈ	அ	ஆ
இ.)	ஈ	ஆ	அ	இ

IV. தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி.

அரசமைப்புச் சபை

1. அரசமைப்பு நிர்ணய சபை எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
2. வரைவுக்குழுவில் எத்தனை உறுப்பினர்கள் பங்கேற்றனர்?
3. அரசமைப்பு நிர்ணய சபையில் பங்கேற்ற பெண் உறுப்பினர்கள் எத்தனை பேர்?
4. அரசமைப்புச் சட்ட உருவாக்கம் எப்போது முடிவடைந்தது?

V. பின்வரும் வினாக்களுக்கு விடையளி:

1. ஜனவரி 26 குடியரசு தினமாக ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது?
2. அரசமைப்புச் சட்டம் என்றால் என்ன?
3. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சிறப்பம்சங்களைப் பட்டியலிடுக.
4. அடிப்படை உரிமைகள் என்றால் என்ன?
5. நீ செய்ய விரும்பும் கடமைகளைப் பட்டியலிடுக.
6. முகப்புரை என்றால் என்ன?
7. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற சொற்களின் மூலம் நீ புரிந்து கொள்வது என்ன?
8. வரையறு: இறையாண்மை.

VI. செயல்பாடுகள்:

1. மாணவர்கள் தனித்தனியாகவோ அல்லது குழுவாகவோ தங்கள் வகுப்புக்கான விதிமுறைகளைத் தயாரித்தல். பின்பு அவற்றிலிருந்து வகுப்புக்கான விதிகளின் தொகுப்பை உருவாக்குதல்.
2. வீடு, பள்ளி, சமூக அளவில் உன் உரிமைகளையும் கடமைகளையும் பட்டியலிடுக.
3. சமத்துவம், குழந்தைத்தொழிலாளர் அனைவருக்கும் கல்வி பெறும் உரிமை – இத்தலைப்புகளைப் பற்றி கலந்துரையாடுக.

6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 195 14/08/18 1:04 PM

4. அமைதிக்கான நோபல் பரிசு (2014) இந்தியாவை சேர்ந்த கைலாஷ் சத்தியார்த்திக்கும் பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா யூசூப்சாய்க்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது – இவர்களின் பணிகளைக் கேட்டறிக.

VII வாழ்வியல் திறன்

1. உனக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளுள் உனக்குப் பிடித்தமானது எது? ஏன்?
2. இந்திய அரசமைப்புச் சட்டம் நமக்கான உரிமைகளையும் கடமைகளையும் வழங்கியுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் குறித்து எண்ணங்களைப் பகிர்க.



6th_CIVICS_IInd Term_UNIT 2.indd 196 14/08/18 1:04 PM

www.tntextbooks.in

அலகு 1

மக்களாட்சி



கற்றல் நோக்கங்கள்

- மக்களாட்சி என்பதன் பொருளை அறிதல்
- மக்களாட்சியின் வகைகளை அறிந்து கொள்ளல்
- நம் அரசமைப்புச் சட்டத்தின் கட்டமைப்பை அறிந்து வியத்தல்
- மக்களாட்சியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளல்

'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு'

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் சிறந்த ஆட்சியாளரின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

நல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் மாதந்தோறும் நடைபெறும் 'சமூகம் அறிவோம்' நிகழ்விற்கான இறுதிக்கட்ட வேலைகளை ஆசிரியர்கள் செய்து கொண்டிருந்தனர். அங்கிருந்த சிங்காரவேலர் அரங்கம் மாணாக்கர்களால் நிரம்பியிருந்தது. தலைமையாசிரியர் ஜீவா அன்றைய சிறப்பு விருந்தினரான வழக்குரைஞர் திரு.ராஜசேகரன் அவர்களை வரவேற்று அழைத்து வந்தார். அங்கே சட்டென்று அமைதி நிலவியது.

வரலாற்று ஆசிரியர் பிரிட்டோ அனைவரையும் வரவேற்று அமர, ராஜசேகரன் மாணாக்கர்களுடன் பேச எழுந்தார்.

"அன்பான தம்பி, தங்கைகளே! இந்த நிகழ்விற்கு என்னை அழைத்தமைக்கு நன்றி. இன்றைய நிகழ்வில் நான் உரையாற்றப்போவதில்லை." என்று சொல்லி இடைவெளிவிட, எல்லோரும் அவரை வியப்புடன் பார்த்தனர்.

"எப்போதும் எங்கும் ஜனநாயகம் வேண்டும் இல்லையா? அதனால், இந்நிகழ்வில் உங்கள் எல்லோருடனும் உரையாடப்போகிறேன்." என்று கூறிவிட்டு ஒலிவாங்கி ஒன்றை மாணாக்கர்களிடம் தருமாறு கேட்டுக்கொண்டார்.

"முதலில் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். ஆதிமனிதன் எப்படிப்பட்ட சமூக அமைப்பில்



வாழ்ந்தான் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார் ராஜசேகரன்.

"தொடக்கத்தில் அவர்கள் வேட்டைச் சமூகமாகவும் உணவு சேகரிப்போராகவும் வாழ்ந்தனர். பிறகு ஆற்றோரம் குடியேறி விவசாயம் செய்யத்தொடங்கினர்." என்றாள் ஆறாம் வகுப்பு மாணவி தீபிகா.

"ஆமாம். மனிதர்கள் அப்படிக் குழுக்களாக வாழத்தொடங்கியதும், பழங்குடி அமைப்பு தோன்றியது. ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனித் தலைவர்கள் உருவானார்கள். நிலம், நீர், வளம் இவற்றை முன்னிறுத்தி குழுக்களுக்கு இடையில் மோதல்கள் உருவாகின. அதில் வென்றவர்கள் ஏனைய பழங்குடி இனக்குழுக்களை ஒன்றிணைத்து அரசுகளை உருவாக்கினர். இப்படிப்பட்ட சிறு அரசுகளின் ஒருங்கிணைப்பில் பேரரசுகள் உருவாகின."

"இப்போது தலைவன் என்பவன் அரசர் என்ற நிலையை அடைந்திருப்பான். இல்லையா?" என்று கேட்டான் அருண்.

"ஆம். அப்படித்தான் அரசர்களின் தலைமையில் இயங்கும் மன்னராட்சி முறை தோன்றியது."

"நமது நாட்டிலும் இப்படித்தான் மன்னராட்சி ஏற்பட்டதா?" என்று கேட்டாள் சுகன்யா.

"ஆம். உலகெங்கும் இப்படியான அமைப்பே உருவாகி நீடித்தது. அரசர்கள் மற்றும் பேரரசர்களால் ஆளப்பட்ட நமது நாடு, பின்னர் பிரிட்டனின் ஆட்சியதிகாரத்தின்கீழ் வந்து சேர்ந்தது."

"நாம் பல்லாண்டுகாலம் போராடி, பல்வேறு தியாகங்களுக்குப் பிறகு பிரிட்டனின் காலனியாதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றோம்." என்று ஒருமித்த குரலில் கூறினர் மாணாக்கர்கள்.

"நாடு விடுதலை அடைந்ததும், நாம் மக்களாட்சி முறையை ஏற்றுக்கொண்டோம்." என்றார் ராஜசேகரன்.

"மக்களாட்சி என்றால் என்ன?" என்று அவரிடம் கேள்வி எழுப்பினான் தேவராஜன்.



உங்களுக்குத் தெரியுமா?

"மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி"

– ஆப்ரகாம் லிங்கன்.

"நீங்கள் ஒரு விளையாட்டு மன்றம் ஒன்றை ஆரம்பிக்கிறீர்கள் என்றால் அதன் பொறுப்புகளை உங்களுக்குள் பிரித்துக்கொள்வீர்கள். பிறகு வரவு செலவுகள் மற்றும் பயன்களை எல்லோரும் அனுபவிப்பீர்கள். இல்லையா?"

"ஆம்."

"அதேபோல், ஒரு நாட்டின் குடிமக்கள் தேர்தல் வழியில் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், அதன்மூலம் அரசு அதிகாரத்தில் நேரடியாகப் பங்கேற்பதையும்தான் **மக்களாட்சி** என்கிறோம். மக்களாட்சி அமைப்பில் குறிப்பிடத்தகுந்த அளவு அதிகாரம் மக்களிடம் இருக்கும். அவர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடவும், அரசின் முடிவெடுக்கும் நடைமுறைகளில் பங்குபெறவும் இயலும். மக்களாட்சியில் சில வகைகள் உண்டு."

உங்களுக்குத் தெரியுமா?

"மக்களாட்சியின் பிறப்பிடம் கிரேக்கம் ஆகும்".

"மக்களாட்சியில் வகைகளா!"

"ஆமாம். உலகெங்கும் பல்வேறு முறைகளில் மக்களாட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் **நேரடி மக்களாட்சி** (Direct Democracy), **பிரதிநிதித்துவ மக்களாட்சி** (Representative Democracy) ஆகிய இரண்டும் பிரபலமான முறைகள்."

"நேரடி மக்களாட்சி என்றால்?" என்று கேட்டான் சிராஜுதீன்.

"நேரடி மக்களாட்சி முறையில் மக்களே சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றிருப்பார்கள். உதாரணமாக உங்களுடைய விளையாட்டு மன்றத்தை எடுத்துக்கொள்வோம். நீங்கள் எல்லோரும் ஒன்றுகூடி விவாதித்து மன்றத்திற்கான விதிகளை உருவாக்கிவிட முடியும். மேலும் இம்முறையில் மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதால் அவர்கள் ஒவ்வொருவரின் பார்வையும் வெளிப்படும். ஆனால் இறுதி முடிவினை எப்படி எடுப்பீர்கள்?"



நேரடி மக்களாட்சியில் மக்களே சட்டங்களை உருவாக்குகின்றர். அனைத்து சட்டத்திருத்தங்களையும் மக்கள்தான் அங்கீகரிப்பர். அரசியல்வாதிகள் நாடாளுமன்ற செயல்முறைகளின்படி ஆட்சி செய்வர். நேரடி மக்களாட்சியை வெற்றிகரமான செயல்படுத்தும் வரலாற்றை **சுவிட்சர்லாந்து** பெற்றுள்ளது.

சிந்தனை வினா

நேரடி மக்களாட்சி முறையை இந்தியாவில் நடைமுறைப்படுத்த இயலுமா?

"பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரிக்கும் ஒன்றை முடிவாக ஏற்றுக்கொள்வோம். எஞ்சியவர்களும் அம்முடிவிற்குக் கட்டுப்படுவார்கள்." என்றான் செல்வா.

"ஆம். இம்முறைதான் நேரடி மக்களாட்சி என்றுஅழைக்கப்படுகிறது." என்றார் ராஜசேகரன்.

"பிரதிநிதித்துவ மக்களாட்சி என்றால் என்ன?"


"உங்களுடைய விளையாட்டு மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை இப்போது

பெருகிவிட்டது என்று வைத்துக்கொள்வோம். நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் தினசரி கூடி விவாதித்து முடிவுகள் எடுப்பது சாத்தியமா?"


"இல்லை."

"அப்படியான சூழல் வரும்போது உறுப்பினர்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு குழு உருவாக்கப்பட வேண்டும். இல்லையா?"

"ஆமாம்." என்று ஒரே குரலில் மாணாக்கர்கள் ஆமோதித்தனர்.



"அக்குழுவினர் உறுப்பினர்கள் சார்பில் மன்றத்தை நிர்வகிப்பர். அவர்களைத் தேர்ந்தெடுக்கும் விதமாக ஓட்டெடுப்பு நடைபெறும். உதாரணமாக தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போன்ற பதவிகளுக்குப் பலரும் போட்டியிடுவர். முடிவில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவினைப் பெற்றவர் அந்தந்தப் பதவிகளை அடைவார்கள். அவர்களுக்கு ஏனைய உறுப்பினர்கள் சார்பாக ஜனநாயக ரீதியாக முடிவெடுக்கும் அதிகாரம் கிடைக்கும். இதையே பிரதிநிதித்துவ மக்களாட்சி என்று கூறுகிறோம்."



"ஜனநாயக ரீதியாக முடிவெடுப்பது (Democratic Decision making) என்றால் என்ன?" என்று கேள்வி எழுப்பினாள் ஜூடித்.

"மக்களாட்சி அமைப்புகளில் முடிவெடுக்கும் அதிகாரம் தலைவரிடம் குவிந்திருக்காது. மாறாக அவ்வதிகாரம் ஒரு குழுவிடம்தான் இருக்கும். சட்டதிட்டங்களுக்கும், விதிமுறைகளுக்கும் உட்பட்டு இயங்கும் அக்குழு, தொடர்புடையோர் அனைவரையும் உள்ளடக்கிய வெளிப்படையான உரையாடல்களை முன்னெடுக்கும். பின்னர் அவர்களிடையே ஒருமித்த கருத்தொருமை ஏற்பட்டதும் இறுதி முடிவினை எடுக்கும். இதைத்தான் ஜனநாயக ரீதியாக முடிவெடுத்தல் என்கிறோம்."

"ஒரு குழுவிற்கான விதிகள் இருப்பதுபோல் நமது நாட்டை நிர்வகிப்பதற்கான விதிகளும் இருக்கும். இல்லையா?"



தமிழ்நாடு சட்டமன்றம்

உங்களுக்குத் தெரியுமா?

2007ல் ஐ.நா.சபை செப்டம்பர் 15 ஆம் நாளை உலக மக்களாட்சி தினமாக அறிவித்துள்ளது.

"ஆம். இந்தியா போன்றதொரு மக்கள்தொகை மிக்க நாட்டில் அனைவரும் நிம்மதியாக வாழ வேண்டுமென்றால் மக்கள் அனைவரும் விதிகள், வழிமுறைகள், உரிமைகள் மற்றும் கடமைகளை அறிந்து பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது. நமது அரசமைப்புச்சட்டம் அத்தகைய வழிமுறைகளை நமக்கு வழங்கியுள்ளது. அவை நமது நாட்டின் சட்ட ஒழுங்கைக் காப்பாற்றுவதில் பெரும்பங்கு வகிக்கின்றன."

"அரசமைப்புச்சட்டம் நமக்கு என்னமாதிரியான உரிமைகளை வழங்கியுள்ளது?"

"அது இந்தியர் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதிபெறும் உரிமையை உறுதி செய்துள்ளது."

"வேறு எவையெல்லாம் அதில் இடம்பெற்றுள்ளன?"

"அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுத்துள்ளதோடு, அரசு நிறுவனங்களின் வடிவமைப்பு, அவை பின்பற்றவேண்டிய வழிமுறைகள், அவற்றின் அதிகாரம் மற்றும் கடமைகளையும் விளக்குகிறது. மேலும் குடிமக்களுக்கான உரிமைகள், கடமைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளையும் நிர்ணயம் செய்துள்ளது. இப்படியாக அது ஒரு சிறப்பான கட்டமைப்பை நமக்கு வழங்கியுள்ளது."

"நமது அரசமைப்புச்சட்டம் இவ்வளவு விளக்கமானதா?'" என்று வியப்புடன் கேட்டாள் தமிழ்ச்செல்வி.

"இந்திய அரசமைப்புச்சட்டம்தான் உலகில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டங்களிலேயே மிகப் பெரியது. இதை **டாக்டர் பி. ஆர். அம்பேத்கரின்** தலைமையிலான அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு உருவாக்கியது. அதனால்தான் அவர் **நமது அரசமைப்புச்சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக்** கருதப்படுகிறார்." என்று முடித்தார் ராஜசேகரன்.

மாணாக்கர்கள் மகிழ்ச்சியுடன் கைதட்டி ஆரவாரித்தனர். இறுதியில் மக்களாட்சி குறித்து எளிமையாக விளக்கியமைக்கு நன்றி தெரிவித்தனர்.

மக்களாட்சியின் நோக்கம்

மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சியமைப்பு மக்களாட்சி என்று அழைக்கப்படுகிறது.



மக்களாட்சி அமைப்பில் அதிகாரம் மக்களிடம் இருக்கும். அதற்கு அவர்கள் முடிவெடுக்கும் உரிமையைப் பெற வேண்டியது அவசியமாகிறது. ஒவ்வொரு தனிநபரும் முடிவெடுக்கும் வழிமுறைகளில் நேரடியாகப் பங்கேற்க இயலாது என்பதால் முடிவெடுக்கும் அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது. மக்களாட்சி அரசில், 18 வயது நிறைவுற்ற அனைத்துக் குடிமக்களுக்கும் தங்களுக்கான பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பிரதிநிதியும் மக்கள் நலனைக் காப்பதைத் தனது கடமையாகக் கொள்ளவேண்டும்.

உலகெங்கும் மக்களாட்சி

உலகிலேயே முதன் முதலில் பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்த நாடு நியூஸிலாந்து (New zealand) ஆகும் (1893). ஐக்கிய பேரரசில் (United Kingdom) 1918ஆம் ஆண்டும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (United states of America) 1920–ஆம் ஆண்டும்தான் பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது. அதே காலகட்டத்தில் இந்தியாவில் பணக்காரர்களுக்கு மட்டுமே ஓட்டுரிமை வழங்கப்பட்டிருந்தது. மகாத்மா காந்தி உட்படப்பலதலைவர்கள்அனைவருக்கும் ஓட்டுரிமை என்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். இன்று இந்தியாவில் 18 வயது நிறைவடைந்த ஒவ்வொருவருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டுள்ளது. (உலகளாவிய வயதுவந்தோர் உரிமைகளின்படி).



இந்தியக்குடிமக்களில் 79% பேர் தங்களது நாட்டின் மக்களாட்சியின்மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக உலக அளவிலான இப்பட்டியலில் இந்தியாவிற்கு முதலிடம் கிடைத்துள்ளது.

உலகின் பழமையான மக்களாட்சி நாடுகள்

வ. எண்.	மக்களாட்சி நாடு	காலம்	அமைவிடம்	சிறப்புக் கூறுகள்
1	கிரேக்கம்	கி.மு (பொ.ஆ.மு) 5ஆம் நூற்றாண்டு	கிரீஸ்	அரசியல் தத்துவத்தின் அடித்தளம்
2	ரோமானியப் பேரரசு	கி.மு (பொ.ஆ.மு) 300 – 50	தீபகற்ப இத்தாலி, ரோம்	நாகரிக வளர்ச்சியின் உலகளாவிய விரிவாக்கம்
3	சான் மரினோஸ்	கி.பி. (பொ.ஆ) 301	இத்தாலி	பழமையான அரசியலமைப்பு தற்போதும் நடைமுறையில் உள்ளது.
4	ஐஸ்லாந்து	கி.பி. (பொ.ஆ) 930	திங்வேளிர்	உலகிலேயே பழமையான மற்றும் நீண்ட காலமாக செயல்பட்டுவரும் நாடாளுமன்றத்தைக் கொண்டது.
5	மனிதத் தீவு (Isle of Man)	கி.பி. (பொ.ஆ) 927	இங்கிலாந்திற்கும் அயர்லாந்திற்கும் இடையே உள்ளது	மன்னராட்சியின் கீழ் சுயாட்சி
6	இங்கிலாந்து	கி.பி. (பொ.ஆ) 13ஆம் நூற்றாண்டு	இங்கிலாந்து	1215இல் எழுதப்பட்ட மகாசாசனம் (மாக்னா கார்டா)
7	அமெரிக்க ஐக்கிய நாடுகள்	கி.பி. (பொ.ஆ) 1789	அமெரிக்க ஐக்கிய நாடுகள்	மிகப் பழமையான மக்களாட்சிகளுள் ஒன்று

கலைச்சொற்கள்

மக்களாட்சி	-	Democracy
நாடாளுமன்றம்	-	Parliament
அரசமைப்புச் சட்டம்	-	Constitution
பிரதிநிதித்துவம்	-	Representative
சட்டம் மற்றும் விதி	-	Laws and rules
வாக்குகள்	-	Votes
ஓட்டுரிமை	-	Right to vote

மீள் பார்வை

- மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி ஆகும்.
- நேரடி மக்களாட்சி, பிரதிநிதித்துவ மக்களாட்சி என மக்களாட்சி இருவகைப்படும்.
- நம் அரசமைப்புச் சட்டம் இந்தியர் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி பெறும் உரிமையை உறுதி செய்துள்ளது.
- இந்திய அரசமைப்புச் சட்டம்தான் உலகில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டங்களிலேயே மிகப் பெரியது.
- இந்தியாவில் 18 வயது நிரம்பிய எந்த ஒரு குடிமகனும் வாக்களிக்கலாம்.

பயிற்சி

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஆதிமனிதன் _____ பகுதியில் குடியேறி விவசாயம் செய்யத் தொடங்கியனான்.
   அ) சமவெளி ஆ) ஆற்றோரம்
   இ) மலை ஈ) குன்று
2. மக்களாட்சியின் பிறப்பிடம் _____.
   அ) சீனா ஆ) அமெரிக்கா
   இ) கிரேக்கம் ஈ) ரோம்
3. உலக மக்களாட்சி தினம் _____ ஆகும்.
   அ) செப்டம்பர் 15 ஆ) அக்டோபர் 15
   இ) நவம்பர் 15 ஈ) டிசம்பர் 15
4. நேரடி மக்களாட்சியில் வாக்களிப்பவர் _____.
   அ) ஆண்கள் ஆ) பெண்கள்
   இ) பிரதிநிதிகள் ஈ) வாக்காளர்கள்

II நிரப்புக.

1. நேரடி மக்களாட்சியைச் செயல்படுத்தும் நாடு _____.
2. மக்களாட்சிக்கான வரையறையை வகுத்தவர் _____.
3. மக்கள் _____ அளிப்பதன் மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர்.
4. நம் நாட்டில் _____ மக்களாட்சி செயல்படுகிறது.

III விடையளிக்கவும்.

1. மக்களாட்சி என்றால் என்ன?
2. மக்களாட்சியின் வகைகள் யாவை?
3. நேரடி மக்களாட்சி – வரையறு.
4. பிரதிநிதித்துவ மக்களாட்சி – வரையறு.
5. நம் அரசமைப்புச் சட்டத்தின் சிறப்புகளாக நீ புரிந்து கொள்வன யாவை?

DZSSU5

IV உயர்சிந்தனை வினா

நேரடி மக்களாட்சி, பிரதிநிதித்துவ மக்களாட்சி – ஒப்பீடு செய்து, வேறுபாடுகளை அறியவும்.

V செயல்பாடுகள்

1. உங்கள் தொகுதி பிரதிநிதிகளின் பெயர்களைக் கேட்டறிந்து எழுதவும்.
   அ) நாடாளுமன்ற உறுப்பினர்
   ஆ) சட்டமன்ற உறுப்பினர்
   இ) உள்ளாட்சி உறுப்பினர்
2. மக்களாட்சி முறையின் நிறை, குறைகளை விவாதிக்கவும்.

www.tntextbooks.in

அலகு 2

உள்ளாட்சி அமைப்பு – ஊரகமும் நகர்ப்புறமும்



கற்றல் நோக்கங்கள்

- ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு மற்றும் பணிகளை அறிதல்.
- கிராம சபையைப் பற்றியும் கிராமசபை கூட்டத்தின் நோக்கத்தையும் அறிந்துகொள்ளல்.
- பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்களைப் புரிந்து கொள்ளல்.
- உள்ளாட்சியில் பெண்களின் பங்கை அறிதல்.
- உள்ளாட்சி தேர்தலைப் பற்றி அறிந்து அடுத்து வரும் தேர்தலை உற்றுநோக்கல்.

E12NVS

நந்தினி ஆறாம் வகுப்பு படிப்பவள். அவள் வீட்டில் ஒரு வழக்கம் இருந்தது. தினமும் நாளிதழில் வரும் தலைப்புச் செய்திகளை அவள் சத்தம்போட்டு வாசித்துக்காட்டவேண்டும். அவளது அப்பா நம்புராஜனும் அம்மா மணிமேகலையும் அமர்ந்து கேட்பார்கள். இவள் ஏதாவது சந்தேகம் கேட்டால் அதற்கு விளக்கம் கொடுப்பார்கள். சில சமயம் அக்கம்பக்கத்து வீட்டு சிறுவர்களும் சேர்ந்துகொள்வார்கள். நாளிதழில் வரும் செய்தியை ஆளுக்கொன்றாய் பிரித்துக்கொண்டு படிப்பார்கள். அன்றும் அப்படித்தான், சனிக்கிழமையானதால்.. ஜான்சன், மாறன், அன்வர் என எல்லோரும் நந்தினியின் வீட்டில் குழுமி விட்டனர். நந்தினி, முதலில் நாளிதழில் இருந்து ஒரு செய்தியை வாசித்தாள்.

"நாகர்கோவில், விரைவில் மாநகராட்சி ஆகிறது."

அடுத்த செய்தியின் தலைப்பைப் படிக்கும் முன்னரே அவளுக்குச் சந்தேகம் வந்தது.


"அப்பா, மாநகராட்சின்னா என்னப்பா?"

"பல லட்சம் மக்கள் தொகையும், அதிக வருவாயும் இருக்குற ஊர்களை **மாநகராட்சியாக** தமிழ்நாடு அரசு அறிவிக்கும். இப்படித்தான் இப்போ இந்தப் பட்டியலில் நாகர்கோவிலும் சேரப்போகிறது." என்றார் நந்தினியின் அப்பா, நம்புராஜன்.

"அப்படின்னா! இங்கே ஏற்கனவே வேற மாநகராட்சிகள் இருக்கா?"

"ஆமாம். 12 மாநகராட்சிகள் இருக்கின்றன" என்றார் நம்புராஜன்.

1. சென்னை 2. மதுரை 3.கோயம்புத்தூர்
4. திருச்சி 5. சேலம் 6. திருநெல்வேலி
7. ஈரோடு 8. தூத்துக்குடி 9.திருப்பூர்
10. வேலூர் 11. திண்டுக்கல் 12. தஞ்சாவூர்



உங்களுக்குத் தெரியுமா?

1688ல் உருவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சிதான் இந்தியாவின் மிக பழமையான உள்ளாட்சி அமைப்பாகும்.



"அப்ப, நம்ம ஊரு..?" என்று கேட்டான் மாறன்.

"நம்ம ஊரு.. ஊராட்சியில வரும்டா..?"

"ஊராட்சின்னா..?"

"தமிழ்நாட்டுல கிராமமும் இருக்கு. நகரமும் இருக்கு இல்லையா?

"ஆமாப்பா.."

"கிராமங்களின் தேவைகளும், நகரங்களின் தேவைகளும் மாறுபடும் அல்லவா? அப்படி இருக்கும் பகுதிகளில் மக்களின் தேவைகளைச் சரியாகப் பூர்த்தி செய்வதற்காக சில அமைப்புகளை நமது அரசமைப்பு உருவாக்கி இருக்கு.

அதன்படி, நகர்ப்புறத்தை மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என்றும் கிராமப்புறத்தை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி என்றும் பிரித்து வைத்திருக்காங்க. இவை உள்ளாட்சி அமைப்புகள் என்று அழைக்கப்படுகின்றன."

"ஓ! இவ்வளவு இருக்கா..?"

"ஆமா இருக்கு. சொல்லுகிறேன் கேட்டுக்குங்க; மாநகராட்சிப் பற்றி சொன்னேன் இல்லையா..?"

"ஆமாப்பா"

"தமிழ்நாட்டில மாநகராட்சிக்கு அடுத்த நிலையில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையுடன், வருவாய் அதிகம் இருக்கும் ஊர்களை **நகராட்சி** என்று பிரித்துள்ளனர்.

உங்களுக்குத் தெரியுமா?

- தமிழ்நாட்டில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட நகராட்சி **வாலாஜாபேட்டை** நகராட்சி ஆகும் (வேலூர் மாவட்டம்).
- நகராட்சிகள் அதிகமாக உள்ள மாவட்டம் **காஞ்சிபுரம்** மாவட்டம்.

"அப்புறம் மாமா, பேரூர் ஆட்சின்னு என்னமோ சொன்னீங்களே?"

"அது பேரூர் ஆட்சி இல்லை. பேரூராட்சி. அப்படீன்னா.. நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடைப்பட்ட ஊர். சுமார் 10 ஆயிரம் பேர் வாழக்கூடிய ஊராக இருந்தால் அதுதான் **பேரூராட்சி.** இதுல ஒரு சிறப்பு இருக்கு.. என்னன்னு யாராச்சும் சொல்லுங்க பார்ப்போம்" என்ற நம்புராஜன் எல்லோரின் முகத்தையும் பார்த்தார். அவர்களும் அவரையே பார்த்தபடி இருந்தனர். யாருக்கும் அக்கேள்விக்கான பதில் தெரியவில்லை.

"சரி! நானே சொல்கிறேன்.

இந்தியாவிலேயே முதல் முறையாக பேரூராட்சி என்ற உள்ளாட்சி அமைப்பு **தமிழ்நாட்டில்** தான் அறிமுகப்படுத்தப்பட்டது"

"ஆஹா!..." என்றனர் எல்லோரும்.

மாநகராட்சிக்கு இந்திய ஆட்சிப்பணி (இ.ஆ.ப) அதிகாரி ஒருவர் **ஆணையராக** இருப்பார். நகராட்சிகளுக்கு அரசு அதிகாரிகள் **நகராட்சி ஆணையர்களாக** நியமிக்கப்படுவார்கள். பேரூராட்சியின் நிர்வாக அலுவலர் **செயல் அலுவலர்** (EO) ஆவார்.

"ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம்னு சொன்னீங்களே அப்படின்னா.."

"கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு **கிராம ஊராட்சி** ஆகும். கிராம ஊராட்சி மக்களுக்கும் அரசுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படுகிறது. கிராமங்கள், மக்கள் தொகைக்கு ஏற்ப பல பகுதிகளாகப் (Ward) பிரிக்கப்படுகின்றன. இதன் பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.



தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள்

- ஊராட்சி மன்றத் தலைவர்
- பகுதி உறுப்பினர்கள்
- ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்)
- மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்

ஊராட்சி ஒன்றியம்

பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்) ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார் அல்லவா? கவுன்சிலர்கள் தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர். துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார், **வட்டார வளர்ச்சி அலுவலர்** (BDO) இதன் நிர்வாக அலுவலர் ஆவார்.

ஊராட்சி ஒன்றிய அளவில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



- விழுப்புரம் மாவட்டத்தில் தான் அதிகப்படியாக 22 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.
- நீலகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 4 ஊராட்சி ஒன்றியங்கள் தான் உள்ளன.

மாவட்ட ஊராட்சி

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. 50,000 மக்கள் தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் (District Panchayat ward) பிரிக்கப்படுகின்றது. பகுதி உறுப்பினர்களைக் கிராம ஊராட்சி மக்கள் தேர்தல் மூலம்

தேர்ந்தெடுக்கின்றனர். மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் தங்களின் ஒருவரை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் செய்கின்றனர்.

உள்ளாட்சி அமைப்புகள் தேந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. தொகுதிகள், பகுதிகள் (wards) என அழைக்கப்படுகின்றன. பகுதி உறுப்பினர்களை மக்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர்.

அவ்வாறே மாநகராட்சித் தலைவரும் (மேயர்), நகராட்சித் தலைவரும் நேரடி தேர்தல் மூலம் மக்களால் தேர்வு செய்யப்படுகின்றனர். மாநகராட்சித் துணைத்தலைவரும், நகராட்சித் துணைத் தலைவரும் அந்தந்தப் பகுதி (ward) உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுவார்கள்." என்று தனது நீண்ட உரையை முடித்தார் நம்புராஜன்.

"உள்ளாட்சி அமைப்புகளால் என்ன நன்மை இருக்கப்போகுது, மாமா?"

"நிறைய நன்மைகள் இருக்கே, பொதுமக்களுக்குத் தேவையான பணிகளை அவசியப்பணிகள், விருப்பப்பணிகள்னு பிரிச்சுக்கலாம். இவை உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படுகின்றன.."

கிராம ஊராட்சியின் பணிகள்

அவசியப் பணிகள்

- குடிநீர் வழங்குதல்
- தெருவிளக்கு அமைத்தல்
- தெருக்களைத் தூய்மைப்படுத்துதல்
- கழிவு நீர்க் கால்வாய் அமைத்தல்
- ஊர்ச்சாலைகள் அமைத்தல்
- மத்திய, மாநில அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்.

விருப்பப் பணிகள்

- பூங்கா அமைத்தல்
- நூலகம் அமைத்தல்
- விளையாட்டு மைதானம் அமைத்தல் இன்னும்பிற.

மாநகராட்சியின் பணிகள்

- குடிநீர் வசதி
- தெருவிளக்கு அமைத்தல்
- தூய்மைப் பணி
- மருத்துவச் சேவை
- சாலைகள் அமைத்தல்
- மேம்பாலங்கள் அமைத்தல்
- சந்தைகளுக்கான இடவசதி
- கழிவுநீர்க்கால்வாய்
- திடக்கழிவு மேலாண்மை
- மாநகராட்சிப் பள்ளிகள்
- பூங்காக்கள்
- விளையாட்டு மைதானங்கள்
- பிறப்பு, இறப்பு பதிவு. இன்னும்பிற.,

"அப்ப இந்த வேலைகளை எல்லாம் யார் செய்வாங்க?"

"மன்றக்கூட்டங்களில் போடப்படும் தீர்மானங்களின்படி ஆணையாளர், அல்லது அதிகாரி அந்தப் பணிகளைத் தனக்குக் கீழுள்ள

அலுவலர் மற்றும் ஊழியர்களைக் கொண்டு செயல்படுத்துகிறார். இப்படி அப்பணிகள் சிறப்பாக நடைபெற பல அடுக்குகளிலும் பணியாற்ற ஊழியர்கள் உண்டு."

"ஓ.. இந்த பணிகளைச் செய்ய நிதி அரசாங்கம் கொடுத்துடுமாப்பா.."

"நேரடியாக அரசும் அளிக்கும். அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளும் வரிகளாக வசூல் செய்து கொள்வார்கள்"

கிராம ஊராட்சியின் வருவாய்

- வீட்டுவரி
- தொழில் வரி
- கடைகள் மீதான வரி
- குடிநீர் இணைப்புக்கான கட்டணம்
- நிலவரியிலிருந்து குறிப்பிட்ட பங்கு
- சொத்துரிமை மாற்றம் – குறிப்பிட்ட பங்கு
- மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு. இன்னும்பிற.,

மாநகராட்சியின் வருவாய்

- வீட்டு வரி
- குடிநீர் வரி
- கடைகள் மீதான வரி
- தொழில் வரி
- பொழுதுபோக்கு வரி
- வாகனக் கட்டணம்
- மத்திய, மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு. இன்னும்பிற.,

செயல்பாடுகள்

- ஊரக, நகர்ப்புற வருவாய் மற்றும் பணிகளை ஒப்பிடுக.
- உன் வீட்டில் என்னென்ன வரிகள் கட்டுகிறார்கள் எனக் கேட்டறியவும்?

"சரி, ஊர்மன்றக்கூட்டம்னு சொன்னீங்களே அது எப்படி நடக்கும் மாமா.." என்று கேட்டான் மாறன்.

"சபைக்கூட்டம்னா... மரத்தடியில் சுத்தி உட்கார்ந்துகொண்டு, பேசுவாங்களே. சினிமாவுல பார்த்திருக்கேன்" என்றான் ஜான்சன்.



"அப்படியில்லை! அது வேற, இது வேற. ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராம சபை அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு நிரந்தர அமைப்பு. கிராம சபைக் கூட்டம் சிறிய கிராமங்களிலும் நடைபெறும். கிராம சபையே மக்களாட்சி அமைப்பின் ஆணிவேராகும்.

அதுல 18 வயசு நிறைவடைந்து, அந்த ஊராட்சி வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவங்க கலந்து கொள்ளலாம். இக்கூட்டம் ஆண்டுக்கு நான்கு முறை கூடும். மாவட்ட ஆட்சித்தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர், ஆசிரியர் போன்றோரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுவாங்க. அப்போது மக்கள் தங்கள் தேவைகளையும் குறைகளையும் நேரடியாகச் சொல்லலாம்."

"இக்கூட்டம் எந்தெந்த நாள்களில் கூடும்?"

"**ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2**"

இந்நாள்களைத் தவிர தேவைக்கேற்பவும் அவசர காலங்களிலும் கிராம சபை கூடும். இவை சிறப்பு கிராம சபைக்கூட்டம் எனப்படும்.

செயல்பாடுகள்

கிராமசபைக் கூட்டத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்று பார்வையிடச் செய்யலாம்.

"உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்களைப் பரவலாக்குவது என்ற நோக்கத்திற்காகத் தேசிய பஞ்சாயத்து ராஜ் சட்டம் 1992ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் தேதி கொண்டுவரப்பட்டது. இப்படியான ஓர் அமைப்பு வேண்டும் என்று இதற்கு இப்பெயர் வைத்தவர் நம்ம மகாத்மா காந்தி".



தேசிய ஊராட்சி தினம் ஏப்ரல் 24.

பஞ்சாயத்து ராஜ் – சிறப்பம்சங்கள்

- கிராம சபை அமைத்தல்
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பு
- இடஒதுக்கீடு
- தேர்தல்
- பதவிக்காலம்
- நிதிக் குழு
- கணக்கு மற்றும் தணிக்கை இன்னும் பிற

"ரொம்ப நன்றி மாமா. நாங்கள் நிறைய செய்திகளை இன்று தெரிந்துகொண்டோம்." என்றனர் பிள்ளைகள் கூட்டாக.

"இன்னிக்கு உங்களுக்கு இதைப் பற்றி சொல்ல முடிந்தது எனக்கும் ரொம்ப சந்தோசமாக இருக்கு.. சரி.. நாளிதழ் வாசிச்சது போதும். விளையாடப்போங்க.." என்று எல்லோரையும் அனுப்பி வைத்தார் நம்புராஜன்.

"ஹேய்..." என்று கத்தியவாறே அவர்களும் ஓடினார்கள்.

அறிக

சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு விருதுகளை வழங்குகிறது. உன் ஊராட்சி அமைப்பு ஏதேனும் விருதுகளைப் பெற்றுள்ளனவா எனக் கேட்டறிக.

உள்ளாட்சியில் பெண்களின் பங்கு

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்கள் பங்கேற்கும் வகையில் 33% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 2011 இல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெண்கள் 38% இடங்களில் வெற்றி பெற்றனர் என்பது சிறப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களுக்கு உள்ளாட்சியில் 50% இடஒதுக்கீடு வழங்க சட்டத்திருத்தம் செய்துள்ளது.

செயல்பாடுகள்

- தங்கள் பகுதியில் உள்ள உள்ளாட்சி உறுப்பினர்களைப் பற்றி தெரிந்துகொள்ளவும்.
- பெண் உறுப்பினர்களின் பங்கேற்பையும் அனுபவங்களையும் கேட்டு அறிக.

உள்ளாட்சித் தேர்தல்

உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக் காலம் 5 ஆண்டுகள். இதற்கான தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. மாநில தேர்தல் ஆணையம் இதற்கான



தேர்தலை நடத்துகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளது. தமிழகத்தின் தேர்தல் ஆணையம் சென்னை கோயம்பேட்டில் உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள

கிராம ஊராட்சிகள்	–	12,524
ஊராட்சி ஒன்றியங்கள்	–	385
மாவட்ட ஊராட்சிகள்	–	31
பேரூராட்சிகள்	–	561
நகராட்சிகள்	–	125
மாநகராட்சிகள்	–	12

உயர்சிந்தனை வினா

32 மாவட்டங்கள் இருக்கும்போது 31 மாவட்ட ஊராட்சிகள் என்பது ஏன்?

சிந்திக்க

- இந்த எண்ணிக்கை நிலையானதா? மாறுபடக்கடியதா? சமீபத்தில் அறிவிக்கப்பட்ட மாற்றங்களைக் கேட்டறிக.
- உள்ளாட்சித் தேர்தலின் போது கிராமப்புற வாக்காளர்கள் எத்தனை வாக்குகள் அளிப்பர்? நகர்ப்புற வாக்காளர்கள் எத்தனை வாக்குகள் அளிப்பர்?

பேரிடர் காலங்கள் மற்றும் நோய்த் தொற்று காலங்களில் உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொண்ட பணிகள்.



கலைச்சொற்கள்

மாநகராட்சி	Corporation
நகராட்சி	Municipality
பேரூராட்சி	Town Panchayat
கிராம ஊராட்சி	Village Panchayat
ஊராட்சி ஒன்றியம்	Panchayat Union
தேர்தல் ஆணையம்	Election Commission

மீள் பார்வை

- மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அமைக்கப்பட்ட அமைப்பு உள்ளாட்சி அமைப்பு ஆகும்.
- ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகியன ஊரக உள்ளாட்சி அமைப்புகள் ஆகும்.
- பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகியன நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஆகும்.
- கிராம ஊராட்சியில் உள்ள கிராம சபை ஒரு நிரந்தர அமைப்பு ஆகும்.
- பஞ்சாயத்து ராஜ் சட்டம் உள்ளாட்சி அமைப்புகளை மேம்படுத்தியது.
- உள்ளாட்சி தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.

பயிற்சி

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்து _____ அமைக்கப்படுகிறது.

   அ) ஊராட்சி ஒன்றியம்
   ஆ) மாவட்ட ஊராட்சி
   இ) வட்டம்
   ஈ) வருவாய் கிராமம்

2. தேசிய ஊராட்சி தினம் _____ ஆகும்.

   அ) ஜனவரி 24 ஆ) ஜூலை 24
   இ) நவம்பர் 24 ஈ) ஏப்ரல் 24

3. இந்தியாவின் பழமையான உள்ளாட்சி அமைப்பாக அமைக்கப்பட்ட நகரம் _____.

   அ) டெல்லி ஆ) சென்னை
   இ) கொல்கத்தா ஈ) மும்பாய்

4. அதிகப்படியான ஊராட்சி ஒன்றியங்கள் உள்ள மாவட்டம் _____.

   அ) வேலூர் ஆ) திருவள்ளூர்
   இ) விழுப்புரம் ஈ) காஞ்சிபுரம்5. மாநகராட்சியின் தலைவர் _____ என அழைக்கப்படுகிறார்.

   அ) மேயர் ஆ) கமிஷனர்
   இ) பெருந்தலைவர் ஈ) தலைவர்

II நிரப்புக.

1. இந்தியாவிலேயே பேரூராட்சி என்ற அமைப்பை அறிமுகப்படுத்திய மாநிலம் _____ ஆகும்.
2. பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு _____
3. உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் _____ ஆண்டுகள்.
4. தமிழ்நாட்டில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட நகராட்சி _____ஆகும்.

III பொருத்துக.

1.	கிராம சபை	–	செயல் அலுவலர்
2.	ஊராட்சி ஒன்றியம்	–	மாநிலத் தேர்தல் ஆணையம்
3.	பேரூராட்சி	–	வட்டார வளர்ச்சி அலுவலர்
4.	உள்ளாட்சித் தேர்தல்	–	நிரந்தர அமைப்பு

IV விடையளிக்கவும்.

1. உன் மாவட்டத்தில் மாநகராட்சி இருப்பின், அதன் பெயரை எழுதவும்?
2. உள்ளாட்சி அமைப்புகளின் அவசியம் யாது?
3. ஊரக உள்ளாட்சி அமைப்புகள் யாவை?

4. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் யாவை?
5. கிராம ஊராட்சியில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் யாவர்?
6. மாநகராட்சியின் பணிகள் சிலவற்றைக் பட்டியலிடுக.
7. கிராம ஊராட்சியின் வருவாய்களைப் பட்டியலிடுக.
8. கிராம சபைக் கூட்டம் நடைபெறும் நாள்கள் யாவை? அந்நாள்களின் சிறப்புகள் யாவை?
9. பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?
10. கிராம சபையின் முக்கியத்துவம் யாது?

V உயர்சிந்தனை வினா

கிராம மற்றும் நகர மேம்பாட்டிற்கு உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்காற்றுகின்றன. எவ்வாறு?

VI செயல்பாடுகள்

1. உள்ளாட்சி பிரதிநிதியை நேர்காணல் செய்வதற்காக வினா நிரல் தயாரிக்கவும்.
2. பள்ளியின் மேம்பாட்டிற்கு உள்ளாட்சி பிரதிநிதிகளின் பங்களிப்பு இருப்பின் – கலந்துரையாடுக.
3. நான் உள்ளாட்சி பிரதிநிதியானால்.....?
4. உன் மாவட்டத்தில் உள்ள பல வகையான உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கையைக் கேட்டறிந்து பதிவிடவும்.

மாவட்டத்தின் பெயர்	கிராம ஊராட்சி	ஊராட்சி ஒன்றியம்	மாவட்ட ஊராட்சி	பேரூராட்சி	நகராட்சி	மாநகராட்சி

அலகு – I

சமத்துவம்



கற்றல் நோக்கங்கள்

- சமத்துவத்தின் பொருள் பற்றி புரிந்துகொள்ளல்
- சமத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி தெரிந்துகொள்ளுதல்
- சமத்துவத்தின் பல்வேறு வகைகளைப் பற்றி கற்றுக்கொள்ளல்

45FK8Z



7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 01.indd 220 03-04-2019 11.28.35 AM

அறிமுகம்

இயற்கை மனிதனை நிறம், உயரம், திறமை, உடல் வலிமை ஆகியவற்றில் சமமாக உருவாக்கவில்லை. மேலும் இயற்கையான சமத்துவமின்மையை சரிசெய்ய இயலாது. ஒரே மாதிரியாக உள்ள இரட்டைக் குழந்தைகள் கூட அவர்களது திறமையில் ஒன்றாக இருப்பதில்லை. சாதி, மதம், மொழி, பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சமத்துவமின்மையை சரி செய்ய முடியும். மனிதர்கள் தங்களது திறன், வலிமை, எண்ணம் ஆகியவற்றில் வேறுபடுவார்கள் என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. அது போல அவர்கள் அனைவருக்கும் திறன்கள் மற்றும் திறமைகள் மேம்பட சமமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

சமத்துவம் என்றால் என்ன?

சமத்துவம் என்பது ஒரு தனி மனிதன் அல்லது ஒரு குழு வேறுபாடு காட்டி நடத்தப்படாமல் இருத்தல் அல்லது சிறப்பாக பாதுகாக்கப்பட்ட இயல்புகளான இனம், பால், இயலாமை, சமயம் அல்லது நம்பிக்கை, பாலியல் சார்ந்த போக்கு வயது அடிப்படையில் குறைவாக நடத்தப்படாமல் இருத்தல் முதலியவற்றை உறுதி செய்தலாகும்.

பேராசிரியர் லாஸ்கி அவர்களது கூற்றின்படி "சமத்துவம் என்பது சமமாக நடத்துவது மட்டுமல்ல வெகுமதி அளிப்பதிலும் சமத்துவம் இருப்பதாகும். முதலாவதாக சமூக சிறப்புரிமை இல்லாததும் இரண்டாவதாக போதுமான வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்கப்படுவதும் ஆகும்."

சமத்துவத்தின் முக்கியத்துவம்

சமத்துவம் பல நூறு ஆண்டுகளாக மனித சமூகத்தை ஊக்குவித்து வழி நடத்திய ஆற்றல் வாய்ந்த நீதி மற்றும் அரசியல் கோட்பாடாகும். சமத்துவம் என்ற கோட்பாடு மனித இனம் அதனுடைய சாதி, நிறம், பால், இனம் அல்லது தேசியம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து மனிதர்களும் சமமான மதிப்புள்ளவர்கள் என்ற கோட்பாட்டை அறைகூவுகிறது. மக்களாட்சிக் கோட்பாடுகளான சுதந்திரம், சமத்துவம் ஆகியவை நீதியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப் படும்போது மட்டுமே பொருளுடையவையாக இருக்கும்.

சமத்துவத்தின் வகைகள்

சமூக சமத்துவம்



அனைத்து குடிமக்களும் சம தகுதியை அடைய உரிமை கொண்டவர்கள் என்பதே சமூக சமத்துவம் ஆகும். சமூகத்தில் சாதி, சமயக்கொள்கை, நிறம் மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு இருத்தல் கூடாது. அனைவரும் தங்களது ஆளுமை மற்றும் நோக்கங்களை அடைவதற்கு சமமான வாய்ப்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குடிமை சமத்துவம்

அனைத்து குடிமக்களும் குடியியல் உரிமைகளை அடைதல் வேண்டும் என்பதே குடிமை சமத்துவம் ஆகும். குடிமக்களிடையே உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை, பணக்காரன், சாதி மற்றும் சமயக்கொள்கை ஆகியவை

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 01.indd 221 03-04-2019 11.28.35 AM


காரணமாக பாகுபாடு இருத்தல் கூடாது. சமத்துவ உரிமைகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதோடு எந்த உரிமையும் எவருக்கும் மறுக்கப்படுதல் கூடாது. இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாடு உள்ளது. அங்கு சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம் என்பதோடு அது அனைவரையும் சமமாக நடத்துகிறது. இந்தியாவிலும் அதைப் போலவே சட்டத்தின் ஆட்சிக் கோட்பாடு பின்பற்றப்படுகிறது.

சட்டத்தின் ஆட்சி என்ற பதத்தை, ஏ.வி. டைசி என்ற பிரிட்டிஷ் சட்ட வல்லுநர் வாதுரைத்தார்.

அரசியல் சமத்துவம்

இந்தியா உள்ளிட்ட அனைத்து மக்களாட்சி நாடுகளும் அவற்றின் குடிமக்களுக்கு அரசியல் உரிமைகளை உறுதியளிக்கின்றன. அவை பின்வருமாறு:

- ❖ வாக்களிக்கும் உரிமை
- ❖ பொது அலுவலகத்தில் பங்குகொள்ளும் உரிமை
- ❖ அரசை விமர்சனம் செய்யும் உரிமை



குடிமக்கள் அனைவரும் அரசியல் வாழ்வில் தீவிரமாக பங்கெடுப்பதற்கு சமமான வாய்ப்பினை பெற்றிருத்தல் வேண்டும் இந்த உரிமைகள் அனைவருக்கும் வாக்குரிமை என்பதன் அடிப்படையில் மக்களுக்கு கிடைக்கின்றது. இந்தியாவில் 18 வயது பூர்த்தியடைந்த அனைவருக்கும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலிலேயே இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஆனால் சுவிட்சர்லாந்து நாட்டில்1971ஆம்ஆண்டில்தான்பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. இந்தியாவில் 25 வயது பூர்த்தி அடைந்த எவரும் தேர்தலில் போட்டியிடலாம். அரசை விமர்சிக்கலாம் என்ற உரிமை ஒரு முக்கியமான உரிமை என்பதோடு மக்கள் தங்களது மாறுபட்ட கருத்துக்களை பல்வேறு வகையிலும் தெரிவிக்கலாம். நாட்டின் பிரதமரின் வாக்கின் மதிப்பும் ஒரு சாதாரண மனிதனின் வாக்கின் மதிப்பும் பொதுத் தேர்தலில் ஒன்றே என்பது அரசியல் சமத்துவத்தைக் குறிக்கிறது.

பாலின சமத்துவம்

மனித இனங்களில் ஆண் பெண் இருவரும் தமது தனிப்பட்ட திறனை மேம்படுத்திக் கொள்ளலாம். தங்களது விருப்பங்களை எவ்வித கட்டுப்பாடுமின்றி ஏற்படுத்தியும் கொள்ளலாம். பெண்களுக்கு சம உரிமை அளிக்கப்படவில்லை மேலும் அவர்கள் ஆண்களைக் காட்டிலும் பலவீனமானவர்கள் என்பதோடு சமூகத்தில் ஆண்களுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் அவர்களை வைத்துள்ளனர். அவர்கள் சமமாக நடத்தப்பட வேண்டும். சமமாக நடத்தப்பட வேண்டும் என்பது அவர்கள் இருவரும் ஒன்றாக ஆக வேண்டும் என்பது இல்லை. ஆனால் உரிமைகள், பொறுப்புகள்

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 01.indd 222 03-04-2019 11.28.35 AM

மற்றும் வாய்ப்புகள் ஆகியவை ஆண், பெண் என்பதை பொறுத்து அமைதல் கூடாது. பாலியல் சமத்துவம் என்பது ஆண் பெண் இருவரும் வாய்ப்புகள் மற்றும் வளங்களை பெறுதல் ஆகும். பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கெடுக்கவும் முக்கியமான முடிவுகளை எடுக்கவும் உரிமை கொண்டவர்கள் ஆவர். பெண்கள் தமது திறன் மற்றும் கடின உழைப்பால் எவ்விதத்திலும் ஆண்களுக்கு குறைவானவர்கள் அல்லர் என்பதை நிரூபித்துள்ளனர். பெண்கள் தற்போது எல்லை பாதுகாப்பு படை, விமானப் படைகளில் வெற்றிகரமாக பணிபுரிந்து வருகின்றனர். பெண்களை மேம்படுத்தும் விதமாக உள்ளாட்சி அமைப்புகளில் 50% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

பாலின சமத்துவம் என்பது பெண்கள், ஆண்கள் சிறுவர், சிறுமியர், ஆகியோர் சமமான உரிமைகள் வாய்ப்புகள் பெற வேண்டும் என்று கூறுவதோடு அவர்கள் ஒன்று போல நடத்தப்பட வேண்டும் என யூனிசெப் நிறுவனம் கூறுகிறது. 2017ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான 17 குறிக்கோள்களில் பாலின சமத்துவம் என்பது ஐந்தாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து பல்வேறு முயற்சிகள் பெண்களின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ராஜா ராம் மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், தயானந்த சரஸ்வதி, மகாதேவ் கோவிந்தரானடே, தாராபாய் ஷிண்டே, பேகம் ருகேயா சகாவத் உசேன் ஆகியோர் பெண்கள் சம அந்தஸ்து பெறுவதற்கு கடினமாக பணியாற்றியவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர்.

மனித மாண்பு

மனித மாண்பு என்பது சுய மரியாதை ஆகும். மனித மாண்பு என்பது முக்கியமான மனித உரிமை என்பதோடு இதிலிருந்தே அனைத்து அடிப்படை உரிமைகளும் தோன்றுகின்றன. மாண்பு என்பது கௌரவமான மேலான சிறந்த தகுதி ஆகும். ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் ஒரு மதிப்பு மிக்க உறுப்பினர் என்பதை கருதுதல் வேண்டும்.

வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம்

அனைத்து தனி மனிதர்களும் கல்வியினை பெறுவதற்கு வாய்ப்புகளை கொண்டிருத்தல் வேண்டும். அவர்களது ஆளுமையை மேம்படுத்த வாய்ப்புகள் பெற்றிருத்தல் வேண்டும்.

சமூகத்தில் நாம் சமமாக நடத்தப்படுவதற்கு நமக்கு சமத்துவம் தேவைப்படுகிறது. நாம் சமமாக நடத்தப்பட்டால் மதிப்பையும் மாண்பையும் பெறுவோம்.

இந்திய அரசியலமைப்பில் சமத்துவம்

உலகின் அனைத்து நாடுகளின் அரசியல் அமைப்புகளும் அதன் மக்களுக்கு சமத்துவத்தை உறுதி அளித்துள்ளன. இதேபோன்று இந்திய அரசியலமைப்பு அதன் குடிமக்களுக்கு அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 14–18 மூலம் சமத்துவத்தை அளிக்கிறது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின்படி சமமான பாதுகாப்பு என்பது அரசியலமைப்பு சட்டப்பிரிவு 21 இல் மேலும் வலிமை படுத்தப்பட்டுள்ளது.

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 01.indd 223 03-04-2019 11.28.35 AM

சட்டப்பிரிவு 14 சட்டத்தின் முன் அனைவரும் சமம் என உத்தரவாதம் அளிக்கிறது.

சட்டப்பிரிவு 15 பாகுபாட்டை தடை செய்கிறது.

சட்டப்பிரிவு 16 பொது வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கிறது.

சட்டப்பிரிவு 17 தீண்டாமையை ஒழிக்கிறது.

சட்டப்பிரிவு 18 பட்டங்கள் அளித்து வேறுபடுத்துதலை தடை செய்கிறது.

நாம் பின்வரும் வழிகளில் சமத்துவத்தை மேம்படுத்தலாம்

- அனைவரையும் நியாயமாக நடத்துதல்
- அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பண்பாட்டினை உருவாக்குதல்
- வாய்ப்புகள் அனைவரும் பெறுவதை உறுதிப்படுத்துதல்
- முழுஆற்றலையும் மேம்படுத்த ஊக்குவித்தல்.
- சட்டம் மற்றும் கொள்கைகளை வகுத்தல்
- கல்வி

நிறைவு

இந்தியா உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடாகும். சமத்துவம் மற்றும் நீதி என்பது மக்களாட்சியின் தூண்கள் ஆகும். மக்கள் சமமாக நடத்தப்படும்போது நீதி எட்டப்படும். சமத்துவம் என்பது மிகவும் முக்கியமானதாகும், ஏனெனில் அது தனிமனித மாண்பினை தக்க வைக்கிறது. சமூகம் நல்ல முறையில் இயங்குவதற்கு சமத்துவம் ஒரு முக்கியமான கோட்பாடு ஆகும்.

நினைவில் கொள்க

- சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்பது மக்களாட்சியின் இரண்டு அடிப்படைக் கோட்பாடுகள் ஆகும்.
- அனைத்து மக்களும் சட்டத்தின் முன்பாக சமம். அனைவருக்கும் அரசியல் வாழ்வில் பங்கேற்க சமமான வாய்ப்புகள் வழங்கப்படுதல் வேண்டும்.
- குடியியல் உரிமை என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை குறிக்கிறது.
- பாலின சமத்துவம் என்பது ஆண் பெண் இருவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதை குறிக்கிறது.
- பாலின சமத்துவத்தை அரசின் பல்வேறு சட்டங்கள் வலியுறுத்துகின்றன.

கலைச்சொற்கள்			
1.	சமத்துவம்	absence of any privilege to anybody	Equality
2.	சட்டத்தின் ஆட்சி	rule based on law	Rule of law
3.	முடியாட்சி	government by a single person	Monarchy
4.	சலுகைகள்	special concessions	Privileges
5.	பாகுபாடு	difference	Discrimination

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 01.indd 224 03-04-2019 11.28.35 AM

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க:

1. பின்வருவனவற்றுள் எது சமத்துவத்தின் கீழ் வருவதில்லை?

அ. பிறப்பு, சாதி, மதம், இனம், நிறம், பாலினம் அடிப்படையில் பாகுபாடு இன்மை
ஆ. தேர்தலில் போட்டியிடும் உரிமை
இ. அனைவரும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுதல்
ஈ. பணக்காரர்கள் மற்றும் ஏழைகள் இடையில் சமத்துவமின்மையைக் காட்டுதல்

2. கீழ்கண்டவைகளில் எது அரசியல் சமத்துவம் ஆகும்?

அ. அரசாங்கத்திற்கு மனு செய்வது மற்றும் பொதுக் கொள்கைகளை விமர்சிப்பது.
ஆ. இனம், நிறம், பாலினம் மற்றும் சாதி அடிப்படையில் சமத்துவமின்மை அகற்றப்படுதல்
இ. சட்டத்தின் முன் அனைவரும் சமம்
ஈ. சட்டம் கைகளில் செல்வம் செறிவு தடுப்பு

3. இந்தியாவில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும் வயது _____

அ. 21 ஆ. 18 இ. 25 ஈ. 31

4. சாதி, பணம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதனால் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை

அ. இயற்கை சமத்துவமின்மை
ஆ. மனிதனால் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை
இ. பொருளாதார சமத்துவமின்மை
ஈ. பாலின சமத்துவமின்மை

5. சுவிட்சர்லாந்தில், பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்ட ஆண்டு

அ. 1981 ஆ. 1971
இ. 1991 ஈ. 1961

II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. குடிமை சமத்துவம் _____ க்கு முன்பு அனைவரும் சமம் என்பதைக் குறிக்கிறது.

2. _____ முதல் _____ வரையிலான இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவுகள் சமத்துவ உரிமையைப் பற்றி குறிப்பிடுகின்றன.

3. தேர்தலில் போட்டியிடும் உரிமை என்பது _____ உரிமை ஆகும்.

4. சமத்துவம் என்பது முதலாவதாக _____ இல்லாததாகும்.

III. குறுகிய விடையளி

1. சமத்துவம் என்றால் என்ன?

2. பாலின சமத்துவம் ஏன் தேவையானது?

3. குடிமை சமத்துவம் என்றால் என்ன?

IV. விரிவான விடையளி

1. சமத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.

2. அரசியல் சமத்துவம் என்றால் என்ன?

3. இந்திய அரசியலமைப்பு சட்டம் சமத்துவத்திற்கான உரிமையை எவ்வாறு பாதுகாக்கிறது?

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 01.indd 225 03-04-2019 11.28.35 AM

V. உயர் சிந்தனை வினா

1. பள்ளிகளில் சமத்துவமின்மையை நாம் எவ்வாறு அகற்ற முடியும்?

VI. வாழ்வியல் திறன்

சமத்துவத்தின் வகைகள் பற்றி அறிதல்	எந்த சமத்துவ வகையை சார்ந்தது
1. தகுதி, சாதி, நிறம் மதம் மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் குடிமக்கள் மத்தியில் எந்த பாகுபாடுகளும் இருக்கக் கூடாது.	
2. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்	
3. வாக்களிப்பதற்கான உரிமை, அரசாங்க அலுவலகத்தில் பணியாற்றும் உரிமை, அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை	
4. எந்த விதத்திலும் ஆணுக்கு குறைவாக என் திறமை இல்லை.	

Reference books

1. Eddy Asirvatham, Misra, K.K, *Political Theory*, S.Chand & Company, New Delhi, 2004.

2. Agarwal, R.C, *Political Theory,* S.Chand & Company, New Delhi, 2009.

3. Kapur, A.C. *Principles of Political Science,* S.Chand & Company, New Delhi, 2000.

4. Johari, J.C, *Contemporary Political Theory,* Sterling Publishers, New Delhi, 2000.

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 01.indd 226 03-04-2019 11.28.35 AM

அலகு - II

அரசியல் கட்சிகள்



கற்றல் நோக்கங்கள்

- அரசியல் கட்சி என்பதை வரையறை செய்தல் மற்றும் அதன் முக்கியத்துவத்தை அறிதல்
- அரசியல் கட்சியின் பங்கு மற்றும் செயல்பாட்டினை தெரிந்துகொள்ளல் இந்தியாவில் கட்சி முறையையும் எதிர்க்கட்சியின் பங்கினையும் அறிந்துகொள்ளுதல்

SXN9MR

மாணவன் சிவா : வணக்கம் அம்மா. நான் உள்ளே வரலாமா?

ஆசிரியை ஆதி : வணக்கம் சிவா. எப்போதும் சரியான நேரத்திற்கு வருகைதரும் நீ இன்று ஏன் தாமதம்?

சிவா : மன்னிக்க வேண்டும் அம்மா. ஒரு ஊர்வலத்தின் காரணமாக எனக்கு தாமதம் நேரிட்டது.

ஆதி : என்ன ஊர்வலம் அது? யார் ஏற்பாடு செய்தது?

சிவா : அது ஒரு அரசியல் கட்சியின் ஏற்பாடு என்று எனது மாமா சொன்னார்.

ஆதி : அப்படியா?

சிவா : அரசியல் கட்சி என்றால் என்ன அம்மா? ஏன் அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள்?

ஆதி: காத்திரு. இன்று அரசியல் கட்சிகளைப் பற்றிதான் பாடம் நடத்த உள்ளேன். அவற்றைப் பற்றி நாம் அறிந்து கொள்வோம்.

ஆரம்பக் காலங்களில் பேரரசர்களும் அரசர்களும் ஆட்சி செய்தனர். அரசர், சட்டம் இயற்றுதல், நிர்வாகம், நீதி வழங்குதல் ஆகியவற்றின் தலைமையிடமாக இருந்தார். நிர்வாகம் அவர் ஒருவரின் கையில் மட்டுமே இருந்தது. மக்களின் நலன் என்பது அரசரை பொறுத்து இருந்தது. மக்கள் அரசருக்கு எதிராக

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 02.indd 227 03-04-2019 11.29.14 AM

செயல்படும் உரிமையை பெற்றிருக்கவில்லை. பின்னர் அன்னிய நாடுகள் இந்தியாவை குடியேற்றநாடாக உருவாக்கின. குடியேற்ற நாடுகள் பின்னர் சுதந்திர நாடுகளாக அறிவிக்கப்பட்டன.

இந்தியா 1950 ஆம் ஆண்டு மக்களாட்சி நாடானது. துடிப்பான ஒரு மக்களாட்சி நாட்டிற்கு ஒரு வலிமையான அரசியல் கட்சி முறை அவசியமான ஒன்றாகும். கட்சி முறை என்பது நவீனகால தோன்றல் ஆகும். மக்களாட்சியில் மக்கள் எந்த விஷயங்கள் குறித்தும் தங்களது கருத்துக்களை வெளியிடலாம்.

அரசியல் கட்சிகள் என்றால் என்ன?

அரசியல் கட்சிகள் என்பவை தன்னார்வத்தோடு ஏற்படுத்தப்பட்ட தனி மனிதர்களின் அமைப்பு ஆகும். இவை பரந்த கருத்தியல் அடையாளங்களோடு சில கொள்கைகளை ஏற்றுக்கொண்டு சமூகத்திற்கான திட்டங்களையும் நிரல்களையும் வடிவமைக்கின்றன. மேலும் அரசியல் கட்சிகள் மக்களின் ஆதரவை பெற்று தேர்தலில் வெற்றிபெறுவதன் மூலம் தமது கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றன. அவற்றின் அளவு, அமைப்பு மற்றும் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றன.

எந்த ஒரு அரசியல் கட்சியும் பின்வரும் மூன்று கூறுகளைக் கொண்டிருக்கும்.

- ❖ தலைவர்
- ❖ செயல் உறுப்பினர்கள்
- ❖ தொண்டர்கள்

அரசியல் கட்சிகளின் முக்கியத்துவம்

அரசியல் கட்சிகள் மக்களாட்சியின் முதுகெலும்பு எனலாம். அரசியல் கட்சிகள் முறையாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இல்லாமல் அரசாங்கத்தை அமைக்கும் முக்கிய காரணிகளாக இருக்கின்றன. அவை பொதுகருத்துக்களை உருவாக்குகின்றன. கட்சிகள் குடிமக்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையே பாலமாக சேவை செய்கின்றன.

ஒரு கட்சி அங்கீகரிக்கப்படுவது எவ்வாறு எனில்

- ❖ ஐந்து ஆண்டுகளாக அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
- ❖ வேட்பாளர்கள் குறைந்தபட்சம் 6% ஓட்டுக்களை இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெற்றிருத்தல் வேண்டும்.

அரசியல் கட்சிகளின் இயல்புகள்

அரசியல் கட்சிகள்


- ❖ பொதுவான குறிக்கோள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட மதிப்பீடுகளை கொண்ட மக்கள் குழுக்களாக இருக்கின்றன.
- ❖ தனக்கென கொள்கை மற்றும் திட்டங்களை கொண்டிருக்கின்றன.
- ❖ அரசியல் அமைப்பின் வழியாக ஆட்சியை கைப்பற்ற முயல்கின்றன.
- ❖ தேசிய நலன்களை வலியுறுத்த முயற்சி செய்கின்றன.



கட்சியின் தேர்தல் அறிக்கை

தேர்தலுக்கு முன்பான பரப்புரையில் வேட்பாளர்கள் தங்களது கட்சி ஆட்சிக்கு வந்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், கொள்கைகளை அறிவிப்பார்கள்.

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 02.indd 228 03-04-2019 11.29.14 AM



கட்சி முறைகளின் வகைகள்

மூன்று வகையான கட்சி முறைகள் நடைமுறையில் இருக்கின்றன.

ஒரு கட்சி முறை:

இம்முறையில் ஒரே அரசியல் கட்சி மட்டும் அரசாங்கத்தை ஏற்படுத்தும் உரிமையைக் கொண்டிருக்கும். இவ்வகையான ஒரு கட்சி முறை சீனா, வடகொரியா மற்றும் கியூபா ஆகிய நாடுகளில் நடைமுறையில் இருக்கின்றன.

இரு கட்சி முறை:

இம்முறையில் இரண்டு கட்சிகள் அதிகாரத்தை பங்கு கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இவற்றில் ஒன்று ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் செயல்படும். இருகட்சி முறை பிரிட்டன் (தொழிலாளர் கட்சி மற்றும் பழமைவாதக் கட்சி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி) காணப்படுகின்றன.

பல கட்சி முறை:

அதிகாரத்திற்கான போட்டி மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்சிகளிடையே இருக்குமாயின் அது பல கட்சி முறை என அழைக்கப்படுகிறது. இம்முறை இந்தியா பிரான்ஸ், ஸ்வீடன், நார்வே உள்ளிட்ட நாடுகளில் காணப்படுகிறது.

இந்தியாவில் அரசியல் கட்சி முறை

இந்தியாவில் கட்சி முறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது. கூட்டாட்சி அமைப்பினை பின்பற்றும் நாடுகளில் இருவகையான கட்சிகள் காணப்படுகின்றன.

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 02.indd 229 03-04-2019 11.29.15 AM

உண்மையில் இந்தியாவில், உலகின் அதிக எண்ணிக்கையிலான கட்சிகள் காணப்படுகின்றன. இந்தியாவில் கட்சிகள் மூன்று படிநிலையில் அமைந்திருப்பதை நாம் காணலாம். அவை தேசியக் கட்சிகள், மாநிலக் கட்சிகள், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத (சுயேட்சைகள்) கட்சிகள் ஆகும். ஒவ்வொரு கட்சியும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.



தேர்தல் ஆணையம் – சட்டபூர்வ அமைப்பு

இந்திய தேர்தல் ஆணையம் தேர்தல்களை நடத்துவதற்கு அதிகாரம் கொண்ட ஒரு சுதந்திரமான சட்டப்படியான அரசியலமைப்பு ஆகும். இதன் தலைமை இடம் புதுதில்லியில் அமைந்துள்ளது.

கட்சிகள் அங்கீகரிக்கபடுவதற்கான நிபந்தனைகள்

இந்தியாவில் அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் சில விதிமுறைகளை வகுத்துள்ளது.

தேசியக்கட்சிகள்

- மக்களவைத் தேர்தலில் அல்லது நான்கு மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தலில் செல்லத்தக்க மொத்த வாக்குகளில் ஒரு கட்சி 6% வாக்குகளை பெற்றிருத்தல் வேண்டும்.
- ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களில் நான்கு மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.
- இறுதியாக நடைபெற்ற மக்களவை தேர்தலில் குறைந்தபட்சம் மூன்று மாநிலங்களில் 2% தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.

பிராந்திய/மாநிலக்கட்சிகள்

- மாநில சட்டப் பேரவைக்கான தேர்தலில் செல்லத்தக்க வாக்குகளில் குறைந்த பட்சம் 6% வாக்குகளை பெற்றிருத்தல் வேண்டும்..
- 25 தொகுதிகளுக்கு ஒரு மக்களவைத் தொகுதி அல்லது சட்டப் பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல்வேண்டும்.
- மாநில சட்டமன்ற மொத்த தொகுதிகளில் 3% தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும்.

சுயேட்சை வேட்பாளர்

சுயேட்சை வேட்பாளர் என்பவர் எந்த கட்சியிலும் சேராமல் தானாக மக்களவை அல்லது மாநில சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் நபர் ஆவார்.

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 02.indd 230 03-04-2019 11.29.15 AM

அங்கீகரிக்கப்பட்டகட்சிகள்

மேலே தெரிவித்த நிபந்தனைகளை பூர்த்தி செய்த கட்சிகள் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் என அழைக்கப்படும். அவற்றிற்கு தேர்தல் ஆணையத்தால் சின்னம் ஒன்றும் ஒதுக்கீடு செய்யப்படும்.

தேர்தல் குழு சின்னங்கள்


1968ஆம் ஆண்டின் தேர்தல் சின்னங்கள் ஆணையின்படி, ஒதுக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் ஒதுக்கப்படாத சின்னங்கள் என்று இரண்டு வகை உள்ளது.

- ஒதுக்கப்பட்ட சின்னம் என்பது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு மட்டுமானது என பொருள்படும்.
- ஒதுக்கப்படாத சின்னம் என்பது அங்கீகரிக்கப்படாத கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் சின்னம் ஆகும்.

பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி தாங்கள் விரும்பும் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட முடியாது. இத்தகைய கட்சி தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்படும் தேர்தல் குழுவில் உள்ள ஏதேனும் ஒரு சின்னத்தை தேர்வு செய்தல் வேண்டும்.

பெரும்பான்மைக் கட்சி

தேர்தலில் ஒரு அரசியல் கட்சியின் வேட்பாளர்கள் மற்ற கட்சிகளின் வேட்பாளர்களை விட அதிக எண்ணிக்கையில் தேர்வு பெற்று இருப்பின் அக்கட்சியானது பெரும்பான்மைக் கட்சி என அழைக்கப்படுகிறது. பெரும்பான்மை பெற்ற கட்சி, அரசாங்கத்தை அமைத்து ஆட்சி நடத்துகிறது. அக்கட்சி அரசு நிர்வாகத்தை நடத்த அமைச்சர்களை தேர்ந்தெடுத்து நியமிக்கிறது. அது நாட்டிற்கு சட்டம் இயற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.



ஒரு அரசியல் கட்சியை தோற்றுவிப்பது எப்படி?

இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

குறைந்தபட்சம் நூறு உறுப்பினர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வாக்காளர் அட்டையை கொண்டிருத்தல் வேண்டும்.



கட்சி அமைப்பு குறித்த ஆவணத்தை கொண்டிருத்தல் வேண்டும்.



7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 02.indd 231 03-04-2019 11.29.16 AM


சிறியக்கட்சி

சிறியக்கட்சி என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கையில் குறைவான எண்ணிக்கையைக் கொண்ட கட்சி ஆகும்.

எதிர்க்கட்சி

தேர்தலில் பெரும்பான்மை பெற்ற கட்சிக்கு இரண்டாவதாக அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களை கொண்ட கட்சி எதிர்க்கட்சி என அழைக்கப்படுகிறது. மக்களாட்சி வெற்றிகரமாக செயல்படுவதற்கு ஆற்றல் வாய்ந்த எதிர்க்கட்சி மிகவும் அவசியம் ஆகும். அது ஆளும் கட்சி போன்றே முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எதிர்க்கட்சி ஆளுங்கட்சியின் தன்னிச்சையான போக்கினை கட்டுப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. அது அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் அறிமுகப்படுத்தப்படும் சட்ட மசோதாக்களை தீவிரமாக விமர்சிக்கும். எதிர்க்கட்சி அரசின் தவறான கொள்கைகள் மற்றும் தோல்விகளை வெளிப்படுத்தும். அரசால் செயல்படுத்தப்படாத விவகாரங்கள் குறித்து அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும். எதிர்க்கட்சித் தலைவர் கேபினட் அமைச்சர் அந்தஸ்தைக் கொண்டிருப்பார்.

கூட்டணி அரசாங்கம்



பல கட்சி அமைப்பில் சில நேரங்களில் ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையை ஒரு கட்சி பெறுவதில்லை. இது போன்ற நேர்வில் சில கட்சிகள் இணைந்து அரசாங்கத்தை அமைக்கின்றன. இது கூட்டணி அரசாங்கம் என அழைக்கப்படுகிறது.

தேர்தல் சின்னங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம்

தேர்தல் சின்னம் என்பது அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட சின்னம் ஆகும். அது தேர்தலில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. தேர்தல் சின்னங்கள் வாக்காளர்களால் எளிதில் அறிந்து கொள்ளப்பட்டு நினைவில் வைத்துக்கொள்ள உதவுகிறது. விலங்குகளின் சின்னங்களை வழங்குவதை தேர்தல் ஆணையம் நிறுத்தியுள்ளது. விதிவிலக்காக யானை மற்றும் சிங்கம் ஆகிய சின்னங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. தேசிய அளவிலான அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் சின்னம் நாடு முழுவதும் ஒன்றாக இருக்கும். இத்தகைய சின்னங்கள் வேறு எந்த கட்சிக்கும் அல்லது சுயேட்சை நபருக்கும் ஒதுக்கப்படமாட்டாது.

மாநில கட்சிகளுக்கு அந்தக் குறிப்பிட்ட மாநிலத்தில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக சின்னம் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை வேறு எந்த கட்சியும் அந்தக் குறிப்பிட்ட மாநிலத்தில் பயன்படுத்த இயலாது. ஆனால் பல்வேறு மாநிலங்களில் உள்ள மாநிலக்கட்சிகள் தங்களது மாநிலங்களில் இதே போன்ற சின்னத்தை பயன்படுத்தலாம். (உதாரணமாக மகாராஷ்டிராவில் சிவசேனை கட்சி, ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜார்க்கண்ட் முக்தி மோட்சா ஆகிய கட்சிகள் வில் மற்றும் அம்பு சின்னத்தை பயன்படுத்துகின்றன).

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 02.indd 232 03-04-2019 11.29.16 AM

தேசியக் கட்சி	பிராந்திய / மாநிலக் கட்சி
❖ தேசியக் கட்சி என்பது இந்தியா முழுவதும் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சியாகும்.	❖ மாநிலக் கட்சிகள் என்பவை ஒரு மாநிலத்திற்குள் நடைபெறும் பல்வேறு தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சியாகும்.
❖ தேசியக் கட்சி குறைந்த பட்சம் நான்கு மாநிலங்களில் வலிமை உடையதாக இருக்க வேண்டும்.	❖ இது ஒன்று அல்லது இரண்டு மாநிலங்களில் வலிமை கொண்டதாக இருக்க வேண்டும்.
❖ இது தனக்கென பிரத்தியேகமான சின்னத்தை நாடு முழுவதற்கும் கொண்டிருக்கும்.	❖ இதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும். ஆனால் மாநிலத்தில் இத்தகைய சின்னம் வேறு மாநிலத்தில் உள்ள கட்சிக்கும் ஒதுக்கீடு செய்யப்படலாம்.
❖ இது மாநில, தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்களைத் தீர்த்து வைக்கிறது.	❖ இது பிராந்திய மற்றும் மாநில நலன்களை வலியுறுத்துகிறது.

தேசியக் கட்சிகளும், மாநிலக் கட்சிகளும் நாட்டின் வளர்ச்சியைத் தூண்டுகின்றன. மக்களின் நலனுக்காகப் பாடுபடுகின்றன.

நினைவில் கொள்க

❖ நவீன காலம் என்பது பெரிய சமூகத்தையும் அதிக மக்கள் தொகையையும் கொண்டதாகும். கட்சி முறை என்பது நவீன காலத்தின் தோன்றல் ஆகும்.

❖ பரந்த பொது நலனோடு உள்ள ஒரு குழு தேர்தலில் வெற்றிபெற்று அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தவும், அதன் கொள்கைகளின் மீது செல்வாக்கை செலுத்தவும் முடியும்.

❖ ஒரு நாட்டில் உள்ள கட்சிகளின் எண்ணிக்கை வேறுபடும். ஆனால் பொதுவாக மூன்று வகையான கட்சி முறைகள் காணப்படுகின்றன. அவை ஒரு கட்சி முறை, இரு கட்சி முறை மற்றும் பல கட்சி முறை.

❖ இந்தியாவில் பல கட்சி முறை நடைமுறையில் உள்ளது.

❖ கட்சியில் உறுப்பினராக இல்லாத ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர் சுயேட்சை உறுப்பினர் என அழைக்கப்படுவார்.

❖ சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையம் பொறுப்பு வாய்ந்தது ஆகும்.

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 02.indd 233 03-04-2019 11.29.16 AM

கலைச்சொற்கள்			
1.	மக்களாட்சி	Government by the people	Democracy
2.	தேர்தல் அறிக்கை	a public declaration of policies and aims by political parties	Election manifesto
3.	எதிர்க்கட்சி	a party opposing to the other parties	Opposition party
4.	கூட்டாட்சி அமைப்பு	system of government in which several states form a unity but remain independent in internal affairs	Federal system
5.	தேர்தல் ஆணையம்	a body for implementation of election procedures	Election commission
6.	தேர்தல் சின்னங்கள்	symbols allocated to a political party	Electoral symbols
7.	அமைச்சர்	member of a parliament or legislative assembly cabinet	Cabinet Minister



பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்க:

1. இரு கட்சி முறை என்பது

அ. இரண்டு கட்சிகள் அரசாங்கத்தை நடத்துவது

ஆ இரண்டு உறுப்பினர் ஒரு கட்சியை நடத்துவது.

இ. இரண்டு பெரிய அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவது.

ஈ. இவற்றுள் எதுவும் இல்லை.

5UA4CM

2. இந்தியாவில் காணப்படும் கட்சி முறை

அ ஒரு கட்சி முறை

ஆ இரு கட்சி முறை

இ. பல கட்சி முறை

ஈ. இவற்றுள் எதுவுமில்லை

3. அரசியல் கட்சிகளை அங்கீகரிக்கும் அமைப்பு

அ. தேர்தல் ஆணையம்

ஆ. குடியரசுத் தலைவர்

இ. உச்ச நீதிமன்றம்

ஈ. ஒரு குழு

4. அரசியல் கட்சிகள் பொதுவாக எதன் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகின்றன?

அ. சமயக் கொள்கைகள்

ஆ. பொது நலன்

இ. பொருளாதார கோட்பாடுகள்

ஈ. சாதி

5. ஒரு கட்சி முறை எங்கு நடைமுறையில் உள்ளது?

அ. இந்தியா

ஆ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

இ. பிரான்ஸ்

ஈ. சீனா

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மக்களாட்சியின் முதுகெலும்பாகத் திகழ்வது _____.

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 02.indd 234 03-04-2019 11.29.16 AM

2. நமது நாட்டின் ஒவ்வொரு கட்சியும்_____ என்ற அமைப்பில் பதிவு செய்தல் வேண்டும்.
3. அரசியல் கட்சிகள் _____ மற்றும் _____ இடையே பாலமாக செயல்படுகின்றன.
4. ஒரு பதிவு செய்யப்பட்ட ஆனால் _____அரசியல் கட்சி தேர்தலில் தனது சின்னத்தில் போட்டியிட இயலாது.
5. எதிர்க்கட்சித் தலைவர்_____ அந்தஸ்தில் இருப்பார்.

III. பொருத்துக

அ		ஆ
1.	மக்களாட்சி	அரசின் கொள்கைகளை விமர்சிப்பது
2.	தேர்தல் ஆணையம்	அரசாங்கத்தை அமைப்பது
3.	பெரும்பான்மைக் கட்சி	மக்களின் ஆட்சி
4.	எதிர்க்கட்சி	சுதந்திரமான நியாயமான தேர்தல்.

IV. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்வு செய்து பொருத்தமான விடையை தேர்வு செய்க

1. பின்வரும் கூற்றுகளில் சரியானதை தேர்வு செய்க

அ. நாட்டில் உள்ள ஒவ்வொரு கட்சியும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

ஆ. தேர்தல் ஆணையம் அனைத்து கட்சிகளையும் சமமாக நடத்துகிறது.

இ. தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு தனி சின்னத்தை ஒதுக்குகிறது.

ஈ. இவை அனைத்தும்.

2. **கூற்று :** பெரும்பான்மை கட்சி ஒரு நாட்டின் சட்டங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

காரணம் : தேர்தலில் பிற கட்சிகளைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது ஆகும்.

அ. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்

ஆ.காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

இ.காரணம் தவறு, கூற்று சரி

ஈ. கூற்று, காரணம் இரண்டும் தவறு.

V. ஓரிரு வாக்கியங்களில் விடைகளை எழுதுக.

1. ஒரு அரசியல் கட்சியின் அடிப்படை கூறுகள் எவை?
2. மூன்று வகை கட்சி முறைகளைக் குறிப்பிடுக.
3. இரு கட்சி முறை காணப்படும் நாடுகளின் பெயர்களை எழுதுக.
4. குறிப்பு வரைக : கூட்டணி அரசாங்கம்.

VI. பின்வருவனவற்றிற்கு விடை அளிக்கவும்

1. அரசியல் கட்சியின் செயல்பாடுகளில் ஏதேனும் நான்கினை எழுதுக.
2. ஒரு அரசியல் கட்சி எப்போது தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்படுகிறது?

VII. உயர்சிந்தனை வினா

1. ஒரு மக்களாட்சி நாட்டிற்கு அரசியல் கட்சி அவசியமா?
2. தேசிய கட்சி, மாநிலக் கட்சி மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சி ஆகியவற்றிற்கு சில உதாரணங்கள் தருக.

VIII. செயல்பாடுகள்

1. ஒரு தேர்தல் அறிக்கையை எழுதுக (*election manifesto*) (நீ ஒரு கட்சித் தலைவராக இருந்தால்).

7th Social Science_Term_1_Tamil_Civics_Unit 02.indd 235 03-04-2019 11.29.16 AM

அலகு - 1


மாநில அரசு



கற்றல் நோக்கங்கள்

- பாராளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்துகொள்ளுதல்
- தேர்தல் நடைபெறும் முறைகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல்
- ஆளுநர், முதலமைச்சர் ஆகியோரின் பணிகளையும், அதிகாரங்களையும் அறிந்துகொள்ளுதல்
- அரசாங்கத்தின் செயல்முறைகளைக் கண்டு பெருமிதம் கொள்ளுதல்
- அரசின் மூன்று இன்றியமையாத பிரிவுகளான சட்டமன்றம், நிருவாகத்துறை, நீதித்துறை ஆகியவற்றின் பணிகளை பற்றி அறிந்துகொள்ளுதல்

I6X8D9



7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_1.indd 194 16-08-2019 12.56.44 PM

ஆசிரியர்: வணக்கம், குழந்தைகளே!

மாணவர்கள்: வணக்கம், ஐயா/அம்மா

ஆசிரியர்: (மாணவர்களின் வருகையைப் பதிவு செய்தபின்) இன்று அனைவரும் வருகை புரிந்துள்ளீர்கள். நன்று வாழ்த்துகள்.

உங்களுக்கு ஒரு செய்தி சொல்லட்டுமா? வரும் திங்கட்கிழமையன்று நம் பள்ளியில் விழாவொன்று நடைபெற உள்ளது. அவ்விழாவில், நீங்கள் அனைவரும் கட்டாயமாகக் கலந்துகொள்ள வேண்டும்.

யோகிதா: ஏதாவது கலை நிகழ்ச்சி நடைபெற உள்ளதா, ஐயா?

ஆசிரியர்: ஆம். நம் பள்ளிக்காகக் கட்டப்பட்ட புதிய கட்டடம் ஒன்றை அன்று திறக்க உள்ளோம்.

மாணவர்கள்: ஓ! அப்படியானால், இனி நாம் புதிய வகுப்பறையைப் பயன்படுத்த போகிறோம்!

முத்து: ஐயா, அந்த நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக யார் வருகிறார்?

ஆசிரியர்: புதிய கட்டடத்தின் திறப்புவிழாவுக்குச் சிறப்பு விருந்தினராக நம்முடைய சட்டமன்ற உறுப்பினரை அழைக்க உள்ளோம்.

இரஹீம்: சட்டமன்ற உறுப்பினரா? ஐயா, இந்தப் பெயரை நான் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால், அவர் யாரென்று எனக்குத் தெரியவில்லையே?

ஆசிரியர்: சொல்கிறேன். சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளைச் சட்டமன்ற உறுப்பினர்கள் என்கிறோம். அவர்களுள் ஒருவர்தாம், நம் பள்ளி விழாவுக்கு வருகை தர உள்ளார். அவர், நம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஆவார்.

சரண்: சட்டமன்றப் பேரவையா? அப்படியென்றால் என்ன? எங்களுக்கு விளக்குங்கள், ஐயா.



ஆசிரியர்: ஓ! சொல்கிறேனே. முதலில், இந்தப் படங்களைப் பாருங்கள். (புனித ஜார்ஜ் கோட்டை, சட்டமன்றப் பேரவை, முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள் உள்ளிட்ட படங்களை ஆசிரியர், மாணவர்களுக்குக் காட்டுகிறார்.)

மீனா: ஐயா, அஃது என்ன கட்டடம்? அஃது எங்குள்ளது? அது பார்ப்பதற்குக் கோட்டையைப் போல் உள்ளதே?

ஆசிரியர்: சரியாகச் சொன்னாய். அந்தக் கோட்டை சென்னையில்தான் உள்ளது. இதுதான் ஆங்கிலேயர்களால், இந்தியாவில் கட்டப்பட்ட முதல் கோட்டை. இந்த கோட்டையின் பெயர் புனித ஜார்ஜ் கோட்டை. தற்போது, இந்தக்கோட்டையில்தான்,

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_1.indd 195 16-08-2019 12.56.44 PM

தமிழகச் சட்டமன்றப் பேரவையும், தலைமைச் செயலகமும் அமைந்துள்ளன. சட்டமன்றத்திலுள்ள கீழவையில்தான், மாநிலத்தின் நலன் காக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி விவாதிப்பர்.

கயல்: ஐயா, சட்டமன்றப் பேரவையில் யாரெல்லாம் உள்ளனர்?

ஆசிரியர்: சொல்கிறேன். நன்கு கவனியுங்கள். இந்தியாவிலுள்ள பல மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் தனித்தனியாக நிருவாக அமைப்புகளைக் கொண்டுள்ளன. இந்தியாவில் எத்தனை மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் உள்ளன என்று உங்களுக்குத் தெரியுமா?



இரவி: நான் சொல்லட்டுமா? நம் நாட்டில் 29 மாநிலங்களும் 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. யூனியன் பிரதேசங்களுள் இந்திய நாட்டின் தலைநகரான புதுதில்லியும் இதில் அடங்கும். சரிதானே, ஐயா?

ஆசிரியர்: மிகச்சரி. நான் ஏற்கெனவே கூறியதுபோல, இந்திய நாடு இருவகையான அரசாங்கங்களைக் கொண்டுள்ளது. ஒன்று, புதுதில்லியை தலைமையிடமாக கொண்டு செயல்படும் மத்திய அரசு; மற்றொன்று அந்தந்த மாநில அரசுகள். ஆகவே மத்திய அரசு, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுச் செயல்படுவதையே கூட்டாட்சிமுறை என்கிறோம். நம் இந்திய நாடு, நாடாளுமன்ற மக்களாட்சி அமைப்பைக் கொண்டுள்ளது. அரசாங்கம் நல்லமுறையில் நடைபெறுவதற்காக, இந்தியக் குடியரசுத் தலைவரும் இந்தியாவின் பிரதம மந்திரியும் அந்தந்த மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சர்களும் பொறுப்புடன் செயல்படுகின்றனர். இத்தகைய அமைப்பு முறையைத்தான் மத்திய அரசாங்கம் என்கிறோம்.

நிலா: மாநிலங்களுக்கெனத் தனி அரசாங்கம் உள்ளதா, ஐயா?


ஆசிரியர்: ஆமாம். இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் தனித்தனியாக அரசாங்க அமைப்பு உள்ளது. இந்த அமைப்பில் ஆளுநர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உள்ளனர். பாராளுமன்றப் பேரவையில் உள்ளவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர் (பா.உ.) எனவும், சட்டமன்றப் பேரவையில் உள்ளவர்களைச் சட்டமன்ற உறுப்பினர்கள் (ச.ம.உ.) எனவும் கூறுகிறோம். ஆகவே, நம் இந்திய அரசியலமைப்பில் மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்தே செயல்படுகின்றன.

ஜான்: ஓ! அப்படியானால், நம் பள்ளியில் நடைபெறவுள்ள விழாவை ச. ம. உ. தான் தொடங்கி வைக்கிறாரா? அவரை யார் நியமிக்கிறார்கள்?

ஆசிரியர்: சட்டமன்ற உறுப்பினர்களை யாரும் நியமிப்பதில்லை. அவர்கள், பொதுத் தேர்தல்மூலம்

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_1.indd 196 16-08-2019 12.56.44 PM

மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நாம் முந்தைய வகுப்புகளில், அரசியல் கட்சிகளைப்பற்றி அறிந்துகொண்டது நினைவிலிருக்கிறதா? அத்தகைய அரசியல் கட்சிகள்தாம், தேர்தலில் குறிப்பிடத்தக்க அளவில் பங்காற்றுகின்றன. தேர்தலுக்காக நாடு, மக்கள்தொகையைப் பொருத்துப் பல தொகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தொகுதியிலும் தங்களுடைய வேட்பாளரை அரசியல் கட்சிகள் நிறுத்துகின்றன. அந்தத் தொகுதியைச் சேர்ந்த 18 வயது நிறைவடைந்த வாக்காளர்கள், தங்கள் வாக்குகளைத் தங்களுக்கு பிடித்த வேட்பாளர்களுக்கு அளிக்கின்றனர். அதிக எண்ணிக்கையில் வாக்குகள் பெறும் வேட்பாளரே வெற்றி பெறுகிறார். அவ்வாறு வெற்றி பெற்றவரையே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கிறோம். தேர்தல்களை நடத்துவதும், அவற்றைக் கண்காணிப்பதும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பணியாகும். தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர், எந்தக் கட்சியில் அதிக எண்ணிக்கையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்தக் கட்சியே பெரும்பான்மைக் கட்சியாக உருவாகிறது. ஆளுநர், அந்தப் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் தலைவரை அழைத்து, மாநில அரசாங்கத்தை அமைக்குமாறு அழைப்பு விடுப்பார். பாதிக்குமேல் உள்ள தொகுதிகளில் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெறும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பெரும்பான்மைக் கட்சியே மாநிலத்தில் ஆளும் கட்சியாக உருவாகிறது. பெரும்பான்மைக் கட்சிக்கு அடுத்தநிலையில், எந்தக் கட்சியில் அதிக உறுப்பினர்கள் உள்ளனரோ, அவர்களைக் கொண்டு சட்டமன்ற பிரதான எதிர்க்கட்சி உருவாகிறது. ஆளும் கட்சியைச் சேராத வேறு பல கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினர் என அழைக்கப்படுவர்.



மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்

ஷண்மி: ஐயா, நீங்கள் கூறும் செய்திகள் எங்களுக்கு மிகுந்த ஆர்வத்தைத் தருகின்றன. மாநில அரசாங்கத்தில் யாரெல்லாம் இடம் பெறுவார்கள் என்று கூறுங்கள்.

ஆசிரியர்: சொல்கிறேன். ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் ஆகியோர் இருப்பர். இந்தியக் குடியரசுத் தலைவர், ஐந்தாண்டுக்கு ஒருமுறை ஆளுநரைத் நியமிப்பார். அந்த ஆளுநர், பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட ஆளும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக நியமிப்பார். ஆளுநருடன் முதலமைச்சர் ஆலோசித்துத் தம் கட்சியின் உறுப்பினர்களை கொண்டு அமைச்சரவையை (மந்திரி சபையை) உருவாக்குவார். அந்த அமைச்சரவை, மாநிலத்தில் ஐந்தாண்டு ஆட்சிபுரியும்.


இலயா: ஐயா, நான் ஆளுநராகவோ முதலமைச்சராகவோ வரமுடியுமா?

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_1.indd 197 16-08-2019 12.56.45 PM

ஆசிரியர்: ஏன் முடியாது? நீங்களும் வரலாம். ஆளுநராக வரவிரும்பினால், முதலில் நீ இந்தியக் குடிமகனாக இருக்கவேண்டும். 35 வயது நிறைவடைந்தவராக இருக்க வேண்டும். வாழ்வில் சிறந்த நிலையில் இருக்கவேண்டும். இவை மட்டுமல்ல, எவ்வித வருவாய் தரும் எந்த ஒரு அரச பதவியிலும் இருக்கக்கூடாது. முதலமைச்சராக ஆக விரும்பினால், 25 வயது நிறைவடைந்திருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினராக (ச.ம.உ.) இருக்க வேண்டும். ஒருவேளை, சட்டமேலவை உறுப்பினராக (ச.மே.உ.) ஆக விரும்பினால், 30 வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.

X5N5G7

ஆரியா: சட்டமேலவை உறுப்பினரா? யார் அவர்? கூறுங்கள், ஐயா.



ஆசிரியர்: மாநிலச் சட்டமன்றத்தில் / சட்டசபையில் வழக்கமாக இரு அவைகள் இடம்பெற்றிருக்கும். ஒன்று, மேலவை; மற்றொன்று கீழவை. இதனை ஈரவைச் சட்டமன்றம் / சட்டசபை என்று அழைப்பர். சட்டமன்ற மேலவை என்பது, சட்டமன்ற சபை. இதன் உறுப்பினர்கள், சட்டமேலவை உறுப்பினர்கள் என அழைக்கப்படுவர். இவர்கள், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. கீழவை என்பது, சட்டமன்ற சபை இதன் உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களாவர். நான் முன்பே கூறியதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்தியாவிலுள்ள சில மாநில சட்டமன்றங்களில் மேலவை, கீழவை என்னும் ஈரவை அமைப்பு உள்ளது. ஆனால், நம் தமிழ்நாட்டில் கீழவை மட்டுமே உள்ளது. இதனை ஓரவை சட்டமன்றம் என்பர்.

அமர்: ஓ! அப்படியா! நன்கு புரிந்துகொண்டோம். ஐயா! ஆளுநர், முதலமைச்சர் ஆகியோரின் அதிகாரங்களையும் பணிகளையும் பற்றி எங்களுக்கு எடுத்துச்சொல்வீர்களா?

ஆசிரியர்: ஓ! கட்டாயம் சொல்கிறேன். மாநிலச் சட்டமன்றத்தின்/ ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக ஆளுநர் செயல்படுகிறார். இவர், மாநிலச் நிருவாகத்துறையின் தலைவராகவும் மகத்தான அதிகாரங்களை உடையவராகவும் திகழ்கிறார். மாநில அரசாங்கத்தின் அனைத்துச் நிருவாகத்துறை நடவடிக்கைகளும் ஆளுநரின் பெயரால் நடைபெறுகின்றன. மாநிலத்திலுள்ள அரசுப் பல்கலைக் கழகங்களின் வேந்தராகவும் அவர் இருக்கிறார். மாநில சட்டத்துறையால் இயற்றப்படுகிற அனைத்துச் சட்டமுன் வரைவுகளும் (மசோதாக்களும்) அவரின் ஒப்புதலுக்குப் பின்னரே சட்டமாகின்றன. மாநிலத் தலைமை வழக்குரைஞர், மாநிலப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையர், அரசுப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் போன்றோரையும் ஆளுநரே நியமிக்கிறார்.

மாநில நிருவாகத்துறையில் பெயரளவுத் தலைவராக ஆளுநர் செயல்படுகிறார். மாநில நிருவாகத்துறையின் உண்மையான தலைவராக முதலமைச்சர் செயல்படுகிறார். முதலமைச்சர், தனது அமைச்சர்களுக்கு இலாகாக்களை ஒதுக்கீடு

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_1.indd 198 16-08-2019 12.56.45 PM

செய்கிறார். அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் மாநிலச் சட்டசபைக்குப் பொறுப்புடையவர்களாக உள்ளனர். அவர்கள் அனைவரும் முதலமைச்சரின் தலைமையின் கீழ் ஒரு குழுவாக இணைந்து செயல்படுகின்றனர். மக்களின் நலனுக்கானத் திட்டங்களையும் கொள்கைகளையும் முதலமைச்சர் வகுக்கிறார்.

அரசாங்கத்தில் சட்டமன்றம், நிருவாகத் துறை, நீதித்துறை என்னும் மூன்று பிரிவுகள் உள்ளன. சட்டமன்றம், சட்டங்களை இயற்றுகிறது. நிருவாகத்துறை சட்டங்களை செயல்படுத்துகிறது. நீதித்துறை, சட்டங்களை நிலைநாட்டுகிறது.

நந்து: ஐயா, நீதித்துறை என்று நீங்கள் குறிப்பிடுவது, நீதிமன்றங்களா?



ஆசிரியர்: ஆம். மாநில அளவில், மிகப்பெரிய நீதித்துறை அமைப்பாக இருப்பது உயர்நீதிமன்றம். இவ்வமைப்பு, சுதந்திரத் தன்மையுடன் செயல்படுகிறது. இந்திய அரசியலமைப்பின்படி, ஒவ்வொரு மாநிலத்திலும் ஓர் உயர்நீதிமன்றம் உண்டு. மாநில உயர்நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் இருப்பர். உயர்நீதிமன்றத்திலுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. குடியரசுத் தலைவரால் தலைமை நீதிபதி நியமிக்கப்படுகிறார். தலைமை நீதிபதி, தமக்கு 62 வயது ஆகும்வரை, அந்தப் பதவியில் இருப்பார். உயர் நீதிமன்றத்தைத் தவிர, மாவட்ட அளவில் நீதிமன்றங்களும் தீர்ப்பாயங்களும் உள்ளன. அவை, எவ்விதச் சார்புமின்றி, மக்களுக்கு நீதி வழங்குவதை உறுதி செய்கின்றன. அவை மட்டுமல்லாமல், குடும்ப நல நீதிமன்றங்களும் உள்ளன. அவை, திருமணம்/குடும்பம் தொடர்பாக எழும் சண்டை சச்சரவுகளைத் தீர்த்துவைக்கின்றன.

மாணவர்கள்: எங்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில், இன்றைய பாடம் அமைந்தன. மிக்க நன்றி, ஐயா.

ஆசிரியர்: நான் கூறுவதைக் கவனத்துடன் கேட்ட உங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரும் திங்களன்று நடைபெற உள்ள விழாவுக்கான ஆயத்த பணிகளை நாம்தாம் மேற்கொள்ளப் போகிறோம். ஆகவே, அதற்காக என்ன செய்யலாம் என்று சிந்திப்போம். நல்லமுறையில் ஏற்பாடுகளைச் செய்து, பாராட்டுகளைப் பெறுவோம்.

பாடச்சுருக்கம்

- இந்தியா 29 மாநிலங்களாகவும் 7 யூனியன் பிரதேசங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திற்கென்று தனித்தனி சட்டமன்றங்களைக் கொண்டுள்ளது.
- மாநில அரசு ஆளுநர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் குழுவை உள்ளடக்கியதாகும்.
- மாநில அரசின் தலைவர் கவர்னர் ஆவார். ஆளுநர் 5 ஆண்டுகளுக்கு குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். சட்டமன்றத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக செயல்படுகிறார்.

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_1.indd 199 16-08-2019 12.56.45 PM

❖ மாநில அரசின் நிருவாக அதிகாரம் முதலமைச்சரிடம் உள்ளது. பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் முதலமைச்சராக நியமிக்கப்படுகிறார்.

❖ முதலமைச்சர் மற்றும் அமைச்சரவைக் குழுவினர் சட்டமன்றத்திற்கு கூட்டு பொறுப்புடையவர்கள் ஆவர்.

❖ உயர்நீதிமன்றம் மாநில அரசின் உச்சபட்ச நீதியமைப்பு. உயர்நீதிமன்றம் மாநிலத்தின் ஒட்டுமொத்த பரப்பிற்குமான அதிகார எல்லை உடையது.

சொற்களஞ்சியம்			
1.	சட்டமன்றம்	Legislative	law making body
2.	மந்திரிசபை	Cabinet	the committee of senior ministers
3.	நிருவாகம் சார்ந்த	Executive	administrative
4.	நீதித்துறை	Judiciary	a system of courts of law

மதிப்பீடு

X6C5X8

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

1. மாநில சட்டமன்றத்தின் உறுப்பினராவதற்கு குறைந்த பட்ச வயது

அ) 18 வயது ஆ) 21 வயது இ) 25 வயது ஈ) 30 வயது

2. இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை

அ) 26 ஆ) 27 இ) 28 ஈ) 29

3. மாநில அரசு என்பது

அ) மாநில அரசின் துறைகள் ஆ) சட்ட மன்றம் இ) அ) மற்றும் ஆ)
ஈ) இவற்றில் எதுவுமில்லை

4. மாநில அரசு நிருவாகத்தின் ஒட்டுமொத்த தலைவர்

அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதமர் இ) ஆளுநர் ஈ) முதலமைச்சர்

5. முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிப்பவர்

அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதமர் இ) ஆளுநர் ஈ) தேர்தல் ஆணையர்

6. முதலமைச்சர் என்பவர்

அ) பெரும்பான்மை கட்சியின் தலைவர் ஆ) எதிர்க்கட்சி தலைவர்

இ) அ மற்றும் ஆ ஈ) இவற்றில் எதுவுமில்லை

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_1.indd 200 16-08-2019 12.56.45 PM

7. மாநில அரசின் மூன்று முக்கிய நிருவாக பிரிவுகள்

அ) மேயர், ஆளுநர், சட்டமன்ற உறுப்பினர்

ஆ) ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி

இ) கிராமம், நகரம், மாநிலம்

ஈ) சட்டமன்றம், நிருவாகத்துறை, நீதித்துறை

II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. _____ ஆல் ஆளுநர் நியமிக்கப்படுகிறார்

2. சட்டமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் _____ ஆக நியமிக்கப்படுகிறார்

3. மாநில அரசின் உச்சபட்ச நீதி அமைப்பு _____

4. ச.ம.உ என்பதன் விரிவாக்கம் _____

5. ஒரு குறிப்பிட்ட பகுதியை சேர்ந்த அனைத்து வாக்காளர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுபவர் _____ ஆவார்

6. சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஆளுங்கட்சியை சாராதவராக இருப்பின் _____ என்று அழைக்கப்படுவர்.

III. பொருத்துக.

அ	ஆ
சட்டமன்ற உறுப்பினர்கள்	தலைமைச் செயலகம்
ஆளுநர்	7
முதலமைச்சர்	மாநிலத்தின் தலைவர்
யூனியன் பிரதேசங்கள்	சட்டமன்றம்
புனித ஜார்ஜ் கோட்டை	பெரும்பான்மை கட்சித் தலைவர்

IV. கீழ்க்காணும் வாக்கிங்களில் சரியானவற்றை (√) டிக் செய்யவும்

1. கீழ்காணும் வாக்கியங்களில் தவறானவை

அ) ஆளுநராக இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்

ஆ) 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்

இ) நல்ல மனநலமுடையவராக இருத்தல் வேண்டும்

ஈ) இலாபம் தரும் எந்த பதவியிலும் இருத்தல் கூடாது

2. கீழ்காணும் வாக்கியங்கள் சரியா தவறா என்பதை ஆராய்க

அ) அரசு செயல்படுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடையவர்கள் ஆவார்கள்

ஆ) ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை சாராத அனைத்து அரசியல் கட்சியை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்கட்சி உறுப்பினர்கள் என்று அழைக்கப்படுவர்

இ) சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுடைய பிரதிநிதிகள் அல்ல

3. ஈரவை என்பதற்கு சரியான விளக்கத்தை தேர்ந்தெடு

அ) இரு முதலமைச்சர்களை கொண்ட சட்டமன்றம்

ஆ) ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களை கொண்ட சட்டமன்றம்

இ) மேலவை மற்றும் கீழவையை கொண்ட சட்டமன்றம்

ஈ) கவர்னரை தலைவராகவும் சட்ட மன்ற உறுப்பினர்களையும் கொண்ட அவை

4. **கூற்று:** இந்தியா கூட்டாட்சி முறை அரசாங்கத்தை கொண்டது

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_1.indd 201 16-08-2019 12.56.46 PM

காரணம் : இந்திய அரசியலமைப்பின் அதிகாரம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அ) கூற்று சரி, கூற்றிற்கான விளக்கமும் சரியானது

ஆ) கூற்று சரி, கூற்றிற்கான விளக்கம் சரியல்ல

இ) கூற்று சரி, விளக்கம் தவறு

ஈ) கூற்று மற்றும் விளக்கம் தவறு

V. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்

1. மாநில ஆளுநராவதற்கான தகுதிகள் யாவை?
2. எதிர்க்கட்சியினர் என்று அழைக்கப்படுபவர்கள் யார்?
3. லோக் அதாலத் பற்றி எழுதுக.
4. சட்டமன்ற தொகுதி என்றால் என்ன?
5. முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிப்பவர் யார்?

VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும்

1. ஆளுநரின் அதிகாரத்தை விவரிக்கவும்?
2. சட்டமன்ற உறுப்பினர் என்பவர் யார்?
3. முதலமைச்சர் மற்றும் காபினெட் அமைச்சர்களின் பணிகள் யாவை?

VII. உயர்சிந்தனை வினாக்கள்

1. மாநில அரசின் சில துறைகளின் பெயர்களை குறிப்பிடுக.
2. அட்டவணைப்படுத்துக

   ஆளுநர், முதலமைச்சர், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதிகள், நியமனமுறை மற்றும் ஏதாவது இரண்டு அதிகாரங்கள்

VIII. மாணவர் செயல்பாடு

1. தமிழ்நாட்டின் ஆளுநர், முதலமைச்சர் மற்றம் அமைச்சரவையின் பட்டியலை தயார் செய்க
2. நீவிர் மாநிலத்தின் முதல்வராக இருந்தால் கட்டுரை வரைக
3. வகுப்பறையில் மாதிரி சட்டமன்றத்தை நடத்துக

(அமைச்சரவை துறைகளை ஒதுக்கீடு செய்து காலவாரியாக மீளாய்வு செய்க)

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_1.indd 202 16-08-2019 12.56.46 PM

அலகு - 2

ஊடகமும் ஜனநாயகமும்



கற்றல் நோக்கங்கள்

- ஊடகம் மற்றும் அதன் வகைகளை புரிந்து கொள்ளுதல்.
- அரசாங்கத்திற்கும் குடிமக்களுக்கும் இடையிலான தொடர்புகளை எளிதாக்குவதில் ஊடகத்தின் பங்கினை ஆராய்தல்.
- ஊடகத்தின் நெறிமுறைகளையையும், பொறுப்பினையும் அறிந்து கொள்ளுதல்.
- மக்களின் வாழ்க்கை மற்றும் அவர்கள் தேர்ந்தெடுக்கும் பொருள்களில் ஊடகத்தின் தாக்கம் குறித்த ஆழ்ந்த உணர்வைப் பெறுதல்.

R9L1V6

"உன்னதமான எண்ணங்கள் அனைத்து பக்கங்களிலிருந்தும் வரட்டும்"

அறிமுகம்

இந்தியா பாரம்பரியமிக்க நாட்டுபுறக் கலைகள் பலவற்றைக் கொண்டது. அக்கலைகள் மூலம் கிராமப்புற மக்களிடையே கருத்துகள் பரிமாறப்பட்டன. ஹரிகதைகள் மற்றும் கூத்து போன்ற கலைகளின் மூலம் சமயக் கதைகள் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன. இவை அந்த காலத்தில் சமய ஊடகங்களாகச் செயல்பட்டன. இச்சமய ஊடகங்கள் இசை, நடனம், சொற்பொழிவு, கதை சொல்லல், பொம்மலாட்டம் போன்றவற்றின் கூட்டுக்கலைகளாக இருந்தன. இவை மக்களிடையே நேரடியாக கருத்துகளை கொண்டு சேர்த்தன. இதன் மூலம் சமூகத்திற்குப் பயனுள்ள கருத்துகள் கூறப்பட்டன. இன்றைய நவீன ஊடகமுறை என்பது சிறு மற்றும் குறு அளவிலான கூட்டங்கள், கருத்தரங்குகள், நாடகங்கள், பொதுக்கூட்டங்கள் மற்றும் கருத்துப்பட்டறைகளாக இருக்கின்றன. அச்சு ஊடகம் என்பது மக்களின் பல்கலைக்கழகமாக கருதப்படுகிறது, ஏனெனில் இது மக்களுக்குத் தகவல்களை வழங்கக்கூடியதாகவும், கல்வியறிவு ஊட்டக்கூடியதாகவும் மற்றும் பொதுமக்களின் பாதுகாவலனாகவும் செயல்பட்டு வருகின்றது. இனி நாம் ஊடகத்தின் பங்களிப்பைப் பற்றி அறிந்து கொள்வோம்.

ஊடகம் – விளக்கம்

ஒவ்வொரு தனிமனிதனும் ஊடகத்தின் வெளிப்பாடாகும். ஒரு நபர் மற்ற நபர்களுடனும்,

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_2.indd 204 18-08-2019 1.58.27 PM

நிறுவனங்களுடனும் ஊடகத்தின் மூலம் தொடர்பு கொள்கிறார். ஊடகம் என்பது ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளக் கூடிய சாதனமாகும். ஊடகம் என்பது அச்சு, ஒலி, ஒளி என அனைத்துவகை பரப்பு சாதனங்களையும் உள்ளடக்கியதே ஆகும். ஊடகமானது (Media) மீடியம் (Medium) என்ற ஆங்கில வார்த்தையின் பன்மையாகும் (Plural). ஊடகம் தகவல்கள் செய்திகள், உணர்வுகள், கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளகூடியதாகவும் இருக்கிறது.

இத்தகவல் தொடர்பு பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

தனிமனித தொடர்பு – கடிதங்கள், தொலைப்பேசி, அலைப்பேசி, மின்னஞ்சல் மற்றும் தொலைநகல் ஆகியன தனிமனித தொடர்பு சாதனங்களாகும். இவை ஒரு நபர் மற்றொரு நபரோடு தனியாகவோ குழுவாகவோ தொடர்பு கொள்வதற்கு பயன்படுகிறது.

வெகுஜன தொடர்பு – செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி ஆகியன வெகுஜன மக்களோடு தொடர்பு கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. எனவே இவை வெகுஜன ஊடகம் என்று அழைக்கப்படுகின்றன.

அச்சு இயந்திரம் ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் என்பவரால் 1453 இல் கண்டுபிடிக்கப்பட்டது

மக்களாட்சியின் நான்காவது தூண்



சட்டமன்றம், நிருவாகத்துறை, நீதித்துறை மற்றும் ஊடகம் ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக கருதப்படுகிறது. ஊடகம் மற்ற மூன்று துறை செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது. இந்த நான்காவது தூண் நாட்டின் தொலைதூர பகுதிகளில் வாழும் அனைத்து மக்களும் நாட்டின் பிற பகுதிகளில் என்ன நடக்கிறது என்பதை அறிய உதவுகிறது. உண்மையில் ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகம் என்பது தகவல்கள் மற்றும் அறிவை வழங்கும் மிக முக்கிய சாதனமாக செயல்படுகிறது.

ஊடகத்தின் முக்கியத்துவம்

இவ்வுலகில் ஊடகம் மிகவும் சக்தி வாய்ந்த

D1F7C2

ஊடகத்தின் வகைப்பாடு

குறுகிய தொடர்பு ஊடகம்	கேபிள் தொலைக்காட்சி, நேரடி அஞ்சல், கருத்தரங்கு
தொலைத்தொடர்பு ஊடகம்	திரைப்படங்கள் தொலைக்காட்சி, வானொலி
அச்சு ஊடகம்	செய்தித்தாள்கள், இதழ்கள், பத்திரிக்கைகள் புத்தகங்கள், சுவரொட்டிகள், அறிக்கைகள்
இணைய ஊடகம்	கூகுள் இணைய தளங்கள் மற்றும் வலைப்பதிவுகள்
சமூக ஊடகம்	கீச்சகம், முகநூல், புலனம்/கட்செவி அஞ்சல் மற்றும் படவரி

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_2.indd 205 18-08-2019 1.58.28 PM


கட்டமைப்பு ஆகும். இது நம்மை சுற்றியுள்ள பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார செயல்பாடுகளை பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்கிறது. இதனை மக்கள் பல்வேறு தேவைகளுக்காக சார்ந்திருக்கின்றனர். குறிப்பாக தகவல்கள் மற்றும் பொழுதுபோக்கிற்காக சார்ந்துள்ளனர். ஊடகம்மக்களைவிழிப்போடுஇருக்கச்செய்கிறது. மேலும் சமூக மாற்றத்திற்கான மிக முக்கிய சாதனமாகவும் இருக்கிறது . ஊடகம் உலகின் அன்றாட நிகழ்வுகளை மட்டுமல்லாமல் ஒரு அரசின் பலம் மற்றும் பலவீனத்தை வெளிக்கொண்டு வருகிறது. தனியார் நிறுவனங்களால் தயாரிக்கப்படும் பொருட்களை மக்களிடம் விளம்பரப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது. அனைத்து தொலைக்காட்சி சேனல்களும் தேசிய மற்றும் பன்னாட்டு செய்திகளை ஒளிபரப்பரப்புகின்றன. பல திரைப்படங்களில் சமூகப் பிரச்சனைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எந்தவொரு விடயங்களிலும் ஊடகம் நடுநிலையான அறிக்கையை வழங்குகின்றது. இது சமூக, அரசியல் பிரச்சனைகளுக்கெதிராகவும், சமூக அநீதிக்கு எதிராகவும் போராடுகிறது. மேலும் இது மக்களின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவுகிறது.

அகில இந்திய வானொலி

1956 ஆம் ஆண்டிலிருந்து ஆகாச வானி (வானிலிருந்து வரும் ஒலி) என்ற பெயரில் வானொலி ஒலிபரப்பை செய்து வருகிறது. இது 1936 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

மக்களிடம் பொதுக்கருத்தினை ஏற்படுத்துவதில் – ஊடகம்

ஊடகம் மக்களிடையே ஒரு பொதுவான கருத்தை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. (ஒரு குறிப்பிட்ட பிரச்சனையில் மக்களின் பொதுக்கருத்து) இது சமகாலத்தின் சக்தி வாய்ந்த கருவியாகும். மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது. இது மக்களின் அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்த பார்வை மற்றும் புரிதலில் பொதுமைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. வெகுஜன ஊடகம் அன்றாட நிகழ்வுகளைப் பற்றி நேர்மையாகவும், நுட்பமாகவும், நடுநிலையாகவும் தருகின்றது. செய்தித்தாள்கள் அரசின் கொள்கைகளுக்கு எதிராக மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் சாதனமாக திகழ்கிறது. இவ்வாறு மக்களுக்கு சமூகத்தில் நடைபெறுகின்ற முக்கிய பிரச்சனைகளை பற்றிய கருத்துக்களை தெரிவிக்க அச்சு ஊடகங்களும், மின்னனு ஊடகங்களும் உதவுகின்றன.



நெறிமுறை மற்றும் பொறுப்பு

நெறிமுறை என்பது நம் வாழ்க்கையை வாழ தீர்மானிக்கும் மதிப்பீடுகளின் தொகுப்பாகும் எனவே இவை முறையான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மிகவும் அவசியமாகும். ஊடக நெறிமுறை என்பது நல்ல நடத்தைக்குரிய கொள்கைகள் அடங்கிய தொகுப்பாகும். ஊடகம் என்பது அவற்றின் செயல்பாடுகள் மற்றும் எழுத்தின் மூலமும் பிரதிபலிக்க வேண்டும். எளிதில் உணர்வுகளை தூண்டக்கூடிய தேவையற்ற செய்திகளை தவிர்க்கவேண்டும்.

ஊடகங்களின் அடிப்படை நோக்கமானது நேர்மையான, துல்லியமான, நடுநிலையான,

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_2.indd 206 18-08-2019 1.58.28 PM

நாகரிகமான மற்றும் நல்ல மொழிநடையில் மக்கள் நலன் சார்ந்த தகவல்கள், செய்திகள், கருத்துகள், ஆகியவற்றை மக்களுக்கு வழங்குவதாகும். ஒரு அரசு சிறப்பாக செயல்படுவதற்கு விழிப்பான மற்றும் சுதந்திரமான ஊடகம் மிகவும் அவசியமாகும்.



இது மக்களுக்கு தேவையான தகவல்களை சேகரிப்பதற்கான உரிமையை பெற்றிருக்கிறது. அதேசமயம் எந்த விதத்திலும் மக்களின் உணர்வுகளை தூண்டும் விதத்தில் இருத்தல் கூடாது. நம்பகத்தன்மையான தகவல்களை மக்களிடம் வழங்குவதில் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

ஜனநாயகத்தில் ஊடகத்தின் பங்கு

ஊடகமானது ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும். நமது ஜனநாயக சமுதாயத்தில் ஊடகம் பொதுமக்களின் கருத்துக்களை செயல்படுத்தும் உந்து சக்தியாகும். இது ஜனநாயகத்தின் மதிப்புகளை பலப்படுத்துகிறது. இது மக்களுக்கு அறிவையும், வலிமையும் அளிக்கிறது. மேலும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வையும், ஏற்படுத்துகிகிறது. அரசின் வெளிப்படைத்தன்மையும், அவற்றின் பொறுப்பினையும் உறுதி செய்கிறது. ஊடகம் அரசின் ஒவ்வொரு செயல்பாட்டினையும் மக்களிடம் எடுத்துச்செல்கிறது. இதன் மூலம் அரசின் செயல்பாடுகளையும் மக்களின் அன்றாட நிகழ்வுகளையும் குடிமக்கள் அறிந்துகொள்கிறார்கள்.

மக்களாட்சியின் கோட்பாடு

மக்களாட்சி என்றால் மக்களால் ஆட்சி செய்யப்படுதல் என்பதாகும். இது இரண்டு கிரேக்க சொற்களால் ஆனது. டெமோஸ் (Demos) மக்களைக் குறிக்கிறது. க்ராடோஸ் (Kratos) அதிகாரம் அல்லது ஆட்சி என்று பொருள்.

இது நடப்பு செய்திகளை பற்றிய விவாதத்தை ஏற்படுத்துகிறது. அதனால் ஒரே பிரச்சினைகளுக்குப் பல்வேறு கருத்துக்களை பெறமுடிகிறது. ஊடகமானது மக்களுக்கு அரசு நிறைவேற்றாத வாக்குறுதிகளை நினைவூட்டுகிறது. இது கிராமப்புற மக்களுக்கு கல்வி அளிக்கிறது. பாராளுமன்றம் மற்றும் ஜனநாயகம் ஆகிய இரண்டும் ஊடகத்தின் கண்காணிப்பில் இருந்தால் மட்டுமே வலிமை அடையும். ஊடகம் அறிக்கைகள் அளிப்பது மட்டுமல்லாது அரசிற்கும் மக்களுக்கும் இணைப்பு பாலமாக செயல்படுகிறது. மேலும் ஊடகம் அரசாங்கத்தை கண்காணிக்கும் பணியையும் செய்கிறது. ஊடகம் இல்லாத ஜனநாயகம் என்பது சக்கரம் இல்லாத வாகனத்திற்கு ஒப்பாகும் .

உள்ளூர் ஊடகம்

பொதுவாக ஊடகம் என்பது தேசிய மற்றும் உலக செய்திகளை அளிப்பதாகும். உள்ளூர் ஊடகம் என்பது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் மக்களின் நலனுக்காக செயல்படுவதாகும்.



7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_2.indd 207 18-08-2019 1.58.29 PM

உங்கள் பகுதியின் உள்ளூர் ஊடகங்கள் சிலவற்றின் பெயரினை குறிப்பிடுக.

முடிவுரை

தகவல் மற்றும் தொழில்நுட்ப உலகில் வெகுஜன மக்களுக்கு தகவல்களை அளிப்பதில் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. ஊடகம் மக்களின் ஒற்றுமையையும், சமூக அமைதியையும் சீர்குலைக்கும் வண்ணம் எதையும் வெளியிடா வண்ணம் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும். ஆரோக்கியமான சமுதாயத்திற்கு ஊடகம் நல்ல தகவல்களையும், மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் விதமாகவும் செயல்பட வேண்டும். ஊடகம் இந்த உலகை சிறியதாகவும் மக்களுக்கு மிக நெருக்கமாகவும் மாற்றியுள்ளது.

பாடச்சுருக்கம்

- மக்களாட்சியில் ஊடகம் முக்கிய பங்கு வகிக்கிறது.
- ஊடகம் என்பது தொடர்பு கொள்ளும் முறையாகும் மீடியா (Media) என்பது மீடியம் (Medium) என்ற ஆங்கில வார்த்தையின் பன்மை (Plural) ஆகும்.
- நவீன ஊடகங்களான தொலைக்காட்சி, வானொலி, நாளிதழ்கள் மற்றும் இணையம் மூலம் கோடிக்கணக்கான மக்களை தகவல்கள் சென்றடைய உதவுகின்றன.
- தொழில்நுட்ப மாற்றத்தினால் மக்கள் ஒருவருக்கொருவர் எளிதில் தொடர்பு கொள்ள முடிகிறது.
- மக்களிடையே ஒரு தகவலைப் பற்றி பொதுவான கருத்தினை ஏற்படுத்தி விழிப்புணர்வை உருவாக்குகிறது.
- ஊடகம் இந்த உலகத்தை மக்களுக்கு மிக அருகில் கொண்டு வந்திருக்கிறது. மேலும், உலகில் எங்கு ஒரு நிகழ்வு நடந்தாலும் அதனை உடனடியாக மக்களுக்கு உண்மைத்தன்மையுடன் கொண்டு சேர்க்கிறது.

சொற்களஞ்சியம்			
1.	ஒளிபரப்பு	Broadcast	transmit by radio or television
2.	ஆட்சி அமைப்பு	Polity	system of government
3.	சமகாலத்தில்	Contemporary	present – day
4.	நெறிமுறைகள்	Ethics	moral principles
5.	நடுநிலையான	Unbiased	impartial
6.	உண்மையான	Authentic	genuine/original

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_2.indd 208 18-08-2019 1.58.29 PM

மதிப்பீடு

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

1. கீழ்க்கண்டவற்றில் அச்சு ஊடகத்தின் கீழ் வருவது எது?

அ) வானொலி ஆ) தொலைக்காட்சி

இ) செய்தித்தாள் ஈ) இணையதளம்

2. கீழ்க்கண்டவற்றில் ஒலிபரப்பு ஊடகம் என்பது

அ) இதழ்கள் ஆ) அறிக்கைகள்

இ) நாளிதழ்கள் ஈ) வானொலி

3. உலகினை மக்களின் அருகாமையில் கொண்டு வந்த ஊடகம்

அ) தட்டச்சு

ஆ) தொலைக்காட்சி

இ) தொலைப்பேசி

ஈ) இவற்றில் எதுவும் இல்லை

D3I9Q8

4. வெகுஜன ஊடகம் என்பது

அ) வானொலி

ஆ) தொலைக்காட்சி

இ) அ மற்றும் ஆ

ஈ) இவற்றில் எதுவுமில்லை

5. ஊடகம் ஏன் சுதந்திரமாக செயல்பட வேண்டும்

அ) நிறைய பணம் ஈட்ட

ஆ) நிறுவனத்தை ஊக்கப்படுத்த

இ) நடுநிலையான தகவலை தருவதற்கு

ஈ) இவற்றில் எதுவுமில்லை

II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. உலகத்தினை சிறியதாகவும், மிக அருகாமையிலும் கொண்டு வந்தது _____

2. ஒவ்வொரு தனிமனிதனும் _____ ஆகும்

3. அச்சு இயந்திரம் _____ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது

4. நமது வாழ்க்கையை தீர்மானிக்கும் மதிப்பீடுகளின் தொகுப்பு _____ ஆகும்.

5. இந்திய அரசின் வானொலி ஒலிபரப்பு நிறுவனம் _____

III. பொருத்துக.

1.	குறு அளவிலான ஊடகம்	–	கூகுள் இணையம்
2.	சமூக ஊடகம்	–	சுவரொட்டிகள்
3.	அச்சு ஊடகம்	–	கருத்தரங்கு
4.	இணைய ஊடகம்	–	திரைப்படங்கள்
5.	ஒலிபரப்பு ஊடகம்	–	முகநூல்

IV. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியானவற்றை (√) டிக் செய்யவும்

1. **கூற்று:** அச்சு ஊடகம் மக்களின் பல்கலைக்கழகம் என கருதப்படுகிறது.

காரணம்: பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதிலும், கல்வியறிவு ஊட்டுவதிலும் பெரும்பங்கு வகிக்கிறது மற்றும் பொதுமக்களின் பாதுகாவலனாகவும் செயல்படுகிறது.

அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

2. தவறான ஒன்றை கண்டுபிடிக்க

அ) செய்தித்தாள்கள்

ஆ) நாளிதழ்கள்

இ) அறிக்கைகள்

ஈ) கீச்சகம்

உ) சுவரொட்டிகள்

7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_2.indd 209 18-08-2019 1.58.29 PM

3. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியானவற்றை தேர்ந்தெடுக்கவும்

அ) ஊடகம் என்பது பொதுவாக ஒருவருக்கொருவர் தகவல்களை பகிர்ந்து கொள்ளும் சாதனம் ஆகும்

ஆ) ஊடகம் மிகவும் சக்திவாய்ந்த நிறுவனமாகும்

இ) ஊடகம் மக்களிடம் பொது கருத்தை உருவாக்குவதில் முக்கிய பங்குவகிக்கிறது

ஈ) ஊடகத்திற்கு எந்த பொறுப்பும் கிடையாது

i) அ, ஆ மற்றும் இ சரி

ii) அ, ஆ மற்றும் ஈ சரி

iii) ஆ, இ மற்றும் சரி

iv) அ, ஆ மற்றும் ஈ சரி

V. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்

1. ஊடகம் என்றால் என்ன?
2. சட்டமன்றத்தின் செயல்பாடுகளை மக்கள் எவ்வாறு அறிந்து கொள்கிறார்கள்?
3. உள்ளூர் ஊடகத்தின் முக்கியத்துவம் யாவை?
4. ஜனநாயகத்தின் நான்காவது தூண் ஊடகம் நிரூபிக்கவும்
5. ஊடகத்தின் ஏதாவது இரண்டு பொறுப்புகளைக் கூறுக

VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும்

1. ஊடகத்தை எவ்வாறு வகைப்படுத்தலாம் ?
2. ஜனநாயகத்தில் ஊடகம் எவ்வாறு முக்கிய பங்காற்றுகிறது?
3. ஊடகத்தினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

VII. உயர் சிந்தனை வினா

1. ஊடகம் அவசியமா? ஏன்?
2. பத்திரிக்கையாளர் சந்திப்பை பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.
3. ஊடகம் நம் அன்றாட வாழ்க்கையில் எந்த வகையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது

VIII. மாணவர் செயல்பாடு

1. ஒரு குறிப்பிட்ட செய்தியை எடுத்துக் கொண்டு அதைப் பற்றிய தகவல்கள் பல்வேறு ஊடகங்களில் எவ்வாறு வந்துள்ளன என்பதை ஒப்பீடு செய்க. மற்றும் அந்த செய்திகளின் ஒற்றுமை மற்றும் வேற்றுமையை எழுதுக.
2. ஊடகத்தின் வளர்ச்சியைப் பற்றி படத்தொகுப்பு தயாரிக்கவும் (ஆரம்பம் முதல் தற்போது வரை)
3. மாதிரி செய்தித்தாளினை தயார்செய்து, அதனை வகுப்பறையில் அனைவரும் அறியும்படி காட்சிப்படுத்துக.


7th Social Science_ Civics_Term II_Tamil_Unit_2.indd 210 18-08-2019 1.58.30 PM

www.tntextbooks.in

அலகு - 1

குடிமையியல்

மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது



கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றுக்கொள்வதின் வாயிலாக மாணவர்கள் பின் வருவனவற்றில் அறிவைப் பெறுகின்றனர்

- மாநில நிர்வாகம்
- ஆளுநரின் அதிகாரம் மற்றும் பணிகள்
- முதலமைச்சரின் அதிகாரம் மற்றும் பணிகள்
- மாநில சட்டமன்ற பேரவை மற்றும் மேலவை
- மாநில நீதித்துறை.

4AED6A

அறிமுகம்

நமது நாட்டில் மத்திய அரசு, மாநில அரசு என்ற இரண்டு வகை அரசாங்கங்கள் நடைமுறையில் உள்ளன. இந்தியாவில் 29 மாநில அரசாங்கங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு மாநிலமும் தனது நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ள தனக்கென ஒரு அரசைக் கொண்டுள்ளது. அந்த வகையில் ஒவ்வொரு மாநிலமும் நிர்வாகம், சட்டமன்றம் மற்றும் நீதித்துறையை கொண்டுள்ளது. மாநில நிர்வாகம் மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவையால் மேற்கொள்ளப்படுகிறது. மாநில ஆளுநர் சட்டமன்றத்தின் ஒரு அங்கமாகத் திகழ்கிறார்.

மாநில நிர்வாகம்

ஆளுநர்

மாநில அரசின் தலைவராக மாநில ஆளுநர் இருப்பார் என இந்திய அரசியலமைப்பு சட்டம் குறிப்பிடுகிறது. இந்தியக் குடியரசுத் தலைவரால் ஆளுநர் நியமிக்கப்படுகிறார். இவர் மாநில நிர்வாகத்தின் தலைவராக இருக்கிறார். அவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். எனினும் பதவிக்காலம் முடியும் முன்பாகவே அவரை அப்பதவியிலிருந்து குடியரசுத் தலைவர் நீக்கலாம். அல்லது தானாகவே தனது பதவியை ஆளுநர் ராஜினாமா செய்யலாம். ஆளுநரின் பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம் அல்லது வேறு மாநிலத்திற்குப் பணியிட மாற்றம் செய்யப்படலாம். ஆனால் மாநில அரசாங்கம் ஆளுநரை பதவியிலிருந்து நீக்க இயலாது.

G717V6



குடியரசுத் தலைவர் மாநில ஆளுநரை நியமிக்கும் போது மத்திய அமைச்சரவையின் ஆலோசனையின் படி செயல்படுகிறார். மேலும் தொடர்புடைய மாநில அரசையும் கலந்தாலோசிக்கிறார். பொதுவாக ஒருவர் ஆளுநராக அவரது சொந்த மாநிலத்தில் நியமிக்கப்படுவது இல்லை.

8th_Civics_TM_Unit-1.indd 231 4/15/2019 4:13:17 AM

மாநில ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு ஒருவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். 35 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் அவர் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் உறுப்பினராக இருத்தல் கூடாது. இது தவிர ஆதாயம் தரும் எந்த ஒரு பதவியையும் அவர் வகித்தல் கூடாது.

அதிகாரம் மற்றும் பணிகள்

- ஆளுநர் ஒரு மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். மாநில அரசின் நிர்வாக அதிகாரங்கள் ஆளுநரிடம் உள்ளன. மாநில அரசாங்கத்தின் அனைத்து நிர்வாக செயல்களும் ஆளுநரின் பெயரால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆளுநர் முதலமைச்சரையும் அவரது ஆலோசனையின் பேரில் ஏனைய அமைச்சர்களையும் நியமிக்கிறார்.
- மாநில அரசின் தலைமை வழக்கறிஞர், மாநில அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்வதோடு சில இதர நியமனங்களையும் மேற்கொள்கிறார்.
- ஆளுநரின் அறிக்கையின் படி குடியரசு தலைவர் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 356 ஐ பயன்படுத்தி ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்துகிறார். மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தராக ஆளுநர் செயல்படுகிறார்.
- மாநில சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்தி வைக்கவும் அதிகாரம் கொண்டுள்ளதோடு மட்டுமல்லாமல் சட்டமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தையும் கொண்டுள்ளார்.
- ஆளுநரின் ஒப்புதலுக்குப் பின்னரே பண மசோதாவைச் சட்டமன்றத்தில் கொண்டுவர முடியும். சட்டமன்ற கூட்டம் நடைபெறாத போது ஆளுநர் அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கிறார்.
- சட்டமன்றத்திற்கு ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரை அவர்கள் போதிய அளவு பிரதிநிதித்துவம் பெறாதபோது நியமனம் செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். மாநில சட்ட மேலவைக்கு அறிவியல், இலக்கியம், கலை, சமூக சேவை, கூட்டுறவு இயக்கம் ஆகிய துறைகளில் சிறப்பாகப் பங்காற்றிய அறிஞர்களில், ஆறில் ஒரு பங்கு அளவிற்கு பிரதிநிதித்துவ அடிப்படையில் நியமிக்கிறார்.
- மாநில அரசாங்கத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை ஆளுநரின் ஒப்புதலுடன் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பண மசோதா உள்ளிட்ட அனைத்து மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கிறார். மாநில அரசின் எதிர்பாரா செலவின நிதி ஆளுநரின் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கும்.

ஆளுநரின் நிலை

மாநில ஆளுநர் குடியரசுத் தலைவரைப் போன்று மாநிலத்தில் பெயரளவு நிர்வாகத் தலைவராக உள்ளார். எனினும் மாநில ஆளுநர் எப்போதும் பெயரளவு தலைவராக இருப்பது இல்லை. அவர் தனது அதிகாரங்களை குறிப்பிட்ட சில நேர்வுகளில் செயல்படுத்துகிறார். அவர் மத்திய அரசின் ஒரு முகவராக மாநிலத்தில் செயல்படுகிறார். எனவே இவர் மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றிற்–கிடையேயான உறவுகளைப் பராமரிப்பதற்குப் பொறுப்பு வாய்ந்தவர் ஆவார். ஆளுநர் முக்கியமான தருணங்களில் அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குகிறார். மாநிலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான ஆளுநரின் அறிக்கையின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் மாநிலத்தில் நெருக்கடி நிலையை அறிவிக்கிறார். ஆளுநர் விருப்புரிமை அதிகாரத்தை செயல்படுத்தும் போது தன்னிச்சையான முடிவுகளை எடுக்கிறார். அவர் அமைச்சரவையிடமிருந்து அரசாங்கத்தின் செயல்பாடுகள் குறித்த தகவல்களைக் கோரிப் பெறலாம்.

முதலமைச்சர்



ஆளுநர் மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சியின் தலைவரை மாநில முதலமைச்சராக நியமிக்கிறார். முதலமைச்சர் அமைச்சரவையின் தலைவர் ஆவார். முதலமைச்சரின் பதவிக்காலம் நிலையான ஒன்று அல்ல. அவர் சட்டமன்றத்தில்

8th_Civics_TM_Unit-1.indd 232 4/15/2019 4:13:17 AM

பெரும்பான்மை பலம் உள்ளவரை முதலமைச்சர் பதவியில் நீடிக்கலாம். சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழக்கும்போது அவர் பதவி விலகுதல் வேண்டும். முதலமைச்சர் பதவி விலகுதல் என்பது ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவி விலகுதலைக் குறிக்கும்.

முதலமைச்சர் மாநில சட்டமன்றத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். முதலமைச்சராக பதவி ஏற்கும்போது உறுப்பினராக இல்லாவிட்டால் 6 மாதத்திற்குள் சட்டமன்றத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படுதல் வேண்டும்.

முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்

- முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். மாநில அரசாங்கத்தின் பல்வேறு முக்கிய முடிவுகள் அவரது தலைமையின் கீழ் எடுக்கப்படுகின்றன.
- மாநில முதலமைச்சர், அமைச்சரவையை, உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.
- பல்வேறு துறைகளை கண்காணித்து ஆலோசனை வழங்குகிறார். மேலும் அவர் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.
- முதலமைச்சர் மாநில அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். அவர் மாநில அரசின் கொள்கைகள் மக்களின் நலனுக்கு எதிராக இல்லாததை உறுதி செய்கிறார். மாநில அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளில் அவரது முடிவே இறுதியாக இருக்கும்.
- மாநில அரசாங்கத்தின் உயர் பதவிகளில் நியமனம் செய்யும் முக்கிய அதிகாரத்தைக் கொண்டுள்ளார். முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையின்படியே ஆளுநர் பல்வேறு உயர் அதிகாரிகளை நியமிக்கிறார்.

மாநில சட்டமன்றம்

இந்தியாவில் மாநில சட்டமன்றம் என்பது ஆளுநரையும் ஒன்று அல்லது இரண்டு அவைகளையும் கொண்டிருக்கும். மேலவை என்பது சட்டமன்ற மேலவை எனவும் கீழவை என்பது சட்டமன்ற பேரவை எனவும் அழைக்கப்படுகிறது.

ஈரவை சட்டமன்றம் கொண்ட மாநிலங்கள்



சட்டமன்ற மேலவை

ஒரு மாநிலத்தின் சட்ட மன்ற மேலவையானது நாற்பது உறுப்பினர்களுக்குக் குறையாமலும், அம்மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும் என அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிடுகிறது. இதன் உறுப்பினர்கள் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மாவட்ட பஞ்சாயத்து மற்றும் நகராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்–படுகின்றனர்.
- மேலும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்–படுகின்றனர்.
- பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பட்டதாரிகளால்தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மற்றொரு பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இடைநிலை பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்–படுகின்றனர்.
- ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.

சட்டமன்ற மேலவை ஒரு நிலையான அவையாகும். இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வு பெறுவர்.

8th_Civics_TM_Unit-1.indd 233 4/15/2019 4:13:17 AM

அக்காலிப் பணியிடங்களுக்கு தேர்தல் நடைபெறும். உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒருவர் இந்தியக் குடிமகனாகவும், 30 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். இவர் மாநில சட்டமன்றத்திலும் அல்லது பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் உறுப்பினராக இருத்தல் கூடாது. தலைமை அலுவலராக அவைத்தலைவர் இருப்பார். அவைத்தலைவர் இல்லாதபோது துணைத் தலைவர் அவையை நடத்தும் பொறுப்பினை கொண்டிருப்பார். சட்டமன்ற மேலவையின் தலைவர் மற்றும் துணைத் தலைவரை அவையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

சட்டமன்றப் பேரவை

மாநில அரசாங்கத்தின் சட்டங்களை உருவாக்குபவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என அழைக்கப்படுகின்றனர் (MLA). இவர்கள் பல்வேறு சட்டமன்ற தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சட்டமன்ற தேர்தலுக்காக, மாநிலம் பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. இவை சட்டமன்ற தொகுதிகள் என அழைக்கப்படுகின்றன. ஒரு சட்டமன்ற தொகுதி ஒரு லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலிருந்தும் ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

சட்டமன்ற பேரவைக்கான தேர்தல்

சட்டமன்றபேரவைக்கான தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. இக்கட்சிகள் ஒவ்வொரு தொகுதிக்கும் தமது வேட்பாளர்களை நியமிக்கின்றன. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மக்களிடம் தமக்கு வாக்களிக்குமாறு கோருகிறார். சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் ஒருவர் 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். ஒருவர் ஒரே சமயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிடலாம். எந்த கட்சியையும் சாராத ஒருவரும் தேர்தலில் போட்டியிடலாம். அவ்வாறு போட்டியிடும் வேட்பாளர் சுயேட்சை வேட்பாளர் என அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு கட்சியும் தனக்கென ஒரு சின்னத்தை கொண்டிருக்கும். சுயேட்சை வேட்பாளர்களுக்கும் சின்னம் வழங்கப்படும். சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்–படுகின்றனர். ஒரு சட்டமன்ற தொகுதியில் வசிக்கும் 18 வயது நிரம்பிய அனைவரும் சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்கலாம்.

அரசியலமைப்பின்படி ஒரு மாநில சட்டமன்றத்தில் 500 உறுப்பினர்களுக்கு மேலாகவும் 60 உறுப்பினர்களுக்கு குறைவாகவும் இருத்தல் கூடாது. அட்டவணைப் பிரிவினர், பழங்குடியினருக்கு சட்டமன்றத்தில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மாநில ஆளுநர் சட்டமன்றத்திற்கு ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரை நியமனம் செய்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் ஐந்தாண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால் மாநில ஆளுநர், சட்டமன்றத்தின் பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகவே அதனை கலைத்து புதிதாக தேர்தல் நடத்த அழைப்பு விடுக்கலாம். சட்டமன்ற கூட்டத்திற்கு சபாநாயகர் தலைமை ஏற்கிறார். இவர் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்–படுகிறார். சபாநாயகர் இல்லாத நேர்வுகளில் துணை சபாநாயகர் சட்டமன்ற கூட்டத்திற்கு தலைமை ஏற்கிறார்.

மாநில அமைச்சரவை

தேர்தலில் பெரும்பான்மை பெரும் கட்சியின் தலைவர் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்படுகிறார். தமிழ்நாட்டில் 234 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. 118 க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சி ஆளுநரால் ஆட்சி அமைக்க அழைக்கப்படுகிறது. முதலமைச்சர் (இவரும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருத்தல் வேண்டும்) அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து, அமைச்சர்களை தேர்வு செய்கிறார். இவ்வாறு முதலமைச்சர் மற்றும் அவரது தலைமையிலான பல்வேறு துறை அமைச்சர்களும் கொண்ட அமைப்பு மாநில அரசாங்கம் என அழைக்கப்படுகிறது. ஆகவே தேர்தலில் பெரும்பான்மை பெறும் கட்சி ஆட்சி அமைக்கும் எனக் கூறலாம்.

மாநில அரசாங்கத்தின் செயல்பாடுகள்

சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அதன் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் வேண்டும். சட்டமன்றம்

8th_Civics_TM_Unit-1.indd 234 4/15/2019 4:13:17 AM

ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை கூடும். மாநிலத்திற்கான சட்டங்களை இயற்றுவது சட்டமன்றத்தின் முக்கிய பணி ஆகும். சட்டமன்றம் மாநிலப் பட்டியல் மற்றும் மத்தியப் பட்டியலில் உள்ள துறைகள் தொடர்பாக சட்டத்தை இயற்றலாம். எனினும் நெருக்கடி நிலை நடைமுறையில் உள்ளபோது சட்டமன்றம் தனது சட்டமியற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்த இயலாது.

மாநில சட்டமன்றம் அமைச்சரவையின் மீது கட்டுப்பாட்டினை செலுத்துகிறது. மாநில அமைச்சரவை சட்டமன்றத்திற்கு பொறுப்புள்ளதாகவும் மற்றும் பதில் அளிக்கவும் கடமைப்பட்டுள்ளது. அமைச்சரவையின் செயல்பாடுகளில் திருப்தி ஏற்படாவிட்டால் மாநில சட்டமன்றத்தில் ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானத்தை இயற்றி அமைச்சரவையை நீக்கம் செய்திடலாம். மாநில சட்டமன்றம் ஆனது மாநிலத்தின் நிதியைக் கட்டுப்படுத்துகிறது. நிதி மசோதாவை சட்டமன்றத்தில் மட்டுமே கொண்டுவர இயலும். சட்டமன்றத்தின் அனுமதி இல்லாமல் மாநில அரசாங்கம் வரியினை விதிக்கவோ, அதிகரிக்கவோ, குறைக்கவோ, விலகிக் கொள்ளவோ இயலாது. சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் பங்கேற்கின்றனர். மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் சட்டமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் பங்கு கொள்கின்றனர். அரசியலமைப்பைத் திருத்தும் சில நேர்வுகளில் சட்டமன்றம் பங்கு வகிக்கிறது. எனவே அரசாங்கமானது சட்டத்தை உருவாக்குதல், சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், நீதியை உறுதி செய்தல் ஆகிய மூன்று அடிப்படை பணிகளைக் கொண்டுள்ளது.

மாநில அரசாங்கத்தில் சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படுகின்றன?

நாட்டு மக்களுக்காக பல்வேறு வகையான விதிகள் மற்றும் சட்டங்கள்



8th_Civics_TM_Unit-1.indd 235 4/15/2019 4:13:17 AM

உருவாக்கப்படுகின்றன. உதாரணமாக நீங்கள் ஒரு துப்பாக்கியை உரிமம் இல்லாமல் வைத்துக் கொள்ள இயலாது அல்லது சட்டப்படி ஒரு பெண் 18 வயதிற்கு முன்பாகவும் அல்லது ஒரு ஆண் 21 வயதிற்கு முன்பாகவும் திருமணம் செய்து கொள்ள இயலாது. இத்தகைய விதிகளும் சட்டங்களும் சாதாரணமாக இயற்றப்பட்டவை அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் இதுபோன்ற சட்டங்களை உருவாக்குவதற்கு முன்பாகக் கவனமாக சிந்தித்து உள்ளது. இவை போன்ற பல்வேறு சட்டங்கள் மாநில மற்றும் மத்திய அரசாங்கத்தால் இயற்றப்படுகின்றன.

சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் மாநிலத்தில் உள்ள பல்வேறு பிரச்சனைகளான பொதுப்பணிகள், கல்வி, சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவை பற்றி விவாதிக்கின்றனர். சட்டமன்ற உறுப்பினர்களுக்கான துறைகளின் செயல்பாடுகளை தெரிந்துகொள்ள கேள்விகளை எழுப்பலாம் இதற்கு அந்தத்துறை சார்ந்த அமைச்சர் விடையளிக்க வேண்டும். சில நிகழ்வுகள் குறித்து சட்டமன்றம் சட்டங்களை இயற்றுகிறது. சட்டம் இயற்றும் முறை பின்வருமாறு:

சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

சட்டங்களை நடைமுறைப்படுத்துவது மாநில அமைச்சரவையின் பணியாகும். தமிழ்நாடு சட்டமன்றம் சென்னையில் அமைந்துள்ளது. ஒரு மாநிலத்தில் சட்டமன்றம் மற்றும் அமைச்சரவை பொதுவாக எங்கு செயல்படுகிறதோ அதுவே மாநிலத்தின் தலைநகரம் ஆகும்.

சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்த. மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வருவாய் அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், காவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்கள் என பல லட்சக்கணக்கான பணியாளர்கள் மாநில அரசாங்கத்தால் பணியமர்த்தப்பட்டிருக்–கின்றனர். அவ்வகையான அலுவலர்களுக்கு மாநில அரசாங்கம் ஊதியம் வழங்குகிறது. இவர்கள் மாநில அரசின் ஆணைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.



மாநில சட்டமன்றமும் சாதாரண அல்லது பண மசோதாக்களை நிறைவேற்றுவதில் பாராளுமன்றம் பின்பற்றும் நடைமுறைகளையே பின்பற்றுகிறது. சட்டமன்றபேரவை சட்டமன்ற மேலவையைக் காட்டிலும் அதிக அதிகாரம் கொண்டதாகும்.

மாநிலத்தின் நீதித்துறை

உயர் நீதி மன்றம்

மாநிலத்தில் உயரிய நீதி அமைப்பாக உயர் நீதிமன்றம் விளங்குகிறது. அரசியலமைப்பின் படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உயர் நீதிமன்றம் இருக்கும். எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களுக்கு பொதுவான ஒரு உயர்நீதிமன்றமும் இருக்கலாம். மாநில உயர்நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும், குடியரசுத் தலைவர் தேவைக்கு ஏற்ப அவ்வப்போது நியமனம் செய்யும் இதர நீதிபதிகளையும் கொண்டிருக்கும். உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை. குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியையும், மாநில ஆளுநரையும் கலந்தாலோசித்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார்.

உயர்நீதிமன்றத்தின் நீதிபதி பின்வரும் தகுதிகளை கட்டாயம் கொண்டிருத்தல் வேண்டும்.

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- இந்தியாவில் பத்தாண்டு காலம் நீதித்துறை அலுவலராக பணியாற்றி இருக்க வேண்டும்.
- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் வழக்குரைஞராக குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

உயர் நீதிமன்ற நீதிபதி 62 வயது வரை அப்பதவியில் இருப்பார். உயர்நீதிமன்ற நீதிபதி நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தை மற்றும் திறமை இன்மை ஆகியவற்றின் அடிப்படையில் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நீக்குவது போன்று நீக்கப்படலாம்.

8th_Civics_TM_Unit-1.indd 236 4/15/2019 4:13:18 AM

உயர்நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பணிகள்

- அடிப்படை உரிமைகள் மற்றும் இதர நோக்கங்களை வலியுறுத்த உயர்நீதிமன்றம் ஆட்கொணர்வு நீதிப் பேராணை, தகுதி முறை வினவும் நீதிப்பேராணை, தடை உறுத்தும் நீதிப்பேராணை, கட்டளையிடும் நீதிப்பேராணை மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்ய வலியுறுத்தும் நீதிப் பேராணை ஆகியவற்றைப் பிறப்பிக்கின்றன.
- ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் தனது அதிகார எல்லைக்குள் உள்ள ராணுவ நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் நீங்கலாக அனைத்து சார் நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை கண்காணிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
- சார் நிலை நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள உள்ள ஒரு வழக்கில் அதில் சட்ட முகாந்திரம் உள்ளது என உயர் நீதிமன்றம் திருப்தியுறும் போது இவ்வழக்கினை எடுத்து தானே முடிவு செய்யலாம்.
- உயர் நீதிமன்றம் மாநிலத்தில் உள்ள அனைத்து சார் நிலை நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.
- உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தைப் போலவே வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச் சான்றாக உள்ள பதிவுரு நீதிமன்றமாக விளங்குகிறது.
- நீதி நிர்வாகத்திற்காக ஒவ்வொரு மாநிலமும் பல்வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டமும் மாவட்ட நீதிமன்றத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும். மாவட்ட நீதிபதிகள் ஆளுநரால் நியமனம் செய்யப்படுகின்றனர். மேலே தெரிவித்த அதிகாரங்களை தனது எல்லைக்குள் செயல்படுத்தும் போது நீதிமன்றம் முழு அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் பாதுகாப்பு என்பது நீதிமன்றங்கள் சுதந்திரமாக செயல்படுவதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

மீள்பார்வை

- நம் நாட்டில் 29 மாநில அரசாங்கங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு மாநிலமும் தனது நிர்வாகத்தை மேற்கொள்ள ஓர் அரசாங்கத்தைக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் மாநில அரசின் தலைவராக ஆளுநர் இருப்பார் என அரசியலமைப்பு கூறுகிறது.
- மாநில அரசின் உயர் அதிகாரிகளை நியமிப்பதில் முதலமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார்.
- மாநில அரசாங்கத்தின் சட்டங்களை இயற்றுபவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என அழைக்கப்படுகின்றனர்.
- மாநிலத்தின் உயர்ந்த நீதி அமைப்பாக உயர் நீதிமன்றம் செயல்படுகிறது. அரசியலமைப்பின்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உயர் நீதிமன்றம் இருத்தல் வேண்டும்.

கலைச்சொற்கள்		
தொகுதி	Constituency	the body of voters who elect a representative for their area
அதிகார வரம்பு	Jurisdiction	power or authority to interpret and apply the law
சட்டமன்றம்	Legislature	an organized body having the authority to make laws for a political unit
பிரகடனம்	promulgate	announce widely known
தள்ளிவை	prorogues	to suspend or end a legislative session

8th_Civics_TM_Unit-1.indd 237 4/15/2019 4:13:18 AM

மதிப்பீடு

I சரியான விடையை தேர்வு செய்க

1. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?
   அ) குடியரசுத் தலைவர்
   ஆ) துணைக் குடியரசுத் தலைவர்
   இ) பிரதம மந்திரி
   ஈ) முதலமைச்சர்
2. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர்
   அ) ஆளுநர் ஆ) முதலமைச்சர்
   இ) சபாநாயகர் ஈ) உள்துறை அமைச்சர்
3. மாநில சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் அதிகாரம் பெற்றவர்
   அ) உள்துறை அமைச்சர்
   ஆ) குடியரசுத் தலைவர்
   இ) சபாநாயகர்
   ஈ)ஆளுநர்
4. உயர் நீதி மன்ற நீதிபதிகளை நியமிப்பதில் பங்கு பெறாதவர் யார்?
   அ) ஆளுநர்
   ஆ) முதலமைச்சர்
   இ) உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி
   ஈ) குடியரசுத் தலைவர்
5. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது
   அ) 62 ஆ) 64 இ) 65 ஈ) 58

II கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவில் உள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை _____ ஆகும்.
2. ஆளுநரின் பதவிக்காலம் _____ ஆண்டுகள் ஆகும்.
3. மாவட்ட நீதிபதிகள் _____ ஆல் நியமிக்கப்படுகின்றனர்.
4. ஆளுநர் ஒரு மாநிலத்தின் _____ ஆவார்.
5. ஒருவர் சட்டப்பேரவை உறுப்பினராக _____ வயது நிறைவடைந்–திருக்க வேண்டும்.

III. பொருத்துக.

1. ஆளுநர் – கீழவை
2. முதலமைச்சர் – பெயரளவுத் தலைவர்
3. சட்டமன்ற பேரவை – மேலவை
4. சட்டமன்ற மேலவை – உண்மையான தலைவர்

IV. சரியா / தவறா?

1. முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார்.
2. ஆளுநர் சட்ட மன்றத்திற்கு இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களை நியமிக்கிறார்.
3. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை.

V சரியான கூற்றைத் தேர்ந்தெடு

1. மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்கண்டவர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு பெறுகின்றனர்.
   i. குடியரசுத் தலைவர்
   ii. துணை குடியரசுத் தலைவர்
   iii. ராஜ்ய சபை உறுப்பினர்கள்
   iv. சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள்
   அ) i, ii & iii சரி ஆ) i மற்றும் iii சரி
   இ) I,iii மற்றும் iv சரி ஈ) I,ii,iii மற்றும் iv சரி

VI கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி.

1. மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.
2. மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினராவதற்கு உள்ள தகுதிகள் யாவை?
3. முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?
4. மாநில அமைச்சரவை குழு எவ்வாறு உருவாக்கப்படுகிறது?

8th_Civics_TM_Unit-1.indd 238 4/15/2019 4:13:18 AM

www.tntextbooks.in

அலகு – 2

குடிமக்களும் குடியுரிமையும்



கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றுக் கொள்வதன் வாயிலாக மாணவர்கள் கீழ்க்கண்ட அறிவினை பெறுகின்றனர்

- குடிமக்கள் மற்றும் குடியுரிமைக்கான பொருள் மற்றும் வரையறைகள்
- இந்திய அரசியலமைப்பு சட்டம்
- இந்தியக் குடியுரிமை பெறுதலும், நீக்குதலும்
- வெளிநாட்டுக் குடியுரிமையின் தன்மை
- குடிமக்களின் உரிமைகளும், பொறுப்புகளும்

HVUQYT

அறிமுகம்

ஒரு நாட்டின் அரசாங்கத்தைப் பற்றியும், மக்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றியும் படிக்கும் இயல் குடிமையியல் ஆகும். குடிமகன் (Citizen) என்ற சொல் 'சிவிஸ்' (Civis) என்னும் இலத்தீன் வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் பண்டைய ரோமாபுரியில் இருந்த நகர நாடுகளில் 'குடியிருப்பாளர்' என்பதாகும். நகர நாடுகள் அமைப்புகள் மறைந்த பின்னர் இச்சொல் நாடுகளின் உறுப்பினர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. ஒரு நாட்டின் குடிமக்கள் அனைத்து விதமான குடியியல், அரசியல் உரிமைகளை அனுபவிக்க தகுதி உடையவர்கள் ஆவர்.

குடிமகனும் குடியுரிமையும்

ஒரு அரசால் வழங்கப்பட்ட சட்ட உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிப்பவரும், அதே வேளையில் நாட்டின் சட்டங்களை மதித்து நடப்பவரும், அவருக்கான கடமைகளை நிறைவேற்றுபவருமே அந்நாட்டின் குடிமகன் ஆவார்.

குடியுரிமை என்பது ஒரு குடிமகன் அவர் விரும்பும் காலம் வரையில் அந்நாட்டில் சட்டப்படியாக வசிக்கும் உரிமையை வழங்குதலே ஆகும்

குடியுரிமையின் வகைகள்

குடியுரிமை இரண்டு வகைப்படும்

1. இயற்கை குடியுரிமை: பிறப்பால் இயற்கையாக பெறக்கூடிய குடியுரிமை
2. இயல்புக் குடியுரிமை; இயல்பாக விண்ணப்பித்து பெறும் குடியுரிமை

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியக் குடியுரிமைச் சட்டம், 1955

இந்தியக் குடிமகன் தன்னுடைய குடியுரிமையை பெறுதலையும், நீக்குதலையும் பற்றிய விதிகளை இச்சட்டம் கூறுகிறது.

குடியுரிமையை பெறுதல்

1955 ஆம் ஆண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டம் குடியுரிமை பெறுவதற்கான ஐந்து வழிமுறைகளை பரிந்துரைக்கிறது. அவைகள் பின்வருவனவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

8th_Civics_TM_Unit-2.indd 240 4/15/2019 4:16:17 AM

1. பிறப்பால் குடியுரிமை பெறுதல்



- இக்குடியுரிமை பிறப்பிடத்தால் தீர்மானிக்கப்படுகிறது. 1950 ஜனவரி 26 முதல் 1987 ஜூலை வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் எந்த நாட்டவராக இருப்பினும் அவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர்.
- 1987 ஜூலை 1 மற்றும் அதற்குப் பின் இந்தியாவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் ஒருவர் அச்சமயத்தில் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 2004 டிசம்பர் 3 மற்றும் அதற்குப் பின் இந்தியாவில் பிறந்தவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர். அல்லது பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடிமகனாகவும் மற்றொருவர் சட்ட விரோதமாக இந்தியாவிற்குள் இடம்பெயர்ந்தவராக இல்லாதிருந்தால் குடியுரிமை பெறுகின்றனர்.

2. வம்சாவளியால் குடியுரிமை பெறுதல்

- 1950 ஜனவரி 26 முதல் 1992 டிசம்பர்10 க்கு முன்னர் வெளிநாட்டில் பிறந்திருந்தாலும் அவருடைய தந்தை இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் அவர் வம்சாவளி மூலம் இந்திய குடியுரிமையைப் பெறுகிறார்.
- 1992 டிசம்பர் 10 மற்றும் அதற்கு பின்னர் வெளிநாட்டில் பிறந்தவர்களின் பெற்றோரில் எவரேனும் ஒருவர் அச்சமயத்தில் இந்திய குடிமகனாக இருந்தால் அவர் இந்தியக் குடியுரிமையைப் பெறுகிறார்.
- 2004 டிசம்பர் 3 ம் நாள் முதல் வெளிநாட்டில் பிறந்தவர்கள் அவர்களுடைய பிறப்பினை ஒரு வருடத்திற்குள் இந்திய தூதரகத்தில் பதிவு செய்யவில்லை எனில் இந்திய வம்சாவளிக் குடிமகனாக முடியாது.

3. பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல்

- இந்திய வம்சாவளியைச் சார்ந்த ஒரு நபர் எந்த ஒரு நாட்டில் வசித்தாலும் அல்லது பிரிக்கப்படாத இந்தியாவிற்கு வெளிப்பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் பதிவு செய்தலின் மூலம் குடியுரிமை பெறலாம்.
- இந்தியக் குடிமகனை திருமணம் செய்த ஒருவர் பதிவின் மூலம் விண்ணப்பிக்கும் முன் ஏழு ஆண்டுகள் இந்தியாவில் வசித்தவராக இருத்தல் வேண்டும்.

4. இயல்புக் குடியுரிமை

ஒருவர் விண்ணப்பிப்பதன் மூலம் மத்திய அரசு அவருக்கு இயல்பு குடியுரிமைக்கான சான்றிதழை வழங்குகிறது.

- எந்த ஒரு நாட்டிலும் குடிமகனாக இல்லாத ஒரு இந்தியர் அவர் வசிக்கும் நாட்டின் குடிமகனாவதை தடுக்கும் பொருட்டு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது.
- வெளிநாட்டுக் குடியுரிமையை ஒருவர் துறக்கும் பட்சத்தில் அவருக்கு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது.
- ஒருவர் இந்தியாவில் வசிக்கும் பட்சத்தில் அல்லது இந்திய அரசுப்பணியில் இருக்கும் பட்சத்தில்(அ)ஆண்டுமுழுவதும் இந்தியாவில் தங்கியிருக்கும் பட்சத்தில் இக்குடியுரிமையை பெறுகிறார்.
- நல்ல பண்புகளையும் இந்திய அரசியலமைப்பில் எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு மொழியில் (தற்போது 22 மொழிகள்) போதிய அறிவினையும் பெற்ற ஒருவர் இயல்புக் குடியுரிமையைப் பெற தகுதியுடையவராவார்.

5. பிரதேசங்களை இணைத்தல் மூலம் பெறும் குடியுரிமை

எந்தவொரு வெளிநாட்டுப் பகுதியும் இந்தியாவுடன் இணையும் போது, இந்திய அரசு அப்பகுதி மக்களை இந்திய குடிமக்களாக ஏற்றுக்கொள்கிறது.அந்த குறிப்பிட்ட நாளில் இருந்து அவர்கள் இந்திய குடிமக்களாகின்றனர். உதாரணமாக பாண்டிச்சேரி இந்தியாவுடன் இணைந்தபொழுது,இந்தியஅரசுஅம்மக்களுக்கு 1962ல் இந்தியக் குடியுரிமைக்கான ஆணையை வழங்கியது.

இந்தியக் குடியுரிமையை இழத்தல்

குடியுரிமை இழப்பு பற்றிய மூன்று வழிமுறைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் இரண்டாவது பகுதியின் 5 முதல் 11 வரையிலான விதிகள் குறிப்பிடுகின்றன.

8th_Civics_TM_Unit-2.indd 241 4/15/2019 4:16:17 AM

குடியுரிமையை துறத்தல் (தானாக முன்வந்து குடியுரிமையைத் துறத்தல்)

ஒருவர் வெளி நாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரின் இந்தியக் குடியுரிமை அவரால் கைவிடப்படுகிறது.

குடியுரிமை முடிவுக்கு வருதல் (சட்டப்படி நடைபெறுதல்)

ஒர் இந்தியக் குடிமகன் தாமாக முன்வந்து வெளிநாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரது இந்தியக் குடியுரிமை தானாகவே முடக்கப்படுகிறது.

குடியுரிமை மறுத்தல் (கட்டாயமாக முடிவுக்கு வருதல்)

மோசடி, தவறான பிரதிநிதித்துவம் அல்லது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக செயல்படுதல் ஆகியவற்றின் மூலம் இந்தியக் குடியுரிமையை பெறும் ஒருவரின் குடியுரிமையை இந்திய அரசு ஓர் ஆணை மூலம் இழக்கச் செய்கிறது.



நாட்டுரிமை மற்றும் குடியுரிமை

பூர்வீகம், பிறப்பு மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நாட்டினர் இயல்பாக பெறும் நிலை நாட்டுரிமை எனப்படும். சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு ஒரு நாட்டின் அரசாங்கத்தால் தனி ஒருவருக்கு வழங்கப்படுவது குடியுரிமை எனப்படும்.

ஒருவர் தனது நாட்டுரிமையை மாற்ற முடியாது. ஆனால் தனது குடியுரிமையை மாற்ற முடியும்.

ஒற்றைக் குடியுரிமை

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நமக்கு ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது. அதுவே இந்தியக் குடியுரிமை எனப்படுகிறது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய கூட்டாட்சி அமைப்பு கொண்டுள்ள நாடுகளில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்படுகிறது. (தேசிய குடியுரிமை, மற்றும் மாநில குடியுரிமை)

இந்திய குடிமக்கள் அனைவரும் இந்தியாவில் எங்கு பிறந்திருந்தாலும், வசித்தாலும் மாநில வேறுபாடின்றி குடியுரிமைக்கான அனைத்து அரசியல் மற்றும் குடிமையியல் உரிமைகளை அனுபவிக்கின்றனர்.



முன்னுரிமை வரிசைப்படி குடியரசு தலைவர் நாட்டின் முதல் குடிமகன் ஆவார்.

இந்தியாவில் வசிக்கும் வெளிநாட்டுக் குடியுரிமை பெற்றவர்



வெளிநாடு வாழ் இந்தியர் – NRI (Non Resident Indian)
இந்தியக் கடவுச் சீட்டினை (Passport) பெற்று வெளிநாட்டில் வசிக்கும் இந்தியக் குடிமக்கள்.

இந்திய பூர்வீக குடியினர் – PIO (Person on Indian Origin)
இந்தியக் குடியுரிமை உடைய மூதாதையர்களைக் கொண்ட, வெளிநாட்டில் குடியுரிமை (பாகிஸ்தான், வங்காளதேசம், ஸ்ரீலங்கா, பூடான், ஆப்கானிஸ்தான், சீனா, நேபாளம் நீங்கலாக) பெற்றிருக்கும் ஒருவர் இந்திய பூர்வீக குடியினர் ஆவர். 2015 ஜனவரி 9 முதல் PIO முறை இந்திய அரசால் திரும்பப் பெறப்பட்டு OCI முறையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் குடியுரிமையை கொண்ட இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவர் (Overseas citizen of India Card Holder)
இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டு குடிமகன் (பாகிஸ்தான், வங்காளதேசம் நீங்கலாக) காலவரையின்றி இந்தியாவில் வசிப்பதற்கும், பணி செய்வதற்கும் OCI அட்டை பெறுகிறார். இவர்களுக்கு இந்தியாவில் வாக்களிக்கும் உரிமை இல்லை.

இந்திய குடிமக்களின் உரிமைகளும், கடமைகளும்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் கீழ்க்கண்ட உரிமைகளை நமக்கு வழங்குகிறது

- அடிப்படை உரிமைகள்
- மக்களவை தேர்தலுக்கும், மாநில சட்டமன்ற தேர்தலுக்கும் வாக்களிக்கும் உரிமை
- இந்திய அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உரிமை. இந்திய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்றங்களில் உறுப்பினராவதற்கான உரிமை.

இந்திய அரசியலமைப்பு 42 வது சட்டத்திருத்தத்தின் படி இந்தியக் குடிமக்களுக்கான அடிப்படை கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

8th_Civics_TM_Unit-2.indd 242 4/15/2019 4:16:18 AM

(உதாரணமாக: நேர்மையாக வரி செலுத்துதல், மற்றவர்களின் கருத்துக்களுக்கும், நம்பிக்கைகளுக்கும்,உரிமைகளுக்கும் மதிப்பளித்தல், நாட்டின் பாதுகாப்பிற்காகச் செயலாற்றுதல், சட்டங்களை மதித்தல் மற்றும் கீழ்படிதல்.)

ஒரு நாட்டின் குடிமக்கள் அல்லாதவர்களை இரண்டு வகையினராக நாம் அழைக்கின்றோம் அவை :

1. அந்நியர் (Alien)

ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகனாக அல்லாத அனைவரும் அந்நியர் எனப்படுவர்.

உதாரணம் : வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டு மாணவர்கள்

2. குடியேறியவர் (Immigrant)

ஒரு நாட்டில் எவ்வித தடையும் இன்றி நிரந்தரமாக வசிப்பதற்கும், பணி புரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் குடியேறியவர் எனப்படுகிறார்.

நற்குடிமகனின் பண்புகள்

- அரசியலமைப்புச் சட்டத்தின் படி நடத்தல்
- சட்டத்துக்கு கீழ்படிதல்
- சமுதாயத்திற்கு தன் பங்களிப்பை ஆற்றுதல் மற்றும் குடிமைப் பணியை செயலாற்றுதல்.
- நற்பண்புகளையும், நீதியையும் நிலைநாட்டுதல்
- வேற்றுமைகளை மறந்து நடத்தல்

உலகளாவிய குடியுரிமை

ஒரு குறிப்பிட்ட நாட்டின் குடிமகன் என்பதை விட உலகளாவிய சமுதாயத்தில் ஒவ்வொருவரும் அங்கம் என்பதே உலகளாவிய குடியுரிமை ஆகும். உலக மக்கள் அனைவருக்கும் உரிமைகளும், குடிமைப் பொறுப்புகளும் இயற்கையாகவே உள்ளன. புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் இன்றைய இளைஞர்களின் ஈடுபாட்டையும், பங்களிப்பையும் பெறுவதே உலகளாவிய குடியுரிமையின் அடிப்படை ஆகும்.





வெளிநாடு வாழ் இந்தியர் தினம் (பிரவாசி பாரதிய தினம்)

இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரவாசி பாரதிய தினம் கொண்டாடப்படுகிறது.இந்த தினம் இந்தியாவின் வளர்ச்சிக்காக வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களின் பங்களிப்பினை பெறும் வகையில் கொண்டாடப்படுகிறது. இது மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வருகை புரிந்த தினமான ஜனவரி – 9 – ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

முடிவுரை

நமது அரசியலமைப்புச் சட்டம் ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது. இதன் மூலம் இந்திய மக்கள் அனைவருக்கும் சம உரிமையை வழங்குகிறது. ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்கும் பொருட்டு, இந்திய மக்களிடையே சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் நமது அரசியலமைப்பு ஊக்குவிக்கிறது.

மீள்பார்வை

- ஒரு அரசால் அளிக்கப்பட்ட சட்ட உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்கும் ஒருவர் குடிமகன் எனப்படுகிறார்.

8th_Civics_TM_Unit-2.indd 243 4/15/2019 4:16:18 AM

- இந்திய அரசியலமைப்பின் பகுதி – II 5 முதல் 11 வரையிலான விதிகள் இந்தியக் குடியுரிமை பற்றி குறிப்பிடுகிறது.
- 1955 ஆம் ஆண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டம், ஒருவர் இந்தியக் குடியுரிமையைப் பெறுதலையும், நீக்குதலையும் பற்றி குறிப்பிடுகின்றது.
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒற்றைக் குடியுரிமையை நமக்கு வழங்குகிறது.

கலைச்சொற்கள்		
முயன்று அடைதல்	**acquisition**	act of acquiring
திருத்தம்	**amendment**	a minor change
அரசியலமைப்புச் சட்டம்	**Constitution**	Law determining the fundamental political principles of a government
சகோதரத்துவம்	**fraternity**	brotherhood
குடியிருப்பவர்	**Resident**	inhabitant

மதிப்பீடு

I. சரியான விடையை தேர்வு செய்க

1. கீழ்க்கண்டவைகளில் எந்த ஒன்று இந்திய குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?

   அ) பிறப்பின் மூலம்

   ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம்

   இ) வம்சாவழியின் மூலம்

   ஈ) இயல்பு குடியுரிமை மூலம்

2. அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதி மற்றும் பிரிவுகள் குடியுரிமையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன?

   அ) பகுதி II

   ஆ) பகுதி II பிரிவு 5 – 11

   இ) பகுதி II பிரிவு 5 – 11

   ஈ) பகுதி I பிரிவு 5 – 11

3. இந்தியாவின் முதல் குடிமகன் யார்?

   அ) பிரதமர்

   ஆ) குடியரசுத் தலைவர்

   இ) முதலமைச்சர்

   ஈ)இந்திய தலைமை நீதிபதி

II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ஒரு நாட்டின் _____, அந்நாடு வழங்கும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளைப் பெறத் தகுதியுடையவர் ஆவார்.
2. இந்திய அரசியலமைப்புச் சட்டம் _____ குடியுரிமையை மட்டும் வழங்குகிறது.
3. இந்தியக் கடவுச் சீட்டினைப் பெற்று (Passport) வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமகன் _____ என அழைக்கப்படுகிறார்.
4. மக்கள் அனைவரும் உரிமைகள் மற்றும் _____ யும் இயற்கையாக பெற்றிருக்கின்றனர்.
5. _____ என்பது இளைஞர்களை நவீன சமுதாயத்தை வடிவமைப்பதில் பங்கேற்க செய்யும் ஒரு யோசனை ஆகும்.

III. சரியா ? தவறா ? குறிப்பிடுக

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது.
2. வெளிநாட்டுக் குடியுரிமையை கொண்டு இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவருக்கு வாக்குரிமை உண்டு.
3. அடிப்படை உரிமைகளை இந்தியக் குடிமகன் அனுபவிக்க நமது அரசியலமைப்புச் சட்டம் உத்திரவாதம் அளிக்கிறது.
4. நாட்டுரிமையை மாற்ற இயலும். ஆனால் குடியுரிமையை மாற்ற இயலாது.

8th_Civics_TM_Unit-2.indd 244 4/15/2019 4:16:18 AM

IV. கீழ்க்கண்ட கூற்றுகளில் பொருத்தமான விடைகளை தேர்வு செய்க

1. ஒரு இந்தியக் குடிமகனின் குடியுரிமை கீழ்க்கண்ட எதனால் முடிவுக்கு வருகிறது.
   i) ஒருவர் வேறு நாட்டுக் குடியுரிமையை பெறும் போது
   ii) பதிவு செய்வதன் மூலம்
   iii) தவறான மோசடி வழிகளில் ஒருவர் குடியுரிமை பெற்றார் என்று அரசு கருதும் போது
   iv) போரின் போது எதிரி நாட்டிடம் இந்திய குடிமகன் வணிகம் செய்யும் போது
   அ. I மற்றும் II சரி
   ஆ. I மற்றும் III சரி
   இ. I, II, IV சரி
   ஈ. I, II, III சரி
2. **கூற்று:** 1962 ஆம் ஆண்டு பாண்டிச்சேரி இந்திய யூனியனுடன் இணைந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் இந்திய குடிமக்களாயினர்.
   காரணம்: 1955 இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் படி பிரதேசங்களை இணைத்தல் என்பதன் அடிப்படையில் அவர்கள் இந்திய குடிமக்களாகினர்
   அ. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
   ஆ. காரணம் தவறு
   இ. கூற்று தவறு ஆனால் காரணம் சரி
   ஈ. காரணம், கூற்று இரண்டும் தவறு

V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி

1. குடியுரிமையின் வகைகளை குறிப்பிடுக.
2. ஓர் இந்தியக் குடிமகன் நமது நாட்டில் அனுபவிக்கும் உரிமைகள் யாவை?
3. நற்குடிமகனின் மூன்று பண்புகளை குறிப்பிடுக
4. இந்தியக் குடிமகனாவதற்குரிய ஐந்து வழிமுறைகளை எழுதுக?
5. 1955 ஆம் ஆண்டு இந்திய குடியுரிமைச் சட்டம் பற்றி நீவிர் அறிவது யாது?

VI. கீழ்க்கண்டவைகளுக்கு விடையளி

1. ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது?

VII. மாணவர்களுக்கான செயல்பாடு

அட்டவணைப்படுத்துக:

அ. நல்ல குடிமகனாக வகுப்பறையிலும், வகுப்பறைக்கு வெளியிலும் நீவிர் எவ்வாறு நடந்து கொள்வாய் என அட்டவணைப்படுத்துக

ஆ. நல்ல குடிமகனாக உன்னுடைய பொறுப்புகள் எவை (ஏதேனும் மூன்று கருத்துக்களை எழுதுக)

வீட்டில்:–	பள்ளியில்:–
உனக்கு நீயே:–	சுற்றுச்சூழலுக்கு:–



இணையச் செயல்பாடு

குடிமக்கள் மற்றும் குடியுரிமை

படிநிலைகள்

- கீழ்க்காணும் உரலி/விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி உள்நாட்டு விவகாரங்கள் அமைச்சகத்தின் அதிகாரப்பூர்வ இணையப் பக்கத்திற்குச் செல்க.
- "Act/Rules/Regulations" என்பதைத் தேர்வு செய்து இந்தியக் குடியுரிமைப் பெறுவதற்கான அரசியலமைப்பு நடைமுறைகளை அறிந்து கொள்க.
- திரையின் கீழ்ப்பகுதியில் காணப்படும் "Required Documents" என்பதைத் தேர்வு செய்து முக்கிய ஆவணங்கள் பற்றித் தெரிந்து கொள்க.
- "Sample Forms" என்பதைச் சொடுக்கி குடியுரிமைப் பெற விண்ணப்பிக்கத் தேவையான படிவங்களின் மாதிரிகளை அறிந்து கொள்க.

B357_8_SOCIAL_TM

உரலி:

https://indiancitizenshiponline.nic.in/Home.aspx

8th_Civics_TM_Unit-2.indd 245 4/15/2019 4:16:18 AM

அலகு - 2

மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்



கற்றல் நோக்கங்கள்

- மனித உரிமைகள் என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ளுதல்
- உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் உள்ள தொடர்பினை புரிந்து கொள்ளுதல்
- மனித உரிமைகளின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்ளுதல்
- மனித உரிமைகள் அனைவருக்கும் உரியது என்பதை பற்றி புரிந்து கொள்ளுதல்
- 1948இல் நடைமுறைப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய அறிவிப்பின் பொருள் மற்றும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்

A5D2F9

அறிமுகம்

பிறப்பால் அனைவரும் சமம். உலகில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தன் விருப்பப்படி வாழ உரிமை உண்டு. மனித உரிமைகளானது தனிநபர்கள் மற்றும் சமூகம் தொடர்பானவை. மனித உரிமைகள் மக்கள் சுதந்திரமாக மற்றும் விருப்பப்படி வாழ்வதை உறுதிசெய்வதுடன் இயல்பாக பெறும் அனைத்து உரிமைகளையும் குறிப்பிடுகிறது. மக்களின் சமஉரிமைகளை ஒவ்வொரு நாடும் உறுதி செய்கிறது.

மனித உரிமைகள் என்றால் என்ன?

மனித உரிமைகள் என்பது இனம், பாலினம், தேசிய இனம், இனக்குழுக்களின் தன்மை, மொழி மற்றும் சமய வேறுபாடின்றி அனைத்து மனிதர்களுக்குமான இயல்பான உரிமைகள் ஆகும்.



மனித உரிமைகள் என்ற கருத்து எங்கிருந்து ஆரம்பித்தது?

அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் தொகுப்பானது ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் வேரூன்றியிருந்தது.

அ) எழுதப்பட்ட மனித உரிமை ஆவணங்களின் முன்னோடி

மகா சாசனம் (The Magna Carta), 1215, **இங்கிலாந்து** – மக்களுக்கு புதிய உரிமைகளை வழங்கியதுடன் அரசரை சட்டத்திற்கு உட்படுத்தியது.

உரிமை மனு (The Petition of Right), 1628, **இங்கிலாந்து** – மக்கள் உரிமைகளின் தொகுப்பு.

ஹேபியஸ் கார்பஸ் சட்டம், 1679, இங்கிலாந்து – மக்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான சட்டம்.

ஆங்கில உரிமைகள் மசோதா, 1689 – சில அடிப்படை சமூக / குடிமக்கள் உரிமைகளை அமைத்தல்.

மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பற்றிய பிரான்ஸ்சின் அறிவிப்பு, 1789 – சட்டத்தின் கீழ் அனைத்து குடிமக்களும் சமம் என்று கூறும் பிரான்சின் ஆவணம்.

அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் மற்றும் உரிமைகள் மசோதா, 1791 – குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது.

8th_Civics_TM_Unit-2_Term 2.indd 156 23-08-2019 09:54:34

ஆ) ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம்

மனித உரிமைகள் பற்றிய சிந்தனை இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வலுவாக எழுச்சி பெற்றது. இப்போர் கற்பனை செய்ய முடியாத வகையில் மனித உரிமை மீறலுக்கு வழிவகுத்தது. போர்க் காலங்களில் மனித உயிர்கள் அதன் மதிப்பினை இழந்தன. மேலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழ்க்கையின் இறுதிவரை கடுமையாக போராட வேண்டியிருந்தது. தனிநபர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் போதுமானதாக இல்லை என்பதை இரண்டாம் உலகப் போரின் போது நடந்த கொடுமைகள் தெளிவுபடுத்தின. உலகின் பல பகுதிகளில் பல்வேறு காரணங்களால் மனித உரிமைகள் மறுக்கப்பட்டன மற்றும் நீக்கப்பட்டன. இது சில நாட்டின் அரசாங்கத்தால் மட்டுமே மனித உரிமைகளை பாதுகாக்க முடியாது என்பதை நிரூபித்தது. வாழ்க்கை, சுதந்திரம், உணவு, இருப்பிடம், தேசம் ஆகியவை நியாயமற்ற முறையில் மறுக்கப்படமாட்டாது என்பதை மக்கள் உறுதிப்படுத்த விரும்பினர். 1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனச் சட்டம் உருவாக்கப்பட்ட சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் மக்களின் இத்தகைய விருப்பங்கள் ஒரு முக்கியப் பங்கினை வகித்தன. இச்சூழ்நிலையில் 1945ஆம் ஆண்டு அக்டோபர் 24ஆம் நாள் நிறுவப்பட்ட அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பிரச்சனையில் கவனம் செலுத்தியது. அமைதி மற்றும் பாதுகாப்பு, மேம்பாடு, மனிதாபிமான உதவி மற்றும் சமூக, பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அனைத்துக் கொள்கைகளிலும் திட்டங்களிலும் முக்கிய கருப்பொருளாக இந்த மனித உரிமைகள் விளங்குகின்றன.


மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு – முகவுரை

மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் அறிவாற்றலையும் மனசாட்சியையும் இயற்பண்பாகக் கொண்டவர்களாகவும் எல்லா மக்களிடையேயும் பொதுவான சகோதரத்துவத்தின் உணர்வை வளர்க்க கடமைப்பட்டவர்களும் ஆவர்.

இ) மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு (UDHR)

ஐக்கிய நாடுகள் சபையின் மிகப்பெரிய சாதனைகளுள் ஒன்று மனித உரிமைகளுக்கான சட்டத்தை உருவாக்கியதாகும். இந்த இலக்குகளை அடைவதற்காக ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைக்கான ஓர் ஆணையத்தை நிறுவியது. எலினார் ரூஸ்வெல்டின் (முன்னாள் அமெரிக்க அதிபர் பிராங்களின் டி.ரூஸ்வெல்டின் மனைவி) வலுவான தலைமையால் வழிநடத்தப்பட்ட ஆணையம் உலகின் கவனத்தை ஈர்த்தது. இறுதியாக உலக மனித உரிமைகள் அறிவிப்பு ஐ.நா. பொதுச்சபையால் 1948இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும். இந்த அறிவிப்பு பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் ஐ.நா. பொதுச்சபையால் 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. (பொதுச்சபை தீர்மானம் 217A). இதை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இது 1950ஆம் ஆண்டிலிருந்து வழக்கமாக

சைரஸ் சிலிண்டர் கி.மு.(பொ.ஆ.மு.) 539



பண்டைய பாரசீகத்தின் முதல் மன்னரான மகா சைரஸ், அடிமைகளை விடுவித்து மக்கள் அனைவரும் தங்கள் சொந்த மதத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு என்று அறிவித்தார். இன சமத்துவத்தை நிலைநாட்டினார். மேற்கூறியவைகளும், மற்ற ஆணைகளும் கியூனிபார்ம் எழுத்துக்களில் அக்காடியன் மொழியில் சிலிண்டர் வடிவிலான சுட்ட களிமண்ணில் பதிவு செய்யப்பட்டன. இது ஐக்கிய நாடுகள் சபையின் ஆறு அலுவல் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவை உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் முதல் நான்கு விதிகளுக்கு இணையாக உள்ளன.

8th_Civics_TM_Unit-2_Term 2.indd 157 23-08-2019 09:54:34

கடைப்பிடிக்கப்படுகிறது. இது மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் கொள்கைகள் பெரும்பாலான நாடுகளின் (185 நாடுகளுக்கும் மேல்) அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. உலக மனித உரிமைகள் அறிவிப்பு 500க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதுவே உலகில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட ஆவணம் ஆகும்.

மனித உரிமைகள் கொண்டுள்ள அடிப்படை மதிப்புகள்

அ. கண்ணியம்: வாழ்வதற்கான உரிமை, ஒருமைப்பாட்டிற்கான உரிமை, கட்டாய தொழிலாளர் முறை, அடிமை முறை, இழிவான தண்டனை ஆகியவற்றிற்கான தடை.

ஆ. நீதி: நேர்மையான விசாரணைக்கான உரிமை, குற்றத்திற்கு ஏற்றாற்போல் தண்டனை, ஒரே குற்றத்திற்காக ஒன்றுக்கு மேற்பட்ட முறை விசாரணைக்குட்படுத்தாத உரிமை.

இ. சமத்துவம்: சட்டத்தின் முன் அனைவரும் சமம். இனம், மதம், பாலினம், வயது, திறமை மற்றும் இயலாமை ஆகியவற்றில் பாகுபாடின்மை.

மனித உரிமையின் அடிப்படைப் பண்புகள்

இயல்பானவை: அவை எந்தவொரு நபராலும் அதிகாரத்தாலும் வழங்கப்படுவதில்லை.

அடிப்படையானவை: இந்த அடிப்படை உரிமைகள் இல்லையென்றால் மனிதனின் வாழ்க்கையும், கண்ணியமும் அர்த்தமற்றதாகிவிடும்.

மாற்ற முடியாதவை: இவைகள் தனிநபரிடம் இருந்து பறிக்க முடியாதவைகள் ஆகும்.

பிரிக்க முடியாதவை: மற்ற உரிமைகளை ஏற்கனவே அனுபவித்துக் கொண்டிருந்தாலும் கூட இந்த அடிப்படை உரிமைகளை மறுக்க முடியாது.

உலகளாவியவை: இந்த உலகளாவிய உரிமைகள் ஒருவரின் தோற்றம் அல்லது நிலையைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் இந்த உரிமைகள் பொருந்தும். இந்த உரிமைகள் தேசிய எல்லையைத் தாண்டி அனைத்து நாடுகளிலும் அமல்படுத்தப்படுகின்றன.

சார்புடையவை: இவைகள் ஒன்றுக்கொன்று சார்புடையவைகள் ஆகும். ஏனென்றால் ஒரு உரிமையைப் பயன்படுத்தும் போது மற்றொன்றை உணராமல் இருக்க முடியாது.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் நாள் உலக மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. மனித உரிமைகளை உலக அளவில் அறிவித்த பெருமை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையையே சாரும்.

மனித உரிமைகளின் வகைகள்

மனித உரிமைகள் பிரகடனத்தில் 30 சட்டப்பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன. இந்த உரிமைகள் ஐந்து முதன்மைப் பிரிவுகளாக விரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவைகள் பின்வருமாறு.

அ. வாழ்வியல் உரிமைகள்

வாழ்வியல் (சிவில்) உரிமைகள் என்ற சொல் ஒவ்வொரு நபருக்கும் அரசாங்கத்தின் சட்டங்களால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுகிறது. இந்த உரிமைகள் அனைவருக்கும் சமமாக கருதப்பட வேண்டியவைகள் ஆகும். இதில் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம், அடிமைத் தளையிலிருந்து விடுபடுதல், நியாயமற்ற முறையில் கைது செய்யாமை ஆகிய உரிமைகள் அடங்கும்.

ஆ. அரசியல் உரிமைகள்

அரசாங்கத்தை அமைப்பதிலும், நிர்வகிப்பதிலும் அரசியல் உரிமைகள் பயன்படுத்தப்படுகின்றன. வாழ்வியல் உரிமைகளும், அரசியல் உரிமைகளும் நவீன மக்களாட்சியுடன் நேரடி தொடர்புள்ளவைகள் ஆகும். அவைகள் அரசியல் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து தனிநபரை பாதுகாக்கின்றன. மேலும் ஒவ்வொரு தனிநபரையும் தங்கள் நாட்டின் அரசியல் செயல்பாட்டில் பங்கேற்க இவ்வுரிமைகள் வழிவகுக்கிறது. கருத்துச் சுதந்திரம், அமைதியாக கூட்டம் நடத்துதல், தன் நாட்டின் அரசாங்கத்தில் பங்குகொள்ளும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, பேச்சுரிமை மற்றும் தகவல்களைப் பெறும் உரிமை ஆகியவைகள் அரசியல் உரிமைகளுள் அடங்கும்.

8th_Civics_TM_Unit-2_Term 2.indd 158 23-08-2019 09:54:34

இ. சமூக உரிமைகள்

ஒரு தனிநபர் சமுதாயத்தில் முழுமையாக பங்கேற்பது அவசியமானது ஆகும். சமூக உரிமைகள் என்பது வாழ்க்கைத் தரத்திற்கு தேவையான கல்வி, சுகாதாரம், உணவு, உடை, தங்குமிடம் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகிய உரிமைகளை உள்ளடக்கியதாகும்.

ஈ. பொருளாதார உரிமைகள்

பொருளாதாரத்தில் பங்கேற்பதற்கான உரிமை என்பது அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் விரும்பத்தக்க வேலைக்குச் செல்வதாகும். ஒவ்வொரு தனிநபரும் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய நிலைமை இருப்பதை உறுதி செய்கிறது. வேலைவாய்ப்பு, நியாயமான ஊதியத்திற்கான உரிமைகள், நியாயமான வேலை நேரம், தங்குமிடம், கல்வி, போதுமான வாழ்க்கைத் தரம், மற்றும் சொத்துரிமை ஆகிய உரிமைகள் இதில் அடங்கும்.

உ. கலாச்சார உரிமைகள்

சமயச்சுதந்திரம், மொழியைப் பேசுவதற்கான உரிமை மற்றும் சமூகத்தின் கலாச்சார வாழ்க்கையை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமை, அறிவியல் முன்னேற்றத்தில் பங்கு பெறுவதற்கான உரிமை, தார்மீக மற்றும் பொருள் ஆர்வத்தைப் பாதுகாக்கும் உரிமை ஆகியவைகள் கலாச்சார உரிமைகள் ஆகும்.

மனித உரிமைகள் ஆணையம்

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக ஓர் ஆணையத்தை அமைக்க ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அங்கமான பொருளாதார மற்றும் சமூக சபை (ECOSOC) அதிகாரம் பெற்றது. மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய மற்றும் மாநில அளவிலான மனித உரிமை ஆணையங்கள் நிறுவப்பட்டன.


அ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC)

இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) 1993ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் நாள் நிறுவப்பட்டது. இது சுதந்திரமான, சட்டப்பூர்வமான, அரசியலமைப்பு சாராத ஓர் அமைப்பாகும். இதன் தலைமையகம் புதுடெல்லியில் அமைந்துள்ளது. தேசிய மனித உரிமைகள் ஆணையம் என்பது ஒரு தலைவரையும் பிற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும். தலைவரையும் உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் (அ) 70 வயது வரை இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரை பதவியில்

மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகளுக்கு இடையேயான வேறுபாடுகள்

மனித உரிமைகள்	வாழ்வியல் (சிவில்) உரிமைகள்
மனித உரிமைகளானது தேசியஇனம், பாலினம், இன, மதம் மற்றும் வயது ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் எல்லா இடங்களிலும் அனைவருக்கும் உரித்தானது.	சிவில் உரிமைகள் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டில் அல்லது மாநிலத்தில் குடியுரிமை பெறுவதன் மூலம் ஒருவர் அனுபவிக்கும் உரிமைகள் ஆகும்.
மனித உரிமைகள் உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் மற்றும் அனைத்து நாடுகளுக்கும் உரியதாகும்.	சிவில் உரிமைகள் நாட்டிற்கு நாடு அல்லது அரசாங்கத்திற்கு அரசாங்கம் பெரிதும் வேறுபடுகின்றன. இவை அரசியலமைப்புச் சட்டத்துடன் தொடர்பானவை.
எந்த ஒரு தேசமும் தனிநபருக்கான மனித உரிமைகளை பறிக்கக் முடியாது.	அந்தந்த நாடுகள் பல்வேறு வகையான சிவில் உரிமைகள் மூலம் சுதந்திரங்களை வழங்கவோ அல்லது மறுக்கவோ முடியும்.
மனித உரிமைகள் பிறப்பின் அடிப்படையில் இயற்கையாக அமையப்பெற்ற அடிப்படை உரிமைகள் ஆகும்.	சிவில் உரிமைகள் சமூகத்தினால் உருவாக்கப்படுகின்றன.

8th_Civics_TM_Unit-2_Term 2.indd 159 23-08-2019 09:54:35



நீடிப்பார். தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஐந்து பிரிவுகளைக் கொண்டுள்ளது. சட்டப்பிரிவு, புலனாய்வுப் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் திட்டப் பிரிவு, பயிற்சி அளித்தல் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு ஆகியனவாகும்.

ஆ) மாநில மனித உரிமைகள் ஆணையம்

தமிழ்நாட்டில் 1997ஆம் ஆண்டு ஏப்ரல் 17இல் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது. இது மாநில அளவில் செயல்படுகிறது. இது ஒரு தலைவர் உட்பட மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கியது. இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள மாநிலப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றின் கீழுள்ள துறைகள் தொடர்பான மனித உரிமை மீறல் தொடர்பானவைகளை மாநில மனித உரிமைகள் ஆணையம் விசாரிக்கும் (NHRC ஏற்கனவே விசாரிக்கும் வழக்குகளைத் தவிர).

மனித உரிமை நிறுவனங்கள்

உலகெங்கிலும் பல நிறுவனங்கள் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் முயற்சிகளை எடுத்துள்ளன. இந்த அரசுசாரா நிறுவனங்கள் அரசாங்கங்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதுடன் மனித உரிமைக் கொள்கைகளின்படி செயல்படுமாறு வலியுறுத்துகின்றன. அவைகளுள் ஆம்னஸ்டி இண்டர்நேஷனல் (Amnesty International), குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் (Children's Defence fund), மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) ஆகியனவாகும்.

D4I9L8

இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள்

பிரிவு 24 – குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்கிறது.

பிரிவு 39 (f) – ஆரோக்கியமாக குழந்தைகள் வளர வழிவகைச்செய்கிறது.

பிரிவு 45 – 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது.

8th_Civics_TM_Unit-2_Term 2.indd 160 23-08-2019 09:54:35

குழந்தைக்கான உரிமைகள்



1989ஆம் ஆண்டு நடைபெற்ற குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் பிரிவு 1 இன்படி பதினெட்டு வயதுக்குட்பட்ட அனைவரும் 'குழந்தை' எனப்படுவர். குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான மாநாட்டின் அறிக்கை 1989ஆம் ஆண்டு நவம்பர் 20இல் வெளியிடப்பட்டது.

குழந்தை ஒரு முக்கியமான தேசியச் சொத்தாக கருதப்படுகிறது. தேசத்தின் எதிர்காலமானது அந்நாட்டின் குழந்தைகள் எவ்வாறு, வளர்ந்து முதிர்ச்சியடைகிறார்கள் என்பதைப் பொறுத்தது. எனவே அனைத்து வகையான சுரண்டல்கள் மற்றும் தவறான பயன்பாட்டிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பது நமது சமூகத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. இந்தியாவில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

1978 – சர்வதேச பெண்கள் ஆண்டு
1979 – சர்வதேச குழந்தைகள் ஆண்டு
என ஐ. நா. சபை அறிவித்துள்ளது.

அ) கல்வி உரிமைச் சட்டம்

6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாக மற்றும் கட்டாயக் கல்வியை அரசு வழங்குவதற்கு சட்டப்பிரிவு 21A வழிவகைச் செய்கிறது.



ஆ) குழந்தைத் தொழிலாளர் சட்டம் (தடை மற்றும் சீரமைப்புச்சட்டம், 1986)

இது 15 வயது பூர்த்தியடையாத எந்த ஒரு குழந்தையையும் வேலைக்கு அமர்த்த தடை செய்கிறது.

இ) சிறார் நீதிச்சட்டம், 2000 (குழந்தைகளை பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்)

இந்தச் சட்டம் போதுமான கவனிப்பு இல்லாமல் இருக்கும் குழந்தைகளை நட்பு ரீதியில் அணுகி அவர்களை சீர்திருத்த முயற்சி மேற்கொள்கிறது.

ஈ) போக்சோ (POCSO) சட்டம், 2012

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம். குழந்தைகளின் நலனே மிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய அம்சம் எனக் கருதுகிறது.



1098 குழந்தைகளுக்கான உதவி மைய எண்: இது இந்தியாவில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட 24 மணிநேர கட்டணமில்லா அவசரத் தொலைத் தொடர்பு சேவையாகும். குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனும் வன்கொடுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.



பெண்கள் உரிமைகள்

பெண்கள் மற்றும் சிறுமியின் உரிமைகளும் மனித உரிமைகளாகும். பெண்களுக்கு தங்களது உரிமைகளை முழுமையாகவும் சமமாகவும் அனுபவிக்கவும், அனைத்து பாகுபாடுகளிலிருந்தும் விடுபடவும் உரிமை உள்ளது. அமைதி, பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவைகள் மனித உரிமைகளுக்கான அடிப்படைகள் ஆகும். ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் சமமான உரிமைகளை உறுதிசெய்கிறது.

1979ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மசோதாவை ஐ.நா. பாதுகாப்பு சபை ஏற்றுக்கொண்டது. இது பெண்களுக்கான

8th_Civics_TM_Unit-2_Term 2.indd 161 23-08-2019 09:54:36

சர்வதேச உரிமைகள் மசோதா என அழைக்கப்படுகிறது.

1995ஆம் ஆண்டில் பெய்ஜிங்கில் நடைபெற்ற நான்காவது உலக மகளிர் மாநாடு, பெண்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்கும் உலகளவில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குமான ஒரு தளத்தை உருவாக்கியது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டங்கள் இந்த இலக்குகளை அடைவதற்கு தேவையானவற்றை கண்காணிக்கிறது. மேலும் பெய்ஜிங் மாநாட்டின் இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக யுனிபெம் (UNIFEM) என்றழைக்கப்படும் பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதி அமைப்பு 1995 முதல் செயல்பட்டு வருகிறது. பெண்களும் சிறுமிகளும் உரிமைகளை முழுமையாக அனுபவிக்கும் போதுதான் உண்மையான சமத்துவம் நிலவுகிறது.

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலவாழ்வுச் சட்டம்



மூத்த குடிமக்கள்

இந்தச் சட்டம் மூத்த குடிமக்களுக்கும் பெற்றோர்களுக்கும் பராமரிப்பை வழங்குவதற்கும் அவர்களின் குழந்தைகள் மற்றும் வாரிசுதாரர்களின் சட்டப்பூர்வமான கடமையாகிறது. முதுமை காலத்தில் பாதுகாப்பும் ஆதரவும் மனித உரிமைகளாக கருதப்படுகின்றன.

சட்டங்கள்	விதிகள்
இந்து விதவை மறுமணச் சட்டம், 1856	விதவைகள் மறுமணத்தை சட்டப்பூர்வமாக்கியது.
இந்து திருமணச் சட்டம், 1955	பெண்களின் திருமண வயது 21 என்று சட்டப்பூர்வமாக்கியது.
இந்து வாரிசு சட்டம், 1956	பெண்கள் தங்கள் பெற்றோர்களின் சொத்தினை மரபுவழியாக பெறுவதை உறுதிசெய்கிறது.
வரதட்சணைத் தடைச் சட்டம், 1961	வரதட்சணை என்ற பெயரில் மருமகளை மோசமாக நடத்துவதற்கு கடுமையான தண்டனை வழங்குகிறது.
பெண்களை கேலி செய்வதற்கு எதிரானச் சட்டம், 1997	பெண்களுக்கு நிவாரணம் அளிக்கிறது.
அநாகரிகமாக சித்தரித்தலுக்கெதிரான சட்டம், 1999	பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள் போன்றவற்றில் பெண்களை அநாகரிகமாக சித்தரித்தலைத் தடைசெய்கிறது.
தொழிற்சாலைச் சட்டம், 1948 தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951 சுரங்கச் சட்டம், 1952 மகப்பேறு நலச் சட்டம், 1961	பெண் தொழிலாளர்களைப் பாதுகாக்கிறது.
வன்கொடுமை தடுப்பு சட்டம், 2005	கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் பெண்கள் துன்புறுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கிறது.

முடிவுரை

மனித உரிமைகள் ஒவ்வொருவருக்குமான சமத்துவம் மற்றும் நேர்மை பற்றியதாகும். மேலும் இது அனைவரையும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவதை உறுதி செய்கிறது. மனித உரிமையைப் பாதுகாப்பது அனைவரின் பொறுப்பாகும். மனித உரிமைகளுக்கான புரிதலும் மரியாதையையும் நமது சமூகத்தில் அமைதி, நல்லிணக்கம், பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்திற்கான அடித்தளத்தை வழங்குகிறது.

8th_Civics_TM_Unit-2_Term 2.indd 162 23-08-2019 09:54:36

பாடச் சுருக்கம்

- மனித உரிமைகள் என்பது அனைத்து மனிதர்களும் அனுபவிக்க உரிமைபெற்ற சுதந்திரங்களாகும்
- அவற்றில் வாழ்வியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் அடங்கும்.
- மனித உரிமைகள் இயல்பானவை, மாற்றித்தர இயலாதவை, சார்புடையவை மற்றும் பிரிக்க இயலாதவை.
- ஐக்கிய நாடுகள் சபையின் மிகப்பெரிய சாதனைகளுள் ஒன்று மனித உரிமைகள் சட்டத்தின் முழுமையான அமைப்பை உருவாக்கியது ஆகும்.
- உலக மனித உரிமைகள் அறிவிப்பு ஐ.நா. வின் பொதுச்சபையால் 1948ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- மனித உரிமைகள் கண்ணியம், நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.
- மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு தேசிய அளவிலும் மாநில அளவிலும் மனித உரிமை ஆணையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- மனித உரிமைகளைப் பாதுகாப்பது ஒவ்வொரு தனிநபரின் பொறுப்பாகும்

கலைச்சொற்கள்

தேசிய இனம்	Nationality	People having common origin
மனிதாபிமானம்	humanitarian	seeking to promote human welfare
சகோதரத்துவம்	brotherhood	state of being brothers
நியாயமான விசாரணை	fair trial	justify with legal
இசைவு	harmony	agreement of opinions
வாரிசு/வழித்தோன்றல்	heir	a person legally entitled to the property

மதிப்பீடு

I சரியான விடையை தேர்வு செய்க

T8A3B8

1. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் _____ மனித உரிமைகளைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
   அ) ஐ. நா. சபை
   ஆ) உச்ச நீதிமன்றம்
   இ) சர்வதேச நீதிமன்றம்
   ஈ) இவைகளில் எதுவுமில்லை
2. 1995ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் _____ இல் கூடினர்.
   அ) பெய்ஜிங்
   ஆ) நியூயார்க்
   இ) டெல்லி
   ஈ) இவைகளில் எதுவுமில்லை
3. தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு
   அ) 1990 ஆ) 1993
   இ) 1978 ஈ) 1979
4. ஐ.நா. சபை 1979ஆம் ஆண்டை _____ சர்வதேச ஆண்டாக அறிவித்தது.
   அ) பெண்குழந்தைகள்
   ஆ) குழந்தைகள்
   இ) பெண்கள்
   ஈ) இவற்றில் எதுவுமில்லை

8th_Civics_TM_Unit-2_Term 2.indd 163 23-08-2019 09:54:36

5. உலக மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படும் நாள் எது?

அ) டிசம்பர் 9 ஆ) டிசம்பர் 10

இ) டிசம்பர் 11 ஈ) டிசம்பர் 12

6. மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என அழைக்கப்படுவது எது?

அ) மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு (UDHRC)

ஆ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC)

இ) மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC)

ஈ) சர்வதேசப் பெண்கள் ஆண்டு

7. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படுபவர் யார்?

அ) ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி

ஆ) ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி

இ) குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஏதேனும் ஒருவர்

ஈ) ஏதேனும் ஒரு நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி

8. உலக மனித உரிமைகள் அறிவிப்பில் உள்ள சட்டப்பிரிவுகளின் எண்ணிக்கை யாவை?

அ) 20 ஆ) 30

இ) 40 ஈ) 50

9. தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவரின் பதவிக் காலம் என்ன?

அ) 5 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை

ஆ) 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

இ) 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

ஈ) 5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை

10. தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ) புது டெல்லி ஆ) மும்பை

இ) அகமதாபாத் ஈ) கொல்கத்தா

II கோடிட்ட இடங்களை நிரப்புக.

1 ஒவ்வொரு தனிமனிதனும் கண்ணியமான வாழ்க்கை வாழ _____ உண்டு.

2. மனித உரிமைகள் என்பது _____ உரிமைகள்.

3. மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு _____.

4. இந்திய அரசியலமைப்பின் 24 வது சட்டப்பிரிவு _____ ஐ தடைசெய்கிறது.

5. ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட ஆண்டு _____.

III. பொருத்துக.

1.	எலினார் ரூஸ்வெல்ட்	-	உலகின் முதல் மனித உரிமைகள் சாசனம்
2.	சைரஸ் சிலிண்டர்	-	1997
3.	பெண்களை கேலி செய்வதற்கு எதிரான சட்டம்	-	அடிமைத் தனத்திலிருந்து விடுதலை
4.	குழந்தை உதவி மைய எண்	-	மனித உரிமைகளுக்கான ஆணையம்
5.	வாழ்வியல் உரிமைகள்	-	வாக்களிக்கும் உரிமை
6.	அரசியல் உரிமை	-	1098

IV. சரியா / தவறா?

1. மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒரே மாதிரியானவை.

2. மனித மற்றும் குடிமகனின் உரிமைகள் அறிவிப்பு இந்தியாவில் அறிவிக்கப்பட்டது.

3. 1993ஆம் ஆண்டு மனித உரிமைச் சட்டம் தேசிய மனித உரிமைகள் ஆணையம் உருவாக வழிவகுத்தது.

4. பாதிக்கப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க தேசிய மனித உரிமைகள் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது.

5. மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய, மாநில அளவிலான மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

8th_Civics_TM_Unit-2_Term 2.indd 164 23-08-2019 09:54:36

V. சரியான கூற்றைத் தேர்ந்தெடு

1. தவறான கூற்றை கண்டறியவும்

அ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு சட்டரீதியான அமைப்பாகும்.

ஆ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஓர் அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாகும்

இ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு சுதந்திரமான அமைப்பாகும்.

ஈ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு பலதரப்பு நிறுவனங்களைக் கொண்டதாகும்.

2. தேசிய மனித உரிமைகள் ஆணையம் குறித்து பின்வரும் எந்த கூற்று சரியானது அல்ல.

அ) இது 1993 இல் நிறுவப்பட்டது.

ஆ) மனித உரிமை மீறல் வழக்குகளில் குற்றவாளியை தண்டிக்க ஆணையத்திற்கு எந்த உரிமையும் இல்லை.

இ) இந்த ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

ஈ) இந்த ஆணையம் தனது ஆண்டு அறிக்கையை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்புகிறது.

3. **கூற்று:** டிசம்பர் 10ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

காரணம்: இது எலினார் ரூஸ்வெல்டின் பிறந்த நாளை நினைவு கூர்கிறது.

அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது

இ) கூற்று காரணம் இரண்டும் சரி

ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

4. பின்வரும் கூற்றை ஆராய்க

1) மாநில மனித உரிமைகள் ஆணையம் பல உறுப்பினர்களை கொண்ட அமைப்பு ஆகும்.

2) மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாகும்

மேற்கூறிய கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும்

இ) 1, 2 ஈ) எதுவுமில்லை.

VI கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி.

1. மனித உரிமைகள் என்றால் என்ன?
2. மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பின் (UDHR) முக்கியத்துவத்தை எழுதுக.
3. இந்திய அரசியலமைப்பின் 45 வது சட்டப்பிரிவு எதனை அறிவுறுத்துகிறது?
4. கல்வி உரிமைச் சட்டம் பற்றி எழுதுக.
5. பெண்களின் நலனைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட்ட மூன்று சட்டங்களைக் குறிப்பிடுக.
6. அரசியல் உரிமைகள் மற்றும் சிலவற்றை குறிப்பிடுக.
7. மனித உரிமைகளின் ஐந்து முதன்மைப் பிரிவுகளை குறிப்பிடுக.

VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி.

1. மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகளை வேறுபடுத்துக.
2. மனித உரிமைகளின் ஏதேனும் ஐந்து அடிப்படைப் பண்புகளை விவரி.
3. குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகள் யாவை?

VIII. உயர் சிந்தனை வினா.

1. உலகளாவிய மனித உரிமைகள் அறிவிப்பு யாருக்கு பொருந்தும் ? இது உங்களுக்கு ஏன் முக்கியமாக இருக்கிறது?

IX. செயல் திட்டம் மற்றும் செயல்பாடு.

1. நீங்கள் அனுபவிக்கும் பத்து உரிமைகள் மற்றும் உங்களுக்கான பொறுப்புகளைப் பட்டியலிடுக.

8th_Civics_TM_Unit-2_Term 2.indd 165 23-08-2019 09:54:36

அலகு 1

அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி

கற்றல் நோக்கங்கள்

- அரசாங்க அமைப்புகளைப் பற்றி அறிதல்
- மக்களாட்சியின் பொருளைப் புரிதல்
- மக்களாட்சியின் நிறைகள், குறைகள் பற்றி அறிதல்
- இந்திய மக்களாட்சி எதிர்கொள்ளும் சவால்களை அறிதல்

DS65GA

அறிமுகம்

உலகின் பல நாடுகள் பல்வேறு வகையான அரசாங்க அமைப்புகளை பின்பற்றி வந்தாலும், இன்றைய உலகம் மக்களாட்சியையே பெரிதும் விரும்புகிறது. உலகளவில் அரசாங்க அமைப்புகள் எவ்வாறு வளர்ச்சியடைந்து இருக்கிறது என்பது பற்றி இப்பாடத்தின் மூலம் கற்றறிவோம்.

1. அரசாங்க அமைப்புகள்

அதிகாரம் யாரிடம் உள்ளது என்பதைப் பொறுத்து ஒரு நாட்டின் ஆட்சி அமைகிறது. அரசாங்கம் என்பது பல அமைப்புகளை உள்ளடக்கியது. அவை உயர் குடியாட்சி, முடியாட்சி, தனிநபர் ஆட்சி, சிறுகுழு ஆட்சி, மதகுருமார்கள் ஆட்சி, மக்களாட்சி மற்றும் குடியரசு.

1.1 உயர்குடியாட்சி (Aristocracy)

உயர்குடியினரால் நடத்தப்பட்டு அமைக்கப்படும் அரசாங்கம் ஆகும். எ.கா. இங்கிலாந்து, ஸ்பெயின்

1.2 முடியாட்சி (Monarchy)

ஒரு நபர் (வழக்கமாக அரசர்)– ஆல் அமைக்கப்படும் அரசாங்கமே முடியாட்சி (அரசியலமைப்பு முடியாட்சி) எனப்படும். எ.கா. பூடான், ஓமன், கத்தார்

1.3 தனிநபர் ஆட்சி (Autocracy)


முழு அதிகாரம் கொண்ட ஒரு நபரால் அமைக்கப்படும் அரசாங்கமே தனிநபர் ஆட்சி ஆகும். எ.கா. வட கொரியா, சவுதி அரேபியா

1.4 சிறு குழு ஆட்சி (Oligarchy)

மக்களின் சிறிய குழு ஒன்று ஒரு நாட்டையோ (அ) அமைப்பையோ கட்டுப்படுத்துவதே "சிறு குழு ஆட்சி" எனப்படும். எ.கா. முன்னாள் சோவியத் யூனியன், சீனா, வெனிசுலா

1.5 மதகுருமார்களின் ஆட்சி (Theocracy)

மதகுருமார்கள் தம்மை கடவுளாகவோ (அ) கடவுளின் பெயரால், மதகுருமார்களே



அரசாங்க அமைப்புகள்

9th Civics U1.indd 173 29-03-2018 10:22:30

அமைக்கப்படும் அரசாங்கமே "மதகுருமார்களின் ஆட்சி". எ.கா. வாட்டிகன்

1.6 மக்களாட்சி (Democracy)

ஒரு நாட்டின் தகுதியுள்ள குடிமக்களால் வாக்களிக்கப்பட்ட தனிநபரோ அல்லது குழுவாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் அமைக்கப்படும் அரசாங்கமே "மக்களாட்சி" எனப்படும். எ.கா. இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்ஸ்

1.7 குடியரசு (Republic)

மக்களிடமே அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளிடமும் உயரிய அதிகாரம் இருக்கின்ற அரசாங்க முறையே "குடியரசு" எனப்படும். இவ்வகை அரசாங்கத்தில் ஒரு முடிமன்னரை காட்டிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட (அ) நியமிக்கப்பட்ட குடியரசுத்தலைவர் இருப்பார். (எ.கா) இந்தியா, ஆஸ்திரேலியா

2. மக்களாட்சி என்றால் என்ன?

- மக்களாட்சி என்பது மக்கள் தங்கள் ஆட்சியாளர்களை தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதியளிக்கும் ஆட்சி முறையே "மக்களாட்சி" ஆகும்.
- இம்முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மட்டுமே ஆட்சி செய்ய முடியும்.
- மக்கள் சுதந்திரமாக தாங்கள் விரும்பிய கருத்துக்களைத் தெரிவிக்கவும், ஓர் அமைப்பை ஏற்படுத்தவும், போராட்டங்களை நடத்தவும் உரிமை பெற்றவர்கள் ஆவர்.

உங்களுக்குத் தெரியுமா?

பொ.ஆ.மு.500ம் ஆண்டு ரோம் நாட்டில் முதன் முதலில் "குடியரசு" (Republic) எனும் சொல் வடிவமைக்கப்பட்டது. இச்சொல் "res publica" எனும் லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் "பொது விவகாரம்" (public matter) என்பதாகும்.

இந்திய அரசியலமைப்பு நவம்பர் 26, 1949ல் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஜனவரி 26, 1950ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. எனவே, ஜனவரி மாதம் 26 நாள், 1950ஆம் ஆண்டு இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது.

உங்களுக்குத் தெரியுமா?

மக்களாட்சி (Democracy) எனும் சொல் 'demos' மற்றும் 'cratia' எனும் இரு கிரேக்க சொற்களிலிருந்து பெறப்பட்டதாகும். டெமாகிரஸி என்றால் 'மக்கள் அதிகாரம்' (power of the people) என்று பொருள்

2.1 மக்களாட்சி என்பதன் பொருள்:

ஒரு நாட்டின் மக்கள் உயர்ந்த அதிகாரங்களை பெற்று அமைக்கும் ஆட்சி முறையே "மக்களாட்சி" எனப்படும். இதன் பொருள் "நாட்டு மக்களின் கைகளில் ஆட்சி அதிகாரம்" உள்ளது என்பதாகும். மேலும் மக்கள் தங்களது பிரதிநிதிகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு



9th Civics U1.indd 174 29-03-2018 10:22:31

நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்.

2.2 வரையறை:

"ஒரு உண்மையான மக்களாட்சியை, 20 பேர் குழுவாக அமர்ந்து கொண்டு செயல்படுத்த முடியாது. இது கீழ்நிலையிலுள்ள ஒவ்வொரு கிராம மக்களால் செயல்படுத்தப்படுவதாகும்" என தேசப்பிதா 'மகாத்மா காந்தி' குறிப்பிடுகிறார்.

மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி 'மக்களாட்சி' என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் மக்களாட்சிக்கு வரையறை கூறினார்.



ஆபிரகாம் லிங்கன்


2.3 மக்களாட்சியின் சிறப்புக் கூறுகள்

1. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் இறுதி முடிவை மேற்கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள்.
2. சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள்.
3. வயது வந்த அனைவருக்கும் சம மதிப்புடைய வாக்குரிமை.
4. அடிப்படை உரிமைகள் மற்றும் தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.


2.4 மக்களாட்சியின் பரிணாம வளர்ச்சி

ஏதென்ஸ் உட்பட பண்டைய கிரேக்க நாட்டின் ஒரு சில நகர–அரசுகளில், 2500 ஆண்டுகளுக்கு முன்பாகவே மக்களாட்சி முறை தோன்றியது. வேத காலத்திற்கு முன்பாகவே இந்தியாவில் மக்களாட்சி முறை அமைப்புகள் இருந்தன என்பது பற்றி அறிவது மிக முக்கியமாக இருக்கிறது. உள்ளாட்சி அமைப்பின் அடிப்படை அலகாக சுயாட்சி பெற்ற கிராம குழுக்கள், பண்டைக்காலத்தில் இருந்தது எனும் செய்திகளை சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் என்ற நூல் கூறுகிறது. பண்டைய தமிழகத்தில், சோழர்களின் காலத்தில் குறிப்பிடத்தக்கச் சிறப்பு வாய்ந்த 'குடவோலை முறை' இருந்தது. சுதந்திரம், சமத்துவம், விடுதலை, பொறுப்புடைமை, வெளிப்படைத் தன்மை, நம்பிக்கை ஆகிய மதிப்பீடுகள் மக்களாட்சியின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

2.5 மக்களாட்சி அரசாங்க அமைப்புகள்



9th Civics U1.indd 175 29-03-2018 10:22:31



2.5 மக்களாட்சியின் வகைகள்:

மக்களாட்சி இரு வகைப்படும். அவை,

1. நேரடி மக்களாட்சி
2. மறைமுக மக்களாட்சி (பிரதிநிதித்துவ மக்களாட்சி).

மக்களாட்சி வகைகள் என்பது மக்கள் சமமாகப் பங்கேற்க அனுமதியளிக்கும் சமூக அமைப்பு (அ) அரசாங்க வகைகளை குறிக்கிறது.

2.5.1. நேரடி மக்களாட்சி:

பொது விவகாரங்களில் மக்களே நேரடியாக முடிவெடுக்கக்கூடிய அரசு முறையே நேரடி மக்களாட்சி என்கிறோம். எ.கா. பண்டைய கிரேக்க நகர அரசுகள், சுவிட்சர்லாந்து

2.5.2. மறைமுக மக்களாட்சி (பிரதிநிதித்துவ மக்களாட்சி)

பொது விவகாரங்களில் மக்கள் தங்களது விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலம் வெளிப்படுத்தும் அரசாங்கத்தின் வகையே மறைமுக மக்களாட்சி என்று அழைக்கப்படுகிறது.

(எ.கா.) இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து


2.6. இந்தியாவில் மக்களாட்சி:

இந்தியா நாடாளுமன்ற மக்களாட்சி முறையைக் கொண்டுள்ள நாடாகும். இந்தியாவின் நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கியது. இது நாட்டிற்கு தேவையான சட்டங்களை உருவாக்குகிறது. கொள்கை முடிவெடுப்பதில் மக்கள் பங்கு பெறுவதும், ஒப்புதல் அளிப்பதும் இந்தியாவிலுள்ள நாடாளுமன்ற மக்களாட்சி அரசாங்கத்தின் இரு முக்கிய கூறுகளாக விளங்குகின்றன.



இந்திய நாடாளுமன்றம்

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியாவாகும். இந்தியாவில் மக்களாட்சி பின்வரும் ஐந்து முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் இயங்குகிறது. அவை இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை, மக்களாட்சி மற்றும் குடியரசு.



9th Civics U1.indd 176 29-03-2018 10:22:32

பதினெட்டு வயது நிரம்பிய ஒவ்வொரு இந்திய குடிமகனும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். சாதி, சமயம், இனம், பால், கல்வித்தகுதி என எவ்விதப் பாரபட்சமும் இன்றி சமமான வாக்குரிமையைப் பெற்றுள்ளனர்.

2.7 மக்களாட்சியின் நிறை குறைகள்:

நிறைகள்

1. பொறுப்பும், பதிலளிக்கும் கடமையும் கொண்ட அரசாங்கம்
2. சமத்துவமும் சகோதரத்துவமும்
3. மக்களிடையே பொறுப்புணர்ச்சி
4. தல சுய ஆட்சி
5. அனைவருக்கும் வளர்ச்சியும் வளமும்
6. மக்கள் இறையாண்மை
7. சகோதர மனப்பான்மை மற்றும் கூட்டுறவு.

குறைகள்

1. மறைமுக அல்லது பிரதிநிதித்துவ முறை கொண்ட மக்களாட்சி
2. வாக்காளர்களிடையே போதிய ஆர்வமின்மை மற்றும் குறைந்த வாக்குப்பதிவு
3. சில சமயங்களில் நிலையற்ற அரசாங்கத்திற்கு வழி வகுக்கிறது
4. முடிவெடுக்கும் முறையில் காலதாமதம்.

2.8 இந்தியாவில் தேர்தல்கள்

இந்திய அரசு பகுதி கூட்டாட்சி அமைப்பு முறையைப் பெற்றுள்ள நாடு. இங்கே நடுவண் அரசு (நாடாளுமன்றம்), மாநில அரசு (சட்டமன்றம்), உள்ளாட்சி அமைப்புகள் (ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி) ஆகிய நிலைகளில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தியாவில் பொதுத் தேர்தலை, இந்திய தேர்தல் ஆணையம் நடத்துகிறது. தேசிய அளவில், இந்திய நாடாளுமன்றத்தின் கீழவையான மக்களவையில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவு பெற்ற பிரதம அமைச்சரை, இந்திய அரசின் தலைவரான குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

உங்களுக்குத் தெரியுமா?

நாடாளுமன்றத்தின் இரு அவைகள்	
லோக் சபா/ கீழவை/மக்களவை	ராஜ்ய சபா/ மேலவை/ மாநிலங்களவை



இந்தியாவில் தேர்தல்கள்

நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் அனைவரும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பொதுத் தேர்தல்கள் மூலம் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மேலும் இரு ஆங்கிலோ– இந்தியர்களைக் குடியரசுத்தலைவர் மக்களவைக்கு நியமனம் செய்கிறார்.

நாடாளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவை உறுப்பினர்களை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

உங்களுக்குத் தெரியுமா?

1912–13 ஆம் ஆண்டு புது தில்லியில் உள்ள இந்தியாவின் நாடாளுமன்றக் கட்டிடத்தை எட்வின் லுட்டியன்ஸ் மற்றும் ஹெர்பர்ட் பேக்கர் எனும் பிரிட்டிஷ் கட்டிடக்கலைஞர்கள் வடிவமைத்தனர். இக்கட்டிடத்தை 1921 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி, 1927–ல் முடித்தனர்.

9th Civics U1.indd 177 29-03-2018 10:22:32

மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். மேலும் கலை, இலக்கியம், அறிவியல் மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளில் சிறப்பாகச் சேவை புரிந்த 12 பேரை மாநிலங்கள் அவைக்கு குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார்.

2.9 மக்களாட்சி இந்தியாவின் முதல் தேர்தல்:

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், மக்களவையின் முதல் பொதுத் தேர்தல் 1951ம் ஆண்டு அக்டோபர் 25ம் நாள் முதல் 1952ம் ஆண்டு பிப்ரவரி 21ம் நாள் வரை பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்றது. மொத்தம் இருந்த 489 இடங்களில் 364 இடங்களில் வெற்றி பெற்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஆட்சியை அமைத்தது. சுதந்திர இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆவார்.



1952 – இந்தியாவின் முதல் பொதுத் தேர்தல்

உங்களுக்குத் தெரியுமா?

பொது தேர்தல்கள் – 1920

இம்பீரியல் கவுன்சில் எனும் மத்திய சட்டசபைக்கும் மாகாண சட்டசபைக்கும் தேவையான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 1920ம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் முதல் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதுவே இந்திய வரலாற்றின் முதல் பொதுத்தேர்தல் ஆகும்.

2.10 இந்திய மக்களாட்சி எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள்

தற்கால உலகில் மக்களாட்சி அரசாங்கம் தழைத்தோங்கி, அரசாங்கத்தின் மேலாதிக்கம் செலுத்தும் வடிவமாக இருக்கிறது. மக்களாட்சியானது இதுவரை கடுமையான சவாலையோ அல்லது போட்டியோ எதிர்கொள்ளவில்லை. கடந்த நூறு ஆண்டுகளில் உலகெங்கிலும் மக்களாட்சி விரிவடைந்து வளர்ந்து வருகிறது. இந்தியாவில் மக்களாட்சி எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பின்வருமாறுக் காணலாம்.

1. கல்வியறிவின்மை
2. வறுமை
3. பாலினப் பாகுபாடு
4. பிராந்தியவாதம்
5. சாதி, வகுப்பு, சமய வாதங்கள்
6. ஊழல்
7. அரசியல் குற்றமயமாதல்
8. அரசியல் வன்முறை

2.11 மக்களாட்சி முறை வெற்றிகரமாகச் செயல்படுவதற்கான நிபந்தனைகள்

- ஏழைகள் மற்றும் எழுத்தறிவற்றோருக்கு மக்களாட்சியின் பலன்களைக் கிடைக்கச் செய்ய அதிகாரம் அளித்தல்.
- தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள் தமது அதிகாரத்தையும், பொதுச்சொத்துக்களையும் தவறாகப் பயன்படுத்தாமல் இருத்தல்.
- மக்களாட்சி முறையைப் பீடித்திருக்கும் சமூக தீமைகளையும், சமூகக் கொடுமைகளையும் ஒழித்தல்.
- மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கப் பாரபட்சமற்ற, திறமைமிக்க ஊடகங்களின் தேவையை உணர்தல்.
- பொதுமக்களின் கருத்து வலுவாக இருத்தல்.
- மக்களிடையே சகிப்புத்தன்மையும், மத நல்லிணக்கமும் நிலவுதல்.
- அடிப்படை உரிமைகள் பற்றிய அறிவும் விழிப்புணர்வும் மக்களிடம் ஏற்படுத்துதல்.

9th Civics U1.indd 178 29-03-2018 10:22:32

- தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்
- வலுவான பொறுப்புமிக்க எதிர்க்கட்சி இருத்தல்.

நம் நாட்டின் மக்களாட்சி முறை உலக நாடுகளால் பாராட்டப்படுகிறது என்ற போதிலும், மேலும் அதை மேம்படுத்துவதற்கும் நிறைய வாய்ப்புகள் உள்ளன. மக்களாட்சி நெறி தழைத்து அவைருக்கும் பலன் கிடைக்க மேற்கண்ட நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

சமத்துவம், சுதந்திரம், சமூக நீதி, பொறுப்புணர்வு மற்றும் அனைவருக்கும் மதிப்பளித்தல் போன்ற அடிப்படை மக்களாட்சிப் பண்புகளை, மக்கள் மனதில் கொண்டு செயல்படும் போது, மக்களாட்சி மேலும் துடிப்பானதாகவும், வெற்றிகரமானதாகவும் இருக்கும். மக்களின் எண்ணங்கள், சிந்தனைகள் மற்றும் நடத்தைகள் ஆகியவை மக்களாட்சியின் தலையாய கொள்கைகளுடன் பொருத்திச் செயல்பட வேண்டும். எனவே, மக்களாட்சியின் இலக்குகளை நடைமுறைபடுத்த மக்களே தங்களை முன்மாதிரியாக பங்கெடுத்துக் கொள்ளவும், கடமையுணர்வோடு செயல்படவும், தங்களுக்குள் பொறுப்புணர்வை உருவாக்கவும், தமக்களிக்கப்பட்ட வாய்ப்புகளுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும்.

மீள்பார்வை:

- அரசாங்கம் என்பது ஓர் சமூகத்தை நிர்வகிக்கும் அமைப்பாகும்.
- ஒரு அரசன் அல்லது அரசியால் நடத்தப்படும் ஆட்சி முடியாட்சி.
- மக்கள் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ சம அளவில் பங்கேற்க வகை செய்யும் சமூக அமைப்புகள் அல்லது அரசுகளை மக்களாட்சியின் வகைகள் எனலாம்.
- பொது விவகாரங்களில் மக்கள் தமது விருப்பங்களை நேரடியாக நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அரசு அமைப்பே நேரடி மக்களாட்சி எனப்படும்.
- இந்தியாவில் பதினெட்டு வயது நிரம்பிய ஒவ்வொரு குடிமகனுக்கும் வாக்குரிமை உண்டு.

கலைச் சொற்கள்

1. சமூகம் – ஒரே இடத்தில் பொதுவானப் பண்பு நலன்கொண்டு வாழும் மக்கள் குழு.
2. பிரதிநிதி – மற்றவர்களுக்காக/பிறருக்காகப் பேச அல்லது செயல்பட நியமிக்கப்படும் / தேர்ந்தெடுக்கப்படும் ஒரு நபர்.
3. இறையாண்மை – அன்னிய அதிகாரத்தின் கட்டுப்பாடோ, இடையூறோ இல்லாதிருப்பது.
4. சமதர்மம் – குடிமக்கள் அனைவருக்கும் சமூகப் பொருளாதார சமத்துவத்தை வழங்குவது.
5. சமயச்சார்பின்மை – எந்த ஒரு மதத்தையும் பின்பற்றுவதற்கு அல்லது எல்லாவற்றையும் நிராகரிப்பதற்கான உரிமை.
6. மக்களாட்சி – குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம்.
7. குடியரசு – நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுதல்.
8. அரசாங்கம் – ஒரு நாடு அல்லது அரசினை நிர்வகிப்பதற்கான அதிகாரம் கொண்ட மக்கள் குழு.

9th Civics U1.indd 179 29-03-2018 10:22:32

பயிற்சிகள்

DSNWJK

I.சரியான விடையினை தேர்வு செய்க.

1. ஒரு நபரோ, அரசரோ அல்லது அரசியோ ஆட்சி செய்யும் முறை

அ) தனி நபராட்சி ஆ) முடியாட்சி

இ) மக்களாட்சி ஈ) குடியரசு

2. முழு அதிகாரத்துடன் கொண்ட ஒரு நபர் அரசாங்க முறை

அ) சிறுகுழு ஆட்சி

ஆ) மதகுருமார்களின் ஆட்சி

இ) மக்களாட்சி

ஈ) தனிநபராட்சி

3. முன்னுரிமை பெற்ற சிலரால் நடத்தப்படும் ஆட்சிமுறை

அ) சிறுகுழு ஆட்சி

ஆ) நாடாளுமன்றம்

இ) மக்களாட்சி

ஈ) இவற்றில் எதுவுமில்லை

4. முன்னாள் சோவியத் யூனியன் _____க்கு எடுத்துக்காட்டு.

அ) உயர்குடியாட்சி

ஆ) மதகுருமார்களின் ஆட்சி

இ) சிறுகுழு ஆட்சி

ஈ) குடியரசு

5. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்

அ) இந்தியா

ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

இ) பிரான்ஸ்

ஈ) வாட்டிகன்

6. ஆபிரகாம் லிங்கன் _____ நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்.

அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

ஆ) இங்கிலாந்து

இ) சோவியத் ரஷ்யா

ஈ) இந்தியா

7. குடவோலை முறையை பின்பற்றியவர்கள்

அ) சேரர்கள் ஆ) பாண்டியர்கள்

இ) சோழர்கள் ஈ) களப்பிரர்கள்

8. பழங்காலத்தில் நேரடி மக்களாட்சி முறை பின்பற்றப்பட்டப் பகுதி

அ) பண்டைய இந்தியாவின் குடியரசுகள்

ஆ) அமெரிக்கா

இ) பண்டைய ஏதன்ஸ் நகர அரசுகள்

ஈ) பிரிட்டன்

9. எந்த நாட்டில் மக்களாட்சித் தோன்றியது?

அ) இந்தியா

ஆ) சுவிட்சர்லாந்து

இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

ஈ) ஏதென்ஸ்

10. எந்த மொழியிலிருந்து "டெமாகிரஸி" என்ற வார்த்தைப் பெறப்பட்டது?

அ) கிரேக்கம் ஆ) லத்தீன்

இ) பாரசீகம் ஈ) அரபு

11. மக்களாட்சியில் இறுதி அதிகாரம் பெற்றவர்கள்

அ) நாடாளுமன்றம்

ஆ) மக்கள்

இ) அமைச்சர் அவை

ஈ) குடியரசு தலைவர்

12. கீழ்க்கண்ட எந்த ஒரு நாடானது அதிபர் அரசாங்க முறையினைக் கொண்டுள்ளது?

அ) இந்தியா ஆ) பிரிட்டன்

இ) கனடா ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

9th Civics U1.indd 180 29-03-2018 10:22:32

13. உலகிலேயே மிகப் பெரிய மக்களாட்சி நாடு

அ) கனடா

ஆ) இந்தியா

இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

ஈ) சீனா

14. கூற்று (A): நேரடி மக்களாட்சி சுவிட்சர்லாந்தில் நடைமுறையில் உள்ளது.

காரணம் (R): மக்கள் நேரடியாக முடிவெடுப்பதில் பங்கு பெறுகிறார்கள்.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை

இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது

ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது

15. கூற்று (A): இந்தியாவில் நாடாளுமன்ற அரசாங்க முறை பின்பற்றப்படுகிறது

காரணம் (R): இந்திய நாடாளுமன்றம் இரு சபைகளை உள்ளடக்கியது.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை

இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது

ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது

16. வாக்குரிமையின் பொருள்:

அ) தேர்ந்தெடுப்பதற்கான உரிமை

ஆ) ஏழைகளுக்கு வாக்களிக்கும் உரிமை

இ) வாக்களிக்கும் உரிமை

ஈ) பணக்காரர்களுக்கு வாக்களிக்க உரிமை

17. அனைவருக்கும் வாக்குரிமை வழங்குவது

அ) சமூகச் சமத்துவம்

ஆ) பொருளாதார சமத்துவம்

இ) அரசியல் சமத்துவம்

ஈ) சட்ட சமத்துவம்

18. பிரதமரை நியமிப்பவர் / நியமிப்பது

அ) மக்களவை

ஆ) மாநிலங்களவை

இ) சபாநாயகர்

ஈ) குடியரசுத் தலைவர்

19. குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவர்கள்

அ) லோக்சபைக்கு 12 உறுப்பினர்கள்

ஆ) ராஜ்ய சபைக்கு 2 உறுப்பினர்கள்

இ) ராஜ்ய சபைக்கு 12 உறுப்பினர்கள்

ஈ) ராஜ்ய சபைக்கு 14 உறுப்பினர்கள்

20. இந்தியாவில் சுதந்திரத்திற்குப் பிறகு முதல் பொதுத் தேர்தல் நடைபெற்ற ஆண்டு.

அ) 1948 ஆ) 1952

இ) 1957 ஈ) 1947

II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. இந்திய அரசியலமைப்பு இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு _____

2. இரண்டு வகையான மக்களாட்சி _____ மற்றும் _____ ஆகும்.

3. நேரடி மக்களாட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு_____

4. இந்தியா _____ மக்களாட்சி முறையினைக் கொண்டுள்ள நாடாகும்.

5. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் _____ ஆவார்.

6. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் முதல் பொதுத்தேர்தல் நடத்தப்பட்ட ஆண்டு_____

9th Civics U1.indd 181 29-03-2018 10:22:32

7. இந்தியாவில் நாடாளுமன்ற கட்டிடத்தை வடிவமைத்தவர்கள் _____ மற்றும் _____ ஆவர்.

III. பொருத்துக

1. தனிநபராட்சி – 18
2. வாக்குரிமை – அர்த்தசாஸ்திரம்
3. சாணக்கியர் – வாடிகன்
4. மதகுருமார்கள் ஆட்சி – வடகொரியா

IV. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி.

1. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.
2. மக்களாட்சி அரசாங்க அமைப்பினை பற்றி கூறுக.
3. நேரடி மக்களாட்சி மற்றும் மறைமுக மக்களாட்சியினை வேறுபடுத்துக.

V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி

1. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை? விவரி.
2. இந்தியாவில் மக்களாட்சி வெற்றிகரமாகச் செயல்படத்தேவையான நிலைமைகளை விளக்குக.
3. இந்தியாவில் மக்களாட்சிப் பற்றிய உங்களது கருத்து என்ன?

VI. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள்

1. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன என்பதை வகுப்பறையில் கலந்துரையாடு.
2. மக்களாட்சிஎன்பது "சிறுபான்மையினரை மதிக்கும் பெரும்பான்மையினரின் ஆட்சி" – கலந்துரையாடு.
3. உங்கள் வகுப்பறையில் மாதிரி தேர்தலை நடத்துக.
4. இந்தியாவில் மக்களாட்சியின் நிறை, குறைகளைப் பற்றி வகுப்பறையில் குழு விவாதம் செய்க.

VII. சிந்தனை வினா

1. சர்வாதிகாரத்தின் கீழ் சமத்துவத்திற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறதா? அத்தகைய நாட்டில் பொதுமக்கள் கருத்து பற்றி என்ன அணுகுமுறை இருக்கும்?
2. குடிமக்களின் அமைதியான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு மக்களாட்சி எவ்வாறு வழிவகுக்கிறது? விளக்குக.

VIII. வாழ்வியல் திறன்

குறிப்பிட்ட நாடுகளை தேர்வு செய். ஒவ்வொரு நாட்டையும் ஆராய்ந்து அந்நாட்டின் அரசாங்கம்– உயர்குடியாட்சி, முடியாட்சி, தனிநபராட்சி, சிறுகுழு ஆட்சி, மதகுருமார்கள் ஆட்சி, மக்களாட்சி, குடியரசு – இவற்றில் எந்த வகையைச் சார்ந்தது என்பதைக் கூறவும்: பின்னர் அரசாங்க வகைகளைத் தீர்மானிக்க உதவும் பண்புகளை விவரி.

நாட்டின் பெயர்	அரசாங்கத்தின் வகை	அரசாங்க வகைகளைத் தீர்மானிக்க உதவும் பண்புகள்

இணைய வளங்கள்

https://en.wikipedia.org/wiki/Government

http://eci.nic.in/eci/eci.html (The Election Commission of India)

9th Civics U1.indd 182 29-03-2018 10:22:32

www.tntextbooks.in

அலகு 2

தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள்

கற்றல் நோக்கங்கள்

- இந்தியாவில் காணப்படும் தேர்தல் முறையைப் பற்றி அறிதல்.
- இந்தியாவின் பல்வேறு வகையான தேர்தல்கள் பற்றி அறிதல்.
- அரசியல் கட்சிகளின் பொருளைப் புரிதல்.
- தேசிய கட்சி மற்றும் மாநில/பிராந்திய கட்சிகளின் நடைமுறைகளை அறிதல்.
- இந்தியாவில் உள்ள அழுத்தக் குழுக்கள் பற்றி புரிதல்.

DSXSL8

அறிமுகம்

தேர்தல் என்பது தமக்கான பொது சேவகர் ஒருவரை மக்கள் வாக்களித்து தேர்வு செய்யும் முறையாகும்.

1 இந்தியாவில் தேர்தல் முறை

இந்திய தேர்தல் முறை, இங்கிலாந்தில் பின்பற்றப்படும் தேர்தல் முறையினைப் பின்பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தியா ஒரு சமத்துவ, மதச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு நாடாகும், மற்றும் உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடாகும். தற்போதைய நவீன இந்தியாவானது ஆகஸ்ட் மாதம் 15ம் நாள் 1947ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

இந்திய அரசியலமைப்பின் XVம் பகுதியில் காணப்படும், 324 முதல் 329 வரையிலான பிரிவுகளில் கூறப்பட்டுள்ள பின்வரும் விதிமுறைக்கேற்ப நம் நாட்டின் தேர்தல் முறை அமைக்கப்பட்டிருக்கிறது.

i) நாட்டின் சுதந்திரமான, நியாயமான தேர்தலை உறுதி செய்திட தன்னிச்சையான தேர்தல் ஆணையம் அமைத்திட இந்திய அரசியலமைப்பின் பிரிவு 324ன் படி வழிவகைச் செய்கிறது. தற்போது தேர்தல் ஆணையமானது ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்களை உள்ளடக்கியுள்ளது.

ii) பாராளுமன்ற தேர்தல் சம்மந்தமான வாக்காளர்களின் பட்டியல் தயாரித்தல், தொகுதிகளை வரையறை செய்தல் உட்பட அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்டப் பிற அனைத்து விவகாரங்களைப் பெறுவதற்கான சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றலாம்.

உங்களுக்குத் தெரியுமா?



குடவோலை

தமிழ்நாட்டில் சோழர்கள் காலத்தில் குடவோலை என்னும் வாக்களிக்கும் முறை வழக்கத்தில் இருந்தது.

9th Civics Unit_2.indd 184 29-03-2018 10:23:21

iii) மாநில சட்டசபைத் தேர்தல் சம்மந்தமான வாக்காளர்களின் பட்டியல் தயாரித்தல், தொகுதிகளை வரையறை செய்தல் போன்றவற்றை அரசியலமைப்பிற்குட்பட்டு தேவையான மாற்றங்களை மாநில சட்ட சபை சட்டங்களை இயற்றலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் ஜனவரி 25ம் நாளினை தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடுகிறோம்.

1.1 தேர்தல் நடைமுறை:

தேசிய அளவில் அரசாங்கத்தின் தலைவர் பிரதமர் ஆவார். இவர் இந்திய பாராளுமன்றத்தின் கீழவையான மக்களவை (லோக்சபா) உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நம்மை போன்ற மக்களாட்சிப் பிரதிநிதித்துவ நாடுகளில் தேர்தல் முறை முக்கிய பங்கு வகிக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?


மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளரின் பெயருக்கு எதிரில் உள்ள பொத்தானை அழுத்தி வாக்குச் செலுத்தப்படுகிறது. ஒருவர் தாம் செலுத்திய வாக்குச் சரியான படி பதிவாகி உள்ளதா என்று தெரிந்து கொள்ளும் வாய்ப்பை 2014ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியது. இதை ஆங்கிலத்தில் சுருக்கமாக VVPAT (Voters Verified Paper Audit Trial) என்று குறிப்பிடுகிறார்கள்.



வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கைச் சோதனை (VVPAT)

1.2 நோட்டா (மேற்கண்ட எவரும் இல்லை (NOTA = None Of The Above)) அறிமுகம்

ஒரு மக்களாட்சி நடைபெறும் நாட்டில் உள்ள வாக்காளர்கள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரையும் தேர்வு செய்ய விருப்பம் இல்லை எனில், வாக்காளர்கள் மேற்கண்ட எவரும் இல்லை (NOTA – None Of The Above) எனும் ஓர் பொத்தானை வாக்கு இயந்திரத்தில் தேர்வு செய்யலாம். இந்திய தேர்தல் நடத்தை விதிகள், (1961)–இல் எனும் சட்டத்தின் விதி எண் 49–O இம்முறை பற்றி விவரிக்கிறது.



இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் நோட்டா (NOTA) சின்னம்

உங்களுக்குத் தெரியுமா?

2014ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முதல் முறையாக NOTA அறிமுகப்படுத்தப்பட்டது. உலகில் NOTAவை அறிமுகப்படுத்திய 14ஆவது நாடு இந்தியாவாகும்.

9th Civics Unit_2.indd 185 29-03-2018 10:23:21

www.tntextbooks.in

1.3 இந்தியாவில் தேர்தல் வகைகள்:

இந்தியாவில் இரண்டு வகையான தேர்தல்கள் நடைபெறுகின்றன. அவை நேரடித் தேர்தல் மற்றும் மறைமுகத் தேர்தல் ஆகும்.

1.3.1. நேரடித் தேர்தல்



நேரடித் தேர்தலில் வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளைத் தாங்களே நேரடியாக தேர்ந்தெடுக்கிறார்கள். 18 வயது பூர்த்தியடைந்த மக்கள் நேரடித் தேர்தல் முறையில் பங்கு பெற்று தங்களது வாக்குகளைப் பதிவு செய்கின்றனர். நேரடித் தேர்தல் முறைக்குப் பின்வரும் சில எடுத்துக்காட்டுக் காணலாம்.

i) மக்களவை தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்களை (MP) தேர்ந்தெடுத்தல்.

ii) சட்டமன்றத் தேர்தல்களில் சட்டப்பேரவை உறுப்பினர்களை (MLA) தேர்ந்தெடுத்தல்.

iii) ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல்.

1.3.1.1. நிறைகள்

i) வாக்காளர்கள் தங்களது பிரதிநிதிகளை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதால், நேரடித் தேர்தல் முறையானது வலுவான மக்களாட்சி கொண்டதாகக் கருதப்படுகிறது.

ii) அரசாங்க நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வும், தகுதியான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும் மக்களுக்குக் கற்பிக்கிறது. மேலும் மக்கள் அரசியலில் முக்கிய பங்கு வகிக்க ஊக்கமளிக்கிறது.

iii) மக்களைத் தீவிரமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டுகிறது.

1.3.1.2. குறைகள்

i) நேரடித் தேர்தல் முறை அதிக செலவு கொண்டதாக உள்ளது.

ii) எழுத்தறிவற்ற வாக்காளர்கள், பொய்யானப் பரப்புரைகளால் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள். சில நேரங்களில் சாதி, மதம் மற்றும் இன்ன பிற பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் பிரச்சாரங்கள் மற்றும் பொய்யானப் பரப்புரைகளாலும் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்.

iii) நேரடித் தேர்தல் நடத்துவது மிகப்பெரும் பணியாக இருப்பதால், ஒவ்வொரு வாக்கு மையங்களிலும் சுதந்திரமான, நியாயமான தேர்தல் முறையை உறுதி செய்வது என்பது தேர்தல் ஆணையத்திற்கு மிக பெரும் சவாலாக உள்ளது.

iv) சில அரசியல் கட்சி வேட்பாளர்கள், வாக்காளர்கள் மீது பணம், பொருள் (அ) பணிகள் மூலமாக தங்களது செல்வாக்கைச் செலுத்துவது என்பது ஒரு மற்றொரு சவாலாகும்.

v) தேர்தல் பரப்புரைகளின் போது சில நேரங்களில் வன்முறைகள், பதற்றங்கள், சட்டம் – ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை முறை பாதிக்கப்படுகிறது.

1.3.2 மறைமுகத் தேர்தல்

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வாக்களித்துத் தேர்வு செய்யும் முறையே மறைமுகத் தேர்தல் ஆகும். குடியரசுத் தலைவர் தேர்தலில் இத்தகைய முறையானது கடைபிடிக்கப்படுகிறது.

1.3.2.1 நிறைகள்

i) மறைமுகத் தேர்தல்கள் நடத்த செலவு குறைவானதாகும்.

9th Civics Unit_2.indd 186 29-03-2018 10:23:21

ii) மறைமுக தேர்தல் முறையானது பெரிய நாடுகளுக்கு உகந்தது.

1.3.2.2. குறைகள்

i) வாக்காளர் எண்ணிக்கைக் குறைவாக இருப்பதால் ஊழல், கையூட்டு, குதிரை பேரம் ஆகியவற்றிற்கு வாய்ப்புகள் அதிகம் காணப்படும்.

ii) மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க நேரடியாக பங்கு பெறாமல், மாறாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகளே இம்முறையில் பங்குபெறுவதால், மக்கள் பிரதிநிதித்துவம் குறைந்த மக்களாட்சி முறையாக காணப்படுகிறது. எனவே, மக்களின் உண்மையான விருப்பத்தை பிரதிபலிக்காமல் இருக்க நேரிடுகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

இந்திய குடியரசுத் தலைவர் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

இந்திய குடியரசுத் தலைவர் பின்வரும் உறுப்பினர்கள் கொண்ட தேர்தல் குழாம் (Electoral College) மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவை

1. பாராளுமன்றத்தின் இரு அவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்
2. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்

குறிப்பு: பாராளுமன்ற இரு அவைகள் மற்றும் மாநில சட்டமன்றங்களில் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர்கள் இக்குழுவில் அங்கம் இடம் பெறமாட்டார்கள்.

2. அரசியல் கட்சிகள்

மக்களாட்சி அரசாங்கத்தில் அரசியல் கட்சிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த அரசியல் கட்சிகள் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகிறது.

2.1 அரசியல் கட்சி என்பதன் பொருள்:

ஓர் அரசியல் கட்சி என்பது அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்காகத் தேர்தலில் போட்டியிடுவதற்கான நிகழ்ச்சி நிரல்களையும், குறிப்பிட்டக் கொள்கைகளையும் கொண்ட, மக்கள் குழுவின் அமைப்பாகக் காணப்படும். தலைவர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் எனும் மூன்று அங்கங்களை ஓர் அரசியல் கட்சி பெற்றுள்ளது.

2.2 கட்சி முறையின் வகைகள்:

உலகில் கட்சி முறையினை மூன்று வகைகளாக வகைப்படுத்தலாம்.

i) ஒரு கட்சி முறை – ஒரே ஒரு ஆளும் கட்சி மட்டும் பங்கு பெறுவது ஆகும். இம்முறையில் எதிர்கட்சிகள் அனுமதிக்கப்படுவதில்லை. (எ.கா. சீனா, கியூபா, முன்னாள் சோவியத் யூனியன்)


ii) இரு கட்சி முறை – இரு முக்கிய கட்சிகள் மட்டுமே பங்கு பெறுவது ஆகும். (எ.கா. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து)

iii) பல கட்சி முறை – இரண்டிற்கும் மேற்பட்ட கட்சிகள் பங்கு பெறுவது ஆகும். (எ.கா. இந்தியா, இலங்கை, பிரான்ஸ், இத்தாலி)

2.3. அரசியல் கட்சியின் வகைகள்:

இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளானது செல்வாக்குப் பெறும் பிரதேசத்திற்கு ஏற்ப இரு முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை 1) தேசியக் கட்சிகள் 2) மாநிலக் கட்சிகள்.

9th Civics Unit_2.indd 187 29-03-2018 10:23:22



2.3.1. தேசியக் கட்சிகள்

ஒரு கட்சி குறைந்தது நான்கு மாநிலங்களிலாவது மாநிலக் கட்சி என்ற தகுதியை பெற்றிருக்குமானால் அது 'தேசியக் கட்சி' என்ற தகுதியை பெறுகிறது. அனைத்து அரசியல் கட்சிகளும் இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்தல் வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் அனைத்து அரசியல் கட்சிகளையும் சமமாகப் பாவித்தப் போதிலும், தேசியக் கட்சிகளுக்கும், மாநிலக் கட்சிகளுக்கும் சில சிறப்புச் சலுகைகளை வழங்குகிறது. இக்கட்சிகளுக்கு தனித்தனிச் சின்னங்கள் வழங்கப்படுகிறது. ஒரு கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளர் மட்டுமே அக்கட்சியின் சின்னத்தை உபயோகிக்க முடியும். 2017 நிலவரப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய கட்சிகளின் எண்ணிக்கை ஏழு ஆகும்.

2.3.2. மாநிலக் கட்சிகள்

ஏழு தேசிய கட்சிகளைத் தவிர, நாட்டின் பெரும்பான்மையான முக்கிய கட்சிகளை "மாநிலக் கட்சி"களாக தேர்தல் ஆணையம் வகைப்படுத்தியிருக்கிறது. இக்கட்சிகள் பொதுவாகப் "பிராந்தியக் கட்சிகள்" என்று குறிப்பிடுவர். மக்களவை தேர்தலிலோ அல்லது மாநில சட்டசபைத் தேர்தலிலோ ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இடங்களை வெற்றி பெற்ற அல்லது குறிப்பிட்ட சதவிகித வாக்குகளைப் பெற்றதன் அடிப்படையில் இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு கட்சியை மாநிலக் கட்சியாக அங்கீகாரம் அளிக்கிறது.

2.3.3. *கட்சிகளின் அங்கீகாரம்*

இந்தியத் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி தேசியக் கட்சி எனும் பங்கு பெற பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

i) மக்களவை தேர்தலிலோ (அ) மாநில சட்டசபைத் தேர்தலிலோ குறைந்தபட்சம் நான்கு மாநிலங்களில் பதிவான மொத்தச் செல்லத்தகுந்த வாக்குகளில் குறைந்தபட்சம் 6% பெற்றிருக்க வேண்டும்.

ii) மக்களவையில் குறைந்தபட்சம் 2 சதவீத இடங்களில் வெற்றி பெற வேண்டும். மேலும் குறைந்தபட்சம் மூன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

iii) குறைந்தபட்சம் நான்கு மாநிலங்களில் 'மாநிலக் கட்சியாக' அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

2.3.4. அரசியல்கட்சிகளின்செயல்பாடுகள்:

- கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடுகின்றன. பெரும்பாலான மக்களாட்சி நாடுகளில் கட்சிகளால் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் இடையேதான் கடும் போட்டிகள் நிலவுகின்றன.
- கட்சிகள் தங்களைத் தேர்ந்தெடுக்க அவர்களது கொள்கைகளையும், திட்டங்களையும் தேர்தல் தொகுதிகளில் முன்னிறுத்துகின்றனர்.

9th Civics Unit_2.indd 188 29-03-2018 10:23:22

- நாட்டில் சட்டங்கள் இயற்றுவதில் அரசியல் கட்சிகள் முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. முறையாக சட்டங்கள் நாடாளுமன்றங்களிலும், சட்டமன்றங்களிலும் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.
- அரசியல் கட்சிகள் அரசாங்கத்தினை அமைத்து, அவற்றை வழிநடத்துகின்றனர்.
- தேர்தலில் தோல்வியடைந்த கட்சிகள் எதிர்கட்சியாகப் பங்களிப்புச் செய்கின்றன. இவை அரசின் குறைகள் மற்றும், தவறான கொள்கைகளை எதிர்த்து பல்வேறுபட்ட பார்வைகளை முன்வைக்கின்றன, விமர்சனம் செய்கின்றன.
- மக்கள் கருத்திற்கு அரசியல் கட்சிகள் வடிவம் கொடுக்கின்றன. மேலும் அவை முக்கிய நிகழ்வுகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றன.
- அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் இருக்கின்றன.

2.4 மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு

மக்களாட்சியில், அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போல் இரு கட்சி ஆட்சி முறையோ அல்லது இந்தியா, பிரெஞ்சு நாடுகளைப்போல் பல கட்சி ஆட்சி முறையோ இருக்கலாம். பெரும்பான்மை மக்களின் ஆதரவு பெற்றக் கட்சியாக ஆளும் கட்சியும், எஞ்சிய மக்களின் ஆதரவு பெற்றக் கட்சியாக எதிர் கட்சியும் இருக்கும். மக்களாட்சி முறையிலான அனைத்து அரசாங்கங்களிலும் எதிர்கட்சித் தலைவர் முக்கிய பங்கை வகிக்கிறார். இவர் கேபினட் அமைச்சர் தகுதி பெறுகிறார். இவர் பொது நடவடிக்கைகளை பாதிக்கும் ஆளும் கட்சியின் தவறான கொள்கைகளை எதிர்க்கிறார். பொதுக்கணக்குக் குழுவின் தலைவராக இவர் அரசுத் துறைகளின் செயல்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்குவதோடு மக்கள் நலனுக்காகச் செலவிடப்படும் பொதுப் பணத்தை ஆய்வு செய்கிறார். இதே போன்று அவர் மத்தியக் கண்காணிப்பு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பிலும் முக்கியப் பங்கு வகிக்கிறார். மக்களாட்சியில் எதிர்க்கட்சிகள் ஒரு பொறுப்பானப் பங்கினையும் மக்களின் நியாயமானக் கோரிக்கைகள் மற்றும் விருப்பத்தையும் பிரதிபலிக்கின்றது.

3 அழுத்தக் குழுக்கள்

அழுத்தக் குழுக்கள் என்ற சொல் ஐக்கிய அமெரிக்க நாட்டில் உருவாக்கப்பட்டது. பொது நலன்களைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் தீவிரமாக செயல்படும் குழு அழுத்தக் குழு என்று அழைக்கப்படுகிறது. அரசு மீது அழுத்தம் செலுத்தி அரசின் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வரும்படி நெருக்கடி தருவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

அழுத்தக் குழுக்கள் 'நலக்குழுக்கள்' அல்லது தனிப்பட்ட நலக்குழுக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. அதே சமயம் இவை அரசியல் கட்சியிலிருந்து வேறுபட்டவை. தேர்தலில் போட்டியிடுவதில்லை. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற விளைவதும் இல்லை.




9th Civics Unit_2.indd 189 29-03-2018 10:23:22

3.1. இந்தியாவில் அழுத்தக் குழுக்கள்

இந்தியாவில் தற்போது அதிக எண்ணிக்கையிலான அழுத்தக் குழுக்கள் உள்ளன. ஆனால் அவைகள் அமெரிக்கா அல்லது மேற்கத்திய நாடுகளான இங்கிலாந்து, பிரெஞ்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் இருப்பதைப் போல் வளர்ச்சி அடைந்தவையாக காணப்படுவதில்லை.

அழுத்தக் குழுக்கள்



இந்தியாவில் செயல்படும் அழுத்தக் குழுக்களைக் கீழ்க்காணும் வகைகளாக வகைப்படுத்தலாம்.

1. வணிகக்குழுக்கள்
2. தொழிற்சங்கங்கள்
3. விவசாயக் குழுக்கள்
4. தொழில் முறைக் குழுக்கள்
5. மாணவர் அமைப்புகள்
6. மத அமைப்புகள்
7. பழங்குடி அமைப்புகள்
8. மொழிக் குழுக்கள்
9. கோட்பாட்டு அடிப்படைக் குழுக்கள்
10. சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்கள்

E27FH1

3.1.1. இந்தியாவில் அழுத்தக் குழுக்களின் செயல்பாடுகள்

அரசின் கொள்கையில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் குறிப்பிட்ட நலன்களைப்

உங்களுக்குத் தெரியுமா?

அழுத்தக் குழுக்களுக்கான எடுத்துக்காட்டுகள்

1. இந்திய வணிகம் மற்றும் தொழிற்துறை சம்மேளத்தின் கூட்டமைப்பு (FICCI)
2. அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC)
3. அகில இந்திய விவசாயிகள் சங்கம் (AIKS)
4. இந்திய மருத்துவச் சங்கம் (IMA)
5. அகில இந்திய மாணவர் சம்மேளனம் (AISF)
6. அகில இந்திய சீக்கிய மாணவர் பேரவை
7. இளம் பதாகா சங்கம்(YBA)
8. தமிழ்ச் சங்கம்
9. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்
10. நர்மதா பச்சாவோ அந்தோலன்

பெறச் செயல்படும் நலக் குழுக்கள் அழுத்தக் குழுக்கள் எனப்படும். அவை எந்த அரசியல் கட்சியுடனும் அணி சேருவதில்லை. ஆனால் மறைமுக முடிவுகள் எடுப்பதில் அதிக செல்வாக்குச் செலுத்தும் அளவுக்கு ஆற்றல் மிக்கவை. பிரதிநிதித்துவப்படுத்துதல், அரசியல் பங்கேற்பு, கல்வி, கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை அமலாக்கம் போன்ற பல வகைகளான செயல்பாடுகளை அழுத்தக் குழுக்கள் மேற்கொள்கின்றன.

3.1.1.1. அரசியல் பங்கேற்பு

அரசியலின் மற்றொரு முகம் என்று அழுத்தக் குழுக்களைக் கூறலாம். மனுக்கள், பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் போன்ற அரசியல் செயல்பாடுகள் மூலம் மக்கள் ஆதரவைத் திரட்டி தங்கள் செல்வாக்கினை

9th Civics Unit_2.indd 190 29-03-2018 10:23:22

அழுத்தக் குழுக்கள் விரிவுபடுத்துகின்றன. இத்தகைய செயல்பாடுகள் இளைய சமுதாயத்தினரை வெகுவாகக் கவர்ந்திழுக்கின்றன.

3.1.1.2 கல்வி

பல அழுத்தக் குழுக்கள் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது, இணையத்தளம் பராமரிப்பு, அரசுப் கொள்கைகள் மீது கருத்துகள் வெளியிடுவது மற்றும் உயர்நிலைக் கல்வியாளர்கள், அறிவியலாளர்கள் மட்டுமல்லாமல் முக்கிய பிரபலங்களிடமிருந்தும் கருத்துகளைத் திரட்டி வல்லுநர்களின் ஆதரவினைப் பெறுவது ஆகிய செயல்பாடுகளில் ஈடுபடுகின்றன.

3.1.1.3. கொள்கை உருவாக்கம்

அழுத்தக் குழுவினர் கொள்கைகளை உருவாக்குபவர்கள் இல்லை என்ற போதிலும் கொள்கை உருவாக்கச் செயல்முறைகளில் அவர்கள் பங்கேற்பதைத் தடுப்பதில்லை. அரசுக்குத் தகவல் அளிப்பதிலும், ஆலோசனைகளை வழங்குவதிலும் இந்த அழுத்தக் குழுவினர் வலுவான பங்களிப்புச் செய்து வருகின்றனர். கொள்கை உருவாக்கச் செயல்முறைகளில் அவர்கள் தொடர்ந்து ஆலோசனை தருகின்றன.

4. மக்கள் குழுவும் பங்கேற்பும்

4.1 மக்கள் குழு

மக்களின் வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக மேம்படுத்தும் சமூக ரீதியிலான ஆக்கப்பூர்வ செயல்பாடுகளை நோக்கி மக்கள் குழுவை திரட்டுவது அவசியமே. சில நேரங்களில் நில நடுக்கம், சுனாமி, வெள்ளப்பெருக்கு மற்றும் பிற இயற்கைப் பேரிடர்கள் நிகழும் போது மீட்பு, நிவாரணம் போன்ற அவசரப் பணிகளுக்கு உடனடியாக மக்களைத் திரட்ட நேரிடும்.

4.2 மக்களாட்சியில் பங்கேற்பு

நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களில் மக்கள் பெருவாரியாகப் பங்கேற்கும்போதே மக்களாட்சி அமைப்பு வெற்றிகரமாக இயங்க முடியும். அதே சமயத்தில் வரி மற்றும் வருவாய் வசூலிக்கும் முறையிலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சுத்தம் சுகாதாரம், உடல் ஆரோக்கியம் மற்றும் போலியோ சொட்டுமருந்து அளித்தல் போன்ற சிறப்புத் திட்டங்களிலும் ஒவ்வொரு குடிமகனும் சிறிய உள்ளூர் குழுக்களும் பங்கு பெறும் போது மட்டுமே மக்களாட்சி வெற்றி பெற முடியும்.

எனவே, மக்களாட்சி அரசாங்கத்தை விட சிறந்த அரசாங்கம் இல்லை என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். சிறந்த சமூகத்தையும் நாட்டையும் உருவாக்க, இந்திய மக்களாகிய நாம் மத்திய மற்றும் மாநில அரசாங்கத்துடன் இணைந்து மனித வாழ்க்கையின் துன்பங்களை ஒழித்திட ஒற்றுமையுடன் போராட வேண்டும்.

மீள்பார்வை:

- பிரதம அமைச்சர் மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- தேர்தல்கள் இரண்டு வகைப்படும். அவை நேரடித் தேர்தல்கள், மறைமுகத் தேர்தல்கள்.
- ஒரு அரசியல் கட்சிக்கு ஒரு தலைவர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் என மூன்று பகுதிகள் உள்ளன.
- இந்தியாவில் அரசியல் கட்சிகளை தேசியக் கட்சிகள் மற்றும் மாநிலக் கட்சிகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.
- 2017ம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவில் ஏழு தேசியக் கட்சிகள் உள்ளன.
- அழுத்தக்குழு என்ற சொல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உருவாக்கப்பட்டது.
- இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான அழுத்தக் குழுக்கள் உள்ளன.

9th Civics Unit_2.indd 191 29-03-2018 10:23:22

கலைச் சொற்கள்

1. நாடாளுமன்றம்/சட்டமன்றம் – ஒரு நாட்டின் அல்லது மாநிலத்தின் சட்டமியற்றும் அமைப்பு
2. தொகுதி – சட்டசபை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க, வாக்காளர்கள் அடங்கிய குறிப்பிட்டப் பகுதி.
3. நோட்டா (NOTA) – மக்களாட்சி நாட்டிலுள்ள மக்கள், எந்த ஒரு பிரதிநிதிகளையும் தேர்வு செய்ய விருப்பம் இல்லாத போது அவர்கள் தேர்வு செய்யும் ஓர் வாக்கு முறையே நோட்டா. (NOTA – மேற்கண்ட எவரும் இல்லை).
4. அழுத்தக் குழுக்கள் – பொது நலன்களைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் தீவிரமாக செயல்படும் குழுக்கள்.

பயிற்சிகள்

E2GBIN

I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. கீழ்க்கண்ட நாட்டின் தேர்தல் முறையினை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது.

அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
ஆ) இங்கிலாந்து
இ) கனடா
ஈ) ரஷ்யா

2. இந்திய தேர்தல் ஆணையம் ஒரு

அ) சுதந்திரமான அமைப்பு
ஆ) சட்டபூர்வ அமைப்பு
இ) தனியார் அமைப்பு
ஈ) பொது நிறுவனம்

3. இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழிவகை செய்யும் அரசியலமைப்பு பிரிவு

அ) பிரிவு 280 ஆ) பிரிவு 315
இ) பிரிவு 314 ஈ) பிரிவு 325

4. இந்திய அரசியலமைப்பின் எந்த பகுதி தேர்தல் ஆணையத்தைப் பற்றி கூறுகிறது?

அ) பகுதி III ஆ) பகுதி XV
இ) பகுதி XX ஈ) பகுதி XXII

5. பல்வேறு அரசியல் கட்சிகளைத் தேசியக் கட்சியாகவோ அல்லது மாநிலக் கட்சியாகவோ அங்கீகரிப்பவர்/ அங்கீகரிப்பது.

அ) குடியரசுத் தலைவர்
ஆ) தேர்தல் ஆணையம்
இ) நாடாளுமன்றம்
ஈ)தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர்

6. கூற்று (A): இந்திய அரசியலமைப்புச் சுதந்திரமாக செயல்படும் தேர்தல் ஆணையத்திற்கு வழிவகைச் செய்கிறது.
காரணம் (R): இது நாட்டின் சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்த உறுதி செய்கிறது.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை
இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது

9th Civics Unit_2.indd 192 29-03-2018 10:23:22

7. நோட்டா (NOTA) முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு

அ) 2012 ஆ) 2013

இ) 2014 ஈ) 2015

8. அழுத்தக்குழுக்கள் எனும் சொல்லினை உருவாக்கிய நாடு

அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

ஆ) இங்கிலாந்து

இ) முன்னாள் சோவியத் யூனியன்

ஈ) இந்தியா

9. கூற்று(A): இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான அழுத்தக்குழுக்கள் காணப்படுகின்றன.

காரணம் (R): அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதை போல இந்தியாவில் அழுத்தக் குழுக்கள் வளர்ச்சியடையவில்லை.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை

இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது

ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்திய தேர்தல் ஆணையம் _____ உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.
2. தேசிய வாக்காளர்கள் தினம் அனுசரிக்கப்படும் நாள் _____
3. இந்தியாவில் _____ கட்சி முறை பின்பற்றப்படுகிறது.
4. 2017ல் அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கட்சிகளின் எண்ணிக்கை _____
5. நர்மதா பச்சோவோ அந்தோலன் என்பது ஒரு _____

III. பொருத்துக.

1. தேசியக் கட்சி – வணிகக் குழுக்கள்
2. ஒரு கட்சி ஆட்சி முறை – அமெரிக்க ஐக்கிய நாடுகள்
3. இரு கட்சி ஆட்சி முறை – சீனா
4. அழுத்தக் குழுக்கள் – ஏழு

IV. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி

1. இந்தியாவிலுள்ள தேர்தல் முறைப் பற்றி விவரி.
2. அரசியல் கட்சி என்பதன் பொருளை விளக்குக.
3. இரு கட்சி ஆட்சிமுறை மற்றும் பல கட்சி ஆட்சிமுறையினை வேறுபடுத்துக.
4. அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன?

V. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி

1. நேரடித் தேர்தலின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதி.
2. அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் யாவை?
3. இந்தியாவில் அழுத்தக் குழுக்களின் செயல்பாடுகள் யாவை?

VI. செய்முறைகள் மற்றும் செயல்பாடுகள்

1. தேசியக் கட்சிகள் மற்றும் மாநில கட்சிகளின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சாதனைகளை ஒப்பிடுக.

VII. சிந்தனை வினா

1. தேர்தல்கள் பிரதிநிதித்துவ மக்களாட்சியில் முக்கியத்துவமாகக் கருதப்படுகின்றது. ஏன்?

9th Civics Unit_2.indd 193 29-03-2018 10:23:22

UNIT 1

மனித உரிமைகள்



கற்றல் நோக்கங்கள்

- மனித உரிமைகளைப் பாதுகாக்க உலக அளவில் எடுக்கப்படும் முயற்சிகளைப் பற்றி அறிந்து கொள்ளல்.
- இந்திய அரசமைப்பில் இடம்பெற்றுள்ள அடிப்படை உரிமைகள் பற்றி புரிந்து கொள்ளல்.
- மனித உரிமைகளுடன் தொடர்புடைய சிக்கல்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் பணிகளைப் பற்றி புரிந்து கொள்ளல்.
- மனித உரிமைகளின் வகைகளைப் பற்றி தெரிந்து கொள்ளல்.

B8YC1A

இப்பாடம் மனித உரிமைகளுக்காகப் போராடிய நிறுவனங்களின் வரலாற்றின் ஊடே பயணிக்கிறது. மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பேரறிக்கை (UDHR) மனித உரிமைகளை உறுதி செய்து வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது. இந்திய அரசமைப்பில் இடம்பெற்றுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றியும் தேசிய மற்றும் மாநில மனித உரிமை ஆணையங்கள் பற்றியும் அவற்றின் செயல்பாடுகள் பற்றியும் விளக்குகிறது. குழந்தைகள் உரிமைகள், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் போன்ற மனித உரிமை வகைமைகள் பற்றியும் விளக்குகிறது.

1893ஆம் ஆண்டு ஜூன் மாதம் தென் ஆப்பிரிக்காவில் உள்ள பிரிடோரியா என்னும் இடத்திற்கு தொடர்வண்டியில், முதல் வகுப்பில் வெள்ளையர் அல்லாத ஒருவர் பயணம் செய்து கொண்டிருந்தார். வழியில் வண்டியில் ஏறிய வெள்ளை இனத்தவர் ஒருவர், வெள்ளையரல்லாதவரை முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்புப் பெட்டிக்கு செல்லும்படி கட்டளையிட்டார். முதல் வகுப்பு பயணச் சீட்டை வைத்திருந்த வெள்ளையரல்லாதவர், அவ்வாறு செல்ல மறுத்தபோது, பீட்டர்மரிட்ஸ்பர்க் என்ற இடத்தில் ஓடும் வண்டியிலிருந்து தள்ளிவிடப்பட்டார். அவ்விரவு நேர கடுங்குளிரில் அந்நிலையத்தில் குளிர் நடுக்கத்தில் உட்கார்ந்து இருந்தபோது அவரிடம் துளிர்விட்ட சிந்தனை,

அவர் வாழ்வின் திசையை மாற்றியது. அந்நொடியிலிருந்து அகிம்சை வழி நின்று இனஒதுக்கல் கொள்கைக்கு எதிராக தன் வாழ்நாள் முழுவதும் போராட அந்த நபர் உறுதி பூண்டார்.

அந்நபர் யாரென்று ஊகித்தீர்களா? அவர் வேறு யாருமல்ல; நமது தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகள்தான். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் உள்ளிட்ட வெள்ளையர் அல்லாதவர்களுக்கு எதிராக நிலவிய இனஒதுக்கல் கொள்கையை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற முக்கியமான முடிவு அவரை அந்நாட்டிலேயே தங்க வைத்தது. அப்போராட்டத்தில் உருவானது தான் காந்தியின் சத்தியாகிரகம் என்ற தனித்துவமான அமைதி வழிப்போராட்டம்.

இந்த நிகழ்வினைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

முதல் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்ய அவருக்கு உரிமை உண்டு என எண்ணுகிறீர்களா?



தென் ஆப்பிரிக்காவில் காந்தி



பீட்டர்மரிட்ஸ்பேர்க் இரயில்வண்டி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுக் கல்வெட்டு

ஒரு மனிதராக, முதல் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்ய காந்திக்கு எல்லா உரிமைகளும் இருந்தன. ஆனால், அவரைப் பாகுபடுத்திக் காட்டியது அவரது நிறமே. மக்கள் நிறத்தால் மட்டுமின்றி, இனம், பாலினம், பிறந்த நாடு, சாதி மற்றும் மதம் போன்றவற்றின் அடிப்படையிலும் பாகுபடுத்தப்படுகின்றனர்.

இப்பாகுபாடுகளினால், மக்கள் தங்கள் அடிப்படை மனித உரிமைகளை அனுபவிக்க இயலாமல் போகின்றது.

1 மனித உரிமைகள் என்றால் என்ன?

ஐ.நா. சபை மனித உரிமைகளைப் பின்வருமாறு வரையறுக்கிறது. "இன, பாலின, தேசிய, இனக்குழு, மொழி, மதம் அல்லது வேறு தகுதி அடிப்படையைப் பொருத்து மாறுபடாமல் மனிதர்களாகப் பிறக்கும் அனைவருக்கும் மரபாக இருக்கும் உரிமையே மனித உரிமை ஆகும். எவர் ஒருவருக்கும் இந்த உரிமையை வழங்குவதில் பாரபட்சம் காட்டக் கூடாது.

மனித உரிமையின் வரலாற்று வேர்கள், உலகின் பல முக்கிய நிகழ்வுகளில் ஊடுருவி சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றினை நிலை நிறுத்தியுள்ளன. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை சமாளிக்கவும், எதிர்காலத்தில் உலகப்போர் போன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும், 1945–ல் ஐ.நா. சபை தொடங்கப்பட்டது.

மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை (The Universal Declaration of Human Rights) பெரும்பங்கு வகிக்கின்றது.

2 உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை (UDHR)

வெவ்வேறு சட்ட மற்றும் பண்பாட்டுப் பின்னணியுடன் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து, கலந்துகொண்ட பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் பேரறிக்கை (Universal Declaration of Human Rights) மனித உரிமைகள் வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும். 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று பாரிசில் நடைபெற்ற ஐ.நா. பொது சபையில் நிறைவேற்றப்பட்ட (பொது சபை தீர்மானம் 217A) இந்தப் பேரறிக்கை, அனைத்துலக நாடுகள் மற்றும் அனைத்துலக மக்களின் பொதுத்தர சாதனை ஆகும். அடிப்படை மனித உரிமைகள் உலகளவில்

இறுதிக்கு வந்த இன ஒதுக்கல் கொள்கை



சிறையில் 27வருடங்கள் கழித்த மண்டேலா விடுதலையின்போது கைகளை உயர்த்தும் காட்சி.

இன ஒதுக்கல் (Apartheid) தென்னாப்பிரிக்காவில் காணப்பட்ட இனப்பாகுபாடு ஆகும். வசிப்பிடங்களும் இனத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன. குறைந்த எண்ணிக்கையிலான வெள்ளை இனத்தவர் அதிக எண்ணிக்கையிலான கறுப்பினத்தவரின் மீது ஆதிக்கம் செலுத்திய இந்த இனஒதுக்கல் கொள்கைக்கு எதிராக தென்னாப்பிரிக்க மக்கள் போராடினர்.

நெல்சன் மண்டேலா இன ஒதுக்கல் எனப்படும் கொள்கைக்கு எதிராக தொடர்ச்சியாகப் போராடினார். அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தியபோது, சிறையில் தள்ளப்பட்டார்.

உள்நாட்டிலும், உலக நாடுகளிடமிருந்தும் அவரது போராட்டத்திற்கு ஆதரவு பெருகியபோது, இனரீதியான உள்நாட்டு போர் ஏற்படுமோ என்ற அச்சத்தினால், தென்னாப்பிரிக்க தலைவர் F.W. டி கிளார்க் 1990–ல் அவரை விடுதலை செய்தார்.

மண்டேலா மற்றும் டி கிளார்க் ஆகியோரது கடும் முயற்சியினால் இன ஒதுக்கல் கொள்கை ஒரு முடிவிற்கு வந்தது. 1994ல் பல்லினப்பொதுத் தேர்தல் நடைபெற்றபொழுது, மண்டேலாவின் தலைமையிலான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்று, அந்நாட்டின் தலைவரானார்.

பாதுகாக்கப்படவேண்டும் எனும் நோக்கம் கொண்ட முதல் பேரறிக்கையான இது பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது.

மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பேரறிக்கையில் 30 உறுப்புகள் (articles) உள்ளன. அது சுதந்திரத்திற்கான உரிமையை உறுதி செய்வதோடு குடிமை, அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகளையும் தருகிறது. இவ்வுரிமைகள் இனம், பால், தேசியம் ஆகியவற்றைக் கடந்து அனைத்து மக்களுக்கும் பொருந்தும். ஏனெனில் மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவும், சம உரிமையோடும் பிறக்கின்றனர்.

இந்த பேரறிக்கையின் பொது விளக்கமானது சட்டபூர்வமாக பிணைக்கப்பட்ட ஆவணம் அல்ல என்ற போதிலும் அது அரசியல் மற்றும் அறநெறிசார் முக்கியத்துவம் உடையது. மேலும் அதில் இடம்பெற்றுள்ள பெரும்பான்மையான உத்திரவாதங்கள் இக்காலத்தில் தரம்மிக்க விதிமுறைகளாக நிலைபெற்று விளங்குகின்றன.

சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள்:–

சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள் இரண்டாம் உலகப் போரின் விளைவுகளுக்குப்பின் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் சட்டத்தின் ஒரு பகுதியாகும்.

ஒரு சமூகத்தில் முழுமையாகப் பங்காற்றத் தேவைப்படும் உரிமைகளே சமூக உரிமைகள். ஒவ்வொரு மனிதனும் தனது தேவைகளை நிறைவேற்றக்கூடிய பொருளாதார நிலைக்கு உறுதி அளிப்பவை பொருளாதார உரிமைகள். ஒரு நாட்டில் சட்டத்திற்கு உட்பட்ட பொருளாதார சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியன இதனால் பாதுகாக்கப்படுகின்றன. ஒவ்வொருவரும் தமது பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் உரிமைகளை உறுதிப்படுத்துபவை பண்பாட்டு உரிமைகள். பண்பாட்டு மகிழ்வில் சமத்துவம், மனித கண்ணியம், பாகுபாடின்மை ஆகியவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது.

குடிமை மற்றும் அரசியல் உரிமைகள்

அரசு, சமூக நிறுவனங்கள் மற்றும் தனியாரின் அத்துமீறல்களிடமிருந்து ஒரு தனிமனிதனின் சுதந்திரத்தைப் பாதுகாப்பவையே இவ்வுரிமைகள். ஒருவர் சமூகத்தின் குடிமை மற்றும் அரசியல் வாழ்வில் பங்கேற்கும் திறமையை உறுதி செய்கின்றன.

குடிமை உரிமைகள் என்பன ஒவ்வொரு மனிதனுக்கும் இன, தேசிய, நிற, பால், வயது, சமய போன்ற பாகுபாடுகளின்றி, அரசின் சட்டத்தால் தரப்படும் உரிமைகளைக் குறிக்கின்றது.

அரசாங்கம் அமைக்கவும், நிர்வாகம் செய்யவும் பயன்படுத்தப்படும் உரிமைகளே அரசியல் உரிமைகள் ஆகும், இவை சட்டத்தின் மூலம் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நாட்டின் நிர்வாகத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ குடிமக்கள் பங்காற்றும் அதிகாரத்தை இவ்வுரிமைகள் அளிக்கின்றன.

3 இந்தியாவில் அடிப்படை உரிமைகள்


ஒரு மனிதனின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் தேவையான உரிமைகள் அடிப்படை உரிமைகள் எனப்படும். இவை குடிமக்களுக்கு பேசும் உரிமை, விரும்பிய இடத்தில் வாழும் உரிமை போன்ற மேலும் சில உரிமைகளை வழங்கி மனித வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகின்றன.

அடிப்படை உரிமைகள்

- சமத்துவ உரிமை
- சுதந்திர உரிமை
- சுரண்டலுக்கு எதிரான உரிமை
- சமய மற்றும் மனச்சான்று சுதந்திரத்திற்கான உரிமை
- சிறுபான்மையினருக்கான பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள்
- அரசமைப்புச் சட்ட வழி தீர்வுகளுக்கான உரிமை

சமத்துவ உரிமை

சட்டத்தின் முன் அனைவரும் சமம், சட்டத்தின் மூலம் அனைவருக்கும் சம பாதுகாப்பு என்பதே இவ்வுரிமை ஆகும். சமயம், இனம், பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுப்படுத்தலோ, ஒதுக்குதலோ சட்டத்திற்கு புறம்பானதாகும். அவ்வாறு நடத்தப்பட்டால் ஒருவர் நீதிமன்றத்தை அணுகலாம்.



இப்படம் குறித்து உங்கள் கருத்தைப் பகிரவும்

சுதந்திர உரிமை

ஆறு வகையான சுதந்திரங்கள் நமது அரசமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை:

- பேச்சுரிமை.
- ஆயுதமின்றி கூடும் உரிமை.
- சங்கங்கள் அமைக்கும் உரிமை.
- இந்தியாவில் எந்த பகுதியிலும் வசிக்கும் உரிமை.
- இந்தியா முழுவதும் சுதந்திரமாக நடமாடும் உரிமை.
- எந்த தொழிலையும், வணிகத்தையும் செய்யும் உரிமை.



சுரண்டலுக்கெதிரான உரிமை

14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை சுரங்கங்கள், அல்லது மற்ற அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவது சட்டப்படி குற்றமாகும். எந்த ஒரு ஒப்பந்ததாரரோ, முதலாளியோ ஒரு தொழிலாளியை அவரது விருப்பத்திற்கு எதிராக ஒரு வேலையில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்த முடியாது.



சமயச் சுதந்திரம் மற்றும் பகுத்தறிவுக்கான உரிமை

குடிமக்கள் தாங்கள் விரும்பிய சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் உரிமை அளிக்கிறது. குடிமக்கள் சில சமய நம்பிக்கைகளை ஏற்று பின்பற்றுவதற்கு அல்லது சமய நம்பிக்கைகளின்றி தங்கள் மனசாட்சிபடி வாழ்வதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது



பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள்

அரசமைப்பு கூட்டம் பண்பாட்டினைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் உரிமையை வழங்கியுள்ளது. கல்விக்கூடங்களை அமைக்கவும், நமது பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் நமக்கு உரிமை உள்ளது. சமயச்சார்பு கல்வி அளிக்க மக்கள் மத நிறுவனங்களை நிறுவலாம். அரசு அதற்கு மானியங்களை வழங்குகின்றது. இருப்பினும், சாதி, நிற, இனம் அல்லது சமய வேறுபாட்டினைக் காரணம் கூறி யாருக்கும் இவ்வகை நிறுவனங்களில் அனுமதி மறுத்தல் கூடாது.

உங்களுக்குத் தெரியுமா?

நீதிப் பேராணை (writ) என்பது ஒரு செயலை செய்யவோ அல்லது அச்செயலை தடுக்கவோ, நீதிமன்றத்தால் அல்லது வேறு சட்ட அமைப்பினால் வழங்கப்படும் எழுத்துப்பூர்வமான உத்தரவு.

மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு இடையிலான வேறுபாடுகள்

மனித உரிமைகள்	அடிப்படை உரிமைகள்
• மனிதன் தன்மானத்தோடும், சுதந்திரத் தோடும் வாழுகின்ற உரிமைகள் இவை.	• அரசமைப்பில் காணப்படும் குடிமக்களின் ஆதார உரிமைகள் அடிப்படை உரிமைகள் எனப்படும். இவை சட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படலாம்.
• மனிதனின் வாழ்வில் அடிப்படைத் தேவைகளுக்கான உரிமைகள் இதில் அடங்கியுள்ளன. இவற்றைப் பறிக்க இயலாது.	• மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள உரிமைகளும், அடிப்படை உரிமைகளில் அடங்கும்.
• மனித உரிமைகள் பன்னாடு அளவில் அங்கீகரிக்கப்பட்டவை.	• அடிப்படை உரிமைகள் நமது நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின் மூலம் உத்திரவாதம் அளிக்கப்படுகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பிரகடனத்தின்படி அரசானது குறைந்தபட்ச உரிமைகளை வழங்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறது. அது மேலும் அரசு வழிகாட்டி நெறிமுறைகளைப்போல செயல்படுத்தப்பட வேண்டும்.

அரசமைப்பு தீர்வழிக்களுக்கான உரிமை

அடிப்படை உரிமைகள் அரசமைப்புச் சட்டத்தினால் உத்திரவாதம் தரப்பட்டவை. ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகையில், அரசமைப்பு தருகின்ற அரசமைப்பு தீர்வழிகளுக்கான உரிமையின்படி அவர் நீதிமன்றத்தை அணுகலாம். நீதிமன்றம் அக்குடிமகனுக்குரிய உரிமையை மீட்டளிக்குமாறு அரசுக்கு ஆணையிடுகிறது. இது நீதிப்பேராணை என்று அழைக்கப்படுகிறது. ஒரு செயல் அரசமைப்பு சட்டத்தின் படி ஏதேனும் தவறானதாக கருதப்படின் அதற்கான சரியான தீர்வுகளை அரசமைப்புச் சட்ட தீர்வாணைகள் வழங்குகின்றன. இவ்வாறு, இவ்வுரிமை அனைத்து உரிமைகளுக்கும் பாதுகாப்பாகவும், காவலாகவும் அமைகின்றது.

அரசியலமைப்புச் சட்டங்களுக்கான உரிமையின்படி பிரத்திகா யாஷினி நீதிமன்றத்தை அணுகியதின் மூலம் தனது வேலைவாய்ப்பு உரிமையை வென்றார்.


As Yashini takes last step towards her SI dream, it's a giant leap for 3rd gender

4 அடிப்படைக் கடமைகள்

அடிப்படைக் கடமைகள் என்பவை குடிமக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்ற விதத்தில் அமைந்துள்ளன. 1950 ஜனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படைக் கடமைகள் என்ற பகுதி இடம்பெற்றிருக்கவில்லை.

1976ஆம் ஆண்டு 42 வது சட்ட திருத்தத்தின் மூலம் அவை இணைக்கப்பட்டன. அரசமைப்பு கீழ்கண்ட 11 அடிப்படைக் கடமைகளைக் குறிப்பிடுகின்றது.

1. ஒவ்வொரு இந்திய குடிமகனும் இந்திய அரசமைப்புச் சட்டத்தினை மதிப்பதுடன், அரசமைப்புச் சட்ட நிறுவனங்கள், இலட்சியம், தேசியக்கொடி மற்றும் தேசியகீதம் ஆகியவற்றையும் மதிக்க வேண்டும்.
2. விடுதலைப் போராட்டத்தின்போது புத்துணர்வளித்த உன்னதமான இலட்சியங்களை நினைவிற்கொண்டு பின்பற்ற வேண்டும்.
3. இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.
4. தேவை ஏற்படின், நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு, நாட்டுப்பணியாற்ற வேண்டும்.
5. சமய, மொழி, மண்டல அல்லது பிரிவு வேறுபாடுகளைக் கடந்து இந்திய மக்கள் அனைவர் மனதிலும் சகோதரத்துவமும் இணக்கமும் ஏற்பட பாடுபடவேண்டும். பெண்களை இழிவு செய்யும் செயல்களை விட்டொழிக்க வேண்டும்.
6. நமது கூட்டுப் பண்பாட்டு மரபினைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.
7. காடுகள், ஏரிகள், ஆறுகள், வி ல ங் கி ன ங் க ள் ஆ கி ய வை உள்ளிட்ட புறச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதுடன் உயிரினங்கள் மீதும் கருணை காட்ட வேண்டும்.
8. அறிவியல் உணர்வு, மனிதநேயம், பகுத்தறிவு மற்றும் சீர்திருத்த உணர்வை வளர்க்க வேண்டும்.
9. பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வன்முறையை வெறுத்து ஒதுக்க வேண்டும்.

உங்களுக்குத் தெரியுமா?

மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் நலன்கள் பராமரிப்புச் சட்டம் 2007–ஆம் ஆண்டில் சட்டமாக இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் பிள்ளைகளுக்கும் வாரிசுகளுக்கும் தங்கள் பெற்றோரை அல்லது மூத்த குடிமக்களைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளும் சட்டப்பூர்வ வேண்டுகோள் ஆகும்.



10. தனிப்பட்ட அளவிலும் கூட்டு செயற்பாட்டிலும் மிகச் சிறந்த நிலையை அடைய முயலுவதன் மூலமாக நாட்டின் மேம்பாட்டிற்கு முயல வேண்டும்.
11. 14 வயது வரை உள்ள குழந்தைகளின் பெற்றோர் அல்லது காப்பாளர் குழந்தைகளின் கல்விக்கான வாய்ப்புக்கு வகை செய்திடல் வேண்டும்.

5 இந்திய மனித உரிமைகள் ஆணையம் (National Human Rights Commission)

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் நாள் அமைக்கப்பட்டது தேசிய மனித உரிமைகள் ஆணையம். இது ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இவ்வமைப்பு ஒரு தலைவரையும், சில உறுப்பினர்களையும் கொண்டுள்ளது இந்திய அரசமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச உடன்படிக்கையில் உத்திரவாதம் தரப்பட்டுள்ள ஒரு தனி மனிதனின் வாழ்வு, சுதந்திரம், சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் பொறுப்பேற்கிறது.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பணிகள்:

- மனித உரிமை மீறல் அல்லது அத்தகைய மீறல் குறித்து அரசு ஊழியர் அலட்சியம் காட்டுதல் ஆகியவை மீது விசாரணை நடத்திடுதல்.
- மனித உரிமை மீறல் வழக்குகளில் தன்னை இணைத்துக் கொள்ளுதல்.
- மனித உரிமைகள் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஊக்குவித்தல்.
- சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையே மனித உரிமைக் கல்வியைப் பரப்புதல்.
- மனித உரிமைத் துறையில் பணியாற்றும் அரசுசாரா அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் முயற்சிகளை ஊக்குவித்தல்.

6 மாநில மனித உரிமைகள் ஆணையம் (State Human Rights Commission)



இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்க வழி செய்யும் வகையுரை ஒன்று பிரிவு 21, மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993ல் உள்ளது. மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு ஆகியவை இவ்வாணையத்தின் முதன்மை நோக்கமாகும். மேலதிகமாக, எழுத்து மூலமான புகார் பெறாவிட்டாலும்கூட ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை நடத்தும் வகையிலும், மாநில மனித உரிமை ஆணையங்களின் செயல்பாடுகளை வெளிப்படைத் தன்மையாக்கியது போன்ற ஒழுங்காற்று விதிகளை ஆணையம் வகுத்ததன் மூலமாக மாநிலங்களில் ஆணையத்தின் செயல்முறைகள் வலுவாக்கப்பட்டுள்ளது.

மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் பணிகள் :

- மாநில பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் குறித்தான மனித உரிமை மீறல்களை விசாரித்தல்.
- இதன் நோக்கங்களும் பணிகளும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தைப்

போன்றே உள்ளன. ஆனால் மாநில எல்லைக்குட்பட்டதாகும். இவ்வாணையத்தில் ஒரு தலைவரும் இரு உறுப்பினர்களும் உள்ளனர்.

- இவ்வாணையத்திற்கு உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரம் உண்டு. எனவே, தொடுக்கப்படும் வழக்குகள் அல்லது தானாக முன்வந்து தொடுக்கும் வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கலாம்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்க பரிந்துரைகளும் செய்யலாம்.

அரசமைப்பினால் விளக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைக் கடந்து நாம் வேறு சில உரிமைகளையும் உறுதி செய்தல் வேண்டும்.

குழந்தைகளுக்கான உரிமைகள்

ஐக்கிய நாடுகள் சபை 18 வயதுவரையுள்ள அனைவரையும் குழந்தைகள் என வரையறுக்கிறது. இது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் பிரிவு 25ல் காணப்படுகின்றது. இக்கொள்கைகளின் அடிப்படையில் ஐ.நா.சபை 1989ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.

- வாழ்வதற்கான உரிமை
- குடும்பச் சூழலுக்கான உரிமை
- கல்விக்கான உரிமை
- சமூகப் பாதுகாப்பு உரிமை
- பாலியல் தொல்லைகளுக்கு எதிரான உரிமை
- விற்பது அல்லது கடத்தலுக்கெதிரான உரிமை
- குழந்தை உழைப்பு முறை போன்ற மற்ற சுரண்டல்களுக்கெதிரான உரிமை

- **வாழ்வதற்கான உரிமை**

ஒரு குழந்தை பிறப்பிற்கு முன்பே அது வாழத்தகுதி பெறுகின்றது. வாழ்வதற்கான உரிமை என்பது பிறப்புரிமை, அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை மற்றும் கண்ணியமான வாழ்வு வாழும் உரிமை ஆகியனவற்றை உள்ளடக்கியது.

- **குடும்பச் சூழலுக்கான உரிமை**

ஒரு குழந்தைக்கு ஒரு நல்ல குடும்பச் சூழலில், இயல்பான குழந்தைப் பருவத்தினைக் கழிக்க உரிமையுண்டு. ஆதரவற்ற, கைவிடப்பட்ட அல்லது அனாதைக் குழந்தைகளும் வாழ தகுதியுடையவர்கள். இது போன்ற குழந்தைகள், அக்கறையுள்ள குடும்பங்களுக்குத் தத்துக் கொடுக்கப்படலாம்.

- **சமூகப் பாதுகாப்பு உரிமை**

உடல் நலமின்மை, இயலாமை அல்லது வயது முதிர்வு காரணமாகப் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களால், குழந்தைகளுக்குத் தரமான வாழ்வைத் தர இயலாத சூழ்நிலையில் அக்குழந்தைகளுக்கு அரசு நிதியுதவி அளிக்க வேண்டும்.

உயர் சிந்தனை வினா

குடியரசு, முன்னேற்றம் மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகிய இம்மூன்று காரணிகளுக்கிடையே உன்னால் ஒரு நேர்மறை தொடர்பை ஏற்படுத்த முடியுமா?

- **கல்விக்கான உரிமை**

அரசமைப்பின் பிரிவு 21Aல் உள்ளபடி 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்க 2009ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றம் கல்வி உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தியது.

இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் (Right of children to free and compulsory education) 2009, ஒவ்வொரு குழந்தையும் தொடக்கக் கல்வி பயில உரிமை உள்ளது என்பதை வலியுறுத்துகின்றது. இவ்வுரிமை, குழந்தைகள் தொடக்கக் கல்வி முடியும் வரை அருகாமையில் உள்ள பள்ளியில் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வழிவகை செய்கிறது. கல்வி பயிலும் குழந்தை எந்த வகையான கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

- **குழந்தை விற்பனை அல்லது கடத்தலுக்கெதிரான உரிமை**

குழந்தைகள் அனைவரும் அடிப்படை மனித உரிமைகள் கொண்ட தனிநபர்கள் எனக் கருதுதல் வேண்டும் அவர்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள். குழந்தைகள் விற்பனை மற்றும் கடத்தல் நடைபெற ஏழ்மை, பாலினப்பாகுபாடு, சிதறிய குடும்பங்கள் ஆகியன முக்கிய காரணங்களாகும்.



மலாலா - நோபல் பரிசு வென்றவர் கூறுகிறார்

"நான் பள்ளியை நேசித்தேன். ஆனால் அடிப்படைவாதிகள் என் வசிப்பிடமாகிய ஸ்வாட் பள்ளத்தாக்கினை ஆக்கிரமித்தபொழுது அனைத்தும் மாறியது.

பெண்கள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை, மற்ற பெண்களுக்காகவும், எங்களது கல்வி கற்கும் உரிமைக்காவும்

2012 அக்டோபரில், பள்ளியிலிருந்து வீடு திரும்பும்பொழுது, துப்பாக்கி ஏந்திய ஒருவர் எங்கள் பேருந்தில் ஏறி இதில் மலாலா யார்? என்று கேட்டு, என் தலையின் இடது பக்கத்தில் சுட்டான். பத்து நாட்கள் கழிந்து இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம் என்னுமிடத்தில் உள்ள மருத்துவமனையில் கண் விழித்தேன். பல மாதங்கள் அறுவை சிகிச்சைகளிலும், மறுவாழ்வு சிகிச்சையிலும் கழிந்தது. இங்கிலாந்திலுள்ள எனது புது வீட்டில் என் குடும்பத்தினரோடு மீண்டும் சேர்ந்த நான், ஒவ்வொரு பெண் குழந்தையும் பள்ளி செல்லும்வரை என் போராட்டத்தைத் தொடர்வேன் என உறுதி பூண்டேன்.

அனைத்து பெண்களும் 12 வருட இலவச, பாதுகாப்பான மற்றும் தரமான கல்வி பயில வேண்டும் என்பதை உறுதி செய்ய நான் ஒவ்வொரு நாளும் போராடுகிறேன். 130 மில்லியன் பெண்கள் பள்ளியில் பயிலாத இன்றைய சூழலில், நான் செய்ய வேண்டிய வேலைகள் அதிகம் உள்ளன. கல்வி மற்றும் சமத்துவத்திற்காக என்னோடு சேர்ந்து போராடுவீர்கள் என நம்புகிறேன். நாம் இணைந்து, பெண்கள் கல்வி பயின்று, வழிநடத்தும் ஓர் உலகை உருவாக்குவோம்.

நீ மலாலாவாக இருந்தால், என்ன செய்திருப்பாய்? மலாலாவின் போராட்டம் தேவையா? பெண்களுக்கு சமமான கல்வி உரிமை கொடுக்கப்பட்டு, சமமாக நடத்தப்படுகின்றனரா?



உங்களுக்குத் தெரியுமா?

ஆபத்து காலத்தில் உதவிட காவலன் SOS செயலி தமிழ்நாடு அரசினால் பொது மக்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெண்கள் மட்டுமின்றி, சிக்கலான அல்லது நெருக்கடியான சூழலில் இருக்கும் அனைவரும் மாநில காவல் கட்டுப்பாட்டு அறையினை இச்செயலியின் உதவியோடு எளிதாகவும், நேரடியாகவும், தொடர்பு கொள்ள இயலும்.


குழந்தைகள் பொருளாதாரச் சுரண்டல், பாலியல் சுரண்டல், பாலியல் துன்புறுத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் குழந்தைத் தொழில் ஆகிய காரணங்களுக்காக விற்பனை அல்லது கடத்தல் செய்யப்படுகின்றனர்.

குழந்தைக் கடத்தல் பற்றி அறிந்துள்ளீர்களா? இத்தலைப்பினைப் பற்றி உமது வகுப்பறையில் ஒரு கலந்துரையாடல் நடத்துவும்.

- **பாலியல் தொந்தரவுக்கெதிரான உரிமை**

குழந்தைகள் உடலளவிலோ, மனதளவிலோ பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட கட்டாயப்படுத்தப்படும்போது, மாநில அரசு அக்குழந்தைகளைப் பாலியல் சுரண்டலிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

POSCO சட்டம் – பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்.



பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (The Protection of children from sexual offence Act, 2012) ஒவ்வொரு நிலையிலும் குழந்தைகளின் நலனை மையமாகக் கொண்டு செயல்படுகின்றது.

போஸ்கோ சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- இச்சட்டம் 18 வயது வரை உள்ளவர்களை குழந்தைகள் என வரையறுக்கிறது; அக்குழந்தைகளின் உடல், மன, அறிவுசார் மற்றும் சமூக வளர்ச்சியினை உறுதி செய்கிறது.
- பாலியல் வன்கொடுமையில் அதிகாரத்தில் இருப்பவரோ, குடும்ப உறுப்பினரோ, அண்டை வீட்டாரோ அல்லது அறிமுகமானவரோ ஈடுபட்டால் அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படும்.
- குழந்தை என்ன வாக்குமூலம் கூறுகிறதோ, அதை அவ்வாறே பதிவு செய்ய வேண்டும்.
- பாதிக்கப்பட்ட குழந்தையை அடிக்கடி சாட்சி சொல்ல அழைக்கக் கூடாது.

பனிரெண்டு வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமைச் செய்யப்படும்போது, வன்கொடுமை செய்தவருக்கு மரண தண்டனை வழங்குவதோடு கடுமையான தண்டனைகள் விதிக்க வகைசெய்யும் சட்டம் 2018 ஏப்ரல் மாதம் கொண்டுவரப்பட்டது. குற்றவியல்சட்ட திருத்தச்சட்டம் 2018. இது இந்திய குற்றவியல் சட்டத்தில் கடுமையான திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதன் சிறப்பம்சம் என்னவென்றால் விதிக்கப்படும் அபராதத் தொகையானது பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவை ஈடுகட்டும் வகையில் இருக்க வேண்டும் என்பதாகும்.

1098

1098–உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கான உதவி மைய எண் (Childline) இந்தியாவின் முதல் 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைதொடர்பு சேவை ஆகும். குழந்தைத் தொழிலாளர், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனும் வன்கொடுமைக்கு ஆளாகும் குழந்தைகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

- **குழந்தை உழைப்பு முறை போன்ற மற்ற சுரண்டல்களுக்கு எதிரான உரிமை**

பல்வேறு தொழிலகங்களில் குழந்தைகள் பணியமர்த்தப்படுகின்றனர். இவர்கள் தங்கள் குழந்தைப் பருவத்தினையும், உடல்நலம் மற்றும் கல்வி ஆகியவற்றையும் இழக்கின்றனர். இது வறுமை மற்றும் தேவைகள் நிறைவேற்றப்படாத வாழ்விற்கு வழிவகுக்கும். இக்குழந்தைகள் கண்ணாடி, தீப்பெட்டி, பூட்டு தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும், குப்பை பொறுக்குதல், கம்பளம், பீடி தயாரிப்பு, சுரங்கவேலை, கல் குவாரிகள், செங்கல் சூளைகள் மற்றும் தேயிலைத் தோட்டங்கள் ஆகிய இடங்களில் பணியமர்த்தப்படுகின்றனர்.

வேலைவாய்ப்புகளில் பாலினப்பாகுபாடு காணப்படுகின்றது. பெண் குழந்தைகள் வீடு சார்ந்த வேலைகளிலும் ஆண் குழந்தைகள் கூலி வேலைகளிலும் பணியமர்த்தப்படுகின்றனர். இக்குழந்தைகள் விவசாய நிலங்கள், உணவகங்கள், வாகனங்களைப் பழுது பார்க்கும் பட்டறைகள் மற்றும் குடிசைத் தொழில்களில் பணிபுரிவதால், குழந்தை உழைப்பை ஒழிப்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது.

உங்களுக்குத் தெரியுமா?

பச்பன் பச்சாவ் அந்தோலன் (இளமையைக் காப்பாற்று இயக்கம்) போன்ற பல குழந்தைகள் உரிமை அமைப்புகளின் நிறுவனர் **கைலாஷ் சத்யார்த்தி**. அவர் குழந்தை உழைப்பு, கொத்தடிமை, கடத்தல் போன்ற பல குழந்தைகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலிருந்து சுமார் 86,000த்திற்கும் அதிகமான இந்தியக் குழந்தைகள் இவராலும், இவரது குழு உறுப்பினர்களாலும் மீட்கப்பட்டுள்ளனர். 1998ல் உலக மக்களின் கவனத்தை குழந்தை உழைப்பு முறை மீது திசை திருப்ப, 80,000கி.மீ. நீள குழந்தை உழைப்புக்கு எதிரான உலகளாவிய அணிவகுப்பை (Global March against child labour) முன்னின்று நடத்தினார்.



குறைபாடுகள் உடைய குழந்தைகளே, மற்ற குழந்தைகளை விட 3.4% அதிகமாக பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர் என உலகளாவிய ஆராய்ச்சி ஒன்றின் முடிவுகள் குறிப்பிடுகின்றன.

இந்திய அரசமைப்பில் குழந்தைகள் உரிமை

- **பிரிவு 24.** பதினான்கு வயதுக்குட்பட்ட எந்த குழந்தையும் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது.
- **பிரிவு 45.** பதினான்கு வயது நிறைவடையும்வரை இலவச மற்றும் கட்டாயக் கல்வி அனைத்து குழந்தைகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.



குழந்தைகள் தேசத்தின் அடித்தளமாக விளங்குகின்றனர். சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்படும்போது குழந்தைப் பருவத்தின் மகிழ்ச்சிகள், கல்வியறிவு, ஆரோக்கியமான வாழ்வு போன்ற பல சலுகைகளை அவர்கள் இழந்து விடுகின்றனர். இதனால் குழந்தைத் திருமணங்கள் சமூகத்தைப் பெருமளவில் பாதிக்கின்றன. எனவே குழந்தைத் திருமணங்கள் அனைத்து விதத்திலும் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பெண்களுக்கான உரிமைகள்

இந்தியாவில் பெண்களுக்கான தேசிய ஆணையம் அமைக்கப்பட்டு பெண்களுக்கான அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியிலான பாதுகாப்பினை மீளாய்வு செய்து உறுதிப்படுத்துகிறது. பெண்களுக்கான நலவாழ்வு மற்றும் வளர்ச்சி குறித்த அரசின் அனைத்து செயல் திட்டங்கள் மீதான தனது கருத்தையும் மாற்றுக் கருத்துக்களையும் இவ்வாணையம் பரிந்துரை செய்கிறது.

குடியரசுத் தலைவர், பிரதமர், நாடாளுமன்ற அவைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் என இந்தியாவின் முக்கிய பதவிகளில் பெண்கள் பதவி வகிக்கின்றனர்.

பெண்களுக்கு மூதாதையர் சொத்துரிமை

தமிழ்நாடு இந்து வாரிசு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம், 1989 ஐ நிறைவேற்றி மூதாதையரின் சொத்துகளில் பெண்களுக்கும் சம உரிமை வழங்கியுள்ளது,

மத்திய அரசு இந்து வாரிசுரிமைச் சட்டம் 2005–இல் திருத்தங்களை மேற்கொண்டது. இதில் மூதாதையரின் பிரிக்கப்படாத சொத்தில் வாரிசு அடிப்படையில் பெண்களுக்கு சம உரிமையினை அளித்தது.


இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பெண்கள் உரிமைகளில் சமத்துவம், கண்ணியம் மற்றும் பாகுபாடுகளில் இருந்து சுதந்திரம் ஆகியன அடங்கும். பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் மேலும் பல்வேறு சட்டங்கள் இந்தியாவில் உள்ளன.

பெண் தொழிலாளர் நலனும்– டாக்டர் பி.ஆர். அம்பேத்கரும்

சுரங்கத் தொழிலாளர் பேறுகால நன்மைச் சட்டம், பெண் தொழிலாளர் நல நிதி, பெண்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம், பெண் தொழிலாளர்களுக்கான பேறுகால நன்மைகள், நிலக்கரிச் சுரங்கங்களில் சுரங்கப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்தப்படவதற்கான தடையை மீட்டெடுத்தல் போன்ற சட்டங்கள் **டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்** அவர்களால் பெண் தொழிலாளர்களுக்காக இந்தியாவில் இயற்றப்பட்டது.

ரோசா – பார்க்ஸ் – சுய மரியாதையின் குறியீடு

1955–ம் ஆண்டு மாண்டகோமெரியிலிருந்து அலபாமா வரை செல்லும் நகரப்பேருந்தில் தனக்கான இடத்தை ஆங்கிலேயருக்கு தர மறுப்பதின் மூலம் **ரோசா பார்க்** ஐக்கிய அமெரிக்காவில் குடிமை உரிமைகள் இயக்கம் தொடங்குவதற்குக் காரணமாக இருந்தார். அப்பகுதியைச் சேர்ந்த ஆப்பிரிக்க– அமெரிக்க கறுப்பின மக்களின் தலைவர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமை அன்றும் பேருந்துப் பயணத்தை புறக்கணிக்கும் இயக்கத்தினைத் தொடங்கினர்.



பிரிவினைச் சட்டங்களை மீறியதற்காக ரோசா பார்க்ஸ் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார். மார்டின் லூதர் கிங் ஜூனியர் அவர்களால் தலைமை தாங்கி வழி நடத்தப்பட்டப் பேருந்து புறக்கணிப்பு இயக்கமானது ஓராண்டு காலத்திற்கு மேல் நீடித்தது. இக்கால கட்டத்தில் ரோசா பார்க்ஸ் அவரது பணியினை இழந்தார். ஐக்கிய அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம் பிரிவினைச் சட்டத்தை அரசியலமைப்பிற்கு எதிரானது என்று சாடிய பிறகே போராட்டம் முடிவுக்கு வந்தது. அடுத்த அரை நூற்றாண்டுகளுக்கு ரோசா பார்க் சுய மரியாதையின் குறியீடாகவும் இன ஒதுக்கலை முடிவுக்கு கொண்டு வந்தவராகவும் அறியப்பட்டார்



இடஒதுக்கீடு

பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் 69% இடஒதுக்கீட்டினைத் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. ஆதிதிராவிடர் பிரிவில் இடம் பெற்றுள்ள அருந்ததியர் வகுப்பினருக்கு முன்னுரிமை அடிப்படையில் சிறப்பு ஒதுக்கீடு வழங்கியுள்ளது. மேலும் பெண்களுக்கு 33%, மாற்றுத் திறனாளிகளுக்கு 4% முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு பிரிவின்கீழும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு ஒவ்வொரு பிரிவின்கீழும் முன்னுரிமை அடிப்படையில் 20% ஒதுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை மூலம் தமிழ்நாட்டின் பல்வேறு வகுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டினைப் பற்றி தெளிவாக புரிந்துகொள்ள இயலும்.

பிரிவுகள்	இட ஒதுக்கீடு (சதவீதத்தில்)
பிற்படுத்தப்பட்டோர்	26.5
பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள்	3.5
மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர்	20
ஆதிதிராவிடர்	18
பழங்குடியினர்	3
மொத்தம்	69

தமிழ்நாட்டில் திருநங்கையர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உரிமைகள்

பிற மாநிலங்களில் பட்டியல் இனத்தவர் எனவும் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் எனவும் குறிப்பிடப்படும் மக்களின் கண்ணியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், அனைத்து வகையான விலக்கல், ஒதுக்குதல், தீண்டாமை மற்றும் பாகுபாடு போன்றவற்றைக் களையவும் சமூக சமத்துவத்திற்கான உரிமையை உறுதிப்படுத்தவும் அரசு பல கொள்கைகள், திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை உருவாக்கி வருகிறது. இவ்வுரிமைகள் ஆதிதிராவிட மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கும் அவர்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளை வழங்குவதற்கான வழிமுறைகளை எளிதாக்குகின்றன.

மேலும் இந்தியாவின் மக்கள்தொகையில் 8.6 சதவிகிதம் பழங்குடியின மக்கள் உள்ளனர். இவர்கள் தொடர்ந்து அவர்களுக்கே உரிய பழக்க வழக்கங்களோடு வாழ்வதோடு மட்டும் அல்லாமல் பல நேரங்களில் உலகின் பிற பகுதி மக்கள் அவர்களை எளிதில் அணுக முடியாத நிலையிலும் வாழ்கின்றனர். இதுவே அவர்களைப் பாதுகாப்பதற்கானச் சட்டங்கள் இயற்றப்படுவதற்கான அடித்தளமாக அமைந்துள்ளது.



ஜனநாயகத்தின் எழுச்சி மனிதத்தன்மையற்ற சுவரின் வீழ்ச்சி

தகவல் அறியும் உரிமைச்சட்டம்

தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஓர் புரட்சிகரமானசட்டமாகும்.அரசுநிறுவனங்களின் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருவதற்கான இச்சட்டம் இந்தியாவில் 2005 அக்டோபர் மாதம் இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின்படி அரசு நிறுவனங்களில் தேவைப்படும் தகவல்களை எந்த ஒரு சாதாரண குடிமகனும் கோரிப் பெறலாம். தகவல்கள் 30 நாட்களுக்குள் வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் தகவல் வழங்கும் அதிகாரியிடமிருந்து கட்டணமாக ஒரு குறிப்பிட்டத் தொகை வசூலிக்கப்படும்.

நாட்டின் வலிமை வாய்ந்த சட்டங்களுள் தகவல் அறியும் உரிமைச் சட்டமும் ஒன்றாகும். இச்சட்டம் மிகவும் எளிமையானதாகவும், சாதாரண மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இச்சட்டத்தின் வாயிலாக தகவல்களைப் பெற படிக்கத் தெரியாதவர்களுக்கு பொதுத்தகவல் அலுவலர் உதவி செய்ய வேண்டும். அனைத்து அரசு அலுவலகங்கள் அதாவது ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலகங்கள் போன்ற உள்ளாட்சி அமைப்புகள் பல்வேறு அரசுத் துறைகள், அரசுப் பள்ளிகள், நெடுஞ்சாலைத் துறைகள் போன்றவை இச்சட்டத்திற்கு உட்பட்டதாகும்.

தகவல் அறியும் உரிமைச்சட்ட

செயல்பாட்டாளர்கள்



அருணா ராய்



நிக்கில்தேவ்

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் ஒருவர் அரசு ஆவணங்களான கோப்புகள், அறிக்கைகள், தாள்கள் மற்றும் தனிப்பட்ட ஒருவரின் தகவல்கள் போன்றவைகள் கிடைக்கப்பெறலாம். நாட்டின் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைகளான எல்லைப் பாதுகாப்புப் படை (BSF), மத்திய சேமக் காவல் படை (CRPR) மற்றும் உளவுத்துறைப் பணியகம் (Intelligence Bureau) ஆகிய அமைப்புகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

- விண்ணப்பத்தில் உங்கள் முழுபெயர், முகவரி எழுதி கையெழுத்திட்டு தேதியுடன் பதிவு தபாலின் குறிப்பிட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
- அனுப்பப்பட்ட அஞ்சலுக்கு 30 நாட்களுக்குள் பதில் பெறப்படவில்லை எனில் 1 விண்ணப்பத்தை மேல்முறையீடுக்கு அனுப்பலாம்.

தொழிலாளர் உரிமைகள்

சமத்துவத்திற்கான உரிமை, பொது வேலைவாய்ப்பில் சமத்துவம், அமைப்புகள் மற்றும் சங்கம் தொடங்குவதற்கான உரிமை, வாழ்வாதார உரிமை, கடத்தலைத் தடுத்தல் மற்றும் கட்டாயத் தொழிலாளர் மற்றும் குழந்தைகள் உரிமைகளை, இந்திய அரசியலமைப்பு உறுதி செய்கிறது. பிரிவு 39பி, இருப்பாலினருக்கும் சம வேலைக்கு சம ஊதியம் என்பதை உறுதி செய்கிறது

செயல்பாடு

கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையில், பல்வேறு வகையான வேலைகளையும் அதற்கு அளிக்கப்படும் சம்பளத்தையும் எழுதவும்.

வ. எண்.	வேலை/ தொழில்	ஆண் தொழிலாளர் சம்பளம்	பெண் தொழிலாளர் சம்பளம்
1.			
2.			
3.			
4.			
5.			

தொழிலாளர் நலனில் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் பங்களிப்புகள்



- தொழிற்சாலையில் வேலை நேரம் குறைப்பு
- தொழிற்சங்கங்களின் கட்டாய அங்கீகாரம்.
- இந்தியாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அமைத்தல்.
- தொழிலாளர் காப்பீட்டுக்கழகம் (ESI)
- தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்.
- நிலக்கரி மற்றும் மைகா சுரங்கத்தின் வருங்கால வைப்பு நிதி.



பத்து ஆண்டுகளாக கேரளாவில் உள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் வேலை செய்யும் பெண்கள் ஒரு நாளில் ஏறக்குறைய 12–14 மணிநேரம் நின்றுகொண்டே வேலை செய்து கொண்டிருந்தனர்.

கடைகளிலிலும், வணிக வளாகங்களிலிலும் வேலை செய்யும் பெண் பணியாளர் அமர்ந்தோ, சுவரில் சாய்ந்தபடியோ பணியாற்ற அனுமதிக்கப்படவில்லை. ஒரு நாளைக்கு, இருமுறை 5 நிமிடங்கள் மட்டுமே ஓய்வு எடுக்க அனுமதிக்கப்பட்டனர்.

பெண்களுக்கு இழைக்கப்படும் இந்த மனித தன்மையற்ற செயலுக்காக நீண்ட நாள்களாக பெருத்த கண்டனக் குரல்கள் ஒலித்து வந்தன.

இப்பிரச்சனையைப் பரிசீலித்து குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு கேரள அரசு வணிக நிறுவன சட்டத்தில், 2018 ஜூலை மாதத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்தது. இதன் மூலம் பெண்கள் இத்துயர் நீங்கி வெற்றி கண்டுள்ளனர்.

"ஒரு மனிதனுடைய உரிமை அச்சுறுத்தப்படும்போது, ஒவ்வொரு மனிதனுடைய உரிமையும் குறைக்கப்படுகிறது" என்றார் ஜான். எஃப். கென்னடி. உலகின் நாகரிகமடைந்த நாடுகள் சமத்துவத்தை வலியுறுத்துகின்றன. சமத்துவத்தை உறுதி செய்ய, நாடுகள் மனித உரிமைகள் மீது கவனம் செலுத்துகின்றன. இது ஒரு நாட்டின் அமைதி, நல்லிணக்கம் மற்றும் முன்னேற்றத்திற்கு உதவுகிறது.

மீள்பார்வை

- பாகுபாடு என்பது மக்களின் ஒரு பகுதியினரைப் பாரபட்சமாக நடத்துவது ஆகும்.
- ஐ.நா. வின் மனித உரிமைகள் பற்றிய வரையறை.
- மனித உரிமைகளின் வரலாறு இரண்டாம் உலகப் போரின் பின் விளைவுகளை வேராகக் கொண்டது.
- மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய அறிவிப்பு.
- இந்திய அரசமைப்பு 6 அடிப்படை உரிமைகளை உறுதி செய்து 11 கடமைகளை குடிமக்களுக்கு குறிப்பிடுகின்றது.
- "தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உருவாக்கம் மற்றும் செயல்பாடுகள்.
- நீட்டிக்கப்பட்ட உரிமைகளான குழந்தைகள் உரிமை, SC மற்றும் ST உரிமை, பெண்கள் உரிமை, தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) மற்றும் தொழிலாளர் சட்டங்கள்.

A-Z கலைச்சொற்கள்

1.	Fundamental	–	அடிப்படை
2.	Racial	–	இன
3.	Ethnicity	–	இனக்குழு
4.	Remedies	–	தீர்வுகள்
5.	Intervene	–	தலையீடு
6.	Compensation	–	இழப்பீடு
7.	Victim	–	பாதிக்கப்பட்ட
8.	Abandoned	–	கைவிடப்பட்ட
9.	Trafficking	–	கடத்தல்

பயிற்சிகள்

B9H44K

I) சரியான விடையைத் தேர்ந்தெடுக.

1. இன ஒதுக்கல் (Apartheid) என்னும் கொள்கையைப் பின் பற்றிய நாடு _____

அ) தென் சூடான் ஆ) தென் ஆப்பிரிக்கா

இ) நைஜீரியா ஈ) எகிப்த்

2. ஒரு அரசாங்கத்தின் உருவாக்கம் மற்றும் நிர்வாகத்தில் பங்குபெறுவது _____

அ) சமூக ஆ) பொருளாதார

இ) அரசியல் ஈ) பண்பாட்டு

3. ஒரு 10 வயது பையன் கடையில் வேலைப்பார்த்துக் கொண்டிருக்கிறான் – எந்த உரிமையைப் பயன்படுத்தி அவனை மீட்பாய்?

அ) சமத்துவ உரிமை

ஆ) சுதந்திர உரிமை

இ) குழந்தை உழைப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான உரிமை

ஈ) சமய சுதந்திர உரிமை

4. கீழ்கண்டவற்றுள் எந்த உரிமை அதிகாரத்துவத்தின் மீது மக்களின் செல்வாக்கை அதிகரிக்க செய்கிறது?

அ) சமத்துவ உரிமை

ஆ) தகவல் அறியும் உரிமைச் சட்டம்

இ) கல்வியின் மீதான உரிமை

ஈ) சுதந்திர உரிமை

5. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவலைப் பெறுவதற்கான கால வரம்பு _____

அ) 20 நாட்கள் ஆ) 25 நாட்கள்

இ) 30 நாட்கள் ஈ) 35 நாட்கள்

6. அரசமைப்புச் சட்ட திருத்தம் 44ன் படி நீக்கப்பட்ட அடிப்படை உரிமை _____

அ) சொத்துரிமை

ஆ) மதச் சுதந்திரத்துக்கான உரிமை

இ) சுரண்டலுக்கெதிரான உரிமை

ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

7. பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

i) மாநில மனித உரிமை ஆணையம் 1993ல் நிறுவப்பட்டது.

ii) இது ஓர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

iii) இதன் அதிகாரம் மாநில எல்லையைக் கடந்தும் செயல்படும்.

iv) இது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க பரிந்துரைக்கலாம்.

அ) i மற்றும் ii சரி ஆ) i மற்றும் iii சரி

இ) i,ii மற்றும் iii சரி ஈ) i, ii மற்றும் iv சரி

8. கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி.

கூற்று (A): உரிமைகளும் கடமைகளும் ஓர் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

காரணம் (R): நாம் விரும்பும் மதத்தை பின்பற்றுவதற்கான உரிமை உண்டு. பிற மதத்தினர் இடையே இணக்கமான உறவை ஏற்படுத்துவதுடன் அவர்களின் உணர்வையும் மதிக்க வேண்டும்.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

இ) (A) சரி, ஆனால் (R) தவறு.

ஈ) (A) தவறு, ஆனால் (R) சரி.

9. ஐ.நா. சபையின்படி _____ வயது நிறைவு பெறாதோர் குழந்தை ஆவார்.

அ) 12 ஆ) 14

இ) 16 ஈ) 18

10. _____ கான நோபல் பரிசு கைலாஷ் சத்தியார்த்தி மற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டது.

அ) இலக்கியம் ஆ) அமைதி

இ) இயற்பியல் ஈ) பொருளாதாரம்

II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. உலகளாவிய மனித உரிமை பேரறிக்கைப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு _____

2. உலகளாவிய மனித உரிமை பிரகடனம் _____ பிரிவுகளைக் கொண்டுள்ளது.

3. அடிப்படைக் கடமைகள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் _____ சட்ட திருத்தத்தின்படி சேர்க்கப்பட்டது.

4. தேசிய மனித உரிமை ஆணையம் _____ ஆண்டு அமைக்கப்பட்டது.

5. ஏப்ரல் 1, 2010ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த சட்டம் _____.

6. பெண்களுக்கான மூதாதையர் சொத்துரிமை சட்டத்தை 1989இல் நடைமுறைப்படுத்திய இந்திய மாநிலம்_____.

7. அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியுரிமை இயக்கத்தினைத் தொடங்கியவர் _____ ஆவார்.

III) பொருத்துக.

1	வாக்களிக்கும் உரிமை	பண்பாட்டு உரிமை
2	சங்கம் அமைக்கும் உரிமை	சுரண்டலுக்கெதிரான உரிமை
3	பாரம்பரியத்தை பாதுகாக்கும் உரிமை	அரசியல் உரிமை
4	இந்து வாரிசுரிமைச் சட்டம்	சுதந்திர உரிமை
5	குழந்தை தொழிலாளர்	2005

IV) சுருக்கமாக விடையளி

1. மனித உரிமை என்றால் என்ன?

2. அடிப்படை உரிமைகள் யாவை?

3. குழந்தைகளுக்கான உரிமைகளாக ஐ.நா. சபை அறிவித்துள்ளவை யாவை?

4. அரசமைப்புத்தீர்வு வழிகளுக்கான உரிமையைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

5. போக்சா (POCSO) – வரையறு.

6. குழந்தைகளுக்குச் சிறப்பு கவனம் தேவைப்படுவது ஏன்?

7. தொழிலாளர் நலனுக்காக பி.ஆர். அம்பேத்காரின் பங்களிப்பு யாவை?

8. சட்டத்தின் முன் அனைவரும் சமம். ஆனால் பெண்களுக்கான தனிச்சட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. நியாயப்படுத்துக.

9. டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் தொழிலாளர் நலனுக்கு அளித்த பங்களிப்பைப் பற்றி ஏதேனும் இரண்டு கூறு.

10. வேறுபடுத்துக – மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள்

V) விரிவான விடையளி

1. உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் பற்றி ஒரு பத்தியில் விடை தருக.

2. அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய்?

3. தேசிய மனித உரிமைகள் ஆணையம் நம் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கிறது?
4. தொழிலாளர் சட்டத்தின் மூலம் தொழிலாளர் பெறும் நன்மைகள் யாவை?
5. அடிப்படை உரிமைகளை எவ்வாறெல்லாம் உன்வாழ்கையில் அனுபவிக்கின்றாய்?

VI) செயல்பாடுகள்

1. பாலியியல் ரீதியான துன்புறுத்தல், சுரண்டல் மற்றும் கடத்தல்களில் இருந்து நீ எவ்வாறு உன்னைப் பாதுகாத்துக் கொள்வாய்.
2. "என் நாடு என் உரிமைகள்" என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

VII) வாழ்க்கைத் திறன்

வ. எண்.	படம் / செய்தி	மீறப்படும் உரிமை	தீர்வு
1	 உணவு விடுதியில் பரிமாறும் குழந்தைகளை காணுதல்		
2	 கைவிடப்பட்ட முதியவர்		
3	 பள்ளியில் சேர்கை மறுக்கப்படுதல்		
4	 ஊதிய வேறுபாடு		

REFERENCE BOOKS

1. The constitution of india
Edition: 2009, Tamil Nadu Text Book Society, India

INTERNET RESOURCES

1 https://www.hrw.org/world-report/2018/country-chapters/india
2 https://amnesty.org.in › About Section Pages

அலகு 1

அரசாங்கங்களின் வகைகள்




கற்றல் நோக்கங்கள்

- அரசாங்கங்களின் வகைகளை அறிதல்
- அரசாங்கங்களின் பல்வேறு அமைப்புகளைப் புரிந்து கொள்ளுதல்
- பல்வேறு அரசாங்க அமைப்புகளின் நிறை, குறைகளைக் கற்றல்
- ஒற்றையாட்சி, கூட்டாட்சி, அதிபர் மக்களாட்சி மற்றும் நாடாளுமன்ற ஆட்சி ஆகியவற்றின் வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளுதல்

FUL4V3

ஒரு அரசாங்கத்தின் முக்கிய நிறுவனம் அரசு ஆகும். இது அரசியல் மற்றும் நிர்வாக குழுக்களைச் சார்ந்த பல உறுப்பினர்களை உள்ளடக்கியதாகும். மக்களுக்கான பொதுநலன் சார்ந்த அரசின் கொள்கைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்குமான கருவியாக இது திகழ்கிறது. அரசு ஓர் மாநிலத்தின் விருப்பத்தை உணர்ந்து அதனை வெளிப்படுத்தும் விதமாக திட்டங்களை அமைக்கிறது. இந்திய அரசியலமைப்பு மற்றும் சட்டங்களுக்கு உட்பட்ட சட்டமன்ற, நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரங்களை அரசு செயல்படுத்துகிறது. அரசாங்கத்தின் உறுப்புகளாகச் சட்டமன்றம், நிர்வாகத் துறை மற்றும் நீதித்துறை அமைந்துள்ளன. இவ்வுறுப்புகள் அரசின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்றன. ஒற்றை ஆட்சிமுறை, கூட்டாட்சி ஆட்சி முறை, நாடாளுமன்ற ஆட்சிமுறை மற்றும் ஜனாதிபதி ஆட்சி முறை என வகைப்படுத்தப்படுகின்றன.

Book 1.indb 127 11-12-2018 22:00:51




பொருள்

ஒரு அரசின் நிர்வாக செயல்பாடுகளை அரசாங்கம் குறிக்கிறது. அரசு என்பது, பொதுமக்கள் சார்ந்த, பெரு நிறுவனங்கள் மதம் சார்ந்த கல்வி மற்றும் பிற குழுக்களுக்கு சட்டங்கள் இயற்றி அவற்றை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் படைத்த ஓர் அமைப்பாகும்.

மிகவும் பழமையான அரசாங்கம் எது?

ஐக்கிய பேரரசு காணப்பட்ட முடியாட்சி அமைப்பே மிகவும் பழமையான அரசாங்கம் ஆகும். முடியாட்சியில் அரசரோ அல்லது மகாராணியோ அரசாங்கத்தின் தலைவராவார். ஆங்கில முடியாட்சி என்பது அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி ஆகும். அதாவது அரசின் தலைமையாகவே இருந்தாலும் சட்டமியற்றும் வல்லமை தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்திடமே உள்ளது.



ஒற்றை ஆட்சி முறை

ஒற்றை ஆட்சி முறை என்பது இறையாண்மை மிக்க ஓர் அரசு ஒரே நிறுவனமாக இருந்து ஆட்சி செய்வதாகும். மத்திய அரசு அதிகாரம் மிக்கதாகும். நிர்வாக அமைப்புகள் மத்திய அரசினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை மட்டுமே செயல்படுத்தும்.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், மற்றும் இலங்கை ஆகியவை ஒற்றை ஆட்சி முறைக்கான உதாரணங்களாகும்.

அரசு என்னும் பதம், பழைய பிரெஞ்சு வார்த்தையான கவர்னர் (governer) என்பதிலிருந்தும் இயக்கு, ஆட்சி செய், வழி நடத்து, ஆள் என்று பொருள் தரும் லத்தீன் வார்த்தையான குபர்னர் (gubernare) என்பதிலிருந்தும் பெறப்பட்டது.

ஒற்றையாட்சி முறையில் அனைத்து அதிகாரங்களும் ஒரே இடத்தில்

Book 1.indb 128 11-12-2018 22:02:39

மையப்படுத்தப்படுகின்றன. ஆனால் கூட்டாட்சி அரசு முறையில் அதிகாரமானது, மத்திய அரசு மற்றும் அதன் அமைப்புப் பிரிவுகளுக்குள்ளும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஒற்றையாட்சி முறை அரசியலமைப்பிலும் அதிகாரப் பரவலாக்கம் இருக்கக்கூடும். ஆனாலும் அதனைக் கூட்டாட்சி முறை எனக் கொள்ளலாகாது.

ஒற்றை ஆட்சி முறையின் நிறைகள்

* சிறு நாடுகளுக்குப் பொருத்தமானது
* அதிகாரம் மற்றும் பொறுப்புகளுக்கு இடையில் மோதல்கள் இருப்பதில்லை.
* ஒற்றை ஆட்சி முறை உடனடியாக முடிவெடுத்துத் துரிதமாகச் செயல்படுகிறது.
* ஒற்றை ஆட்சி குறைந்த செலவுடையது.
* அரசியலமைப்பு திருத்தங்களை எளிதில் மேற்கொள்ள இயலும்.
* ஒற்றுமை, சீரான சட்டம், கொள்கை மற்றும் நிர்வாகத்தினை உள்ளடக்கியது.

குறைகள்

* மிகப்பெரிய நாடுகளுக்குப் பொருத்தமற்றது.
* மத்திய அரசு பலதரப்பட்ட பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். அதனால் நிர்வாக தாமதங்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன.
* மத்திய அரசு உள்ளூர் பிரச்சினைகள் சார்ந்தும் உள்ளூர் மக்கள் நலனிலும் உள்ளூர் முயற்சிகளிலும் அக்கறை காட்டாது.
* அதிகமான அதிகாரங்கள் குவிக்கப்படுவதால் மத்திய அரசின் சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கவும் கூடும் .

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஒற்றை ஆட்சி முறை அம்சங்கள்

* பலமான மத்திய அரசு
* மாநில அரசின் மீது மத்திய அரசின் ஆளுமை
* ஒற்றை அரசமைப்பு
* அரசியலமைப்பின் நெகிழ்வுத்தன்மை.
* மாநிலங்களின் சமமற்ற பிரதிநிதித்துவம்.
* அவசரகால ஏற்பாடுகள்
* ஒற்றைக் குடியுரிமை
* ஒருங்கிணைக்கப்பட்ட ஒற்றை நீதித்துறை
* அகில இந்தியச் சேவைகள்
* ஆளுநர்கள் மத்திய அரசினால் நியமிக்கப்படுதல்.

கூட்டாட்சி முறை ஆட்சி

தேசிய அரசுக்கும் பிராந்திய அரசுக்கும் இடையில் இருக்கும் உறவின் அடிப்படையிலேயே ஒற்றை ஆட்சி முறை என்றும் கூட்டாட்சி முறை என்றும் அரசு வகைப்படுத்தப்படுகிறது.

அரசியலமைப்பு சட்டத்தின்படி தேசிய அரசும் பிராந்திய அரசுகளும் தங்களது அதிகாரங்களைப் பகிர்ந்து அவரவர் எல்லைக்கு உட்பட்டு சுதந்திரமாகச் செயல்படுவது கூட்டாட்சி முறை ஆட்சியாகும். ஐக்கிய அமெரிக்க நாடுகள், சுவிட்சர்லாந்து ஆஸ்திரேலியா, கனடா, ரஷ்யா, பிரேசில், அர்ஜென்டினா ஆகிய நாடுகள் கூட்டாட்சி முறையை கொண்டவை. கூட்டாட்சி முறையில் தேசிய அரசை மைய அரசு அல்லது மத்திய அரசு என்றும் பிராந்திய அரசை மாநில அரசு அல்லது மாகாண அரசு என்றும் அழைக்கின்றனர்.

கூட்டாட்சியின் நிறைகள்

* உள்ளூர் சுய ஆட்சி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையே சமரசம் ஏற்படுத்துதல்
* மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வு, நிர்வாகத் திறன்கள் மேம்பட வழிவகுக்கிறது.
* மிகப் பெரிய நாடுகள் தோன்றுவதற்கு வழி செய்கிறது.
* அதிகாரம் பகிர்ந்து அளிக்கப் படுவதால் மத்திய அரசின் சர்திவதிகாரப் போக்கைத் தடுக்கிறது.
* மிகப்பெரிய நாடுகளுக்குப் பொருத்தமானது
* பொருளாதார மற்றும் பண்பாட்டு முன்னேற்றங்களுக்கு நன்மை அளிக்கிறது.

Book 1.indb 129 11-12-2018 22:02:40

ஒற்றையாட்சி முறை மற்றும் கூட்டாட்சி முறைகளுக்கு இடையேயான வேறுபாடுகள்

ஒற்றைட்சி முறை	கூட்டாட்சி முறை
ஒரேயொரு அரசு அல்லது துணைக் குழுக்கள்	இரண்டு நிலையில் அரசாங்கம்
பெரும்பாலும் ஒரே குடியுரிமை	இரட்டைக் குடியுரிமை
துணைக் குழுக்கள் தன்னிச்சையாகச் செயல்பட இயலாது	கூட்டாட்சியின் குழுக்கள் மத்திய அரசுக்கு உட்பட்டவை
அதிகாரப் பகிர்வு இல்லை	அதிகாரப் பகிர்வு
மையப்படுத்தப்பட்ட அதிகாரம்	அதிகாரப் பரவல்

கூட்டாட்சியின் குறைகள்

* ஒற்றையாட்சி முறையோடு ஒப்பிடும்போது கூட்டாட்சி முறை பலவீனமானது.
* கூட்டாட்சி முறை அதிக செலவினம் கொண்டது.
* பிராந்திய போக்குகள்தான் பொதுவாக காணப்படும்.
* நிர்வாகச் சமநிலையில் குறைபாடுகள்.
* தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல்
* அதிகாரப் பகிர்வில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே முரண்பாடு உருவாகிறது.
* இரட்டைக் குடியுரிமை.
* மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்க இயலாது திடமான அரசியலமைப்பு.
* வெளியுறவுக் கொள்கைகளில் சில நேரங்களில் மாநில அரசுகள் தடைகளை ஏற்படுத்துகின்றன.

இந்திய அரசியலமைப்பில் கூட்டாட்சி முறை அம்சங்கள்

* இரட்டை அரசாங்கம்
* எழுதப்பட்ட அரசியலமைப்பு
* அதிகாரப் பகிர்வு
* அரசியல் அமைப்பின் உயர் அதிகாரம்

நாட்டின் உச்சபட்ச சட்டமாக அரசியலமைப்புச் சட்டம் விளங்குகிறது. மத்திய மாநில அரசுகளால் இயற்றப்படும் சட்டங்கள் அதன் விதிகளுக்கு உட்பட்டு அமைதல் வேண்டும்.

* நெகிழும் தன்மையற்ற அரசியல் அமைப்பு
* சுதந்திரமான நீதித்துறை
* இரண்டு அவை ஆட்சி.

நாடாளுமன்ற ஆட்சி முறை

நவீன மக்களாட்சி முறைகளைப் நாடாளுமன்றப் ஆட்சி முறை அதிபர் மக்களாட்சி முறை என இருவகைகளாகப் பிரிக்கலாம். நிர்வாக மற்றும் சட்டமன்ற அமைப்புகளுக்கு இடையே உள்ள தொடர்பின் தன்மையைப் பொறுத்து அரசுகள் இவ்விரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

நாடாளுமன்ற ஆட்சி முறையில் சட்டமன்றத்தில் கொள்கைகள் மற்றும் செயல்களுக்கு நிர்வாகத்துறை பொறுப்பேற்கிறது.

நாடுகள்	நாடாளுமன்றங்களின் பெயர்கள்
இஸ்ரேல்	கெனெஸட்
ஜெர்மனி	பந்தெஸ்டாக்
டென்மார்க்	போக்டிங்
நார்வே	ஸ்டார்டிங்
ஐக்கிய அமெரிக்க நாடுகள்	காங்கிரஸ்

நாடாளுமன்ற ஆட்சிமுறை அமைச்சரவை அரசாங்கம் அல்லது பொறுப்பு அரசாங்கம் அல்லது வெஸ்ட் மினிஸ்டர் அரசாங்க மாதிரி எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. இவ்வகை ஆட்சிமுறை பிரிட்டன், ஜப்பான்,

Book 1.indb 130 11-12-2018 22:02:40

கனடா, இந்தியா போன்ற நாடுகளில் காணப்படுகிறது.

நாடாளுமன்ற ஆட்சி முறையின் அம்சங்கள்

* பெயரளவில் மற்றும் உண்மையான நிர்வாகிகள்
* பெரும்பான்மை கட்சி ஆட்சி
* கூட்டுப் பொறுப்புணர்வு
* இரட்டை உறுப்பினர்
* பிரதம மந்திரியின் தலைமை

நாடாளுமன்ற ஆட்சி முறை நிறைகள்

* சட்டமன்றம் மற்றும் நிர்வாகத் துறைக்கு இடையிலான இணக்கம்
* பொறுப்பான அரசாங்கம்
* சர்வாதிகாரத்தைத் தடுக்கிறது
* பரவலான பிரதிநிதித்துவம்

குறைகள்

* நிலையற்ற அரசாங்கம்
* தொடர்ச்சியற்ற கொள்கைகள்
* அமைச்சரவையின் சர்வாதிகாரம்
* அதிகாரங்களைப் பிரிப்பதில் உள்ள சிக்கல்கள்

அதிபர் மக்காளட்சி முறை

அதிபர் மக்காளட்சி முறை என்பது சட்ட மன்றத்திற்க பொறுப்பில்லாததாகவும் நாடாளுமன்றம் அற்றதாகவும் நிலைத்த நிர்வாக அற்றதாகவும் நிலைத்த நிர்வாக அமைப்பு உடையதாகவும் இருக்கும். அதிகாரப் பகிர்வு கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இவ்வரசு முறை அமெரிக்கா, பிரேசில், இரஷ்யா, இலங்கை போன்ற நாடுகளில் நடை முறையில் உள்ளது.

பூடானில் ஏற்பட்ட வரலாற்று மாற்றம்

மூன்றாம் அரசர் – அடிமைத்தனத்தை ஒழித்தார்

நான்காம் அரசர் – கம்பீரமான வட்டங்களைத் துறந்தார்.

ஐந்தாம் அரசர் – குடியரசு தேர்தகள் மற்றும் உள்ளாட்சி தேர்தல்கள்

இந்த மாற்றமானது பரம்பரை மன்னராட்சி முறையிலிருந்து நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கு மாறுவதாகும். இவர் தனது 34 ஆண்டுகால அரியணையை துறந்தார். அவரது மகன் பட்டத்து இளவரசர் ஜிக்மே கேசர் நம்கியேல் வாங்சுக் (Jigme Khesar Nangyel Wanchuck) ஐந்தாவது மன்னர் இமயமலைப் பகுதியிலுள்ள இந்த சிறிய முடியரசின் தலைவரானார். இப்போது பூட்டான் ஒரு நாடாளுமன்ற மக்களாட்சி நாடாகும், அரசர் பூட்டானின் அரசமைப்பின்படி மன்னராக உள்ளார்.

பூடானில் ஏற்பட்ட வரலாற்று மாற்றம்



நன்றி: தி இந்து – 3.11.2008
கேலிச்சித்திரம்: கேஷவ்

ஏப்ரல் புரட்சி மற்றும் நேபாளத்தில் மக்களாட்சி

ஏப்ரல் 2006ல் நேபாளத்தின் துடிப்பான, ஜனநாயகம் சார்ந்த மக்கள் சமூக இயக்கத்தின் தலைவர்கள் ஏழு கட்சிகள் கூட்டமைப்பின் சார்பில் மக்களுக்கு அழைப்பு விடுத்தனர் (Seven Party Alliance). தலைநகர் காத்மண்டுவின் சுற்றுச் சாலையின் நெடுகிலும் ஏழு இடங்களில் பத்து இலட்சம் மக்கள் பங்கு பெறுமாறு ஓர் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். இந்த இமாலய அரசின் எதேச்சதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, மக்களாட்சிக்குப் புத்துயிர் அளிக்கப் பல்லாயிரக்கணக்கான குடிமக்கள் கோரினர். முன் எப்போதுமில்லாத இது போன்ற ஒரு நிகழ்வினால் அரசர் ஞானேந்திராவின் முடியாட்சி முடிவு பெற்று, மக்களாட்சிக்கு வழிவகுத்தது.

இரு கேலிச்சித்திரங்களின் கதை



நன்றி: தி இந்து – 31.12.2007 கேலிச்சித்திரம்: சுரேந்திரா

Book 1.indb 131 11-12-2018 22:02:40

அதிபர் மக்களாட்சியின் அம்சங்கள்

அமெரிக்க அதிபர் மாகாணம் மற்றும் அரசின் தலைவராகத் திகழ்கிறார். அரசின் தலைவர் என்பது ஒரு பெயரளவிற்கான பதவியாகும். அரசாங்கத்தின் தலைவராக நிர்வாக அமைப்புகளுக்கு தலைமைதாங்கி வழிநடத்துகிறார்.

அமெரிக்க அதிபர் வாக்காளர் மன்றத்தினால் நான்காண்டுகளுக்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஒரு கடுமையான அரசியலமைப்புச் சட்டத்திற்கான குற்றச்சாட்டு இருந்தால மட்டுமே நாடாளுமன்றத்தால் பதவி இறக்கம் செய்ய முடியும்.

அதிபர் அமைச்சரவையின் உதவியோடு ஆட்சிபுரிகிறார் அல்லது அமைச்சரவையைக் "கிச்சன் கேபினட்" என்று அழைக்கிறார்கள். இது தேர்ந்தெடுக்கப்படாத துறைசார்ந்த செயலர்களைக் கொண்ட சிறு ஆலோசனைக் அமைப்பு ஆகும். அதிபரால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்படும் இவர்கள் அதிபருக்கு மட்டுமே கடமைப்பட்டவர்களாகவும் எந்தநேரத்திலும் பதவியிறக்கம் செய்யப்படுவதற்கு உட்பட்டவர்களாகவும் இருப்பார்கள்.

மகா சபையின் (காங்கிரஸ்) செயல்பாடுகளுக்கு அதிபரும் அவரது செயலாளர்களும் பொறுப்பேற்க மாட்டார்கள். மகா சபையில் இவர்கள் உறுப்பினராகவும் இருப்பதில்லை கூட்டங்களில் கலந்து கொள்வதும் இல்லை.

மகா சபையின் கீழவையான பிரதிநிதிகளின் அவையை அதிபரால் கலைக்க இயலாது.

அதிகாரங்களைப் பிரிக்கும் கோட்பாடு அடிப்படையிலேயே அமெரிக்க அதிபர் முறை விளங்குகிறது. அரசின் சட்டமன்ற, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் மூன்றும் தனியாக பிரிக்கப்பட்டு சுதந்திரமாக இயங்கும் அமைப்புகளாகும்.

அதிபர் மக்களாட்சி ஆட்சி முறை

நிறைகள்

* ஜனநாயகமானது
* அதிபரின் முறையான கட்டுப்பாடு
* முடிவெடுத்தலை மேம்படுத்துதல்
* மாகாண அரசாங்கம்.

குறைகள்

* சர்வாதிகாரமாகச் சிதையும் வாய்ப்பு
* நிர்வாக மற்றும் சட்டமன்றத்திற்கு இடையிலான இணக்கமற்ற உறவு
* சட்டமன்றம் மற்றும் நிர்வாகக் குழுவுக்கு இடையிலான நல்லுறவின்மை

ஆட்சியின் கருத்தமைவு

அரசாங்கத்திலிருந்து ஆட்சிக்கு

நல்லஅரசுஎன்பதுபொதுவிவகாரங்களையும் பொது வளங்களையும் பொது நிறுவனங்கள் பயன்படுத்தும் விதத்தைக் குறிப்பதாக சர்வதேச வளர்ச்சி இலக்கியத்தில் தனித்துவமிக்க ஒரு சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆட்சி என்பது முடிவுகள் எடுக்கும் செயல்முறை மற்றும் முடிவுகளைச் செயல்படுத்தும் முறைகளைக் குறிப்பதாகும்.

அரசு மற்றும் ஆட்சி என்பது ஒரு நிறுவனம், அமைப்பு அல்லது ஒரு மாநிலத்தின் மீது அதிகாரத்தைப்பயன்படுத்தும்இணைச்சொற்கள் ஆகும்.

நல் ஆட்சியின் பண்புகள்

* பங்கேற்பு
* சட்டத்தின் ஆட்சி
* வெளிப்படைத்தன்மை
* விரைவான நேர்மறையான வினையாற்றல்
* கருத்தொற்றுமை
* சமத்துவம்
* திறமை மற்றும் செயல்திறன்
* பொறுப்புடைமை

Book 1.indb 132 11-12-2018 22:02:41

நாடாளுமன்ற மற்றும் அதிபர் மக்களாட்சி இடையிலான வேறுபாடுகள்

அதிபர் மக்களாட்சி முறை	நாடாளுமன்றஆட்சி முறை
குடியரசுத்தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்	பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாவார்
அதிபரே அதிகாரம் படைத்தவர்	மத்திய சட்டமன்றம் அதிகாரம் படைத்தது
அதிகாரப் பிரிவினை	அதிகாரப் பிரிவினை மையப்படுத்தப் படாமல் இருப்பது
சுதந்திரமாகச் செயல்படும் பிரிவுகள்	தனித்தனியான சார்புடைய செயல்பாடுகளைக் கொண்ட பிரிவுகள்
மாகாணத்தின் தலைவர் அதிபர் ஆவார்	அரசின் தலைவர் – குடியரசுத் தலைவர்
அரசாங்கத்தின் தலைவரும் அதிபரே	அரசாங்கத்தின் தலைவர் – பிரதம அமைச்சர்
தனிநபர் தலைமை	கூட்டுத் தலைமை
மகா சபையின் செயல்களுக்கு அதிபர் பொறுப்பை ஏற்க மாட்டார்.	கூட்டு மற்றும் தனித்தனியான பொறுப்புகள்.

இந்திய மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே உள்ள உறவு

இந்திய நாடு, இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழி முறைகளுக்கு உட்பட்டு மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அதிரங்களை பகிர்ந்து கொள்ளும் மாநிலங்களின் கூட்டமைப்பு ஆகும். மத்திய மாநில அரசுகளுக்கு இடையே அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப் பட்டாலும் அனைத்து விவகாரங்களிலும் முடிவெடுப்பது மத்திய அரசே ஆகும். மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவு என்பது:

1. சட்ட மன்ற உறவுகள் (பிரிவுகள் 245 முதல் 255 வரை)
2. நிர்வாக உறவுகள் (பிரிவுகள் 256 முதல் 263 வரை)
3. நிதி உறவுகள் (பிரிவுகள் 268 முதல் 294 வரை)

மத்திய மாநில அரசுகள் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் படைத்தவை. ஆனாலும் அதிகாரங்கள் வேறுபடுகின்றன. சில குறிப்பிட்ட துறைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. இத்துறைகள் மத்தியப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. சில துறைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசாங்கத்திற்கு உள்ளது. அத்துறைகளுக்கான சட்டங்களை அந்தந்த மாநில அரசுகளே இயற்றிக் கொள்ளும். இவை மாநிலப்பட்டியல் எனப்படுகிறது. சில துறைகளுக்கு மத்திய அரசும் மாநில அரசும் சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றுள்ளன. இவை பொதுப்பட்டியல் எனப்படுகிறது.

மத்திய பட்டியல்

மத்தியப் பட்டியலில் 100 துறைகள் உள்ளடங்கியுள்ளது . வெளியுறவுத் துறைகள், பாதுகாப்பு, ஆயுதப்படைகள், தொலைதொடர்பு, தபால் மற்றும் தந்தி, மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் மற்றும் வணிகம்.

மாநிலப் பட்டியல்

மாநிலப் பட்டியல் 61 துறைகளைக் கொண்டுள்ளது. மாநிலத்தின் பொது ஒழுங்கு, காவல் துறை, நீதித்துறை நிர்வாகம், சிறைத்துறை, உள்ளாட்சி அமைப்புகள், விவசாயம் போன்றவை.

பொதுப் பட்டியல்

பொதுப்பட்டியல் 52 துறைகளாக உள்ளன. குற்றவியல் மற்றும் சிவில் நடைமுறைகள், திருமணம் மற்றும் விவாகரத்து, பொருளாதாரம் மற்றும் சிறப்புத் திட்டமிடல், செய்தித்தாள், புத்தகங்கள் மற்றும் அச்சகங்கள், மக்கள் தொகை கட்டுப்பாடு ஆகியன.

Book 1.indb 133 11-12-2018 22:02:41

மொத்த தேசிய மகிழ்ச்சி (Gross National Happiness GNH)

மொத்த தேசிய மகிழ்ச்சி என்பது தற்போது வளர்ந்து வரும் ஓர் தத்துவமாகும். இது ஒரு குறிப்பிட்டநாட்டில் உள்ள மொத்த மகிழ்ச்சியைக் குறிக்கும் ஒரு குறியீடு ஆகும். பூட்டான் அரசின் அரசமைப்பில் இடம் பெற்றுள்ள இக்கருத்து ஜூலை 18, 2008ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மொத்த தேசிய மகிழ்ச்சி என்னும் பதத்தைப் பூட்டானின் நான்காம் அரசரான ஜிக்மே சிங்கியே வான்சுக் அவர்களால் 1970 இல் உருவாக்கப்பட்டது.

மொத்த தேசிய மகிழ்ச்சி நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும் ஊக்குவிப்பு, பண்பாடு மற்றும் நல்ல ஆட்சி ஆகியவற்றை மையக் கருத்தாகக் கொண்டுள்ளது.

இயற்கை மற்றும் பாரம்பரிய மதிப்புகளுக்கிடையே இசைவை வலியுறுத்தும் வகையில் மக்களிடையே கூட்டு மகிழ்ச்சியை ஏற்படுத்துவது அரசின் இலக்காக இருக்க வேண்டும்.

A-Z

கலைச்சொற்கள்

அரசு – மக்களை ஆட்சி செய்யும் ஓர் அமைப்பு

குடியுரிமை – எந்த ஒரு நாட்டிலும் வாழ்வதற்கான உரிமை

பிராந்தியம் – மாகாணம் அல்லது மாநிலம்

சர்வாதிகாரம் –அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப் படுதல்

நிர்வாகத்துறை – சட்டங்களை செயல்படுத்துவதற்கான ஓர் அமைப்பு.

மீள்பார்வை

- அரசாங்கம் என்பது அரசின் செயல்பாடுகளைச் செயல்படுத்தும் அமைப்பாகும்.
- சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை போன்றவை அரசின் உறுப்பு அமைப்பாகும்.
- ஒற்றை ஆட்சி முறை, கூட்டாட்சி ஆட்சி முறை, நாடாளுமன்ற ஆட்சி முறை மற்றும் அதிபர் ஆட்சிமுறை போன்றவை முக்கிய அரசாங்க அமைப்புகளாகும்.
- இந்தியாவில் நாடாளுமன்ற ஆட்சி முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- முடிவெடுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தும் செயல்முறையே ஆட்சி எனப்படுகிறது.

பயிற்சிகள்

I. கோடிட்டஇடங்களை நிரப்புக.

1. _____,_____ஆகியவை ஒற்றை ஆட்சி முறைக்கான உதாரணங்களாகும்.
2. பாராளுமன்ற ஆட்சி முறை_____ என்றும் அழைக்கப்படுகின்றது.
3. பாராளுமன்ற ஆட்சிமுறையில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர்_____ஆவர்.

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

எண்	நாடுகள்	நாடாளுமன்றத்தின் பெயர்
1.	அமெரிக்க ஐக்கிய நாடுகள்	_____
2.	நார்வே	_____
3.	_____	ஃபோக்டிங்

III. வேறுப்படுத்துக:

1. ஒற்றையாட்சி முறை மற்றும கூட்டாட்சி முறை.
2. நாடாளுமன்ற ஆட்சிமுறை மற்றம் அதிபர் மக்களாட்சி.

FUUZHQ

IV. சுருக்கமாக விடையளி:

1. நேபாள மக்களாட்சி
2. ஒற்றையாட்சி முறை

V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி:

1. அரசமைப்பின் வகைகளைப் பட்டியலிடுக.
2. கூட்டாட்சி முறையின் நிறைகள் யாவை?
3. ஒற்றையாட்சி முறைக்கும் கூட்டாட்சி முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக.

VI. விரிவான விடையளி:

1. ஒற்றையாட்சி முறையின் நிறைகளை விவரி.
2. அதிபர் மக்களாட்சி முறை பற்றிக் குறிப்பு வரைக. மேலும் அதிபர் மக்களாட்சி முறைக்கும் நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.

Book 1.indb 134 11-12-2018 22:02:41

அலகு 2

உள்ளாட்சி அமைப்புகள்



கற்றல் நோக்கங்கள்

- இந்தியாவின் விடுதலைக்கு முன்பும், பின்பும் உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சியினைப் பற்றி புரிந்து கொள்ளல்
- ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றி அறிந்து கொள்ளல்
- இந்தியாவில் பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் இயல்பு மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து கற்றல்
- 1992ஆம் ஆண்டு அரசியலமைப்பு திருத்தச் சட்டங்கள் 73 மற்றும் 74 ஆகியவற்றைப் பற்றிப் புரிந்து கொள்ளல்
- தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகள் தோன்றிய வரலாறு பற்றியும் அவற்றின் வளர்ச்சி குறித்தும் அறிந்து கொள்ளல்

FV4VYD

உள்ளாட்சி அமைப்பு – விளக்கம்

ஒரு பகுதி அல்லது ஒரு கிராமம், சிறிய நகரம் அல்லது மாநகரம் போன்ற சிறிய சமூகத்தினை நிர்வாகம் செய்யும் அமைப்புகளே உள்ளாட்சி அமைப்புகள் எனப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகள் மக்களுக்கு நெருக்கமாகவும், அன்றாடத் தேவைகளைப்

Book 1.indb 135 11-12-2018 22:02:41

பூர்த்தி செய்யும் விதமாகவும், அடிமட்டத்திலிருந்து செயல்படுகின்றன. உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர்கள் உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வமைப்புகள் உள்ளூர் தேவைகளை மேலாண்மை செய்கின்றன. உள்ளாட்சி அமைப்புகள் உள்ளூர் சமூகத்திற்குப் பணியாற்றுவதுடன், தன்னாட்சிக் குடியரசுக்கும் கருவியாகச் செயல்படுகின்றன.

வரலாற்றுப்பின்னணி

உள்ளாட்சி அமைப்பு இந்தியாவில் தொன்றுதொட்டு காணப்படும் கருத்துரு ஆகும். இது பிற்காலச் சோழர்கள் அல்லது தஞ்சை சோழப்பேரரசு காலத்தில் உச்சநிலையை அடைந்தது. மௌரியப் பேரரசு காலத்திலும் உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றிய ஆவணக் குறிப்புகள் உள்ளன. பண்டைய இந்தியா முழுவதும் உள்ளாட்சி அமைப்புகள் பல் வேறுபட்ட அம்சங்களுடன் காணப்பட்டன. இடைக்காலத்தில் நிலபிரபுவத்துவத்தின் முறையின் தாக்கத்தால், உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவம் குறைந்தது. ரிப்பன் பிரபுவின் 1882ஆம் ஆண்டு தீர்மானத்தின்படி, மேற்கத்திய நாடுகளின் மக்களாட்சி முறையின் அடிப்படையில் 19ஆம் நூற்றாண்டின் கால் இறுதியில் இவ்வமைப்புகள் இந்தியாவில் புத்துயிர் பெற்றன. நவீன உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடித்தளமிட்டதால் ரிப்பன் பிரபு, 'உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.

1935 இந்திய அரசு சட்டம், மாகாணங்களில் தன்னாட்சியை அறிமுகப்–படுத்தியது. இச்சட்டம் 1937இல் நடைமுறைக்கு வந்தது. காங்கிரஸ் ஆட்சி அமைத்த மாகாணங்களில், ஊரக வளர்ச்சிக்குச் சிறப்பு கவனம் அளிக்கப்பட்டது. பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் கிராமங்களிலிருந்து நகரங்கள் வரை கட்டமைக்கப்பட வேண்டும் என்பது காந்தியடிகளின் திட்டங்களின் ஒரு முக்கியக் கூறாக இருந்தது.

இந்திய விடுதலைக்குப் பின்பு, இந்திய அரசமைப்பினை உருவாக்கியவர்கள் காந்தியடிகளின் கிராம தன்னாட்சிக் கொள்கையினைப் பெரிதும் கவனத்தில் கொண்டு செயலாற்றினர். கிராமங்கள் நிறைந்த இந்தியாவில், கிராம ஊராட்சிகளின் உருவாக்கம் ஒரு சமூக இயக்கமாகவே அமைந்தது. விடுதலைப் போராட்டத்தின்போது பஞ்சாயத்து மறுசீரமைப்பு என்பது மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியது.

எனவே நமது நாடு விடுதலையடைந்து, அரசமைப்புச் சட்ட உருவாக்கத்தின்போது, அரசமைப்பில் இணைக்கப்பட்ட 40ஆம் சட்டம் இவ்வாறு எடுத்துரைக்கின்றது. 'அரசு, ஊராட்சி மன்றங்களை அமைப்பதற்கும் தன்னாட்சி அமைப்புக் கூறுகளாக அவை இயங்குவதற்கும் தேவைப்படும் அதிகாரங்களையும் அதிகார அடைவையும் அவற்றுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்'.

ரிப்பன் பிரபு



ரிப்பன் பிரபு

1882 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகம் செயததன் மூலம் இந்தியர்களுக்கு சுதந்திரத்தின் சுவையை அறிமுகப்படுத்தியவர் ரிப்பன் பிரபு ஆவார்.

இந்தியாவில் நிர்வாகத்தை தாராளமயம் ஆக்கும் சில நடவடிக்கைகளை ரிப்பன் மேற்கொண்டார். நிர்வாகத்தை பரவலாக்க வேண்டும் என்பதற்காகவே உள்ளாட்சி அமைப்புகளை அவர் முறைப்படுத்தினார்.

உள்ளாட்சி அமைப்புகளை நடைமுறைப்படுத்துவதில் இருந்த சில தடைகளை 1882 ஆம் ஆண்டு அவர் இயற்றிய தீர்மானத்தின் மூலம் அகற்ற முயன்றார். கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள அமைப்புகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும் அதிக அதிகாரங்களையுடைய உள்ளாட்சி நிர்வாக உரிமைகளை வழங்கும் விதமாக ரிப்பன் தொடர்ச்சியான பல சட்டங்களை ஏற்படுத்தினார்.

Book 1.indb 136 11-12-2018 22:02:41

இந்திய விடுதலைக்குப் பின் உள்ளாட்சி அமைப்புகள்

உள்ளாட்சி அமைப்புகள் என்ற முறையின் கருத்துருவாக்கம், 1957ஆம் ஆண்டு முதல் 1986ஆம் ஆண்டு வரை, நான்கு முக்கிய குழுக்களின் உருவாக்கம் மற்றும் அவற்றின் முயற்சியினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. சமூக அபிவிருத்தி திட்டம் (1952) மற்றும் தேசிய நீட்டிப்பு சேவை (1953) ஆகியன, 1957ஆம் ஆண்டின் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திற்கு அடிப்படையாகத் திகழ்ந்தன.



குழுக்களும் பரிந்துரைகளும்

73 மற்றும் 74 வது அரசமைப்பு திருத்தச் சட்டங்களின் (1992) சிறப்பம்சங்கள்

- ஊராட்சி மற்றும் நகராட்சிகள் 'உள்ளாட்சி அமைப்பு' நிறுவனங்களாகச் செயல்படும்.
- குடியரசு அமைப்பின் அடிப்படை அலகுகள்: வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள உரிய வயதுடையோரைக் கொண்ட கிராம சபைகள் (கிராமங்கள்) மற்றும் பகுதி குழுக்கள் (நகராட்சிகள்) ஆகியன.
- கிராமங்கள் இடையில் காணப்படும் வட்டாரம் / வட்டம் / மண்டலம் மற்றும் மாவட்ட அளவில் ஊராட்சிகள் என மூன்றடுக்கு முறையில் செயல்படுகின்றன. இரண்டு மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகையை உடைய சிறு மாநிலங்களில் பஞ்சாயத்துக்கள் இரண்டடுக்கு முறையில் இயங்குகின்றன.
- நேரடித் தேர்தலின் மூலம் அனைத்து அளவிலும் இடங்கள் நிரப்பப்படுகின்றன.
- அனைத்து அளவு நிலைகளில் பஞ்சாயத்து தலைவர்களுக்கான இடங்களில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு, மக்கள்தொகை விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.
- பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீட்டில் பெண்களுக்கும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. எல்லா அளவு நிலைகளிலும் தலைவர்கள் பதவிக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- ஒரே மாதிரியான ஐந்தாண்டு பதவிக்காலம் மற்றும் பதவிக்காலம் நிறைவடையும் முன்பாகவே தேர்தல்கள் நடத்தப்பெற்று, புதிய அமைப்புகள் உருவாக்கப்படுதல் வேண்டும். ஆட்சி கலைக்கப்பட்டால், ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்.

1994 தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள்

1994 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒரு புதிய சட்டத்தின் அடிப்படையில், புதிய பஞ்சாயத்து ராஜ் அமைப்பு செயல்படுத்தப்பட்டது. அதன் சிறப்பம்சங்களாவன: (அ) மூன்று அடுக்கு அமைப்பு (ஆ) கிராம சபை (இ) தேர்தல் ஆணையத்தினை நிறுவுதல் (ஈ) நிதி ஆணையத்தினை நிறுவுதல் (உ) மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதத்தில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு (ஊ) பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு மற்றும் (எ) மாவட்ட திட்டக்குழுக்களை அமைத்தல்.

Book 1.indb 137 11-12-2018 22:02:42

கிராம ஊராட்சி

கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகள், கிராம ஊராட்சி என்று அழைக்கப்படுகின்றன. தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். (18வயது பூர்த்தியடைந்தோர்) அவர்களது பணிக்காலம் 5 வருடங்கள் ஆகும். கிராம ஊராட்சியின் ஆய்வாளராக மாவட்ட ஆட்சியர் செயல்படுகின்றார். ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்டுள்ள ஒவ்வொரு கிராமமும் கிராம ஊராட்சியாக உருமாறியுள்ளது.

கிராம ஊராட்சியின் செயல்பாடுகள்

- குடிநீர் வழங்குதல்
- தெருவிளக்குகளைப் பராமரித்தல்
- சாலைகளைப் பராமரித்தல்
- கிராம நூலகங்களைப் பராமரித்தல்
- சிறிய பாலங்களைப் பராமரித்தல்
- வீட்டுமனைகளுக்கு அனுமதி அளித்தல்
- வடிகால் அமைப்புக்களைப் பராமரித்தல்
- தொகுப்பு வீடுகளைக் கட்டுதல்
- தெருக்களைச் சுத்தம் செய்தல்
- இடுகாடுகளைப் பராமரித்தல்
- பொதுக்கழிப்பிட வசதிகளைப் பராமரித்தல்

விருப்பப் பணிகள்:

1994ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் கீழ்க்கண்ட விருப்ப செயல்பாடுகளை உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் நடைமுறைப்படுத்தியது.

- கிராமங்களிலுள்ள தெரு விளக்குகளைப் பராமரித்தல்
- சந்தைகளையும் திருவிழாக்களையும் நடத்துதல்
- மரங்களை நடுதல்
- விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல்
- வண்டிகள் நிறுத்தப்படும் இடங்களில் உள்ள வாகனங்கள், இறைச்சி கூடங்கள் மற்றும் கால்நடைகளின் கொட்டகை ஆகியவற்றைப் பராமரித்தல்
- பொருட்காட்சிகள் நடைபெறும் இடங்களைக் கட்டுப்படுத்துதல்

வருவாய்

மூன்றடுக்கு அமைப்பு உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்பில் கிராம ஊராட்சி மட்டுமே வரி விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

வரிகள்

- சொத்து வரி
- தொழில் வரி
- வீட்டு வரி
- குடிநீர் இணைப்புக்கான கட்டணம்
- நில வரி
- கடைகள் மீது விதிக்கப்படும் வரிகள்

உனது கிராமத்திலுள்ள உள்ளாட்சி அமைப்பு அலுவலகத்திற்குச் சென்று அங்கு விதிக்கப்படும் வரிகள் பற்றி அறிக.

கிராம சபை கூட்டங்கள்

ஒவ்வொரு ஊராட்சியிலும், அவ்வூராட்சி அதிகார எல்லைக்கு உள்ளே வசிக்கும் மக்களே கிராம சபை உறுப்பினர்களாக இருப்பர். ஊராட்சித் தலைவர் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். கிராம சபை கூட்டங்களில், வரவு செலவு கணக்குகளும், திட்டங்களினால் பயனடைந்தோர் பற்றியும் கலந்துரையாடப்படும்.



கிராம சபை

ஒரு வருடத்தில் நான்கு முறை கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும்.

1. சனவரி 26 – குடியரசு தினம்
2. மே 1 – உழைப்பாளர் தினம்
3. ஆகஸ்ட் 15 – சுதந்திர தினம்
4. அக்டோபர் 2 – காந்தி பிறந்த தினம்

Book 1.indb 138 11-12-2018 22:02:42

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் வரலாற்றுத் தொடக்கம் மற்றும் வளர்ச்சி



காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுகளில் காணப்படுகின்ற ஆதாரங்களின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் தமிழ்நாடு ஒரு நீண்ட வரலாற்றினைக் கொண்டதாக அறியப்படுகின்றது. அக்காலத்தில் தமிழ்நாடு பல கிராம குடியாட்சியைக் கொண்ட நிலமாக விளங்கியது. பல சமூகக் குழுக்கள் தங்களது பகுதி மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பத்து மற்றும் பதினோறாம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற சோழர்களது ஆட்சிக் காலத்தில், இந்த முறை உச்சநிலையை அடைந்தது. கிராம சபைகள் வரி விதித்தன; சமூக வாழ்வினை மேம்படுத்தின; தங்களது குறிப்பிட்ட பகுதியில் நீதியையும் நிலைநாட்டின. இந்தக் கிராம சபைகள் சோழ அரசர்களுடன் வலிமையான உறவுகளைக் கொண்டிருந்தனர். கிராம சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 'குடவோலை முறை' என்ற இரகசிய தேர்தல் முறை புழக்கத்தில் இருந்தது. சோழர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, கிராம தன்னாட்சி சரியவும், நிலப்பிரபுக்களின் மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறை மேலோங்கவும் தொடங்கியது. இம்முறை, ஆங்கிலேய காலனி ஆதிக்க ஆட்சி உள்ளாட்சி அமைப்புகளை அவர்களுக்கு ஏதுவாக இருக்கும் விதமாக அறிமுகம் செய்யும் வரை தொடர்ந்தது.






சுதந்திர இந்தியாவில், ஜனநாயக பரவலாக்கத்தின் முதல் சட்டமாக, 1950 இல் மதராஸ் கிராம பஞ்சாயத்து சட்டம் இயற்றப்பட்டது. 1957, உள்ளூர் நிர்வாக சீர்திருத்தங்கள் தொடர்பாக வெளியான விவரங்களின் தொடர்ச்சியாக , 1958ல் மதராஸ் பஞ்சாயத்து சட்டமும், மதராஸ் மாவட்ட வளர்ச்சி கவுன்சில் சட்டமும் இயற்றப்பட்டன.

ஊராட்சி ஒன்றியம்

பல ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்படுகின்றது. மக்கள் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களை (கவுன்சிலர்) நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் (Chairman) தேர்ந்தெடுகின்றனர்.



Book 1.indb 139 11-12-2018 22:02:44

ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள்

- குடிநீர் வழங்கல்
- கிராம சுகாதார நிலையங்கள் பராமரிப்பு
- சாலைகள் பராமரிப்பு
- மகப்பேறு விடுதிகளை நிறுவுதல்
- பொதுக் கண்காட்சிகள் நடத்துதல்
- கால்நடை மருத்துவமனைகளை நிறுவுதல்
- சமூக காடுகளை பராமரித்தல்.
- துவக்கப்பள்ளி கட்டடங்களை சீர் செய்தல்

உங்களது பகுதியில் தெரு விளக்குகள் எரியாவிட்டாலோ குழாயில் குடிநீர் வரவில்லை என்றாலோ யாரிடம், எங்குச் சென்று முறையிடுவீர்கள்?

மாவட்ட ஆட்சியர், திட்ட அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சிப் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரம் பெற்றுள்ளனர்.

மாவட்ட ஊராட்சி

ஒவ்வொரு மாட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. 50,000 மக்கள் தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்கள் தங்களில் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்களது பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும்.

மாவட்ட ஊராட்சியின் பணிகள்

- கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அரசுக்கு தெரிவித்தல்
- மாவட்ட திட்ட ஆணையத்தின் பணிகளை மேற்பார்வையிடல்

காந்தியின் கிராமசுயராஜ்யம்



காந்தியடிகள் கிராமப்புறங்களின் பிரதிநிதிகளைக் மக்களாகக் கொண்ட கிராம சுயராஜ்ஜியத்தை விரும்பினார். இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்பதை உணர்ந்தார் காந்தியடிகள். சுதந்திர இந்தியாவில், கிராம குடியரசு எனும் பஞ்சாயத்துக்களை கனவு கண்டார்.

காந்தியடிகள் பஞ்சாயத்து ராஜ் ஒரு அதிகார பகிர்வு கொண்ட அரசாக இருக்க அறிவுறுத்தினார். இந்திய அரசியலமைப்பின் அடிப்படையாக திகழும் கிராமங்கள் தங்களின் தேவைகளுக்கு தாங்களே பொறுப்பாவர்.

எளிமையான சொற்களில் சொல்வதென்றால் காந்தியின் சுயராஜ்ய கிராமம், அடிப்படையில் சுயசார்புடையதாக இருக்கவேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான உணவு, தூய்மையான நீர், சுகாதாரம், வீட்டு வசதி, கல்வி மற்றும் பிற தேவைகளுக்கு என அனைத்து தேவைகளையும் ஏற்கும் அரசாங்கம் மற்றும் சுய பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தையும் வழங்க வேண்டும்.

நகர்ப்புற உள்ளாட்சி

- பேரூராட்சி
- நகராட்சி
- மாநகராட்சி

பேரூராட்சி

பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி பேரூராட்சி எனப்படும். பேரூராட்சித் தலைவரும் உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். பேரூராட்சியின் நிர்வாகத்தினை மேற்கொள்ள ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்படுகிறார்.

Book 1.indb 140 11-12-2018 22:02:44

நகராட்சி

ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி நகராட்சி எனப்படும். நகர சபைத் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் (கவுன்சிலர்) மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களது பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும். இந்நகராட்சியினை நிர்வாகம் செய்ய ஒரு நகராட்சி ஆணையர் அரசால் நியமிக்கப்படுகிறார்.

மாநகராட்சி

பல இலட்சம் மக்கள்தொகை கொண்ட பெரு நகரப்பகுதிகள் மாநகராட்சி என அழைக்கப்படுகிறது. மாநகராட்சித் தலைவர் மேயர் என்று அழைக்கப்படுகிறார். மேயர் மற்றும் பிற உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் ஆகும். இம் மாநகராட்சிக்கு மாநகராட்சி ஆணையர் நிர்வாக அலுவலர் ஆவார்.

தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள் உள்ளன. அவை சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திருப்பூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல்.


இந்திய ஆட்சிப்பணி (IAS) அதிகாரி ஒருவர் மாநகராட்சியின் ஆணையராக நியமிக்கப்படுகிறார். மாநகராட்சி சபையில் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் அனைத்தும் இவரால் செயல்படுத்தப்படுகிறன. மாநகராட்சி அலுவலகம் இவரது செயல்பாடுகளுக்கு உதவுகின்றது.

சென்னை மாநகராட்சித் கட்டடத்திற்கு எந்த ஆங்கிலேயப் பிரபுவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது?



சென்னை மாநகராட்சி

நகராட்சி தலைவராக பெரியார்



பெரியார் ஈ.வே. இராமசாமி அவர்கள் 1917 ஆம் ஆண்டில் இருந்து பல ஆண்டுகள் ஈரோடு நகராட்சியின் பெருந்தலைவராக பதவி வகித்தார். அவரது பதவிக் காலத்தில் ஈரோடு நகராட்சி மக்களுக்கான முறையான குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி தருவதில் முனைப்பு காட்டினார். 1919 இல் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் முறையினை பெரியார் செயல்படுத்தினார். இந்திய நகராட்சி நிர்வாகங்களின் வரலாற்றில் இத்திட்டத்தினை முதன்முதலில் செயல்படுத்தியவர் பெரியார் என அறியப்படுகிறது.

மாநகராட்சித் தலைவரின் (மேயரின்) முக்கிய பணிகள்

- அரசுக்கும் மாநகராட்சி உறுப்பினர்களுக்கும் இடையே ஓர் இணைப்புப்பாலமாக மேயர் செயல்படுகிறார்.
- மாநகராட்சி குழு கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார்.
- வெளிநாட்டு பிரமுகர்களை வரவேற்று உபசரிப்பார்.

Book 1.indb 141 11-12-2018 22:02:44

பிற நகர்ப்புற பஞ்சாயத்துக்கள்

- அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள்
- நகர் பகுதி குழுக்கள்
- இராணுவக் குடியிருப்பு வாரியம்
- குடியிருப்புகள்
- துறைமுகப் பொறுப்பு கழகம்
- சிறப்பு நோக்க நிறுவனம்

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்கள்

உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களை பொதுத் தேர்தல்களைப் போன்றே மாநிலத் தேர்தல் ஆணையம் நடத்துகின்றது. வாக்காளர் பட்டியல் பகுதி வாரியாகத் தயாரிக்கப்படுகின்றது. பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு சுழற்சி முறையில், மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும், சவால்களும்

நமது மக்களாட்சிக்கு உள்ளாட்சி அமைப்புகளே அடிப்படைகளாகும். உள்ளாட்சி அமைப்புகளின் அரசமைப்பு நிலை, அவற்றின் செயல்பாட்டிற்கு மிகவும் முக்கியத்துவத்தினை அளிக்கின்றது. இருப்பினும், இந்தியாவில் இவற்றின் செயல்பாடுகளில் ஒரு சில நெருக்கடிகள் உள்ளன. அவற்றின் முதன்மையான சிக்கல்களும் சவால்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள் மற்றும் அதிகாரங்களைப் பற்றிய தெளிவான வரையறையின்மை.
- நிதி ஒதுக்கீடு மற்றும் தேவைகளின் மதீப்பீடு ஒத்துப்போவதில்லை.
- உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கும் முக்கிய முடிவுகளில் சாதி, வகுப்பு மற்றும் சமயம் ஆகிய மூன்றும் முக்கியப் பங்காற்றுகின்றன.
- மக்களாட்சியின் அடிப்படை நிலையிலுள்ள அலுவலர்கள் மற்றும் தேர்ந்ததெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பொறுப்பற்ற நிலை.

ஓடந்துறை கிராமம்

கடந்த சில காலங்களாக கட்டி தரப்பட்ட நிரந்தர வீடுகளால் குடிசைகள் இல்லாத கிராமம் என்ற பெருமைக்குரியது ஓடந்துறை பஞ்சாயத்து. மேலும் தடையில்லா நீர் விநியோகமும் தரமான சாலை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

ஓடந்துறையின் சுய முயற்சிகளில் குறிப்பிடத்தக்க ஒன்றானது புதுப்பிக்கக்கடிய வளங்களில் அதன் சோதனை முயற்சிகள் ஆகும். வங்கி கடன் மற்றும் அரசின் மானியத்தைப் பெற்று ரூபாய் 2 கோடியே 30 லட்சம் செலவில் நிறுவப்பட்ட சிறிய காற்றாலையின் மூலமாக ஓடந்துறை பஞ்சாயத்தில் ஆண்டிற்கு 7.5 லட்சம் யூனிட்டுகள் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. பஞ்சாயத்தின் மொத்த தேவையான 2.5 லட்சம் யூனிட்டுகள் போக மீதமுள்ள மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு (TANGEDCO) விற்கப்படுகிறது. இதனால் ஆண்டுதோறும் 20 லட்சம் ரூபாய் வருமானம் ஈட்டுகிறது. மேலும் ஒன்பது கிலோ வாட் மின்சாரம் தயாரிக்க கூடிய பயோமாஸ் (gasifier) என்னும் அமைப்பினை உருவாக்கி அனைத்து கிராமங்களுக்கும் தேவையான குடிநீரை இறைக்க பயன்படுத்துகின்றனர்.

சூரிய ஒளியினால் இயங்கும் தெரு விளக்குகள் மற்றும் அனைத்து குடும்பங்களுக்கும் சமைப்பதற்கான உயிரி வாயு இணைப்புகள் ஆகியவை ஓடந்துறை மாதிரி பஞ்சாயத்தின் ஆற்றல் தன்னிறைவுக்காண சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.



Book 1.indb 142 11-12-2018 22:02:44

கலைச்சொற்கள்

ஒதுக்கீடு	–	ஒரு குறிப்பிட்ட பயனாளிக்கு ஒதுக்கப் படும் வளங்களின் அளவு
சட்டத்திருத்தம்	–	நடைமுறையிலுள்ள சட்டத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றம்
தன்னாட்சி	–	சுயாட்சி அரசு
இராணுவக் குடியிருப்பு	–	இராணுவ முகாம்
குழுக்கள்	–	ஒரே மாதிரியான பொருள்கள் அல்லது மக்கள்
கருத்துருவாக்கம்	–	ஒரு கருத்தை உருவாக்கும் முறை
அதிகாரப்பகிர்வு	–	மத்திய அரசிலிருந்து உள்ளாட்சி அமைப்பு களுக்கு அதிகாரத்தைப் பகிர்தல்
பிரமுகர்கள்	–	முக்கிய உயர் பணியாளர்கள் அல்லது அலுவலர்கள்
புத்துயிர் அளித்தல்	–	மீட்டெடுத்தல்

மீள்பார்வை

- உள்ளாட்சி அமைப்புகள் சமூகத்தின் அடிமட்ட அளவிலிருந்து செயல் படுகின்றன.
- ரிப்பன் பிரபு, 'உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.
- சோழர் காலத்தில் கிராம நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 'குடவோலை முறை' மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- 1994 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் புதிய பஞ்சாயத்து ராஜ் அமைப்பு நடைமுறையில் உள்ளது.
- கிராம ஊராட்சி என்பது கிராமங்களின் உள்ளாட்சி அமைப்பு ஆகும்.
- கிராம சபைக் கூட்டங்கள் ஆண்டுக்கு 4 முறை நடைபெறுகின்றன.
- ஊராட்சி ஒன்றியங்கள் பல ஊராட்சிகள் ஒன்றிணைவதால் உருவாகின்றன.
- மாவட்ட ஊராட்சிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப் பட்டுள்ளன.
- மாநகராட்சி, நகராட்சி மற்றும் நகரப்பஞ்சாயத்துகள் ஆகியன நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஆகும்.
- மாநகராட்சியின் தலைவர் மாநகர தலைவர் (மேயர்) என்றழைக்கப்படுகிறார்.
- உள்ளாட்சி அமைப்புக்களுக்கான தேர்தலை, மாநிலத் தேர்தல் ஆணையம் நடத்துகிறது.

பயிற்சிகள்

I. பயிற்சிகள்

1. 1985 ஆம் ஆண்டு திட்டக் குழுவினால் நிறுவப்பட்ட குழு எது?

   அ. பல்வந்ராய் மேத்தா குழு

   ஆ. அசோக் மேத்தா குழு

   இ. GVK ராவ் மேத்தா குழு

   ஈ. LM சிங்வி மேத்தா குழு

FVDS11

2. _____காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்புப் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.

   அ. சோழர் ஆ.சேரர்

   இ. பாண்டியர் ஈ. பல்லவர்

3. 73 மற்றும் 74வது அரசமைப்புத் திருத்தச் சட்டங்கள் இவ்வாண்டில் நடைமுறைக்கு வந்தன.

   அ. 1992 ஆ.1995

   இ. 1997 ஈ. 1990

4. ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுகின்றவர்_____ ஆவார்.

Book 1.indb 143 11-12-2018 22:02:44

அ. ஆணையர்

ஆ. மாவட்ட ஆட்சியர்

இ. பகுதி உறுப்பினர்

ஈ. மாநகரத் தலைவர்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. 'உள்ளாட்சி அமைப்புகளின்' தந்தை என அழைக்கப்படுபவர்_____.
2. நமது விடுதலைப் போராட்டத்தின் போது மறுசீரமைப்பு என்பது_____ஆக விளங்கியது.
3. சோழர் காலத்தின் போது கிராம சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த இரகசிய தேர்தல் முறை_____ என்றழைக்கப்பட்டது.
4. கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு_____ஆகும்.
5. பேரூராட்சிகளின் நிர்வாகத்தினைக் கண்காணிப்பவர்_____ஆவார்.

III. பொருத்துக

1. மாவட்ட ஊராட்சி – கிராமங்கள்
2. கிராம சபைகள் – மாநகரத் தலைவர்
3. பகுதி குழுக்கள் – பெருந்தலைவர்
4. ஊராட்சி ஒன்றியம் – மாவட்ட ஆட்சியர்
5. மாநகராட்சி – நகராட்சிகள்

IV. தவறுகளைக் கண்டறிந்து பிழை திருத்தி எழுதவும்

1. ஊராட்சி ஒன்றியம் பல மாவட்டங்கள் ஒன்றிணைவதால் உருவாகின்றது.
2. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ளது.
3. நகராட்சி ஆணையர் ஓர் இந்திய அரசுப் பணிகள் அலுவலர் ஆவார்.
4. ஊராட்சிகளில், ஊராட்சித் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் தேர்த்நெடுக்கப்படுகின்றனர்.

V. சுருக்கமான விடையளி:

1. கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள் யாவை?
2. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?
3. கிராம ஊராட்சிகளின் முக்கிய பணிகள் யாவை?
4. உள்ளாட்சி அமைப்புகளின் விருப்பப்பணிகள் யாவை?
5. மாவட்ட ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் யார்?
6. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் யாவை?

VI. ஒரு பத்தியில் விடையளி

1. 1992 ஆம் ஆண்டு 73 மற்றும் 74வது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?
2. உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்கள் மற்றும் சவால்கள் யாவை?


VII. செயல்பாடு:

1. உன் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதியைச் சந்தித்து உள்ளாட்சி அமைப்புகள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றனஎன்றவிவரங்களை சேகரி.

Book 1.indb 144 11-12-2018 22:02:44

அலகு – 1

இந்திய அரசியலமைப்பு



கற்றலின் நோக்கங்கள்

- இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டதை அறிதல்
- இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை அறிதல்
- அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளைப் புரிதல்
- அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளை அறிதல்
- மத்திய, மாநில அரசுகளின் உறவுகள் மற்றும் அவசரநிலை பற்றிப் புரிதல்

M4IZ36

அறிமுகம்

ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும். அது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி ஆகும். குறிப்பாக அரசின் நிறுவனக் கட்டமைப்பு பல்வேறு துறைகள் மற்றும் மத்திய, மாநில அரசுகளிடையே அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் கட்டமைப்புடன் அரசியலமைப்பு சம்மந்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U.S.A) தோன்றியது.

1.1 அரசியலமைப்பின் அவசியம்

அனைத்து மக்களாட்சி நாடுகளும் தங்களை நிர்வகித்துக் கொள்ள ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை பெற்றுள்ளன. ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ விரும்பும் வகையில் சில அடிப்படைக் கொள்கைகளை அரசியலமைப்பு வகுத்து கொடுக்கிறது. நமது சமூகத்தின் அடிப்படை தன்மையை அரசியலமைப்பு நமக்கு தெரிவிக்கிறது.

பொதுவாக ஒரு நாடு பல்வேறு நம்பிக்கைகளைக் கொண்டுள்ள பல்வேறு இன மக்களைக் கொண்டிருக்கும். எனவே அரசியலமைப்பானது அவ்வாறான குடிமக்களின் நம்பிக்கைகளை நிறைவு செய்ய உதவி செய்யும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கும்.

1.2 இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்

1946ஆம் ஆண்டு, அமைச்சரவை தூதுக்குழு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இச்சபையில் 292 மாகாணப் பிரதிநிதிகள், 93 சுதேச அரசுகளின் நியமன உறுப்பினர்கள், பலுச்சிஸ்தானின் சார்பில் ஒருவர் (1) மற்றும் மாகாண முதன்மை ஆணையர்கள் சார்பில் மூவர் (3) என மொத்தம் 389 உறுப்பினர்கள் இருந்தனர். அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம், 1946ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் நடைபெற்றது. இச்சபையின் தற்காலிக தலைவராக மூத்த உறுப்பினர் Dr. சச்சிதானந்த சின்கா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய அரசியலமைப்பை உருவாக்க கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் போதே அவர் இறந்ததைத் தொடர்ந்து, Dr. இராஜேந்திரபிரசாத் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவராகவும், H.C. முகர்ஜி மற்றும் V.T. கிருஷ்ணமாச்சாரி இருவரும் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்கூட்டத் தொடர் 11 அமர்வுகளாக 166 நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது 2473 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் சில ஏற்கப்பட்டன. அரசியல் நிர்ணய சபை பல்வேறு குழுக்களின் மூலம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டது. இந்திய அரசியலமைப்பு சட்ட வரைவுக் குழுத் தலைவர் Dr. B.R. அம்பேத்கர் தலைமையின் கீழ்

10th_Civics_Unit 1_TM.indd 185 07-05-2019 16:51:12

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. எனவே அவர் "இந்திய அரசியலமைப்பின் தந்தை" என அறியப்படுகிறார்.



Dr. B.R. அம்பேத்கர்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்ட பின்னர், பொதுமக்கள், பத்திரிக்கைகள், மாகாணசட்டமன்றங்கள்மற்றும் பலரால் விவாதிக்கப்பட்டது. இறுதியாக முகவுரை, 22 பாகங்கள், 395 சட்டப்பிரிவுகள் மற்றும் 8 அட்டவணைகளைக் கொண்ட இந்திய அரசியலமைப்பு, 1949ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்த நாளே ஒவ்வொரு ஆண்டும் இந்திய குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

TWM8G4



பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இத்தாலிய பாணியில், அவரது கைப்பட எழுதப்பட்டது.

1.3 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகள்

- உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
- இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.
- இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
- மத்தியில் மட்டுமல்லாமல் மாநிலங்களிலும் நாடாளுமன்ற முறையைத் தோற்றுவிக்கிறது.
- இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.
- ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது.
- சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்கு சிறப்பு விதிகள் மூலம் சலுகைகள் வழங்க வகை செய்கிறது.

1.4 முகவுரை

'முகவுரை' (Preamble) என்ற சொல் அரசியலமைப்பிற்கு அறிமுகம் அல்லது முன்னுரை என்பதைக் குறிக்கிறது. இது அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை உள்ளடக்கியது. இது அரசியலமைப்பின் சுருக்கம் அல்லது சாராம்சத்தைக் கொண்டது. இது பெரும்மதிப்புடன் "அரசியலமைப்பின் திறவுகோல்" என குறிப்பிடப்படுகிறது.

1947ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜவகர்லால் நேருவின் 'குறிக்கோள் தீர்மானத்தின்' அடிப்படையில் இந்திய அரசியலமைப்பின் முகவுரை அமைந்துள்ளது. முகவுரையானது 1976ஆம் ஆண்டு 42வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின்படி திருத்தப்பட்டது.அதன்படி,சமதர்மம்,சமயச்சார்பின்மை, ஒருமைப்பாடு, என்ற மூன்று புதிய சொற்கள் சேர்க்கப்பட்டன. 'இந்திய மக்களாகிய நாம்' என்ற சொற்களுடன் இந்திய அரசியலமைப்பின் முகவுரை தொடங்குகிறது. இது இந்திய அரசியலமைப்புத் தனது அதிகாரத்தை மக்களிடமிருந்து பெறப்பட்டதைத் தெளிவுபடுத்துகிறது. இதிலிருந்து, இந்திய மக்களே இந்திய அரசியலமைப்பின் ஆதாரம் என நாம் கூறமுடியும். இந்தியா ஒரு இறையாண்மைமிக்க, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசு என நமது அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது. இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி என அனைத்திலும் பாதுகாப்பு வழங்குவதே இதன் நோக்கமாகும். இந்திய மக்கள் அனைவருக்கும் சுதந்திரமாகச் சிந்தித்தல், உணர்வுகளை வெளிப்படுத்துதல், நம்பிக்கை, சமய வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமாக செயல்பட இந்திய அரசியலமைப்பு உத்திரவாதம் அளிக்கிறது. தகுதி, வாய்ப்பு ஆகியவற்றில் அனைவருக்கும் சமத்துவத்தை அளிக்கிறது. இந்தியர்களிடையே சகோதரத்துவத்தை வளர்க்க ஊக்கமளிக்கிறது.

10th_Civics_Unit 1_TM.indd 186 07-05-2019 16:51:12



1789ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சியின் போது சுதந்திரம், சமத்துவம்,சகோதரத்துவம்ஆகியன முக்கிய முழக்கங்களாயின. இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

1.5 குடியுரிமை

'சிட்டிசன்' (Citizen) எனும் சொல் 'சிவிஸ்' (Civis) எனும் இலத்தின் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் ஒரு 'நகர அரசில் வசிப்பவர்' என்பதாகும். இந்திய அரசியலமைப்பு, இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது. இந்திய அரசியலமைப்பின் பாகம் II சட்டப்பிரிவுகள் 5 லிருந்து 11 வரை குடியுரிமையைப் பற்றி விளக்குகின்றன.

1.5.1 குடியுரிமைச் சட்டம் (1955)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பு, 1955ல் இயற்றப்பட்ட குடியுரிமைச்சட்டம், குடியுரிமை பெறுதல் மற்றும் குடியுரிமை இழத்தல் ஆகியன பற்றி விளக்குகிறது. இச்சட்டம் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தால் எட்டு முறை திருத்தப்பட்டுள்ளது. முதலில், இக்குடியுரிமைச் சட்டம் காமன்வெல்த் குடியுரிமையை வழங்கியது. ஆனால் 2003ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்ட திருத்ததின்படி இவ்வுரிமை நீக்கப்பட்டது.

1.5.2 குடியுரிமை பெறுதல்

குடியுரிமைச் சட்டம் 1955, குடியுரிமைப் பெற ஐந்து வழிகளைப் பரிந்துரை செய்கிறது. அவை; பிறப்பு, வம்சாவளி, பதிவுசெய்தல், இயல்புரிமை மற்றும் பிரதேச இணைவு ஆகும்.

குடியுரிமைச் சட்டம் 1955ன் படி ஒருவர் கீழ்க்காணும் ஏதேனும் ஒரு முறையில் குடியுரிமை பெறமுடியும்.

1. பிறப்பின் மூலம்: 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்தியக் குடிமக்களாகக் கருதப்படுவர்.

2. வம்சாவளி மூலம்: 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ வெளிநாட்டில் பிறந்த ஒருவரின் தந்தை(அவர் பிறந்த போது) இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் வெளிநாட்டில் பிறந்த அவர், வம்சாவளி மூலம் இந்தியக் குடியுரிமை பெறமுடியும்.

3. பதிவின் மூலம்: ஒருவர் இந்தியக் குடியுரிமை கோரி, பொருத்தமான அங்கீகாரத்துடன் பதிவு செய்வதன் மூலம் இந்தியக் குடியுரிமை பெறலாம்.

4. இயல்புரிமை மூலம்: ஒரு வெளிநாட்டவர், இந்திய அரசிற்கு, இயல்புரிமை கோரி விண்ணப்பிப்பதன் மூலம் அவர், இந்தியக் குடியுரிமை பெறலாம்.

5. பிரதேச (நாடுகள்) இணைவின் மூலம்: பிற நாடுகள் / பகுதிகள் இந்தியாவுடன் இணையும் போது இந்திய அரசு அவ்வாறு இணையும் நாடுகளின் மக்களைத் தமது குடிமக்களாகக் கருதி அவர்களுக்குக் குடியுரிமை வழங்கலாம்.

1.5.3 குடியுரிமையை இழத்தல்

குடியுரிமைச் சட்டம் 1955ன் படி, ஒருவர் தன் குடியுரிமையை, சட்டத்தின் மூலமாக பெறப்பட்டதாகவோ (அ) அரசியலமைப்பின் கீழ் முன்னுரிமையால் பெறப்பட்டதாகவோ இருக்கும்பட்சத்தில் பெற்ற குடியுரிமையைத் துறத்தல், முடிவுறச் செய்தல், இழத்தல் என்ற பின்வரும் மூன்று வழிகளில் இழப்பார்.

1. ஒரு குடிமகன் தாமாக முன்வந்து தனது குடியுரிமையை இழத்தல்.
2. வேறு ஒரு நாட்டில் குடியுரிமை பெறும்போது தாமாகவே இந்தியக் குடியுரிமை முடிவுக்கு வந்துவிடுதல்.
3. இயல்புரிமையின் மூலம் குடியுரிமை பெற்ற ஒரு குடிமகன், மோசடி செய்து குடியுரிமை பெற்றவர், தவறான பிரதிநிதித்துவம் தந்தவர் (அ) உண்மைகளை மறைத்தவர் (அ) எதிரி நாட்டுடன் வாணிகம் செய்தவர் அல்லது இரண்டாண்டு காலத்திற்கு சிறை தண்டனை பெற்றவர் என்பதை மத்திய அரசு கண்டறிந்து அவர் குற்றம் புரிந்தவர் என்று திருப்திப்படும் பட்சத்தில் மத்திய அரசு, அவரது குடியுரிமையை இழக்கச் செய்யும்.

1.6 அடிப்படை உரிமை

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி (III) 12ல் இருந்து 35 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகின்றன. அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்த அடிப்படை உரிமைகளை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளின் தாக்கத்தால் உருவாக்கினார்கள். முதலில் இந்திய அரசியலமைப்பு ஏழு அடிப்படை உரிமைகளை வழங்கியது. ஆனால், தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன. இந்திய அரசியலமைப்பின் பகுதி (III) 'இந்தியாவின் மகாசாசனம்' என அழைக்கப்படுகிறது. இந்தியாவில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் பொதுவானது. ஆனால் இந்திய குடிமக்களுக்கு மட்டுமேயான சில அடிப்படை உரிமைகளும் உள்ளன.

10th_Civics_Unit 1_TM.indd 187 07-05-2019 16:51:12

I. சமத்துவ உரிமை



பிரிவு 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

பிரிவு 15 – மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடைசெய்தல்.

பிரிவு 16 – பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்.

பிரிவு 17 – தீண்டாமையை ஒழித்தல்.

பிரிவு 18 – இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

II. சுதந்திர உரிமை



பிரிவு 19 – பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.

பிரிவு 20 – குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு 21 – வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு 21 A – தொடக்கக்கல்வி பெறும் உரிமை.

பிரிவு 22 – சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை

III. சுரண்டலுக்கெதிரான உரிமை



பிரிவு 23 – கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.

பிரிவு 24 – தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

IV. சமயச்சார்பு உரிமை



பிரிவு 25 – எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.

பிரிவு 26 – சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.

பிரிவு 27 – எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.

பிரிவு 28 – மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமலிருக்க உரிமை

V. கல்வி, கலாச்சார உரிமை





பிரிவு 29 – சிறுபான்மையினரின் எழுத்து, மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.

பிரிவு 30 – சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

VI. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை



பிரிவு 32 – தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.



1978ஆம் ஆண்டு, 44ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தப்படி, அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை (பிரிவு 31) நீக்கப்பட்டது.

இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி XII, பிரிவு 300 A வின் கீழ் ஒரு சட்ட உரிமையாக வைக்கப்பட்டுள்ளது.



இந்த அஞ்சல் வில்லைகள் எந்த அடிப்படை உரிமைகள் மீறுதலைக் குறிப்பிடுகின்றன?

10th_Civics_Unit 1_TM.indd 188 07-05-2019 16:51:13



பெரும் முதலாளிகளிடமிருந்து வந்த எதிர்ப்பு காரணமாக கி.பி. (பொ.ஆ) 1215இல் இங்கிலாந்து மன்னர் முதலாம் ஜான் என்பவரால் வெளியிடப்பட்ட உரிமைகள் பட்டயமே, 'மகாசாசனம்' எனப்படும். இதுவே, குடிமக்களின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடைய முதல் எழுதப்பட்ட ஆவணமாகும்.

அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை (சட்டப்பிரிவு–32)

நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும். இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும். உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன. அவை ஆட்கொணர்வு நீதிப்பேராணை, கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை, தடையுறுத்தும் நீதிப்பேராணை ஆவணக் கேட்பு நீதிப்பேராணை, தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை ஆகியனவாகும். இது போன்ற ஆணைகளை வெளியிட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் 'அரசியலமைப்பின் பாதுகாவலன்' என அழைக்கப்படுகிறது. Dr. B.R. அம்பேத்கரின் கூற்றுப்படி அரசியலமைப்பு சட்டப்பிரிவு 32, இந்திய அரசியலமைப்பின் 'இதயம் மற்றும் ஆன்மா' ஆகும்.

அ) ஆட்கொணர்வு நீதிப்பேராணை (Habeas Corpus)

சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

ஆ) கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)

மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்

இ) தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition)

ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

ஈ) ஆவணக் கேட்பு பேராணை (Certiorari)

உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.

உ) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Quo–Warranto)

இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக, தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைத்தல்

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் குடியரசுத் தலைவரால் அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது, இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 19ன் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்ட சுதந்திரம் தாமாகவே நிறுத்தப்படுகிறது. மற்ற அடிப்படை உரிமைகளையும் குடியரசுத் தலைவர் சில குறிப்பிட்ட ஆணைகளைப் பிறப்பிப்பதின் மூலம் தடை செய்யலாம். குடியரசுத் தலைவரின் இந்த ஆணைகள் நாடாளுமன்றத்தால் கட்டாயம் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் எந்த சூழ்நிலையிலும், குடியரசுத்தலைவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 20 மற்றும் 21ன் கீழ் வழங்கப்பட்ட உரிமைகள் (குற்றங்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு, வாழ்க்கை மற்றும் தனிநபர் சுதந்திரம் பாதுகாப்பு) தடைசெய்ய முடியாது.

1.7 அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்

அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள், இந்திய அரசியலமைப்புச்சட்டம் பகுதி IV சட்டப்பிரிவு 36ல் இருந்து 51 வரை தரப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டம், வழிகாட்டும் நெறிமுறைகளுக்காகத் தனியாக வகைபாட்டினையும் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் பொருளடக்கம் மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையில் அவை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது சமதர்ம, காந்திய மற்றும் தாராள–அறிவுசார்ந்தவை என்று பிரிக்கப்பட்டுள்ளன. இந்த கொள்கைகளை, நீதிமன்றத்தால் வலுக்கட்டாயமாகச் செயற்படுத்த முடியாது. ஆனால் இவை ஒரு நாட்டினை நிர்வகிக்க அவசியமானவை. ஓர் அரசு சட்டத்தை இயற்றும் போது இந்த கொள்கைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டியது முக்கிய கடமையாகும். சமுதாய நலனை மக்களுக்குத் தருவதே இதன் நோக்கமாகும். இந்திய அரசியலமைப்பின் 'புதுமையான சிறப்பம்சம்' என Dr. B.R. அம்பேத்கர் இதனை விவரிக்கிறார்.

10th_Civics_Unit 1_TM.indd 189 07-05-2019 16:51:13

உங்களுக்குத் தெரியுமா?

2002ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட, 86வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, இந்திய அரசியலமைப்பின் பிரிவு 45 திருத்தப்பட்டு, பிரிவு 21 A வின் கீழ் தொடக்கக்கல்வி, அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தம், மாநில அரசுகள் முன்பருவ மழலையர் கல்வியை (Early Childhood care and Education – EECE) 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்க அறிவுறுத்துகிறது.

அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகள்

அடிப்படை உரிமைகள்	அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்
இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை .	இவை அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை .
அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது.	இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும்.
இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும்.	எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது
இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை.	இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை.
இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன .	இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது.
இவை இயற்கையான உரிமைகள்.	இவை மனித உரிமைகளைப் பாதுகாக்க வழிவகுக்கிறது.

1.8 அடிப்படைக் கடமைகள்

இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் என்பவை முன்னாள் சோவியத் யூனியன் (USSR) அரசியலமைப்பின் தாக்கத்தால் சேர்க்கப்பட்டதாகும். 1976ஆம் ஆண்டு, காங்கிரஸ் கட்சி சர்தார் ஸ்வரன் சிங் கமிட்டியை அமைத்து அடிப்படைக் கடமைகள் குறித்து ஆராய பரிந்துரை செய்தது. அக்கமிட்டி அரசியலமைப்புச் சட்ட திருத்தம் செய்ய பரிந்துரைத்தது. அதன்படி 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42வது அரசியல் அமைப்புச் சட்டதிருத்தம் நமது அரசியலமைப்பில் குடிமக்களின் பொறுப்புகள் சிலவற்றைச் சேர்த்தது. இவ்வாறு சேர்க்கப்பட்ட பொறுப்புகளே குடிமக்களின் கடமைகள் என்றழைக்கப்பட்டன. மேலும் இந்தச் சட்டத்திருத்தம், அரசியலமைப்பின் பகுதி IV A என்ற ஒரு புதிய பகுதியைச் சேர்த்தது. இந்தப் புதிய பகுதி 51 A என்ற ஒரேயொரு பிரிவை மட்டும் கொண்டது. இது முதன்முறையாக, குடிமக்களின் பத்து அடிப்படைக் கடமைகளை விளக்கும் குறிப்பிட்ட சட்டத் தொகுப்பாக உள்ளது.

1.8.1 அடிப்படைக் கடமைகளின் பட்டியல்



ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமைகளாக பின்வருவனவற்றை சட்டப்பிரிவு 51 A வலியுறுத்துகிறது.

அ) ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அரசியலமைப்பு, அதன் கொள்கைகள், நிறுவனங்கள், தேசியகீதம், தேசியக்கொடி, தேசிய சின்னங்கள் ஆகியவற்றை மதித்தல்.

ஆ) சுதந்திர போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உயரிய நோக்கங்களைப் போற்றி வளர்த்தல்.

இ) இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைப் பேணிப் பாதுகாத்தல்.

ஈ) தேசப் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் பொழுது தேசப்பணியாற்ற தயாராயிருத்தல்.

உ) சமய, மொழி மற்றும் பிராந்திய அல்லது பகுதி சார்ந்த வேறுபாடுகளை மறந்து, பெண்களைத் தரக்குறைவாக நடத்தும் பழக்கத்தை நிராகரித்து, பெண்களின் கண்ணியத்தைக் காக்கும் எண்ணங்களை மேம்படுத்தி, இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவத்தை வளர்த்தல்.

ஊ) நமது உயர்ந்த, பாரம்பரிய கலப்பு கலாச்சாரத்தை மதித்து பாதுகாத்தல்.

10th_Civics_Unit 1_TM.indd 190 07-05-2019 16:51:13

எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் மற்றும் உயிரினங்கள் அடங்கிய இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தி அவை வாழும் சூழலை ஏற்படுத்துதல்.

ஏ) அறிவியல் கோட்பாடு, மனிதநேயம், ஆராய்ச்சி மனப்பான்மை மற்றும் சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்த்தல்.

ஐ) வன்முறையைக் கைவிட்டு பொது சொத்துக்களைப் பாதுகாத்தல்.

ஒ) தனிப்பட்ட மற்றும் கூட்டுசெயல்பாடுகள் என அனைத்து செயல்பாடுகளிலும் சிறந்தவற்றை நோக்கி செயல்பட்டு, தேசத்தின் நிலையான, உயர்ந்த முயற்சி மற்றும் சாதனைக்காக உழைத்தல்.

ஓ) 6 முதல் 14 Zவயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை வழங்குதல். (2002இல் அறிமுகப்படுத்ZZ அடிப்படைக் கடமையை அறிமுகப்படுத்தியது. இந்த பிரிவின் கீழ் அனைத்து இந்திய குடிமக்கள் அல்லது பெற்றோர்கள் 6 முதல் 14 வயதுள்ள தங்கள் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தி தர வேண்டும்).

1.9 மத்திய–மாநில உறவுகள்

இந்திய அரசு கூட்டாட்சி முறையில் அமைந்துள்ளதால் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்களை அரசியலமைப்பு பிரிக்கிறது. மத்திய–மாநில அரசுகளுக்கிடையே நிலவும் உறவினை நாம் மூன்று தலைப்புகளின் கீழ் காணலாம்.

1.9.1 சட்டமன்ற உறவுகள்

மத்திய நாடாளுமன்றம், இந்தியா முழுவதற்கும் அல்லது இந்தியாவின் எந்த பகுதிக்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது. இது இந்தியாவின் மாநிலங்களுக்கு மட்டுமின்றி யூனியன் பிரதேசங்களுக்கும் பொருந்தும். இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை, மத்திய–மாநில அரசுகளுக்கிடையேயான அதிகாரப் பகிர்வினைப் பற்றி கூறுகிறது. அவை மத்திய பட்டியல், மாநில பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று பட்டியல்கள் முறையே 97, 66, 47 என்று அதிகாரத்தை வழங்கியுள்ளது. மத்திய அரசுக்கு சொந்தமான பட்டியலில், சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை நாடாளுமன்றம் பெற்றுள்ளது. மாநில அரசுக்குச் சொந்தமான பட்டியலில் சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை மாநில சட்டமன்றம் பெற்றுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் பொதுப்பட்டியலில் உள்ள துறைகளின் மீது சட்டமியற்ற அதிகாரம் கொண்டுள்ளன. ஆனால், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமிடையே பொதுப்பட்டியலில் உள்ள துறைகள் குறித்து சட்டமியற்றும் பொழுது முரண்பாடு ஏற்பட்டால், மத்திய அரசு இயற்றும் சட்டமே இறுதியானது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> தற்போது அதிகாரப் பகிர்வு என்பது மத்திய அரசு பட்டியலில் 100 துறைகள், மாநில அரசு பட்டியலில் 61 துறைகள், மற்றும் இரண்டுக்கும் பொதுவான பொதுப்பட்டியலில் 52 துறைகள் என்றும் மாற்றப்பட்டுள்ளது. 1976ஆம் ஆண்டுமேற்கொள்ளப்பட்ட 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மாநிலப்பட்டியலில் இருந்து 5 துறைகளை, பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. அவை, கல்வி, காடுகள், எடைகள் மற்றும் அளவுகள், பறவைகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு, மற்றும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற அமைப்புகளைத் தவிர பிற நீதிமன்றங்களின் நீதி நிர்வாகம் ஆகியனவாகும்.

1.9.2 நிர்வாக உறவுகள்

ஒரு மாநில அரசின் நிர்வாக அதிகாரம் அதன் சொந்த மாநிலத்தில் மட்டுமே உள்ளது மற்றும் அம்மாநிலத்தில் மட்டுமே தனக்கான சட்டமியற்றும் தகுதியையும் பெற்றுள்ளது. அதே வேளையில், மத்திய அரசும், பிரத்தியோக நிர்வாக அதிகாரம் பெற்றுள்ளது. அவை, அ) நாடாளுமன்றம் தொடர்பான விஷயங்களில் சட்டங்களை இயற்ற சிறப்பு அதிகாரம், ஆ) மாநில அரசுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கை (அ) ஒப்பந்தங்களை அங்கீகரிப்பது ஆகியனவாகும்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> 1969இல் மத்திய–மாநில அரசுகளின் உறவுகள் குறித்து முழுவதும் ஆராய தமிழக அரசு Dr.P.V.இராஜமன்னார் தலைமையின் கீழ் மூவர் குழு ஒன்றை நியமித்தது.

1.9.3 நிதி உறவுகள்

இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி XII சட்டப்பிரிவு 268ல் இருந்து 293 வரை உள்ள பிரிவுகள் மத்திய–மாநில அரசுகளின் நிதிசார்ந்த உறவுகளைப் பற்றி விளக்குகிறது. மத்திய–மாநில அரசுகள், அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம், பலவகையான வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 280ன் கீழ்

10th_Civics_Unit 1_TM.indd 191 07-05-2019 16:51:13

குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்பட்ட நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசால் சில வரிகள் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, மத்திய அரசாலும், மாநில அரசாலும் பிரித்துக்கொள்ளப்படுகின்றன.

மத்திய–மாநில அரசுகளின் உறவினை விசாரிக்க மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் 1983ஆம் ஆண்டு சர்க்காரியா குழுவினை நியமித்தார். அக்குழுவின் 247 பரிந்துரைகளில் 180 பரிந்துரைகளை மத்திய அரசு செயல்படுத்தியது. அவற்றுள் மிக முக்கியமானது 1990இல் அமைக்கப்பட்ட மாநிலங்களுக்கிடையிலான குழு ஆகும்.

1.10 அலுவலக மொழிகள்

அரசியலமைப்பு சட்டப் பகுதி XVIஇல் 343 லிருந்து 351 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அலுவலக மொழிகள் பற்றி விவரிக்கின்றன. இவை நான்கு தலைப்புகளில் பிரிக்கப்பட்டுள்ளன. அவை யூனியன் பிரதேச மொழிகள், வட்டார மொழிகள், நீதித்துறை மொழிகள், சட்டம் மற்றும் சிறப்பு வழிகாட்டு மொழிகள் என்ற பெயரில் உள்ளன.

முதலாவது மொழிக்குழு 1955ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இது தனது அறிக்கையை, 1956இல் சமர்ப்பித்தது. இவ்வறிக்கையின் தொடர்ச்சியாக நாடாளுமன்றம் 1963ஆம் ஆண்டில் அலுவலகமொழி சட்டம் இயற்றியது. இச்சட்டம் ஹிந்தியுடன் ஆங்கிலம் மத்திய அரசின் அனைத்து அலுவலக நோக்கங்களுக்காகவும், நாடாளுமன்ற கருத்து பரிமாற்றத்திற்காகவும், 15 ஆண்டுகளுக்கு பிறகும் கூட அதன் பயன்பாட்டைத் தொடரலாம் என்று அறிவித்தது. மீண்டும் 1967ஆம் ஆண்டு அலுவலக மொழிகள் திருத்தச் சட்டம், அலுவலக மொழியாக ஆங்கிலம் காலவரையறையின்றி தொடரலாம் என்று அறிவித்தது. அரசியலமைப்பும் கூட சில வட்டார மொழிகளை மாநிலங்களுக்கான அலுவலக பரிமாற்ற மொழியாகப் பயன்படுத்த அனுமதித்தது. தொடக்கத்தில் 14 மொழிகள் அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. தற்போது 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

செயல்பாடு

அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மொழிகளை பட்டியலிடுக.

உங்களுக்குத் தெரியுமா?

2004ஆம் ஆண்டு இந்திய அரசு "செம்மொழிகள்" எனும் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்த தீர்மானித்தது. அதன்படி 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன. அவை, தமிழ்(2004), சமஸ்கிருதம் (2005), தெலுங்கு(2008), கன்னடம்(2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா(2014).

1.11 அவசரகால ஏற்பாடுகள்

அவசரகால நிலைகளை எதிர்கொள்ளும் விதமாக மத்திய அரசு கூடுதல் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. அரசியலமைப்பில் மூன்று வகையான அவசரநிலைகள் பற்றி கூறப்பட்டுள்ளன.

1.11.1 தேசிய அவசரநிலை (சட்டப்பிரிவு 352)

போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத் தலைவர், அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம். போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும் பொழுது அது 'வெளிப்புற அவசரநிலை' எனப்படுகிறது. ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும்பொழுது அது 'உள்நாட்டு அவசர நிலை' எனப்படுகிறது. இந்த வகையான அவசரநிலைகள் 1962, 1971, 1975 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டன.

1.11.2 மாநில அவசரநிலை (சட்டப்பிரிவு 356)

ஒரு மாநிலத்தில், மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாத சூழல் ஏற்படும்பொழுது அரசியலமைப்பின் விதிகளுக்கேற்ப ஆளுநர் அறிக்கை அளிக்கும் பொழுது, குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 356ன் கீழ் அவசரநிலையை அறிவிக்கலாம்.இந்தஅவசரநிலை,சட்டப்பிரிவு352ன் படி நடைமுறையில் இருந்தாலும் அல்லது தேர்தல் ஆணையம் சட்டமன்றத் தேர்தலை நடத்த உகந்த சூழல் இல்லை என்று சான்றளித்தாலும் மட்டுமே ஓராண்டைத் தாண்டியும் தொடரமுடியும். அதிகபட்சம் அவசரநிலையின் காலம் 3 ஆண்டுகள் இருக்கமுடியும். இந்த வகையான அவசரநிலையில் சட்டமியற்றுதல் மற்றும் நிர்வாக செயல்பாடுகளில் மாநிலங்கள் தங்கள் தன்னாட்சியை இழக்கின்றன. அவசரநிலை அறிவித்த பிறகு மாநில சட்டமன்றம் முடக்கப்படுகிறது. மாநிலமானது, குடியரசுத் தலைவர் சார்பாக ஆளுநரால் ஆளப்படுகிறது.

10th_Civics_Unit 1_TM.indd 192 07-05-2019 16:51:13

இந்தியாவில் முதன்முறையாக 1951இல் பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டது.

1.11.3 நிதி சார்ந்த அவசரநிலை (சட்டப்பிரிவு 360)

நிதிநிலைத் தன்மை, இந்தியாவின் கடன் தன்மை மற்றும் இந்தியாவின் பகுதிகள் ஆபத்தில் இருந்தால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 360ன் கீழ் குடியரசுத் தலைவர் நிதிசார்ந்த அவசரநிலையைப் பிறப்பிக்கலாம். இந்த வகையான அவசர நிலையில் மத்திய–மாநில அரசு ஊழியர் எந்த வகுப்பினராயினும் அவர்களது ஊதியம், படிகள் மற்றும் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் உட்பட அனைவரது ஊதியமும் குடியரசுத் தலைவரின் ஓர் ஆணையின் மூலம் குறைக்கப்படும். இந்த வகையான அவசரநிலை இந்தியாவில் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

1.12 அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்

'அமெண்ட்மெண்ட்' (Amendment) எனும் சொல் மாற்றம், மேம்படுத்துதல், மற்றும் சிறு மாறுதல் என்பதைக் குறிக்கிறது. வழக்கமாக இச்சொல் ஒரு நாட்டின் அரசியலமைப்பில் செய்யப்படும் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. அரசியலமைப்பின் சட்டம் பகுதி XXல் 368வது சட்டப்பிரிவு, அரசியலமைப்பினை சட்ட திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் முறைகள் மற்றும் திருத்தம் செய்வதில் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பற்றி தெரிவிக்கிறது.

1.12.1 அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் வழிமுறைகள்

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும், அவையின் ஒட்டுமொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மற்றும் அவைக்கு வந்து, வாக்களித்தவர்களில் 3 ல் 2 பங்குக்கு குறையாமல் மசோதாவிற்கு ஆதரவாக வாக்களித்தால் மட்டுமே, குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும். குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தபின் மசோதா திருத்தப்பட்டச் சொற்களுடன் அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தால் மட்டுமே அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரமுடியும். மாநில சட்ட மன்றத்தால் அரசியலமைப்பில் எந்தவொரு சட்டத்திருத்தத்தையும் கொண்டுவர முடியாது.

1.12.2 அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் வகைகள்

அரசியலமைப்பின் 368வது சட்டப்பிரிவு மூன்று வகைகளில் அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்களைச் செய்ய வழிவகுக்கிறது. அதாவது நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மை மற்றும் மொத்த மாநிலங்களில் பாதிக்கும் மேற்பட்ட மாநிலங்களின் எளிய அறுதிப் பெரும்பான்மையுடன் திருத்தம் மேற்கொள்ளலாம். ஆனால் சில அரசியலமைப்பு சட்டப்பிரிவுகளைத் திருத்துவதற்கு நாடாளுமன்றத்தின் எளிய அறுதி பெரும்பான்மை தேவை என அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ளது. அதாவது, நாடாளுமன்றத்தின் இருஅவைகளிலும் வந்திருந்து, வாக்களித்த பெரும்பான்மை உறுப்பினர்கள் மூலம் சாதாரண சட்டமன்ற நடைமுறை போல் செய்யப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்கள், திருத்தங்களாகக் கருதப்படமாட்டாது. 368வது சட்டப்பிரிவும் இதனை ஏற்காது. ஆகையால் அரசியலமைப்பினை மூன்று வழிகளில் மட்டுமே திருத்தமுடியும்.

1. நாடாளுமன்றத்தின் சாதாரண அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
2. நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படுதல்.
3. நாடாளுமன்றத்தின் சிறப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் பாதிக்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெறுவதன் மூலம் திருத்தப்படுதல்.



அரசியலமைப்பின் 42வது சட்டத்திருத்தம் 'சிறிய அரசியலமைப்பு' என அறியப்படுகிறது.

1.13 அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுக்கள்

அரசியலமைப்பு செயல்பாடு குறித்து ஆய்வு செய்ய 2000ஆம் ஆண்டில் இந்திய அரசு ஒரு தீர்மானத்தின் படி திரு M.N. வெங்கடாசலய்யா தலைமையில் அரசியலமைப்புச் சட்ட செயல்பாட்டிற்கான தேசிய சீராய்வு ஆணையம் ஒன்றை அமைத்தது.
அரசின்பல்வேறுநிலைகள்,அவற்றிற்கிடையேயான தொடர்பு மற்றும் பங்களிப்புகள் குறித்துப் புதிய நோக்கத்தோடு ஆராய ஏப்ரல் 2007ஆம் ஆண்டு மூன்று உறுப்பினர்களைக் கொண்ட M.M. பூஞ்சி தலைமையில் அப்போதைய அரசு ஓர் ஆணையத்தை அமைத்தது.

10th_Civics_Unit 1_TM.indd 193 07-05-2019 16:51:14

பாடச்சுருக்கம்

- அமைச்சரவை திட்டக்குழு 1946ன் கீழ் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது.
- இந்தியா ஒரு இறையாண்மை மிக்க, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசு என இந்திய அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது.
- 'சிட்டிசன்' என்ற சொல் 'சிவிஸ்' என்ற இலத்தின் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் ஒரு நகர அரசில் வசிப்பவர் என்பதாகும்.
- Dr. B.R. அம்பேத்கரின் கூற்றுப்படி 32வது சட்டப்பிரிவு 'அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' ஆகும்.
- இந்திய அரசியலமைப்பில் அடிப்படை கடமைகள், முன்னாள் சோவியத் யூனியன் (USSR) அரசியலமைப்பிலிருந்து சேர்க்கப்பட்டன.
- 2004ல் இந்திய அரசு மொழிகளை வகைப்படுத்த முடிவு செய்து புதிய வகைகளாக செம்மொழிகளை அறிவித்தது.
- அரசியலமைப்பு பகுதி XX ல் 368வது சட்டப்பிரிவு, அரசியலமைப்பு சட்ட திருத்தம் செய்வதில் அரசியலமைப்பு திருத்த நடைமுறைகள் மற்றும் அது குறித்து நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பற்றி விவரிக்கிறது.

A-Z கலைச்சொற்கள்

முகப்புரை	**Preamble**	the introduction to the constitution of India
சமயச் சார்பற்ற அரசு	**Secular state**	a state which protects all religions equally
பாகுபாடு	**Discrimination**	unfair treatment of a person or group
நீதிப்பேராணை	**Writ**	written command of court
இறையாண்மை	**Sovereignty**	supreme power or authority
பாரம்பரியம்	**Heritage**	something handed down from one's ancestors
தன்னாட்சி	**Autonomy**	independence in one's thoughts or actions
உடனடி	**Imminent**	coming up
பிரகடனம்	**Proclamation**	an announcement

மதிப்பீடு

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. கீழ்காணும் வரிசையில் 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது?

அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை.

ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக.

இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக.

ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு.

2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?

அ) ஒரு முறை ஆ) இரு முறை

இ) மூன்று முறை ஈ) எப்பொழும் இல்லை

10th_Civics_Unit 1_TM.indd 194 07-05-2019 16:51:14

3. இந்திய அரசியலமைப்பு, தனது குடிமக்களுக்கு எந்த வகை குடியுரிமையை வழங்குகிறது?

அ) இரட்டை குடியுரிமை

ஆ) ஒற்றை குடியுரிமை

இ) சில மாநிலங்களில் ஒற்றை குடியுரிமை மற்ற மாநிலங்களில் இரட்டை குடியுரிமை

ஈ) மேற்கண்டவைகளில் எதுவுமில்லை

4. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?

அ) வம்சாவளி ஆ) பதிவு

இ) இயல்புரிமை ஈ) மேற்கண்ட அனைத்தும்.

5. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.

அ) சமத்துவ உரிமை

ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை

இ) சொத்துரிமை

ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

6. கீழ்க்காண்பவற்றில் ஒன்று, அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை.

அ) கர்நாடகாவிலிருந்து, கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணிசெய்தல்

ஆ) கிறித்துவ சமயக்குழு, தொடர்ச்சியாக, பள்ளிகளை அமைத்தல்

இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப்பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்

ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்

7. இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் அவர்கள் _____ ஐ அணுகி தங்களது அடிப்படை உரிமைகளைப் பெறலாம்.

அ) நாடாளுமன்றம்

ஆ) தலைமை வழக்குரைஞர்

இ) இந்தியக் குடியரசு தலைவர்

ஈ) இந்திய உச்ச நீதிமன்றம்

8. பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr. B.R. அம்பேத்கர் அவர்களால் 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' என விவரிக்கப்பட்டது?

அ) சமய உரிமை

ஆ) சமத்துவ உரிமை

இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

ஈ) சொத்துரிமை

9. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்திவைக்கப்பட முடியும்?

அ) உச்சநீதி மன்றம் விரும்பினால்

ஆ) பிரதம மந்திரியின் ஆணையினால்

இ) தேசிய அவசரநிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்

ஈ) மேற்கண்ட அனைத்தும்

10. நமது அடிப்படை கடமைகளை _____ இடமிருந்து பெற்றோம்.

அ) அமெரிக்க அரசியலமைப்பு

ஆ) கனடா அரசியலமைப்பு

இ) ரஷ்யா அரசியலமைப்பு

ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

11. வழிகாட்டும் நெறிமுறைகள் எம்முறையில் வகைப்படுத்தப்படுகின்றன?

அ) தாராளவாதம் மற்றும் கம்யூனிச கொள்கைகள்

ஆ) சமதர்ம மற்றும் கம்யூனிச கொள்கைகள்

இ) தாராளவாதம், காந்திய மற்றும் கம்யூனிச கொள்கைகள்

ஈ) சமதர்ம, காந்திய மற்றும் தாராளக் கொள்கைகள்

12. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்?

அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356

இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368

13. இந்திய அரசியலமைப்பின் எந்த பிரிவில் அரசியலமைப்பு திருத்தும் நடைமுறை குறித்து தரப்பட்டுள்ளது?

அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356

இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368

14. எந்தக் குழுக்கள் / கமிஷன்கள் மத்திய–மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?

1. சர்க்காரியா குழு

2. ராஜமன்னார் குழு

3. M.N. வெங்கடாசலையா குழு

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு

அ) 1, 2 & 3 ஆ) 1 & 2

இ) 1 & 3 ஈ) 2 & 3

10th_Civics_Unit 1_TM.indd 195 07-05-2019 16:51:14

II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை _____ ல் தோன்றியது.
2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக _____ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு _____
4. _____ பேராணைகள் சட்டப்பிரிவு 32–ல் குறிப்பிடப்படுகின்றன.
5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் _____ பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

III. பொருத்துக

1. குடியுரிமைச் சட்டம்	–	ஜவகர்லால் நேரு
2. முகவுரை	–	42–வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்
3. சிறிய அரசியலமைப்பு	–	1955
4. செம்மொழி	–	1962
5. தேசிய அவசரநிலை	–	தமிழ்

IV. குறுகிய விடை தருக

1. அரசியலமைப்பு என்றால் என்ன?
2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?
3. எத்தனை வகையான அடிப்படை உரிமைகள், இந்திய அரசியலமைப்பால் பட்டியலிடப்படுகின்றன?
4. நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?
5. இந்தியாவின் செம்மொழிகள் எவை?
6. தேசிய அவசரநிலை என்றால் என்ன?
7. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.

V. விரிவான விடை தருக

1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
3. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.
4. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

VI. மாணவர் செயல்பாடு

1. இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களது சமூக பின்புலத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரி.
2. அரசியலமைப்பு வரைவுக்குழுவின் உறுப்பினர்களது படங்கள் மற்றும் அவர்களது சமூக பின்புலத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரி.

VII. வாழ்வியல் திறன்

1. குடிமகனின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் அடங்கிய ஒரு விளக்கப்படம் தயார் செய்து உன் வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

மேற்கோள் நூல்கள்

1. D.D. Basu - Introduction of the Constitution of India, S.C. Sarkar & Sons (Private) Ltd, 1982.
2. PM Bakshi - The Constitution of India, Universal Law Publishing - an imprint of LexisNexis, 2018.

இணையதள வளங்கள்

1. https://www.india.org/
2. https://www.constitution.org/cons/india/p03.html

10th_Civics_Unit 1_TM.indd 196 07-05-2019 16:51:14

அலகு – 2

மத்திய அரசு




கற்றலின் நோக்கங்கள்

- குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரின் அதிகாரங்களைப் பற்றி அறிதல்
- பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சரவை பற்றி அறிதல்
- மக்களவை மற்றும் மாநிலங்களவை பற்றி புரிந்துகொள்ளுதல்
- உச்ச நீதிமன்றம் பற்றி அறிதல்

TWW4HR

அறிமுகம்

இந்திய நாட்டின் உயர்ந்த அரசாங்க அமைப்பு மத்திய அரசு ஆகும். இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது. இந்திய அரசியலமைப்பின் பகுதி V இல் 52 முதல் 78 வரையிலான சட்டப்பிரிவுகள் மத்திய அரசின் நிர்வாகம் பற்றி குறிப்பிடுகிறது. நமது அரசியலமைப்புச் சட்டம் மக்களாட்சி அடிப்படையிலான அரசாங்கத்தை நமக்கு வழங்குகிறது. இந்திய அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்தியாவின் பரந்த மற்றும் பன்முகத் தன்மையைக் கருத்தில் கொண்டு இந்தியாவிற்கு கூட்டாட்சி முறையிலான அரசை வழங்கியுள்ளனர்.




10th_Civics_Unit 2_TM.indd 197 07-05-2019 16:55:08

மத்திய அரசு மூன்று அங்கங்களைக் கொண்டது. அவை நிர்வாகம், சட்டமன்றம், நீதித்துறை ஆகியனவாகும். மத்திய நிர்வாகம், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவைக் குழு மற்றும் இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் ஆகியோரை உள்ளடக்கியது ஆகும். மத்திய சட்டமன்றம் நாடாளுமன்றம் என்றழைக்கப்படுகிறது. இது இரண்டு அவைகளைக் கொண்டது. அவை மாநிலங்களவை (ராஜ்ய சபா) மற்றும் மக்களவை (லோக் சபா) ஆகியனவாகும். மத்திய நீதித்துறை உச்சநீதிமன்றத்தைக் கொண்டுள்ளது.

2.1 இந்தியக் குடியரசுத் தலைவர்

நமது அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்ற முறையிலான அரசாங்கத்தை நமக்கு அளித்துள்ளது. மத்திய அரசின் நிர்வாகத் தலைவர் குடியரசுத் தலைவர் ஆவார். அவர் பெயரளவில் நிர்வாக அதிகாரம் பெற்றவர் ஆவார். அவர் இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார். அவர் முப்படைகளின் தலைமை தளபதியாகச் செயல்படுகிறார். நீதித்துறையை அமைக்கும் பொறுப்பு அவருக்கு உண்டு. அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 53ன் படி குடியரசுத் தலைவர் நேரடியாகவோ, அல்லது அவருடைய சார்நிலை அலுவலர்கள் மூலமாகவோ மத்திய அரசின் நிர்வாக அதிகாரங்களை அரசியலமைப்பின் படி செயல்படுத்துகிறார்.



Dr. ராஜேந்திர பிரசாத்
(முதல் குடியரசுத் தலைவர்)

2.1.1 குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள்

குடியரசுத் தலைவர் வேட்பாளருக்கான தகுதிகளை அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ளது.

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மக்களவை உறுப்பினராவதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- அவரின் பெயரைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்க் குழுவிலுள்ள பத்து வாக்காளர்கள் முன்மொழியவும் மேலும் பத்து வாக்காளர்கள் வழிமொழியவும் வேண்டும்.

குடியரசுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்ட மன்ற உறுப்பினராகவோ பதவி வகிக்கக் கூடாது. ஒருவேளை பதவி வகிக்கும் பட்சத்தில் குடியரசுத் தலைவராக அவர் பதவி ஏற்கும் நாளில் அப்பதவி காலியானதாகக் கருதப்படும்.

உங்களுக்குத் தெரியுமா?

புதுதில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவன் – குடியரசுத் தலைவரின் இல்லம் ஆகும். அவருடைய இல்லம் மற்றும் அலுவலகம் இரண்டும் ஒரே கட்டடத்தில் அமைந்துள்ளன. இருந்த போதிலும் அவருக்கு இருப்பிடத்துடன் கூடிய அலுவலகங்கள் மேலும் இரண்டு இடங்களில் உள்ளன. அங்கு வருடத்திற்கு ஒரு முறை சென்று தன்னுடைய அலுவலக பணிகளை அவர் மேற்கொள்கிறார். அவைகள் சிம்லாவில் உள்ள ரிட்ரீட் கட்டடம் (The Retreat Building) மற்றும் ஹைதராபாத்தில் உள்ள ராஷ்டிரபதி நிலையம் ஆகும். இவைகளில் ஒன்று வடக்கிலும் மற்றொன்று தெற்கிலும் அமைந்துள்ளது. இது நாட்டின் ஒற்றுமையையும், மக்களின் பல்வேறுபட்ட கலாச்சாரத்தின் ஒற்றுமையையும் பறைசாற்றுகின்றது.

2.1.2 குடியரசுத் தலைவருக்கானத் தேர்தல்

குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின் படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

வாக்காளர் குழுமம் என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், தேசிய தலைநகர் டெல்லி, மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும். குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவியேற்பு உறுதிமொழி செய்து வைக்கிறார். குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட தகுதி உடையவர் ஆவார்.

10th_Civics_Unit 2_TM.indd 198 07-05-2019 16:55:08

2.1.3 குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்

குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் விரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நிர்வாக அதிகாரங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் மத்திய அரசின் அனைத்து நிர்வாக அதிகாரங்களையும் குடியரசுத் தலைவருக்கு வழங்குகிறது. அரசியலமைப்பு சட்டப்பிரிவு 77ன் படி மத்திய அரசின் ஒவ்வொரு நிர்வாக நடவடிக்கையும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். நிர்வாகம் திறம்பட செயல்பட முக்கிய அலுவலகங்களுக்கானப் பல நியமனங்களைக் குடியரசுத் தலைவர் மேற்கொள்கிறார்.

இந்தியக் குடியரசுத் தலைவர்களின் பட்டியல்

1. திரு. ராஜேந்திர பிரசாத்	1950 – 1962
2. திரு. சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்	1962 – 1967
3. திரு. ஜாகிர் உசேன்	1967 – 1969
4. திரு. வி.வி. கிரி	1969 – 1974
5. திரு. பக்ருதீன் அலி அஹமத்	1974 – 1977
6. திரு. நீலம் சஞ்சீவி ரெட்டி	1977 – 1982
7. திரு. கியானி ஜெயில் சிங்	1982 – 1987
8. திரு. ஆர். வெங்கடராமன்	1987 – 1992
9. திரு. சங்கர் தயாள் சர்மா	1992 – 1997
10. திரு. கே.ஆர். நாராயணன்	1997 – 2002
11. திரு. அ.ப.ஜ. அப்துல் கலாம்	2002 – 2007
12. திருமதி பிரதீபா பாட்டீல்	2007 – 2012
13. திரு. பிரனாப் முகர்ஜி	2012 – 2017
14. திரு. ராம் நாத் கோவிந்த்	2017 முதல்

பிரதம அமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அவர் பிரதம அமைச்சரின் ஆலோசனைப் படி அமைச்சரவை உறுப்பினர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார். இந்தியாவின் மிக முக்கிய பதவிகளான மாநில ஆளுநர்கள், உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள், இதர நீதிபதிகள், இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர், தலைமைக் கணக்கு தணிக்கையாளர், இந்தியத் தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்கள், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் இதர உறுப்பினர்கள், மற்ற நாடுகளுக்கான தூதர்கள் மற்றும் உயர் ஆணையர்கள் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

குடியரசுத் தலைவர், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் நிலையை ஆய்வு செய்ய ஓர் ஆணையத்தை நியமிக்கும் அதிகாரம் பெற்றவர் ஆவார். முப்படைகளின் தலைமை தளபதியான குடியரசுத் தலைவர், இராணுவப் படை, கப்பற் படை, விமானப் படை தளபதிகளை நியமனம் செய்கிறார்.

சட்டமன்ற அதிகாரங்கள்

குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறார். பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை இவர் உரையாற்றி துவக்கி வைக்கிறார். மேலும் ஒவ்வொரு ஆண்டின் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் இவருடைய உரையுடன் துவங்குகிறது. குடியரசுத் தலைவர் ஆண்டுக்கு இரண்டுமுறை நாடாளுமன்றத்தைக் கூட்டுகிறார்.

அவர் நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையிலும் ஒரு சட்ட மசோதா நிலுவையில் இருந்தாலும் அது குறித்து செய்தி அனுப்பலாம். குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே அனைத்து மசோதாக்களும் சட்டமாகின்றன. நிதி மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யமுடியாது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளையோ அல்லது ஏதேனும் ஒரு அவையின் கூட்டத்தையோ குடியரசுத்தலைவர் முடிவுக்குக் கொண்டுவரலாம். மக்களவையின் ஐந்து ஆண்டுகாலம் முடியும் முன்னரே அதனைக் கலைக்கும் அதிகாரமும் இவருக்கு உண்டு.

கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, மற்றும் சமூகப் பணி ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் 12 நபர்களைக் குடியரசுத் தலைவர் மாநிலங்களவைக்கு நியமிக்கிறார். மேலும் ஆங்கிலோ–இந்தியர் சமூகத்தைச் சேர்ந்த 2 நபர்களை மக்களவையில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்று கருதும்பட்சத்தில் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

நிதி அதிகாரங்கள்

நிதி மசோதா, குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்குப் பின்னரே நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும். மத்திய அரசின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினைக் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்ற பின்னரே மத்திய நிதி அமைச்சர் மக்களவையில் சமர்ப்பிக்கிறார். இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய அவசரகால நிதியினைக் குடியரசுத் தலைவரிடம் அளித்துள்ளது. அவரின் பரிந்துரை இன்றி எந்தவொரு மானியக் கோரிக்கையையும் கொண்டுவர முடியாது. இந்தியாவின் அவசர நிதியிலிருந்து அரசின்

10th_Civics_Unit 2_TM.indd 199 07-05-2019 16:55:08

எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்ளும் அதிகாரம் அவருக்கு மட்டுமே உண்டு. ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு நிதிக்குழுவினை அமைக்கிறார். அல்லது மத்திய, மாநில அரசுகளின் வருவாயை பகிர்ந்து கொள்ள மாநிலங்கள் கோரிக்கை வைக்கும் பட்சத்தில் முன்கூட்டியே நிதிக் குழுவினை அவர் அமைக்கிறார்.

நீதி அதிகாரங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 72–வது சட்டப்பிரிவு நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையைக் குறைக்கவும், ஒத்திவைக்கவும், தண்டனையிலிருந்து விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து தண்டனைகள், மத்திய சட்டத்திற்கு எதிராகச் செயல்பட்டதால் வழங்கப்பட்ட தண்டனைகள், மரண தண்டனைகள் ஆகியன இவற்றுள் அடங்கும். இவர் தன்னுடைய அதிகாரத்தைச் செயல்படுத்துவதில் (நாடாளுமன்றத்தால் அவருக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டு கொண்டு வரும் போது தவிர) எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

இராணுவ அதிகாரங்கள்

மத்திய பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி என்ற அதிகாரத்தைச் சட்டப்பிரிவு 53(2) குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது. அவர் சட்டத்தின்படி இராணுவத்தை வழிநடத்துகிறார். எனவே அவர் பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி என அறியப்படுகிறார். இதன் மூலம் மற்ற நாடுகளின் மீது போர் அறிவிக்கவும், அமைதியை ஏற்படுத்தவும் அவர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

இராஜதந்திர அதிகாரங்கள்

வெளிநாடுகளுக்கான இந்திய தூதர்களைக் குடியரசுத் தலைவர் நியமிப்பதோடு மட்டுமல்லாமல் அவர் இந்தியாவுக்கான வெளிநாட்டுத் தூதர்களையும் வரவேற்கிறார். வெளிநாடுகளுக்கான அனைத்து உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் குடியரசுத் தலைவரின் பெயராலேயே நடைபெறுகின்றன.

நெருக்கடி நிலை அதிகாரங்கள்

- நெருக்கடி நிலையை அறிவிக்கும் அதிகாரத்தை இந்திய அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது. அவைகள் பின்வருவன: போர், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி ஆகிய சூழ்நிலைகளில் குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலையை அறிவிக்கும் அதிகாரத்தை 352–வது சட்டப்பிரிவு வகுத்துள்ளது.
- அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு மாநில அரசாங்கம் செயல்படவில்லை எனில் அம்மாநிலத்தில் நெருக்கடி நிலையை அறிவித்து, அம்மாநில அரசாங்கத்தை முடிவுக்கு கொண்டுவரும் அதிகாரத்தைக் குடியரசுத் தலைவருக்கு 356வது சட்டப்பிரிவு வழங்குகிறது.
- இந்தியாவின் நிதி நிலையில் திருப்தியின்மை காணப்பட்டாலும், இந்தியாவின் எந்த ஒரு பகுதியில் ஏதாவது ஒரு காரணத்திற்காக அச்சுறுத்தல் ஏற்படும் பொழுதும் 360வது பிரிவின்படி குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையை அறிவிக்கிறார்.



கேரளா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் அதிகபட்சமாக 9 முறை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2.1.4 குடியரசுத் தலைவர் நீக்கம்

குடியரசுத் தலைவர் பதவி ஏற்ற நாள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை பதவி வகிப்பார். அவர் தன்னுடைய பணித்துறப்பு கடிதத்தினை துணைக் குடியரசுத் தலைவரிடம் வழங்கலாம். அவர் சட்டப்பிரிவு 61–ன் படி அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுவதன் மூலம் பதவி நீக்கம் செய்யப்படலாம். இவருக்கு எதிரான இக்குற்றச்சாட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தீர்மானமாக கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். மேலும் அவைக்கு வருகை புரிந்தவர்களில் நான்கில் ஒரு பங்கிற்குக் குறையாமல் ஆதரவு தெரிவிக்க வேண்டும். குடியரசுத் தலைவர் தனது பதவிக்காலம் முடிந்தாலும் அவருக்குப் பின் ஒருவர் பதவியேற்கும் வரை அப்பதவியில் தொடரலாம்.

2.1.5 குடியரசு தலைவரின் தனிச் சலுகைகள்

சட்டப்பிரிவு 361(1) ன் படி குடியரசுத் தலைவர் தன்னுடைய பணி மற்றும் அதிகாரத்தைச் செய்ய வேண்டும் என எண்ணுவதிலும் செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

2.2 துணைக் குடியரசுத் தலைவர்

63வது பிரிவின் படி நாட்டின் இரண்டாவது உயர்ந்த பதவியைத் துணைக் குடியரசுத் தலைவர் வகிக்கிறார். அலுவலக முன்னுரிமையின் படி குடியரசுத் தலைவருக்கு அடுத்த தர நிலையில் இவர் உள்ளார். இப்பதவி அமெரிக்க துணைக் குடியரசுத் தலைவரின் பதவியைப் போன்றது. நாட்டின் அரசாங்க நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற இப்பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

10th_Civics_Unit 2_TM.indd 200 07-05-2019 16:55:08

2.2.1 துணைக்குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் துணைக்குடியரசுத் தலைவருக்கான தகுதிகளை வகுத்துள்ளது.



Dr. ராதாகிருஷ்ணன் (முதல் துணைக் குடியரசுத் தலைவர்)

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- மத்திய அரசிலோ, மாநில அரசிலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மாநிலங்களவை உறுப்பினராவதற்கான மற்ற தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2.2.2 துணைக் குடியரசுத் தலைவர் – தேர்தல் மற்றும் பதவிக்காலம்

சட்டப்பிரிவு 66(1) ன் படி துணைக் குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படாமல் குடியரசுத் தலைவர் போல மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களை உள்ளடக்கிய வாக்காளர் குழுமத்தின் மூலம் இவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். துணைக் குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். பதவிக்காலம் முடியும் முன்னரே பணித்துறப்பு, இறத்தல், பணிநீக்கம் ஆகிய காரணங்களால் அவரது பதவி முடிவுக்கு வரலாம். அவர் மீண்டும் துணைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் தகுதி உடையவராவார்.

FBFQP8

அரசியலமைப்புச் சட்டம் துணைக் குடியரசுத் தலைவர் பதவிக்கான தொடர் வழிமுறைகளை நமக்கு வழங்கவில்லை. இது போன்ற சூழ்நிலைகளில், துணைக் குடியரசுத் தலைவருக்கான தேர்தல் முடிந்தவரையில் விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும். புதிய துணைக் குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை மாநிலங்களவையின் துணைத் தலைவர் துணைக் குடியரசுத் தலைவரின் பணிகளைச் செய்வார்.

உங்களுக்குத் தெரியுமா?

குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகள் ஒரே சமயத்தில் காலியாக இருக்கும் பட்சத்தில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் பணிகளைச் செயலாற்றுவார். 1969ஆம் ஆண்டு இத்தகைய ஒரு நிகழ்வின் போது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி M.ஹிதயதுல்லா குடியரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

2.2.3 துணைக் குடியரசுத் தலைவர் பதவி நீக்கம்

மக்களவையின் ஒப்புதலுடன், மாநிலங்களவையில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் துணைக் குடியரசுத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கலாம். இத்தகைய தீர்மானம் கொண்டு வர குறைந்தபட்சம் 14 நாட்களுக்கு முன்னரே துணைக் குடியரசுத் தலைவருக்கு ஒரு அறிவிப்பை வழங்க வேண்டும்.

2.2.4 துணைக் குடியரசுத் தலைவரின் செயல்பாடுகள்

துணைக் குடியரசுத் தலைவர் அவர் வகிக்கும் பதவியின் நிமித்தமாக மாநிலங்களவையின் தலைவராகச்செயல்படுகிறார்.மாநிலங்களவையின் தலைவர் என்கிற முறையில் அவர் பல்வேறு பணிகளை மேற்கொள்கிறார்.

- மாநிலங்களவையின் நடவடிக்கைகளை முறைப்படுத்துகிறார்.
- மாநிலங்களவையின் மரபு ஒழுங்கு முறைகளைத் தீர்மானிக்கிறார்.
- மாநிலங்களவையின் தீர்மானம் அல்லது கேள்விகளை அனுமதிப்பதை முடிவு செய்கிறார்.
- மிகப் பெரிய பிரச்சனையின்போது அவையின் நடவடிக்கைகளை அவர் ஒத்திவைக்கவும் அல்லது முடிவுக்குக் கொண்டு வரவும் செய்கிறார்.
- பல்வேறு குழுக்களுக்கு அதனுடைய செயல்பாடுகள் தொடர்பாக அவர் வழிமுறைகளை வழங்குகிறார்.
- குடியரசுத் தலைவர் உடல்நலக் குறைவால் தனது கடமைகளை ஆற்ற இயலாத போதும் அல்லது நாட்டில் இல்லாத போதும் துணைக் குடியரசுத் தலைவர், குடியரசுத் தலைவரின் பணிகளைக் கவனிப்பார். குடியரசுத் தலைவர் பதவியானது, அவரின் பதவித்துறப்பு, இறப்பு, அரசியலமைப்பை மீறிய குற்றச் சாட்டின் மூலம் பதவி நீக்கம் ஆகிய காரணங்களால் காலியாகும் போது துணைக் குடியரசுத் தலைவர் அதிகபட்சமாக ஆறு மாத காலத்திற்கு அவரின் பணிகளைக் கவனிப்பார்.

10th_Civics_Unit 2_TM.indd 201 07-05-2019 16:55:08


உங்களுக்குத் தெரியுமா?

முடிவு வாக்கு (Casting vote)

மாநிலங்களவையில் சட்ட மசோதாவின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பு சமநிலையில் இருக்கும்பட்சத்தில் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 100ன் படி துணைக் குடியரசுத் தலைவர் வாக்கு அளிக்கலாம். இது சட்ட மசோதாவின் ஒப்புதலுக்கு ஒரு வாக்கு மட்டுமே தேவை என்ற நிலையைக் குறிக்கிறது. ஆகையால் அவர் இந்த விருப்புரிமை அதிகாரத்தைச் சட்ட மசோதாவுக்கு ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்கும் அதிகாரம் பெற்றவர் ஆவார். அவருடைய முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க எவருக்கும் உரிமை இல்லை.

2.3 பிரதம அமைச்சர்

அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 74 (1) குடியரசுத் தலைவருக்கு உதவிடவும், அறிவுரை வழங்கிடவும் பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு மத்திய அமைச்சரவைக் குழு இருக்கும் எனக் குறிப்பிடுகிறது. குடியரசுத் தலைவர் அமைச்சரவை வழங்கும் அறிவுரையை மறு பரிசீலனைச் செய்யச் சொல்லலாம். ஆனால் மறுபரிசீலனைக்குப் பின்னர் அந்த அறிவுரையின்படி அவர் நடந்து கொள்ள கடமைப் பட்டவராவார்.



ஜவகர்லால் நேரு
(முதல் பிரதம அமைச்சர்)

(இங்கிலாந்தின் நாடாளுமன்றம் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மையில் அமைந்துள்ளதால் அவர்களின் நாடாளுமன்ற முறை வெஸ்ட்மினிஸ்டர் முறை என்றழைக்கப்படுகிறது). இந்தியாவின் பிரதம அமைச்சர் பதவியானது வெஸ்மின்ஸ்டர் அரசியலமைப்பு ஜனநாயக முறையில் இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மக்களவையின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை பிரதம அமைச்சராகக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். மற்ற அமைச்சர்களை பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். மக்களவையில் எந்த ஒரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை பலம் இல்லையெனில் குடியரசுத் தலைவர் எந்தக்கட்சி அமைச்சரவையை அமைக்க முடியுமோ அக்கட்சியின் தலைவரை அவர் அழைத்து அரசு அமைக்கக் கூறலாம். குடியரசுத் தலைவர் அமைச்சர்களுக்குப் பதவிப் பிரமாணமும், இரகசியக்காப்புப் பிரமாணமும் செய்து வைக்கின்றார். பிரதம அமைச்சர் மற்றும் மற்ற அமைச்சர்களின் ஊதியங்களையும், படிகளையும் நாடாளுமன்றம் நிர்ணயிக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினராய் இல்லாதவர் கூட அமைச்சராக நியமிக்கப்படலாம். ஆனால் அவர் 6 மாதங்களுக்குள் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும், ஒட்டு மொத்தமாகவும் மக்களவைக்கு பொறுப்புடையவர்களாவர்.

இந்திய பிரதமர்கள் பட்டியல்

1. திரு. ஜவகர்லால் நேரு	1947 – 64
2. திரு. லால் பகதூர் சாஸ்திரி	1964 – 66
3. திருமதி இந்திரா காந்தி	1966 – 77
4. திரு. மொரார்ஜி தேசாய்	1977 – 79
5. திரு. சரண் சிங்	1979 – 80
6. திருமதி. இந்திரா காந்தி	1980 – 84
7. திரு. ராஜீவ் காந்தி	1980 – 89
8. திரு. வி.பி. சிங்	1989 – 90
9. திரு. சந்திரசேகர்	1990 – 91
10. திரு. பி.வி. நரசிம்ம ராவ்	1991 – 96
11. திரு. அடல் பிகாரி வாஜ்பாய்	மே 1996
12. திரு. டி. தேவகவுடா	1996 – 97
13. திரு. ஐ.கே குஜ்ரால்	1997 – 98
14. திரு. அடல் பிகாரி வாஜ்பாய்	1998 – 2004
15. திரு. மன்மோகன் சிங்	2004 – 14
16. திரு. நரேந்திர மோடி	2014 முதல்

2.3.1 பிரதம அமைச்சரின் செயல்பாடுகளும், கடமைகளும்

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 78 பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

- பிரதம அமைச்சர் அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தான் தலைமை வகிக்கும், அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி நிரல் (Agenda) குறித்து முடிவு செய்வார்.
- பிரதம அமைச்சரே அமைச்சரவையின் தலைவர் ஆவார். மற்றவர்கள் அரசின் துறைகளைப் பகிர்ந்து கொள்ளும் சக அமைச்சர்கள் ஆவர்.
- கேபினெட் கூட்டம் நடைபெறாத பொழுது பிரதம அமைச்சர் தனது மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம்.
- பிரதம அமைச்சர் பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.

10th_Civics_Unit 2_TM.indd 202 07-05-2019 16:55:08

- மத்திய அரசின் விவகாரங்கள் மற்றும் சட்டத்திற்கான முன்மொழிவுகள் போன்ற அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத் தலைவருடன் விவாதிக்கிறார்.
- பிரதம அமைச்சர், குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.
- பிரதம அமைச்சர் நாட்டின் உண்மையான தலைவராவார். அவர் நாட்டின் முக்கிய செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
- சர்வதேச மாநாடுகளான காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார்.

2.3.2 அமைச்சரவைக் குழு

தேர்தலுக்குப் பின்னர் பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி குடியரசுத் தலைவர் அமைச்சரவையை நியமிக்கிறார். சில சமயங்களில் நாடாளுமன்ற உறுப்பினராய் இல்லாதவர்கூட அமைச்சராக நியமிக்கப்படலாம். ஆனால் அவர் ஆறு மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தின் ஏதேனும் ஓர் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒட்டு மொத்த மக்களவை உறுப்பினர்களில் 15% மட்டுமே அமைச்சரவை உறுப்பினர்களாக (பிரதம அமைச்சர் உட்பட) இருத்தல் வேண்டும் என இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரையறுத்துள்ளது.

மத்திய அமைச்சர்களின் வகைகள்

மத்திய அமைச்சர்கள் மூன்று தரநிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

1. கேபினெட் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள்
2. இராசாங்க அமைச்சர்கள்
3. இணை அமைச்சர்கள்

கேபினெட் அமைச்சர்கள்

நிர்வாகத்தின் மையக் கருவை உருவாக்கும் மூத்த அமைச்சர்களின் முறைசாரா அமைப்பே காபினெட் ஆகும். காபினெட் அரசாங்கத்தின் பாதுகாப்பு, நிதி, வெளியுறவுக் கொள்கைகள், உள்துறை ஆகியவற்றின் முக்கிய முடிவுகளை எடுக்கிறது. குடியரசுத் தலைவர் அவசரநிலையைப் பிரகடனம் செய்ய அமைச்சரவை பரிந்துரைக்கிறது. அரசியலமைப்புச்சட்டத்தில்திருத்தங்கள்கொண்டுவர அமைச்சரவை ஒரு கருவியாக செயல்படுகிறது. நிதி மசோதாவானது அமைச்சரவையில் இருந்து தொடங்கும். பின்னர் குடியரசுத்தலைவர் பரிந்துரையுடன்மக்களவையில்அறிமுகப்படுத்தப்படும். அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை அமைச்சரவை முடிவு செய்வதோடு, சர்வதேச உடன்படிக்கைகளுக்கும் ஒப்புதல் அளிக்கிறது. பல்வேறு நாடுகளுக்கானத் தூதர்களை நியமிப்பதில் அமைச்சரவை முக்கிய பங்கு வகிக்கிறது.

இராசாங்க அமைச்சர்கள்

அமைச்சரவை குழுவின் இரண்டாவது வகையினரே இராசாங்க அமைச்சர்கள் ஆவர். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளின் பொறுப்பு அமைச்சராக செயல்படுகின்றனர். ஆனால் அழைப்பு விடுத்தால் மட்டுமே இவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

இணை அமைச்சர்கள்

அமைச்சரவையில் மூன்றாவதாக, இணை அமைச்சர்கள் உள்ளனர். காபினெட் அமைச்சர்கள் (அ) இராசாங்க அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளைச் செயலாற்றுவதில் இவர்கள் உதவி புரிகின்றனர்.

2.4 இந்திய நாடாளுமன்றம்

மத்திய அரசின் சட்டம் இயற்றும் அங்கமாக நாடாளுமன்றம் திகழ்கிறது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி V இல் 79 முதல் 122 வரை உள்ள சட்டப்பிரிவுகள், இந்திய நாடாளுமன்ற அமைப்பு, உள்ளடக்கம், ஆயுட் காலம், அலுவலர்கள், செயல்முறைகள், சிறப்புச் சலுகைகள், அதிகாரங்கள் பற்றி குறிப்பிடுகிறது. இந்திய நாடாளுமன்றம் மூன்று பகுதிகளைக் கொண்டது. அவைகள் 1.குடியரசுத்தலைவர் 2.ராஜ்யசபா(மாநிலங்களவை) 3. லோக்சபா (மக்களவை). நாடாளுமன்றமானது மாநிலங்களவை என்னும் மேலவையையும் மக்களவை என்னும் கீழவையையும் கொண்டுள்ளதால் இது ஈரவை சட்டமன்றம் என்றும் அழைக்கப்படுகிறது.



நாடாளுமன்றம்

2.4.1 மாநிலங்களவை

ராஜ்யசபா என்றழைக்கப்படும் மாநிலங்களவை 250 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் 238 உறுப்பினர்கள், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் யூனியன் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

10th_Civics_Unit 2_TM.indd 203 07-05-2019 16:55:09

12 உறுப்பினர்கள், இலக்கியம், அறிவியல், விளையாட்டு, கலை மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு அல்லது செயல்முறை அனுபவம் கொண்டவர்களைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

மாநிலங்களவை உறுப்பினராவதற்கானத் தகுதிகள்

மாநிலங்களவை உறுப்பினராக ஒருவர் கீழ்காணும் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 30 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்றகடனைத்திருப்பித்தரமுடியாதவராகவோ இருத்தல் கூடாது.
- நாடாளுமன்றத்தால் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்படும் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- மக்களவையிலோ (அ) எந்தவொரு சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது.

மாநிலங்களவை உறுப்பினரின் பதவிக் காலம்

மாநிலங்களவை ஒரு நிரந்தர அவை ஆகும். அதனைக் கலைக்க முடியாது. மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும். அதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெறுகின்றனர். அதனால் ஏற்படும் காலியிடங்கள் புதிய உறுப்பினர்களால் நிரப்பப்படுகின்றன.

துணைக் குடியரசுத் தலைவர் பதவி வழி மாநிலங்களவையின் தலைவராகச் செயல்படுகிறார். மாநிலங்களவையின் துணைத் தலைவர் அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

தேர்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் (MLA's) ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த தேர்தல் முறை மறைமுக தேர்தல் எனப்படும். இவர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவதில்லை.

மாநிலங்களவையின் செயல்பாடுகள்

- எந்தவொரு மசோதாவும் (நிதி மசோதா தவிர) சட்டமாவதற்கு மாநிலங்களவையின் ஒப்புதல் தேவை. ஆறு மாதங்களுக்கு மேல் ஒரு மசோதா ஒப்புதல் பெறவில்லை எனில் குடியரசுத் தலைவர் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்து மசோதாவின் முடக்கத்தைத் தீர்த்து வைக்கிறார்.
- அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திற்கான எந்த ஒரு மசோதாவை நிறைவேற்றுவதிலும் மக்களவையைப் போன்றே மாநிலங்களவையும் அதிகாரம் பெற்றுள்ளது.
- மாநிலங்களவை உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர். இவர்கள் மக்களவை உறுப்பினர்கள் மற்றும் அனைத்து மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர்.
- இவர்கள், குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவிநீக்க செயல் முறைகளில் அதிகாரம் பெற்றுள்ளனர்.
- தேசிய முக்கியத்துவம் கருதி மாநில அரசு பட்டியலை உருவாக்கும் அதிகாரத்தை மாநிலங்களவை பெற்றுள்ளது. மாநிலங்களவையின் 2/3 உறுப்பினர்கள் பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானம் ஒப்புதல் பெறுகிறது. இதன் 2/3 உறுப்பினர்கள் பெரும்பான்மையுடன் அகில இந்தியப் பணிகளை உருவாக்கவும், நீக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது.



நிதி மசோதா

நிதி மசோதாவினை திருத்தம் செய்யவோ அல்லது நிராகரிக்கவோ மாநிலங்களவைக்கு அதிகாரம் இல்லை. மக்களவையில் மட்டுமே நிதி மசோதாவினை அறிமுகப்படுத்த முடியும். இம்மசோதா மாநிலங்களவையின் ஒப்புதலுடன் சட்டமாக மாறும். மாநிலங்களவை 14 நாட்களுக்குள் ஒப்புதல் அளிக்கவில்லையெனில், ஒப்புதல் பெறாமலேயே சட்டமாகிவிடும். மாநிலங்களவையின் சட்டத் திருத்தத்திற்கான முன்மொழிவுகளை மக்களவை கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. எந்த முன்மொழிவுகளையும் மக்களவை நிராகரிக்கலாம்.

2.4.2 மக்களவை

மக்களவையானது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தின் புகழ்மிக்க அவை

10th_Civics_Unit 2_TM.indd 204 07-05-2019 16:55:09

ஆகும். மக்களவைக்கு அதிகபட்சமாக தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் 552 அவற்றில் 530 உறுப்பினர்கள் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், 13 உறுப்பினர்கள் யூனியன் பிரதேசங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆங்கிலோ–இந்தியன் சமூகத்திலிருந்து 2 உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். தற்சமயம் மக்களவை 545 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

மக்களவை உறுப்பினராவதற்கான தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 25 வயதிற்கு குறைவுடையவராய் இருத்தல் கூடாது.
- அவரது பெயர் நாட்டின் ஏதாவது ஒரு பகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.
- மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்ற கடனை திருப்பி செலுத்த இயலாதவராகவோ இருத்தல் கூடாது.

மக்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம்

பொதுவாக, மக்களவை தன்னுடைய முதல் கூட்டத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் செயல்படும். அதன் காலம் முடிவதற்கு முன் பிரதம அமைச்சரின் ஆலோசனையின்பேரில் குடியரசுத் தலைவர் மக்களவையைக் கலைக்கலாம். இந்திய அரசியலமைப்பின் நெருக்கடி நிலை சட்டத்தின்படி மக்களவையின் நம்பிக்கை வாக்கெடுப்பில் எந்தவொரு கட்சிக்கோ (அ) கூட்டணிக்கோ பெரும்பான்மை இல்லாத பட்சத்தில் குடியரசுத் தலைவர் மக்களவையைக் கலைக்கலாம்.

தேர்தல்

மக்கள் தொகையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற தொகுதிகளில் உள்ள மக்களால் நேரடியாக மக்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மக்களவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள், மேற்பார்வையிடுதல், நடத்துதல் ஆகிய பணிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் செய்கிறது. மக்களவைத் தேர்தலுக்காக நாடு முழுவதும் மக்கள் தொகையின் அடிப்படையில் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மக்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் 'வயது வந்தோர் வாக்குரிமை' பின்பற்றப்படுகிறது. வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்ட 18 வயது நிரம்பிய இந்தியக் குடிமக்கள் அனைவரும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க தகுதியுடையவர் ஆவர்.



உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை

மக்களவையின் செயல்பாடுகள்

- அனைத்து மசோதாக்களையும் மக்களவையில் அறிமுகப்படுத்தவும், நிறைவேற்றவும் முடியும் (நிதி மசோதா உள்பட).
- குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்ற நீதிபதிகள் போன்றவர்களின் பதவி நீக்க விவகாரங்களில் பங்கேற்க மாநிலங்களவையைப் போலவே மக்களவையும் அதிகாரம் பெற்றுள்ளது.
- அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்திற்கான எந்தவொரு மசோதாவை நிறைவேற்றுவதிலும் மாநிலங்களவையைப் போலவே மக்களவையும் சமமான அதிகாரம் பெற்றுள்ளது.
- மக்களவை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர்.
- நம்பிக்கையில்லாத் தீர்மானம் லோக்சபாவில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பிரதம அமைச்சர் உட்பட மற்ற அமைச்சர்களும் தங்களது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும்

உங்களுக்குத் தெரியுமா?

தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள்.

- மாநிலங்களவை – 18 உறுப்பினர்கள்
- மக்களவை – 39 உறுப்பினர்கள்

2.4.3 சபாநாயகர்

மக்களவையைத் தலைமை ஏற்று நடத்துபவர் சபாநாயகர் ஆவார். அவர் மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாடாளுமன்ற மக்களாட்சியில் சபாநாயகரின் பதவி ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. மக்களவை

10th_Civics_Unit 2_TM.indd 205 07-05-2019 16:55:09

கலைக்கப்பட்டாலும் புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கும் வரை அவர் பதவியில் நீடிப்பார். நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டு கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். அவர் ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது சாதாரண மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார். பண மசோதாவை தீர்மானிப்பதில் இவருடைய முடிவே இறுதியானது ஆகும். 1985ஆம் ஆண்டு கட்சித்தாவல்தடைச் சட்டத்தின்படி இந்திய அரசியலமைப்புச் சட்டம் 10வது அட்டவணை அடிப்படையில் ஒரு உறுப்பினர் மக்களவை உறுப்பினர் ஆக தகுதி பெற்றவரா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு. சபாநாயகர் பதவி காலியாக இருக்கும் போதும் அல்லது வருகை புரியாத போதும் துணை சபாநாயகர் மக்களவைக்குத் தலைமை வகிப்பார்.



நாடாளுமன்றக் கூட்டத் தொடர்

பட்ஜெட் கூட்டத் தொடர்: பிப்ரவரி முதல் மே வரை

மழைக் (பருவ) காலக் கூட்டத் தொடர் : ஜூலை முதல் செப்டம்பர் வரை

குளிர் காலக் கூட்டத் தொடர்: நவம்பர் மற்றும் டிசம்பர்

2.4.4 நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்

- இந்திய நாடாளுமன்றம் சட்டமியற்றுதல், நிர்வாகத்தினை மேற்பார்வையிடுதல், வரவு–செலவு திட்டத்தினை நிறைவேற்றுதல், பொதுமக்கள் குறைகளைப் போக்குதல், மேலும் வளர்ச்சித் திட்டங்கள், சர்வதேச உறவுகள், உள்நாட்டுக் கொள்கைகள் போன்றவைகளை விவாதித்தல் என பல பணிகளைச் செய்கிறது.
- நாடாளுமன்றம் குடியரசுத் தலைவர் மீதான அரசியல் குற்றச்சாட்டுகளை (Impeachment) விசாரிக்கவும், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், தலைமை தேர்தல் ஆணையர், இந்தியத் தலைமைக் கணக்கு தணிக்கையாளர் ஆகியோரை அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளின்படி பதவி நீக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.
- நாடாளுமன்றமானது நிர்வாகத்தினை கேள்விகள், துணைக் கேள்விகள் கேட்பதன் மூலமாகவும், ஒத்திவைப்புத் தீர்மானங்கள், விவாதங்கள், தீர்மானங்கள் இயற்றுதல், கண்டனத் தீர்மானம் அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதித்து அவையில் கொண்டு வருதல் போன்றவைகளின் மூலமாகவும் தனது கட்டுப்பாட்டினைச் செலுத்தி வருகின்றது.
- மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைத்திட நாடாளுமன்றதிற்கே அதிகாரம் உண்டு.

2.5 இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 76 இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரை நியமிக்க வழிவகை செய்கிறது. இவர் நாட்டின் உயர்ந்த சட்ட அதிகாரி ஆவார். இவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். உச்ச நீதிமன்ற நீதிபதியாகத் தேவையான தகுதிகளை இவரும் கொண்டிருக்க வேண்டும். இவர் இந்தியக் குடிமகனாய் இருத்தல் வேண்டும். அவர் ஏதாவது ஒரு உயர் நீதிமன்றத்தில் ஐந்து ஆண்டுகள் நீதிபதியாகவோ (அல்லது) உயர் நீதிமன்றத்தில் பத்து ஆண்டுகள் வழக்குரைஞராகவோ அல்லது குடியரசுத் தலைவரின் பார்வையில் மேம்பட்ட சட்ட வல்லுநராகவோ இருத்தல் வேண்டும். குடியரசுத் தலைவர் விரும்பும் வரை இவர் பதவியில் நீடிக்கலாம். எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவரால் அவர் பதவியிலிருந்து அகற்றப்படலாம். அல்லது அவர் குடியரசுத் தலைவருக்குப் பதவி விலகல் கடிதத்தை அளித்து பதவி விலகலாம்.

2.5.1 இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்

இவர் குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட சட்ட விவகாரங்கள் மீது இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவார். குடியரசுத் தலைவரால் ஒதுக்கப்படும் சட்டரீதியிலான மற்ற கடமைகளையும் அவர் மேற்கொள்வார். அரசியலமைப்புச் சட்டம் அல்லது ஏனைய சட்டத்தின்படி வழங்கப்படும் பணிகளையும் அவர் மேற்கொள்வார். இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்காடும் உரிமை இவருக்கு உண்டு. நாடாளுமன்ற இரு அவைகளின் செயல்முறைகளிலும் பேசுவதற்கும், பங்கு கொள்ளுவதற்கும் இவருக்கு உரிமை உண்டு. நாடாளுமன்றத்தின் இரு அவையின் கூட்டத்திலோ அல்லது எந்தவொரு கூட்டுக் குழு கூட்டத்திலோ வாக்கு அளிக்கும் உரிமை இன்றி உறுப்பினராக இவர் இடம் பெறுவார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியக் அனைத்து சலுகைகளையும், சட்ட விலக்களிப்புகளையும் இவரும் பெறுகிறார்.

10th_Civics_Unit 2_TM.indd 206 07-05-2019 16:55:09

2.6 நீதித்துறை

மத்திய அரசாங்கத்தின் மூன்றாவது அங்கம் நீதித்துறை ஆகும். குடிமக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்திய அரசியலமைப்பு மற்றும் சட்டத்தின் விதிகள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்வதிலும், விளக்கமளிப்பதிலும் இது முக்கிய பங்கை வகிக்கிறது.

உச்சநீதிமன்றம்



உச்சநீதிமன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் உச்சநீதிமன்றம் ஆகும். நாட்டின் முதன்மை நீதிமன்றமாக, சுதந்திரமான, ஒருங்கிணைந்த நீதி அமைப்பாக உச்சநீதிமன்றம் நிறுவுவதற்கு நமது அரசியலமைப்பு வழிவகை செய்கிறது. மத்திய, மாநில அரசுகளின் சட்டமன்ற, நிர்வாகப் பிரிவுகளிலிருந்து நீதித்துறை தன்னாட்சி பெற்று விளங்குகிறது. ஒருங்கிணைந்த நீதித்துறை என்பது நாடு முழுவதும் நீதித்துறையானது ஒற்றை அதிகாரப் படிநிலையைக் கொண்டுள்ளதாகும். குடிமக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நீதித்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

புதுதில்லியில் அமைந்துள்ள இந்திய உச்சநீதிமன்றம் 1950 ஜனவரி 28ஆம் நாள் துவங்கப்பட்டது. இது 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கூட்டாட்சி நீதிமன்றத்தைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது.

2.6.1 உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு

1950ஆம் ஆண்டு அரசியலமைப்பின் தொடக்கத்தில் ஒரு தலைமை நீதிபதி உட்பட 8 நீதிபதிகளை உச்ச நீதிமன்றம் கொண்டிருந்தது. தற்சமயம் உச்ச நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதி உட்பட 28 நீதிபதிகளைக் கொண்டுள்ளது.

2.6.2 நீதிபதிகள் நியமனம்

இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். மற்ற நீதிபதிகளைத் தலைமை நீதிபதியைத் தலைவராகக் கொண்ட மூத்த நீதிபதிகள் குழுவின் (Collegiums) ஆலோசனையுடன் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

2.6.3 உச்சநீதிமன்ற நீதிபதிக்கான தகுதிகள்

- அவர் இந்தியக் குடிமகனாய் இருத்தல் வேண்டும். (அல்லது) அவர் ஐந்து ஆண்டுகள் உயர் நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.
- அவர் பத்து ஆண்டுகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.
- குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்பு மிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும்.

தற்காலிக அடிப்படையில் (ad–hoc basis) உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க அரசியலமைப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட இதர நீதிபதிகள் 65 வயது வரை பதவியில் நீடிப்பர்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் பதவிக்காலம் முடிவதற்கு முன்பாக குடியரசுத் தலைவரிடம் பதவி விலகல் கடிதத்தை அளித்து பதவி விலகலாம் அல்லது பெருங்குற்றத்தின் மூலம் உண்டான கண்டனத் தீர்மானத்தின் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரத்தினை நாடாளுமன்றம் பெற்றுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் நிரந்தர தலைமையிடம் புதுதில்லியில் உள்ளது. எனினும் இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு பெற்று இந்தியத் தலைமை நீதிபதியின் முடிவின்படி வேறு எந்த மாநிலத்திலும் அல்லது எந்த ஒரு இடத்திலும் இந்நீதிமன்ற அமர்வு அமையலாம்.

2.6.4 உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களும், பணிகளும்

நீதித்துறை செயல்பாடுகள்

உச்சநீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும். கீழ்க்கண்டவைகள் உச்சநீதிமன்றத்தின் செயல்பாடுகளாகும்.

(அ) தனக்கேயுரிய நீதி வரையறை

உச்ச நீதிமன்றத்திற்கு நேரடியாக வரும் வழக்குகள் தனக்கேயுரிய நீதிவரையறைக்குட்பட்டவையாகும். அவைகள் 1. இந்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள்

10th_Civics_Unit 2_TM.indd 207 07-05-2019 16:55:09

2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்கள் 3. அடிப்படை உரிமைகளை நடைமுறைபடுத்துவது தொடர்பாக எழும் சிக்கல்கள் ஆகியன உச்ச நீதிமன்றத்தின் தனக்கேயுரிய நீதி வரையறைக்குட்பட்டதாகும்.

அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்திட கீழ்க்கண்ட நீதிப்பேராணைகளை உச்சநீதிமன்றம் வழங்குகிறது. அவைகள் 1. ஆட்கொணர் நீதிப்பேராணை 2. கீழ் நீதிமன்றங்களுக்கு விடுக்கும் கட்டளை நீதிப்பேராணை 3. வழக்கு விசாரணைத் தடை நீதிப்பேராணை 4. தடைமாற்று நீதிப்பேராணை 5. உரிமை வினவு நீதிப்பேராணை

(ஆ) மேல்முறையீட்டு நீதிவரையறை

உச்ச நீதிமன்றமே நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகும். மாநில உயர் நீதிமன்றங்கள் உரிமையியல், குற்றவியல் (Civil and Criminal) அரசியலமைப்பு வழக்குகள் மீதான தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்கின்றது. அப்படிப்பட்ட வழக்குகளைத் தீர்க்க அரசியலமைப்புச் சட்டப்படி மேலும் சட்டவிளக்கம் தேவையென உயர் நீதிமன்றம் சான்றிதழ் அளித்தால் மட்டுமே அவ்வழக்குகளை உச்ச நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்ல முடியும்.

(இ) ஆலோசனை நீதிவரையறை

பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு சட்டம் அல்லது உண்மை மீதான உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைப் பெற அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு அதிகாரத்தினை வழங்குகிறது.

(ஈ) இதர நீதிவரையறை

உச்ச நீதிமன்றம் கீழ்க்காணும் இதர அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

- உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று நீதிமன்றத்தின் பொதுவான செயல்முறைகள், வழிமுறைகளை ஒழுங்குபடுத்தும் விதிகளை உருவாக்க உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- உச்ச நீதிமன்றம் தனது பணி அமைப்பின் மீதான முழுக் கட்டுப்பாட்டினையும் கொண்டுள்ளது.

(உ) நீதிப்புனராய்வு

ஒரு சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திடம் உள்ளது இது நீதிப்புனராய்வு (நீதிமன்ற மறுஆய்வு அதிகாரம்) எனப்படும். பின்வரும் தனிப்பட்ட நீதிமன்ற மறுஆய்வு அதிகாரங்களை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது. அவை

1. மத்திய, மாநிலங்களுக்கிடையிலான பிரச்சனைகள்.
2. அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படும் சந்தேகங்கள், கருத்து வேற்றுமைகளை விளக்கி தெளிவுபடுத்துதல்.
3. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்.
4. மாநில சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் போன்றவைகளை உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது.

பாடச்சுருக்கம்

- மத்திய அரசாங்கம் மூன்று அங்கங்களைக் கொண்டது. அவைகள் நிர்வாகம், சட்டமன்றம், நீதித்துறை ஆகியன.
- குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சர் மற்றும் இதர அமைச்சர்களையும் நியமிக்கிறார்.
- இந்திய நாடாளுமன்றம் மூன்று பகுதிகளைக் கொண்டது. அவைகள், குடியரசுத் தலைவர், மாநிலங்களவை (ராஜ்ய சபா) மற்றும் மக்களவை (லோக் சபா).
- இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் நாட்டின் உயர்ந்த சட்ட அதிகாரி ஆவார். அவர் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாக உச்ச நீதிமன்றம் விளங்குகிறது.
- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

10th_Civics_Unit 2_TM.indd 208 07-05-2019 16:55:09

கலைச்சொற்கள்

முடிவுக்கு கொண்டு வருதல்	**Terminate**	bring to an untimely end.
எதிர்பாரா செலவு நிதி	**Contingency fund**	an amount of money that can be used to pay for problems that might happen.
பொதுமன்னிப்பு	**Pardon**	absolving the convict of all guilt and punishment.
தண்டனை குறைப்பு	**Remission**	quantitative reduction of punishment without affecting Nature of punishment.
முன்னுரிமை	**Precedence**	priority of importance.
பதவியின் நிமித்தமாக	**Ex-officio**	because of an office.

மதிப்பீடு

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. _____ மத்திய அரசின் அரசியலமைப்புத் தலைவர் ஆவார்.
   (அ) குடியரசுத் தலைவர்
   (ஆ) தலைமை நீதிபதி
   (இ) பிரதம அமைச்சர்
   (ஈ) அமைச்சர்கள் குழு

8ICHBA

2. நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் உண்மையான நிர்வாக அதிகாரம் பெற்றவர் யார்?
   (அ) இராணுவம் (ஆ) பிரதமர்
   (இ) குடியரசுத் தலைவர் (ஈ) நீதித்துறை

3. ஒரு மசோதாவை நிதிமசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்.
   (அ) குடியரசுத் தலைவர்
   (ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
   (இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர்
   (ஈ) லோக் சபாவின் சபாநாயகர்

4. அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர்.
   (அ) குடியரசுத் தலைவர் (ஆ) மக்களவை
   (இ) பிரதம அமைச்சர் (ஈ) மாநிலங்களவை

5. சட்டமியற்றும் நடவடிக்கைகளில் இந்திய நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர்.
   (அ) நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர்
   (ஆ) மக்களவை சபாநாயகர்
   (இ) இந்தியக் குடியரசுத் தலைவர்
   (ஈ) மாநிலங்களவை தலைவர்

6. லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது _____
   (அ) 18 வயது (ஆ) 21 வயது
   (இ) 25 வயது (ஈ) 30 வயது

7. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர் / பெற்ற அமைப்பு.
   (அ) குடியரசுத் தலைவர் (ஆ) பிரதம அமைச்சர்
   (இ) மாநில அரசாங்கம் (ஈ) நாடாளுமன்றம்

8. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?
   (அ) சட்டப்பிரிவு 352 (ஆ) சட்டப்பிரிவு 360
   (இ) சட்டப்பிரிவு 356 (ஈ) சட்டப்பிரிவு 365

9. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்.
   (அ) குடியரசுத் தலைவர்
   (ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
   (இ) ஆளுநர்
   (ஈ) பிரதம அமைச்சர்

10. பின்வரும் எந்த அடிப்படையில் மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்களை தீர்க்கும் அதிகாரத்தை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது?
   (அ) மேல்முறையீடு நீதிவரையறை
   (ஆ) தனக்கேயுரிய நீதிவரையறை

10th_Civics_Unit 2_TM.indd 209 07-05-2019 16:55:10

(இ) ஆலோசனை நீதிவரையறை

(ஈ) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

11. நீ இந்தியக் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் கீழ்க்கண்ட எந்த முடிவினை எடுப்பாய்?

(அ) அமைச்சரைவையின் தலைவரை உன்னுடைய விருப்பத்திற்கு நியமிப்பது

(ஆ) இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட மசோதாவை மறுபரிசீலனைக்குட்படுத்த கேட்டுக் கொள்வது

(இ) உன்னுடைய விருப்பத்திற்கு பிரதமரை தேர்ந்தெடுப்பது

(ஈ) மக்களவையில் பெரும்பான்மை பெற்ற பிரதமரை பதவி நீக்கம் செய்வது

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. _____ மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது.
2. _____ நாட்டின் உண்மையான தலைவராகவும், நாட்டின் முக்கியக் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
3. _____ அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார்.
4. பொதுவாக, குடியரசுத் தலைவர் _____ இனத்திலிருந்து இரண்டு உறுப்பினர்களை மக்களவைக்கு நியமிக்கிறார்.
5. நாடாளுமன்ற இரு அவைகளிலும் உரையாற்றவும், கூட்டத்தொடரில் பங்கு கொள்ளவும் உரிமை பெற்றவர் _____
6. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது _____
7. _____ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும்.
8. தற்சமயம், உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட நீதிபதிகளின் எண்ணிக்கை _____

III சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்.

1. (i) மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 250.

(ii) இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு மற்றும் அனுபவம் பெற்ற 12 நபர்களை மாநிலங்களவைக்கு குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

(iii) மாநிலங்களவை உறுப்பினராவதற்கு 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் கூடாது.

(iv) மாநிலங்களவை உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(அ) ii & iv சரியானவை

(ஆ) iii & iv சரியானவை

(இ) i & iv சரியானவை

(ஈ) i, ii & iii சரியானவை

2. (i) உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62.

(ii) மத்திய அரசின் மூன்றாவது அங்கம் நீதித்துறை ஆகும்.

(iii) அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்களுக்கு உட்பட்டது.

(iv) உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.

(அ) ii & iv சரியானவை

(ஆ) iii & iv சரியானவை

(இ) i & iv சரியானவை

(ஈ) i & ii சரியானவை

3. **கூற்று** (A): மாநிலங்களவை ஒரு நிரந்தர அவையாகும். இதனைக் கலைக்க முடியாது.

காரணம் (R): மாநிலங்களவையில் 1/3 பங்கு உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் ஓய்வு பெறுவர். அக்காலியிடங்களுக்கு புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(அ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரியானது

(ஆ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது

(இ) கூற்று, காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமாகும்

(ஈ) கூற்று, காரணம் இரணடும் சரி மற்றும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமல்ல.

IV. பொருத்துக.

1. சட்டப்பிரிவு 53 – மாநில நெருக்கடிநிலை
2. சட்டப்பிரிவு 63 – உள்நாட்டு நெருக்கடிநிலை
3. சட்டப்பிரிவு 356 – குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள்
4. சட்டப்பிரிவு 76 – துணைக் குடியரசுத் தலைவரின் அலுவலகம்
5. சட்டப்பிரிவு 352 – இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் அலுவலகம்

10th_Civics_Unit 2_TM.indd 210 07-05-2019 16:55:10

V. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி.

1. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
2. மத்திய அரசின் பல்வேறுபட்ட அமைச்சர்களின் வகைகள் யாவை?
3. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?
4. மக்களவையின் சபாநாயகர் பற்றி குறிப்பு வரைக.
5. நிதி மசோதா என்றால் என்ன?
6. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.

VI. விரிவான விடையளி.

1. இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விவரி.
2. இந்திய உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் நீதிவரையறைகளை விளக்குக.
3. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
4. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை திறனாய்வு செய்க.
5. மாநிலங்களவை மற்றும் மக்களவையின் பணிகளைப் பட்டியலிடுக.

VII. செயல்திட்டம் மற்றும் செயல்பாடு.

1. மாதிரி நாடாளுமன்றத்தை உன்னுடைய வகுப்பறையில் ஏற்பாடு செய். குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சர், அமைச்சர்களின் பங்கு பற்றி விவரி.
2. இந்தியக் குடியரசுத் தலைவருக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவருக்கும் இடையேயான ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் வெளிக்கொணர்க.



மேற்கோள் நூல்கள்

1. D.D. Basu - Introduction of the Constitution of India, S.C. Sarkar & Sons (Private) Ltd, 1982.
2. PM Bakshi - The Constitution of India, Universal Law Publishing - an imprint of LexisNexis, 2018.
3. Subhash Kashyap - Our Constitution, National Book Trust, India, 2011.



இணையதள வளங்கள்

1. https://www.india.org/
2. https://presidentofindia.nic.in/
3. http://vicepresidentofindia.nic.in/
4. http://www.pmindia.gov.in/en/
5. https://www.sci.gov.in/



இணையச் செயல்பாடு

செயல்முறை

- கீழ்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்லவும்.
- படி 2: தற்போதுள்ள ஆளும் குழுக்களைப் பார்வையிடவும், மக்களவை மற்றும் ராஜ்ய சபை குறித்து அறிந்து கொள்ளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ள Who's மெனு வை சொடுக்கவும். உதாரணமாக, ஜனாதிபதியின் விவரங்களைக் காண இடத்துபக்கம் உள்ள President – ஐ சொடுக்கவும்.
- படி 3: அதேபோல் தற்போதைய ஆளும் குழுக்களின் அனைத்து விவரங்களையும் நீங்கள் பார்க்கலாம். நிகழ்வுகளைப் பற்றி விளக்கமாக தெரிந்துகொள்ள திரையில் தோன்றும் வரைபடத்தில் எதேனும் ஒரு இடத்தினை தேர்ந்தெடுக்கவும் .


B373_10_SOCIAL_TM

உரலி: https://www.india.gov.in/my-government/whos-who

10th_Civics_Unit 2_TM.indd 211 07-05-2019 16:55:10

அலகு – 3

மாநில அரசு




கற்றலின் நோக்கங்கள்

- மாநில அரசின் அமைப்புப் பற்றிய அறிவினைப் பெறுதல்.
- ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சபாநாயகர் ஆகியோரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் புரிந்து கொள்ளுதல்
- மாநில சட்டமன்றம் பற்றி அறிதல்.
- மாநிலத்தின் நீதித்துறை மற்றும் அதன் செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளுதல்.

M4SV4T

அறிமுகம்

இந்திய அரசியலமைப்பு மத்திய, மாநில அரசுகளுக்கான தனித்தனி நிர்வாக முறைகளைக் கொண்ட கூட்டாட்சி அரசாங்கத்தை வழங்குகிறது. இக்கூட்டாட்சியில், தேசியத் தலைநகரான டெல்லி, 6 யூனியன் பிரதேசங்கள் மற்றும் 29 மாநிலங்கள் உள்ளன. மத்திய–மாநில அரசுகளுக்கான ஒரு சீரான நிர்வாக அமைப்பினை ஏற்படுத்த அரசியலமைப்பு வழிவகுக்கிறது. அரசியலமைப்பின் பகுதி VI இல் 152 முதல் 237 வரையிலான சட்டப்பிரிவுகள் அனைத்து மாநிலங்களுக்கான சீரான அமைப்பினைப் பற்றி குறிப்பிடுகிறது. ஆனால் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 370 ஜம்மு–காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் சிறப்பு அந்தஸ்து வழங்கியுள்ளது. மத்திய அரசைப் போன்று மாநில அரசுகளும் நிர்வாகத்துறை, சட்டமன்றம், நீதித்துறை என்ற மூன்று பிரிவுகளின் கீழ் இயங்குகின்றன.



10th_Civics_Unit 3_TM.indd 212 07-05-2019 16:56:16

உங்களுக்குத் தெரியுமா?

ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும், ஜம்மு – காஷ்மீர் அரசியலமைப்பு 1957–ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் நாள் ஏற்கப்பட்டு, 1957–ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. இந்திய அரசியலமைப்பின் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை உரிமைகள் ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்குப் பொருந்தாது. இந்திய அரசியலமைப்பு நீக்கிய அடிப்படை உரிமைகளில் ஒன்றான சொத்துரிமை ஜம்மு – காஷ்மீரில் இன்றும் நடைமுறையில் உள்ளது.

3.1 நிர்வாகத் துறை

3.1.1 ஆளுநர்

மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் ஆளுநர் ஆவார். மாநில ஆளுநரின் பெயரில் மாநில நிர்வாகம் செயல்படுகிறது. பொதுவாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருக்கிறார். ஆனால் நிர்வாகச் சூழலின் காரணமாக ஒரு மாநிலத்தின் ஆளுநர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராகவும் நியமிக்கப்படலாம்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 154 மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தைப் பற்றி கூறுகிறது. சட்டப்பிரிவு 154 (1)–ன் படி மாநில ஆளுநரின் நிர்வாக அதிகாரம் ஆளுநரிடம் இருக்க வேண்டும். இந்த அதிகாரம் அவரால் நேரடியாகவோ அல்லது அவரின் கீழுள்ள அலுவலர்களாலோ, அரசியலமைப்பின்படி செயல்படுத்தப்பட வேண்டும்.

3.1.2 ஆளுநர் நியமனம்

மாநில ஆளுநர், குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார். வழக்கமாக, அவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள். ஆனால் குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் பேரில் அவரது பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம். பொதுவாக, ஒருவர் தனது சொந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்படமாட்டார். மேலும், அவர் குடியரசுத் தலைவரால் ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்கு மாற்றப்படலாம். குடியரசுத் தலைவருக்குத் தனது பணித்துறப்பு கடிதத்தைக் கொடுப்பதன் மூலம் ஆளுநர் எந்நேரத்திலும் பதவி விலகலாம்.

மாநில சட்டமன்றமோ அல்லது உயர் நீதிமன்றமோ ஆளுநரின் பணி நீக்கத்தில் பங்கு பெற முடியாது. ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆளுநராக நியமிக்கப்படலாம். ஒருவரை ஒரு மாநில ஆளுநராக நியமனம் செய்யப்படுவதில் இரண்டு மரபுகள் பின்பற்றப்படுகின்றன. அவை: ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவர் தான் எந்த மாநிலத்திற்கு ஆளுநராக நியமிக்கப்பட உள்ளாரோ அந்த மாநிலத்தில் வசிப்பவராக இருத்தல் கூடாது. மேலும் ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவரை மத்திய அரசு, மாநில அரசுடன் கலந்தாலோசித்து அவரது பெயரை முன்மொழிய வேண்டும்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 158 (3A)–ன் படி ஒருவர், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராக நியமிக்கப்படும் பொழுது, குடியரசுத் தலைவர் ஓர் ஆணையின் மூலம், ஆளுநரின் ஊதியம் மற்றும் படிகளை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பகிர்ந்து வழங்க தீர்மானிக்கலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

மத்திய – மாநில அரசுகளின் உறவுகளைக் குறித்து ஆராய அமைக்கப்பட்ட சர்க்காரியா குழு ஆளுநர் நியமனம் குறித்த பல ஆலோசனைகளை வழங்கியுள்ளது. அவை:

i. மாநில சட்டமன்ற குழுவால் தயாரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து அல்லது
ii. முதலமைச்சரின் ஒப்புதலுடன் மாநில அரசால் தயாரிக்கப்படும் பட்டியலிலிருந்து அல்லது
iii. முதலமைச்சருடன் நடத்தப்படும் கலந்துரையாடல் ஆகியவற்றின் மூலம், ஆளுநர் நியமனம் நடைபெறும்.

3.1.3 ஆளுநராவதற்கான தகுதிகள்

இந்திய அரசியலமைப்பின் 157 மற்றும் 158 வது சட்டப்பிரிவுகள் ஆளுநர் பதவிக்குத் தேவையான பின்வரும் தகுதிகளைக் கூறுகின்றன.

QXH1A5

- அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவர் ஆளுநராக பதவியேற்கும் பொழுது தாமாகவே அப்பதவி காலியாகிவிடும்.
- மேலும் அவர், இலாபம் தரும் எந்த தொழிலிலும் ஈடுபடக்கூடாது.

3.1.4 ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

ஆளுநர், மாநில நிர்வாகத்தின் தலைவராக செயல்படுவது மட்டுமல்லாமல் ஏராளமான

10th_Civics_Unit 3_TM.indd 213 07-05-2019 16:56:16

அதிகாரங்கள் பெற்றவராகவும் திகழ்கிறார். சட்டப்பிரிவு 163–ன் படி, முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி ஆளுநர் குறிப்பிட்ட சில நிகழ்வுகளைத் தவிர மற்ற அதிகாரங்களைச் செயல்படுத்துகிறார். மாநில நிர்வாகத் தலைவராக ஆளுநர் பின்வரும் அதிகாரங்களைப் பெற்று பணிகளைச் செய்கிறார்.

நிர்வாக அதிகாரங்கள்

- இந்திய அரசியலமைப்பு, மாநில நிர்வாகத்தின் அனைத்து அதிகாரங்களையும் ஆளுநருக்கு வழங்குகிறது. இவற்றை ஆளுநர் நேரடியாகவோ அல்லது அவரின் கீழுள்ள அலுவலர்கள் மூலமோ செயல்படுத்தலாம். ஆளுநரே மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவர். அவரது பெயராலே அனைத்து நிர்வாகமும் நடைபெறுகின்றன.

ஆளுநரின் நிர்வாக அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன:

- மாநில சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெறும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஆளுநர் நியமனம் செய்கிறார்.
- முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் அமைச்சரவையின் மற்ற உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.
- மாநிலத்தின் அரசு வழக்கறிஞரை நியமனம் செய்து அவரது ஊதியத்தையும் நிர்ணயம் செய்கிறார். ஆளுநர் விரும்பும் வரை அரசு வழக்குரைஞர் அவரது பதவியைத் தொடரலாம்.
- அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறார். இருப்பினும் ஆளுநரால் இவர்களை பணிநீக்கம் செய்ய முடியாது. குடியரசுத் தலைவரால் மட்டுமே பணி நீக்கம் செய்ய முடியும்.
- மாநில தலைமை தேர்தல் ஆணையரை நியமனம் செய்து, அவரது பணிக்காலம், பணியின் தன்மையைத் தீர்மானிக்கிறார். இருந்த போதிலும், உயர் நீதிமன்ற நீதிபதியைப் பதவி நீக்கம் செய்யும் அதே முறையைப் பின்பற்றியே மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கம் செய்யலாம்.
- ஆளுநர், மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராக செயல்படுவதுடன், துணை வேந்தர்களையும் நியமனம் செய்கிறார்.
- குடியரசுத் தலைவரின் அவசரநிலை பிரகடனம் செய்யப்படும் பொழுது, குடியரசுத் தலைவரின் பெயரில் இவரே மாநிலத்தை நேரடியாக ஆட்சி செய்கிறார்.

சட்டமன்ற அதிகாரங்கள்

ஆளுநர் மாநில சட்டமன்றத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாவார். ஆனால், அவர் சட்டமன்றத்தின் உறுப்பினராக இல்லை. ஆளுநர் பின்வரும் சட்டமன்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.

- ஆளுநர் சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும் ஒத்திவைக்கவும் சட்டமன்றத்தைக் கலைக்கவும் உரிமைப் பெற்றுள்ளார்.
- பொதுத் தேர்தல் முடிந்து முதலமைச்சர் மற்றும் மற்ற அமைச்சர்களின் நியமனத்திற்குப் பிறகு நடைபெறும் சட்டமன்றக்கூட்டத்தின் முதல் கூட்டத்தில் உரை நிகழ்த்துகிறார்.
- நிலுவையிலுள்ள மசோதா குறித்து சட்டமன்ற அவைகளுக்கு ஆளுநர் செய்தி அனுப்பலாம்.
- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பணியிடம் காலியாக இருக்கும்பொழுது சட்டமன்றத்தை தலைமை ஏற்று நடத்த எந்த சட்டமன்ற உறுப்பினரை வேண்டுமானாலும் ஆளுநர் நியமனம் செய்யலாம்.
- ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரிலிருந்து ஓர் உறுப்பினரை மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்யலாம்.
- கலை, இலக்கியம், அறிவியல், கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூக சேவை போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து மாநில சட்டமேலவையின் 6 இல் 1 பங்கு இடங்களுக்கு அவர்களை நியமனம் செய்கிறார்.
- சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்து தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்கிறார்.
- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும் ஆளுநர் கையொப்பமிட்ட பின்னர் மட்டுமே சட்டமாகும். ஆனால், சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் பொழுது ஆளுநர் கையொப்பமிடலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் அல்லது மீண்டும் மறு பரிசீலனைக்காக சட்டமன்றத்திற்கே திருப்பி அனுப்பலாம்.
- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு மசோதாவும் மாநில உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் நிலையில் இருக்குமாயின், அதனைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக நிறுத்திவைக்கலாம்.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 213–ன் கீழ் ஆளுநர் மாநில சட்டமன்றம் நடைபெறாத பொழுது அவசர சட்டத்தைப் பிறப்பிக்கலாம். ஆனால் அந்த அவசரச்சட்டம், 6 மாதத்திற்குள் மாநில சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவசரச்சட்டத்தை எந்நேரத்திலும் ஆளுநர் திரும்பப் பெறலாம்.
- மாநிலத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை, அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுவின் அறிக்கை, அரசின் தணிக்கைக்குழு அறிக்கைகளை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.

10th_Civics_Unit 3_TM.indd 214 07-05-2019 16:56:16

நிதி அதிகாரங்கள்

- மாநிலத்தின் ஆண்டு வரவு செலவு திட்டத்தினை தயார் செய்து சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யும் கடமையை ஆளுநருக்கு அரசியலமைப்பு வழங்குகிறது. தேவைப்பட்டால், துணை வரவு செலவு திட்டத்தையும் அறிமுகம் செய்யலாம்.
- ஆண்டு நிதிநிலை அறிக்கையை (வரவு செலவு திட்டம்) சட்டமன்றத்தில் அறிமுகம் செய்ய காரணமாகிறார்.
- மாநில சட்டமன்றத்தில் மாநில நிதியமைச்சர் மூலம் துணை வரவு செலவு திட்டத்தை தேவைப்பட்டால் சமர்ப்பிக்கின்றார்.
- ஆளுநரின் முன் அனுமதியுடன்தான் பண மசோதாவை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியும்.
- ஆளுநரின் பரிந்துரையின்றி நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது.
- அரசின் எதிர்பாராச் செலவினங்களுக்காக ஆளுநர் அவசர நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்.
- பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளின் நிதிநிலையை ஆய்வு செய்ய ஒவ்வொரு ஐந்தாண்டிற்கு ஒருமுறை நிதி ஆணையம் ஒன்றை அமைக்கிறார்.

நீதித்துறை அதிகாரங்கள்

- மாநில அரசின் தலைமை வழக்குரைஞரை நியமனம் செய்கிறார்.
- கீழ் நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமனம் செய்கிறார்.
- உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையின் பேரில் மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு போன்ற பணிகளை மேற்கொள்கிறார்.
- ஆளுநரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் உயர் நீதிமன்ற தலைமைநீதிபதியை நியமனம் செய்கிறார்.
- குற்றவாளிகளின் கருணை மனு அடிப்படையில் குற்றவாளிகளை மன்னிக்கலாம் அல்லது குற்றவாளிகளின் தண்டனையைக் குறைக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்.

விருப்புரிமை அதிகாரங்கள்

- குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஆளுநர் ஒரு மசோதாவை நிறுத்தி வைக்க முடியும்.
- மாநிலத்தில், குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கு ஆளுநர் பரிந்துரை செய்கிறார்.
- மாநில நிர்வாகம் மற்றும் சட்டமன்ற செயல்பாடுகள் தொடர்பானச் செய்திகளை முதலமைச்சரிடமிருந்து ஆளுநர் பெறுகிறார்.
- மாநில சட்டமன்ற பொதுத் தேர்தலில் எந்த கட்சியும் அறுதி பெரும்பான்மையைப் பெறாத போது, ஆளுநர் எந்தக் கட்சி தலைவரையும் ஆட்சி அமைக்க அழைக்கலாம்.
- சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பின் பொழுது பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் போனால் அமைச்சரவையை ஆளுநர் கலைக்க முடியும்.
- அமைச்சரவை பெரும்பான்மையை இழந்தால், சட்டமன்றத்தை ஆளுநர் கலைக்கமுடியும்.

அவசரகால அதிகாரங்கள்

மாநில அரசு அரசியலமைப்பு விதிகளுக்கேற்ப செயல்படவில்லை என்று ஆளுநர் உறுதியாக நம்பினால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 356–ன் கீழ் மாநில அரசை கலைக்க குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யலாம். மாநில அரசு கலைக்கப்பட்ட வுடன், மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வரும். ஆளுநர் குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக மாநிலத்தை நிர்வாகம் செய்கிறார்.

3.1.5 ஆளுநரின் சிறப்புரிமைகள்

சட்டப்பிரிவு 361 (1) ஆளுநருக்கான கீழ்க்காணும் சிறப்புரிமைகளை வழங்குகின்றது.

(அ) தனது பணிகள் மற்றும் அதிகாரத்தைச் செய்ய வேண்டும் என எண்ணுவதிலும் செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

(ஆ) ஆளுநரின் பதவிக்காலத்தில் அவர் மீது குற்றவியல் நடவடிக்கைகளை அவருக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் தொடர முடியாது.

(இ) ஆளுநரின் பதவி காலத்தில் அவர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தவோ அல்லது அவரை கைது செய்யவோ எந்த நீதிமன்றமும் உத்தரவு பிறப்பிக்க முடியாது.

(ஈ) மாநில ஆளுநருக்கு எதிராக உரிமையியல் வழக்குகளைத் தொடர முடியாது.

3.2 முதலமைச்சர்

அரசியலமைப்பால் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற முறையில் அமைந்த அரசில், ஆளுநர், மாநிலத்தின் பெயரளவு நிர்வாகியாகவும் முதலமைச்சர் உண்மையான நிர்வாகியாகவும் உள்ளனர். வேறு வகையில் கூற வேண்டுமாயின் ஆளுநர் மாநிலத்தின் அரசின் தலைவர் முதலமைச்சர் அரசாங்கத்தின் தலைவர் ஆவார்.

3.2.1 முதலமைச்சரின் நியமனம்

முதலமைச்சர் மாநில ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார். சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் அல்லது பெரும்பான்மை

10th_Civics_Unit 3_TM.indd 215 07-05-2019 16:56:16

பெற்ற கூட்டணிக் கட்சியின் தலைவர் முதலமைச்சராக நியமிக்கப்படுகிறார். ஒருவேளை எந்த கட்சியும் முழுமையான பெரும்பான்மை பெறாத பொழுது அல்லது பெரும்பான்மை பெற்றவர்கள் தங்களது தலைவரைத் தேர்ந்தெடுக்க தவறும் பொழுது ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அடுத்ததாக பெரும்பான்மை பெற்ற பெரிய கட்சியை அமைச்சரவை அமைக்க அழைப்பார். அவ்வாறு அழைக்கப்படும் தலைவர், ஆளுநரால் வழங்கப்படும் கால அவகாசத்திற்குள் சட்டமன்றத்தில் அவரது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

முதலமைச்சரின் பதவிக்காலம் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல. சட்டமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு எவ்வளவு காலத்திற்கு தொடர்கிறதோ அதுவரை அவர் முதலமைச்சராக நீடிக்கலாம். சட்டமன்றத்தில் எப்பொழுது அவர் பெரும்பான்மையை இழக்கிறாரோ அப்பொழுது தனது பதவியை இராஜினாமா செய்கிறார். சட்டமன்றத்தில் மற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் போலவே முதலமைச்சரின் பதவிக்காலமும் 5 ஆண்டுகள் ஆகும்.

1947–லிருந்து பதவி வகித்த தமிழக முதலமைச்சர்கள்

திரு. O.P. இராமசாமி	–	1947 – 1949
திரு. P.S. குமாரசாமி ராஜா	–	1949 – 1952
திரு. C. இராஜகோபாலாச்சாரி	–	1952 – 1954
திரு. K. காமராஜர்	–	1954 – 1963
திரு. M. பக்தவச்சலம்	–	1963 – 1967
திரு. C.N. அண்ணாதுரை	–	1967 – 1969
திரு. M. கருணாநிதி	–	1969 – 1976
திரு. M.G. இராமச்சந்திரன்	–	1977 – 1987
திருமதி ஜானகி இராமச்சந்திரன்	–	ஜனவரி 1988
திரு. M. கருணாநிதி	–	1989 – 1991
செல்வி J. ஜெயலலிதா	–	1991 – 1996
திரு. M. கருணாநிதி	–	1996 – 2001
செல்வி J. ஜெயலலிதா	–	2001
திரு. O. பன்னீர்செல்வம்	–	2001 – 2002
செல்வி J. ஜெயலலிதா	–	2002 – 2006
திரு. M. கருணாநிதி	–	2006 – 2011
செல்வி J. ஜெயலலிதா	–	2011 – 2014
திரு. O. பன்னீர்செல்வம்	–	2014 – 2015
செல்வி J. ஜெயலலிதா	–	2015 – 2016
திரு. O. பன்னீர்செல்வம்	–	2016 – 2017
திரு. எடப்பாடி K. பழனிசாமி	–	2017 முதல்

3.2.2 முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

மாநில நிர்வாகத்தின் உண்மையான தலைவர் முதலமைச்சர் ஆவார். முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன.

- அமைச்சரவை தொடர்பானவை
- ஆளுநர் தொடர்பானவை
- சட்டமன்றம் தொடர்பானவை
- இதர பணிகள் மற்றும் அதிகாரங்கள்

அமைச்சரவை தொடர்பானவை

அமைச்சரவையின் தலைவரான முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன.

- முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.
- அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.
- ஓர் அமைச்சருடன் கருத்து வேறுபாடுகள் எழும்பொழுது, இராஜினாமா செய்யும்படி கேட்கிறார் அல்லது பதவி நீக்கம் செய்ய ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.
- அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
- அமைச்சரவையின் குழப்பத்தைத் தனது இராஜினாமா மூலம் முடித்து வைக்கிறார்.
- அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி, அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.

ஆளுநர் தொடர்பானவை

ஆளுநருக்கும் அமைச்சரவைக்குமிடையே செய்தித்தொடர்புகளில், முதலமைச்சர் முதன்மையாக விளங்குகிறார். கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

- மாநில அரசு வழக்குரைஞர்
- மாநில தேர்தல் ஆணையர்
- அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

சட்டமன்றம் தொடர்பானவை

- சட்டமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.
- சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
- சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.
- எந்நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்கிறார்.

10th_Civics_Unit 3_TM.indd 216 07-05-2019 16:56:16

இதர அதிகாரங்கள் மற்றும் பணிகள்

- ஆளுங்கட்சியின் தலைவராக முதலமைச்சர் கட்சியைக் கட்டுப்படுத்தி அதன் ஒழுக்கத்தை மேம்படுத்துகிறார்.
- மாநிலத்தின் தலைவராகப் பல்வேறுபட்ட மக்களின் தேவைகளை உற்று நோக்குகிறார்.
- மாநிலத்தின் அரசியல் தலைமையாக பல்வேறு பணிகளைக் கட்டுப்படுத்தி, மேற்பார்வையிட்டு, பல்வேறு துறை செயலர்களின் பணிகளை ஒருங்கிணைக்கிறார்.
- மாநில அரசு சுமூகமாக இயங்க மத்திய அரசுடன் இணக்கமான உறவை வைத்துக்கொள்கிறார்.

3.2.3 அமைச்சரவை

அமைச்சரவை மாநில சட்டமன்றத்திற்குக் கூட்டாகப் பொறுப்பானது. அமைச்சரவைக்குழுவின் அமைச்சர்கள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவர் அமைச்சராக பதவியேற்றால் 6 மாத காலத்திற்குள் அவர் சட்டமன்ற உறுப்பினராக வேண்டும். முதலமைச்சரின் தலைமையின் கீழ் அமைச்சர்கள் அனைவரும் ஒரு குழுவாக செயல்பட வேண்டும். முதலமைச்சர் எவ்வளவு காலம் பதவியில் நீடிக்கிறாரோ அதுவரை அமைச்சரவை தொடரும். சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டால் மாநில அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டும்.

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 163 ஆளுநருக்கு ஆலோசனைகள் வழங்க அமைச்சரவையை உருவாக்க வழிவகை செய்திருக்கிறது. சட்டப்பிரிவு 163(1)–ன் படி, முதலமைச்சரை தலைவராகக் கொண்ட அமைச்சரவை ஆளுநருக்கு தேவைப்படும் பொழுது உதவி செய்யவும் ஆலோசனை வழங்கவும் வேண்டும்.

அமைச்சர்களுடனான மற்ற விதிகள்

சட்டப்பிரிவு 164(1), ஆளுநரால் முதலமைச்சர் நியமிக்கப்படுவதைக் கூறுகிறது. மற்றும் முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்களையும் நியமிக்க வகை செய்கிறது.

ஆளுநர் விரும்பும் வரை முதலமைச்சர் பதவியில் தொடரலாம். முதலமைச்சர் உட்பட மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15 விழுக்காட்டை தாண்டக்கூடாது என சட்டப்பிரிவு 164 (1A) கூறுகிறது.

அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

- மாநில அரசிற்கான கொள்கைகளை உருவாக்கி அவற்றை திறம்பட நடைமுறைப்படுத்துகிறது.
- சட்டமன்ற நிகழ்ச்சிகளை முடிவு செய்து எல்லா முக்கியமான மசோதாக்களுக்கும் ஆதரவளிக்கிறது.
- நிதிக்கொள்கையைக் கட்டுப்படுத்துவதுடன் மாநில பொது நலனுக்கான வரிக்கொள்கையை முடிவு செய்கிறது.
- சமூக, பொருளாதார மாற்றங்களுக்கான நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி அதன்படி மாநில அரசின் தலைமையில் பல்வேறு தொடர்புடைய துறைகள் உருவாக்கப்படுகின்றன.
- முக்கியமான துறைத் தலைவர்களின் நியமனங்களைச் செய்கிறது.
- மற்ற மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொள்கிறது.
- கீழ் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனங்களில் ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறது.
- மாநிலத்திற்கான செலவுகளைச் சமாளிக்க திட்ட அறிக்கையை உருவாக்குகிறது.
- ஒரு மசோதா சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் போது அது சாதாரண மசோதாவா அல்லது நிதி மசோதாவா என்று தீர்மானிக்கிறது.
- அமைச்சரவையின் ஒவ்வொரு அமைச்சரின் பணிகளைக் கட்டுப்படுத்தி, கண்காணித்து ஒருங்கிணைக்கின்றது.
- ஆண்டு வரவு செலவு திட்டம் (Budget) அமைச்சரவையால் இறுதி செய்யப்படுகிறது.

3.3 மாநில சட்டமன்றம்

இந்திய அரசியலமைப்பு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு சட்டமன்றம் ஏற்பட வகை செய்கிறது.பெரும்பாலானமாநிலங்கள்ஓரவையைக் கொண்ட சட்டமன்றங்களை மட்டும் பெற்றுள்ளன. சில மாநிலங்கள் ஈரவை சட்டமன்றங்களைக் கொண்டுள்ளன. (எடுத்துக்காட்டு: பீகார், கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா மற்றும் ஜம்மு – காஷ்மீர்). கீழவையானது மாநில மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டது. மேலவையானது ஆசிரியர்கள், பட்டதாரிகள், மற்றும் உள்ளாட்சி உறுப்பினர்கள் ஆகியோர்களைப் பிரதிநிதிகளாகக் கொண்டது.



தமிழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் படி (234 உறுப்பினர்கள்) அமைச்சர்களின் எண்ணிக்கை 36 வரை இருக்கலாம். அதாவது 234–ல் 15 விழுக்காடு.

10th_Civics_Unit 3_TM.indd 217 07-05-2019 16:56:16

3.3.1 சட்டமன்றப் பேரவை (கீழவை)



தமிழக சட்டமன்றம்

மாநில சட்டமன்றம் பிரபலமான ஓர் அவை ஆகும். இதுவே மாநில அதிகாரத்தின் உண்மையான அதிகார மையமாகும். இது வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, மக்கள் தொகையைப் பொறுத்து மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 500க்கு மிகாமலும் குறைந்த பட்சம் 60க்கு குறையாமலும் இருக்க வேண்டும். சட்டமன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். இருப்பினும் 5 ஆண்டுகள் முடியும் முன்னரே சட்டமன்றம் கலைக்கப்படலாம்.

சட்ட மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநில சட்டமன்ற கீழவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 3–ல் 1–பங்குக்கு மிகாமல் இருக்க வேண்டும். ஆனால் மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 40க்கு குறையாமல் இருக்க வேண்டும் (ஜம்மு–காஷ்மீர் தவிர). நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் காஷ்மீர் சட்ட மேலவையில் 36 உறுப்பினர்களே உள்ளனர். சட்ட மேலவை உறுப்பினர்கள் மாநில சட்டமன்றத்தால் அவ்வப்போது நிறைவேற்றப்படும் சட்டங்கள் மூலம் தங்களது ஊதியம் மற்றும் படிகளைப் பெறுகின்றனர்.

சட்டமன்றத்தின் அமைப்பு

தமிழக சட்டமன்றம் 235 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களில் 234 உறுப்பினர்கள் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரில் ஒருவர் ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார். அட்டவணைப்படுத்தப்பட்டோர் (தாழ்த்தப்பட்டோர்) மற்றும் பழங்குடியினருக்கு சட்டமன்றத் தேர்தலில் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றன.

அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்கள்

அமைச்சரவை (Cabinet) என்ற சிறிய அமைப்பானது அமைச்சரவையின் உட்கரு ஆகும். இது காபினெட் அமைச்சர்களை மட்டும் உள்ளடக்கியது. இதுவே மாநில அரசின் உண்மையான அதிகார மையமாக விளங்குகிறது.

அமைச்சரவை குழுக்கள் எனப்படும் வெவ்வேறு குழுக்கள் மூலம் காபினெட் செயலாற்றுகிறது. அவற்றில் இரண்டு வகைகள் உள்ளன. அவை: ஒன்று நிரந்தரமானது மற்றொன்று தற்காலிகமானது ஆகும்.

சபாநாயகர்

சட்டமன்ற உறுப்பினர்களிடையே சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சபாநாயகர் தனது பதவியை இராஜினாமா (பதவி துறப்பு) செய்தால் சட்டமன்ற உறுப்பினராக தொடர முடியாது. சபாநாயகர் எந்நேரத்திலும் இராஜினாமா (பதவி துறப்பு) செய்யலாம். சட்டமன்றம் ஒரு தீர்மானத்தின் மூலம் 14 நாட்கள் அறிவிப்பு கொடுத்த பிறகு சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்யலாம். அதற்கு முன் சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடக்கும் நேரத்தில் அவைக்கு வந்த பெரும்பாலான உறுப்பினர்கள் வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். சட்டமன்றம் கலைக்கப்படும்பொழுது சபாநாயகர் தமது பதவியை இழக்க மாட்டார். மேலும், புதிய சட்ட மன்றத்தின் முதல் கூட்டம் வரை தனது பதவியைத் தொடர்கிறார். சபாநாயகர் இல்லாதபோது அவரது பணியைத் துணை சபாநாயகர் மேற்கொள்கிறார்.

3.3.2 சட்டமன்ற மேலவை (சட்ட மேலவை)

சட்ட மேலவை என்பது மாநில சட்டமன்றத்தின் மேலவையாகும். இது ஒரு நிரந்தர அவையாகும். சட்ட மேலவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 3–ல் 1–பங்குக்கு மிகாமலும் குறைந்த பட்ச எண்ணிக்கை 40–க்கு குறையாமலும் இருக்க வேண்டுமென அரசியலமைப்பு சட்டப்பிரிவு 171 (1) கூறுகிறது.

சட்டமேலவை (விதான் பரிஷத்) இந்திய மாநில சட்டமன்றங்களில் ஓர் அங்கமாக செயல்படுகிறது. இந்தியாவின் 29 மாநிலங்களில் 7 மாநிலங்களில் சட்டமேலவை உள்ளது. ஈரவை சட்டமன்றத்தில் மறைமுகத் தேர்தலால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சட்ட மேலவையில் செயலாற்றுகின்றனர். சட்ட மேலவை ஒரு நிரந்தர அவையாகும். ஏனென்றால், இதனை கலைக்க முடியாது. சட்ட மேலவை உறுப்பினர்களின் பதவி காலம் 6 ஆண்டுகள் ஆகும்.

10th_Civics_Unit 3_TM.indd 218 07-05-2019 16:56:17

உங்களுக்குத் தெரியுமா?

1986–ல் இயற்றப்பட்ட தமிழ்நாடு சட்ட மேலவை (நீக்கம்) மசோதா மூலம் தமிழ்நாட்டில் சட்ட மேலவை நீக்கப்பட்டது. இச்சட்டம் 1986 நவம்பர் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது.

அதன் ஒவ்வொரு இரண்டாண்டிற்கும் மூன்றில் 1–பங்கு உறுப்பினர்கள் ஓய்வு பெறுவர். ஒருவர் சட்ட மேலவை உறுப்பினராவதற்கு அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும். 30 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். தெளிவான மனநிலை உடையவராக இருத்தல் வேண்டும். பெற்ற கடனைத் திரும்ப செலுத்த முடியாதவராக இருத்தல் கூடாது மற்றும் எந்த மாநிலத்தில் போட்டியிடுகிறாரோ அம்மாநில வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும்.

சட்ட மேலவைக்கான தேர்தல்

- மூன்றில் 1 பங்கு உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரெண்டில் 1 பங்கு (1/12) உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பன்னிரெண்டில் 1 பங்கு (1/12) உறுப்பினர்கள் பட்டதாரி ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
- மூன்றில் 1 பங்கு (1/3) உறுப்பினர்கள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- ஆறில் 1 பங்கு உறுப்பினர்கள் (1/6) கலை, இலக்கியம், அறிவியல், சமூக சேவை, மற்றும் கூட்டுறவு இயக்கம் இவற்றில் சிறந்து விளங்குபவர்களை ஆளுநர் நேரடியாக நியமனம் செய்கிறார்.

தலைவர்

மேலவைத் தலைவர் (Chairman) மேலவை கூட்டத்தைத் தலைமையேற்று நடத்துகிறார். மேலவை உறுப்பினர்களிடையே தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தலைவர் இல்லாதபோது துணைத்தலைவர் கூட்டத்தைத் தலைமையேற்று நடத்துகிறார்.

சட்டமேலவை உருவாக்கம் அல்லது நீக்கம்

சட்ட மேலவை உருவாக்கம் அல்லது நீக்கம் பற்றி சட்டப்பிரிவு 169 விவரிக்கிறது. இப்பிரிவின் படி, சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் 2 பங்கு (2/3) உறுப்பினர்கள் வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்றி சட்டமேலவையை உருவாக்கவோ அல்லது நீக்கவோ நாடாளுமன்றத்தைக் கேட்டுக் கொண்டால் நாடாளுமன்றம் ஒரு சட்டத்தின் மூலம் மேலவையை உருவாக்கும் அல்லது நீக்கும்.

3.4 சட்டமன்றத்தின் செயல்பாடுகள்

சட்டமன்றத்தின் அதிகாரங்களும் செயல்பாடுகளும் பெரும்பாலும் நாடாளுமன்றத்தைப் பின்பற்றியே உள்ளன.

3.4.1 சட்டமன்ற அதிகாரங்கள்

அரசியலமைப்பின்படி மாநிலப் பட்டியலிலுள்ள அனைத்துத் துறைகள் மீதும் சட்டமன்றம் சட்டத்தை நிறைவேற்றலாம். பொதுப்பட்டியலிலும் சட்டமன்றம் சட்டம் இயற்றலாம். ஆனால் அதே சட்டத்தை மத்திய அரசு இயற்றும்பொழுது மாநில அரசின் சட்டம் செயலற்றதாகி விடும். மத்திய நாடாளுமன்ற நடைமுறையைப் போன்றே மாநில சட்டமன்றத்தின் மசோதாவும் சட்டமாக நிறைவேற்றுகிறது. ஒவ்வொரு மசோதாவும் சட்டமன்றத்தில் மூன்று நிலைகளுக்குப் பிறகே நிறைவேறுகிறது. ஆளுநரின் ஒப்புதலுக்குப் பின்பு அம்மசோதா சட்டமாகிறது.

3.4.2 நிதி அதிகாரங்கள்

சட்டமன்றம் மாநிலத்தின் நிதி நிலையைக் கட்டுப்படுத்துகிறது. சட்டமன்றக் கீழவையானது மேலவையைக் காட்டிலும் பண நடவடிக்கைகளில் அதிக அதிகாரத்தைப் பெற்றுள்ளது. பண மசோதா கீழவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். சட்டமன்றக் கீழவையின் அனுமதியின்றி புதிய வரிகளை விதிக்க முடியாது.

3.4.3 நிர்வாகத் துறையின் மீது கட்டுப்பாடுகள்

சட்டமன்றம் நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்துகிறது. அமைச்சரவையானது சட்டமன்றத்திற்குப் பொறுப்பானது. சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டும். அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டால் அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

3.4.4 பரந்த அதிகாரங்கள்

சட்டமன்றம் ஈரவைகளைப் பெற்றிருக்கும் பொழுது மேலவையைக் காட்டிலும் சட்டமன்றக் கீழவை அதிக அதிகாரங்களுடன் விளங்குகிறது. சட்டமன்றப் பேரவை மாநில நிதிநிலையை முற்றிலும் கட்டுப்படுத்துகிறது. மேலவை நிதி சார்ந்த நடவடிக்கையில் வாக்களிக்க முடியாது.

3.5 மாநில நீதித்துறை

3.5.1 உயர் நீதிமன்றங்கள்

1862–ல் உயர் நீதிமன்றங்கள் கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டன. காலப்போக்கில் பிரிட்டிஷ்

10th_Civics_Unit 3_TM.indd 219 07-05-2019 16:56:17

இந்தியாவின் ஒவ்வோர் மாகாணமும் ஓர் உயர் நீதிமன்றத்தைக் கொண்டிருந்தது. 1950–க்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட உயர் நீதிமன்றங்கள் அண்டை மாநிலங்களுக்கும் உயர் நீதிமன்றமாக விளங்கியது. மாநில அளவில் உயர் நீதிமன்றங்களே மிக உயர்ந்த நீதிமன்றங்களாகும். இருப்பினும் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் உயர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.



சென்னை உயர் நீதிமன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் உயர் நீதிமன்றத்தைத் தோற்றுவிக்க வழிவகுக்கிறது. ஆனால் 1956–ஆம் ஆண்டு ஏழாவது திருத்தச்சட்டம், இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களுக்கென்று ஒரு பொதுவான உயர் நீதிமன்றத்தை நிறுவ நாடாளுமன்றத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.

உங்களுக்குத் தெரியுமா?

1862–ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் நாளில் விக்டோரியா மகாராணி வழங்கிய காப்புரிமை கடிதத்தின் மூலம் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மாகாணங்களில் உயர் நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் சென்னை உயர் நீதிமன்ற வளாகம் உலகிலேயே இலண்டனுக்கு அடுத்து இரண்டாவது பெரிய நீதித்துறை வளாகமாகும்.

எடுத்துக்காட்டாக பஞ்சாப், ஹரியானா மற்றும் யூனியன்பிரதேசமான சண்டிகர் ஆகியபகுதிகளுக்குச் சண்டிகரிலுள்ள உயர் நீதிமன்றம் பொதுநீதிமன்றமாக உள்ளது. இதேபோன்று கவுகாத்தியிலுள்ள உயர் நீதிமன்றம் ஏழு வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், நாகலாந்து, மணிப்பூர், மிசோரம், மேகாலயா, திரிபுரா மற்றும் அருணாச்சலப்பிரதேசம் போன்றவைகளுக்கு பொது நீதிமன்றமாக உள்ளது. டெல்லி ஒரு மாநிலமாக இல்லாத போதும் தனக்கென்று சொந்தமாக ஓர் உயர் நீதிமன்றத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நீதிமன்றமும் தலைமை நீதிபதி மற்றும் பல நீதிபதிகளைக் கொண்டுள்ளது. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும். உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை குடியரசுத் தலைவரால் தீர்மானிக்கப்படுகிறது. தற்போது இந்தியாவில் 29 மாநிலங்கள் (2019 ஜனவரியில் தோற்றுவிக்கப்பட்டு அமராவதியில் இயங்கும் ஆந்திரப்பிரதேசத்தின் புதிய உயர் நீதிமன்றத்தையும் சேர்த்து) மற்றும் 7 யூனியன் பிரதேசங்களுக்கும் சேர்த்து 25 உயர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

3.5.2 நீதிபதிகளின் நியமனம்

சட்டப்பிரிவு 216–ன் படி ஒவ்வொரு உயர் நீதிமன்றத்திற்கும், தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளை குடியரசுத் தலைவர் காலத்திற்கேற்றவாறு நியமனம் செய்கிறார்.

3.5.3 உயர் நீதிமன்ற நீதி வரையறை மற்றும் அதிகாரங்கள்

தற்போது உயர் நீதிமன்றம் பின்வரும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

தனக்கேயுரிய நீதிவரையறை

சென்னை, பம்பாய், கல்கத்தா நீதிமன்றங்கள் தங்களுக்கான நீதிவரையறை அதிகாரங்களுடன் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களையும் பெற்றுள்ளன. அதே வேளையில் மற்ற நீதிமன்றங்கள் பெரும்பாலும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களை மட்டுமே பெற்றுள்ளன.

முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள், உயில், திருமணம் சார்ந்த வழக்குகள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் ஆகியவற்றை மட்டும் நேரடியாக விசாரிக்கும் அதிகாரங்களை இவை பெற்றுள்ளன. மாகாண நீதிமன்றங்கள் தன் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ரூபாய் 2000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகை மதிப்புடைய குற்றவியல் வழக்குகளை தனக்கே உரிய நீதிவரையறையை பயன்படுத்தி மாகாண நீதிபதிகள் விசாரிக்க முடியும்.

மேல்முறையீட்டு நீதிவரையறை

உயர் நீதிமன்றங்கள் தங்களிடம் வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் (உரிமையியல், குற்றவியல்) விசாரிக்கின்றன.

நாட்டின் இராணுவ தீர்ப்பாயங்களின் கீழ்வரும் ஆயுதம் சார்ந்த வழக்குகளை விசாரிக்க இவைகளுக்கு அதிகாரம் இல்லை.

பேராணை அதிகாரங்கள்

இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 226, அடிப்படை உரிமைகளுக்காக மட்டுமின்றி மற்ற

10th_Civics_Unit 3_TM.indd 220 07-05-2019 16:56:17

நோக்கங்களுக்காகவும் பேராணைகளை வெளியிடும் அதிகாரங்களை உயர் நீதிமன்றங்களுக்கு வழங்குகிறது.

சட்டப்பிரிவு 32–ன் கீழ் உச்ச நீதிமன்றம் வழங்கும் நீதிப்பேராணைகள், ஆணைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் போன்றே உயர் நீதிமன்றமும் அவைகளை வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.

இந்த சட்டப்பிரிவுகளின் கீழ் நீதிப்பேராணைகளை வெளியிட உயர் நீதிமன்றங்களுக்கு வழங்கிய அதிகாரம் பெரியதாகும். அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் மட்டுமே உச்ச நீதிமன்றம் இவைகளை வெளியிடுகிறது. உயர் நீதிமன்றம் இது போன்ற வழக்குகளில் மட்டுமின்றி சாதாரண சட்டமீறலுக்கும் நீதிப்பேராணைகளை வெளியிட முடியும்.

ஆட்கொணர்வு நீதிப் பேராணை (Habeas Corpus)

தவறாக ஒருவர் காவலில் வைக்கப்பட்டால் நீதிமன்ற காவலில் வைத்த அதிகாரிக்கோ அரசாங்கத்திற்கோ ஆணை வழங்கி காவலில் வைக்கப்பட்டவரை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரச் செய்வதாகும். காவலில் வைக்கப்பட்டது சட்டத்திற்கு புறம்பானது என நிரூபிக்கப்பட்டால் நீதிமன்ற ஆணை மூலம் விடுவிக்கப்படுவார்.

கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)

கீழ் நீதிமன்றங்களுக்கு உயர் நீதிமன்றம் இடும் ஆணை (Mandamus) ஆகும். ஓர் அரசு அலுவலர் அல்லது ஒரு கழகம் அல்லது மற்ற நிறுவனங்கள் பணியை விரைந்து நிறைவேற்றுமாறு கீழ் நீதிமன்றங்களுக்கு உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது. இதனால் தடைப்பட்ட பணிகள் விரைந்து முடிக்கப்படுகின்றன.

தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition)

கீழ் நீதிமன்றங்கள் தனது அதிகார எல்லையைத் தாண்டி செயல்படாமல் இது தடுக்கிறது.

தகுதி வினவும் நீதிப்பேராணை (Quo Warranto)

பொதுப்பதவிக்கு தவறாக வரும் ஒருவரை இது தடுக்கிறது. இதன் படி ஒருவர் அவர் எந்த அடிப்படையில் குறிப்பிட்டப் பதவியை வகிக்கிறார் என்பதை தெளிவுபடுத்திக் கோரும் நீதிப்பேராணை ஆகும்.

ஆவணக் கேட்பு பேராணை (Certiorari)

கீழ் நீதிமன்றங்களிடமிருந்து வழக்கு சம்பந்தமான ஆவணங்கள், ஆதாரங்கள், கோப்புகள் ஆகியவற்றை உயர் நீதிமன்றங்கள் கேட்டுபெறும் ஆணை. இதன்மூலம் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்படுகின்றன.

மேற்பார்வை அதிகாரம்

இராணுவ நீதிமன்றங்களைத் தவிர மற்ற அனைத்து சார்பு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களின் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது.

(அ) கீழ் நீதிமன்றங்களில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை திரும்ப பெறும் அதிகாரம்.

(ஆ) பொதுச் சட்டங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட படிவங்கள் மூலம் பயிற்சி மற்றும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த ஓர் ஆணையை வெளியிடச் செய்தல்.

(இ) பரிந்துரைக்கப்பட்ட முறைகளில் கீழ் நீதிமன்றங்கள் புத்தகங்கள், பதவிகள், கணக்குகளைப் பராமரித்தல்.

(ஈ) ஷெரிப், எழுத்தர்கள், அலுவலர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் ஆகியோருக்கான கட்டணத்தைச் செலுத்துதல் போன்றவை குறித்துத் தீர்மானித்தல்.

கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்துதல்

உயர் நீதிமன்றம் கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தவும் மேலும் மற்ற அதிகாரங்களையும் பெற்றுள்ளன.

(அ) மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு குறித்து ஆளுநரால் ஆலோசிக்கப்படுகிறது. மாவட்ட நீதிபதிகளைத் தவிர, மற்ற நீதிப்பணிகளுக்கு நியமனம் செய்வது குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பதவி, நியமனம், பதவி உயர்வு, விடுமுறை, இடமாற்றம் மற்றும் ஒழுங்கு குறித்து விவரிக்கிறது (மாவட்ட நீதிபதிகள் நீங்கலாக).

(இ) சார் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கினை உயர் நீதிமன்றம் விசாரித்து கணிசமான கேள்விகளைக் கேட்டு குறுக்கு விசாரணை செய்வதால் வழக்கு தாமாகவே முடிவுக்கு வரும் அல்லது வழக்கின் தீர்ப்புடன் மீண்டும் சார் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும்.

(ஈ) உச்ச நீதிமன்றம் இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துவது போல் உயர் நீதிமன்றம் சார் நிலை நீதிமன்றங்களை தனது ஆணையினால் கட்டுப்படுத்துகின்றது.

ஆவணங்களின் பாதுகாப்புப் பெட்டகம்

உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து முடிவுகள் மற்றும் தீர்ப்புகள் அச்சடிக்கப்பட்டு சான்றாதாரமாக பாதுகாக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் எழும் கேள்விகளுக்கு தீர்வாக கடந்த கால தீர்ப்புகள் உதவுகின்றன. இதனால் உயர் நீதிமன்றம் பதிவேடுகளின் நீதிமன்றமாக செயல்படுகிறது.

நீதிப்புனராய்வு அதிகாரம்

நீதிப்புனராய்வுஎன்பதுமத்திய–மாநிலஅரசுகள் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புக்கு உட்பட்டதா

10th_Civics_Unit 3_TM.indd 221 07-05-2019 16:56:17

அல்லது முரண்பட்டதா என்பதை ஆராய உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட ஒர் அதிகாரமாகும். நீதிப்புனராய்வு என்ற சொல் இருப்பினும் அரசியலமைப்பில் பயன்படுத்தப்படவில்லை. 226 மற்றும் 227–வது சட்டப்பிரிவுகள் உயர் நீதிமன்றத்தின் நீதிப்புனராய்வு அதிகாரம் பற்றி வெளிப்படையாக கூறுகிறது.

1976 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 42 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் உயர் நீதிமன்ற நீதிப்புனராய்வு அதிகாரத்தைக் குறைத்தது மற்றும் தடை செய்தது. இருப்பினும் 1977 ஆம் ஆண்டு 43 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் மீண்டும் உயர் நீதிமன்றத்திற்கு நீதிப்புனராய்வு அதிகாரத்தை வழங்கியது.



சென்னை உயர் நீதிமன்றத்தில்
சம நீதி கண்ட சோழன் சிலை

பாடச்சுருக்கம்

- மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்பு தலைவர் ஆளுநர் ஆவார்.
- ஆளுநரால் முதலமைச்சர் நியமிக்கப்படுகிறார்.
- மாநில சட்டமன்றத்திற்கு அமைச்சரவை கூட்டுப் பொறுப்பானது.
- சட்டமன்றம் மாநிலத்தின் உண்மையான அதிகார மையமாகும்.
- தற்போது 29 மாநிலங்கள் மற்றும் 7 (6 + 1) யூனியன் பிரதேசங்களுக்கு 25 உயர் நீதிமன்றங்கள் உள்ளன.
- 1976 ஆம் ஆண்டு 42 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் உயர் நீதிமன்றத்தின் நீதிப்புனராய்வு அதிகாரத்தைக் குறைத்தது.
- 1977 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 43 வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் மீண்டும் உயர் நீதிமன்றத்திற்கு நீதிப்புனராய்வு அதிகாரத்தை வழங்கியது.

A-Z கலைச்சொற்கள்

அரசியலமைப்பு	**Constitution**	it has been defined as the fundamental law of a State.
அமைச்சரவை	**Cabinet**	it is an inner body within the Council of Ministers which is responsible for formulating the policy of the Government.
சட்டமன்றம்	**Legislature**	the group of people in a country or part of a country who have the power to make and change laws
தீர்ப்பாயம்	**Tribunal**	a special court chosen, especially by the government, to examine particular problem
தீர்மானம்	**Resolution**	an official decision that is made after a group or organisation has voted
ஊதியம்	**Remuneration**	payment for work or service
விளக்கம்	**Interpretation**	an explanation or opinion of what something means

10th_Civics_Unit 3_TM.indd 222 07-05-2019 16:56:18

மதிப்பீடு

J5DRW7

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. மாநில ஆளுநரை நியமிப்பவர்.
   (அ) பிரதமர்
   (ஆ) முதலமைச்சர்
   (இ) குடியரசுத் தலைவர்
   (ஈ) தலைமை நீதிபதி

2. மாநில சபாநாயகர் ஒரு _____
   (அ) மாநிலத் தலைவர்
   (ஆ) அரசின் தலைவர்
   (இ) குடியரசுத் தலைவரின் முகவர்
   (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

3. கீழ்க்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரமல்ல.
   (அ) சட்டமன்றம் (ஆ) நிர்வாகம்
   (இ) நீதித்துறை (ஈ) தூதரகம்

4. ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரிலிருந்து ஒரு பிரதிநிதியை சட்டமன்றத்திற்கு யார் நியமிக்கிறார்?
   (அ) குடியரசுத் தலைவர் (ஆ) ஆளுநர்
   (இ) முதலமைச்சர் (ஈ) சட்டமன்ற சபாநாயகர்

5. ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை?
   (அ) முதலமைச்சர்
   (ஆ) அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் தலைவர்
   (இ) மாநில தலைமை வழக்குரைஞர்
   (ஈ) உயர் நீதிமன்ற நீதிபதிகள்

6. மாநில முதலமைச்சரை நியமிப்பவர்.
   (அ) சட்டமன்றம்
   (ஆ) ஆளுநர்
   (இ) குடியரசுத் தலைவர்
   (ஈ) சட்டமன்ற சபாநாயகர்

7. அமைச்சரவையின் தலைவர்.
   (அ) முதலமைச்சர் (ஆ) ஆளுநர்
   (இ) சபாநாயகர் (ஈ) பிரதம அமைச்சர்

8. சட்ட மேலவை என்பது
   (அ) 5 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது
   (ஆ) 6 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது
   (இ) நிரந்தர அவை ஆகும்
   (ஈ) 4 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது

9. மேலவை உறுப்பினராவதற்கு குறைந்த பட்ச வயது
   (அ) 25 வயது (ஆ) 21 வயது
   (இ) 30 வயது (ஈ) 35 வயது

10. மேலவை உறுப்பினர்கள்
   (அ) சட்டமன்ற கீழவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
   (ஆ) பொதுவாக நியமிக்கப்படுவார்கள்
   (இ) உள்ளாட்சி அமைப்புகள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிறரால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்
   (ஈ) மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

11. கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?
   (அ) ஆந்திரப் பிரதேசம்
   (ஆ) தெலுங்கானா
   (இ) தமிழ்நாடு
   (ஈ) உத்திரப் பிரதேசம்

12. இந்தியாவில் முதன்முதலில் உயர் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்
   (அ) கல்கத்தா, பம்பாய், சென்னை
   (ஆ) டெல்லி மற்றும் கல்கத்தா
   (இ) டெல்லி, கல்கத்தா, சென்னை
   (ஈ) கல்கத்தா, சென்னை, டெல்லி

13. கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர் நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன?
   (அ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்
   (ஆ) கேரளா மற்றும் தெலுங்கானா
   (இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா
   (ஈ) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ஆளுநர் தனது இராஜினாமா கடிதத்தை _____ இடம் கொடுக்கிறார்.
2. சட்டமன்ற உறுப்பினர்கள் (MLAs) _____ ஆல் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்
3. _____ தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் ஆவார்.
4. _____ மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்.
5. ஏழாவது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் _____ இரண்டு அல்லது மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவான உயர் நீதிமன்றத்தை அமைக்க நாடாளுமன்றத்திற்கு அங்கீகாரம் அளித்தது.
6. அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் _____ ஆல் மட்டுமே பணிநீக்கம் செய்ய முடியும்.

10th_Civics_Unit 3_TM.indd 223 07-05-2019 16:56:18

III. பொருத்துக

1. ஆளுநர் – அரசாங்கத்தின் தலைவர்
2. முதலமைச்சர் – மாநில அரசின் தலைவர்
3. அமைச்சரவை – தீர்ப்பாயங்கள்
4. மேலவை உறுப்பினர் – சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள்
5. ஆயுதப் படையினர் – மாணியங்களுக்கு வாக்களிக்க முடியாது.

IV. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

1. (i) இந்தியாவில் சில மாநிலங்கள் மட்டும் சட்ட மேலவையைப் பெற்றுள்ளன.
   (ii) மேலவையின் சில உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.
   (iii) மேலவையின் சில உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
   (அ) ii & iv சரி
   (ஆ) iii & iv சரி
   (இ) i & iv சரி
   (ஈ) i, ii & iii சரி
2. **கூற்று:** (A) மாநில சட்டமன்றத்திற்கு சட்ட அதிகார வரம்பு உண்டு
   காரணம்: (R) குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் மட்டுமே மாநிலப் பட்டியலிலுள்ள சில மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யலாம்.
   (அ) (A) தவறு ஆனால் (R) சரி
   (ஆ) (A) சரி ஆனால் (R) தவறு
   (இ) (A) மற்றும் (R) சரி மேலும் (R) (A) வுக்கான சரியான விளக்கமாகும்
   (ஈ) (A) மற்றும் (R) சரி மேலும் (R), (A) வுக்கான சரியான விளக்கமல்ல

V சுருக்கமாக விடையளி

1. இந்திய மாநிலங்களிலிருந்து ஜம்மு – காஷ்மீர் எவ்வாறு வேறுபடுகிறது?
2. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் என்ன?
3. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் என்ன?
4. உயர் நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?
5. உயர் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்கள் பற்றி நீ புரிந்து கொண்டதென்ன?

VI விரிவான விடையளி

1. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
2. ஆளுநரின் பல்வேறு அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
3. சட்டமன்றத்தின் பணிகளை சுருக்கமாக விவாதிக்க.
4. அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை ஆய்க.
5. உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

VII செயல்திட்டம் மற்றும் செயல்பாடு

1. மாநில அரசாங்கத்தின் நிர்வாக முறையை விளக்கும் ஒரு விளக்கப்படம் (Flow chart) தயார் செய்க.
2. அண்டை மாநிலங்களின் முதலமைச்சர்கள் ஆளுநர்கள் பெயர்ப் பட்டியலோடு தமிழ்நாட்டின் முதலமைச்சர், ஆளுநர், அமைச்சர்களின் பெயரினைப் பட்டியலிடுக.



மேற்கோள் நூல்கள்

1. D.D. Basu - Introduction of the Constitution of India, S.C. Sarkar & Sons (Private) Ltd, 1982.
2. Subhash Kashyap - Our Constitution, National Book Trust, India, 2011.



இணையதள வளங்கள்

1. www.tnrajbhavan.gov.in
2. www.tn.gov.in
3. www.hcmadras.tn.nic.in



இணையச் செயல்பாடு

B373_10_SOCIAL_TM

செயல்முறை

- கீழ்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்லவும்.
- மாநிலத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தையும் அதன் செயல்பாட்டையும் பார்வையிட இந்திய வரைபடத்தின் ஏதேனும் ஒரு மாநிலத்தை சொடுக்கச் செய்யவும்.
- எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு மாநிலத்தில் சொடுக்கவும். அதில் தமிழ்நாட்டின் அதிகாரப்பூர்வ வலைதளத்தை காணலாம்.
- அதேபோல் பிறமாநிலங்களின் விவரங்களை நீங்கள் பார்க்கலாம்.நிகழ்வுகளைப் பற்றி விளக்கமாக தெரிந்துகொள்ள திரையில் தோன்றும் வரைபடத்தில் எதேனும் ஒரு இடத்தினை தேர்ந்தெடுக்கவும் .

உரலி: https://www.mea.gov.in/india-at-glance.htm

10th_Civics_Unit 3_TM.indd 224 07-05-2019 16:56:19

அலகு 3

அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் பகுதி–I



3.1 இறையாண்மை

அறிமுகம்

3.1.1. இறையாண்மையை பற்றி நாம் விவாதிப்போம்

நீங்கள் அதிகாரம் படைத்தவரா? நீங்கள் அதிகாரம் படைத்தவர் என்பது எவ்வாறு தெரியும்? ஆனால் நீங்கள் உங்களுடைய நாடு அதிகாரம் வாய்ந்தது என்று கூறலாம். இது எப்படி என்று தெரியுமா? எவ்வாறு என்றால் நம் நாடு ஒரு இறையாண்மை மிக்க தேசமாக விளங்குகிறது.

ஒரு நாடு தன்னிச்சையாக, தன் மக்களை கட்டுப்படுத்தி பாதுகாக்கும்போது இறையாண்மையைப் பெற்றிருப்பதாக கருதப்படுகிறது. அவ்வாறு செயல்படும்போது, அந்நாட்டினை அதிகாரம் வாய்ந்ததாகவும், சுயசார்புள்ளதாகவும் ஏனைய நாடுகள் அங்கீகரிக்கின்றன. இறையாண்மை என்பது **"சூப்பரானஸ்"**(*superanus*) *என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து தோன்றியதாகும். இது ஆங்கிலத்தில் மிக உயர்ந்த அல்லது மேலான என்றும் பொருள்படுகிறது.*

ரோமானிய நீதிபதிகளும், மக்களும் இடைக்காலத்தில் இறையாண்மையை **"சம்மா பொடெஸ்டாஸ்"**(*Summa Potestas*): *என்றும்* **"ப்ளெனிடியூட் பொடெஸ்டாஸ்"**(*Plenitude Potestas*) *என்றும் வார்த்தைகளை பயன்படுத்தி, அரசின் மேலான தன்மையை பெயரிட்டு அழைத்தனர். அரசியல் அறிவியலில் "இறையாண்மை" என்ற சொல் போடின் என்ற அறிஞர் எழுதி 1576-ல் வெளியான குடியரசு என்ற நூலில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டது. ஒரு நாட்டின் உறுதித்தன்மை, அந்நாட்டின் இறையாண்மையை அடிப்படையாக கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. இறையாண்மை என்ற கருத்தாக்கம் அரசின் மேலான தன்மையை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.*

அரசமைப்பு என்பது அரசு தொடர்பான சட்டங்களையும், விதிகளையும் எடுத்துரைக்கிறது. மேலும் அரசமைப்பு என்பது அரசின் இறையாண்மையை பிரதிநிதித்துவபடுத்துவதாகும். இந்திய அரசமைப்பின் முகவுரையில் கூறப்பட்டதுபோல, இறையாண்மை என்றால், அரசு எந்த துறை சார்ந்த சட்டத்தினை

9MZ1N9



கற்றலின் நோக்கங்கள்

- இறையாண்மை என்பதன் பொருள் மற்றும் பண்புகள்
- இறையாண்மையின் வகைகள் மற்றும் அம்சங்கள்
- பன்மைவாதத்தின் பொருள், மற்றும் தோற்றம்

உருவாக்கினாலும் அது அரசமைப்பின் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

இறையாண்மை என்றால் என்ன?

"இறையாண்மை என்பது ஒட்டுமொத்த, மற்றும் தடையில்லாத அரசின் அதிகாரமாகும். மேலும் அதீத கட்டளைத்தன்மை உடையதாகவும் காணப்படுகிறது".

– ஜீன் போடின் (*Jean Bodin*)

3.1.2 இறையாண்மையின் பண்பியல்புகளை பற்றி நாம் படிப்போம் அவைகள் யாவை?

(அ) நிரந்தரமானது (Permanence)

இறையாண்மையின் முக்கிய பண்பாக அதன் நிரந்தரத்தன்மை திகழ்கிறது. அரசு இயங்கும் வரை இறையாண்மை நீடிக்கிறது. மன்னர் இறப்பதாலும், அரசாங்கம் செயல் இழந்து போவதாலும் இறையாண்மை பாதிக்கப்படுவதில்லை. இதன் எதிரொலியாகவே, "மன்னர் இறந்துவிட்டார், ஆனாலும் அரசபீடம் நீண்டு வாழ்க" என்று இங்கிலாந்து குடிமக்கள் கூறுகின்றார்கள்.

(ஆ) பிரத்தியோகமானது (Exclusiveness)

ஒர் சுதந்திர அரசில், இரண்டு இறையாண்மைகள் இயங்காது, அப்படி இருக்குமேயானால் அரசின் ஒற்றுமையானது சீர்குலைந்துவிடும்.

(இ) அனைத்தையும் முழுமையாக உள்ளடக்கியது (All comprehensiveness)

ஒவ்வொரு தனிமனிதனும் மற்றும் தனிமனிதர்கள் அங்கம் வகிக்கக்கூடிய குழுமமும் அரசின் இறையாண்மைக்கு உட்பட்டதாகும். குழுமங்கள் அல்லது சங்கங்கள் அதிக வலிமை வாய்ந்ததாக இருந்தாலும், பணம் படைத்ததாக இயங்கினாலும் இறையாண்மையின் அதிகாரத்தை தடுக்கவோ அல்லது அதற்கு கீழ்படியாமலோ இருக்க முடியாது.

(ஈ) மாற்றித்தர இயலாதது (Inalienability)

இறையாண்மை என்பது அரசின் உயிர் மற்றும் ஆன்மாவாக விளங்குகிறது. இது அரசை அழிக்காமல் இறையாண்மையை மாற்றித்தர முடியாததாக விளங்குகிறது.

(உ) ஒற்றுமை மற்றும் எக்காலத்திலும் நீடித்திருக்கும் தன்மை (Unity and Everlasting)

இறையாண்மையின் தனித்தன்மை அதன் ஒற்றுமையில் ஒன்றியுள்ளது. இறையாண்மை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் செயல்படுவதில்லை. மாறாக அது அரசு இயங்கும் வரை நீடித்திருக்கும் அழியாததன்மை கொண்டதாகும்.

(ஊ) பிரிக்கமுடியாதது (Indivisibility)

இறையாண்மை என்பது பிரிக்க முடியாத தன்மையைக் கொண்டதாகும். இத்தன்மையே இறையாண்மையின் உயிரோட்டமாக விளங்குகிறது.

(எ) முழுமைத்தன்மை (Absoluteness)

இறையாண்மை என்பது நிபந்தனையற்றதாகவும், அளவிட முடியாததுமாக விளங்குகிறது. மேலும் இது கீழ்பணிதலுக்கு அப்பாற்பட்டது. தான் விரும்பிய எதையும் சாதிக்க கூடியதாக விளங்குகிறது.

(ஏ) சுயமானத்தன்மை (Originality)

இறையாண்மை தனது அதிகாரத்தினை சுய உரிமையினை மையமாகக் கொண்டு பெற்றிருக்கிறதே தவிர, யாருடைய தயவிலும் அல்ல.

3.1.3 இறையாண்மையின் இரண்டு அம்சங்கள் யாவை?

(அ) உட்புற இறையாண்மை (Internal Sovereignty)

ஒவ்வொரு சுதந்திர அரசிலும் ஓர் மக்கள் சபையானது கட்டளையிடுவதற்கும், கீழ்பணிதலை செயலாற்றுவதற்குமான முழு சட்ட அதிகாரத்தையும் பெற்று காணப்படுகிறது. இவ்வகையான இறையாண்மை, ஓர் அரசுக்கு உட்பட்டு வாழும் அனைத்து தனிமனிதர்கள் அல்லது அவர்கள் சார்ந்த அனைத்து சங்கங்களையும் கட்டுப்படுத்துவதற்குரிய முழு அதிகாரத்தையும் பெற்றுள்ளது.

(ஆ) வெளிப்புற இறையாண்மை (External Sovereignty)

எளிமையாக கூறவேண்டுமெனில் வெளிப்புற இறையாண்மை என்பது தேசிய விடுதலையாகும். அனைத்து நாடுகளும் தங்கள் வெளியுறவு கொள்கையை நிர்ணயிப்பதற்கும், அதிகாரம் படைத்த கூட்டணியோடு இணைவதற்கும் முழு அதிகாரம் பெற்று செயல்படுகின்றன. ஒவ்வொரு அரசும் ஏனைய அரசுகளை சாராமல் சுதந்திரமாக இயங்குவது வெளிப்புற இறையாண்மை எனப்படும்.

உங்களுக்குத் தெரியுமா?

ஓர் மரமானது தான் முளை விடுவதை மாற்றித்தர முடியாததைப் போன்று இறையாண்மையையும் மாற்றித்தர இயலாது. இது ஓர் மனிதன் தன்னை அழித்துக் கொள்ளாமல் தனது உயிர் அல்லது ஆளுமையை மாற்றித் தர இயலாததைப் போன்றதாகும்.

–லைபர் (*Lieber*)

குறிப்பிடத்தக்க மேற்கோள்

மக்கள் இறையாண்மை எனப்படுவது பெரும்பான்மை வாக்காளர்களின் அதிகாரமாகும். மேலும் இவ்வகை அதிகாரமானது, தோராயமாக, உலகளாவிய வாக்குரிமை செயல்படக்கூடிய நாட்டில் வாக்காளர்கள் பல்வேறு நிறுவப்பட்ட வழிமுறைகளின் வாயிலாக வெளிப்படுத்தும் விருப்பமாகும்.

– முனைவர் கார்னர் (*Dr. Garner*)

3.1.4 இறையாண்மையின் வகைகள்


"நடைமுறை மற்றும் சட்டப்படியான இறையாண்மை"

நடைமுறை இறையாண்மை (De-facto sovereignty)

இவ்வகை இறையாண்மை சட்ட பூர்வமாக இல்லாது, உண்மையான அதிகாரத்தை பெற்று சட்டத்தை நிறைவேற்றும் இறையாண்மையாகும்.

சட்டப்படியான இறையாண்மை (De-jure sovereignty)

இவ்வகை இறையாண்மை உண்மையாக நடைமுறையில் இல்லாது, சட்டபூர்வமாக மட்டுமே காணப்படுவதாகும்.



இறையாண்மையின் வகைகளை படித்திருக்கிறீர்களா? நாம் அனைவரும் தெரிந்துகொள்வோம்.

பெயரளவு மற்றும் உண்மையான இறையாண்மை	சட்ட இறையாண்மை	அரசியல் இறையாண்மை	மக்கள் இறையாண்மை
அ) ஆதிகாலத்தில் பல அரசுகளில் முடியாட்சியே இருந்தது. மன்னர்கள் உண்மையான இறையாண்மையைப் பெற்று ஆண்டு வந்தனர்	அரசின் அதிகாரத்துவமானது இறுதிக் கட்டளைகளை வெளியிட சட்டப்படியான அதிகாரம் உண்டு.	பிரநிதித்துவ மக்களாட்சியில் அரசியல் இறையாண்மை என்பது ஒட்டுமொத்த மக்களையும் குறிப்பதாகும். அதாவது வாக்காளர் முறைமை மற்றும் பொதுக் கருத்தாகும்.	மக்கள் இறையாண்மை என்பது பொது மக்களை மேலான தன்மையுடையவர்களாக பாவிக்கின்றது
ஆ) பிரெஞ்சு புரட்சி (1789) முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வந்த ஒரு வரலாற்று நிகழ்வாகும். இந்த புரட்சி அச்சூழ்நிலையை மாற்றியமைத்தது.	சட்ட அதிகாரத்துவம் படைத்தவர்கள் மூலம் சட்டத்தை நிறைவேற்றி செயல்படுத்துவதால் இது சட்ட இறையாண்மை ஆகும்.	அரசியல் இறையாண்மை என்பது பொது மக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் பெற்ற வர்க்கத்தை குறிப்பதாகும்.	ஆதிகாலங்களில் மக்கள் இறையாண்மையானது, முடியாட்சியின் ஏதேச்சதிகாரத்தை எதிர்க்கும் ஆயுதமாக விளங்கியது.
இ) மன்னர் பெயரளவிலும், மந்திரிசபை உண்மையான இறையாண்மையையும் பெற்றிருந்தது.	சட்ட இறையாண்மை எப்போதும் உறுதியாகவும், ஆற்றல் படைத்ததாகவும் இருப்பதுடன் இறையாண்மையாளரின் அதிகாரம் முழுமையாகவும் மேலானதாகவும் விளங்குகிறது.		

இங்கே ஒரு சுவாரசியமான தகவல்!

இயக்குனரகமுறை ஆட்சியமைப்பினை தூக்கி எறிந்த பின்னர், நெப்போலியன் உண்மையான நடைமுறை இறையாண்மையை (De-facto) பெற்று விளங்கினார். ஸ்பெயினில், சட்ட இறையாண்மையை வேரோடு கலைத்து, ப்ராங்கோ நடைமுறை இறையாண்மையை (De-facto) கையகப்படுத்தினார். அப்டோபர் 28, 1922-இல் நடந்த கறுப்புச்சட்டை புரட்சிக்கு பின்னர், முசோலினி சட்டப்பூர்வமான பிரதம அமைச்சராக அதிகாரம் பெற்றார். இவர் நாடாளுமன்றத்தை கைப்பற்றி அதன் மூலம் இத்தாலியை ஆட்சி செய்தார். நாடாளுமன்றம் சட்ட இறையாண்மையையும், முசோலினி நடைமுறை இறையாண்மையையும் (De-facto) பெற்று ஆட்சி அரங்கேறியது. மேலும் **ஹிட்லரும்,** ஜெர்மனியில் இச்செயல்பாட்டையே பின்பற்றினார். இவர் சட்ட இறையாண்மையை கையகப்படுத்தியதுடன் மட்டுமல்லாது, நடைமுறை இறையாண்மையைப் (De-facto) பெற்று ஆட்சி செய்தார்.

மூன்று தசாப்தங்களாக ஸ்டாலின் ஐக்கிய சோவியத் சமதர்மக் குடியரசின், உண்மையான இறையாண்மையை பெற்று ஆட்சி செய்தார். பாகிஸ்தானில், 'ஐயூப்', ராணுவத்தின் மூலம் ஆட்சியைப் பிடித்து (De-facto) நடைமுறை இறையாண்மையை பெற்றார்.

1977-இல் ஜியா-உல்-ஹக், பூட்டோவின் ஆட்சியைக் கவிழ்த்து நடைமுறை இறையாண்மையை (De-facto) முதலிலும், பின்னர் சட்டப்படியான இறையாண்மையையும் (De-jure) பெற்று ஆட்சி செய்தார். சோவியத் நாட்டில் பொதுவுடைமை அரசாங்கத்தின் மூலம் நடைமுறை அரசாங்கம் (De-facto) போல்ஷிவிக் புரட்சிக்கு பின்னர் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. 1917-ஆம் ஆண்டு போல்ஷிவிக் புரட்சிக்குப் பிறகு நாளடைவில் மாற்றம் அடைந்து சட்டப்படியான அரசாங்கமாக (De-jure) ஆனது.

3.1.5 பன்மைவாதம் என்றால் என்ன?

பன்மைவாதம் என்பது ஒருமைவாத இறையாண்மைக் கோட்பாட்டை எதிர்த்து உருவான வலிமை வாய்ந்த இயக்கமாகும். இவ்வகை இறையாண்மை அரசினுடைய மேலான மற்றும் அளவில்லாத அதிகாரத்திற்கு வகை செய்கின்றது. ஓட்டோ வீ.கீர்க் (Otto V. Gierke) அவர்களின் படைப்புகளின் மூலமாக பன்மைவாத கோட்பாடு பிரபலமடைந்தது. சமூகம் அரசைப்போல பல கூட்டமைப்புகளை பெற்று விளங்குகிறது. அரசு என்பது சமூகத்தின் பல்வேறு கூட்டமைப்புகளில் ஒன்றாகும். அரசு இறையாண்மையை குறிப்பிட்ட சமுதாயத்திற்கென வகை செய்ய முடியாது. இதன் வெளிப்பாடாக, அரசிற்கு இறையாண்மை அதிகாரம் இயல்பாகவே இல்லாமல் காணப்படுகிறது, என்று பன்மைவாதத்தினர் சவால்விடுகின்றனர்.

அரசிற்கு முன்னரே, பல சமூக, அரசியல், பண்பாடு மற்றும் பொருளாதாரம் சார்ந்த அமைப்புகள், சமுதாயத்தில் அங்கம் வகித்து இருக்கின்றன. உதாரணத்திற்கு குடும்பம் மற்றும் தேவாலயங்கள் அரசு தோன்றுவதற்கு முன்பே செயல்பட்டு வந்தன.

பன்மைவாதக் கோட்பாட்டின் சிந்தனையாளர்கள்

- ஹெரால்ட் ஜெ. லாஸ்கி (Herold J. Laski)
- ஜெ.என்.பிக்கீஸ் (J.N. Figgis)
- எர்னஸ்ட் பார்க்கர் (Ernest Barker)
- ஜி.டி.ஹெச்.கோல் (G.D.H.Cole)
- மேக் ஐவர் (Mac Iver)



பன்மைவாதக் கோட்பாடு

ஒரு அரசின் தன்மை என்பது பல்வேறு குழுக்களிடையே உருவாகும் முரண்பாடுகள் மற்றும் சச்சரவுகள் போன்றவற்றை அவைகளின் நலனை சிறப்பாக பாதுகாப்பதன் அடிப்படையிலேயே தீர்த்து வைப்பதாகும்.

பன்மைவாதக் கோட்பாட்டின் தோற்றம்

மக்களாட்சியில் ஆட்சியாளர்களின் அதிகாரம் வரையறைக்கு உட்பட்டது ஆகும். அமைச்சரவை அதிகாரம் வாய்ந்ததாக செயல்பட்டாலும், அரசே மேலானதாகவும், இறையாண்மை மிக்கதாகவும் விளங்குகிறது. மக்கள் நலஅரசுகளின் தோற்றத்திற்கு பிறகு, அரசின் செயல்பாடுகள் தனி மனிதர்களின் வாழ்வில் அனைத்து பரிமாணங்களிலும் வியாபித்து இருக்கிறது.

இவ்வாறான மக்கள் நல அரசானது, மக்களின் தேவைகளை நிறைவேற்றாத போது, புரட்சிகளையும், எதிர்நடவடிக்கைகளையும் சந்தித்து இருக்கிறது. இப்படிப்பட்ட எதிர்வினை என்பது மேலான மற்றும் இறையாண்மை மிக்க அரசுக்கு எதிராகத் தோன்றியதால் புரட்சி ஏற்பட்டு அதன் விளைவாகப் பன்மைவாதம் மலர்ந்தது.

ஜான் ஆஸ்டினின் இறையாண்மை கோட்பாடு



கோட்பாட்டின் மறு பெயர்கள்

- முழுமை இறையாண்மை கோட்பாடு
- ஒருமைவாத இறையாண்மை கோட்பாடு
- பன்மைத்துவமில்லாத கோட்பாடு
- ஒற்றைக்கோட்பாடு

பன்மைவாதம் முக்கியமானதா?

- பன்மைவாதம் என்பது, கூட்டமைப்புகளின் முக்கியத்துவத்தையும், அதன் சுயாட்சி கோரிக்கையையும் தாங்கி நிற்கிறது.
- மக்களாட்சி மலர வேண்டுமெனில், இறையாண்மை மிக்க அரசானது சட்ட அதிகாரத்துவத்திற்கு கட்டுப்படாததாக இருத்தல் அவசியமாகும்.
- இறையாண்மையில் ஏற்படும் பிரிவினைகள் என்பது அதன் அழிவுக்கு வழிவகுப்பது உறுதியாகிறது. இறையாண்மை இல்லாத தருணத்தில் சமுதாயத்தில் அமைப்பெதிர்வாத சூழலே இருக்கும்.

பன்மைவாதத்தின் மீதான குற்றச்சாட்டுகள் யாவை?

- இறையாண்மை மிக்க அரசு ஒற்றுமையை ஏற்படுத்தி, சமுதாயத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்து கூட்டமைப்புகளையும் ஒன்றுபடுத்தி ஒழுங்குமுறைப்படுத்துகிறது.
- பன்மைவாத நம்பிக்கைக்கு ஒவ்வாததாக அரசே சட்டங்களை இயற்றுகிறது.
- கூட்டமைப்புகளின் எண்ணிக்கை மிகுதியாக அதிகரிக்கும் பட்சத்தில், மக்களை பாதுகாப்பதற்கு அரசின் தேவை இன்றியமையாததாகிறது.

இந்திய அரசமைப்பு மற்றும் இறையாண்மை

இந்திய அரசமைப்பின் முகவுரையின் படி இந்தியா ஒரு "இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசாக" திகழ்கிறது. ஆனால் இதுவே இறையாண்மையின் விளக்கம் அல்லது விரிவான பொருள் விளக்கம் ஆகாது. இறையாண்மை தொடர்பான விளக்கங்கள், பல்வேறு உச்ச நீதிமன்ற தீர்ப்புகளில் காணப்படுகிறது. உதாரணத்திற்கு கோபாலன் *Vs* மதராஸ் அரசு(*1950*), மற்றும் இந்திய யூனியன் *Vs* மதனகோபால் (*1954*), வழக்குகளில் தீர்ப்பானது பின்வருமாறு கூறப்பட்டு உள்ளது.

"அரசமைப்பு சட்டத்தின் முகவுரையில், குறிப்பிட்டுள்ளபடி "இந்திய மக்களாகிய நாங்கள் ஏற்றுக்கொண்ட இறுதியான இறையாண்மை மக்களிடமே உள்ளதுடன் அரசமைப்பும் மக்களுக்கானதாகும்" என கூறியது. மேலும் சின்தெடிக்ஸ் *Vs* உத்திரப்பிரதேச அரசு (*1990*) வழக்கில், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி இறையாண்மையின் பொருள் என்பது, "அரசிற்கு எந்த பட்டியலில் வேண்டுமென்றாலும் சட்டம் இயற்றக்கூடிய அதிகாரம் இருப்பதாகவும், ஆனால் அரசமைப்பின் வரையரைக்கு உட்பட்டே இது அமையும்" என கூறியுள்ளது.

இதுபோல, இந்திராகாந்தி *Vs* ராஜ்நாராயணன்(*1975*) வழக்கில், "இந்தியா என்பது, இறையாண்மை பொருந்திய, மக்களாட்சிக் குடியரசு என்றும், இதுவே அடிப்படைப் கூறாக அரசமைப்பின்படி காணப்படுகிறது" என்றும் கூறியுள்ளது. மேற்கூறியவற்றின் மூலம், இந்திய அரசமைப்பின்படி இறையாண்மை என்பது அரசமைப்பின் முக்கிய அம்சமாக விளங்குவதுடன் முகப்புரையின் மூலமாக மக்களே இறையாண்மை மிக்கவர்கள் என்பது தெரியவருகிறது.

சுருங்கக்கூறின், இறையாண்மை என்பது அரசமைப்பைச் சார்ந்துள்ளது. மக்களே அத்தகைய அரசமைப்பின் இறுதி ஆதாரமாக விளங்குகின்றனர்.

செயல்பாடு



பன்மைவாதத்தின் மேம்பாட்டிற்கான காரணங்களை உங்களால் கூற முடியுமா?

குறிப்பிடத்தக்க மேற்கோள்

பன்மைவாதத்தின் அருமைகளை ஜெர்மன் நீதிபதியான வான் கிரிய்க்கின் (Von Gierke) 1844–1921–காலத்திற்குட்பட்ட படைப்புகளில் காணலாம்.

– ஆர்.என். கில்கிரிஸ்ட் (R.N. Gilchrist)

பயிற்சி

வகைகள்	இதன் பொருள் விளக்கம் என்ன?	இது எங்கு காணப்படுகிறது?	இது எங்கிருந்து பெறப்பட்டது?
பெயரளவு இறையாண்மை			
உண்மையான இறையாண்மை			
மக்கள் இறையாண்மை			
நடைமுறை இறையாண்மை			
சட்டப்படியான இறையாண்மை			
அரசியல் இறையாண்மை			

3.2 சமத்துவம்

அறிமுகம்

சமத்துவத்தினை புரிந்து கொள்ளுதல்

மனிதர்கள் அனைவரும் சமம் என்ற கருத்து இன்று வரை புரியாத புதிராகவே விளங்குகிறது. சமத்துவத்தை விரும்புகின்ற நாடானது சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சட்டங்களை உருவாக்குகிறது. வளர்ந்த நாடனாலும், வளர்ச்சிகுன்றிய நாடானாலும், சமத்துவம்தொடர்பானசட்டம்போதுமானதாக இல்லை. பன்மைத்துவ சமுதாயம் நிலைநாட்டப்பட்டுவிட்டதால் சமத்துவ சட்டம் அதிகமாக எதிர்க்கப்படுகிறது. அரசியல் கோட்பாட்டில் அமைந்துள்ள சுதந்திரம் மற்றும் உரிமைகள் என்ற கொள்கைகள் சமத்துவம் என்ற மூன்றாவது கொள்கை அமைவதற்கு காரணமாக உள்ளன. உரிமைகள் என்பவை குடிமக்களுக்கும், மக்கள் குழுமங்களுக்கும் அரசால் விநியோகம் செய்யப்படுவதை சமத்துவ கொள்கையே நிர்ணயிக்கிறது.

ஒரு நாட்டின் மக்களுக்கு உரிமைகள் சரிசமமாக வழங்கப்பட்டாலும், அல்லது ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும், அதனை நிர்ணயிக்கும் காரணியாக சமத்துவமே செயல்படுகிறது. எந்த அடிப்படையில் அரசு அல்லது பொது அதிகாரத்துவம் குடிமக்களையும், தனிமனிதர்களையும், மக்கள் குழுமங்களையும் வெவ்வேறு விதமாக நடத்துகிறது? சமத்துவத்தைப் பற்றி அலசுகிற போது, வெவ்வேறு கால கட்டங்களில் வேறுபட்ட புரிதல் இருந்திருக்கிறது. சுதந்திரத்துவத்தின் பார்வையில்,பொருளாதார சமத்துவத்தைவிட, சட்ட மற்றும் அரசியல் சமத்துவம் ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. அதுவே சமதர்ம மற்றும் மார்க்சிய கொள்கை கட்டமைப்பிலான பார்வையில் அணுகுகிறபோது பொருளாதார சுதந்திரம் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. பெண்ணியவாதிக்கு பாலின சமத்துவமும், சாதி அடிப்படையிலான இந்திய சமுதாயத்தில் சமூக சமத்துவமும் முக்கியத்துவம் பெறுகின்றன.



கற்றலின் நோக்கங்கள்

- சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத கற்பனைவாத நம்பிக்கையாகத் தெரிந்தாலும் அதனைப் புறக்கணிக்கும்பட்சத்தில், அமைப்பெதிர்வாதமும், குழப்பமும் ஏற்பட்டு மக்கள் நல அரசு என்பது பொருளற்றதாகிவிடும்.
- மாறுபட்ட பின்னணியிலிருந்து படிக்கும் மாணவர்களுக்கு சமத்துவம், சமத்துவமின்மை, சமூகம் பற்றிய கருத்துகளை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது.
- பெண்கள், சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டோர், மாற்று மொழி சார்ந்த குழுமங்கள், போன்றோரின் சமத்துவத்திற்கான போராட்டங்களின் தேவையினை கண்டறிதல்.
- தேசத்தின் குடிமகனாக நீதியை நிலை நாட்டி சமத்துவத்தை உருவாக்க தனிமனிதர்களின் பங்கேற்பினை மேம்படுத்தவும், தேசிய இலக்காக இதை நிர்ணயிப்பது அவசியமாகும்.

3.2.1 சமத்துவம் என்பதன் பொருள்

சமத்துவம் என்பது **"இக்குவாலிஸ்"** (*aequalis*) என்ற வார்த்தையிலிருந்து உருவானதாகும். இது "நியாயமான" என்று பொருள்படுகிறது. ஒரே மாதிரியான உரிமைகள், சலுகைகள், நிலைகள், வாய்ப்புகள் மற்றும் நடத்தப்படும் முறைகள் போன்றவை, சமூகத்தில் மக்களுக்கு சமமான உரிமையுடன் கிடைத்தல் ஆகியவை சமத்துவத்தை குறிப்பதாகும். மேலும் சமத்துவம் பங்கீட்டு கொள்கையாக பாவிக்கப்பட்டு உரிமைகள், வாய்ப்புகள், நடத்தும் முறைகள் ஆகியவை பயனாளிகளுக்கு நியாயமான முறையில் வழங்கப்படுதலைக் குறிக்கிறது.

மேலும் பங்கீட்டு கொள்கை என்பது, அனைவரையும், அனைத்து சூழ்நிலைகளிலும் ஒரே மாதிரியாக நடத்துவதல்ல, மாறாக சமமாக இல்லாதவர்களை சமமற்ற வகையில் நடத்துதலும் சமத்துவ கொள்கையில் ஒரு அம்சமாகும். ஆகவே சமத்துவம் என்பது சம நீதியை அடிப்படையாக கொண்டதாகவும் விளங்குகிறது. எனவே, சமமானவர்களை சமமற்றவர்களாக நடத்துவதும், சமமற்றவர்களை சமமாக நடத்துவதும் தவறானதாகும். ஆகவே இது பங்கீட்டு கொள்கையைச் சார்ந்த நீதியை உண்மையில் சார்ந்துள்ளது. ஆனால் சமமானவர்களை சமமற்றவர்களாகவோ, சமமில்லாதவர்களை சமமாகவோ நடத்துவதும் கூடாது.

3.2.2. சமத்துவத்தின் முக்கியத்துவம்

ஏன் சமத்துவம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது?

பல நூற்றாண்டுகளாக உலக சமுதாயத்தை வழி நடத்திய, அதிமுக்கியமான நன்னெறி மற்றும் அரசியல் நல்லியல்பு கொள்கை சமத்துவமாகும். அனைத்து மதங்களும், பிற நம்பிக்கைகளும், கூறுவது என்னவெனில் மனிதர்கள் அனைவருமே இறைவனால் படைக்கப்பட்டவர்களே என்று கூறுகிறது. இதைப்போலவே சமத்துவ

காட்சிகளை விவாதிக்கவும்











கொள்கையானது, மனிதர்களை, நிறம், பாலினம், இனம், தேசம் போன்றவைகளின் பாகுபாடு காட்டாமல் சமமான மதிப்புடன் நடத்தும் அரசியல் லட்சியமாக சமத்துவம் விளங்குகிறது. மனிதநேயம் எவ்வாறு

பொதுவானதோ, அதே போன்று சகமனிதர்களை மரியாதையுடனும், மனிதாபிமானத்துடனும் நடத்த வேண்டியது அவசியம் என சுதந்திரம் வலியுறுத்துகிறது. இம்மனிதநேய நம்பிக்கையே அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உருவாக காரணமாக அமைந்தது.

பங்கீட்டு நீதி (Distributive Justice) என்றால் என்ன?


பங்கீட்டு நீதிக்கு சமத்துவக் கொள்கை தேவையாகிறது. அதாவது சமத்துவமான சமூகத்தை நிலை நிறுத்துவதற்கு, சமத்துவமற்ற பங்கீடு செய்தல் அவசியம் என்பதை உறுதிப்படுத்துவதுதான் பங்கீட்டு நீதி ஆகும். உதாரணத்திற்கு, வரிவிதிப்பு விகிதமானது பணக்கார வர்க்கத்திற்கும், ஏழை வர்க்கத்திற்கும் வேறுபட்டு இருத்தல் வேண்டும். இதுபோலவே பொது வேலை வாய்ப்புக்களில் நுழைவதற்கான வரன்முறைகளில் இயல்பானவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் மாறுபட்ட கொள்கை அவசியம் என்பதும் பங்கீட்டு நீதியே ஆகும்.

சமூக அமைப்புகளையும், அரசுகளையும் எதிர்த்து போராட சமத்துவ முழக்கம் மிகவும் உதவிகரமாய் இருந்தது. ஏனெனில் நவீனயுகத்தில் பணி, செல்வவளம், நிலை மற்றும் சலுகை அடிப்படையில் தற்பொழுதும் பிரிவினை இருக்கத்தான் செய்கிறது.

18-ஆம் நூற்றாண்டில் நிலப்பிரபுத்துவ ஆட்சியையும், முடியாட்சியையும் எதிர்த்து, "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற முழக்கத்தை பிரெஞ்சு புரட்சியாளர்கள் ஓங்கி முழங்கினர். 20-ஆம் நூற்றாண்டில் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களில், சமத்துவ கொள்கையை நிலைநாட்டக் காலனியாதிக்கத்திற்கு எதிராக புரட்சி நிகழ்த்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, மேற்கூறிய சமுதாயங்களில் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டவர்களும், பெண்களும் தங்களின் சமத்துவத்திற்காக புரட்சியை மேற்கொண்டனர்.

சமத்துவம் என்பது தற்பொழுது உலகெங்கிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாபெரும் லட்சியவாதமாக உலக அளவில் சட்டங்களிலும், அரசமைப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான புரட்சிகளும், எழுச்சிகளும் ஆங்காங்கே எழுந்தபோதிலும் சமத்துவமின்மை என்பது உலக சமுதாயத்தில் தற்பொழுதும் உள்ளது என்பதே வெளிப்படையான உண்மை ஆகும். அனைத்து நாடுகளிலும் வீடு மற்றும் வசதிமிக்க வாழ்க்கைக்கு நடுவே சரிவர பாரமரிக்கப்படாத கழிவறைகளும், குடிநீரற்ற நிலையும் கொண்ட பள்ளிகள் உள்ளன. உணவை வீணடிக்கும் சிலரும், பசிக்கொடுமையால் வாடும் சிலரும் இருக்கின்ற நிலை பலவித சங்கடங்களை அளிக்கிறது. சட்டப்படியான உத்திரவாதங்களுக்கும், நடைமுறையில் நாம் பார்ப்பவற்றிற்கும் இடையே நிறைய வேறுபாடுகளைக் காணலாம்.

இந்தியா, தன் அரசமைப்பின் மூலமாக பணக்காரவர்க்கத்திற்கும், ஏழை வர்க்கத்திற்கும் இடையேயான இடைவெளியினை குறைப்பதற்கு இயன்ற வரையில் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.



3.2.3. சமத்துவத்தின் பரிமாணங்கள்

சமத்துவம் என்றால் என்ன?

மனித வாழ்க்கையானது பல்வேறு வேற்றுமைகளுக்கிடையில் அமைந்துள்ளது. மனிதர்களுக்கிடையே நிறம், இனம் போன்ற வேற்றுமைகள் இருப்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. மனசாட்சியின் அடிப்படையில் தவறானது என தெரிந்தபோதிலும், சக மனிதர்களிடையே

மரியாதையும், அங்கீகாரமும் மறுக்கப்படுவது வேதனைக்குரிய நிகழ்வு ஆகும். எந்த ஒரு சமுதாயமும் அனைத்து மக்களையும் சரிசமமாக நடத்துவது இல்லை. மனிதர்களுக்கிடையேயான தேவைகள், திறமைகள் மாறுபடுகின்ற பொழுது அனைத்து மக்களையும் சரிசமமாக பார்ப்பதும், பாவிப்பதும் இயலாததாகக் கருதப்படுகிறது. சமமாக உள்ளவர்கள் சமமில்லாமல் நடத்தப்படுவதும், சமமில்லாதவர்களை சமமாக நடத்துவதும், அநீதிக்கு வழி வகுக்கின்றன. இயற்கை அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பாற்பட்டு சமூக ரீதியான பிறப்பு, செல்வவளம், அறிவு, மதம் போன்றவைகளில் சமத்துவமின்மை காணப்படுகிறது.

எவ்வித வரலாற்றின் இயக்கமும், சமத்துவத்தை நோக்கி செல்வது இல்லை. ஏனெனில் ஓர் ஏற்றத்தாழ்வு நிலையை சரிசெய்கின்றபோது மற்றொரு ஏற்றத்தாழ்வு நிலை உருவாகுகிற சூழ்நிலை நிலவுகிறது. இதன் விளைவாக அறியப்படுவது என்னவென்றால், அழிக்கப்படுகின்ற ஏற்றத்தாழ்வுநிலை நியாயமற்றதாகவும், புதியதாக உருவாக்கப்படுகின்ற நிலை நியாயமானதாகவும் கருதப்படுகிறது. இதனால் அரசியல், சமூக மற்றும் கல்வி சமத்துவத்தை வலுப்படுத்தவும், ஒருமுகப்படுத்தவும், புதிய தலைமுறை கடமைப்பட்டிருக்கிறது. சுதந்திரத்தைபோன்று, சமத்துவ கொள்கையும் நேர்மறை மற்றும் எதிர்மறை கோணங்களையும் பெற்று விளங்குகிறது. எதிர்மறை சமத்துவம் என்பது யாருக்கும் எந்தவித சலுகைகளும் காட்டாத சமூக நிலையையும், நேர்மறை சமத்துவம் என்பது அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் உள்ள சமூக நிலையையும் பற்றியதாகும்.



லாஸ்கியின் (Laski) கூற்றுப்படி சமத்துவத்தின் விளக்கம்

- இது சலுகைகள் இல்லாத நிலையாகும். இது சமுதாயத்தில் வாழும் ஒருவருடைய விருப்பமானது வேறொருவருடைய விருப்பத்திற்கு சமமாக கருதப்படுகின்ற சூழ்நிலை ஆகும். சமுதாயத்தில் வாழும் அனைவருக்கும் உரிமைகள் சமமானதாக வழங்கப்படும். இதுவே சமத்துவ உரிமை ஆகும்.

- போதுமான வாய்ப்புகள் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படுதல். ஒவ்வொரு தனிமனிதனும் தன் ஆளுமைத்தன்மையை உணருவதற்கு வாய்ப்பான சூழ்நிலைகளை உருவாக்கித்தருதல்.

- சமூகத்தின் பலன்கள் அனைவருக்கும் சமமான அளவில் கிடைக்கும்படியாகவும், எந்தவொரு அடிப்படையிலும் யாரையும் இதனை அடையவிடாமல் தடுக்கக்கூடாது. ஒரு மனிதனின் பிறப்பினை அடிப்படையாகக் கொண்ட ஏற்றத்தாழ்வுகள், ஆகியவை பாரம்பரியம் மற்றும் மரபுவழி காரணங்களின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் அர்த்தமற்றவையாகும்.

- பொருளாதார மற்றும் சமூக சுரண்டல் இல்லாத சமுதாயமாக விளங்குதல்.



பெருமளவில் இருக்கக்கூடிய ஏழை வர்க்கமும், சிறியளவில் வாழும் பணக்காரவர்க்கமும் உள்ள அரசில், அரசாங்கத்தின் செயல்பாடுகள் பணக்கார வர்க்கத்தின் உடைமைகளை பாதுகாக்கும் பொருட்டே அமையும்.

– **ஹெரால்ட் லாஸ்கி (Herold Laski)**

பார்க்கரின் கூற்றுப்படி சமத்துவத்தின் கருத்தாக்கம்

- அனைவருக்கும் அடிப்படை சமத்துவம்
- சமமான வாய்ப்புகள்
- வாழ்வுக்கான சமதளத்தை உருவாக்கும் சமத்துவ நிலைகள்
- விளைப்பயன்களில் சமத்துவத்தினை ஏற்படுத்துதல்



நிகழ் ஆய்வு

முகிலனுக்கும் ஓர் கனவு உண்டு.....

முகிலன், மதுரை அருகே சிலைமான் என்ற ஊரில் செங்கற்சூளையில வேலை செய்கிறார். அவருடன் நடந்த நேர்காணலின் தொகுப்பு பின்வருபவை.

நிருபர்: தினமும் பகல்பொழுதில் என்ன செய்வீர்கள்?

முகிலன்: காலை 6 மணிக்கு எழுந்து செங்கல்சூளையில் என் பெற்றோருக்கு உதவி செய்வேன். 11 மணியிலிருந்து 1 மணி வரை அரசுசாரா அமைப்பு நடத்துகின்ற புதுமுக வகுப்பில் செலவிடுவேன். மாலை 3 மணியளவில் மதிய உணவு உண்ணுவேன். அதன்பின் வீடு திரும்புவேன். தற்போது அருகாமையில் உள்ள பள்ளியில் பயின்று வருகிறேன். காலை 10 மணியிலிருந்து மாலை 3 மணிவரையளவில் பள்ளியில் படிப்பேன். குடும்ப வருமானம் குறைவாக உள்ளதால் பள்ளிக்கு அனைத்து நாட்களிலும் செல்வது கடினமாக உள்ளது. இதனால் வேர்க்கடலை மற்றும் பயிர் வகைகள் விற்பனை செய்வேன்.

நிருபர்: குடும்பத்தைப் பற்றி சொல்லுங்கள், உங்கள் பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள்?

முகிலன்: என் தாய் குடும்பத்தை கவனிக்கிறார். தந்தை செங்கல் சூளையில் வேலை செய்கிறார். எனது இரண்டு மூத்த சகோதரர்களுடன் என்னால் இருக்க முடியவில்லை என்பது வருத்தத்தை அளிக்கிறது. ஏனெனில் அவர்கள் கொல்கத்தாவில் வசிக்கின்றனர். அவர்கள் தினக்கூலிகளாக வேலை செய்கின்றனர். எனது சகோதரர் ராஜபாண்டி (19 வயது) மற்றும் முனியசாமி (16 வயது), முறையே நான்காவது, ஆறாவது படிக்கின்றபோதே பள்ளியைவிட்டு நின்றுவிட்டார்கள். எனக்கு முன்பாக அவர்கள் செங்கல்சூளையில் வேலைசெய்தார்கள். எனக்கு இரு சகோதரிகளும் உண்டு. தமிழ்செல்வி (10 வயது) தற்போது அரசாங்க பள்ளியில் மூன்றாவது பயில்கிறாள். மற்றொரு சகோதரி யாழினிக்கு தற்போது 22 வயதாகி திருமணமும் முடிந்துவிட்டது. அவள் ஐந்தாவது வரை பயின்றுள்ளாள்.

நிருபர்: நீங்கள் வளர்ந்தபின் என்னவாக விரும்புகின்றீர்கள்?

முகிலன்: எனக்கு எப்போதும் மருத்துவராவது லட்சியம் அல்லது மருத்துவ நிறுவனங்களில் பணிபுரிய விருப்பம். ஏனெனில் மக்களுக்கு உதவி செய்வது எனது உள்ளார்ந்த விருப்பமாகும்.

நிருபர்: உங்களின் கனவுகள்?

முகிலன்: ஒரு பெரிய வீட்டில் வாழ்வதும், காரில் செல்லவும் கனவுகள் உள்ளது.

(நன்றி – தி இந்து இளைய உலகம், 1.12.2009– பக்கம்11. பெயர்கள் மாற்றப்பட்டுள்ளது)

செயல்பாடு

- மாணவர்கள் தங்கள் வகுப்பு தோழர்களுடன் பின்வரும் கேள்விகளை பற்றி விவாதிக்கலாம்
- உங்கள் குடும்பத்தை பற்றி சொல்லுங்கள்? உங்கள் பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள்?
- நீங்கள் வளர்ந்த பிறகு எதிர்காலத்தில் நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்?
- உங்களுக்குக் கனவுகள் உள்ளனவா?
- முகிலனுடைய வாழ்க்கையிலிருந்து உங்கள் வாழ்க்கை எவ்வாறு வேறுபடுகிறது ? விளக்குக.
- ஆசிரியர்கள், மூன்று அல்லது நான்கு மாணவ இணைகளைத் தேர்வு செய்து, அவர்களின் கருத்துரைகளை வகுப்பறையில் அனைவருக்கும் அறியுமாறு செய்யலாம்.

வாய்ப்புகளில் சமத்துவம்

சமத்துவம் என்பது அனைத்து மக்களுக்கும் சம உரிமைகளையும், வாய்ப்புகளையும் அளித்து அவர்களின் இலக்குகள் மற்றும் இலட்சியங்களை அடைவதற்குண்டான திறமைகளையும், திறன்களையும் வளர்ப்பது ஆகும். எனினும் மக்களின் நிலைமை, செல்வவளம் அல்லது சலுகைகளில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன என்றாலும், நடப்பு சமூகத்தில் மக்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை தேவைகளான கல்வி, சுகாதாரம், பாதுகாப்பான வீடுகள் போன்றவைகளில் ஏற்றத்தாழ்வுகள் உண்டாகி, அதன் விளைவாக நியாயமற்ற, சமமில்லாத மற்றும் அநீதியான சமூதாயம் உருவாகியுள்ளது என்பதே மிகவும் முக்கியமானதாகும்.

இயற்கை சமத்துவமின்மை மற்றும் சமூக சமத்துவமின்மை

இயற்கை சமத்துவமின்மை என்பது மக்களுக்கு இடையேயான திறன் மற்றும் திறமைகளுக்கு இடையேயான வேறுபாட்டினால் உருவாகிறது. இது போன்ற சமூக சமத்துவமின்மையானது, மக்களுக்கு வழங்கப்படும் சமமில்லாத வாய்ப்புகள் மற்றும் சில சமுதாயக் குழுக்களினுடைய சுரண்டலின் மூலமாக உண்டாக்கப்படுகிறது. இயற்கை சமத்துவமின்மை என்பது பிறப்பிலிருந்து உருவாகின்ற பல இயல்புகள் மற்றும் திறமைகளின் வெளிப்பாடாகும்.

ஆனால் சமூக சமத்துவமின்மை என்பது சமுதாயத்தினால் சமமற்றமுறையில் நடத்தப்படுவதால் உண்டாக்கப்படுகின்ற நிலையைக் குறிக்கின்றது. மேலும் இவ்வகை சமத்துவமின்மை என்பது இனம், ஜாதி, மதம், பாலினம்,நிறம் போன்றவற்றின் அடிப்படையில்



சமுதாயத்தில் மக்களை வேற்றுமைப்படுத்தி நடத்துவதால் உருவாகிறது. பல நூற்றாண்டுகளாக பெண்களுக்கான சம உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அதேபோல, அடிமைத்தனம் பற்றிய எதிர்க்கேள்வி கேட்கப்படும்வரை, கறுப்பின மக்கள், அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். மேலும் பிறப்பிலேயே உடல் ஊனமுற்றோராக பிறந்த சிலர் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவி கொண்டு இயல்பான மக்களுக்கு சமமாக சமூகத்திற்கு தங்களின் பங்களிப்பினைச் செய்கின்றனர். சமீபத்தில் மறைந்த ஸ்டீபன் ஹாக்கிங்ஸின் இயற்பியல் கல்விக்கான பங்களிப்பு, அவருடைய உடல் ஊனத்தையும்

11th Std Political Science Tamil_Unit-3.indd 62 6/20/2018 6:05:04 PM


தாண்டிய குறிப்பிடத்தகுந்த பங்களிப்பாகும். அரசியல் தத்துவஞானிகள் பலர் தங்களின் கோட்பாடுகள், தத்துவங்கள் மற்றும் சித்தாந்தங்கள் மூலமாக சமமான மற்றும் நியாயமான சமூகத்தினை உருவாக்கும் வழிமுறைகள் பற்றி எழுதியுள்ளனர்.



பின்வரும் கேலிச்சித்திரத்தை உற்றுநோக்கி அதில் காணப்படும் சமத்துவமின்மையின் வகைகளை விவரி.

நாம் சமத்துவத்தின் பரிமாணங்களை இப்போது தெரிந்து கொள்வோம்.

சமத்துவத்தின் வகைகள் (Types of Equality)



சமத்துவத்தின் பல்வேறு வகைகள் யாவை?

குடிமை சமத்துவம்

- மதம், மற்றும் நம்பிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு இல்லாதிருத்தல்.

அரசியல் சமத்துவம்

- அதிகாரத்துவத்தை அணுகுவதற்கான வாய்ப்பு
- வாக்குரிமை

சமூக சமத்துவம்

- சமமான வாய்ப்புகள்
- சலுகைகள்

இயற்கை சமத்துவம்

- இயற்கை உரிமைகள்

பொருளாதார சமத்துவம்

- செல்வ வளம்

நிகழ் ஆய்வு

பொருளாதார சமத்துவமின்மையும், அரபு நாடுகளில் எழுச்சியும்

அடிப்படைப் பிரச்சினைகளான நோய், பசி, தாகம் போன்றவை தொடர்ந்து, காரணங்களாகவும், விளைவுகளாகவும் விளங்குகின்றன. வறுமைக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. இவையாவும் ஒன்றொடொன்று தொடர்புடையது. உதாரணத்திற்கு பாதுகாப்பில்லாத சுத்தமற்ற நீர் மோசமான சுகாதாரமற்ற சூழலை உருவாகிறது. இம்மோசமான சூழல், நோயை உண்டாக்கி அதன் விளைவாக பணி செய்ய இயலாமல், வறுமைக்கும், நிரந்தர பசிக்கும் வழி வகுக்கின்றன.

ஒரு நாட்டின் நிலைத்தன்மைக்கு வறுமை என்னும் பிரச்சனை அச்சுறுத்தலாக இருக்கிறது. உதாரணத்திற்கு துனீஷியாவில் நடைபெற்ற 'மல்லிகைப்' புரட்சியில் ஆச்சரியப்படும் விதமாக, அந்நாட்டு மக்கள் ஏதேசசதிகார ஆட்சியை எதிர்த்தது அரபு உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 29 நாட்கள் நடந்த புரட்சியில், அந்நாட்டில் 23 வருடங்கள் ஆட்சி செய்த 'பென் அலி' என்பவரின் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. முஹமத் புவாஸ்ஸி என்ற வேலைவாய்ப்பு கிடைக்காத மனிதரை காவலர்கள் துன்புறுத்தியதால் அவர் டிசம்பர் 17, 2010–ஆம் நாள், சிடி புஸித் என்ற துனீஷிய நகரத்தில் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டது ஒட்டுமொத்த புரட்சிக்கு வித்திட்டது. மக்கள் இதன் விளைவாக "மல்லிகைப் புரட்சியை" தொடங்கினார்கள். (மல்லிகை, துனிஷியாவின் தேசிய மலராகும்). பொருளாதார வாய்ப்பில்லாமை, மற்றும் தொடர்ச்சியான காவலர் துன்புறுத்தலிலும் சிக்கித் தவித்த, அந்நகரத்து மக்கள், "ஒரு கையில் அலைபேசியையும், மற்றொன்றில் பாறையையும்" கொண்டு புரட்சியை மேற்கொண்டனர்.

கோபம், விரக்தி, இணக்கமற்ற சூழ்நிலை மற்றும் மக்களாட்சி கோரிக்கைக்கான ஒன்றிணைந்த இந்த அலையானது அரபு நாடுகள் அத்தனையையுமே உலுக்கியது. அரபு உலகத்தில் எழுந்த இந்த கிளர்ச்சிப் போராட்டம் மக்களாட்சிக்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையே நடந்த போராட்டம் மட்டுமல்ல. மாறாக இப்புரட்சியானது நியாயமற்ற பொருளாதார முறைமையை எதிர்த்து உண்டான மாபெரும் எதிர்ப்புப் புரட்சியாக அமைந்தது.

நன்றி – ப்ரெண்ட்லைன், பிப்ரவரி 26, 2011.

அ) சமூக சமத்துவம்

சமூக சமத்துவம் என்பது பிறப்பு, சாதி, மதம், இனம், நிறம், பாலினம் மற்றும் சமூக நிலை போன்றவைகளை அடிப்படையாக கொண்டு உரிமைகள், சலுகைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்குவதல், பாகுபாடில்லாத சமூக அமைப்பு போன்றவை ஆகும். ஒவ்வொருவருக்கும், தங்கள் ஆளுமைகளை மேம்படுத்துவதற்கு சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். சமூக சமத்துவம் என்பது சில முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. அவை, சமூக நிலையை அடிப்படையாக கொண்ட பாகுபாட்டினை நீக்குதல், சிலருக்கு மட்டுமே உரித்தான சிறப்புச் சலுகைகளை நீக்குதல் மற்றும் அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவது ஆகியவை ஆகும்.

வரலாற்றைப் பார்க்கும்போது, உலகம் முழுவதும் சில வகையான சமூக ஏற்றத்தாழ்வுகள் எதிர்க்கப்பட்டு வந்துள்ளதும் சமூக சமத்துவத்திற்கான கோரிக்கைகள் எழுந்துள்ளதும் தெரிய வருகிறது.

தென்னாப்பிரிக்கா, மேற்குஆசியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்த அடிமைத்தனம், இந்தியாவின் உள்ள தீண்டாமை, அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கு எதிரான இன வேற்றுமை, யூதர்களுக்கு எதிரான ஹிட்லரின் கொள்கை, சமத்துவமின்மை போன்றவற்றை, அரசாங்க கொள்கைகளின் மூலமாக சில நாடுகளில் முடிவுக்கு கொண்டு வர முயற்சிகள் தொடர்கின்றன.

அமெரிக்காவில் மார்ட்டின் லூதர் கிங்கின் குடிமை உரிமைகள் இயக்கம் மற்றும் இந்தியாவில் அம்பேத்கரின் தாழ்த்தப்பட்டோருக்கான சமூக சமத்துவ போராட்டங்கள் போன்றவை உலக வரலாற்றில் சமூக சமத்துவம் சார்ந்த இயக்கங்களுக்கு சிறந்த உதாரணங்களாகின்றன. "அனைத்து மக்களும் சமமாக படைக்கப்-பட்டிருக்கிறார்கள்" என்கிறது அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்.

அகிம்சை அடிப்படையிலான அமெரிக்க குடிமை உரிமைகள் இயக்கத்தின் ஈடுஇணையற்ற தலைவராக மார்ட்டின் லூதர்கிங் ஜீனியர் கருதப்படுகிறார். 1950 மற்றும் 1960-களில் சமூக நீதிக்காக கறுப்பினத்தவர்கள், அமெரிக்காவில் ஏற்படுத்திய சம உரிமைகளைப் பெறுவதற்கான புரட்சியே குடிமை உரிமைகள் இயக்கமாகும். இந்தியாவில் டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் துவங்கிய கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான இயக்கமானது வரலாற்று சிறப்புமிக்கதாக இந்தியாவில் கருதப்படுகிறது. மேலும் இவ்வியக்கம் சமூக சமத்துவத்திற்கான விதையாகும்.

பிரான்சு நாட்டின் "மனிதர்கள் மற்றும் குடிமக்களின் உரிமைப் பிரகடனம்" குறிப்பிடுகையில், "மனிதர்கள் சுதந்திரமாக பிறந்த உடன் எப்பொழுதும் சுதந்திரமான மற்றும் சமமான உரிமைகளை பெற்றிருக்கிறார்கள்" என்று கூறுகிறது. 1948, டிசம்பர் 10-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் அச்சபையின் மனித உரிமைகள் பிரகடனம் உலகமக்களின் சமூக சமத்துவத்தை உறுதி செய்துள்ளது. ஆனாலும் சர்வதேச பொது மன்னிப்பு சபையின் அறிக்கையின்படி, மேற்கூறப்பட்ட உரிமைகள் அனைத்தும் பல நாடுகளில் மீறப்படுவதாகவும், சமூக ஏற்றத்தாழ்வுகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க உலகம் முழுவதும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளது.

ஆ) குடிமை சமத்துவம்

சிவில் என்கின்ற வார்த்தை சிவில்ஸ் (*Civils*) அல்லது சிவிஸ் (*Civis*) என்ற லத்தீன் மொழிச்சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டு ஆங்கிலத்தில் "குடிமக்கள்" எனப்பெயர் பெறுகிறது. குடிமை சமத்துவம் எனப்படுவது சமமான குடிமையுரிமைகளும், பிற சுதந்திரங்களும் ஒரு குடிமகனுக்குத் தரப்படுவதாகும். குடிமை சமத்துவம் என்பது அனைத்து குடிமக்களுக்கும் ஒரே மாதிரியான குடிமை சுதந்திரங்கள் மற்றும் குடிமை உரிமைகளை உள்ளடக்கியதாகும்.



"எல்லா விலங்குகளும் சமமானவை. ஆனாலும் சில விலங்குகள் மற்ற விலங்குகளைக் காட்டிலும் அதிகம் சமமானவைகள் ஆகும்."

விலங்குகள் பண்ணை

விவாதம்



'சட்டத்தின் ஆட்சி எவ்வாறு குடிமை சமத்துவத்துடன் தொடர்புடையது?'

இ) அரசியல் சமத்துவம்

அரசின் நடவடிக்கைகளில் பங்குபெறுவதற்கு எத்தகைய பாகுபாடுமின்றி அனைத்து மக்களுக்கும் அளிக்கப்படும் சமமான உரிமைகள் அரசியல் சமத்துவம் எனப்படுகிறது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்பதன் மூலம் இந்த அரசியல் உரிமை உறுதி செய்யப்படுகிறது.

குடிமக்களின் அரசியல் உரிமைகளை உறுதி செய்யும் பிற காரணிகள்

- வாக்குரிமை
- தேர்தலில் போட்டியிடும் உரிமை
- அரசாங்கப்பதவிகளை வகிப்பதற்கான உரிமை.
- அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக மனு செய்தல் மற்றும் பொது கொள்கைகள் மீதான விமர்சனம் செய்யும் உரிமைகள்.

அனைத்து குடிமக்களுக்கும் ஒரே மாதிரியான அரசியல் உரிமைகள் அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் அரசியல் சமத்துவத்தினால் அளிக்கப்படுகின்றன. வயது வந்தோர் வாக்குரிமை என்பது அரசியல் சமத்துவத்தை அடையும் வழியாகக் கருதப்படுகிறது. அரசியல் சமத்துவம் என்பது உண்மையில் மக்களாட்சி பரிசோதனைகளுக்கான தேர்வாகும். அரசியல் அதிகாரத்தை மக்களிடையே பரவ செய்வதற்கு அரசியல் சமத்துவம் மட்டுமே போதாது. மேலும் சமூக, பொருளாதார சமத்துவம் என்பது அரசியல் சமத்துவத்தை அடைய அவசியமாகிறது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

செல்வ வளங்களில் உள்ள வேறுபாடுகளை அகற்றி, ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், நாட்டின் வளமைகளில் சமமான பங்கை அளிப்பது பொருளாதார சமத்துவமாகும்".

– ப்ரைஸ் பிரபு (Lord Bryce)

ஈ) பொருளாதார சமத்துவம்

பொருளாதார சமத்துவம் என்பதை அனைத்து மக்களும் தங்களை முழுமையாக மேம்படுத்திக் கொள்வதற்கு நியாயமான வாய்ப்புகள் இருந்தால் மட்டுமே நியாயப்படுத்த இயலும். தகுந்த வேலைவாய்ப்பு, உரிய கூலி, போதுமான ஓய்வு, மற்றும் பொருளியல் மேலாண்மையில் சமபங்கு ஆகிய இவையனைத்தும் பொருளாதார சமத்துவத்தினை அர்த்தமுள்ளதாக்குகின்றன.

பேராசிரியர் லாஸ்கி பொருளாதார சமத்துவத்தை பற்றி கூறும் பொழுது "அரசியல் சமத்துவம் என்பது பொருளாதார சுதந்திரமின்றி, மெய்மையாவதில்லை என்றும் அப்படியில்லாத நிலையில் வழங்கப்படும் அரசியல் அதிகாரம் என்பது பொருளாதார அதிகாரத்தின் கைப்பாவையாகும்" என்று கூறுகிறார்.

இங்கு பொருளாதார சமத்துவம் என்பது சமமான வாய்ப்புகளை அனைத்து மக்களுக்கும் அளிக்கும் போது பொருளாதாரம் மேம்பாடு அடையும் எனப் பொருள்படுகிறது. மேற்கூறிய முறையானது சமதர்மத்தில் சாத்தியமாகுமேயன்றி லட்சியவாதத்தின் அடிப்படையில் முதலாளித்துவத்தில் நடக்காது எனலாம்.

உ) வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம் :

வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம் என்பதன் பொருள் அரசு என்பது அனைத்து மக்களுக்கும் சமமான மற்றும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்பதாகும். அனைத்துக் குடிமக்களுக்கும் தங்களது ஆளுமைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக சமமான மற்றும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் அரசினால் அளிக்கப்பட வேண்டும். சாதி, மதம், இனம், மொழி, ஏழை, பணக்காரர், பாலினம் போன்றவற்றை அடிப்படையாக கொண்ட பாகுபாடுகள் நீக்கப்பட வேண்டும். இந்திய

அரசமைப்பு அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்புகள் மற்றும் சமமான கல்வியை அளிக்கிறது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"பசியோடு வாழும் ஒரு மனிதனுக்கு சுதந்திரம் என்ன நன்மையை அளிக்கமுடியும்? அவனால் அந்த சுதந்திரத்தை சாப்பிடவோ அல்லது குடிக்கவோ முடியாது.

– தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes)

3.2.4 சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் இடையேயான உறவுகள்

சமத்துவம் இல்லாமல் சுதந்திரத்திற்கு எந்தவொரு விழுமியமும் கிடையாது. இவற்றை பல்வேறு பார்வைகளில் புரிந்து கொண்டு அரசியல் சிந்தனையாளர்களான ஆக்டன் பிரபு, டி டாக்வில், ஹெரால்டு லாஸ்கி (*Lord Acton, De Tocqueville and Harold J.Laski*) போன்றோர் அறிவார்ந்த விளக்கங்களை அளித்துள்ளனர்.

ஆக்டன் பிரபு, டி டாக்வில் (*Lord Acton, De Tocqueville*) போன்ற அறிஞர்கள் சுதந்திர கொள்கையின் ஆதரவாளர்கள் ஆவர். 'சுதந்திரம் இருக்குமிடத்தில் சமத்துவம் இருக்காது எனவும் அதே போல சமத்துவம் இருக்கும் இடத்தில் சுதந்திரம் இருக்காது' என்பது மேற்கூறிய சிந்தனையாளர்களின் கருத்து ஆகும். ஆக்டன் பிரபு (*Lord Acton*) கூறும் பொழுது, "சமத்துவத்தை நோக்கிய உணர்வுப்பூர்வமான பயணமானது சுதந்திரத்திற்கான நம்பிக்கையை வீணாக்குகிறது" என்கிறார். ஹெரால்ட் லாஸ்கி சுதந்திரத்தை பற்றி கூறும்பொழுது, "சுதந்திரமும், சமத்துவமும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இருப்பது நல்லியல்பு" என கூறுகிறார். மேலும் அவர் கூறும் பொழுது தடையற்ற சுதந்திரம் அளிக்கப்படும்போது, தனிமனிதர்கள் சக மனிதர்களுக்கு தீங்கு இழைக்கிறார்கள். இவ்வகை சுதந்திரம் சமுதாயத்தில் குழப்பத்தை உண்டாக்குகிறது என்கிறார். 19–ஆம் நூற்றாண்டில், தனிமனிதத்துவவாதிகள் "சுதந்திரத்திற்கு" தவறான வரையறையை அளித்துவிட்டார்கள். அவர்கள் பொருளாதார சமத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் அரசாங்கத்தின் தாராளமயக் கொள்கைக்கு மட்டுமே அழுத்தம் அளித்தார்கள் என்று ஹெரால்ட் லாஸ்கி கூறுகிறார்.

மேலும் ஹெரால்ட் லாஸ்கி, கூறுகையில் "எங்கு பணக்கார வர்க்கம் – ஏழை வர்க்கம், படித்தவர்கள் – படிக்காதவர்கள் என்ற பிரிவினை இருக்கிறதோ, அங்கு கண்டிப்பாக முதலாளி, பணியாளர் என்ற வகுப்புவாத நிலையினை காணமுடியும் என்று தெரிவித்துள்ளார்.

"தனியாருக்கு இடையேயான பரிமாற்றங்கள் அரசாங்க தலையீடுகளான கட்டுப்பாடு, சலுகைகள், வரி, மானியம் போன்றவை இல்லாமல் சுமூகமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் பொருளாதார முறைமையே தாராளமயக் கொள்கை (*Laisszr Faire*) எனப்படும்."

மற்றுமொரு பொருளாதார நிபுணரான ஆடம் ஸ்மித், "முதலாளிகளுக்கும், தொழிலாளர் சங்கத்தலைவர்களுக்கும் இடையே சுதந்திரமான போட்டி நிலவ வேண்டும்" என்ற தனிமனிதத்துவவாதிகளின் கூற்றை ஆதரிக்கிறார். அரசாங்கமானது, பொருளாதாரம் தொடர்பான விவகாரங்களில் தலையிடுவதை தனிமனிதத்துவவாதிகள் விரும்புவதில்லை. அரசாங்கத்தினால் தேவை–வழங்கல் சூத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொருளாதாரம் தொடர்பான பிரச்சினைகள் இந்த சூத்திரத்தின் மூலமாக நீங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஐரோப்பாவில் இதன் மூலம் ஆபத்தான விளைவுப்பயன்களை சந்திக்க நேரிட்டது.

முதலாளிவர்க்கமானது வாய்ப்புகள் அனைத்தையும் அதிகபட்சமான சுரண்டலுக்குப் பயன்படுத்தினால், ஏழை வர்க்கத்திற்கும், பணக்காரவர்க்கத்திற்குமான

இடைவெளி பெரிதும் அதிகமாகிறது. இதனால் உழைக்கும் வர்க்கம் அதிகம் பாதிக்கப்படுவதால் உண்டான பின்விளைவு, தனிமனிதத்துவத்தினை எதிர்க்கவும் அதனால் சமதர்மம் உதயமாகவும் காரணமாகிறது. இவ்வாறு எழுச்சிபெற்ற சமதர்மமானது தனிமனிதத்துவவாதத்தின் கொள்கைகளை மறுக்க ஆரம்பித்தது. இந்த மாற்றம் "பொருளாதார சமத்துவமில்லாமல் சுதந்திரம் என்பது பொருளற்றது" என்ற நிலை உருவாக காரணமாக அமைந்தது.

தனிமனிதத்துவம்

தனிமனிதர்களின் நன்னெறிக்கான அரசியல் மற்றும் சமூக தத்துவம் தனிமனிதவாதம் ஆகும்.

சமதர்மம்

பொருள் உற்பத்தியின் வழிமுறை, விநியோகம் மற்றும் பரிமாற்றம் இவை யாவும், ஒட்டு மொத்தமாக சமுதாயத்தில் வாழும் மக்களால் ஒழுங்குப்படுத்தப்பட்டும், உரிமைப்படுத்தப்பட்டும் இருக்கப்பட வேண்டும் என்ற அரசியல் மற்றும் பொருளாதார கோட்பாடே சமதர்ம கோட்பாடு ஆகும்.

அரசியல் சுதந்திரம் ஏற்படுவதற்கு பொருளாதார சமத்துவம் மிகவும் அத்தியாவசியமாகிறது. இது சாத்தியம் இல்லாதபோது, அரசாங்கமுறையானது முதலாளித்துவ மக்களாட்சியாக மாறி அதன் விளைவாக தொழிலாளர் வர்க்கம் என்பது வாக்குரிமையை மட்டுமே பெற்று, அதன் மூலம் அவர்களுக்கு எந்தவித பயனுமில்லாமல் போகும் சூழ்நிலை உருவாகும். சுதந்திரமும், சமத்துவமும் சமதர்ம மக்களாட்சியில் மட்டுமே ஒன்றோடு ஒன்றாக இணைந்து பயணம் செய்ய முடியும். சுதந்திரத்திற்கு ஒரே ஒரு தீர்வுதான் உண்டு. அது என்னவெனில் சமத்துவம் மட்டுமே. "இதனால் சுதந்திரமும், சமத்துவமும் ஒன்றுடன் மற்றொன்று நெருக்கம் பாராட்டுகின்றன" என்று கூறுகிறார் **பொல்லார்டு.**

சமத்துவம் தொடர்பான பிரச்சினைகள்

- வேறுபட்ட பொருள் விளக்கங்கள் – சமமாக நடத்துதல், சமமான வெளிப்பாடுகள், மற்றும் சமவாய்ப்புகள் என்பன பற்றி தேவைக்கதிகமான வரையறைகள், பொருள் விளக்கங்கள் இந்த பரந்த வரைகூறுகளில் உள்ளன.
- ஒவ்வொரு வகைப்பாடுகளிலும் உள்ள முரண்பாடுகள் – சமமாக பாவித்தல் என்பது சமமான வெளிப்பாடுகளைத் தடுக்கிறது. அதேபோல சமமான வெளிப்பாடுகள் என்பது சமமான பாவித்தலை பாதிக்கின்றது.
- சம வாய்ப்புகள் என்பது கருத்தாக்கத்தின் அடிப்படையின் பின்னடைவு பிரச்சனையை உருவாக்குகிறது. எப்படியெனில் கல்வியும், பயிற்சியும் ஒரு வெளிப்பாடா? அல்லது ஒரு வாய்ப்பா? அதே போல ஆரம்ப நிலை வேலையில் சேர்தல் என்பது ஒரு வெளிப்பாடா? அல்லது ஒரு வாய்ப்பா? என்ற கேள்விகள் இங்கு எழுகிறது.
- சமமாக நடத்துதல் என்பது பல விதமான வாய்ப்பு வேற்றுமைகளை உள்ளடக்கியதாகும். இதன் விளைவாக வாய்ப்பு வேற்றுமைகளை பொருத்தமான வேற்றுமைகள் மற்றும் பொருத்தமில்லாத வேற்றுமைகள் என அடையாளம் காண இயலாது. உதாரணத்திற்கு உடல்பருமனைக் குறிப்பிடலாம்.
- உண்மையில் சமமான வெளிப்பாடுகள் என்பவை எப்போதும் இலக்காக விரும்பப்படுவதில்லை. சமத்துவத்தைவிட, சம நியாயமே சமூக நீதியாக பார்க்கப்படுகிறது. நியாயத்தின் ஒரு கோணமே சமத்துவமாகும்.
- ஆனாலும் சமத்துவமின்மையும் சில சமயங்களில் விரும்பப்படுகிறது, எப்படியெனில் அப்போதுதான் தகுதிக்கான, நியாயமான பரிசு கிடைக்கப்பெறும்.

சமத்துவத்தை எவ்வாறு ஊக்குவிக்கலாம்?

சுதந்திர வாதிகளுக்கும், சமதர்மவாதிகளுக்கும் இடையேயான வேறுபட்டை நாம் உணரும்பட்சத்தில், சமத்துவ இலக்கை அடையும் வழிமுறையும் நமக்கு தெளிவடைகிறது. பின்வரும் சமத்துவத்தை ஊக்குவிக்கும் வழிமுறைகளைப் பற்றிய பரந்த விவாதம் நம்மை சில முறைகளுக்கு வழிகாட்டுகிறது. அவற்றினைப் பற்றி தெரிந்து கொள்வோம். அவைகள்,

- முறைசார்ந்த சமத்துவத்தை உருவாக்குதல்
- வேறுபடுத்தி நடத்துதலின் மூலம் சமத்துவத்தை ஏற்படுத்துதல்
- உடன்பாடான நடவடிக்கைகள் மூலம் சமத்துவம்

ஆண்ட்ரூ ஹேவுட் (Andrew Heywood) கூறும் பல்வேறுவகை சமத்துவ லட்சியங்களைப் பற்றிய பார்வை:

சுதந்திரவாதிகள்

சுதந்திரவாதிகள், நம்புவது என்னவெனில் பிறக்கும்போது அனைத்து மக்களும் சமமாவர். இவர்கள் நீதிநெறி அடிப்படையில் சமமாக கருதப்படுகிறார்கள். இது முறையான சமத்துவத்தை உணர்த்துவதாகவும், குறிப்பாக சட்ட மற்றும் அரசியல் சமவாய்ப்புரிமை என்றாலும், சமூக சமத்துவம் என்பது சுதந்திரத்தை தியாகம் செய்து பெறக்கூடியதாகும். மரபுவழி சுதந்திரவாதிகள் கடுமையான தகுதிமுறையும், பொருளாதார ஊக்குவிப்புகளையும் பரிந்துரைக்கின்றார்கள். இதற்கு மாறாக தற்கால சுதந்திரவாதிகள், சமூக சமத்துவம் நிலைப்படும்பட்சத்தில், சமவாய்ப்புகள் நியாயமாக வழங்கப்படலாம் என்றுரைக்கின்றனர்.

பழமைவாதிகள்

சமூகம் இயற்கையிலேயே படிநிலை அமைப்புடையது என்றும், சமத்துவம் என்பதை எப்போதுமே அடைய முடியாத ஒரு கற்பனை இலக்காக கருதுகின்றனர். ஆனால் புதிய உரிமையின் அடிப்படையில், வலிமையான தொழில்முனைவோர் நம்பிக்கையின் அடிப்படையில் சமவாய்ப்புகளை வழங்கும், அதே நேரத்தில் பொருளாதார சமத்துவமின்மையின் பொருட்பயன்களையும் வலியுறுத்துகிறது.

சமதர்மவாதிகள்

சமதர்மச் சிந்தனையாளர்கள் சமத்துவத்தை அடிப்படையான விழுமியமாகவும், அதிலும் குறிப்பாக சமூக சமத்துவத்தை முக்கியமாக ஒப்புக் கொள்கிறார்கள். சமூக மக்களாட்சி தொடர்பான கருத்தாக்கத்தில் பல பரிமாணங்கள் இருந்தாலும், இவ்வகையான சமத்துவம் நிச்சயமாக சமூக ஒருங்கிணைப்பிலும், சகோதரத்துவத்திலும் கால்தடம் பதிக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அதோடு மட்டுமல்லாமல், சமூக சமத்துவம் என்பது நீதியை நிலைநாட்டுவதற்கும், சம நீதியிலான பங்கை அளிப்பதற்கும், சுதந்திரத்தினை பெருமளவில் நேர்மறையாக அளிப்பதற்கும் பயன்படுகிறது.

அமைப்பெதிர்வாதிகள்

இவ்வகை கொள்கைவாதிகள் அரசியல் சமத்துவத்தை மையப்படுத்தி தங்கள் கருத்தாக்கத்தை வலிமைப்படுத்தியுள்ளார்கள். அரசியல் சமத்துவம் தனிநபர் சுதந்திரத்தை வழங்கும் என்றும், அனைத்து விதமான அரசியல் சமத்துவமின்மையும் எதிர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கிறார்கள். பயன்தரக்கூடிய வளங்களை கூட்டு சொத்துடைமை ஆக்குவதன் மூலம் சமூக சமத்துவத்தை அடையலாம் என்பது அமைப் பெதிர்வாத பொதுவுடைமைவாதிகளின் (*Anarcho-Communists*) நம்பிக்கையாகும்.

பாசிசவாதிகள்

மனித குலமே இன அடிப்படையிலான சமத்துவமின்மையுடன் இருக்கிறது. இவ்வுலகில் இப்பாகுபாடு தலைவர், தொண்டர்,

நாடுகள் மற்றும் பல இனங்களுக்கு இடையேயும் இவ்வுலகத்தில் காணப்படுகிறது. ஒருதேசமோஅல்லதுஇனமோஎதுவானாலும், அதில் அங்கம் வகிக்கும் நபர்கள் சமமாக பாவிக்கப்படுகிறார்கள். அவர்களின் பிரதான அடையாளமே அவர்களை கண்டறிய பயன்படுகிறது.

பெண்ணியவாதிகள்

பாலின சமத்துவமே இக்கொள்கைவாதிகளின் குறிக்கோள் ஆகும். ஆண்களுக்கு சமமாக பெண்களும் சம உரிமைகள், சமவாய்ப்புகள் பெறுவதோடு மட்டுமல்லாமல், சமூக, பொருளாதார நிலைகளிலும் சம அதிகாரம் பெறுவதை இவர்கள் ஆதரிக்கிறார்கள். ஆனால் இவ்வாறு சமத்துவத்தை கோருவது என்பது பெண்கள், "ஆண்களின் மூலம் அடையாளம்" காணப்படுவதாக சில முற்போக்கு பெண்ணியவாதிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

சூழலியல்வாதிகள்

உயிரி மைய சமத்துவமானது, வாழ்வின் அனைத்து வடிவங்களும் வாழவும், மலர்ந்து வளம் பெறவும் சம உரிமை உள்ளது என வலியுறுத்துகிறது. மரபார்ந்த கருத்தானது, சமத்துவத்தை மனித இனத்தை மையமாக (Anthropocentric) மட்டுமே வைத்து இயங்குகிறது என்று கூறுகிறார்கள். இதனால் மனித இனத்தை தவிர்த்து, ஏனைய மற்ற உயிரினங்களும், உருபொருளும் இதில் சேராது.

ஹேவுட், ஆன்ட்ரு (2004), அரசியல் இலட்சியங்கள் : ஓர் அறிமுகம், நான்காம் பதிப்பு, நியூயார்க் : மேக்மில்லன் (Heywood, Andrew. (2004) political Ideologies: An Introduction, 4th ed. New York: Macmillan.)

முறைசார்ந்த சமத்துவத்தை நிறுவும் வழிகள்

உலக அளவில் சமூக, பொருளாதார, அரசியல் ஏற்றத்தாழ்வுகள் அனைத்தும் நடைமுறை பழக்க வழக்கங்களின் மூலமாகவும், சட்ட முறைமை வழியாகவும், குறிப்பிட்ட சில வகையான, வாய்ப்புகள் மற்றும் வெகுமதிகளை சில சமூக பிரிவுகள் அனுபவிக்க முடியாதவாறு தடுத்து நிறுத்துகின்றன. உதாரணத்திற்கு, ஏழைகளுக்கு வாக்குரிமை மறுக்கப்படுகிறது. உலகத்தின் சில பகுதிகளில், பெண்கள் பணிசார்ந்த வளர்ச்சி பாதையில் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இந்தியாவில் நடைமுறையில் இயங்கும் சாதி முறைமையின்படி, தாழ்த்தப்பட்ட மக்கள், உடலால் உழைப்பதைத் தவிர பிற பணிகளில் ஊக்கப்படுத்தப்படுவதில்லை. இன்னும் சில நாடுகளில், சில குடும்பங்கள் மட்டுமே முக்கிய பதவிகளை வகிக்கின்றன. இவ்விதம் செயல்படும் சலுகைகள் நிலுவையில் இருக்கும் வரை சமத்துவத்தை அடைவது கடினமாகிறது. இது மாதிரியான சலுகைகளை நிறுத்தாமல் சமத்துவத்தை அடையமுடியாது.

தொன்றுதொட்டு இவ்விதமான முறைமைகள் சட்டத்தின் மூலம் வலிமைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் விளைவாக சமத்துவத்தை அடைய வேண்டுமென்றால், அரசாங்கத்தின் தலையீடு என்பது சட்டத்தின் மூலமாக அவசியமாகிறது. நமது அரசமைப்பானது, நாட்டின் அடிப்படையான மற்றும் மேலான சட்டம் என்ற அடிப்படையில் இப்பணிகளை செய்ய முற்படுகிறது. இந்திய அரசமைப்பின் படி சாதி, மதம், இனம், பாலினம் அல்லது பிறப்பிடத்தை அடிப்படையாக கொண்ட பாகுபாடுகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் நமது அரசமைப்பு தீண்டாமையையும் ஒழித்துள்ளது. பல்வேறு நவீன அரசுகளும், மக்களாட்சி அரசாங்கங்களும் சமத்துவக் கொள்கையை தத்தமது நாட்டின் அரசமைப்பில் இணைத்துக் கொண்டுள்ளன.

3.2.5 இந்திய அரசமைப்பில் சமத்துவம்

இந்திய அரசமைப்பின் சமத்துவகருத்தாக்கம்


இந்திய அரசமைப்பின் உறுப்பு - 14-ன் படி 'சட்டத்தின்முன் அனைவரும் சமம்

அல்லது அனைவருக்கும் சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பு' அளிக்கப்படுகிறது. இது முறை சார்ந்த சமத்துவமாகவும், முகவுரையில் கூறப்பட்டுள்ளது போல, "சமமான நிலை மற்றும் வாய்ப்புகளை" குறிக்கிறது. மேலும் இது நாட்டின் சட்டமானது அனைத்து மக்களுக்கும் சமமாக பொருந்தும் என்றும் பிறப்பிடம், சாதி, மதம், மொழி, இனம், பாலினம், நிறம் போன்றவை அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்றும் தெரிவிக்கிறது என்றும், இதைப் போல உறுப்பு - 15, உறுப்பு - 14-ஐ உறுதிப்படுத்தும் நோக்குடன் இவ்வகை பாகுபாடுகளை தடை செய்துள்ளது. 'சட்டத்தின் முன் சமம்' மற்றும் 'சமமான சட்டப் பாதுகாப்பு' ஆகியவை இந்திய அரசமைப்பின் உறுப்பு - 21-ன் மூலம் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 'எந்தவொரு தனி நபரும், சட்ட நடை முறையன்றி அவரது வாழ்வு அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தினை இழக்க வைக்க முடியாது' என்றும் விளக்குகிறது. இதன் மூலம் அறிவது யாதெனில், ஒரு தனிநபரை தண்டிக்க வேண்டும் என்றால், அதை சட்டத்தின் நடைமுறை மூலம் மட்டுமே செயல்படுத்த முடியும். இது போல ஒருதலைபட்சமாகவோ, பாகுபாடான முறையிலோ அல்லது சமமற்ற முறையில் பல தனிமனிதர்களை நடத்துதலோ தவறு ஆகிறது'.

சுதந்திர உரிமை (உறுப்பு 14 –18)

- சட்டத்தின் முன் சமம் (உறுப்பு -14)
- மத அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு தடை (உறுப்பு -15)
- பொது வேலைவாய்ப்பில் சம வாய்ப்புரிமை (உறுப்பு -16)
- தீண்டாமை ஒழிப்பு (உறுப்பு -17)
- பட்டங்கள் ஒழிப்பு (உறுப்பு -18)

வேறுபடுத்தி நடத்துதல் மூலம் எவ்வாறு சமத்துவம் அடையப்படுகிறது?



சில நேரங்களில் தனிநபர்களை வேறுபடுத்தி நடத்துதல் மூலம், சம உரிமைகள் உறுதிசெய்யப்படுவது அவசியமாகிறது. இதற்காக சிலவித வேற்றுமைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவது என்பது தவிர்க்கமுடியாததாகிறது. இயலாதவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் இரவு நேரங்களில் பெருநிறுவனங்கள், மென்பொருள் நிறுவனங்களில் பணிபுரிய செல்லும் பெண்களுக்கு சில சிறப்பு சலுகைகள் அளிப்பது அவசியமாகிறது. மேற்கூறியவற்றில் வேறுபடுத்தி நடத்துதல் என்பது சமத்துவத்தை உயர்த்துமேயன்றி சமத்துவக்கொள்கை வரம்பினை மீறாது எனலாம். இது போலவே சமத்துவம் பாதிக்கப்படாமல் இருக்க, அரசாங்கத்தின் மூலம் சில கொள்கைகள் அவசியமாகிறது. உதாரணத்திற்கு இந்தியாவில் இடஒதுக்கீடு கொள்கையும், ஏனைய பிற நாடுகளில் "உடன்பாட்டு நடவடிக்கை"யும் (Affirmative Action) பின்பற்றப்படுகிறது.

3.2.6 உடன்பாட்டு நடவடிக்கை (Affimative Action)

உடன்பாட்டு நடவடிக்கை பற்றிய பார்வை

சட்டத்தின் மூலமாக முறைசார்ந்த சமத்துவம் நிறுவப்பட முடியாத நிலையில் 'உடன்பாட்டு நடவடிக்கை' தேவையாகிறது. நன்றாக வேரூன்றிய சமூக சமத்துவமின்மையை களைவதற்குண்டான நேர்மறையான நடவடிக்கைகளை அமல்படுத்துவது முக்கியமாகிறது.

இவை சமூக சமத்துவமின்மையின் தீவிரமான வடிவங்களை படிப்படியாகக் குறைத்து நீக்குகிறது. பெரும்பாலுமான உடன்பாட்டு நடவடிக்கையின் கொள்கைகள் தொன்றுதொட்டு காணப்படும் சமத்துவமின்மையின் விளைவுகளை சரி செய்ய திரளான ஏதுவாக வடிவமைக்கப்படுகின்றன. நமது நாட்டில் ஒதுக்கீட்டுக் கொள்கை மற்றும் கல்வியில் இடஒதுக்கீடு, வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை, போன்றவை பின்தங்கிய மக்களின் நலனுக்காக அளிக்கப்படுவது விவாதம் மற்றும் கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகி வருகிறது.

இக்கொள்கையானது சமுதாயத்தில் சில குழுக்கள் சந்திக்கும் சமூக பாரபட்சம், விலக்கல், ஒதுக்கப்படுதல் மற்றும் பாகுபாட்டிற்கு நியாயமான தீர்வாக இந்த உடன்பாட்டு நடவடிக்கை நியாயப்படுத்தப்படுகிறது. அது மட்டுமல்லாமல் நியாயமான மற்றும் சமத்துவ சமுதாயம் உருவாக வேண்டுமெனில், இவ்வகையான சிறப்பு சலுகைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியாக இருக்க கூடும். இவ்வகையான உடன்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே இயங்கும். இந்த உடன்பாட்டு நடவடிக்கையின் மூலமான சலுகைகள், சமுதாயத்தில் ஏனைய சமூக குழுக்கள் அனுபவித்து வரும் நலனுக்கு சமமாகவும், குறைபாடுகளைக் களையவும் உதவி புரிகின்றன.

உடன்பாட்டு நடவடிக்கை – வரையறை

தொன்றுதொட்டு பாதிக்கப்பட்டு வரும் சிறுபான்மை மக்கள் குழுவின் பொது நலனுக்காக அளிக்கப்படும் சலுகை கொள்கை அல்லது மேம்பாட்டுத் திட்டம், உடன்பாட்டு நடவடிக்கை எனப்படுகிறது. இந்த நடவடிக்கைகளின் மூலம் பாகுபாடுகளை மட்டுமே சந்தித்து வரும் மக்கள் குழுவிற்கு, சமதர்ம சமூகத்தை உருவாக்கும் பொருட்டு கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், சமூக நலன் போன்றவைகளில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

நேர்மறையான பாகுபாட்டின் மூலமாக, அளிக்கப்படும் இடஒதுக்கீடு மற்றும் சலுகைகள் ஏனைய மக்களின் சமநல உரிமையை பாதிக்கிறது என்று எதிர்ப்பாளர்கள் கூக்குரலிடுகிறார்கள். இச்சலுகைகள் மூலம், சமத்துவம் என்ற சமதர்ம கொள்கையே பாதிக்கப்படுவதாகவும்


எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர். சமத்துவம் என்பது அனைத்து மக்களையும் சமமாக பாவிப்பதாகிறது. ஆனால் இட ஒதுக்கீடானது சமத்துவ கொள்கையினை கேள்விக்குறியாக்கி தலைகீழ் பாகுபாட்டினை ஏற்படுத்துகிறது. சமத்துவம் என்பது அனைவரையும் சமமாக நடத்துதல் என்பதாக இருப்பினும், அது சாதி மற்றும் இன அடிப்படையிலான பாகுபாட்டினை மனிதர்களிடையே உருவாக்குகிறது. இதனால் சமூகம் பிரிவினையை சந்திக்கும் என்று கூறி இப்பிரிவினையை அறிஞர்கள் குறை கூறுகிறார்கள். விவாதங்கள் பல இருந்த போதிலும், கிராமம் மற்றும் குடிசைகளில் குழந்தைகளின் பள்ளி படிப்பு மற்றும் சுகாதாரம் ஆகியவை, நவீன நகர வசதிமயமான பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளின் பள்ளிப்படிப்பிலிருந்தும் சுகாதாரத்திலிருந்தும் வேறுபடத்தான் செய்கின்றன. தகுந்த விதிவிலக்கான சூழல்கள் இல்லாத பட்சத்தில் இந்த தலைகீழான பாகுபாடுமுறை சட்டப்படி தவறானது என்று சமவேலைவாய்ப்புச் சட்டம் கூறுகிறது.

உடன்பாட்டு நடவடிக்கை	தலைகீழான பாகுபாடு
காலகாலமாக வேற்றுமையின் மூலம் பாதிக்கப்பட்டு வரும் இலக்கு குழுக்களுக்கு, தகுதிக்கு ஏற்றாற்போல் உரிய சலுகைகள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றினை அறிவுப்பூர்வமாக வழங்குதல்.	இலக்கு குழுக்களுக்கான வேறுபட்ட சலுகைகள் அளிக்கப்படுதல். இதனால் தகுதி வாய்ந்த நபர்களை சலுகைக் குழுவிலிருந்து வெளியேற்றுதல்

இவ்வாறான ஏழை குழந்தைகளுக்கு உயர்கல்வியை கற்பதற்கும், சிறப்புப் பயிற்சியை மேற்கொள்வதற்குத் தகுதியிருந்தும், பொருளாதார வசதி இல்லாமல் ஏழை மாணவர்கள் தடைகளை சந்திக்கின்றார்கள்

இதன் விளைவாக மற்ற வசதியான பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களுடன் இவர்கள் போட்டி போட இயலாமல் போகிறது. இது மாதிரியான சமூக மற்றும் பொருளாதார சமத்துவமின்மை, சமவாய்ப்புகளை பயன்படுத்துவதற்கு தடையாக அமைகின்றன.

தற்போதைய கோட்பாட்டாளர்கள் இதனை ஏற்றுக்கொண்டாலும், சமவாய்ப்பு இலக்கு அல்லாமல், அரசு இயற்றுகின்ற சமத்துவ இலக்கினை அடைவதற்கான கொள்கைகளை எதிர்ப்பவர்களாகின்றனர்.




சமத்துவம்

எனக்கான உரிமைகளும், எனக்கு கிடைக்கும் வாய்ப்புகளும் மற்றவர்களுக்கும் கிடைப்பதையும், இவை எவ்வாறு என்னிடமிருந்து பிரிக்கமுடியாத ஒரு உரிமையோ அவ்வாறு மற்றவர்களுக்கும் அது போன்ற உரிமையாகும் என்பதே சமத்துவமாகும்.

– வால்ட் விட்மேன் (Walt whiltman)

மாணவர்களுக்கான பயிற்சி



3.3 சுதந்திரம்


சுதந்திரத்தைப் பற்றிய அறிமுகம்

சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறு நீங்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. சட்டத்தின் முக்கிய கடமையே, தனிமனிதர்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது ஆகும். ஓர் தனிமனிதனின் பாதுகாப்பு என்பது அவனது சுதந்திரத்தின் நிலையைப் பொறுத்தாகும். சட்டமும், சுதந்திரமும் ஒன்றோடு ஒன்றாக பிணைந்து, அனைவரும் சமமாக நடத்தப்பட வழிவகை செய்கின்றன. அரசின் தலையாய கடமையே, குடிமக்களின் சுதந்திரத்தை பாதுகாப்பது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

ஒவ்வொரு தனிமனிதனையும், அரசு சில நியாயமான காரணங்களுக்காக கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது உங்களுக்கு தெரியுமா? இதனால் குடிமக்களுடைய சலுகைகள் எவ்விதத்திலும் பாதிப்படைவதில்லை. ஒவ்வொரு தனிமனிதனுக்கும், அவர்களுக்குரிய உரிமைகளை அளிப்பதும், பாதுகாப்பதும் அரசினுடைய முக்கிய கடமைகளில் ஒன்றாகும். இவ்வாறான செயல்பாடுகளில், தனிமனிதர்களுக்கிடையேயான சமத்துவத்தையும், அரசு தான் நிறைவேற்ற வேண்டியவற்றில் வைத்துள்ளது.

நாம் அனுபவிக்க விரும்பும் சுதந்திர உலகத்திற்கான பயணத்தை நாம் மேற்கொள்வோமா?

வகுப்பறை சூழலில் மாணவர்களுக்கான சுதந்திரம் வேறுபடுகிறது. மாணவர்களின் பார்வையில், சில ஆசிரியர்கள் கடுமையானவர்களாகவும், ஏனைய சில ஆசிரியர்கள் சுதந்திர மனப்போக்குடனும் நடந்துகொள்கின்றனர். மேற்கூறிய பார்வை, மாணவர்கள் தங்களுடைய சுதந்திரத்தை வகுப்பறையில் எந்த அளவிற்கு அனுபவிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து



கற்றலின் நோக்கங்கள்

- சுதந்திரத்தின் பொருள், மற்றும் முக்கியத்துவத்தினை பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை விளக்குவதன் மூலம் அறிமுகப்படுத்துதல்.
- சுதந்திரத்தின் வகைகளை தெரிந்து கொள்வதின் மூலம் மாணவர்களுக்கு பல வகையான சுதந்திரங்களையும், அதனைப் பற்றி அரசினுடைய கருத்துக்களையும் விளக்குதல்.
- ஓர் சமுதாயத்தில் குடிமகனுக்கு சுதந்திரத்தின் விழுமியங்களைப் புரிய வைப்பது மூலம், அரசு மற்றும் அரசமைப்பு அதிகாரத்துவம் பற்றியும் விளக்கி சுதந்திரம் எனும் கருத்தாக்கத்தின் முக்கியத்துவத்தினை அறிய வைத்தல்.
- சட்டத்தின் மூலமான கட்டுப்பாடு என்பதும் ஒரு வகை சுதந்திரம் என்பதை மாணவர்களுக்கு போதித்தல்.
- மக்களாட்சி மற்றும் சுதந்திரமான நீதித்துறையும், சுதந்திரத்தின் விழுமியங்களை உட்புகுத்துவதற்கான காரணிகள் என்றும், சுதந்திரத்தின் பாதுகாவலர்கள் என்றும் புரிய வைத்தல்.

அமைகிறது. மாணவர்களை ஓரளவிற்கு கட்டுக்குள் வைக்கவும், கட்டுப்பாடான சுதந்திரத்தை மாணவர்கள் அனுபவிக்கும் வகையிலுமே ஆசிரியர்கள் செயல்படுகிறார்கள். இவ்வித கட்டுப்பாடுகள், மாணவர்களின் மென்மையான நன்நடத்தைக்கும், அவர்களின் திறன்மிக்க கற்றலுக்கும் ஏதுவாக அமைகிறது. சுதந்திரம் என்னும் கருத்தாக்கத்தினைப் புரிந்துகொள்வது, மாணவர்கள் தங்கள் சக மாணவர்களிடம் உள்ள உறவுமுறை மற்றும் ஆசிரியர்களிடம் காட்டப்படும் நடத்தை மற்றும் மனப்போக்கு போன்றவற்றின் மூலமாக வகுப்பறையில் ஆரம்பிக்கிறது. குறிப்பிட்ட சந்தேகத்தை தீர்ப்பதற்கு கேள்வி கேட்பது மாணவர்களின் உரிமையாகும். அதற்கு ஆசிரியர்கள் அனுமதி வழங்குவது சுதந்திரம் ஆகிறது. சுதந்திரம் எனப்படுவது சட்டத்தால் அனுமதிக்கப்படும் செயல்பாடு ஆகிறது. அதற்கான கட்டுப்பாடுகளும் ஒரு வகையில் சுதந்திரமாக கருதப்படுகிறது.

கற்றலுக்கு உகந்த வகுப்பு சூழ்நிலை மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துகிறது. மேலும் சுதந்திரத்தின் பொருள் மற்றும் முக்கியத்துவம் பற்றி நிறைவாக புரிந்து கொள்ள முடியும்.

சுதந்திரத்தின் தோற்றத்தினைப் பற்றி நாம் அறிவோமா?

மனிதர்களுடைய வளர்ச்சிக்கும், அரசின் மேம்பாட்டிற்கும் சுதந்திரம் அதிமுக்கியமான அடிப்படைக் கூறாகும். முற்காலத்திலும், இடைக்காலத்திலும், இங்கிலாந்து முடியாட்சி மக்களுக்குத் தேவையான சுதந்திரத்தை மறுதலித்தது வரலாற்று பதிவாகும். மக்களின் பொறுமையை சோதித்த முழுமையான முடியாட்சி புரட்சியை சந்திக்க நேரிட்டது. இங்கிலாந்து பேரரசர் ஜான் பணிய நேர்ந்ததுடன் குடிமக்களுக்கு சுதந்திரத்தை அளித்து பதவியை விட்டு விலகியதிற்கு பிறகே இந்த புரட்சி ஓய்ந்தது.

டியூடர் மற்றும் **ஸ்டூவர்ட்** பேரரசர்களுக்குப் பின்னால் வந்தவர்களும் முழுமையான முடியாட்சி முறையைத் தொடர்ந்ததால் "உள்நாட்டுப்போர்" வெடித்தது. சுதந்திர வேட்கையினால் உந்தப்பட்டு இப்போராட்டத்தில் அனைத்து குடிமக்களும் பங்கேற்றனர். **சார்லஸ்** மன்னர் சிரச்சேதம் செய்யப்பட்டு, பின்னர் **க்ரோம்வெல்** ஆட்சியில் இருந்தபோதும் கூட மக்களுக்கு தேவையான அடிப்படை சுதந்திரம் கிடைக்கவில்லை என்பது வரலாற்று நிகழ்வு ஆகும்.

பிரெஞ்சு குடியரசுகள் என்பவை 1792-ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சிக்கான பிரகடனத்திற்கு பின்னர் தொடர்ச்சியாக உருவான குடியரசுகளைக் குறிப்பதாகும். இவ்வாறு பிரான்சின் வரலாற்றில் ஐந்து குடியரசுகள் இருந்துள்ளன. முதலாவது பிரெஞ்சு குடியரசு (1972 -1804), இரண்டாவது பிரெஞ்சு குடியரசு (1848-1852), மூன்றாவது பிரெஞ்சு குடியரசு (1870-1940), நான்காவது பிரெஞ்சு குடியரசு (1946-1958) என்றும் அதன் பின்னர் ஐந்தாவது பிரெஞ்சு குடியரசு அக்டோபர் 5, 1958-இல் ஏற்படுத்தப்பட்டது. ஐந்தாவது குடியரசானது நலிந்த மற்றும் உட்கட்சி பூசல் சார்ந்த நாடாளுமன்ற அரசாங்கத்திலிருந்து மாற்றியமைக்கப்பட்ட ஒரு வலிமை வாய்ந்த மையநோக்கு மக்களாட்சியாகும்.

இவ்வாறு மக்கள் போராட்டத்தின் விளைவாக, இங்கிலாந்தில் 1688-இல் "மகத்தான புரட்சி", முடியாட்சியை எதிர்த்து அரங்கேறியது. இதில் மக்களுக்கு மகத்தான வெற்றி கிடைத்ததுடன் சில காலம் முழுமையான முடியாட்சி கட்டுப்படுத்தப்பட்டது. இதற்குப் பிறகு வெடித்த "பிரெஞ்சு புரட்சி" 1789-ல் ஏற்பட்டது. இது பல மாற்றங்களை ஏற்படுத்தினாலும், மக்களின் விடுதலை வேட்கைக்கு சரியான அளவில் தீர்வு ஏற்படாதிருந்தது. ஏனெனில் நெப்போலியனுக்கு பின்னர் ஆட்சியில் அமர்ந்தவர்களும் முடியாட்சியைத்

தொடர்ந்தார்கள். மூன்றாம் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு பிறகு மூன்றாவது பிரெஞ்சு குடியரசு நிறுவப்பட்டது. 1940-இல் இதன் வீழ்ச்சிக்குப் பின்னர் வரிசையாக நான்காம் குடியரசும், 1958-இல் அதன் வீழ்ச்சிக்குப் பின்னர் ஐந்தாம் குடியரசும் நிறுவப்பட்டது. இதற்கிடையே காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகள் விடுதலைக்கான நீண்ட நெடிய புரட்சிக்குப் பின்னர் சுதந்திரத்தை பெற்றன. 19-ஆம் நூற்றாண்டில் இத்தாலியும், 20-ம் நூற்றாண்டில் இந்தியாவும் மிகுந்த தியாகங்களுக்கு பின்னரே தேசிய சுதந்திரம் அடைந்தன.



வரலாற்று சூழல்

- அறிவொளியின் பகுத்தறிவிற்கான விளைவாகும்
- பிரெஞ்சு புரட்சி (1789) யின் விளைவாகும்
- பிரெஞ்சு புரட்சியாளர்கள் "சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்திற்காக" பாடுபட்டனர்.
- பிரெஞ்சு புரட்சியின் சிந்தனைகள் இங்கிலாந்து எழுத்தாளர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் மக்களாட்சி மற்றும் தனிமனிதனுக்கான பிரெஞ்சு புரட்சியினால் தாக்கத்திற்கு உள்ளாயினர் எனலாம்.
- தொழில்மயமாதலின் விளைவாகும்
- இயற்கை மற்றும் எளிமைக்கான ஏக்கம்

சுதந்திரத்தின் பொருள் விளக்கம்

சுதந்திரம் என்பது "லிபர்" என்கிற லத்தீன் வார்த்தையிலிருந்து உருவாகி ஆங்கிலத்தில் "கட்டுப்பாடில்லாதது" என்று பொருள் பெறுகிறது. "லிபர்" என்கிற வார்த்தைக்கு "தடைகள் இல்லாத" எனப் பொருள்படுகிறது.

ஒருவர் எந்த சூழ்நிலையில் இருந்தாலும், தான் நினைத்ததை செய்ய முடியும் என்பது இதன் பொருளாகும். ஆனால் சுதந்திரம் என்பதை தனிமனிதர்களை தடையுடன் கூடிய சுதந்திர உரிமையை அனுபவிக்கும் விதத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

சட்டம் என்பது சுதந்திரத்தின் நிபந்தனையாக விளங்குகிறது. பேராசிரியர் பார்க்கரின் கூற்றுப்படி "ஒழுங்குமுறை அரசில் சுதந்திரம் சாத்தியமாகிறது. இவ்வகை அரசில் இறையாண்மையினுடைய சட்ட மற்றும் அரசியல் அம்சங்கள் ஒன்றியோ, ஏறக்குறையவோ அல்லது முழுவதுமாகவோ காணப்படுகிறது". லாஸ்கி உரைப்பது போல, "வரலாற்று அனுபவங்கள் மக்கள் வசதியாக வாழ்வதற்கும், தகுந்த முன்னேற்றத்திலான வாழ்விற்கான விதிமுறைகளையும் அளித்துள்ளது. கீழ்பணிதலை கட்டாயப்படுத்தும்போது சுதந்திரத்திற்கு உரிய நியாயமான வரையறையாக அது விளங்குகிறது".

குறிப்பிடத்தக்க மேற்கோள்

மனிதர்கள் சிறப்பாக செயல்படும் வாய்ப்பிற்குரிய சூழ்நிலையை நிர்வகிப்பதே சுதந்திரம் ஆகும்.

– ஹெரால்ட் லாஸ்கி (Harold.J.Laski)

சுதந்திரம் தொடர்பான அறிஞர்களின் கருத்துக்கள்

சுதந்திரம்என்பதுதகுதியானமகிழ்ச்சியையும், மற்றும் வேலையையும் அனுபவிப்பதற்கு உண்டான நேர்மறையான சக்தியாகும்

– கெட்டல் (Gettel)

சுதந்திரம் என்பது தனிமனிதர்கள், தங்கள் ஆளுமைத்தன்மையில் எந்தவித பாதிப்பும் இல்லாமல் தங்களை வெளிப்படுத்துவதாகும்.

– ஜி.டி.எச். கோல் (G.D.H.Cole)

சுதந்திரம் என்பதன் பொருள் தடைகள் இல்லாத நிலை என்பதல்ல, மாறாக சுதந்திரத்தை மேம்படுத்துவதில் உள்ளது

– மகாத்மாகாந்தி (Mahatma Gandhi)

உரிமைகள் இல்லாமல் சுதந்திரம் கிடையாது, ஏனெனில் உரிமைகள் இல்லாத சூழ்நிலையில் குடிமக்கள் அனைவரும் ஆளுமைத் தன்மையின் தேவைகளுக்கு அவசியமற்ற வெறும் சட்டத்திற்கு உட்பட்ட மக்களாவர்.

– ஹெரால்ட் ஜே. லாஸ்கி (Harold.J.Laski)

சுதந்திரம் மற்றும் விடுதலை : ஓர் மாறுபட்ட அணுகுமுறை

- சுதந்திரம் என்பது அடக்குமுறையிலிருந்தும், வெளிகட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபெறும் விடுதலை நிலை ஆகும்.
- எதிர்மறை சுதந்திரம் என்பது, தடைகளில்லாத, கட்டுப்பாடுகள் களைந்த முழு சுதந்திர நிலையாகும். நேர்மறை சுதந்திரம் என்பது செயல்படக்கூடிய வாய்ப்பு அல்லது செயல்படக்கூடிய உண்மை நிலையாகும்.
- 'எஜீஸ்டெம் ஜெனரிஸ்' எனும் சட்டமொழியில் கூறுவதுயாதெனில் 'சுதந்திரம்' என்ற சொல் உறுப்பு 19-ல் உள்ள பொதுவான வார்த்தையாகும். அது தனது அமைப்பினை அவ்வரசமைப்பு உறுப்பிடமிருந்து பெறுகிறது. ஆனால் உறுப்பு - 21-ல் இத்தகைய குறிப்பிட்ட வார்த்தைகள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை. அதில் 'சுதந்திரம்' என்ற சொல்லுக்கு முன்பாக 'தனிப்பட்ட' என்னும் குறிப்பிட்ட வார்த்தை மட்டுமே பயன்படுத்தப்பட்டது. ஆகவே 'தனிப்பட்ட சுதந்திரம்' என்பதால் பாதுகாக்கப்படும் எதுவுமே உறுப்பு - 21-க்கு தொடர்புடையதாகும்.


சுதந்திரத்தின் இரண்டு கட்டங்கள் (Two Phases of liberty)

நேர்மறை சுதந்திரம் (Positive Liberty)

நேர்மறை சுதந்திரம் என்பது சிலவற்றை செய்வதற்கான சுதந்திரம் ஆகும். இது தனிமனிதன் தன்னுடைய உரிமைகள் மூலம் ஆளுமை தன்மையை மேம்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது.

எதிர்மறை சுதந்திரம் (Negative Liberty)

ஜே.எஸ்.மில்லின் கூற்றுப்படி சுதந்திரம் என்பது எதிர்மறையானதாகும். மனிதனின் மீதும், அவனது செயல்பாட்டின் மீதும் எவ்வகை கட்டுப்பாடுகளும் விதிக்கப்படக் கூடாது என்கிறார். மேலும் மனிதனின் பாதையில் எவ்வகை தடைகளும் இருக்கக் கூடாது என வலுயுறுத்துகிறார்.



அ) இயற்கை சுதந்திரம் (Natural Liberty)

ஒருவர் நினைப்பதைத் தங்கு தடையில்லாமல் நடத்தி முடிப்பதற்கான சுதந்திரமே இயற்கை சுதந்திரம் என்ற கருத்தாக்கம் ஆகும். முற்றிலுமாக தடைகளில்லாத, கட்டுப்பாடுகளற்ற மற்றும் ஒருவர் நினைக்கக்கூடியதை செய்யக்கூடிய சுதந்திரமே இயற்கை சுதந்திரமாகும்.

அனைவருக்குமே சுதந்திரத்தைப் பற்றிய தெளிவற்ற பார்வைகள் உண்டு. அது அவரவர்களின் விருப்பத்தைப் பொறுத்து அமைகிறது. பத்து நபர்கள் சுதந்திரத்தைப் பற்றி கருத்துரைக்கிறார்கள் எனும்போது ஒரு வேளை எந்த இருவேறு நபர்களும் அவர்களின் சுதந்திரத்தைப் பற்றிய வரையறையில் ஒன்றுவது இல்லை. மேலும் சுதந்திரத்தின் கருப்பொருளையும் அவர்கள் விரும்பிய வகையில் தெளிவாக் கூறுவதில்லை. இந்தப் பொதுப்படையான அறிவியல் சார்பில்லாத சொற்பிரயோகத்தினையே இயற்கை சுதந்திரம் என்கிறோம்.

– பேராசிரியர் ஆர்.என்.கில்ரீஸ்ட்.
(Professor R.N.Gilchist)

சுதந்திரம் பற்றிய விவாதங்கள்

ஜான்லாக் (JohnLocke): இயற்கை நிலையில் மனிதர்கள் வாழ்வுரிமை, சுதந்திர உரிமை மற்றும் சொத்துரிமை ஆகியவற்றினை அனுபவித்தார்கள்.

எதிர்வாதம்: இது முழுமையாக தவறாகும், இதற்கு காரணம் அரசு என்பது மட்டுமே மேற்கூறிய உரிமைகள் அனுபவிப்பதற்கு உத்திரவாதமளிக்கிறது. இயற்கை நிலையில் உரிமைகள் அல்லாமல் மிருகங்களுக்கு உண்டான வலிமையை மட்டுமே மனித இனம் பெற்றிருந்தது.

ரூசோ (Rousseau): மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான். ஆனால் எங்கெங்கு காணினும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிறான்.

எதிர்வாதம்: ரூசோவுடைய கருத்தின்படி, மனிதனின் ஆளுமைத்தன்மை வளர்ச்சி அடைய வாய்ப்பில்லை. சமூக ஒப்பந்த கோட்பாட்டியலாளர்களின் கூற்றுப்படி சுதந்திரம் ஓர் உரிமமாக மட்டுமே வழங்கப்படுகிறது. மனிதர்களை தாங்கள் விரும்பும் செயல்களை செய்வதற்கு அனுமதித்தால், அங்கு குழப்பமே மிஞ்சுகிறது.



ஆ) குடிமைச் சுதந்திரம் (Civil Liberty):

சட்டத்தின் ஆட்சியை பிரதிபலிப்பதே குடிமை சுதந்திரத்தின் கருத்தாக்கமாகும். இது குடிமக்கள் சமுதாயத்தில் அனுபவிக்கும் சுதந்திரம் அரசில் உள்ளது என்பதைக் குறிப்பதாகும். சட்டத்தின் வரன்முறைகளுக்கு உட்பட்டு அச்சுதந்திரம் அனுபவிக்கப்படுகிறது. குடிமை சுதந்திரத்தை, பாதுகாப்பதற்கு உண்டான உத்திரவாதத்தை அரசின் சட்டங்கள் வழங்குகின்றன.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

மனிதர்களுக்கிடையேயான வரையறுக்கப்பட்ட சட்டங்களும், உறுதியான நிறைவேற்றுதல் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவமும் மனிதனின் குடிமை சுதந்திரத்தை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு கொண்டு செல்கிறது.

– கெட்டல் (Gettel)


இ) அரசியல் சுதந்திரம் (Political Liberty)

அரசியல் சுதந்திரத்தின் கருத்தாக்கம் என்பது குடிமக்கள் அரசியல் வாழ்வில் பங்கேற்பதுடன், அரசின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதும் ஆகும். லீலாக் என்னும் அறிஞர் அரசியல் சுதந்திரத்தை 'அரசமைப்பு சுதந்திரம்' என்று கூறுகிறார். கில்கிரீஸ்ட் என்னும் அறிஞர் அரசியல் சுதந்திரத்தை மக்களாட்சியோடு ஒத்த பொருளுடையது என்று கருதுகிறார். அரசியல் சுதந்திரம் என்பது குறைந்தபட்ச உரிமைகளை உள்ளடக்கியதாகும். வாக்குரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, பொதுக்கருத்து உரிமை, அரசாங்கத்தின் குறைபாடுகளை

எடுத்துரைக்கும் உரிமை, மனுசெய்யும் உரிமை போன்றவை இவ்வகை உரிமைகளாகும்.

ஈ) தனிப்பட்ட சுதந்திரம் (Personal Liberty)

எந்தவொரு அடக்குமுறையோ அல்லது சட்டவிரோதமான கட்டுப்பாடுகளோ இல்லாமல் தனிமனிதர்கள் தாங்கள் நினைக்கும் காரியங்களை செயல்படுத்தும் நிலையினை இச்சுதந்திரம் எடுத்துரைக்கின்றது. மேலும் எந்த ஒரு தனிநபரின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், அடுத்தவர்கள் குறுக்கிட அனுமதிக்காத உரிமையும் இவ்வகையைச் சேர்ந்தது ஆகும். அனைத்து தனிநபர்களுக்குமே உடுத்துதல், உண்ணுதல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், திருமணம் மற்றும் குழந்தைகளின் கல்வி போன்றவைகளில் தனிப்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு, தனிநபர் விவகாரத்தில் தலையிடுவது ஆகாது. தனிமனித சுதந்திரம் என்பது மனித சமுதாயம் சுதரந்திரமாக மேம்படுவதற்கு ஒத்துழைப்பு நல்குகிறது.




உ) பொருளாதார சுதந்திரம்

ஒருவரின் அன்றாட வாழ்வாதாரத்திற்கான உணவை தேடி கொள்ளும் தனிநபர் சுதந்திரம் என்பது பொருளாதார சுதந்திரம் ஆகும். நியாயமான வழிமுறைகளின் மூலமாக ஒருவரின் அன்றான வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்து கொள்ள சாதி, நிறம், இனம், மற்றும் பாலினம் போன்றவைகளுக்கு அப்பாற்பட்டு சுதந்திரமாக வருவாய் ஈட்டுவதே பொருளாதார சுதந்திரம் ஆகும்.

பொருளாதார சுதந்திரம் என்றால், தனிமனிதருக்கு உண்டான, தேவைப்படுகிற அன்றாட வருவாய் மற்றும் உணவை தேடிக்கொள்ள ஏற்படுத்தப்படும் பாதுகாப்பு மற்றும் வாய்ப்புமாக நான் கருதுகிறேன். வேலையில்லா திண்டாட்டத்திலிருந்தும், போதாமை மற்றும் இல்லாமையிலிருந்து உருவாகும் பயத்திலிருந்தும் நான் விடுதலை அடைய வேண்டும். ஏனெனில் இவ்வகையான பயம் ஆளுமைத்தன்மையின் வலிமையை குறைக்கச் செய்கிறது. நாளைய தேவையிலிருந்து விடுபட நான் பாதுகாப்புடன் வாழ விரும்புகிறேன்.

– **ஹெரால்டு J. லாஸ்கி** (*Harold.J.Laski*)



சுதந்திரத்தற்கான சரியான வரையறை இதுகாறும் இவ்வுலகத்தில் எழுதப்படவில்லை. மேலும் அமெரிக்க குடிமக்களுக்கு தற்சமயம்தான் அந்த வரையறை தேவைப்படுகிறது. நாம் அனைவரும் சுதந்திரத்தை அறிவித்திருக்கிறோம், ஆனால் நாம் உபயோகப்படுத்தும் அந்த வார்த்தைக்கு அர்த்தம் அதுவல்ல. ஒரு செம்மறியாட்டின் கழுத்தை பிடித்திருக்கும் ஓநாயை, மேய்ப்பவன் துரத்தியடிக்கிறான். அதற்காக அந்த செம்மறியாடு அவனுக்கு நன்றியை தெரிவிக்கிறது. ஆனால் அந்த ஓநாயோ, அவனை சுதந்திரத்தை ஒழிப்பவன் என குறை கூறுகிறது. ஏனெனில் குறிப்பாக அந்த ஓநாய்க்கும், கறுப்பு செம்மறியாட்டிற்கும் சுதந்திரம் தொடர்பான ஒத்த கருத்துகள் அமைவதில்லை. இதைப் போலவே தான் மனித இனத்திற்கு இடையேயும் தற்பொழுது சுதந்திரத்தைப் பற்றிய வேறுபாடுகள் உள்ளன.

– **ஆப்ரகாம் லிங்கன்** (*Abharam Lincoln*)

செயல்பாடு

காலவரிசை செயல்பாடு

கேட்டலோனியா புரட்சியின் வரலாறு

15–ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த கேட்டலோனியாவின் சுதந்திரப் போராட்டம், வாக்கெடுப்பின் மூலமாக ஸ்பெயின் நாட்டில் அரசமைப்பு சட்ட நெருக்கடியை உண்டாக்கியது.

1640 – காஸ்டைல் உடனான போரில் கேட்டலோனியா, பிரான்ஸ் நாட்டுடன் கூட்டணி வைத்தல்

1479 – காஸ்டைல் மற்றும் அரகான் பிராந்தியங்கள் ஒன்றிணைந்து கேட்டலோனியா ஆனது.

1714 – தன்னாட்சி முடிவுக்கு வந்தது அதிகாரம் ஸ்பெயினிடம் மீளுதல்

1659 – ஸ்பெயினும், பிரான்சும் அமைதியை ஏற்படுத்தின. கேட்டலோனியா மீண்டும் ஸ்பெயினுடன் இணைந்தாலும் தனது தன்னாட்சியை தக்க வைத்துக் கொண்டது.

1932 – கேட்டலோனியா தன்னாட்சியை திரும்ப பெறுகிறது. காஸ்டிலன் மற்றும் கேட்டலோன் ஆகியவை அலுவல் மொழிகளாயின.

1901 – முதல் கேட்டலோனியா தேசிய கட்சி உருவாதல்

1939 – உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்தது. பிராங்கோ படைப் பெருந்தலைவர் கேட்டலோன் அரசாங்கத்தை தடை செய்தார்.

1934 – கேட்டலோன் தனிநாடு பிரகடனம் குறைந்த காலத்திற்கு மட்டுமே நீடித்தது.

2006 – கேட்டலோனியா அரசாங்கத்தின் தன்னாட்சி அதிகரித்தது.

1979 – கேட்டலோனியா மீண்டும் தன்னாட்சியை பெற்றது

2012 – வரிக்கட்டுப்பாட்டை குறைக்க மேட்ரிட் ஒத்துக்கொள்ள மறுத்தது.


2010 – அரசமைப்பு நீதிமன்றத்தால் கேட்டலோன் தன்னாட்சி குறைக்கப்பட்டது..

2017 – சுதந்திரமான பொது வாக்கெடுப்பினை கேட்டலோனியா பெரும்பான்மை வாக்கின் மூலமாக நிறைவேற்றியது. இருப்பினும் ஸ்பெயினின் அரசாங்கம் கேட்டலோனியா அரசாங்கத்தினை பதவி நீக்கியதுடன் விரைவில் தேர்தலுக்கு வழி செய்தது.

2014 – சுதந்திர வாக்கெடுப்பு அரசியல் சட்டத்திற்கு புறம்பானது என அறிவிப்பு

Source: AFP

வகுப்பில் கேட்டலோனியா புரட்சியின் காலவரிசையை பற்றி விவாதித்தல்



- கேட்டலோனியா எங்கு உள்ளது?
- பிரிவினை இயக்கத்தின் வரலாற்றை விவரி.
- அரசியல்ஆட்டக்காரர்கள் யாவர்?
- பிரிவினை வாதம் எவ்வாறு ஸ்பெயினின் பொருளாதாரத்தை பாதித்தது?

சுதந்திரம் பரவுதல்

சுதந்திரம் என்பது அரசின் முக்கிய நிலைமையாக கருதப்படுகிறது. இது மனிதர்களின் ஆளுமைத்தன்மையை மேம்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமைகின்றது.

ஏ) நிதி சுதந்திரம்

பிரதிநிதித்துவம் இன்றி வரிவிதிப்பு கூடாது என்பது இச்சுதந்திரத்தின் கொள்கையாகும். தங்களுடைய வரிப்பணம் எவ்வாறு செலவிடப்பட வேண்டும். யாருக்குபோய் சேர வேண்டும் என்பதில் தெளிவு வேண்டும் என்பது நடுத்தர வர்க்கத்தின் கோரிக்கையாகும்.

குடிமை மற்றும் நிதி சுதந்திரம் ஆகிய இவ்விரண்டுமே உரிமையாளர்களின் உடைமையையும், உரிமையையும் சார்ந்ததாகும். குடிமை மற்றும் நிதி சுதந்திரம் இல்லாமல் தங்களால் வாழவே இயலாது என்பது நடுத்தரமக்களின் கூற்று ஆகும். மேற்குறிப்பிட்ட சுதந்திரங்கள் முறையே இல்லாதுபோயின், தன்னிச்சையான ஆட்சியால் தாங்கள் சுரண்டப்படுவதுடன் உயிர் வாழ்வதும் இயலாத காரியம் என்பது நடுத்தர மக்களின் எண்ண வெளிப்பாடாக விளங்குகிறது.

ஐ) குடும்பம் சார்ந்த சுதந்தரம்

பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சமமான உரிமையை வழங்குவது இவ்வகை சுதந்திரமாகும். கொடுமையாக நடத்துதல், இம்சித்தல், மற்றும் சுரண்டல் போன்ற அநாகரீகமான செயல்களுக்கு எதிராக அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் கல்வியுரிமை வழங்க வேண்டும் என்பதே குடும்ப சுதந்திரத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

ஒ) தேசிய சுதந்திரம்



அடிப்படை சுதந்திரத்தை சிறிய அளவிலான தற்காலிக பாதுகாப்பிற்காக யாரேனும் துறந்தால் அவர்கள் சுதந்திரமோ அல்லது பாதுகாப்போ கிடைப்பதற்கு தகுதியற்றவர்களாவர்.

– பெஞ்சமின் பிராங்ளின் (Benjamin Franklin)

ஒரு நாடு அல்லது தேசத்தில் நிலவக்கூடிய சுதந்திர சூழ்நிலையை தேசிய சுதந்திரம் என்கிறோம். ஒரு தேசமோ அல்லது சமூகமோ சுதந்திரம் மற்றும் இறையாண்மையுடன் கூடிய நிலையை அடையும் போது தேசிய சுதந்திரம் இருக்கிறது எனலாம். இதையே தேச சுதந்திரம் அல்லது தேச இறையாண்மை என்றும் குறிப்பிடலாம். அனைத்து தேசங்களும் சுதந்திரமாக இருப்பதையே விரும்புகின்றன. சுதந்திரம் இல்லாத சூழ்நிலையில், அத்தேசம் வளர்ச்சிப் பாதையில் செல்ல இயலாது.

ஏகாதிபத்தியத்தின் கட்டுக்குள் இருந்த அத்தனை நாடுகளுக்கும் விடுதலை என்பது

11th Std Political Science Tamil_Unit-3.indd 81 6/20/2018 6:05:09 PM

இறுதி முழக்கமானது. இவ்வாறாக, ஏகாதிபத்ய சக்திகளால் பாதிக்கப்பட்ட தேசங்கள் அத்தனையுமே அயல்நாட்டு ஆட்சியையும், ஆக்கிரமிப்பையும் எதிர்த்து சுதந்திரம் பெறும்வரை போராட்டத்தில் ஈடுபட்டன. ஆஸ்திரியாவுக்கு எதிரான இத்தாலியின் போராட்டம், ஹிட்லர் மற்றும் நெப்போலியனுக்கு எதிரான இங்கிலாந்தின் போராட்டம், ஆப்பிரிக்க நாடுகளின் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம், இங்கிலாந்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டம் போன்ற உதாரணங்கள் தேசத்தின் சுதந்திர வேட்கை பற்றிய வரலாற்று நிகழ்வுகளாகும். இந்தியாவின் மீது சீனா 1962-ல் தாக்குதல் தொடுத்த போதும், பாகிஸ்தான் முறையே 1965, 1971-ல் தாக்குதல் நடத்திய போதும் இந்திய அரசாங்கம் தேச சுதந்திரத்தை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

> சுதந்திரம் என்பது மனிதர்களை நோக்கி வருவது அல்ல, மாறாக மனிதர்களே சுதந்திரத்தை நோக்கி எழுச்சி கொண்டு செல்ல வேண்டும். மகிழ்வுடன் வாழ்வதற்காக சிரமப்பட்டு பெறப்படுகின்ற சுதந்திரம் ஓர் ஆசீர்வாதமாகும்.
>
> **– புது தில்லி, மத்திய செயலகத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.**

ஓ) பன்னாட்டு சுதந்திரம்

உலக நாடுகளின் கூட்டாட்சியையும், மற்றும் பன்னாட்டு கூட்டுறவையும் ஏற்படுத்தக் கூடிய பன்னாட்டு அமைதியே இவ்வகை சுதந்திரத்தின் கருத்தாக்கமாகும். தேசிய கொள்கையில் வலிமையை ஓர் காரணியாக பயன்படுத்துவதை தாராளவாதிகள் எதிர்க்கின்றார்கள். முதலாளித்துவமானது அமைதி மற்றும் பன்னாட்டு கூட்டுறவின் மூலமாக உலக வளங்கள் மேலும் மேன்மையடையவும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு பொருட்கள் தங்குதடையின்றி செல்வதற்கும் வேண்டுகிறது. இதற்கு அரசியல் மற்றும் ஏனைய தடைகளை தகர்த்தெறியவும் இக்கொள்கை பாடுபடுகிறது. இதனால் உலக நலன்கள் மேம்பாடு அடைகின்றன.

குறியீட்டு பொருள்

சுதந்திரதேவி சிலைக்கென்று ஒரு குறிக்கோள் உள்ளது. அது விடுதலையை பற்றிய உலகளாவிய நினைவூட்டலாகவும், அமெரிக்க குடிமக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் அமைந்துள்ளது.



ஆன்ட்ரூ ஹேவுட்டின் சுதந்திரம் பற்றி லட்சியவாதப் பார்வை

தாராளவாதிகள், சுதந்திரத்தை தலையாய தனிமனிதத்துவ விழுமியமாக கருதி முன்னுரிமை அளிக்கிறார்கள். மரபுவழி தாராளவாதிகள் எதிர்மறை சுதந்திரத்தை ஆதரிக்கின்றார்கள். எதிர்மறை சுதந்திரம் என்பது முழுவதுமாக கட்டுபாடற்ற அல்லது விருப்புரிமை வாய்ப்பற்ற சுதந்திரமாகும். ஆனால் நவீன தாராளவாதிகள் நேர்மறை சுதந்திரம் அல்லது கட்டுப்பாடான சதந்திரத்தை பேணுகின்றார்கள். ஏனெனில் கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரமே மனிதம் மலர்வதற்கும், தனிமனித மேம்பாட்டிற்கும் உறுதுணையாக அமையும்.

பழமைவாதிகள், சுதந்திரத்தின் வலிமையற்ற பார்வையை ஆதரிக்கின்றார்கள். இவற்றையே கடமைகளையும், பொறுப்புகளையும் விருப்பத்துடன் அங்கீகரிப்பதாக கருதுகிறார்கள். அதே சமயம் எதிர்மறை என்பது சுதந்திரம் சமூகத்தின் கட்டமைப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. ஆனால் அவர்கள், எதிர்மறை சுதந்திரத்தை பொருளாதார துறையிலும், சந்தைகளின் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் வலியுறுத்துகின்றனர்.

சமதர்மவாதிகள், சுதந்திரம் பொதுவாக நேர்மறையாக புரிந்து கொள்ளப்படுகிறது, கூட்டுறவு சமூக தொடர்பு அல்லது படைப்பாக்க உழைப்பு மூலமாக சுயதிருப்தி அடைவதை சுதந்திரமாக அணுகுகின்றார்கள். சமூக மக்களாட்சிவாதிகள் நவீன சுதந்திரத்துவத்துடன் ஒத்த கருத்தாக, சுதந்திரத்தை தனிமனித திறமையின் மெய்ப்படுதலாக பாவிக்கின்றார்கள்.

அமைப்பெதிர்வாதிகள், அரசியல் அதிகாரத்துவத்துடன் எவ்விதத்திலும் ஒத்துபோகாத, முழுமையான விழுமியமாக சுதந்திரம் கருதப்படுகிறது. சுதந்திரம் என்பது சுயவிருப்பமும், சுய இயக்கமுமாக தனிமனிதனின் தன்னாட்சி நிலையை ஊக்குவிக்கும் சூழ்நிலையாக பார்க்கப்படுகிறது. வெறுமனே "தனித்துவிடுதல்" என்பது சுதந்திரம் அல்ல, பகுத்தறிவிலான சுய விருப்பம் மற்றும் சுய வழிகாட்டுதலாகும்.

பாசிசவாதிகள், சுதந்திரம் அனைத்து விதத்திலும், ஒவ்வாதது என்பது இவர்களின் வாதம். உண்மையான சுதந்திரம் என்பது தலைமையிடம் எந்த கேள்விக்கும் இடமில்லாமல் சரணாகதி அடைவதும், தேசத்துக்காக தனிமனிதத்தை தியாகம் செய்யவுமாக இருக்கக்கூடிய சமூகமே சுதந்திரமானது என்பது பாசிசவாதிகளின் கருத்தாகும்.

சூழலியலாளர்கள், தனிப்பட்ட சுயநலத்தை உலக சூழலில் கலந்து சுய உணர்தலையும், ஒருமித்த தன்மையும், அடைவதே சுதந்திரம் என்பதாகும். அரசியல் சுதந்திரத்திற்கு முரணாக சில சமயங்களில் உள்ளார்ந்த சுதந்திரம் மற்றும் சுய அறிதலுக்கான சுதந்திரத்தையும் ஆதரிப்பவர்கள் இக்கோட்பாட்டாளர்களாவர்.

மத அடிப்படைவாதிகள், ஆழ்மனதின் உள்ளார்ந்த ஆன்மீக நல்லியல்பை போற்றுவதே சுதந்திரமாக இவர்களால் கருதப்படுகிறது. இறைவனின் விருப்பத்தை வெளிப்படுத்துவதும், மதவாத அதிகாரத்துவத்திற்குத் தலைவணங்கி ஆன்மீக மன திருப்தியை அடைவதுமே சுதந்திரத்தின் பாதையாகிறது.

ஹேவுட் ஆண்ட்ரு (2004) அரசியல் லட்சியவாதங்கள் ஓர் அறிமுகம், 4–ம்பதிப்பு, நியூயார்க்: மேக்மில்லன் (*Heywood, Andrew. (2004) Political Ideologies: An Introduction, 4th ed. New York: Macmillan*)

சுதந்திரம், இறையாண்மை மற்றும் சட்டம் ஆகியவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது?

சுதந்திரம் என்பது முழுவதுமான சட்டங்களில்லாத நிலையல்ல. அரசு ஒழுங்குமுறையில் இயங்கினால் மட்டுமே சுதந்திரம் செயல்படுகிறது.

அமைப்பெதிர்வாதம் என்பது ஒழுங்கற்ற தன்மையோ அல்லது குழப்பமான நிலையோ அன்று மாறாக அடக்குமுறையிலான மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவத்தின் ஏகபோக ஆற்றல், அதிகாரத்திலிருந்து சுதந்திரம் பெறுவதாகும்.

அரசு சட்டங்களை இயற்றுகிறது. இறையாண்மை மிக்க அரசு செயல்படுவது சட்டங்களால் மட்டுமே ஆகும். சுதந்திரம், இறையாண்மை,மற்றும் சட்டம் ஆகியவற்றிற்கு இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. அமைப்பெதிர்வாதிகள் மற்றும் தொழிற்சங்கவாதிகள் போன்றோர் அரசை அழிக்க விரும்புகிறார்கள். அரசு அதிக அதிகாரம் படைத்ததாக செயல்படும்போது, தனிமனித சுதந்திரம் குறைக்கப்படுகிறது என்பது அவர்களுடைய கருத்தாகும்.

தனிமனிதத்துவாதிகளின் கருத்துக்கள்

இவர்கள் அரசை தனிமனித சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் கருவியாக சித்தரிக்கின்றனர். இதனால் அரசின் அதிகாரம் குறைக்கப்பட வேண்டும் என உரைக்கப்பட்டு இங்கிலாந்தில் இவ்வகையான கொள்கை பல ஆபத்தான விளைவுகளை உண்டாக்கியது.

தற்போதைய காலக்கட்டத்தில் உலக அளவில் சட்டமே சுதந்திரத்தின் பாதுகாவலனாக விளங்குவதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். சட்டம் இல்லாவிட்டால் சுதந்திரம் இருக்காது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

சட்டங்கள் இல்லையென்றால் அங்கே சுதந்திரம் இல்லை

– ஜான்லாக் (John Locke)

லட்சியவாதிகளின் கருத்து

சட்டம் இல்லாவிட்டால் சுதந்திரமான சூழ்நிலை இருக்காது. லட்சியவாதிகளின் கூற்றுப்படி சட்டத்திற்கு கீழ்பணிதல் என்பது உண்மையான விருப்பத்திற்கு கீழ்பணிதல் ஆகும்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

பூமியில் இறைவனின் ஆட்சியே அரசு எனப்படுகிறது. மேலும் சமூக நீதிநெறியின் உறுப்பாகவும், நன்னெறி மேலான வெளிப்பாடாகவும் அரசு விளங்குகிறது.

– ஹெகல் (Hegel)

சட்டம் எவ்வாறு சுதந்திரத்தை பாதுகாக்கிறது?

- சமூகத்தில் குடிமை வாழ்வை எவ்வித பிரச்சினையும் இன்றி நடத்துவதற்குண்டான இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. சட்டம் குற்றவாளிகளை தண்டித்து தனிமனிதர்களின் உரிமைகளை பாதுகாக்கின்றது.
- தனிமனித உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு சட்டம் உத்திரவாதம் அளிப்பதுடன் அவற்றை பாதுகாக்கவும் செய்கிறது. சக மனிதர்களுக்கு, ஒருவர் தீங்கு விளைவிக்கும்போதும், அவர்களின் வழியில் குறுக்கீட்டு சீர்குலைக்கும்போதும் அரசு அவர்களை தண்டிக்கிறது.
- சுதந்திரத்தின் பாதுகாவலனாக அரசமைப்பு விளங்குகிறது. அரசின் அதிகாரத்துவத்தை கட்டுப்படுத்துவதுடன் மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கின்றது.

சுதந்திரம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது?



அ) மக்களாட்சி

வேறு எந்த அரசாங்க முறையையும் விட சுதந்திரம் என்பது மக்களாட்சியில் பாதுகாப்பாக இருக்கிறது எனலாம். மக்களின் அரசாங்கமாக மக்களாட்சி செயல்படுகிறது. ஏனைய ஆட்சிகளான முடியாட்சி மற்றும் சர்வாதிகார ஆட்சி ஆகியவை அதிகார குவிப்பை ஒருவரிடமோ அல்லது குழுமத்திடமோ ஒப்படைக்கின்றன. மக்களாட்சியில் எதிர்க்கட்சிகள் தகுந்த மரியாதையுடன் நடத்தப்படுகின்றன. அரசாங்கத்தை பற்றிய குறைகூறல் என்பது மக்களாட்சியில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டு சகித்துக் கொள்ளப்படுகின்றன.

ஆ) அரசமைப்பு

ஒரு நாட்டின் அரசமைப்பில் இருந்து தான் அரசின் அதிகாரத்துவம்/ ஆணையுரிமை பெறப்படுகிறது.

நாம் அரசமைப்பின் முகவுரையை தெளிவாகவும், கவனமாகவும் படித்து புரிந்து கொள்வோம். மக்களாட்சியைப் பற்றிய கவிதையாக இந்திய அரசமைப்பின் முகவுரை விளங்குகிறது. இது ஒட்டுமொத்த இந்திய அரசமைப்பினுடைய அடிப்படை தத்துவத்தை தன்னுள் கொண்டதாகும். அரசாங்கத்தால் உருவாக்கப்படுகின்ற சட்டமும், அதனால் நிறைவேற்றப்படுகின்ற மக்கள் நல நடவடிக்கைகளும், மக்கள் நலனிற்கு உகந்ததா, இல்லையா என்பதை ஆராய்ந்து மதிப்பிடும் தன்மை படைத்தது அரசமைப்பு முகவுரையாகும். இந்திய அரசமைப்பின் ஆன்மாவாக முகவுரை கருதப்படுகிறது.

இறையாண்மை

உள்நாட்டு விவகாரங்களிலும், வெளி விவகாரங்களிலும் முடிவெடுக்கக்கூடிய மேலான உரிமை மக்களிடம் மட்டுமே இருக்கிறது. எந்த வெளிப்புற அதிகார அமைப்பும் இந்திய அரசாங்கத்திற்கு ஆணையிடும் அதிகாரம் கிடையாது.

சமதர்மம்

மக்களுக்கு தேவைப்படும் வளங்களை மக்களே உருவாக்கவும், அவற்றை சமமாக பகிரவும் சமுதாயத்தில் உள்ள உரிமையாகும். அரசாங்கமானது நிலம் மற்றும் தொழில் சார்ந்த உரிமையை ஒழுங்குமுறைப்படுத்தி சமூக-பொருளாதார சமத்துவமின்மையை குறைக்கிறது.

மதசார்பின்மை

எந்த மதத்தை வேண்டுமென்றாலும் பின்பற்றக்கூடிய முழுமையான சுதந்திரம் குடிமக்களுக்கு உண்டு. ஆனால் அலுவல் மதம் என்று ஒன்று இல்லை. அரசாங்கம் அனைத்து மதங்களின் நம்பிக்கைகளையும், சம்பிரதாயங்களையும் சமமான மரியாதையுடன் பாவிக்கும் தன்மை படைத்தது.

மக்களாட்சி

இவ்வகை அரசாங்கத்தில் மக்கள் சமமான அரசியல் உரிமைகளை அனுபவிக்கவும், தங்களின் ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கவும், பொறுப்புடன் அவர்களை செயல்பட வைக்கவும் ஏதுவான முறை மக்களாட்சி ஆகும். அரசாங்கம் சில அடிப்படை விதிமுறைகளின் அடிப்படையில் செயல்படுகிறது

குடியரசு

அரசின் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருத்தல் வேண்டுமே தவிர வாரிசுரிமை அடிப்படையில் அல்ல

நீதி

குடிமக்களை சாதி, மதம் மற்றும் பாலின அடிப்படையில் பாகுபடுத்துவது தவறாகும். சமூக ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டும். அரசாங்கம் அனைத்து மக்களின் நலனுக்காகவும், முக்கியமாக பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்திற்கு உழைக்கவும், செயல்படவும் வேண்டும்

சுதந்திரம்

குடிமக்கள் சுதந்திரமாக சிந்திக்கவும், எண்ணங்களை வெளிப்படுத்தவும், எண்ணியபடி நடவடிக்கைகளில் ஈடுபடவும் நியாயமற்ற கட்டுப்பாடுகள் கிடையாது.



சமத்துவம்

சட்டத்தின் முன் அனைவரும் சமம். பழமையான, பாரம்பரியமான ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும். அரசாங்கமானது அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

சகோதரத்துவம்

நான் அனைவரும் ஒரே குடும்பத்தில் வசிக்கும் அங்கத்தினர்கள் போல சக மனிதர்களையும் பாவித்து நடந்து கொள்ள வேண்டும். சககுடிமகன் யாரையும் தாழ்வாக பாவிக்கக்கூடாது.

இந்திய மக்களாகிய நாம்
(We, the people of India)

இந்த அரசமைப்பானது, மக்களால் தங்களின் பிரதிநிதிகளின் மூலமாக உருவாக்கப்பட்டு இயற்றப்பட்டதாகும். இதை மக்களுக்கு அரசரோ அல்லது வேறு அந்நிய சக்திகளோ தரவில்லை.

இ) அடிப்படை உரிமைகள்

அரசின் அதிகாரத்துவத்தை வரையறுப்பது அடிப்படை உரிமைகள் ஆகும். தனிமனிதர்களின் சொந்த விவகாரங்களில் அரசாங்கத்தின் தலையீடின்றி இருப்பதற்கு இவ்வகை உரிமைகள் உறுதியளிக்கின்றன.

ஈ) அதிகாரப் பரவலாக்கம்

சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு அதிகாரப் பரவலாக்கம் அவசியமாகின்றது. அதிகாரங்கள் முறையே மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அரசாங்கத்திற்கு பகிர்ந்து அளிக்கும் பட்சத்தில் நிர்வாகம் திறம்பட செயலாற்ற இயலும்.

அடிப்படை உரிமைகள்

- சமத்துவ உரிமை (உறுப்பு 14-18)
- சுதந்திர உரிமை (உறுப்பு 19-22)
- சுரண்டலுக்கு எதிரான உரிமை (உறுப்பு 23-24)
- மதச்சுதந்திர உரிமை (உறுப்பு 25-28)
- பண்பாடு மற்றும் கல்வி உரிமை (உறுப்பு 29-30)
- அரசமைப்பு பரிகார உரிமைகள் (உறுப்பு 32-35)

அதிகாரப்பரவல் என்றால் என்ன?

பொது புரிதல்
– படிநிலை அணுகுமுறை


மத்திய அரசாங்கம்

மாநில அரசாங்கம்

உள்ளாட்சி அரசாங்கம்



சரியான புரிதல்
– அரசாங்க தடைமுறைகளில் குடிமக்களே முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.



சுதந்திரமான நீதித்துறை

குடிமக்களின் சுதந்திரத்திற்கான பாதுகாப்பு என்பது நீதித்துறையின் சுதந்திரத்தைச் சார்ந்தே அமைகிறது. நீதித்துறை சுதந்திரமாக செயல்பட வேண்டுமெனில், செயலாட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து தனித்திருப்பது அவசியமாகும். பொதுவுடைமை மற்றும் சர்வாதிகார நாடுகளில் மக்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டாலும் நீதித்துறை செயலாட்சியின் ஆதிக்கத்தில் அமைகிறது. இவ்வாறான நாடுகளில், அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதும், சுதந்திரத்தை பேணுவதும், அரசமைப்பினை நடைமுறைப்படுத்துவதும் கடினமாகும்.

உ) பொருளாதார இடர்காப்பு

சுதந்திரத்தின் நிபந்தனையாக பொருளாதார சுதந்திரம் அமைகிறது. "ஏழை மற்றும் பணக்காரர், படித்தவர் மற்றும் படிக்காதவர் என்ற பிரிவினை சமூகத்தில் நிலைக்கும் வரையிலும் எஜமானர் மற்றும் பணியாளர் என்ற உறவுமுறை நீடிக்கும்".

ஊ) சட்டத்தின் ஆட்சி

சட்டத்தின் ஆட்சி என்பது இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது. சாதி, இனம், நிறம், மற்றும் நம்பிக்கை போன்றவைகளில்

சுதந்திரமான நீதித்துறை

இந்திய அரசமைப்பு, நீதித்துறை சுதந்திரமாக செயல்படத் தகுந்த முறையிலான அம்சங்களை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் சுதந்திரமாக செயல்படும் நீதித்துறையே, மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும், அரசமைப்பின் மேலான தன்மையையும் பாதுகாக்கிறது.

- நீதிபதிகளின் நியமனத்திற்கு பாகுபாடற்ற நடைமுறை பின்பற்றப்படுகிறது.
- நீதிபதிகளுக்கு, உயர்ந்த தகுதிகளை நிர்ணயித்துள்ளது.
- உச்சநீதிமன்ற நீதிபதிகள் 65 வயது வரையிலும், உயர்நீதிமன்ற நீதிபதிகள் 62வயது வரையிலும் பணியாற்றுவார்கள்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்



வறுமை என்பது விபத்து அல்ல. அடிமைத்தனம் மற்றும் நிறவெறி போன்றவை மனிதர்களால் உருவாக்கப்பட்டவை ஆகும். இவை மனிதர்களின் நடவடிக்கைகள் மூலம் களையப்பட வேண்டியவையாகும்.

– நெல்சன் மண்டேலா (*Nelson Mandela*)

வேறுபாடுகள் இல்லாத சமமான ஆட்சியே சட்டத்தின் ஆட்சியாகும். சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம். குற்றங்களில் ஈடுபடும் போது தண்டனைக்கு உள்ளாக வேண்டிய நிலை அனைவருக்குமே ஏற்படுகிறது.

இங்கிலாந்து சட்ட நிபுணரான ஏ.வி. டைசி 'சட்டத்தின் ஆட்சி' என்ற கருத்தாக்கத்தினை 19-ஆம் நூற்றாண்டில் மேலும் பிரபலப்படுத்தியவர் ஆவார். முற்கால தத்துவ ஞானிகளுக்கு 'சட்டத்தின் ஆட்சி' என்னும் சொற்றொடர் அறிமுகமில்லாவிட்டாலும் அக்கருத்தாக்கத்தினை அரிஸ்டாட்டில் எனும் ஞானி 'சட்டமே ஆளுகை புரிய வேண்டும்' என எழுதியுள்ளதை காணலாம்.

எ) அரசியல் கல்வி மற்றும் காலவரம்பற்ற கண்காணிப்பு

சுதந்திரம் என்பதை நிரந்தரமாக பாதுகாக்க முடியும். கல்வியறிவு பெற்றவர்கள் முற்றிலுமாக உரிமைகளையும் கடமைகளையும் பற்றி அறிவர். காலவரம்பற்ற கண்காணிப்பு இருந்தாலொழிய, மக்கள் தவறுகள் செய்வதை நாம் கண்டறியமுடிவதில்லை. அரசாங்கம் தன் அதிகார எல்லையை மீறி மக்களின் தனிப்பட்ட வாழ்வில் தலையிடும்போது அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் புரட்சி செய்கிறார்கள்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"குடிமக்களின் தூய உணர்விலான உத்வேகமானது, சட்டத்தின் வார்த்தைகளை விட குறைவுபடினும் அதுவே அவர்களுக்கு மிகவும் உண்மையான பாதுகாவலாகும்".

– ஹெரால்டு. J லாஸ்கி (*Harold. J. Lask*)

செயல்பாடு

மாணவர்கள் கீழே அளிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பகுதிகளின் நிறைகள் மற்றும் குறைகளைப் பற்றி விவாதிக்கலாம்.

1. சுதந்திரமான நீதித்துறை 2. அதிகாரப் பரவலாக்கம் 3. சட்டத்தின் ஆட்சி 4.மக்களாட்சி

நிறைகள்	குறைகள்
1.சுதந்திரமான நீதித்துறை	1.சுதந்திரமான நீதித்துறை
2. அதிகாரப் பரவலாக்கம்	2. அதிகாரப் பரவலாக்கம்
3. சட்டத்தின் ஆட்சி	3. சட்டத்தின் ஆட்சி
4. மக்களாட்சி	4. மக்களாட்சி

அருஞ்சொற்பொருள்: Glossary



இறையாண்மை(Sovereignty): மேலான அதிகாரம் மிக்கதாக இருப்பதுடன் இவற்றை அழிக்கவோ மற்றும் பிரிக்கவோ முடியாது. சுதந்திரத்திற்கு முந்தைய இந்தியாவிற்கு இறையாண்மை கிடையாது. ஏனெனில் அதற்குக் காரணம் பிரிட்டிஷ் பேரரசு இந்தியாவை ஆட்சி செய்ததாகும். ஒரு நாடு மற்றொரு தேசத்தினால் கட்டுப்படுத்தப்படும்போது இறையாண்மை ஆள்வோரிடம் இருக்குமேயன்றி ஆளப்படுவோரிடம் அல்ல. உலகமயமாதலின் காலத்தில், இறையாண்மை மிகப்பெரிய அச்சுறுத்தலை சந்திக்கின்றது. ஏனெனில் உலகலாவிய பரிமாற்றம் என்பது தவிர்க்க முடியாததாகும்.

முகவுரை(Preamble): ஒரு புத்தகத்தின் முன்னுரை போன்றதே முகவுரை ஆகும். உலகின் எந்த அரசமைப்பிற்கும் முகவுரை ஒரு தொகுப்பு அல்லது அறிமுகம் ஆகும். எந்த ஒரு அரசியல் முறைமையின் அடிப்படைக் கட்டமைப்பை புரிந்து கொள்வதற்கும் முகவுரையைப் படிப்பதே தகுந்ததாகும். நம்முடைய இந்திய அரசமைப்பின் முகவுரை குறிப்பிடுவது என்னவெனில், இந்தியா என்பது மக்களாட்சி, குடியரசு மற்றும் இறையாண்மை போன்றவையாகும்.

வயதுவந்தோர் வாக்குரிமை (Universal adult suffrages): மக்களுக்கு எந்தவித பாகுபாடுமின்றி வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுவதாகும் அதாவது இனம், சாதி, நிறம், மதம், சொத்து மற்றும் இதர பிரவினை காரணிகள் இல்லாமல் வாக்கு அளிக்கும் உரிமையாகும். இந்தியா சுதந்திரம் அடைந்த உடன் வயது வந்தோர் வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. வல்லரசு நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள், வயது வந்தோர் வாக்குரிமையை சுதந்திரம் அடைந்த உடன் அனைவருக்கும் நடைமுறைப்படுத்தவில்லை.

நிரந்தரச்சட்டம் (Statues) : ஒரு நாட்டின் சட்டமன்ற அமைப்பின் மூலமாக எழுதப்பட்ட சட்டமாக ஏற்படுத்தபடுத்தப்படுவதாகும். இவை தகுந்த விவாதங்களுக்கும் பின்னர் நாடாளுமன்ற சட்டங்களில் இணைக்கப்படும்.

நீதி (Justice): கிரேக்க சிந்தனையாளர்களால் முக்கியமான கருத்தாக்க கொள்கையாக விவாதிக்கப்பட்டது. நீதி என்பது எவ்வகையான பாகுபாடுகளையும் கடந்து நிர்வகிக்க வேண்டிய முக்கிய நிகழ்வாகும்.

நிதி (Fiscal): இது பணம் சார்ந்ததாகும். அனைத்து வகையான அரசாங்கங்களும் ஓர் நிதிக் கொள்கையில் கவனம் செலுத்துவது வழக்கமாகும்.

இயற்கை நிலை (State of Nature): சமுதாயத்தில் எவ்விதமான முறைப்படுத்தப்பட்ட அரசாங்க வடிவமும் இல்லாமல் தொன்மையான நிலையில் காணப்படுவது ஆகும்.

அமைப்பெதிர்வாதம் (Anarchy): இது முழுவதும் குழப்பத்துடன் காணப்படுகின்ற நிலையாகும். குறிப்பாக தற்காலத்தில் இராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் நிலையான அரசாங்கக் கட்டமைப்பு இல்லாமல் காணப்படுகின்ற அரசியல் நிலையாகும். இந்த அரசுகள் அமெரிக்க ஆக்ரமிப்பின் கீழ் இருப்பதே இந்நிலைக்கு காரணமாகும்.

நகர அரசு (City – states): இவ்வகை சிறிய அரசுகளில் மக்கள் முடிவு எடுப்பதில் முக்கிய அதிகாரம் வாய்ந்தவர்களாக காணப்படுவார்கள். இது கிரேக்க நாட்டில் 2300 ஆண்டுகளுக்கு முன்பாக செயல்பட்டது.

வாசுதெய்வகுடும்பகம் (Vasudaivakudumbagam): 'உலகம் ஓர் குடும்பம்' என்ற கொள்கை உடையது. இது உலகளாவிய சிந்தனை ஆகும். இது அனைத்து தேசிய அரசுகளையும் ஒன்றுடன் மற்றொன்றினை பிணைந்து ஒரு குடும்பம் போல எந்த வித பாகுபாடுமின்றி செயல்படுவதாகும்.

எளிதில் மாற்றமுடியாதது (Inalienable): இது எளிதில் பிரிக்கமுடியாத ஒன்றாகும்.

அவசரச்சட்டம் (Ordinances): குடியரசுத்தலைவர் அல்லது ஆளுநரால் முறையே நாடாளுமன்றம் அல்லது சட்டமன்ற கூட்டத் தொடர் நடக்காத போது தற்காலிகமாக வெளிப்படக்கூடிய உத்தரவாகும்.

சட்டப்படியான (De-jure): சட்டத்தின் மூலமாக அதிகாரம் பெற்றிருத்தல்.

நடைமுறை (De-facto): உண்மையில் யார் ஒருவர் நடைமுறையில் நிலையான அதிகாரம் பெற்றிருக்கின்றனர் என்பதாகும்.

மதிப்பிடுதல் (Evaluation)

I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

1. இறையாண்மையின் தந்தை எனக் கூறப்படுபவர் யார்?
   (அ) போடின் (ஆ)ஆஸ்டின்
   (இ) பிளாட்டோ (ஈ) அரிஸ்டாட்டில்

2. ஒருமைவாத இறையாண்மை கோட்பாட்டை எடுத்துரைத்தவர்
   (அ) ஆஸ்டின் (ஆ) ஹெகல்
   (இ) மரியம் (ஈ) வில்லோபை

3. மக்களாட்சியில் இறையாண்மையின் உறைவிடமாக இருப்பது
   (அ) அரசு (ஆ) அரசாங்கம்
   (இ) மக்கள் (ஈ) ஊடகம்

4. "நான்தான் அரசு" என கூறியவர் யார்?
   (அ) ஜேம்ஸ் II (ஆ) நெப்போலியன் I
   (இ)லூயிஸ் XIV (ஈ) பிஸ்மார்க்

5. 'இரட்டை குடியுரிமை' காணப்படும் நாடு
   (அ) அமெரிக்கா (ஆ) சீனா
   (இ)ஜப்பான் (ஈ) ஆஸ்திரேலியா

6. "இறையாண்மை என்பது பொது விருப்பத்தை உறைவிடமாகக் கொண்டதாகும்" என கூறியவர்
   (அ) ரூசோ (ஆ) டி.எச்.கிரின்
   (இ)ஆஸ்டின் (ஈ) போடின்

7. 'சுதந்திரம்' என்ற நூலை எழுதியவர்
   (அ) ஜே.எஸ்.மில் (ஆ) லாக்
   (இ) ரூசோ (ஈ) போடின்

8. 'சட்டத்தின் ஆட்சி' என்பதன் முக்கிய நோக்கம் உறுதிப்படுத்துவது என்னவெனில்
   (அ) பத்திரிக்கை சுதந்திரம் (ஆ)குடிமக்களின் சுதந்திரம்
   (இ) சுதந்திரமான நீதித்துறை (ஈ) மேற்கூறிய அனைத்தும்

11th Std Political Science Tamil_Unit-3.indd 89 6/20/2018 6:05:11 PM

9. இந்திய அரசமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகள் பெறப்பட்ட நாடு

(அ) அமெரிக்கா (ஆ) பிரான்ஸ்
(இ) பிரிட்டன் (ஈ) ரஷ்யா

10. 'மதம் என்பது போதை பொருள்' என கூறியவர் யார்?

(அ) மார்க்ஸ் (ஆ)கலிலியோ
(இ)ரஸ்ஸல் (ஈ) பகத் சிங்

11. 'மூலதனம்' என்ற நூலை எழுதியவர் யார்?

(அ) மார்க்ஸ் (ஆ)கிரபோட்கின்
(இ)ஓவன் (ஈ) நேதாஜி

ii. கீழ்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமான விடையளிக்கவும்

12. இறையாண்மையை வரையறுக்கவும்.

13. இறையாண்மையின் வகைகள் யாவை?

14. பாகுபாடு பற்றிய குறிப்பு வரைக.

iii. கீழ்வரும் கேள்விகளுக்கு சுருக்கமான விடையளிக்கவும்

15. இறையாண்மையின் இயல்புகளை விவாதிக்கவும்.

16. 'எதிர்மறை சுதந்திரம்' பற்றிய சிறு குறிப்பு வரைக

17. 'அமைப்பெதிர்வாதம்' என்றால் என்ன?

18. 'சாதிய பாகுபாடு' பற்றி விவாதிக்கவும்.

19. மனித உரிமைகள் என்றால் என்ன?

iv. கீழ்வரும் கேள்விகளுக்கு விரிவான பதில் அளிக்கவும்

20. இறையாண்மையின் கருத்து மற்றும் சிறப்பியல்புகளை ஆராய்க

21. சுதந்திரத்தின் மீறலுக்கான காரணிகளை விளக்குக

22. மதப்பாகுபாட்டின் குறைகளை விவாதிக்கவும்.

23. இந்திய அரசமைப்பிலுள்ள சமத்துவத்தை பற்றி விளக்குக.

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Agarwal .R.C.Political theory (Principles of Political science), chand & company, New Delhi, 2005.
2. Rajeev Bhargava & Ashok Acharya (Ed), Political theory: An Introduction, Thomson press, New Delhi, 2016.

11th Std Political Science Tamil_Unit-3.indd 90 6/20/2018 6:05:11 PM

அலகு 4

அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் – பகுதி II

4.1 சட்டம்

4.1.1 அறிமுகம்

அரசின் இறையாண்மையால் உத்திரவாதம் அளிக்கப்படுகின்ற விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் சட்டம் எனப்படுகிறது. போடின் (Bodin) கூறுவதுபோல, இறையாண்மையின் கட்டளையே சட்டம் ஆகிறது.

இதனைப் போன்று அரிஸ்டாட்டிலும், "சட்டம் செயல்படாத நிலையில் மனிதர்கள் விலங்குகளாக மாறுகிறார்கள்" என்று சரியாக சுட்டிக்காட்டுகிறார். சமுதாயத்தின் கட்டுக்கோப்பினைப் பாதுகாக்கவும், தேசத்தின் வளர்ச்சியை மேம்படுத்தவும், சட்டமானது உலகம் முழுமைக்கும் இன்றியமையாததாகிறது. சமுதாய ஒழுங்கினைப் பராமரிக்க, சட்டத்தின் அபரிமிதமான சக்தி மட்டுமே முழு தீர்வாக விளங்க முடியாது. ஏனெனில் சட்டத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட வரையறை உள்ளது. குற்றவாளிகளுக்கு சட்டம் கொடுங்கோலனாகவும், குடிமக்களுக்கும், நல்லவர்களுக்கும் அதே சட்டம் பாதுகாவலனாகவும் விளங்குகிறது.

உலகத்தின் ஒரு பகுதியில் சட்டம், கடினமானதாகவும் மறுபக்கம் இணக்கமாகவும் விளங்கக்கூடிய காரணம் என்பது எப்போதும் சர்ச்சைக்குரியதாகவும், விவாதத்திற்குரியதாகவும் தொடர்கிறது. மேற்கூறிய வாதமும், விவாதமும் தத்தம் நாடுகளின் பணிகள், குறிப்பாக தண்டனைகளை பொறுத்து அமைகிறது. உதாரணத்திற்கு மக்களாட்சி நாடுகளில் நிறைவேற்றப்படக் கூடிய சட்டம், முற்றதிகார நாடுகளின் சட்டங்களை விட வேறுபட்டதாகவும், மக்கள் நலனுக்காகவுமாக செயல்படுகிறது. இதை தவிர்த்து சட்டம், ஒரு



கற்றலின் நோக்கங்கள்

- சட்டத்தின் சாராம்சத்தை அறிந்து கொள்வதன் மூலம் மாணவர்கள் நீதியைப் பற்றிய சிந்தனைக்கு நெருக்கமாதல்.
- சட்டத்தின் வகைகளை தெரிந்து கொள்வதின் மூலம் மாறுபட்ட சட்டங்களின் செயல்பாட்டையும், அதனால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகளையும் புரிய வைத்தல்.
- சட்டத்தின் ஆதாரங்களை புரிந்து கொள்வதன் மூலம் அதன் தோற்றத்தினைத் தெரிந்து கொள்ளுதல்.
- சட்டம், அரசு மற்றும் நீதிநெறி ஆகியவைகளிடையேயான தொடர்பை ஆழ்ந்துக்கூறுவதன் மூலம் மாணவர்கள் அரசினுடைய சட்டத்தின் வாயிலாக எவ்வாறு சமூகத்தில் இணைந்து இருக்கிறார்கள் என்பதை புரியவைப்பது.

நாட்டு மக்களுக்கு எந்த அளவிற்கு சுதந்திரத்தை வழங்குகிறது என்பது குறிப்பிட்ட சட்டத்தை நிர்வகிக்கும்போதும், செயல்படுத்தும் போதும் தெரிய வருகிறது. உலகின் எந்த நாட்டிலுமே சட்டத்தினை அறியாமை என்பது தண்டனையிலிருந்து தப்பிக்கும் ஒரு காரணியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே சட்டத்தின் கருத்தாக்கத்தினை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்துவதும், அவை அரசமைப்பு வழங்கும் அடிப்படை சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறை என புரிய வைப்பதும் இன்றியமையாததாகிறது.

அறிமுகம்

❖ **சட்டம் என்றால் என்ன?**

அரசால் அமலாக்கம் செய்யப்படுகின்ற விதிமுறைகளின் தொகுப்பிற்கு சட்டம் என்று பொருள்.

❖ **சட்டம் – நீதி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு**

–சமூகத்தில் நீதியை அடைவது சட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

–நீதி என்பது எது சரி, எது தவறு, எது நல்லது, எது சமத்துவம் போன்றவைகளை விளக்கக்கூடிய ஒர் புலனாகாத கருத்தாகும்.

–எனவே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எது சரியானதோ அல்லது எது நியாயமானதோ அதைச் செய்வதாகும்.

4.1.2. சட்டத்தின் பொருள்

சட்டம் என்கிற வார்த்தை பண்டைய டியூட்டோனிக் (Teutonic) மொழியிலுள்ள "லாக்" என்ற வேர்ச்சொல்லிலிருந்து உருவானதாகும். 'லாக்' என்ற சொல்லானது நிலைத்தன்மை அல்லது ஒரே சீரான என்று பொருள்படுகிறது. சட்டமில்லாத சமுதாயம் மற்றும் ஆட்சி, குழப்பவாதத்திலும், கலகத்திலும் முடிவுறும். உன்மையில் சட்டமே வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகிறது. சட்டம் என்ற சொல் 'சீரானது' என்பதைக் குறிக்கிறது. சட்டத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை, இயற்கை சட்டம் மற்றும் மனிதச் சட்டம் ஆகியவையாகும். இயற்கை சட்டம் இயற்கையையும், மனிதச்சட்டம் மனிதர்களின் வாழ்க்கையையும் ஒழுங்குபடுத்துகிறது. அரசியல் அறிவியலில் சட்டம் என்பது மனித நடவடிக்கைகளை வழிநடத்துகிற விதிகளைக் கொண்ட தொகுப்பு ஆகும். அரசின் கடமைகளை அரசாங்கம் செயல்படுத்துகிறது. அதைப் போலவே அரசாங்கம் அரசின் விருப்பத்தை சட்டத்தின் வாயிலாக நிறைவேற்றுகிறது.

சட்டம் பற்றிய கருத்துகள்

❖ சட்டம் என்பது இறையாண்மையின் கட்டளை – **ஜான் ஆஸ்டின் (John Austin)**

❖ நீதி நிர்வாகத்தை செயல்படுத்துவதற்காக அரசு அங்கீகரித்த விதிமுறைகளின் தொகுப்பே சட்டம் ஆகின்றது.
– சல்மாண்டு (Salmond)

❖ 'க்ராப்'(Krabbe) என்ற அறிஞரின் கூற்றின்படி, "சட்டம் என்பது விழுமியங்களைச் சார்ந்த தீர்ப்புகளின் வெளிப்பாடு ஆகிறது. மனித வர்க்கம் விரும்புகின்ற ஒழுங்கமைவு மற்றும் இயற்கையை சார்ந்த நீதிநெறியாகவும் சித்தரிக்கப்படுகிறது".
–க்ராப்' (Krabbe)

❖ அரசாங்கத்தின் சக்தியாலும், அதிகாரத்தாலும் நிலைப்படுத்தப்பட்ட ஒரே சீரான விதிமுறைகளின் அமைப்பிற்கு சட்டம் என்று பொருள். மேலும் இது நிலைப்படுத்தப்பட்ட எண்ணங்களாகவும், பழக்க வழக்கங்களாகவும் கருதப்படுகிறது.
– உட்ரோ வில்சன் (Woodrow Wilson).

❖ மனிதர்களின் புற நடவடிக்கைகளுக்காக, இறையாண்மை மிக்க அரசியல் அதிகாரம் மூலம் அமலாக்கம் செய்யப்படும் பொது விதிகளின் தொகுப்பே சட்டமாகும்
– ஹாலந்து (Holland)

சட்டத்தின் நோக்கம் என்ன?

மேக்ஐவர் (MacIver) என்பாரின் கூற்றுப்படி, "அரசின் ஆதரவில்லையெனில் ஒரு சட்டம், சட்டமாகவே இருக்க முடியாது. சட்டத்தின் நோக்கமானது உறுதியான

அடித்தளங்களை நிறுவவும், மனிதர்களின் மெய்யுறுதியை வலிமையாக்கி அதன்மூலம் சமூகத்தின் கட்டமைப்பை மேம்பட செய்வதுமாகும்".'சட்டம்'எனும்சொல்லானது, அரசியல் அறிவியல் மூலம் மனிதர்களின் நடவடிக்கைகளின் மீது ஆளுகை செய்யவும், அவர்களின் வாழ்வை நெறிமுறைப்படுத்துவதற்குமான விதிகளின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. "சட்டம் அரசை உருவாக்குவது அல்ல, மாறாக அரசின் அழுத்தமே சட்டத்தை உருவாக்குகிறது" என்று நம்பிக்கையாக ஹாக்கிங் (Hocking) கூறுகிறார்.

சட்டத்தின் நோக்கங்கள் யாவை?

- அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்தல்
- நியாயத்தை ஊக்குவித்தல்
- சச்சரவுகளை தீர்த்தல்
- நீதியை ஊக்குவித்தல்
- ஒழுங்கையும், நிலைத்தன்மையையும் ஏற்படுத்துதல்
- விரும்பத்தகுந்த சமூக மற்றும் பொருளாதார நடத்தையை ஊக்குவித்தல்
- பெரும்பான்மை விருப்பத்தை பிரதிநிதித்துவப்படுத்துதல் (சில பிரச்சனைகளில்)
- சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

4.1.3 சட்ட வகைகளை அறிவீர்களா?

அ) தனியார் சட்டங்கள் (Private Laws)

குடிமக்களிடையேயான உறவுகளும், அவ்வுறவுகளை கட்டுப்படுத்தும் விதிமுறைகளும் தனியார் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

தனியார் சட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தனி நபர்களாகவும், அவர்களுக்கு மேலாகவும், இடையேயும் ஓர் பாரபட்சமில்லாத நடுவராக அரசு இருக்கிறது. –**ஹாலந்து (Holland)**

ஆ) பொது சட்டங்கள் (Public Laws)

குடிமக்களுக்கும், அரசுக்கும் இடையேயான உறவுகளை முடிவு செய்வது பொது சட்டமாகும். இவ்வகை சட்டத்தில் அரசு நடுவராகவும், கட்சிகாரராகவும் பார்க்கப்படுகிறது.



இ) அரசமைப்பு சட்டங்கள் (Constitutional Laws)

அரசை வழி நடத்தக்கூடிய அடிப்படை சட்டங்கள் அரசமைப்பு சட்டங்கள் ஆகும். அரசாங்கத்தின் செயல்பாடுகளை வரையறுத்து, தெளிவுபடுத்தக்கூடிய சட்டங்களே அரசமைப்பு சட்டங்களாகும். உதாரணத்திற்கு, குடியரசு தலைவர் தேர்தல், உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பொதுசட்டம், சட்டமன்றத்தால் இயற்றப்படக் கூடிய நிரந்தர சட்டத்திலிருந்து வேறுபடுகிறது. பொதுசட்டம் முன் நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டு உருவாவதாகும். சட்டமன்றத்தால் இயற்றப்படும் நிரந்தர சட்டமானது, எழுதப்பட்ட சட்டங்களால் ஆன முறை சார்ந்த ஒன்றாகும். இச்சட்டத்தில் பொதுமக்களின் நடவடிக்கைகளை கட்டாயப்படுத்தவோ அல்லது தடை செய்யவோ சட்டங்களும், ஒழுங்குமுறை விதிமுறைகளும் அமைந்துள்ளன. பொதுசட்டமானது நீதிபதிகள் தங்கள் தீர்ப்புகளை, முந்தைய தீர்ப்புகளை முன்னுதாரணமாக கொண்டு, அதனடிப்படையில் வழங்க அனுமதிக்கிறது. செயல்பாடுகள், ஆளுநர் நியமனமுறை போன்றவை அரசமைப்பு தொடர்பான நிகழ்வுகளாகும்.

அரசாங்கத்தின் செயல்பாடுகளையும், அடிப்படை உரிமைகளையும், அதிகாரங்களையும் பற்றியதாக இல்லாமல், குடிமக்களுடைய சமூக மற்றும் பொருளாதார நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தால் அவை சாதாரண சட்டங்கள் எனப்படும். உதாரணத்திற்கு குழந்தை திருமணங்கள் மற்றும் மதுபானத்தின் மீதான தடை போன்றவைகள் சாதாரண சட்டங்களின் கீழ் அமைகிறது.

(ஈ) நிரந்தர சட்டங்கள் (Statute Laws)

நிரந்தர சட்டங்கள் என்பவை மாநில சட்டமன்றத்தின் மூலமாகவும், நாடாளுமன்றத்தின் மூலமாகவும் இயற்றப்படும் சட்டங்களாகும். மக்களாட்சி நாடுகளில் பெரும்பான்மையான சட்டங்கள் நாடாளுமன்றத்தின் மூலமாகவே இயற்றப்படுகின்றன.

உ) அவசர சட்டம் (Ordinance)

பொதுவாக அரசினுடைய சட்டங்களின் அடிப்படையில், அரசாங்கத்தின் செயலாட்சி துறை மூலம் இது பிறப்பிக்கப்படுகின்றது. இவ்வகை சட்டம், குறைந்த கால கட்டமே நீடிக்கும். நாடாளுமன்றம் இயங்காத காலங்களிலும், அவசர காலங்களிலும் குடியரசு தலைவர் மூலம் அவசர சட்டம் பிறப்பிக்கப்படும்.

ஊ) பொது சட்டங்கள் (Common Laws)

பொது சட்டங்களானது மரபுகளையும், பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் அடிப்படையாக கொண்டது. ஆனால் நிரந்தர சட்டங்களை போல நீதிமன்றங்களால், அமலாக்கம் செய்யக்கூடிய தன்மை உடையதாகும். பொது சட்டங்கள் இங்கிலாந்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சட்டங்கள் ஆகும்.

எ) நிர்வாக சட்டங்கள் (Administrative Laws)

அரசாங்க பணியாளர்களின் அலுவல் மற்றும் பொறுப்புகளை பற்றி விளக்கமளிப்பதுடன், ஆளுகையை முறைப்படுத்துவதற்கான சட்டம் நிர்வாக சட்டம் எனப்படும். தனி மனிதர்களுக்கும், பொதுநிர்வாக அதிகாரிகளுக்கும் இடையே சட்டத்தையும், அதன் செயல்பாட்டையும் பிரித்து நடைமுறைப்படுத்துவது நிர்வாக சட்டமாகும். மேலும் இது அரசாங்க அதிகாரிகளின் சலுகைகளை பற்றி விளக்கம் அளிக்க முயலுகிறது. இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நிர்வாக சட்டம் பிரபலம் அடையவில்லை. பிரான்ஸ் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் இவை பிரபலமாக உள்ளன. உதாரணத்திற்கு குடிமக்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே சர்ச்சை ஏற்படும் பட்சத்தில் நிர்வாக நீதிமன்றம், நிர்வாக சட்டத்தின் மூலம் தீர்வு காண்கிறது.




ஏ) பன்னாட்டு சட்டங்கள் (International Laws)

பன்னாட்டு சூழலில் நாகரீகமடைந்த நாடுகளுக்கு இடையேயான உறவுமுறைகளையும், நடத்தையையும் நிர்ணயிக்கும் சட்டம், பன்னாட்டு சட்டமாகும்.

பன்னாட்டு உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கென்று, தனித்தன்மையுடைய பன்னாட்டு சட்டம் என்ற ஒன்று வழக்கில் இல்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையும், உலக பொதுமக்களின் கருத்துமே, ஒவ்வொரு நாடும் தங்கள் இறையாண்மையை முழுவதுமாக அனுபவிக்க வழிவகை செய்கின்றது.

மேலும் கடல் எல்லை பாதுகாப்பு சட்டம், வான்எல்லை சட்டம் என்றும் பன்னாட்டு சட்டங்களின் பிரிவுகள், தரைவழி, கடல்வழி, ஆகாய வழி என்று நாடுகளுக்கிடையே சர்வதேச எல்லைகளை வரையறுக்கிறது. வான்எல்லைச் சட்டங்களின் மூலம் ஒரு நாட்டின் ஆகாய விமானம் இன்னொரு நாட்டின் வான் எல்லையில் பறக்கும்போது அனுமதி பெற்ற பிறகே பறக்க வழி செய்கிறது.

4.1.4 சட்டத்தின் மூல ஆதாரங்களை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?



அ) வழக்காறுகள் (Customs)

சட்ட உருவாக்கத்திற்கு பழக்கவழக்கங்கள் மிகவும் உதவி புரிந்துள்ளன. பழக்கவழக்கங்களின் மூலமாக பயன்படுத்தப்பட்டுவந்த வழக்காறுகள் யாவும் நாளடைவில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாகின. ஆதிகாலத்திலிருந்து பழங்குடியினரிடையேயான சர்ச்சைகளும், பிரச்சனைகளும் அக்குடியினுடைய தலைவரின் மூலமாக அவர்களின் வழக்காறுகள் மற்றும் மரபுகளின் வழியே தீர்வு காணப்பட்டு வருகிறது. பழங்குடிகள் நாளடைவில் அரசுடன் இணைத்துக் கொள்ளப்படும் போது அம்மக்கள் பின்பற்றிய பழக்கவழக்கங்களும் படிப்படியாக சட்டங்களாக்கப்பட்டன. ஒரு நாட்டின் மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் அரசால் மறுதலிக்க முடிவதில்லை. இன்றளவில் இங்கிலாந்தின், பொது சட்டமானது வழக்காறுகளில் இருந்து பெறப்பட்டது என்பது ஒரு முக்கிய உதாரணமாகும்.

உதாரணத்திற்கு இந்தியாவில் தமிழ் மக்களிடையே 'ஏறு தழுவுதல் ' (Bull Taming Sport)என்றபண்பாடுசார்ந்தவிளையாட்டானது 2017–ஆம் ஆண்டு 'ஜல்லிக்கட்டு சட்டம்' என்ற புதிய சட்டம் உருவாகக் காரணமாக அமைந்தது.

(2017–ஆம் ஆண்டின் 'ஜல்லிக்கட்டு சட்டம்' பற்றிய கூடுதல் தகவல்களை பின்வரும் உள்பெட்டியில் படியுங்கள். இந்த உரையை படித்து ஒவ்வொரு வார்த்தைக்கும் தகுந்தவாறு ஆறு கேள்விகளை எழுதுக. என்ன?, எங்கு?, எப்பொழுது?, எவை?, ஏன்?)

ஆ) மதம் (Religion)

ஆதிகால சமூகங்கள் பின்பற்றிய மத சம்பிரதாயங்களும் அரசினுடைய, சட்ட உருவாக்கத்தில் பெரிதான பங்கை ஆற்றியுள்ளது. பெரும்பான்மையான நாடுகளில் மதமே சட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது. இந்து மதச் சட்டமானது பெரும்பாலும் மனுவின் விதிமுறையிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இஸ்லாமியச் சட்டமானது ஷரியத் சட்டங்களின் மூலத்திலிருந்து பின்பற்றப்படுகிறது. தெய்வீகச் சட்டமானது, மனிதனின் மூலமாக கடவுள் வழங்கிய சட்டங்கள் என்று கருதப்படுகிறது. தெய்வீக சட்டத்தின் ஆதிமூலமாக கடவுளே இருப்பதாகக் கருதப்படுகிறது. கிறித்துவர்களுக்கு, அவர்களின் பரமபிதா முதன் முதலில் அருளிய பத்து கட்டளைகளே சட்டத்தின் அடிப்படையாகக் கருதப்படுகிறது.

செயல்பாடு

அலங்காநல்லூர் -ஜல்லிகட்டு



இந்த படம் ஏறுதழுவுதல் என்ற தமிழரின் பண்பாடு விளையாட்டான ஜல்லிகட்டு பற்றியது ஆகும். இது மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் நடைபெறும். அலங்காநல்லூர் என்றால் ஜல்லிகட்டு என்றும், ஜல்லிகட்டு என்றால் அலங்காநல்லூர் என்றும் அழைக்கப்படுமளவுக்கு அவ்வூரின் பண்பாடு மற்றும் வரலாற்றுடன் அவ்விளையாட்டு ஒன்றிணைந்துள்ளது. இது பொதுவாக பொங்கல் கொண்டாடப்படும் ஜனவரி மாதத்தில் தமிழகத்தில் நடைபெறும் ஒரு தமிழர் பண்பாட்டு விழாவாகும். நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு சமூகத்தினருக்கும் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரத்திற்கான உரிமை மற்றும் தங்கள் பண்பாட்டையும், மரபையும் காப்பதற்கான உரிமை ஆகியவை உண்டு. ஆனால் ஜல்லிகட்டு என்பதில் பண்பாட்டிற்கும், விலங்குகளின் உரிமைக்கும் இடையே முரண்பாடு தோன்றியது.

அரசமைப்பின் பகுதி மூன்றில் அடிப்படை உரிமை உறுப்பு 29(1) -இல் கல்வி மற்றும் பண்பாடு உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. 2014 -இல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் "விலங்குகளும் புலன் உணர்வு கொண்டவை, ஆதலால் அடிப்படை உரிமை உறுப்பு 29(1) -படி வாழும் உரிமையைப் பெறுகின்றன என்றும் ஆதலால் அவற்றை துன்புறுத்துவதை அனுமதிக்க இயலாது" என தீர்ப்பு கூறியது. இந்த முரண்பாடுகள் இவ்விளையாட்டை முறைப்படுத்துவதில் பல்வேறு விளக்கங்களுக்கு வித்திட்டன.

5W'S மற்றும் 1 H செயல்பாடு



குறிப்பிடத்தக்க மேற்கோள்

உண்மையில் முற்கால ரோமானிய சட்டங்கள் பெரும்பாலும், மதநுட்ப விதிகளை விடவும் சற்றே அதிகமாக உள்ளது. அவைகள் பெரும்பாலும் சில மத சூத்திரங்களை முறையாக பின்பற்றுவதன் மூலம் மத உரிமைகளை அடையும் வழி முறைகளாக இருந்தன.

– **உட்ரோ வில்சன் (*Woodrow Wilson*)**

இ) வழக்குமன்றங்களின் முடிவுகள் (Judicial Decisions)

கெட்டல்(*Gettel*) கூற்றின்படி, "அரசு என்பது சட்டத்தை உருவாக்க மட்டுமல்லாது, அதனை தெளிவுபடுத்துவதற்காகவும், வழக்காறுகளை செயல்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. நீதித்துறையின் செயல்பாடானது சட்டங்களை தெளிவுபடுத்தவும், சட்டங்களை நடைமுறைப்படுத்துவதுமாக அமைகிறது. நீதிமன்றங்கள் செயல்படும்போது, அவைகளின் தீர்ப்புகள் புதிய சட்டங்களாக உருவாகின்றன. அதன் பிறகே இவ்வகை சட்டங்கள் அரசு மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்றன. எனவே, நீதிமன்ற தீர்ப்புகள் இவ்வகையில் புதிய பல சட்டங்களை உருவாக்குவதற்கு மூல ஆதாரமாக அமைகிறது. சில சமயங்களில், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றங்களின் தீர்ப்புகள் சட்டங்களாக பாவிக்கப்படுகின்றன.

ஈ)சமச்சீராக்கம் (Equity)

சட்டங்கள் எப்போதெல்லாம், தெளிவற்று சூழ்நிலைக்கு பொருந்தாமல் இருக்கிறதோ, அந்தச் சமயங்களில் இந்த சம நீதி பங்கிலான கொள்கைகளும், நல்லியல்புகளும், பொது அறிவு அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு அக்குழப்பமான சூழலுக்கான தீர்வு காணப்படுகிறது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"சமச்சீராக்கம் என்பது அசல் குடிமைச் சட்டத்தோடு இருக்கக்கூடிய விதிமுறை தொகுப்பாகும். நீதியின் அடிப்படையிலும், மரபுகளின் அடிப்படையிலும் உருவானதால் இவ்வுறுப்புகள் குடிமைச் சட்டத்தின் பயன்பாடுகளை மீறுமளவிற்கு தலையாய புனிதத்தன்மையைபெற்றுவிளங்குகின்றன".

– சர் ஹென்றி மெய்ன் (*Sir Henry Maine*)

சமச்சீராக்கம்

- ஆங்கிலேய பொதுச் சட்ட மரபை பின்பற்றும் நாடுகளில் உள்ள சட்ட விதிகளின் தொகுப்பிற்கு சமச்சீராக்கம் (*Equity*) என பெயரிடப்பட்டுள்ளது. இது இயற்கை நீதி என்று சில நேரங்களில் குறிப்பிடப்படுகின்ற ஒன்றை அடைய கடுமையான சட்டங்களையும் கண்டிப்பான அமலாக்கத்தையும் துணையாக கொண்டுள்ளது.
- சமச்சீராக்கம் நியாயத்தை நிலைநாட்டுவதாகவும் உள்ளது.
- சமச்சீராக்கம் என்பது பொதுச் சட்டத்திற்கு துணையாக வர்ணிக்கப்படுகிறது. இது ஆங்கிலேய பொதுச் சட்டத்தில் இடம் பெறாத பகுதிகளையும் ஒன்றிணைத்து அச்சட்ட அமைப்பை ஒரு முழுமையான ஒன்றாக ஆக்குகிறது.
- ஆங்கிலேய சட்டத்தின்படி, சமச்சீராக்கம் என்பது இங்கிலாந்து உயர் நீதி மன்றத்தால் மட்டுமே அமல்படுத்த கூடிய விதிகளின் தொகுப்பாகும்.

உ) அறிவியல் விளக்கவுரைகள் (Scientific Commentaries)

சட்ட வல்லுநர்களின் அறிவியல் விளக்கவுரைகள், மற்றுமொரு சட்டமூலமாக விளங்குகின்றன. முதன்முதலில் இத்தகைய

அறிவியல் விளக்கவுரைகள் தோன்றியபோது, அனைவரும் அதனை ஒரு வாதமாக மட்டுமே வர்ணித்தார்கள். நாளடைவில் இதன் சிறப்புத் தன்மையும், அதிகாரமும், நீதி மற்றும் நீதிமன்ற முடிவுகளையும் விட அதிகாரத்துவம் பெற்று விளங்கியது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

சட்ட நிபுணர்களின் கருத்துக்கள் பெரும்பாலான நேரங்களில் சட்டமாகவே கருதப்படுகிறது. உதாரணத்திற்கு, இங்கிலாந்தில் **கோக்** மற்றும் **ப்ளாக் ஸ்டோனின்** விளக்கவுரைகள் (*Coke and Blackstone*), அமெரிக்காவின் **ஸ்டோரி** மற்றும் **கென்ட்** (*Story and Kent*), இந்தியாவின் விஜ்நானேஸ்வரா மற்றும் அபரார்கா (*Vijnaneswaa and Aprarka*) ஆகியோரின் விளக்கவுரைகளைக் கூறலாம்.

– அ. அப்பாதுரை (*A. Appadurai*)

ஊ) சட்டமன்றம் (Legislature)

தற்காலத்தில் பெரும்பான்மையான சட்டங்கள் சட்டமன்றத்தின் மூலமே இயற்றப்படுகிறது. சட்டத்தின் மிக முக்கிய ஆதாரங்களுள் ஒன்றாக இது உள்ளது. பிற நாட்டு அரசமைப்புகளில் உள்ள சிறந்த அம்சங்களைப் பெற்று அதை தன் சொந்த நாட்டின் நன்மைக்கு பயன்படுத்துவதற்கு சிறந்த உதாரணமாக இந்திய அரசமைப்பு உள்ளது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"குடிமக்களின் மனங்களிலிருந்து உருவாவது அரசாகும். அவர்கள் நீதிநெறி முகவர்களாவர். அதே சமயம், நல்லியல்பு இல்லாத கெட்ட குடிமக்களிடம் இருந்து உருவாவது மோசமான அரசும், மோசமான சட்டங்களுமே ஆகும்".

– கில்கிரிஸ்ட் (*Gilchrist*)

இந்திய அரசமைப்பின் ஆதாரங்கள் (Sources of the Indian Constitution)

- இந்திய அரசாங்க சட்டம் 1935 – கூட்டாட்சி முறை, ஆளுநர், நீதித்துறையின் பங்கு, நெருக்கடி நிலை அதிகாரங்கள்.
- பிரிட்டன் அரசமைப்பு – சட்ட உருவாக்கமுறைகள், நாடாளுமன்ற அரசாங்கம், சட்டத்தின் ஆட்சி, ஒற்றைக்குடியுரிமை, ஈரவை அரசாங்கம்.
- அமெரிக்க அரசமைப்பு – அடிப்படை உரிமைகள், சுதந்திரமான நீதித்துறை, நீதிப்புனராய்வு, குடியரசுத் தலைவர் பதவி நீக்க நடைமுறை, உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் மீதான குற்ற விசாரணை, துணைக்குடியரசுத் தலைவரின் பங்கு.

4.1.5. சட்டம் எவ்வாறு அரசுடனும், நீதி நெறியுடனும் தொடர்பு கொண்டுள்ளது?

சட்டமும், நீதிநெறியும் சமமாக பாவிக்கப்படுகிறது. நீதிநெறியானது குடிமக்களுக்கு ஒழுக்க விதிகளை போதிக்கிறது. அதேபோல, அரசால் இயற்றப்படுகின்ற சட்டமும் இந்த லட்சியத்தை அடைய பாடுபடுகிறது. மக்களின் நலனை மேம்படுத்தும் ஒரே நோக்கத்துடன் அரசு செயல்படுகிறது. சட்டத்திற்கும், நீதிநெறிக்கும் உள்ள நல்லுறவை போலவே, சட்டத்திற்கும் அரசிற்கும் இடையே உள்ளது.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"தனிமனிதனின் நல்லொழுக்கத்திற்கு சரிசமமாக இயங்கக்கூடியது நல்லரசாகும். அரசியல் உடற்கூறில் ஏதேனும் ஒரு பகுதி பாதிக்கின்றபோது, ஒட்டுமொத்த உடலும் பாதிப்புறும்".

– பிளாட்டோ (*Plato*)

சட்டமும் ஒழுக்கமும் ஒன்றோடு ஒன்று மிகுந்த தொடர்புடையன ஆகும். ஒழுக்க விதிமுறைகள் என்பவை குடிமக்களின்

நன்னடத்தைகளுக்கு அடிப்படையாகும். நல்லியல்பு அரசு நற்குடிமக்களை பெற்று சிறந்து விளங்குகிறது. நல்லியல்பற்ற அரசானது, ஒழுக்கம் தவறிய குடிமக்களைப் பெற்று சீரழியும். அரசின் உயிர்மூச்சான செயல்பாடாக "நீதி நெறிகள்" விளங்குகின்றன.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

நீதிநெறியானது நல்லியல்பு கடமைகளைப் பற்றியது, ஆனால் அரசால் இயற்றப்படும் சட்டமோ சட்டக் கடமைகளை பற்றியதாகும்.

தீண்டாமையை ஒழிப்பதற்கு இந்திய அரசாங்கம் கடந்த பல ஆண்டுகளாக போராடிக்கொண்டிருக்கிறது. தீண்டாமைக்கு எதிரான பல சட்டங்களையும் இயற்றியுள்ளது. தீண்டாமை போன்ற சமூக அவலங்களுக்கெதிராக சட்டங்கள் இருந்தாலும், சாதி, மதம், இனம், வர்க்கம், நிறம் அடிப்படையில் பாகுபாடு காட்டும் கொள்கையானது பாவம் என்பதை அறிய வேண்டும். மேற்கூறியவைகளின் அடிப்படையில் சமூகத்தில் எழும் இன்னல்களுக்கு அளவே இல்லாததாக இருக்கிறது. அரசாங்கம் மக்கள் உடல்நிலைக்கும், மனநிலைக்கும் பங்கம் விளைவிக்கும் மது மற்றும் குழந்தை திருமணம் போன்றவற்றை தடுக்கும் பல சட்டங்களை இயற்றி வருகிறது. பொதுவாக மக்களாட்சியில் ஒழுக்க நெறிகளுக்கு எதிரான சட்டம் என்று ஒன்று இல்லை.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

நீதிநெறிகள் என்பவை அரசிற்கு அத்தியாவசியமான நிபந்தனையாக விளங்குகிறது. சட்டமும், அரசும் பொதுமக்கள் கருத்தை உருவாக்கவும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் தொடர்ந்து முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன. சட்டமானது பொதுக்கருத்தை பிரதிபலிப்பதோடு நல்லியல்புகளின் மேம்பாட்டிற்கான குறியீடாகவும் விளங்குகிறது.

– மேக்ஐவர் (*MacIver*)

வில்சன், "அரசின் சட்டங்கள் என்பவை நீதிநெறியிலான சமூகத்தை உருவாக்குவதாகும்" என்று தெளிவாக தெரிவித்துள்ளார். இதனாலேயே சட்டத்தை உருவாக்கும் இறையாண்மையானது, சட்டத்திற்கும், நீதிநெறிக்கும் ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்த விழைகிறது.

சட்டத்திற்கும் நீதிநெறிக்கும் உள்ள வேறுபாடுகள் (The Distinction between Law and Morality)

- அரசு சட்டங்களை அமலாக்கம் செய்கிறது, சட்டத்தின் கட்டளைகளையும், கட்டுப்பாடுகளையும் மீறுபவர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படுகிறார்கள்.
- சமூக விதிகளையும், சமூக நீதிநெறிகளையும் மதியாதவர்களுக்கும் எதிராக நடப்பவர்களுக்கும் சமூக புறக்கணிப்பு என்பதே மாபெரும் தண்டனையாக அமைகிறது.
- நீதிநெறி என்பது மனிதர்களின் அக மற்றும் புற நடவடிக்கைகள் தொடர்புடையதாகும். ஆனால் சட்டமோ மனிதர்களின் புற நடவடிக்கைகளுடன் மட்டுமே தொடர்புடையதாகும். இதனாலேயே மனிதர்கள் தங்கள் புற நடவடிக்கைகளின் மூலம் சட்டத்தை மீறும்போது, தண்டிக்கப்படுகிறார்கள்.
- ஒரு நபர் திருட்டோ அல்லது கொலையோ அல்லது வழிப்பறியோ செய்யும்பட்சத்தில் மட்டுமே தண்டிக்கப்படுகிறார்.
- அதே போல், ஒரு நபர் சமூகத்தில் பொய் கூறினாலோ அல்லது ஏமாற்றினாலோ அதே சட்டத்தினால் தண்டிக்கப்படுகிறார்.
- பொய் கூறுவதும், பிறருக்கு கண்டனம் தெரிவிப்பதும், விசுவாசமற்று இருப்பதும் பாவங்களாக கருதப்படுகின்றதே ஒழிய குற்றங்களாக அல்ல. ஒழுக்கமற்ற செயல்கள் கூட அரசிற்கு நன்மை பயக்குமெனில் அது சட்டபூர்வமானது தான் என்று மாக்கியவல்லி கூறுகிறார்.

பொதுக் கருத்து !

பொதுவான நலனுக்கான மக்களின் கருத்தாகும்.

நீதிநெறி என்றால் என்ன?

சமூக எதிர்மறைகளான மது, சூது, திருட்டு, வழிப்பறி, கொலை, கொள்ளை, போன்றவைகளை கட்டுப்படுத்தும் சமூக உறுப்புகள் நீதிநெறி எனப்படுகிறது. நீதிநெறிகள் தொடர்பான சட்டங்கள் எப்போதும் நிலையானவைகளாகும்.

4.1.6. பொதுக்கருத்தும், சட்டமும் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்புடையவை?

மக்களாட்சி நடைமுறையில், தங்களின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதன் மூலம் மக்கள் அரசியலில் பங்கேற்பதுதான், மக்களாட்சியை வலிமையுள்ளதாக மாற்றுகின்றது. சட்ட உருவாக்கத்தில் மக்கள் நேரடியாக பங்கு பெறவில்லையென்றாலும், சட்ட மன்றத்தின் பிரதிநிதிகளை அவர்களே தேர்ந்தெடுக்கின்றார்கள். வாக்காளர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்வதற்காகவும், திருப்திபடுத்துவதற்காகவும் இப்பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவ்வாறு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றமானது மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கின்றது. சட்டத்திற்கும், பொதுக் கருத்திற்கும் இடையேயான நெருங்கிய தொடர்பை பார்ப்போம்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்




தற்கால அரசானது, நீதிநெறி, மதம் மற்றும் இயற்கை சட்டத்தின் லட்சியவாத அடிப்படையில் நீடிக்கிறது எனலாம். அதே சமயத்தில் அரசு, தனது சுயபாதுகாப்பிற்காக மேற்குறிப்பிட்ட ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுகிறது.

– J.M. கோட்ஸீ (*J.M. Coetzee*)

மக்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டே மக்களாட்சியில் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. மக்கள் தங்கள் அதிருப்தியையும், கோபத்தையும் அமைதியான போராட்டங்களின் மூலமாக அரசுக்கு வெளிப்படுத்துகிறார்கள். மக்களின் பொதுநலனும், சமூக மேம்பாடும், பொதுக் கருத்தின் இரு கண்களாகும்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்



நீதிநெறி கடமைகளை மறுதலிப்பதும், சட்டக் கடமைகளை மறுதலிப்பதும் நீதிநெறிகளை முற்றிலும் நாசமாக்குகிறது. சட்ட மனசாட்சி மற்றும் நீதிநெறி மனசாட்சி என்ற இரு வேறு மனசாட்சிகள் ஒன்றோடு ஒன்று எப்போதும் ஒத்துவராதவைகளாகும்.

– மேக் ஐவர் (*MacIver*)

குறிப்பிடத்தக்க மேற்கோள்



சட்டமும், ஒழுங்கும் நீதியை நிலைநாட்டுவதற்காக இயங்குகிறது. இதை செய்ய தவறும்பட்சத்தில், சமூக வளர்ச்சியை தடுக்கும் ஆபத்தான தடுப்பு அணைகளாக இவை மாறுகின்றன.

–மார்டின் லூதர்கிங் ஜீனியர் (*Martin Luther King. Jr*)

கலந்துரையாடல்

- சட்டம்தான் சமூதாயத்தினை பாதுகாக்க கூடிய உண்மையான பாதுகாவலர் என்பதற்கான காரணங்களை விளக்குக.
- சமூக வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலான சட்டம் ஒன்றை பரிந்துரை செய்.

- எந்த அளவிற்கு சரியானவையாக நிகழ்காலச் சட்டங்கள் உள்ளன. அதில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் பற்றி உன் கருத்தை கூறு.



- சட்டம் உண்மையில் நமது சுதந்திரத்திற்கு தடையாக உள்ளதா?
- மக்களாட்சியில் பொதுக்கருத்தின் முக்கியத்துவத்தினை விவரி.
- சட்டமும், நீதிநெறியும் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு உறவு கொண்டவை என்பதை விளக்குக.
- சட்டம் மற்றும் நீதிநெறியினை எப்படி வேறுபடுத்துவீர்கள்?

4.2. குடியுரிமை

4.2.1 அறிமுகம்

அரசியல் கோட்பாட்டில், குடியுரிமை என்பது குடிமக்களுக்கான சட்டப்பூர்வமான அங்கீகாரம் மட்டுமல்லாது, நெறிமுறை நல்லியல்பிற்கு இணங்க, அரசியல் செயல்பாடுகளில் முழுமையாகவும், சமமாகவும் பங்கேற்கின்ற உரிமையையும் அனைத்து குடிமக்களுக்கும் அளிப்பதாகும். மக்களாட்சியும், குடியுரிமையும் எப்போதும் ஒரே நேர்கோட்டில் செல்லக்கூடியது ஆகும். மக்களாட்சி என்பது அரசியல் கட்சிகள், தேர்தல் முறைமைகள், சட்டத்தின் ஆட்சி போன்றவைகளிலும், குடியுரிமை என்பது தனிமனிதர்களிடத்தும் முக்கிய கவனம் செலுத்துகின்றன.

குடியுரிமையானது ஒவ்வொரு நாட்டிற்கும் வேறுபட்டதாக இருக்கிறது. தற்கால அரசுகளில், குடியுரிமையானது, குடிமக்களுக்கான உரிமைகள் மட்டுமல்லாது மக்கள் அரசுக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. நீங்கள் இயற்கை குடியுரிமை (*Natural Citizenship*) உடையவரா அல்லது தங்கியிருத்தல், திருமணம் போன்றவற்றால் தகுதி ஆக்கப்பட்டு பெறப்படும் (*Naturalized Citizenship*) குடியுரிமையை வேண்டி பெற்றவரா? இவ்விரண்டிற்கும் வித்தியாசம் யாவை? இயற்கையான குடிமக்கள் என்பது இம்மண்ணில் பிறந்ததன் மூலமாக இயற்கையாக அந்த குடியுரிமையை அடைவது ஆகும். ஆனால் இயற்கையாதலான குடிமக்கள் என்போர் பின்னர் குடியுரிமையைப் பெற்றவர்களாவர்.

அரிஸ்டாட்டிலின் கூற்றுபடி, குடியுரிமை என்பது பிறப்பிடம், குடும்பம், பரம்பரை மற்றும் பண்பாட்டைச் சார்ந்து அமைவதாகும். 'ஸ்டாயிக்குகளின் (*Stoics*)' கருத்து வளர்ச்சியடைந்த பெருநகரங்களில் வசிப்பவர்களுக்கே குடியிரிமை வழங்கப்பட வேண்டும் என்பதாகும். கன்பூசியசின் (*Confusius*) கருத்து பொது நலத்தை சீரமைத்து அதில் அனைவரும் தங்கள் நலனிற்காகவும், இணக்கத் சூழலுக்காகவும் பாடுபடவேண்டும் என்பதாகும். இந்தியாவிலும் இதே போன்று வசுதேவக் குடும்பகம் (*Vasudeva Kudumbakam*) (ஒரே உலகம், ஒரே குடும்பம்) என்பது ஒரு நல்லியல்பு கருத்தாக்கமாக காணப்படுகிறது.

4.2.2 குடியுரிமை மற்றும் நகரஅரசு (Citizenship and City–State)

கிரேக்க மற்றும் ரோமானிய குடியரசுகளில் முக்கியத்துவம் பெற்ற குடியுரிமை என்பது நிலப்பிரபுத்துவ காலங்களில் முற்றிலுமாக மறைந்தது. மறுபடியும், மறுமலர்ச்சி காலக்கட்டத்தில் மனிதத்தன்மையின் விரும்பத்தக்க பகுதியாக குடியுரிமை மலர்ந்தது. பண்டைய ஏதென்சின், நகர அரசில் குடியுரிமை என்பது அரசின் கடமைகளில் பங்கேற்பதாக அறியப்பட்டது.

குடியுரிமை என்பதை அரிஸ்டாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக

கருதினார். ஏனெனில் லட்சிய அரசு என்பது சட்டத்தின் அடிப்படையிலான, சட்டத்தை மதிக்கும் குடிமக்களாலேயே சாத்தியப்படும் எனக் கருதினார். அவர் மேலும் கூறுகையில், ஒவ்வொரு மனிதனும் அரசியல் விலங்கு என்றும், நகர அரசில் மட்டுமே அவன் முழுமையடைவான் என்றும் கூறுகிறார். எனவே அரசியல் பதவிகளை விரும்புவது இயற்கை என்கிறார். மேலும் அப்பெருமகனார், குடியுரிமை என்பது குடிமக்களையும், வேற்றுநாட்டவர்களையும் மட்டுமல்லாது பிறநாட்டு அடிமைகளையும் உள்ளடக்கியதாக ஓர் ஆட்சியில் காணப்படுவதாக விளக்குகிறார். ஒரு நாட்டின் குடிமகன் என்பவன் சட்டத்துறை, நீதித்துறை தொடர்பான அலுவல்கள் மட்டுமல்லாமல் அரசமைப்பின்படி அரசியல் உரிமைகளையும், அனுபவிக்கும் உரிமை பெற்றவனாக விளங்குகின்றான்.

4.2.3. மார்ஷலின் பகுப்பாய்வு (Marshall's Analysis)

சுதந்திர சமூக மக்களாட்சிவாதியான மார்ஷல், குடியுரிமையையும், சமூக நிலைமைகளையும், முதலாளித்துவ அடிப்படையில் ஆராய்கிறார். அவரது கருத்தின்படி, குடியுரிமை மூன்று வகைப்படுகிறது. அவை குடிமை, அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த குடியுரிமைகளாகும்.

அனைத்து தனிமனிதர்களுக்கும் சுதந்திரம் என்பது குடிமை விவகாரங்களில் தேவைப்படுகிற ஒரு முக்கியமான அம்சமாகும். சட்டத்தின் ஆட்சியில், குடியுரிமை என்பது ஒரு தனித்துவம் பெற்ற அம்சமாக விளங்குகிறது. ஒரு குடிமகனாக, நமக்கு அரசியல் தொடர்பான முடிவெடுக்கும் முறைமையில் பங்குபெறுவதற்கு முழு உரிமை உண்டு. இது அரசியல் வகைப்பாட்டில் பிரதிபலிக்கிறது.

அரிஸ்டாட்டிலின் வரையறையின்படி "எவர் ஒருவருக்கு விவாதங்களிலும் அரசின் நீதி நிர்வாக அமைப்பிலும் பங்கேற்க அதிகாரம் இருக்கிறதோ அவரே குடிமகன் ஆவர்".

கிரேக்கர்கள் மக்களாட்சியின் கீழ் வாழும் பேறுபெற்றவர்கள். அவர்களின் அரசாங்கம் சாதாரண மக்களால் உருவாக்கப்பட்டது. அவர்கள் தங்கள் பேச்சு உரிமையின் மூலமாக மிகப்பெரிய பேச்சு சுதந்திரத்தை பெற்றிருந்தனர்.

4.2.4 குடியுரிமை மற்றும் கல்வி (Citizenship and Education)

இப்பிரிவில், கல்விக்கும், குடியுரிமைக்கும் உண்டான தொடர்பை பல்வேறு தத்துவஞானிகளின் கருத்துகள் வாயிலாக பார்க்கலாம்.

அரிஸ்டாட்டிலின் கூற்றின்படி, அனைத்து வகை மனிதர்களுக்கும் மூன்று பண்புகள் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

- அரசமைப்பிடம் விசுவாசம்.
- கடமைகளில் அதிகபட்ச திறனுடன் இருத்தல்.
- நல்லியல்பு மற்றும் நீதி வழுவாமை.

மக்களாட்சி நாடானது, அரசியல் மற்றும் பொருளாதார சமத்துவத்தை எப்போதும் நிலைநாட்டுகிறது. இதனால் நல்லியல்பு கொண்ட மனிதனுக்கும், நல்ல குடிமகனுக்குமான அடையாளம் எளிதில் காணப்படுகிறது.

பிளாட்டோவின் கருத்துப்படி, கல்வியே நாட்டில் நிலவும் ஊழலுக்கும், நிலைத்தன்மையற்ற அரசியலுக்குமான தீர்வாக கருதப்படுகிறது. இதனால், அப்பெருமகனார், கல்வியானது பயனள்ளதாகவும், பொறுப்புள்ளதாகவும் அமைய வேண்டும் என கூறுகிறார். **அரிஸ்டாட்டில்**(*Aristotle*),**ஹியூம்**(*Hume*), மற்றும் **ரூசோ**(*Rousseau*), ஆகியோரின் கூற்றுப்படி ஓர், நாட்டின் குடிமக்களுக்கு, தங்களது நாட்டின் சக குடிமக்களின் அணுகுமுறை, எதிர்பார்ப்பு ஆகியவை பற்றிய அறிவு வேண்டும் என கூறுகின்றனர். **J.S.மில்**(*J.S.Mill*), மற்றும் **அலெக்ஸ் டோக்யூவில்லி**(*TocqueVille*), ஆகியோர் மேலே குறிப்பிட்டதற்கு மாறாக

"குடிமக்களுக்கு, அரசியலில் பங்குபெறவும், உள்ளாட்சி அரசாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தன்னார்வ மற்றும் நீதி கடமைகள் ஆற்றவும், சங்கங்களை நிர்வகிக்கவும், கல்வி அதிகமாக தேவைப்படுகிறது" என கூறுகிறார்கள்.

4.2.5. இந்தியாவில் குடியுரிமை (Citizenship in India)

இந்தியா ஒரு மதச்சார்பற்ற, மக்களாட்சி மற்றும் தேசிய அரசு ஆகும். சுதந்திர இயக்கம் எதனால் உண்டானது? பல்வேறுபட்ட மதங்கள், பிராந்தியங்கள் மற்றும் பண்பாட்டினை ஒன்றிணைக்கும் காரணகர்த்தாவாக இவ்வியக்கம் தொடங்கப்பட்டது. இந்திய பிரிவினையில் முஸ்லீம் லீக் கட்சியுடன் வேறுபாடுகள் இருந்தபோதிலும், சுதந்திர போராட்ட இயக்கத்தின் இந்திய தேசிய தலைவர்களின் மூலம், மதச்சார்பற்ற மற்றும் அனைத்து மக்களையும் உள்ளடக்கிய இந்திய தேசமாக வலிமைப்படுத்தியது.



உங்களுக்குத் தெரியுமா?

வயதான பெற்றோர், முதியோர் பராமரிப்பு மற்றும் நலன் சார்ந்த சட்டம் (*MWPSC Act*) *2007*-ல், முதியவர்கள் மற்றும் பெற்றோர் நலனுக்காக இயற்றப்பட்டது .

இச்சட்டத்தின் படி....

- முதியோருக்கு துரிதமாகவும், பயனுள்ளதாகவுமான நிவாரணத்தை வழங்க "பராமரிப்பு தீர்ப்பாயத்தினை" (*Maintenance Tribunal*) நிறுவியது.
- இச்சட்டத்தின்படி, பராமரிப்பு என்பது உணவு, உடுத்த உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ சிகிச்சையையும் உள்ளடக்கியது ஆகும்.
- இச்சட்டத்தின் ஒரே நிபந்தனையாக, எவரெல்லாம் தன் சொந்த வருமானத்திலும், உடைமையின் மூலமும் தன்னை பராமரிக்க இயலாதவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் இப்பராமரிப்பின் கீழ் உட்படுவார்கள்.
- இச்சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகபட்ச பராமரிப்புச் செலவாக மாதம் ₹*10,000* அளிக்க கட்டாயமாக்கப்பட்டது. பராமரிப்புத் தொகையானது, உரிமை கோருபவர்களின் தேவைகள் மற்றும் அவர்கள் இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கான தேவைகளைப் பொருத்தும் அமைகிறது.
- பெற்றோர்களும், முதியோர்களும் அரசாங்கத்தின் இச்சலுகையை அனுபவிக்க, பாரமரிப்பு தீர்ப்பாயத்தின் முன் பராமரிப்பு அதிகாரியிடம் தங்கள் விருப்பங்களை முறையிடலாம். இச்சட்டத்தின்படி, வழக்கறிஞர்கள், தீர்ப்பாயத்தின் முன் எவருக்காவும் வாதாட இயலாது.
- முதியோர் நலனைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கக்கூடிய யாரேனும் நன்கறிந்தே அவர்களை கைவிடும்பட்சத்தில், ₹*5,000* அபராதமோ அல்லது மூன்று மாதம் சிறை தண்டனையோ அல்லது மேற்கூறிய இரண்டு தண்டனையுமோ வழக்கப்படலாம்.

கலந்துரையாடல்

ஒரு மகனாகவோ அல்லது மகளாகவோ நீங்கள் உங்கள் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை வகுப்பில் விவாதி.

இவ்வலிமையான தீர்மானத்தை நாம் அரசமைப்பில் கண்கூடாக பார்க்கலாம். இந்திய அரசமைப்பானது பாரபட்சமின்றி அனைத்து மக்களுக்கும் குடியுரிமை வழங்குகிறது. பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், அந்தமான் நிக்கோபரின் கடைக்கோடி சமூகங்கள் போன்றோர் இதுகாறும் அனுபவித்திராத குடியுரிமை தற்போது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.


ஒரு குடிமகனின் நற்பண்புகளை விளக்கப்படமாக தயாரித்து, உனது ஆசிரியருக்கும், நண்பர்களுக்கும் பகிர்வு செய்க.

குடியுரிமை பற்றிய சட்டங்கள், அரசமைப்பின் பகுதி இரண்டிலும் மற்றும் அவை தொடர்பான நாடாளுமன்ற சட்டங்களிலும் காணப்படுகிறது. இந்தியாவில் குடியுரிமையானது, பிறப்பு, வம்சாவழி,

பதிவு, இயல்புரிமை மற்றும் பிரதேச உள்ளடக்கத்தின் மூலம் பெறப்படுகிறது. அரசமைப்பின்படி அரசாங்கம் குடிமக்களை இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் போன்ற நிலைகளில் வேற்றுமைப்படுத்தல் ஆகாது. மேலும் மதம் மற்றும் மொழி சார்ந்த சிறுபான்மையின மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுகிறது.

4.2.6 உலக குடியுரிமை மற்றும் தேசியக் குடியுரிமை

தேசியக் குடியுரிமை என்பது, நாம் குடியிருக்கும் நாட்டின் அரசாங்கம் நமக்களிக்கும் பாதுகாப்பும் உரிமையுமாகும். ஆனாலும் அரசிற்கு தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் பெருமளவில் இருப்பதால், தனிமனித உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டு சட்டத்தினால் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.



உலக குடியுரிமை என்பது தேசிய எல்லைகளை கடந்த குடியுரிமையாகும். இவ்வுரிமையானது, பலதரப்பட்ட மக்களும், நாடுகளும் சோந்த கூட்டுறவு நடவடிக்கையை வலியுறுத்துகிறது. இதனால், குடியுரிமை என்பது பல்வேறுபட்ட சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை தீர்க்கக்கூடியதாக அமைகிறது. மேலும் உலகளாவிய குடியுரிமை, உலக நாடுகளின் ஒற்றுமையையும், கூட்டுறவின் வலிமையையும் பறைசாற்றுகிறது.

செயல்பாடு

- 1955 -ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம் மற்றும் அதன் தற்போதைய சட்ட சீர்திருத்தங்கள் ஆகிவைகளைப் பற்றி உனது வகுப்பறையில் கலந்துரையாடுக.
- வெளிநாடு வாழ் இந்தியர்கள் (Non-Resident Indian - NRI), கடல் கடந்து வாழும் இந்தியக் குடிமக்கள் (Overseas Citizen of India-OCI) மற்றும் இந்திய வம்சவளியினர் (Person of Indian Orgin-PIO) ஆகியோரிடையே உள்ள வேறுபாடுகளைக் கண்டுபிடி.

11th Std Political Science Tamil_Unit-4.indd 106 6/20/2018 7:16:17 PM

4.3. உரிமைகள் மற்றும் கடமைகள்

4.3.1. அறிமுகம்

உரிமைகள் என்ற வார்த்தை நம்முடைய நீதிநெறி, சட்டம் மற்றும் அரசியல் சொல்லகராதியில் பல நுற்றாண்டுகளாக இடம் பெற்றுள்ளதை நாம் காண்கிறோம். உரிமைகள் என்பது பொதுவாக உலகில் காணப்படுவது, மேலே உள்ள நீதிநெறி, சட்டம், அரசியல் ஆகிய அனைத்தும் ஒன்றாக இணைந்து உருவானதே மனித உரிமைகள் ஆகும். இந்த உரிமைகள் இன்றியமையாதவையாக நவீன காலத்தில் அமைந்துள்ளதற்கு அது அரசமைப்பிலும், பன்னாட்டு மனித உரிமை பிரகடனங்களிலும் இடம் பெற்று இருப்பது காரணம் ஆகும். மனித இனத்தில் பிறந்த அனைவரும் மனிதனாக பிறந்ததற்கான அடிப்படையில் மனித உரிமைகளை கொண்டு இருக்கின்றார்கள். இந்த அடிப்படையில் அனைத்து மனிதர்களும் சாதி, மத, இன, வகுப்பு வேறுபாடுகளைக் கடந்து நீதிநெறியிலான சமத்துவத்தின் அடிப்படையில் மனித உரிமைகளைப் பெறுகிறார்கள்.

கற்றலின் நோக்கங்கள்

- உரிமைகளின் பொருள் மற்றும் அதன் இயல்புகள்
- உரிமைகள் மற்றும் பொறுப்புக்களுக்கிடையே உள்ள வேற்றுமைகள்
- பல்வேறு வகையான உரிமைகள்
- அரசின் வழிகாட்டும் நெறிமுறைகள்
- குடிமக்களின் அரசியல் கடப்பாடுகள்
- குடியுரிமை
- சொத்து பற்றிய கோட்பாடுகளின் பார்வை

பொது மக்களின் விருப்பத்திற்கு மக்களாட்சியில் மதிப்பளித்தல்

மக்களாட்சியில் அனைத்து வயது வந்த குடிமக்களும் தேர்தலில் வாக்களிப்பார்கள். வாக்களிப்பதன் மூலமாக மக்கள் தங்களின் அரசாங்கம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்துகின்றனர்.

தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றவர்கள் வெற்றி பெறுவதும், குறைந்த வாக்கினைப் பெற்றவர்கள் தோல்வியுறுவதும் இயல்பாகும். இருப்பினும் வெற்றி பெற்ற பெரும்பான்மையினர் தோல்வியடைந்த சிறுபான்மையிரை மறந்து விட முடியாது. இரண்டு குழுக்களும் ஒன்றோடொன்று இணைந்து வாழ வேண்டும். நீங்கள் சிறுபான்மையினர் எனில் பெரும்பான்மையினரின் தேர்வினை ஏற்று கொண்டிருக்கிறீர்கள் என பொருள்படுகிறது. பெரும்பான்மையோராக இருப்பதென்பது சிறுபான்மையினரை மதிப்பதாகும். அதேபோன்று சிறுபான்மையினராக இருப்பவர்கள் பெரும்பான்மையினருடன் ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் விரும்புவதை அடுத்த தேர்தலில் முயற்சி செய்து பெற வேண்டும். இருப்பினும் தற்போதைக்கு அவர்கள் ஐம்பது சதவீதத்திற்கு மேலான வாக்காளர்களின் விருப்பத்திற்கு இசைந்து செல்ல வேண்டும்.

ஒருவரை ஒருவர் மதிப்பது என்பது நாம் இணைந்து சிறப்பாக வாழ உதவி செய்கிறது. மக்கள் தாங்கள் நினைப்பதை பிறரிடம் கூறுவதற்கு உரிமை உள்ள அதே நேரத்தில் பிறருடைய கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். ஒவ்வொரு தேர்தலும் அனைத்து தரப்பினருக்கும் தாங்கள் விரும்புவதைக் கூறவும், தங்களுக்குத் தேவையானவற்றிற்காக வாக்களிக்கவும் வாய்ப்பளிக்கிறது.

உரிமைகள் பற்றி உங்களுக்கு தெரியுமா?

சமூக வாழ்க்கையில் உரிமைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை இல்லாமல் எந்த ஒரு மனிதனும் பொதுவாக தமது சுயத்தை சிறப்பாக உணர முடியாது. மக்கள் தங்களின் உரிமைகளைப் பெற்று அனுபவிக்கும் போது மட்டுமே அவர்களின் ஆளுமைத் திறன் மேம்பட்டு சமுதாயத்திற்கு சிறந்த பங்களிப்பினை மேற்கொள்வர்.

உரிமை என்பது பொதுமக்களின் விருப்பக் கோரிக்கைகள் ஆகும். ஒவ்வொரு பண்பாட்டிலும் இத்தகைய கோரிக்கைகள் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாக பார்க்கப்படுகின்றது. அதனால் தான் அரசுகள் இவற்றை நடைமுறைபடுத்துகின்றன.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

நீதிநெறியிலானவனாக மனிதனின் பணியை நிறைவேற்றுவதற்குத் தகுந்த அதிகாரங்களே உரிமையாகும்.

– டி.எச்.கீரின் (*T.H.Green*)

ஐசையா பெர்லின் (Isaiah Berlin) உரிமை என்பதை வரையறை செய்யும்போது நேர்மறை சுதந்திரம் மற்றும் எதிர்மறை சுதந்திரம் என்பவை பற்றி குறிப்பிடுகின்றார். நேர்மறை சுதந்திரம் என்பது பேச்சுரிமை பற்றியதாகும். உதாரணமாக ஒருவர் தன்னுடைய கருத்தை பொது வெளியில் அச்சமின்றிக் தெரிவிப்பதாகும். எதிர்மறை சுதந்திரம் என்பது உடல் சார்ந்த தலையீடு இல்லாமல் ஒருவர் சுதரந்திரமாக இருப்பதாகும்.

இயல்புகள்

- உரிமைகள் என்பது மக்களின் பகுத்தறிவு மற்றும் தார்மீக கோரிக்கைகள் ஆகும். இது அவர்களுடைய சமூக மேம்பாட்டிற்கு முக்கியமானதாக அமைந்துள்ளது.
- உரிமை என்பது மதம், சாதி, இனம், பாலினம் என்று பாராமல், அனைவருக்கும் கிடைக்க கூடியது.
- உரிமைகள் மற்றும் கடமைகள் இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாகும். "கடமைகள் இல்லை என்றால் உரிமைகள் இல்லை". "நான் சில உரிமைகளை பெற்றிருக்கிறேன் என்றால் சமுதாயத்தில் பிறருடைய உரிமைகளை மதிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்" என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.
- உரிமைகள் அனைத்தும் நீதி மன்றத்தில் வழக்கிட்டு பெறக்கூடியது ஆகும்.
- உரிமைகளை பாதுகாப்பது மற்றும் நடைமுறைபடுத்துவது அரசின் சட்டங்கள் ஆகும். மேலும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பது அரசின் கடமை ஆகும்.

உரிமைகள் மற்றும் பொறுப்புகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை நாம் காண்போம்.

உரிமைகள் மற்றும் பொறுப்புகள் இவை இரண்டும் பிரிக்கமுடியாதவை ஆகும். உலகில் பிறக்கும் மனிதர்கள் அனைவருக்கும் அதிகமான பொறுப்புகளும் கூடவே பிறக்கின்றன. அவர்களுக்கு அதனால் இயற்கையாகவே போதுமான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. உரிமைகள் என்பது ஒரு மனிதன் தனது அன்றாட பல்வேறு பொறுப்புகளை செய்வதற்கு உறுதுணையாக நிற்கின்றது.

உங்களது கடமை, பொறுப்புகள் என்னென்ன?

- இந்தியாவின் ஒற்றுமையும், இறையாண்மையும் பாதுகாத்தல்.
- பொது சொத்தை பாதுகாத்தல்.
- இந்தியாவின் இயற்கை வளங்களை பாதுகாத்தல். (உதாரணமாக வன விலங்குகள், ஏரிகள், குளங்கள், காடுகள், ஆறுகள்)
- சாதி, இனம், நிறம் மற்றும் பொருளாதார நிலைமைகளைக் கடந்து அனைவரிடத்திலும் சகோதரத்துவத்தையும், நல்லிணக்கத்தையும் பராமரித்தல்.

11th Std Political Science Tamil_Unit-4.indd 108 6/20/2018 7:16:17 PM

- இந்தியாவின் பண்பாட்டையும், சமூக நல்லிணக்கத்தையும் பாதுகாத்தல்.
- தேசியக்கொடி மற்றும் தேசியகீதம் போன்றவற்றுக்கு மரியாதை செலுத்துதல்.

பல்வேறு வகையான உரிமைகள் பற்றி உங்களுக்கு தெரியுமா?

அ) இயற்கை உரிமைகள் (Natural Rights)

இந்த வகையான உரிமைகள் மனித இயல்பு மற்றும் பகுத்தறிவின் ஒரு பகுதியாகும்.

குழந்தைகளுக்கான உரிமைகள்

புறக்கணிப்பு, சுரண்டல், கொடூரம், சச்சரவுகள் ஆகியவைகளிடமிருந்து பாதுகாத்தல் உரிமை.



குழந்தைகளுக்கான பொறுப்புகள்

ஒருவருக்கு ஒருவர் தாக்குதல் மற்றும் துன்புறுத்தல் நடத்திக் கொள்ளாமல் இருத்தல்.



குழந்தைகளுக்கான உரிமைகள்

வீடு, பள்ளி மற்றும் அவர்கள் போகும் இடமெல்லாம் சுத்தமான சூழல் அமைதல் உரிமை.



குழந்தைகளுக்கான பொறுப்புகள்

செல்லும் இடங்களிலெல்லாம் சுற்றுச்சூழல் மாசுபடாமல் பார்த்துக் கொள்ளுதல்.



குழந்தைகளுக்கான உரிமைகள்

கல்வி பெறும் உரிமை.



குழந்தைகளுக்கான பொறுப்புகள்

தங்களால் எவ்வளவு கற்றுக்கொள்ள முடியுமோ அதனைக் கற்றுக் கொண்டு மற்றவர்களும் கற்றுக் கொள்வதற்கு உதவுதல்.



குழந்தைகளுக்கான உரிமைகள்

சுதந்திரமான மதவழிபாடு மற்றும் சிந்தனை உரிமை.



குழந்தைகளுக்கான பொறுப்புகள்

தங்களின் வீடு பள்ளி மற்றும் எங்கெங்கு இருக்கிறார்களோ அந்த இடங்களை சுத்தமான சூழலாக வைத்துக் கொள்ளுதல்.



இதனை பற்றி அரசியல் கோட்பாடுகள் கூறுவது என்னவென்றால் ஒவ்வொரு மனிதனும் சில அடிப்படை உரிமைகளைப் பெற்றுள்ளான். இதனை அரசாங்கங்கள் கூட மறுக்க இயலாது. மரபுவழி அரசியல் தத்துவத்தில் "இயற்கை உரிமை" என்பது நேர்மையை அடிப்படையாகக் கொண்ட சிறந்த செயலையும், தூய ஆத்மா, சரியான செயல்பாடுகள் மற்றும் அரசின் சிறந்த ஆட்சி என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) நீதிநெறி உரிமைகள் (Moral Rights)

நீதிநெறி உரிமை என்பது நன்னடத்தை, மரியாதை, நல்லொழுக்கம் ஆகியன பற்றியது ஆகும். இது அறநெறியின் படி மக்களை முழுமையாக வழி நடத்தி செல்கின்றது.

இ) சட்ட உரிமைகள் (Legal Rights)

சட்ட உரிமைகள் என்பது நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் சமமாகக் கிடைக்க கூடிய ஒன்றாகும். இதில் எவ்வித பாகுபாடும் இன்றி பின்பற்றப்படுகிறது. சட்ட உரிமைகள் என்பது அரசினால் ஏற்று கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட விதிமுறைகள் ஆகும். சட்ட உரிமைகள் என்பது மூன்று வகைப்படும்.

குடிமை உரிமைகள் (Civil Rights)


இந்த வகையான உரிமைகள் ஓர் மனிதன் சமூகத்தில் நாகரிகமான வாழ்க்கையை வாழ்வதற்கு அடிப்படை உரிமைகளை வழங்குகிறது. இது அரசினால் பாதுக்காக்கப்படுகிறது. அதாவது உயிர் வாழுகின்ற உரிமை, சுதந்திரம், மற்றும் சமத்துவம் ஆகிய குடிமை உரிமைகளை அரசு நிலைநாட்டி பாதுகாக்கிறது.

அரசியல் உரிமைகள் (Political Rights)

மக்கள் தங்களது நன்னடத்தையின் மூலம் அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு வழிவகை செய்வது அரசியல் உரிமைகள் ஆகும். இது வாக்களிக்கும் உரிமை, தேர்ந்தெடுக்கப்படும் உரிமை, பொதுப் பதவி வகிக்கும் உரிமை போன்றவை ஆகும்.

பொருளாதார உரிமைகள் (Economic Rights)

இந்த உரிமைகள் தனிமனிதனுக்கு பொருளாதார பாதுகாப்பு அளிப்பதாகும். இதன் மூலம் மக்கள் தங்களது குடிமை மற்றும் அரசியல் உரிமைகளைப் பயன்படுத்த அதிகாரம் அளிக்கப்படுகிறது. பொருளாதார உரிமை என்பது ஒருவருக்கு வேலைவாய்ப்பு உரிமை, தகுந்த பாதுகாப்பு உரிமை, சமூக பாதுகாப்புரிமை ஆகியவற்றினை அளிப்பது போன்றவை ஆகும்.



ஈ) ஒப்பந்தம் மூலம் பெறும் உரிமைகள் (Contractual Rights)

இவ்வகையான உரிமைகள் என்பது தனி மனிதனுக்கு ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் வழங்கப்படுகிற வாக்குறுதிகள் அல்லது ஒப்பந்தங்கள் வாயிலாக தோற்றுவிக்கப்படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட சூழலில் தனி மனிதர்களுக்கு வழங்கப்படும் உறுதிகள் மற்றும் அதன் செயலாக்கங்களும் ஆகும். இதற்கு உதாரணமாக கூறவேண்டுமானால் பொருட்களை வாங்கும் உரிமை, சேவை பெறும் உரிமை, பொருள் அல்லது சேவையை விற்கும் உரிமை ஆகியவற்றினைக் குறிப்பிடலாம்.

உ) மனித உரிமைகள் (Human Rights)

மனித உரிமைகள் என்பவை உரிமைகளில் மிகவும் உயர்ந்து இருப்பதாகும். இவை தார்மீக அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது உலகளவிலான மனித குலத்தின் நல்லியல்பில் உள்ளதாகும். இது உள்நாட்டு அளவிலும், சர்வதேச அளவிலும் சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் மூலமாக ஆதரவளிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.



உரிமைகள் மசோதா மற்றும் அடிப்படை உரிமைகள் பற்றி அறிந்து இருக்கிறீர்களா?

உரிமைகள் மசோதா என்பது அமெரிக்காவில் டிசம்பர் 15-ல், 1791-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தனிமனித உரிமைகளின் உத்திரவாதங்களை மிகுந்த வலிமையுடன் மத்திய மற்றும் மாநில அரசுகளால் கருத்திணைவு அடிப்படையில் செயல்படுத்த வழிவகை செய்தது.



ஜேம்ஸ் மேடிசன் இந்த 'உரிமைகள் மசோதா'வை அறிமுகப்படுத்தினார். இது, அவர் 1776இல் வெளியிட்ட புகழ்பெற்ற வெர்ஜீனியா மனித உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படையில் அமைந்தது ஆகும்.

– ஜேம்ஸ் மேடிசன் (James Madison)

ஜேம்ஸ் மேடிசன் (James Madison)

உரிமைகள் மசோதா என்பது இங்கிலாந்தின் மகாசாசனம் (Magna Carta) (1215) மற்றும் ஆங்கில உரிமைகள் மசோதா (1689) ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டது. இது காலனி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தினால் மன்னர் மற்றும் நாடாளுமன்றம் போன்றவற்றின் ஆதிக்கத்திற்கு எதிராக உருவாக்கப்பட்டது ஆகும். அமெரிக்காவின் உரிமைகள் சாசனம் அந்த நாட்டின் சட்டம் மற்றும் அரசாங்கத்தில் மையபங்கு வகிப்பதாகும். சுதந்திரம் மற்றும் பண்பாட்டின் அடிப்படை சின்னமாகவும் இது விளங்குகிறது.

உரிமை சாசனம்

முதல் பத்து அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்திருத்தம்



அடிப்படை உரிமைகள்


நிகழ் ஆய்வு

நிகழ் ஆய்வு

கருத்து சுதந்திரம் மற்றும் இணைய வழி சவால்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள சில நிகழ்வுகளின் அடிப்படை உரிமைகள் ஒவ்வொன்றும் மீறப்படுகிறதா அல்லது ஆதரவு அளிக்கிறதா என பதிவிடுக.

எண்.	வழக்குகள்	ஆதரவு / உரிமை மீறல்
1.	ஒரு பெண் பார்வையாளர் கலைக்கூடப் பகுதிக்கு செல்வதை அவரது பாலினம் அடிப்படையில் தடை செய்தல்	
2.	சிறுபான்மையினர் தங்களுக்கான தனிப்பட்ட கல்வி நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிக்க முடியும்.	
3.	ஸ்ரேயா சிங்கல் (*Shreya Singhal*) என்பவர் டெல்லியில் வசிக்கும் 21 வயது பெண் ஆவார். இவர் உச்ச நீதிமன்றத்தில் பொது நலமனு ஒன்றினை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 66A மீதுள்ள சந்தேகத்தினால் அதனை எதிர்த்து தாக்கல் செய்துள்ளார்.	
4.	கேலிச்சித்திர வரைவாளர் (*Cartoonist*) அசிம் த்ரிவேதி மீது மகாராஷ்டிர அரசு ராஜதுரோக வழக்கு தொடுத்துள்ளது. இது அவர் இணையதளத்தில் வெளியிட்ட கேலிச்சித்திரம் காரணமாக தொடுக்கபட்டுள்ளது.	
5.	வடகிழக்கு மாநில பெண் ஒருவர் பெங்களூரு மாநகரில் வசிப்பதற்கு அனுமதி மறுக்கப்படுதல்.	
6.	சமூக ஊடகங்கள் மீது தடைகளை விதிக்கக்கூடிய சட்டப்பிரிவுகளை உருவாக்கி, ஊடகத்தின் செயல்பாடுகள் முடக்கப்படுவது என்பது குடிமை சமூகத்திற்கு விடுக்கப்படும் சவாலாகும்.	
7.	2012-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பாகிஸ்தான் சமூக ஆர்வலர் மலாலா யூசப்ஜாய் (*Malala Yousafezai*) என்பவர் பெண் கல்வியை வலியுறுத்தியதற்காக தாலிபான்களால் தலையில் சுடப்பட்டார்.	

அடிப்படை உரிமைகள்



இந்தியா 1947-ஆம் ஆண்டு தனது சுதந்திரத்தை பிரிட்டிஷ் காலனியாதிக்க ஆட்சியிடமிருந்து பெற்றது. அதன் பிறகு இந்திய உரிமைகளைப் பெரிதும் வலியுறுத்தக் கூடிய மதச்சார்ப்பற்ற, மக்களாட்சி நாடாக உருவானது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29-ம் நாள் அரசமைப்பு நிர்ணய சபையானது வரைவு குழுவை உருவாக்கி அதற்கு தலைவராக டாக்டர் அம்பேத்கரை நியமனம் செய்தது. அதில் தோராயமாக 7635 சட்ட திருத்த மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு அதில் 2437 மசோதாக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

1950-ஆம் ஆண்டு ஜனவரி 24-ஆம் தேதி பன்னிரெண்டாவது அரசமைப்பு நிர்ணய சபையின் கூட்டத்தொடரில் இராஜேந்திரபிரசாத் முதலாவது இந்திய குடியரசு தலைவராக தேர்தெடுக்கப்பட்டார், இதன் பிறகு அரசமைப்பு நிர்ணய சபையின் சட்ட மற்றும் அரசியல் வல்லுனர்கள் அரசமைப்பு கூட்டத்தினை அதிகாரப்பூர்வ பிரதிகளில் கையெழுத்திட்டனர்.

உங்களுக்குத் தெரியுமா?

அரசமைப்பு நிர்ணயசபையானது இந்திய அரசமைப்புச்சட்டத்தினை வரையறை செய்ய 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 20 நாட்கள் எடுத்துக்கொண்டது.



இந்திய அரசமைப்பின் சட்டப் பகுதி III-இல் அடிப்படை உரிமைகள் உள்ளன. இந்த பகுதியில் நாட்டினுடைய மக்களாட்சி முறையின் அடிப்படை கூறுகளைப் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்பு சட்டமானது அதன் உரை மற்றும் பரப்பெல்லை அளவில் உலகில் மிகப்பெரியதாகும். அடிப்படை உரிமை பற்றி மிகவும் நுண்ணிய கருத்துக்கள் அனைத்தையும் அடிப்படை உரிமைகள் உள்ளடங்கியதாக உள்ள காரணத்தினால் தான் அது அளவிலும் பெரியதாக உள்ளது.

செயல்பாடு

கேலிச்சித்திரத்தைப் பார்த்து என்ன அனுமானிக்கிறீர்கள்? (தி இந்து 5.12.2012).



தகவல் தொழில் நுட்ப சட்டப் பிரிவு 66A எதைப்பற்றிக் கூறுகிறது._____

_____

_____

இந்தப் பகுதியில் அடங்கியுள்ள கருத்துக்களை காண்போம்.

சமத்துவ உரிமை (Right to Equality)

சமத்துவ உரிமை என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உத்திரவாதத்தினை அளிக்கிறது. இது சாதி, மதம், மொழி, இனம், பாலினம் ஆகியவற்றிலான பாகுபாட்டை தடை செய்கின்றது. இது மேலும் பொது இடங்களுக்குச் செல்வதற்கு உள்ள பாகுபாட்டையும் தடைசெய்கிறது. இது

அனைவருக்கும் கோவில்கள், உணவகங்கள், விடுதிகள் மற்றும் பொதுவான கேளிக்கை இடங்கள் ஆகியவற்றிற்கு அனைவரும் செல்ல அனுமதிக்கிறது. இது மேலும் மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பிரதேசங்களில் உள்ள குடிமக்கள் அனைவருக்கும் சமமான பணி வாய்ப்பினை வழங்குகிறது. இது தீண்டாமையை எந்த வடிவத்திலிருந்தாலும் தடை செய்வதுடன் இதனை பெரும் குற்றமாகக் கருதுகிறது.

சுதந்திர உரிமை (Right to Freedom)

சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகிய இரண்டுமே மக்களாட்சிக்கு தேவையான அடிப்படை உரிமைகள் ஆகும். இந்த உறுப்பு பின்வரும் உரிமைகளைக் குடிமக்களுக்கு அளிக்கிறது. சுதந்திரமான பேச்சு மற்றும் கருத்து உரிமை, பொதுஇடத்தில் ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடுதல், சங்கம் அமைக்கும் உரிமை, நாடு முழுவதும் சுதந்திரமாக உலவுகின்ற உரிமை போன்றவற்றை வழங்குகிறது. உங்களுக்கு தெரியுமா... இந்த உறுப்பு தான் எவரும் தாங்கள் விரும்பக்கூடிய எந்த தொழிலையும் செய்ய அனுமதிக்கிறது. ஆம். நீங்கள் ஒரு மருத்துவமனை அமைக்கலாம், மருந்தகம் நடத்தலாம் அல்லது நீங்கள் ஒரு பெரிய வணிக வளாகம் கூட அமைத்து நடத்தலாம்.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

கடமைகள் மற்றும் உரிமைகள் இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க முடியாதவை, பின் உள்ள உரிமைகள் வழங்கும் சலுகைகள்தான் தனது கடமைகளை ஒருவர் செய்வதற்கு காரணமாகிறது.

மகாத்மா காந்தி (*Mahatma Gandhi*)

செயல்பாடு

மக்களாட்சி மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

ஏற்றுகொள்கிறேன் / மறுக்கிறேன்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்கள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் நீங்கள் எது சரியாக இருக்கும் என்று கருதுகின்றீர்களோ அதனை அதில் குறிப்பிடவும்.

- பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் கல்வி அறிவுவழங்கப்பட்டால்அதுஅவர்களுடைய குடும்பம் மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சியை அதிகப்படுத்துகிறது.
- பெண்கள் எப்போதும் ஆண் துணைகளைச் சார்ந்தே இருப்பார்கள். உதாரணமாக தந்தை, கணவர், சகோதரர், மற்றும் மகன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.
- பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி அளிக்கபட்டால் பொருளாதாரம் வளரும், உடல்நலம் மேம்படும், நாடு எழுச்சியுறும்.
- பெண்கள் வீட்டை பராமரிப்பதற்கும், சமையல் செய்யவும் மட்டுமே உள்ளனர்.
- பெண்கள் மற்றும் சிறுமிகள் ஆகியோர் பொதுவாக நடனம், ஓவியம், மற்றும் சமையல் போன்றவற்றில் சிறந்தவர்களாக விளங்குவார்கள்.
- கல்வி அறிவு என்பது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வாழ்க்கை பாதையை அமைத்துக் கொடுக்கும். மேலும் அமைதியையும், அதிகாரத்தையும் அளிக்கும்.
- மாலாலா யூசுப்சாய் (*Malala Yousufzai*) என்ற 17 வயது பாகிஸ்தான் நாட்டு இசுலாமிய இளம்பெண் ஒருவர் பெண் கல்விக்கு தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றார்.

நான் இதனை ஏற்றுகொள்கிறேன்_____

நான் இதனை மறுக்கிறேன்_____

வாழும் உரிமை மற்றும் தனிநபர் சுதந்திரம் (Right to Life and Personal Liberty)

எந்த ஒரு குடிமகனுக்கும் தனிநபர் சுதந்திரம் மறுக்கப்பட கூடாது. அதாவது எந்த ஒரு மனிதனும் கைது செய்யப்படும் போது அதற்கான காரணத்தை அவனுக்கு தெரிவிக்காமல் காவலில் வைக்கக் கூடாது. மேலும் அவர் தனது சார்பாக வாதாட ஒரு வழக்குறைஞரை தேர்தெடுத்து கொள்ளும் உரிமை வழங்கப்பட வேண்டும். அவர் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளாக நீதிமன்றத்தின் முன்பாக ஆஜர்படுத்தப்பட வேண்டும்.

தடுப்புக் காவல் (Preventive Detention)

தடுப்புக் காவல் என்பது காலத்தின் கட்டாயத்தினால் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவரின் செயலை தடுப்பதற்கானதாகும். தடுப்பு காவல் என்பது ஒருவர் சட்டம் மற்றும் ஒழுங்கை அச்சுறுத்தும் வகையிலும், தேசப்பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதையும் தடுப்பதற்காக அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை ஆகும். இதற்காக அந்த நபரைக் கைது செய்யவோ அல்லது காவலில் வைக்கவோ அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளது.

சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் கதை ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. படித்து மகிழுங்கள்!!!

ஒரு அழகான இளவரசி வாழ்ந்தாள். அவள் பறவைகள் மீது அளவற்ற பற்று கொண்டிருந்தாள். அவளது அரண்மனைக்கு தினமும் காலையில் ஒரு சிறிய பறவை வந்து அவளுக்காகப் பாடிச் செல்லும். அந்த பறவையை பார்ப்பதிலும், அதன் பாட்டை கேட்பதிலும் அவளுக்கு மிக்க மகிழ்ச்சி. தினமும் இளவரசி அந்த பறவைக்காக காத்திருந்து அதனுடைய இசையை கேட்டு ரசித்து வந்தாள். அந்த பறவையை அவள் மிகவும் நேசித்ததுடன் பகல் பொழுது முழுவதையும் அதனுடன் கழித்து வந்தாள். ஒருநாள் இளவரசி அந்த பறவையை தங்க கூண்டில் அடைத்து வைத்து, சிறந்த உணவுகளை வழங்கி வந்தாள். இருப்பினும் பறவை சோகத்தில் ஆழ்ந்தது. அந்த பறவை எதையும் உண்ணவும் இல்லை. பாடவும் இல்லை. சிறப்பான உணவுகள் வழங்கப்பட்டாலும், நாளடைவில் அந்தப் பறவை மிகவும் பாதிக்கப்பட்டு உடல்நலம் குன்றத் தொடங்கியது. பாடுவதும் கிடையாது. ஒரு நாள் இளவரசி அந்த பறவையை பார்த்து "என்ன காரணம், உணவு உண்ணவும், பாடுவதற்கும் மறுக்கிறாய்?" என்று கேட்டாள். அதற்கு அந்த பறவை, "நான் கூண்டிலிருந்து விடுதலை அடைய விரும்புகிறேன்" என்று கூறியது. அக்கனிந்த மனம் கொண்ட இளவரசியும் உடனடியாக அந்த பறவையை விடுவித்து பறக்கவிட்டாள். பறவை மகிழ்ச்சியுடன் சுதந்திரமாகப் பறந்து சென்றது. மறுநாள் காலை அந்தப் பறவை வழக்கம் போல் அரண்மனைக்கு வந்து இளவரசியைப் பார்த்து மகிழ்வோடு பாடியது. இந்த கதையின் மூலம் நாம் அறிவது என்னவென்றால் பறவையே எத்தகைய சிறப்பான உணவு கொடுக்கப்படினும் அடைபட்டுக் கிடக்க விரும்புவதில்லை. நீங்கள் வளர்க்கக்கூடிய நாய் மற்றும் பூனை கூட சங்கிலியால் பிணைக்கப்பட்டுவதை விரும்புவதில்லை. மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான் சுதந்திரமாக வாழ விரும்புகிறான். இந்த காரணத்தினால் தான் நமது சுதந்திர போராட்ட தியாகிகள் ஆங்கிலேயரை தைரியமாக எதிர்த்து சுதந்திரத்தினை பெற்றார்கள். அடிமையாக வாழுவதைவிட செத்துப்போவதே மேல் என்று அவர்கள் நினைத்தார்கள். இது அவர்கள் விடுதலை மற்றும் சுதந்திரத்திற்குக் கொடுத்த முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துகிறது.

Source; http://www.publishyourarticles.net/eng/articles2/a-short-story-on-freedom/2447/

சுரண்டலுக்கு எதிரான உரிமை (Right Against Exploitation)



நம் நாட்டில் இலட்சக்கணக்கானோர் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு தவறாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் சமூகத்தின் அடித்தட்டு மக்களே ஆவர். தற்போதைய நிலையில் "ஆட்கடத்தல்" (Human Trafficking) என்பது மனிதர்களுக்கு எதிரான மிகவும் ஆபத்தான சுரண்டலாக திகழ்கின்றது. ஆட்கடத்தல் செய்தல் என்பது மனிதர்களை விற்பதும், வாங்குவதும் அவர்களை அடிமைகளைப் போன்று நடத்துவதும் ஆகும். இது மட்டுமின்றி குழந்தைத் தொழிலாளர் முறையும் சுரண்டலின் மற்றொரு பகுதி ஆகும். இக்குழந்தைகள் ஊதியமின்றி பணிசெய்யக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். இந்த காரணத்தினால் தான் அரசமைப்புச் சட்டத்திலேயே அரசு சுரண்டலுக்கு எதிரான உரிமையை வழங்கியுள்ளது. இதன்படி ஆட்கடத்தல் செய்தல் மற்றும் கட்டாயப்படுத்தி பிச்சையெடுக்க வைத்தல் ஆகியவை கட்டாயப் பணி செய்ய வைத்தலின் வடிவங்களாகும். மேலும் இது பதினான்கு வயதிற்குட்பட்ட சிறார்களை தொழிற்சாலைகள், சுரங்கங்கள் அல்லது உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய எத்தொழிலும் ஈடுபட வைப்பதை தடை செய்கிறது.

மத சுதந்திர உரிமைகள் (Right to Freedom of Religion)

இந்தியாவில் அனைத்து மக்களும் தங்களது மதம் மற்றும் நம்பிக்கையினைத் தேர்தெடுத்து அதன்வழி செல்லும் உரிமையை அரசமைப்பு சட்டம் வழங்கி உள்ளது. இதன் மூலமாக அனைவரும் தங்களது மதத்தின் படி வழிபடுவதுடன் பரப்புரையும் செய்யலாம். இந்த உரிமைகள் மதத்தில் சமூகம் மற்றம் தனிப்பட்ட அம்சங்களைக் கொண்டதுடன் நாட்டின் குடிமக்கள் அனைவரும் இதனை அனுபவித்து வருகிறார்கள்.

மத சுதந்திரத்திற்கான உரிமை அனைவருக்கும் அளித்துள்ள உத்திரவாதம் என்னவென்றால் அனைவரும் தங்களது சுய விருப்பத்தின்படி அவர்களுக்கு ஏற்புடைய மதத்தினை தழுவுதல், பின்பற்றுதல் மற்றும் அதனைப் பரப்பலாம் என்றும், மேலும் பொது ஒழுங்கு, நீதிநெறிமுறைகள் மற்றும் சுகாதார வரையறைகளுக்கு உட்பட்டு அவர்களுடைய அச்செயல்பாடுகள் அமைய வேண்டும் என்றும் கூறுகின்றது. அரசமைப்பின் உறுப்பு 26-ன்படி ஒவ்வொருவரும்மத விவகாரங்களின் அடிப்படையில் சேவை புரிவதற்காக நிறுவனங்களை உருவாக்கி, அதற்கென அசையும் மற்றம் அசையா சொத்துக்களை உரிமையாக்கி சட்டத்தின் அடிப்படையில் நிர்வகிப்பதாகும்.

பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள் (Cultural and Educational Rights)

இந்தியாவின் மதம், மொழி மற்றும் பண்பாடு அடிப்படையிலான சிறுபான்மையினர், குழுக்கள் அல்லது பிரிவினருக்கு அரசமைப்பின் மூலம் இந்த அரசியல்சாராத உரிமைகள் வழங்கப்படுகிறது.

செயல்பாடு

1. இந்தியாவில் எத்தனை மொழிகள், எழுத்துவடிவங்கள், மற்றும் வட்டார வழக்கு மொழிகள் உள்ளன எனக் கண்டுபிடி.
2. இந்தியாவின் ஆட்சி மொழிகள் யாவை?

எந்த குடிமகனும் அரசு நடத்தும் அல்லது அரசின் நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் கல்விபெறுவதற்கு உரிமையுண்டு என்பதனை மறுக்க இயலாது. இந்த உரிமையை சாதி, மதம், இனம், பாலினம், நம்பிக்கை போன்றவற்றைக் காரணம் காட்டி மறுக்க இயலாது. குடிமக்கள் தாங்கள் விரும்பும் பள்ளிகள் அல்லது கல்லூரிகளில் கல்வி கற்றும் உரிமை உள்ளது. எந்த ஒரு கல்வி நிறுவனமாவது இந்த அடிப்படையில் பாகுபாடு காட்டுமாயின் அரசின் நிதி உதவி அந்தக் கல்வி நிறுவனத்திற்கு மறுக்கப்படும். மேலும் இந்த சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் எவ்விதமான கல்வி முறையை பின்பற்ற வேண்டும் என்பதனை அரசு வலியுறுத்த முடியாது. அந்தக் கல்வி நிறுவனங்களை அவரவர்களது பண்பாட்டினை பாதுகாக்கும் வகையில் செயலாற்ற அனுமதிக்க வேண்டும்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்திய அரசமைப்பின் உயிர் மற்றும் இதயமாக எதனை நீங்கள் கருதுவீர்கள்?

அரசமைப்பு சட்ட பரிகார உரிமைகள் (Right to Constitutional Remedies)

ஒரு குடிமகன் தனது உரிமையை பாதுகாத்து கொள்வதற்கு உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றத்தினை அணுகுவதற்கு இந்த உரிமை வழி வகை செய்கின்றது. அரசமைப்பின் உறுப்பு 32-இன்படி உச்ச நீதிமன்றம் பரிகாரம் செய்யலாம். அதுவே அரசமைப்புச் சட்ட உறுப்பு 226-இன்படி உயர்நீதிமன்றம் பரிகாரம் செய்கின்றது. இதற்காக நீதிமன்றம் நீதிப்பேராணைகளை பிறப்பிக்கிறது. இவைகள், ஐந்து வகைப்படும்.

- ஆட்கொணர்வு நீதிப் பேராணை (*Writ of Habeas Corpus*)
- கட்டளை நீதிப் பேராணை (*Writ of Mandamus*)
- சான்றாய்வு நீதிப் பேராணை (*Writ of Certiorari*)
- தகுதி வினவும் நீதிப் பேராணை (*Writ of Quo Warranto*)
- தடைநீதிப் பேராணை அல்லது தடை உத்தரவு (*Writ of Prohibition or Injunction*)

ஆகவே அடிப்படை உரிமைகள் என்பது தனிமனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்கின்ற கருவியாக நம் நாட்டில் பயன்படுகிறது. அந்த வகையில் அடிப்படை உரிமைகளை செயல்படுத்தும்போது, மக்களாட்சி அடிப்படையிலான வாழ்க்கை முறையும் அதன் அடிப்படைக்கொள்கைகளான சமத்துவம் மற்றும் நீதியையும் சமூகத்தில் நிலைநிறுத்துகிறது. அடிப்படை உரிமைகள் நம் நாட்டின் சுதந்திரத்தில் ஒரு மைல்கல் ஆகும். இது வழக்கு விசாரணை மற்றும் பெருந்துன்பத்திற்குப் பிறகு நமக்கு கிடைத்துள்ளதாகும்.

நீங்கள் புதிய உரிமைகளை பற்றி தெரிந்துகொள்ளுங்கள்!!!

தகவல் அறியும் உரிமை (Right to Information)

நீங்கள் அரசிடம் இருந்து ஏதேனும் தகவல் பெற வேண்டுமா? அதனை நீங்கள் தாராளமாக கேட்கலாம். அவர்கள் எப்படி வேலை செய்கிறார்கள், அதன் உறுப்பினர்கள் யார்? அவர்களுக்கு உதவி செய்வது யார்? போன்றவற்றை கேட்கலாம். அதற்கு உங்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறு என ஆச்சர்யமாக இருக்கிறதல்லவா? ஆம்! இது உண்மையே! இதற்கு தகவல் உரிமை சட்டம் 2005-இல் வழி வகை செய்து அரசாங்கத்திடம் மக்கள் தகவல்கள் கேட்பதனை சட்டப்பூர்வமாக்கியுள்ளது. இந்தச்சட்டமானது அரசாங்கங்களை வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், குடிமக்களுக்கு பொறுப்புணர்வு கொண்டதாகவும் மாற்றியுள்ளது. இதன் மூலமாக அரசின் நடவடிக்கைகளை தகவலறிந்த குடிமக்கள் எளிதாகக் கண்காணிக்க முடியும். இதனால் அரசாங்கம் மக்களுக்கு கடமைப்பட்டதாக மாற்றப்பட்டுள்ளது.

தனியுரிமை (Right to Privacy)

இந்திய மக்கள் கண்டிப்பாக தனி மனித வாழ்வின் மதிப்பு மிக்க அம்சங்களான வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் விடுதலையை யாரிடமும் ஒப்படைக்க வேண்டியதில்லை. அரசிடம் தனி மனிதனின் அனைத்து உரிமைகளை சமர்ப்பிக்க வேண்டியதில்லை. தனியுரிமை என்பது மனிதனின் மாண்புடன் ஒன்றிணைந்ததாகும். தனியுரிமையைப் பாதுகாப்பதற்கு அரசமைப்பின் உறுப்பு 21-இல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுதந்திரத்தின் உள்ளார்ந்த பகுதியாகும். இந்த உரிமைகள் அரசமைப்பின் பகுதி – III-இல் இடம் பெற்றுள்ளது.

மாற்றுப்பாலினத்தவரின் உரிமைகள் (Rights of Transgenders)

மாற்றுப்பாலினத்தவர் என்பவர் யார்? அவர்களை நீங்கள் பார்த்து இருக்கீறீர்களா? மாற்றுப்பாலினத்தவர் என்போர் எந்த வயதினராகவும், சாதாரணமாக ஆண், அல்லது பெண் போன்றும் இருப்பார்கள். ஆனால் அவர்கள் தங்களது குணாதிசயங்களில் ஆடவர் அல்லது மகளிரிடமிருந்து மாறுபட்டு காணப்படுவார்கள். அவர்கள் காலங்களைக் கடந்தும் அனைத்து பண்பாடுகள், இனம் மற்றும் அனைத்து வகுப்புகளிலும் இருக்கிறார்கள். வெகு சமீப காலங்களில்தான் அவர்களின் பிரச்சனைகள் பேசப்படுகின்றன. அவர்கள் இப்போது 'மூன்றாம் பாலினம்' என்று அழைக்கப்படுகின்றனர். உச்சநீதிமன்றமானது மத்திய – மாநில அரசுகளுக்கு ஓர் உத்தரவை வழங்கியுள்ளது. அதில் இவர்களின் பாலின அடையாளத்தினை சட்ட பூர்வமாக அங்கீகரிக்கும்படி கூறியுள்ளது. இவர்களுக்கும் மற்றவர்களுக்கு அளிக்கப்பட்ட அனைத்து அடிப்படை உரிமைகளையும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவர்கள் பொது நலம் மற்றும் சுகாதாரம், சமூக – பொருளாதார உரிமைகளாகிய அனைத்தும் பெறும் உரிமையுடையவர்கள் ஆவர்.

அரசின் நேரடி வழிகாட்டி நெறிமுறைகள் (Directive Principles of State Policy)


அரசின் நேரடி வழிகாட்டி நெறிமுறைகள் இந்திய அரசமைப்பின் பகுதி நான்கில் இடம் பெற்றுள்ளது. இதில் அரசியல், சமூக, பொருளாதார திட்டங்களை உள்ளடக்கி அரசுக்கு வழிகாட்டக்கூடிய பல மக்கள் நலக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இந்த நெறிமுறைக் கோட்பாடானது மனித நலன் சார்ந்த சமதர்ம நோக்கினைக் கொண்ட ஒரு செயல் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளது. அரசின் நேரடி வழிகாட்டி நெறிமுறைகளில் போதிய அளவிற்கு தற்போதைய அரசாங்கங்களுக்கு நேரடி வழிகாட்டி நெறிமுறைகள் கூறப்பட்டுள்ளன. அதனை அரசு நடைமுறைப்படுத்தி ஆணுக்கும், பெண்ணுக்கும் சரிசமமான வாழ்வாதாரங்களை உருவாக்கித் தர வேண்டும் என இச்சட்டம் கூறுகிறது. இது ஆணுக்கும், பெண்ணுக்கும் சரிசமமான ஊதியத்தை வழங்குகின்றது. இந்த நேரடி வழிகாட்டி நெறிமுறையில் உள்ள கொள்கையின்படி அனைவருக்கும், போதிய ஓய்வு, வாழ்க்கை தரம், மற்றும் சமூக, பண்பாட்டு வாய்ப்புகள் போன்றவை உறுதி செய்யப்படுகின்றன.

அரசின் வழிகாட்டி நெறிமுறைகளில் காந்தியக் கொள்கைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றின்படி குடிசைத் தொழில்கள் தனிநபரின் அடிப்படையிலோ அல்லது கூட்டுறவு அடிப்படையிலோ கிராமப்புற பகுதிகளில் ஊக்குவிக்கப்பட வேண்டும் என கூறுகிறது. மேலும் காந்திய கூற்றுப்படி மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என கூறுகிறது.

அரசின் நேரடி வழிகாட்டி நெறிமுறைகளில் இடம் பெற்றுள்ள சுதந்திர மக்களாட்சிகொள்கையின்படி அனைவருக்கும் 'பொது குடிமைச் சட்டம்' கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது மேலும் 6 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இலவச கட்டாய

செயல்பாடு

ஒவ்வொரு கேள்விக்கான குறியீட்டிற்கும் அதற்குத் தொடர்புடைய உதாரணத்தைத் தருக.



கல்வி வழங்க வேண்டும் எனவும் கூறுகிறது. இது இப்பொழுது அடிப்படை உரிமைகளில் சேர்க்கப்பட்டுள்ளது. குழத்தைகள் உடல் ரீதியான சித்ரவதை அல்லது மன உளைச்சலுக்கு ஆளாவதை தடை செய்கிறது.

செயல்பாடு

- இந்திய அரசாங்கத்தினால் அரசமைப்புச் சட்டம் எப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டது?
- இந்திய அரசாங்கத்தினால் அரசமைப்புச் சட்டம் எப்பொழுது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது?
- பேச்சுரிமை என்பது அரசமைப்பு சட்டத்தின் எந்த உறுப்பில் கூறப்பட்டுள்ளது?

அடிப்படை உரிமைகள்

உறுப்புகள் - 14-18	:	சமத்துவ உரிமை
உறுப்புகள் - 19-22	:	சுதந்திர உரிமை
உறுப்புகள் - 23-24	:	சுரண்டலுக்கு எதிரான உரிமை
உறுப்புகள் - 25-28	:	மத சுதந்தித்திற்கான உரிமை
உறுப்புகள் - 29-30	:	பண்பாடு மற்றும் கல்வி உரிமை
உறுப்புகள் - 32	:	அரசமைப்புச் சட்ட பரிகார உரிமை

4.4 அரசியல் கடப்பாடு (Political Obligation)

அரசாங்கம் என்பது வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், குடிமக்களுக்கு பொறுப்பு உடையதாகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறீர்களா? ஆம் எனில் நீங்கள் எவ்வாறு அரசுடன் பரிமாற்றம்

மேற்கொள்கிறீர்கள்? இது தான் அரசியல் கடப்பாடு எனப்படுகிறது. இது நீதிநெறியுடன் தொடர்புடையதாகும். ஒவ்வொரு தனிமனிதனும் தனது கடமைகளை செய்கிறான். உதாரணமாக வரி செலுத்துதல், தேர்தலில் வாக்களித்தல். நீதிமன்ற பணி மற்றும் இராணுவப்பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவைகள் யாவும் எதற்காக? இவை அனைத்தும் நாட்டின் அரசியல் சார்ந்த நிறுவனங்களை நிர்வகிப்பதற்காகத்தான் என்பதனை உணருங்கள்.

அரசியல் கடப்பாடுகள் என்பது அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை ஒருவர் நிறைவேற்றுவதற்கான பிணைப்பாக விளங்குகிறது. ஒவ்வொரு தனி மனிதனும் தன் சுய நலத்திற்காகவும், சமுதாய நலத்திற்காகவும் அரசமைப்புச் சட்ட உறுப்புகள் மற்றும் ஒழுங்குமுறைகளை பின்பற்றுகிறான். அரசாங்கம் எப்படி குடிமக்களுக்கு பொறுப்பானதோ, அதே போன்று குடிமக்களும் அரசாங்கத்திற்கு பொறுப்பானவர்கள் ஆவர். ஒரு அரசு சீரிய முறையில் இயங்குவது அரசாங்க அமைப்புகளின் சீரிய இயக்கத்தை சார்ந்தாகும்.

'அரசியல்' என்ற வார்த்தை, அரசாங்க நிர்வாகம் மற்றும் கொள்கைகள் தொடர்புடையதாகும். அரசியல் முறைமையின் கட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் அதிகாரங்களின் எல்லைகள் கண்டறியப்படுகின்றன.

டி.எச்.கிரீன்(T.H.Green) என்பவரின் கூற்றுபடி "அரசியல் கடப்பாடு என்பது ஓர் ஆளுகைக்கு உட்பட்டோருக்கு இறையாண்மை மிக்க ஆள்வோரிடம் உள்ள கடப்பாடு, குடிமகனுக்கு அரசிடம் உள்ள கடப்பாடு, சக மனிதர்க்கு ஆற்ற வேண்டிய கடப்பாடு போன்றவைகளாகும். இதனை அரசியல் உயர் பதவியில் இருப்பவர்கள் நடைமுறைபடுத்துகிறார்கள்".

4.4.1 அரசியல் கடப்பாடு மற்றும் அரசியல் அதிகாரத்துவம் (Political Obligation and Political Authority)

ஒரு அரசு, அரசியல் அதிகாரத்துவம் கொண்டு இருந்தால் அதனால் கீழ்படியாதவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தமுடியும். உதாரணமாக அரசால் வரி விதிக்கப்படுகிறது எனில் வரி செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வரி வசூல் செய்ய அரசால் முடியும். எனினும் அரசு அவ்வாறு செய்ய வில்லை என்றால் கூட குடிமகன் தார்மீக அடிப்படையில் அரசின் சட்டத்தினை மதித்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும். எனவே அரசியல் கடப்பாடு என்பது எங்கும் நிறைந்திருக்கக்கூடிய தற்கால தேசிய அரசில் ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டியதாகும். அரசியல் கடப்பாடுகள் மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

அடையாளம் காண கூடிய அதிகாரத்திடம் அரசியல் கடப்பாடுகளை காண்பித்தல்

ஒருவரை தன்னுடைய அரசியல் கடப்பாடுகளை செய்ய வைக்கவோ அல்லது செய்யாமல் விலகி இருப்பவர்களை ஆணைகள் வழங்கி அதனைச் செய்ய வைக்கக்வோகூடிய அதிகாரம் இந்த அடையாளம் காணக்கூடியவர்களிடம் வழங்கப்பட்டு இருக்கிறது. ஒருவருடைய அரசியல் கடப்பாடு என்பது குறிப்பிட்ட வகையில் அவர்களின் குடியுரிமையுடன் சம்மந்தப்பட்டது. ஏனெனில் குடியுரிமை இல்லாத வெளிநாட்டவர்களுக்கு அரசியல் வழங்கப்படவில்லை. ஆனால் அவர்களுக்குச் சட்டப்படியாக கடப்பாடுகள் மற்றும் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

எதுவரை அரசியல் கடப்பாடுகளை ஆற்ற வேண்டும்?

அரசு தனது சட்டத்தினை நடைமுறைப்படுத்தி அதன் அடிப்படையில் தனக்கு கீழ்உள்ள குடிமக்களிடமிருந்து சில குறைந்தபட்ச கடப்பாடுகளை எதிர்பார்க்கிறது. அதாவது மக்கள் சட்டத்தினை தேர்ந்தெடுத்து மதிக்க முடியாது. ஆனால் அனைத்து

சட்டத்தினையும் மதிக்க வேண்டும். உதாரணமாக வாக்களித்தல், இராணுவ பணிகள் ஆகியவற்றினைக் கூறலாம். இதனை போன்று அடிப்படை பணிகள் அனைத்தும் அரசியல் கடப்பாடுகளாகக் கருதப்படுகின்றன. இவைகளை கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். இதில் தேர்ந்தெடுத்தல் என்பது இருக்கக்கூடாது.

அரசியல் கடப்பாடுகளின் அடிப்படை (The Basis of Political Obligations)

அரசியல் கடப்பாடுகள் 16-ஆம் நூற்றாண்டுக்கு பிறகே உத்வேகம் பெற தொடங்கியது எனலாம். அதற்கு முன்பு அரசியல் கடப்பாடு என்பது கடவுளின் விருப்பமாகக் கருதப்பட்டது. ஆனால் தற்காலத்தில் அரசியல் கோட்பாடுகள் அந்த விளக்கத்தில் இருந்து வேறுபடுகின்றன. இந்த கோட்பாடுகள் கூறுவது என்னவென்றால் எந்த மனிதனையும் கட்டாயப்படுத்தி வேலை வாங்க கூடாது. மாறாக தன்னார்வ அடிப்படையில் தாமாக முன்வந்து கடமைகளை செய்ய மக்கள் முன்வர வேண்டும் இவை அவர்களின் முறைப்படியாக அமைந்த கடப்பாடுகளாகும். மக்கள் ஏன் அவ்வாறு நினைக்கிறார்கள் என்று தெரியுமா? இதற்கு சுய விருப்பம் மற்றும் அரசின் அடிப்படைக் கடமைகளை உணர்தல் ஆகியவை காரணங்களாகும்.



அரசு மக்களுக்கு உடல் சார்ந்த பாதுகாப்பு வழங்குகிறது. மக்களுக்கு நீதி கிடைப்பதும் அதன் விளைவாக மகிழ்ச்சியாய் இருப்பதற்கும் காரணம் அரசினால் செயல்படுத்தப்படும் அரசியல் அதிகாரம்தான் என்றும், அது இல்லை என்றால் மகிழ்ச்சியும், நீதியும் தங்களுக்குக் கிடைக்காது என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆதலால் மக்கள் இயற்கையாகவே அரசியல் கடப்பாடுகளுக்குப் பொறுப்பானவர்களாக உள்ளனர்.

அரசியல் கடப்பாட்டின் இயல்புகள் (Features Political Obligations)

- அரசியல் ஆர்வம் கொள்வதும், சமூகப் பணி செய்தலும் விரும்பத்தக்கதாக உள்ளது.
- பொதுப்பணி செய்பவர்களுக்கு நாணயம் மற்றும் நேர்மை ஆகியவை இன்றியமையாத அம்சங்களாகும்.
- சட்டபூர்வ தன்மை மற்றும் திறனை மேம்படுத்துதல் ஆகியவை இருக்க வேண்டும்.
- குடிமக்கள் தங்களது காப்பாளரை பாதுகாக்கின்ற பொறுப்பினைக் கொண்டுள்ளனர்.

அரசியல் கடப்பாடுகளின் வகைகளை பற்றி நாம் சிந்திப்போம்

அரசியல் கடப்பாடுகள் நான்கு வகைப்படும். அவைகள் யாவை?



அ) நீதிநெறி கடப்பாடு (Moral Obligation)

வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரிக்கிறீர்களா? ஏழைகளுக்கு உதவுகிறீர்களா? வயதான பெற்றோரை பேணுகிறீர்களா? இவை உங்களின் நீதி நெறி சார்ந்த கடப்பாடுகள் ஆகும். இது சமூகத்தில் சட்டத்தின் படி நடைபெறுவதில்லை. மேலும் இவற்றை நீங்கள் நிறைவேற்றவில்லை என்றால் உங்களுக்கு சட்டப்படியான தண்டனை எதுவும் கிடையாது. ஆனாலும் நன்நெறி மற்றும் நீதிநெறி கொள்கைகளின்படியும் உனது மனிதாபிமான உள்ளுணர்வுபடியும், செயலாற்ற வேண்டும்.

ஆ) சட்டப்படியான கடப்பாடு (Legal Obligation)

நம் நாடு மக்கள் நல அரசு கொள்கையைக் கொண்ட நாடாகும். இதில் அரசாங்கமானது நாட்டிற்கு உள் கட்டமைப்பு, வசதிகளை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. சாலை வசதி, சுகாதார மையங்கள், மருத்துவம், கல்வி, போன்றவற்றை வழங்குவது அரசின் கடமை என்பதற்கான சில உதாரணங்களாகும்.

இ) நேர்மறை கடப்பாடு (Positive Obligation)

அரசு சில விதிமுறைகளை உருவாக்கி செயல்படுத்துகிறது. அவற்றை நம்மால் கீழ்ப்படியாமல் இருக்க முடியாது. இவற்றைத்தான் நேர்மறை கடப்பாடு என்று கூறுகிறோம். நேர்மறைக் கடப்பாட்டிற்கு சில உதாரணங்களைச் சிந்திக்க முடியுமா? உதாரணமாக வரி செலுத்துதல், நாட்டின் பாதுகாப்பு பணியில் ஈடுபடுதல் போன்றவைகளைக் கூறலாம். இவை நேர்மறை கடப்பாட்டின் சில உதாரணங்களாகும்.

ஈ) எதிர்மறை கடப்பாடு (Negative Obligation)

எதிர்மறைப் கடப்பாடுகள் என்பது நேர்மறை கடப்பாடுக்கு எதிரானதாகும். அரசால் தடைசெய்யப்பட்ட ஓர் செயலை செய்வதற்கு எந்த ஒரு தனி நபருக்கும் சட்டத்தின் படி அனுமதி இல்லை. அத்தகைய செயலுக்கு தண்டனை உண்டு.

நீங்கள் அரசுக்கு ஆற்ற வேண்டிய கடப்பாடுகள் எவை?

- நண்பர்களுடன் விளையாடுதல்
- தேர்தல் நேரத்தில் வாக்களித்தல்
- சகோதர / சகோதரிக்கு கற்பித்தல்
- அரசுக்கு வரி செலுத்துதல்
- பொது பணியில் சேருதல்
- அவசர காலத்தில் இராணுவத்தில் பணிபுரிதல்

தற்பொழுது எதிர்மறைக் கடப்பாட்டிற்கான சில உதாரணங்களைச் சிந்திக்கவும். உதாரணத்திற்கு மது அருந்திவிட்டு சிலர் ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்வதை பார்த்திருக்கிறாயா? மேலும், சிலர் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுகின்றனர். அதனால் பல பாதிப்புகள் குடும்பத்திற்கும் ஏற்படுகிறது. அதனால் பல பாதிப்புகள் ஏற்படுகிறது. இவ்வாறு அரசால் தடுக்கப்பட்ட எந்தவொரு செயலையும் ஒரு குடிமகன் செய்யாமல் இருப்பதே எதிர்மறை கடப்பாடு ஆகும். குற்றம் செய்தல் என்பதே ஓர் எதிர்மறைக் கடப்பாடாகும். நீங்கள் எதிர்மறைக் கடப்பாட்டினைப் புரிந்து கொண்டீர்கள் என நம்புவோம்.

அரசமைப்புச் சட்டம் கூறும் முக்கிய கடப்பாடுகள்

அரசமைப்புச் சட்டம் என்பது அரசுக்கு அடிப்படை சட்ட புத்தகமாக கருதப்படுகிறது. எனவே அதில் உள்ள விதி முறைகளை மக்கள் பின்பற்றி நடப்பார்கள் என்பது பொதுவான எதிர்பார்ப்பு ஆகும். அந்த அரசமைப்புச் சட்டம் சிறப்பாக இயங்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம் ஆகும், 'சட்டம் என்பது வழி, அதன் வழியாக முடிவை எட்டலாம். அதுவே முடிவாக அமையாது', 'நீராவி உருளைச்

சட்டமன்றம்' என்ற கருத்தாக்கம் ஒன்று உண்டு. அதன்படி எந்தவொரு சட்டமும் நல்லது செய்யவில்லை என்றால் அதனை மாற்றிவிட வேண்டும். சில சமயங்களில் சில சட்டங்களை அரசு உருவாக்கும் போது அவை மக்களுக்கு தீங்கு விளைவித்தாலும் அதற்கு ஆதரவு அளிக்கப்படுகிறது. இத்தகைய சட்டமே நீராவி உருளைச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய சட்டங்களை கடுமையாக எதிர்ப்பது குடிமக்களின் கடமை ஆகும். இதன் மூலமாக நாம் அறிவது அரசியல் கடப்பாடுகள் என்பது சட்டத்தினை மதித்து நடப்பது மட்டுமல்ல சில சமயங்களில் சமுதாய நலனுக்கு எதிராக இருந்தால், சட்டத்தினை எதிர்க்கச் சொல்வதும் அரசியல் கடப்பாடுகளே ஆகும்.

அரசியல் கடப்பாடு பற்றிய கோட்பாடுகள் (Theories of Political Obligation)

வாழ்க்கையில் நாம் அனைவரும் பல கோட்பாடுகளை பின்பற்றி வருகிறோம். அதேபோன்று அரசியல் கடப்பாடுகள் பற்றி சில கோட்பாடுகளை இங்கு காண்போம்.

அ) தெய்வீகக் கோட்பாடு (Divine Theory)

முற்காலத்தில் மக்கள் நினைத்தது என்னவென்றால் "அரசினை கடவுள்



படைத்தார் என்றும், அரசர் கடவுளின் பிரதிநிதியாவார்" என்றும் அவர்கள் நம்பினார்கள். இந்தப்கோட்பாடு முற்காலத்திலும், இடைக் காலத்திலும் புகழ் பெற்று இருந்தாலும் தற்காலத்தில் இந்தக் கோட்பாட்டுக்கு இடமில்லை.

ஆ) ஒப்புதல் கோட்பாடு (Consent Theory)

இந்த கோட்பாடு முன்மொழிவது என்னவென்றால் அரசின் அதிகாரம் அனைத்தும் மக்களின் ஒப்புதல் அடிப்படையிலானதாகும்.ஹாப்ஸ், லாக், ரூசோ போன்றோர் இந்த கோட்பாட்டினை நியாயப்படுத்துவதுடன், அரசின் அதிகாரம் மக்களின் ஒப்புதல் அடிப்படையிலேயே அமைகிறது என்று கூறுகிறார்கள். ஆனாலும் பிற்காலத்தில் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை, ஏனெனில் அரசு என்பது செயற்கையாக உருவாக்கப்பட்ட அமைப்பு என்று கூறப்பட்டதால் இந்தக்கோட்பாடு நிராகரிக்கப்பட்டது.

இ) பரிந்துரைக் கோட்பாடு (Prescriptive Theory)

இந்த கோட்பாடு கூறுவது என்னவென்றால்அரசியல்அதிகாரத்துவத்தின் மதிப்பு என்பது வழக்கமான உரிமைகள் எனும் கொள்கையின் அடிப்படையில் அமைகிறது என்பதாகும். இக்கோட்பாடானது அரசியல் நிறுவனங்கள் என்பவை பழங்காலத்தொட்டு அமைந்து இருந்தன என்று கூறுகிறது. இக்கருத்தினை எட்மண்ட் பர்க்கும் (Edmund Burke) ஆதரிக்கிறார். ஆனாலும் காலப்போக்கில் இது செயல் இழந்து போனதற்கு காரணம் அளவுக்கு அதிகமாக நன்கு கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளை வலியுறுத்தியதாகும்.

ஈ) இலட்சியவாதக் கோட்பாடு (Idealistic Theory)



இந்த கோட்பாடு மனிதன் மற்றும் அரசு ஆகிய இரண்டும்தனித்தனியானகுணகூறுகள் கொண்டவை என்று குறிப்பிடுகிறது. 'மனிதன்'

என்பவன் அரசியல் மற்றும் பகுத்தறிவினால் உருவானவன் என்றும், அரசு என்பது சுயசார்புடைய சமூக அமைப்பு என்றும் கூறுகிறது. மேலும் இலட்சியவாதக் கோட்பாடு கூறுவது என்னவென்றால் மனிதன் தன் அதிகாரத்தை அரசிடம் இருந்து மட்டுமே பெறுகிறான் எனும் போது அவன் அரசிடம் இருந்து மாறுபடுகின்ற அதிகாரத்தை இழக்கின்றான் என்பதே சரியானது ஆகும். எனினும் இந்த கோட்பாட்டின் கருத்துக்கள் பெரும்பாலும் மனிதனால் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு கற்பனையாக அமைந்துள்ளது.

உ) மார்க்சின் கோட்பாடு (Marxian Theory)

மார்க்சின் கோட்பாடு பிற கோட்பாடுகளில் இருந்து மாறுபட்டதாகும். அது மூன்று நிலைகளாகப் பிரிக்கப்படுகிறது.

புரட்சிக்கு முந்தையநிலை

இந்நிலையில் மனிதன் முழுவதும் அரசியல் கடப்பாடுகளின்றி இருப்பதை கூறுகிறது.

புரட்சிக்கால நிலை

இது மாற்றம் ஏற்படும் நிலையாகும். அதாவது முற்றிலும் அரசியல் கடப்பாடு இல்லாத நிலையில் இருந்து மேம்பட்டு முழுவதுமாக அரசியல் கடப்பாட்டுக்கு உட்படுகின்ற நிலைக்கு மாறுவதைப் பற்றியது, இந்த புரட்சிக்கால நிலையாகும்.

புரட்சிக்குப் பிந்தையநிலை

இந்த நிலையானது முழுவதுமான அரசியல் கடப்பாடுகளில் இருந்து சமூக மேம்பாட்டிற்கு மாறும் நிலை பற்றியதாகும்.

மார்க்சிய அரசியல் கோட்பாடு கூறுவது என்னவென்றால் அரசு என்பது பாட்டாளி வர்க்கத்தினர் ஆளும் அமைப்பு ஆகும். வெற்றிகரமான புரட்சியின் மூலமாக முதலாளித்துவ அரசு மாற்றப்பட்டு சமதர்ம முறைமை உருவாக்கப்படுவதுடன் இதில் அரசுகள் படிப்படியாக உதிர்ந்து போகும். எனினும் இக்கோட்பாடு மனிதன் அரசிடம் கெஞ்சிப் பணிகிறான் என்ற நிலையினை உருவாக்குவதால் தர்க்கத்தின் அடிப்படையில் பொருத்தமற்றதாகிறது.

நாம் ஏன் அரசுக்கு கீழ்படிய வேண்டும்? அது தேவையானதா?

இக்கோட்பாடுகள் அரசியல் கடப்பாடு பற்றியவையாக இருந்தாலும் சில புலனாகாதவை மற்றும் சில கோட்பாடுகள் தர்க்க அடிப்படையில் பொருத்த மற்றவையாகும். ஆனால் நீங்கள், அரசுக்கு கீழ்ப்படிய வேண்டும் என எப்போதாவது எண்ணி இருக்கிறீர்களா? நாம் பயத்தின் காரணமாகவா அல்லது தேசபக்தி காரணமாகவா? அல்லது வேறு எந்த காரணத்திற்காக தனி மனிதன் அரசிடம் கீழ்ப் படிகிறான் என்பதைக் காண்போம்.

அ) தண்டனை பற்றிய பயம்

நீங்கள் உங்களது வீட்டுப் பாடத்தினை செய்யாமல் பள்ளிக்கு சென்றால் ஆசிரியர் தண்டனை கொடுப்பார் எனப் பயமா? அதே போன்று உங்களது தந்தை போக்குவரத்து விதிகளை மதித்து நடப்பது. தண்டனை என்ற பயத்தின் காரணமாகவா? ஆம். நமது கடமைகளை ஒழுங்காகச் செய்யாத போது பயம் வருகிறது. அதே போன்று தண்டனை கிடைக்கும் என்ற பயத்தின் காரணமாகவே தனிமனிதர்கள் தங்களின் பணிகளைச் செய்கிறார்கள். வேறு வழியில் கூற வேண்டுமெனில், அரசு தனது அதிகார வலிமையைப் பயன்படுத்தியே மனிதனை முறைமைக்குத் தக்கவாறு விதிகளை பின்பற்றவைக்கின்றது.

ஆ) தேசப்பற்று

தேசிய கீதத்திற்கு ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? அவ்வாறு நிற்பதற்குக் காரணம் தேசப்பற்று ஆகும். நாம் நமது நாட்டினை நேசிக்கிறோம். அதனால் நமது சுற்றுபுறத்தையும், தெருக்களையும் தூய்மையாக வைத்திருப்பதுடன் சாலைகளில்

குப்பைகளின்றி வைத்திருப்பது நமது கடமை ஆகும். ஆதலால் நாட்டின் மீது குடிமகன் என்ற முறையில் அக்கறை உணர்வுடன் செயல்பட வேண்டும். அத்தகைய அக்கறை உணர்வு இன்றி மனிதனால் நாகரிகமான குடிமக்களாக வாழமுடியாது. உறுப்பினர்கள் என்ற முறையில் அனைவரும் அரசுடனான பிணைப்பினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

இ) சமூக ஒழுங்கின்மை மற்றும் அமைப்பெதிர்வாதம் பற்றிய பயம்

உங்களது இல்லத்தை ஒழுங்கற்ற முறையில் நடத்திட நீங்கள் அனுமதிப்பீர்களா? நீங்கள் காலை உணவை ஒவ்வொரு நாளும் மதியத்தில் உண்ணுவீர்களா? உங்களது உடைகள் அங்கும், இங்கும் சிதறி கிடப்பதை கற்பனை பண்ணி பாருங்கள். உங்கள் இடம் சுத்தமின்றி இருப்பதை நீங்கள் விரும்புகிறீர்களா? விரும்புவதில்லையல்லவா? மனித இனம் அமைதியையும், ஒழுங்கினையும் விரும்புவது பொதுவான கொள்கையாகும். சட்டத்திற்கு கீழ்படிதலையும் மனிதர்கள் விரும்பியே ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறு சட்டத்திற்கு கீழ்படியாதவர்களை மனிதன் தனித்துப் பார்க்கிறான்.

ஈ) மரபுகள் மற்றும் பழக்கங்கள்

நாம் அனைவரும் துணிவு, நேர்மை, வீரம், ஒழுக்கம், கீழ்படிதல் போன்ற நல்லொழுக்கங்களை பழக்கங்களாகவே பின்பற்றி வருகிறோம். இது நமக்கு மரபார்ந்த விழுமியங்களால் ஏற்பட்டதாகும். இதே போன்று நாட்டில் குடிமக்கள் நல் மரபுகளை நிறுவ விரும்புவதுடன் அரசுக்குக் கீழ்படிதல், போன்ற செயல்களும் பழக்கமாகின்றன.

ஆகவே அரசியல் கடப்பாடு என்பது தேசிய அளவில் சிறந்த முறைமையை நிர்வகிக்க அவசியமாகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆதலால் ஒவ்வொருவரும் அரசிடமிருந்து சிறந்த கைமாறு எதிர்பார்த்தால் சட்டத்தினை மதித்து கீழ்படிய வேண்டும்.



விவாதம்

சொத்துக்களில் சமத்துவமின்மை பற்றி கூர்ந்து விவாதிப்போம்

நம் நாட்டில் அனைத்து பகுதிகளிலும் குடும்ப சொத்து என்பது தந்தைக்கு பின் அவரது மகன்களுக்கு மட்டுமே பிரித்து வழங்கப்படுகிறது. ஆனால் அதே தந்தைக்குப் பிறந்த ஒர் மகளுக்கு அந்த உரிமை வழங்கப்படவில்லை. 1956 – ஆம் ஆண்டு இந்து வாரிசு சட்டம் பெண்களுக்கும் ஆண்களைப் போன்று பிரிக்கப்படாத குடும்ப பாரம்பரிய சொத்தில் சமமான பங்கு உண்டு என உரிமையை வழங்கியுள்ளது.

கூர்ந்து விவாதிக்கவும்

ஆசிரியர் வகுப்பில் இரண்டு குழுக்களை பிரித்து, ஒவ்வொன்றிலும் மூன்று உறுப்பினர்களையும் மற்றும் ஒரு நடுவரையும் நியமனம் செய்ய வேண்டும். பின்னர் இந்து வாரிசு உரிமை சட்டம் பற்றி விவாதிக்கவும். ஒரு குழு 1956 ஆம் ஆண்டு இந்து வாரிசு சட்டத்திற்கு ஆதரவாகவும், மற்றொரு குழு அந்தச் சட்டத்திற்கு எதிராகவும் விவாதம் செய்யவும்.

4.5. சொத்து

சொத்து என்பது இயற்கை உரிமையாகும். அது மனித மாண்பு, சுதந்திரம் மற்றும் மாண்பமை வாழ்விற்கு அவசியமாகிறது. சொத்து என்பது மனிதனுடன் சட்ட தொடர்புடைய பொருள்களாகவோ அல்லது புலனாகாதவைகளாவோ இருக்கலாம். திரைப்பட காப்புரிமை, படைப்பு இலக்கிய காப்புரிமை போன்ற பல சொத்துக்களும் புலனாகாதவற்றில் அடங்கும். சொத்து என்பது தனிநபர் சொத்துகள் மட்டுமல்ல. தனிநபர் சொத்து என்னும் கருத்து கீழ்க்கண்ட இயல்புகளைச் சார்ந்ததாகும்.

❖ உங்களுக்கு சொந்தமாக வீடு இருக்கிறதா? ஆம் என்றால் அது உங்களின் தனிப்பட்ட

சொத்து. அதனைப் பிறர் உரிமை கொண்டாட இயலாது. உரிமையாளர் என்ற முறையில் நீங்கள் மட்டுமே உரிமை கொண்டாட இயலும்.

- உரிமையாளர் என்ற முறையில் உங்களின் வீட்டினை நீங்கள் உபயோகித்து கொள்ளலாம். ஆனால் அதனை மாற்றியமைக்கவோ அல்லது இடிக்கவோ அதற்கு உரிய அனுமதியை அதற்கென அதிகாரம் பெற்ற அரசின் அமைப்பிடம் பெற வேண்டும்.
- சொத்துக்களை மற்றவர்களுக்கு மாற்றம் செய்வதற்கு நீங்கள் விரும்பினால் அரசுக்கு சில வரிகளை நீங்கள் செலுத்த வேண்டும். வரிகளற்ற சில சொத்து பரிமாற்றங்கள் அரசினால் தடை செய்யப்பட்டுள்ளது அல்லது தண்டணைக்குரிய வரிவிதிப்பிற்குரியதாகும். உதாரணமாக அன்பளிப்பு வரி அல்லது முதலீடு மாற்ற வரியைக் குறிப்பிடலாம்.

சொத்துக்கள் பலவகைப்படும் அவை பொதுச்சொத்து, அரசுச்சொத்து, அரசாங்கச்சொத்து, என வகைப்படுத்தப் பட்டுள்ளன. உதாரணமாக போக்குவரத்து, இரயில்வேதுறை, போன்றவை பொதுச் சொத்துக்களாகும்.

4.5.1. லாக் மற்றும் பயன்பாட்டு வாதத்தினரின் நியாயவாதம் (Locke and the Utilitarian Justification)

லாக்கின் கூற்றுப்படி அரசாங்கத்தின் முக்கிய பணி என்பது குடிமக்களின் உரிமைகளை காப்பதுடன், அமைதியான முறையில் தங்களின் சொத்துக்களை அனுபவிக்கும் நிலையினை உருவாக்கி அவர்களை மகிழ்ச்சியுடன் வாழ செய்வதாகும். மனித இனம் வாழ்வதற்கு சொத்து அடிப்படைத் தேவை ஆகும். பொதுவாக மனிதர்கள் ஒவ்வொரு தருணத்தைப் பற்றியும் திட்டமிடுவதில்லை. ஆனால் அதே மனிதன் தனது எதிர்கால பொருளாதார பாதுகாப்பிற்காக திட்டமிடுகிறான்.

மக்களுக்கு பாதுகாப்பு என்பது மிக முக்கியமானதாகும். அதுவே தனிமனிதனுக்கு மகிழ்ச்சி மற்றும் அமைதியை அளிக்கக் கூடியதாகும். இதனையே பயன்பாட்டு வாதம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது. "சொத்துரிமை என்பது தனிநபர்க்குத் தேவையானது. அதுவே அவனுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையைக் கொடுக்கிறது. எந்தவொரு அரசாங்கமும் மக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையை அளிக்க நினைத்தால், முதலில் மக்களின் சொத்துரிமைக்குத் தகுந்த பாதுகாப்பு அளித்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். எந்த ஒரு அரசும் சொத்துக்களை மக்களிடம் இருந்து பறிக்கக் கூடாது. சொத்து என்பது மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை தருவது என்பது உறுதியாகும்".

4.5.2 இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மேம்பாடுகள்

இரண்டாம் உலகப் போருக்குபின் பெரும்பாலான வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள், சமூக நலக் கொள்கையை பின் பற்றுகின்றன. அக்கொள்கையின் முக்கியக் கூறுகளாக இருப்பது சொத்து வரிவிதிப்பு, அடிப்படை தொழிற்துறையில் மாறுதல், பொது மக்களின் அடிப்படை வசதிகளான சுகாதாரம், கல்வி போன்ற அரசு கட்டுப்பாட்டில் உள்ளவை போன்றவைகளாகும்.

பெண்ணியவாதிகளின் கண்ணோட்டம் (Feminist Perspectives)

21-ஆம் நூற்றாண்டில் பெண்களில் ஆற்றலாதல் துவங்கியவுடன் சம உரிமைக் கோரிக்கை பெண்களால் முன் வைக்கப்பட்டது. இந்த பெண்ணியவாதிகள் கூறுவது என்ன என்றால் பெண்களின் இன்றைய அடிமை நிலைக்கு காரணம் அவர்களுக்கு வருவாய், நிலம் போன்ற ஆதாரங்கள் மறுக்கப்படுவதாகும். சொத்து உரிமைகள் முழுவதும் ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு அவர்களால் கட்டுப்படுத்தப்படுவதால் பெண்கள் ஆண்களை சார்ந்தே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது, இந்தத் சார்பு நிலைதான் பெண்கள் தங்களது உரிமைகளையும், சொத்து

உரிமையையும் கோருவதற்கு காரணமாக அமைந்து இருக்கின்றது.

இந்திய அரசமைப்பு சொத்து உரிமையை அடிப்படை உரிமையில் இருந்து நீக்கியது. 1977-ஆம் ஆண்டு 44-வது அரசமைப்பு சட்ட திருத்தம் மூலம் சொத்துரிமை நீக்கம் மேற்கொள்ளப்பட்டது எனினும் சொத்துரிமை என்பது விதி 300 (A) யில் சாதாரண உரிமையாக வழங்கப்பட்டுள்ளது. இதன்படி சட்டத்தினால் வழங்கப்பட்ட யாருடைய சொத்துரிமையையும் மறுக்க இயலாது என கூறப்பட்டுள்ளது. ஆகவே சொத்துரிமை தற்பொழுது சட்ட அங்கீகாரம் உள்ளதாக விளங்குகிறது.

இன்றைய குடிமைச் சமூகத்தில் வலியுறுத்தியோ அல்லது அதிகாரப்படுத்தியோ, சொத்துக்களை கையகப்படுத்தும் முறை குறைக்கப்பட வேண்டும். எனினும் சூழ்நிலையின் காரணமாக அல்லாமல் வலிமையைப் பயன்படுத்தி மக்களின் சொத்துகளை கையகப்படுத்துவதை செய்யக் கூடாது. அரசு பல நேரங்களில் பெரிய தொழிலதிபர்களுக்கு முகவர்களாகவும், இடைத்தரகர்களாகவும் செயல்படாமல் விவசாயிகளின் உறுதியான சொத்துரிமைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அருஞ்சொற்பொருள்: Glossary

வழக்கிட்டு நிலை நாட்டுதல் (Justiciable): நீதி மன்றத்தில் விசாரணையின் மூலமாக நிலை நாட்டக்கூடியவை.

சுதந்திரம் (Liberty): சமுதாயத்தில் அடக்குமுறையிலான கட்டுப்பாடுகளற்ற சுதந்திரமான நிலையை இது குறிக்கிறது. இது அதிகாரத்துவத்தினால் ஒருவரின் நடத்தை மற்றும் அரசியல் கருத்துக்களின் மீது திணிக்கப்படுகிறது.

மக்களாட்சி (Democracy): மக்களுக்கான சமூக சமத்துவத்தை ஏற்படுத்தும் ஆட்சிமுறை.

கடப்பாடு (Obligation): கடமை அல்லது அர்ப்பணிப்பு.

தேசப்பற்று (Patriotism): ஒருவர் தன்னுடைய நாட்டிற்கு தரும் தீவிரமான ஆதரவு.

அமைப்பெதிர்வாதம் (Anarchy): இது ஒரு ஒழுங்கற்ற நிலையாகும். அதிகாரத்துவம் இல்லாமை அல்லது அங்கீகரிக்காத நிலையாகும்.

மதச் சார்பின்மை (Secular): மதம் அல்லது ஆன்மீகத்துடன் தொடர்பற்ற நிலை.

கையகப்படுதல் (Acquisition): சொத்துக்களை வாங்குதல் அல்லது சொத்துக்களை கையகப்படுத்துதல்.

பயன்பாட்டுவாதம் (Utilitarian): எந்தவொரு செயலும் மக்களைக் கவர்வதைக் காட்டிலும் அவர்களுக்குப் பயனுள்ளது அல்லது நடைமுறையிலானது என்ற வாதம்.

மறுமலர்ச்சி (Renaissance): கலை மற்றும் இலக்கியங்கள் புத்துணர்வு பெற்று மீண்டெழுதல்.

மதிப்பிடுதல் (Evaluation)

I சரியான விடையை தேர்தெடுக்கவும் .

1. எந்த உரிமை ஒருவர் தன்னுடைய கருத்தினை பொது வெளியில் தெரிவிக்க வழிவகை செய்கிறது?

(அ) சுதந்திர உரிமை (ஆ) கல்வி உரிமை
(இ) சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமை (ஈ) மத உரிமை

2. வாழும் உரிமை, சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) அரசியல் உரிமைகள் (ஆ) குடிமையியல் உரிமைகள்
(இ) சட்ட உரிமைகள் (ஈ) இயற்கை உரிமைகள்

3. உரிமைகளை பாதுகாத்து ஆதரிப்பதற்கான பன்னாட்டு மற்றும் தேசிய சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பவை

(அ) அடிப்படை உரிமைகள் (ஆ) உரிமைகள் மசோதா
(இ) இயற்கை உரிமைகள் (ஈ) மனித உரிமைகள்

4. அரசமைப்பு நிர்ணயசபையின் வரைவு குழு யாருடைய தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது?

(அ) Dr.பி.ஆர். அம்பேத்கர் (ஆ) பண்டித ஜவஹர்லால் நேரு
(இ) சர்தார்வல்லபாய் பட்டேல் (ஈ) இராஜேந்திர பிரசாத்

5. சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்ற இரண்டு உரிமைகள் கண்டிப்பாக தேவைப்படும் ஆட்சி முறை

(அ) பொதுவுடைமை (ஆ) மக்களாட்சி
(இ) முடியாட்சி (ஈ) வகுப்புவாதம்

6. நாட்டின் பாதுகாப்பு கருதி ஒருவரை தடுப்பு காவலில் வைப்பது.

(அ) ஆட்கொணர்வு ஆணை (ஆ) நீதிக்கட்டளை ஆணை
(இ) தடுப்புக் காவல் (ஈ) தடை ஆணை

7. உச்சநீதி மன்றத்தின் மூலம் குடிமக்களுக்கு அரசமைப்புச் சட்ட பரிகாரம் பெறுவதற்கு எந்த உறுப்பு வழிவகை செய்கிறது

(அ) உறுப்பு 21 (ஆ) உறுப்பு 15
(இ) உறுப்பு 32 (ஈ) உறுப்பு 18

8. அனைவருக்கும் பொதுவான குடிமையியல் சிவில் சட்டம் என்பதை எதன் மூலமாக அடையளாம் காண்கிறோம்.

(அ) அடிப்படை கடமைகள் (ஆ) அடிப்படை உரிமைகள்
(இ) அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் (ஈ) மனித உரிமைகள்

II பின்வரும் வினாக்களுக்கு மிகச்சுருக்கமாக விடையளிக்கவும்

8. இயற்கைச் சட்டம் என்றால் என்ன?

9. இயற்கைக் குடியுரிமை என்றால் என்ன?

10. நமக்கு கிடைக்கக் கூடிய அடிப்படை உரிமைகள் யாவை?

11. இந்தியக் குடிமக்களுக்கு அரசமைப்பு சட்டம் வழங்கியுள்ள பரிகார உரிமைகள் யாவை?

11th Std Political Science Tamil_Unit-4.indd 128 6/20/2018 7:16:32 PM

III. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி

12. அரசியல் கடப்பாடு பற்றிய தெய்வீகக்கோட்பாட்டினை விவரி?
13. அரசியல் கோட்பாட்டில் குடியுரிமை என்றால் என்ன?
14. இந்தியாவில் குடியுரிமை பெறக்கூடிய பல்வேறு வழிமுறைகள் யாவை?
15. பயன்பாட்டு நியாயவாதம் பற்றி லாக்கின் வரையறை யாவை?

IV. பின்வரும் வினாக்களுக்கு விரிவாக விடையளி

16. அடிப்படை உரிமைகளுக்கும் மற்றும் உரிமைகள் மசோதவிற்கும் உள்ள வேறுபாடுகளை கூறுக.
17. இந்திய குடியுரிமையினால் ஏற்படும் பல்வேறு விளைவுகளை கண்டறிக.
18. அரசின் வழிகாட்டு நெறிமுறைகளில் இடம் பெற்றுள்ள பல்வேறு கொள்கைகளை விளக்குக.
19. அரசியல் கடப்பாடுகள் என்றால் என்ன? அவற்றின் இயல்புகள் யாவை?
20. அரசியல் கடப்பாடுகள் பற்றிய பல்வேறு கோட்பாடுகளை விளக்குக.

மேற்கோள் நூல்கள் (Reference books)

1. Rajeev Bhargava, Ashok Acharya, "Political Theory- An Introduction", Pearson India Education Services Pvt.Ltd., Uttar Pradesh, 2017.
2. Biswaranjan Mohanty, "Dynamics of Political Theory- The Current Analysis" Atlantic Publishers and Distributors (P) Ltd., New Delhi, 2010.
3. Sushila Ramaswamy, " Political Theory – Ideas and Concepts", Macmillan India Ltd., Chennai, 2009.

11th Std Political Science Tamil_Unit-4.indd 129 6/20/2018 7:16:32 PM

அலகு 12

உள்ளாட்சி அரசாங்கங்கள்



கற்றலின் நோக்கங்கள்

PNRH68

- இப்பாடத்தில் இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றிய ஒரு உட்பார்வையை மாணவர்கள் அறியலாம்.
- உள்ளாட்சி அரசாங்கங்களின் முக்கியத்துவம் பற்றி இப்பகுதியில் அறியலாம்.
- இப்பாடம், உள்ளாட்சி அரசாங்கங்களின் இன்றைய பரப்பெல்லையை விளக்குகிறது.
- உள்ளாட்சி அரசாங்கங்களின் வரலாற்று ரீதியிலான வளர்ச்சி, அதன் பணிகள் மற்றும் அதிகாரங்களில் சுதந்திரத்திற்கு பின்பு ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவற்றை இப்பாடம் விளக்குகிறது.
- இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் அமைப்பு, பணிகள், அதன் தேர்தல் முறை, வருவாய் ஆதாரம் மற்றும் அதிலுள்ள பிரச்சனைகள் குறித்து இப்பாடத்தில் மாணவர்கள் கற்கலாம்.



12.1 உள்ளாட்சி அரசாங்கத்தின் பொருள், தன்மை மற்றும் முக்கியத்துவம்

உள்ளாட்சி அரசாங்கம் என்பது, நம்முடைய கிராமங்கள், நகரங்கள் மற்றும் மாநகரங்களில் மக்களுக்கான சேவைகள் மற்றும் வசதிகளை அளிப்பதற்கும், உள்ளூர் பிரச்சனைகளை நிர்வகிப்பதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் கிராமம், நகரம், பெருநகரங்கள் மற்றும் மாநகரங்கள் என ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் செயல்படுபவை ஆகும். ஒரு கிராமம் அல்லது நகரத்தில் உள்ள மக்களையும் அரசாங்கத்தையும் இணைக்கும் விதமாக உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுகின்றன. மக்களுக்கு சாலை பழுது, சாலையில் நீர் தேங்கியிருத்தல், தெரு விளக்குகள் எரியாமை போன்ற அடிப்படை பிரச்சனைகளின்போதும், குளங்களை உருவாக்குதல், பூங்காக்களை அமைத்தல் போன்ற அடிப்படை தேவைகளின்போதும், உள்ளாட்சி அரசாங்கங்கள் அவற்றை மேற்கொள்கின்றன. அவசர காலங்களின் போதும், உள்ளூரில் பிறப்பு மற்றும் இறப்பு நிகழும்போதும் அவற்றை கையாளும் பொறுப்பும் உள்ளாட்சி அரசாங்களுக்கு உண்டு. ஒரு பகுதியில் இருப்பிட சான்றிதழ் மற்றும் பிறப்பு, இறப்பு, வருமான சான்றிதழ்களை வழங்கும் ஓர் அமைப்பாகவும் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுகின்றன.

மக்களின் அன்றாட தேவைகளை கையாளும் பொறுப்புடைய ஒரு முழுமையான அமைப்பாக உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளன. நம் அரசாங்க நிர்வாக கட்டமைப்பில் இறுதி நிலை அலகாக உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளன. உள்ளாட்சி அரசாங்கமானது ஒரு சபையை கொண்டுள்ளது. அதில் உள்ள உறுப்பினர்கள் அதன் கிராமம் அல்லது நகரத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவர். அவர்கள் மக்களின் பிரச்சனைகளை மக்கள் சார்பாக

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 113 29-09-2018 12:42:20

சபையில் விவாதித்து தீர்வுகளை காண வேண்டிய பொறுப்புடையவர்கள் ஆவர். அந்த சபையின் உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகள் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, அந்தந்த நாட்டு சட்டப்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை பிரதிநிதித்துவ அமைப்புகள், அவை சபையில் மக்களை பிரதிநிதிப்படுத்துகின்றன. உள்ளாட்சி அரசாங்கங்கள் அவைகளின் பகுதிக்குட்பட்ட மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக விவாதிக்கவும், அவற்றிற்கான தீர்வுகளை காணவும், மேலும் அப்பிரச்சனைகளை மாநில அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லவும் சட்டப்படியான உரிமை பெற்ற அமைப்புகளாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் மக்களாட்சி நடைமுறையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், சபையில் கொண்டு வரப்படும் அனைத்து பிரச்சனைகளுக்கும் விவாதம், பேச்சுவார்த்தை மூலமே அனைவரும் ஏற்கத்தக்க வகையில் தீர்வு எட்டப்பட வேண்டும். சபை உறுப்பினர்கள் இந்தியாவின் அரசமைப்பிற்கு உட்பட்டு விவாதிக்கவும் முடிவெடுக்கவும் முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளாட்சி அரசாங்கங்களின் முக்கியத்துவமே, அது கையாளுகின்ற பிரச்சனைகளின் தன்மையில் உள்ளது. இப்பிரச்சனைகள் அனைத்துமே உள்ளூர் பிரச்சனைகளாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் கையாளுகின்ற பிரச்சனைகளின் உள்ளூர் தன்மையும், அவற்றின் பல்வேறு வகைகளும் மத்திய, மாநில அரசாங்கங்களினால் கையாள முடியாதவை ஆகும். ஏனெனில் உள்ளூர் பிரச்சனைகள் முழுமையாக, அப்பகுதிக்கேயுரிய தனித்தன்மையுடன் இருக்கும். அவற்றை உள்ளூர் மக்களை கொண்ட அமைப்பின் மூலமே சிறப்பாக கையாண்டு பொருத்தமான தீர்வை எட்டமுடியும். அவ்வாறு இல்லாமல் பொருத்தமற்ற தீர்வு எட்டப்படுமானால் மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்டு, அது மக்களின் சுமையை மீண்டும் அதிகரிக்கும்.



நிகழ் ஆய்வு *ஆதிலட்சுமியும், பாலாவும் விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் வாகனமொன்றில் பயணிக்கின்றனர். அவர்கள் அந்நகரை சுற்றி வருகையில், கீழ்க்கண்ட பிரச்சனைகளை காண்கின்றனர்.*

- குடிநீர் பற்றாக்குறை.
- மிகவும் சேதமுற்றுள்ள நகரின் உள்சாலைகள்.
- பராமரிக்கப்படாத நீர்நிலைகள்.
- சரியாக அமல்படுத்தப்படாத மழை நீர் சேகரிப்பு திட்டம்.
- வடிகால் வசதிகள் போதாமை.

மேற்கண்ட ஐந்து பிரச்சனைகளை கண்டதன் அடிப்படையில் உனது சொந்த கிராமம் அல்லது நகரத்தைப் பற்றிய உனது கருத்தை கூறு?


உனது பகுதியில் உள்ள பொது மக்களுக்கான வசதிகள் குறித்து ஒரு பத்தி எழுதவும். (200 வார்த்தைகளுக்கு மிகாமல்)

எனவே, உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை மக்களின் உள்ளூர் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் பொதுவாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை கொண்டுள்ளன. அவர்கள் உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் உள்ளூர் பிரச்சனைகளை சபையில் விவாதித்து அதற்கு தீர்வு காண்கின்றனர். உள்ளாட்சி அரசாங்கங்கள், அரசின் திட்டங்களும் வளங்களும் அடித்தட்டு மக்களை சென்றடைய முக்கிய வழிகளாக விளக்குகின்றன. இன்று எந்தவொரு நாடும்

உள்ளாட்சி அரசாங்கங்களை புறக்கணிக்க முடியாது, ஏனெனில் உள்ளூர் பிரச்சனைகளே இப்போது சர்வதேச பிரச்சனைகளாக மாறுகின்றன. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியினால் உலகமே ஒரு கிராமமாக மாறிவிட்டது.

12.2 உள்ளாட்சி அரசாங்கங்களின் வகைகள்

உள்ளாட்சி அரசாங்கங்கள் கிராமங்கள் மற்றும் நகரங்கள் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்பாடானது அப்பகுதி மக்களின் தொழில் (விவசாயம் சார்ந்த அல்லது விவசாயம் சாராத) அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயம் சார்ந்த தொழிலை அடிப்படையாக கொண்ட பகுதி என்பது, அப்பகுதியின் பெரும்பான்மை மக்களோ, அல்லது அனைத்து மக்களுமோ விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களான கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை போன்ற தொழில்களை செய்வர். ஆனால் நகர பகுதிகளில் மக்கள் வர்த்தகம் மற்றும் அதுசார்ந்த தொழில்களில் ஈடுபடுவர். நகரப் பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரமானது வர்த்தகம் மற்றும் அது சார்ந்த நிறுவனங்களையும் தனியார் மற்றும் அரசாங்கத்தின் நிர்வாக அலுவலங்களில் உள்ள வேலைவாய்ப்பையும் அடிப்படையாக கொண்டுள்ளது. நகரப் பகுதிகள் என்பவை வெளி உலகத்திற்கும் கிராமப்பகுதிகளுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகின்றன. கிராமப்பகுதிகளில் ஏற்படுத்தப்படும் அரசாங்கங்கள் ஊரக உள்ளாட்சி அரசாங்கங்கள் என்றும் நகர பகுதிகளில் உருவாக்கப்படும் அரசாங்கங்கள் நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.



விவாதம்



- இந்தியாவின் கிராம மற்றும் நகர்புறங்களில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தேவை குறித்து விவாதி.
- இந்தியாவில் குடிமக்களுக்கு உள்ளாட்சி அரசாங்கங்களில் உள்ள பொறுப்பு குறித்து விவாதி

இந்தியாவில், கிராம உள்ளாட்சி அரசாங்கங்கள் 'பஞ்சாயத்து ராஜ்' என்ற பொது பெயரில் அழைக்கப்படுகின்றன. அரசாங்கங்கள் பஞ்சாயத்து செய்கிற (ஆழ்ந்து விவாதித்தல் மற்றும் பேச்சு வார்த்தை நடத்துதல்) இடமாக கருதப்படுவதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் நகர்புற உள்ளாட்சி அரசாங்கங்கள் அவைகளின் பொருளாதார மற்றும் அரசியல் அடிப்படையை கொண்டு நகராட்சிகள், மாநகராட்சிகள், நகரியம், பாளையவாரியம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய நகரங்கள் நகராட்சிகளாகவும் பெரு நகரங்கள் மாநகராட்சிகள் எனவும், தொழில் நகரங்கள் நகரியங்கள் எனவும், ராணுவ அமைப்புகள் உள்ள இடங்கள் பாளையவாரியங்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வகைகள்

- மாநகராட்சிகள்
- நகராட்சிகள்
- நகரியங்கள்
- பேரூராட்சிகள்
- பாளைய வாரியங்கள்

செயல்பாடு

மாணவர்கள் தங்களுக்குள் இரண்டு அல்லது மூன்று குழுக்களை ஏற்படுத்திக்கொண்டு தங்களது பகுதியில் எதிர்பாராத விதமாக பரவிய நோய்கள், பெருமழையின் போது உடைப்பெடுத்த நீர் நிலைகள் அல்லது வயதுவந்தோர் கல்வி போன்ற உள்ளூர் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கவும்.

மாநகராட்சிகள் என்பவை, பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்ட, சேவைகளையும், வசதிகளையும் வழங்க விரிவான நிர்வாக அமைப்பு தேவைப்படுகிற பெரு நகரங்களில் ஏற்படுத்தப்படுகின்றன.

கிராமங்கள் மற்றும் சிறு நகரங்களில் இருந்து பல ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெறும் மக்களின் இடப்பெயர்ச்சி ஒரு நகரத்தை, ஒரு பெருநகரமாக மாற்றுகிறது.

நகராட்சிகள் என்பவை மக்கள் தொகை பத்து லட்சத்திற்கும் குறைவாக உள்ள சிறு நகரப்பகுதிகளில் ஏற்படுத்தப்படுகின்றன. நகராட்சிகளும் வகை-1, வகை-2 என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்பாடானது குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் நகராட்சிகளின் தர நிர்ணயம் செய்யப்படுகின்றது.

செயல்பாடு

ஒன்றிணைந்த உளச்சான்றினால் பொது இடங்களில் தூய்மை வலியுறுத்தப்படும்போது மட்டுமே ஒன்றுபட்ட தூய்மை உறுதிப்படும். மகாத்மா காந்தி பிறந்த அக்டோபர் 2, அன்று நம் தேசத்தந்தைக்கு அஞ்சலி செலுத்துகிற அதே வேளையில், அனைத்து ஏழை மக்களுக்கும் அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல் என்ற அவரின் கனவை நிறைவேற்ற நாம் பாடுபடவேண்டும்.



முழுமையான சுகாதாரத்தை நோக்கி

- ஒன்றிணைந்த குறைந்த செலவினத்திலான சுகாதார திட்டத்தின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் மூலம் மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையை 2010–ம் ஆண்டுக்குள் நீக்கும் நோக்கத்தில் உலர் கழிவறைகளை அமைக்க மானியங்களை உயர்த்தி வழங்குதல்
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் அனைத்து குடிசைப்பகுதிகளுக்கும் அடிப்படை தேவைகளை (குடிநீர், துப்புரவு, கழிவு நீரகற்றல், மின்சாரம், ஆரோக்கியம், சமூக பாதுகாப்பு மற்றும் வீடு வழங்குதல்). (நகர்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குதல் மேலும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி திட்டம்) மேலும் 'ராஜீவ் ஆவாஸ் யோஜனா' திட்டம் மூலம் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை ஒவ்வொரு வீட்டுக்கும் வழங்குதல்.
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் வடிகால், சுகாதாரம் மற்றும் உலர் கழிவு மேலாண்மை வசதிகளை மேம்படுத்துதல் (சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான கட்டமைப்பு, ஆளுகை மற்றும் நகர்ப்புற கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்).
- முழுமையான சுகாதார கொள்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.

புதிய தொழிற்சாலைகள் அமைகின்ற இடங்களில் நகரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அங்குள்ள குடிமக்கள் விவசாயம் சார்ந்த தொழில்களிலிருந்து விவசாயம் சாரா தொழில்களுக்கு மாறுகின்றனர். இராணுவ, பயிற்சி மையங்கள் அமைந்திருக்க கூடிய இடங்களில், இராணுவ தளவாடங்கள் உற்பத்தி தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் இடங்களில் பாளைய வாரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கிராமப்புற உள்ளாட்சி அரசாங்கங்களும், நகர்ப்புற அரசாங்கங்களும், அரசாங்க படிநிலையில் இறுதி நிலையில் உள்ளவை ஆகும்.

செயல்பாடு

உனது பகுதியில் குடிநீர், மின்சாரம், சாலை பொது போக்குவரத்து, துப்புரவு போன்ற பொது சேவைகள் போதுமான அளவிலும், நியாயமாகவும் உள்ளதா? உனது சொந்த உதாரணம் ஒன்றைக் கூறு.

உலகின் பல்வேறு நாடுகளில் ஊரக மற்றும் நகர்ப்புற அரசாங்கங்கள் வெவ்வேறு விதங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஆனால் உள்ளாட்சி அரசாங்கங்கள் எற்படுத்தப்பட்டதன் நோக்கம் எல்லா நாடுகளிலும் ஒன்றே. உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை உள்ளூர் மக்களுக்காக, உள்ளூரிலிருந்து கிடைக்கும் வருவாயையே பிரதானமாக கொண்டு ஏற்படுத்தப்பட்டவை.

செயல்பாடு

சொத்து வரி, குடிநீர் வரி, தொழில் வரி போன்ற பல்வேறு வரிகளை உள்ளாட்சி அரசாங்கங்கள் விதிக்கின்றன. அவ்வரிகள் பற்றி ஒரு மாத ஊதியம் பெறும் நபர், தொழிற்சாலை நடத்தும் ஒருவர் மற்றும் ஒரு வியாபாரி போன்றோரிடம் நீ கேட்டு நேரிடையாக தெரிந்து கொள். நீ அறிந்தவற்றை வகுப்பறையில் பகிர்ந்து கொள்.

அரசாங்க படி நிலையில், மேல் நிலையில் உள்ள அரசாங்கம் உள்ளாட்சி அமைப்புகளை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் பணியை மேற்கொள்கிறது.

12.3 பல்வேறு நாடுகளில் உள்ளாட்சி அரசாங்கங்கள்

உள்ளாட்சி அரசாங்கங்கள் மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து காணப்படும் பழமையான ஒன்றாகும். பல்வேறு உலக நாடுகளில் அவர்களின் நவீன அரசுகளே உள்ளாட்சி அரசாங்கங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. பல்வேறு நாடுகளில் அமைந்துள்ள உள்ளாட்சி அரசாங்கள் தொடர்பாக அறிய தொடங்கினால், அனைத்து நாடுகளிலும், அவை சிறிய நாடோ அல்லது பெரிய நாடோ, வளர்ச்சியடைந்த நாடோ அல்லது வளர்சியுறா நாடோ ஏதோ ஒரு வகையில் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுவதும் அதன் மூலம் பொது சேவைகள் மற்றும் வசதிகள் அடித்தட்டு மக்கள் வரை சென்றடைவதையும் காணலாம்.

ஆனால், கட்டமைப்பு, அதிகாரம், பணி வரம்பு, நிதி ஆதாரங்கள் போன்றவற்றில் அவை பெருமளவு வேறுபடுகின்றன. பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களே தங்களின் முயற்சியால் மையப்படுத்தப்பட்டு இருந்த அதிகாரத்தை பரவலாக்கம் செய்கின்றன. வளர்ச்சி அடைந்த நாடுகளில் நிதி பகிர்வு, காவல் பணி வரம்பு, போக்குவரத்து, மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் போன்றவை இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சனைகளாகவே உள்ளன. ஆனால் வளரும் நாடுகளில் மத்திய அரசாங்கங்கள் அதிகாரத்தையும், நிதி ஆதாரங்களையும் மையப்படுத்தும் முயற்சியை மேற்கொள்கின்றன. இந்தியாவில், மாநில மற்றும் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு நிர்வாக மற்றும் நிதி தொடர்பான அதிகாரங்களை மேலும் பகிர்ந்தளிக்க மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் எப்போதுமே இருந்து வருகிறது.

செயல்பாடு

ஒரு சுவரொட்டியை வடிவமைக்கவும்

உனது கிராமத்தில் அல்லது நகரத்தில் நம் அலட்சியம் காரணமாக நெகிழி குப்பைகள் மற்றும் கழிவுகளால் நிரம்பியிருக்கும் ஆறுகள், ஏரிகள், குளங்கள் பற்றி குறிப்பிடு.

நம் நாட்டில் முக்கியமான சில வாழ்விடங்கள் வேகமாக அழிந்து வருகின்றன. இழந்து போன வாழ்விடங்களை மீட்டெடுக்கவும் எஞ்சியுள்ளவற்றை பாதுகாக்கும் பொருட்டும் ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஏற்பாடு செய். அவற்றின் மூலமாக ஏரிகள் மற்றும் குளங்களை தூய்மைப்படுத்தி, சுத்தமான குப்பைகளற்ற இயற்கை சூழலை எல்லா உயிரினங்களுக்கும் ஏற்றதாக உருவாக்க முயற்சிக்கவும்.

நீ செய்ய வேண்டியவை என்ன?

- ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அதில் பொருத்தமான சொற்றொடரை வடிவமைக்கவும். உங்கள் ஊரின் பல்வேறு தரப்பு மக்களையும் நீர் நிலைகளின் கழிவுகளை அகற்ற அழைக்கவும்.
- சொற்றொடர்: "குப்பைகளை அகற்றுவோம். நீர்நிலைகளை காப்போம்"
- நீ எடுக்கும் எந்த ஒரு முயற்சியும் எதிர்காலத்திற்கு மிகவும் அவசியம் என்பதை நினைவில் கொள்.

செயல்பாடு

உங்கள் பகுதியில் உள்ள குடிநீர், மின்சாரம், துப்புரவு வடிகால் போன்ற சில பொது வசதிகள் எவ்வாறு உள்ளது என்று பார். அவற்றை மேம்படுத்த ஏதாவது வாய்ப்புள்ளதா? என்ன செய்யப்படவேண்டும் என்று நீ கருதுகிறாய்? கீழே உள்ள அட்டவணையை பூர்த்தி செய்யவும்.

வசதிகள்	உங்கள் ஊரில் உள்ளதா?	அது எவ்வாறு மேம்படுத்தப்பட வேண்டும்?
குடிநீர்		
வடிகால்		
துப்புரவு		
மின்சாரம்		
சாலை		
பொது போக்குவரத்து முறை		

12.4 இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி

இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தோற்றத்தை பற்றி ஆராய்ந்தால், அவை கிறித்து பிறப்பதற்கு முன்பே (பொ.ஆ.மு.) இருந்ததை அறியலாம். கி.மு. (பொ.ஆ.மு.) 600 முதல் கி.பி. (பொ.ஆ.) 600 வரை உலகில் பல குடியரசுகள் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தன. இந்த காலத்தில் தான் ஜைன மதத்தை தோற்றுவித்த

மகாவீரர், புத்த மதத்தை தோற்றுவித்த கௌதம புத்தர் போன்றோர் தோன்றினர். புத்த மற்றும் ஜைன இலக்கியங்களில் கிராமங்கள் அளவு மற்றும் வாழும் முறையால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

புத்தர் மற்றும் மகாவீரர் ஏற்படுத்திய மத அமைப்புகளில் மக்களாட்சி நடைமுறையில் முடிவுகள் எடுக்கப்பட்டன. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் அப்போதைய கிராம நிர்வாகம் பற்றி விரிவாக விளக்கப்படுள்ளது. மௌரியர்களின் ஆட்சி காலத்தில் கிராமமும், மாவட்டமுமே நிர்வாக அலகுகளாக இருந்தன.

தென்னிந்திய தீபகற்பத்தில் கிறித்துவின் காலத்திற்கு முன்பே உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டு வந்துள்ளன. இந்த வரலாற்று காலம் முந்தைய சோழர் காலம், களப்பிரர்கள் காலம் மற்றும் பிந்தைய சோழர் காலம், விஜய நகர பேரரசின் தோற்றம், இஸ்லாமியர்கள், மொகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் வருகை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. முந்தைய சோழர் காலத்திலும், களப்பிரர்கள் காலத்திலும் இருந்த உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி சிறிதளவே ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆனால், தென்னிந்தியாவின் கடைக்கோடியில் ஆட்சி புரிந்த பாண்டியர்கள் காலத்திலும், தென் மத்திய இந்தியாவில் ஆட்சி புரிந்த பல்லவர் காலத்திலும் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மேலும் சோழர்கள் காலத்தில் உள்ளாட்சி அரசாங்கங்கள் நன்கு மேம்பட்ட நிலையில் செயல்பட்டு வந்துள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் கண்டெடுக்கப்பட்ட, முதலாம் பராந்தக சோழன் கால கல்வெட்டுகள் (கி.பி. (பொ.ஆ) 919 – கி.பி. (பொ.ஆ) 922) உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி விரிவாக விளக்குகின்றன. ஒவ்வோர் ஊரிலும் ஒரு சபை இருந்ததாகவும், அதில் அவ்வூரின் அனைத்து ஆண்களும் உறுப்பினராக இருந்ததையும், அவர்கள் அனைத்து பொதுப் பிரச்சனைகளிலும் முடிவெடுத்ததையும் இக்கல்வெட்டுகள் மூலமாக அறிய முடிகிறது. இந்த சபைகள் "ஊர்" மற்றும் "மகா சபை" என்று இரண்டு விதங்களாக அழைக்கப்பட்டன. மேலும் மூன்றாவது வகையாக நகரம் என்று வியாபார மையங்களும், நான்காவது நாடு என்றும் அழைக்கப்பட்டன. இவற்றில் நாடு என்பது கிராமங்கள் மற்றும் மற்ற பகுதிகளை உள்ளடக்கிய அமைப்பாகவும், நகரம் என்பது நகரப்பகுதிகளை உள்ளடக்கிய ஓர் அமைப்பாகவும் இருந்தன. பொதுவாக பார்த்தோமேயானால், 9-ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலங்களில் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டமைக்கான சான்றுகள் குறைவாகவே கிடைத்துள்ளன. "நாடு" மற்றும் "நகரம்" என்ற இரு அமைப்புகளுமே, நிலங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள், கோவில்கள் மற்றும் நீர்பாசனங்களை நிர்வகித்தல், வரி வசூலித்தல், பெரிய மூலதனம் தேவைப்படுகின்ற பணிகளுக்கு கடன் வழங்குதல் மற்றும் தொண்டு நிறுவனங்களை நிர்வகித்தல் போன்ற பணிகளை செய்கின்றன. "ஊர்" மற்றும் "மகாசபை" என்ற இரு அமைப்புகளும் அரசனின் கட்டளைகளை அமல்படுத்தும் அதிகாரிகளுக்கு துணைபுரிந்தன.

முதலாம் ராஜராஜ சோழன், வீர நாராயண சதுர்வேதி மங்கலம் என்ற ஊரின் மகாசபைக்கு நாட்டுக்கு துரோகமிழைத்த துரோகிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்டதை அறிய முடிகிறது. சர் சார்லஸ் மெட்கேப், சர் ஜார்ஜ் பேர்டு வுட் மற்றும் எல்பின்ஸ்டோன் போன்ற பல வரலாற்றாசிரியர்கள் பண்டைய மற்றும் இடைக்காலத்தில் தென்னிந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்கள் வளமையுடன் செயல்பட்டு வந்ததை குறிப்பிடுகின்றனர். ஆனால் மிக விரிவான முறையில் அனைத்து பகுதிகளிலும் செயல்பட்டு வந்தது என்பதில் சில வரலாற்றாசிரியர்களுக்கு சந்தேகம் உள்ளது.

மொகலாயர்கள் காலத்தில் (கி.பி. (பொ.ஆ) 1500 முதல் கி.பி. (பொ.ஆ) 1777)

அரசுகள் மாறினாலும், மத்திய அரசுக்கும் உள்ளூர் நிர்வாகத்துக்குமிடையேயான உறவில் அடிப்படை விதிகள் மாறவில்லை. மொகலாய பேரரசு அதன் உச்சத்தில் இருந்தபோது, அது பல மாகாணங்களாக (பராக்னாஸ்) பிரிக்கப்பட்டிருந்தது, மாகாணங்களில் உட்பிரிவுகள் (சர்க்கார்) ஏற்படுத்தப்பட்டிருந்தன. சர்க்கார்கள் பல கிராமங்களை கொண்ட தொகுதிகளாக (பராக்காஸ்) பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு படிநிலையிலும் அரசாங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கென அதிகாரிகள் பேரரசால் நியமிக்கப்பட்டிருந்தனர். கிராமப்பகுதிகளில் மொகலாய பேரரசின் இறுதிக் காலங்களில், உள்ளாட்சி அமைப்புகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. ஆனால் அவை பற்பல தாக்குதல்களை கண்டாலும், தொடர்ந்து இயங்கின. பிளாசிப்போருக்கு பின் (கி.பி. (பொ.ஆ) 1757), ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, வங்காள நவாபிடமிருந்து நில வரி வசூல் உரிமைகளை பெற்றது. இதுவே, இந்தியாவில் ஆங்கிலேயே ஆட்சிக்கு வழிகோலியது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் மாகாண தலை நகரங்களான கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னை தவிர மற்ற கிராம மற்றும் நகர வியாபார மையங்கள் எந்த ஒரு கட்டுப்பாட்டின் கீழும், மேற்பார்வையின் கீழும் இயங்கவில்லை. மாவட்ட நிர்வாகமானது மாவட்ட ஆட்சியரின் கீழ் இயங்கியது. ஆங்கிலேயர் ஆட்சியில் மாவட்ட நிர்வாகம் முக்கியமானதொரு நிர்வாக அமைப்பாகவும், நாட்டின் ஊரக பகுதிகள் அனைத்தும் அதன் கட்டுப்பாட்டிலும் இருந்தன.

கல்கத்தா (கொல்கத்தா) பம்பாய் (மும்பாய்) மற்றும் மெட்ராஸ் (சென்னை) நகரங்களில், மாநகராட்சி நிர்வாகத்தை ஏற்படுத்தியது ஆங்கிலேயர் ஆட்சியின் ஒரு முக்கியமான நிகழ்வாக கருதப்படுகிறது. 1882-ஆம் ஆண்டு ரிப்பன் பிரபு ஒரு தீர்மானத்தை முன் மொழிந்தார். அதன்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்தவும் அதை மேற்பார்வையிட மாவட்ட அளவில் வாரியங்களை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுத்தார்.

ரிப்பன் பிரபுவின் தீர்மானம், உள்ளாட்சி அமைப்புகளில் பெரும்பாலும் அதிகாரிகளல்லாதோரை கொண்டிருக்க வேண்டும் எனவும், அவர்கள் முடிந்தவரை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் கூறியது. ஏறத்தாழ 500 உள்ளாட்சி அமைப்புகள் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரிகளல்லாதோரை கொண்டு தொடங்கப்பட்டன. அவர்களின் பெயர்களை மாவட்ட ஆட்சியர் பரிந்துரைத்தார். மாவட்ட வாரியங்களின் பணிகள் 1909-ஆம் ஆண்டு வரை காவல், கல்வி மற்றும் கிராம துப்புரவு முதலியவையாக மட்டுமே இருந்தன.

ரிப்பன் பிரபுவால் ஏற்படுத்தப்பட்ட உள்ளாட்சி அரசாங்கங்கள் பலரால் விமர்சிக்கப்பட்டன. ஆங்கிலேய அரசாங்கம் 1907-ஆம் ஆண்டு மத்திய அரசிற்கும், மாகாண மற்றும் அதன் கீழ் உள்ள அமைப்புகளுக்குமிடையே நிர்வாக மற்றும் நிதி உறவுகளைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு விசாரணை ஆணையத்தை அமைத்தது. அப்போதைய நிர்வாக அமைப்பை நிர்வாக பகிர்வின் மூலம் மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் இந்திய அரசாங்க சட்டம் 1919-ன் படி மாகாண அரசாங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எனும் அம்சம் அரசின் இரட்டை ஆட்சி முறையின் கீழ் ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் கிராம உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை 1926-ஆம் ஆண்டில் 1417 ஆகவும், 1937-ஆம் ஆண்டில் 6250 ஆகவும் அதிகரித்தது. இங்கு மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. அவை மாவட்ட வட்டார மற்றும் கிராம அளவில் உள்ளன. மாவட்ட மற்றும் வட்டார அமைப்புகளில் 1923—ம் ஆண்டு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாகாணங்களில் இருந்த அலுவலரல்லாத தலைவர்கள் மாற்றப்பட்டு அலுவலர்கள் தலைவர்களாக

நியமிக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்ட நிர்வாக அமைப்புகளில் நீதிக்கட்சியின் உறுப்பினர்கள் 1927 ஆம் ஆண்டில் 545 பேர்கள் நியமிக்கப்பட்டனர். 1937-ல் முதல் 1947 ஆம் ஆண்டு வரை தேச சுதந்திர பிரச்சனை உட்பட பல பிரச்சனைகளை உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர்கள் சந்தித்தனர்.

உங்களுக்குத் தெரியுமா?

இரட்டை ஆட்சி முறை மூலமாக நிர்வாக துறைகள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் எனவும், மாகாண அரசுகளுக்கு மாற்றி தரப்பட்ட துறைகள் எனவும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. காவல், சட்டம் ஒழுங்கு, நிதி போன்ற துறைகள் ஒதுக்கப்பட்ட துறைகள் எனப்படும். அவை ஆளுநரின் வசம் இருக்கும். கல்வி மற்றும் பிற துறைகள் மாற்றித் தரப்பட்ட துறைகளாகும். அவை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருக்கும்.

இந்தியா 1947-ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த பின்பு, உள்ளாட்சி அரசாங்களுக்கு புத்துயிரூட்ட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவில் பரவலாக்கப்பட்ட அதிகார அமைப்பு இருத்தல் வேண்டும், கிராமபுற பஞ்சாயத்துக்கு ஆளுகையில் பொறுப்புகள் அளிக்கப்பட வேண்டும் (தன்னிறைவு பெற்ற கிராம சுயராஜ்ஜியம்) என்று மகாத்மா காந்தி வலியுறுத்தினார்.

ஷர்மா நாராயணன் என்பவர் சுதந்திர இந்தியாவுக்கான காந்திய அரசியலமைப்பு தொடர்பான ஒரு திட்ட வரைபடத்தை தயாரித்தார். அதில் குடிமக்களின் சமூக, பொருளாதார அரசியல் நடவடிக்கைகளுக்கான அடிப்படை அமைப்பாக பஞ்சாயத்துகள் இருக்கும்படி அமைத்தார்.

கிராம பஞ்சாயத்துகள் குடிமை, அரசியல் மற்றும் நிர்வாகப்பணிகளைப் போல் உற்பத்தியை ஒருங்கிணைத்தல் மற்றும் வளங்களின் விநியோகம் தொடர்பான பொருளாதார பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த பொருளாதார நடவடிக்கையின் மூலமே கிராம சமூகங்கள் தன்னிறைவு அடைவதுடன் தங்களது அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

இதனால், நவம்பர் 26, 1949-ஆம் நாள் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய அரசமைப்பின் பகுதி நான்கில் அமைந்துள்ள அரசின் வழிகாட்டு நெறிமுறைகளில், விதி 40 ஏற்படுத்தப்பட்டது. "அரசு கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவைகள் சுய ஆட்சியின் அலகுகளாக பணிபுரிய தேவையான அதிகாரங்களையும், திறனையும் வழங்க வேண்டும்" என அரசியலமைப்பு பிரிவு 40 கூறுகிறது.

அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் விதிகளின் படி செயல்படுவற்காக 1952-ஆம் ஆண்டு பேரார்வத்துடன் சமூக மேம்பாட்டு திட்டம் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கமாக மக்களின் கூட்டு முயற்சியின் மூலம் கிராமங்களின் சமூக பொருளாதார மாற்றத்தை உறுதி செய்வதாகும். இதற்கு தொழில் நுட்ப ஒத்துழைப்பையும், நிதி பங்களிப்பையும் அரசு செய்யும். இந்த திட்டமானது, தேசிய விரிவாக்க பணியாக பல்வேறு ஊரக பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அறிவை விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் ஊரக கைவினை தொழில்களில் புகுத்துவது இதன் நோக்கமாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலமான 1956-ல் (1956-61) கிராம பஞ்சாயத்துகள் அமைப்பு ரீதியாக உயர்நிலைகளில் உள்ள மக்கள் நிர்வாக அமைப்புகளுடன் இணைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. 1957-ஆம் ஆண்டு, திட்ட வடிவமைப்பு குழு ஒன்றை, பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் மத்திய அரசாங்கம் அமைத்தது. மேத்தா குழு முக்கியமான இரண்டு பரிந்துரைகளை கூறியது

அவை: நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டும் மற்றும் நிர்வாகம் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இரண்டாவதாக, ஊரக வளர்ச்சி வட்டங்கள் மக்களாட்சி நிர்வாக அலகுகளாக மாற்றப்பட வேண்டும். அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட ஊராட்சி ஒன்றியம் மூலம் அப்பகுதியில் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும் மாவட்ட அளவில் ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அளவிலான சுகாதாரம், விவசாயம், கால்நடை, கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட மேம்பாட்டு குழு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரைத்தது. இந்த மாவட்ட அமைப்பு ஒரு ஆலோசனை வழங்கும் அமைப்பாக மட்டுமே செயல்படும். மேத்தா குழுவின் பரிந்துரைகள் பெரும்பாலும் அனைவராலும் வரவேற்கப்பட்டன. பல்வேறு மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ் சட்டங்கள் இயற்றப்பட்டன. ஏறத்தாழ 90 சதவீத இந்திய மக்கள் 1960 வாக்கில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டனர்.

பஞ்சாயத்து அமைப்புகளின் செயல்பாடுகளை பற்றி ஆராயவும், அதனை செம்மைப்படுத்தவும் இந்திய அரசாங்கம், 1977-ஆம் ஆண்டு அசோக் மேத்தா தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழு, பஞ்சாயத் ராஜ் அமைப்பு மக்களாட்சி பண்புகளை கொண்ட ஒரு உள்ளாட்சி அரசாங்க அமைப்பாக மாறவேண்டும், மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும், அனைத்து பணிகளையும் ஒருங்கிணைத்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்றது. எனவே, இது தனது முதல் பரிந்துரையாக மாவட்ட பஞ்சாயத்து நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்றது. ஒரு தற்கால தீர்வாக, வட்டார அளவில் பஞ்சாயத்து ஒன்றியம் நீடிக்க பரிந்துரைத்தது. இது உள்ளாட்சி அரசாங்கத்தின் ஒரு அலகாக இல்லாமல், மாவட்ட பஞ்சாயத்திற்கு ஒரு இடைநிலை ஆதரவு கரமாக செயல்பட வேண்டும் என்றது. அசோக் மேத்தா குழு, 1978-ஆம் ஆண்டு தனது பரிந்துரையை சமர்பித்தது. இதன் எதிரொலியாக கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்கள் தங்கள் மாநில பஞ்சாயத்து சட்டங்களில் திருத்தங்களை கொண்டு வந்தன.

உள்ளாட்சி அரசாங்கங்களை வலுப்படுத்த 1978 முதல் 1986 வரை, சி.எச். அனுமந்த்ராவ் குழு, ஜி.வி.கே. ராவ் குழு மற்றும் எல்.எம். சிங்வி குழு போன்ற பல குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவையாவுமே அசோக் மேத்தா குழுவின் பரிந்துரைகளில் சிறுசிறு மாற்றங்களையே பரிந்துரைத்தன. ராஜீவ் காந்தி அரசாங்கத்தால் 1989-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 64-வது மற்றும் 65-வது சட்ட திருத்தம் மிக முக்கியமான ஒரு நிகழ்வாகும். ஆனால், இது மாநிலங்களவையில் நிறைவேற்றப்படவில்லை.

பின்பு, பல்வேறு முயற்சிகளின் விளைவாக 1992-ஆம் ஆண்டு, முந்தைய பல முயற்சிகளின் சிறப்பம்சங்களையும் உள்ளடக்கி, அரசாங்கம் 73-வது மற்றும் 74-வது சட்டத்திருத்த மசோதாவை 1992-ல் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி இறுதியில் அது 1993-ஆம் ஆண்டு இரு அவைகளிலும் நிறைவேற்றியது.

இந்த 73-வது சட்ட திருத்தமும் 74-வது சட்ட திருத்தமும் இந்திய அரசமைப்பில் பகுதி IX மற்றும் IX(A) என்ற இரு பகுதிகளை இணைத்தது. அதில் அரசியல் சட்ட பிரிவுகள் 243 முதல் 243(ZG) வரை உள்ளது.

12.5 73-வது அரசமைப்பு சட்ட திருத்தம் – அமலாக்கம் மற்றும் அதன் விளைவுகள்

மக்கள்தொகை இருபது லட்சத்துக்கும் மிகாமல் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் கிராமம், ஒன்றியம் மற்றும் மாவட்டத்தைக் கொண்ட மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என 73-வது அரசமைப்பு சட்ட

திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்ட அரசமைப்பு சட்ட பிரிவு 243(B) கூறுகிறது. மாவட்டம் என்பது சாதாரணமாக வழக்கில் உள்ள ஒரு மாநிலத்தின் மாவட்டத்தை குறித்தாலும், கிராம மற்றும் ஒன்றிய பஞ்சாயத்துகளின் எல்லை பற்றி இந்த சட்ட திருத்தம் குறிப்பிடவில்லை. ஒரு கிராம பஞ்சாயத்தின் எல்லையை மாநில ஆளுநர் ஒரு அறிக்கை மூலமாக தீர்மானிக்கலாம். அது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். இதைப் போலவே இடைநிலையில் உள்ள பஞ்சாயத்தான ஒன்றிய பஞ்சாயத்தையும் ஆளுநர் தன் அறிக்கை மூலம் தீர்மானிக்கிறார். இது மாநில அரசுக்கு பஞ்சாயத்துகளை அமைப்பதிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களை அமைப்பதிலும் முழு சுதந்திரத்தை வழங்குகிறது.

அரசமைப்பில் ஒரு புதிய அட்டவணையாக 11-வது அட்டவணை சேர்க்கப்பட்டது. அது கட்டாய பணிகள் மற்றும் விருப்ப பணிகளை பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளுக்கும் தருகிறது.

(அ) கிராம அளவில் கிராம பஞ்சாயத்து உள்ளது.

(ஆ) மாவட்ட அளவில் மாவட்ட பஞ்சாயத்து உள்ளது.

(இ) 20 லட்சத்துக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட மாநிலங்களில் கிராம மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு இடைப்பட்ட அளவில் இடைநிலை பஞ்சாயத்துக்கள் உள்ளன.

ஒரு பஞ்சாயத்தில் உள்ள அனைத்து இடங்களும், தொகுதி மக்களின் நேரிடையான தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும். ஒரு கிராம பஞ்சாயத்தின் வாக்காளர்களை கொண்ட அமைப்பு "கிராம சபை" என்று அழைக்கப்படுகிறது. ஒரு கிராம பஞ்சாயத்தின் வாக்காளர் பட்டியலில் உள்ள அனைவரும் கிராம சபை உறுப்பினர்கள் ஆவர்.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும், பஞ்சாயத்து தலைவர் அம்மாநில சட்டப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார். அந்த சட்டப்படியே கிராம பஞ்சாயத்தின் தலைவருக்கும், ஒன்றிய பஞ்சாயத்தின் தலைவருக்கும் மாவட்ட பஞ்சாயத்தில் பிரதிநிதித்துவம்



பதினோராவது அட்டவணை (பிரிவு 243G)

- விவசாயம் மற்றும் விவசாய விரிவாக்க பணிகள்
- நில மேம்பாடு, நிலச்சீர்த்திருத்தங்களை அமல்படுத்துதல், நிலங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பேணுதல்.
- சிறிய நீர் பாசனங்களை நிர்வகித்தல், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல்
- கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் பால் பண்ணை
- மீன் வளம்
- சமூக காடுகள் மற்றும் பண்ணை காடுகள்
- சிறு காடுகளின் மூலமான உற்பத்தி
- சிறு தொழில்கள், உணவு பதப்படுத்தும் தொழில்கள் உட்பட.
- காதி, கிராமம் மற்றும் குடிசைத் தொழில்கள்
- ஊரக வீட்டு வசதி
- குடிநீர்
- எரிபொருள் மற்றும் கால்நடை தீவனம்
- சாலைகள், சிறுபாலங்கள், பெரிய பாலங்கள், படகு, நீர்வழிகள்.
- ஊரக மின்மயமாக்கல் மற்றும் மின் விநியோகம்
- மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்
- வறுமை ஒழிப்பு திட்டங்கள்
- தொடக்க கல்வி மற்றும் மேல் நிலைக் கல்வி
- தொழில்நுட்ப பயிற்சி மற்றும் தொழில் கல்வி
- நூலகங்கள்
- கலாச்சார நடவடிக்கைகள்
- சுகாதாரம் மற்றும் துப்புரவு; மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் மருந்தகங்கள் உட்பட
- குடும்ப நலன்
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு
- சமூக நலம்; மாற்றுத்திறனாளிகள் மற்றும் மன நலம் குன்றியோர் நலம் உட்பட
- நலிவடைந்த பிரிவினரின் நலம் குறிப்பாக பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர்.
- பொது விநியோக முறை
- சமுதாய சொத்துக்களை நிர்வகித்தல்

அளிக்கப்படுகிறது. அது போலவே சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கிராம பஞ்சாயத்துக்கு மேல் உள்ள பஞ்சாயத்துகளில் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த சட்ட திருத்தம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒன்றிய பஞ்சாயத்திலும், மாவட்ட பஞ்சாயத்திலும் பங்கு பெறுகிற வாய்ப்பை வழங்குகிறது. மேலும், பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு அளிக்கிறது. மேலும், பெண்களுக்கு மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமல் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. பஞ்சாயத்துகளின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவின் 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,50,000 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன.

மாநில சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட என்ன தகுதிகள் தேவையோ, அதே தகுதிகள் தான் ஒருவர் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட தேவைப்படும் தகுதிகள் ஆகும். பஞ்சாயத்தின் பொறுப்புகள் எவை என்று தெளிவாகவும் விரிவாகவும் அரசமைப்பின் பதினோராவது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. தேசிய நிதிக்குழு போலவே, மாநில நிதிக்குழு

ஒன்று உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு மாநில நிதியை பகிர்ந்து கொடுப்பதற்கும், அதில் பரிந்துரைகளை கொடுப்பதற்கும் அரசமைப்பு சட்டத் திருத்தத்தினால் ஏற்படுத்தப்பட்டது.

73-வது சட்டத்திருத்தத்தின் விளைவாக உச்ச நீதிமன்றம் அனைத்து உள்ளாட்சி அதிகாரிகளும் அரசாகவோ அல்லது அரசாங்கமாகவோதான் கருதப்பட்டு அவ்வாறே நடத்தப்பட வேண்டும் என்று கூறியது. இதன் விளைவாக பஞ்சாயத்துகள் சட்டப்பூர்வ தன்மை பெறுகின்றன. அவை அரசின் கருவியாக அங்கீகரிக்கப்பட்டு மக்களின் பங்களிப்பு அமைப்புகளை கீழ்நிலைகளில் உருவாக்குகின்றன. அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகளான மாநில தேர்தல் ஆணையம், மாநில நிதிக்குழு போன்றவை பஞ்சாயத்துகளுக்கு நிலைத்தன்மையையும், நிரந்தர தன்மையையும் அளிக்கின்றன. அடிப்படை சேவைகளான குடிநீர், ஊரக துப்புரவு, சுகாதாரம், தொடக்க கல்வி போன்றவை உள்ளாட்சி அமைப்புகளின் பிரதான பணியாக இருந்த போதிலும் பெரும்பாலான பஞ்சாயத்துகள், மாநில அரசின் திட்டங்களை அமல்படுத்தும் நிறுவனங்களாகவே நடத்தப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

பஞ்சாயத்து ராஜ் (1959-2009)

பொன் விழா ஆண்டு- அக்டோபர் 02,1959 ஆம் நாள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ராஜஸ்தான் மாநிலம் நகவுரில் பஞ்சாயத்து ராஜ்-க்கு அடிக்கல் நாட்டினர். ஊரக இந்தியாவை ஆள்வதில் இது ஒரு புரட்சிகரமான படியாகும். கிராமங்களின் முழுமையான வளர்ச்சி மற்றும் மக்களின் கைகளில் அதிகாரத்தை அளித்தல் என்ற நோக்குடனான இந்த பயணம் அன்று தொடங்கியது.

மாவட்ட ஆட்சியரின் கீழ் செயல்படும் மாவட்ட நிர்வாகமானது, உத்தரவுகளை நிறைவேற்றும் நிர்வாக அமைப்பாக உள்ளது. இதில், கிடைமட்ட ஒருங்கிணைப்பு கீழ்நிலையில் இல்லாமல் இயங்கும் படியாக நம்முடைய மக்களாட்சி கட்டமைப்பு உள்ளது.

உள்ளாட்சி நிர்வாகமானது மேலும் பொறுப்புடனும், வெளிப்படை தன்மையுடனும் மற்றும் மக்களுக்கு பதிலளிக்கும் கடமை உணர்வுடனும் செயல்பட மத்திய மற்றும் மாநில அரசுகளில் மட்டுமல்லாது மாவட்ட மற்றும் கிராம அளவிலும் பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அவைகளுக்குள் நியாயமான வகையில் பணிகள் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

73-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தினால் (1991) ஏற்படுத்தப்பட்ட மூன்றடுக்கு பஞ்சாயத் ராஜ் அமைப்பு

- மாவட்ட பஞ்சாயத்துகள் (தேர்ந்தெடுக்கப்பட்டோர் மற்றும் நியமிக்கப்பட்டோர்)
- ஊராட்சி ஒன்றிய குழு (தேர்ந்தெடுக்கப்பட்டோர்)
- கிராம பஞ்சாயத்து (தேர்ந்தெடுக்கப்பட்டோர்)
- கிராம சபை (ஒரு கிராமத்தின் அனைத்து வாக்களார்களும்) (ஆலோசனை அமைப்பு)

12.6 74-வது அரசமைப்பு சட்ட திருத்தம் - அமலாக்கம் மற்றும் அதன் விளைவுகள்

74-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தின் படி நகர பகுதிகள் என்பவை வெவ்வேறு விதமான அளவுகள், குணம் மற்றும் முக்கியத்துவம் கொண்ட நகரங்களையும் பெரு நகரங்களையும் உள்ளடக்கியவை. மாநகராட்சிகள், நகராட்சிகள், பேருராட்சிகள், நகரியங்கள் மற்றும் பாளைய வாரியங்கள் என்பவை பொதுவான நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்க வகைகளாக உள்ளன. இதில் முதல் நான்கு வகைகளும் மாநில நகராட்சி சட்டங்களின் அடிப்படையிலும், பாளைய வாரியம் மட்டும் மத்திய சட்டமான, பாளைய வாரியங்கள் சட்டம், 1924-ன் அடிப்படையிலும் செயல்படுகின்றன.

அரசமைப்பின் 74-வது அரசமைப்பு சட்ட திருத்தம் 1922-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, ஜூன் 1993-ஆம் ஆண்டு அரசிதழில் வெளியிடப்பட்டது. இந்த 1992ம் ஆண்டு சட்டம் அனைத்து மாநிலங்களுக்கும் ஓர் ஆண்டு காலம் கால அவகாசம் வழங்கியது. அதற்குள் ஒவ்வொரு மாநிலமும், யூனியன் பிரதேசமும் தங்கள் சட்டங்களை தேவையான அளவு திருத்துவதன் மூலமோ மாற்றுவதன் மூலமே மத்திய சட்டத்தின் விதிகளை தங்கள் சட்டங்களில் ஏற்படுத்தி அதன் மூலம் நகர உள்ளாட்சி அரசாங்கங்களை அமைத்திட வேண்டும் என இச்சட்டம் கூறுகிறது. உதாரணமாக பஞ்சாப் நகராட்சிகள் சட்டம் 1911 மாற்றப்பட்டு பஞ்சாப் நகராட்சிகள் மசோதா 1998 கொண்டு வரப்பட்டதை கூறலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

கிராம சபை கூட்டங்கள் ஆண்டிற்கு நான்கு முறை ஜனவரி 26 குடியரசு தினம், மே 1 உழைப்பாளர் தினம், ஆகஸ்ட் 15 சுதந்திர தினம் மற்றும் அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி ஆகிய நாட்களில் நடத்தப்படுகிறது.

74-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தில் நகர உள்ளாட்சி அமைப்புகளில் மூன்றடுக்கு முறை பரிந்துரைக்கப்பட்டது. அவை பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள். இவற்றைப் பற்றி விரிவாக காணலாம்.

பேரூராட்சிகள்

ஒரு பகுதி, ஊரக பகுதியிலிருந்து நகர பகுதியாக உயரக்கூடிய நிலையில் இருந்தால், அப்பகுதி பேரூராட்சி என அழைக்கப்படும். இது நகராட்சிக்கும், ஊராட்சிக்கும் இடைப்பட்ட ஓர் நிலையாகும். இதன் மக்கள் தொகை 5,000-க்கு மேலும் 15,000-க்கு மிகாமலும் இருக்கும். அதன் வருவாய் ஈட்டலும் வருவாய் ஆதாரங்களும் ஊராட்சிக்கென்று அரசு நிர்ணையித்துள்ள வரம்பை விட அதிகரித்து இருக்கும். ஒரு பேரூராட்சியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 3க்கு குறையாமலும் அதே சமயத்தில் 15-ஐ விட மிகாமலும் அம்மாநில சட்டம் கூறும் எண்ணிக்கையில் இருக்கும். இந்த பேரூராட்சி எந்த சட்டமன்ற தொகுதியின் எல்லைக்குள் வருகிறதோ அந்த சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநில அரசால் நியமிக்கப்படும் நகராட்சி நிர்வாகத்தில் அனுபவம் பெற்ற அல்லது சிறப்பு நிபுணத்துவமுடைய இரண்டு உறுப்பினர்கள் பேரூராட்சியின் தேர்ந்தெடுக்கப்படாத உறுப்பினர்களாக இருப்பர். இந்த நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பேரூராட்சி கூட்டங்களில் கலந்து கொண்டாலும் வாக்களிக்கும் உரிமை கிடையாது. ஒரு பேரூராட்சியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கும்.

இந்த பேரூராட்சியின் பகுதிகள் பல சிறு தொகுதிகளாக பிரிக்கப்பட்டு, அவை வார்டுகள் என அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு வார்டும் ஒரு வார்டு உறுப்பினரை தேர்ந்தெடுக்கும். அந்த பேரூராட்சியின் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கைக்கும் ஒட்டு மொத்த மக்கள் தொகை எண்ணிக்கைக்கும் உள்ள விகிதாசாரத்தின் அடிப்படையில் பட்டியலினத்தவருக்கும் பழங்குடியினருக்கும் வார்டுகள் இட ஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. மேலும் ஒட்டு மொத்த வார்டுகள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு இட ஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது.

பேரூராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒருவரை தலைவராகவும், மற்றொருவரை துணைத்தலைவராகவும் பேரூராட்சியின்கூட்டத்தில்தேர்ந்தெடுக்கின்றனர். இந்த கூட்டத்தை துணை ஆணையர் கூட்டுகிறார். ஒவ்வொரு பேரூராட்சிக்கும் கட்டாயம் செய்ய வேண்டிய பணிகளாக குடிநீர் வழங்கல், வடிகால், தூய்மை போன்றவை உள்ளன. ஒவ்வொரு பேரூராட்சிகளுக்கும் அரசு ஒரு செயல் அதிகாரியை நியமிக்கிறது.

நகராட்சி

மக்கள் தொகை 15,000-க்கு மேலும் மூன்று இலட்சத்திற்கு கீழும் உள்ள சிறு நகரப் பகுதிகளில் நகராட்சிகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதே போல் அதன் வரி

வருவாய், மற்ற வருவாய்கள் அரசு நிர்ணயித்த அளவுக்குள் இருத்தல் வேண்டும். இதை அவ்வப்போது அந்தந்த மாநிலங்கள் தீர்மானிக்கும்.

நகராட்சி நிலை	மக்கள் தொகை
வகையினம் அ	ஒரு லட்சமும் அதற்கு மேலும்
வகையினம் ஆ	50,000 முதல் 1 லட்சம் வரை
வகையினம் இ	50,000 க்கு கீழ்

நகராட்சியின் வகையினம் அ-ல் 20 எண்ணிக்கைக்கு குறையாமலும், 50 எண்ணிக்கைக்கு மிகாமலும் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் இருப்பர். அதேபோல் வகையினம் ஆ-ல் 15 முதல் 30 வரை, வகையினம் இ-ல் 10 முதல் 15 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இருப்பர். சட்ட மன்ற தொகுதி எல்லைக்குள் வருகின்ற நகராட்சிகளில், அந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவி வழி உறுப்பினராக நகராட்சியில் இருப்பார். மூன்று உறுப்பினர்கள் வரை அரசாங்கம் நகர சபைக்கு நியமிக்கலாம். தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தலில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பங்கு பெற்று வாக்களிக்க முடியாது. நகராட்சி உறுப்பினர்கள் மக்களால் ரகசிய வாக்கெடுப்பு முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

ஒட்டுமொத்த நகராட்சி பகுதியும், எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமோ அத்தனை வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியலில் நகராட்சி எல்லைக்குள் உள்ளவர்களே பொதுவாக நகராட்சியின் வாக்காளர்களாக எடுத்துக் கொள்ளப்படுவர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சின்னங்கள் அக்கட்சியின் வேட்பாளருக்கு வழங்கப்படும்.

தேர்தல் முடிவுகள் வெளியான 14 நாட்களுக்குள் துணை ஆணையர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டி அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து தலைவர் மற்றும் துணைத் தலைவரை தேர்ந்தெடுக்க வகை செய்ய வேண்டும். நகர பஞ்சாயத்துகளைப் பொறுத்தவரையிலும் ஓர் நகரப் பகுதியில் உள்ள பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் அடிப்படையிலே தனி தொகுதிகள் நகர பஞ்சாயத்துகளில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மேலும் கூடுதலாக பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினப் பெண்கள் உட்பட மொத்த இடங்களில் 30 சதவிகிதம் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் தொகை மூன்று லட்சத்திற்கு குறைவாக உள்ள நகராட்சிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட வார்டுகளை இணைத்து வார்டு குழுக்கள் ஏற்படுத்தப்படும். அந்தந்த வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், வார்டு குழு உறுப்பினர்களாக இருப்பர். ஒவ்வொரு நகராட்சியிலும் நிலைக்குழுக்கள் ஏற்படுத்தப்படும். இதில் நகராட்சியின் தலைவர் மற்றும் துணை தலைவர், மேலும் வகையினம் அ-வாக இருந்தால் நான்கு உறுப்பினர்களையும் வகையினம் ஆ-வாக இருந்தால் இரண்டு உறுப்பினர்களையும் நகராட்சி உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுப்பர். இந்த நிலைக்குழுவின் பதவிக்காலம் இரண்டரை ஆண்டுகளாகும். நகராட்சியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி, சட்டப்படி செயல்படாத போது, அது பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

நகர சபை ஆண்டுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும். அக்கூட்டத்திற்கு நகர சபை தலைவர், அவர் இல்லையெனில் நகர சபை துணைத் தலைவர் தலைமை ஏற்பர். நகர சபை தன் பணிகளை செய்ய பல்வேறு துணை குழுக்களை அமைக்கிறது. இதில் நகர்மன்ற உறுப்பினர்கள் உறுப்பினர்களாக இருப்பர். அவர்கள் பிரச்சனைகளை ஆராய்ந்து, தீர்வுக்கான பரிந்துரைகளை அளிப்பர். இந்த குழுக்கள் இரண்டு வகைப்படும். அவை சட்ட பூர்வ குழுக்கள், சட்ட பூர்வமற்ற குழுக்கள் என இரு வகைப்படும். சிறப்பு தேவைகளுக்காக நகராட்சி அமைப்புகள் சில துணைக் குழுக்களை ஏற்படுத்தலாம் .

நகர் மன்றம்

நகர்மன்ற சட்டத்தின்படி தேர்வு செய்யப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களில் ஒருவர் நகர்மன்றத் தலைவராக ஒரு மாதத்திற்குள் தேர்வு செய்யப்படுகின்றார். நகர் மன்றம் தேர்தல் முடிந்தவுடன் உருவாக்கப்படுகின்றது. இந்த நகர்மன்ற தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கிறது. நகர்மன்றம் ஒன்று அல்லது இரண்டு துணை தலைவரையும் தேர்வு செய்கின்றது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உள்ள நகர்மன்றத் தலைவர்கள் பயணப்படி மற்றும் மாத ஊதியம் பெறுகின்றனர்.

நகர் மன்ற கூட்டங்களை கூட்டுவதும், அதற்கு தலைமை வகிப்பதும் நகர் மன்றத்தலைவரின் பணியாகும். மேலும் தவறு செய்யும் நகர்மன்ற உறுப்பினர் மேல் ஒழுங்கு நடவடிக்கையையும் எடுக்கிறார். நகர் மன்றத்தின் முதன்மை பேச்சாளர் நகர்மன்றத் தலைவர் ஆவர், அரசுடன் தகவல் தொடர்பும் மற்றும் அரசு விழாக்களில் பங்கு கொள்வதும் இவருடைய பணியாகும்.

ஒவ்வொரு நகர்மன்றத்திற்கும் ஒரு நிர்வாக அலுவலர் உள்ளார். அவரை மாநில நிர்வாகம் நியமனம் செய்கின்றது. நகர்மன்ற அலுவலர்கள் அந்த நிர்வாக அலுவலரின் கீழ் பணிபுரிபவர்களாக உள்ளனர்.

நகர்மன்றத்தை ஆளுகின்ற அமைப்பு நகர்மன்ற குழு ஆகும். இது நகர நிர்வாகத்திற்கு பொறுப்புள்ளது. மேலும் சட்டம் இயற்றுவது, நகர்மன்ற கூட்டத்தின் நேரம், கூட்டத்தை நடத்துவது போன்ற முடிவுகளை நிர்வாக அலுவலர் மேற்கொள்கிறார்.

நகர்மன்ற உறுப்பினர்கள் குடிமக்களின் குறைகளை கேட்டறிய வேண்டும், பொதுமக்களுடன் தொடர்பில் இருத்தல், நகராட்சி அலுவலர்கள் மீதான பொதுமக்களின் புகார்களை உரிய நிர்வாக தலைமையிடம் முறையிடல், நகர்மன்ற கூட்டத் தொடரில் மக்களின் குறைகளை எடுத்துரைப்பதும் இவர்களின் பணியாகும்.

நகர்மன்றத்தின் பணிகள், பொறுப்புகள் இந்திய அரசமைப்பில் 12-வது அட்டவணையில் கூறப்பட்டுள்ளது. 74-வது அரசமைப்பு சட்டத்திருத்தம், ஒரு மாவட்டம் முழுமைக்கும் ஒரு வளர்ச்சி திட்ட வரைவை ஏற்படுத்தும் நோக்கில் மாவட்ட திட்டகுழுவை ஏற்படுத்தியது. இதன் மூலம் மாவட்டத்திற்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்படுகிறது. உள்ளாட்சி மற்றும் நகராட்சியில் உருவாக்கப்படும் திட்டத்தினை ஒன்று சேர்ப்பது குழுவின் பணி.

1992-ஆம் ஆண்டு சட்டத்தின் படி மாவட்ட திட்டக்குழுவில் மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் நான்கு பங்கிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். இந்த உறுப்பினர்களை மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் அந்த மாவட்டத்தில் உள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த எண்ணிக்கை அந்த மாவட்டத்தின் நகர்ப்புற மக்கள் தொகை மற்றும் கிராமப்புற மக்கள் தொகையின் விகிதாச்சார அடிப்படையில் அமைந்திருக்கும்.

நகராட்சி அமைப்புகள் தனது பணிகளை மேற்கொள்வதற்கான செலவினங்களுக்கு வரி, கட்டணம் மூலம் வருவாய் ஆதாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி அமைப்புகள் தனது நிதி ஆதாரங்களை உயர்த்திகொள்ள பல வகை வரி விதிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன (உதாரணம் – நிலவரி, கட்டட வரி, விளம்பரத்தின் மீதான வரி, நெடுச்சாலை சுங்க வரி, சாலைவரி முதலானவை). 74-வது சட்ட திருத்தத்தின் படி, மாநில அரசுகள் இந்த சட்ட திருத்தத்தை தங்கள் மாநிலய சட்டத்தில் இனைத்துக் கொண்ட ஒரு வருட காலத்திற்குள், மாநில நிதிக் குழுவை அமைத்திடல் வேண்டும்.

செயல்பாடு

அரசமைப்பு 11-வது மற்றும் 12-வது அட்டவணையின் படி உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு ஏன் முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது என ஆராயவும்.

அரசமைப்பின் 12–வது அட்டவணை:
நகராட்சியின் அதிகாரமும் – பொறுப்புகளும்.

- நகரத் திட்டங்கள், நகரத்தை வடிவமைத்தல்.
- கட்டடங்களை கட்டுதல், நிலத்தை பயன்படுத்துதலை ஒழுங்குமுறைபடுத்துதல்.
- பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு திட்டமிடல்
- சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல்.
- வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் விநியோகம் செய்தல்.
- பொதுச்சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல்.
- தீயணைப்பு பணிகள்.
- நகர்புற காடு மற்றும் சுற்றுப்புறச்சூழலை பாதுகாத்தல்.
- சமூகத்தில் நலிவடைந்தோர், ஊனமுற்றோர், மனநிலை குன்றியவர்கள் நலன்களை பாதுகாத்தல்.
- குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல், தரத்தை உயர்த்துதல்.
- நகர்புற வறுமை ஒழிப்பு.
- பூங்காக்கள்,தோட்டங்கள்,விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்புற வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- கல்வி மற்றும் கலாச்சார அம்சங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- இடுகாடு மற்றும் சுடுகாடு மைதானங்களை பராமரித்தல்.
- கால்நடைக்கான குடிநீர் குட்டைகள் அமைத்தல் மிருகவதையை தடைசெய்தல்.
- பிறப்பு, இறப்பு ஆகியவற்றின் பதிவுடன் கூடிய மிக முக்கியமான புள்ளி விவரங்களைத் சேகரித்தல்.
- பேருந்து நிறுத்துமிடங்கள், கழிவறை, சாலை விளக்கு போன்ற பொது வசதிகளை செய்து கொடுத்தல்.
- வதைகூடங்கள் மற்றும் தோல் பதனிடும் தொழில்களை ஒழுங்குபடுத்துதல்.

மாநில நிதிக்குழு கீழ்கண்டவற்றில் பரிந்துரைகளை அளிக்கலாம்

அ. மாநில அரசாங்கத்திற்கும் மாநகராட்சிக்குமிடையே வரி, சுங்க சட்டங்கள் போன்றவற்றின் மூலமாக வரும் வருவாயை பகிர்ந்தளித்தல்.

ஆ. அந்த வருவாயை மாநிலத்திலுள்ள நகராட்சியின் பல நிலைகளுக்கும் ஒதுக்கீடு செய்தல்.

இ. நகராட்சிகளின் வரி வகைகள், சுங்க கட்டணங்கள் போன்றவற்றை நிர்ணயம் செய்தல்.

ஈ. மாநிலங்களுக்கு நிதி வழங்க உதவும் மானியங்கள்.

உ. நகராட்சியின் நிதி நிலைமையை மேம்படுத்த தேவைப்படும் நடவடிக்கைகள்.

ஆனால், யதார்த்தத்தில், மாநில சட்டம் எந்தெந்த பணிகளை நகராட்சிகள் செய்யலாம் என வரையறுத்திருக்கிறதோ, அந்த பணிகளை மட்டுமே நகராட்சிகள் செய்கின்றன. மாறி வரும் அரசியல் சூழ்நிலைகள் மற்றும் நாட்டின் தேவைகளின் வழியே காணும் போது நகராட்சியின் பணிகள் மீதான அந்த கட்டுப்பாடு சரியான ஒரு செயல்பாடாக கருத முடியவில்லை. சிறப்பு தேவை

செயலாண்மைகளை ஏற்படுத்துவதன் மூலம் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ உள்ளாட்சியின் பணிகளை தனதாக்கி கொள்ளும் மாநில அரசாங்கத்தின் போக்கு அதிகரித்து வருகிறது.

செயல்பாடு

ஒரு நகரத்தின் வணிக மையத்தை கற்பனை செய், அங்கே சாலையின் இரு புறங்களிலும் உள்ள நடைபாதையில் மரங்கள், மின்சார கம்பங்கள், வியாபாரிகள், நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் நிறைந்திருப்பதாக கற்பனை செய்யவும். அப்போது நடைபாதையில் இடமில்லாததால், மக்கள் சாலைகளில் இறங்கி நடக்க தொடங்கினால் என்னவாகும்? இது தொடர்பாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அல்லது நகராட்சிக்கு உனது ஆலோசனை என்ன? பொது வசதிகள் அனைவருக்கும் கிடைக்க என்ன செய்ய வேண்டும்? 200 வார்த்தைகளுக்கு மிகாமல் எழுதவும்.

மாநகராட்சி

இந்தியாவில் உள்ள நகர உள்ளாட்சி அமைப்பின் உச்ச அமைப்பு மாநகராட்சி ஆகும். பாராளுமன்ற சட்டத்தின் மூலமாகவும், மாநில சட்டமன்ற மற்றும் யூனியன் பிரதேசத்தின் சட்டம் மூலம் பெரிய நகரங்களில் மாநகராட்சிகள் நிறுவப்படுகின்றன. மக்கள்தொகை அடிப்படை, மற்றும் வருமான அடிப்படையில் நகரங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் மாநகராட்சி அமைப்புகள் மும்பை, சென்னை மற்றும் கொல்கத்தாவில் உருவாக்கப்பட்டன.

மாநகராட்சி அமைப்பு மக்கள்தொகையின் அளவு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியைக் கொண்டு நகரத்தை நிர்வகிக்கும் தன்மை மற்றும் வயதுவந்தோர் வாக்கு பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர் / பழங்குடியினர் (SC/ST) மக்களுக்கு இட ஒதுக்கீடுடன் விகிதாச்சார அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்தெடுக்கப்படுகின்றனர். மாநகராட்சி அமைப்பு ஓர் சட்டப்பூர்வமான நிர்வாக அமைப்பு ஆகும்.

மாநகராட்சி மன்றம் மற்றும் நிலைக்குழுக்கள் இரண்டும் விவாதிக்கும் அமைப்பாகவும் செயலாக்க அமைப்பாகவும் உள்ளன.

நிலைக்குழுவின் பணியானது மாநகராட்சிக்கு துணையாக செயல்படுவது. நகராட்சி ஆணையின் பரிந்துரையின் அடிப்படையில் தான் அனைத்து திட்டங்களும் நகராட்சி குழுவில் நிறைவேற்றப்படுகின்றன. ஆணையர் மாநகராட்சியின் தலைமை நிர்வாகி ஆவார். மாநகராட்சி மன்றத்தால் இயற்றப்படும் கொள்கைகளை செயல்படுத்துவது அவருடைய தலையாயப் பொறுப்பாகும்.

இந்தியாவில் உள்ள மாநகராட்சி அமைப்புகள் மும்பையில் அமைந்த மாநகராட்சி அமைப்பை போன்றவை, மாநகராட்சி அமைப்பின் பதவிகாலம் 5 ஆண்டுகள் ஆகும். 74-வது சட்டத்திருத்தம் வார்டு குழுக்களை ஏற்படுத்தியது. மாநகராட்சியின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வார்டுகளுக்கு அவை பொறுப்பாக இருக்கும். இதன் தலைவர் ஒராண்டுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றார். அவர் மீண்டும் தலைவர் தேர்தலில் போட்டியிடலாம். மாநகராட்சியில் உள்ள வார்டு உறுப்பினர்கள் கண்காணிப்பில் தான் குடிநீர் விநியோகம், துப்பரவுபணி, சாக்கடை இணைப்பு, தெருக்களில் நிறைந்துள்ள நீரை வெளியேற்றுவது மற்றும் திடக்கழிவுகள் சேமிப்பதும், அகற்றுவதும் தெருவிளக்கு அமைத்தல், பூங்காக்கள் அமைத்தலும் போன்றவை நடைபெறுகின்றன.

மாநகராட்சியில் நிலைக்குழு உருவாக்கப்பட்டு அதில் மேயர், துணை மேயர், வார்டு உறுப்பினர்கள் இடம்பெறுவர். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் தமக்குள்ளிருந்து ஒருவரை துணை மேயராக தேர்ந்தெடுக்கின்றனர். மேயர் நிலைக்குழுவின் தலைவர் ஆவார். மாநகராட்சி குடிநீர் விநியோகம், கழிவு நீரகற்றல் போன்றவற்றிற்காகவும் குழுக்களை அமைக்கிறது. ஒவ்வொரு குழுவிலும் 3-க்கு குறையாமலும் 5-க்கு மிகாமலும் இருப்பர்.

செயல்பாடு

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பில் புனே முதல் இடத்திலும் பெங்களூர் கடைசி இடத்திலும் உள்ளது. முதல் ஐந்து நகரங்கள் மற்றும் கடைசி நிலையில் உள்ள ஐந்து நகரங்கள்.

முதல் 5 நகரங்கள்	தரவரிசை	கடைசி 5 நகரங்கள்	தரம்
புனே	5.1	சென்னை	3.3
கொல்கத்தா	4.6	பாட்னா	3.3
திருவனந்தபுரம்	4.6	டேராடூன்	3.1
புவனேஸ்வர்	4.6	சண்டிகார்	3.1
சூரத்	4.5	பெங்களூர்	3.0

நகரங்கள் எதிர்கொள்ளும் ஐந்து வகை சவால்கள்

(அ) மாநகராட்சிகளில் உள்ள பொதுப் பயன்பாடு வசதிகளான சாலைகள், நடைபாதைகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பாதாள சாக்கடை திட்டங்கள் போன்றவற்றில் நவீன காலத்திற்கு ஏற்றவாறு திட்டமிடுதலில் குறைபாடுகள்.

(ஆ) நிதிசார் பொறுப்புடைமை மற்றும் நிதி ஆதாரங்கள் வலுவற்று இருத்தல்.

(இ) பணியாளர் எண்ணிக்கை, திறமை மற்றும் போட்டியிடும் தன்மை, நிர்வாக வடிவமைப்பு போன்ற மனிதவள மேலாண்மை தொடர்புடையவைகள் பலவீனமாக இருத்தல்.

(ஈ) அதிகாரமற்ற மேயர்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள், நகராட்சிகள் மற்றும் மாநில அரசின் துறைகளில் ஆளுகைகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருத்தல்.

(உ) குடிமக்களின் முறையான பங்கேற்பிற்கு வழியின்மை மற்றும் வெளிப்படை தன்மையற்ற நிதி செயல்பாடு.

ஆதாரம்: இந்திய நகர அமைப்புகள் பற்றிய வருடாந்திர கணக்கெடுப்பு (ASICS)

நன்றி: தி நியு இந்தியன் எக்ஸ்பிரஸ், 15.03.2018

இந்தக்குழுவின் பதவிக்காலம் ஓராண்டுகள் ஆகும். 74-வது சட்டத்தித்தின் மூலம் நிதி ஆதாரங்கள் மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரச மைப்பின் 12-வது அட்டவணை மாநகராட்சி மேற்கொள்ள வேண்டிய 18 பணிகளை பட்டியலிட்டுள்ளது. 73-வது சட்டத்திருத்தை போல 74-வது சட்டதிருத்தத்திலும் நகர திட்டமிடலுக்கு குழு உருவாக்கப்பட்டுள்ளது.

நகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பெருநகர எல்லைக்குள் உள்ள பஞ்சாயத்து தலைவர்களின் மொத்த எண்ணிக்கையில் இரண்டில் மூன்று பங்கிற்கு குறையாத எண்ணிக்கையில், தங்களுக்குள் இக்குழுவின் உறுப்பினர்களை இவர்களே தேர்ந்தெடுக்கின்றனர்.

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 131 29-09-2018 12:42:23

அனைத்து மாநகராட்சியிலும் மேயர் மற்றும் துணைமேயர் இடம் பெற்றிருப்பார்கள். சில மாநிலங்களில் மேயர் மக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுவர். மாநகராட்சி மேயர் மன்ற கூட்டத்திற்கு தலைமை தாங்குகிறார். அமைதியையும், ஒழுங்கமைப்பையும் நிலை நாட்டுகிறார். மன்ற கூட்டங்களில் தவறாக நடக்கும் உறுப்பினர்களை நீக்கம் செய்யும் அதிகாரத்தையும் மேயர் பெற்றுள்ளார். மன்ற கூட்டங்களில் சமமான வாக்குகள் பெற்றிருக்கும் நிலையில் மேயர் தீர்மான வாக்கை அளிக்கமுடியும். ஆணையர் மாநகராட்சியின் தலைமை நிர்வாகி ஆவார். மாநகராட்சி ஆணையர் இந்திய நிர்வாக பணியை (IAS) சார்ந்தவர் ஆவார். மாநகராட்சி ஆணையரை நியமிக்கும் அதிகாரம் மாநில அரசிடம் இருப்பது மிகுந்த சர்ச்சைக்குரிய ஒன்றாகவே உள்ளது. மாநகராட்சி ஆணையரின் பதவிக்காலம் மூன்றாண்டுகள். இந்த கால அளவை மாநில அரசாங்கம் விரும்பினால் நீடிக்கலாம். மாநகராட்சி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசின் முழு அதிகாரம் நிறைந்தவர் ஆணையர் ஆவார்.

12.7 தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள்

73-வது மற்றும் 74-வது சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழகத்தில் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது, தமிழகத்தின் உள்ளாட்சி அரசாங்கம் பற்றி சுருக்கமாக பார்க்கலாம்.

73-வது சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழக அரசாங்கத்தின் அரசமைப்பு கடமைகளாக, அதிகாரத்துடன் கூடிய கிராம சபைகளை அனைத்து கிராமங்களிலும் உருவாக்குதல். பொதுவான மேற்பார்வை மற்றும் பஞ்சாயத்தின் வருடாந்திர திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் முதலான அதிகாரங்கள் பஞ்சாயத்து, மூன்று அடுக்குகளை கொண்ட உள்ளாட்சி அமைப்பை உருவாக்குதல் மாவட்ட பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம், கிராம பஞ்சாயத்து போன்றவை உள்ளன.

இந்த உள்ளாட்சி அமைப்பில் பெண்கள், (பட்டியலினத்தவர்/பழங்குடியினர்) மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடும், வரி விதிக்கும் அதிகாரமும், நிதி ஆதாரம் பெறவும் வழிவகை செய்யப்பட்டன. மேலும் மாநில அரசிடமிருந்து நிதியைப் பெற்று பயன்படுத்துவதற்கு மாநில நிதி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது

செயல்பாடு

மாணவர்கள் பல குழுக்களாக பிரிக்கப்பட்டு அவர்களை அருகில் உள்ள உள்ளாட்சி அமைப்பை சென்று பார்க்க செல்லவும். அதில் உள்ள பிரச்சனைகளை புரிந்துகொள்ள செய்யவும்.

உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாட்டில் 12,564 கிராம பஞ்சாயத்தும், 388 ஊராட்சி ஒன்றியமும், 31 மாவட்ட பஞ்சாயத்தும் உள்ளது.

74-வது சட்டத்திருத்தத்தின் மூலம் அதிகார பகிர்வு உருவாக்கப்பட்டு வரி விதிக்கும் அதிகாரம், மாநில அரசுடன் வருமான பகிர்வு, சீரான தேர்தல் நடத்துதல், பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர்/பழங்குடியினர் இடஒதுக்கீடு உருவாகின. மேலும் நாடு முழுவதும் ஒரே மாதிரியான நகர அமைப்பு உருவாகவும் வழி செய்தன.

73-வது சட்ட திருத்தம் படி, மாற்றங்கள் கொண்டு வருவதற்காக, தமிழ்நாட்டில் ஏற்கனவே அமலில் இருந்த தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1958 மாற்றப்பட்டு தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1994 புதிதாக இயற்றப்பட்டது. பின்பு இது 1996-ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. இந்த திருத்தத்தின் மூலம் வளர்ச்சிக்கான திட்டங்களை ஏற்படுத்த, மாவட்ட திட்டக்குழு, மாநில தேர்தல் ஆணையம் மற்றும் மாநில நிதி ஆணையம் போன்றவை உருவாக்கப்பட்டன.

செயல்பாடு

- உனது பகுதியின் வளர்ச்சிக்கான வழிகளாக உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளன என நீ எண்ணுகிறாயா?
- உங்கள் பகுதியில் இருக்கும் உள்ளாட்சி அரசாங்கத்தின் செயல்பாடு பற்றிய உனது மதிப்பீடு என்ன? உனது ஆசிரியரிடம் இது தொடர்பான ஓர் அறிக்கையை அளிக்கவும்.

இந்த 1994 சட்டத்தின் படி தமிழ்நாட்டில் முதலில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் மொத்தமாக 1,17,000 பிரதிநிதிகள் பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நகர உள்ளாட்சி அரசாங்கம்

74-வது சட்டத்திருத்தம் பல்வேறு மாநிலங்களில் நகர உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்க வழி செய்தது. தமிழகத்தில் நகர உள்ளாட்சி அமைப்புக்கான தேர்தல் 1996, 2001, மற்றும் 2011-ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது.

12.8 தற்கால பிரச்சனைகள்

உள்ளாட்சி அமைப்பில் உள்ள பல பிரச்சனைகளை நிபுணர்கள் அவ்வப்போது சுட்டிக்காட்டியுள்ளார். நிபுணர்கள் சுட்டிக்காட்டிய பிரச்சனைகளை பின்வரும் பகுதிகளில் காணலாம். முதலில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு பொறுப்புகளை அதிகப்படுத்தப்படவேண்டும். இதற்கு முன் அவை மாநில அரசின் பொறுப்புகளாக இருந்தது.

பல்வேறு நிலைகளில் உள்ள அரசாங்கங்களின் திறன் மற்றும் அவர்களின் கட்டுப்பாட்டு எல்லை போன்றவற்றை கருத்தில் கொண்டு முழு அரசு இயந்திரம் வகைப்படுத்தப்பட வேண்டும். இரண்டாவதாக, கிராம நீதிமன்றங்கள், காவல் துறையானது முழுமையாக மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலைமையில் இது சாத்தியப்படாது. மூன்றாவதாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல விதமான பணிகள் கொடுக்கப்பட்டுள்ளன, அவற்றில் பல மாநில அரசின் துறைகளோடு தொடர்புடையவை.

சுருக்கமாக, சொன்னால் 73-மற்றும் 74-வது சட்டத்திருத்தம் பல சீர்த்திருத்தங்களை உள்ளாட்சி அரசாங்கத்தில் கொண்டுவந்துள்ளது. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், சீர்திருத்தங்களுக்கு முன்பு ஆங்கிலேயர்கள் உருவாக்கிய விதத்தில் இருந்தன. பல புதுமையான மாற்றங்கள் இந்த சட்ட திருத்தங்களினால் கொண்டு வரப்பட்டன. இந்தியாவில் இதுவரை 18 மாநிலங்களில் மட்டும் தான் தங்களது சட்டசபையில் உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்த இசைவு தந்துள்ளன. மேலும் சில மாநில அரசாங்கங்கள் சட்டத்திருத்தத்திற்கு பிறகும், உள்ளாட்சி அமைப்பு உருவாக்க சட்டம் இயற்றிய பின்னும் பல பிரிவுகளை சரிவர செயல்படுத்தவில்லை, மேற்கூறிய காரணங்களால் உள்ளாட்சி அமைப்பில் உள்ள சிக்கல்கள் உள்ளன. அவை அகற்றபடாவிட்டால் 73-வது மற்றும் 74-வது சட்டத்திருத்தத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாது.

உங்களுக்குத் தெரியுமா?

பஞ்சாயத்து ராஜ்(1959–2018)

தமிழ்நாடு நகர்ப்புற சட்டங்கள் (நன்காவது சட்டத்திருத்தம்) மசோதா 2018 மற்றும் தமிழ்நாடு பஞ்சாயத்துகள் (இரண்டாவது சட்டத்திருத்தம்) மசோதா 2018 இரண்டும் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பு அதிகாரங்களின் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்தது.

செயல்பாடு



சில முன்னணி செய்தி தாள்களை எடுத்துக்கொள்ளவும், அவற்றில் பிரசுரிக்கப்பட்டுள்ள உள்ளூர் பிரச்சனைகளை பற்றிய தகவல்களை சேகரிக்கவும். அது பற்றி வகுப்பின் மற்ற மாணவர்களுடன் விவாதித்து தீர்வுகளை காண முயற்சிக்கவும்.

உங்களுக்குத் தெரியுமா?

12 மாநகராட்சிகளும், 148 நகராட்சிகளும், 561 பேரூராட்சிகளும் தமிழகத்தின் நகர உள்ளாட்சி அமைப்புகளாக உள்ளன.

அருஞ்சொற்பொருள்



மாநகராட்சி: மாநகராட்சி என்பது பெருநகரத்தில் இயங்கும் உள்ளாட்சி அரசாங்கத்துக்கான சட்டப்படியான சொற்பதம் ஆகும். பத்து லட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட பெருநகரங்களில், இவ்வகையான உள்ளாட்சி அரசாங்கம் செயல்படும்.

நகராட்சி: நகராட்சி என்பது நகரங்களில் இயங்கும் உள்ளாட்சி அரசாங்கத்துக்கான சட்டப்படியான சொற்பதம் ஆகும். இதன் அதிகார எல்லையையும், அதிகார வரம்பையும் மாநில மற்றும் மத்திய அரசின் சட்டங்கள் தீர்மானிக்கின்றன.

பாளைய வாரியங்கள்: பாளைய மத்திய அரசின் நிர்வாகத்திற்கு உட்பட்ட ராணுவ பகுதிகளாகும். அவை பாதுகாப்பு அமைச்சத்தின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளன. இதன் நிர்வாக அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், நியமன உறுப்பினர்கள் மற்றும் பதவி வழி தலைவர்கள் இடம் பெறுவர். இதனை பாளைய வாரியச் சட்டம் 2006-ஆம் தீர்மானிக்கிறது.

பேரூராட்சி: ஒரு பேரூராட்சி 20000 முதல் 25000 வரையிலான மக்கள் தொகையை கொண்ட சிறிய நகரமாகும். பஞ்சாயத்துராஜ் நிர்வாக அமைப்பின் மூலம் இந்த அமைப்பு உருவாக்கப்படுகிறது.

பஞ்சாயத்து ராஜ்: பஞ்சாயத்து ராஜ் என்பது 1992-ஆம் ஆண்டின் சட்டத்திருத்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட உள்ளாட்சி அரசாங்கத்தை குறிக்கும் சொற்பதமாகும்.

கிராம சபை: கிராம சபை என்பது கிராம பஞ்சாயத்தின் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ள அனைவரையும் உள்ளடக்கிய அமைப்பு

மேயர்: ஒரு பெருநகரத்தை ஆள்கின்ற குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்.

வார்டு: ஒரு உள்ளாட்சி அமைப்பின் நில பகுதிகள் வார்டுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வார்டும் ஒரு உறுப்பினரை கொண்டிருக்கும். அவர் அந்த வார்டின் பிரதிநிதியாவார்.

கவுன்சிலர்: சபையின் உறுப்பினர்

நகர்பாலிகா: இந்தியாவில் நகர்பாலிகா என்பது 1,00,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள நகர உள்ளாட்சியை நிர்வகிக்கும் அமைப்பு.

இரட்டையாட்சி: சுதந்திரமான இரு அதிகாரம் பெற்ற அமைப்புகளால் நடத்தப்படும் அரசாங்கம். (இந்தியாவில் 1919-ஆம் ஆண்டு முதல் 1935-ஆம் ஆண்டு வரை நடைப்பெற்றது)

மதிப்பிடுதல்

சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்

PNYRI2

1. எப்பொழுது சென்னை மாநகராட்சி உருவாக்கப்பட்டது?

அ) 1870 ஆ) 1882
இ) 1687 ஈ) 1992

2. எப்போது ரிப்பன் பிரபு தீர்மானம் ஏற்கப்பட்டது?

அ) 1992 ஆ) 1858
இ) 1882 ஈ) 1870

3. எதன்மூலம் இரட்டை ஆட்சி முதலில் ஏற்படுத்தப்பட்டது

அ) இந்திய அரசாங்க சட்டம்1909 ஆ) இந்திய அரசாங்க சட்டம் 1919
இ) இந்திய அரசாங்க சட்டம் 1935 ஈ) இந்திய அரசாங்க சட்டம் 1958

4. நகர்பாலிகா சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு

அ) 1989 ஆ) 1990
இ) 1991 ஈ) 1992

5) 73, மற்றும் 74 வது சட்டத்திருத்தத்தில் உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு எவ்வளவு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது?

அ) 45
ஆ) 50
இ) தொகுதியில் பெண்களின் மக்கள் தொகையின் அடிப்படையில் வழங்கப்பட்டது
ஈ) 20

6. மாநில நிதி ஆணையத்தின் பொறுப்புகள்

அ) வரி வருவாய் மாநில அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புக்கும் பகிர்தல் தொடர்பான பரிந்துரை
ஆ) தேர்தல் குறித்த பிரச்சனையில் மாநில அரசுக்கு பரிந்துரைகள்
இ) நிதி நெருக்கடி நிலை பிரகடணம் குறித்து இந்திய குடியரசு தலைவருக்கு பரிந்துரைத்தல்
ஈ) மாநில அரசின் சட்டம் ஒழுங்கு நிதிநிலை குறித்து முதல்வருக்கு பரிந்துரைத்தல்

7. மாவட்ட திட்டக்குழு கீழ்வருவனவற்றால் உருவாக்கப்பட்டது

அ) 73-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்
ஆ) 73-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்
இ) 89-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்
ஈ) 94-வது அரசமைப்பு சட்டத் திருத்தம்

8. ஜவகர் ரோஜ்கர் யோஜ்னா

அ) வேலைவாய்ப்புக்கு உத்திரவாதமளித்தல் அழித்தல்
ஆ) பொதுத்துறை வங்கியில் கடன் பெறுதல்
இ) வீடு கட்டுதல்
ஈ) வெளிநாட்டில் வேலை பெறுதல்

9. எவ்வாறு டெல்லி வளர்ச்சி அமைப்பு 1957 டிசம்பர் 30-ல் உருவாக்கப்பட்டது

அ) டில்லி சட்டமன்றத்தின் மூலம்
ஆ) இந்திய குடியரசு தலைவரின் நிர்வாக உத்தரவின் பேரில்
இ) பாராளுமன்ற சட்டத்தின் மூலம்
ஈ) டில்லியின் துணைநிலை ஆளுநர் மூலம்

10) கீழ் வரும் எந்த தேர்ந்தலில் அரசியில் கட்சிகளுக்கு பங்கு இல்லை?

அ) மாநகராட்சி மேயர் தேர்தல்
ஆ) நகராட்சி தேர்தல்
இ) பஞ்சாயத்துதலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் தேர்தல்
ஈ) மாவட்ட வார்டு உறுப்பினர் தேர்தல்

11) உள்ளாட்சி அமைப்பின் தந்தை என கருதப்படுவர் யார்?

அ) மேயோ பிரபு ஆ) ராபர்ட் கிளைவ்
இ) வாரன் ஹெஸ்டிங் ஈ) ரிப்பன் பிரபு

12) மாநிலங்களில் உள்ளாட்சி தேர்தலை நடத்துவது

அ) மாநில தேர்தல் ஆணையம் ஆ) இந்திய தேர்தல் ஆணையம்
இ) தலைமை தேர்தல் அதிகாரி ஈ) மாநில அரசாங்கம்

13) இந்தியா அரசமைப்பில் உள்ளாட்சி அரசாங்கம் குறித்த சட்டவிதிமுறைகள் யாவை?

அ) உறுப்பு 40, உறுப்பு 243 முதல் 243(O). உறுப்பு 243(P) முதல் 243 ZG
ஆ) உறுப்பு 300 உறுப்பு 300 A
இ) உறுப்பு 3 A, உறுப்பு 43A
ஈ) உறுப்பு 32, உறுப்பு 117(1)

14) அரசமைப்பு சட்டத்தின்படி மூன்று அடுக்குகளை கொண்ட பஞ்சாயத் ராஜ் அமைப்பினை பொருத்துக.

அ) கிராம பஞ்சாயத்து- இடைநிலை பஞ்சாயத்து-மாவட்ட பஞ்சாயத்து
ஆ) ஊராட்சி ஒன்றியம்- மாவட்ட பஞ்சாயத்து- கிராம பஞ்சாயத்து
இ) மாவட்ட பஞ்சாயத்து- கிராம பஞ்சாயத்து- இடைநிலை பஞ்சாயத்து
ஈ) கிராம பஞ்சாயத்து- நகர பஞ்சாயத்து-மாவட்ட பஞ்சாயத்து இடைநிலை பஞ்சாயத்து

15) அ) **கூற்று:** 73 –வது திருத்தத்தின் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுததப்பட்டன..

ஆ) **காரணம்:** மக்களாட்சியானது உள்ளாட்சி அரசாங்கங்களின் மூலம் அடித்தட்டு மக்களை சென்றடைந்தது

அமைப்பு விளக்கம் (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

அ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது
ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.
இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது
ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

II பின்வரும் கேள்விகளுக்கு குறுகிய விடையளி

16) பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் படிநிலையில் குறுகிய நிலையில் உள்ள அமைப்பு எது?
17) கிராம சபை கூட்டம் வருடத்திற்கு எத்தனை முறை கூடுகிறது?
18) மாநகராட்சி மேயரின் பதவி காலம் என்ன?'
19) மாநில நிதி ஆணையத்தின் அதிகாரம் மற்றும் பணியினை விளக்குக.
20) ரஷ்யாவில் உள்ள உள்ளாட்சி அமைப்புக்கு நிர்வாக அதிகாரம் எதும் இருக்கின்றதா?
21) பஞ்சாயத்து ராஜ் அமைப்பு உருவாக்க எந்த குழு பரிந்துரை செய்தது?
22) கிராம பஞ்சாயத்தின் நிதி ஆதாரங்கள் எவை?
23) இந்தியாவில் பஞ்சாயத் ராஜ் அமைப்பு தேவை என்பதற்கான இரண்டு காரணங்களை கூறு-
24) தமிழ் நாட்டில் எத்தனை மாநகராட்சிகள் உள்ளன?
25) கேளிக்கை வரி விதிப்பதும், வசூலிப்பதும் யார்?

III பின்வரும் கேள்விகளுக்கு சிறு குறிப்பு வரைக

26) பஞ்சாயத் ராஜ் அமைப்பின் மூன்று சிறப்பு தன்மைகள் கூறு
27) நகர பகுதியை வரையறு
28) உள்ளாட்சி அமைப்பின் கருத்தாக்கத்தை விளக்குக
29) இந்தியாவின் பெரு நகரங்களில் உள்ள முக்கிய பிரச்சனைகள் என்ன?
30) மகாசபாவின் அமைப்பினை விளக்குக
31) உள்ளாட்சி நிர்வாகத்தில் ஆங்கில ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் என்ன?
32) பெருநகர வளர்ச்சிக் குழுவின் பணிகளை விளக்குக.

IV பின்வரும் கேள்விகளுக்கு விரிவான விடை எழுது

33) இந்தியாவின் பஞ்சாயத் ராஜ் அமைப்பு பற்றி விளக்குக
34) மாநகராட்சி மேயரின் அதிகாரம் மற்றும் பணியினை விளக்குக
35) மாநில தேர்தல் ஆணையம் குறித்து கட்டுரை எழுதுக
36) 73 மற்றும் 74-வது சட்டத்திருத்தத்திற்கு பின் இந்திய உள்ளாட்சி அமைப்பின் வளர்ச்சியினை கண்டறிக
37) இந்தியாவின் உள்ளாட்சி அரசாங்கத்தின் வளர்ச்சியினை கண்டறிக

11th Std Political Science Tamil Medium Vol-2_Chapter 12.indd 137 29-09-2018 12:42:23

அலகு 1

இந்திய அரசமைப்பு



கற்றலின் நோக்கங்கள்

C7FD9V

- இந்திய அரசமைப்பின் பொருள், இயல்பு, முக்கியத்துவம் ஆகிய பொருண்மைகள் குறித்து இந்த அலகு விவரிக்கின்றது.
- இந்திய அரசமைப்பு தத்துவத்தின் உள்ளார்ந்த நோக்கங்களை இந்த அலகு வழங்குகிறது.
- இந்த அலகில் இந்திய அரசமைப்பு உருவாக்கத்தின் மேன்மைகளை முதன்மைபடுத்துகிறது.
- அரசமைப்பை உருவாக்கியவர்களுக்கு அரசமைப்பில் சேர்ப்பதற்கும் உந்துதலாகவும் இருந்த மூல ஆதாரங்களை அடையாளப்படுத்துகிறது.
- இந்திய அரசமைப்பின் சிறப்புக்கூறுகளை இந்த அலகு விளக்குகிறது.
- இந்த அலகில் இந்தியாவில் செயல்படுகின்ற முறையிலான மக்களாட்சியினை தெளிவுபடுத்துகிறது.

1.1 அரசமைப்பின் பொருள், பணிகள் மற்றும் முக்கியத்துவம்



காலனி ஆட்சிக்காலத்தில் உருவான நமது தேசியத்தன்மை அரசியல் விடுதலைக்காக மட்டுமல்லாமல் பல்வேறு பகுதிகளின் (பிற்காலத்தில் மாநிலங்களின்) ஒருங்கிணைப்பு, அரசமைப்பு மையமாதல் (சட்டமாதல்) மற்றும் மக்களாட்சிமயம் ஆகியவற்றுக்காகவும் போராடி வந்துள்ளது.

இந்தியா ஒரு பண்பாட்டு வேற்றுமை கொண்ட நாடு என்ற போதிலும் இந்தியர்கள் அனைவரும் பல வகைகளில் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் சார்ந்தும் ஒத்துழைப்புடனும் உள்ளனர். இந்த நாட்டின் மக்கள் அனைவரும் ஒருமைப்பாட்டுடன் வாழ சில குறிப்பிட்ட அடிப்படை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் கொண்டிருப்பது அவசியமாகிறது. இத்தகைய விதிகள், ஒழுங்குமுறைகள் இல்லையென்றால் மக்களாட்சி நிலைத்திருக்காது. அந்நிலையில் மக்களின் நிலை பாதுகாப்பற்றதாக இருக்கும். காலனிய ஆட்சிக்காலத்தில் இந்தியா ஆங்கிலேய அரசால் பிறப்பிக்கப்பட்ட சாசனங்கள் (Charters), ஆட்சிக்குழு சட்டங்கள் (council Acts), காலனியாட்சிக்கால இந்திய அரசாங்கச் சட்டம் (Government of India act) ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டே

12th_Political Science_Tamil_Unit_1.indd 1 04-06-2019 11:46:26

ஆளப்பட்டது. புதிதாக எழுச்சிபெற்ற இந்தியாவின் இயக்கங்களும் அதன் தலைவர்களும் ஒரு வரையறுக்கப்பட்ட எழுதப்பட்ட புதிய அரசமைப்பின் அடிப்படையில் புதிய இந்தியா உருவாக்கப்பட வேண்டும் என்பதை விரும்பினர். மைய (மத்திய) சட்டமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. மாநிலங்களின் (அரசுகளின்) ஒன்றியமாக, பல் பிரிவுகளுக்கும் ஒருமைப்பாட்டினையும் ஒருங்கிணைப்பையும் வழங்கும் கூட்டாட்சியை உருவாக்கும் வண்ணம் சமூகத்தில் நிலவும் பல் அடுக்கு பிரிவுகள், வகைமைகள் ஆகியன அனைத்தையும் ஒரே அரசாட்சியின் கொடையின்கீழ் கூட்டிணைக்கும் வகையில் புதிய அரசமைப்பை முன்மொழிய வேண்டியிருந்தது.

செயல்பாடு

சிந்திக்கவும், இணைக்கவும், பகிரவும்

தலைப்பு : அரசமைப்பு 'நாட்டின் அடிப்படைச் சட்டம்' என்று அழைக்கப்படுகிறது.

இந்த கருத்து குறித்து இரண்டு அல்லது மூன்று மாணவர்கள் சிந்தித்து தங்களது சக மாணவர், இணை மாணவர் உடன் பகிரும் படி மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வகுப்பறையில் ஏதேனும் இரண்டு, மூன்று மாணவர்களிடம் இது குறித்து ஆசிரியர் கேள்விகள் எழுப்பலாம்.

ஒரு அரசமைப்பின் மிக முக்கியச் செயல்பாடு என்பது அந்த அரசின் குடிமக்கள் அனைவருக்குள்ளும் அதிகபட்சமான ஒருங்கிணைப்பை அனுமதிக்கக்கூடிய அடிப்படை விதிகளை வழங்குவதுதான். ஒரு அரசு அமைக்கப்பட்டு, அது ஆட்சி செய்வதற்கான தேவையான விதிகளைக் கொண்ட அமைப்புதான் அரசமைப்பு என்பதாகும். ஒரு அரசின் பல பாகங்களுக்குத் தேவையான ஒதுக்கீடுகளை அரசமைப்பு வரையறுக்கிறது. இந்திய பன்மைத்துவத்துக்கு மாநிலங்களின் ஒன்றியமே தேவையானதாகும். இந்திய விடுதலைப் போராட்ட இயக்கங்களும் ஒரு மக்களாட்சி வடிவிலான அரசினையே விரும்பின. இதன்படி நாடாளுமன்றமே நமது அரசின் கொள்கைகளையும் சட்டங்களையும் முடிவு செய்கிறது.

ஒரு சமூகத்தின் விருப்பங்களை நிறைவேற்றவும் ஒரு நீதி சமுதாயத்துக்கான வரையறைகளை உருவாக்கவும் அரசாங்கத்திற்கு அரசமைப்பு அதிகாரம் வழங்குகிறது. இந்திய அரசமைப்பின் நான்காவது பாகம் இந்திய சமூகத்தில் பரவலாக நிலவும் பல சிக்கல்களை எதிர்கொள்ளும் சட்டங்களை அரசு உருவாக்கும்வகையில் விதிகளைக் கொண்டுள்ளது. ஒரு நாட்டின் மக்களின் அடிப்படை அடையாளங்களை அரசமைப்பு வெளிப்படுத்துகிறது. அரசமைப்பு உருவாக்கப்படும் காலகட்டத்துக்கு முன்பு பல இன, கலாச்சார அடையாளங்களை ஒரு சமுதாயத்தின் மக்கள் கொண்டிருக்கலாம். அரசமைப்பை முன்மொழிந்து உருவாக்கப்படும் அரசின் அடிப்படைச் சட்டங்களை ஏற்றுக்கொண்ட ஒரு அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் அந்நாட்டின் மக்கள் ஒரே அரசியல் அடையாளத்தைக் கொண்டிருப்பர். ஒரு தனிநபரின் இலக்குகள், அவாக்கள், சுதந்திரம் ஆகியன ஒரு நாட்டின் அரசமைப்பு ஒழுங்கு முறைகளுக்கு இணக்கமானதாக அமைய வேண்டும். தனது குடிமக்களால் ஒருபோதும் மீறப்படாத சில குறிப்பிட்ட அடிப்படைச் சட்டங்களை ஒரு அரசமைப்பு முன்மொழிகிறது. ஒரு நாட்டின் மக்களின் சில குறிப்பிடத்தக்க அடிப்படை உரிமைகளை ஒரு அரசமைப்பு பாதுகாக்கிறது. ஒரு நாட்டின் அனைத்து குடிமக்களையும் ஒரு அரசமைப்பு பாதுகாக்கிறது. ஒரு நாட்டின் மத்திய அரசுக்கும் அந்நாட்டின் மாநில அரசுகளுக்கும் இடையேயான உறவினையும், பல்வேறு மாநிலங்களுக்கிடையேயான உறவினையும் கொண்ட ஒரு சட்டகத்தினையும் அது உருவாக்குகிறது. உலகின் அரசமைப்புகளில் பெரும்பான்மையானவை

12th_Political Science_Tamil_Unit_1.indd 2 04-06-2019 11:46:26

எழுதப்பட்ட ஆவணங்களாகக் காணப்படுகின்றன; அவை பல பிரிவுகள், பட்டியல்களைக் கொண்டுள்ளன. இங்கிலாந்து அரசில் காணப்படுவது போன்று அரசமைப்பை ஒரே ஆவணமாகக் கொண்டிராத சில அரசுகளும் உள்ளன. இங்கிலாந்து அரசானது ஏராளமான வழக்கங்கள், உடன்பாடுகள் மற்றும் வரலாற்று முன்னுதாரணங்கள் ஆகியனவற்றின் தொகுப்பாக பல அங்கங்களைக் கொண்ட அரசமைப்பினைக் கொண்டுள்ளது.

மதச்சார்பு அரசு

உங்களுக்குத் தெரியுமா?



மதச்சார்பின்மை கோட்பாட்டினை பின்பற்றாத அரசு மதச்சார்பு அரசு எனப்படும். மத சார்பு அரசு என்பது ஒரு மதத்தினை அரசு மதமாகக் கொண்டிருக்கும். அந்த அரசின் உயர் பதவிகள் அனைத்தும் அரசு மதத்தை பின்பற்றுவோருக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கும். மதச்சார்பு அரசு உதாரணங்கள் பாகிஸ்தான், வாடிகன் நகரம் போன்றவை ஆகும்.

உருவாக்கம்

ஓர் அரசமைப்பு எவ்வாறு நடைமுறைக்கு வந்தது, அதை யார் உருவாக்கியது, அதன் அதிகார அமைப்புகளை என்ன என்பன போன்ற தகவல்கள் 'அரசமைப்பு உருவாக்கம்' என்ற பெயரால் குறிக்கப்படுகிறது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய மாநிலங்களின் அரசின் அரசமைப்பு அங்கு தேசிய இயக்கம் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது. மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அரசமைப்பு நிர்ணயசபையால் உருவாக்கப்பட்ட சட்டப்பூர்வ அரசமைப்பு என்ற சிறப்பு, இந்திய அரசமைப்புக்கு உண்டு. விடுதலையின் போது நாட்டில் இருந்த மக்கள் பிரிவுகளில் பெரும்பான்மையோரின் ஒருமித்த கருத்தை இந்திய அரசமைப்பு பிரதிபலிக்கிறது. அரசமைப்பை பொதுவாக்கெடுப்புக்கு விட்டு அங்கீகாரம் பெற்ற நிகழ்வுகள் சில நாடுகளில் நடைபெறுகின்றது.

பொதுவாக்கெடுப்பு

சட்டமன்றங்களில் மக்கள் பிரதிநிதிகளால் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு மாறாக ஒன்று அல்லது பல கேள்விகளின் தொகுப்பின் மீது வாக்காளர்களின் ஒப்புதல்பெற நேரடி வாக்கெடுப்பு நடத்துவது பொதுவாக்கெடுப்பு ஆகும். அரசின் ஒரு தரப்பால் கேள்விக்கு உட்படுத்தப்படும் நெறிசார் சிக்கல்கள் குறித்து முடிவெடுப்பதற்கும், தனிநபர்கள் முடிவெடுத்துக்கொள்ள விட்டுவிடுவதே சிறந்தது என நினைக்கும் உள்ளூர் சிக்கல்கள் குறித்தும் பொதுவாக்கெடுப்பு முறை பயன்படுத்தப்படுவது உண்டு. ஒரு சட்டப்பூர்வ ஏற்பாடகவும், தனிநபருக்கு பொதுமக்கள் அளிக்கும் அங்கீகாரமாகவும் முழு அதிகாரம் வழங்கப்படுவதற்கு ஒப்புதலாகவும் பொது வாக்கெடுப்பு பார்க்கப்படுகிறது.

இந்திய அரசமைப்பு அல்லது பின்னர் கொண்டுவரப்பட்ட திருத்தங்களில் ஒன்றோகூட இதுவரை பொதுவாக்கெடுப்புக்கு விடப்பட்டதில்லை. இந்திய மக்களாட்சி முறையில் இது ஒரு பின்னடைவாக பார்க்கப்படலாம் என்ற போதிலும் அவ்வப்போது உருவாகிய சூழ்நிலைகள் பொதுவாக்கெடுப்பை கோரக்கூடிய அளவுக்குச் செல்லவில்லை என்பதும் உண்மை. இதன் பொருத்தப்பாட்டினை அறிய சுவிட்சர்லாந்து நாட்டின் பொது வாக்கெடுப்புமுறையை ஆய்வது பயனுள்ளதாக அமையும்.

ஓர் அரசமைப்பின் அம்சங்கள்

ஒரு சிறந்த அரசமைப்பு என்பது சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் எதிர்பார்ப்புகளுக்கும் இடமளிப்பதாக இருக்க வேண்டும். மதம், சாதி, மொழி அடிப்படையில் பாகுபாடு கொண்ட அரசமைப்புகள் நாட்டின் அனைவராலும் ஏற்கப்படாமல் போகலாம். அரசமைப்பின் அடிப்படைச் சட்டவிதிகளே

12th_Political Science_Tamil_Unit_1.indd 3 04-06-2019 11:46:27

அதன் தன்மையை வெளிப்படுத்துகின்றன. தன் குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரத்தினையும், சமத்துவத்தினையும் பாதுகாக்கும் எந்த அரசமைப்பும் வெற்றிகரமானதாகும்.

இந்தியாவில் மதச்சார்பின்மை

இந்திய அரசமைப்பின் 42வது திருத்தச்சட்டம், அரசமைப்பின் முகப்புரையில் கூறப்பட்டுள்ள 'இறையாண்மை கொண்ட குடியரசு' என்பதை 'இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பற்ற மக்களாட்சி குடியரசு' என்றும் 'நாட்டின் ஒற்றுமை' என்ற சொற்றொடரை 'நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு' என்றும் விரிவுபடுத்தியது. மதச்சார்பின்மை, சமதர்மம் ஆகிய கொள்கைகள் அரசமைப்பின் பிரிக்கமுடியாத நெறி என்பதை வலியுறுத்தும் வகையில் முந்நாள் பிரதமர் இந்திரா காந்தி 1976இல் தேசிய அவசரநிலைக் காலத்தில் இந்த 42-வது திருத்தத்தைக் கொண்டு வந்தார்.


ஒரு தனிநபர் அல்லது ஒற்றை நிறுவனத்திடம் அனைத்து அதிகாரங்களும் குவிக்கப்பட்டால் தவறாகப் பயன்படுத்தப்பட வழியேற்படும் என்பதால் ஒரு சிறந்த அரசமைப்பில் அதிகாரங்கள் தனி நபரிடமோ ஒற்றை நிறுவனத்திடமோ குவிக்கப்படுவதில்லை. இதனையொட்டி பல அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் பிரித்து வழங்கப்பட்டு சமநிலைப்படுத்தும் முறை பின்பற்றப்படுகிறது.

இந்திய அரசமைப்பு அதிகாரங்களை சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை போன்ற நிறுவனங்கள் இடையே கிடைமட்டமாக பகிர்ந்து வழங்குகிறது. இதன் மூலம் எந்த ஒரு நிறுவனமும் பிறழ்வது தடுக்கப்படுவதுடன் அதன் வெற்றியையும் நிலைத்த தன்மையையும் விரிவுபடுத்துகிறது. இந்திய அரசமைப்பு அதிக இறுக்கமான தன்மையும் கொண்டதுமில்லை; அதிக நெகிழ்வுத் தன்மையும் கொண்டதில்லை; அதன் மாறாத அடிப்படை அமைப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மூலம் இது வெளிப்படுகிறது. சிறப்பாக எழுதி வடிவமைக்கப்பட்ட ஒரு அரசமைப்பு என்பது அதன் உட்கரு மதிப்பீடுகளைத் தக்கவைத்துக்கொண்டே மாறும் சூழல்களுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளத்தக்கதாகும். நமது அரசமைப்பு நெருக்கடிமிக்க தருணங்களிலும் செயல்படுவதை அரசமைப்பை உருவாக்கிய மேதைகள் உறுதிசெய்துள்ளனர்.

அரசமைப்பின் தயாரிப்புப் பணிகள்

அரசமைப்பு நிர்ணயசபை உறுப்பினர்கள் அரசமைப்பினை எழுதினர். அரசமைப்பு நிர்ணயச் சபையின் முதல் கூட்டம் 9 டிசம்பர் 1946 அன்று கூடியது. பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் மீதமுள்ள இந்தியாவுக்கான அரசமைப்பு நிர்ணயச் சபை 14 ஆகஸ்ட் 1947 அன்று மீண்டும் கூடியது. அன்றைய மாகாணச் சட்டமன்றங்களின் உறுப்பினர்களே அரசமைப்பு நிர்ணயச் சபை உறுப்பினர்களை மறைமுக வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுத்தனர்.

கேபினட் மிஷன் என அழைக்கப்பட்ட பிரித்தானிய அமைச்சரவைக் குழு முன்மொழிந்த திட்ட ஆங்கிலேய அரசின் அடிப்படையில் அரசமைப்பு நிர்ணயசபை உறுப்பினர்கள் வரிசை அமைந்தது.



(புகைப்பட விளக்கம்: இந்திய அரசமைப்பு நிர்ணயசபையின் வரைவு குழு உறுப்பினர்கள், பிப்ரவரி, 1948: அமர்ந்திருப்போர் – இடமிருந்து: என். மாதவ ராவ், சையத் முஹமது சாதுல்லா, டாக்டர். பி. ஆர். அம்பேத்கர், சர் அல்லாடி கிருஷ்ணசாமி, சர் பி. என். ராவ், நிற்போர், இடமிருந்து: எஸ். என். முகர்ஜி, ஜுகல் கிஷோர் கண்ணா, கேவல் கிருஷ்ணா.)

அன்றைய மாகாணங்கள், சுதேச அரசுகள், அல்லது அரசுகளின் குழுக்களில்

12th_Political Science_Tamil_Unit_1.indd 4 04-06-2019 11:46:27

இருந்து அதன் மக்கள்தொகைக்கு ஏற்றபடி பத்து லட்சத்துக்கு ஒருவர் எனும் விகிதத்தில் உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டனர். இதன்படி, மாகாணங்களில் இருந்து 292 உறுப்பினர்களும் சுதேச அரசுகளிடம் இருந்து 93 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் மூன்று முதன்மை சமுதாயங்களான இந்து, முஸ்லிம், சீக்கியர் ஆகிய சமுதாயங்களின் மக்கள்தொகை விகிதத்தில் இடம் ஒதுக்கப்பட்டது.


Indian Express

INDIA PROCLAIMED SOVEREIGN DEMOCRATIC REPUBLIC

Madras Turns Into 'City Of Lights'

FESTIVE ILLUMINATIONS ON REPUBLIC DAY

RAJENDRA PRASAD SWORN IN AS PRESIDENT

Proclamation Read Out By Retiring Governor-General


NEW DELHI, Jan. 26.


The birth of Indian sovereign democratic Republic was proclaimed at 10-18 this morning by the country's last Governor-General Mr. Chakravarti Rajagopalachari at the

இந்த உறுப்பினர்கள் அந்தந்த மாகாணத்துக்கு மாற்றத்தக்க வாக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையின்படி ஒற்றை மாற்று வாக்கு அடிப்படையிலான விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சுதேச அரசுகள் தங்கள் பகுதியிலிருந்து உறுப்பினர்களை மக்கள் தொகை விகிதத்துக்கேற்ப தாங்களே தேர்வுசெய்துகொள்ளும் முறையை உருவாக்க அனுமதிக்கப்பட்டது.

அரசமைப்பு நிர்ணயசபை உருவாக்கம்

284 உறுப்பினர்கள் 26.11.1949 அன்று அரசமைப்பினை ஏற்று கையொப்பமிட்டு அரசமைப்பை நிறைவேற்றினர்.


ஆச்சார்யா ஜே. பி. கிருபளானி



ராஜேந்திர பிரசாத்

- அரசமைப்பு நிர்ணயச்சபை முதல் கூட்டம் 1946 டிசம்பர் 9 அன்று 11 மணி அளவில் புதுதில்லி, அரசமைப்பு அரங்கில் கூடியது. அன்றைய கூட்டத்தின் முதல் கூட்டப்பொருள்: 'தற்காலிகத் தலைவர் தேர்வு' ஆகும். ஆச்சார்ய ஜே. பி. கிருபளானி (ஐக்கிய மாகாணம் : பொது) அவர்கள் டாக்டர் சச்சிதானந்த சின்ஹாவை தற்காலிகத் தலைவராகத் தலைமையேற்று நடத்தும்படி கேட்டுக்கொண்டார்.

- அரசமைப்பு நிர்ணயசபையின் இறுதி நிகழ்வான அரசமைப்புற்கு ஒப்புதல் தருவதற்காக சபை 24. 01. 1950 அன்று கூடியது. டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைமையேற்றார்.

- 9 டிசம்பர் 1946 முதல் 24 ஜனவரி, 1950 வரை அரசமைப்பு நிர்ணயச்சபையில் நிகழ்ந்த விவாதங்களின் தொகுப்பு 12 தொகுதிகளைக் கொண்டதாகும்.

1.2 இந்திய அரசமைப்பின் மூல ஆதாரங்கள்


Adv (A) (14) L D.—30 1,000

The Government of India Act, 1935

[As amended up to 15th August 1943.]

Published by the Manager of Publications, Delhi
Printed by the Manager, Government of India Press, New Delhi, 1943.

Price Rs. 2 As. 12 or 4sh. 6d.

12th_Political Science_Tamil_Unit_1.indd 5 04-06-2019 11:46:27

- தொகுதி 1 – 9 டிசம்பர் முதல் 23 டிசம்பர் 1946 வரை
- தொகுதி 2 – 20 ஜனவரி முதல் 25 ஜனவரி 1947 வரை
- தொகுதி 3 – 28 ஏப்ரல் முதல் 2 மே 1947 வரை
- தொகுதி 4 – 14 ஜூலை முதல் 31 ஜூலை 1947 வரை
- தொகுதி 5 – 14 ஆகஸ்ட் முதல் 30 ஆகஸ்ட்1947 வரை
- தொகுதி 6 – 27 ஜனவரி 1948
- தொகுதி 7 – 4 நவம்பர் 1948 முதல் 8 ஜனவரி 1949 வரை
- தொகுதி 8 – 16 மே முதல் 16 ஜூன் 1949 வரை
- தொகுதி 9 – 30 ஜூலை முதல் 18 செப்டம்பர் 1949 வரை
- தொகுதி 10 – 6 அக்டோபர் முதல் 17 அக்டோபர் 1949 வரை
- தொகுதி 11 – 14 நவம்பர் முதல் 26 நவம்பர் 1949 வரை
- தொகுதி 12 – 24 ஜனவரி 1950

இந்திய அரசாங்கச் சட்டம், 1935

கூட்டாட்சி விதிகள், ஆளுநர் பதவி, நீதித்துறை, பொதுத் தேர்வாணையங்கள், நெருக்கடிகால விதிகள், நிர்வாக விவரங்கள் ஆகியன இந்திய அரசாங்கச் சட்டம், 1935-லிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டன. அவை பின்வருமாறு:

நாடு	அரசமைப்பு
பிரிட்டன்	நாடாளுமன்ற அரசு, ஒற்றைக் குடியுரிமை, சட்டத்தின் ஆட்சி, நாடாளுமன்ற செயல்முறைகள். இடைக்கால தடையாணைகள்
அமெரிக்க அரசமைப்பு	அடிப்படை உரிமைகள், நீதி சீராய்வு, குடியரசுத்தலைவர் மீதான பதவிநீக்க தீர்மானம், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள், குடியரசுத் துணைத்தலைவர் போன்றோரை பதவி நீக்கம் செய்யும் முறை
அயர்லாந்து	அரசின் வழிகாட்டு நெறிமுறைகள்
கனடா	ஒரு வலுவான மத்திய அரசுடன் கூடிய கூட்டாட்சி, மத்திய அரசிடம் இதர அதிகாரங்கள், பொதுப் பட்டியல், மத்திய அரசால் மாநில ஆளுநர் நியமனம், உச்சநீதிமன்றத்தின் அறிவுரை அதிகார வரம்பு
ஆஸ்திரேலியா	வணிகம், வர்த்தக சுதந்திரம், நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் கூட்டுக்கூட்டம்
ஜெர்மனி வெய்மர் அரசமைப்பு	நெருக்கடிநிலை காலத்தில் அடிப்படை உரிமைகள் பறிப்பு
சோவியத் யூனியன்	அடிப்படைக் கடமைகள், முகப்புரையில் (சமூக, பொருளாதார, அரசியல்) நீதியின் மாண்புகள், அடிப்படைக் கடமைகள். (42வது திருத்தத்தில் உறுதிபடுத்தப்பட்டது.)
பிரான்சு	குடியரசு, முகப்புரையில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
தென் ஆப்பிரிக்கா	அரசமைப்புத் திருத்தச்சட்டம் செயல்முறை, மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்வு

12th_Political Science_Tamil_Unit_1.indd 6 04-06-2019 11:46:27

இறுதிபடுத்தப்பட்ட, திருத்தப்பட்ட வரைவு 1949 நவம்பர் 26 அன்று ஏற்கப்பட்டது.

1.3 இந்திய அரசமைப்பின் சிறப்பியல்புகள்

நீளமான எழுதப்பட்ட அரசமைப்பு: இந்திய அரசமைப்புதான் உலகிலேயே நீளமான எழுதப்பட்ட அரசமைப்பாகக் கருதப்படுகிறது. மாநிலங்கள், மத்திய அரசு மற்றும் அவற்றுக்கு இடையிலான உறவுகள் குறித்த பல்வேறு விதிகளை கொண்டுள்ளது. நமது அரசமைப்பை உருவாக்கிய மேதைகள் உலகின் பல அரசமைப்பு மற்றும் பல்வேறு மூலங்களிலிருந்து நம் அரசமைப்பை உருவாக்கியுள்ளனர். தனிநபர் உரிமைகளை அடிப்படை உரிமைகளாகவும், அரசுக் கொள்கையின் வழிகாட்டு நெறிமுறைகளாகவும், நிர்வாகச் செயல்முறை விவரங்கள் என விரிவாகவும் பட்டியலிடப்பட்டுள்ளன.



இறுக்கம், நெகிழ்வுத் தன்மை இரண்டும் கொண்ட தனித்துவம்: அதன் அமலாக்கச் செயல்முறைகளின் அடிப்படையில் இறுக்கமும் நெகிழ்வும் கொண்டதாக இந்திய அரசமைப்பு அழைக்கப்படலாம்.

இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை, மக்களாட்சி, குடியரசு

வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் மூலம் மக்களே இந்தியாவை ஆள்கிறார்கள். இந்தியா ஒரு இறையாண்மை கொண்ட அரசு என்றால் தனது உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களை எந்தவிதமான வெளி அம்சங்களின் தலையீடு இன்றி நிர்வகிக்கும் என்பது பொருளாகும். இந்திய அரசமைப்பில் சமதர்மம் என்ற சொல் 42-வது திருத்தச்சட்டம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியாவைப் பொருத்தப்பாட்டில் சமதர்மம் என்பது மக்களாட்சி வழியில் பரிமாணத்துவம், அஹிம்சை ஆகிய முறைகளைக் கையாண்டு சமதர்மம் சமூக இலக்குகளை எட்டுவதாகும். இந்தியாவில், சமதர்மம், முதலாளித்துவம் ஆகிய பொருளாதாரங்கள் இணைந்த கலப்புப் பொருளாதார முறை கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியாவை பொறுத்தவரை மதச்சார்பின்மை என்பது இந்தியாவில் அரசு மதம் என ஒன்றில்லை; அனைத்து மதங்களும் சமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதாகும். இந்தியக் குடியரசு என்பது இந்தியாவில் முடியரசு மூலமாக அல்லாமல் தேர்தல் மூலமாக அரசின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதாகும்.

நாடாளுமன்ற ஆட்சி முறை

அமைச்சரவை குழு செயல்பாடுகளை நாடாளுமன்றம் கட்டுப்படுத்துவதால் நாடாளுமன்ற ஆட்சிமுறை என அழைக்கப்படுகிறது. நாடாளுமன்ற முறை அரசில் நிர்வாகம் நாடாளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டது; நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவு இருக்கும்வரை அந்த அரசு நீடிக்கும். குடியரசுத்தலைவர் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இக்காலகட்டத்தில் அவரே நிர்வாகத் தலைவராகவும் அரசமைப்புத் தலைவராகவும் செயல்படுவார். இருந்தபோதும் பிரதமரே உண்மையான நிர்வாகத் தலைவர் ஆவார்; அமைச்சரவைக் குழுவுக்கு தலைமை வகிப்பார்; அமைச்சரவைக்கு மக்களவை பல்வேறு பொறுப்புகளை வழங்கியுள்ளது.

ஒற்றைக் குடியுரிமை

இந்திய அரசமைப்பு ஒற்றைக் குடியுரிமை வழங்குகிறது; ஒன்றிய அரசு வழங்கும் குடியுரிமையே அனைத்து மாநிலங்களுக்குமானது.

12th_Political Science_Tamil_Unit_1.indd 7 04-06-2019 11:46:27

வயது வந்தோர் வாக்குரிமை

'ஒரு நபர், ஒரு வாக்குரிமை' எனும் கோட்பாட்டின் அடிப்படையில் வயதுவந்தோர் அனைவருக்கும் ஒரே சீரான வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளதன் மூலம் இந்தியாவில் அரசியல் சமத்துவத்தை இந்திய அரசமைப்பு தனது குடிமக்களுக்கு வழங்கியுள்ளது. 18 வயது நிறைவடைந்தோர் தேர்தலில் வாக்களிக்கும் தகுதி பெறுகிறார்கள். தேர்தலில் வாக்களிப்பதில் இந்திய குடிமக்கள் இடையே சாதி, மதம், பால், இனம் அல்லது தகுதி அடிப்படையில் எந்தவிதமான பாகுபாடும் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

சுதந்திரமான, ஒருங்கிணைந்த நீதி அமைப்பு

இந்தியாவில் இயங்கும் நீதி அமைப்பு அதன் செயல்பாடுகளில் நிர்வாகத் தலையீடோ அல்லது நாடாளுமன்ற, சட்டமன்றங்களின் தலையீடோ இல்லாமல் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும். ஒருங்கிணைந்த இந்திய நீதி அமைப்பில் உச்ச நீதிமன்றம் தலைமை அமைப்பாகவும் அதன் கீழே உயர் நீதிமன்றங்கள், கீழமை நீதிமன்றங்கள், துணை நீதிமன்றங்கள் எனவும் இயங்குகின்றன.

அடிப்படை உரிமைகள்

இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள சட்டங்களில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் அடிப்படை உரிமைகள் ஆகும். அவை மீறப்பட முடியாதவை. நெருக்கடி நிலை காலங்களில் சிலகுறிப்பிட்ட அடிப்படை உரிமைகளை (20-வது, 21-வது தவிர) விலக்கி வைக்கலாம். அப்போது, அசாதரணமான காரணங்களுக்காகத் திருத்தப்படலாம். அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது நீதிமன்றங்கள் தலையிட்டு அவற்றினை செயல்படுத்துகிறது.

'கல்வி உரிமை'

இந்திய அரசமைப்பின் (82-வது திருத்தம்) 2002, இந்திய அரசமைப்பு உறுப்பு 21 அ-வில், 6 முதல் 14 வயதுவரையான அனைத்துச் சிறார்களுக்கும் இலவச, கட்டாயக் கல்வி வழங்குவதை அடிப்படை உரிமையாக இணைத்துள்ளது. இதை அமலாக்கும்வகையில் மாநிலங்கள் விதிகளை வகுத்துக்கொள்ளலாம். சிறார் இலவச கட்டாயக் கல்வி சட்டம், 2009, அரசமைப்பு உறுப்பு 21-அ கீழ் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை நிறைவேற்றும் வண்ணம் இயற்றப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு குழந்தையும் நிறைவுதரும் வண்ணம் அடிப்படைக் கல்வியை முழு நேரம் பெற உரிமைகொண்டுள்ளது; அடிப்படைக் கல்விக்குரிய அடிப்படை விதிகள் மற்றும் தரங்களின்படி அடிப்படை பள்ளிக் கல்வி சமத்துவமாக வழங்கப்பட வேண்டும்.

அரசின் வழிகாட்டு நெறிகள்

அரசாட்சி தொடர்பாக அரசு கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிகள் இந்திய அரசமைப்பின் நான்காவது பகுதியில் அரசு கொள்கைக்கான வழிகாட்டு நெறிகள் எனும் தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளன.

அடிப்படைக் கடமைகள்

42-வது திருத்தத்தின் வாயிலாக அடிப்படைக் கடமைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அரசமைப்பு பகுதி IVஅ உறுப்பு 51அ-வில் வழங்கப்பட்டுள்ள அடிப்படைக் கடமைகள் ஒவ்வொரு இந்தியனும் பின்பற்ற வேண்டிய அறக் கடமைகள் ஆகும்.

கூட்டாட்சி அல்லது ஒற்றையாட்சி

இந்தியா சிதைக்க முடியாத ஒன்றியமும் (மத்திய அரசும்) சிதைக்கத்தக்க மாநிலங்களும் கொண்ட ஆட்சி முறையாகும். அதாவது நெருக்கடிநிலை காலத்தில் ஒற்றை ஆட்சி குணாம்சம் கொண்டது என்பது இதன் பொருளாகும். ஒன்றியம் முழுமையான கூட்டாட்சி என்று கூறமுடியாது. ஆனால், கிட்டத்தட்ட கூட்டாட்சி முறை என்று கூறலாம். வடிவத்தில் கூட்டாட்சி அமைப்பைக் கொண்டிருந்தாலும் இந்திய அரசமைப்பு பிற கூட்டாட்சிமுறைகள் போன்றதல்ல.ஒற்றையாட்சி முறை, கூட்டாட்சி முறை இரண்டும் கொண்ட, இரண்டையும் நேரம், சூழல் போன்ற தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளத்தக்க ஆட்சிமுறையைக் கொண்டுள்ளது.

12th_Political Science_Tamil_Unit_1.indd 8 04-06-2019 11:46:27

நீதி சீராய்வு சமநிலை நாடாளுமன்ற மேலாதிக்கம்


இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படாமல் கண்காணிப்பதிலும் நாடாளுமன்ற நிர்வாகச் செயல்பாடுகளில் தேவைப்பட்டால் தலையிடுவதிலும் நீதித்துறைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது இது இந்திய அரசமைப்பின் சிறப்புக்கூறுகளில் ஒன்று ஆகும். நீதி அமைப்பும், நாடாளுமன்றமும் ஒன்றுக் கொன்று சமமாக மேலாதிக்க தன்மை கொண்டவை. உச்ச நீதிமன்ற உத்தரவையே அல்லது தீர்ப்பையே நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் உச்ச நீதிமன்றமே மறுபரிசீலனை செய்யலாம். அதேபோல், நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டம் அரசமைப்பின் அடிப்படை தத்துவத்திற்கு முரணாக இருந்தால், அதை செல்லாததாக்கும் அதிகாரம், நீதி சீராய்வு எனப்படும்.

இந்தியக் குடியுரிமை

ஒரு நாட்டின் சட்டப்பூர்வ உறுப்பினர்கள் யார் என்பதை அடையாளம் காண்பது குடியுரிமை ஆகும். இந்திய அரசமைப்பு ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து, குடியுரிமைச் சட்டம், 1955, குடியுரிமை பெறுதல் மற்றும் உறுதிப்படுத்தலை ஒழுங்குபடுத்துகிறது. பிறப்பு, வாரிசு, பதிவு, இயற்கைவயப்படுத்தல் மற்றும் ஒரு பகுதியில் தொடர்ந்து வசித்தல் ஆகிய வழிகளில் குடியுரிமை பெற இந்திய அரசமைப்பு வழிவகை வழங்குகிறது. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் குடியுரிமையை விலக்கிக்கொள்ளவும் ரத்துசெய்யவும் விதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவின் அயல்நாட்டு குடிமக்கள் பதிவுமுறைகளும், அவர்கள் உரிமைகளும் அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ளன.

2015, பிப்ரவரி 27 அன்று மக்களவையில் மத்திய உள்துறை துணை அமைச்சரால் அறிமுகம் செய்யப்பட்ட குடியுரிமைகள் சட்டவரைவு, 2015, குடியுரிமைச் சட்டம், 1955இல் திருத்தங்கள் கொண்டுவந்துள்ளது.

பதிவு அல்லது இயல்புரிமை முறையில் இந்திய குடியுரிமை கோரி விண்ணப்பிக்கும் நபர் குறிப்பிட்ட தகுதிகளை நிறைவுசெய்தால் அவருக்கு குடியுரிமை வழங்கப்படும். இந்தியாவில் தொடர்ந்து குடியிருந்தாலோ அல்லது அரசுப்பணியில் 12 மாதங்கள் இருந்தாலோ ஒரு நபர் இந்தியக் குடியுரிமைக்கோரி விண்ணப்பிக்க முடியும். ஆனால், அசாதாரண சூழல் நிலவுமானால் இந்தத் தகுதிகளைத் தளர்த்திக்கொள்ளவும் இந்த சட்டம் வழி வகுக்கிறது.





அனைத்து மனித உயிர்களும் சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும் பிறக்கின்றன
– உலக மனித உரிமை பிரகடனம் (1948)

அடிப்படை உரிமைகள்

ஒவ்வொரு தனிநபரும் குறிப்பிட்ட அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதை அடிப்படைக் கொள்கையாக அரசமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது. இந்திய அரசமைப்பு, பகுதி III இல், அடிப்படை உரிமைகளுக்கான பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைகள் ஆறு தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன; அவையாவன: சமத்துவத்துக்கான உரிமை, சுதந்திரத்துக்கான உரிமை, சுரண்டப்படுவதற்கு எதிரான உரிமை, மத வழிபாட்டுக்கான உரிமை, மற்றும் கல்வி,

12th_Political Science_Tamil_Unit_1.indd 9 04-06-2019 11:46:28

பண்பாட்டு உரிமை, அரசமைப்புப்படி நிவாரணம் கோரும் உரிமை. தொடக்கத்தில், சொத்து உரிமை உறுப்பு 31(அ)வின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, சொத்து உரிமையும் அடிப்படை உரிமையாக இருந்தது. 44-வது திருத்தச்சட்டம், 1978 சொத்து உரிமையை அடிப்படை உரிமையில் இருந்து நீக்கிவிட்டு, உறுப்பு 300(அ) ஆகச் சேர்த்தது. இதன் மூலம் சொத்து உரிமை சட்ட உரிமையாகக் கருதப்படுகிறது.

இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் நீதிமன்றத்தால் நிலைநாட்டப்படுபவை ஆகும். ஒரு நபர் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கருதுவாரானால் நீதிமன்றத்தினை நாடி நிவாரணம் அடைய முடியும். இதனையொட்டி நேரடியாகவே உச்ச நீதிமன்றத்தினை நாடும் உரிமை உறுப்பு 32-இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மக்களுக்கான அரசியல் நீதியை அது உறுதிப்படுத்துகிறது. இந்தியாவில் அடிப்படை உரிமைகள் முழுமையானவை அல்ல. நாட்டின் பாதுகாப்பு தேவையைக் கருத்தில் கொண்டு உகந்த தடைகள் விதிக்கப்படலாம்.

கருத்து சுதந்திரமும் இணைய சவாலும்

நிகழ் ஆய்வு

மரியாதையால் அல்ல, அச்சத்தால் மும்பை முடங்கியது.



இரு வகுப்புகளுக்கு இடையே பகை உருவாக்கும் வகையில் முகநூலில் பதிவிட்டவரும் அதை விரும்பியவரும் என இரண்டு கல்லூரி மாணவிகள் கைது செய்யப்பட்டனர். ஒரு பிரபல தலைவரின் மரணத்தை தொடர்ந்து மும்பை நகரில் முழு கடையடைப்பு நடத்தப்பட்டது குறித்து அந்த கல்லூரி மாணவி தனது முகநூல் பதிவில் கேள்வி எழுப்பி இருந்தார். மற்றொரு மாணவியான அவரது முகநூல் நண்பர் அந்த கருத்துக்கு விருப்பக்குறி இட்டிருந்தார். கைது செய்யப்பட்ட இவ்விருவரும் உள்ளூர் நீதிமன்றத்தில் உடனடியாக பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

21 வயதான அந்த கல்லூரி மாணவி தனது பதிவில் "ஒவ்வொரு நாளும் மரியாதைக்குரிய ஆயிரக்கணக்கான மக்கள் மரணிக்கிறார்கள். ஆனால் உலகம் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது" என்று எழுதியிருந்தார். அப்பதிவு மேலும் இவ்வாறு தொடர்கிறது: "ஒரு அரசியல்வாதி இயற்கை மரணம் அடைந்தாலும்கூட மக்கள் ஒவ்வொருவரும் பதுங்கு குழிகளுக்குள் முடங்க வேண்டுமா? நாங்கள் அவ்வாறு விரும்பி கடையடைப்பை ஆதரிக்கவில்லை; கட்டாயத்தின் பெயரால் வற்புறுத்தப்படுகிறோம் என்பதை அவர்கள் உணர வேண்டும். பகத் சிங், ஆசாத், சுகதேவ் அல்லது இந்திய விடுதலைக்காக தியாகம் செய்த எந்த தலைவருக்காவது நாம் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியது உண்டா? மரியாதை என்பது ஈட்டப்படுவது, உறுதியாக திணிக்கப்படுவது அல்ல. இன்று மும்பை முடக்கப்பட்டிருப்பது அச்சத்தினாலே ஒழிய மரியாதையால் அல்ல".

நன்றி: தி,இந்து

இந்தியாவில் பேச்சு சுதந்திரத்தை பாதுகாக்கப் போதுமான சட்டங்கள் இருப்பினும் பேச்சுக்குப் பிந்தைய சுதந்திரம் போதுமான அளவுக்கு பாதுகாக்கப்படவில்லை, இதை ஏற்கிறீர்களா?

உங்களது கருத்துகளை 250 சொற்களுக்கு மிகாமல் கூறவும். வகுப்பறையில் இந்த கருத்துகளை பகிர்ந்து கொள்ளவும்.

12th_Political Science_Tamil_Unit_1.indd 10 04-06-2019 11:46:29

அரசு கொள்கை வழிகாட்டு நெறிகள்

இந்திய அரசமைப்பின் தனித்தன்மை வாய்ந்த கூறுகளில் ஒன்று அரசு கொள்கை வழிகாட்டு நெறிகள் என்ற பகுதி ஆகும்.

இதனை இந்தியாவில் சமூக, பொருளாதார நீதியை நிலைநாட்டும் வண்ணம் அரசு அவற்றை அமலாக்கம் செய்வதற்கான வழிகாட்டு நெறிகள் எனலாம்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் சம ஊதியம், இலவச கட்டாய அடிப்படைக் கல்வி, வேலை பார்க்கும் உரிமை ஆகியவற்றுக்கான குறிப்பிடத்தக்க விதிகளை அது கொண்டுள்ளது. இந்திய அரசமைப்பின் பாகம் IV-ன் கீழ் முதுமை, வேலையின்மை, நோய்வாய்படுதல், உடல் வலிமை கொண்டோர் வாழ்வாதாரத்திற்குத் தேவையான திட்டங்கள், பொருளாதாரரீதியாக பிற்படுத்தப்பட்ட பிரிவு மக்களுக்கு சிறப்பு முன்னுரிமை, வளங்கள் பகிர்வில் உள்ள பாகுபாடுகள் போன்றவற்றிற்கு அரசு உதவிகள் வழங்குவதற்கான பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு அரசு கொள்கை வழிகாட்டு நெறிகளில் வழங்கப்பட்டுள்ள விதிகள் நீதிமன்றங்கள் மூலமாக நிலைநாட்டப்பட முடியாது என்றாலும் நாட்டின் அரசாட்சிக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றன.

பஞ்சாயத்து ராஜ் – காந்தி (எதிர்) அம்பேத்கர்

மத்திய அரசிடம் குறைந்த அளவிலான அதிகாரம் மட்டுமே இருக்க வேண்டும் என்று விரும்பிய காந்தி பாரம்பரிய வழக்கமான முறைபடி கிராமத்தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டு கிராமங்கள் தமக்குத் தாமே ஆட்சி செய்து கொள்ள வேண்டும் என்று கூறினார். அம்பேத்கரின் கருத்துப்படி, கிராமம் என்பது வகுப்பு வாதம், சாதியமைப்பு போன்ற கொடுமையான யதார்த்தத்தைக் கொண்டுள்ளன; இதனால் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்படும் நிலை உருவாகும் என்று கருதினார்.

ஆனால், சிறப்பான உள்ளாட்சி அரசாங்கத்தின் மூலமாக மட்டுமே மக்கள் அதிகாரம் செலுத்தமுடியும் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்தறியும் வகையில் காந்தி தனது சமூக, அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொண்டார். "இந்தியாவில் வாழும் கடைகோடி ஏழைகூட இது தனது நாடு என்று உணரும் நிலையை உருவாக்கி, அதில் அவரது குரல் வலுவாக உயரும் வகையில் வலிமையான இந்தியாவை உருவாக்க நான் பாடுபடுவேன்" என்றார். பஞ்சாயத்து ராஜ் அமைப்பு மூலமாக மக்களின் கரங்களில் அதிகாரம் இருக்க வேண்டியதன் தேவையை காந்தி எப்போதும் வலியுறுத்தி வந்தார். "மக்களிடம் எந்த அளவுக்கு அதிகாரம் இருக்கிறதோ அந்த அளவிற்கு இது மக்களுக்குச் சிறந்த பயன் அளிக்கும்" என்று காந்தி கூறினார்.




அம்பேத்கர்

அம்பேத்கர் கருத்துப்படி, "கிராமங்கள் என்பது அறியாமை மற்றும் வகுப்புவாதத்தின் இருப்பிடம்" என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை. கிராமங்களில் உள்ள ஆதிக்கமும் செல்வாக்கும் கொண்ட சமுதாயங்கள் தங்கள் ஏகபோகத்தை நிலைநாட்டிக் கொண்டு இதர சமுதாயங்களுக்குக் குரல் இல்லாமல் செய்கிறார்கள் என்றார். இதன் விளைவாக, அம்பேத்கர் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசமைப்பில் பஞ்சாயத்து ராஜ் என்ற சொல் கூட குறிப்பிடப்படவில்லை. ஆனால், இந்திய அரசமைப்பு சட்டம் பாகம் IV அரசுக் கொள்கை வழிகாட்டு நெறிகள் என்னும் பிரிவில் கிராம பஞ்சாயத்துகளை உருவாக்குவதற்கான பொறுப்பினை மாநிலச் சட்டமன்றங்களுக்கு அளிக்கும் வகையில், ஒரு விதி

12th_Political Science_Tamil_Unit_1.indd 11 04-06-2019 11:46:29

கொண்டிருக்கப்பட வேண்டும் என்று காந்தியவாதிகள் வலியுறுத்தினர். இதன்படி சேர்க்கப்பட்ட அரசமைப்பு உறுப்பு 40 கிராம பஞ்சாயத்து அமைப்புகள் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும், அவற்றுக்கான அதிகாரங்களை மாநில அரசு தன் பொறுப்பிலிருந்து அளிக்க பொறுப்பளிக்க வேண்டும் என்றும் கிராம நிர்வாக அலகுகள் தன்னாட்சியாக செயல்படுவதற்குத் தேவையான அதிகார அமைப்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறது.

செயல்பாடு

நாடாளுமன்ற முறை அரசு, குடியரசுத்தலைவர் முறை அரசு ஆகியவற்றிற்கு மேலும் சில உதாரணங்களை கூறவும்.

நாடாளுமன்ற முறை அரசு	குடியரசுத்தலைவர் முறை அரசு
இந்தியா	அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள்

அடிப்படைக் கடமைகள்

இந்திய அரசமைப்பு பாகம் 4அ அடிப்படைக் கடமைகளை வரையறை செய்கிறது (51அ). இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமைகள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன.

அ) அரசமைப்பிற்கு கீழ்ப்படிந்து அதன் மாண்புகள், நிறுவனங்கள், தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியனவற்றிற்கு மரியாதை அளிக்க வேண்டும்.

ஆ) நமது நாட்டு விடுதலைக்கான போராட்டத்தின் போது பின்பற்றப்பட்ட உன்னதமான மாண்புகளை ஏற்று பின்பற்ற வேண்டும்.

இ) இந்தியாவில் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியனவற்றைப் பாதுகாத்து போற்ற வேண்டும்.

ஈ) தேவையான காலங்களில் அழைப்பு விடுக்கப்படும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்கு சேவைபுரியவும் முன்வர வேண்டும்.

உ) மத, மொழி, சாதி வேறுபாடுகளை கடந்து மக்களிடையே ஒருமைப்பாட்டினையும் உலகளாவிய சகோதரத்துவத்தினையும் உருவாக்க வேண்டும்; பெண்களின் மாண்பிற்குப் பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்.

ஊ) நமது பன்மைத்துவப் பண்பாட்டின் வளமான மரபினை மதித்துப் பாதுகாக்க வேண்டும்.

எ) வனங்கள், ஏரிகள், ஆறுகள், வன உயிரினங்கள் உள்ளிட்ட நமது இயற்கை வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்தி அனைத்து உயிரினங்களும் வாழத் தகுந்ததாக பராமரிக்க வேண்டும்.

ஏ) அறிவியல் ஆர்வம், மனிதநேயம், தேடல் நெறி, சீர்த்திருத்தம் ஆகியனவற்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஐ) பொதுச் சொத்துகளை சேதப்படுத்தாமல் மற்றும் பாதுகாக்கவும் வேண்டும்.


12th_Political Science_Tamil_Unit_1.indd 12 04-06-2019 11:46:29

ஒ) நமது முயற்சிகள் மற்றும் சாதனைகளை மென்மேலும் உயர்ந்த இலக்குகளை நோக்கி எடுத்துச் சென்று நாட்டினை மென்மேலும் தொடர்ந்து உயர்த்தும் வண்ணம் தனிநபர் மற்றும் கூட்டு செயல்பாடுகளில் சிறப்புத்திறன் பெற்றுத் முன்னேற வேண்டும்.

ஓ) ஆறு வயது முதல் பதினான்கு வயதுக்குட்பட்ட சிறார்கள் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை அச்சிறார்களின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் வழங்க வேண்டும்.

1.4 இந்தியாவில் நாடாளுமன்ற மக்களாட்சி

உறுப்பு 79இன் கீழ் இந்திய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் குடியரசுத்தலைவரும் ஈரவைகளும் கொண்டது ஆகும். ஈரவைகள் மாநிலங்களவை, மக்களவை என்று அறிவோம். ஒரு கூட்டாட்சியில் நாடாளுமன்றம் ஈரவை கொண்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்ற தேவையின் அடிப்படையில் இதனை ஏற்கப்படுகிறது; மேலவை என்று அழைக்கப்படும் மாநிலங்களவை மாநிலங்களின் பிரதிநிதித்துவமும் கீழவை என்று அழைக்கப்படும் மக்களவை மக்கள் பிரதிநிதித்துவமும் கொண்டவையாகும். ஈரவைகளும் தன் இயல்பில் செயல்பட்டு மாநிலங்களின் ஒற்றுமை, ஒன்றிய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்துப் பராமரிக்கின்றன. மாநிலங்களவை 250 உறுப்பினர்களை கொண்டதாகும். இதில் 12 உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நியமனம் செய்வார். மீதமுள்ள 238 உறுப்பினர்கள் மாநிலங்கள் மற்றும் ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் சட்டமன்றங்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.மக்களவை 543 உறுப்பினர்களைக் கொண்டதாகும். இவர்கள் தொகுதிவாரியாக மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மேலும் இரண்டு உறுப்பினர்கள் ஆங்கிலோ-இந்திய சமுதாயத்திலிருந்து குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.



12th_Political Science_Tamil_Unit_1.indd 13 04-06-2019 11:46:29

மாநிலங்களவையின் பொருத்தபாடு

மாநிலங்களவை மேலவை என்றும் அழைக்கப்படுகின்றது. இதன் சிறப்பம்சத்தை வலியுறுத்தும் வகையில் இப்பெயர் 1954 ஆகஸ்ட் 23 அன்று மாநிலங்களவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டது. இந்த மாநிலங்களவையின் உருவாக்கம் மாண்டேகு-செமஸ்போர்டு திட்டம் காலம் வரை பின்நோக்கிச் செல்கிறது. அதுவரை வரம்புக்கு உட்படுத்தப்பட்ட வாக்குரிமையுடன் கூடிய சட்டமன்றம் செயல்படுத்தப்பட்டு வந்தது. இதனோடு இரண்டாவதாக 'மாநிலங்கள் குழு' அவை இந்திய அரசாங்கச் சட்டம், 1919இன் கீழ் உருவாக்கப்பட்டது. இதனையொட்டி 1921முதல் மாநிலங்கள் குழு அவை செயல்பட்டு வருகிறது. அன்றைய மாநிலங்கள் குழு அவையில் தலைவராக கவர்னர் – ஜெனரல் செயல்பட்டார்.

விடுதலைக்குப் பின், புதிய அரசமைப்பு உருவாக்கும் பொருட்டு அமைந்த அரசமைப்பு நிர்ணயசபை மாநிலங்களவை தொடர்வது குறித்து மிக விரிவான விவாதங்கள் நடைபெற்றன. இறுதியில், நாட்டில் நிலவும் பன்மைத்துவத்தைக் கருத்திற் கொண்டு ஈரவைகள் கொண்ட நாடாளுமன்றத்தை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. மாநில மற்றும் ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் சட்டமன்றங்களின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் 238 உறுப்பினர்களைக் கொண்ட மாநிலங்களவை ஒரு கூட்டாட்சி அமைப்பாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடன் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படும் 12 உறுப்பினர்களையும் சேர்த்து மாநிலங்களவை மொத்தம் 250 உறுப்பினர்களைக் கொண்டதாகும். குடியரசுத் துணைத்தலைவர் மாநிலங்களவைத் தலைவராக செயல்படுவார். அவர் இல்லாத நேரங்களில் மாநிலங்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் குடியரசுத் துணைத்தலைவர் அவையை நடத்துவார். மாநிலங்களவை மக்களவை போன்று கலைக்கப்பட முடியாததாகும். மாநிலங்களவையின் முதல் கூட்டம் 1952 மே 13 அன்று தொடங்கியது. மக்களவை மேற்கொள்ளும் பணிகள், செயல்பாடுகள் மற்றும் உறுப்பினர்களின் நடத்தை விதிகள் ஆகியவை தனி பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன. மாநிலங்களவையில் பல பிரிவுகளில் விவாதங்கள் நடைபெறுகின்றன; அரை மணி நேரம் விவாதம், குறுகிய கால விவாதம் மற்றும் பொது நலன் அடிப்படையிலான தீர்மானங்கள் மீதான விவாதங்கள் போன்றவையாகும்.

மாநிலங்களவையில் சி.என். அண்ணாதுரை உரை



சி.என்.அண்ணாதுரை

இந்திய அரசமைப்பு உறுப்பு 343 ஒன்றிய அரசில் அலுவல் மொழி 1963க்குப் பின் இந்தி மொழியாகவே இருக்க வேண்டும் என்று திட்டவட்டமாக கூறுகிறது. இதையொட்டி, ஆட்சி மொழிகள் சட்ட முன்வரைவு, 1963 அறிமுகம் செய்யப்பட்டது.

இதனையொட்டி நடைபெற்ற உரையாடலில், சி.என்.அண்ணாதுரை பேசியது: "இந்தியா ஒரு பொது மொழியை கொண்டிருக்க வேண்டும் என்றும் இக்கருத்து ஒப்புக் கொள்ளப்பட்டால் இந்திய மொழிகளில் ஒன்று பொது மொழியாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி மிக பலபல கருத்துகள் கூறப்பட்டுள்ளன. இதில் எவருக்கும் ஐயமில்லை. இந்தியா ஒரு ஒற்றை அரசு என்றால் இந்த வாதம் தர்க்க ரீதியானது தான். ஆனால், இந்தியா ஒரு கூட்டாட்சி அரசு. இந்திய சமுதாயம் பன்மைத்துவம் கொண்ட சமுதாயம். நமது

12th_Political Science_Tamil_Unit_1.indd 14 04-06-2019 11:46:29

அரசமைப்பு ஒரு கூட்டமைப்பு. ஒரு பன்மைத்துவ சமுதாயத்தில், ஒரு கூட்டு அரசமைப்பில் ஒற்றைப் பொது மொழி கோரி வாதிடுவது அநீதியை உருவாக்கும், சமுதாயத்தின் ஒரு பிரிவினர் இடையே அறியாமையை உருவாக்கும் என்றே நினைக்கிறேன். இந்தியா ஒரு நாடு அல்ல. பல்வேறு இனக்குழுக்களைக் கொண்டுள்ளது. இந்தியா பல்வேறு மொழிக் குழுக்களைக் கொண்டுள்ளது. எனவே, இந்தியா ஒரு துணைக் கண்டம் என்று அழைப்பதே சரியாகும். எனவேதான், ஆட்சி மொழியாக ஒரு பொது மொழியை நம்மால் காண இயலவில்லை.

அரசு வந்தே மாதரம், ஜன கன மண என இரு தேசிய கீதங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. இரு தேசிய கீதங்களில் ஒன்று கூட இந்தி மொழியில் எழுதப்பட வில்லை. அவை, வங்க மொழியில் பிறந்தவை. இந்தியாவில் 42 விழுக்காடு மக்கள் பேசும் மொழி என்பதால் இந்தி மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த 42 விழுக்காடு என்பது நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு எல்லைகளுக்கு இடையே பரவலாக பரவி இருக்குமானால் இந்த வாதம் தர்க்கரீதியானது, அறநெறியானது என்று ஏற்கலாம். ஆனால், இந்த 42 விழுக்காடும் ஒரே இடத்தில் நெருக்கமாக அடர்த்தியாக குவிந்து உள்ளது. பரவலாக காணப்படவில்லை.

எனவே, 42 விழுக்காடு என்ற கருத்து பரிசீலினைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டால் இந்தியாவில் குறிப்பிட்ட, குவிக்கப்பட்ட பகுதிக்கு ஆதரவாக நிற்கிறீர்கள். அதே சமயம், இதர பகுதிகளுக்கு நிரந்தரமாக எதிராக நிற்கிறீர்கள். எனவே, 42 விழுக்காடு என்ற கருத்து பரிசீலினைக்கு எடுத்துக் கொள்ள கூடாது. ஒருவேளை இந்தி மொழி இந்தியா முழுவதும் பரவலாக பேசப்படும் மொழியாக 20 விழுக்காடு மக்களிடம் காணப்பட்டாலும் கூட, அனைத்து மொழிகளிலும் இந்தி மொழியே குமரி முதல் இமயம் வரை அறியப்படும் மொழியாக நாம் கூறலாம். இந்திய மக்களின் 20 விழுக்காட்டினர் இந்தி மொழி அறிவார்கள். எனவே, இந்தி ஆட்சி மொழியாகட்டும். என்னால் அதனை ஆதரிக்க முடியாது எனிலும், புரிந்து கொள்ள முடியும். அதன் பின் உள்ள தர்க்கம் புரிந்து கொள்ளத்தக்கது. ஆனால், உத்திரப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய பகுதிகளில் அடர்த்தியாக வாழும் இந்த 42 விழுக்காடு கருத்தின் பின்னணியில் என்ன தர்க்கம் உள்ளது."

மாநிலங்களவை

உங்களுக்குத் தெரியுமா?

- இந்திய நாடாளுமன்றத்தில் மேலவை மாநிலங்களவை என்று அழைக்கப்படுகிறது.
- மாநிலங்களவை முதல் கூட்டத்தொடர் 1952 மே 13 அன்று நடந்தது.
- பொதுவாக, மாநிலங்களவை ஆண்டுக்கு மூன்று கூட்டத்தொடர்களாகக் கூடுகிறது. அவை வருமாறு
- முதல் கூட்டத்தொடர் (நிதி நிலை அறிக்கைக் கூட்டத்தொடர்) பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை நீடிக்கும்.
- இரண்டாம் கூட்டத்தொடர் (மழைக்காலக் கூட்டத்தொடர்) பொதுவாக ஜூன் தொடங்கி ஆகஸ்ட் இறுதியில் நிறைவுறுகிறது.
- மூன்றாம் கூட்டத்தொடர் (குளிர்காலக் கூட்டத்தொடர்) நவம்பர் இறுதி தொடங்கி டிசம்பர் இறுதி வரை நீடிக்கும்.

12th_Political Science_Tamil_Unit_1.indd 15 04-06-2019 11:46:29

முக்கிய விவாதம்

2014 ஆகஸ்ட் 1: தமிழ்நாட்டில் நீதிமன்ற மொழியாக தமிழை பயன்படுத்துதல்.

தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தில் நடைபெற்ற ஆரோக்கியமான விவாதங்கள்



சி. இராஜாஜி



சி.சுப்பிரமணியம்



காமராஜ்

இந்திய அரசமைப்பு சட்டத்தின் கீழ் உருவான மதராஸ் மாகாண முதல் சட்டமன்றத்தில் (1952-1957). இராஜாஜி அரசு கொண்டுவந்த அடிப்படைக் கல்வி திட்டம் விமர்சிக்கப்பட்டது. எதிர்க்கட்சிகளுடன் ஆளும் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த ஒரு பகுதியினர் உட்பட இத்திட்டத்தை கடுமையாக எதிர்த்தனர். இத்திட்டம் சாதி அடிப்படையிலான படிநிலை மேலாதிக்கத்தை மீண்டும் கொண்டு வரும் என்று விமர்சித்தனர். பின்னர் முதல்அமைச்சராகப் பதவி ஏற்ற காமராஜர் அமைச்சரவையில் 1954 அரசின் கல்வி அமைச்சர் சி.சுப்பிரமணியம் இத்திட்டம் ரத்து செய்யப்படுவதாக அறிவித்தார். அதேசமயம், இராஜாஜி ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களை பாதுகாக்கும் நிலச் சட்டங்கள் தொடரப்பட்டன.

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"இந்தியா, அதாவது பாரதம் மாநிலங்களின் ஒன்றியம் ஆக இருக்கும். உறுப்பு 1(1)"

"சென்னை மாகாண தலைவர் சி.இராஜாஜி தனது முதல் நிதி நிலை அறிக்கையை 1937இல் மதராஸ் சட்டமன்றம், செனட் அவை, மதராஸ் பல்கலைக்கழக சேப்பாக்கம் வளாகத்தில் தாக்கல் செய்தார்".

1967இல் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்தது. சி.என்.அண்ணாதுரை முதல்வராக பதவி ஏற்றார். அவரது ஆட்சியில் இந்து திருமணச் சட்டம் திருத்தப்பட்டு 'சுயமரியாதை திருமணங்கள்' அதாவது மத சடங்குகள் இல்லாமல் மேற்கொள்ளப்படும் திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டன. அவருக்கு அடுத்து பதவி ஏற்று, ஐந்து தடவைகள் முதல் அமைச்சராக பதவி வகித்த மு.கருணாநிதி பல சட்டங்களையும் எண்ணற்ற தீர்மானங்களையும் கொண்டு வந்துள்ளார். அவர் கொண்டு வந்த கடைசி சட்டமுன்வரைவு பிற்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டுக்குள் முஸ்லீம்களுக்கும் கிறித்துவர்களுக்கும் சிறப்பு உள் ஒதுக்கீடு வழங்குவதுடன் பட்டியல் இனங்களுக்கும் மற்றும் பழங்குடியினருக்குமான ஒதுக்கீட்டின் கீழ் அருந்தியர்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்குகிறது.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றகழகத்தின் எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையிலான பத்து ஆண்டுக்கால ஆட்சியில் (1977-1987) வருவாய் நிர்வாக துறையில் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. குறிப்பாக, வாரிசு அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலரான "கர்ணம்" பதவிக்கு முடிவு கட்டினார். மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி சத்துணவுத் திட்டமாக மேம்படுத்தினார்.

1992 நவம்பரில் உச்ச நீதிமன்றம் மண்டல் ஆணையம் வழக்கில் தீர்ப்பு வழங்கியது. அதில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் 50 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து

12th_Political Science_Tamil_Unit_1.indd 16 04-06-2019 11:46:30

தமிழகத்தில், பிற்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் சாதிகள், பழங்குடியினர் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த இடஒதுக்கீட்டினை பாதுகாக்கும் வகையில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம் கூட்டப்பட்டு 69 சதவீதம் ஒதுக்கீடு சட்டம் கொண்டு வரப்பட்டது.

தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம்

உங்களுக்குத் தெரியுமா?



- தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம் 234 உறுப்பினர்களைக் கொண்டது. 189 உறுப்பினர்கள் பொது தொகுதிகளிலிருந்தும் 45 உறுப்பினர்கள் தனித் தொகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- சட்டமன்றத்தில் முதல் கூட்டத் தொடர் முதல் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து (1952). 3.5.1952 அன்று தொடங்கியது.
- அரசமைப்பு உறுப்பு 333இன் கீழ் ஆங்கிலோ- இந்திய பிரதிநிதி ஒருவர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்.
- 16.05.2016 அன்று தமிழக சட்டமன்றத்திற்கு பொதுத் தேர்தல் நடந்ததையொட்டி 15-வது தமிழக சட்டமன்றம் 21.05. 2016 அன்று அமைக்கப்பட்டது.

பொதுக் கணக்கு குழு

உங்களுக்குத் தெரியுமா?

மக்களவை உறுப்பினர்களிலிருந்து ஒருவர் பொது கணக்குக் குழுத்தலைவராக மக்களவைத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். இதில் 1967-1968ஆம் ஆண்டில் முதன்முறையாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரே பொதுக் கணக்குக் குழுத்தலைவராக மக்களவைத் தலைவரால் நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழு மக்களவைத் தலைவர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஒரு நாடாளுமன்றக் குழுவாகவே கருதப்படுகிறது. 1950 ஜனவரி முதல் 2018 ஏப்ரல் வரை இக்குழு 1596 அறிக்கைகளை தாக்கல் செய்துள்ளது.

1.5 இந்திய அரசமைப்புச் திருத்தச்சட்டங்கள்

மாறிவரும்சமுதாயத்தேவைகளுக்கேற்ப அரசமைப்பில் திருத்தங்கள் கொண்டு வருவதற்கான விதிகளையும் நமது அரசமைப்புற்கு மேதைகள் வழங்கியுள்ளனர். ஏற்கனவே, நமது அரசமைப்பு சட்டத்தின் மாண்புகள் மற்றும் அதன் அடித்தளத்திற்கு பங்கம் நேராமல் பல்வேறு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அரசமைப்பைப் பாதுகாப்பதிலும் அரசமைப்பிற்கு விளக்கமளிப்பதிலும் நமது நீதித்துறை முக்கிய பங்காற்றுகிறது. இதர அரசமைப்புகள் போலவே நமது அரசமைப்பு மாறி வரும் சூழல்கள் மற்றும் அரசியல் நெருக்கடியில் ஏற்ப தன்னை தகவமைக்கும் ஆவணமாக திகழ்கிறது. இந்திய அரசமைப்பு முதன்மை சட்டமாக தனக்குள் செயல்பட்டு கொண்டு இந்திய அரசையும் இயக்குகிறது. நமது அரசமைப்பு சட்டத்தை உருவாக்கிய மேதைகள் தொலைநோக்கு பார்வையுடன் எதிர்கால பிரச்சனைகளை முன்உணர்ந்து அவற்றிற்கு தீர்வுகளை வழங்கியுள்ளனர். மாறி வரும் சமுதாய சூழல்களுக்கு ஏற்ப தேவையான

12th_Political Science_Tamil_Unit_1.indd 17 04-06-2019 11:46:30

திருத்தங்களுக்கு இந்திய அரசமைப்பு இடம் அளித்து ஏற்கிறது. அமலாக்கத்தில் போதுமான நெகிழ்வுத் தன்மை கொண்டுள்ளதால் ஒரு இறுக்கமான சட்டப்புத்தகமாக நமது அரசமைப்பு மாறாமல் உயிரோட்டமான ஆவணமாகத் திகழ்கிறது. அரசமைப்பு சட்டத்தின் அடித்தளத்தினை நிலையான மாறாத உன்னத ஆவணமாக உருவாக்கியுள்ள அதே சமயத்தில் அது என்றும் நிலையான மாற்றமுடியாத ஆவணம் அல்ல என்பதையும் நமது அரசமைப்பு சட்டங்கள் உறுதிப்படுத்துகின்றன. தேவையான மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் 'நெகிழ்வுத் தன்மை' கொண்டதாகவும் தேவையின்றி அடிக்கடி மாற்றங்கள் ஏற்படுத்துவதை தடுக்கும் வகையில் 'இறுகியத் தன்மை' கொண்டதாகவும் அரசமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 368இன் கீழ் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்பிற்கு அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு சட்டத்திலும் சேர்த்தல், நீக்கம், மாறுதல் கொண்டுவர அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்பு கூட்டாச்சி அரசியலமைப்பை கட்டமைத்துள்ளதால் மாநில அரசுகளின் அடிப்படை உரிமைகள் மற்றும் அதிகாரங்களில் சம்மந்தப்பட்ட மாநில அரசுகளின் ஒப்புதல் இல்லாமல் மாற்றம் கொண்டு வர முடியாது. நமது அரசு சட்ட மேதைகள் சில விதிகளை அரசமைப்பில் மையக் கருத்துகளை மாற்றங்களிலிருந்தும் சமரசங்களிலிருந்தும் பாதுகாக்க விரும்பினர். அரசமைப்புச்சட்ட மேதைகளின் இக் கருத்துகள் பல்வேறு வழிகளிலான அரசமைப்புச் திருத்தச்சட்டங்களுக்கு வழிவகுத்தது.

மூன்று வகையான அரசமைப்புத் திருத்தச் சட்டம் வகைகள் உள்ளன அவை பின்வருமாறு

1) தனி பெரும்பான்மை(சேர்த்தல்)

2) நாடாளுமன்றத்தில் ஈரவைகளிலும் சிறப்பு பெரும்பான்மை பெறுவதன் மூலம் திருத்தச்சட்டம் கொண்டு வருதல். (அவையில் இருப்போரில் மூன்றில் இரண்டு மடங்கு உறுப்பினர்கள் ஆதரவு மற்றும் குறைந்தது மொத்த உறுப்பினர்களில் 50 விழுக்காடு)

3) பெரும்பான்மை பெறுவதுடன் மொத்தமுள்ள மாநிலச் சட்டமன்றங்களில் சரிபாதி சட்டமன்றங்களின் ஒப்புதல் பெறுதல்.

இந்த வகைகளிலான அனைத்து திருத்தங்களும் நாடாளுமன்றத்தில் மட்டுமே அறிமுகப்படுத்தப்படும். அரசமைப்பு வழங்கியுள்ள விதிகளின்படி எந்தவொரு அரசமைப்புச் திருத்தச்சட்டத்திற்கும் பொது வாக்கெடுப்பு தேவைப்படவில்லை. சட்டத்திருத்த முன்வரைவு அனைத்தும் குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். இவ்வாறு அனுப்பப்படும் அரசியல் சட்ட முன்வரைவுகளை திருப்பி அனுப்பும் அதிகாரம் குடியரசுத்தலைவருக்குக் கிடையாது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டுமே அரசியல் திருத்தச்சட்டம் விவகாரங்களில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசமைப்புத் திருத்தச்சட்ட முன்வரைவு

உங்களுக்குத் தெரியுமா?

அரசமைப்பில் உள்ள ஒரு விதியில் திருத்தம் கோரும் சட்ட முன்வரைவுகள் அரசமைப்புத் திருத்தச்சட்டம் முன்வரைவு என்று அழைக்கப்படுகிறது. உறுப்பு 368 (2) ன் கீழ் வரும் அனைத்து விதிகளும் இதில் அடங்கும். இந்த சட்ட முன்வரைவினை நாடாளுமன்றத்தில் ஈரவைகளிலும் கொண்டு வரலாம்.

12th_Political Science_Tamil_Unit_1.indd 18 04-06-2019 11:46:30

தனிநபர் சட்ட முன்வரைவு

அமைச்சர் அல்லாத உறுப்பினர்கள் தாக்கல் செய்யும் சட்ட முன்வரைவு தனிநபர் முன்வரைவு என்று அழைக்கப்படுகிறது. நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி மற்றும் எதிர் கட்சிகளைச் சேர்ந்த எவரும் தனிநபர் சட்ட முன்வரைவு கொண்டு வரலாம். தனிநபர் சட்ட முன்வரைவு என்பது அமைச்சரவையிலோ நிர்வாகத்திலோ உறுப்பினராக இல்லாத நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் முன்மொழியப்படுவது ஆகும். தனிநபர் சட்ட முன்வரைவு மீதான விவாதம் அடுத்தடுத்த வாரத்தின் வெள்ளிக் கிழமைகளில் பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை நடைபெறும்.

இந்த சட்ட முன்வரைவு கொண்டு வர ஒரு மாதத்திற்கு முன்பாகவே முன்அறிவிப்பு தரவேண்டும். தனிநபர் முன்வரைவுகள் நிராகரிக்கப்பட்டாலும் அது ஆட்சியில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. இதுவரை நாடாளுமன்றத்தில் 14 தனிநபர் சட்ட முன்வரைவு மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளன. கடைசியாக, தனிநபர் சட்ட முன்வரைவு நிறைவேற்றப்பட்ட ஆண்டு 1970. இவ்வாறு கொண்டு வரப்படும் தனிநபர் முன்வரைவுகளில் பெரும்பாலானவை வாசிக்கப்படுவதோ, விவாதிக்கப்படுவதோ, நிராகரிக்கப்படுவதோ கூட கிடையாது. அரசமைப்பு திருத்தம் கோரும் முன்வரைவுகள் கூட தனிநபர் முன்வரைவுகளாக ஏற்கப்படலாம். ஆனால் நிதி முன்வரைவுகளை தனிநபர் சட்ட முன்வரைவாக கொண்டு வர முடியாது.

நாடாளுமன்றம் நிறைவேற்றிய தனிநபர் சட்டங்கள்

	தலைப்பு	உறுப்பினர் பெயர்	அவை	நிறைவேறிய நாள்
1	இஸ்லாமிய வகுப்பு வாரிய சட்ட முன்வரைவு 1952	சையத் முச்சமத் அகமத் காஷ்மீர்	மக்களவை	21.05.1954
2	இந்திய பதிவு (திருத்த)சட்ட முன்வரைவு 1955	எஸ்.சி.சமந்தா	மக்களவை	06.04.1956
3	நாடாளுமன்ற செயல்முறைகள் (வெளியிட்டு தடுப்பு) சட்ட முன்வரைவு 1956	பெரோஸ் காந்தி	மக்களவை	26.05.1956
4	குற்றச் செயல்முறை (திருத்த) சட்ட முன்வரைவு 1956	ரகுநாத் சிங்	மக்களவை	01.09.1956
5	பெண்கள் மற்றும் சிறார் நிறுவனங்கள் (உரிமம்) சட்ட முன்வரைவு 1954	காம்லேடு மத்தி ஷா	மக்களவை	30.12.1956
6	குற்றச் செயல்முறை (திருத்த) சட்ட முன்வரைவு 1964	சுமத்திர ஜோசிக்	மக்களவை	26.12.1964
7	நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊதியங்கள், சலுகைகள்(திருத்த) சட்ட முன்வரைவு	ரகுநாத் சிங்	மக்களவை	29.09.1964
8	இந்து திருமணம் (திருத்த) சட்ட முன்வரைவு 1968	திவான் சந்த் சர்மா	மக்களவை	20.12.1964
9	உச்ச நீதிமன்றம் (உயர்மட்ட குற்ற விசாரணை விரிவாக்கம்)சட்ட முன்வரைவு 1968	ஆனந்த் நாராயண் முல்லா	மக்களவை	09.08.1970
10	பண்டைய, வரலாற்று நினைவுச் சின்னங்கள் மற்றும் அகழ்வாய்வுத் பகுதிகள் மற்றும் மிச்சங்கள் (தேசிய முக்கியத்துவ பிரகடனம்) சட்ட முன்வரைவு 1954	டாக்டர் ரகுவீர் சிங்	மாநிலங்களவை	15.12.1956
11	இந்து திருமணம் (திருத்த) சட்ட முன்வரைவு 1956	டாக்டர் சீதா பர்மாணந்த்	மாநிலங்களவை	20.12.1956
12	அனாதை இல்லங்கள் மற்றும் இதர அறக்கட்டளை இல்லங்கள் (மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு) சட்ட முன்வரைவு 1960	கைலாஷ் பிகாரிலால்	மாநிலங்களவை	09.04.1960
13	கடல் சார் காப்பீடு சட்ட முன்வரைவு 1960	என்.பி.பர்கவா	மாநிலங்களவை	18.04.1963
14	இந்தியன் தண்டனைச் சட்டம் (திருத்தம்) சட்ட முன்வரைவு 1963	திவான். சமன்லால்	மாநிலங்களவை	07.09.1969

கடந்த மூன்று மக்களவைகளில் அறிமுகமான, விவாதிக்கப்பட்ட தனிநபர் முன்வரைவுகள்:

மக்களவை	அறிமுகமானவை	விவாதிக்கப்பட்டவை
13-வது	343	17
14-வது	328	14
15-வது	372	14

16வது மக்களவையில் 206 தனிநபர் முன்வரைவுகள் அறிமுகம் செய்யப்பட்டன. இவற்றில் 6 மட்டுமே விவாதத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.



மூன்றாம் பாலின நபர்கள் உரிமைகள் சட்ட முன்வரைவு 2014

உங்களுக்குத் தெரியுமா?

மூன்றாம் பாலின நபர்கள் உரிமைகள் சட்ட முன்வரைவு திருச்சி சிவா அவர்களால் கொண்டு வரப்பட்ட தனிநபர் சட்ட முன்வரைவு ஆகும். இந்தியாவில் மூன்றாம் பாலின மக்கள் சந்தித்து வரும் புறக்கணிப்புகளுக்கு முடிவுகட்ட இம்முன்வரைவு கோருகிறது.

12th_Political Science_Tamil_Unit_1.indd 19 04-06-2019 11:46:30

இந்த சட்ட முன்வரைவு 2015 ஏப்ரல் 24 அன்று மேலவையில் நிறைவேறியது. 2016 பிப்ரவரி 26 அன்று மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த சட்ட முன்வரைவு 45 ஆண்டுகளுக்குப் பின் மேலவையில் நிறைவேற்றப்பட்ட தனிநபர் சட்ட முன்வரைவு என்ற வரலாற்று முக்கியத்துவத்தையும் பெறுகிறது.

உறுப்பு 370

அரசமைப்பு உறுப்பு 370 என்பது ஜம்மு – காஷ்மீர் பகுதிக்கு சிறப்பு தன்னாட்சி தகுதி வழங்குவது ஆகும். இச்சட்டத்தின்படி இராணுவம், வெளியுறவு, தொலைத் தொடர்பு, நிதி ஆகிய துறைகள் தவிர இதர அனைத்து துறைகள் சார்ந்து மத்திய அரசு சட்டங்கள் இயற்றுவதற்கு மாநில அரசின் ஒப்புதல் அவசியமாகிறது.

இந்த மாநிலம் மற்றும் இதில் குடியிருக்கும் மக்கள் குடியுரிமை, சொத்துரிமை, அடிப்படை உரிமை ஆகிய உரிமைகளுக்கு இந்தியாவில் பிற குடிமக்களிலிருந்து வேறுபட்ட சிறப்பு சட்டத் தொகுப்புகளைக் கொண்டுள்ளனர். அரசமைப்பு உறுப்பு 360 இன் கீழ் ஒரு மாநிலத்தின் மீது நிதி நெருக்கடி நிலை பிரகடனம் செய்யும் மத்திய அரசின் அதிகாரம் இந்த மாநிலத்திற்கு செல்லாது. போர் மற்றும் வெளி ஆக்கிரமிப்பு ஆகிய சூழ்நிலைகளின் போது மட்டும் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்படுகிறது. எனவே, மத்திய அரசை மாநில அரசு கோரினால் அன்றி உள்நாட்டு குழப்பம் அல்லது பிற அபாயங்கள் போன்ற காரணங்களுக்காக இந்த மாநிலத்தின் மீது மத்திய அரசு நெருக்கடி நிலை பிரகடனம் செய்ய முடியாது.

வரலாறு சுருக்கமாக

அரசமைப்புச் சட்ட உறுப்பு 370 என்பது ஜம்மு – காஷ்மீர் பகுதிக்கு சிறப்பு தன்னாட்சி தகுதி வழங்குவது ஆகும்

- இச்சட்டத்தின்படி இராணுவம், வெளியுறவு, தொலைத் தொடர்பு, நிதி ஆகிய துறைகள் தவிர இதர அனைத்து துறைகள் சார்ந்து மத்திய அரசு சட்டங்கள் இயற்றுவதற்கு மாநில அரசின் ஒப்புதல் அவசியமாகிறது. பாகிஸ்தான் பிரிவினையைத் தொடர்ந்து இந்திய ஒன்றிய அரசின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் இணைப்பு தொடர்பாக மன்னர் ஹரிஷ் உடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப்போது ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு உரிமைகளும் தகுதிகளும் வழங்கப்படும் என்று உடன்படிக்கை ஏற்பட்டதன் அடிப்படையில் இந்த உறுப்பு உருவாக்கப்பட்டது.



- 1974இல் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அன்றைய ஜம்மு – காஷ்மீர் முதலமைச்சர் ஷேக் அப்துல்லா (ஹரிசிங்கால் நியமிக்கப்பட்டவர்.) இடையில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி இந்த ஏற்பாடு மேலும் உறுதிபடுத்தப்பட்டது. இந்திய தேசியக் கொடியுடன் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கென தனி கொடி அமைத்துக்கொள்ளவும் இரண்டு கொடிகளுக்கும் சம தகுதி வழங்கவும் 1952 டெல்லி உடன்படிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



ஷேக் அப்துல்லா பண்டிட் ஜவஹர்லால் நேருவுடன் (வலது).

- இதன் விளைவாக ஜம்மு – காஷ்மீர் மாநிலம் மட்டும் அந்த மாநிலத்துக்கே ஆன அரசமைப்பு மூலம் ஆளப்படுகிறது. இதற்கான தனி குடியுரிமைச் சட்டம், சொத்துரிமைச் சட்டம், அடிப்படை உரிமைகள் ஆகியன வகுக்கப்பட்டுள்ளன.
- ஜம்மு – காஷ்மீர் அரசமைப்பின் முதல் உறுப்பு ஜம்மு காஷ்மீர் மாநிலம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று கூறுகிறது. இதன்படியும் உறுப்பு 5ன் படியும் இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களுக்கான சட்டம் இயற்றும் அதிகாரவரம்பு கட்டுப்படுத்தப்படுகிறது; அது மாற்றத்தகாததாகவும் ஆகிறது.



- ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் இந்திய உச்ச நீதிமன்றம் தலையிட முடியாது. மூவர்ண தேசியக் கொடி மற்றும் இதர தேசிய சின்னங்கள் அவமதிப்பு ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் குற்றமாகக் கருதப்படாது.
- ஜம்மு – காஷ்மீர் மாநில மக்கள் இரட்டைக் குடியுரிமை அனுபவிக்கிறார்கள். அம்மாநில மக்கள் இதர மாநில மக்களுடன் மண உறவு கொள்ளும் போது அவர்களது ஜம்மு –காஷ்மீர் குடியுரிமை இரத்தாகிறது.
- காஷ்மீர் மாநிலச் சட்டமன்றத்தின் ஆயுட் காலம் ஆறு ஆண்டுகள் ஆகும்.
- கட்டாயக் கல்விச் சட்டம், தகவல் உரிமைச் சட்டம், கணக்கு தனிக்கை உள்ளிட்ட பெரும்பாலான இந்திய சட்டங்கள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் செல்லுபடியாகாது. 370 பிரிவின் கீழ் வெளிமாநிலத்தவர் எவரும் இங்கு சொத்து வாங்க முடியாது.

12th_Political Science_Tamil_Unit_1.indd 20 04-06-2019 11:46:30

- ஜம்மு – காஷ்மீர் பகுதிக்கு சிறப்புத் தகுதி வழங்கும் வகையில் அரசமைப்பில் இணைக்கும் படியான பொருத்தமான உறுப்புகளை முன்வரைவு செய்யும் பொருட்டு அன்றைய சட்ட அமைச்சர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கரை சந்தித்து ஆலோசிக்கும்படி காஷ்மீர் தலைவர் ஷேக் அப்துல்லாவை 1949ல் அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு கேட்டுக்கொண்டார்.
- அரசமைப்பு பகுதி XXI ன் கீழ் தற்காலிக மற்றும் இடை மாற்றம் வழங்குதல் என்னும் தலைப்பின் கீழ் அரசமைப்பு திருத்தப்பட்டு காஷ்மீருக்கு சிறப்பு தகுதி வழங்கும் உறுப்பு 370 சேர்க்கப்பட்டது.
- அரசமைப்பு உறுப்பு 370இன் கீழ் ஜம்மு – காஷ்மீர் அரசின் எல்லைகளை குறைக்கவோ விரிவாக்கம் செய்யவோ இந்திய நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது.

உறுப்பு 370

உங்களுக்குத் தெரியுமா?


- இந்திய அரசமைப்பின் முதன்மை வரைவாளர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் உறுப்பு 370இன் வரைவை எழுத மறுத்தார்.
- கோபால சுவாமி இந்த பிரிவை எழுதினார்

சங்கரலிங்கனார்




சங்கரலிங்கனார்

சங்கரலிங்கனார் காந்திய வாதியும் இந்திய விடுதலைக்காக போராடிய தமிழ் வீரரும் ஆவார். 1895இல் விருதுநகர் மாவட்டம் மண்மலைமேடு கிராமத்தைச் சேர்ந்த கருப்பசாமி வள்ளியம்மாளுக்கு மகனாக பிறந்தார். 1917இல் இந்திய தேசிய காங்கிரசில் இணைந்தார். இராஜாஜியின் மீது ஏற்பட்ட ஈர்ப்பால் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற சங்கரலிங்கனார் 1930இல் காந்தியுடன் தண்டி உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கு பெற்றார். மதராஸ் மாநிலத்திலிருந்து தெலுங்கு பேசும் மக்களைப் பிரித்து, சென்னையை தலைநகராக கொண்டு தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்று பொட்டி ஸ்ரீராமலு 1952இல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்.



ம.பொ.சிவஞானம்



ஜீவானந்தம்

இதைத் தொடர்ந்து பெயர் மாற்றும் பிரச்சனை எழுந்தது. இதைத் தொடர்ந்து 1956இல் மதராஸ் மாநிலத்தை தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்ய வேண்டும் எனக் கோரி சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் தொடங்கினார். பெயர் மாற்றம் உள்ளிட்ட 12 கோரிக்கைகளை வலியுறுத்தி 1956 ஜூலை 27 அன்று விருதுநகரில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். இந்த உண்ணாவிரதப் போராட்டம் 75 நாட்களைக் கடந்தது சங்கரலிங்கனார் உடல் நலிவுற்றதால் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடும் படி சி.என். அண்ணாதுரை, ம.பொ.சிவஞானம், ஜீவானந்தம் ஆகியோர் வேண்டுகோள் விடுத்தும் அவர் ஏற்க வில்லை. 1956 அக்டோபர் 13 அன்று உண்ணாவிரதப் போராட்டத்தின் 76ஆம் நாள் சங்கரலிங்கனார் உயிர் நீத்தார்.

12th_Political Science_Tamil_Unit_1.indd 21 04-06-2019 11:46:31

தமிழ்நாடு

உங்களுக்குத் தெரியுமா?

- மதராஸ் மாகாணத்தை தமிழகம் என பெயர் மாற்றக் கோரி தியாகி சங்கரலிங்கனார் 20.07.1956 முதல் 10.10.1956 வரை 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார்.
- மதராஸ் மாநில பெயர்மாற்றச் சட்டம் 1968 மூலம் மதராஸ் மாநிலம் தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- காந்திய வழியில் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்தவர்.

தேர்வுக்குழு

தேர்வுக்குழுவில் குறைந்த எண்ணிக்கையில் உறுப்பினர்களை குறிப்பிட்ட காரணத்திற்காக நியமிக்கப்பட்டிருப்பர். இந்த தேர்வுக்குழு முறை வெஸ்ட்மினிஸ்டர் நாடாளுமன்ற மக்களாட்சி முறையிலிருந்து பிறந்தது ஆகும். மாநிலங்களவை விதிகள் மற்றும் நடைமுறையின் உறுப்பு 125இன் கீழ் எந்தவொரு குறிப்பிட்ட சட்ட முன்வரைவையும் தேர்வுக்குழுவுக்கு அனுப்பும்படி எந்த ஒரு உறுப்பினரும் தீர்மானம் கொண்டு வர முடியும். தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அந்த சட்ட முன்வரைவு தேர்வு குழுவின் பரிசீலினைக்கு அனுப்பப்படும்.

முக்கிய கூட்டு கூட்டங்கள்

உங்களுக்குத் தெரியுமா?

- வரதட்சணை ஒழிப்புச் சட்டம் 1959-6 மற்றும் 9 மே 1961
- பயங்கரவாத தடுப்புச் சட்டம்-2002 மார்ச்

இவ்வாறு தீர்மானம் கொண்டு வருவதற்கு தேர்வுக் குழுவின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் குறைந்தபட்ச உறுப்பினர்களாக (Quorum-கோரம்) அவையில் இருப்பது அவசியம். இவ்வாறு முன்மொழியப்படும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு வெற்றி – தோல்வி இன்றி முடிந்தால் அவைக்குத் தலைமை ஏற்பவரின் முடிவே இறுதி முடிவாகும். சட்ட முன்வரைவில் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு அம்சம் குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் எனில் அதற்கென ஒரு துணைக் குழுவை தேர்வுக்குழு அமைத்துக்கொள்ளலாம். இந்த செயல்முறையில் ஏதேனும் கேள்விகள் எழுந்தால் அதனை மாநிலங்களவைத் தலைவர் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டும். அவரது முடிவே இறுதியானது.

ஒரு சட்ட முன்வரைவு ஒரு அவையில் நிறைவேற்றப்பட்டு மற்றொரு அவையால் நிராகரிக்கப்படும் போதும் அல்லது ஏதேனும் ஒரு ஆட்சேபனை எழுப்பப்படும் போது அல்லது ஆறு வாரத்திற்கும் அதிகமாக இழுபறி நிலை நீடிக்கும் போதும் குடியரசுத்தலைவர் ஈரவைகளின் கூட்டுக் கூட்டத்தை கூட்டித் தீர்வு காணலாம். அந்த முன்வரைவு அமர்ந்துள்ள ஈரவைகளின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மை வாக்குகளை பெற்றால் அந்த முன்வரைவு நிறைவேற்றப்படும். ஆனால் பண முன்வரைவு அல்லது அரசியல் அரசமைப்புத் திருத்தச்சட்டம் ஆகியவற்றின் போது இதுபோன்று கூட்டு கூட்டத்தினை கூட்டி சட்டமாக்க இந்திய அரசமைப்பு அனுமதிக்கவில்லை.

இந்தியாவின் முதல் பிரதமர்

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"மக்களவை, மாநிலங்களவை ஈரவைகளும் இணைந்தது இந்திய நாடாளுமன்றம் ஆகும். இரண்டில் ஒரு அவையில்லாமல் நாடாளுமன்றம் இயங்க முடியாது. அரசமைப்பு ஒவ்வொரு அவையும் தமக்கான முழு அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. நமது அரசமைப்பின் வெற்றிகரமான பணி, அதன் நெருக்கமான மக்களாட்சி அமைப்பான நாடாளுமன்றத்தின் ஈரவைகளுக்கிடையே நெருக்கமான கூட்டுறவைக் கோருகிறது."

– பண்டித ஜவஹர்லால் நேரு.

12th_Political Science_Tamil_Unit_1.indd 22 04-06-2019 11:46:31

அருஞ்சொற்பொருள்



❖ **சட்டம்:** ஒரு சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தில் ஈரவைகளிலும் ஏற்கப்பட்டு குடியரசுத்தலைவர் ஒப்புதல் பெறும் போது சட்டம் எனப்படுகிறது.

❖ **சட்ட முன்வரைவு:** நாடாளுமன்றத்தில் ஈரவைகளின் ஏற்பு கோரி முன்மொழியப்படும் சட்ட வரைவு சட்ட முன்வரைவு எனப்படும்.

❖ **உட்பிரிவு:** ஒரு சட்ட முன்வரைவில் வரிசை எண்ணிடப்பட்ட பத்தி.

❖ **தீர்மானம்:** நாடாளுமன்றத்தின் தீர்வு, நடவடிக்கை, கருத்து கோரி நாடாளுமன்றத்தில் எந்தவொரு உறுப்பினராலும் முன்வைக்கப்படுவது தீர்மானம் எனப்படும்

❖ **பதவி பிராமணம்:** புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் அமரும்முன் இந்திய அரசமைப்பிற்கும் நாட்டின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டிற்கும் தமது உறுதிப்பாட்டினைத் தெரிவித்து கடவுள் பெயராலோ, பகுத்தறிவின் பெயராலோ உறுதி மொழி ஏற்றுக் கொள்வதாகும்.

❖ **கேள்வி நேரம்:** ஒவ்வொரு நாளும் அவை தொடங்கியதும் முதல் ஒரு மணி நேரம் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

❖ **கோரம்:** நாடாளுமன்ற அவை அல்லது பல்வேறு பணிகளுக்காக உருவாக்கப்படும் குழுக்களின் கூட்டத்தொடர் குறைந்தபட்சம் இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை கோரம் எனப்படுகிறது. அவையின் மொத்த உறுப்பினர்களில் பத்தில் ஒரு பங்கு உறுப்பினர்களின் எண்ணிக்கை கோரம் என வகுக்கப்பட்டுள்ளது.

❖ **கூட்டத்தொடர்:** ஆண்டுக்கு மூன்று முறை நாடாளுமன்றம் குடியரசுத்தலைவரால் கூட்டப்படுகிறது. நாடாளுமன்றம் செயல்புரியும் குறிப்பிட்ட கூட்டத்தின் கால அளவு கூட்டத்தொடர் எனப்படும்.

❖ **நிலைக்குழு:** பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் அல்லது அவ்வப்போது அவையால் தேர்ந்தெடுக்கப்படும் அல்லது அவைத் தலைவரால் நியமிக்கப்படும் குழு நிலைக்குழு எனப்படும்.

❖ **அரசு:** மத்திய அரசாங்கம், இந்திய நாடாளுமன்றம், மாநில அரசாங்கங்கள், மாநிலச் சட்டமன்றங்கள், இந்திய எல்லைக்குள் வரும் அனைத்து உள்ளூர் அதிகார அமைப்புகள், இந்திய அரசாங்கத்தின் கட்டுபாட்டின் கீழ் இயங்கும் அமைப்புகள் இவை அனைத்தையும் உள்ளடக்கியது அரசு ஆகும்.

12th_Political Science_Tamil_Unit_1.indd 23 04-06-2019 11:46:31

I. சரியான பதிலை தேர்வு செய்யவும்

P427YR

1. இந்திய அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுத்தலைவர்

அ) இராஜேந்திர பிரசாத்
ஆ) சி.இராஜாஜி
இ) தேச் பகதூர் சப்புரு
ஈ) பி.ஆர். அம்பேத்கர்

2. இந்தியாவைப் பொறுத்த வரை நாடாளுமன்ற அரசாட்சியில் கீழ்க்காணும் கோட்பாடுகளில் எது பின்பற்றப்படுகிறது?

1) அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவார்
2) நாடாளுமன்றத்தின் நம்பிக்கை நீடிக்கும் வரை அமைச்சர்கள் பதவி வகிப்பர்.
3) அமைச்சரவை அரசின் தலைவரால் தலைமை தாங்கப்படுகிறது.
கீழ்க்கண்ட குறிகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு

அ) 1,2 மட்டும்
ஆ) 3 மட்டும்
இ) 2, 3 மட்டும்
ஈ) 1,2,3

3. 103-வது அரசமைப்புத் திருத்தச்சட்டம் எது பற்றி கூறுகிறது?

அ) சரக்கு மற்றும் சேவைவரி
ஆ) பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு 10 % இடஒதுக்கீடு
இ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையம்
ஈ) வாக்களிக்கும் வயது 21-லிருந்து 18 ஆக குறைப்பு

4. அரசமைப்பை இறுதிப்படுத்த அரசமைப்பு நிர்ணயசபை எவ்வளவு காலம் எடுத்துக்கொண்டது?

அ) 1949 சுமார் ஆறு மாதங்கள்
ஆ) 1947 ஆகஸ்ட் 15 முதல் சுமார் இரண்டு ஆண்டுகள்
இ) 1948 நவம்பர் 26 முதல் சரியாக ஒரு ஆண்டு
ஈ) 1946 டிசம்பர் 9 முதல் சுமார் மூன்று ஆண்டுகள்.

5. மதராஸ் மாநிலம் எப்போது தமிழ்நாடு என பெயர் மாற்றம் பெற்றது?

அ) 1968
ஆ)1971
இ) 1969
ஈ) 1970

6. இந்தியா ஒரு இறையாண்மை, சமதர்மம், மதசார்பின்மை, மக்களாட்சி, குடியரசு நாடு என்று கூறும் அரசமைப்பின் பாகம் ஏது?

அ) அடிப்படை உரிமை
ஆ) ஆற்றுக்கொள்கை வழிகாட்டுதல்
இ) முகப்புரை
ஈ) அடிப்படைக் கடமைகள்

12th_Political Science_Tamil_Unit_1.indd 24 04-06-2019 11:46:31

7. முகப்புரையில் இடம் பெறும் 'நாம்'என்னும் சொல் எதைக் குறிக்கிறது

அ) இந்திய அரசு
ஆ) உச்ச நீதிமன்றம்
இ) நாடாளுமன்றம்
ஈ) இந்திய மக்கள்

8. கீழ்க்காணும் சொற்கள் முகப்புரையில் எந்த வரிசையில் இடம்பெற்றுள்ளன?

1. மக்களாட்சி
2. சமதர்மம்
3. இறையாண்மை
4. மதசார்பின்மை
5. குடியரசு

அ) 3,2,4,1,5
ஆ) 2,3,4,1,5
இ) 3,2,1,4,5
ஈ) 3,1,2,5,4

9. மாநிலங்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை

அ) 250
ஆ) 235
இ) 240
ஈ) 245

10. அரசமைப்பில் தரப்படாத நிறுவனம் எது?

அ) நிதிஆணையம்
ஆ) திட்ட ஆணையம்
இ) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம்
ஈ) தேர்தல் ஆணையம்

11. இந்திய அரசமைப்பு நிர்ணயச்சபை நடைபெற்ற காலம்

அ) 9 ஆகஸ்ட் 1946 – 24 ஜனவரி 1950
ஆ) 10 டிசம்பர் 1945–10 மார்ச் 1950
இ) 9 டிசம்பர் 1946–24 ஜனவரி 1950
ஈ) 15 ஆகஸ்ட் 1945– 10 மார்ச் 1950

12. மேலவை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) இந்தியக் குழு
ஆ) மாநிலங்கள் குழு
இ) மாநிலங்களின் ஒன்றியம்
ஈ) மாநிலங்களவை

13. இந்திய அரசமைப்பு உறுப்பு ----------ன் கீழ் ஆங்கிலோ இந்திய சமுதாயத்தைச் சேர்ந்த …… நியமன உறுப்பினராக ஆளுநர் நியமிக்கிறார்.

அ) உறுப்பு 333 – ஒரு உறுப்பினர்கள்
ஆ) உறுப்பு 283 – இரு உறுப்பினர்கள்
இ) உறுப்பு 383 – ஒரு உறுப்பினர்கள்
ஈ) உறுப்பு 343 – இரு உறுப்பினர்கள்

12th_Political Science_Tamil_Unit_1.indd 25 04-06-2019 11:46:31

14. தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை

அ) 239
ஆ) 234
இ) 250
ஈ) 350

15. கூற்று: 42 வது அரசமைப்புத் திருத்தச்சட்டம் ஒரு 'குறு அரசமைப்பு' என்று குறிப்பிடப்படுகிறது

காரணம்: அதிகமான விதிகளை கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட திருத்தச்சட்டம்.

அ) கூற்றும், காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவை களாகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

16. கூற்று: இந்திய அரசமைப்பு மிக நெகிழ்வுத் தன்மை கொண்டது. .

காரணம்: இதுவரை அரசமைப்பு 100 முறைக்கு மேல் திருத்தப்பட்டுள்ளது.

அ) கூற்றும், காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவை களாகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி

1. உறுப்பு 40 எதை பற்றியது?

2. தேர்வுக்குழு குறித்து சுருக்கமான குறிப்புரை வழங்குக.

3. சங்கரலிங்கனார் குறித்து குறிப்புரை வழங்குக.

4. அரசமைப்பில் கூறப்படாத அமைப்பு குறித்து சுருக்கமான குறிப்புரை வழங்குதல்.

6. மாநிலச் சட்டமன்றம் குறித்து விவாதி.

7. பொது கணக்குக்குழு குறித்து விளக்கு.

III. கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சுருக்கமாக விடையளி

1. அரசமைப்புச் நிர்னையச்சபை குறித்து விவாதி

2. அரசமைப்பு திருத்தச்சட்ட முறைகள் எவை?

3. அரசமைப்பின் முக்கியத்துவம், பொருள், செயல்பாடுகள் ஆகியனவற்றை விளக்கு.

4. இந்திய அரசமைப்பில் பஞ்சாயத்து ராஜ் இணைப்பு தொடர்பான காந்தி, அம்பேத்கர் இடையே பார்வை வேறுபாடுகளை கூறு.

5. இந்திய அரசமைப்பு 370 சிறப்பு கூறுகள் குறித்து விளக்கம் அளி

12th_Political Science_Tamil_Unit_1.indd 26 04-06-2019 11:46:31

அலகு 2

சட்டமன்றம்



கற்றலின் நோக்கங்கள்

- மக்களாட்சியின் முக்கிய அம்சங்களின் செயல்பாட்டை பற்றி மாணவர்கள் தெரிந்துகொள்ளல்.
- மாணவர்கள், சமூகம் மற்றும் அரசியலில் நடக்கும் தினசரி நிகழ்வுகளில் சட்டமன்றத்தின் பங்கினை அறிந்துகொள்ளல்.
- அரசின் அரசியல் கட்டமைப்பு மற்றும் அரசமைப்பு நிறுவனங்களின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்ய மாணவர்கள் கற்றுக்கொள்ளல்.
- தேர்தல் மற்றும் தேர்தல் நடைமுறைகளை கூர்ந்து கவனிக்க கற்றுக்கொள்ளல். அதன் மூலம் பொது நிறுவனங்களை பற்றிய அறிவை மேம்படுத்திக்கொள்ளல்.
- இளைஞர் நாடாளுமன்றத்தை தங்களுக்குள் நடத்துவதன் மூலம் மாணவர்கள், மத்திய மற்றும் மாநிலச் சட்டமன்றங்களுக்கு இடையில் உள்ள வித்தியாசங்களை வேறுபடுத்தி அறியலாம்.

அறிமுகம்

சட்டமன்றமானது பிரதிநிதித்துவ மக்களாட்சியின் செயல்பாட்டிற்கு ஒரு மிக முக்கியமான நிறுவனமாகிறது. சட்டமன்றத்தின் அடிப்படை நோக்கமானது, அதன் பிரதிநிதிகளை பதிலளிக்க கடமைப்பட்டவர்களாகவும், நாட்டிலுள்ள மக்களின் நலன்களுக்கு பொறுப்புடையவர்களாகச் செய்வதே நோக்கம் ஆகும். நாட்டின் அனைத்து தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு, அந்நாட்டின் சட்டங்களை இயற்றுதல் அல்லது மாற்றுதல் ஆகியவற்றை செய்யும் ஓர் உயர்ந்த சட்டம் இயற்றும் அமைப்பே, சட்டமன்றம் என பொதுவாக குறிப்பிடப்படுகின்றது. இந்தியா முழுமைக்குமான சட்டங்களை இயற்றும் சட்டமன்றம் நாடாளுமன்றம் அல்லது தேசிய சட்டமன்றம் என்று குறிப்பிடப்படுகின்றது. மாநிலங்களிலும் ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள சட்டமன்றங்கள் சட்டமன்ற பேரவை என்று அழைக்கப்படுகின்றன.

நாடாளுமன்றம் ஈரவைகளை கொண்டுள்ளது. அவை மக்களவை மற்றும் மாநிலங்களவை. இது நாடாளுமன்றத்தின் ஈரவை முறை எனப்படும். இது பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறை மற்றும் அமெரிக்காவின் ஈரவை முறையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இதேபோல் சில மாநிலங்களில் சட்டமன்ற பேரவை (சட்டப்பேரவை) மற்றும் சட்டச்சபை என ஈரவை முறையே உள்ளது. ஆனால் பல மாநிலங்களில் சட்டமேலவை இன்றி ஒற்றை அவையாக சட்ட மன்ற பேரவையே உள்ளது. இந்தியாவில் நாடாளுமன்றம் அதன் சட்டம் இயற்றும் பணி மற்றும் அதனை செயல்படுத்துகின்ற பொறுப்பினை 29 மாநிலங்களுடனும், ஏழு ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுடனும் பகிர்ந்து கொள்கிறது. ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் மத்திய அரசால் நேரடியாக ஆட்சி செய்யப்படுகின்றன. (தில்லி மற்றும் புதுச்சேரி தவிர)

12th_Political Science_Tamil_Unit_2.indd 29 04-06-2019 10:49:08



2.1 ஒன்றியச் சட்டமன்றம்: நாடாளுமன்றம்

நாடாளுமன்றம், ஒன்றியச் சட்டமன்றம் அல்லது தேசிய சட்டமன்றம் என்று அறியப்படுகிறது. அதுவே முடிவுகளை எடுக்கக்கூடிய உச்ச அமைப்பு மற்றும் மக்களாட்சியின் அடையாளம். நாட்டினதும் அதன் மக்களின் நலன் சார்ந்த பிரச்சனைகள் மீதான விவாதத்திற்கும், அரசியல் அமைப்பில் சட்டங்களை இயற்றுவதற்கும், திருத்துவதற்கும், பதிலளிக்க கடமைபட்ட மிகவும் சக்தி வாய்ந்த தளமாக நாடாளுமன்றமே உள்ளது.


சட்ட முன் வரைவுகளுக்கான ஒப்புதல் அளித்தல், பல்வேறு தீர்மானங்கள் மற்றும் நிகழ்வுகள் குறித்து விவாதம் நடத்துதல், போன்றவற்றிக்காக திட்டமிடப்பட்ட ஒரு கால வரையறையில் நாடாளுமன்றம் கூடுவதைத்தான் ஒரு கூட்டத்தொடர் என்று அழைக்கிறோம். ஒரு வருடத்தில் நாடாளுமன்றம் மூன்று கூட்டத் தொடர்களை நடத்துகிறது:

1. நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடர் (பிப்ரவரி–மே)
2. மழைக்காலக் கூட்டத்தொடர் (ஜூலை–ஆகஸ்ட்)
3. குளிர்காலக் கூட்டத்தொடர் (நவம்பர்–டிசம்பர்)

செயல்பாடு – கருத்து சுதந்திரத்தின் பொருள் விளக்கம்

மாநிலங்களவையின் பெண் உறுப்பினர்கள், பெண்களுக்கான இட ஒதுக்கீடு சட்ட முன்வரைவை மக்களவையில் நிறைவேற்ற வலியுறுத்தினர். பெண்களுக்கு, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் 33% இட ஒதுக்கீட்டுக்கு வகை செய்யும் இந்த சட்ட முன்வரைவு, 2010-ம் ஆண்டு மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இன்று வரை அது மக்களவையில் நிறைவேற்றப்படாமலே உள்ளது.

இந்திய அரசமைப்புச் (108-வது திருத்தச்சட்டம்) சட்ட முன்வரைவு, பொதுவாக பெண்கள் இட ஒதுக்கீட்டு முன்வரைவு என்றழைக்கப்படும் இந்த சட்ட முன்வரைவு, மக்களவையில் நிறைவேற்றினால் மட்டுமே சட்டமாகும்.



நன்றி : தி இந்து 13.3.2010

12th_Political Science_Tamil_Unit_2.indd 30 04-06-2019 10:49:09

கீழ்க்கண்ட தலைப்புகளில் வகுப்பில் விவாதிக்கவும்

அ) பெண்கள் இட ஒதுக்கீடு சட்ட முன்வரைவு

ஆ) 33% இட ஒதுக்கீடு

இ) மக்களவையில் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம்

அதற்கு இரு முக்கியமான அதிகாரங்கள் மற்றும் பணிகள் உள்ளன. அவை சட்ட அதிகாரம் மற்றும் நிதி அதிகாரம் ஆகியவைகளாகும். சட்ட அதிகாரங்கள் சட்டம் இயற்றுவதற்கானவை. நிதி அதிகாரங்கள் நிதிநிலை அறிக்கை என்று அறியப்படுகிற நிதி சம்பந்தப்பட்ட நிதிநிலை அறிக்கை கணக்குகளை தயார் செய்வதற்கானது. மேலும் இந்திய குடியரசுத்தலைவர் மற்றும் குடியரசுத் துணைத்தலைவர் ஆகியோரை தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் நடத்துவதற்கான தேர்வுச் செய்யும் பணிகளும் நாடாளுமன்றத்துக்கு இருக்கின்றன.


குடியரசுத்தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோர் மீதான பதவிநீக்க தீர்மானத்தை விவாதிக்கவும், நிறைவேற்றி நீக்கம் செய்யவும் நாடாளுமன்றத்துக்கு உள்ளது. அவ்வாறு பதவி நீக்கம் செய்யப்படும் நடைமுறை "பழிச்சாட்டுதல்" நடைமுறை என்று அழைக்கப்படும். நாடாளுமன்றத்தை கூட்டுமாறு அழைப்பது குடியரசுத்தலைவரின் கடமை, அது வருடத்திற்கு இரண்டு கூட்டத்தொடர்களுக்கு குறையாமல் கூட வேண்டும். ஒவ்வொரு வருடமும், நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடரின் தொடக்கத்தில் குடியரசுத்தலைவர் அவரது சிறப்புரையை நிகழ்த்துவார். அதில் எதிர்காலத்தில் அரசு எடுக்கப்போகிற புதிய கொள்கைகள், திட்டங்கள் மற்றும் புது முயற்சிகளுக்கான நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆகியவை இருக்கும். இந்திய நாடாளுமன்றத்துக்கு சட்டங்கள் இயற்றுவது, அதன் நிர்வாகத்தை மேற்பார்வையிடுவது, நிதிநிலை அறிக்கைத் திட்டத்தை நிறைவேற்றுவது, பொதுமக்களின் மனக்குறைகளை அவர்களின் பிரதிநிதிகள் வழியே வெளிப்படுத்துவது, தேசியக் கொள்கைகள் மற்றும் நாட்டின் பிரச்சனைகள் குறித்து விவாதிப்பது போன்ற பணிகளும் உள்ளது. அமைச்சர்கள், தனித்தனியாகவும் கூட்டாகவும் மற்றும் மக்களவையால் நீக்க கூடியவர்கள் பொறுப்புடையவர்கள்.

மக்களவையின் செயல்பாடுகள்

நாடாளுமன்றம் ஈரவைகளைக் கொண்டது. ஈரவைகளும் ஒரே மாதிரியான மதிப்பீடுகளையும் பொறுப்புகளையும் தன்னகத்தே கொண்டவை. இருப்பினும், நிதிச் செலவு ஒப்புதல் பெறுவது போன்ற சில விதிவிலக்குகள் உள்ளன. இவற்றில் முதலாவது மக்களவை, தங்களை வாக்காளர்களாக பதிவு செய்து கொண்ட, நாடெங்கிலுமுள்ள 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர்களால், நாட்டின் 543 நாடாளுமன்றத் தொகுதிகளிலிருந்து, நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 543 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டது மக்களவை ஆகும். மக்களவையில் ஆங்கிலோ-இந்திய சமூகத்திலிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் நியமன உறுப்பினர்களாக இருப்பார்கள்.

உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை: மக்களவை/மாநிலங்களவை கூட்டத்தொடர்களை நடத்துவதற்கு மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் பத்தில் ஒரு பங்கு எண்ணிக்கை இருக்க வேண்டும்.

12th_Political Science_Tamil_Unit_2.indd 31 04-06-2019 10:49:09



மக்களவை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 545 நாடாளுமன்றத்தில் அரசின் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கும் தீர்மானத்தில் நியமன உறுப்பினர்கள் முடிவெடுக்க முடியாது. மக்களின் பொதுப் பிரச்சினைகள் தொடர்பான விவாதங்கள், மக்களின் சமூக பொருளாதார தேவைகள், மற்றும் கொள்கை முடிவுகள் பற்றி கலந்துரையாட, விவாதிக்க, அமைந்த ஒரு மிக உயரிய மன்றம் தான் மக்களவை.

இரு அவைகளை சார்ந்த உறுப்பினர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் என்றே மக்கள் பொதுவாக அழைப்பர். மாநிலத்தின் ஆறு சட்டமன்ற தொகுதிகள் அடங்கிய ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலிருந்தும் மக்களால் தேர்தல்கள் மூலம் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களவையில் இருப்பர். மக்களவையின் ஆயுட்காலம் ஐந்து வருடங்களாகும்.

சபாநாயகரின் பங்கு மற்றும் பொறுப்புகள்

மக்களவையை தலைமை தாங்கி நடத்துபவர் சபாநாயகர் ஆவார். அவர் மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராவார். சபையை வழிநடத்துவது, கலந்துரையாடல் மற்றும் விவாதங்களை நடத்த உதவுவது, சபை உறுப்பினர்களின் நடத்தை குறித்த கேள்விகளுக்கு பதில்களை பெறுவது மற்றும் அவர்களின் சலுகைகள் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பது ஆகியவை சபாநாயகரின் கடமை ஆகும். நாடாளுமன்ற தலைமைச்செயலகத்தின் நிர்வாகத் தலைவர் மக்களவை சபாநாயகர் ஆவார்.

உறுப்பினர்கள் பொருத்தமான நடைமுறைகளைக் கடைப்பிடிக்கிறார்களா என்பதை உறுதிசெய்வது, உறுப்பினர்களை கேள்விகள் எழுப்புவதற்கு அனுமதிப்பது, அவர்கள் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவது, மற்றும் ஆட்சேபனைக்குரிய குறிப்புக்களை பதிவேட்டிலிருந்து நீக்குவது மற்றும் குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிவது ஆகியவை சபாநாயகரின் கடமையாகும். அவையின் விதிமுறைகள் மற்றும் விதிகளை உதாசீனப்படுத்தும் அல்லது மீறும் உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு.

12th_Political Science_Tamil_Unit_2.indd 32 04-06-2019 10:49:09

ஒரு திருத்தச்சட்டம் முன்மொழிவதற்கு சபாநாயகரின் அனுமதி பெறப்படவேண்டும். அந்த திருத்தச்சட்டம் முன்வரைவை அனுமதிப்பதா இல்லையா என்பதை சபாநாயகர்தான் தீர்மானிப்பார். மன்றத்தின் உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் கலந்தாய்வுக் குழு, சிறப்புக் குழு, ஆலோசனைக் குழு போன்ற பல்வேறு குழுக்கள் மற்றும் அவற்றின் உறுப்பினர்கள் ஆகியோரின் உரிமைகளின் பாதுகாவலராக சபாநாயகர் செயல்படுவார். சிறப்புரிமை குறித்த எந்த விளக்கமும் வேண்டி ஆய்வு செய்யவும், விசாரணை நடத்தவும் மற்றும் அறிக்கை அளிக்கவும் உரிமைக்குழுவுக்கு பரிந்துரைப்பது சபாநாயகரின் மற்றொரு முக்கியமான அதிகாரமாகும். உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகள், அளிக்கும் பதில்கள், விளக்கங்கள், மற்றும் அறிக்கைகள் அனைத்தும் சபாநாயகரை நோக்கியே இருக்க வேண்டும்.


ஜவஹர்லால் நேரு

இந்தியாவின் தலைமைச் சிற்பிகளில் ஒருவரும் அதன் மக்களாட்சி அரசமைப்புத் தத்துவத்தின் உந்து சக்தியாக திகழ்ந்தவர் ஜவஹர்லால் நேரு, இந்திய சபாநாயகரின் அலுவலகத்தை குறித்து ஒரு பொருத்தமான சூழ்நிலையில் இவ்வாறு கூறுகிறார், "சபாநாயகர் மன்றத்தின் பிரதிநிதியாக திகழ்கிறார். அவர்/அவள் இந்த மன்றத்தின் மாண்பு மற்றும் அதன் சுதந்திரத்தின் பிரதிநிதியாக விளங்குகிறார். இந்த மன்றம், நாட்டின் சின்னமாக விளங்குவதால் ஒரு குறிப்பிட்ட வகையில் சபாநாயகர் இந்த நாட்டின் சுதந்திரம் மற்றும் விடுதலையின் சின்னமாக திகழ்கிறார். ஆகவே, அது ஒரு மேன்மைதாங்கிய சுதந்திரமான பதவியாக இருக்க வேண்டும். அந்தப்பதவி எப்போதும் மிகத்திறமை வாய்ந்த மற்றும் பாரபட்சமற்ற ஒருவரால் வகிக்கப்படவேண்டும்."

அவை ஒழுங்குப் பிரச்சினை குறித்த கேள்விக்கு சபாநாயகரே இறுதி முடிவெடுப்பார். அரசமைப்பின்படி சபாநாயகர் சிறப்பு அந்தஸ்தை பெற்றுள்ளார். அதன் மூலம் நிதி முன்வரைவு என்று சான்றளிக்கும் அதிகாரம் பெற்றவர். சிறப்பு நிகழ்வுகள், அல்லது சில சட்ட நடவடிக்கைகளில் ஈரவைகளுக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்படும் சமயங்களில் நாடாளுமன்றத்தின் கூட்டு கூட்டுத்தொடருக்கு மக்களவையின் சபாநாயகர் தலைமை தாங்குவார். மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவருக்கு அங்கீகாரம் அளிப்பது குறித்து சபாநாயகரே முடிவு செய்வார். அரசமைப்பு 52-வது திருத்தச்சட்டத்தின் படி ஒரு உறுப்பினரை கட்சித்தாவலின் அடிப்படையில் தகுதியிழப்பு செய்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அவருக்கு உள்ளது. சபாநாயகர் நாடாளுமன்றத்தின் ஒரு உறுப்பினராக இருந்தாலும் கூட நடுநிலை வகித்து மன்றத்தில் வாக்கு செலுத்தமாட்டார். இருப்பினும், விதிவிலக்காக எந்த முடிவையும் எட்டாது இருபுறமும் சரிசமமாக இருக்கும் சில அரிய சந்தர்ப்பங்களில் தனது வாக்கை செலுத்துவார். இது முடிவு செய்யும் வாக்கு (casting vote) எனப்படும்

செயல்பாடு


கருத்துச்சித்திரத்தை உற்று நோக்கவும் – சூழலை கண்டறியவும்

இந்த கருத்துச்சித்திரம் எதைப் பற்றியது என்பதை உங்களால் விளக்க முடியுமா?



நன்றி: தி இந்து 18, 2004

12th_Political Science_Tamil_Unit_2.indd 33 04-06-2019 10:49:10



மாநிலங்களவை

மாநிலங்களவை என்று அழைக்கப்படுவது, அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலிருந்து வரும் 238 உறுப்பினர்களையும் மற்றும் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட 12 நியமன உறுப்பினர்களையும் சேர்த்து மொத்தம் 250 உறுப்பினர்களைக் கொண்டது. மாநிலங்களவை அல்லது மேலவை இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டாவது ஆட்சி மன்றம் என்று அழைக்கப்படுகிறது.

அமெரிக்காவிலுள்ள ஆட்சிமன்றக் குழுவைப்போல மாநிலங்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாக்கும் ஒரு அமைப்பு மாநிலங்களவை ஆகும். இது 1952 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் தேதி உருவாக்கப்பட்டது. மாநிலங்களவை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் தவிர, இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமூக சேவை போன்ற துறைகளிலிருந்து புகழ் பெற்ற நபர்களை உறுப்பினர்களாக இந்தியக்குடியரசுத்தலைவர் நியமிப்பார். மக்களவையைப் போல இல்லாமல் மாநிலங்களவை கலைக்கப்படாது, ஆனால் ஒவ்வொரு இரண்டு வருடத்திற்கும் அதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் தங்களது பதவிகாலத்தை நிறைவு செய்வார்கள். ஒரு உறுப்பினரின் பதவி காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். மாநிலங்களவை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்களால், மாற்றத்தக்க ஒற்றை வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மாநிலங்களவையின் செயல்பாடுகள்

குடியரசுத் துணைத்தலைவர் மாநிலங்களவையின் அலுவல் வழி அவைத்தலைவராக இருப்பார். அவைத்தலைவர் மாநிலங்களவையின் நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கி முறைப்படுத்துவார். பணம் / நிதி சம்பந்தமான முன்வரைவுகளைத் தவிர்த்து, ஏனைய முன்வரைவுகள் அனைத்தும்

12th_Political Science_Tamil_Unit_2.indd 34 04-06-2019 10:49:10

மாநிலங்களவையில் விவாதத்துக்கு, கேள்விகள் கேட்கப்படுவதற்கு, முன்வரைவு மற்றும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக செயல்பாட்டு நடைமுறைகள் விதிகளின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டு நடைபெறும். மாநிலங்களவையின் செயல்பாடுகளை விரிவாக வகைப்படுத்த வேண்டுமென்றால் அவை சட்டம் இயற்றுதல், நிதியியல், விவாதத்துக்குரியவை மற்றும் கூட்டாட்சி தொடர்புடையவை ஆகும். மக்களவையைப் போலவே சட்டம் இயற்றுதல்தான் மாநிலங்களவையின் மிக முக்கியமான பணிகளில் ஒன்று. இதில் மக்களவைக்கு இணையான அதிகாரத்தை மாநிலங்களவை கொண்டுள்ளது.

யார் மாநிலங்களவை உறுப்பினராகலாம்?

- இந்திய நாட்டின் குடிமகனாக இருக்கவேண்டும்.
- 30 வயதுக்குட்பட்டவராக இருக்கக்கூடாது.
- மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951-இன் கீழ் மாநிலங்களவைவுக்கு தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் ஒரு நபர் அந்த மாநிலத்தின் நாடாளுமன்ற தொகுதியில் ஒரு வாக்காளராக இருக்கவேண்டும்.
- மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் மூன்றாவது பிரிவினை மக்கள் பிரதிநிதித்துவ (திருத்த)சட்டம், 2003 திருத்தியது.

இதன் மூலம் மாநிலங்களவைக்கு போட்டியிடும் ஒருவர் எந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றாரோ, அந்த மாநிலத்தில் வசிப்பவராக இருக்கவேண்டும் என்ற நிபந்தனை விலக்கிக்கொள்ளப்பட்டது.

- அவன்/அவள் இந்தியாவின் எந்த பகுதியிலிருந்தும் ஒரு நாடாளுமன்ற தொகுதியின் வாக்காளராக இருக்க வேண்டும். மாநிலங்களவை உறுப்பினர் பதவி வெளிப்படையான ஓட்டெடுப்பின் மூலம் நிரப்பப்பட வேண்டும் என்றும் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

நன்றி : https://rajyasabha.nic.in/ rsnew/ practiceprocedure/book1.asp

ஐக்கிய அமெரிக்க நாட்டில் மாநிலக் குழுவின் உறுப்பினர்கள் சென‌ட்டர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அங்கு மாநிலத்தின் பரப்பளவு மற்றும் மக்கள்தொகை ஆகியவற்றை பொருட்படுத்தாது ஒவ்வொரு மாநிலத்திற்கும் சமமான அளவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது. ஆனால் இந்தியாவில் மாநிலங்களவையில் பிரதிநிதித்துவம் அந்தந்த மாநிலங்களின் மக்கள்தொகை அடிப்படையில் அமைந்துள்ளது.

உதாரணமாக, மிக அதிக மக்கள்தொகையைக் கொண்ட உத்திரப்பிரதேச மாநிலம் மாநிலங்களவைக்கு 31 உறுப்பினர்களை தேர்வு செய்கிறது. அதே சமயம், மிகக்குறைந்த மக்கள்தொகையைக் கொண்ட சிக்கிம் மாநிலம் மாநிலங்களவைக்கு ஒரு உறுப்பினரைத்தான் தேர்ந்தெடுக்கிறது. மாநிலங்களவைக்கு தமிழ்நாடு 18 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அரசமைப்பின் நான்காவது பட்டியலில் இடம்பெற்றிருக்கிறது. மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். அதன் பின்னர் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். நாடாளுமன்றத்தின் நிரந்தரஅவை என்று மாநிலங்களவை அழைக்கப்படுகிறது. அது எப்போதும் முழுமையாக கலைக்கப்படுவதில்லை. மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சில முக்கியமான சிறப்புரிமைகள் மற்றும் சட்ட விலக்களிப்புகள் பின்வருமாறு:

12th_Political Science_Tamil_Unit_2.indd 35 04-06-2019 10:49:10

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அதிகாரங்களும் சிறப்புரிமைகளும்

1. நாடாளுமன்றத்தில் பேச்சுரிமை மற்றும் நாடாளுமன்றத்தில் அல்லது எந்த ஒரு குழுவிலும் அவர் தெரிவித்த கருத்துக்கள் அல்லது அளித்த வாக்குகள் குறித்து எந்த நீதிமன்றத்திலும் சட்ட நடவடிக்கைகள் தொடருவதற்கு எதிரான பாதுகாப்பு.
2. ஈரவைகளிலுமிருந்து அதிகாரபூர்வமாக வெளியிடப்படும் எந்த ஒரு அறிக்கை, கட்டுரை, வாக்குகள் அல்லது நடவடிக்கைகளை பிரசுரிப்பதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எந்த நீதிமன்றத்திலும் தொடருவதற்கு எதிரான பாதுகாப்பு.
3. நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றி விசாரணை நடத்துவதற்கு நீதி மன்றத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
4. ஈரவைகளில் எந்த ஒரு அவை நடவடிக்கைகளின் உண்மையான எந்த ஒரு அறிக்கையையும் செய்தித்தாள்களில் பிரசுரிக்கும் உரிமைக்கு எதிரான சட்ட விலக்களிப்பு, பிரசுரம் தவறான நோக்கோடு பிரசுரிக்கப்பட்டதாக இருந்தாலொழிய, அதற்கெதிரான நீதிமன்ற சட்ட நடவடிக்கைகளுக்கு எதிரான பாதுகாப்பு.
5. நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதும், கூட்டத்தொடர் தொடங்குவதற்கு நாற்பது நாட்களுக்கு முன்பும், மற்றும் கூட்டத்தொடர் முடிந்து நாற்பது நாட்கள் வரையிலும் உரிமையியல் வழக்குகளின் கீழ் ஒரு உறுப்பினரை கைது செய்யப்படாமல் இருக்கும் சுதந்திரம்.
6. நாடாளுமன்ற வளாகத்தினுள் ஒரு உறுப்பினருக்கு சட்ட நடவடிக்கை அறிக்கை அளிப்பது அல்லது கைது ஆகியவற்றிலிருந்து விதிவிலக்கு.

ஆதாரம்: https://www.india.gov.in/sites/upload_files/npi/files/coi_part_full.pdf

செயல்பாடு


சிந்திக்கவும் – இணைக்கவும் –பகிரவும்

தலைப்பு : எந்த அவை அதிகாரமிக்க அவையாக உள்ளது, மக்களவையா அல்லது மாநிலங்களவையா?

பணி : மாணவர்கள் சற்று நேரம் தனியாக சிந்திக்கவும். பின்பு, தங்கள் இணையுடன் விவாதித்து, இருவரது கருத்தையும் ஒப்பிடவும் அதன் பின் வகுப்பில் விவாதிக்கவும்.

முழு வகுப்புமே சிறப்பான முறையில் முழுமையான விவாதத்தில் பங்கேற்கும் வகையில் மாணவர்களை தயார்படுத்தவும்.

2.2 நாடாளுமன்றம்: மக்களவை, மாநிலங்களவை



மக்களவையின் அதிகாரங்கள்



12th_Political Science_Tamil_Unit_2.indd 36 04-06-2019 10:49:11

1. மக்களவை மிகவும் சக்தி வாய்ந்த ஒரு அரசியல் அமைப்பு. அது நாட்டின் அரசியல், சமூக பொருளாதார நிலையை பிரதிபலிக்கிறது. மிக உயரிய பொறுப்பை கொண்டுள்ள அமைப்பு மேலும் நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் பிரதிநிதியாகவும் நடைமுறையில் திகழ்கிறது.

2. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டது மக்களவை. இதன் உறுப்பினர்கள் மக்களின் பல்வேறு விருப்பங்களின் பிரதிநிதியாக திகழ்கிறார்கள். ஆகவே இது மக்களாட்சி அமைப்பின் மிக உயரிய இடத்தில் உள்ளது. இங்கிருந்துதான் நாட்டின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சட்டங்கள் உருவாகின்றன

3. ஒன்றியப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியலில் உள்ள விடயங்கள் குறித்த சட்டங்களை மக்களவை நிறைவேற்றுகிறது. மேலும் மக்களவை புதிய சட்டங்களை இயற்றவும் நடைமுறையிலுள்ள சட்டத்தை நீக்க அல்லது அதைத் திருத்தவும் முடியும். பணம் சார்ந்த முன்வரைவுகளின் மீது மக்களவைக்கு மட்டுமே முழுமையான அதிகாரம் உள்ளது.

4. மக்களவைவின் சிறப்பு அதிகாரம் என்னவென்றால், நிதிநிலை அறிக்கை அல்லது பணம் சம்பந்தப்பட்ட எந்த ஒரு சட்டத்தையும் அது நிறைவேற்றினால், அதை மாநிலங்களவை நிராகரிக்க முடியாது. ஆனால் மாநிலங்களவை அந்த சட்டத்தை 14 நாட்களுக்கு மட்டும் காலதாமதப்படுத்த முடியும். மேலும் அந்த சட்டத்தில் மாநிலங்களவை ஏதாவது மாற்றம் செய்வதற்கு ஆலோசனை கூறினால் அதை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் மக்களவையின் உரிமை உண்டு.

5. நாட்டின் பொருளாதாரம் மக்கள் கட்டுப்பாட்டில் இருப்பதை வெளிப்படையாக தெரிவிக்கும் வகையில் அமையும் நிதிநிலை அறிக்கை மற்றும் நிதி அறிக்கையை தயார் செய்வதும் சமர்ப்பிப்பதும் மக்களவையின் சிறப்புரிமைகளில் ஒன்று ஆகும்.

6. கேள்விகள், மற்றும் துணைக்கேள்விகள் எழுப்புதல், முன்வரைவு நிறைவேற்றம், மற்றும் நம்பிக்கையில்லா தீர்மானங்கள் ஆகியவற்றின் மூலம் ஆட்சித்துறையை மக்களவை கட்டுப்படுத்துகிறது.

7. அரசமைப்பை திருத்தி அமைக்கவும், அவசரகால நிலை பிரகடனத்தை வெளியிடவும் மக்களவை அதிகாரம் படைத்தது.

8. இந்திய நாட்டின் குடியரசுத்தலைவர் மற்றும் குடியரசுத் துணைத்தலைவர் ஆகியோரை தேர்ந்தெடுக்கும் பணியில் மக்களவை முக்கிய பங்காற்றுகிறது.

9. மக்களவை, புதிய குழுக்கள் மற்றும் ஆணையங்களை அமைக்கும் அதிகாரத்தை பெற்றது. மேலும் அவற்றின் அறிக்கைகளை விவாதிப்பதற்கு ஏதுவாக நாடாளுமன்றத்தின் முன் சமர்பிக்கவும். மேலும் அவ்வறிக்கைகளை அமல்படுத்துவது தொடர்பாக பரிசீலிக்கவும் மக்களவைக்கு அதிகாரம் உண்டு.

10. மக்களவை பெரும்பான்மை ஆதரவை கொண்டிருக்கும் பிரதமர் மற்றும் அமைச்சரவை ஆகியோரை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். ஒரு வேளை பிரதமர் மக்களவையின் நம்பிக்கையை இழந்தால், மொத்த அரசும் வெளியேற நேரிடும் மற்றும் புதிய தேர்தல்களை சந்திக்க வேண்டும்.

மாநிலங்களவையின் அதிகாரங்கள்

மாநிலங்களவையின் இடம்

மக்களவையுடன் ஒப்பிடும்போது, அரசமைப்பின் படியான மாநிலங்களவையின் இடத்தை மூன்று கோணங்களில் படிக்கலாம்.

1. மக்களவையும் மாநிலங்களவையும் சம அளவில் அதிகாரம் உள்ள இடங்கள்

12th_Political Science_Tamil_Unit_2.indd 37 04-06-2019 10:49:11



2. மாநிலங்களவையும் மக்களவையும் சமமற்ற அதிகாரம் கொண்டுள்ள இடங்கள்

3. மாநிலங்களவையின் சிறப்பு அதிகாரங்கள் இவை மக்களவையுடன் பகிர்ந்து கொள்ளப்படாதவை

மாநிலங்களவையும் மக்களவையும் சம நிலையில் உள்ள இடங்கள்

கீழ்க்கண்ட விவரங்களில் மாநிலங்களவையின் அதிகாரமும், மக்களவையின் அதிகாரமும் சம அளவில் உள்ளன.

1. முன்வரைவுகளை அறிமுகப்படுத்துல் மற்றும் அதை நிறைவேற்றுதல்.

2. திருத்தச்சட்டம் முன்வரைவுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதை நிறைவேற்றுதல்.

3. இந்திய அரசின் தொகுப்பு நிதியில் இருந்து செய்யப்படும் செலவினங்கள் தொடர்பான முன்வரைவுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல்.

4. குடியரசுத்தலைவரை தேர்ந்தெடுத்தல் மற்றும் அவரை பதவி நீக்க நடைமுறையில் பங்கேற்றல்.

5. துணைக் குடியரசுத்தலைவரை தேர்ந்தெடுத்தல் மற்றும் அவரை பதவி நீக்கம் செய்தல். இருப்பினும் துணைக் குடியரசுத்தலைவரின் பதவி நீக்க தீர்மானத்தை மாநிலங்களவையே துவக்க முடியும். ஒரு சிறப்பு பெரும்பான்மையின் மூலம் துணைக் குடியரசுத்தலைவரை மாநிலங்களவை பதவி நீக்கம் செய்கிறது. அதை சாதாரண பெரும்பான்மை மூலம் மக்களவை ஏற்றுக்கொள்கிறது.

6. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள், தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இந்தியாவின் தலைமைத் தணிக்கைக் கணக்காயர் ஆகியோரை பதவி நீக்கம் செய்யும் பரிந்துரையை குடியரசுத்தலைவருக்கு அனுப்புதல்.

7. குடியரசுத்தலைவரின் அவசர சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல்.

8. குடியரசுத்தலைவரின் மூன்று விதமான அவசரநிலை பிரகடனங்களுக்கு ஒப்புதல் வழங்குதல்.

9. பிரதமர் உட்பட அமைச்சர்களை தேர்வு செய்தல். இந்திய அரசமைப்பின்படி பிரதமர் மற்றும் அமைச்சர்கள் இரண்டு அவைகளில் ஏதேனும் ஒன்றில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்கள் எந்த அவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் மக்களவைக்குமட்டுமேபொறுப்பானவர்கள் ஆவர்.

10. நிதிக்குழு ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மத்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் போன்ற அமைப்புகள் அளிக்கும் அறிக்கைகளை பரிசீலித்தல்.

11. உச்ச நீதிமன்றம் மற்றும் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அதிகாரம் வரம்பை அதிகப்படுத்துதல்.

மக்களவையுடனான சமமற்ற நிலை

கீழ்க்காணும் விவரங்களில், மக்களவையின் அதிகாரமும், மாநிலங்களவையின் அதிகாரமும் சமமற்ற நிலையில் உள்ளன.

1. நிதி முன்வரைவானது மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த இயலும், மாநிலங்களவையில் அல்ல.

12th_Political Science_Tamil_Unit_2.indd 38 04-06-2019 10:49:11

2. மாநிலங்களவை நிதி முன்வரைவில் திருத்தம் செய்யவோ அதை நிராகரிக்கவோ இயலாது. அம்முன்வரைவை 14 நாட்களுக்குள் மாநிலங்களவை தன் பரிந்துரையுடனோ அல்லது பரிந்துரை ஏதுமின்றியோ மக்களவைக்கு திருப்பி அனுப்ப வேண்டும்.

3. மாநிலங்களவையின் பரிந்துரைகளை மக்களவை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். எதுவாக இருப்பினும் முன்வரைவு ஈரவைகளிலும் நிறைவேறியதாகவே கருதப்படும்.

4. ஒரு நிதி முன்வரைவு சட்ட உறுப்பு 110-இல் கூறப்பட்டுள்ள விவரங்கள் தொடர்பாக இல்லாதிருப்பினும் அது மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். ஆனால் அதை நிறைவேற்றுவதில் ஈரவைகளுக்குமே சமமான அதிகாரம் உள்ளது.

5. ஒரு முன்வரைவு, பண முன்வரைவு என்று தீர்மானிக்கும் அதிகாரம் மக்களவை சபாநாயகருக்கே உள்ளது.

6. ஈரவைகளின் கூட்டு கூட்டத்திற்கு மக்களவை சபாநாயகரே தலைமை தாங்குவார்.

7. பொதுவாக, கூட்டுக் கூட்டங்களின் வாக்கெடுப்பில் மக்களவையின் நிலைப்பாடே வெற்றி பெறும். ஏனெனில் அது மாநிலங்களவையை விட அதிக உறுப்பினர்களை கொண்டுள்ளது. ஈரவைகளிலும் ஆளும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்த எதிர் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட குறைவாக இருக்கும் சமயத்தில் மட்டுமே ஆளும் கட்சியின் தீர்மானம் வெற்றி பெறாது.

8. மாநிலங்களவை நிதிநிலை அறிக்கை திட்டத்தின் மீது விவாதம் நடத்தலாம். ஆனால் அதற்கான வாக்கெடுப்பில் பங்கு பெற முடியாது. இது மக்களவைக்கு மட்டுமே உள்ள சிறப்பு உரிமையாகும்.

9. அமலில் உள்ள தேசிய அவசர நிலையை நீக்கும் தீர்மானம் மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

10. எந்த ஒரு அமைச்சருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா தீர்மானத்தை மாநிலங்களவை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் அமைச்சர்கள் குழுவாகவும், தனிப்பட்ட முறையிலும் மக்களவைக்கே பொறுப்பானவர்கள். ஆனால் மாநிலங்களவை அரசின், கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை விமர்சிக்க முடியும்.

மாநிலங்களவையின் சிறப்பு அதிகாரங்கள்

கூட்டாட்சி தத்துவ அடிப்படையில் மாநிலங்களவை இரண்டு பிரத்யேகமான தனித்துவமான அதிகாரங்களை பெற்றுள்ளது.

1. உறுப்பு 249-இன்படி மாநிலங்களவை மாநில பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரங்களில் நாடாளுமன்றம் சட்டம் இயற்ற அதிகாரமளிக்க முடியும்.

2. உறுப்பு 312-இன்படி மாநில மற்றும் மத்திய அரசுக்கு பொதுவான அனைத்து இந்தியத் தேர்வாணையத்தை உருவாக்க நாடாளுமன்றத்துக்கு அதிகாரமளிக்க முடியும்.

மேற்கண்ட ஆய்வின் மூலம் இந்திய மேலவையானது (மாநிலங்களவை) ஆங்கிலேய நாடாளுமன்ற அமைப்பில் உள்ள மேலவை (பிரபுக்கள் சபை) போல அதிகாரமற்று இல்லாமலும், அமெரிக்க மேலவை (செனட்) போல் மிகுந்த அதிகார முடையதாகவும் இல்லாமல் இருப்பதாக புலனாகிறது. மாநிலங்களவையானது, நிதி விவகாரங்கள் மற்றும் அமைச்சர்கள் மீதான கட்டுப்பாடு தவிர மற்ற எல்லா தளங்களிலும் கிட்டத்தட்ட மக்களவைக்கு நிகரான அதிகாரத்தையே பெற்றுள்ளது.

மக்களவையுடன் ஒப்பு நோக்கும்போது, மாநிலங்களவை குறைவான அதிகாரமே

12th_Political Science_Tamil_Unit_2.indd 39 04-06-2019 10:49:11

கொடுக்கப்பட்டிருந்தாலும் கீழ்க்கண்ட விவகாரங்களில் இதன் பயன் அவசியமாகிறது.

1. அவசரமாகவும், குறைபாடுகளுடனும், கவனமின்றியும் மக்களவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுப்பப்படும் சட்ட முன்வரைவுகளை திருப்பி அனுப்பவும் அவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளவும் மாநிலங்களவை செய்கிறது.

2. நேரடியாக தேர்தல் சந்திக்கமுடியாத புகழ்பெற்ற நிபுணர்கள், கலை, இலக்கிய வல்லுனர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு இந்த அவை பிரதிநிதித்துவம் அளிக்கிறது. மேலும், குடியரசுத்தலைவர் இது போன்ற 12 நபர்களை இந்த அவையின் உறுப்பினராக நியமிக்கிறார்.

3. கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையான மாநிலங்களின் உரிமைகளை பாதுகாக்கும் காவலனாக மத்திய அரசின் அதிகார தலையீடுகளை தடுக்கிறது.

உறுப்பு 120

உங்களுக்குத் தெரியுமா?

நாடாளுமன்றத்தின் அலுவல் மொழியாக இந்தியும் ஆங்கிலமும் இருக்கும் என அரசமைப்பின் உறுப்பு 120 கூறுகிறது. இவ்வாறிருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர் எவரேனும் இந்தி மற்றும் ஆங்கிலம் தெரியாதவராக இருப்பின், அவர் தனது தாய் மொழியில் உரையாற்ற அவைத்தலைவர் அனுமதிக்கலாம் என்றும் இவ்வுறுப்பு மேலும் கூறுகிறது.

2.3 சட்டம் இயற்றும் நடைமுறைகள்

இந்திய நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் நடைமுறைகள் அதன் மக்களாட்சித் தத்துவத்தின் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சட்டம் இயற்றும் நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகளின் பங்கு மிக இன்றியமையாததாக அமைகிறது. மக்களாட்சி அமைப்பினை முறைப்படுத்துவதில், ஒரு சட்ட முன்வரைவின் பொருத்தபாடு மற்றும் தொடர்பின் மீது தங்கள் கருத்துகளை எதிரொலிப்பதன் மூலம் எதிர்க்கட்சிகள் மிக மிக முக்கிய பங்களிக்கின்றன. மாநிலங்கள் மற்றும் மக்களின் நலனை பேணும் பொருட்டு சமூகம், அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை முறைப்படுத்தி வழிகாட்டும் சக்தியாக சட்டங்கள் விளங்குகின்றன. அடிப்படையில் பரிசீலனைக்காக நாடாளுமன்றத்தில் "சட்ட முன்வரைவாக" (சட்ட முன்வரைவு) சட்டங்கள் முன்மொழியப்படுகின்றன.



அந்த சட்ட முன்வரைவை அரசமைப்பின் கட்டமைப்புக்குள் முழுமையாக அறிந்து கொள்ளும் பொருட்டு ஒரு முழுமையான விவாதத்துக்கு நாடாளுமன்றத்தால் எடுத்துக்கொள்ளப்படும். அந்த சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு குடியரசுத்தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு சட்டமாக இயற்றப்படும். அரசமைப்பு நடைமுறைகளின் அடிப்படையில் புதிய சட்டங்களை இயற்றுவதும் நடைமுறையிலுள்ள சட்டங்களில் திருத்தங்களை கொண்டுவருவதும் நாடாளுமன்றத்தின் அடிப்படை நடவடிக்கைகள். இந்திய நாடாளுமன்றம் இரு வகையான முன்வரைவுகளை நிறைவேற்றுகிறது அவை:

1. நிதி முன்வரைவு

2. நிதிசாரா முன்வரைவு அல்லது சாதாரண அல்லது பொது முன்வரைவு

ஒரு சாதாரண சட்ட முன்வரைவு ஒரு சட்டமாக இயற்றப்படுவதற்கு முன் பல்வேறு நிலைகளை கடந்து வர வேண்டும். சாதாரண முன்வரைவுகளை நிறைவேற்றுவதற்கான நடைமுறைகளை இரு வேறு பகுப்புகளாக அரசமைப்பு வகுத்துள்ளது.

12th_Political Science_Tamil_Unit_2.indd 40 04-06-2019 10:49:12

இவைகள் பின்வருமாறு: கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒரு சாதாரண சட்ட முன்வரைவு பின்வரும் நிலைகளைக் கடந்து இரண்டு அவைகளிலும் விவாதிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்கப்பட்டு ஒப்புதலைப் பெற்றிருக்கவேண்டும்.

1. "முதல் நிலையில் சட்ட முன்வரைவானது ஏதாவது ஒரு அவையில் அறிமுகப்படுத்தப்படுகிறது. அங்கு சட்ட முன்வரைவு வாசிக்கப்படுகிறது. பெரும்பாலான முன்வரைவுகள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அறிமுகப்படுத்தப்படும். அந்த முன்வரைவு குறிப்பிட்ட தொழில் துறை சார்ந்த தொழில் நுட்ப வல்லுனர்களால் முன்வரைவு செய்யப்படும். மற்றும் அமைச்சரவை ஒப்புதல் பெறவேண்டும். எந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் "தனி நபர் முன்வரைவை'" அறிமுகப்படுத்தலாம். அவ்வாறு அறிமுகப்படுத்த மக்களவை சபாநாயகருக்கோ அல்லது மாநிலங்களவை தலைவருக்கோ ஒரு மாதம் முன்பே தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு தனிநபர் முன்வரைவை சமர்ப்பிக்கும் நாள் குறிக்கப்படும் மற்றும் நாடாளுமன்ற அவையில் அது அறிமுகப்படுத்தப்படும். பொதுவாக வரைவு நிலையிலுள்ள முன் மொழியப்பட்ட வாசிப்பு நிலையில் உள்ள முன்வரைவுகளின் மீது விவாதம் எதுவும் நிகழ்த்தப்படுவதில்லை ஏனென்றால் அது ஒரு அலுவல் சார்ந்த நடவடிக்கையாகும்.

2. முன்வரைவு சமர்ப்பிக்கப்பட்ட பிறகு இந்திய அரசிதழில் பிரசுரிக்கப்படும். சபாநாயகர் அல்லது அவைத்தலைவர் முதல் வாசிப்புக்கு முன்னரே சில முன்வரைவுகளை அரசிதழில் வெளியிட அனுமதிக்கலாம். அப்போது அந்த முன்வரைவை சமர்ப்பிப்பதற்கு எந்த தீர்மானமும் தேவையில்லை.

3. பொதுவாக முன்வரைவின் முதல் வாசிப்பு நடைபெற்ற இரண்டு நாள் கால இடைவேளைக்கு பிறகு இரண்டவது வாசிப்பு நடைபெறும். அந்த நிலையில் கீழ்கண்ட நான்கு நடைமுறைகளில் ஏதாவது ஒன்று பின்பற்றப்படும்.

- அந்த முன்வரைவு மன்றத்தின் பரிசீலனைக்காக உடனடியாக எடுத்துக்கொள்ளப்படலாம்.
- அது நாடாளுமன்ற தேர்வுக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படலாம்.
- அது ஈரவைகளும் இணைந்த தேர்வுக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படலாம் அல்லது
- பொதுமக்கள் கருத்துகளை அறிந்து கொள்ளுவதற்காக சுற்றுக்கு விடப்படலாம். முன்வரைவுகளை பரிசீலனைக்கு நேரடியாக எடுத்துக்கொள்ளுவது மிக அரிதாகவே நிகழும்

முன்வரைவு சுற்றுக்கு விடப்பட்டால் (4-வது வழிமுறைப்படி) அவையின் சம்பந்தப்பட்ட செயலர் உள்ளாட்சி அமைப்புக்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் வகையில் மாநில அரசிதழ்களில் வெளியிடச்சொல்லி மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்ளுவார். அவ்வாறு பெறப்பட்ட கருத்துக்கள் உறுப்பினர்களிடையே சுற்றுக்கு விடப்படும்.

குழு நிலை

அந்த முன்வரைவு தேர்வுக்குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டால், அதை சமர்ப்பித்த உறுப்பினர் குழு உறுப்பினர்களை தெரிவு செய்வார், அவையின் சபாநாயகர் அல்லது அவைத்தலைவர் அந்தக் குழுவின் ஒரு உறுப்பினரையும் மற்றும் தலைவரையும் நியமிப்பார். அக்குழு அந்த முன்வரைவை பரிசீலித்து அவைக்கு தனது அறிக்கையை சமர்ப்பிக்கும்.

12th_Political Science_Tamil_Unit_2.indd 41 04-06-2019 10:49:12

செயல்பாடு – செயல்வழிப்படம்

ஒவ்வொரு சட்ட முன்வரைவும் கீழ்கண்ட நிலைகளை கடக்க வேண்டும்.

முதல் வாசிப்பு

↓

இரண்டாம் வாசிப்பு

↓

குழுநிலை

↓

அறிக்கை நிலை

↓

மூன்றாவது வாசிப்பு

அறிக்கை நிலை

அறிக்கை நிலை என்பது மிக முக்கியமான ஒரு நிலையாகும். அதில்தான், அந்த முன்வரைவின் உட்கூறுகள் ஒவ்வொன்றும் விவாதத்துக்கு உட்படுத்தப்படும். இந்த நிலையில் அந்த அறிக்கை அசல் முன்வரைவு மற்றும் தேர்வுக்கமிட்டி அறிக்கையுடன் இணைத்து சுற்றுக்கு விடப்படும். அறிக்கை நிலை என்பது அந்த முன்வரைவுக்கு இறுதி வடிவம் கொடுப்பது. பிறகு அந்த முன்வரைவு மூன்றாவது வாசிப்புக்கு சமர்ப்பிக்கப்படும். அதில் அந்த முன்வரைவு பெரும்பான்மை வாக்குகள் பெற்று நிறைவேற்றப்படும். மூன்றாவது வாசிப்பு என்பது நாடாளுமன்றத்தின் முறையான ஒப்புதல் பெறுவதற்கானதாகும்.

மூன்றாவது வாசிப்புக்குப் பிறகு ஏதாவது ஒரு அவையில் அந்த முன்வரைவு ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, அடுத்த அவைக்கு அது மாற்றப்பட்டு அங்கு மேற்கண்ட அனைத்து நிலைகளையும் கடந்து செல்லும். அடுத்த அவை அந்த முன்வரைவை அப்படியே மாற்றமின்றி ஏற்றுக்கொள்ளலாம். அனைத்து நிலைகளையும் கடந்த நிலையில் குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்காக அது அனுப்பி வைக்கப்படும்.

அந்த முன்வரைவு முதலில் சமர்ப்பிக்கப்பட்டு அவையில் நிறைவேற்றப்பட்ட பிறகும் அடுத்த அவையில் அது நிராகரிக்கப்படலாம். மாறாக முதல் அவையினால் ஏற்றுக்கொள்ளப்படாத மாற்றங்களை அறிமுகம் செய்யலாம் அல்லது ஆறு மாத காலத்திற்கு திருப்பி அனுப்பாமல் நிறுத்தி வைத்துக்கொள்ளலாம். அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் ஈரவைகளுக்குமிடையே அரசியல் சாசனம் முடக்கப்படலாம். அப்போது சபாநாயகர் அல்லது அவர் இல்லாத காலங்களில் துணை சபாநாயகர் ஈரவைகளின் கூட்டு கூட்டங்களுக்கு தலைமை ஏற்று நடத்துவார். இந்த முடக்கம் பெரும்பான்மையான வாக்குகளால் கலைக்கப்பட்டது.


இறுதியாக, அந்த முன்வரைவு ஈரவைகளினாலும் நிறைவேற்றப்படும். குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்படும். முன்வரைவுக்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளிப்பாரே ஆனால் அது சட்டமாக்கப்பட்டுவிடும். ஆனால் குடியரசுத்தலைவர் அதை மறு பரிசீலனைக்காக திருப்பி அனுப்பி வைக்கலாம். அந்த முன்வரைவு மாற்றம் செய்யப்படாமல் அல்லது மாற்றம் செய்யப்பட்டு திரும்பவும் குடியரசுத்தலைவருக்கு அனுப்பி வைக்கப்படுமேயானால் குடியரசுத்தலைவர் அவரது ஒப்புதலை அளித்தே ஆக வேண்டும். இவ்வாறான சிக்கல் நிறைந்த, காலம் அதிகம் பிடிக்கும் வழிமுறைகள், அவசர நிலையிலும் குறைபாடுகளுடனும் சட்டம் இயற்றப்படுவதை தடுக்கும் நோக்கத்தோடு பின்பற்றப்படுகிறது.

12th_Political Science_Tamil_Unit_2.indd 42 04-06-2019 10:49:12

2.4 சட்டமன்றத்தின் அமைப்பு, அதிகாரம் மற்றும் செயல்பாடுகள்

இந்திய அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில், மத்திய மற்றும் மாநிலங்களின் சட்டரீதியான அதிகாரங்களும் செயல்பாடுகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. இவையே மத்திய மற்றும் மாநில அரசுகள் சட்டம் இயற்றுவதற்கான அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரங்கள் மூன்றாக வகுக்கப்பட்டுள்ளன.

1. ஒன்றியப் பட்டியல்
2. மாநிலப் பட்டியல்
3. பொதுப் பட்டியல்



ஒன்றியப் பட்டியலில் அடங்கியுள்ள துறைகள் மீது சட்டங்களை இயற்றுவதற்கும், நடைமுறையில் உள்ள சட்டங்களை மாற்றுவதற்கும் பிரத்யேகமான அதிகாரம் நாடாளுமன்றத்திடமே உள்ளது. மாநிலப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள துறைகள் மீது பிரத்யேகமான அதிகாரம் மாநிலச் சட்டமன்றத்திடம் உள்ளது. பொதுப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள துறைகள் மீது மத்திய மற்றும் மாநில அரசுகள் சட்டம் இயற்றலாம் . மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் இடையே முரண்பாடுகளின் போது மத்திய அரசின் அதிகாரமே மேலோங்கும். இந்த பட்டியலில் குறிப்பிடப்படாத எஞ்சியுள்ள அதிகாரங்கள் மத்திய அரசிடமே உள்ளது.

12th_Political Science_Tamil_Unit_2.indd 43 04-06-2019 10:49:12

சாதாரண சட்ட முன்வரைவு மற்றும் நிதி சட்ட முன்வரைவுகளுக்கிடையேயான வேறுபாடுகள்		
வ. எண்	சாதாரண சட்ட முன்வரைவு	நிதி சட்ட முன்வரைவு
1	இது மக்களவை அல்லது மாநிலங்களவை எதில் வேண்டுமானாலும் கொண்டு வரப்படலாம்.	இது மக்களவையில் மட்டுமே கொண்டுவரப்பட முடியும்.
2	இது அமைச்சர் அல்லது எந்த ஒரு உறுப்பினராலும் அறிமுகப்படுத்தப்படலாம்.	அமைச்சர் மட்டுமே இம்முன்வரைவை அறிமுகப்படுத்த முடியும்
3	குடியரசுத்தலைவரின் பரிந்துரையில்லாமலே இது அறிமுகப்படுத்தப்படலாம்.	குடியரசுத்தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் மட்டுமே இது அறிமுகப்படுத்தலாம்
4	இதை மாநிலங்களவை திருத்தவோ நிராகரிக்கவோ முடியும்	இதை மாநிலங்களவை திருத்தவோ நிராகரிக்கவோ முடியாது. மாநிலங்களவை, அதன் பரிந்துரையுடனோ அல்லது பரிந்துரையில்லாமலோ மக்களவைக்கு இம்முன்வரைவை திருப்பி அனுப்ப வேண்டும். அதை மக்களவை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம்.
5	எந்த முடிவும் எடுக்காமல் ஆறுமாத காலத்திற்கு மாநிலங்களவை இம்முன்வரைவை நிறுத்தி வைக்க முடியும்.	இம்முன்வரைவை 14 நாட்கள் வரை மட்டுமே மாநிலங்களவையில் வைத்திருக்க முடியும்.
6	இம்முன்வரைவு மக்களவையிலிருந்து வந்திருந்தாலும், அதற்கு மக்களவை சபாநாயகரின் சான்றளிப்பு தேவையில்லை.	மாநிலங்களவைக்கு இம்முன்வரைவு செல்லும்போது மக்களவை சபாநாயகரின் சான்றளிப்பு அவசியம்
7	ஈரவைகளும் ஏற்றுக் கொண்ட பிறகே இது குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். இம்முன்வரைவை நிறைவேற்றுவதில், ஈரவைகளின் கருத்து வேறுபாட்டால் முடக்கம் ஏற்பட்டால், ஈரவைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு குடியரசுத்தலைவர் அழைப்பு விடுப்பார்.	மக்களவையில் மட்டுமே நிறைவேற்றினாலும்கூட இம்முன்வரைவு குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். ஈரவைகளுக்கிடையே கருத்து வேறுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லாததால் முடக்கம் ஏற்படாது, கூட்டுக் கூட்டத்திற்கும் வழிவகையில்லை.
8	மக்களவையில் இம்முன்வரைவு தோல்வி அடைந்தால், அரசாங்கம் பதவி விலக நேரிடும். (முன்வரைவு ஓர் அமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே)	மக்களவையில் இம்முன்வரைவு தோல்வி அடைந்தால் அரசாங்கம் பதவி விலக வேண்டும்.
9	குடியரசுத்தலைவர் இம்முன்வரைவை நிராகரிக்க, மறுபரிசீலனை செய்யுமாறு திருப்பி அனுப்ப முடியும்.	இதற்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். ஆனால் மறுபரிசீலனை செய்யுமாறு திருப்பி அனுப்ப முடியாது.

12th_Political Science_Tamil_Unit_2.indd 44 04-06-2019 10:49:12

அதிகாரத்தின் வகைகள்					
மத்திய பட்டியல்		மாநில பட்டியல்		பொதுப் பட்டியல்	
1.	பாதுகாப்பு	1.	விவசாயம்	1.	கல்வி
2.	அணு சக்தி	2.	காவல் துறை	2.	விவசாய நிலங்களை தவிர சொத்து பரிமாற்றம்
3.	வெளிநாட்டு (அயல்நாட்டு) விவகாரங்கள்	3.	சிறைச்சாலை	3.	வனத்துறை
4.	போர் மற்றும் அமைதி உடன்படிக்கை	4.	உள்ளாட்சி அரசாங்கம்	4.	தொழிற்சங்கங்கள்
5.	வங்கி சேவை	5.	பொதுச் சுகாதாரம்	5.	கலப்படம்
6.	ரயில்வே	6.	நிலம்	6.	தத்தெடுப்பு மற்றும் வாரிசு தொடர்ச்சி
7.	அஞ்சல் மற்றும் தந்தி	7.	மது		
8.	வான் வழிகள்	8.	வர்த்தகம் மற்றும் வணிகம்		
9.	துறைமுகங்கள்	9.	கால்நடை மற்றும் கால்நடை வளர்ப்பு		
10.	வெளிநாட்டு வர்த்தகம்	10.	மாநிலப் பொதுப்பணிகள்		
11.	பணம் மற்றும் நாணயம்				

செயல்பாடு – விவாதம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறப்பான சலுகைகளும் ஊதியமும் வழங்கப்படுகிறது. ஆனால் அவர்களின் செயல்திறன் குறைவாகவே உள்ளது: குடிமக்கள் அறிக்கை



- மக்களவையில் 2010–12 ஆம் ஆண்டுகளில் 227 கூட்டத்தொடர்கள் 852 மணித்துளிகள் அலுவல் நடந்துள்ளது. அதாவது, ஒரு நாளுக்கு நான்கு மணி நேரத்துக்கும் குறைவாக.
- 2013 இல் ஆளுகை மற்றும் வளர்ச்சி பற்றிய அறிக்கையை தேசிய சமூக கண்காணிப்பும் எனும் அமைப்பு வெளியிட்டது. அதில் உலகில் அதிக ஊதியம் மற்றும் சலுகைகள் பெறக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களும் உண்டு. ஆனால் நாடாளுமன்றத்தில் அவர்களது பணி பின்தங்கியே உள்ளது என்கிறது.
- சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் இத்தாலி போன்ற நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் சலுகைகளைவிட அதிகமாக இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. இது பக்கத்து நாடான பாகிஸ்தான் நாடாளுமன்ற

12th_Political Science_Tamil_Unit_2.indd 45 04-06-2019 10:49:13

உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதைவிட நான்கரை மடங்கு அதிகமாகும். இது நம் நாட்டின் தனிநபர் வருமானத்தை போல் 68 மடங்கு உள்ளது.

- இந்த அறிக்கைதான் 2010-12-ஆம் ஆண்டுகளில் நம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குறைவான செயல்திறனை சுட்டிக் காட்டுகிறது. 227 கூட்டத்தொடர்களில் 852 மணித்துளிகள் மட்டுமே அலுவல் நடந்துள்ளதையும் வெளிப்படுத்துகிறது. மேலும் 577 மணித்துளிகள் கூச்சல் குழப்பங்களிலும், அதனால் அவை தள்ளி வைக்கப்பட வேண்டிய சூழல் உண்டானதையும் சுட்டிக் காட்டுகிறது.

நன்றி: தி இந்து-23.12.2013.

பணி; நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாட்டை மதிப்பிடுவதற்கான பல்வேறு அளவீடுகளை பட்டியலிடுக.

2.5 திருத்தச்சட்டங்களுக்கான நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள்

இந்திய அரசமைப்பு, மாறும் காலச்சூழல் மற்றும் தேவைகளுக்கு பொருத்தமான வகையில் இருக்கும்படியும், அதேசமயம் அடிப்படை கட்டமைப்பு மாறாவண்ணம் இருக்குமாறும் ஒரு தனித்துவமான அமைப்பை கொண்டுள்ளது. உறுப்பு 368, அரசமைப்புச் திருத்தச்சட்டத்தில் மாற்றம் கொண்டுவருவதைப் பற்றி குறிப்பிடுகிறது. அந்த திருத்தச்சட்டத்தில் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நாடாளுமன்றத்திற்கு உச்சபட்ச அதிகாரம் இருக்கிறது. அரசமைப்பு திருத்தச்சட்டத்தை மேற்கொள்ளும் நடைமுறைகள் பின் வருமாறு:

1. அரசமைப்பிலுள்ள சில விதிகளில் திருத்தங்களை செய்ய, சிலவற்றை சேர்க்க, மாற்றியமைக்க அல்லது நீக்க, நாடாளுமன்றம் இந்த பிரிவில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி செயல்படலாம்.

2. அரசமைப்பில் ஏற்படுத்தப்படும் திருத்தம், நாடாளுமன்றத்தின் ஈரவைகளிலும் ஒரு முன்வரைவாக சமர்ப்பிக்கப்பட்டு, தனித்தனியாக ஒவ்வொரு அவையிலும், மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கு மேல் ஆதரவும், வாக்கு செலுத்தியவர்களின் எண்ணிக்கை, மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாத பெரும்பான்மை ஆதரவைப்பெற்று நிறைவேற்றப்பட்டால், அது பின்னர் குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

3. அந்த முன்வரைவு ஒவ்வொரு அவையிலும் ஒரு சிறப்பு பெரும்பான்மை பெற்று நிறைவேற்றப்பட வேண்டும். அதாவது அந்த அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 50 சதவிகிதத்துக்கும் அதிகமான பெரும்பான்மை எண்ணிக்கை கொண்டிருக்க வேண்டும். மற்றும் வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்க வேண்டும். ஒவ்வொரு அவையும் தனித்தனியாக அந்த முன்வரைவை நிறைவேற்ற வேண்டும். ஒருவேளை திருத்த நடவடிக்கைகள் காரணமாக ஈரவைகளுக்கிடையே கருத்து வேறுபாடு தோன்றுமென்றால் ஈரவைகளையும் இணைந்து நடத்துவதற்கான வழிமுறைகள் எதுவுமில்லை. ஒருவேளை முன்வரைவில் அரசமைப்பின் கூட்டாட்சி வகைமுறைகள் குறித்து ஏதேனும் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருந்தால், மொத்த மாநிலங்களின் எண்ணிக்கையில், பாதி மாநிலங்களின் தனிப்பெரும்பான்மை ஏற்படுத்தி அதாவது அத்தகைய சட்டமன்றங்களில் வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை தேவை.

12th_Political Science_Tamil_Unit_2.indd 46 04-06-2019 10:49:13

4. நாடாளுமன்றத்தின் ஈரவைகளிலும் முறையாக நிறைவேற்றப்பட்டு மற்றும் தேவைப்பட்ட இடங்களில் அந்தந்த மாநிலச் சட்டமன்றங்களால் உறுதிசெய்யப்பட்ட பிறகு அந்த முன்வரைவு ஒப்புதலுக்காக குடியரசுத்தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும். அந்த முன்வரைவுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பது அல்லது மறு பரிசீலனை செய்யுமாறு நாடாளுமன்றத்துக்கு திருப்பி அனுப்புவது போன்றவற்றை குடியரசுத்தலைவரால் செய்ய இயலாது. குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெறப்பட்ட பிறகு அது சட்டமாகிறது. (அதாவது ஒரு அரசமைப்பு திருத்தச்சட்டம்) அரசமைப்பு விதிமுறைகளின் அடிப்படையில் அந்த சட்டம் திருத்தமடைகிறது.

திருத்தச்சட்டங்களின் வகைகள்

உறுப்பு 368, இரண்டு வகையான சட்ட திருத்தச்சட்டங்களுக்கு வழிவகை செய்கிறது. நாடாளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மை மற்றும் 50% மாநிலங்கள் தனி பெரும்பான்மை மூலம் திருத்தச்சட்டங்கள் மேற்கொள்ளலாம். ஆனால் வேறு சில உறுப்புகள் அரசமைப்பில் உள்ள சில வகைமுறைகளில் திருத்தச்சட்டம் மேற்கொள்ள நாடாளுமன்றத்தின் தனிப்பெரும்பான்மை மட்டுமே தேவை. அதாவது அது சட்டம் இயற்றல் நடவடிக்கையைப் போன்றே தனித்தனியாக ஒவ்வொரு சபையிலும், வருகை புரிந்து வாக்கு அளிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மை தேவை. எனவே அரசமைப்பு திருத்தச்சட்டங்களை மூன்று வழிகளில் மேற்கொள்ளலாம்:

1. நாடாளுமன்றத்தில் தனிப்பெரும்பான்மை

2. நாடாளுமன்றத்தில் சிறப்பு பெரும்பான்மை, மற்றும்

3. நாடாளுமன்றத்தில் சிறப்பு பெரும்பான்மை மற்றும் சரி பாதி மாநிலச் சட்டமன்றங்களால் ஏற்புறுதி செய்யப்படுவது.

1. நாடாளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மை:

உறுப்பு 368-இன்படி அரசமைப்பின் பெரும் எண்ணிக்கையிலான சட்ட விதிகள் நாடாளுமன்றத்தின் ஈரவைகளில் தனிப்பெரும்பான்மை மூலம் திருத்தி அமைக்கப்படலாம். விதிமுறைகள், பின்வருவனவற்றில் உள்ளடக்கம்:

- புதிய மாநிலங்களை அனுமதிப்பது மற்றும் உருவாக்குவது. மேலும் தற்போது இருக்கும் மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைப்பது, அவற்றின் பெயர்களில் மாற்றங்கள் செய்வது.
- மாநிலங்களில் மேலவையை உருவாக்குவது அல்லது நீக்குவது.
- குடியரசுத்தலைவர், மாநில ஆளுநர், சபாநாயகர், நீதிபதிகள் போன்றோருக்கு அரசமைப்பு இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊதியம், படிகள், சிறப்புச் சலுகைகளை நிர்ணயிப்பது.
- நாடாளுமன்றத்தில் அமர்விற்கு குறைந்த பட்ச உறுப்பினர் எண்ணிக்கையை முடிவு செய்வது.
- நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஊதியம் மற்றும் படிகள் நிர்ணயிப்பது.
- நாடாளுமன்ற நடைமுறை விதிகளை உருவாக்குதல்.
- நாடாளுமன்றம், நாடாளுமன்றக் குழுக்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஆகியோரின் சிறப்பு உரிமைகள்.
- நாடாளுமன்றத்தில் ஆங்கில மொழி பயன்பாடு.
- உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கையை முடிவு செய்தல்.
- உச்ச நீதிமன்றத்தின் மேலும் அதிக அதிகாரம் வழங்குதல்.
- அலுவல் ஆட்சி மொழியை பயன்படுத்துதல்.

12th_Political Science_Tamil_Unit_2.indd 47 04-06-2019 10:49:13

- குடியுரிமை அளித்தல் மற்றும் ரத்து செய்தல்.
- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தல்கள்.
- தொகுதிகளின் எல்லைகளை வரையறுத்தல்.
- ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதி.
- ஐந்தாம் அட்டவணை-பட்டியலின மற்றும் பழங்குடி இன பகுதிகளை நிர்வகித்தல்.
- ஆறாம் அட்டவணை-பழங்குடி இன பகுதிகளை நிர்வகித்தல்.

நாடாளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மை மூலமாக

அரசமைப்பின் பெரும்பாலான சட்ட விதிகள் நாடாளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மை மூலம் திருத்தி அமைக்கப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மை (அதாவது 50 சதவிகிதத்துக்கும் அதிகமாக) மற்றும் ஒவ்வொரு அவையிலும் வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்சமாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை. அவையின் மொத்த உறுப்பினர்கள் என்று குறிப்பிடுவது அவையில் உள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கையாகும்.

முன்வரைவின் மூன்றாவது வாசிப்பின் போது இந்த சிறப்பு பெரும்பான்மை தேவைப்படும்.

(i) அடிப்படை உரிமைகள்

(ii) அரசுக்கொள்கைகளை வழி நடத்தும் நெறிமுறைகள் மற்றும்

(iii) முதல் மற்றும் மூன்றாவது பிரிவுகளில் குறிப்பிடப்படாத மற்ற விதிமுறைகள். இவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளும்போது மேற்கண்ட வழிமுறை பின்பற்றப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மை மூலம் திருத்தம் செய்தலும் மற்றும் மாநிலங்களின் ஒப்புதலும்.

குடியுரிமையின் கூட்டாட்சி அமைப்புடன் தொடர்புடைய அரசமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பு நாடாளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மை மற்றும் 50% மாநிலச் சட்டமன்றங்களின் தனிப்பெரும்பான்மை ஒப்புதலுடன் திருத்தியமைக்கப்படலாம். மாநிலங்கள் முன்வரைவுக்கு தனது ஒப்புதலை அளிக்க எந்த விதமான கால வரையறையும் கிடையாது. இந்த வகையில் கீழ்கண்ட விதிமுறைகள் திருத்தி அமைக்கப்படலாம்.

- குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் அதன் முறைகள்.
- மத்திய மற்றும் மாநிலங்களின் நிர்வாக அதிகாரத்தின் விரிவாக்கம்.
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதி மன்றங்கள்.
- மத்திய மற்றும் மாநிலங்களிக்கிடையில் சட்டம் இயற்றும் அதிகாரத்தை பகிர்ந்தளித்தல்.
- ஏழாவது அட்டவணையில் அடங்கியுள்ள எந்த ஒரு பட்டியலும்.
- நாடாளுமன்றத்தில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம்.
- அரசமைப்பு மற்றும் அதன் நடைமுறைகளை திருத்தியமைக்கும் நாடாளுமன்றத்தின் அதிகாரம். (உறுப்பு-368)

2.6 மாநிலச் சட்டமன்றம்: கட்டமைப்பு, அதிகாரம் மற்றும் செயல்பாடுகள்


மாநிலச் சட்டமன்ற கட்டமைப்பு

அரசமைப்பின் கூட்டாட்சி கட்டமைப்பில் மாநிலங்கள் இரண்டாவது அடுக்கில் இருக்கிறது. ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலங்களுக்கு தனி அரசமைப்பு இருப்பதால்

12th_Political Science_Tamil_Unit_2.indd 48 04-06-2019 10:49:13

அவற்றைத் தவிர மற்ற மாநிலங்களை ஆட்சி செய்யும் விதிமுறைகள் அரசமைப்பு VI பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 152-லிருந்து 237 வரையிலான மாநிலச் சட்டமன்றங்கள் குறித்து முழுமையாக விளக்குகிறது. மாநிலச் சட்டமன்றத்தில் மக்கள் மன்றமாக சட்டசபை மட்டுமே அமையப்பெற்றிருந்தால் அது சட்டபேரவை என்று அழைக்கப்படும்.

பெரும்பாலான அதிகாரங்களும் மற்றும் செயல்பாடுகளும் கிட்டத்தட்ட ஒன்றியச் சட்டமன்ற அமைப்பைப் போன்றதே. சட்டமன்றம் மாநிலச் சட்டசபை மற்றும் சட்ட மேலவை இரண்டையும் கொண்டிருக்கும்.



ஆளுநர்

மாநில நிர்வாகத்தின் அரசமைப்புத் தலைவராக ஆளுநர் இருப்பார். மற்றும் மாநிலத்தின் செயல் அதிகாரம் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும். மாநிலத்தில் அனைத்து செயல்திட்ட நடவடிக்கைகளும் ஆளுநரின் பெயராலேயே நடைபெற வேண்டும். மாநிலத்தின் ஆளுநர் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுவார். ஆளுநர் ஐந்தாண்டு காலம் பதவியிலமர்த்தப்படுவார். அல்லது குடியரசுத்தலைவரின் விரும்பும் காலம் வரை பதவியிலிருப்பார்; அல்லது அவரைத் தொடர்ந்து வேறொருவர் பதவியில் அமர்த்தப்படும்வரை பதவியில் இருப்பார். ஆளுநராக பதவியில் அமர்த்தப்படுவதற்கான தகுதி அவர்/அவள் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். இலாபம் ஈட்டும் பதவி எதுவும் வகிக்கக் கூடாது. மேலும் 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். ஆளுநர் ஒரு முறைக்கு மேல் பதவியிலமர்த்தப்படலாம். அவசர தேவைக்காக (உடனடி) அல்லது ஒரு மாற்று ஏற்பாடாக ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக பதவியில் இருக்கலாம்.

ஆளுநரின் அதிகாரங்களும் பணிகளும்

ஒரு மாநில ஆளுநர் குடியரசுத்தலைவரைப் போலவே ஆட்சித்துறை, சட்டமன்றம், நீதித்துறை மற்றும் அவசரகால அதிகாரங்களைக் கொண்டிருப்பார். ஆளுநரின் நிர்வாக அதிகாரத்தில் அமைச்சரவை நியமனம், மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்கள் நியமனம், மாநிலத்தின் சட்டமன்றத்துக்கு ஆங்கிலோ-இந்திய இனத்திலிருந்து உறுப்பினர்களை நியமிப்பது போன்றவைகளும் அடங்கும். இலக்கியம், அறிவியல், கலை கூட்டுறவு இயக்கம் ஆகியவற்றில் சிறப்பு அறிவு படைத்தவர்களை மேலவை உறுப்பினர்களாக காலியாக இருக்கும் இடங்களில் நியமிக்கும் அதிகாரம் பெற்றவர்.

மேலும் ஆளுநர் மக்களவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 1/6 பங்கு உறுப்பினர்களை நியமிக்கமுடியும். ஆளுநர் "தன் விருப்புரிமைக்கு" ஏற்ப சிறப்பு அரசமைப்புக் கடமைகளை நிறைவேற்றும் அதிகாரம் கொண்டவர். அவ்வப்போது குடியரசுத்தலைவர் வழிகாட்டுதலின் அடிப்படையில் அவரது சிறப்பு கடமைகளை அதிகார பூர்வமாக நிறைவேற்றலாம். சில எதிர்பாராத சந்தர்ப்பங்களில் ஆளுநர் அமைச்சரவை ஆலோசனைகள் இன்றி

12th_Political Science_Tamil_Unit_2.indd 49 04-06-2019 10:49:13

செயல்படலாம். மேலும் ஆளுநர் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளிடையே பாலமாக செயல்படுகிறார். மாநிலத்தின் நிகழ்வுகளை ஆளுநர் உடனுக்குடன் குடியரசுத்தலைவருக்கு தெரிவிப்பார்.

ஆளுநர் மாநிலச் சட்டமன்றத்தின் ஒரு அங்கமாவார். ஆளுநரின் சட்ட அதிகாரம் சட்டமன்றத்தில் உரையாற்றுதல், மற்றும் செய்திகள் அனுப்புதல், சட்டமன்றத்தை கூட்டுதல், கூட்டத்தொடரை ஒத்திவைத்தல் மற்றும் மாநிலச் சட்டமன்றத்தைக் கலைத்தல் ஆகியவையாகும். எந்த ஒரு முன்வரைவும் சட்டமாக இயற்றப்படுவதற்கு ஆளுநரின் ஒப்புதல் தேவை. ஆளுநரின் மறுப்புரிமை அதிகாரங்கள் பின்வருமாறு:

1. அவர் ஒப்புதல் அளிப்பதை நிறுத்தி வைக்கலாம் அப்போது அது சட்டமாவது தவிர்க்கப்படும்

2. முன்வரைவைத் தவிர்த்து எந்த ஒரு முன்வரைவையும் மறு பரிசீலனைக்காக மாநிலச் சட்டமன்றத்துக்கு திருப்பி அனுப்பலாம். இதில் அவர்/அவள் மறுப்புரிமை அதிகாரத்தை இரண்டாவதுமுறை பயன்படுத்த முடியாது. மாநிலச் சட்டமன்றம் திருத்தியோ அல்லது திருத்தாமலோ மீண்டும் அந்த முன்வரைவை நிறைவேற்றி திரும்ப அனுப்பும் பட்சத்தில் அதற்கு ஒப்புதல் அளிப்பதைத்தவிர அவருக்கு வேறு வழியில்லை.

3. ஆளுநர், தேவை என்று கருதினால் ஒரு முன்வரைவை குடியரசுத்தலைவரின் கருத்துக்காக நிறுத்திவைக்கலாம்

ஆளுநரின் நீதித்துறை அதிகாரம் என்பது, மாநிலத்தின் செயலதிகாரத்துக்கு உட்பட்ட எந்த ஒரு குற்றத்துக்காகவும் எந்த ஒரு சட்டத்தின் தொடர்பாகவும் தண்டிக்கப்பட்ட ஒரு நபருக்கு மன்னிப்பளிப்பது, தண்டனையை நிறுத்தி வைப்பது, நிறைவேற்றுவதை தாமதப்படுத்துவது அல்லது தண்டனையைக் குறைப்பது போன்றவையாகும். இருப்பினும், ஆளுநருக்கு மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகளை பணியமர்த்தும் அதிகாரம் கிடையாது. ஆனால் இந்த விவகாரத்தில் குடியரசுத்தலைவர் அவரிடம் ஆலோசிக்க வேண்டிய உரிமையைக் கொண்டவர். உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை பணியில் அமர்த்தும் அதிகாரம் நீதித்துறை இந்தியக் குடியரசுத்தலைவர் அதிகாரத்தின் கீழ் வருகிறது.

குடியரசுத்தலைவருக்கு இருப்பதைப் போன்ற அவசரகால அதிகாரங்கள் ஆளுநருக்கு கிடையாது. ஆனால் அரசியல் சாசன சீர்குலைவு அல்லது மாநிலத்தில் ஏதாவது நெருக்கடி நேரும்போது குடியரசுத்தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட வேண்டுமென்றால் குடியரசுத்தலைவரை பதவியேற்குமாறு ஆலோசனை வழங்கி ஆளுநர் குடியரசுத்தலைவருக்கு அறிக்கை அனுப்ப இயலும். அவ்வாறான சூழ்நிலைகளில் ஆளுநர் குடியரசுத்தலைவரின் முகவராக செயல்படுகிறார். அப்போது 356 – உறுப்பின்படி மாநில அரசுப் பணிகளை அவர் மேற்கொள்ள முடியும்.

முதலமைச்சரின் செயல்பாடுகளும் அதிகாரங்களும்

அரசு, நிர்வாகம், மற்றும் அமைச்சரவைக்கு தலைமை ஏற்று நடத்த முதலமைச்சரை ஆளுநர் பதவியிலமர்த்துகிறார். அமைச்சரவை முதலமைச்சரின் பரிந்துரைப்படி ஆளுநரால் நியமிக்கப்படுகிறது. மக்கள் சார் அரசமைப்பு கொள்கைகளின் அடிப்படையில் ஈரவைகளிலும் உறுப்பினர் அல்லாத ஒருவரைகூட முதலமைச்சராக நியமிக்க முடியும். ஆனால் அவர்/அவள் பதவியிலமர்த்தப்பட்ட தினத்திலிருந்து ஆறு மாத காலத்துக்குள் ஏதாவதொரு தொகுதியில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

2.7 மாநிலச் சட்டமன்றத்தின் குழுக்கள் மற்றும் அதிகாரிகளும்

மாநிலச் சட்டமன்றத்தின் சபாநாயகர்

சட்டமன்ற உறுப்பினர்களால் சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். சட்டமன்றத்தை

12th_Political Science_Tamil_Unit_2.indd 50 04-06-2019 10:49:13

தலைமை தாங்கி நடத்துபவர் அவர்தான். சட்டமன்ற நடவடிக்கைகளை ஒழுங்காகவும், கண்ணியத்தை கடைபிடித்து நடக்கவும் மற்றும் அதன் நடவடிக்கைகளின் போது உறுப்பினர்களை கேள்வி கேட்க அனுமதிப்பது, முக்கியமான விஷயங்களில் மற்றும் நிதிநிலை அறிக்கை மற்றும் நிதி ஒதுக்கீடு சமயங்களில் பேச அனுமதிப்பது போன்ற கடமைகளையும் அதிகாரங்களையும் பெற்றவராவார். அரசியல் சாசனத்திலுள்ள விதிகள், சட்டமன்ற நடைமுறை விதிகள், பேரவைக்குள் சட்டமன்ற நடவடிக்கை முன்மாதிரிகள் ஆகியவற்றின் பொருள் விளக்குவது சபாநாயகர்தான் சட்டமன்ற நடவடிக்கைகளின் போது விதிகள் நடைமுறைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் மீறப்படுமேயானால் சட்டமன்றச் கூட்டத்தொடரை ஒத்திவைக்கவும், தற்காலிகமாக நிறுத்திவைக்கவும் மற்றும் மீண்டும் தொடரச் செய்யவும் மற்றும் கூட்டுத்தொடரில் பங்குபெறாமல் உறுப்பினர்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் சபாநாயகருக்கு அதிகாரம் உண்டு. சட்டமன்றம் நடைபெறும்பொழுது சபாநாயகர் பொதுவாக நடுநிலை மற்றும் பாரபட்சமின்மையை மேற்கொள்ளுவார். ஒரு முன்வரைவு, மற்றும் தீர்மானத்தின் மீது முடிவெடுக்க முடியாமல் வாக்கு சமநிலையிலிருந்தால் சபாநாயகரின் வாக்கு மிக முக்கியத்துவம் பெறுகிறது. உறுப்பினர்களின் நடத்தையை ஒழுங்குபடுத்துவதில் மற்றும் சட்டமன்ற நடவடிக்கைகள் குறித்து அல்லது சட்டமன்றத்தில் ஒழுங்கை பராமரிப்பது ஆகியவற்றில் சபாநாயகரின் முடிவே இறுதியானது. அம்மாதிரி விஷயங்களில் சபாநாயகரின் நடவடிக்கைகளில் நீதிமன்றம் குறுக்கிடமுடியாது. அனைத்து குழுக்களின் தலைவர்களையும் சபாநாயகர்தான் நியமிக்கிறார் மற்றும் அவர்களின் செயல்பாடுகளையும் மேற்பார்வையிடுகிறார்.

துணை சபாநாயகர்

சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களில் ஒருவரையே துணை சபாநாயகராகவும் தேர்ந்தெடுப்பார்கள். சபாநாயகர் அவையில் இல்லாத பொழுது, துணை சபாநாயகர், சபாநாயகரின் கடமைகளையும் பொறுப்புகளையும் செயல்படுத்துவார், அவைக்குத் தலைமை தாங்குவார். துணை சபாநாயகருக்கு, சபாநாயகருக்கு சமமான அதிகாரங்கள் அவைக்குள் உண்டு. சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் இருவரும் அவையில் இல்லாத பொழுது, அவையில் உள்ள மூத்த உறுப்பினர் யார் வேண்டுமானாலும் அவைக்குத் தலைமை தாங்கலாம்.

நாடாளுமன்றக் குழுக்கள்

நாடாளுமன்றக் குழுக்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். நிலைக் குழுக்கள் மற்றும் தற்காலிகக் குழுக்கள். நிலைக் குழுக்கள், நிரந்தரமானவையாகும், தொடர்ந்து பணியில் இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் புதிதாக உருவாக்கப்படும். ஆனால் தற்காலிக குழுக்கள் நிரந்தரமானவை அல்ல. ஒரு குறிப்பிட்ட பணிக்காக உருவாக்கப்படும். அப்பணி நிறைவடைந்தவுடன் அவை கலைக்கப்படும்.

நிலைக் குழுக்கள்

நிலைக் குழுக்கள் அவற்றின் பணி தன்மைக்கேற்ப ஆறு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

1. நிதிக் குழுக்கள்

அ) பொதுக் கணக்குக் குழு

ஆ) மதிப்பீட்டுக் குழு

இ) பொதுத்துறை நிறுவனக் குழு

2. துறைசார் நிலைக் குழுக்கள்

3. விசாரணைக் குழுக்கள்

அ) மனுக்கள் குழு

ஆ) சிறப்புரிமைக் குழு

இ) நன்னெறிக் குழு

12th_Political Science_Tamil_Unit_2.indd 51 04-06-2019 10:49:13

4. கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக் குழுக்கள்

அ) அரசாங்க உத்திரவாதங்களுக்கான குழு

ஆ) துணைச் சட்டங்களுக்கான குழு

இ) அட்டவணையில் எழுத்தப்பட்ட ஆவணங்களின் குழு

ஈ) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான குழு

உ) பெண்கள் அதிகாரமளித்தலுக்கான குழு

ஊ) ஆதாயம் தரும் பதவிகளுக்கான இணைக் குழு

5. அவையின் தினசரி அலுவல்களுக்கான குழுக்கள்

அ) அலுவல் ஆலோசனைக் குழு

ஆ) தனிநபர் முன்வரைவு மற்றும் தீர்மானங்களுக்கான குழு

இ) விதிகள் குழு

ஈ) சட்டமன்றக் கூட்டத்தொடரில் வராத உறுப்பினர்கள் குழு

6. சேவை குழு (உறுப்பினர்களுக்கு வசதிகள் மற்றும் சேவைகள் தொடர்பான குழு)

அ) பொது தேவைகள் குழு

ஆ) அவை குழுக்கள்

இ) நூலகக் குழு

ஈ) உறுப்பினர்களுக்கான ஊதியம் மற்றும் மற்ற படிகளுக்கான இணை குழு

தற்காலிகக் குழுக்கள்

தற்காலிகக் குழுக்கள் இரண்டு வகைப்படும். அவை, விசாரணை குழு மற்றும் ஆலோசனை குழு.

மதிப்பீட்டுக் குழு: பரிசோதகருக்கும் மதிப்பீட்டாளருக்கும் அறிவுறுத்துவது மற்றும் பொருளாதாரம் சார்ந்த கொள்கைகள், மாற்றுக் கொள்கைகள், நிர்வாக சீர்திருத்தங்கள், மதிப்பீடு ஆய்விலுள்ள வெவ்வேறு திட்டத்திற்காக மாநிலத்திற்கு உள்ளும் வெளியிலும் பயணம் மேற்கொள்வது போன்ற விடயங்களில் பரிந்துரை அளிப்பது ஆகியவை குழுவின் முக்கிய பொறுப்பகளாகும்

பொதுக் கணக்குக் குழு: மாநிலத்தின் ஒதுக்கீடு கணக்குகளையும் இந்திய அரசுக் கணக்குத் தணிக்கைத் தலைவரின் (குடிசார்) அறிக்கையையும் ஆய்வு செய்வதே குழுவின் முக்கிய பணி. மேலும் வருவாய் பற்றுச்சீட்டுகளும் பணப்பட்டுவாடாவும் எந்த சேவைக்காக அல்லது பயன்பாட்டிற்காக கணக்கு ஏற்படுத்தப்பட்டதோ அந்த கணக்கு தொடர்புடையதாக பற்றுரிமை உள்ளதா என்றும் சரிபார்ப்பதே இந்த குழுவின் வேலை.

பொதுத்துறை நிறுவனங்களின் குழு: தணிக்கை அறிக்கை கணக்குகளையும் பொதுத்துறை நிறுவன கணக்குகளையும் அவ்வப்போது ஆய்வு செய்வதற்காக இந்தக் குழு உள்ளது. மேலும் பொதுத்துறை நிறுவனங்களின் தன்னாட்சியையும் பயன்திறனையும் இந்தக் குழு ஆய்வு செய்கிறது. மேலும் நல்ல வியாபாரக் கொள்கைகளையும் மதிநுட்ப வணிக நடைமுறைகளையும் பின்பற்றி பொதுத்துறை நிறுவனங்களின் அலுவல்கள் நடைபெறுகிறதா என்று கருத்தில் கொள்கிறது. மேலும் பொதுத்துறை நிறுவனங்களின் குறித்த இந்திய அரசுக் கணக்குத் தணிக்கைத் தலைவரின் அறிக்கைகளை இந்தக் குழு ஆய்வு செய்கிறது. மேலும் நிறுவனங்களின் செயல்பாட்டை நோக்கி எல்லைவரை ஆய்வு செய்து அதிகாரிகளிடம் விசாரித்தோ அப்படிப்பட்ட நிறுவனங்களின் சம்பந்தப்பட்ட ஆதாரத்தைப் பெற்றோ இந்தக் குழு அவைக்கு பரிந்துரைகளை அளிக்கிறது.

12th_Political Science_Tamil_Unit_2.indd 52 04-06-2019 10:49:13

அருஞ்சொற்பொருள்



❖ **ஓரவை:** ஒரு சட்டப்பேரவையை மட்டுமே மக்களவையாக கொண்டுள்ள தேசிய சட்டமன்றம் ஓரவை என்று அழைக்கப்படும்.

❖ **ஈரவை:** சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவை கொண்டுள்ள சட்டமன்ற அமைப்பு ஈரவை முறை என்று அழைக்கப்படும்.

❖ **உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை:** மக்களவை மாநிலங்களவைக் கூட்டத்தொடர்களை நடத்துவதற்கு மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் பத்தில் ஒரு பங்கு எண்ணிக்கை இருக்க வேண்டும்.

❖ **சட்டமுன்வரைவு:** ஒரு சட்டம், அது சட்டமாவதற்கு முந்தைய நிலையில் இது பரிசீலனைக்காக நாடாளுமன்றத்தில் "சட்ட முன்வரைவுவாக" முன்மொழியப்படுகின்றது. அந்த சட்ட முன்வரைவவை அரசமைப்புக் கட்டமைப்புக்குள் முழுமையாக அறிந்துகொள்ளும் பொருட்டு ஒரு முழுமையான விவாத்திற்கு நாடாளுமன்றம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

❖ **திருத்தச்சட்டம்:** இந்திய அரசமைப்புக்கோட்பாட்டின் அடிப்படை கட்டமைப்பு கோட்பாட்டை மாற்றாமல் மாறும் நிலைமைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்றவாறு சமகாலத்திற்கு பொருத்தமாக திருத்தக்கூடிய ஒரு தனித்துவமான ஏற்பாட்டை இந்திய அரசியமைப்பைக் கொண்டுள்ளது. அந்த வகையில் நடைமுறையில் உள்ள சட்டங்களை திருத்துவது அல்லது மாற்றுவது சட்டத் திருத்தம் ஆகும்.

❖ **கண்டன தீர்மானம்:** குடியரசுத்தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், உச்ச நீதி மன்ற நீதிபதிகள் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை பதவி நீக்கம் செய்வதற்கான நீதித்துறைச் சார்ந்த பணிகளும் நாடாளுமன்றத்திற்கு உள்ளது. அவர்களுக்கெதிராக கண்டன தீர்மானம் ஈரவைகளிலும் நிறைவேற்றினால் அவர்களின் பதவி பறிபோகும்.

❖ **உறுப்பினர்களுக்கான விலக்களிப்புகள்:** அவையின் எல்லைக்குள் கைதுக்கு எதிரான பாதுகாப்பு

❖ **கூட்டுக் கூட்டத்தொடர்:** சிறப்பு நிகழ்வுகள் அல்லது சில சட்ட நடவடிக்கைகளில் ஈரவைகளுக்கு இடையே கருத்து வேற்றுமை ஏற்படும் சமயங்களில் நாடாளுமன்றத்தின் கூட்டு கூட்டத்தொடருக்கு மக்களவையின் சபாநாயகர் தலைமை தாங்குவார்.

❖ **கூட்டத்தொடர்:** சட்டமுன் வரைவுகளுக்கான ஒப்புதல் அளித்தல், தீர்மானங்கள் ஆகியவை போன்ற பல்வேறு செயல்குறிப்புக்கள் குறித்து விவாதம் நடத்துவதற்காக, திட்டமிடப்பட்ட ஒரு கால வரையறையில் நாடாளுமன்றம் கூடுவதைத்தான் ஒரு கூட்டத்தொடர் என்று அழைக்கிறோம்.

❖ **நம்பிக்கையில்லா தீர்மானம்:** பிரதமர் / முதலமைச்சர் அரசாங்கத்திற்கு தலைமைத் தாங்குவதற்காக மக்களவை/ சட்டமன்றத்தில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவு மற்றும் நம்பிக்கையை பெருவதற்கான வழிமுறையாகும். ஒருவேளை அந்த தீர்மானம் வெற்றி பெற்றால், மொத்த அரசாங்கமும் வெளியேற நேரிடும், புதிய தேர்தலை சந்திக்க நேரிடும்.

12th_Political Science_Tamil_Unit_2.indd 53 04-06-2019 10:49:13

I. சரியான பதிலை தேர்வு செய்யவும்

JF2GP5

1. சட்டமன்றம் என்பது _____

அ) சட்டம் இயற்றுகின்ற உச்ச அமைப்பு ஆ) உயர் நீதிமன்றம்
இ) நாடாளுமன்றம் ஈ) சட்ட ஆணையம்

2. தேசிய சட்டமன்றம்_____ என்று அழைக்கப்படும்

அ) உச்ச நீதிமன்றம் ஆ) உயர் நீதிமன்றம்
இ) நாடாளுமன்றம் ஈ) சட்டமன்ற பேரவை

3. இந்தியாவில் நாடாளுமன்றம்_____ கொண்டுள்ளது

அ) குடியரசுத்தலைவர் மற்றம் பிரதமர்
ஆ) குடியரசுத்தலைவர் மற்றும் மாநிலங்களவை
இ) குடியரசுத்தலைவர் மற்றும் மக்களவை
ஈ) குடியரசுத்தலைவர், மக்களவை மற்றும் மாநிலங்களவை

4. மக்களவை உறுப்பினர்கள்_____ஆல் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

அ) நாடாளுமன்றத் தொகுதிகளிலுள்ள மக்கள்
ஆ) மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள்
இ) குடியரசுத்தலைவரால் நியமனம்
ஈ) மேற்கண்ட எவரும் இல்லை

5. உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளை பதவி நீக்கம் செய்யும் முறை _____ என்று அழைக்கப்படுகிறது.

அ) கண்டன தீர்மானம் ஆ) பதவி நீக்கம்
இ) இடை நீக்கம் ஈ) பதவி விலகல்

6. மாநிலங்களவையின் தலைவர் யார்?

அ) சபாநாயகர் ஆ) பிரதமர்
இ) குடியரசுத்தலைவர் ஈ) குடியரசுத் துணைத்தலைவர்

7. அரசாங்கத்தின் தலைவர்_____

அ) குடியரசுத்தலைவர் ஆ) பிரதமர்
இ) சபாநாயகர் ஈ) குடியரசுத் துணைத்தலைவர்

8. அரசின் தலைவர்_____

அ) குடியரசுத்தலைவர் ஆ) பிரதமர்
இ) சபாநாயகர் ஈ) குடியரசுத் துணைத்தலைவர்

12th_Political Science_Tamil_Unit_2.indd 54 04-06-2019 10:49:13

9. மாநிலங்களவை _____ உரிமைகள் மற்றும் நலன்கள் பாதுகாக்கும் நிறுவனமாகும்

அ) நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ) குடியரசுத்தலைவர்

இ) மாநிலங்கள் ஈ) குடியரசுத் துணைத்தலைவர்

10. மாநிலங்களவை உறுப்பினர்_____தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அ) மக்கள் ஆ) அந்தந்த மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினர்களால்

இ) கட்சிகளின் நியமனம் மூலம் ஈ) குடியரசுத்தலைவரின் நியமனம்

11. மாநிலங்களவையின் அலுவல் வழி தலைவர் யார்?

அ) இந்திய குடியரசுத்தலைவர் ஆ) இந்திய குடியரசுத் துணைத்தலைவர்

இ) இந்திய பிரதமர் ஈ) சபாநாயகர்

12. நாடாளுமன்றத்தின் எந்த அவை, நாடாளுமன்றத்தின் நிரந்தர அவையாக அறியப்படுகிறது. அது முழுமையாக கலைக்கப்படுவதில்லை

அ) மக்களவை ஆ) மாநிலங்களவை

இ) அமைச்சரவை ஈ) அமைச்சர்கள் குழு

13. நாடாளுமன்றத்தின் எந்த அவை நிதி முன்வரைவை (சட்டமுன் வரைவு) நிறைவேற்ற அதிகாரம் கொண்டுள்ளது.

அ) மக்களவை ஆ) மாநிலங்களவை

இ) அமைச்சரவை ஈ) அமைச்சர்கள் குழு

14. மக்களவை உறுப்பினரின் குறைந்தபட்ச வயது என்ன?

அ) 25 வயது ஆ) 30 வயது

இ) 40 வயது ஈ) 50 வயது

15. இந்திய சட்டமன்ற அமைப்பு_____ என்று அழைக்கப்படுகிறது.

அ) ஒற்றை அவை ஆ) ஈரவை

இ) முடியாட்சி ஈ) மேற்கண்ட எதுவும் இல்லை

16. மாநிலத்தின் ஆளுநர்_____ ஆவர்

அ) மாநிலத்தின் அரசியல் அமைப்பு தலைவர் ஆ) அரசாங்கத்தின் தலைவர்

இ) அமைச்சரவை தலைவர் ஈ) கட்சியின் தலைவர்

17. மாநிலத்தின் முதலமைச்சர்_____ஆவர்

அ) அரசின் தலைவர் ஆ) அரசாங்கத்தின் தலைவர்

இ) அமைச்சரவை தலைவர் ஈ) கட்சியின் தலைவர்

12th_Political Science_Tamil_Unit_2.indd 55 04-06-2019 10:49:13

18. மாநிலத்தின் செயல் அதிகாரம்_____ உள்ளது.

அ) முதலமைச்சர் ஆ) முதன்மை செயலாளர்


இ) ஆளுநர் ஈ) உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி

19. மாநிலத்தின் ஆளுநர்_____ நியமிக்கப்படுவார்.

அ) முதலமைச்சரால் ஆ) குடியரசுத்தலைவரால்

இ) உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியால் ஈ) பிரதமரால்

20. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை கவனி



கீழ்க்கண்டவற்றுள் எவை 'X' குறியிடப்பட்ட இடத்தில் சரியாக பொருந்தும்?

அ) நாடாளுமன்ற உறுப்பினர்களாக இல்லாத அமைச்சர்கள், தாங்கள் பதவியேற்ற 6 மாதத்திற்குள் ஏதேனும் ஒரு அவையில் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.

ஆ) 20 நியமன உறுப்பினர்களுக்கு மேல் மிகாமல்

இ) 20 ஒன்றிய ஆளுகைக்குட்பட்டபகுதி பிரதிநிதிகளுக்கு மேல் மிகாமல்

ஈ) நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் நடவடிக்கைகளில் பங்கெடுப்பதற்கும் பேசுவதற்கும் உரிமை உடைய தலைமை சட்ட அதிகாரி

II. பின்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமாக பதிலளிக்கவும்

1. ஈரவை முறை என்றால் என்ன?

2. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் முன்வரைவுகளின் (சட்டமுன் வரைவு) வகைகள் என்ன?

3. உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை- வரையறுக்கவும்

4. நிதி முன்வரைவு - வரையறுக்கவும்

12th_Political Science_Tamil_Unit_2.indd 56 04-06-2019 10:49:14

5. தனிநபர் முன்வரைவு – வரையறுக்கவும்

6. கூட்டு கூட்டத்தொடர் அழைப்பிற்கான நிபந்தனைகள் என்ன?

III. பின்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக பதிலளிக்கவும்

1. அரசமைப்பில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்களின் பட்டியல் என்ன?

2. அரசமைப்பில் திருத்தச்சட்ட ஏற்பாடு என்றால் என்ன?

3. திருத்தச்சட்டகளின் வகைகளை எழுதுக.

4. மாநிலச் சட்டமன்றத்தின் கட்டமைப்பு என்றால் என்ன?

5. சட்டமன்றத்தின் அதிகாரங்கள் யாவை?

6. மாநிலங்களவையின் சிறப்பு அதிகாரங்கள் யாவை?

7. சட்டமன்றத்தில் சபாநாயகர் (அவைத் தலைவர்) பங்கு என்ன?

IV. பின்வரும் கேள்விகளுக்கு விரிவாக பதிலளிக்கவும்

1. தேசிய சட்டமன்றத்தின் பங்கு மற்றும் பணிகளை (பொறுப்புகள்) விளக்குக.

2. மக்களவையின் அதிகாரங்கள் என்ன?

3. நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் நடைமுறை நிலைகளை பற்றி கட்டுரை எழுதுக.

4. திருத்தச்சட்டத்தின் செயல்முறை மற்றும் வழிமுறைகளை பற்றி விளக்குக.

5. மாநில ஆளுநரின் அதிகாரங்கள் யாவை?

6. முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் குழுவின் அதிகாரங்கள் பற்றி கட்டுரை ஒன்று எழுதுக

7. அரசு நிர்வாகத்தை நிறைவேற்ற நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

மேற்கோள் நூல்கள்

- Austin, Granville., "The Indian Constitution: Cornerstone of a Nation" Oxford University Press, New Delhi. 2010
- Bakshi, P.M., "The Constitution of India", Universal Publications, New Delhi, 2005.
- Subhash C. Kashyap, "Concise Encyclopedia of Indian Constitution", Vision Books
- Subhash C. Kashyap, "Our Constitution", National Book Trust, New Delhi, 2000
- D. D. Basu, "Introduction to the Constitution of India", New Delhi: Lexis Nexis.2012
- S. Chaube, "The Making and Working of the Indian Constitution", Delhi: National Book Trust. 2009.
- Andrew Heywood (2002), Politics (Second Edition), Palgrave Foundations, New York.

12th_Political Science_Tamil_Unit_2.indd 57 04-06-2019 10:49:14

அலகு 3

ஆட்சித்துறை



WBNBE1

கற்றலின் நோக்கங்கள்

- குடியரசு வடிவிலான அரசைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.
- அரசமைப்பில் குடியரசுத்தலைவர் மற்றும் குடியரசுத் துணைத்தலைவரின் நிலை பற்றி புரிந்து கொள்ளுதல்.
- குடியரசுத்தலைவர் மற்றும் குடியரசுத் துணைத்தலைவர் பதவிகளுக்கான தேர்தல் நடைமுறைகளை பற்றி புரிந்து கொள்ளுதல்.
- குடியரசுத்தலைவர் மற்றும் குடியரசுத் துணைத்தலைவரின் அதிகாரங்களையும் செயல்முறைகளையும் பற்றி அறிதல்.
- நாடாளுமன்ற ஆட்சிமுறையைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.
- மாநில ஆட்சிக் குழுவின் பண்புகளை அறிந்து கொள்ளுதல்.
- அரசு நிர்வாகத்தில் ஆளுநரின் பங்கை பற்றி புரிந்து கொள்ளுதல்.
- முதலமைச்சரின் பங்கு பற்றி விவாதித்தல்.

3.1 அறிமுகம்

அரசின் கட்டமைப்பு

ஒன்றிய ஆட்சித்துறை

- இந்தியக் குடியரசுத்தலைவர்
- இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர்
- பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவைக் குழு

இந்திய அரசமைப்பின் முன்னுரையில் இந்தியாவை ஒரு இறையாண்மை, சமதர்ம, மதசார்பற்ற, மக்களாட்சி மற்றும் குடியரசு பெற்ற நாடு என்று அறிவிக்கிறது. இங்கு இங்கிலாந்தைப் போல் முடியாட்சியாக அதாவது அரசரோ, அரசியோ மன்னர்களாக ஆட்சியில் இல்லாமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால்தான் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்தியக் குடியரசுத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேசிய அரசின் அனைத்து அரசமைப்புத் துறைகளின் தலைவராக இந்தியக் குடியரசுத்தலைவர் விளங்குகிறார். (எ.கா.) சட்டம், நிர்வாகம், நீதி மற்றும் ஆயுதப்படை ஆகிய துறைகளின் செயல்பாடுகளை குடியரசுத்தலைவர் மேற்பார்வையிடுகிறார். மேலும் அரசமைப்புச் சட்டங்களுக்குட்பட்டு இத்துறைகள் செயல்படுவதை இவர் உறுதிப்படுத்துகிறார். இந்திய நாட்டின் முழு அரசமைப்பு, பிரதிநிதித்துவம் மற்றும் மாநில செயல்பாடுகளை ஒவ்வொரு மண்டலத்திலும் குடியரசுத்தலைவர் நிலை நிறுத்துகிறார். ஆனால் அமெரிக்க குடியரசுத்தலைவரை போல் உண்மையான செயல் அதிகாரம் இல்லாமல் பெயரளவில் மட்டும் அதிகாரத்தைக்

12th_Political Science_Tamil_Unit_3.indd 59 04-06-2019 18:14:52

கொண்டுள்ளார். குடிரயரசுத்தலைவரது பெயரால், அவரது தலைமையில் அல்லது மேற்பார்வையில் நிர்வாகம் நடைபெறுகின்றதே தவிர, நேரடியான, செயலளவிலான நிர்வாகம் பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் குழுவிடம்தான் உள்ளது. அந்த அமைச்சரவையும் நாடாளுமன்றத்திற்கு பொறுப்புடையது. இதைத்தான் நாடாளுமன்ற ஆட்சிமுறை என்கிறார்கள். மேலும் நடைமுறையில் உண்மையான அதிகாரங்கள் அனைத்தும் பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவைக் குழுவிடம் உள்ளது. இவ்வாறு இந்தியக் குடியரசானது அமெரிக்க குடியரசிலிருந்து வேறுபடுகிறது.

3.2 குடியரசுத்தலைவர்

இந்தியத் தேசத்தின் தலைவராக குடியரசுத்தலைவர் இருக்கிறார். அவர் இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார். மேலும், தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, மற்றும் நிலைத்தன்மை சின்னமாக அவர் திகழ்கிறார்.

குடியரசுத்தலைவர் தகுதி மற்றும் தேர்தல்

உறுப்பு 58;

1. இந்தியக் குடியரசுத்தலைவருக்கான தகுதிகள்

- இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- 35 வயதை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும்.
- ஒரு மக்களவை உறுப்பினராவதற்கான அனைத்து தகுதிகளும் கொண்டிருத்தல் வேண்டும்.

2. மத்திய மாநில அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ அவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள எந்த ஒரு அமைப்பிலோ ஆதாயம் தரக்கூடிய எந்த பதவியில் இருந்தாலும், அவர் குடியரசுத்தலைவர் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவராகிறார்.

மேலும் அரசமைப்பின் 52-வது உறுப்பு குடியரசுத்தலைவர் பதவிக்கான குறைந்தபட்சம் 50 தேர்வுக்குழு வாக்காளர்களால் முன்மொழிவு செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் வேட்பாளர் தேர்வுக் குழுவின் 50 உறுப்பினர்கள் மூலம் வழிமொழியப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. மேலும் ஒவ்வொரு வேட்பாளரும் ₹.15,000/-ஐ இந்திய ரிசர்வ் வங்கியில் வைப்பு தொகையாக கட்ட வேண்டும்.

இந்திய அரசமைப்பின் 52-வது உறுப்பு இந்தியாவிற்கு ஒரு குடியரசுத்தலைவர் இருக்க வேண்டுமென்கிறது.
உறுப்புரிமையின் 53-வது உறுப்பு இந்திய ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தை அவருக்கு அளிப்பதுடன் அவற்றை நேரடியாகவோ மறைமுகமாகவோ செயல்படுத்த வகை செய்கிறது.

பதிவான வாக்குகளில் ஆறில் ஒரு பங்கை ஒரு வேட்பாளர் பெறவில்லையெனில் இந்த தொகை அவருக்கு திருப்பித்தரப்படாது.

இந்தியக் குடியரசுத்தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுவதில்லை. மாறாக, கீழ்கண்டவர்களை உறுப்பினர்களாக கொண்ட வாக்காளர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்:

- நாடாளுமன்றத்தின் ஈரவைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.
- மாநிலங்களின் சட்டசபைகளின் கூட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.
- டெல்லி மற்றும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசங்களின் சட்டமன்றங்களுக்கு. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்



செயல்பாடு

குடியரசுத்தலைவர் தேர்தலில் வாக்களித்த மொத்த வாக்காளர்கள் 10,00,000 பேர் ஆகவும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒன்று என்பதாகவும் இருந்தால் தேர்தல் வாக்குகளின் ஒதுக்கீடு எப்படி இருக்கும் என்று கண்டுபிடி.

12th_Political Science_Tamil_Unit_3.indd 60 04-06-2019 18:14:52

குடியரசுத்தலைவர் தேர்தல், ஒற்றை மாற்றத்தக்க வாக்கெடுப்பு மற்றும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் நடைபெறுகிறது. இந்த முறை வெற்றிகரமான வேட்பாளர் முழுமையான பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெறுகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது.

தேர்தல் வெற்றி = $\frac{\text{தேர்தலில் வாக்களிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை}}{\text{தேர்வு செய்யப்பட வேண்டிய வேட்பாளர் எண்ணிக்கை} + 1}$

உரையாடல்

பெண் – ஆண்: தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்கப்படுவதற்கு, ஒரு வேட்பாளர் அறுதிப் பெரும்பான்மையான வாக்கு எண்ணிக்கையைப் பெற வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா? .....

இந்த குறைந்த பட்ச அறுதி பெரும்பான்மையான வாக்குத்தேவை என்பது என்ன?

மேலே தரப்பட்டுள்ள வழிமுறையைப் பாருங்கள் .....

யா.....யா ..... புரிந்தது .... ஹ ஹ ...

விவாதம்



- நம்மிடம் எழுதப்பட்ட அரசமைப்பு உள்ளது. அதில் ஒவ்வொரு அரசமைப்பு பதவிக்கும் உரிய பொறுப்புகளும் வரையறைகளும் தெளிவாக தரப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத்தலைவரை தேசத்தின் தலைவராக கொண்ட ஒரு குடியரசில் நாம் உள்ளோம். அதே சமயம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட மக்களவைக்கு பொறுப்புடைய அமைச்சரவையைக் கொண்ட நாடாளுமன்ற மக்களாட்சியாகவும் உள்ளோம்.
- ஆசிரியர் வகுப்பை இரண்டு குழுவாக பிரிக்கவும். குடியரசுத்தலைவர் மற்றும் பிரதமர் மற்றும் அவருடைய குழுவின் தனித்துவத்தை விவாதத்திற்கு ஏற்பாடு செய்யவும்.

தேர்தல்போது ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்குச்சீட்டு மட்டுமே தரப்படுகிறது. வாக்காளர், வாக்களிக்கும் வேட்பாளர்களின் பெயர்களுக்கு எதிராக *1,2,3,4* போன்றவற்றைக் குறிப்பிடுவதன் மூலம் தனது விருப்பங்களை சுட்டிக்காட்ட வேண்டும். வாக்காளர், வேட்பாளர்களை தமது விருப்பத்திற்குகேற்ப *1,2,3,4* என வரிசைப்படி முன்னுரிமைகளைக் குறிக்கிறார்கள். முதல் கட்டத்தில், முதல் விருப்பம் வாக்குகள் கணக்கிடப்படுகின்றன. ஒரு வேட்பாளர் இந்த கட்டத்தில் தேவையான ஒதுக்கீட்டைப் பெற்றால், அவர் தேர்ந்தெடுக்கப்படுவர். இல்லையெனில், வாக்குகளை மாற்றுவதற்கான செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது. வாக்கெடுப்பில் முதல் விருப்பவாக்கில் குறைந்த வாக்குகள் பெற்று வேட்பாளரை நீக்கிவிட்டு அவர்களின் இரண்டாம் விருப்ப வாக்குகள் மற்றவர்களுக்கு மாற்றப்படுகிறது. ஒரு வேட்பாளர் தேவைப்படும் வாக்குகள் கிடைக்கும் வரை இந்தச் செயல்முறை தொடர்கிறது.

குடியரசுத்தவைரின் பதவிப் பிரமாணம்

குடியரசுத்தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற ஒருவர் குடியரசுத்தலைவராக பதவி பிரமாணம் ஏற்கிறார். கீழ்க்கண்ட உறுதி மொழிகளைப் பதவி பிரமாணத்தின்போது அவர் அளிக்கிறார்.


- பதவியில் உண்மையுடன் பணியாற்றுவது.
- அரசமைப்பு மற்றும் சட்டத்தைப் பாதுகாப்பது,
- இந்தியாவின் மக்கள் சேவை மற்றும் நல்வாழ்விற்காக தன்னை அர்ப்பணிப்பது ஆகியவற்றை உறுதிமொழியாக ஏற்கிறார்.

12th_Political Science_Tamil_Unit_3.indd 61 04-06-2019 18:14:52

இந்தியாவின் தலைமை நீதிபதி குடியரசுத்தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார். தலைமை நீதிபதி இல்லாதபோது உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதி அப்பதவி பிரமாணத்தை செய்து வைக்கிறார்.

செயல்பாடு

கேலிச்சித்திரத்தை உற்று நோக்கி, இச்சூழலை அடையாளம் காண்க.



நன்றி: தி இந்து 26.7.2006

கொடுக்கப்பட்டுள்ள கேலிச்சித்திரம் சித்தரிப்பது என்ன?

குடியரத்தலைவருக்கான வசதிகள் அல்லது சலுகைகள்

- அவரது அதிகாரப்பூர்வ இல்லத்தினை (ராஷ்டிரபதி பவன்) வாடகையின்றி பயன்படுத்த அவருக்கு உரிமையுண்டு.
- நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து ஊதியம், படிகள், தனிஉரிமைகளையும் அனுபவிக்க அவருக்கு உரிமையுண்டு.
- குடியரசுத்தலைவர் மேலும் சில சலுகைகளும் விதி விலக்குகளும் தரப்பட்டுள்ளன.அவர்தனதுஅதிகாரப்பூர்வ நடவடிக்கைகளுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளினின்று தனிப்பட்ட விலக்கு பெறுகிறார். அவரது பதவி காலத்தின் போது, அவருக்கு அனைத்து குற்றவியல் நடவடிக்கைகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறது.

பதவிக்காலம், பதவி நீக்கம், பதவியை நிரப்புவது பற்றிய விதிமுறைகள்

பதவிக்காலம்

குடியரசுத்தலைவர் தனது அலுவலகத்தில் நுழைந்த தேதி முதல் ஐந்து வருட காலத்திற்கு குடியரசுத்தலைவராக பதவி வகிப்பார் என்று இந்திய அரசமைப்பு உறுப்பு 56 கூறுகிறது. எனினும் குடியரசுத் துணைத்தலைவரிடம் பதவி விலகல் கடிதத்தை கொடுப்பதன் மூலம் எந்த நேரத்திலும் தனது பொறுப்பிலிருந்து விலக முடியும். நாடாளுமன்றத்தால் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலமும், இதைத்தவிர குற்றம் சாட்டப்படுவதன் மூலமும் அவரை பதவி நீக்கம் செய்ய முடியும். குடியரசுத்தலைவராக இருப்பவர் மீண்டும் அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட தகுதியுடையவராவார்.

தமது பதவியை குடியரசுத்தலைவர் ஐந்து வருட காலத்திற்கு அல்லது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத்தலைவர் பதவி ஏற்கும் வரை பொறுப்பில் தொடரலாம்.

பதவி நீக்கம்

அரசமைப்பின் 61-வது உறுப்பு, குடியரசுத்தலைவர் மீது குற்றம் சாட்டி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு ஒரு விரிவான நடைமுறைகளை தந்துள்ளது.

குடியரசுத்தலைவர் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு முதலாவதாக, நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையிலும், அதன் மொத்த உறுப்பினர்களில் நான்கில் ஒரு பகுதியினரால் கையொப்பமிடப்பட்ட தீர்மானத்தின் மூலம் ஒரு குற்றச்சாட்டை முன்வைக்க வேண்டும். குறைந்தபட்சம் 14 நாட்கள் முன்கூட்டியே அறிவிப்பு வழங்குவதன்

12th_Political Science_Tamil_Unit_3.indd 62 04-06-2019 18:14:53

மூலம், அத்தகைய தீர்மானம் ஒரு சபையால் விவாதிக்கப்படும் போது, அவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும். அது மற்ற அவையால் பின்னர் விசாரணை செய்யப்பட வேண்டும்.

விசாரணையின் பின்னர், அதன் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினரின் ஒப்புதலுடன் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அந்த தீர்மானத்தை நிறைவேற்றும் நாள் முதல் அந்த குடியரசுத்தலைவர் பதவியில் இருந்து பதவி நீக்கம் செய்யப்படுவார்.

K–W–L (செயல்பாடு –தீர்மானம்–கற்றுக்கொண்டேன்)

கண்டனத் தீர்மானம் பற்றி எனக்கு என்ன தெரியும்?	கண்டனத் தீர்மானம் பற்றி நான் என்ன தெரிந்து கொள்ள வேண்டும்	நான் என்ன கற்றுக்கொண்டேன்?

பதவியை நிரப்புவது

குடியரசுத்தலைவரின் பதவி கீழ்க்கண்ட வழிகளில் காலியாகலாம்.

1. ஐந்து ஆண்டுகளில் பதவிக் காலம் முடிவடைந்த நிலையில்
2. அவரது பதவி விலகல் மூலம்
3. நாடாளுமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்படுவதன் மூலம்
4. அவரது மரணத்தின் மூலம்
5. அவர் தகுதியை இழந்தால் அல்லது அவரது தேர்தல் செல்லாது என அறிவிக்கப்பட்டால்

நாடாளுமன்றத்தால் பதவி நீக்கம் அல்லது இறப்பு ஆகியவற்றில் குடியரசுத்தலைவர் பதவி காலியாகும்போது, ஆறு மாதங்களுக்குள் புதிய குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தப்படவேண்டும். இடைப்பட்ட காலத்தில் குடியரசுத் துணைத்தலைவர் குடியரசுத்தலைவராக செயல்படுவார். மேலும், பதவியில் இருக்கும் குடியரசுத்தலைவர், நோய், இயலாமை அல்லது வேறு காரணங்களால் தமது பதவிக்குரிய செயல்களை செய்ய முடியாத நிலை ஏற்பட்டாலும் குடியரசுத்தலைவர் திரும்பவும் தன் பொறுப்பினை செயல்படுத்த முன்வரும் வரை குடியரசுத் துணைத்தலைவர் அவரது பணிகளை மேற்கொள்வார்.

குடியரசுத் தலைவரின் பணிகளும் அதிகாரங்களும்

குடியரசுத்தலைவரின் பணிகளும் அதிகாரங்களும் பரந்துபட்டவை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதும், உரையாற்றுவதும், ஒத்திவைப்பதும் அவரே. வெவ்வேறு துறைகளில் முன்னணியிலுள்ள 12 உறுப்பினர்களை மாநிலங்களவைக்கும் இரண்டு ஆங்கிலோ-இந்தியப் பிரதிநிதிகளை மக்களவைக்கும் அவரே நியமனம் செய்கிறார். நாடாளுமன்றத்திலிருந்து வரும் நிதி சாராத முன்வரைவுகளை மீண்டும் மறுபரிசீலனை செய்வதற்காக திருப்பி அனுப்பவும்

12th_Political Science_Tamil_Unit_3.indd 63 04-06-2019 18:14:53

மறுதலிக்கவும் அவருக்கு அதிகாரமுள்ளது. நாடாளுமன்றத்தின் முன்வரைவுக்கு ஒப்புதல் பெறும்பொருட்டு ஈரவைகளின் கூட்டுக் கூட்டத்தை அழைக்கவும் அவருக்குள் உரிமை உண்டு. அவரால் ஆறு மாத காலத்துக் மிகாத அவசரச் சட்டத்தை அறிவிக்கவும் முடியும். மாநிலச் சட்டங்களை மறுதலிக்கவும் அவருக்கு அதிகாரமுள்ளது. பிரதமர் தலைமையிலான அமைச்சரவையை அமைக்க அவர் உந்துதலாகவும், அவர்களை நியமிப்பவராகவும் உள்ளார். அத்துடன் அத்தகைய அமைச்சரவை நாடாளுமன்றத்தின் ஆதரவைப் பெற்றதாக இருப்பதை உறுதி செய்பவராகவும் குடியரசுத்தலைவர் அதிகாரம் பெற்றுள்ளார். குடியரசுத்தலைவர் மட்டுமே அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கிறார். மக்களவையின் ஆதரவை இழந்து விடுகின்றபோது அந்த அமைச்சரவையை கலைத்து விடவும் முடியும். அரசமைப்பின்படியான பல்வேறு உறுப்புகளுக்கு, குறிப்பாக நீதித்துறை, ஆயுதப்படைகள், தூதரகக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளார். நெருக்கடி (அவசர நிலை) நிலைக் காலத்தில் குடியரசுத்தலைவரின் எல்லையற்ற அதிகாரம் பெற்றுள்ளார். எந்தச் சட்டத்தையும் தற்காலிகமாக முடக்கிவிட முடியும். குறிப்பிட்ட காலத்திற்கு அமைச்சரவைகளையும், சட்ட மன்றங்களையும் கலைத்துவிடவும் முடியும். இவருக்கு மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்திடவும் அதிகாரமுள்ளது.

குடியரசுத்தலைவர் இல்லாதபோது அவரது பதவியை தற்காலிகமாக குடியரசுத் துணைத்தலைவர் அல்லது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அல்லது உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதி வகிப்பர். அப்போது அவர்கள் நாடாளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட குடியரசுத்தலைவருக்கான சலுகைகள், ஊதியம் போன்ற அனைத்து சலுகைகளையும் உரிமைகளையும் குடியரசுத்தலைவரைபோலவே அனுபவிப்பதற்கு அதிகாரமும் உரிமையும் படைத்தவராக இருப்பர்.

இந்திய குடியரசுத்தலைவரின் அதிகாரப்பூர்வ இல்லம்
"ராஷ்டிரபதிபவன்" (குடியரசுத்தலைவர் மாளிகை) தில்லியில் அமைந்துள்ளது.

செயல்பாடு

1. குடியரசுத்தலைவரின் மறுதலிப்பு அதிகாரத்தைப் பற்றி விவாதிக்கவும்.
2. முழுமையான மறுதலிப்பு, தற்காலிக மறுதலிப்பு, முடக்கும் (பாக்கட்) மறுதலிப்பு, தகுதிச்சார் மறுதலிப்பு ஆகியவற்றை அறிந்து கொள்.
3. இன்றுவரையிலான குடியரசுத்தலைவர்களது பெயர்கள், பதவிகாலங்களை பட்டியலிடு. அவர்களது படங்களை அட்டவணைப் படுத்து.

உண்மை

இந்திய அரசமைப்பின் XVIII பாகத்தில் இந்தியக் குடியரசுத்தலைவரின் நெருக்கடிகால அதிகாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

செயல்பாடு

விளக்கப்படம் தயாரித்தல்

1947-முதல் 2019 வரையிலான இந்திய பிரதமர்களை பட்டியலிடவும். ஒரு விளக்கப்படத்தில் அவர்களின் நிழற்படங்களை ஒட்டவும்.

12th_Political Science_Tamil_Unit_3.indd 64 04-06-2019 18:14:53

ஆட்சித்துறை	சட்டத்துறை	நிதித்துறை	நீதித்துறை	நெருக்கடிக்கால அதிகாரங்கள்	இதர அதிகாரங்கள்
1. குடியரசுத் தலைவரது பெயரால் நிர்வாகத்தை நடத்துவது. அரசுப் பொறுப்புகளை நடைமுறைப் படுத்துவதற்கான விதிகளை உருவாக்குவது அமைச்சர்களுக்கு பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பது 2. அமைச்சரவைக்குமுக்கிய முடிவுகளைப்பற்றி அறிந்திருப்பதும், அமைச்சர்கள் குழுவின் கவனத்திற்கும் பரிசீலனைக்கும் எந்த ஒரு விஷயத்தையும் கொண்டு வருவது 3. முக்கியமான பொறுப்புகளுக்கு நியமனங்கள் செய்வதும், நீக்குவதும் 4. அயல்நாடுகளுடனான உறவுகளைக் கையாள்வது 5. முப்படைகளின் தலைவராக இருப்பது 6. உச்ச நீதிமன்றம் மற்றும் இதர சுயேட்சையான அமைப்புகளுக்கான நடைமுறை விதிகளையும் வரையறைகளையும் அங்கீகரிப்பது 7. மாநில அரசுகளுக்கான வழிகாட்டுதல்களையும், ஆணைகளையும் அனுப்புவது மற்றும் அரசமைப்பு இயந்திரம் செயலற்றுப்போகும்போது மாநில அரசின் மீது அரசமைப்பு 356-வது உறுப்பை நிறைவேற்றுவது 8. ஒன்றிய ஆளுகைக்குட்பட்டப் பகுதி மற்றும் பட்டியலின மற்றும் பழங்குடியினப்பகுதிகளை நிர்வாகம் செய்வது	1. நாடாளுமன்றத்தின் அவைகளின் கூட்டங்களைக் கூட்டுவது, மக்களவையை ஒத்திவைப்பது மற்றும் மக்களவையை கலைத்தல் 2. மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களையும் மக்களவைக்கு இரு உறுப்பினர்களையும் நியமனம் செய்வது. 3. நாடாளுமன்றக் கூட்டங்களின் துவக்க உரையை நிகழ்த்துவது. நாடாளுமன்றத்திற்கு தகவல்கள் அனுப்புவது 4. நிதிசாராத முன்வரைவுகள் மீது முழுமையான அல்லது தற்காலிக மறுதலிப்பு அதிகாரத்தைப் பயன்படுத்துவது 5. சில வகையான முன்வரைவுகளை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கான அனுமதியை வழங்குவது 6. நாடாளுமன்றம் நடப்பில் இல்லாதபோது அவசரச் சட்டங்களைப் பிறப்பிப்பது 7. வெவ்வேறு குழுக்களுடைய அறிக்கைகளையும், பரிந்துரைகளையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கச் செய்வது 8. மக்களவையின் இடைக்கால அவைத் தலைவரை நியமிப்பது 9. துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் தொடர்பான சட்டங்களை நீட்டிப்பது, மாற்றியமைப்பது அல்லது நீக்குவது 10. சில குறிப்பிட்ட மாநிலச் சட்டங்கள் மீது முழுமையான மறுதலிப்பு அதிகாரத்தைப் பயன்படுத்துவது.	1. குடியரசுத்தலைவரது முன் அனுமதியுடன் மக்களவையில் நிதி முன்வரைவை அறிமுகப்படுத்துவது 2. இந்தியாவின் ஒதுக்கீடு செய்யப்படாத நிதியத்தின் மீது கட்டுப்பாட்டினை வைத்திருத்தல் 3. நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கச் செய்தல் 4. நிதிக்குழுவை நியமனம் செய்தல் 5. வருமான வரியிலிருந்து மாநிலங்களுக்கான பங்கினை முடிவு செய்தல், அசாம், பீகார், ஒடிசா, மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சணற்பொருட்களுக்கான ஏற்றுமதி வரிகளுக்கு மாற்றாக தரவேண்டிய மானியங்களை முடிவு செய்தல்	1. தமது கருணைக்காட்டும் உரிமையைப் பயன்படுத்தி தண்டனைகளை மாற்றி அமைப்பது, விலக்கு அளிப்பது, மன்னிப்பு வழங்குவது, தண்டனையைக் குறைப்பது, ஒத்தி வைப்பது 2. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் முதன்மை நீதிபதிகளையும், ஏனைய நீதிபதிகளையும் நியமிப்பது 3. எந்த ஒரு சட்டம் அல்லது பொருள் குறித்து உச்சநீதி மன்றத்தில் ஆலோசனையை நாடுவது	1. மூன்றுவிதமான நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு குடியரசுத்தலைவருக்கு தனிச்சிறப்பான அதிகாரங்களை அரசமைப்பு வழங்கியுள்ளது ❖ தேசிய நெருக்கடி (உறுப்பு- 352) ❖ குடியரசுத்தலைவரின் ஆட்சி (உறுப்பு- 356 அ 365) ❖ நிதி நெருக்கடி (உறுப்பு 360) 2. அரசமைப்பு 352 – வது உறுப்பு குடியரசுத்தலைவர் போர், வெளியிலிருந்து ஆக்ரமிப்பு மற்றும் உள்நாட்டுக் கலகங்கள் மூலம் பாதுகாப்புக்கு அச்சுறுத்துல் ஏற்படும் போது தேசிய அளவில் நெருக்கடி நிலையை அறிவிக்கிறார். 3. ஒரு மாநிலத்தில் அரசமைப்பு நிர்வாகம் செயலிழந்து போகும்போது அரசமைப்பு உறுப்பு 356- கீழ் குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்கிறார் 4. எப்போதும் ஒரு மாநிலம் தேசிய அரசின் கட்டளைகளை அல்லாத அரசமைப்பு விதிகளுக்கு இணங்க மறுக்கிறாரோ அப்போது குடியரசுத்தலைவரின் ஆட்சியை அம்மாநிலத்தில் புகுத்துவற்கு உறுப்பு 365 வழிவகை செய்கிறது. 5. இந்தியாவின் நிதியில் நிலையற்ற தன்மையும் வருவாயும் அச்சுறுத்தலில் உள்ளதாக குடிரயசுத்தலைவருக்குத் தோன்றினால் நிதி நெருக்கடி நிலைமையைப் பிரகடனம் செய்ய உறுப்பு 360 வகை செய்கிறது.	1. பொதுமக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த எந்த ஒரு விவகாரத்தைப் பற்றியும் சட்டம் அல்லது உண்மைகளைப் பற்றி உச்ச நீதி மன்றத்தின் கருத்தினைக் கோருதல் 2. உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் எண்ணிக்கையை முடிவு செய்வது 3. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணைய அமைப்பு மற்றும் விதிகளை உருவாக்குதல் 4. ஆட்சி மொழிக் குழுவை அமைப்பது மற்றும் ஆட்சி நடத்துவதில் படிப்படியாக ஹிந்தி மொழியின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்யும் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது. 5. ஜம்மு- காஷ்மீர் நிர்வாகத்திற்கான சிறப்பு ஒழுங்காற்று விதிகளை உருவாக்குவது 6. பட்டியலிடப்பட்ட மற்றும் பழங்குடியினர் பகுதிகளை நிர்வாகம் செய்வதற்கான சிறப்பு சட்டங்களையும் விதிகளையும் உருவாக்குதல்

12th_Political Science_Tamil_Unit_3.indd 65 04-06-2019 18:14:53

செயல்பாடு



கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில், தரப்பட்டுள்ள எண் வரிசைப்படி குடியரசுத்தலைவரின் அதிகாரங்களை அடையாளம் காண்க:

(ஆட்சித்துறை / சட்டத்துறை / நீதித்துறை /நிதித்துறை/ நெருக்கடிக்கால அதிகாரங்கள்)

வ. எண்	உதாரணங்கள்	அதிகாரம்
1.	தமிழ்நாடு, கர்நாடகா, பஞ்சாப், ஜார்கண்ட், ஜம்மு, காஷ்மீர் மற்றும் பல மாநிலங்கள் குடியரசுத்தலைவர் ஆட்சியின் கீழ் இருந்துள்ளன.	
2.	குடியரசுத்தலைவர் நமது மாநில ஆளுநர்கள், உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கிறார்.	
3.	குடியரசுத்தலைவர் நாடாளுமன்றக் கூட்டத்தொடர்களை கூட்டவும், கலைக்கவும் முடியும்.	
4.	நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'முன்வரைவு' குடியரசுத்தலைவரின் ஒப்புதல் இருந்தால் மட்டுமே 'சட்டம்' ஆக முடியும்.	
5.	தண்டனைகளை மாற்றவும் குறைக்கவும் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கவும் குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.	
6.	நாட்டின் அனைத்து விவகாரங்கள் பற்றியும் அறிந்து கொள்ளும் உரிமை.	
7.	நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடரின்போது நாடாளுமன்றத்தில் முதலில் உரையாற்றுவதற்கான உரிமையைக் குடியரசுத்தலைவர் பெற்றுள்ளார்.	
8.	நாட்டின் போர் பிரகடனம் குடியரசுத்தலைவரின் பெயரிலேயே வெளிடப்படும்.	
9.	வெளி நாடுகளில் உள்ள இந்திய தூதர்கள், குடியரசுத்தலைவரின் பிரதிநிதிகளாவர்.	
10.	குடியரசுத்தலைவர் நாடாளுமன்றத்தில் தணிக்கை அறிக்கையை சமர்ப்பிக்க செய்வார்.	

3.3 குடியரசுத் துணைத்தலைவர்

அமெரிக்க அரசமைப்பினைப் போன்று இந்திய அரசமைப்பும் துணைக் குடியரசுத்தலைவர் பதவியை (இந்திய அரசமைப்பு உறுப்பு-63) வழங்குகிறது. இந்தியாவின் துணைத் குடியரசுத்தலைவர் பதவி நாட்டின் இரண்டாவது மிக உயர்ந்த பதவியாகும்.

தேர்தல்

இந்தியத் குடியரசுத் துணைத்தலைவர் நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் இரகசிய வாக்கெடுப்பு மூலம் விகிதாச்சார முறையில் மாற்றத்தக்க ஒற்றை வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

12th_Political Science_Tamil_Unit_3.indd 66 04-06-2019 18:14:53

தகுதிகள்

இந்திய குடியரசுத் துணைத்தலைவர் பதவிக்கு போட்டியிடுபவர் கீழ்க்காணும் தகுதிகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(அ) இந்தியாவின் குடிமகனாக இருக்க வேண்டும்.

(ஆ) 35 வயதை நிறைவு செய்திருக்க வேண்டும்.

(இ) மாநிலங்களவை உறுப்பினராவதற்கு தகுதிவாய்ந்தவராக இருக்க வேண்டும்.

(ஈ) ஊதியம் பெறும் எந்த பதவியிலும் இருக்கக்கூடாது. மேலும் குடியரசுத் துணைத்தலைவருக்கான தகுதிகள், குடியரசுத்தலைவருக்கான தகுதிகள் ஒட்டியே உள்ளன.

பதவிக்கான வரையறைகள்

குடியரசுத் துணைத்தலைவர் ஐந்து வருட காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுவார். குடியரசுத்தலைவரிடம் தனது பதவி விலகல் கடிதத்தை கொடுப்பதன் மூலம் தனது பதவிக்காலம் முடிவதற்கு முன்னதாக அவர் தனது பதவியிலிருந்து தாமாகவே பதவி விலகலாம். மாநிலங்களவை உறுப்பினர்களின் அறுதிப் பெருபான்மை ஆதரவோடு, மக்களவையின் ஒப்புதலோடு அவருக்கெதிராக தீர்மானம் நிறைவேற்றப்படுவதின் மூலம் அப்பதவியிலிருந்து அவரை நீக்க முடியும். ஆனால் அத்தகைய தீர்மானத்திற்கு 14 நாட்கள் முன்னறிப்பு அவசியமாகும்.

பொறுப்புகளும் பணிகளும்

குடியரசுத் துணைத்தலைவர் அப்பதவியினால் மாநிலங்களவையின் அலுவல்வழி தலைவராகிறார் (இந்திய அரசமைப்பின் 64-வது உறுப்பு). அவர் மாநிலங்களவைக் கூட்டங்களை நடத்துகிறார். மக்களவையில் சபாநாயகர் போன்றே, இவருக்கு மாநிலங்களவையில் அதிகாரம் உள்ளது. மாநிலங்களவையின் தலைவர் என்ற நிலையில் மட்டுமே இவர் ஊதியம் பெறுகிறார், ஏனெனில் குடியரசுத் துணைத்தலைவர் பதவிக்கு என எந்த ஊதியமும் இல்லை. குடியரசுத்தலைவரின் இறப்பு அல்லது பதவி நீக்கம் ஆகியவற்றின் காரணமாக காலியிடம் ஏற்பட்டால் அல்லது வேறு ஒரு குடியரசுத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படும்வரை குடியரசுத் துணைத்தலைவரே அந்த பதவியை கூடுதலாக வகிப்பார். இந்த காலம் ஆறு மாதங்களுக்கு மட்டுமானது ஆகும். இந்தியக் குடியரசுத்தலைவராக செயல்படும் போது குடியரசுத் துணைத்தலைவரின் ஊதியம், இதர படிகள், நாடாளுமன்ற முடிவுகள்படி பெறுகிறார். அதே நேரத்தில் அவர் மாநிலங்களவையின் தலைவராக செயல்பட முடியாது.

பயிற்சி

இந்திய அரசமைப்பின் 63 முதல் 70 வரையான உறுப்புகள் குடியரசுத் துணைத்தலைவர் பற்றியவை, இது குறித்து ஒரு கட்டுரையை சமர்ப்பிக்கவும்.

3.4 பிரதமர் மற்றும் அமைச்சர்கள் குழு

பிரதமர் என்பவர் சமமான (அமைச்சர்களில்) முதன்மையானவர். அத்துடன் காபினட் (அமைச்சர்கள் குழு) அமைப்பின் அடிப்படைத் தூணாகவும் உள்ளார். அப்பதவியும் பொறுப்பும், அப்பதவி இருக்கும் வரையிலும் ஒப்பிடமுடியாத ஒன்றாகவும், தனிச்சிறப்புமிக்க அதிகார மையமாகவும் விளங்குகிறது.

– மார்லே பிரபு

3.4.1 பிரதமர்

அறிமுகம்

ஆட்சித்துறை: அரசமைப்பு ஒரு குழுவிடம் நிர்வாகப் பொறுப்பைத் தந்துள்ளது. அதாவது பிரதமரின் தலைமையிலான அமைச்சரவைக் குழுவிடம் நிர்வாக பொறுப்பு தரப்பட்டுள்ளது.

12th_Political Science_Tamil_Unit_3.indd 67 04-06-2019 18:14:53

பொருள்: நாட்டில் கொள்கைகளை உருவாக்கவும், முக்கிய முடிவுகளை எடுக்கவும், அவற்றை அமல்படுத்தவும் அரசமைப்பு மற்றும் சட்டங்களின் மூலம் ஒரு குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மத்திய அரசில் இரு முக்கியமான உறுப்புகள் உள்ளன.

- ஒன்றிய சட்டமன்றம் அல்லது ஒன்றிய நாடாளுமன்றம்
- ஒன்றிய ஆட்சித்துறை

இதற்கு முந்தைய பாடப்பிரிவில் ஒன்றிய சட்டமன்றம் (நாடாளுமன்றம்) பற்றி அறிந்து கொண்டீர்கள். இப்போது ஒன்றிய ஆட்சித்துறையைப் பற்றி பரிசீலிப்போம். இந்திய அரசமைப்பின் IV பகுதியிலுள்ள 52 முதல் 78 வரையிலான உறுப்புகள் ஒன்றிய ஆட்சித்துறையைப் பற்றிக்கூறுகின்றன என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற ஆட்சிமுறையை, அதாவது பிரதமரை அரசின் தலைவராகக் கொண்டுள்ள முறையை இந்திய அரசமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. பிரதமர் மிக முக்கியமான அரசியல் நிறுவனமாய் இருக்கிறார். ஆனாலும் அமைச்சரவையில் சமமானவர்களில் முதன்மையானவராக அவர் திகழ்கிறார்.

நியமனம்

பிரதமரின் தேர்வு மற்றும் நியமனம் பற்றிய குறிப்புகள் எதுவும் அரசமைப்பில் இல்லை. பிரதமர் பதவிக்கு நேரடித் தேர்தல் எதுவும் இல்லை. அரசமைப்பின் 75-வது உறுப்பு பிரதமரை குடியரசுத்தலைவர் நியமனம் செய்வதாக கூறுகிறது. ஆனால் பிரதமரைத் தன்னிச்சையாக குடியரசுத்தலைவர் தேர்வு செய்ய இயலாது. மக்களவையில் பெரும்பான்மையுள்ள கட்சி அல்லது கட்சிகளின் கூட்டணியின் தலைவரையே பிரதமராகக் குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார். எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், பெரும்பான்மை ஆதரவைத் திரட்டக்கூடியவர் எனக் குடியரசுத்தலைவரால் கருதப்படுகின்ற ஒருவரை பிரதமராக நியமனம் செய்வார். பிரதமருக்கென குறிப்பிட்ட பதவிக்காலம் எதுவும் இல்லை. பெரும்பான்மை கொண்ட கட்சி அல்லது கட்சிகளின் தலைவராக இருக்கும் வரையில் அவரே பிரதமராகத் தொடர்வார்.

பணிகள்

பிரதமரின் முதன்மையானதும் முக்கியமானதுமான பொறுப்பு அவரது அமைச்சரவையின் உறுப்பினர்கள் பட்டியலைத் தயாரிப்பதே. அவர் அந்த பட்டியலுடன் குடியரசுத்தலைவரை சந்தித்து, ஒப்புதல் பெற்றவுடன் அமைச்சரவை அமைக்கப்படுகிறது. மிக முக்கியமான அமைச்சர்கள் காபினட் அந்தஸ்து கொண்ட அமைச்சர்களாக அறிவிக்கப்படுகிறார்க்ள். மற்றவர்கள் மாநில அமைச்சர்கள் என்றும் மூன்றாம் நிலையிலுள்ளவர்கள் துணை அமைச்சர்கள் என்றும் அறியப்படுவர். பிரதமர் விரும்பினால் ஓர் அமைச்சரை துணைப்பிரதமர் என அறிவிக்க முடியும். பிரதமரின் ஆலோசனையின்படி குடியரசுத்தலைவர் அமைச்சர்களுக்குரிய துறைகளை ஒதுக்குவார். பிரதமர் எந்த துறை அல்லது துறைகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியும். அவ்வப்போது அமைச்சர்களின் பொறுப்புகளை மாற்றியமைக்க குடியரசுத்தலைவருக்கு பிரதமர் ஆலோசனை வழங்கலாம். அதுபோன்று ஒரு துறையை இரண்டாகவோ மூன்றாகவோ பிரிக்கலாம் அல்லது இரண்டு, மூன்று துறைகளை ஒரே துறையாகவும் இணைக்கலாம்.

பிரதமரின் முதன்மை நிலை கீழே தரப்பட்டுள்ள காரணிகளால் தெளிவாகிறது.

1. மக்களவையின் பெரும்பான்மை கொண்ட கட்சியின் தலைவராக அவர் உள்ளார்.
2. மற்ற அமைச்சர்களை தேர்வு செய்யக் குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை

12th_Political Science_Tamil_Unit_3.indd 68 04-06-2019 18:14:54

செய்யவும், எந்த ஒரு அமைச்சரையும் பதவி நீக்கம் செய்யப் பரிந்துரைக்கவும் எந்த ஒரு அமைச்சரையும் பதவி விலகுமாறு கட்டளை இடவும் பிரதமருக்கே அதிகாரமுள்ளது.

3. அமைச்சர்களுக்கு பொறுப்புகளை ஒதுக்கீடு செய்வது பிரதமரின் பொறுப்பாகும். அதுபோன்று எந்த அமைச்சரையும் ஒரு துறையிலிருந்து வேறொரு துறைக்கு மாற்றவும் அவருக்கு உரிமை உள்ளது.

4. அமைச்சரவையின் தலைவர் பிரதமரே. அதன் கூட்டங்களைக் கூட்டவும், தலைமையேற்று நடத்துவதும், மாநிலங்களின் கூட்டுக்குழு அணுசக்தி தலைமைக்குழு அது போன்ற இன்னும் பல குழுக்களின் தலைவரும் பிரதமரே ஆவார்.

5. அரசின் கொள்கை முடிவுகளை ஒருங்கிணைப்பவரும் அதனடிப்படையில் அனைத்து துறைகளின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் பொறுப்பும் பிரதமருக்கு உள்ளது.

6. ஓர் அமைச்சர் தாமாகவே பதவி விலகிவிட்டால், ஓர் அமைச்சர் பதவி காலியிடமாகிறது. ஆனால் ஒரு பிரதமர் பதவி விலகினாலோ, அல்லது இறந்து விட்டாலோ அவரது அமைச்சரவையே இல்லாமல் போய்விடுகிறது.

7. அமைச்சர்களுக்கும் குடியரசுத் தலைவருக்கும் இடையில் தொடர்புப் பாலமாக இருப்பவர் பிரதமரே. அது போன்று நாடாளுமன்றத்துக்கும் அமைச்சர்களுக்கும் இடையில் பாலமாக இருப்பவரும் அவரே. அரசின் வெளிநாட்டு விவகாரங்களை வெளியிடும் முக்கிய நபராகவும் அவர் உள்ளார்.

பிரதமரின் அலுவலகம்

பொருள்

நடைமுறையில் அரசின் தலைவராகவும், உண்மையான நிர்வாகத் தலைவராகவும் இருக்கின்றபடியால், நாட்டின் அரசியல் – நிர்வாக அரங்கில் பிரதமர் மிக முக்கியமான பங்கு வகித்து வருகிறார். அவரது பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு பிரதமருக்கு உதவியாக பிரதமர் அலுவலகம் உள்ளது (PMO – Prime Minister Office) பிரதமர் அலுவலகம், செயலக உதவிகளையும் ஆலோசனைகளையும் பிரதமருக்கு வழங்குகிறது. இந்திய அரசின் உச்சகட்ட முடிவுகளை வடிவமைக்கும் நிலையிலுள்ள பிரதமர் அலுவலகம் அரசமைப்பால் குறிப்பிடப்படாத ஓர் அதிகார மையமாகத் திகழ்கிறது. பிரதமர் அலுவலகத்திற்கு இந்திய அரசின் துறைகளில் ஒன்று என்ற தகுதி உள்ளது. இந்த அலுவலகம் 1947-இல் உருவாக்கப்பட்டது. 1997-வரை இது பிரதமரின் செயலகம் (PMS – Prime Minister's Secretariat) என்றே அழைக்கப்பட்டு வந்தது. அரசியல் ரீதியாக பிரதமரும், நிர்வாக ரீதியாக முதன்மைச் செயலரும் இதன் தலைமையாகச் செயல்படுவர்.



பிரதமர் அலுவலகத்தின் பல்வேறு பணிகள்

1. அரசாங்கத்தின் தலைவர் என்ற நிலையில் உள்ள பிரதமருக்குத் தேவையான உதவிகளைச் செய்வது, மத்திய அமைச்சகங்களுடன் / துறைகளுடன் மற்றும் மாநில அரசுகளுடன் தொடர்புகளைப் பராமரிப்பது.
2. நிதி ஆயோக் மற்றும் தேசிய வளர்ச்சி குழு போன்றவற்றிற்கு தேவையான உதவிகளைச் செய்வது.
3. ஊடகங்களுடனும், பொதுமக்களுடனுமான பிரதமரின் தொடர்புகளைப் பராமரிப்பது.
4. பிரதமரின் அலுவல்களுக்கு விதிகளின் படியான நடவடிக்கைகளை மேற்கொள்வது.
5. குறிப்பிட்ட விதிகளின்படி பிரதமருக்கு அனுப்படும் விவகாரங்களைப் பற்றி ஆராய்ந்தறிவதற்கு பிரதமருக்கு உதவுவது.

12th_Political Science_Tamil_Unit_3.indd 69 04-06-2019 18:14:54

6. குடியரசுத்தலைவர், ஆளுநர்கள், அயல்நாட்டுத் தூதர்கள் போன்றவர்களுடன் இணக்கமான உறவுகளுக்காக பிரதமருக்கு உதவுவது.

7. பிரதமரின் சிந்தனை ஊற்றாகச் செயல்படுவது பிறதுறைகளுக்கும் அமைச்சகங்களுக்கும் ஒதுக்கப்படாத அனைத்து விபரங்களையும் கையாள்வது.

8. அமைச்சரவைத் தொடர்பான விவகாரங்களில் பிரதமர் அலுவலகம் ஈடுபடுவதில்லை. அமைச்சரவை தொடர்பான விபரங்களை அமைச்சரவை செயலகம் நேரடியாகக் கையாள்கிறது. ஆனால் அந்த அமைச்சரவை செயலகமும் பிரதமரின் வழிகாட்டுதலின்படியே செயல்படுகிறது.

3.4.2 மத்திய அமைச்சர்கள் குழு

அரசமைப்பு 74-வது உறுப்பின்படி குடியரசுத்தலைவருக்கு உதவவும், ஆலோசனை வழங்கவும், பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஓர் அமைச்சர்கள் குழு இருக்கும். குடியரசுத்தலைவர் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் இந்த அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைப்படி நடந்துகொள்வார். அமைச்சர்கள் குழுவின் ஆலோசனையை குடியரசுத்தலைவர் ஏற்றுக் கொள்கிறார். அமைச்சர்கள் குழுவில் மூன்று வகையான அமைச்சர்கள் இருப்பர். அவை (1) காபினட் அமைச்சர்கள் (2) அமைச்சர்கள் (3) துணை அமைச்சர்கள். காபினட் அமைச்சர்கள் கொள்கை முடிவுகளை எடுப்பதில் ஈடுபடுபவர்கள். மற்ற இரு பிரிவு அமைச்சர்களும் நிர்வாகப் பொறுப்புகளை மேற்கொள்பவர்கள். இந்த மூன்று பிரிவு அமைச்சர்களுக்கும் வெவ்வேறு விதமான பதவி, ஊதியம் உள்ளிட்ட படிகள் அரசியல் முக்கியத்துவம் ஆகியவைக் குறிப்பிடப்பட்டுள்ளன. அனைவருக்கும் உச்சமாகப் பிரதமர் நாட்டின் மிக உயர்ந்த ஆட்சி அதிகாரம் கொண்டவராக இருக்கிறார்.

அமைச்சர்கள் குழுவின் நியமனம்

அரசமைப்பு 75-வது உறுப்பின்படி குடியரசுத்தலைவரால் பிரதமர் நியமிக்கப்படுகிறார். பிரதமரின் ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்கள் குடியரசுத்தலைவரால் நியமிக்கப் படுகின்றனர். குடியரசுத்தலைவரின் விருப்பம் உள்ளவரை அமைச்சர்கள் பதவியில் இருப்பர். குடியரசுத்தலைவரின் விருப்பத்தின் பேரிலேயே அமைச்சர்கள நியமனம் என்று கூறப்பட்டாலும், நடைமுறையில் அவர்கள் பிரதமராலேயே தேர்வு செய்யப்படுகின்றனர். பிரதமரால் பரிந்துரைக்கப்படாத யாரையும் குடியரசுத்தலைவர் அமைச்சராக நியமனம் செய்ய முடியாது.

நிழல் அமைச்சரவை

இங்கிலாந்து நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சிகள் ஒவ்வொரு துறையிலும் உள்ள விவகாரங்களைப் பற்றி ஆராய தமது உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைக்கிறது. இதன் மூலம் எதிர்க்கட்சிகள் அரசு தொடர்பான பிரச்சனைகளை தெளிவாக அறிந்து கொள்ளவும் அரசினை விழிப்பாக இருக்கச் செய்யவும் முடிகிறது. இது நிழல் அமைச்சரவை என்று அழைக்கப்படுகிறது.

செயல்பாடு



மாணவர்கள் இந்தியாவில் இந்த நிழல் அமைச்சரவை இருப்பதாக பாவித்து இரு குழுக்களாகப் பிரிந்து விவாதிக்கவும்

அமைச்சர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டுப்பொறுப்பு

இந்திய அரசமைப்புபடி அமைச்சர்கள் தனியாகவும் கூட்டாகவும் மக்களவைக்கு பொறுப்பானவர்கள். கூட்டுப்பொறுப்பு என்றால், அரசின் நடவடிக்கைகளுக்கு அமைச்சரவையின் அனைத்து அமைச்சர்களும் கூட்டாக மக்களவைக்குப்

12th_Political Science_Tamil_Unit_3.indd 70 04-06-2019 18:14:54

பொறுப்பானவர்கள் ஆகின்றனர் என்று பொருள். அனைத்து அமைச்சர்களும் பொதுவெளியில் தங்களுக்குள்ளான வேறுபாடுகளை வெளிக்காட்டக் கூடாது என்பதும் இதன் பொருள் எனலாம். எந்த ஒரு பொதுப் பிரச்சனையிலும், பொது நிகழ்விலும் அனைத்து அமைச்சர்களும் அரசின் நிலைப்பாட்டை ஒருமித்து ஆதரிக்க வேண்டும்.

குடும்ப அமைச்சரவை என்றால் என்ன என்று அறிவீர்களா?

குடும்ப அமைச்சரவை என்பது அமைச்சரவைக்குள்ளேயே ஒரு சிறு குழுவாகச் செயல்படும் அமைச்சர்களின் குழு. இது முறை சாரா குழு எனினும் உண்மையான அதிகார மையமாகும். இந்தியாவின் ஒவ்வொரு பிரதமருக்கும் இப்படி ஒரு அமைச்சரவைக் குழு இருந்துள்ளது. முக்கியமான அரசியல் பிரச்சனைகளில் முடிவுகள் எடுப்பதில் ரகசியத்தைப் பாதுகாக்கப் பிரதமருக்கு இந்த அமைச்சரவைக் குழு முறை உதவியாய் உள்ளது.

3.4.3. ஒன்றிய (மத்திய) அமைச்சர்கள் குழு

அமைச்சரவையில் ஓர் உட்குழுவாக இது இருக்கிறது. அமைச்சரவையிலிருந்து அமைக்கப்படும் இந்த உட்குழு அரசமைப்பில் குறிப்பிடப்படாத ஒன்றாகும். அமைச்சரவையில் உள்ள அனைத்து அமைச்சர்களும் ஒன்றாக அமர்ந்து கொள்கை முடிவுகளை எடுப்பதுவோ, அலுவல்களை விவாதிப்பதோ இல்லை. மாறாக ஒன்றிய அமைச்சரவைக் குழு எனப்படும்.அமைச்சர்குழுவின்உட்குழுவைச் சேர்ந்தவர்கள்தான் பிரதமர் தலைமையில் ஒன்றாகக்கூடி அம்முடிவுகளை எடுக்கிறார்கள் அவற்றை அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைகளாக குடியரசுத்தலைவருக்கு ஆலோசனை வழங்குகிறார்கள். இந்திய அரசின் நிர்வாக விவகாரங்களைப் பார்த்துக்கொள்ளும் உச்சமான ஆட்சிக் குழுவாக அமைச்சரவைக் குழு விளங்குகிறது அமைச்சர்கள் குழுவின் கருவாக அது செயல்படுகிறது.

அமைச்சர்கள் குழுவின் செயல்பாடுகள்

1. துறை நிர்வாகங்களை அடிப்படையாகக் கொண்ட நமது அமைப்பில் அமைச்சரவைக் குழுதான் உயர்ந்தபட்ச முடிவுகளை எடுப்பதற்கான மற்றும் கொள்கைகளை வகுப்பதற்கான அதிகாரம் பெற்ற அமைப்பாகும்.

2. இது அனைத்து முக்கியமான சட்ட, நிதி மற்றும் வெளியுறவு விவகாரங்களையும் கையாளுகிறது.

3. அரசமைப்பு ரீதியான அனைத்து நியமனங்களையும் மூத்த செயலக நிர்வாகிகளையும் இது கட்டுப்படுத்துகிறது.

4. நாடாளுமன்றம் நடைபெறாதபோது அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்க குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை செய்கிறது.

5. இது விசாரணைக் குழுக்களை நியமிக்கிறது மற்றும் துறைகளுக்கு இடையிலான சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறது.

6. நெருக்கடி நிலையை பிரகடனம் செய்வதற்கும், மக்களவையைக் கலைத்து விடவும், நாடாளுமன்றக் கூட்டங்களை முடித்து வைக்க அல்லது ஒத்தி வைக்குமாறு குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை செய்யவும் அதிகாரம் அமைச்சரவைக் குழுவுக்கு உள்ளது.

அமைச்சரவைக் குழுச் செயலர்

அமைச்சரவைக் குழுவில் உள்ள ஒவ்வொரு அமைச்சருக்கும் உதவி செய்ய ஒரு செயலர் இருப்பர். அத்தகைய அமைச்சரவைக் குழு செயலர்களின் முதன்மை இடம் முதன்மைச் செயலருக்குத் தரப்பட்டுள்ளது. உயர்த் தேர்வுக் குழுவின் (Board) தலைவராக அவர் இருப்பர். அக்குழுதான் மத்திய தலைமைச் செயலகத்தின் இணைச்

12th_Political Science_Tamil_Unit_3.indd 71 04-06-2019 18:14:54

செயலர்களை நியமிக்கும். அந்த முதன்மைச் செயலர்தான் ஆண்டுதோறும் நடைபெறும் (மாநில) தலைமைச் செயலர்களின் மாநாடுகளுக்கு தலைமை வகிக்கிறார். நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களிலும், கொள்கைகளிலும் பல்வேறு நிர்வாகத்துறைகளுக்கும் நிர்வாகப் பணியினருக்கும் அரசியல் அமைப்புகளுக்கு இடையில் தொடர்பாகச் செயல்படுபவரும் முதன்மைச் செயலரே ஆவார்.

செயல்பாடு

கீழ்க் காணுபவற்றைப் பட்டியலிடவும்

1. இன்றுவரையிலான இந்தியப் பிரதமர்களின் பட்டியல்
2. மத்திய, மாநில அரசுகளில் இன்றுள்ள அமைச்சரவைக் குழு அமைச்சர்களும், அவர்களது துறைகளும் (ஒவ்வொன்றுக்கும் 5 அமைச்சர்களைக்) கொண்ட பட்டியல்

3.5. ஆட்சித்துறை: மாநிலங்கள்

இந்திய அரசமைப்பின் VI-வது பகுதியிலுள்ள 153 முதல் 167 வரையிலான உறுப்புகள் மாநில நிர்வாகத்தைக் குறிப்பிடுகின்றன. மத்திய அரசில் காணப்படும் நாடாளுமன்ற நிர்வாக முறையே மாநிலத்திலும் உள்ளது. மாநில நிர்வாகமும், ஆளுநர் மற்றும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சர்கள் குழு ஆகியவற்றைக் கொண்டது. மத்தியில் குடியரசுத்தலைவரைப் போன்று மாநிலத்திலும் ஆளுநரே நிர்வாகத்தின் தலைவராக உள்ளார். அனைத்து மாநிலங்களிலும் இதே முறைதான் உள்ளது. ஆனால் சில மாநிலங்களில் இரண்டு அவைகளைக் கொண்ட சட்டமன்றமும், மற்ற சில மாநிலங்களில் ஒற்றை அவையைக் கொண்ட சட்டமன்றமும் உள்ளன. ஆனால் VI-வது பகுதியில் காணப்படும் இப்பிரிவுகள் ஜம்மு- காஷ்மீர் மாநிலத்திற்குப் பொருந்தாது. அரசமைப்பு 370-வது உறுப்பின்படி அம்மாநிலம் சிறப்புநிலை கொண்ட ஒன்றாகவும், தனக்கென தனி அரசமைப்புக் கொண்ட ஒன்றாகவும் அது உள்ளது.

மாநில நிர்வாகம்

- ஆளுநர்
- முதலமைச்சர் தலைமையிலான அமைச்சர்கள் குழு

3.5.1 ஆளுநர்

ஆளுநரின் தேர்வுமுறை

அரசமைப்பின் 153-வது உறுப்பு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருப்பார் என்கிறது. பொதுவாக, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு ஆளுநர் இருப்பார். ஆனால் 1956-ஆம் ஆண்டின் அரசமைப்பு திருத்தப்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக ஒருவரே இருக்க முடியும்.

விவாதம்

பிரதமர் மற்றும் குடியரசுத்தலைவர் இடையே ஓர் கொள்கையில் கருத்து ஒற்றுமை ஏற்படாவிடில் என்ன நிகழும்? இதில் யாருடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்படும்? ஏன்?

ஆளுநரின் நியமனம்

ஒரு மாநில ஆளுநர் இந்தியக் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார். (உறுப்பு-155). அவர் ஆளுநராக நியமிக்கப்பட கீழ் கண்ட தகுதிகள் வேண்டும்:

- இந்தியாவின் குடிமகன்
- 35 வயதை நிறைவு செய்தவர்
- ஊதியம் பெறும் எந்த பதவியிலும் இருக்கக்கூடாது
- நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கக் கூடாது.

பதவி மற்றும் காலம்

ஆளுநரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். (உறுப்பு-156). அவர் எந்த

12th_Political Science_Tamil_Unit_3.indd 72 04-06-2019 18:14:54

நேரத்திலும் குடியரசுத்தலைவரால் பதவி நீக்கப்படலாம். குடியரசுத்தலைவரால் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றப்படலாம். நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை ஆளுநர் பெறுகிறார். அதன்படியே சில சலுகைகளையும் படிகளையும் பெறுகின்றார்.

இந்திய அரசமைப்பின்படி, மாநில அரசமைப்பு மற்றும் நிர்வாகத் தலைவராக ஆளுநர் இருக்கிறார். மாநில நிர்வாகத்தின் ஆட்சிப்பொறுப்பு ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து ஆட்சி நடிவடிக்கைகளும் அவரது பெயரால் நடைபெறுகின்றன. ஆனால் நடைமுறையில், மாநிலத்தின் உண்மையான செயல் அதிகாரங்கள் முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சர்கள் குழுவுக்கே உள்ளது. மாநிலத்தின் சட்டசபைக்கு ஒட்டுமொத்தமாக கூட்டுப் பொறுப்புள்ள அமைச்சர்களின் ஆலோசனைப்படி, ஆளுநர் செயல்படுகிறார்.

செயல்பாடு

- துணைநிலை ஆளுநர் என்பவர் யார்?
- இந்தியாவில் எந்த இடங்களில் ஒரு துணைநிலை ஆளுநர் பதவி உள்ளது என்பதைக் கண்டுபிடி.
- இந்தியாவில் உள்ள துணைநிலை ஆளுநர் பற்றி இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களை எழுதுங்கள்.

ஆளுநரின் அதிகாரங்களும் பணிகளும் பின்வருமாறு

1. நிர்வாக அதிகாரங்கள்

(i) ஆளுநர் மாநில அரசின் நிர்வாகத் தலைவராக உள்ளார். ஆளுநரின் நிர்வாக அதிகாரங்கள் அவர் நேரடியாகவோ அல்லது அவருக்கு கீழுள்ளவர்களாலோ (154-வது உறுப்பின்படி அமைச்சர்கள்) செயல்படுத்தப்படும். அனைத்து நிர்வாகச் செயல்பாடுகளும் அவருடைய பெயரில் நடத்தப்படுகின்றன. மாநில பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்திலும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

(ii) சட்டமன்றத்தில் பெரும்பான்மை கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஆளுநர் நியமிக்கிறார். முதலமைச்சரின் ஆலோசனையின்படி, பிற அமைச்சர்களை அவர் நியமிக்கிறார். முதலமைச்சர் விரும்பும் வரையில் மட்டுமே அமைச்சர்கள் அப்பதவியில் இருப்பர். ஏனெனில் முதலமைச்சரின் ஆலோசனைப்படிதான் ஆளுநர் செயல்படுகிறார்.

(iii) மாநில அரசின் தலைமை வழக்குரைஞர், மாநிலப் பொதுப் பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை ஆளுநர் நியமிக்கிறார். துணை சார்பு நீதிமன்றங்களின் நீதிபதிகளின் நியமனங்கள், பதவிகள், பதவி உயர்வு போன்றவற்றை ஆளுநர் தீர்மானிக்கிறார்.

(iv) மாநில நிர்வாகத்தை சீராக இயக்கும் பொறுப்பு ஆளுநருடையதாகும். மாநில அரசமைப்பு இயந்திரம் நிலைகுலைந்து விட்டாலோ அல்லது மாநில நிர்வாகம் அரசமைப்பின் விதிமுறைகளுக்கு இணக்கமாக செயல்படாவிட்டாலோ, அரசமைப்பு விதிகளின்படி அரசமைப்பு அவசர நிலையை பிரகடனப்படுத்தி குடியரசுத்தலைவர் ஆட்சியை அரசமைப்பு 356-வது உறுப்பின்படி பரிந்துரைக்க ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது. குடியரசுத்தலைவரது நேரடி ஆட்சி என்றால் மாநிலத்தில் ஆளுநர் ஆட்சி என்று பொருள்படும். அமைச்சரவை இல்லாத மாநில ஆட்சி என்றும் பொருள்படும்

12th_Political Science_Tamil_Unit_3.indd 73 04-06-2019 18:14:54

2. சட்டமன்ற அதிகாரங்கள்

ஆளுநர் மாநிலச் சட்டமன்றத்தின் ஒரு பகுதி (உறுப்பு-168) ஆவார். எனவே, அவர் சட்ட அதிகாரங்களையும் கொண்டிருக்கிறார். அவரது சட்ட அதிகாரங்கள் பின்வருமாறு

(i) ஆளுநர் சட்டமன்றத்தை கூட்டவும், முடித்து வைக்கவும், ஒத்தி வைக்கவும், கலைத்து விடவும் அதிகாரம் படைத்தவர்.

(ii) ஆளுநர் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களிடையே உரையாற்றுகிறார்.

(iii) ஆளுநரின் அனுமதியின்றி, எந்த முன்வரைவும் சட்டமாக்க முடியாது. அது மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டாலும் அவரது ஒப்புதலின்றிச் சட்டமாகாது. சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் முன்வரைவுகள் அவரது ஒப்புதலுக்காக அனுப்பப்படும். அவற்றிற்கு ஒப்புதலைத் தரவோ அல்லது அந்த முன்வரைவை நிறுத்தி வைக்கவோ அல்லது குடியரசுத்தலைவரின் கருத்திற்காக முன்வரைவை ஒதுக்கி வைக்கவோ முடியும், மறுபரிசீலனை செய்யுமாறு ஆளுநரால் இந்த முன்வரைவுகள் அவை நடுவருக்கு திருப்பி அனுப்ப முடியும். முன்வரைவு மீண்டும் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டால் (திருத்தங்கள் இல்லாமலும்), ஆளுநர் தனது ஒப்புதலை அளித்தே ஆகவேண்டும்.

(iv) சட்டம் 213-ன் கீழ், சட்டமன்றம் அமர்வில் இல்லாத காலங்களில் ஆளுநர் அவசர சட்டங்களையும் பிறப்பிக்கலாம். (எனினும், இத்தகைய அவசர சட்டங்கள் தொடர்வதற்கு, அவை மாநிலச் சட்டமன்றம் மீண்டும் கூடியதிலிருந்து ஆறு வாரங்களுக்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.)

(v) மாநிலச் சட்டமன்றம் இரண்டு அவைகளை கொண்டிருந்தால், அதன் மேலவைக்கு ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்களை இலக்கியம், அறிவியல்,கலை,கூட்டுறவு இயக்கம்,சமூகப்பணி போன்றவற்றில் சிறப்பு அறிவும் அனுபவமும் உள்ளவர்களை நியமிக்கலாம். அத்துடன் கீழவைக்கு ஆங்கிலோ – இந்திய பிரதிநிதியையும் நியமிக்கலாம்.

3.நிதி அதிகாரங்கள்

ஆளுநருக்கு பின்வரும் நிதி அதிகாரங்கள் உள்ளன.

(i) நிதி அமைச்சர் மாநிலச் சட்டமன்றத்தில் வரவு-செலவு திட்டத்தை அல்லது நிதிநிலை அறிக்கையை சமர்பிக்கிறார். ஆனால் எந்த நிதி முன்வரைவும் ஆளுநரின் முன் ஒப்புதலின்றி சட்டமன்றத்தில் கொண்டுவரமுடியாது.

(ii) ஆளுநரின் பரிந்துரையின்றி மானியங்களுக்கான கோரிக்கை எதுவும் கோரப்பட முடியாது.

(iii) மாநிலத்தின் ஒதுக்கு நிதியின் பாதுகாவலர் ஆளுநர் ஆவார். நிதி நெருக்கடியான கட்டங்களில் சட்டமன்றத்தின் முன் அனுமதியின்றியும் அவரால் இந்நிதியை பயன்படுத்த முடியும்.

4. நீதித்துறை அதிகாரங்கள்

ஆளுநரின் நீதித்துறை அதிகாரங்கள் பின்வருமாறு

(i) மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட கிளை நீதிமன்றங்கள் உள்ளிட்ட சார்பு நீதிமன்றங்களின் பதவிகள், நியமனங்கள், பதவி உயர்வுகள் போன்றவற்றை தீர்மானித்தல்.

(ii) உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் நியமனம் செய்யும் போது அவர் இந்தியாவின் குடியரசுத்தலைவரால் கலந்தாலோசிக்கப்படலாம்.

12th_Political Science_Tamil_Unit_3.indd 74 04-06-2019 18:14:54

(iii) மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்ட வழக்குகளில் தண்டிக்க தக்கவர்களில் குற்றம் சாட்டப்பட்ட எந்தவொரு நபரின் தண்டனையைக் குறைப்பதற்கும் மன்னிப்பு வழங்குவதற்கும், நிறுத்துவதற்கும், விலக்குவதற்கும் அல்லது மாற்றுவதற்கும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

5. விருப்ப அதிகாரங்கள்

(i) எந்தவொரு கட்சி அல்லது தலைவர் சட்டமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைப் பெறாத சூழ்நிலையில் ஒரு புதிய முதலமைச்சரை நியமித்தல்.

(ii) அவையின் பெரும்பான்மை ஆதரவை இழந்தபோதும் அல்லது நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் பதவி விலக மறுக்கும் நிலையில் அமைச்சரவையை பதவி நீக்கம் செய்வது.

(iii) பெரும்பான்மை ஆதரவை இழந்த ஒரு முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் சட்டசபையைக் கலைத்துவிடுதல்.

(iv) அரசமைப்பு இயந்திரச் சீர்குலைவது பற்றி குடியரசுத்தலைவருக்கு அறிக்கை அனுப்புதல் மற்றும் குடியரசுத்தலைவர் ஆட்சியை மாநிலத்தில் கொண்டுவருதல்.

(v) சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட முன்வரைவுகளுக்கு ஒப்புதல் அளித்தல்.

குடியரசுத்தலைவர் ஆட்சி: வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சியிலிருந்து எழும் நெருக்கடி நிலைகளை சமாளிப்பதற்கான அவசர நிலையை பிரகடனம்செய்யும் அதிகாரம் ஆளுநருக்குஇல்லை.ஆனால்அரசமைப்பின் விதிமுறைகளுக்கு இணங்க மாநில அரசை நடத்த இயலாத சூழல் ஏற்பட்டால் அது பற்றி குடியரசுத்தலைவருக்கு அறிவுறுத்தி அறிக்கை தரும் அதிகாரம் உள்ளது. (உறுப்பு-356). இதன் மூலம் குடியரசுத்தலைவர் தாமே மாநில அரசின் ஆட்சிப்பொறுப்பினை ஏற்று நடத்திச் செல்வதற்கு வகை செய்கிறார்.

தலைமை வழக்குரைஞர்



ஒவ்வொரு மாநிலத்திற்கும் மத்திய அரசின் தலைமை வழக்குரைஞருக்கு இணையாக ஒரு அரசின் தலைமை வழக்குரைஞர் நியமிக்கப்படுகிறார். உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகும் தகுதியுடையவர்களையே ஆளுநர் தலைமை வழக்குரைஞராக நியமனம் செய்கிறார்.

செயல்பாடு



குடியரசுத்தலைவரின் அதிகாரங்களுடன் ஆளுநரின் அதிகாரங்களை ஒப்பிடுக. ஏதாவது வேறுபாடுகளை காண்கிறாயா?

3.5.2 முதலமைச்சர் தலைமையில் அமைந்த அமைச்சரவைக் குழு

முதலமைச்சரின் நிலை

அமைச்சர்கள் குழு மற்றும் அமைச்சரவையில் தலைவராக முதலமைச்சர் உள்ளார். நடைமுறையில், அவர் மாநிலத்தின் உண்மையான நிர்வாகத் தலைவராக இருக்கிறார். அவர் சட்டசபையின் தலைவராகவும் இருக்கிறார். இந்திய அரசமைப்பின் 164 (1) உறுப்பின் படி மாநிலத்தின் முதல்வர் நியமிக்கப்பட வேண்டும்.

முதலமைச்சரின் அதிகாரங்களும் பணிகளும்

மாநிலத்தின் உண்மையான நிர்வாகத் தலைவராக, முதலமைச்சர் பெருமளவில் அதிகாரங்களைப் பெறுகிறார் மற்றும் பல பொறுப்புகளை நிறைவேற்றுகிறார். முதலமைச்சரின் பணிகள் பின்வருமாறு.

12th_Political Science_Tamil_Unit_3.indd 75 04-06-2019 18:14:54

(i) அமைச்சர்கள் குழுவின் தலைவர் என்கிற முறையில், முதலமைச்சர். அதிக அதிகாரம் கொண்டவர். அமைச்சரவையின் பிற அமைச்சர்களை நியமனம் செய்வதற்கு ஆளுநருக்கு பரிந்துரை வழங்குகிறார். மேலும் அமைச்சர்களை பதவி நீக்கம் செய்ய அவருக்கு உரிமை உள்ளது.

(ii) அமைச்சரவை கூட்டங்களுக்கு அவர் தலைமை தாங்குகிறார், மேலும் அரசாங்கத்தின் முக்கிய கொள்கை முடிவுகளை எடுக்கிறார்

(iii) அவர் அமைச்சர்கள் மற்றும் ஆளுநருக்கு இடையேயான ஒரே ஒரு இணைப்பாகச் செயல்படுகிறார். நிர்வாகம் மற்றும் சட்டங்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் ஆளுநரிடம் தெரிவிக்கிறார்.

(iv) சட்டமன்றத்தில் கொண்டு வரவேண்டிய அனைத்து ஆவணங்களையும், முன்வரைவுகள், தீர்மானங்கள் போன்றவற்றையும் அவர் பரிசீலனை செய்கிறார்.

(v) அனைத்து முக்கிய நியமனங்களையும் ஆளுநரே செய்வதாக எழுத்தில் இருந்தாலும், நடைமுறையிலும் அத்தகைய நியமனங்கள் அனைத்துமே முதலமைச்சரின் ஆலோசனையின்படியே செய்யப்படுகின்றன.

மாநிலஅமைச்சர்கள் குழு

அறிமுகம்

ஆளுநருக்கு உதவியாகவும் ஆலோசனை வழங்கவும் முதலமைச்சர் தலைமையில் அமைச்சர்கள் குழு நியமிக்கப்படுவதைப்பற்றி அரசமைப்பின் 163 (1)-வது உறுப்பு குறிப்பிடுகிறது. ஆனால் அரசமைப்பு விதிகளின்படி, நெருக்கடிச் சூழலில் ஆளுநர் நேரடியாக ஆட்சியை மேற்கொள்ள இயலும்.

மத்திய அமைச்சர்கள் குழுவை போன்றே மாநில அமைச்சரவைக் குழுவும் அமைக்கப்படுகிறது. சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்ட கட்சியின் தலைவரோ அல்லது கூட்டணி கட்சிகளின் தலைவரோ முதலமைச்சராக ஆளுநரால் நியமிக்கப்படுகிறார். அமைச்சரவைக் குழுவில் உள்ள அனைத்து அமைச்சர்களும் முதலமைச்சரின் அறிவுரையின்படி ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.

செயல்பாடு

தமிழ்நாட்டில் இதுவரை முதலமைச்சர்களின் பட்டியலை தயாரிக்கவும்.

- அவர்கள் அறிமுகப்படுத்திய நலத்திட்டங்களைப் பற்றிக் கூறவும்.
- உங்களுக்கு பிடித்தமான முதலமைச்சரைப் பற்றி சில வரிகள் எழுதவும்.
- உங்கள் மாநிலத்தில் கொண்டு வரப்பட்டுள்ள பெண்களுக்கான பிரத்தியேக நலத்திட்டங்களைக் கூறவும்.

மாநில அமைச்சரவையின் பதவிக்காலம்

அரசமைப்பின்படி ஆளுநரின் விருப்பம் உள்ளவரை அமைச்சர்கள் பதவியில் தொடரலாம். ஆனால் நடைமுறையில் முதலமைச்சரின் விருப்பமுள்ளவரை அமைச்சர்கள் பதவியில் தொடர்வர். ஏனெனில் முதலமைச்சரின் பரிந்துரைப்படியே ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கவும், பதவி நீக்கம் செய்யவும் செய்கிறார். எனவே அமைச்சர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் முதலமைச்சருக்குப் பொறுப்பானவர்கள் ஆவர்.

மாநில அமைச்சரவைக் குழு

மாநில அமைச்சரவைக் குழு என்பது அமைச்சரவைக் குழு, துணை அமைச்சர்கள் ஆகியோரை கொண்டதாகும். இவர்களின் அமைச்சரவைக் குழு எனப்படுவோர் முதலமைச்சர் தலைமையில் ஓர் உட்குழுவாக செயல்படுவர். மற்ற அமைச்சர்களை விட அமைச்சரவைக் குழுவில் உள்ள அமைச்சர்கள் முக்கியமானவர்கள்,

12th_Political Science_Tamil_Unit_3.indd 76 04-06-2019 18:14:54

பிரபலமானவர்கள். அமைச்சரவையின் சார்பாக இறுதி முடிவுகளை, கொள்கை முடிவுகளை அமைச்சரவைக் குழு எடுக்கிறது. இதன் முடிவு அனைத்து அமைச்சர்களையும் கட்டுப்படுத்தும்.

படைப்பாற்றல்

மாநில அமைச்சரவைக் குழுவின் கூட்டு பொறுப்பு பற்றிய வரைபடத்தை உருவாக்கவும்.

விவாதம்



தலைமைச் செயலர் மற்றும் அமைச்சரவைச் செயலருக்கு இடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள்.

அருஞ்சொற்பொருள்



- **முன் மொழிதல்:** ஒரு விருது, கௌரவம் அல்லது தேர்தலில் போட்டியிடுவதற்காக பெயரை முறையாக அறிவித்தல்.
- **உறுதி மொழி:** ஒருவரின் எதிர்கால நடவடிக்கை அல்லது நடத்தையை உறுதி செய்யும் விதத்தில் பெரும்பாலும் கடவுளின் பெயரால் கூறப்படும் வாக்குறுதி
- **ஊதியம்:** ஒரு பணிக்காக கிடைக்கப் பெறும் தொகை
- **கண்டன தீர்மானம்:** அரசமைப்பு பதவியில் உள்ள ஒருவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் தீர்மானம்
- **பதவிக் காலம்:** ஒரு பதவிக்கு சட்டப்படி அளிக்கப்பட்டிருக்கும் காலம்
- **கூடுவதற்கான அழைப்பு:** நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் கூடுவதற்காக குடியரசுத்தலைவர் அல்லது ஆளுநரால் விடுக்கப்படும் அழைப்பு
- **ஒத்தி வைப்பு:** நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் கூட்டத் தொடரினிடையே சில அமர்வுகள் தள்ளி வைக்கப்படுதல்
- **மறுதலித்தல்:** குடியரசுத்தலைவர் மற்றும் ஆளுநருக்கு உள்ள ரத்து செய்யும் அதிகாரம்
- **அவசரச்சட்டம்:** நாடாளுமன்றம் அல்லது சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெறாதபோது, குடியரசுத்தலைவர் அல்லது ஆளுநரால் பிறப்பிக்கப்படும் சட்டம்
- **நீக்குதல்:** ஒரு சட்டம், உரிமை அல்லது ஒப்பந்தத்தை சட்டப்படி நீக்குதல்
- **அலுவல் வழி தலைமை:** ஒருவர் சட்டப்பூர்வமாக வகிக்கும் பதவியின் காரணமாக, வேறு ஒரு பதவிக்கும் பொறுப்பாக இருத்தல்
- **முன்னெடு:** ஒரு குழு அல்லது கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்திச் செல்லுதல்
- **அமைச்சரின் துறை:** ஒரு அமைச்சர் தலைமை நிர்வாக பொறுப்பேற்றிருக்கும் துறை
- **அதிகார பூர்வ பேச்சாளர்:** ஒரு கட்சி அல்லது அரசாங்கத்தின் சார்பாக நியமிக்கப்பட்டிருக்கும் பேச்சாளர்
- **ஒப்புரிமை உடைய:** ஒரே மாதிரி கருத்துடைய
- **பறைசாற்று:** வெளிப்படையாக தெரிவித்தல்
- **சட்டமன்ற கலைப்பு:** ஒரு சட்டமன்றத்தை முறைப்படி முடித்து வைத்தல்
- **சபை ஒத்திவைப்பு:** நாடாளுமன்றம் அல்லது சட்டமன்ற கூட்டத் தொடரை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒத்தி வைத்தல்
- **முன்வரைவிற்கான ஒப்புதல்:** சட்ட மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முன்வரைவிற்கு குடியரசுத்தலைவர் அல்லது ஆளுநர் அளிக்கும் ஒப்புதல்
- **வெஸ்ட்மினிஸ்டர் முறை:** இங்கிலாந்தின் வெஸ்ட்மினிஸ்ட்டர் பகுதியில் ஆங்கிலேய நாடாளுமன்றம் அமைந்திருப்பதால், அந்நாட்டு நாடாளுமன்றமுறை வெஸ்ட்மினிஸ்டர் முறை எனப்படுகிறது.

12th_Political Science_Tamil_Unit_3.indd 77 04-06-2019 18:14:55

- **ஒற்றுமை:** ஒன்றாக இணைந்திருத்தல்
- **நேர்மை:** பிரிக்க முடியாத மற்றும் முழுமையான ஒரு ஒழுங்கமைவு நிலை
- **ஒருமைப்பாடு:** நாடு அல்லது ஒரு குழுவிற்குள் ஒவ்வொருவருக்கும் இடையேயான ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமை
- **வாக்கு சீட்டு:** ஒரு வாக்கெடுப்பைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படும் ஒரு காகிதம்.
- **தீர்மானம்:** ஒரு சட்டமன்றம் அல்லது மற்ற முறையான கூட்டத்தினால் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்து அல்லது விருப்பத்தின் ஒரு முறையான வெளிப்பாடு.
- **வெற்றிடம்:** செல்லுபடியாகாத அல்லது சட்டபூர்வமாக பிணைப்பு இல்லை
- **சட்ட உரிமை கட்டளை:** ஒரு குறிப்பிட்ட முறையில் செயல்படுவதற்காக கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம்.
- **கூட்டணி:** கூட்டு நடவடிக்கைக்கான ஒரு தற்காலிக கூட்டு, குறிப்பாக அரசியல் கட்சிகள் இதன் மூலம் ஒரு அரசாங்கத்தை உருவாக்குகின்றன
- **சுயவிருப்புரிமை:** ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்ய சட்டம் அளித்திருக்கும் சுதந்திரம்.
- **ஆட்சி எல்லை:** ஒரு அரசின் அதிகாரபூர்வ எல்லை.
- **ஆக்கிரமிப்பு:** தூண்டுதல் இல்லாமல் தாக்கும் நடவடிக்கை
- **கலகம்:** ஒருநிறுவப்பட்ட அரசாங்கத்திற்கோ அல்லது தலைமைக்கெதிராகவோ ஆயுதமேந்திய எதிர்ப்பு.

மதிப்பிடுதல்

I. சரியான பதிலைத் தேர்வு செய்யவும்

1. இந்தியாவின் குடியரசுத்தலைவர்

அ. இந்தியாவின் உண்மையான ஆட்சியாளர்
ஆ. அரசின் அரசமைப்பு தலைவர்
இ. மாநில தலைவராகவும், அரசாங்கத்திற்கும் தலைமை வகித்தார்
ஈ. அரசாங்கத்தை உருவாக்குகின்ற பெரும்பான்மை கட்சியின் தலைவர்

98A63W

2. எவ்வாறு இந்தியாவின் குடியரசுத்தலைவர் தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பு தனது அலுவலகத்திலிருந்து நீக்கப்படலாம்?

அ. இந்தியாவின் தலைமை நீதிபதியின் உத்தரவின் பேரில்
ஆ. நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்கள் கூட்டாக தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம்
இ. நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளில் கண்டன தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம்
ஈ. இந்திய உச்ச நீதிமன்றத்தின் மூலம்

3. குடியரசுத்தலைவரின் மரணத்தின்போது குடியரசுத் துணைத்தலைவர் எவ்வளவு காலம் குடியரசுத்தலைவர் பதவி வகிக்கலாம்?

அ. குடியரசுத்தலைவர் வகிக்காமல் மீதம் விட்டுச் சென்ற பதவிக் காலம் வரை
ஆ. அதிகபட்சமாக 6 மாதங்கள்
இ. அதிகபட்சமாக 1 வருடம்
ஈ. அதிகபட்சமாக 3 வருடங்கள்

12th_Political Science_Tamil_Unit_3.indd 78 04-06-2019 18:14:55

4. குடியரசுத் துணைத்தலைவரின் தேர்தல் தொடர்பாக யார் முடிவு செய்கிறார்கள்?

அ. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி
ஆ. நாடாளுமன்றம்
இ. உச்ச நீதிமன்றம்
ஈ. குடியரசுத்தலைவர்

5. காபினட் அமைச்சரவையில் எந்த அமைச்சர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்?

அ. காபினட் தகுதியுள்ள அமைச்சர்கள்
ஆ. அமைச்சர்கள்
இ. துணை அமைச்சர்கள்
ஈ. மேற்கண்ட அனைவரும்

6. குடியரசுத்தலைவருக்கும் அமைச்சர்கள் குழுவிற்குமிடையேயான தகவல் தொடர்பு பாலமாக இருப்பவர்_____.

அ. மக்களவை சபாநாயகர்
ஆ. பிரதமர்
இ. எதிர்க்கட்சி தலைவர்
ஈ. குடியரசுத் துணைத்தலைவர்

7. மக்களவையில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்?

அ. 542
ஆ. 545
இ. 540
ஈ. 543

8. பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி யார்?

அ. பாதுகாப்பு அமைச்சர்
ஆ. இந்திய குடியரசுத்தலைவர்
இ. பிரதமர்
ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை

9. மாநிலங்களவையை தலைமை வகித்து நடத்துபவர்

அ. மக்களவை சபாநாயகர்
ஆ. தலைவர்
இ. குடியரசுத்தலைவர்
ஈ. தலைமை அலுவலர்

10. மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்கள் _____.

அ. 200 உறுப்பினர்கள்
ஆ. 250 உறுப்பினர்கள்
இ. 280 உறுப்பினர்கள்
ஈ. 300 உறுப்பினர்கள்

12th_Political Science_Tamil_Unit_3.indd 79 04-06-2019 18:14:55

11. இந்திய அரசமைப்பின் கீழ், மக்களவையின் நிலை

அ. ஒரு தாழ்ந்த நிலை
ஆ. உயர்ந்த நிலை
இ. மாநிலங்களவைக்கு சமமான நிலை
ஈ. மேற்கண்ட எதுவும் இல்லை

12. பின்வரும் அவசர நிலைகளில் எது இதுவரை அறிவிக்கப்படவில்லை?

அ. தேசிய அவசரநிலை
ஆ. அரசமைப்பு இயந்திரம் செயல்படாதபோது அறிவிக்கப்படும் அவசரநிலை
இ. நிதி நெருக்கடியினால் உண்டாகும் அவசரநிலை
ஈ. அனைத்தும் சம எண்ணிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளன

13. இந்திய குடியரசுத்தலைவர் யாரை மாநிலங்களவை உறுப்பினராக தேர்வு செய்கிறார்?

அ. இந்தியாவின் சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றவர்களை
ஆ. தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெற்றவர்களை
இ. நாட்டிற்கு தகுதிவாய்ந்த சேவையை செய்தவர்களை
ஈ. கலை, இலக்கியம், சமூக சேவை போன்றவற்றில் சிறந்து விளங்குபவர்களை

14. பிரதமர் எதன் தலைவர்?

அ. அரசு
ஆ. அரசாங்கம்
இ. அரசு மற்றும் அரசாங்கம்
ஈ. அரசுக்கும் அல்ல அரசாங்கத்திற்கும் அல்ல

15. அமைச்சரவையின் உறுப்பினர்கள் எங்கு கூட்டாக பொறுப்பேற்கிறார்கள்?

அ. மக்களவை
ஆ. மாநிலங்களவை
இ. மக்களவை மற்றும் மாநிலங்களவை
ஈ. மக்களவை, மாநிலங்களவை மற்றும் குடியரசுத்தலைவர்

II. பின்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமாக பதிலளிக்கவும்

1. ஆட்சித்துறை பொருள் கூறு. மத்திய அரசின் இரண்டு முக்கியமான உறுப்புகளை கூறு.

2. தேர்தல் இட ஒதுக்கீடு எப்படி கணக்கிடப்படுகிறது?

3. மாநில அமைச்சரவை பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதவும்?

4. குடியரசுத்தலைவர் ஆட்சி பற்றி நீ கருதுவது என்ன?

5. மக்களவை மற்றும் மாநிலங்களவைக்கு இடையேயான வேறுபாட்டை கூறு?

6. இந்தியாவின் குடியரசுத் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான அடிப்படை தகுதிகள் யாவை?

7. குடியரசுத்தலைவர் தனது பதவிப் பிரமாணத்தின்போது எடுக்கும் உறுதிமொழி என்ன?

12th_Political Science_Tamil_Unit_3.indd 80 04-06-2019 18:14:55

III.பின்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக பதிலளிக்கவும்

1. குடியரசுத்தலைவரின் பதவிக்கான ஊதியம், படிகள் மற்றும் சலுகைகள் யாவை?
2. குடியரசுத் துணைத்தலைவரின் பொறுப்புகள் மற்றும் பணிகள் குறித்து கூறு?
3. குடியரசுத்தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்? தேர்தல் இட ஒதுக்கீட்டைப் பற்றி சுருக்கமாக எழுதுக?
4. அமைச்சரவையின் கூட்டு மற்றும் தனிப்பட்ட பொறுப்பு பற்றி குறிப்பு வரைக?
5. முதலமைச்சரின் அதிகாரங்களும் செயல்பாடும் என்ன?'
5. மாநில அமைச்சர்கள் குழு பற்றி சிறு குறிப்பு வரைக?
6. ஆளுநரின் நியமனம், பதவி காலம் மற்றும் மாநில அரசில் அவரது நிலை குறித்து எழுதுக?

IV. பின்வரும் கேள்விகளுக்கு விரிவாக பதிலளிக்கவும்

1. குடியரசுத்தலைவரின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் யாவை?
2. பிரதமரின் பணிகள் மற்றும் மத்திய அரசில் அவரது நிலை குறித்து விரிவாக விளக்குங்கள்.
3. பிரதமரின் அலுவலகத்தின் பணிகள் என்ன?
4. ஆளுநரின் அதிகாரங்களும் பணிகளும் பற்றி விரிவாகத் தரவும்.
5. மத்திய அமைச்சரவைக் குழு பற்றி விரிவான ஒரு கட்டுரை எழுதவும்.

மேற்கோள் நூல்கள்

- Gyanender Singh(2008), Indian Constitution and government, Omega Publications, New Delhi.
- J.C. Johari (2013), The Constitution of India: A Politico-Legal Study, Sterling Publishers Pvt. Ltd.,New Delhi.
- M. Laxmikanth(2008), Indian Polity, Tata Mcgraw-Hill Publishing company Ltd, New Delhi.
- B.S. Raman (2011), Constitution of India, United Publishers, Mangalore.
- Durga Das Basu (1997), Introduction to the Constitution of India, Prentice –Hall of India Pvt, Ltd.,New Delhi.
- J.C. Johari (2004), Indian Polity, Lotus Press, New Delhi.

12th_Political Science_Tamil_Unit_3.indd 81 04-06-2019 18:14:55

அலகு 4

இந்திய நீதித்துறை



கற்றலின் நோக்கங்கள்

- இந்திய நீதித்துறையின் இயல்பு மற்றும் முக்கியத்துவம் குறித்து விவாதித்தல்.
- இந்திய நீதித்துறை உருவாக்கம் குறித்து அறிதல்.
- இந்திய நீதித்துறை அம்சங்களை ஆய்வு செய்தல்.
- அரசமைப்பை விளக்குபவராக நீதித்துறை பங்கை மதிப்பீடு செய்தல்.
- நீதித்துறையின் சுதந்திரத்தை மேம்படுத்தும் காரணிகளை விவாதித்தல்.
- நீதிமன்றச் சீராய்வு, பொது நலன் வழக்கு மற்றும் நீதித்துறை செயல்முறை ஆகியவற்றின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை விளக்குதல்.
- அரசமைப்பு, நிர்வாகச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் ஆகியவற்றின் தன்மை குறித்து தெரிந்து கொள்ளல்.
- இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விளக்குதல்.
- உயர் நீதிமன்றங்கள் மற்றும் கீழமை நீதிமன்றங்களின் அமைப்பு, அதிகாரங்கள், செயல்பாடுகள் குறித்து தெரிந்து கொள்ளல்.

L4VZSS



நீதித்துறை சரியாக இயங்குகிறது என்றால் என்ன?

மக்கள், சட்டமன்றங்கள், ஆட்சித்துறையைவிட நீதித்துறையின் மீதே அதிகம் நம்பிக்கை கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். எப்பொழுதெல்லாம் அவர்களுடைய உரிமைகள் மீறப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் அவர்களுடைய உரிமைகளும், தனிச்சலுகைகளும் பாதுகாக்கப்படும் என நீதித்துறை நோக்கி வருவதால் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

இந்திய உச்ச நீதிமன்றம்

குறிப்பிடத்தக்க மேற்கோள்

"உச்ச நீதிமன்றம், அனைத்து இந்திய நீதிமன்றமாகும், கட்சி அரசியலில் இருந்தும், அரசியல் கோட்பாடுகளில் இருந்தும் உறுதியாக தனித்து நிற்கும். அது அரசுகள் மாறுவதைக் குறித்து அக்கறை கொள்வதில்லை. நீதிமன்றமானது, அந்த நேரத்தில் நடைமுறையில் இருக்கும் சட்டத்தின்படி, நிற்கிறது. அனைவரின் மீதும் பரிவு, நன்மதிப்பு கொண்டுள்ளது. எனினும் அது யாருடனும் அணி சேர்வது இல்லை" – **மாண்புமிகு திரு ஹரிலால் ஜே. கனியா, இந்திய முதல் தலைமை நீதிபதி.**

நீதித்துறையானது அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளில் ஒன்றாகும், மற்ற இரண்டு சட்டமன்றமாகவும், ஆட்சித்துறையாகவும் இருக்கின்றன. நீதித்துறையானது சட்டங்களுக்கு விளக்கம் அளிப்பதையும், அரசமைப்பை பாதுகாப்பதையும் பணியாகக் கொண்டிருக்கிறது. அது நீதித்துறை நிர்வாகத்தை உறுதிப்படுத்துகின்றது. தனி மனித உரிமைகள், முன்னுரிமைகள் ஆகியவற்றின் மீது அரசு மற்றும் தனிமனிதர்களால் மேற்கொள்ளப்படும் மீறல்களில் இருந்து பாதுகாப்பு அளிப்பதை உறுதிப்படுத்துகிறது. சுதந்திரமான மற்றும்

12th_Political Science_Tamil_Unit_4.indd 83 04-06-2019 11:24:45

திருக்குறள்

நிகழ் ஆய்வு

1. பிணையாக திருக்குறள் ஒப்புவித்தல்.

கைகலப்பில் ஈடுபட்ட மூன்று கல்லூரி மாணவர்களுக்கு பிணையாக 100 திருக்குறள்களை தொடர்ந்து 10 நாட்கள் அப்பகுதியிலுள்ள குறிப்பிட்ட தமிழாரசிரியர் முன்பு ஒப்புவிக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்து தமிழ்நாடு நீதிமன்றம் பிப்ரவரி 2019 அன்று உத்தரவிட்டது.

ஒரு நபர் மீது தாக்குதல் நடத்தியதாக மூன்று கல்லூரி மாணவர்களுக்கு மேட்டுபாளையம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது, அவர்கள் சார்பில் பிணைக் கோரப்பட்டது. பிணையின் நிபந்தனையாக அப்பகுதி அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் முன்பு தினமும் 100 திருக்குறள்கள் ஒப்புவிக்க வேண்டுமென்று நீதிபதி கூறினார்.

இவ்வாறு தொடர்ந்து 10 நாட்கள் திருக்குறள் ஒப்புவித்தப் பின்பு இறுதி நாளில் அந்த மாணாக்கர்களுக்கு சான்றிதழ் வழங்கும்படியும் நீதிபதி அப்போது உத்தரவிட்டார்.

2. திருக்குறளை ஆழமாகக் கற்பதற்கு வழிவகுத்த மதுரை உயர் நீதிமன்ற கிளை



சென்னை உயர் நீதிமன்றத்தில் மதுரை கிளை வழங்கிய தீர்ப்புகளில் தமிழக பள்ளிகளில் திருக்குறளை ஆழமாகக் கற்க வழிவகுத்து அளித்தத் தீர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மதுரைகிளை கடந்த 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறைக்கு அளித்த உத்தரவில் பள்ளிப் பாடத்திட்டத்தில் திருக்குறளின் 133 அதிகாரங்களில் 108 அதிகாரங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. இதன்மூலம் 2017-18 கல்வியாண்டிலிருந்து மாணவர்கள் 1050 திருக்குறள்களையும் கற்கும் வகையில் தமிழ்நாடு அரசு ஆணைப் பிறப்பிப்பதற்கு மதுரைகிளையின் உத்தரவு வழிவகுத்தது. 6 முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்கள் முன்கூறிய திருக்குறள் பாக்கள் அனைத்தையும் கற்பதுடன் அதன் பொருளினையும் தெளிவாகப் புரிந்து கொள்வதை உத்தரவாதம் செய்யும்படியும் அது கூறியது. இதன்மூலம் தற்போது பள்ளிக் கல்வி மாணவர்கள் திருக்குறள் பாக்களை கற்று ஆழமாகப் புரிந்து வருகிறார்கள்.

தமிழில் பண்டைய இலக்கியங்களில் உலகின் 60-க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்ட இலக்கியம் திருக்குறள் ஒன்றேயாகும்.

12th_Political Science_Tamil_Unit_4.indd 84 04-06-2019 11:24:45

பாகுபாடற்ற நீதித்துறையை உருவாக்குவது ஒரு நாகரிக அரசு செயல்படுவதற்கு முன் நிபந்தனையாகும். இந்தியா போன்ற கூட்டாட்சி அரசு முறை கொண்ட நாடுகளில் கூட்டாட்சியின் பாதுகாவலனாகவும், மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே எழும் அதிகார வரம்பு கருத்துவேறுபாடுகளுக்குத் தீர்வு காண்பதனாலும் நீதித்துறை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

குழு செயல்பாடு

இந்த பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள மூன்று வழக்கு ஆய்வுகளை கவனமாகப் படித்த பிறகு ஒரு நீதிபதியின் தகுதி குறித்து விவாதிக்கவும். எப்படிபட்ட நபர் ஒரு நல்ல நீதிபதியாக உருவாக முடியும்? ஒரு நீதிபதியை நியமனம் செய்வதற்கு முன் அவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதை ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை உருவாக்கி கலந்துரையாடி அதனை 250 வார்த்தைகளுக்கு மிகாமல் எழுதி அதனை வகுப்பறை அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தவும்.

4.1 இந்திய நீதித்துறையின் பரிணாம வளர்ச்சி

பண்டைய இந்தியாவில் நீதிமுறையமைப்பு

இந்தியா பல்வேறு இனங்கள், பண்பாடுகள், மொழிகள் மற்றும் அரசியல், சமூக அமைப்புகளை கொண்ட ஒரு துணைக்கண்டமாக இருக்கிறது. இந்தியாவின் பண்டைய காலத்திலும் மற்றும் இடைக்காலத்திலும் அரசு எந்த ஒரு ஆட்சித்துறையிலிருந்தும் நீதித்துறை பணிகளைப் பிரித்து வைக்கப்படவில்லை. வேதகாலத்தின்போது (குலபா (அ) குலபாடோ), குடும்பத் தலைவனின் அதிகாரமானது மன்னர் வழி குறுக்கீடுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தது; அதேபோல் கிராமா, தோபா, வைசியா, ஜனம் மற்றும் கனம் போன்ற குலவகைப்பட்ட மற்றும் இனக்குழு அமைப்புகளும் தன்னாட்சி பெற்றுத் திகழ்ந்தன. பண்டைய இந்திய முடியாட்சிகளில் நீதித்துறை அதிகாரத்தில் அரசரே உயர்நிலையில் இருந்தார். அரசர் நினைத்ததே சட்டமாக இருந்தது, வழக்குகளில் அவர் வார்த்தையே உயர்ந்த நீதியாகவும் இறுதித் தீர்ப்பாகவும் இருந்தது.

எனினும், கிராமப்புறங்களில் பெரும்பாலான வழக்குகள் சாதி அமைப்புகள் அல்லது உள்ளாட்சி நிர்வாக அமைப்புகளின் சட்டத்திட்டங்களின் மூலமாகவே தீர்க்கப்பட்டு வந்தன. தேசத் துரோகம் போன்ற மிகத் தீவிரமான வழக்குகள் மட்டும் அரசவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டன. அங்கு முறையான சட்ட அமைப்பு அல்லது நீதித்துறை வழிமுறை இருந்ததில்லை. பெரும்பான்மையான நேரங்களில் குற்றம் சாட்டப்பட்டவர், தான் குற்றமற்றவர் என்பதை ஆதாரங்கள், சாட்சியங்கள் மூலமாக நிரூபிக்க வேண்டும். அல்லது தீக்குளித்தல், தண்ணீரில் மூழ்குதல், விஷம் அருந்துதல் போன்ற கடும்சோதனைகளுக்கு தன்னை ஆட்படுத்திக் கொள்ளுதல் மூலமாக தாம் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வேண்டும். தண்டனைகள் (தண்டனை முறை) மிகவும் கடுமையாக இருந்தது. மேலும், காட்டுமிராண்டித்தனம் கொண்டதாக இருந்தது. இதற்கு பரிகாரம் என்பது வழக்கத்தில் இல்லை. கசையடி, பிரம்படி, முழங்கால்களைத் துண்டித்தல், கழுமரத்தில் ஏற்றுதல், அடிமைப்படுத்துதல், சொத்துக்களை பறிமுதல் செய்தல், நாடு கடத்துதல், தலையை துண்டித்தல், யானை மூலம் தலையை இடரச்செய்தல் மற்றும் மிதிக்கச் செய்தல் போன்ற தண்டனைகள் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டன. அரசுகள் பிராமணர்களின் தாக்கத்தின் கீழ் வந்த பின்னர், ஸ்மிருதிகள் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டு, தண்டனைகள் வழங்கப்பட்டன.

அக்காலத்தில் மனுஸ்மிருதி, நாரதர் ஸ்மிருதி, யக்ஞவாக்கியர் ஸ்மிருதி போன்றவை இருந்தன, அவற்றுள் "மனுஸ்மிருதி" அடிப்படையாக இருந்தது. இந்த ஸ்மிருதிகள் பொதுவாக வர்ணம். சாதிபடிநிலைச் சமூக அமைப்பை உயர்த்திப் பிடிப்பதாக இருந்தன. "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்ற கருத்து இருந்ததில்லை. பிராமணர்கள் பெரும்பாலும் தண்டனைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தனர். எந்தவிதத்திலும்

12th_Political Science_Tamil_Unit_4.indd 85 04-06-2019 11:24:45

பிராமணர்கள், அவர்கள் கொடிய குற்றங்களை செய்துவிட்டாலும் உடல் ரீதியான துன்புறுத்தல், உறுப்பு நீக்கம் செய்தல், கழுமரத்தில் ஏற்றுவது, மரணதண்டனை ஆகியவற்றில் இருந்து விதிவிலக்கு செய்யப்பட்டிருந்தார்கள். மற்றொருபுறம் ஒடுக்கப்பட்ட சாதியினரை கடுமையான துன்பங்களுக்கும் மற்றும் உச்சபட்ச தண்டனைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர். சாதி அடிப்படையிலான தொழில்களை மாற்றிக் கொள்வது என்பது மிகக் கொடிய குற்றமாக (Varna Sangraha) கருதப்பட்டது.

அர்த்தசாஸ்திரம் குற்றங்கள் நிகழ்வதை கட்டுப்படுத்துவது என்ற பெயரில் அளவுக்கு அதிகமான தண்டனைகளைப் பரிந்துரைத்தன. குற்றவாளிகள் மீது அபராதங்கள் விதிப்பது, சொத்துக்களை பறிமுதல் செய்வது முதன்மையான அரசு வருமானமாக இருந்தன. ஸ்மிருதிகள் பெண்களை கீழ்நிலை மனிதர்களாகவே நடத்தியது. வாரிசுரிமை விவகாரங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டுடன் தீர்ப்பளித்தனர். சூத்திரர்களும், பஞ்சமர்களும் நியாயமான விசாரணைக்கும், நியாயமான தண்டனைகளுக்கும் தகுதி இல்லாதவர்கள் ஆனார்கள். வர்த்தகத் தகராறுகள் பெரும்பாலும் வணிகக் குழு மூலம் தீர்க்கப்பட்டன. அதைப்போலவே ஒவ்வொரு கைவினைக் கலைஞர்கள் குழுவும் தங்களுடைய சொந்த பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள கைவினைஞர்கள் சங்கத்தைத் தமக்குள் வைத்து கொண்டனர். பல்லவர், பாண்டிய, சோழர்கால மகாசபைகள் நீதி விசாரணை நடைமுறைகளிலிருந்து பிராமணர்களைப் பாதுகாத்தன. மகாசபைகளின் வாரியம் (தர்ம வாரியங்கள், நியாய வாரியம்) மகாசபைகளுக்குள் எழும்பிரச்சனைகளை தீர்த்து வைத்தன. உள்ளூர் அமைப்புகளான ஊர், ஊரார், நகரத்தார் போன்றவை அவர்களுக்கு உரிய நீதித்துறை ஏற்பாடுகளைக் கொண்டிருந்தனர்.

அசோகப் பேரரசு போன்ற புத்த பேரரசுகள் பெரும்பாலும் ஸ்மிருதி முறைகளை புறம்தள்ளின. நீதி வழக்குகளில் சமூகக் குழுக்களுக்கிடையே ஓரளவுக்குச்

கடும் சோதனைகள்

தராசு முறை: ஒரு தராசில் ஒரு பக்கம் ஒரு பனை ஓலை கட்டு வைத்துவிட்டு இன்னொரு பக்கம் குற்றம் சாட்டப்பட்டவர் அமரும்படியாக செய்யப்பட்டு தராசு சமமாக இருக்கும்படி வேண்டிக் கொள்ளுப்படுகிறார்கள். வேண்டுதலுக்கு பிறகும் அவர் இருக்கும் தராசின் பகுதி கீழே வந்து விட்டால் அவர் குற்றம் செய்தவர் என்று அறிவிப்பார்கள்.

நெருப்பு சோதனை குற்றம் சாட்டப்பட்டவர் தீயின் நடுவே நடந்து வர செய்யப்படுவார். அந்த நபர் எந்த தீ காயமும் அடையவில்லை என்றால் மட்டுமே அவர் குற்றமற்றவராக கருதப்படுவார்.

தண்ணீர் முறை : தெய்வ சிலையை சுத்தப்படுத்துவதற்கு உள்ள நீரை, குற்றம் கூறினால் குற்றம் சாட்டப்பட்டவர் அதை குடிக்கும்படி செய்யப்படுவார், அதனை தொடர்ந்து வரும் 14 நாட்களுக்குள் குடிக்கும்வரை அவருக்கு எந்த கேடான பாதிப்பும் ஏற்படவில்லை என்றால் அவர் குற்றமற்றவர் என கருதப்படுவார்.

நஞ்சு அருந்தும் சோதனை: இம்முறையில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு நஞ்சு அருந்தும்படியாக செய்யப்படுவார், அந்த நபருக்கு எந்த தீய விளைவும் ஏற்படவில்லை என்றால் அவர் குற்றமற்றவர் என கருதப்படுவார்.

குலுக்கல் சோதனை: குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு தொகுப்பில் இருந்து ஒன்றை எடுத்து தரும்படி கேட்டுக் கொள்ளப்படுவார். அதில் அவருக்கு "தர்ம கட்டு" வந்திருந்தால் அவர் குற்றமற்றவராக கருதப்படுவார்.

அரிசி தானிய சோதனை: இம்முறையில் குற்றம் சாட்டப்பட்டவர் உமி நீக்கப்படாத நெல் தானியத்தை மென்று சாப்பிடும் படியாக செய்யப்படுவார், அவருடைய வாயில் இரத்தக்கறை காணப்பட்டால் அவர் குற்றம் செய்தவர் என்று அறிவிக்கப்படுவார்.

ஊற்றுநீர் சோதனை முறை: இங்கு குற்றம் சாட்டப்பட்டவர் நஞ்சு போன்ற நீரை குடிக்கும்படியாக செய்யப்படுவார், அவர் உளறினால் அவர் குற்றம் செய்தவராவார் அல்லது குற்றத்தை அந்த நபர் ஒத்துக் கொண்டவராவார்.

12th_Political Science_Tamil_Unit_4.indd 86 04-06-2019 11:24:45

சமமாக நடத்தப்பட்டன. அசோகர் கொடிய தண்டனைகளை நீக்கினார். மேலும், அவர் தனது அதிகாரிகளிடம் கைதிகளிடத்தில் மிகவும் மனிதாபிமானம் உடையவர்களாகவும், கருணை உள்ளவர்களாகவும் இருக்கும்படி அறிவுறுத்தினார். சிலப்பதிகாரத்தில் கோவலன் தூக்கிலிடப்படும் சம்பவமானது நீதித்துறை செயல் முறையிலுள்ள குறைபாடுகளை வெளிப்படுத்துகிறது. நீதித்துறையில் உயர் அதிகாரிகள் அறநெறியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இலக்கியங்கள் வலியுறுத்தினாலும், நீதி வழக்கு விசாரணைகளில் வரம்பு மீறி நடந்து தண்டனையில் இருந்து விதிவிலக்கு கொடுப்பதோ அல்லது அநீதியான தண்டனைகளை வழங்கியிருப்பதையோ நாம் அடிக்கடி கண்டிருக்கிறோம். பண்டைய இந்தியாவில் சட்டத்தின் ஆட்சி அங்கு இருந்தது இல்லை, ஆனால் அதிகாரம் கொண்டோரின் ஆட்சியையே நாம் காண்கிறோம்.

இடைக்கால இந்தியாவில், முஸ்லீம் ஆட்சியாளர்கள் ஒருவித தனித்தன்மை கொண்ட சூழ்நிலையை எதிர்கொண்டனர். அங்கே அவர்கள் ஆட்சியின் கீழ் வாழ்ந்த மக்கள் பெரும்பான்மையானோர் முஸ்லீமல்லாதவர்கள். முஸ்லீம் மற்றும் முஸ்லீம் நலன்கள் சார்ந்த வழக்குகளில் இஸ்லாமிய சட்டங்களை பயன்படுத்தினர். அதேநேரம், முஸ்லீம் அல்லாதவர்களின் சமூக-மத விவகாரங்களில் தலையிடா கொள்கைக்கு முன்னுரிமை அளித்தனர். அங்கெல்லாம் கிராமப்புற பாரம்பரிய விசாரணை முறையை ஏற்றனர். முஸ்லீம் ஆட்சியாளர்கள் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை மிகவும் சரியாக வேறுபடுத்திக் காட்டியிருந்தனர். ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட முறைகளைக் கையாண்டனர். எனினும், இறைப்பழி போன்ற வழக்குகளில் மிகவும் கொடிய தண்டனைகளை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளித்தனர்.

4.2 இடை காலத்தில் இந்தியாவில் நீதித்துறை அமைப்பு

இடைக்கால இந்தியாவில் பேரரசை நிர்வகிக்கும் சுல்தான்/சுல்தானா ஆகியோரே நீதி நிர்வாகத்தை நிர்வகிக்கும் உச்சபட்ச அதிகாரம் கொண்டவர்கள் ஆவர். அவர்கள் கீழ்க்கண்ட தகுதி நிலைகளில் இருந்து நீதி நிர்வாகத்தை நடத்தினர். அவற்றின் பெயர்கள் பின்வருமாறு;

- திவான்-இ- குவாசா (நடுவர்),
- திவான்-இ-மசலிம் (அதிகாரத்துவத்தின் தலைவர்) மற்றும்
- திவான்-இ-ரியாசத் (தலைமை தளபதி).

இடைக்கால இந்தியாவில் நிர்வாக அமைப்புமுறைகளே நீதித்துறை அமைப்புகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. நீதிமன்றங்களின் அதிகார வரம்பானது தலைநகரம், மண்டலம், மாவட்டம், பர்கானா (வட்டம்) மற்றும் கிராமம் என நிலப்பரப்பு அடிப்படையில் தெளிவாக பிரிக்கப்பட்டிருந்தது. பொதுவாக, சுல்தானத்தின் தலைநகரில் கீழ்க்கண்ட ஆறு வகையான நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு இருந்தன.

- மன்னர் நீதிமன்றம்
- மேல்முறையீட்டு உச்ச நீதிமன்றம் (திவான் – அல் – மசாலிம்)
- குடிமையியல் வழக்குக்கு உச்ச நீதிமன்றம் (திவான் – இ – ரிசாலட்)
- மாநிலத் தலைமை நீதிபதி நீதிமன்றம் (சத்ரே ஜகான் நீதிமன்றம்)
- தலைமை நீதிபதி நீதிமன்றம்
- தேசத்துரோக வழக்குகள் நீதிமன்றம் (திவான் – இ – ரியாசட்)

மன்னர் நீதிமன்றம் சுல்தானால் தலைமையேற்று நடத்தப்பட்டது. இந்த நீதிமன்றம் அசல் அதிகாரவரம்பு (*Original Jurisdiction*) மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் என இரண்டும் கொண்ட அமைப்பாகச் செயல்பட்டது. நீதி நிர்வாகத்தைப் பொருத்தவரை இதுவே உச்சபட்ச மேல்முறையீட்டுத் தீர்ப்பாகும். முப்தி (சட்டவல்லுனர்) எனப்படும் சட்டவல்லுனர்கள் சுல்தானுக்கு உதவியளித்தனர்.

12th_Political Science_Tamil_Unit_4.indd 87 04-06-2019 11:24:45

திவான்-அல்-மசாலிம் மற்றும் திவான்-இ-ரிசாலட் நீதிமன்றங்கள் முறையே தேச துரோக வழக்குகள் மற்றும் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் உச்ச நீதிமன்றங்களாகும்.

இந்த நீதிமன்றங்கள் அலுவலக ரீதியாக சுல்தானால் தலைமை தாங்கி நடத்தப்பட வேண்டும் எனினும், அவர் அதிகமாக குற்றவியல் நீதி விசாரணைகளின்போது மட்டுமே கலந்து கொண்டார். சுல்தான் இல்லாதபோது குவாசி-உல்-குசாட் எனும் அரசின் நீதிமன்ற தலைமை அலுவலர் தலைமை தாங்கி நடத்துவார். ஆனால், பின்னர் சத்ரே ஜகான் எனும் அலுவலர் பதவி உருவாக்கப்பட்டு நீதித்துறையின் உண்மையான தலைமை அலுவலராக செயல்பட்டார். இந்த சத்ரே ஜகான் நீதிமன்றமும் மற்றும் தலைமை நீதிபதி நீதிமன்றமும் பின்னர் அலாவுதீன் கில்ஜி ஆட்சியில் இணைக்கப்படும்வரை நீண்டகாலமாகத் தனித்தே இயங்கின. தலைமை நீதிபதியின் நீதிமன்றம் குடிமையியல் மற்றும் குற்ற வழக்குகளைக் கையாண்டது. தலைமை நீதிபதியின் கீழ் திறமையான, நேர்மையான, மதிக்கப்பட்ட உதவி நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். முப்தி, பண்டிட், மொக்டாசிப் (அரசு வழக்கறிஞர் தரப்பு) தாத்பாக் (நிர்வாக அலுவலர்) போன்ற அலுவலர்கள் தலைமை நீதிபதியின் நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்டிருந்த அலுவலர்கள் ஆவர். திவான்-இ-ரியாசத் பெரும் தேச துரோக வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம் ஆகும்.

4.3 நவீன இந்தியாவில் நீதித்துறை அமைப்பு

கிழக்கிந்திய கம்பெனி 1600 ஆண்டு முதலாம் ராணி எலிசபெத்தின் சாசன சட்டத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டது. கிழக்கிந்திய கம்பெனி வர்த்தகம் மேற்கொள்ளத் தேவையான ஒழுங்கு முறைகள் மற்றும் அங்கீகாரத்தை அரசு அளித்தது. மதராஸ் நிர்வாகத்தைப் பொருத்தவரை 1661-ஆம் ஆண்டு சாசன சட்டம் ஒரு ஆளுநர் அவருடன் தலா ஒரு குடியேற்றப்பகுதிக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் ஒரு குழுநியமிக்க வழி வகுத்தது. இக்குழுவே வழக்குகளை விசாரித்தது. கிழக்கிந்திய கம்பெனி குறிப்பாக மதராஸ் பகுதியில் ஒரு ஆளுகை சக்தியாக உருவானது. இங்கு ஏற்கெனவே இயங்கிய உள்ளூர் நீதி நிர்வாக முறையைப் பின்பற்றும் வகையில் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்தது. இங்கிலாந்து சட்டத்தின்படி ஆளுநரும் அவருடைய ஆட்சிகுழுவும் குடிமையியல், குற்ற வழக்குகளைத் தீர்மானிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டன. எனினும் உள்நாட்டு வழக்குகளில் உள்ளூர் பாரம்பரிய முறைகளே பின்பற்றப்பட்டன. இங்கிலாந்து அரசால் விசாரிக்கப்பட்ட முதல் வழக்கு அசென்டினா வழக்கு ஆகும்.

1665-ஆம் ஆண்டு இந்த வழக்கு நடந்தது. அப்போது, பாக்ஸ் க்ராப்ட் ஆளுநராக இருந்தார். 1678-ஆம் ஆண்டு ஸ்டிரெய்ன்ஷாம் மாஸ்டர் என்பவர் ஆளுநராக நியமனம் செய்யப்பட்டது, மதராஸ் நீதிமுறை அமைப்பு மறுசீரமைப்பு செய்யப்படுவதற்குக் காரணமானது. ஆளுநரும் அவருடைய குழுவும் சேர்ந்து நீதி வழங்கும் அதிகாரம் கொண்ட உயர் நீதிமன்ற ஆட்சி குழுவாக மாறியது. ஆங்கிலம் நீதிமன்ற மொழியாக அறிவிக்கப்பட்டது. வணிகர்கள் கடலில் மேற்கொள்ளும் குற்றங்களை விசாரிக்க ஒரு கடற்படை நீதிமன்றம் நிறுவ 1683-ஆம் ஆண்டு சாசன சட்டம் வழிவகுத்தது. 1687-ஆம் ஆண்டு சாசன சட்டம் மதராஸ் மாநகராட்சி அமைப்பதற்கு கிழக்கிந்திய கம்பெனிக்கு அதிகாரமளித்தது. அதோடு மேயர் நீதிமன்றம் இணைக்கப்பட்டது. இதுவே மதராஸ் நகரத்தின் நீதிமன்றமாக (வழக்கு மன்றம்) இயங்கியது.

செயல்பாடு

திருமதி. அசென்டியாதவாஸ் என்ற வழக்கினை மேலும் படிக்கவும். இது மதராஸில் ஆங்கிலேய நீதிபதி விசாரித்த முதல் வழக்காகும்.

பம்பாயின் நீதி நிர்வாகத்தைப் பொருத்தவரை, பாம்பே மீது கிழக்கிந்திய கம்பெனி நீதிதுறை அதிகாரம் செலுத்த 1668 ஆம் ஆண்டு சாசன சட்டம் அதிகாரம்

12th_Political Science_Tamil_Unit_4.indd 88 04-06-2019 11:24:45

அளித்தது. 1672-ஆம் ஆண்டு பிரகடனம், ஆங்கிலேயச் சட்டத்தை பம்பாயில் அறிமுகப்படுத்தியது. மேலும், பம்பாய் நீதிவழங்கும் அதிகாரம் கொண்ட நீதித்துறை புதிய மத்திய நீதிமன்றத்தை நிறுவியது. ஆங்கில சட்டத்தின் பயன்பாடு என்பது ஐரோப்பியர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் நலன்கள் சார்ந்த விவகாரங்களுக்கு பொருந்தக் கூடியதாகும். இந்த நீதிமன்றமானது குடிமையியல், குற்றவியல் மற்றும் நிரூபிப்பு வழக்குகளில் அதிகாரவரம்பைச் செயற்படுத்தியது. மேலும் குற்றச் சட்டங்களை நிர்வகிக்க அமைதிக்கான நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டனர். அதன்பிறகு சாட்சியங்களை விசாரணை செய்யவும், தொடக்கநிலை விசாரணைகள் செய்யவும், வழக்குகள் நீதிமன்றத்தை நோக்கி கொண்டு செல்லப்பட்டன. எனினும் சித்தி யாக்கூப் எனும் முகலாய கடற்படை தளபதியின் படையெடுப்பு 1690-ஆம் ஆண்டு பம்பாயில் நீதிமன்றம் கலைக்கப்படக் காரணமாகியது. 12 ஆண்டுகளுக்குப் பிறகு, 1718 ஆம் ஆண்டு மீண்டும் நீதிவழங்கும் அதிகாரம் கொண்ட நீதிமன்றம் புதுப்பிக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு விவகாரங்கள் மீதான விசாரனை நடத்த அதிகாரம் கொண்டதாகும். இந்த நீதிமன்றமானது வாரத்திற்கு ஒரு முறை கூடினாலும், துரிதமான விசாரனைக்கும் பாகுபாடற்ற தீர்ப்புகளுக்கும் புகழ் பெற்றதாகக் கருதப்படுகிறது.

கல்கத்தா மாகாணத்தைப் பொருத்தவரை, ஆளுநருக்கும், அவருடைய ஆட்சிக் குழுவுக்கும் நீதித்துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. குடிமையியல் மற்றும் குற்றவியல் விவகாரங்களைப் பொருத்தவரை, கிழக்கிந்திய கம்பெனியானது ஏற்கனவே வழக்கத்திலிருந்த முகலாய நீதித்துறை நிர்வாக முறையையே பின்பற்றியது. ஆங்கிலேயே மாவட்ட ஆட்சியரால் மூன்றாம் நடுவர் தீர்ப்பாயத்திற்குப் பரிந்துரைக்கப்படும் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை பாஞ்தாரி நீதிமன்றம் தலைமையேற்று நடத்தியது. கல்கத்தா நீதித்துறை நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சியர் மிக முக்கியப் பங்கு வகித்தார். மேலும், அவருடைய அலுவலகம் குடிமையியல், குற்றவியல் மற்றும் வருவாய் வழக்குகளை விசாரிக்கும் அலுவலகமாகவும் இருந்தது.



வாரன் ஹேஸ்டிங்ஸ்



கார்ன் வாலிஸ்

இதேபோல் சாசன சட்டம் 1687 மதராஸ் மாகாணத்தில் பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் 1726-ஆம் ஆண்டு சாசன சட்டம் மூன்று மாகாணங்களிலும் ஒவ்வொரு மேயர் நீதிமன்றங்களை அமைத்தது. 1753-ஆம் ஆண்டு சாசன சட்டம், 1726-ஆம் ஆண்டு சாசனத்தில் நீதி தொடர்பான பகுதிகளை மேலும் சீர்த்திருத்தம் செய்தது. மேலும் இந்த சாசனம் சட்டம் ஐந்து நீதிமன்றங்களை நிறுவியது. அவைகள், முறையே கோரிக்கைகள் நீதிமன்றம், மேயர் நீதிமன்றம், குடியரசுத்தலைவர் நீதிமன்றம், ஆட்சிக்குழு கொண்ட நீதிமன்றம் மற்றும் அரசர் தலைமையிலான நீதிமன்றம் ஆகியனவாகும். இந்திய நீதித்துறையின் மற்றொரு வரலாற்றுச் சிறப்புமிக்க பரிணாம வளர்ச்சி 1772-ஆம் ஆண்டு வாரன் ஹேஸ்டிங்கின் திட்டமாகும். இது நீதித்துறை நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்துவதாக இருந்தது. 1780-ஆம் ஆண்டுகளில் அவர் மாகாண நீதிமன்றங்களைச் சீரமைத்தார்.

காலனி ஆட்சிக் காலத்தில் நீதித்துறையில் ஏற்பட்ட மிக முதன்மையான மேம்பாடு என்பது உள்ளூர் சட்டங்களை தொகுத்தது ஆகும். முதலாவது கவர்னர் ஜெனரல் பதவி வகித்த வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்து சட்டங்களைத் தொகுப்பதற்கு காரணமானவர் ஆவார். அடுத்து கார்ன் வாலிஸ் தொகுத்த சட்டத் தொகுப்பு மற்றொரு முதன்மையான பங்களிப்பாகும். அதைப்போலவே இஸ்லாமிய சட்டங்களும் தொகுக்கப்பட்டு நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

12th_Political Science_Tamil_Unit_4.indd 89 04-06-2019 11:24:46



கல்கத்தா உயர் நீதிமன்றம்



பம்பாய் உயர் நீதிமன்றம்



மதராஸ் உயர் நீதிமன்றம்

கல்கத்தாவில் ஒழுங்குமுறைச் சட்டம் 1773-ஆம் ஆண்டு, ஒரு உச்ச நீதிமன்ற நீதி நிர்வாகம் அமைக்க மன்னருக்கு அதிகாரம் அளித்தது; சாசன சட்டம் 1774 உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்புகளை விரிவாக்கம் செய்தது. எனினும் மதராஸ், பம்பாய் உச்ச நீதிமன்றங்கள் உடனடியாக நிறுவப்படவில்லை. 1801 மற்றும் 1824-ஆம் ஆண்டுகளில் முறையே மதராஸ், பம்பாய் உச்ச நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. 1793-ஆம் ஆண்டில் காரன்வாலிஸ் பிரபு 'சட்ட விதிகள் தொகுப்பு' ஒன்றினைத் தயாரித்தார். இதுவே, 'காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பு' எனப் புகழ்பெற்றது. அது குடிமை மற்றும் குற்றவியல் என இரு விசாரணை முறைகளையும் கையாளுவதாக இருந்தது. அவர் குடிமையியல் நீதிமன்றங்களை அங்கீகரித்தார். நீதிமன்றக் கட்டணங்களை ஒழித்தார். மேலும், குற்றவியல் நீதிமன்றங்களில் சீர்திருத்தம் செய்தார். வங்காளத்தின் கவர்னர் ஜெனரலாக 1807-ஆம் ஆண்டு பதவியேற்ற மின்டோ பிரபு பல்வேறு நீதிமன்றங்களின் அதிகாரங்களையும், அதிகார வரம்பினையும் அதிகரித்தார். 1813-ஆம் ஆண்டு ஹாஸ்டிங்ஸ் பிரபு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அவர் நாட்டின் குடிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நிர்வாகத்தில் மேலும் பல சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். நீதி நிர்வாகத்தில் நிலவும் சிவப்பு-நாடா முறையைத் தடுக்க முயற்சி எடுக்கப்பட்டது. இவரைத் தொடர்ந்து பெண்டிங் பதவியேற்றார். இவர் இந்தியாவின் நீதித்துறை நிர்வாகத்தை மறுசீரமைப்பு மற்றும் தொகுக்கும் பணியை செய்தார். அவர் மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்களை மூடினார். அப்பணிகளை மாவட்ட நடுவர் நீதிமன்றங்களுக்கு மாற்றினார். 1834-1861 காலகட்டத்தில் இங்கிலாந்து மன்னர் நீதிமன்றமும், இந்தியாவில் கம்பெனி நீதிமன்றமும் தனித்தனி அதிகார வரம்புகளைக்கொண்ட இரட்டை நீதி அமைப்பை உருவாக்கி இருந்தது.

இந்திய உயர் நீதிமன்ற சட்டம் 1861, கல்கத்தா, மதராஸ், பாம்பாய் ஆகிய நகரங்களில் நீதி வழங்கும் அதிகாரம் கொண்ட உயர் நீதிமன்றங்களை அமைக்க மன்னருக்கு அதிகாரம் அளித்தது; இது உச்ச நீதிமன்றமுறை ஒழிப்புக்கு இட்டுச் சென்றது. இதுவே இந்தியாவில் உயர் நீதிமன்றங்கள் தோன்றுவதற்கான வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகக் கருதப்படுகிறது. பின்னர், இந்திய அரசாங்கச் சட்டம் 1935, இந்திய உயர் நீதிமன்றங்களின் தன்மை, அதிகார வரம்பில் குறிப்பிடத்தக்க மாறுதல்களைச் செய்தது. இந்தியா விடுதலை அடைந்து அரசமைப்பு ஏற்கப்பட்ட காலகட்டத்தில் பஞ்சாப், அசாம், ஒடிசா, ராஜஸ்தான், திருவாங்கூர், மைசூர் மற்றும் ஜம்மு காஷ்மீர் என ஏழு உயர் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டிருந்தன. பிற உயர் நீதிமன்றங்கள் பின்னர் உருவாயின. இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர், ஏற்கெனவே இயங்கிய உயர் நீதிமன்றங்கள் அங்கீகரிக்கப்பட்டன. மேலும், அனைத்து மாநிலங்களும், ஒன்றிய ஆளுகைக்குட்பட்டப்

12th_Political Science_Tamil_Unit_4.indd 90 04-06-2019 11:24:47


பகுதிகளும் உயர் நீதிமன்றம் பெறும் வகையில் ஒவ்வொரு மாநிலம் அல்லது இரண்டு, மூன்று பகுதிகள் இணைத்து உயர் நீதிமன்றங்களை நிறுவ நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. 1976-ஆம் ஆண்டு 42-வது அரசமைப்பு திருத்தச்சட்டம் உயர் நீதிமன்றங்களின் அதிகார வரம்பில் பெருமளவு மாற்றத்தினை கொண்டு வந்தது.

இவ்வாறாக, தொடக்கக் காலத்தில், கல்கத்தா, சென்னை, பம்பாய் என மூன்று உயர் நீதிமன்றங்களே அன்று இருந்தன. சுதந்திரத்திற்கு முன் இருந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் மட்டுமல்லாமல், உயர் நீதிமன்றங்கள் அமைப்பு மற்றும் அதிகாரவரம்பிலும் பெயரளவில் மாற்றங்களைக் கொண்டுவந்தன. இதன் மூலம் அவற்றின் சுதந்திரத் தன்மை, பாகுபாடற்றத் தன்மை போன்றவை உறுதி செய்யப்பட்டன. அரசமைப்பை நடைமுறைக்கு கொண்டு வந்த பின்பே உயர் நீதிமன்றங்களின் நிலையானது வலிமையடைந்தது மேலும் குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் அசல் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற என்ற நிலையைக் கடந்து, அரசமைப்பின் பாதுகாவலனாகவும், அரசமைப்பு குறித்து விளக்கமளிக்கும் அதிகாரம் கொண்டதாகவும் வலுவடைந்தது.

செயல்பாடு

ஒப்பீடு மற்றும் மாறுபாடு

பண்டைய மற்றும் இடைக்கால காலத்தில் நீதி முறைமையை ஒப்பிட்டு. இப்பாடத்தின் உள்ளடகத்தினை நன்றாக வாசித்து வென் வரைபடம் உருவாக்கவும்.



இந்திய உச்ச நீதிமன்றத்தை பொருத்தவரை, இந்திய அரசாங்கச் சட்டம் 1935ல் ஒர் மைல்கல் சட்டமாகும். இந்திய அரசாங்கத்தின் அமைப்பை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி இச்சட்டம், ஒற்றையாட்சி முறையில் இருந்து கூட்டாட்சி முறைக்கு மாறிக் கொண்டிருந்த அத்தருணத்தில் ஒரு கூட்டாட்சிமுறை சார்ந்த நீதிமன்றம் தேவை அதிகரித்தது. எனவே, இது தொடர்பாக, அச்சட்டத்தில் ஒரு விதி சேர்க்கப்பட்டது. அதன்படி, 1937-ஆம் ஆண்டு கூட்டாட்சிமுறை சார்ந்த நீதிமன்றம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் மற்றும் ஆறு நீதிபதிகளையும் கொண்டிருந்தது. 1950-ஆம் ஆண்டு இந்நீதிமன்றம் இந்தியாவின் உச்ச நீதிமன்றமாக ஆனது.

இடைப்பட்ட 12 ஆண்டுகள் எனும் குறுகிய காலத்தில் கூட்டாட்சிமுறை சார்ந்த நீதிமன்றம் இந்திய சட்ட வரலாற்றில் அழியாத விளைவுகளை விட்டுச் சென்றது. தேசிய அதிகார வரம்பு கொண்ட முதல் நீதிமன்றமும் இதுவே ஆகும். இந்த கூட்டாட்சிமுறை சார்ந்த நீதிமன்றத்தில் இருந்துதான் அதன் நீதிபதிகள் சுதந்திரம், நேர்மை, பாகுபாடற்ற விசாரணை என்ற மரபைப் பெற்றெடுத்தனர். மேலும், 1726 மற்றும் 1883-ஆம் ஆண்டுகளுக்கிடையே பிரபுக்களின் நீதிமன்ற மேலவை (Privy Council) ஆற்றிய பங்கு குறித்தும் இங்கு சிறப்பாக குறிப்பிட்ட வேண்டியது தேவையாகிறது. இது இந்திய நீதித்துறை முறைக்கு இன்றியமையாத அளவிற்கு பங்களித்தது, இன்றளவும் நீதிமன்றங்களில் ஒளிவிளக்காக உள்ள அடிப்படையான இந்திய சட்டக் கோட்பாடுகளை வகுத்துக் கொடுத்தது இதுவே ஆகும்.

செயல்பாடு

பிரபுக்கள் நீதிமன்ற மேலவை (Privy Council) குறித்து நிறைய வாசிக்கவும், இந்திய நீதித்துறை நிர்வாகத்தின் தோற்றத்திற்க்கு அதன் இன்றியமையாமைப் பற்றி வகுப்பறையில் விவாதிக்கவும்.

12th_Political Science_Tamil_Unit_4.indd 91 04-06-2019 11:24:47

செயல்பாடு

ஒரு மைல்கல் தீர்ப்பு



சட்டீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்டுகள் ஊடுருவல்களை தடுக்க 'கோயா கமாண்டோஸ்' சல்வாஜூடும் அல்லது விகரப் பெயர்களில் அங்குள்ள பழங்குடி இளைஞர்களை சிறப்பு காவல்படை அலுவலர்களாக நியமித்து அரசமைப்பிற்கு விரோதமானது, செல்லாது என்று உச்சநீதிமன்றம் அளித்தத் தீர்ப்பு மத்திய அரசுக்கும் சட்டீஸ்கர் மாநில அரசுக்கும் ஒரு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. உச்ச நீதிமன்றம் அளித்த இந்த தீர்ப்பில் இப்படைகள் உடனடியாக கலைக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டது.



நன்றி: தி இந்து நாளிதழ், 10.3.2005

சமூக மானுடவியல் பேராசிரியர் நந்தினி சுந்தர் மற்றும் இதர தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி. சுதர்சன் ரெட்டி, எஸ்.எஸ்.நிஜ்ஜார் ஆகியோர் 5ஆம் வகுப்புகூட நிறைவு செய்யாத இளைஞர்கள் கரங்களில் ஆயுதங்களை அளித்து அவர்களுக்கு காவல்துறை அதிகாரம் வழங்கியது அரசமைப்பு கோட்பாடுகளுக்கு எதிரானதாகும் என்று மாநில அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்தனர். இந்த தீர்ப்பில் இந்த ஆயுதப்படையை உடனடியாக கலைக்கும்படி உத்தரவிட்ட நீதிபதி சுதர்சன் ரெட்டி சட்டீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்ட் / நக்சலைட் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது, எதிர்கொள்வது, குறைப்பது அல்லது ஒழிப்பது என எப்பெயரிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்த வடிவிலோ அல்லது வேறு எந்த வடிவிலோ சிறப்பு காவல் அலுவலர்களை பயன்படுத்துவதற்கு தடைவிதித்தார். சல்வாஜூடும், கோயா கமாண்டோக்கள் உள்ளிட்ட எந்தவொருக் குழுவும் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் இது போன்று அரசமைப்பிற்கு எதிராகவும் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலும் தனிநபர்கள் கைகளில் சட்டத்தைக் கொடுக்கும் நடவடிக்கைகளை எந்த வடிவிலும் எந்த வகையிலும் அனுமதிக்கக் கூடாது என்று அமர்வு தெளிவாகக் கூறியது. "அரசமைப்பால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள நான்கு முனைகளின் கீழும் செயல்பட வேண்டியது அரசின் ஒவ்வொரு அங்கத்தின் பொறுப்பு என்பது நமது பண்டைய மாண்பாகும். இதுவே, சட்டத்தின் உச்சபட்ச ஆட்சியாகும்." என்று அமர்வு கூறியது.

நன்றி: *தி இந்து நாளிதழ், 3.8.2011*


குழு விவாதம்

உச்ச நீதிமன்றம் அளித்த இந்த மைல்கல் தீர்ப்பு குறித்து 20 நிமிடங்கள் குழுவிவாதம் மேற்கொள்ள ஆசிரியர் ஏற்பாடு செய்யலாம்.

12th_Political Science_Tamil_Unit_4.indd 92 04-06-2019 11:24:47

சர் ஹரி சிங் கோர்





இறுதிக்கட்ட மேல்முறையீட்டுக்காக பிரிந்து செல்லாமல் இந்தியாவிலேயே மேல்முறையீடு செய்யும் ஒரு அனைந்திந்திய தலைமை நீதிமன்றத்தின் தேவையை 1921ல் உணர்ந்தவர்.

இந்திய சுதந்திரச் சட்டம், 1947–ஆம் ஆண்டு மூலம் அரசியல் அதிகாரம் மாற்றப்பட்டது. இந்தியாவில் தனித்த, சுதந்திரமான நீதித்துறை அமைப்பு நிறுவுவதன் தேவையை ஏற்படுத்தியது. இந்த நோக்கத்துடன் கூட்டாட்சிமுறை சார்ந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பு இது விரிவாக்கப்பட்டது. இதையொட்டி, பிரபுக்கள் நீதிமன்ற மேலவை ஒழிப்பு, கூட்டாட்சிமுறை சார்ந்த நீதிமன்ற அதிகார விரிவாக்கம் சட்டம் 1949 இயற்றப்பட்டது. இதன்படி, இந்தியக் கூட்டாட்சிமுறை சார்ந்த நீதிமன்றம் நாட்டின் உயர்ந்தபட்ச நீதி அதிகார வரம்பு கொண்டதாக வலுவடைந்தது. ஜனவரி 26, 1950–ஆம் ஆண்டு அரசமைப்பு அமலாக்கத்துடன், அரசமைப்பு உறுப்பு 124 இந்திய உச்ச நீதி மன்றத்தை நிறுவ வழி செய்தது. இவ்வாறு, மெதுவாகவும், சீராகவும் படிப்படியாகவும் இந்திய நீதி அமைப்பு பரிணாமம் அடைந்தது. இது காலத்தோடு பொருந்தி சிறப்பாக வளர்ந்து தன்னை நிரூபித்துக் கொண்டுள்ளது.

4.4 இந்திய உச்ச நீதிமன்றம்

தனித்தன்மை – சட்ட மூலவளங்கள் – அதிகார வரம்பு மற்றும் அதிகாரங்கள் – நிறுவனமயம்.

இந்திய அரசமைப்பு மூன்று அடுக்கு நீதித்துறை அமைப்பினை வழங்குகிறது. அவை வருமாறு;

1) இந்திய உச்ச நீதிமன்றம்

2) அரசமைப்புப்படி உருவாக்கப்பட்ட மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்கள்.

3) ஒவ்வொரு மாநிலத்திலும் நீதி மாவட்டங்களில் வாரியாக மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்.



செயல்பாடு

செய்தித்தாள் பின்தொடர்

செய்தித்தாளை ஒரு மாதம் தொடர்ந்து வாசித்து மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் ஆகியனவற்றின் குடிமையியல் வழக்குகள் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கவும். அவற்றின் தலைப்புச் செய்திகளை அட்டவணை விளக்கப் படமாகத் தயாரித்து எழுதவும். பள்ளி அல்லது வகுப்பறை அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தவும் அல்லது வகுப்பறையில் உங்கள் தொகுப்புகளை முன்வைக்கவும்.

இந்திய அரசமைப்பு நீதித்துறைக்கு சுதந்திரம் வழங்கியுள்ளது. அதாவது, ஆட்சித்துறை சட்டமன்றங்களின் தலையீடுகளில் இருந்து நீதித்துறைக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா போன்ற கூட்டாட்சி மக்களாட்சியில், உச்ச நீதிமன்றமே அரசமைப்பின் காவலன் ஆகும். மத்திய, மாநில அரசுகளுக்கு இடையில் எழும் சிக்கலுக்கு, தீர்வு காண்பது, மாநிலங்களுக்கு இடையே எழும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பது, குற்றவியல், குடிமையியல் வழக்குகளில் உயர்ந்தபட்ச மேல்முறையீடு நீதிமன்றம் ஆகிய மிகப் பெரிய பொறுப்புகளை நிறைவேற்றுகிறது. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் அடிப்படை உரிமைகள் அமலாக்கம் மற்றும் அனைத்து இந்தியக் குடிமக்களின் சுதந்திரம் ஆகிய பெரும்

12th_Political Science_Tamil_Unit_4.indd 93 04-06-2019 11:24:47

பொறுப்புகளை உச்ச நீதிமன்றம் சுமக்கிறது. எனினும் அமெரிக்க, ஐக்கிய நாடுகளின் கூட்டாட்சி அமைப்பு போன்று (ஒன்று கூட்டாட்சிக்காக மற்றொன்று மாநிலங்களுக்காக) என இரண்டு தொகுப்பு நீதித்துறை அமைப்பினை இந்திய அரசமைப்பு வழங்கவில்லை. இந்தியா ஒரு ஒருங்கிணைந்த நீதித்துறை முறையினை மட்டுமே கொண்டிருக்கிறது. இதன்படி, உச்ச நீதிமன்றம் தலைமை நீதிமன்றமாக (Apex) இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்கள் மீதும் அதிகாரம் செலுத்துகிறது.

சட்ட மூலவளங்கள்: இந்தியாவில் சட்ட ஆட்சியின் மூல ஊற்றாக அரசமைப்பு அமைந்திருக்கிறது. அரசமைப்பின் அடிப்படைகளுக்கு ஏற்ப நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்கள், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் சட்டமன்றங்கள் சட்டங்கள் இயற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது. தவிர, உறுப்புகள், ஒழுங்குமுறைகள், நிர்வாக அமைப்புச் சட்டங்கள் என துணைச் சட்டங்கள் இயற்றவும் அனுமதிக்கப்படுகிறது. அதே சமயம், இவை மூன்றாவது சட்ட மூலங்கள் எனக் கருதப்படும்.

ஒருங்கிணைந்த நீதித்துறை



இந்தியக் கூட்டாட்சி, இரட்டை ஆட்சி அமைப்புமுறை கொண்டிருந்தாலும் இரட்டை நீதித்துறை அமைப்பைக் கொண்டிருக்கவில்லை.

உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும், அரசமைப்பின் கீழ் ஒரு ஒருங்கிணைந்த நீதித்துறையாகச் செயல்பட்டு அனைத்து குடிமையியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கு தீர்வு காண்கிறது. தீர்வு வழங்கும் முறையில் வேறுபாடுகளைக் களைவதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பும் அதிகாரங்களும்: உச்ச நீதிமன்றமே அசல், மேல்முறையீட்டு மற்றும் ஆலோசனை வழங்குதல் என மூன்று அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது. அசல் நீதி அதிகாரவரம்பு என்பது உச்ச நீதிமன்றங்களில் அனைத்து வழக்குகளுக்கும் மூலாதாரமாகிவிடுகிறது என்பதாகும். இவை மத்திய அரசாங்கங்களுக்கும் அல்லது இதர மாநில அரசுகளுக்கும் இடையே எழும் கருத்து வேறுபாடுகள் அல்லது மாநிலங்களுக்கு இடையே எழுகின்ற சிக்கல்களையும் உள்ளடக்கியது ஆகும். அடிப்படை உரிமைகள் தொடர்புடைய வழக்குகளில் உச்ச நீதிமன்றமானது அசல் நீதித்துறை, மேல்முறையீட்டு அதிகார வரம்பு என இரண்டு அதிகாரங்களையும் கொண்டிருக்கிறது. மேலும் நீதிப்பேராணைகள் முறையே, ஆட்கொணர்வு, நெறியுறுத்தும் நீதிப்பேராணை, தகுதிமுறை வினவுதல், தடை, கீழமை நீதிமன்றங்களுக்கு ஆணையிடுதல், விளக்கம் கோரி ஆணையிடுதல் போன்ற ஆணைகளை உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கிறது.

உச்ச நீதிமன்றம்தான் இந்தியாவில் உள்ள உச்சபட்ச மேல் முறையீட்டு நீதிமன்றமாகும். உயர் நீதிமன்றங்களுக்கு எதிரான மேல்முறையீடுகளை இங்கு தான் செய்ய முடியும் (குடிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் இரண்டிற்கும்). குறிப்பிட்ட விவகாரங்களில் வழிகாட்டுதல் வழங்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு உள்ளது.

விவாதம்



தலைப்பு: தாமதமாகும் நீதி, மறுக்கப்படும் நீதியே

- கீழமை நீதிமன்றங்களில் 2.91 கோடி வழக்குகள் நிலுவையில் உள்ளது; நீதி பரிபாலனம் தாமதம்.
- 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக வழக்குகள் அதிகம் தேக்கம் அடைந்துள்ள மாநிலங்களில் மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களில் மட்டும் 8 கோடி வழக்குகளை நிலுவையாகக் கொண்டு உத்திரப்பிரதேச மாநிலம் முதலிடம் வகிக்கிறது.

12th_Political Science_Tamil_Unit_4.indd 94 04-06-2019 11:24:48

❖ தேசிய நீதித்துறை தகவல் அமைப்பின்படி, நாடு முழுவதும் மாவட்ட மற்றும் துணை நிலை நீதிமன்றங்களில் 2.91 கோடி வழக்குகள் தேக்கமடைந்துள்ளன. இவற்றில் 21.9 லட்சம் வழக்குகள் 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக நிலுவையில் உள்ளன.

❖ வழக்குகள் அதிகமாக தேக்கமடைந்த மாநிலங்களில் உத்திரப்பிரதேச மாநிலத்திற்கு அடுத்தப்படியாக பீகார் மாநிலத்தில் மூன்று லட்சம் வழக்குகளும் மஹாராட்டிர மாநிலத்தில் இரண்டு லட்சம் வழக்குகளும் நிலுவையில் உள்ளன. சிக்கிம் மாநிலத்தில் இரண்டு வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளது. அந்தமான் நிக்கோபார் மாநிலத்தில் ஒரு வழக்கும் நிலுவையில் இல்லை.

தாமதமாகும் நீதி மறுக்கப்படும் நீதி என்ற தலைப்பில் மாணவர்களை இருப்பிரிவுகளாகப் பிரித்து உரையாடுவதற்கு ஆசிரியர் ஏற்பாடு செய்யலாம். ஒருக் குழுவினர் தலைப்பிற்கு ஆதரவாகவும் மற்றக் குழுவினர் தலைப்பிற்கு எதிராகவும் வாதிடும்படி

குடியரசுத்தலைவர் உச்ச நீதிமன்றத்திடம் எந்த ஒரு சட்ட விவகாரம் குறித்தும் ஆலோசனை கேட்டு அனுக முடியும். ஆனால் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைகளை குடியரசுத்தலைவர் ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை.

உச்ச நீதிமன்றம் இந்திய அரசமைப்பின் பாதுகாவலனாக இயங்குகிறது அரசமைப்புக்கு விளக்கம் அளிப்பதில் உச்ச நீதிமன்றமே இறுதி அதிகாரம் கொண்டுள்ளது. நிர்வாக நடவடிக்கையோ, கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புகளோ அரசமைப்பின் அடிப்படை நோக்கங்களுக்கு எதிராக உள்ளது என உச்ச நீதிமன்றம் கருதுமானால் அதனை ரத்து செய்யும் அதிகாரம் கொண்டுள்ளது.

உச்ச நீதிமன்றம் அமைப்பு

உச்ச நீதிமன்றமானது இந்திய அரசமைப்புப் பகுதி 5 அத்தியாயம் 4 மூலம் நிறுவப்பட்டுள்ளது. அரசமைப்பு உறுப்புகள் 124 முதல் 147 வரை இந்திய உச்ச நீதி மன்றத்தின் வடிவம் மற்றும் அதிகார வரம்புகள் குறித்து கூறுகின்றன. அரசமைப்பு ஆரம்பத்தில் ஒரு நீதிபதி, ஏழு கீழ்நிலை நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றத்தினை அனுமதித்தது. இந்த எண்ணிக்கையை அதிகரிக்கவும் நாடாளுமன்றத்திற்கு அரசமைப்பு அதிகாரம் கொடுத்திருந்தது. 2008-ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 30ஆக அதிகரித்தது.

உச்ச நீதிமன்ற நீதிபதியை நியமனம் செய்வதற்கு, தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றத்தின் இதர நான்கு மூத்தநீதிபதிகள் கொண்ட "குழு"-வுடன் (Collegium) கலந்தாலோசிக்க வேண்டும். புதிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குறித்து குழு ஒருமித்த கருத்து அடிப்படையில் பரிந்துரைக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் ஒவ்வொரு நீதிபதியும் அமைச்சரவை மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுடன் கலந்தாலோசனை செய்த பின்னர் குடியரசுத்தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார். அவ்வாறு நியமனம் செய்யும் உச்ச நீதிமன்ற நீதிபதி 65 வயது அடையும் வரை பதவியில் இருக்கலாம். எந்த ஒரு நீதிபதியாவது பதவி விலக நினைத்தால், தன்னால் கைப்பட எழுதிய பதவி விலகல் கடிதத்தில் கையொப்பமிட்டு குடியரசுத்தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஒரு நீதிபதியை நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் பதவி நீக்கம் செய்ய முடியும்.

ஒருவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட அவர் இந்தியக் குடியுரிமை பெற்றிருத்தல், உயர் நீதிமன்ற நீதிபதியாக ஐந்து ஆண்டுகள், பணியாற்றிய அனுபவம் அல்லது குறைந்தது 10 ஆண்டுகள், தொடர்ந்து ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் வழக்குரைஞராகப் பணியாற்றிய அனுபவம் இவற்றுடன் நாடாளுமன்றம் விதித்துள்ள தகுதிகளையும்

12th_Political Science_Tamil_Unit_4.indd 95 04-06-2019 11:24:48

கொண்டிருக்க வேண்டும் அல்லது அத்தகைய ஒரு நபர் கட்டாயம் குடியரசுத்தலைவரின் கருத்தில் தலைசிறந்த சட்ட நிபுணராக இருக்க வேண்டும்.

கண்டனத் தீர்மானம்

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதிக்கப்பட்டு ஒட்டு மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாமல் கலந்து கொண்டு, அதே அமர்வில் வாக்கெடுப்பில் ஆதரவு பெரும்பான்மை பெற்றால் உச்ச நீதிமன்ற நீதிபதியை விசாரிக்க குடியரசுத்தலைவர் ஆணையிடுவார்.

நியமனங்கள் அனைத்தும் பொதுவாக பணிமூப்பு அடிப்படையில் செய்யப்படுகிறது.



பட்டியலினத்தவர் சமுதாயத்தில் இருந்து ஒருவர் முதல் முறையாக 2000-இல் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார். அவர் நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் ஆவார். இவர் 2007-இல் பட்டியலினத்தைச் சார்ந்த முதல் தலைமை நீதிபதியாக உயர்ந்தார்.

தற்போதுள்ள அரசமைப்பின் கீழ் இந்திய உச்ச நீதிமன்றம் ஜனவரி 28, 1950-ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியது. தொடக்கத்தில் நாடாளுமன்றத்தின் இளவரசர்கள் மாடத்தில் செயல்பட்டது. 1958-ஆம் ஆண்டு தற்போது உள்ள வளாகத்துக்கு மாற்றப்பட்டது.



நீதிபதி ஹரிலால் ஜெ.கனியா, உச்ச நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி ஆவார். அவருடன் நீதிபதிகளாக பதிவியேற்றவர்கள் முறையே, நீதிபதி சையத் பாசல் அலி, பதஞ்சலி சாஸ்திரி, நீதிபதி மெகர்சந் மகாஜன், நீதிபதி பிஜன் குமார், நீதிபதி முகர்ஜி மற்றும் நீதிபதி எஸ். ஆர். தாஸ் ஆகியோர்கள் ஆவர்.

உயர் நீதிமன்றங்கள்



உயர் நீதிமன்றங்கள் மாநிலங்களின் தலைமை நீதித்துறை நிர்வாக அமைப்பு ஆகும். அரசமைப்புப்படி ஒவ்வொரு மாநிலமும் ஒரு உயர் நீதிமன்றத்தை பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதும், தற்போது நான்கு மாநிலங்கள் ஒன்றுக்கு அதிகமான மாநிலங்களுடன் இணைந்த உயர் நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளன. ஆறு ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் அருகே அமைந்த மாநிலத்தின் உயர் நீதிமன்றத்தின் நீதி அதிகார வரம்பின் கீழ் வருகின்றன. ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் டில்லி மட்டுமே தனக்கான உயர் நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் ஒரு தலைமை நீதிபதியையும் இதர நீதிபதிகளையும் கொண்டிருக்கிறது.

குறித்த இடைவெளிகளில் குடியரசுத்தலைவர் உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்கின்றார். உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியினை உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மாநிலத்தின் ஆளுநர் ஆகியோரை கலந்தாலோசித்து குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார், பிற நீதிபதிகள் நியமனத்தில் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் பரிந்துரைகளும் ஆலோசனை கேட்கப்படும். உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் 62 வயது நிரம்பும் வரை பதவியில் இருப்பார். பதவி நீக்கத்தை பொருத்தவரை உச்ச நீதிமன்ற நீதிபதியின் பதவி நீக்க நடைமுறை போலவே இருக்கும். உயர் நீதிமன்ற நீதிபதி நியமனத்திற்கு ஒருவர், இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும் 10 ஆண்டுகள் நீதித் துறையில் பணிபுரிந்திருக்க வேண்டும் அல்லது 10 ஆண்டுகள் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக பணியாற்றி இருக்க வேண்டும்.

12th_Political Science_Tamil_Unit_4.indd 96 04-06-2019 11:24:48

உயர் நீதிமன்றத்தின் வழக்குகள் மாநில ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அசல் நீதித்துறை மற்றும் மேல்முறையீட்டு அதிகார வரம்பு ஆகியனவற்றை உள்ளடக்கியது. ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் தனது கீழ் உள்ள கீழமை நீதிமன்றங்களின் மீது மேலாதிக்க அதிகாரம் கொண்டிருக்கிறது. உயர் நீதிமன்றங்கள் தனித்த, ஒருங்கிணைந்த நீதித்துறை அதிகார அமைப்பாக இருந்தாலும் அவை இன்னும் முழுமையான சுதந்திரமான நீதித்துறை நிறுவனங்கள் எனக் கூறமுடியாது.

உச்ச நீதிமன்றம் அவைகளின் மீது நேரடியான நிர்வாக கட்டுப்பாடு எதுவும் கொண்டிருக்கவில்லை, அவை எந்த விதத்திலும் சட்டமன்றத்தாலோ அல்லது மாநில ஆட்சித்துறையாலோ கட்டுப்படுத்தப்படுவதில்லை. ஆனால் அவற்றின் நீதிபதிகள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உடனான ஆலோசனைக்கு பிறகு குடியரசுத்தலைவரால் ஒரு உயர் நீதிமன்றத்தில் இருந்து மற்றொரு உயர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட முடியும். உயர் நீதிமன்றங்களும் கூட அடிப்படை உரிமைகள் தொடர்புடைய வழக்குகளில் நீதிப் பேராணைகள் வழங்கும் அதிகாரங்கள் கொண்டவைகளாகும்.

அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்ட வழித்தீர்வுகள்

உரிமைகள் மீறப்பட்ட நபர்களுக்கு விரைந்து நீதி வழங்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் பார்வையில் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்கள் இரண்டும் நீதிப் பேராணைகள் இடைக்கால உத்தரவு வழங்கும் அதிகாரங்கள் கொண்டிருக்கின்றன. அவைகள் ஐந்து வகைப்படும்.

1) ஆட்கொணர்வு நீதிப்பேராணை

இதன் பொருள் ஒரு நபரை உயிருடன் கொண்டு வந்து நிறுத்தும்படி கூறுவதாகும். இந்த நீதிப்பேராணை ஒரு நபர் சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு வழக்கிற்கு பொருந்தக் கூடியதாகும். இந்த நீதிப்பேராணையானது ஒவ்வொரு தனிநபரின், தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கிறது.

2) நெறியுறுத்தும் நீதிப்பேராணை

இந்த பேராணையானது, சட்டப்படி இயங்கும் படியும், சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் இடப்படும் ஆணையாகும். இதன் பொருள் எந்த ஒரு அதிகாரம் கொண்டோரையும் அவரின் சட்டபூர்வமான கடமையை செய்ய உத்தரவிடுவதை குறிக்கும். இந்த நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையானது, சட்டபூர்வ கடமையை வலியுறுத்துவதுடன், பொது மக்கள் நலன்காக்கும் கடமையை செய்ய மறுக்கும் அதிகாரி, அலுவலர்கள், அரசு என நீதிமன்ற அமைப்புகளுக்கு எதிராகக் கூட ஆணையிடக் கூடியதாகும்.

3) தடை நீதிப்பேராணை

இந்த நீதிப் பேராணையானது உயர்மட்ட நீதிமன்றம், கீழ்நிலை நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயங்கள் தங்களின் அதிகார வரம்பை மீறி நடப்பதைத் தடுக்கும் விதமாக வழங்கப்படுவதாகும். இந்த தடை ஆணை நீதித்துறை சார்ந்த அமைப்புகள் அல்லது பகுதி அளவு மட்டுமே நீதித்துறை அமைப்புகளுக்கு எதிராக மட்டும் வழங்கப்படும் தடை ஆணைகள் ஆகும்.

4) தகுதி முறை வினவும் நீதிப் பேராணை

இதன் பொருள், எந்த அதிகாரத்தின் அடிப்படையில் அல்லது பணி சான்றிதழ் ஆணை அடிப்படையில் என வினா எழுப்புவதை குறிப்பிடுவதாகும். இதன் பொருள் ஒரு நபர், ஒரு அரசு அலுவலக பதவியில், எந்தத் தகுதியின் அடிப்படையில் அமர்ந்திருக்கிறார் என வினா எழுப்பும் படியான விவகாரத்தில் வழங்கப்படும் நீதிப்பேராணையாகும்.

5) விளக்கம் கோரும் ஆணை

ஒரு பொது அலுவலில் சட்டபூர்வ நிலையை ஒருவர் எதன் அடிப்படையில் அல்லது எந்த அதிகார அமைப்பின் அடிப்படையில் அதில் அமர்த்தப்பட்டார் என்று கேள்விக்கேட்பது ஆகும்.

12th_Political Science_Tamil_Unit_4.indd 97 04-06-2019 11:24:48

மேற்கண்ட நீதிப் பேராணைகளோடு, உயர் நீதிமன்றமானது சட்டஉறுப்பு 266-ன் கீழ் பொது மக்கள் நலன்கருதி வழிகாட்டுதல்கள், உத்தரவுகள் பிறப்பதாகும்.

4.5 நீதித்துறைச் சீராய்வு பொது நல வழக்கு மற்றும் நீதித்துறை செயல்பாட்டு முறை

நீதித்துறைச் சீராய்வு

தனி நபர்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள நீதிமன்றச் சீராய்வு அதிகாரம் மிகவும் முக்கியமானது. இந்திய உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு இருக்கும் இத்தகைய நீதித்துறைச் சீராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டம் இயற்றுவது மற்றும் அதனைச் செயல்படுத்துவது என இரண்டின் மீதும் அரசமைப்புப்படி மறு ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கும் வகையில் இந்த அதிகாரம் விரிவான வரம்புகளைக் கொண்டுள்ளது.

நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்கள் அரசமைப்பிற்கு முரணாக இருக்குமானால் அச்சட்டம் செல்லாது என்று நீக்கப்படும். இவ்வாறு மிகவும் துணிச்சலான, முரண்பாடான ஒரு தீர்ப்பு, வங்கிகள் தேசியமயமாக்கும் சட்டம் செல்லாது என அறிவித்ததாகும். சிறுபான்மையினர் தங்களுக்கான கல்வி நிறுவனங்கள் நிறுவவும் நிர்வகிக்கவும் வழங்கப்பட்ட உரிமைகளைப் பறிக்கும் வகையில் இயற்றப்பட்ட சட்டங்கள் செல்லாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தலும் நீதித்துறைச் சீராய்வு முறையீடு மனு மீது வழங்கப்பட்ட முக்கிய தீர்ப்பாகும்.

இதே அடிப்படையில் ஒரு அரசமைப்புத் திருத்தச்சட்டம் மீதே சீராய்வு மனு தாக்கல் செய்யும் அளவுக்கு நீதித்துறைச் சீராய்வு அதிகார வரம்பு விரிவடைந்ததாகக் காணப்படுகிறது. இந்த வழக்குகள் அரசமைப்பு திருத்தச்சட்டம் ஒரு அரசமைப்பின் அடிப்படை கோட்பாட்டுக்கு பாதிப்பிற்குள்ளாகிறதா என்று மறுஆய்வு செய்வதாகும். உதாரணமாக மதச்சார்பற்றத்தன்மை, மக்களாட்சி, கூட்டாச்சிமுறை போன்றவை மீதான திருத்தச்சட்டம், அரசமைப்பிற்கு எதிரானது என்று உச்ச நீதிமன்றம் கருதினால் அத்திருத்தச்சட்டம் அரசமைப்புக்கு விரோதமானது எனவே செல்லாது என்று அறிவிக்கப்படும்.

இந்தியாவில் சட்ட நிர்வாகத்தில் நீதித்துறைச் சீராய்வு அதிகாரம் முக்கியப் பங்காற்றுகிறது. இந்திய அரசமைப்பு உறுப்பு 13(2)-வது, நாடு முழுவதும் ஒரே மாதிரியான விதிகளை அமல்படுத்துவது சரியல்ல என்று நம்புகிறது. குறிப்பாக, அத்தகைய நாடு தழுவிய விதிகள் அரசமைப்பு பாகம் 3இல் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிப்பதாகும் எனக்கருதுகிறது. அரசமைப்பில் இந்தப் பிரிவுக்கு எதிராக விதிக்கப்படும் எந்த விதிமீறலாகக் கருதப்பட்டு, சீராய்வுக்கும் பின்னர் அந்த விதி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்படும்.

எனினும், 24.04.1973-க்குப் பின்னர் அரசமைப்பின் ஒன்பதாவது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள சட்டங்கள் தொடர்பாக மறுசீராய்வு கோர முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், தற்போது சீராய்வுக்கு உட்பட்டதாகத் தோன்றும் சட்டங்கள் ஒன்பதாவது பட்டியலில் சேர்க்கப்பட்டாலும் அவற்றின் மீது மறுசீராய்வு கோர முடியாது. நீதிமன்ற மறுசீராய்வு என்பது சட்டம் குறித்த வினாக்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடியது ஆகும். அரசியல் சம்பந்தமாக எழும் பிரச்சினைகளுக்கு இதனை செயல்படுத்த முடியாது. உச்ச நீதிமன்றமும் தானாகவே எந்த ஒரு சட்டத்தையும் மறுசீராய்வுக்கு உட்படுத்த முடியாது. ஒரு குறிப்பிட்ட விதி அல்லது சட்டம் ஆகியவற்றை எதிர்த்து வரும் வழக்கில் மட்டுமே பயன்படுத்த முடியும்.

பொது நல வழக்கு

பொது மக்கள் நலன் கருதி எந்த ஒரு தனிநபரும் நீதிமன்றத்தை நாடி மனு அளிக்க முடியும். இது பொது நலன் மனு எனப்படுகிறது.

12th_Political Science_Tamil_Unit_4.indd 98 04-06-2019 11:24:48

இதன்படி, அரசமைப்பு உறுப்பு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்திலும், அரசமைப்பு உறுப்பு 226-இன் கீழ் உயர் நீதிமன்றங்களிலும், குற்றவியல் நடைமுறைச் சட்டம் 133-ன்படி நடுவர் நீதி மன்றங்களிலும் பொது நல வழக்கிற்கான மனுவைத் தாக்கல் செய்ய முடியும். மேலும், இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி கீழ்க்கண்ட வகைகளில் பொது நல வழக்குகள் தொடர முடியும்;

1. கொத்தடிமை தொழிலாளர்கள் முறை தொடர்பான விவகாரங்கள்

2. கைவிடப்பட்ட (ஆதவற்ற) குழந்தைகள்

3. குறைந்தபட்ச கூலி வழங்காமை

4. சிறைச்சாலையில் நிகழும் மரணம், வன்கொடுமைகள் தொடர்பான புகார்கள்; விரைவான நீதி அடிப்படை உரிமை என்பதால் துரித விசாரணை கோருதல்

5. வழக்குப் பதிவு செய்ய மறுக்கும் காவல் துறை அதிகாரிக்கு எதிராக வழக்கு மனுதாக்கல் செய்தல், வரதட்சனை கோரி பெண் வன்கொடுமை, மணப்பெண் தீவைப்பு, பாலியல் வன்கொடுமை, கடத்தல், கொலை, வதை போன்ற குற்றங்களுக்கு எதிரான புகார்கள்.

6. பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமை புகார்.

7. சுற்றுச்சூழல் மாசுபாடு தொடர்புடைய புகார்கள் என வகைப்படுத்துகின்றன.

அரசமைப்பு உறுப்பு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் பொது நல மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் தமக்குள் இணைத்துக் கொண்டுள்ளது. பொது நல வழக்கு என்பது ஒரு பகைத் தன்மையில் வழக்கு தொடுக்கும் முறையல்ல. மாறாக, ஒடுக்கப்பட்ட மற்றும் பாதிப்புக்குள்ளாகும் சமூகப் பிரிவினர்களுக்கு மனித உரிமைகளை அர்த்தமுள்ளதாகவும், அவர்களுக்கு அரசமைப்பு வழங்கியுள்ள சமூக – பொருளாதார நீதியை உறுதிப்படுத்தவும் அரசு மற்றும் அரசு அதிகாரிகளுக்கு வாய்ப்பு வழங்குவதுடன் அவ்வாறு செயல்படாத அரசு மற்றும் அரசு அதிகாரிகளுக்கு எதிராகவும் விசாரிக்கிறது. மாநில அரசுகள், மத்திய அரசு, மாநகராட்சி ஆகியவற்றிக்கு எதிராக பொது நல வழக்கு தொடர முடியும். ஆனால், தனிநபருக்கு எதிராக பொது நல வழக்கு பதிவு செய்ய முடியாது.

அண்மையில் இந்தியாவில் ஏராளமான பொது நல மனுக்கள் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படுவதைக் காணமுடிகிறது. உச்ச நீதிமன்றம் 2005-ஆம் ஆண்டு ஒரு வழக்கை பொது நல வழக்காகத் தீர்மானித்தது. பொது நலனுக்கான சமூகம் எதிர் இந்திய அரசு (Common Cause Society Vs Union of India), என அவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது. பெருகி வரும் சாலை விபத்துகளை கருத்திற்கொண்டு சாலை பாதுகாப்பு சட்டங்களை இயற்றும்படி அரசுக்கு உத்தரவிட வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அந்த மனுவே பொது நல வழக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதேபோல அங்கம்மாள் பாண்டே எதிர் உத்தரபிரதேச மாநில அரசு என்ற வழக்கில், உயர் நீதிமன்றத்தின் லக்னோ அமர்வு, கன்சிராம் நினைவு அரங்கம் அருகே நடைபெறும் கட்டுமானப் பணிகளைக் குறிப்பிட்ட காலத்துக்கு தடை செய்தது.

இதேபோல மக்களாட்சி உரிமைக்களுக்கான மக்கள் ஒன்றியம் எதிர் இந்திய அரசு (Peoples' Union for Democratic Rights vs. Union of India) என்ற வழக்கினையும் உச்ச நீதிமன்றம் பொது நல வழக்காக எடுத்துக் கொண்டது. சமூக, பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள மக்கள் தமக்கான நிவாரணம் கோரி நீதிமன்றங்களை அணுக இயலாத நிலையில் இருப்பதால் இத்தகைய தனிநபர் அல்லது குழுவினருக்கு அரசமைப்பு ரீதியான தீர்வு கோரி 'பொது ஆர்வம் கொண்ட குடிமக்கள்' நீதிமன்றத்தை நாடும்போது அதனை பொது நல வழக்காகக் கருதலாம் என்று கூறிய உச்ச நீதிமன்றம் இதனை பொது நல வழக்காக அனுமதித்தது. பொது நல வழக்குகள் என்பவை "பங்களிப்பு நீதி" எனும் செயல்முறையின் ஒரு பகுதியாகும்; குடிமை வழக்குகளாக இவை நீதிமன்றங்களால் தாராளமாக வரவேற்கப்படுகிறது.

12th_Political Science_Tamil_Unit_4.indd 99 04-06-2019 11:24:48

பரமானந் கட்டாரா எதிர் இந்திய அரசு என்ற வழக்கு (*Parmanand Katara Vs. Union of India*) பொதுமக்கள் நலனுக்காகப் பாடுபடும் மனித உரிமை செயற்பாட்டாளர் தொடுத்த பொது நல வழக்கு ஆகும். இதில் மருத்துவ தொழிலில் உள்ள ஒவ்வொரு நபரும், காயமடைந்த எந்த ஒரு குடிமகனுக்கும் வழக்கமான நடைமுறைகளைக் காரணங்காட்டி (*Procedural Formalities*) காத்திருக்க வைக்காமல் மருத்துவ உதவியினை செய்யவேண்டும் எனும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கியது.



பரமானந் கடாரா

நீதித்துறை செயல்பாட்டு முறை



மாறிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் நீதித்துறை மேற்கொள்ளும் வீரியமிக்க செயற்பாடுகள் நீதித்துறை செயல்பாட்டு முறை எனப்படுகிறது. அமெரிக்காவில் 1947 ஆம் ஆண்டு ஆர்தர் சன் சிங்கர் ஜூனியர் என்பவர் "உச்ச நீதிமன்றம்" 1947 என்று தலைப்பிட்ட கட்டுரை ஒன்றில் "*Judicial Activism*" (நீதித்துறை செயல்பாட்டு முறை) என்ற சொல்லினை அறிமுகப்படுத்தினார். பிளாக்ஸின் சட்ட அகராதி (*Black's Law Dictionary*) , "*Judicial Activism*" - என்பது ஒரு "நீதித்துறை தத்துவம்" என்று கூறுகிறது. அது நீதிபதிகளை பழமைவாதத்திலிருந்து பிரித்து புதிய முற்போக்கான சமூக கொள்கைகளுக்கு ஆதரவாக ஊக்கப்படுத்துவதாகும்.

சட்ட ஆக்கமானது நீதித்துறை செயல்பாட்டு முறை மூலம் (*Judicial Activism*) புதிய பரிணாமத்தை பெற்றிருக்கின்றது. சமூகக் கண்ணோட்டத்தில் சட்டங்களுக்கு விளக்கமளிக்கும் ஆரோக்கியமான போக்கு நீதித்துறையில் காணப்படுகிறது. அமலில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் அல்லாமல் தனிநபர் அல்லது அரசியல் சக்திகளுக்கு சாதகமாக மேற்கொள்ளப்படும் நீதிமன்ற உத்தரவுகளை நீதித்துறை செயல்பாட்டு முறை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. நீதித்துறை செயல்பாட்டு முறை என்பது அரசமைப்பின் விளக்கம், சட்டப்பூர்வ அடித்தளங்கள் மற்றும் அதிகாரப் பிரிவினை ஆகியன தொடர்புடையதாகும்.

செயல்பாடு

ஒரு இந்தியக் குடிமகன் என்ற முறையில் நீதிமன்றக் கருத்தின் மீது மாற்றுக் கருத்து கொள்ளும் உரிமை உங்களுக்கு உள்ளதா? அவ்வாறாயின் எவ்வாறு வெளிப்படுத்துவீர்கள்? வகுப்பில் மூன்று மாணவர்களாகப் பிரிந்து கீழ்கண்ட தலைப்புகளின் கீழ் விவாதிக்கவும்.

அ) நீதிமன்ற தீர்ப்பை விமர்சித்தல்

ஆ) விமர்சித்தலின் பின்விளைவுகள்

இந்திய அரசமைப்பு 1950-ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் பெரும்பான்மையான கோட்பாடுகள் மேற்கு உலக மாதிரிகளிலிருந்து நாடாளுமன்ற மக்களாட்சியும், தனித்துவ நீதித்துறையும் இங்கிலாந்திலிருந்து, அடிப்படை உரிமைகள், முன்வரைவு, கூட்டமைவு, கூட்டாட்சி அமெரிக்க அரசமைப்பிலிருந்து, மாநிலக் கொள்கைகள் நேரடி கோட்பாடுகள், அயர்லாந்து நாட்டிலிருந்தும் பெறப்பட்டதாகும்.

இருந்தபோதும், இந்தியாவில் அப்போது நிலவிய பகுதி அளவு நிலப்பிரபுத்துவ பிற்போக்கு நிலையில் இருந்து ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் காண்பதற்காகப் பெறப்பட்டதாகும்.

இந்திய நீதித் துறையானது, அரசின் ஒரு அங்கமாக இருக்கின்றபடியால், அதன்

12th_Political Science_Tamil_Unit_4.indd 100 04-06-2019 11:24:49

அமெரிக்க நீதித்துறைப் பிரிவைக் காட்டிலும் மிகுந்த செயலாக்க மிக்க பணியினை ஆற்றுகிறது. அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள கொள்கைகள், கோட்பாடுகளைக் கடைபிடிப்பதன்மூலம் இந்திய சமூகத்தை ஒரு நவீன சமூகமாக மாற்றும் தீர்ப்புகளை வழங்குகின்றன. இந்திய அரசமைப்பு உறுப்பு 21 அடிக்கடி உச்ச நீதிமன்றத்தில் எடுத்தாளப்படுகிறது. இந்த அரசமைப்பு உறுப்பின் மீதான தீர்ப்புகள் யாவும் நீதித்துறை செயல்பாட்டு முறைப் போக்கினை பிரதிபலிக்கின்றன.


ஏ.கே. கோபாலன்

ஏ. கே. கோபாலன் எதிர் மதராஸ் மாநில அரசு எனும் வழக்கில், ஒரு மனிதனின் வாழ்க்கை அல்லது சுதந்திரம் ஒடுக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள செயல்முறைகள் அடிப்படையில் மட்டுமல்லாமல் பகுத்தறிவு மற்றும் நீதியின் அடிப்படையிலும் உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. எனினும், அதனைத் தொடர்ந்து மேனகா காந்தி எதிர் இந்திய அரசு என்ற வழக்கில், மேற்கண்ட நியாய வாதத்தினை நீதிமன்ற விளக்கம் மூலம் அரசமைப்பு உறுப்பு 21-ல் துணைப்பிரிவாகச் சேர்க்கப்பட்டது.

இது, அரசமைப்பு உருவாக்கத்தின்போது தவிர்க்கப்பட்ட பிரிவாகும். எனினும், அடுத்தடுத்த வழக்குகளில் உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை உறுதி செய்தும் இருக்கிறது. உதாரணமாக, சாதிக்கு வெளியே திருமணம் செய்து கொண்ட காரணத்திற்காக, ஆண்-பெண் இருவரை கௌரவக் கொலை செய்த பகவான் தாஸ் வழக்கில், (பகவான்தாஸ் எதிர் தில்லி மாநில அரசு) அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

ஆஸ்திரேலியா நீதிமன்றம்

உங்களுக்குத் தெரியுமா?

ஆஸ்திரேலியா நாட்டின் உயர்நிலை நீதியமைப்பு உயர் நீதிமன்றம் என்றே அழைக்கப்படுகிறது. அங்கு மாநிலத் தலைமை நீதிமன்றங்களே உச்ச நீதிமன்றம் என்றே அழைக்கப்படுகிறது.

4.6 அரசமைப்பு, நிர்வாகச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம்

அரசமைப்பு

மக்கள், மனிதன் அனைவருக்கும் விதிகளால் ஆளப்படுகிறார்கள் என்பது நன்கு தெரிந்தது. உதாரணமாக, விளையாட்டு போட்டிகளுக்கும் சமூக மன்றங்களுக்கும் விதிகள் உள்ளதை கூறலாம். நமது அன்றாட வாழ்வைத் தீர்மானிப்பதில் ஒழுக்க விதிகளும், வழக்காறுகளும் முக்கிய பங்காற்றுகின்றன. நாட்டிற்காகச் சட்ட மன்றங்களில் இயற்றப்படும் விதிகள் யாவும் "சட்டங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. சமூகம் அதன் பணிகளை முறையாக செய்வதற்குச் சட்டங்கள் மிகவும் அவசியமாகும். அவைகள் நமது சொத்துக்களை முறையாகப் பாதுகாப்பதற்கு உருவாக்கப்பட்டவைகள் ஆகும், மற்றும் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் முறையாக நடந்து கொள்வதை உறுதிபடுத்துகிறது.

அடிப்படையில், அரசமைப்பு மேலான சட்டமாகும். மற்ற எல்லா சட்டங்களும் அரசமைப்பிற்கு பொருந்தி வர வேண்டும். அரசமைப்பானது அரசு தொடர்புடைய சட்டங்களையும், மக்கள் தொடர்புடைய சட்டங்களையும் உள்ளடக்கியதாகும். அரசமைப்பு விதிகள் என்பது அரசின் பல்வேறு நிறுவனங்களின் வரையறை, பணிகள், அதிகாரங்கள் மற்றும் அவற்றின் அமைப்புகள் குறித்த தொகுப்பு விதிகள் ஆகும். அதாவது சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை போன்றவைகள் மற்றும் குடிமக்களின் அடிப்படை உரிமைகள், மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையிலான உறவுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

12th_Political Science_Tamil_Unit_4.indd 101 04-06-2019 11:24:49

அரசமைப்பு என்பது வழியுறுத்துவதும் வழிகாட்டுவதுமான விதிகளின், ஒரு தொகுப்பு ஆகும். இது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு விதிமுறைகளின் தொகுப்பை முன்மொழிவதன் மூலம் தேசத்தை ஒழுங்குப்படுத்துகிறது. அவை நாட்டைச் சரியான திசை வழியில் வழி நடத்துகிறது. அவை பல்வேறு அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசு வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளிட்டவைகள் ஆகும். நாட்டில் நிலவும் அமைப்பு முறையை ஒழுங்குபடுத்துவதற்கு நமக்கு அரசமைப்பு விதிகள் தேவைப்படுகின்றன. நாட்டு மக்கள் அடிப்படை உரிமைகளைக் கடந்து போகாமல் இச்சட்ட விதிகளே நாடு முழுவதும் கண்காணிக்கின்றன.

அரசமைப்பு விதிகள் குடிமக்களுக்கிடையே சமத்துவ உணர்வினை உருவாக்குகின்றன. இவை குழந்தைகள் நலனுக்காக குழந்தைகள் மீது பெற்றோர்கள் செலுத்தும் கட்டுப்பாடுகளைப் போன்றவையே ஆகும். அதைப்போலவே அரசமைப்பு விதிகள் எல்லா குடிமக்கள் மீதும் செயலாற்றுகிறது. அதே வழியில் அரசமைப்பு வழங்கியுள்ள வழிகாட்டுதளின்படி சட்டங்கள் இயற்றுவதற்காக சிலரைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கவும் சிலரை நியமனம் செய்யவும் அரசமைப்பு விதிகள் வழிவகை செய்கின்றன. அரசமைப்பு விதியின்படிதான், பல்வேறு மொழிகள் பேசும் வேறுபட்ட பண்பாடுகள் கொண்ட மிகப் பரந்த இந்நாட்டை அதன் தலைவர் நிர்வாகம் செய்கிறார்.

செயல்பாடு

சிந்திக்கவும் – சேர்க்கவும் – பகிரவும்

மக்களின் எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் அரசமைப்பு பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு என்ற முறையில் நாடாளுமன்றம் / சட்டமன்றம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உங்கள் இணையோடு கீழ்கண்ட தலைப்புகளில் விவாதிக்கவும்.

அ) நிர்வாகம், நாடாளுமன்றம், நீதித்துறை – யாருக்கு அதிக அதிகாரம் உள்ளது?

ஆ) உங்கள் விடைக்கான உதாரணங்களைக் கூறவும்.

சட்டத்தின் ஆட்சி

இந்தியாவில் "சட்டத்தின் ஆட்சி" என்ற ஆங்கிலக் கருத்தை காலனி ஆட்சி அறிமுகப்படுத்தியது. சட்டத்தின் ஆட்சியில் மூன்று முதன்மையான சிறப்புகள் உள்ளன. அவைகள்,

- சட்டத்தின் முன் அனைவரும் சமம்
- சட்டத்திற்கு மேல் யாரும் இல்லை
- சட்டம் அனைவருக்கும் பொருந்தக்கூடியது
- சட்டத்தின் ஆட்சியானது நீதிவழங்குவதில் குடிமக்களின் சமத்துவத்தை உறுதிப்படுத்துகிறது. சொந்த உறவுகளுக்காகச் சாதகமாக நடப்பது, குறிப்பிட்ட நபருக்குச் சலுகை அளிப்பது நீதித்துறை முறைகேடுகள் ஆகியவற்றை குறைக்கின்றன. இத்துடன் அதிகார, நிர்வாக முறைகேடுகளையும் கட்டுப்படுத்துகின்றன. அரசு நிர்வாகத்தினை ஆளுகை செய்வதுடன் செயல்முறை சட்டங்களும், அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளும் சட்டத்தின் ஆட்சி உறுதிபடுத்துவதை வலியுறுத்துகின்றன.

நிர்வாகச் சட்டம்

நிர்வாகச் சட்டம் என்பது நிர்வாகச் செயல்முறைகளை ஆளுகை செய்வதற்கான சட்டமாகும். நிர்வாகச் சட்டங்கள் என்பவை, நிர்வாகத்துடன் தொடர்புடையவை என ஐவேர் ஜென்னிங்ஸ் விளக்கம் அளிக்கிறார். ஒரு நிர்வாக அமைப்பு, அதன் அதிகாரம் மற்றும் அதன் அதிகாரிகளின் கடமைகளை அது தீர்மானிக்கிறது. நிர்வாக அமைப்புகளின் சட்டம் இயற்றும் அதிகாரம், பாதியளவு நீதித்துறை அதிகாரம் கொண்ட நிர்வாக முகமைகள், அரசு அதிகாரிகளின் சட்ட வரம்பு, நிர்வாக அதிகாரிகளைக் கண்காணிக்கும் சாதாரண நீதிமன்றங்களின் அதிகாரம் என அனைத்தையும் கட்டுப்படுத்துகின்றன. மக்களிடம் நியாயமாக நடந்து கொள்வதை உறுதிப்படுத்துகின்றன.

நிர்வாகச் சட்டம் என்பது பொதுசட்டத்தில் ஒரு பிரிவு ஆகும். அது

12th_Political Science_Tamil_Unit_4.indd 102 04-06-2019 11:24:49


அரசாங்கத்திற்கும் தனிமனிதனுக்கும் உள்ள உறவு குறித்தும் பேசுகிறது. அது சட்டத்தை அமலாக்கம் செய்யும் அமைப்பைத் தீர்மானிக்கும் உயர்மட்டத்தினர் மற்றும் பகுதியளவு நீதித்துறை அதிகாரம் கொண்டோரை வரையறை செய்கிறது. நிர்வாகச் சட்டமானது முதலாவதாக அதிகாரிகளின் செயல்கள் மற்றும் செயல்முறை ஆகியவற்றையும், நிர்வாக தன்மைக் கொண்ட அமைப்புகளையும் அதற்குரிய கட்டுப்பாடு எந்திரத்திகுள்ளாகவே வைக்கப்படும்படியாக செய்வதாகும். இந்தியாவில் நிர்வாகச் சட்டங்கள் வளர்ச்சிப் பெறுவதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன.

முதலில், இந்தியா ஒரு "மக்கள் நல அரசு" ஆகும். அரசாங்கத்தின் செயற்பாடுகள் மிக அதிகரித்த வண்ணம் இருக்கிறது, எனவே அவற்றினை ஒழுங்குப்படுத்தும் தேவை உருவாகிறது. எனவே, நிர்வாகச் சட்டப் பிரிவு தோன்றியது. இரண்டாவதாக, சட்டங்கள் இயற்றுவதில் (Legislation) போதாமை நிலவுகிறது. அன்றாடம் மாறிக் கொண்டிருக்கின்ற சமூகத்திற்கு ஏற்ப சட்டங்களை இயற்ற சட்டமன்றங்களுக்கு போதிய நேரம் இருப்பதில்லை. அவ்வாறு அது செய்யப்பட்டாலும், சட்டம் இயற்றுவதற்கான நடைமுறை நீண்டதாகவும், அதிக காலம் எடுத்துக் கொள்ளும்படியாக இருப்பதாலும், அவ்வாறு உருவாக்கப்பட்ட விதிகள் யாவும் தேவைக்கு பயன்படுத்தும் போது, மாறிவிடுகின்றன.

மூன்றாவதாக, இந்தியாவில் நீதிமன்ற காலதாமதம் நிலவுகிறது. மந்தமான வேகம், அதிக செலவு மற்றும் சிக்கலான நடைமுறைகள் போன்றவை இதன் காரணங்களாகும். இதனால் நீதி பெறுவதற்கான செயல்முறைகள் தாமதமடைகின்றன. ஏற்கனவே வழக்குகள் தேங்கிக்கிடப்பதால் விரைவான விசாரணை சாத்தியமற்றதாக உள்ளது. இதனால்தான் நிர்வாகத் தீர்பாயங்கள் உருவாகின்றன. நான்காவதாக, நிர்வாகச் சட்டங்கள் என்பவை தொகுக்கப்பட்டவைகள் (Codified) அல்ல. எனவே, அரசு இயந்திரத்தின் தேவைக்கு ஏற்றாற்போல் மாற்றியமைத்துக் கொள்ளும் செயற்பரப்பைக் கொண்டுள்ளன. எனவே, இது மிகவும் நெகிழ்வுத் தன்மைக்கொண்டதாகும். நெகிழ்வற்ற திடமான சட்ட நடைமுறைகளை மீண்டும் மீண்டும் பின்பற்றத் தேவை இல்லை. நிர்வாகச் சட்டத்திற்கும், அரசமைப்பிற்கும் இடையே வேறுபாடு இருக்கின்றது. அரசமைப்பு என்பது இந்த மண்ணின் மேம்பட்ட உயர்வான சட்டமாகும். எந்த ஒரு சட்டமும் அரசமைப்பிற்கு மேலானது இல்லை. எனவே இதர சட்டங்கள் அதன் உறுப்புக்களை நிறைவு செய்வதாக இருக்கவேண்டும். அதனை மீறும்படியாக இருக்கக்கூடாது. எனவே நிர்வாகச் சட்டங்களும் அரசமைப்பிற்குக் கீழான சட்டமே ஆகும். அரசமைப்பானது அரசின் அமைப்பு (Structure) மற்றும் அதன் பல்வேறு உறுப்புகளைப் பற்றிப் பேசுகிறது. நிர்வாகச் சட்டங்கள் என்பவை நிர்வாகத்தைப்பற்றிமட்டுமேசெயலாற்றுகிறது (Deals). நிர்வாக அதிகாரிகள் முதலில் அரசமைப்பு விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் தொடர்ந்து நிர்வாகச் சட்டங்களின்படி பணியாற்ற வேண்டும்.


செயல்பாடு

நீதித்துறையின் சில கூறுகள் குறித்து எழுது.



12th_Political Science_Tamil_Unit_4.indd 103 04-06-2019 11:24:49

இந்திய தண்டனைச் சட்டம்



இந்திய தண்டனைச் சட்டம் என்பது இந்தியாவின் குற்றவியல் சட்டமாகும். அது குற்றவியல் சட்டத்தின் உள்ளார்ந்த அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சட்டமாகும். 1834-ஆம் ஆண்டு இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் கீழ் 1860-ஆம் ஆண்டு இச்சட்டம் தயாரிக்கப்பட்டது. இது தொடக்கக்கால பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் கீழ் 1862-ல் அமலுக்கு வந்தது. இதன் நோக்கம் இந்தியாவிற்கு ஒரு பொதுத் தண்டனைச் சட்டத் தொகுப்பை அளிப்பதாகும்.

இந்திய தண்டனைச் சட்டம் ஒரு அடிப்படையான வடிவத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு நபர் மேற்கொள்ளும் அனைத்து குற்றங்களுக்கான வழக்குகள், அவற்றுக்கான தண்டனைகள் ஆகியனவற்றின் பட்டியல் கொண்ட ஆவணமாகும். இது அனைத்து குடிமக்களையும் உள்ளடக்கியது. இராணுவத்தினரும் இதர படைகளின் வீரர்களும் விலக்களிக்கப்பட்டுள்ளனர். அவர்களை இந்தியக் குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்க முடியாது. அவர்களுக்கு பல்வேறு தனி விதிகள் உள்ளன. பல ஆண்டுகள் சோதனைகளுக்கு பின்னர் பரிசோதிக்கப்பட்டு பரிணாமம் பெற்ற நியாயமான, திடமானக் குற்றத்தடுப்பு அமைப்பைக் கொண்டுள்ள ஒரு நீதித்துறை அமைப்பு என்ற சிறப்பினை இந்திய நீதித்துறை பெறுகிறது.

இந்திய தண்டனைச சட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பியல்பானது, அந்த ஆவணம் வளர்த்தெடுக்க நினைத்த பாரபட்சமற்ற தன்மை கொண்ட தீர்ப்புமுறை ஆகும். இந்திய தண்டனைச் சட்டம் உயர்நிலையில் இருக்கக்கூடிய எந்த ஒரு நபருக்கும் சிறப்பு சலுகை அளிக்கவில்லை. இந்திய தண்டனைச் சட்டம் ஒவ்வொரு அரசு ஊழியர், ஒவ்வொரு பொதுமக்கள் ஏன் நீதிபதியைக்கூட உள்ளடக்குவதாக இருக்கிறது. நாட்டின் சட்டம் இயற்றும், சட்டத்தை அமலாக்கம் செய்யும் அமைப்புகள் பொதுமக்களின் நம்பிக்கையைத் தட்டி எழுப்புகிறது; மேலும், அதிகாரத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதையும் தடுக்கிறது.

இந்திய தண்டனைச் சட்டமானது, அரசுக்கு எதிரான குற்றங்கள், பொது இடங்களில் நடைபெறும் குற்றங்கள், ஆயுதப்படைகளின் குற்றங்கள், கற்பழிப்பு மற்றும் கொலை, ஆட்கடத்தல் போன்ற குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து குற்றங்களையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் மதம் தொடர்புடைய குற்றங்கள், சொத்துடைமை குற்றங்கள், திருமண குற்றங்கள், கணவர்கள் மற்றும் உறவினர்களால் செய்யப்படும் கொடுமைகள் மற்றும் அவதூறுகள் போன்றவற்றையும் கையாளுகின்றது. இந்திய தண்டனைக் குறியீட்டுக் கீழ் பிரிவு 34, ஒரு குழுச் செயல்பாட்டில் கலந்து கொண்ட ஒரு நபர் ஆற்றிய பங்களிப்பு எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அக்குழுவினர் மேற்கொண்ட செயல்களின் பொது நோக்கிற்கும் முழுமையான பொறுப்பானவராகவே கருதப்படுவார். சாட்சிகளின் அடிப்படையில் இவர்கள் சமமான குற்றவாளிகள் கருதப்படுவர்.

இதே சட்டம் பிரிவு 149-ன் கீழ், சட்ட விரோதமாகக்கூடிய ஒரு குழுவைச் சேர்ந்த நபர்கள் அனைவரும் அந்த சட்ட விரோத

12th_Political Science_Tamil_Unit_4.indd 104 04-06-2019 11:24:49

குழுச் செயலின் உள்நோக்கம் அல்லது சட்டவிரோதக் கூடுதலில் ஏற்படக் கூடிய கெடு விளைவு அடிப்படையில் தண்டனைக்குரியவர்கள் ஆவர். மேலும், குற்றச் சதி தயாரிப்பில் பங்கேற்றல், உடந்தையாக இருந்ததல் போன்ற செயல்களும் தண்டனைக்குரியவையாகும்.

இந்திய தண்டனைச் சட்டமானது, பல முறை தேவையின் அடிப்படையில் திருத்தப்பட்டிருக்கிறது. தேசத் துரோகம் போன்ற தண்டனைச் சட்டத்துக்கு வெளியே இருந்த கருத்தாக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. குடிமகன்களின் எதிர்பார்ப்புகளில் மாறுதல்கள் ஏற்படுவதாலும், அது சமூக மாற்றங்களில் முடிவதாலும், குற்றவியல் நீதி அமைப்பு முறைகளை அடிக்கடி மாற்றி அமைக்க வேண்டிய தேவை உணரப்பட்டது, சில நேரங்களில் இதுவே மிகுந்த மன உளைச்சல்கள், மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றன. குற்றவியல் புலன்விசாரணை செயல்முறைகள், குற்றங்களை முறையாக நீதிமன்றத்தில் வைத்து குற்றம் சாட்டுதல் மற்றும் தீர்ப்பு வழங்குதல் போன்றவையெல்லாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களில் ஏற்படும் மாறுதல்கள் மற்றும் உருமாற்றங்களுக்கு இசைவானதாக மாற வேண்டியதன் அவசியத்திற்கு சாட்சியாக இருக்கிறது.

தகவல் தொடர்பு

தொழில்நுட்ப வளர்ச்சிக்காலமான தற்போது, குற்ற நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள நவீனமுறைச் செயல்கள், நவீன புலனாய்வு முறை மற்றும் குற்றம் நிரூபிக்கும் முறைகளை உருவாக்கக் கோரியது. இதற்காக புதிய குற்றவியல் சட்டம் தேவைப்பட்டது. இதையொட்டி, இந்திய அரசு 2000-ஆம் ஆண்டு ஒரு குழு அமைத்தது. இந்த குழு தனது அறிக்கையை 2003-ஆம் ஆண்டு அளித்தது. குற்ற நீதிமுறை அமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தக் கோரி பல பரிந்துரைகளை இக்குழு அறிக்கையில் வலியுறுத்தியது. இவற்றில், சில பரிந்துரைகளை அரசு ஏற்றுக் குற்றவியல் சட்டத்தோடு நடைமுறைப்படுத்தி வருகிறது.

அருஞ்சொற்பொருள்

- **அரசமைப்பு:** அடிப்படைக் கொள்கைகள் அல்லது நிறுவப்பட்ட முன்னுரிமைகள் ஆகியவற்றின் அமைப்பு ஒரு மாநில அல்லது பிற அமைப்பு நிர்வகிக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறது.
- **நீதித்துறை:** மாநிலத்தின் பெயரில் சட்டத்தை விளக்குவது மற்றும் பொருந்தும் சட்டங்களின் அமைப்பு ஆகும்.
- **கூட்டமைப்பு:** இது ஒரு மத்திய அரசின் கீழ் சுயநிதி மாகாணங்கள், மாநிலங்கள் அல்லது பிற பிராந்தியங்களின் ஒன்றியத்தால் வகைப்படுத்தப்படும் ஒரு அரசியல் நிறுவனம் ஆகும்.
- **அடிப்படை உரிமைகள்:** அவை அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து உயர்ந்த பாதுகாப்பு தேவை என உச்ச நீதிமன்றம் அங்கீகரித்த உரிமைகள் குழு. இந்த உரிமைகள் குறிப்பாக அரசமைப்பில் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- **நீதித்துறை:** மாநிலத்தின் பெயரில் சட்டத்தை விளக்குவது மற்றும் பொருந்தும் சட்டங்களின் அமைப்பு ஆகும்.
- **ஜூரி மூலம் விசாரணை:** இது ஒரு நீதிபதியிடம் ஒரு முடிவை அல்லது உண்மையை கண்டுபிடிக்கும் ஒரு சட்டபூர்வமான நடவடிக்கை. நீதிபதிகள் அல்லது குழு அனைத்து முடிவுகளையும் எடுக்கும் ஒரு பெஞ்ச் விசாரணையில் இருந்து வேறுபடுத்தப்படுகிறது.
- **நீதித் தடுப்பு:** நீதிபதிகளின் கோட்பாடு நீதிபதிகள் தங்கள் சொந்த அதிகாரத்தை குறைப்பதற்காக ஊக்குவிக்கும் ஒரு தத்துவமாகும்.
- **நீதித்துறை செயல்முறை:** நீதிபதிகள் தங்கள் நபர்களை பொதுக் கொள்கை பற்றி, மற்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு, அவர்களின் முடிவுகளை

12th_Political Science_Tamil_Unit_4.indd 105 04-06-2019 11:24:50

வழிகாட்டிக்கொள்ள அனுமதிக்கும் ஒரு தத்துவம் ஆகும்.

❖ **பொது நல வழக்கு:** பொது நலனுக்கான பாதுகாப்பு வழக்கு. இது சட்ட நீதிமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது, ஆனால் பாதிக்கப்பட்ட கட்சியால் அல்ல, நீதிமன்றம் அல்லது வேறு எந்த தனியார் கட்சியால்.

❖ **அசல் அதிகார வரம்பு:** இது முதல் முறையாக ஒரு வழக்கு கேட்க ஒரு நீதிமன்றத்தின் அதிகாரம்.

❖ **மேல்முறையீட்டு நீதிமன்றம்:** விசாரணை நீதிமன்றம் அல்லது வேறு கீழ் நீதிமன்றம் ஆகியவற்றின் முடிவுகளை திருத்த, திருத்த மற்றும் மீறுவதற்கான ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரமாகும்.

❖ **ஆலோசனை அதிகாரசபை:** உச்ச நீதி மன்றம் அல்லது ஒரு அரசமைப்பு விஷயத்தில் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையை நாடுகிறது.

❖ **நிர்வாக நீதிமன்றங்கள்:** இது நிர்வாகச் சட்டத்தில் சிறப்பு வகையிலான நீதிமன்றம், குறிப்பாக பொது அதிகாரத்தை நடைமுறைப் படுத்துவதற்கான விவாதங்கள்.

❖ **பொதுச் சட்டம்:** தனிநபர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே உள்ள உறவுகளை நிர்வகிக்கும் சட்டத்தின் பகுதியாகும், மற்றும் சமூகத்திற்கு நேரடி அக்கறை கொண்ட தனிநபர்களுக்கிடையிலான அந்த உறவு.

மதிப்பிடுதல்

I. சரியான பதிலைத் தேர்வு செய்யவும்

1) கீழ்க்கண்டவற்றில் எது அரசாங்கத்தின் உறுப்பு அல்ல?

அ) சட்டமன்றம்
ஆ) அதிகாரவர்க்கம்
இ) ஆட்சித்துறை
ஈ) நீதித்துறை

Y1HUHN

2) பின்வருவனவற்றில் எது கூட்டாச்சியின் பாதுகாப்பாளராக விவரிக்கப்படுகிறது?

அ) சட்டமன்றம்
ஆ) ஆட்சித்துறை
இ) நீதித்துறை
ஈ) அமைச்சரவை

3) பின்வருவனவற்றில் யார் பண்டைய இந்தியாவில் நீதியின் நீரூற்றாக கருதப்பட்டவர்?

அ) மன்னர்
ஆ) சேனாதிபதி
இ) முதல்வர்
ஈ) தலைமை நீதிபதி

4) பின்வருவனவற்றில் யார் இடைக்கால இந்தியாவில் நீதி நிர்வாகத்தை நிர்வகிக்கும் உச்சபட்ச அதிகாரம் கொண்டவர்?

அ) சுல்தான்
ஆ) குசாட்-உல்-குவாசி
இ) தலைமை நீதிபதி
ஈ) முப்தி

12th_Political Science_Tamil_Unit_4.indd 106 04-06-2019 11:24:50

5) பின்வருவனவற்றில் எது முகலாயர் காலத்தின்போது நிறுவப்பட்ட நீதித்துறையாகும்.

அ) நசீம்–சி–சுபா
ஆ) மருக்மா–இ–அதாலத்
இ) திவான்–இ–சுப்பா
ஈ) குவாசி–இ–பர்கானா

6) கொலைக் குற்றத்துக்கு பின்வரும் எந்த தண்டனைகள் விதிக்கப்பட்டது?

அ) ஹத்
ஆ) கிசாஸ்
இ) தாசீர்
ஈ) எதுவுமில்லை

7) எந்த சாசனம் பம்பாயின் மீது நீதிதுறை அதிகாரம் செலுத்த கிழக்கிந்திய கம்பெனிக்கு அதிகாரமளித்தது?

அ) 1661 சாசனச்சட்டம்
ஆ) 1813 சாசனச்சட்டம்
இ) 1688 சாசனச்சட்டம்
ஈ) 1853 சாசனச்சட்டம்

8) எந்த சாசனம் மதராஸ் மாநகராட்சில் மட்டும் மேயர் நீதிமன்றம் உருவாக காரணமாக இருந்தது?

அ) 1687 சாசனச்சட்டம்
ஆ) 1726 சாசனச்சட்டம்
இ) 1813 சாசனச்சட்டம்
ஈ) 1661 சாசனச்சட்டம்

9) கல்கத்தாவில் உள்ள உச்ச நீதிமன்ற நீதிமன்றத்தை அமைக்க கீழ்க்கண்டவற்றில் எது மன்னருக்கு அதிகாரம் அளித்தது?

அ) 1774 சாசனச்சட்டம்
ஆ) 1773 ஒழுங்குமுறை சட்டம்
இ) கார்ன்வாலிஸ் சட்ட தொகுப்பு
ஈ) 1726 சாசனச்சட்டம்

10) எந்த ஆண்டு கூட்டாட்சி நீதிமன்றம் தொடங்கி வைக்கப்பட்டது?

அ) 1937
ஆ) 1936
இ) 1935
ஈ) 1932

11) கீழ்க்கண்டவற்றில், எந்த கோட்பாடு மாறிவரும் காலங்களையும், சட்டத்தின் நோக்கங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்கின்றது?

அ) நீதிமன்ற சீராய்வு
ஆ) நீதித்துறை செயல்பாட்டு முறை
இ) நீதிமன்ற கட்டுப்பாடு
ஈ) எதுவுமில்லை

12th_Political Science_Tamil_Unit_4.indd 107 04-06-2019 11:24:50

12) பின்வருவனவற்றில் இந்தியாவில் ஒரு மாற்று தகராறு முறைமை எது?

அ) உச்ச நீதிமன்றம்
ஆ) உயர் நீதிமன்றம்
இ) மாவட்ட அமர்வு நீதிமன்றம்
ஈ) லோக் அதாலத்

13) பின்வரும் உறுப்புகளில் எது உயர் நீதிமன்றத்திற்கு பேராணைகளை பிறப்பிக்க அதிகாரம் அளிக்கிறது?

அ) உறுப்பு 226
ஆ) உறுப்பு 227
இ) உறுப்பு 228
ஈ) உறுப்பு 229

II) பின்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமாக பதில் அளிக்கவும்.

1) அர்த்த சாஸ்திரம் என்றால் என்ன?
2) சுல்தானின் தலைநகரில் நிறுவப்பட்ட ஆறு வகையான நீதிமன்றங்கள் எவை?
3) பிரபுக்கள் நீதிமன்ற மேலவை கவுன்சிலின் முதன்மை செயல்பாடு என்ன?
4) நீதிமன்ற சீராய்வை வரையறுக்க.
5) பொது நல வழக்கு என்றால் என்ன?
6) நீதித்துறை செயல்பாட்டு முறையை வரையறுக்க.
7) நிர்வாகச் சட்டம் என்றால் என்ன?
8) அரசமைப்பு என்றால் என்ன?
9) இந்திய தண்டனைச் சட்டம் என்றால் என்ன?

III) பின்வரும் கேள்விகளுக்குசுருக்கமாக பதில் அளிக்கவும்:

1) நீதித்துறை அரசமைப்பின் என்ற தலைப்பில் ஒரு சிறு குறிப்பு வரைக.
2) நீதித்துறை சுதந்திரத்தை மேம்படுத்தும் காரணிகளை சுருக்கமாக விவாதிக்கவும்.
3) "ஒரு சுதந்திரமான, நல்ல நீதித்துறை உத்தரவாதம் தரவில்லை என்றால் அரசியலமைப்பின் கீழ் குடிமக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அத்தனை உரிமையும் ஒன்றும் இல்லை, அவை வெறும் குமிழிகளே" – ஆண்ட்ரூஜாக்சன் கருத்தை தெரிவிக்கவும்.
4) சுருக்கமாக பொது நல வழக்கின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுக.
5) நிர்வாகச் சட்டத்தின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை பற்றிய சுருக்கமாக விவரியுங்கள்.
6) லோக் அதாலத்களை பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

IV) பின்வரும் கேள்விகளுக்கு விரிவாக பதிலளிக்கவும்

1) இந்திய நீதித்துறை பரிணாம வளர்ச்சியை பற்றி எழுதுக.
2) இந்திய நீதித்துறையின் சிறப்பான அம்சங்களை ஆராய்ந்து எழுதுக.
3) கீழ்நிலை நீதிமன்றங்களின் பணிகளை விரிவாக விளக்குக.
4) இந்திய உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு, அதிகாரம் மற்றும் பணிகளை பற்றி விவாதிக்கவும்.
5) இந்திய உயர் நீதிமன்றத்தின் அமைப்பு, அதிகார வரம்பு மற்றும் பணிகளை பற்றி விவாதிக்கவும்.

12th_Political Science_Tamil_Unit_4.indd 108 04-06-2019 11:24:50

அலகு 5

இந்தியாவில் கூட்டாட்சி



கற்றலின் நோக்கங்கள்


- கூட்டாட்சி முறையின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பொருள் ஆகியவற்றை அறிந்துகொள்ளுதல்.
- நமது அரசமைப்பின் கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி தன்மைகளை அறிதலும், எவ்வாறு நமது அரசமைப்பு கூட்டாட்சி முறையை ஊக்குவிக்கின்றது என்பதை அறிந்துகொள்ளுதல்.
- சட்டமன்றம், ஆட்சித்துறை, நிதித் துறைகளில் இந்திய அரசமைப்பில் காணப்படும் மத்திய மாநில உறவுகளை ஆய்வு செய்தல்.
- இந்திய அரசமைப்பின் கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை அறிதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- மத்திய மாநில உறவுகளில் காணப்படும் முக்கிய சிக்கல்களையும் கோரிக்கைகளையும் விவாதித்தல்.
- மத்திய மாநில உறவுகள் தளத்தில் பல்வேறு குழுக்கள் வழங்கியுள்ள பரிந்துரைகளை அறிந்துகொள்ளுதல்.
- மாநிலங்களிடையிலான நதிநீர் சிக்கல்களை தீர்ப்பதற்கு நமது அரசமைப்பு வழங்கியுள்ள வழிமுறைகளை மதிப்பீடு செய்தல்.

5.1 கூட்டாட்சியின் பொருள்

ஒரு மத்திய அரசாங்கத்திற்கும் பல மாநில அரசாங்கங்களுக்கும் இடையில் அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள, பாதுகாக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வை உடைய அரசியல் முறையை கூட்டாட்சி என்று அழைக்கிறோம். மாநில அரசாங்கங்கள் இருந்தால் மட்டுமே ஒரு அரசியல் முறையை கூட்டாட்சி என அழைக்கக்கூடாது. மாநில அரசாங்கங்கள் அரசமைப்பால் தோற்றுவிக்கப்பட்டால் மட்டுமே நாம் ஒரு அமைப்பை கூட்டாட்சி முறை என்று கூறலாம். பொதுவாக பல வகையான மக்கள் வகிக்கும் நாடுகளில் கூட்டாட்சி முறை பின்பற்றப்படுகிறது. ஒரு நாட்டின் பகுதிகள் இனம், மொழி, மதம் போன்ற காரணங்களால் பல வகை மக்களை பெற்றிருந்தால் கூட்டாட்சி முறை அரசாங்கம் பின்பற்றப்பட வேண்டும். "வேற்றுமையில் ஒற்றுமை" உருவாக்குவதற்கு கூட்டாட்சி முறை மக்களாட்சி நாடுகளில் பின்பற்றப்படுகிறது.

மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே அதிகாரப் பகிர்வை அரசமைப்பு கூட்டாட்சி முறையில் அமல்படுத்துகிறது. மிகவும் தெளிவாக அதிகாரப் பகிர்வு அரசமைப்பால் உருவாக்கப்படுகிறது.

கூட்டாட்சி முறையின் பொருள்



கூட்டாட்சியின் பரிணாமம்

வட அமெரிக்காவில் 13 காலனிகள் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி

12th_Political Science_Tamil_Unit_5.indd 111 04-06-2019 11:50:39

செய்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாக்கின. கூட்டாட்சி அடிப்படையில் அரசமைப்பை உருவாக்கின. உலக வரலாற்றில் முதல் கூட்டாட்சி அரசமைப்பாக அமெரிக்கா தோன்றியது. பின்னர் ஆஸ்திரேலியா, கனடா ஆகிய ஆங்கிலேய காலனிகளும் கூட்டாட்சி முறையை அமைத்துக்கொண்டன. மூன்று மொழிகளை பின்பற்றும் சுவிட்சர்லாந்து கூட்டாட்சி முறையை கொண்டு வந்தது. தற்போது உள்ள ஐரோப்பிய யூனியன் விருப்பத்தின் அடிப்படையில் அமைந்த கூட்டாட்சி முறைக்கு எடுத்துக்காட்டாகும்.

இந்தியாவில் கூட்டாட்சி முறையும் வளர்ச்சியும்

இந்தியாவில் ஒழுங்குமுறைச் சட்டம் 1773 கூட்டாட்சி முறையின் தோற்றத்தை உருவாக்கியது. சென்னை, கல்கத்தா, மும்பை ஆகிய பிரதேசங்களை கல்கத்தாவில் உள்ள கவர்னர் ஜெனரலின் ஆளுமையின் கீழ்ச் சட்டம் கொண்டு வந்தது. இந்திய தேசிய இயக்கம் இந்தியாவின் பன்முகத் தன்மையை உணர்ந்து கூட்டாட்சி முறையை ஆதரித்தது. இந்திய அரசாங்கச் சட்டம் 1919 இரட்டை ஆட்சியை அறிமுகம் செய்தது. 1935 இந்திய அரசாங்கச் சட்டம் மாநிலங்களுக்கு சுயாட்சியை வழங்கியது. நேரு குழுவின் அறிக்கையும் (1928) ஜவஹர்லால் நேருவின் கருத்துக்களும் கூட்டாட்சி அமைப்பை இந்தியாவிற்கு வலியுறுத்தின. பாகிஸ்தான் உருவாக்கமும் அதன்பின் துயரமான சம்பவங்களும் வலுவான மத்திய அரசு உள்ள கூட்டாட்சி முறையை உருவாக்க காரணமாக இருந்தன. ஜம்மு காஷ்மீர் வரலாற்று காரணங்களில் சிறப்பு அந்தஸ்துடன் உள்ளது.

விடுதலை இந்தியாவின் அரசமைப்பு ஆறாவது பகுதியில் கூட்டாட்சி முறையை வழங்குகிறது. அரசமைப்பின் ஏழாவது அட்டவணை மூன்று பட்டியல்களை உருவாக்கி அதிகாரப்பகிர்வை மத்திய மாநில அரசாங்கங்களுக்கு வழங்குகின்றன.

இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி தன்மைகள்

இந்திய அரசமைப்பு கீழ்க்கண்ட கூட்டாட்சி தன்மைகளைப் பெற்றுள்ளது.

1. எழுதப்பட்ட அரசமைப்பு

கூட்டாட்சி முறைக்கு எழுதப்பட்ட அரசமைப்பு இன்றியமையாததாகும். பல மாநில மத்திய அரசாங்கங்கள் கூட்டாட்சி முறையில் செயல்படுவதால் அவைகளின் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு இருக்க வேண்டும். தற்போது இந்தியாவில் ஒரு மத்திய அரசும், 29 மாநில அரசாங்கங்களும் உள்ளன. இவைகளின் அதிகாரங்களையும் பணிகளையும் அரசமைப்பு தெளிவாக வரையறுக்கின்றது.

2. அரசமைப்பின் உயர்வு

அரசமைப்பு நாட்டின் மிக உயர்ந்த ஆவணமாகும். எல்லா அரசாங்கங்களும் அரசமைப்பின் கருத்துக்கள், வழிமுறைகள் மற்றும் பகுதிகள் ஆகியவற்றை பின்பற்ற வேண்டும். எந்த ஒரு அரசாங்கமும், அரசமைப்பை மீறிச் செயல்படக் கூடாது.

3. அதிகாரப் பகிர்வு

மத்திய மாநில அரசாங்கங்களுக் கிடையேயான அதிகாரப் பகிர்வு கூட்டாட்சி முறையின் அடிப்படைத் தன்மையாகும். இந்திய அரசமைப்பு மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகாரப் பகிர்வை விரிவாக வழங்குகிறது. நமது நாட்டில் மூன்று பட்டியல் மூலமாக அதிகாரப் பகிர்வு வழங்கப்படுகிறது. ஆனால் அமெரிக்காவின் கூட்டாட்சி முறையில் ஒரு பட்டியல் மூலமாகத்தான் அதிகாரப் பகிர்வு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

4. ஈரவை நாடாளுமன்றம்

கூட்டாட்சி முறையில் ஈரவை நாடாளுமன்றம் காணப்படுகிறது. நாடாளுமன்றத்திற்கு இரண்டு வகைகள் உள்ளன. இந்தியாவில் நாடாளுமன்றத்தில்

12th_Political Science_Tamil_Unit_5.indd 112 04-06-2019 11:50:39

மேலவை மாநிலங்களவை என அழைக்கப்படுகிறது. நாடாளுமன்றத்தின் கீழ் அவை மக்களவை என அழைக்கப்படுகிறது. மாநிலங்களவை மாநில பிரதிநிதிகளை கொண்டுள்ளது. மாநில உரிமைகளின் பாதுகாவலனாக அது கருதப்படுகிறது. உலகம் முழுவதும் நாடாளுமன்றத்தின் மேலவை மாநில உரிமைகளின், நலன்களின் பாதுகாவலனாகச் செயல்படுகிறது.

5. நெகிழா அரசமைப்பு

அரசமைப்பின் கருத்துகளை மாற்றுவதற்கு அரசியல் சாசன திருத்தச்சட்ட முறையோ அல்லது தனி அமைப்போ உள்ள அரசமைப்புகளுக்கு நெகிழா அரசமைப்பு முறை என்பது பெயராகும். சாதாரண சட்டம் இயற்றும் முறை மூலமாக அரசமைப்பில் மாற்றங்களை செய்ய இயலாது. இங்கு மாற்றங்களை கொண்டு வருவதற்கு அறுதி பெரும்பான்மையுடன் அரசமைப்பு திருத்தச்சட்டத்தை கொண்டு வர வேண்டும். அரசமைப்பை மாற்றுவதற்கு சாதாரண சட்டம் இயற்றும் முறை போதுமென்றால் மாநிலங்கள் உரிமைகளுக்கு பாதுகாப்பு இருக்காது. மத்திய அரசாங்கமே அரசமைப்பை திருத்தி மாநில உரிமைகளை பறிக்கலாம் என்ற ஆபத்து உள்ளது. நமது அரசமைப்பின் இருபதாவது பகுதியின் 368 உறுப்பில் அரசமைப்பை மாற்றுவதற்கான சிறப்பு திருத்தச்சட்ட முறைகள் வழங்கப்பட்டுள்ளதால் அது நெகிழா அரசமைப்பு என அழைக்கப்படுகிறது.

6. உச்ச நீதிமன்றம்

இந்திய உச்ச நீதிமன்றம் கூட்டாட்சி முறையின் நடுவணாகவும், அரசமைப்பின் பாதுகாவலனாகவும் விளங்குகின்றது. அரசமைப்பை விளக்கும் உரிமையை இது பெற்றுள்ளது. மத்திய மாநில உரிமைகளுக்கிடையே முரண்பாடுகள் அல்லது சிக்கல்கள் இருந்தால் உச்ச நீதிமன்றம் தீர்த்து வைக்கின்றது. உச்ச நீதிமன்றத்திடம் தனிபட்ட அதிகாரம் உள்ளது. உச்ச நீதிமன்றம் மட்டும்தான் கூட்டாட்சி வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது. மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கங்களுக்கிடையிலும் அல்லது வெவ்வேறு மாநில அரசாங்கங்களுக்கிடையிலும் சிக்கல்கள் இருந்தால் உச்ச நீதிமன்றம் மட்டுமே தீர்த்து வைக்கும்.

அதாவது, தமிழ் நாட்டிற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் அல்லது வேறு மாநில அரசாங்கத்திற்கும் இடையே பிரச்சனை தோன்றினால் அதனை தீர்த்து வைக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திடம் மட்டுமே உள்ளது.

மேற்கண்ட காரணிகளின் அடிப்படையில் இந்திய அரசமைப்பை கூட்டாட்சி அரசமைப்பு என கூறுகிறோம்.



12th_Political Science_Tamil_Unit_5.indd 113 04-06-2019 11:50:39

இந்திய நிலப்பரப்பு



இந்திய ஒன்றியம் என்ற கருத்து இந்திய நிலப்பரப்பு என்பதிலிருந்து வேறுபட்டதாகும். இந்திய ஒன்றியம் என்பது கூட்டாட்சி முறையில் உள்ள 29 மாநில அரசாங்கங்களையும், மத்திய அரசாங்கத்தையும் குறிக்கும். இந்திய நிலப்பரப்பு என்பது கீழ்க்கண்டவற்றை குறிக்கும்.

- 29 மாநிலங்கள்
- 7 ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள்
- பெறப்பட்ட பகுதிகள் (சுதந்திரத்திற்குப்பின் இந்திய அரசாங்கத்தினால் முயன்று பெறப்பட்ட பகுதிகள். பாண்டிச்சேரி, டாமன் டையூ பகுதிகள் இந்திய அரசால் முயன்று பெறப்பட்டன. அவைகள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் ஆவதற்கு முன்னால் பெறப்பட்ட பகுதிகள் என அழைக்கப்பட்டன).

இந்திய அரசமைப்பின் ஒற்றையாட்சி தன்மைகள்

இந்திய அரசமைப்பின் ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சிக்கு எதிரான தன்மைகளை பல்வேறு அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். அமெரிக்காவில் உள்ள பாரம்பரிய கூட்டாட்சி முறையிலிருந்து இந்தியக் கூட்டாட்சி முறை மிகவும் வேறுபடுகிறது.

1. ஒற்றை அரசமைப்பு

மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு ஒரே ஒரு அரசமைப்பு தான் உள்ளது. தேசிய அரசமைப்பே மாநிலங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. மாநிலங்களுக்கென்று தனி அரசமைப்பு கிடையாது. ஜம்மு-காஷ்மீர் மாநிலம் இதற்கு விதிவிலக்காகும். வரலாற்று காரணங்களுக்காக ஜம்மு-காஷ்மீர் மாநிலம் தனி அரசமைப்பை பெற்றுள்ளது. இதர மாநிலங்களுக்கு தனி அரசமைப்பு கிடையாது. ஆனால் பாரம்பரிய கூட்டாட்சி நாடான அமெரிக்காவில் மாநிலங்கள் தங்களுக்கான அரசமைப்பை பெற்றுள்ளன.

2. ஒற்றைக் குடியுரிமை

நமது நாட்டில் இந்தியக் குடியுரிமை மட்டுமே உள்ளது. தேசியக் குடியுரிமை மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கென்று தனி குடியுரிமை கிடையாது. ஆனால் அமெரிக்காவில் தேசியக் குடியுரிமை மட்டுமல்லாது மாநில குடியுரிமையும் காணப்படுகிறது.

3. நெகிழும் அரசமைப்பு

சாதாரண சட்டம் இயற்றும் முறை மூலமாக அரசமைப்பின் பகுதிகளை மாற்ற முடிந்தால் அந்த அரசமைப்பிற்கு நெகிழும் அரசமைப்பு என்பது பெயராகும். இங்கு அரசமைப்பில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு சிறப்பு அரசமைப்பு திருத்தச்சட்டங்கள் தேவையில்லை. இங்கிலாந்தில் நெகிழும் அரசமைப்பு காணப்படுகிறது. இந்திய அரசமைப்பில் சில முக்கிய பகுதிகளை மாற்றுவதற்கு சாதாரண சட்டம் இயற்றும் முறை அதிகாரத்தை பெற்றிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் இப்பகுதிகளை மாற்ற முடியும்.

4. மாநிலங்களுக்கு வாழ்வுரிமை இல்லை

நமது அரசமைப்பு மாநிலங்களுக்கு பெயர் உரிமை மற்றும் வாழ்வுரிமையை வழங்கவில்லை. நாடாளுமன்றம் சாதாரண சட்டங்கள் மூலமாக மாநிலங்களின் பெயர்களையும் நிலப்பரப்புகளையும் மாற்றி அமைக்க முடியும். அரசமைப்பின் 3-வது மற்றும் 4-வது உறுப்புகள் மாநிலங்களை மாற்றவும் புதிய மாநிலங்களை உருவாக்கவும் வழி முறையை வழங்குகின்றன. குடியரசுத்தலைவர் சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கு தகவலை அனுப்புவார். அந்த மாநிலத்தின் பெயரையோ, நிலப்பரப்பையும் மாற்றுகிறோம் என தகவல் அனுப்புவார். அந்த மாநில சட்டமன்றத்தின் கருத்தை அனுப்புமாறு கூறுவார். ஆனால் மாநில சட்டமன்றத்தின் கருத்து அவரை கட்டுப்படுத்தாது.

12th_Political Science_Tamil_Unit_5.indd 114 04-06-2019 11:50:39

பின்னர் ஒரு சாதாரண சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தின் மக்களவையிலோ, மாநிலங்களவையிலோ குடியரசுத்தலைவரின் பரிந்துரையின்படி அறிமுகப்படுத்தப்படும். நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பின் அந்த சட்ட முன்வரைவு சாதாரண சட்டமாக அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படும். இவ்வாறு மாநிலங்களின் பெயர், நிலப்பரப்பு ஆகியவை மாற்றப்படுகின்றன.

ஆனால் அமெரிக்காவில் மாநிலங்களின் பெயர் மற்றும் வாழ்வுரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம் அந்நாட்டின் கூட்டாட்சியை "உடைக்க முடியாத மாநிலங்களால் உருவாக்கப்பட்ட உடைக்க முடியாத நாடு" என்று கூறியது. அமெரிக்காவில் மத்திய அரசை மாநிலங்கள் அழிக்க முடியாது. மாநிலங்களை மத்திய அரசு அழிக்க முடியாது. ஆனால் இந்தியாவில் மாநிலங்களின் நிலப்பரப்பையும், பெயரையும் மத்திய அரசாங்கம் எளிதில் மாற்ற முடியும்.

செயல்பாடு

முன்பு சிக்கிம் இந்தியாவுடன் ஒரு "இணை மாநிலம்" என்றழைக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா?

5. கூட்டாட்சிக்கு எதிரான மாநிலங்களவை

பொதுவாக நாடாளுமன்றத்தின் மேலவை மாநில உரிமைகளின் பாதுகாவலனாக பணியாற்றுகின்றது. இந்தியில் ராஜ்ய சபா என்றால் தமிழில் மாநிலங்களவை என்பது பொருளாகும். மாநிலங்களவை மாநிலங்களின் பிரதிநிதிகளால் உருவாக்கப்படுகிறது. மாநில உரிமைகளின் பாதுகாவலனாக பணிபுரிகிறது. ஆனால் மூன்று முக்கிய தளங்களில் மாநில உரிமைகளுக்கு எதிராக மாநிலங்களவை செயல்படுகிறது. மாநிலங்களவையின் அமைப்பு முறையில் சமத்துவம் பின்பற்றப்படவில்லை. இடங்கள் மாநிலங்களின் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டிருக்கின்றன. மிகப்பெரிய மாநிலமாகிய உத்தர பிரதேசத்திற்க்கு 31 இடங்கள் மாநிலங்களவையில் உள்ளன. ஆனால் நாகாலாந்து போன்ற சிறிய மாநிலங்களுக்கு ஓரிடம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய கூட்டாட்சி நாடாகிய அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இரு இடங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. சிறிய மாநிலங்கள் பெரிய மாநிலங்கள் என்ற வேறுபாடு கிடையாது.

தமிழ்நாட்டிற்கு 18 இடங்கள் மாநிலங்களவையில் உள்ளன.

அரசமைப்பின் 249-வது உறுப்பின் படி ஒரு அதிகாரத்தை மாநில பட்டியலிலிருந்து மத்திய பட்டியலுக்கு மாநிலங்களவையால் மாற்ற முடியும். தேசிய நலன் கருதி மாநிலங்களவை இம்மாற்றத்தை செய்யலாம். வருகை தந்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு முறையின்படி மாநிலங்களவை ஒரு தீர்மானத்தை இயற்றினால் மாநில அதிகாரத்தை மத்தியப் பட்டியலுக்கு ஒரு வருட காலத்திற்கு மாற்றலாம். தேவைப்பட்டால் மீண்டும் மீண்டும் மாற்றத்தை நீட்டிக்கலாம். "வேலியே பயிரை மேய்வது போல" மாநில உரிமைகளின் பாதுகாவலனாகிய மாநிலங்களவையே மாநில உரிமையை பாதிக்கின்றது.

அரசமைப்பின் 312-வது உறுப்பின் கீழ் புதிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கும் அதிகாரம் மாநிலங்களவைக்கு வழங்கப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் மொத்த உறுப்பினர்களின் அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் புதிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கும் அதிகாரத்தை மாநிலங்களவை பெற்றிருக்கின்றது. அனைத்து இந்தியப் பணிகள் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தை உருவாக்குகின்றன என்று மாநிலங்கள் குற்றம்சாட்டுகின்றன. இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்), இந்தியக் காவல் பணி

12th_Political Science_Tamil_Unit_5.indd 115 04-06-2019 11:50:40

(ஐ.பி.எஸ்), இந்திய வனப் பணி (ஐ.எ.ஃப்.எஸ்) ஆகியவை முக்கிய அனைத்து இந்தியப் பணிகளாகும். மாநில உரிமைகளை பாதிக்க கூடிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கும் அதிகாரத்தை மாநிலங்களவை பெற்றிருப்பதை பல மாநிலங்கள் எதிர்க்கின்றன.

6. சமமற்ற அதிகாரப் பகிர்வு



நமது அரசமைப்பு சமமற்ற அதிகாரப் பகிர்வை உருவாக்கியுள்ளது என மாநிலங்கள் குற்றம் சுமத்துகின்றன. மத்திய அரசிற்கு சாதகமாகவும், மாநிலங்களுக்கு எதிராகவும் அதிகாரப் பகிர்வு உள்ளதாக பல மாநிலங்கள் கூறுகின்றன. மத்திய அரசாங்கம் மாநிலங்களை விட எண்ணிக்கையில் அதிக அதிகாரங்களை பெற்றுள்ளது. முக்கியமான அதிகாரங்களும் மத்திய அரசிடமே உள்ளன. அதிக வருமானத்தை ஈட்டித் தரும் அதிகாரங்களும் மத்திய அரசிடமே உள்ளன. எண்ணிக்கை, முக்கியத்துவம், வருமானம் ஆகிய காரணிகளில் மாநிலங்கள் பலவீனமான நிலையில் உள்ளன. நிதி ஆதாரத்திற்கு மத்திய அரசையே மாநிலங்கள் சார்ந்துள்ளன. பொதுப் பட்டியல் அதிகாரங்களில் மத்திய அரசு சொல்வதை மாநில அரசாங்கங்கள் கேட்க வேண்டிய நிலை உள்ளது. பட்டியலில் இல்லாத இதர அதிகாரங்கள் நமது அரசமைப்பில் மத்திய அரசாங்கத்திடம் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் பாரம்பரிய கூட்டாட்சி நாடான அமெரிக்காவில் இதர அதிகாரங்கள் மாநிலங்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

7. அவசர காலங்கள்

நமது அரசமைப்பின் 18-ஆவது பகுதியில் உறுப்புகள் 352 முதல் 360 வரை மூன்று விதமான அவசர காலங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. உறுப்பு 352-ன் படி போர், அந்நிய ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி போன்றவைகள் இந்தியாவின் ஒற்றுமையை பாதித்தால் குடியரசுத்தலைவர் தேசிய அவசர காலத்தை பிறப்பிக்கலாம். உறுப்பு 356-ன் படி எந்த ஒரு மாநிலத்திலும் அரசியல் சாசன அமைப்பு முறை பாழ்படுத்தப்பட்டால் குடியரசுத்தலைவர் மாநில அரசை நீக்கிவிட்டு அவசர காலத்தை கொண்டு வரலாம். உறுப்பு 360-ன் படி நாட்டின் நிதி நிலைமை மோசமடைந்தால் குடியரசுத்தலைவர் நிதி அவசர காலத்தை பிறப்பிக்கலாம். அவசர காலங்கள் அமலில் இருந்தால் கூட்டாட்சி முறை ரத்து செய்யப்பட்டு ஒற்றை ஆட்சி முறை பின்பற்றப்படும். மாநில உரிமைகள் பாதிக்கப்படும்.

8. ஒருங்கிணைந்த நீதித்துறை

இந்திய அரசமைப்பு நீதித்துறையில் கூட்டாட்சி முறையை வழங்கவில்லை. நீதித்துறை ஒருங்கிணைந்த துறையாக உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் கீழ் உயர் நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்கள் இயங்குகின்றன. ஒருங்கிணைந்த, படிநிலை அமைப்பு அடிப்படையில் நீதித்துறை உள்ளது. ஆனால் அமெரிக்காவில் நீதித்துறையிலும் கூட்டாட்சி முறை பின்பற்றப்படுகிறது. இந்தியாவில் சட்டமன்றம், ஆட்சித்துறை, நிதி தளங்களில் மட்டுமே கூட்டாட்சியில் இயங்குகிறது. நீதித்துறையில் கூட்டாட்சி இல்லை.

9. தேர்தல் ஆணையம்

தேசிய தேர்தல் ஆணையம், நாடாளுமன்ற தேர்தலையும், மாநிலச் சட்டமன்றத் தேர்தலையும் நடத்துகின்றது.

12th_Political Science_Tamil_Unit_5.indd 116 04-06-2019 11:50:40

மாநில சட்டமன்றத்திற்கான தேர்தல்களை நடத்துவதற்கு தனி தேர்தல் ஆணையம் கிடையாது. தேர்தல் முதன்மை அதிகாரி தேசிய தேர்தல் ஆணையம் தலைமையின் கீழ் செயல்படுவார். பாரம்பரிய கூட்டாட்சி நாடுகளில் மத்திய தேர்தலை, தேசிய தேர்தல் ஆணையம் நடத்துகின்றது. ஆனால் நமது அரசமைப்பு ஒருங்கிணைந்த தேர்தல் ஆணையத்தை உருவாக்கியுள்ளது.

மாநில தேர்தல் ஆணையம்

உங்களுக்குத் தெரியுமா?

சென்னையில் உள்ள மாநில தேர்தல் ஆணையம் கூட்டாட்சி முறையின் அங்கம் இல்லை. அவ்வாணையம், 73-வது, 74-வது அரசியல் சாசன திருத்தச்சட்டங்கள் அடிப்படையில் சுயாட்சி அமைப்புகளுக்கு (பஞ்சாயத்து, நகராட்சி அமைப்புகள்) தேர்தலை நடத்துகின்றது.

10. ஒருங்கிணைந்த தணிக்கை

இந்திய அரசமைப்பு மத்திய-மாநில அரசாங்கங்களுக்கு ஒருங்கிணைந்த தணிக்கை முறையையும், அமைப்பையும் உருவாக்கி உள்ளது. சி.ஏ.ஜி எனப்படும் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அரசமைப்பின் 148-வது உறுப்பின் படி தேசிய மற்றும் மாநில அளவிலான தணிக்கை அதிகாரத்தை பெற்றுள்ளார். இந்தியக் கூட்டாட்சி முறையில் மாநிலங்களுக்கென்று தனியான தணிக்கை அமைப்பு இல்லை.

- நிர்வாக வசதிக்காக நமது நாடும் மக்களும் பல்வேறு மாநிலங்களாக பிரிக்கப்பட்டிருந்தாலும் நமது நாடு ஒருங்கிணைந்த ஒற்றுமையான நாடாகும். ஒரே ஆதாரத்திலிருந்து ஆட்சியின் கீழ் அனைத்து மக்களும் ஒன்றாக ஒற்றுமையாக வசிப்பார்கள்.



- டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர், தலைவர் வரைவுக்குழு, அரசியல் சாசன நிர்ணயச் சபை

முடிவுரை

நமது தேசத்தின் அரசியல், வரலாறு, பொருளாதாரம் சமூக நிலைகளை பிரதிபலிக்கும் வகையில் நமது கூட்டாட்சி முறை உருவாக்கப்பட்டுள்ளது. அரசியல் சாசனக் குழு நமது நாட்டின் பன்முக மக்கள் முன்னேற்றத்திற்கு கூட்டாட்சி முறை அவசியம் என்று கருதியது. இருந்தபோதிலும் பிரிவினைவாத சக்திகளை தடுப்பதற்கு வலிமையான மத்திய அரசாங்கம் தேவை என்று அரசியல் சாசனக் குழு முடிவு செய்தது. 1947-ஆம் ஆண்டு பாகிஸ்தான் பிரிந்து பிறகு ஏற்பட்ட துயரமான கலவரங்கள் மீண்டும் நடைபெறக் கூடாது என அரசியல் தலைவர்கள் முடிவு செய்தனர். ஆகவே தேசிய ஒற்றுமைக்கு முதலிடத்தையும், மாநில உரிமைகளுக்கு இரண்டாம் இடத்தையும் கூட்டாட்சி முறையில் வழங்கியிருந்தார்கள். மாநில உரிமையோ, கூட்டாட்சியோ இருந்தபோதிலும் தேசிய ஒற்றுமை நிலைபெற வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகும்.

பேராசிரியர் வேர் இந்தியக் கூட்டாட்சி முறையை பற்றி "இந்தியா ஒரு பாதியளவு கூட்டாட்சி முறையான அரசாங்கம் உள்ள நாடாகும். இந்தியா ஒரு வலுவில்லா கூட்டாட்சி தன்மைகள் உள்ள ஒற்றையாட்சி நாடாகும். அது வலுவான கூட்டாட்சி உள்ள ஒற்றையாட்சி நாடு கிடையாது என்று கூறிப்பிடுகிறார் ".

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த அரசியல் சாசன அறிஞரான பேராசிரியர் அலெக்ஸாண்ட்ராவிக்ஸ் இந்தியாவின் கூட்டாட்சியை 'தனித்துவமானது' என்று வர்ணித்தார்.

5.2 மத்திய – மாநில அதிகாரப் பகிர்வு

அதிகாரப் பகிர்வு மத்திய மாநில உறவுகளின் அச்சாணியாக உள்ளது. மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே அதிகாரப் பகிர்வு மூன்று தளங்களில் காணப்படுகிறது.

12th_Political Science_Tamil_Unit_5.indd 117 04-06-2019 11:50:40

அ) சட்டமன்ற அதிகாரப் பகிர்வு

ஆ) ஆட்சித்துறை அதிகாரப் பகிர்வு

இ) நிதி அதிகாரப் பகிர்வு

5.2.1 சட்டமன்ற அதிகாரப் பகிர்வு

மத்திய மாநில உறவுகளில் சட்டமன்ற அதிகாரப் பகிர்வு இரண்டு தளங்களில் வழங்கப்பட்டுள்ளது.

அ) அதிகாரப் பகிர்வின் எல்லை

ஆ) அதிகாரங்கள் பகிர்வு

அ) அதிகாரப் பகிர்வின் எல்லை

மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் தேசத்தின் எல்லை முழுவதும் காணப்படுகின்றது. மாநில அரசாங்கங்களின் அதிகாரம் மாநில எல்லை மீது காணப்படுகின்றது. மேலும் மத்திய அரசு எல்லைகளை தாண்டிய அதிகாரத்தையும் பெற்றிருக்கின்றது. அதாவது மத்திய அரசு இந்தியாவில் மட்டுமல்ல, உலகின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் இந்தியக் குடிமகன்கள் மற்றும் அவர்கள் சொத்துக்கள் மீதும் அதிகாரம் செலுத்துகின்றது. ஆனால் மாநில அரசாங்கங்கள் அந்தந்த மாநில எல்லைக்குள் மட்டுமே அதிகாரம் செலுத்துகின்றன. இருந்தபோதிலும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் பட்டியல் பகுதிகள் மீது பயன்படுத்தும் போது அரசமைப்பே சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.

ஆ) அதிகாரங்கள் பகிர்வு

மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே அரசமைப்பு அதிகாரத்தை மூன்று பட்டியல்கள் மூலம் பகிர்ந்து அளிக்கின்றது.

I பட்டியல் (ஒன்றியப் பட்டியல்)

இங்கு ஒன்றிய அரசு முழு அதிகாரத்தை பெற்றிருக்கும். பாதுகாப்பு, வங்கித்துறை, நாணயம், வெளியுறவுத் துறை உள்ளிட்ட நூறு அதிகாரங்கள் இப்பட்டியலில் உள்ளன.

II பட்டியல் (மாநிலப் பட்டியல்)

இப்பட்டியலில் உள்ள துறைகளில் மாநில அரசாங்கங்கள் முழு அதிகாரத்தை பெற்றிருக்கும். இங்கு 59 அதிகாரங்கள் உள்ளன. சட்டம், ஒழுங்கு, பொது சுகாதாரம், சுயாட்சி அமைப்புகள், விவசாயம், வனங்கள் போன்றவைகள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

III பட்டியல் (பொதுப் பட்டியல்)

இப்பட்டியலில் 52 அதிகாரங்கள் உள்ளன. கல்வி, திருமணம், குடிமைச் சட்டம் போன்றவைகள் இங்கு இடம்பெற்றுள்ளன. மத்திய மாநில அரசாங்கங்கள் இரண்டுமே இப்பட்டியலில் அதிகாரம் செலுத்துவதால் இப்பட்டியலுக்கு பொதுப் பட்டியல் என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில் உள்ள அதிகாரத்தில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே முரண்பாடுகள் ஏற்பட்டால் மத்திய அரசாங்கத்தின் சட்டமே செல்லுபடியாகும்.

இம்மூன்று பட்டியல்கள் தவிர இதர அதிகாரங்கள் என்ற வகையும் உள்ளது. இம்மூன்று பட்டியல்களில் இடம்பெற்ற அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் ஆளுமையின் கீழ் வருகின்றன. மேற்கண்ட அதிகாரப்பகிர்வை வழங்குவதில் நமது அரசமைப்பு இந்திய அரசாங்கச் சட்டம் 1935-யை பின்பற்றுகின்றது.

விதிவிலக்குகள்

மேற்கண்ட அதிகாரப் பகிர்வு பொதுவாக இந்தியாவில் பின்பற்றப்படும். ஆனால் சில சிறப்பு சமயங்களில் மேற்கண்ட அதிகாரப் பகிர்வு நிறுத்தி வைக்கப்படும். இச்சமயங்களில் மாநில அரசாங்கங்களின் அதிகாரங்கள் நீக்கப்பட்டு மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் அதிகரிக்கப்படும்.

அ) தேசிய அவசர காலம்

குடியரசுத்தலைவர் தேசிய அவசரகால சட்டத்தை பிறப்பித்தால் நாடாளுமன்றம் மாநில அதிகாரங்கள் மீது சட்டம் இயற்றும்

12th_Political Science_Tamil_Unit_5.indd 118 04-06-2019 11:50:40

அதிகாரத்தைப் பெறும். போர், அந்திய ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி போன்ற காரணங்கள் அடிப்படையில் குடியரசுத்தலைவர் தேசிய அவசர சட்டத்தை பிரகடனம் செய்வார். நாட்டிற்கு எதிரான சவால்களை சமாளிப்பதற்கு நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மாநில பட்டியலிலும் செலுத்தப்படும்.

ஆ) மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தம்

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள் தங்களின் நன்மை கருதி ஒரு குறிப்பிட்ட அதிகாரத்தில் மத்திய அரசு தங்களுக்கான பொதுச் சட்டத்தை நிறைவேற்றி தருக என கோரினால் நாடாளுமன்றம் அச்சட்டத்தை நிறைவேற்றித் தரும்.

இ) சர்வதேச ஒப்பந்தம்

சர்வதேச ஒப்பந்தங்களை அமல் படுத்துவதற்காக நாடாளுமன்றம் மாநில பட்டியலில் உள்ள அதிகாரத்தில் சட்டங்களை இயற்றலாம்.

ஈ) உறுப்பு 356 அவசர காலம்

அரசமைப்பின் 356 உறுப்பின்படி அவசர காலத்தை ஒரு மாநிலத்தில் பிறப்பித்தால் குடியரசுத்தலைவர் அந்த மாநிலத்திற்கான சட்டங்களை நாடாளுமன்றம் இயற்றலாம் என அதிகாரம் வழங்குவார்.

5.2.2 ஆட்சித்துறை அதிகாரப் பகிர்வு

நமது அரசமைப்பு மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே நிர்வாக அதிகாரங்களை பகர்கின்றது. ஏற்கனவே விவரிக்கப்பட்ட சட்டமன்ற அதிகாரப்பகிர்வை பிரதிபலிக்கும் வகையில் ஆட்சித்துறை அதிகார பகிர்வு அமைந்துள்ளது. மத்திய அரசாங்கம் முதலாவது பட்டியலிலுள்ள விஷயங்கள் மீது ஆட்சித்துறை அதிகாரத்தை பெற்றிருக்கின்றது.

இரண்டாவது பட்டியலில் உள்ள விஷயங்கள் மீது மாநில அரசாங்கங்கள் அதிகாரத்தை பெற்றுள்ளன. தேசம் முழுவதும் மத்திய அரசாங்கம் ஆட்சித்துறை அதிகாரம் பெற்றிருக்கின்றது. மாநில அரசாங்கங்கள் அந்தந்த மாநிலங்களில் அதிகாரத்தை பெற்றிருக்கின்றன.

மூன்றாவது பட்டியலான பொதுப் பட்டியலில், ஆட்சித்துறை அதிகார பகிர்வு சற்றே வித்தியாசமாக உள்ளது. பொதுவாக பொதுப் பட்டியலில் விஷயங்களில் நிர்வாக அதிகாரத்தை மாநிலங்கள் பெற்றிருக்கும். ஆனால் தேவைப்பட்டால் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு கட்டளைகளைப் பிறப்பிக்கும். மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கம் வழங்கும் கட்டளைகளை கண்டிப்பாக இங்கு நிறைவேற்ற வேண்டும்.

நமது கூட்டாச்சி முறையில் மத்திய, மாநில அரசாங்கங்கள் இடையே பணி ஒப்படைப்பு முறை காணப்படுகின்றது. மத்திய அரசாங்கம் மாநில ஆளுநரின் இசைவுடன் தனது நிர்வாகப் பணிகளை நிறைவேற்றுமாறு மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம். மாநில அரசாங்கம் குடியரசுத்தலைவரின் ஆதரவுடன் தனது நிர்வாகப் பணிகளை மத்திய அரசிடம் ஒப்படைக்கலாம். மத்திய அரசு மாநில ஆளுநரின் இசைவு இல்லாமல், நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் தனது நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றுமாறு மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம்.

5.2.3 நிதி அதிகாரப் பகிர்வு

கூட்டாட்சி முறையின் வெற்றிக்கு நிதி அதிகார பகிர்வு மிகவும் முக்கியமானதாகும். இந்திய அரசமைப்பு மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே நிதி அதிகாரப் பகிர்வை விரிவாக வழங்குகின்றது. இப்பகிர்வானது இந்திய அரசாங்கச் சட்டம் 1935-யை பெரிய அளவில் பிரதிபலிக்கின்றது. இரண்டு வகையான வருமானங்கள் நிதிப் பகிர்வில் காணப்படுகின்றன.

அ) வரி வருமானப் பகிர்வு

ஆ) இதர வருமானப் பகிர்வு

12th_Political Science_Tamil_Unit_5.indd 119 04-06-2019 11:50:40

அ) வரி வருமானப் பகிர்வு


மத்திய மாநில நிதி பகிர்வில் வரி வருமான பகிர்வு ஐந்து வகைகளில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. சுங்கவரி போன்றவைகள் முற்றிலும் மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன
2. விற்பனை வரி போன்ற வரிகள் முற்றிலும் மாநில அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.
3. சில வரிகளை மத்திய அரசாங்கம் விதிக்கின்றது. மாநில அரசாங்கங்கள் அவ்வரிகளை வசூலித்து பயன்படுத்திக்கொள்கின்றன. முத்திரை வரி, மதுவினால் தயாரிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் மீதானக் கலால் வரி போன்றவற்றை எடுத்துக்காட்டுகளாக நாம் கூறலாம்
4. சில வரிகளை மத்திய அரசாங்கம் விதித்து வசூலிக்கிறது. ஆனால் அந்த வருமானம் மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக செய்தித்தாள்களில் வரும் விளம்பரங்கள் மீதான வரி.
5. சில வரிகள் மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக விவசாய வருமானம் தவிர்த்த பிற வருமானங்கள் மீதான வரி.

ஆ) இதர வருமானப் பகிர்வு

வரி தவிர இதர வருமான வழிகள் மத்திய மாநில அரசாங்கங்களுக்கு அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ளன. மத்திய அரசாங்கம் தனக்கான வணிக மற்றும் தொழில் நிறுவனங்களை நடத்தி வருமானத்தை ஈட்டலாம். எடுத்துக்காட்டாக தொழில் நிதி நிறுவனம், ரயில்வே துறை, ஒளிபரப்பு, அஞ்சல் துறை போன்றவற்றை நாம் கூறலாம்.

மாநில அரசாங்கங்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வணிக, தொழில் நிறுவனங்கள் மூலமாக வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம். மின்சாரம், நீர்ப்பாசனம், வனங்கள், தரைவழி போக்குவரத்து போன்ற துறைகளில் மாநில அரசாங்கங்கள் வருமானத்தை ஈட்டலாம்.



நிதிக் குழு

ஒவ்வொரு ஐந்தாண்டிற்கும் குடியரசுத்தலைவர் ஒரு நிதிக் குழுவை அமைப்பார். அரசமைப்பின் 280-வது உறுப்பு குழுவின் அமைப்பை விவரிக்கின்றது. நிதிக் குழு ஒரு தலைவரையும் நான்கு

12th_Political Science_Tamil_Unit_5.indd 120 04-06-2019 11:50:40

உறுப்பினர்களையும் பெற்றிருக்கும். நிதிக் குழுவின் தலைவர் பொது நடவடிக்கைகளில் (விவரங்கள்) அனுபவம் பெற்றவராக இருப்பார். நிதிக் குழுவின் மூன்று உறுப்பினர்கள் நிதி நிர்வாகம், பொருளாதாரம், பொதுக் கணக்குகள் மற்றும் அரசு நிதி துறை ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றிருப்பார்கள். நிதிக் குழுவின் நான்காவது உறுப்பினர் உயர் நீதிமன்ற நீதிபதியாக தகுதிப் பெற்றவர்.


நிதிக் குழு அரசிற்கு பரிந்துரைகளை கீழ்க்கண்டவாறு வழங்கும்.

1. வருமானத்தை மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்தல்.
2. உதவி மானியம் வழங்கப்படும் வழிமுறைகள்.
3. பஞ்சாயத்து அமைப்புகளின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்தும் நோக்குடன் இந்தியாவின் தொகுப்பு நிதி அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்.
4. நகராட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்தும் நோக்குடன் இந்தியாவின் தொகுப்பு நிதி அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்.
5. குடியரசுத்தலைவரால் நிதி சம்பந்தப்பட்ட விஷயத்தில் கோரப்படும் பரிந்துரைகள்.

இதுவரை 14 நிதிக் குழுக்கள் இந்தியாவில் குடியரசுத்தலைவரால் அமைக்கப்பட்டுள்ளன.

5.3 கூட்டுறவுக் கூட்டாட்சி

அமெரிக்காவின் புகழ்பெற்ற அரசமைப்பு நிபுணரான கிரான்வில் ஆஸ்டின் இந்திய கூட்டாட்சியை கூட்டுறவுக் கூட்டாட்சி என வர்ணித்தார். மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்கும் நோக்கத்தில் இந்திய கூட்டாட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா போன்ற கூட்டாட்சி நாடுகளில் கூட்டுறவு கொள்கை அமல்படுத்தப்படுகிறது. அரையளவு கூட்டாட்சி கொள்கை கொண்ட நமது அரசமைப்பில் மாநிலங்கள் மத்திய அரசிற்கு ஒத்துழைப்பை நல்க வேண்டும். குடியரசுத்தலைவர் பெற்றிருக்கும் அவசர கால அதிகாரங்களும் அரசமைப்பின் சில பகுதிகளும் மாநில அரசாங்கங்கள் மத்திய அரசுடன் கூட்டுறவு உணர்வுடன் செயல்பட வைக்கின்றன.



இந்திய அரசியலில் பல்வேறு பகுதிகள் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் கூட்டுறவுக் கூட்டாட்சியின் விழுதுகளாக உள்ளன. அவைகளை மூன்று வகைகளாக வகைப்படுத்தலாம்.

அ) அரசமைப்பு நிறுவனங்கள்

ஆ) சட்ட அமைப்புகள்

இ) அரசமைப்புகள்

அ) அரசமைப்பு பகுதிகள்

அரசமைப்பே பல்வேறு அமைப்புகளை உருவாக்கி கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை ஆதரிக்கின்றது.

1. மாநிலங்களுக்கிடையேயான குழு

அரசமைப்பில் 263 உறுப்பு குடியரசுத்தலைவர் பொது நலனுக்காக மாநிலங்களுக்கிடையேயான குழுவை உருவாக்கலாம் என்று கூறுகின்றது.

மூன்று பணிகளை இக்குழு பெற்றிக்கின்றது.

- மாநிலங்களுக்கிடையேயான சிக்கல்களை ஆராய்ந்து ஆலோசனை வழங்குவது.
- மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையிலான பொதுவான விஷயங்களை விவாதிப்பது.

12th_Political Science_Tamil_Unit_5.indd 121 04-06-2019 11:50:40

❖ ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு பரிந்துரைகளை வழங்குதல்.

மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு பல குழுக்கள் இதுவரை உருவாக்கப்பட்டுள்ளன. மத்திய சுகாதாரக் குழு, போக்குவரத்து வளர்ச்சி மன்றம், தல சுயாட்சி மத்தியக் குழு போன்றவைகள் எடுத்துக்காட்டுகளாகும்.

சர்க்காரியா குழுவின் பரிந்துரைப்படி 1990-களில் கூட்டாட்சி முறையில் உள்ள அரசாங்கங்கள் இடையே எல்லா துறைகளிலும் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பதற்காக மாநிலங்களுக்கிடையேயான குழு தோற்றுவிக்கப்பட்டது. பிரதமர் இக்குழுவின் தலைவராக இருக்கின்றார். எல்லா மாநிலங்களின் முதல்வர்களும், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் முதல்வர்களும், ஆறு ஒன்றிய அமைச்சரவை குழுக்களும், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் நிர்வாகத் தலைவர்களும், குடியரசுத்தலைவர் ஆட்சியில் இருக்கும் மாநிலங்களின் ஆளுநர்களும் இக்குழுவில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். மாநிலங்கள் இடையில் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிக்க மத்திய உள்துறை அமைச்சர் தலைமையில் ஒரு நிலைக் குழுவும் உருவாக்கப்பட்டது. இக்குழுவில் மத்திய உள்துறை அமைச்சர் தவிர ஐந்து மத்திய அமைச்சர்கள் குழு, ஒன்பது மாநில முதல்வர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

ஆ) சட்ட அமைப்புகள்

நாடாளுமன்றத்தின் சட்டங்களால் உருவாக்கப்பட்ட பல அமைப்புகளும் கூட்டுறவுக் கூட்டாட்சியை வலுப்படுத்துகின்றன.

1. மண்டலக் குழுக்கள்

மண்டலக் குழுக்கள் மாநிலங்கள் மறுசீரமைப்புக் குழு 1956 சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டன. மொழிவாரியான மாநிலங்கள் உருவானபோது மண்டலக் குழுக்களும் உருவாயின. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு மண்டலக் குழுக்களின் நோக்கம் கூட்டுறவுக் கூட்டாட்சி வழக்கத்தை வளர்ப்பது என்றார்.

ஆரம்பத்தில் ஐந்து மண்டலக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. 1971 ஆம் ஆண்டு வட கிழக்கு மாநிலங்களுக்காக சிறப்பு மண்டலக் குழு உருவாக்கப்பட்டது. தற்பொழுது ஆறு மண்டலக் குழுக்கள் இயங்குகின்றன.

1. வடக்கு மண்டலக் குழு
2. தெற்கு மண்டலக் குழு
3. கிழக்கு மண்டலக் குழு
4. மேற்கு மண்டலக் குழு
5. மத்திய மண்டலக் குழு
6. வட கிழக்கு மண்டலக் குழு

மத்திய உள்துறை அமைச்சர் எல்லா மண்டலக் குழுக்களின் பொதுத் தலைவராக உள்ளார். மேலும் ஒவ்வொரு மண்டலக் குழுவிலும் ஒவ்வொரு மாநிலத்தின் முதல்வர் மற்றும் இரண்டு அமைச்சர்களும் ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதியில் நிர்வாகத் தலைவரும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

மண்டலங்களில் உள்ள மாநிலங்களுக்கிடையேயான எவ்வாறு ஒத்துழைப்பையும் முன்னேற்றத்தையும் உருவாக்கி வளர்ப்பது என்று மண்டலக் குழுக்கள் பரிந்துரை வழங்கும். பொருளாதார, சமூகத் திட்டமிடல், எல்லை பிரச்சனைகள், போக்குவரத்து போன்ற துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வழங்க மண்டலக் குழுக்கள் செயல்படும்.

2. நதி ஆணையம்

நதி ஆணையங்கள் சட்டம் 1956 மாநிலங்களுக்கிடையேயான நதிகளை மேலாண்மை செய்வதற்கு மாநிலங்களுக்கு பரிந்துரைகள் வழங்குவதற்கு நதி ஆணையத்தை உருவாக்கியது.

12th_Political Science_Tamil_Unit_5.indd 122 04-06-2019 11:50:40

3. நதிநீர் தீர்ப்பாயம்

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல் சட்டம் 1956 அரசமைப்பின் உறுப்பு 262 இன் படி உருவாக்கப்பட்டது. சமவெளி மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் குறைகளை ஒழுங்குபடுத்துவது இச்சட்டத்தின் நோக்கமாகும். இவ்வகையான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு தீர்பாயங்களை இச்சட்டம் உருவாக்குகின்றது.

இ) அரசமைப்புகள்

நிதி ஆயோக் (NITI AAYOG)

மத்திய அரசாங்கம் 2015-ம் ஆண்டு நிதி ஆயோக் என்ற அமைப்பை தோற்றுவித்தது. இந்தியாவின் மாற்றத்திற்கான தேசிய குழு என்பது இதன் பொருள் ஆகும். திட்டக் குழு நீக்கப்பட்டப் பிறகு இப்புதியக் குழு தோற்றுவிக்கப்பட்டது. பிரதமர் இக்குழுவின் தலைவராக இருப்பார். மாநிலங்களின் முதல்வர்கள், ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளின் முதல்வர்கள் (புதுச்சேரி, புதுதில்லி), அந்தமான் நிக்கோபர் தீவுகளின் துணை ஆளுநர் ஆகியோர் இக்குழுவின் நிரந்தர உறுப்பினர்களாக செயல்படுவார்கள். மாநிலங்களுக்கிடையேயான அமைப்பு ரீதியாக தொடர்ச்சியாக கூட்டுறவுக் கூட்டாட்சியை வளர்ப்பது இக்குழுவின் நோக்கமாகும். உறுதியான மாநிலங்கள் உறுதியான தேசத்தை உருவாக்கும் என்பது இக்குழுவின் எண்ணமாகும். வருமான ஆதாரங்கள் இல்லாததாலும் அரசமைப்பு சக்தி இல்லாததாலும் மாநிலங்கள் மத்திய அரசை சார்ந்து இயங்குகின்றன. இயற்கை பேரழிவுகளை சமாளிப்பதற்கு கூட மத்திய அரசை சார்ந்து இருக்கின்றன. இந்நிலையை மாற்ற வேண்டும் என்பது நிதி ஆயோக்கின் நோக்கமாகும்.

5.4 மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சனை

இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி முறையை மாநிலங்களுக்கிடையிலான நதிநீர் சிக்கல்கள் பெரிய அளவில் பாதிக்கின்றன. பல்வேறு நதிநீர் சிக்கல்கள் நமது நாட்டில் காணப்படுகின்றன. தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகியவை காவிரி பிரச்சனையில் சம்பந்தப்பட்டுள்ளன. ஆண்டாண்டு காலமாக நதிநீர் பிரச்சனையில் ஒடிசா, ஆந்திரப் பிரதேசம் சம்பந்தப்பட்டுள்ளன. சட்லெஜ் ஆறு பிரச்சனையில் பஞ்சாப், அரியானா சம்பந்தப்பட்டுள்ளன. கோவா, மஹாராஷ்டிரா, கர்நாடகம் ஆகியவை மகாதயி ஆற்றுப் பிரச்சனையில் சம்பந்தப்பட்டுள்ளன.

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு இந்திய அரசியலில் கீழ்கண்ட அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.

1. அரசமைப்பும் மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல்களும்

அரசமைப்பின் 262 இன் உறுப்பு மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப் பிரச்சனைகள் தீர்ப்பதற்கு வழிமுறையை வழங்குகின்றது. இவ்வகையான பிரச்சனைகள் உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பில் இருந்து நாடாளுமன்றம் விலக்கி வைக்கலாம். நாடாளுமன்றம் நதி நீர்ப் பிரச்சனைகள் சம்பந்தமாக ஒரு சட்டத்தை இயற்றலாம். நதி நீர் பிரச்சனை பல இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்றது. நீதிமன்றங்கள் தீர்ப்பை வழங்கினால் மக்களிடையே கசப்புணர்வும் பிளவும் அதிகரிக்கலாம். ஆகவே சுமூகமான பேச்சு வார்த்தை மூலமாக நதிநீர்ப் பிரச்சனைகளை நாம் தீர்க்க வேண்டும் என்பது அரசமைப்பின் உறுப்பு 262 இன் நோக்கமாகும்.

2. மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல்கள் சட்டம் 1956

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல்கள் சட்டம் 1956 நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது. நதி நீர்ப் பிரச்சனையை தீர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் தீர்ப்பாயங்களை அமைக்கலாம் என்று இச்சட்டம் வழிவகுக்கின்றது. நதி நீர்ப் பிரச்சனைகள் பேச்சு வார்த்தைகள் மூலமாக


12th_Political Science_Tamil_Unit_5.indd 123 04-06-2019 11:50:40

தீர்க்கப்பட வேண்டும். பேச்சு வார்த்தை முயற்சிகள் தோல்வி அடைந்தால் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மத்திய அரசாங்கத்தை நாடலாம். மத்திய அரசாங்கம் குறிப்பிட்ட நதிநீர்ப் பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு தீர்ப்பாயத்தை அமைக்கும்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அந்த தீர்ப்பாயத்திற்கான தலைவரை நியமிப்பார். ஆரம்பத்தில் தீர்ப்பாயம் அல்லது நடுவர் மன்றம் ஒரே ஒரு உறுப்பினரைத் தான் கொண்டிருந்தன. பின்னர் நடுவர் மன்றங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை பெறுவதற்கு சட்டம் மாற்றப்பட்டது. நடுவர் மன்றத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்ற அல்லது உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமிப்பார். நடுவர் மன்றத்தின் தீர்ப்பு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு சமமானதாகும். நடுவர் மன்றம் விசாரிக்கும் நதிநீர் பிரச்சனையில் வேறு எந்த நீதிமன்றமும் தலையிட முடியாது. மேலும் நதிநீர் ஆணையம் சட்டம் 1956 இன் கீழ் வரும் நதிகளில் மீது நடுவர் நீதிமன்றங்களை அமைக்க முடியாது.

சுருக்கமாக கூறவேண்டுமென்றால் நமது நாட்டில் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் சிக்கல்கள் அணுகுமுறையில் இரண்டு தன்மைகள் காணப்படுகின்றன. பேச்சுவார்த்தைகள் மூலமாக இப்பிரச்சனைகளை தீர்க்க வேண்டும். பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் நடுவர் நீதிமன்றம் அமைத்து தீர்வைக் காண வேண்டும்.

செயல்பாடு: காவிரி நதி நீர் உரையாடல்





மாணவர்: ஐயா, காவிரி நதி நீர்ப் பிரச்சனையை விவரிக்க முடியுமா?

ஆசிரியர்: காவிரி நதி நீர் சிக்கல் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆளுகைக்குட்பட்ட பகுதி ஆகிய நான்கு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சனையாகும்.

மாணவர்: இப்பிரச்சனையின் வரலாற்றுப் பின்னணி என்ன?

ஆசிரியர்: இப்பிரச்சனை நீண்ட வரலாற்றுப் பின்னணி உடையதாகும். மெட்ராஸ் மாகாணமும், மைசூர் அரசும் 1924 ஆம் ஆண்டு காவிரி நதி நீரை பயன்படுத்த ஒரு ஒப்பந்தம் கையெழுத்திட்டன. ஐம்பது ஆண்டுகள் கழித்து 1974 ஆம் ஆண்டு இவ்வொப்பந்தம் காலாவதியானது.

மாணவர்: ஐயா, சம்பந்தப்பட்ட மாநிலங்கள் 1974 ஆம் ஆண்டிற்குப் பின் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனவா?

ஆசிரியர்: ஆம், சம்பந்தப்பட்ட மாநிலங்கள் பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்தின. ஆனால், எந்த ஒரு தீர்வும் எட்டப்படவில்லை. நாம் ஏற்கனவே படித்தது போல நதி நீர் சிக்கல்கள் சட்டம் 1956 இன் படி காவிரி நதி நீர் நடுவர் மன்றம் 1991 ஆம் ஆண்டு மத்திய அரசால் அமைக்கப்பட்டது.

மாணவர்: நடுவர் மன்றம் தீர்ப்பை வழங்கிவிட்டதா? தீர்ப்பின் முக்கிய தன்மைகள் என்ன?

12th_Political Science_Tamil_Unit_5.indd 124 04-06-2019 11:50:41

ஆசிரியர்: நடுவர் மன்றம் தீர்ப்பை 2007–ஆம் ஆண்டு வழங்கிவிட்டது. மாதந்தோறும் கர்நாடகம் பிலிகுண்டுலு என்ற எல்லை பகுதியில் தமிழ்நாட்டிற்கு குறிப்பிட்ட அளவு நீரை வழங்க வேண்டும். காவிரி நதியில் இருந்து சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு தண்ணீரை குறிப்பிட்ட அளவில் நடுவர் மன்றம் பங்கீடு செய்தது. மழை இல்லா வருடங்களில், துன்பக் காலங்களில் எவ்வாறு நீர் பங்கீடு இருக்க வேண்டும் என்பதையும் நடுவர் மன்றம் தனது தீர்ப்பில் விவரித்துள்ளது.

மாணவர்: காவிரி மேலாண்மை வாரியம் என்றால் என்ன?

ஆசிரியர்: காவிரி நடுவர் மன்றம் தனது தீர்ப்பை அமல்படுத்துவதற்கு காவிரி மேலாண்மை வாரியத்தை உருவாக்க வேண்டும் என்று கூறியது.


மாணவர்: காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டுள்ளதா?

ஆசிரியர்: பல ஆண்டுகள் வழக்கு நடந்த பிறகு உச்ச நீதிமன்றம் தனது இறுதி தீர்ப்பை வெளியிட்டுள்ளது. காவிரி மேலாண்மை ஆணையமும் காவிரி நீர் ஒழுங்குபடுத்தும் குழுவும் உருவாக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் படி தமிழ்நாடு 177.25 டி.எம்.சி தண்ணீரை கர்நாடகத்திடமிருந்து எல்லைப் பகுதியில் பெறும். மொத்த காவிரி நீரில் தமிழ்நாடு 404.25 டி.எம்.சி, கர்நாடகம் 284.25 டி.எம்.சி, கேரளா 30 டி.எம்.சி, புதுச்சேரி 7 டி.எம்.சி என்று உச்ச நீதிமன்றம் நீர்ப் பங்கீடு செய்துள்ளது.

5.5 இந்தியக் கூட்டாட்சியில் பிரச்சனைகளும் தேவைகளும்

கூட்டாட்சி முறையில் காணப்படும் பல்வேறு சிக்கல்கள் மத்திய–மாநில உறவுகளை பாதிக்கின்றன.

ஆளுநரின் நியமனம் மற்றும் பணி



அறிஞர் அண்ணா, மாநில உரிமைகளின் பாதுகாலர்

மத்திய அரசாங்கத்தின் முகவராக ஆளுநர் மாநிலத்தில் செயல்படுவதை மாநில அரசாங்கங்கள் எதிர்க்கின்றன. ராஜமன்னார் குழு மாநில ஆளுநர்கள் கூட்டாட்சி முறைக்கு எதிராக இருப்பதாக விமர்சித்தது. தமிழகத்தின் முன்னாள் முதல்வர் அண்ணாதுரை அவர்கள் காலத்தில் இருந்து ஆளுநர்களின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வந்தது.

மாநில கட்சிகள் அரசியலில் தீவிரமாக இயங்கும் தலைவர்களை மாநில ஆளுநராக நியமிக்க கூடாது என கூறுகின்றன. ஆளுநர்களின் நியமனத்தில் மாநில அரசாங்கங்களையும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்று மாநில கட்சிகள் வலியுறுத்துகின்றன. இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பாடுபட்ட, மிகச்சிறந்த அறிஞர்களை, சேவையாளர்களை, ஆளுநர்களாக நியமிக்க வேண்டுமென கோரப்படுகிறது.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் செயல்பாடுகள் அதிருப்தியை உருவாக்கியுள்ளன. மாநிலங்களில் ஆளும் கட்சி உடைந்து போனாலோ, அல்லது தொங்கு சட்டமன்றம் உருவானாலோ ஆளுநர்களின் முடிவுகள் சர்ச்சைகளை உருவாக்குகின்றன.

செயல்பாடு

மாநில அரசியலில் ஆளுநர்களின் பங்கை பற்றி ஒரு திட்ட அறிக்கைத் தயார் செய்யவும்.

12th_Political Science_Tamil_Unit_5.indd 125 04-06-2019 11:50:41

கல்வி

ஆரம்ப காலத்தில் கல்வி இரண்டாவது பட்டியலான மாநிலப் பட்டியலில் தான் இடம்பெற்றிருந்தது. 1976ஆம் ஆண்டு நாடாளுமன்றம் 42 வது அரசியல் சாசன திருத்தச்சட்டத்தின் மூலம் கல்வியை மூன்றாவது பட்டியலான பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. மாநில அரசுகளின் தனிப்பட்ட அதிகாரம் மத்திய மாநில அரசாங்கங்களுக்கு பொதுவானதாக மாற்றப்பட்டது. பொதுப் பட்டியலில் தற்போது கல்வி இருப்பதால் மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே முரண்பாடுகள் தோன்றினால் மத்திய அரசின் அதிகாரமே செல்லுபடி ஆகும். ஆகவே தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என கூறுகின்றன.

மாநில சுயாட்சி பிரச்சனைகள்

- கல்வி இடமாற்றம்
- ஆளுநர் நியமனம்
- உறுப்பு 356
- சட்ட முன்வரைவுகள் தேக்கிவைப்பு
- அனைத்து இந்தியப் பணிகள்

மாநில சட்ட முன்வரைவுகளை குடியரசுத்தலைவரின் கவனத்திற்கு தேக்கி வைத்தல்.

மாநிலங்கள் நிறைவேற்றும் சட்ட முன்வரைவுகளை ஆளுநர்கள் குடியரசுத்தலைவரின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம். மாநிலத்தின் நிதி சட்ட முன்வரைவுகளை ஆளுநர்கள் தேக்கி வைத்தால் குடியரசுத்தலைவர் அவைகளை நிராகரிக்கலாம் அல்லது அவைகளுக்கு தனது இசைவைத் தெரிவித்தது அவைகளை சட்டமாக்கலாம். மாநிலத்தின் சாதாரண சட்ட முன்வரைவுகள் ஆளுநர்களால் தேக்கி வைக்கப்பட்டால் குடியரசுத்தலைவர் அந்த முன்வரைவுகளை திரும்பவும் விவாதிக்குமாறு மாநில சட்டமன்றத்திற்கே அனுப்பி வைக்கலாம்.

மறுபரிசீலனை செய்து மீண்டும் அந்த முன்வரைவுகளை மாநில சட்டமன்றம் அனுப்பினாலும் குடியரசுத்தலைவர் முன்வரைவை நிராகரிக்கலாம். நமது நாட்டின் ஒற்றுமையை காப்பதற்காக அரசமைப்பு இவ் வழிமுறைகளை உருவாக்கியுள்ளது.

ஆனால் பல மாநில அரசாங்கங்கள் இவ்வழிமுறை மீது அதிருப்தி தெரிவித்துள்ளன. அரசியல் காரணத்திற்காக ஆளுநர்கள் இப்பிரிவை தவறாக பயன்படுத்துவதாக குற்றம் சுமத்துகின்றன. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசாங்கங்களுக்கு எதிராக ஆளுநர்கள் இவ்விவகாரத்தை பயன்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

செயல்பாடு

மாநில உரிமை கோரிக்கைகள் பற்றி வகுப்பில் விவாதம் நடத்தவும்.

உறுப்பு 356 தவறாக பயன்படுத்தப் பட்டால்

அரசமைப்பின் 18-வது பகுதியில் 356 உறுப்பு ஒரு மாநிலத்தில் அரசமைப்பு ஆட்சி முறை சீர்குலைந்து விட்டால் குடியரசுத்தலைவர் அவசர காலத்தை அமல் படுத்தலாம் என்று கூறுகின்றது. ஆளுநரின் அறிக்கையின் அடிப்படையிலோ அல்லது ஆளுநரின் அறிக்கை இல்லாமலோ குடியரசுத்தலைவர் உறுப்பு 356-ஐ அமல்படுத்தலாம். நமது நாட்டின் ஒற்றுமையை பாதுகாப்பதற்காக இப்பிரிவை அரசமைப்பு உருவாக்கியுள்ளது.

எதிர்க்கட்சிகள் ஆளும் பல்வேறு மாநிலங்கள் உறுப்பு 356 மத்திய அரசாங்கத்தினால் தவறாக பயன்படுத்தப்படுகிறது என்று விமர்சித்துள்ளனர்.

மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு எதிராக இவ்வுறுப்பை தவறாக பயன்படுத்தியுள்ளதாக பல

12th_Political Science_Tamil_Unit_5.indd 126 04-06-2019 11:50:41

மாநிலங்கள் தெரிவித்துள்ளன. கட்சி அரசியல் காரணங்களுக்காக இவ்வுறுப்பு தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே பல மாநில கட்சிகள் அரசமைப்பின் உறுப்பு 356-ஐ அகற்ற வேண்டும் என கோருகின்றன.

அனைத்து இந்தியப் பணிகள்

அரசமைப்பின் உறுப்பு 312 வழியாக அனைத்து இந்தியப் பணிகள் உருவாக்கப்படுகின்றன. இப்பணிகளின் அதிகாரிகள் மத்திய அரசாங்கத்தினால் தேர்வு செய்யப்படுகின்றனர். மாநிலங்களுக்கு மத்திய அரசினால் இவ்வதிகாரிகள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். மாநில அரசாங்கங்கள் அனைத்து இந்தியப் பணி அதிகாரிகளை இடமாற்றம் செய்யலாம். ஆனால் மத்திய அரசாங்கம் மட்டுமே அனைத்து இந்தியப் பணி அதிகாரிகளை பதவியில் இருந்து நீக்க முடியும். ஆகவே இவ்வதிகாரிகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மாநில அரசாங்கங்களின் மீது மத்திய அரசு இவ்வதிகாரிகள் மூலம் ஆதிக்கம் செலுத்துவதாக குற்றம் சாட்டப்படுகிறது. தமிழ்நாடு அரசாங்கம் அமைத்த இராஜமன்னார் குழு அனைத்து இந்தியப் பணிகளை அகற்ற வேண்டும் என பரிந்துரைத்தது.

மத்திய மாநில உறவுகளை பற்றி இது வரையில் பல்வேறு குழுக்கள் பரிந்துரைகளை வழங்கியுள்ளன.

5.5.1 நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழு

நமது நாட்டின் நிர்வாகச் சீர்திருத்தங்களுக்காக இதுவரையில் இரண்டு நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதல் நிர்வாகச் சீர்திருத்தக் குழு 1966-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மொரார்ஜி தேசாய் தலைமையிலும் பின்னர் கே.அனுமந்தையா தலைமையிலும் உருவாக்கப்பட்டது. இக்குழு 20 அறிக்கைகளை வழங்கியது. அவைகளில் ஒரு அறிக்கை மத்திய மாநில உறவுகளை பற்றி பரிந்துரைகளை வழங்கியது.

இரண்டாவது நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழு 2005ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் வீரப்ப மொலியும் பின்னர் வி. இராமச்சந்திரனும் தலைவர்களாக இருந்தனர்.

மத்திய மாநில உறவுகள் குழுக்கள்

1. நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழு
2. இராஜாமன்னார் குழு
3. சர்க்காரிய குழு
4. புன்ச்சி குழு
5. வெங்கட செல்லையா குழு

5.5.2 இராஜமன்னார் குழு



இராஜமன்னார்

தமிழ்நாடு அரசாங்கம் நமது அரசமைப்பின் மத்திய மாநில உறவுகளை ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்குவதற்கு இராஜமன்னார் குழுவை அமைத்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி பி.வி இராஜமன்னார், சென்னை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஏ. இலட்சுமண சுவாமி, ஆந்திர உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி முனைவர் பி சந்திர ரெட்டி ஆகியோர் இக்குழுவில் இருந்தனர். தங்களது பரிந்துரைகளை இக்குழு அரசாங்கத்திற்கு 1971 ஆம் ஆண்டு வழங்கியது. மாநில சுயாட்சி வரலாற்றில் மிகவும் முக்கிய மைல்கல்லாக இக்குழுவின் அறிக்கை உள்ளது.

இக்குழுவின் முக்கிய பரிந்துரைகள் கீழ்க்கண்டவைகள் ஆகும்.

1. அரசமைப்பின் 263 உறுப்பு உடனடியாக அமல் படுத்தப்பட

12th_Political Science_Tamil_Unit_5.indd 127 04-06-2019 11:50:42

வேண்டும். மாநிலங்களுக்கிடையேயான குழு உருவாக்கப்பட வேண்டும். இக்குழுவின் தலைவராக பிரதமர் பணிபுரிய வேண்டும். மாநில முதல்வர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் உறுப்பினர்களாக பணியாற்ற வேண்டும். மாநிலங்களுக்கிடையேயான குழுவிடம் அதிக அதிகாரங்கள் இருக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தின் முக்கிய முடிவுகளையும், நாடாளுமன்றத்தின் சட்டங்களையும் இக்குழுவில் ஆலோசிக்க வேண்டும். தேசத்தின் பாதுகாப்பு, வெளியுறவு ஆகிய இரண்டு அதிகாரங்கள் தவிர, இதர எல்லா அதிகாரங்களையும், பயன்படுத்தும் முன் மத்திய அரசு மாநிலங்களுக்கிடையேயான குழுவை ஆலோசிக்க வேண்டும்.

2. தற்பொழுது உள்ள மத்திய மாநில உறவுகள் மத்திய அரசுக்கு சாதகமாக உள்ளது. ஆகவே அரசமைப்பின் உறுப்புகள் *256*, *257*, *339(2)* ஆகியவைகளை நீக்க வேண்டும். இந்த உறுப்புகள் மாநில உரிமைகளை பாதிப்பதால் அவைகளை நீக்கி மாநில உரிமைகளை வலுப்படுத்த வேண்டும் என இராஜமன்னார் குழு பரிந்துரைத்தது.

3. மூன்று பட்டியல்களில் இல்லாத இதர அதிகாரங்கள் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும். வரி விதிக்கும் அதிகாரமும் மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

4. அரசமைப்பின் *XVIII* பகுதியில் உள்ள உறுப்பு *356* மத்திய அரசால் கவனமாக பயன்படுத்தப்பட வேண்டும். மாநிலத்தில் அரசியல் சாசன அமைப்பு முற்றிலும் சீர்குலைந்தால் மட்டுமே, கடைசி ஆயுதமாக மத்திய அரசு இவ்வுறுப்பை பயன்படுத்த வேண்டும். சாதாரண சட்ட ஒழுங்கு பிரச்சனைகளுக்கு இவ்வுறுப்பை மாநிலங்களில் மத்திய அரசு பயன்படுத்தக்கூடாது.

5. இராஜாமன்னார் குழு அனைத்து இந்தியப் பணிகளில் பெரிய அளவில் மாற்றங்களை பரிந்துரைத்தது. நமது நாட்டில் இரண்டு வகையான பணிகள் மட்டுமே இருக்க வேண்டும். மத்தியப் பணிகள் மத்திய அரசிற்கும் மாநிலப் பணிகள் மாநில அரசிற்கும் நிர்வாகத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். இரண்டிற்கும் பொதுவான, மத்திய அரசுக்கு சாதகமான, மாநில அரசுகளுக்கு எதிரான அனைத்து இந்தியப் பணிகள் தேவையில்லை. கூட்டாட்சி முறைக்கு எதிராக இருப்பதால் இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்) உள்ளிட்ட அனைத்து இந்தியப் பணிகளை அரசமைப்பிலிருந்து நீக்குவதற்கு இராஜமன்னார் குழு பரிந்துரைத்தது.

6. நிதி ஆதாரங்களை மத்திய அரசாங்கத்திடம் இருந்து மாநில அரசாங்கத்திற்கு அதிக அளவில் மாற்றித்தரவேண்டும் என இக்குழு கூறியது. மாநிலங்களின் நிதி சக்தியை அதிகரிப்பதற்கு தொழில் நிறுவனங்கள் வரி, ஏற்றுமதி வரி, சுங்க வரி போன்றவற்றை மத்திய அரசாங்கத்திடம் இருந்து மாநிலங்களுக்கு மாற்ற வேண்டும். நிதி ஆற்றல் தான் மாநில உரிமைகளின் அச்சாணி என்று இக்குழு கருதியது. ஆகவே அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் திருத்தங்கள் பெரிய அளவில் செய்ய வேண்டும். மத்தியப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு அதிக அதிகாரங்களை மாற்ற வேண்டும். தேசிய ஒற்றுமை, வளர்ச்சி, மாநில உரிமைகள் மற்றும் அடையாளங்கள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு நிதிக் குழு ஒரு நிரந்தர, பாகுபாடு இல்லாத அமைப்பாக மாற வேண்டும் என இராஜமன்னார் குழு பரிந்துரைத்தது.

5.5.3 சர்க்காரியா குழு



மத்திய அரசாங்கம் பல கூட்டாட்சி கோரிக்கைகள் மாநிலங்களால் எழுப்பப்பட்டதால் *1983* ஆம் ஆண்டு நீதியரசர் ஆர்.எஸ். சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை

12th_Political Science_Tamil_Unit_5.indd 128 04-06-2019 11:50:42

உருவாக்கியது. இக்குழுவில் பி. சிவராமன், முனைவர் ஆர்.எஸ்.எஸ்.சென் ஆகிய நிபுணர்களும் உறுப்பினர்களாக இருந்தனர். இக்குழு 247 பரிந்துரைகளை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கையை ஐந்து வருடங்கள் கழித்து மத்திய அரசிற்கு சமர்ப்பித்தது.

1. மாநிலங்களுக்கிடையேயான குழு: மாநிலங்களுக்கிடையேயான குழு உருவாக்கப்பட வேண்டும். அரசமைப்பின் உறுப்பு 263(பி) மற்றும் (சி) பணிகளை செய்யும் அதிகாரம் இக்குழுவிடம் வழங்கப்பட வேண்டும். மாநிலங்களின் பொதுவான நலன் கருதி மாநிலங்களுக்கிடையேயான குழு பரிந்துரைகளை வழங்க வேண்டும். ஆனால் அரசமைப்பின் உறுப்பு 263 (அ)-யின் அதிகாரம் இக்குழுவிற்கு வழங்கப்படக்கூடாது. அதாவது மாநிலங்கள் இடையில் எழும் சிக்கல்களில் தலையிடும் அதிகாரம் மாநிலங்களுக்கிடையேயான குழுவிற்கு வழங்கக் கூடாது. மேலும் ஒரு நிரந்தர, சுயாட்சி பெற்ற செயலகத்தை மாநிலங்களுக்கிடையேயான குழுவிற்கு உருவாக்கித் தர வேண்டும்.

2. அரசமைப்பின் உறுப்பு 356 மிகவும் கவனமாக, மிகவும் குறைவாகவே பயன்படுத்தப்பட வேண்டும். கடைசி ஆயுதமாக இவ்வுறுப்பு பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு மாநிலத்தில் அரசமைப்பு ஆட்சி முறை முற்றிலும் சீர்குலைந்தால் மட்டுமே இவ்வுறுப்பை பயன்படுத்த வேண்டும். உறுப்பு 356 அமல்படுத்துவதற்கு முன் எல்லா மாற்று உத்திகளையும் பயன்படுத்த வேண்டும்.

3. ஆளுநர்: ஆளுநர் பதவியை ரத்து செய்ய வேண்டும். ஆளுநரை நியமிக்கும் முன் சம்பந்தப்பட்ட மாநில அரசை கலந்தாலோசிக்க வேண்டும் என்ற சில அரசியல் கட்சிகளின் கருத்துக்களை சர்க்காரியா குழு நிராகரித்தது. கூட்டாட்சி முறை நன்கு செயல்படுவதற்கு அரசியல் தலைவர்களை ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது என்று இக்குழு பரிந்துரைத்தது. இந்தியாவின் முன்னேற்றத்துக்கு பாடுபட்ட பெருமை மிக்க இந்தியக் குடிமகன்களை ஆளுநர்களாக நியமிக்க வேண்டும். வெவ்வேறு கட்சிகள் மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சியில் இருக்கும் பொழுது, மத்தியில் ஆளும் கட்சியின் தலைவர்களை மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கக்கூடாது.

4. மொழி: மும்மொழிக்கொள்கையை கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் என்று சர்க்காரிய குழு பரிந்துரைத்தது. மும்மொழிக் கொள்கை தேசிய ஒற்றுமையை வளர்க்கும் என்று இக்குழு கூறியது.

5.5.4 புன்ச்சி குழு



நீதியரசர் மதன் மோகன் புன்ச்சி

புதிய அரசாங்கம் 2007ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் முன்னால் தலைமை நீதிபதி மதன் மோகன் புன்ச்சி தலைமையில் ஒரு புதிய குழுவை அமைத்தது. இக்குழுவில் மூன்று நிபுணர்களும் ஒரு செயலரும் இருந்தார். இக்குழு 2010 ஆம் ஆண்டு தனது பரிந்துரைகளை மத்திய அரசுக்கு வழங்கியது.

மாநில ஆளுநர்கள் குறிப்பிட்ட பதவிக்காலத்திற்கு நியமிக்கப்படவேண்டும். குடியரசுத்தலைவரை பதவி நீக்கம் செய்யும் முறை போல மாநில ஆளுநர்களும் நாடாளுமன்றத்தின் பதவி நீக்க தீர்மானம் மூலம் மட்டுமே பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும். ஒரு மாநிலத்தில் கிளர்ச்சியில்

12th_Political Science_Tamil_Unit_5.indd 129 04-06-2019 11:50:42

பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அல்லது பகுதிகளில் மட்டுமே குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்தலாம். மாநிலம் முழுவதும் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதற்காக அரசமைப்பின் உறுப்புகள் 355, 356 ஆகியவற்றில் மாற்றம் செய்ய வேண்டும். மதக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாநில அரசாங்கத்தின் ஒப்புதல் பெறாமலே மத்திய அரசு தனது காவல் படைகளை அனுப்பி அமைதியை நிலைநாட்டலாம்.

செயல்பாடு

"முன்னேற்றத்திற்காக பெரிய மாநிலங்களை உடைத்து சிறிய மாநிலங்களை உருவாக்க வேண்டும்" என்ற தலைப்பில் வகுப்பில் குழு விவாதத்தை நடத்த வேண்டும்.

எஸ்.ஆர். பொம்மை வழக்கு உச்ச நீதிமன்ற தீர்ப்பு

நிகழ் ஆய்வு



சோமப்ப ராயப்ப பொம்மை (6 ஜூன் 1924 முதல் 10 அக்டோபர் 2007 வரை) கர்நாடக மாநிலத்தின் பதினோராவது முதல்வராக பணியாற்றினார். ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் 1996 முதல் 1998 வரை மனிதவள முன்னேற்ற அமைச்சராகவும் இருந்தார். எச்.டி.தேவகவுடா, ஐ.கே.குஜரால் ஆகிய இரண்டு பிரதமர்களின் அமைச்சரவையில் அவர் பணியாற்றியுள்ளார்.

எஸ் .ஆர் .பொம்மை அவர்கள் முதல்வராக இருந்த கர்நாடக அரசாங்கம் மத்திய அரசால் பதவி நீக்கம் செய்யப்பட்டது. இதனை எதிர்த்து முதல்வர் எஸ்ஆர் பொம்மை உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். உச்ச நீதிமன்றம் இவ்வழக்கில் 1994 ஆம் ஆண்டு புகழ்பெற்ற பொம்மை வழக்குத் தீர்ப்பை வழங்கியது. மத்திய மாநில உறவுகளில், மாநில உரிமைகளை காப்பதில் பொம்மை வழக்குத் தீர்ப்பு மிக முக்கிய திருப்புமுனையாக கருதப்படுகிறது.

மத்திய அரசாங்கம் தன்னிச்சையான முறையில், அரசமைப்பிற்கு எதிராக மாநில அரசாங்கங்களை பதவி நீக்கம் செய்யக்கூடாது என்பது இத்தீர்ப்பின் மையக் கருத்தாகும். அரசியலமைப்பின் 356 -வது உறுப்பை கவனத்துடன், கடைசி ஆயுதமாக மத்திய அரசாங்கம் பயன்படுத்த வேண்டும். அரசியல் சாசன ஆட்சி சீரழிந்தால் மட்டுமே இவ்வுறுப்பை மத்திய அரசு பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக சட்டப்பேரவை தேர்தலுக்கு பின் எந்த ஒரு கட்சிக்கும் கூட்டணிக்கும் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை. மத்திய அரசாங்கத்தின் கட்டளைகளை மாநில அரசாங்கம் மதிக்கவில்லை போன்ற காரணங்களுக்கு மாநில அரசாங்கத்தை மத்திய அரசு பதவி நீக்கம் செய்யலாம்.

சாதாரண காரணங்களுக்காக மத்திய அரசு 356-வது உறுப்பை பயன்படுத்தக்கூடாது. எடுத்துக்காட்டாக மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் மாநிலத்தில் ஆளும் கட்சி தோற்றுவிட்டது.

மாநிலத்தில் அரசியல் சாசன ஆட்சிமுறை சீரழிந்து விட்டது என்ற ஆளுநரின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாநிலத்தில் நிலவும் அசாதாரணமான சூழ்நிலையை ஆளுநரின் அறிக்கை தெளிவாக விவரிக்க வேண்டும். மாநிலத்தின் சட்டப்பேரவை கலைக்கப்படுவதற்கு முன் குடியரசுத்தலைவர் ஆட்சிக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒப்புதல் வழங்கப்பட்டு இருக்க வேண்டும்.

12th_Political Science_Tamil_Unit_5.indd 130 04-06-2019 11:50:43

நீதிமன்றம் உறுப்பு 356 கீழ் மாநில அரசை மத்திய அரசாங்கம் பதவி நீக்கம் செய்தது சரியா, தவறா என ஆராயும் அதிகாரத்தை பெற்று இருக்கின்றது. உறுப்பு 356 தவறாக மத்திய அரசால் பயன்படுத்தப்பட்டால் உச்ச நீதிமன்றம் நீதி சீராய்வு அதிகாரத்தை பயன்படுத்தும். பதவி நீக்கம் அரசமைப்பிற்கு எதிராக இருந்தால் உச்ச நீதிமன்றம் பதவி நீக்கப்பட்ட மாநில அரசாங்கத்தை மீண்டும் பதவியில் அமர்த்தும்.

பொம்மை வழக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகு மத்திய அரசின் தன்னிச்சையான பதவி நீக்க நடவடிக்கையில் இருந்து மாநில அரசாங்கங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

அண்ணல் அம்பேத்கர் அரசமைப்பின் உறுப்பு 356-யை (தேவையற்ற வார்த்தை) என்று வர்ணித்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களுக்கு எதிராக இவ்வுறுப்பு உள்ளதை அவர் கசப்புடன் ஏற்றுக்கொண்டார்.

5.5.5 வெங்கடசெல்லையா குழு



எம்.என். ராவ் வெங்கடசெல்லையா

பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலான தேசிய மக்களாட்சிக் கூட்டணி அரசாங்கம் 2000-ஆம் ஆண்டு நீதியரசர் நாராயணராவ் வெங்கடசெல்லையா தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இந்த அரசமைப்பு மதிப்பாய்வு தேசிய குழு (NCRWC) அரசமைப்பில் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் எனக் கூறியது.

அருஞ்சொற்பொருள்

- **கூட்டாட்சி:** அரசமைப்பு வழியாக மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே அதிகாரப் பகிர்வை வழங்கி இருக்கும் அரசியல் முறைக்கு கூட்டாட்சி என்று பெயராகும்.
- **நெகிழா அரசமைப்பு:** அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் ஏற்படுத்துவதற்கு சிறப்பு அரசியல் சாசன திருத்த முறை அல்லது அறுதிப் பெரும்பான்மை ஆதரவு முறையுள்ள அமைப்பிற்கு நெகிழா அரசமைப்பு என்பது பெயராகும். அரசமைப்பை எளிதில், சாதாரண சட்டங்கள் மூலம் மாற்ற முடியாது.
- **நெகிழும் அரசமைப்பு:** சாதாரண சட்டங்கள் மூலமாக ஒரு அரசமைப்பை திருத்த முடியும் என்றால் அதற்கு நெகிழும் அரசமைப்பு என்பது பெயராகும்.
- **அதிகாரப் பகிர்வு:** கூட்டாட்சி முறையின் முக்கியமான தன்மை அதிகாரப் பகிர்வு ஆகும். அதிகாரங்கள் மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையே அரசமைப்பின் வழியாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
- **ஒற்றைக் குடியுரிமை:** ஒரு நாட்டில் தேசியக் குடியுரிமை மட்டுமே காணப்படுதல். பொதுவாக ஒற்றையாட்சி நாடுகளில் ஒற்றைக் குடியுரிமை காணப்படும். மாநிலங்கள் குடியுரிமையை மக்களுக்கு வழங்காது.
- **ஈரவை நாடாளுமன்றம்:** இங்கு நாடாளுமன்றத்திற்கு இரண்டு அவைகள் உள்ளன. கூட்டாட்சி முறையின் தன்மை ஈரவை நாடாளுமன்றமாகும். மேலவை மாநிலங்களின் அவையாகவும் கீழவை மக்கள் அவையாகவும் இருக்கும்.
- **கூட்டுறவுக் கூட்டாட்சி:** கிரான்வில் ஆஸ்டின் என்ற புகழ்பெற்ற அரசமைப்பு அறிஞர் இந்தியக் கூட்டாட்சியை கூட்டுறவுக் கூட்டாட்சி என வர்ணித்தார். மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே கூட்டுறவு காணப்படுகின்றது.
- **ஒன்றியப் பட்டியல்:** அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள முதலாவது பட்டியல் ஒன்றிய (யூனியன்) பட்டியல் என்று அழைக்கப்படுகிறது.

12th_Political Science_Tamil_Unit_5.indd 131 04-06-2019 11:50:43

மத்திய அரசாங்க அதிகாரங்கள் இப்பட்டியலில் உள்ளன.

❖ **மாநிலப் பட்டியல்:** இரண்டாவது பட்டியிலில் அரசமைப்பின் ஏழாவது அட்டவனையில் மாநில அரசுக்கு மட்டும் பொருந்தகூடிய துறைகளை கொண்டுள்ளது.

❖ **பொதுப் பட்டியல்:** அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள மூன்றாவது பட்டியல் பொதுப் பட்டியல் ஆகும். மத்திய, மாநில அரசாங்கங்களுக்கு பொதுவாக உள்ள அதிகாரங்கள் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன. மத்திய, மாநில அரசுகள் இடையே பொதுப்பட்டியலில் உள்ள அதிகாரத்தில் முரண்பாடுகள் ஏற்பட்டால் மத்திய அரசாங்கத்தின் அதிகாரமே செல்லும்.

❖ **இதரப் பட்டியல்:** அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள மூன்று பட்டியல்களில் இடம் பெறாத அதிகாரம் இதர அதிகாரமாகக் கருதப்படும். இதர அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கே சொந்தமாகும்.

❖ **அனைத்து இந்தியப் பணிகள்:** அனைத்து இந்தியப் பணிகள் அரசமைப்பின் உறுப்பு 312 பிரகாரம் தோற்றுவிக்கப்படுகின்றன. மாநிலங்களவை அறுதிப் பெரும்பாண்மை ஆதரவுடன் புதிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கலாம். மாநிலங்களவையின் தற்போதைய உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அல்லது மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களில் அறுதிப்பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானம் இயற்றி அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கலாம்.

❖ **ஆனந்த்பூர் சாஹிப் தீர்மானம்:** பஞ்சாப் மாநிலத்தின் மாநில கட்சியான அகாலிதளம் ஆனந்த்பூர் சாஹிப் என்ற இடத்தில் மாநில சுயாட்சி தீர்மானத்தை உருவாக்கியது. மாநிலங்கள் பெரும்பான்மையான அதிகாரங்களைப் பெற்றிருக்கும். மத்திய அரசு பாதுகாப்பு, வெளியுறவு போன்ற ஒரு சில அதிகாரங்களை மட்டுமே பெற்றிருக்கும்.

❖ **இராஜமன்னார் குழு:** தமிழ்நாடு அரசு 1968-ஆம் ஆண்டு மத்திய மாநில உறவுகளை ஆய்வு செய்து பரிந்துரை வழங்கியதற்காக இராஜா மன்னார் குழுவை அமைத்தது. மாநில உரிமைகள் வரலாற்றில் இராஜ மன்னார் அறிக்கை மிக முக்கியமானதாக உள்ளது.

❖ **சர்க்காரிய குழு:** மத்திய அரசாங்கம் 1983-ஆம் ஆண்டு மத்திய மாநில உறவுகளை ஆய்வதற்காக சர்க்காரிய குழுவை அமைத்தது.

❖ **அரசமைப்பு மதிப்பாய்வு தேசிய குழு (National Commission to Review the Working of the Constitution[NCRWC]):** மத்திய அரசாங்கத்தால் 2000-ஆம் ஆண்டு அரசமைப்பு மதிப்பாய்வு தேசிய குழு அமைக்கப்பட்டது.இது வெங்கடசெல்லையா குழு என்றும் அழைக்கப்படுகிறது.

❖ **ஒற்றையாட்சி அரசமைப்புகள்:** இவ்வகையான அரசமைப்புகளில் மத்திய அல்லது தேசிய அரசாங்கம் மட்டுமே அரசமைப்பால் உருவாக்கப்படுகிறது. மாநில அரசாங்கங்களை அரசமைப்பு உருவாக்கவில்லை அல்லது அங்கீகரிக்கவில்லை.

❖ **நீதி சீராய்வு:** அரசாங்கத்தின் முடிவுகளையும் நாடாளுமன்றத்தின் சட்டங்களையும் அரசமைப்பிற்கு உட்பட்டு உள்ளனவா என ஆராயும் உச்ச நீதிமன்ற அதிகாரத்திற்கு நீதி சீராய்வு அதிகாரம் என்று பெயராகும். நமது அரசமைப்பு உச்ச நீதிமன்றத்திற்கு இவ்வதிகாரத்தை சில கட்டுபாடுகளுடன் வழங்குகிறது.

❖ **நடுவர்மன்றம்:** மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உருவாக்கப்படும் அமைப்பிற்கு நடுவர் மன்றம் அல்லது தீர்ப்பாயம் என்பது பெயராகும்.

❖ **சூய் ஜெனரிஸ் (Sui Generis):** வித்தியாசமானது, தனித்துவமானது என்பது இதன் பொருளாகும். ரஷ்ய நாட்டின் அரசமைப்பு அறிஞர் அலெக்சாண்ரவிக்ஸ் இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி முறையை இவ்வாறு வர்ணித்தார்.

12th_Political Science_Tamil_Unit_5.indd 132 04-06-2019 11:50:43

மதிப்பிடுதல்

I. சரியான பதிலைத் தேர்வு செய்யவும்

GFW9I6

1. உலகின் முதல் கூட்டாட்சி அமைப்பு எந்த நாட்டை சேர்ந்தது?

அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
ஆ) ஐக்கிய பேரரசு (United Kingdom)
இ) இந்தியா
ஈ) ஆஸ்திரேலியா

2. இந்தியாவில் கூட்டாட்சி முறையை முதன்முதலாக கோரியது எது?

அ) மவுண்ட்பேட்டன் திட்டம்
ஆ) நேரு அறிக்கை
இ) அமைச்சரவைக் குழு
ஈ) இராஜாஜி திட்டம்

3. ஆங்கிலேய அரசாங்கம் கூட்டாட்சி முறையை அதிகாரப் பூர்வமாக முதன்முதலில் எப்பொழுது வழங்க முன்வந்தது?

அ) மின்டோ மார்லி சீர்த்திருத்தங்கள்
ஆ) மாண்ட் ஃபோர்ட் சீர்த்திருத்தங்கள்
இ) இந்திய அரசாங்கச் சட்டம் 1935
ஈ) அமைச்சரவைக் குழு

4. ஈரவை நாடாளுமன்றம் என்பதில் எத்தனை அவைகள் உள்ளன?

அ) மூன்று அவைகள்
ஆ) ஒரு அவை
இ) நான்கு அவைகள்
ஈ) இரண்டு அவைகள்

5. கூட்டாட்சி அரசமைப்பின் மிக முக்கிய தன்மை எது?

அ) மாநில அரசாங்கங்கள்
ஆ) தேசிய அரசாங்கம்
இ) அதிகாரப் பகிர்வு
ஈ) அரசியல் கட்சிகள்

6. மத்திய-மாநில அரசாங்கங்கள் இடையிலான சிக்கல்களை தீர்த்து வைக்கும் அமைப்பு எது?

அ) நாடாளுமன்றம்
ஆ) உச்ச நீதிமன்றம்
இ) உயர் நீதிமன்றம்
ஈ) குடியரசுத்தலைவர்

7. இந்திய கூட்டாட்சி முறையை கூட்டுறவுக் கூட்டாட்சி என விவரித்தவர் யார்?

அ) கிரன்வில் ஆஸ்டின்
ஆ) டாக்டர் அம்பேத்கர்
இ) ஜவஹர்லால் நேரு
ஈ) வேர்

12th_Political Science_Tamil_Unit_5.indd 133 04-06-2019 11:50:43

8. அரசமைப்பின் 262-ன் உறுப்பு எவ்வகையான சிக்கல்கள் சம்பந்தப்பட்டது?

அ) மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் சிக்கல்கள்
ஆ) மாநிலங்களுக்கிடையேயான சிக்கல்கள்
இ) மத்திய-மாநில சிக்கல்கள்
ஈ) சர்வதேச சிக்கல்கள்

9. சரியாக பொறுத்தப்பட்ட ஜோடியை கண்டுபிடிக்கவும்

அ) ஒன்றியப் பட்டியல் – இரண்டாவது பட்டியல்
ஆ) மாநிலப் பட்டியல் – முதலாவது பட்டியல்
இ) இதர அதிகாரங்கள் பட்டியல் – முதலாவது பட்டியல்
ஈ) பொதுப் பட்டியல் – மூன்றாவது பட்டியல்

10. கீழ்கண்டவற்றைப் பொறுத்துக.

அ) சர்க்காரிய குழு – தமிழ்நாடு அரசாங்கம்
ஆ) இராஜாமன்னார் குழு – அகாளிதளம்
இ) ஆனந்த்புர் சாஹிப் தீர்மானம் – உச்ச நீதிமன்றம்
ஈ) பொம்மை தீர்ப்பு – மத்திய அரசாங்கம்

அ) அ-அ, ஆ-ஆ, இ-இ, ஈ-ஈ
ஆ) அ-ஈ, ஆ-அ, இ-ஆ, ஈ-இ
இ) அ-அ, ஆ-ஈ, இ-இ, ஈஆ
ஈ) அ-இ, ஆ-ஆ, இ-ஈ, ஈ-அ

11. இந்தியாவில் புதிய மாநிலங்கள் உருவாக்கும் முறையை தவறாக விவரிக்கும் கூற்று எது?

அ) அதிபர் புதிய மாநிலத்தை உருவாக்கும் சட்ட முன்வரைவை பரிந்துரைக்க வேண்டும்.
ஆ) அதிபர் அச்சட்ட முன்வரைவை சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கு அனுப்ப வேண்டும்.
இ) நாடாளுமன்றம் அரசியல் சாசன திருத்தச்சட்டத்தை இயற்றி புதிய மாநிலத்தை உருவாக்கும்.
ஈ) நாடாளுமன்றம் சாதாரண சட்டத்தை இயற்றி புதிய மாநிலத்தை உருவாக்கும்

12. இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்) போன்ற அனைத்து இந்தியப் பணிகளை நீக்குவதற்கு பரிந்துரைத்த குழு எது?

அ) புன்ச்சி குழு
ஆ) சர்க்காரிய குழு
இ) வெங்கடசெல்லையா குழு
ஈ) இராஜாமன்னார் குழு

13. கீழ்கண்டவற்றைப் பொறுத்துக.

அ) முதலாவது நிர்வாகச் சீர்திருத்தக் குழு – வீரப்ப மௌலி
ஆ) 2-வது நிர்வாகச் சீர்திருத்தக் குழு – மொரார்ஜி தேசாய்
இ) உறுப்பு 312 – பொதுப் பட்டியலுக்கான அதிகாரத்தை மாற்றும் உறுப்பு
ஈ) உறுப்பு 249 – அனைத்து இந்தியப் பணிகள்

அ) அ-அ, ஆ-ஆ, இ-இ, ஈ-ஈ
ஆ) அ-ஈ, ஆ-அ, இ-ஆ, ஈ-இ
இ) அ-அ, ஆ-ஈ, இ-இ, ஈஆ
ஈ) அ-ஆ, ஆ-அ, இ-ஈ, ஈ-இ

12th_Political Science_Tamil_Unit_5.indd 134 04-06-2019 11:50:43

14. **கூற்று (கூ)**: மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சினைகளை உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பில் இருந்து நீக்கி உறுப்பு 262-க்கு அரசமைப்பு ஒப்படைக்கின்றது.

காரணம் (கா): நதி நீர் பிரச்சனைகள் பல இலட்சம் மக்களின் வாழ்வாதாரங்கள் சம்பந்தப்பட்டது. ஆகவே சுமுகமான பேச்சு வார்த்தைகள் மூலம் அப்பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும்.

அ) கூற்றும், காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகளாகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

II. பின்வரும் கேள்விகளுக்கு மிகச் சுருக்கமாக பதிலளிக்கவும்

1. ஈரவை நாடாளுமன்றம் என்பதை விளக்கவும்.
2. நெகிழா அரசமைப்பு என்பதன் பொருள் என்ன?
3. நிலப்பரப்பு அதிகாரப் பகிர்வு என்றால் என்ன?
4. அனைத்து இந்தியப் பணிகள் எவ்வாறு கூட்டாட்சி முறையை பாதிக்கின்றன?
5. நிர்வாகச் சீர்திருத்தக் குழுவைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
6. புன்ச்சி குழு குறித்து சிறு குறிப்பு எழுதுக.
7. நமது அரசமைப்பில் உள்ள "மாநிலங்களின் ஒன்றியம்" என்பதன் பொருளை விளக்குக.

III. கீழ்கண்ட கேள்விகளுக்கு சுருக்கமாக பதில் எழுதவும்.

1. இந்திய கூட்டாட்சியில் நிதி அதிகாரப் பகிர்வு எவ்வாறு வழங்கப்பட்டுள்ளது என்பதை கண்டறிக.
2. அரசமைப்பின் 356 உறுப்பு கூட்டாட்சியை எவ்வாறு பாதிக்கின்றது?
3. வெங்கடசெல்லையா குழுவைப் பற்றி எழுதவும்.
4. உச்ச நீதிமன்றத்தின் பொம்மை வழக்கு தீர்ப்பின் முக்கியத் தன்மைகளை விவரிக்கவும்.
5. இந்திய அரசமைப்பு பாதியளவு கூட்டாட்சியை வழங்குகிறது என்ற கூற்றை ஆய்வு செய்யவும்.
6. மண்டலக் குழுக்கள் என்றால் என்ன? கூட்டாட்சி முறையை அவைகள் எவ்வாறு வளர்க்கின்றன?
7. இராஜாமன்னார் குழுவின் முக்கியப் பரிந்துரைகளை விவரிக்கவும்.

IV. கீழ்கண்ட வினாக்களுக்கு விரிவான பதில்களை எழுதவும்.

1. இந்திய அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள மத்திய மாநில உறவுகளை பகுப்பாய்வு செய்யவும்.
2. மாநிலங்களுக்கு இடையிலான நதி நீர் சிக்கல்களை தீர்ப்பதற்கான அரசமைப்பின் அணுகுமுறையை ஆய்வு செய்யவும்.
3. சர்க்காரிய குழுவின் முக்கிய பரிந்துரைகளை விவரிக்கவும்.
4. இந்திய அரசமைப்பின் கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை பற்றி விரிவான விளக்கம் தருக.
5. இந்திய கூட்டாட்சி முறையின் முக்கிய சிக்கல்கள் மற்றும் கோரிக்கைகளை விவாதிக்கவும்.

12th_Political Science_Tamil_Unit_5.indd 135 04-06-2019 11:50:43

அலகு 6

இந்தியாவில் நிர்வாக அமைப்பு




கற்றலின் நோக்கங்கள்

TCI482

- அரசுத்துறையின் நிர்வாக அமைப்பு திறம்பட செயல்படத் தேவையான அறிவு, திறன் மதிப்பீடு குறித்து அறிதல்.
- அரசுத்துறையின் நிர்வாக அமைப்பு வழங்கும் வேலை வாய்ப்புகள் குறித்தத்தகவல்களை மாணவர்களுக்கு வழங்குதல்.
- இந்தியாவில் நிர்வாக அமைப்பைப் புரிந்து கொள்ள உதவுதல்.
- மத்திய அளவில், இந்திய நிர்வாக அமைப்பின் செயல்பாடுகளையும், மக்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அவற்றின் பொறுப்புகளையும் அறிதல்.
- மாறி வரும் அரசு, சந்தை, பொருளாதார சூழ்நிலையில் இந்திய நிர்வாகத்தில் எழும் சிக்கல்களைப் புரிதல்.
- இந்திய நிர்வாகத்தின் வரலாற்று பரிணாமம், சமூக பொருளாதார, அரசியல், கலாச்சார மற்றும் உலக சூழல் போன்ற பொருத்தப்பாடுகள் புரிதல்.

6.1 இந்தியாவில் நிர்வாகக் கட்டமைப்பு



12th_Political Science_Tamil_Unit_6.indd 137 04-06-2019 11:34:27

சுதந்திரம் அடைந்ததிலிருந்து இந்திய நிர்வாக அமைப்பின் பரிணாமம்

நவீன இந்தியாவின் நிர்வாக அமைப்பின் தொடக்கம் காலனிய காலத்திலேயே தொடங்குகிறது. இந்தியாவில் காலனி ஆட்சியிலும் 1773-ஆம் ஆண்டு வரை முறையான நிர்வாகம் இருந்தது இல்லை. முகலாயப் பேரரசரின் அல்லது நவாப்களின் முகவர்களாகவே கிழக்கு இந்திய கம்பெனி செயல்பட்டு வந்தது. வருவாய் விவகாரங்களை நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் உள்ளூர் துணைப் பணியாளர்களை கொண்டு நிர்வகித்தார்கள். இராணுவ மற்றும் காவல் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து வந்தனர். பெரும்பான்மையான அதிகாரிகள் கல்வியறிவு அற்றவர்களாகவும், போதிய அனுபவம் மற்றும் பயிற்சி பெறாதவர்களாகவும் இருந்தனர்.

அவர்கள் வெளிநாட்டு அதிகாரிகள் என்பதால் உள்ளூர் மக்கள் மீது மரியாதையின்றியும், இரக்கமற்ற முறையிலும் நடந்து கொண்டனர் அவர்கள் எந்த சட்டமன்றத்திற்கும் பதிலளிக்க வேண்டியதில்லை என்பதால், ஊழல் மற்றும் முறைகேடுகள் அன்றாட நடவடிக்கைகள் ஆயின. ஆங்கில நாடாளுமன்ற உறுப்பினர் எட்மண்ட் பர்க், நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு இப்பிரச்சனையைக் கொண்டு சென்றார். பெரும் விமர்சனங்களுக்குப் பிறகு, 1773 ஒழுங்குமுறைச் சட்டம் மற்றும் தொடர் சாசனங்கள் மூலம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் கிழக்கிந்திய கம்பெனியின் இந்திய நிர்வாகம் கொண்டுவரப்பட்டது. இயக்குநர்கள்குழு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியன நாடாளுமன்றம் மற்றும் பிரிட்டிஷ் அமைச்சரவையின் கீழ் கொண்டுவரப்பட்டன. எனவே, இந்தியாவில் உள்ள கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகங்கள், ஒழுங்குபடுத்தப்பட்டு நாடாளுமன்றத்திற்குப் பதில் சொல்லும் நிலை உருவாக்கப்பட்டது.

அதன் பின்னரே இந்தியாவிற்கான ஆங்கில அதிகாரிகளுக்கு ஹெய்லிபிரி கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டது. உயர் அதிகாரி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒப்பந்தப் பணி உறுப்பினர்களாக அறியப்பட்டனர். அவர்கள் கவர்னர் ஜெனரல் மற்றும் ஆளுநர்களுக்கு நிர்வாக ரீதியிலும் உதவினார்கள். இந்தியர்கள் நடுநிலை பணியாளர்களாகவும் தொலைதூரப் பணிகளுக்கும் நியமிக்கப்பட்டனர். உள்நாட்டுப் பழக்க வழக்கங்களில் கம்பெனி தலையிட விரும்பவில்லை. இதன் மூலம் மக்கள் ஆதரவைப்பெற விரும்பியது. நடுநிலைப் பணிகளுக்கும் தொலை தூரப்பணிகளுக்கும் அப்பகுதிகளின் நடுநிலை, கீழ்நிலை சாதியினர் நியமிக்கப்பட்டனர்.

1840-ஆம் ஆண்டு வரை பாரசீக மொழியே அலுவல் மொழியாக இருந்து வந்தது. ஆங்கில மக்கள் எல்லா உயர் பதவிகளிலும் ஏகபோக உரிமையாளர்களாக தங்களை வைத்துக்கொண்டு இங்கு உள்ள மேன்மக்களை கீழ்மட்ட அலுவலகத்தில் அமர்த்திக்கொண்டனர்.

இந்தியர்களையும் உயர் பதவிகளில் அமர்த்துவதற்கான தேவைகளும் மெதுவாக எழுந்தன. ஐரோப்பிய மாதிரி கல்வி மற்றும் ஆங்கில மொழிவழிக் கல்வி அறிமுகம் மெக்காலே முறையில் இந்தியர்கள் கல்வி கற்க தூண்டியது. ஆங்கிலக் கல்வி கற்பதன் மூலம் உயர் பதவிகளில் பணியாற்ற விரும்பினர். 1858-ஆம் ஆண்டில் இந்திய நிர்வாகத்தை முடியாட்சி ஏற்ற பின்பு, இந்திய ஆட்சி முறை மாற்றியமைக்கப்பட்டு இந்திய குடிமைப் பணிகள் உருவாக்கப்பட்டன. உயர்மட்ட நிர்வாகிகள் நீதித்துறை பணியாளர்கள் இந்தியக் குடிமைப் பணி போட்டித் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டனர். மிகச் சிறந்த பிறப்புரிமையுள்ள உயர்ச் சாதி இந்தியர்கள் தங்களுக்கும் இந்திய குடிமைப்பணி தேர்வில் கலந்து கொள்ள

12th_Political Science_Tamil_Unit_6.indd 138 04-06-2019 11:34:27

வயது வரம்பை தளர்த்த வேண்டும் என்றும் குடிமைப் பணி தேர்வுகள் இந்தியாவிலேயே நடத்தப்படவேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். இவையெல்லாம் இந்திய தேசிய இயக்கத்தின் தொடக்க காலக் கோரிக்கைகள்.

இந்திய அரசாங்கச் சட்டம் 1919-நிறைவேற்றப்படும்வரை, இந்தியர்களால் உயர்ந்த ஆட்சித்துறை பதவிகளை அடைய முடிவில்லை. இரட்டை ஆட்சிச் சட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாற்றப்பட்ட துறைகள் வழங்கப்பட்டன. ஆனால் ஆட்சித்துறை அதிகாரிகள் தொடர்ந்து ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். இந்த காலகட்டத்தில், சிறு பணிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அரசுப் பணிக்கு பொதுப் பணி தேர்வு ஆணையம் அமைப்பது குறித்துச் சிந்திக்கத் தொடங்கினர். இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு, பணிகள் சீர்திருத்தப்பட்டன: இந்தியக் குடிமைப் பணிக்கு (ICS) பதிலாக இந்திய ஆட்சிப் பணி (IAS இ.ஆ.ப) கொண்டுவரப்பட்டது. இதன் மூலம், நிர்வாகப் பணிகள் அரசுப் பணிகள் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கும் முறை அடிப்படையானது.

சுதந்திரத்திற்கு பிந்தைய இந்தியாவில் நிர்வாக அமைப்பு

இந்திய நிர்வாகத்தின் பணிகள் மற்றும் பொறுப்புகளில் சுதந்திர இந்தியாவில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சட்டம் இயற்றும் அமைப்புகளுக்கும், அமலாக்கம் செய்யும் அமைப்புகளுக்கும் பதில் சொல்லவும். பொறுப்பேற்கும்படியும் செய்தது. இந்திய அரசாங்கம் ஒரு மக்கள் நல அரசை விரும்பியதனால் அதனுடைய நிர்வாக பொறுப்புகள் பன்மடங்கு அதிகரித்தது.

ஜவஹர்லால் நேருவின் தலைமையின் கீழ் உருவான புதிய அரசு, மக்களாட்சி சமதர்மம் அமைப்பைத் தேர்ந்தெடுத்து, சமத்துவம், நவீனமயமாக்கல் போன்றவற்றை அடைய 'கலப்பு பொருளாதாரத்தை' அறிமுகப்படுத்தியது. மக்களாட்சி முறை மற்றும் சமதர்மம் முறை இரண்டினையும் உறுதிப்படுத்த 'கலப்பு பொருளாதாரத்தை' தேர்வு செய்தது. அடிப்படை தொழில்துறைகள் (எஃகு மற்றும் இரும்பு போன்றவை) அரசுத் துறை மூலமாக வளர்ச்சியடைந்தது. நடுத்தர தொழில்கள், போக்குவரத்து, விமான போக்குவரத்து ஆகியவற்றில் தனியார் துறை ஈடுபட அனுமதிக்கப்பட்டது. ஒவ்வொரு திட்டத்திலும் இலக்குகளை அடைய நிர்வாக அமைப்பு மேன்மேலும் அதிகரிக்க வேண்டியிருந்தது. முதல் மூன்று 'ஐந்தாண்டு திட்டம்' மிகப்பெரிய பலன்களை அளித்தன. ஆனால், அதன் பிறகு முதலாளித்துவம் 'குழும'ங்களாக மாறிப் பெரும் வெற்றி பெற்றன.

சோவியத் மற்றும் இதர சோசியலிச நாடுகள் பின்னடைவு அடைந்தன. 1990-களில் ஏற்பட்ட புதிய சவால்களை எதிர்கொள்ள இந்தியா உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல், மற்றும் தாராளமயமாக்கல் கொள்கையைப் பின்பற்றியது. இந்திய நிர்வாக அமைப்புத் தம்மை மாற்றிக்கொண்டுள்ளது ஊழல் பெரும் பிரச்சனையாக இருந்தது. உயர்மட்டங்களில் ஊழலும், ஊழல்வாதிகளும் அதிகமாகக் காணப்பட்டாலும், நமது பொருளாதார முறையில் தவறேதும் கிடையாது. நேரு காலத்துக்கு முன்பும் இது போன்ற ஊழல்கள் காணப்பட்டன. தற்போதைய பொருளாதார முறையிலும் காணப்படுகிறது. ஒவ்வொரு நிலையிலும் ஊழல் அதிகாரிகளும் காணப்பட்டாலும், நமது மக்களாட்சி முறையை அதற்கு காரணமாக்க முடியாது.

கணக்கெடுப்பு, கருத்துக்கணிப்பு, குறிப்பிட்ட பிரச்சனைகளுக்காக என காலனி ஆட்சியில் நிர்வாக முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதையொட்டி சில துறைகள் உருவாக்கப்பட்டன ஆனாலும், தற்போது விடுதலைக்கு பிந்தைய இந்தியாவில் நிர்வாக அமைப்பில் இருந்தது. நீதித்துறை

12th_Political Science_Tamil_Unit_6.indd 139 04-06-2019 11:34:27

வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதேபோல் கல்வி, விரிவான நீர்ப்பாசனம், தொற்றுநோய்த் தடுப்பு, மின்மயமாக்கம், பொதுச் சுகாதாரம், சாலை-ரயில்வே போக்குவரத்து வசதிகள் என ஏராளமான மக்கள் நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இந்திய நிர்வாக அமைப்புகள் மூலம் அமலாக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற நிர்வாகத்தின் ஒவ்வொரு திட்டத்திலும் நமது நிர்வாக அமைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், ஒரு பயிற்சிபெற்ற, அனுபவமிக்க, நிர்வாகச் செயல்திறன் மிக்க ஒரு அமைப்பை உருவாக்குவதில் பின்னடைவு இருந்தது. இதற்கான மேம்பாட்டுத்திட்டங்கள் வெற்றி பெறவில்லை. இந்திய நிர்வாக அமைப்பை மனிதநேயமிக்க, நவீன, மக்களாட்சி மையப்படுத்தப்பட்ட அமைப்பாக மாற்றும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் கால மாற்றத்துக்கு ஏற்ற நிர்வாக அமைப்பை உருவாக்க முடியும். மக்களாட்சி முறையில் நிர்வாக அமைப்பானது விமர்சனத்திற்கும் நீதித்துறையின் கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டதல்ல. அதே நேரத்தில் தேவையற்ற அரசியல் தலையீட்டையும் தவிர்த்தல் வேண்டும். கட்டுப்பாடுகள், சமநிலைப்படுத்தல் மூலம் மேலான நிர்வாகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதே சமயம் நாட்டுக்கு வெளியே இருந்துவரும் அச்சுறுத்தல்கள், நாடுதாண்டிய அழுத்தங்களில் இருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் அரசமைப்பானது மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பையே வழங்குகிறது. அரசு வகைமைகளில் பணியாளர் இரண்டு உயர்நிலை நிர்வாகங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். ஒன்று மத்திய அரசு நிர்வாகம், இரண்டு மாநில நிர்வாகம் நிர்வாகப் பணிகள் அனைத்தும் மத்திய அரசின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்டவைகள். தாராளமயமாக்கல் என்பதன் பொருள், அதிகாரவர்க்கம் அதிக வேலைப்பளுவில் இருந்து விடுபடும் என்பதல்ல. மாறாக, தனியார் துறை மீதான அரசுக் கட்டுப்பாடுகளைக் குறைப்பதாகும். அதேநேரத்தில் கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை அமலாக்கம் ஆகியவற்றில் அண்மைக்காலத்தில் அதிகம் மையப்படுத்தும் போக்கினை நாம் காண்கிறோம். மக்களாட்சி சமதர்மம் மற்றும் கலப்புப் பொருளாதார அமைப்புக்காக பணியாற்றிய இந்திய நிர்வாக அமைப்பின் கரங்களில் தற்போது அதிக தனியார்மயமாக்கத்துக்காகவும் மேலும் அதிக மையப்படுத்தப்பட்ட வரி அமைப்புக்காகவும் பணியாற்றும் பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. இப்புதிய ஏற்பாடே தற்போது புதிய அரசு மேலாண்மை (என்.பி.எம்) என அழைக்கப்படுகிறது.

இந்தியாவில் நிர்வாக அமைப்பு மாறிவரும் பொருளாதார கட்டமைப்பிற்கு ஏற்றவாறு தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். இந்தியப் பொருளாதாரம் புதிய தனது உள்நாட்டு சந்தையை உள்ளூர் தனியார் நிர்வனங்களுக்கும் பன்னாட்டு நிர்வனங்களுக்கும் திறந்துவிட வேண்டும். வணிகம் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், அரசு முதலீடுகளை திரும்பப் பெறுதல், வரிவிதிப்பை மையப்படுத்துதல், மானியங்கள் நீக்க நடவடிக்கை போன்றவற்றில் இந்திய நிர்வாக அமைப்பு ஈடுபட வேண்டும். தனியார்மயமாக்கலின் எதிரொளியாக சுரங்கம், துறைமுகம், பெட்ரோலியம், விமான போக்குவரத்து போன்றவை அமைப்பு ரீதியாக குழுமமையமாக்கப்பட்டுள்ளன. அன்னிய முதலீட்டுக்காக பன்னாட்டு நிர்வனங்களையும், உள்நாட்டு தனியார் முதலீடுகளையும் எல்லாம் சேர்த்துள்ளது, மேலும் இந்திய அதிகாரவர்க்கம் சர்வதேச அமைப்புகளான உலக வங்கி, உலக வர்த்தக அமைப்பு மற்றும் சர்வதேச நிதி ஆணையம் போன்றவற்றின் வழிகாட்டுதலையும் பின்பற்ற வேண்டியுள்ளது.

12th_Political Science_Tamil_Unit_6.indd 140 04-06-2019 11:34:27

இந்த வழிகாட்டுதலின்படியே கீழ்க்கண்ட ஒழுங்குமுறை ஆணையங்கள் இந்தியாவில் உருவாக்கப்பட்டன. அவை

1. இந்தியக் காப்பீடு மற்றும் ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமை (IRDA)
2. இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்(TRAI)
3. இந்தியப் போட்டிகள் ஆணையம் (CCI)
4. ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA)
5. இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI)

மேலும் புதிய ஒழுங்குமுறை ஆணையங்களை உள்கட்டமைப்பு, சுரங்கம் ஆகிய துறைகளில் தொடங்கவும் ஆலோசனைகள் நடந்து வருகின்றன. இவ்வகையான சீர்த்திருத்தங்கள் வரி நிர்வாகத்திலும்தொடர்கின்றன. உதாரணமாக, மதிப்புக் கூட்டுவரி (VAT) மற்றும் பொருள்கள் மற்றும் சேவை வரியை (GST) குறிப்பிடலாம். இந்த நடவடிக்கைகளுக்கு தொழில் துறை மற்றும் சந்தையில் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது. பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு வளர்ச்சியின் அறிகுறிகளைக் காட்டின. இதிலிருந்து பொருளாதார சீர்திருத்தம் மாற்றத்தின் அறிகுறி என நம்பப்பட்டது. இம்முயற்சிகளின் பலனாக தொழில்துறை வளர்ந்தது. சந்தை மேம்பட்டது. பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரித்தது. பொருளாதார சீர்திருத்தம் நல்ல விளைவுகள் அளிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. மேற்கூறிய முயற்சிகளால் இந்தியாவில் கடந்த 20 வருடங்களில் 300 மில்லியன் மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். தற்போதைய காலகட்டத்தில் உயர்மட்ட அதிகாரிகள் அதிக அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். இதற்கு அவர்களின் அதிகார மோகம் காரணமல்ல. நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அவை தேவைப்பட்டன. தொழில்நுட்ப முன்னேற்றம், பெரும் அளவில் அதிகாரப்பரவலாக்கம், சமூக செயல்பாட்டு முறை ஆகியவற்றால் இவை நிறைவேற்றப்பட்டன. இவற்றின் விளைவுகளை மேலும் சிறந்த சேவைகள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, சட்டத்தின் ஆட்சி ஆகியனவற்றை மக்கள் எதிர்பார்ப்பதில் இருந்து அரசு உணர்ந்தது. இருந்தாலும், குடிமைப் பணி அதிகாரிகளை நிர்வாகத்திறன் அற்ற கூடுதல் சுமையாகவே மக்கள் கருதினர். தகவல் உரிமைச்சட்டம், குடிமக்கள் சாசனம், சமூகத்தணிக்கை போன்றவற்றால் கூடுதல் பொறுப்புகளும், கடமைகளும் உருவாக்கப்பட்டு குடிமைப் பணி அலுவலர்கள் மக்களுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்களாகியுள்ளனர்.

6.2 அமைச்சகம், துறைகள், வாரியங்கள் மற்றும் ஆணையங்கள்

ஒன்றிய அரசு அமைச்சகம் / துறைகள்

ஒன்றிய தலைமை செயலகம் என்பது இந்தியாவிற்கான கொள்கைகள் உருவாக்கும் முக்கிய அமைப்பாகும். மத்திய தலைமை செயலகம் என்பது பல அமைச்சகங்களையும் துறைகளையும் உள்ளடக்கியது ஆகும். இவையனைத்தும் அவற்றின் செயல்பாடுகள் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

அமைச்சகத்தின் கட்டமைப்பு

மத்திய அரசாங்கத்தின் அமைச்சகம் மூன்று அடுக்குகளை கொண்டது.

1. அரசியல் தலைமை

அமைச்சகத்தின் அரசியல் தலைமை என்பவர் கேபினட் அமைச்சராகவோ, துணை அமைச்சராகவோ இருக்கலாம். சில நேரங்களில் தனிப் பொறுப்பு கொண்ட துணை அமைச்சராகவும் இருப்பர்.

2. செயலகம் (Secretariat)

இதன் தலைவர் செயலாளராக இருப்பார் இவர் குடிமைப் பணி சார்ந்த அதிகாரியாவார். செயலாளருக்கு உதவி புரிய இணைச் செயலர், கீழ் நிலைச் செயலர், துணைச் செயலர் போன்றோர் இருப்பர்.

3. நிர்வாக அமைப்பு (Directorate)

இதன் தலைவர் இயக்குநர், தலைமை இயக்குநர் , தலைமை ஆய்வாளர் (ஐ.ஜி)

12th_Political Science_Tamil_Unit_6.indd 141 04-06-2019 11:34:27

ஆணையர் மற்றும் தலைமை கட்டுப்பாட்டாளர் போன்ற பெயர்களால் அழைக்கப்படுவர்.

ஒவ்வொரு அமைச்சகமும் பல துறைகளாக பிரிக்கப்படும். ஒவ்வொரு துறையும் பல தொகுதியாக பிரிக்கப்படும். தொகுதி பகுதிகளாக பிரிக்கப்படும் பகுதிகள் கிளைகளாக பிரிக்கப்படும், கிளைகள் பிரிவுகளாக பிரிக்கப்படும்.

துறை (செயலாளர்)
தொகுதி (இணைச் செயலாளர்)
பகுதி (துணைச் செயலாளர்)
கிளை (கீழ்நிலைச் செயலாளர்)
பிரிவு (பிரிவு அலுவலர்)

இந்திய அரசு அலுவல் விதிகள் 1961-இன்படி, அமைச்சகமும் துறைகளும் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

மத்திய தலைமைச் செயலகம்

மத்திய ஆட்சியின் அனைத்து அமைச்சகம் மற்றும் துறைகளின் ஒட்டுமொத்த தொகுப்பே மத்திய தலைமைச் செயலகம் என்று அழைக்கப்படுகிறது. அரசமைப்பின் உறுப்பு 77 இன்படி குடியரசுத்தலைவர் பல்வேறு அமைச்சகத்திற்கு பணியை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்.

மத்திய தலைமைச் செயலகத்தின் பணிகள்

1. அமைச்சர்களின் கொள்கையாக்கம் மற்றும் நாடாளுமன்றச் செயல்பாடுகளில் உதவி புரிதல்
2. சட்டங்கள் வரைதல், விதிகள் மற்றும் கொள்கைகளின் செயல் முறைகள்
3. திட்டமிடல், திட்ட உருவாக்கம்
4. அமைச்சகத்தின் செலவினங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கை சார்ந்த பணிகள்
5. கொள்கைகள் மற்றும் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடுதல் கட்டுப்படுத்துதல்.
6. அமைச்சகம் மற்றும் துறை பணியாளரின் பணிகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.
7. அமைச்சகத்தின் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து மேற்பார்வையிடல் மற்றும் மாநில நிர்வாகத்துடன் தொடர்பில் இருத்தல்.

மத்திய அரசு அமைச்சகங்கள் / துறை

1 விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

- விவசாய ஆராய்ச்சி மற்றும் கல்வி துறை
- விவசாயம், ஒத்துழைப்பு மற்றும் விவசாயிகளின் நலத்துறை
- கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

2 ஆயுஷ் அமைச்சகம், இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகம்

- இரசாயனம் மற்றும் பெட்ரோகெமிக்கல்ஸ் துறை
- உரத் துறை
- மருந்துகள் துறை

3 உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம், நிலக்கரி அமைச்சகம், வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம்

- வர்த்தகத் துறை
- தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்பு துறை

4 தொடர்பு அமைச்சகம்

- தபால் துறை
- தொலைத்தொடர்பு துறை

12th_Political Science_Tamil_Unit_6.indd 142 04-06-2019 11:34:27

5 நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்

- நுகர்வோர் விவகாரத் துறை
- உணவு மற்றும் பொது விநியோகத் துறை

7 வட கிழக்கு மண்டல மேம்பாட்டு அமைச்சகம், குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம், புவியியல் அமைச்சகம்

- இந்திய வானியல் துறை

9 மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், வெளிவிவகார அமைச்சகம், நிதி அமைச்சகம்

- பொருளாதாரம் துறை
- செலவுத் துறை
- நிதி சேவைகள் துறை
- முதலீட்டு மற்றும் பொது சொத்து மேலாண்மைத் துறை
- வருவாய்த் துறை

11 சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சகம், சுரங்கங்கள் அமைச்சகம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சகம், பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியங்கள் அமைச்சகம்

- நிர்வாக சீர்திருத்த மற்றும் பொது குறைபாடுகள் துறை (*DARPG*)
- ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் நலத்துறை
- பணியாளர் மற்றும் பயிற்சித் துறை

13 அணு சக்தி துறை விண்வெளித் துறை

6 பொதுநிறுவன விவகார அமைச்சகம், கலாச்சார அமைச்சகம் பாதுகாப்பு அமைச்சகம்

- பாதுகாப்புத் துறை
- பாதுகாப்பு தயாரிப்புத் துறை
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறை
- முன்னாள் ராணுவத்தினர் நலத்துறை

8 உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சகம், சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்

- சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை
- சுகாதார ஆராய்ச்சி துறை, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை

10 கனரக தொழிற்சாலைகள் மற்றும் பொதுத்துறை அமைச்சகம்

- கனரகத் தொழிற்துறை
- பொது நிறுவனங்கள் துறை

12 பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், மின்வலு அமைச்சகம், ரயில்வே அமைச்சகம், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம்

- கனிம வளங்கள் துறை
- கிராம மேம்பாட்டுத் துறை


14 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

- பயோடெக்னாலஜி துறை (*DBT*), இந்திய அரசு
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (*DST*)
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித் துறை (*DSIR*)

12th_Political Science_Tamil_Unit_6.indd 143 04-06-2019 11:34:27

15 உள்நாட்டு விவகார அமைச்சகம் நிறுவனக் கட்டமைப்பு

- மத்திய ஆயுதப்படை
- மத்திய போலீஸ் அமைப்பு
- எல்லை மேலாண்மைத் துறை
- வீட்டுவசதித் துறை
- உள்நாட்டு பாதுகாப்புத் துறை
- ஜம்மு மற்றும் காஷ்மீர் விவகாரத் துறை (ஜம்மு மற்றும் காஷ்மீர்)
- அதிகாரபூர்வ மொழித் துறை
- மாநிலங்கள் துறை



16 தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்

17 நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்

18 கப்பல் அமைச்சகம் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முயற்சி அமைச்சகம் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

- குறைபாடுகள் கொண்ட நபர்களின் அதிகாரமளித்தல் துறை
- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை


19 புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இரும்பு அமைச்சகம் ஜவுளி அமைச்சகம் சுற்றுலா அமைச்சகம் பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம் நீர்வள ஆதார, நதி அபிவிருத்தி மற்றும் கங்கா புத்துணர்வு அமைச்சகம் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம்

- விளையாட்டு துறை
- இளைஞர் விவகாரங்கள் துறை

20 வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் மனித வள மேம்பாட்டு அமைச்சகம்

- உயர் கல்வித் துறை
- பள்ளி கல்வி மற்றும் எழுத்தறிவு துறை

12th_Political Science_Tamil_Unit_6.indd 144 04-06-2019 11:34:27



அமைச்சரவைச் செயலகம் (Cabinet Secretariat))

பணிகள்

அமைச்சரவைச் செயலகம் பிரதமரின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இதன் நிர்வாகத் தலைவர் அமைச்சரவை செயலாளர் (Cabinet Secretary) ஆவார், அவரே இந்தியக் குடிமைப் பணி அலுவலர்களின் தலைவராக கருதப்படுகிறார். இந்திய அரசு (அலுவல்கள் ஒதுக்கீடு) 1961 சட்டப் படி அமைச்சரவைச் செயலகத்தின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

அமைச்சரவை செயலகத்தின் அமைப்பு முறை

அமைச்சரவை செயலகத்தின் மூன்று முக்கிய பிரிவுகள்:

❖ குடிமைப் பிரிவு ❖ இராணுவப் பிரிவு ❖ நுண்ணறிவுப் பிரிவு

குடிமைப் பிரிவு

இப்பிரிவே மத்திய அமைச்சரவைக்கு ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்குகின்றன.

இராணுவப் பிரிவு

இப்பிரிவு அமைச்சரவையின் இராணுவக் குழு செயலக உதவிகளை வழங்குகின்றது.


நுண்ணறிவுப் பிரிவு

இப்பிரிவு அமைச்சரவையின் கூட்டுப் புலனாய்வுக் குழு சார்ந்த செயல்பாடுகளை கையாளுகின்றது.

பிற அமைப்புகள்

ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு (RAW), பாதுகாப்பு இயக்குநர், சிறப்பு பாதுகாப்புக் குழு (SPG), கூட்டு நுண்ணறிவுக் குழு இயக்குநர், பொதுமக்கள் குறைகள் டி.ஜி.பி (1998), தேசிய ஆணையம், இராசயன ஆயுத ஒப்பந்தங்கள்.

12th_Political Science_Tamil_Unit_6.indd 145 04-06-2019 11:34:27



12th_Political Science_Tamil_Unit_6.indd 146 04-06-2019 11:34:28

தலைமைச் செயலகமானது இந்திய அரசாங்கச் சட்டம் (அலுவல் பரிமாற்றம்) 1961 விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்புடையது. இச்செயலகம் அரசு கொள்கை முடிவு எடுப்பதில் அமைச்சகத்திற்கிடையேயான ஒருங்கிணைப்பு ஏற்படுத்துதல், அமைச்சகங்கள்/துறைகள் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் களைதல், செயலக நிலைக் குழுக்கள்/ தற்காலிகக் குழுக்கள் மூலம் ஒருமித்த கருத்து உருவாக்குதல் ஆகிய வழிகளில் அமைச்சரவைச் செயலகம் அரசுக்கு உதவுகிறது. நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் காலங்களில் மேலாண்மை செய்தல், அத்தகைய காலங்களில் பல்வேறு அமைச்சரகங்களை ஒருங்கிணைத்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியனவும் அமைச்சரவைச் செயலகப் பணிகள் தாம்.

அமைச்சரவைக் குழுக்களுக்கு ஆதரவு

அமைச்சரவைச் செயலகம், அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்களுக்கு கீழ்காணும் உதவிகளை நல்கிறது.

- பிரதமரின் ஆணைப்படி, அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்களின் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- கூட்ட நிரல்களை முடிவு செய்து சுற்றுக்கு அனுப்புதல்.
- கூட்டப்பொருள் தொடர்பு கோப்புகளை தயார் செய்து சுற்றுக்கு அனுப்புதல்.
- பிரதமரின் ஒப்புதலுக்குப் பின் கூட்ட விவாதங்களைத் தொகுத்தல் சுற்றறிக்கையாக அனுப்புதல்.
- அமைச்சரவை மற்றும் அதன் குழுக்கள் எடுத்த முடிவுகள் நடைமுறைப் படுத்துவதை மேற்பார்வையிடுதல்.
- அமைச்சரவைக் கூட்ட ஆவணங்களை அமைச்சரவைச் செயலகப் பாதுகாப்பில் பராமரித்தல்.

அமைச்சரவைச் செயலாளர்

இந்தியாவில் அமைச்சரவைச் செயலாளர் அலுவலகம் பதவியானது 1950–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்தியாவின் முதல் அமைச்சரவை செயலாளர் என்.ஆர். பிள்ளை ஆவார். அமைச்சரவை செயலரே அமைச்சரவை செயலகத்தின் தலைவர் ஆவார். இந்திய குடிமைப் பணிகளில் அமைச்சரவை செயலர் பதவியே உயரியது. இதனால் குடிமைப் பணி அலுவலர்கள் மத்தியில் இவரே முதன்மையானவர்.

மத்திய அரசு – உயர்மட்ட நிர்வாகம்

- குடியரசுத்தலைவர்
- துணைக் குடியரசுத்தலைவர்
- அமைச்சரவைச் செயலகம்
- இந்தியத் தேர்தல் ஆணையம்
- ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம்
- தேசிய மனித உரிமைகள் ஆணையம்
- இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.ஜி)
- இந்தியக் கணக்கு தணிக்கை துறை
- நிதி ஆயோக்
- தேசிய மகளிர் ஆணையம்
- தேசிய பழங்குடி மக்கள் ஆணையம்
- பதினைந்தாவது நிதி ஆணையம்
- சிறுபான்மையோர் தேசிய ஆணையம்
- காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்
- முதன்மை அறிவியல் ஆலோசகர் ஆணையம்

பிரதமர் அலுவலகம் (PMO)

பல்வேறு வகை ஆதார அலுவலர்கள் பிரதமருக்கு அறிக்கைகள் அளிக்க வேண்டியுள்ளதால், பிரதமர் அலுவலகம் என்பது அவரின் கீழ் பணிபுரியும் அத்தகைய பல்வேறு அலுவலர்களை உள்ளடக்கியது. பிரதமர் அலுவலகம் முதன்மைச் செயலரின் கீழ் செயல்படுகிறது. 1977 ஆம் ஆண்டு வரை பிரதமர் அலுவலகம் பிரதமரின் செயலகம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் மொரார்ஜி தேசாய் காலத்தில் பிரதமர் அலுவலகம் என்று மாற்றப்பட்டது.

12th_Political Science_Tamil_Unit_6.indd 147 04-06-2019 11:34:28

தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம்

தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் நவம்பர் 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவற்றின் பணிகள்:

- படைப்பாக்க செயல்பாடுகள் மற்றும் பன்முனைச் செயல்பாடுகளுக்கான ஆதார அமைப்புகளை உருவாக்கும் வகையில் அறிவியல்சார் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் உத்திகளை உருவாக்குவது.
- அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், தொழில் அமைப்புகளுடன் இணைந்து உள்கட்டமைப்பு பொருளாதார மற்றும் சமூகம் போன்ற முக்கியத் துறைகளில் அறிவியல் தொழில்நுட்ப இலக்குகளை நிர்ணயித்தல்.
- பிரதமரின் அறிவியல் தொழில்நுட்ப ஆலோசனை குழுவிற்கும் தனது பங்களிப்பை வழங்குதல்.
- தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் நிர்வாக ரீதியாக ஆகஸ்ட் 2018 முதல் அமைச்சகச் செயலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பிரதமர் அலுவலகம் பிரதமருக்கு செயலக ரீதியான உதவிகளை வழங்குகின்றது. இதன் தலைவர் பிரதமரின் முதன்மைச் செயலர் ஆவார். பிரதமர் அலுவலகம் ஊழல் எதிர்ப்பு பிரிவு மற்றும் பொதுமக்கள் குறை கேட்டல் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியது. இவ்வலுவலகம் பிரதமர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில குடிமைப் பணி அலுவலர்கள் துணையுடன் அரசை ஒருங்கிணைக்கின்றது. மேலும், பிரதமர் பிரதம அலுவலக உதவியுடன் தான் அனைத்து அமைச்சகங்கள், ஆளுநர்கள் மற்றும் மாநிலங்களுடன் ஆலுவல்பூர்வ தொடர்பில் இருக்கிறார்.

6.3 பணியாளர் நிர்வாகம்

பணியாளர் நிர்வாகம் – கருத்துரு:

அரசின் செயல்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகளின் அதிகரிப்பால் நிர்வாகக் கட்டமைப்பு பெருகிக்கொண்டே இருக்கிறது. இக்காரணிகளினால் ஒவ்வொரு நிலைகளிலும் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாளர்களின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பணியாளர் நிர்வாகத்தின் முக்கியப் பணி என்பது தொடர்ந்து ஒரு நிறுவனத்திற்குத் தேவையான மற்றும் தகுதி வாய்ந்த பணியாளர்களை வழங்குவதே ஆகும். பணியாளர் நிர்வாகத்தை புரிந்து கொள்வதற்கு அதன் பொருள் மற்றும் தன்மையை அறிந்து கொள்வது மிக அவசியம்.

பணியாளர் நிர்வாகத்தின் நோக்கங்கள்:

- மனித வளத்தை திறம்பட பயன்படுத்துதல்.
- நிறுவனத்தின் அனைத்து பணியாளர்கள் இடையே ஆக்கபூர்வமான உறவுகளை உறுதி செய்தல்.
- அதிகபட்ச வளர்ச்சியை அடைதல்.
- நிறுவனத்தின் சமூக மற்றும் சட்ட ரீதியான கடமைகளை நிவர்த்தி செய்தல்.

பணியாளர் நிர்வாகத்தின் பரப்பு மற்றும் எல்லை:

பணியாளர் நிர்வாகம் என்பது ஓர் அமைப்பில் உள்ள அனைத்து விதமான பணியாளர் மேலாண்மைகளை உள்ளடக்கியது. இதன் அடிப்படை நோக்கம் மனித வளத்தினை திறம்பட பயன்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களைத் திட்டமிட்டபடி அடைவதாகும். பணியாளர் நிர்வாகத்துறை ஓர் அமைப்பில் உறுப்பினர்களுக்கிடையே சரியான வகையில் உறவுகள் மேம்பட கட்டமைப்பை ஏற்படுத்துதல் வேண்டும். மேலும் பணியாளர்களிடையே வேலை செய்வதற்கான உந்துதல் அர்ப்பணிப்பு உணர்வு

12th_Political Science_Tamil_Unit_6.indd 148 04-06-2019 11:34:28

மற்றும் விசுவாசம் போன்ற பண்புகளை வளர்த்தல் வேண்டும். பணியாளர்களின் சுய லாபம், பேராசை தேவையற்ற பகை உணர்வு ஆகியவற்றை அறவே நீக்குதல் வேண்டும். பணியாளர் நிர்வாகம், பணியாளர்கள் தங்களுக்கு வேண்டியவர்களிடம் சாதகமாக நடந்து கொள்ளுதல்(Nepotism) அவர்களிடம் பரிகாரம் பெறுதல் போன்றவற்றை அறவே ஒழித்தல் வேண்டும்.

பணியாளர் நிர்வாகத்தின் பணிகள்:

பணியாளர் நிர்வாகத்தின் முக்கிய பணிகள்

அ) மனித வளத்தை திட்டமிடுதல்.

ஆ) பணியமர்த்தல்

இ) பயிற்சி அளித்தல்

ஈ) பதவி உயர்வு

உ) ஊதிய கட்டமைப்பு

ஊ) பணியாளர் நலம்

6.3.1 குடிமைப் பணிகள் – பொருள் மற்றும் சிறப்பியல்புகள்

சுதந்திரமான, நிலையான பாகுபாடற்ற குடிமைப் பணியின் நல் அம்சங்கள் வருமாறு

அ) நம்பகமான பணியாளர் நியமனத்தில் ஊழல் பேர்வழிகள் மற்றும் சொந்த பந்தங்களை நியமிப்பதை தவிர்க்கின்றது. அழுகிய நிர்வாகத்தில் பாகுபாடுகள், முறைகேடுகள், ஊழல்கள் மலிந்துள்ளன.

ஆ) தற்காலத்தில் கொள்கை உருவாக்கம் என்பது ஆழமான அறிவும், பொது விவகாரத்தில் நிபுணத்துவமும் கோருவதாக உள்ளது. நிரந்தரமான குடிமைப் பணி மூலம் கொள்கை உருவாக்கத்தில் தொடர் நினைவாற்றலும், திறன் கட்டுதலும் நிறுவனமயப்படுத்துகிறது.

இ) நிரந்தரமான பாகுபாடற்ற குடிமைப் பணியால் மட்டுமே நீண்ட கால சமூக நலன் இலக்குகளை திட்டமிட்டு அடைய முடியும். அரசியல்வாதிகள் பெரும்பாலும் அரசியல் லாபம் கருதி குறுகிய கால சமூக நலன் திட்டத்திற்கே முன்னுரிமை அளிப்பர்.

ஈ) நிலையான குடிமைப் பணி பெரிய நாடுகள் மற்றும் பல்வேறு கலாச்சாரங்கள் உடைய நாடுகளின் ஒருங்கிணைப்பில் முக்கிய பங்களிக்கின்றது. மேலும் நாடு முழுவதும் சீரான பொது நிர்வாகத்தை வழங்க இயலும்.

உ) நிலையான குடிமைப் பணி இதர நம்பகத்தன்மை கொண்ட தொழில்கள் போன்றே நாளடைவில் தனது செயல்பாடுகளுக்கு அற ரீதியான நெறிகளை உருவாக்கிக் கொள்ளும்.

குடிமக்கள் மற்றும் அதிகாரவர்க்கம்:

மக்களாட்சியின் அடிப்படை குடிமக்களே ஆவர். பண்டையக் காலத்தில் ஒரு நாட்டின் முக்கியப் பணி எதிரிகளிடம் இருந்து எல்லையைப் பாதுகாத்தல், உள்ளாட்டு அமைதி மற்றும் தயார்நிலை என மூன்றடுக்கு கொண்டதாக மட்டுமே இருக்கும். அக்காலக்கட்டத்தில் அதிகாரவர்க்கத்தின் பணிகள் கட்டுக்குள்ளாகவும், வாளின் வலிமை அதிகாரமிக்கதாகவும் இருக்கும். நில உறவுகள் சிக்கலடைந்து ராணுவத்துடன் பெரிய அதிகாரவர்க்கமும் தேவைப்பட்டது. தற்போதைய நவீன காலக்கட்டத்தின் அதிகாரவர்க்கத்தின் பணிகள் மேலும் பன்மடங்கு அதிகரித்துள்ளன. 20ஆம் நூற்றாண்டில் பொதுமக்களின் திறன்களுக்கு வாய்ப்பளித்தல், துன்பங்களை நீக்குதல் போன்றவை நாகரிக அரசின் முத்திரைகளாக ஆகின. சுயமரியாதை, சமவாய்ப்புகள், நீதி ஆகியன அதிகாரவர்க்கத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது.

இந்தியா மக்களாட்சி என்ற போதிலும் அதிகமாக மையப்படுத்தப்பட்ட ஒரு அரசு ஆகும். நூறு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டில் மிகக் குறைவான நபர்களே முக்கியமான முடிவுகளை எடுக்கும்

12th_Political Science_Tamil_Unit_6.indd 149 04-06-2019 11:34:28

நிலையில் உள்ளனர். இவ்வாறன கட்டமைப்பில் பி.எம்., சி.எம்., டி.எம். அறிகுறிகள் இன்னமும் நமது அமைப்பையும் மக்களின் உளவியலையும் ஆட்டிப்படைப்பதாக உள்ளது.

வாக்குக்கும் பொது நலனுக்கும் தொடர்பு இல்லாத நிலை முழுமையாக உருவாகி யுள்ளது. தொலைதூர, மையப்படுத்தப்பட்ட அரசால் மக்களுக்கு இன்றியமையாத தேவைகளான குடிநீர், சுகாதாரம், கல்வி, உடல் நலம், மின்சாரம், சாலைகள், போக்குவரத்து, வேளாண்மை உற்பத்தி, சந்தை இணைப்பு, கூடுதல் மதிப்பு, திறன் மேம்பாடு உள்ளிட்ட முக்கிய தேவைகளை நிறைவேற்றித் தரும் மன உறுதியோ தகுதியோ இல்லாமல் இருக்கிறது.

மாவட்ட ஆட்சியரே ஆட்சி அதிகாரத்தின் உருவகமாக இருக்கிறார். இதனால் அவ்வப்போது அரசுகள் மாறினாலும் அரசு சேவைகளின் தரத்தில் எவ்வித மாறுதலும் காணப்படவில்லை. அரசியல் என்பது ஆட்சி அதிகார விளையாட்டாகவும் அதிகாரம் என்பது தனிப்பட்ட நலன்களுக்கானதாகவும் மாறியுள்ளது. வாக்கு என்பது விலை கொடுத்து வாங்கத்தக்க நுகர்பொருளாகவோ அல்லது எந்த விளைவுகளும் அற்ற பண்டமாற்றாகவோ மாறிவிட்டது. மக்களாட்சி என்பது அதிகாரத்துக்கான தேர்தல் போட்டி என்பதாகவும், தேர்தல் என்பது மக்கள் நலனுக்கானதாக அல்லாமல் போட்டியிடுவோரின் சுய நலனுக்கானதாகவும் சுருங்கி விட்டது. வரி செலுத்தும் சாமானியர் மூல வளங்களைப் பயன்படுத்தும் வழி வகைகளோ, அதற்கான உரிமைக் குரலோ அற்றவர்களாக உள்ளனர். தொலைவில் இருந்து இயக்கப்படும் அதிகாரவர்க்கம் தாம் யாருக்காகப் பணியாற்றுகிறதோ அந்த மக்களுக்குக் கடமைப்பட்டதாக இல்லை.

குடிமைப் பணியினை குடிமக்கள் மையப் பணியாக மாற்றுவதற்கான முக்கிய கொள்கை நெறிகள்

1. சட்டத்தின் ஆட்சி
2. நிறுவனங்களை பொறுப்புணர்வும் கடமைப்பாடும் உள்ளவையாக மாற்றுதல்.
3. குடிமக்களின் ஆக்கப்பூர்வ பங்களிப்பு – அதிகாரபரவலாக்குதல் மற்றும் பிரதிநிதித்துவம்.
4. வெளிப்படைத்தன்மை
5. குடிமைப் பணிச் சீர்த்திருத்தம்
6. ஆளுகையில் அறநெறி
7. தொடர்ச் சீர்திருத்தம்

6.3.2 அனைத்து இந்தியப் பணிகள், மத்தியப் பணிகள் மற்றும் மாநிலப் பணிகள்

இந்திய நிர்வாக அமைப்பின் தனிச்சிறப்பு என்னவெனில். இப்பணிகள் மத்திய-மாநில அரசுப் பணிகளுக்கும் பொதுவான இந்திய ஆட்சிப் பணி உருவாக்கப்பட்டதாகும். மத்திய, மாநில அரசுகள் இரண்டிலும் இல்லாத நிர்வாகப் பணியாளர்களைக் கொண்டது இது. இவர்கள் எந்த நேரத்திலும் எந்த அரசுப் பணிக்கும் மாற்றப்படலாம். இந்த அலுவலர்கள் அனைத்து இந்திய அளவில் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், பொது தகுதியும் ஒரேஊதிய விகிதமும் கொண்டவை. இவர்கள் ஊதியம் மாநிலத்துக்கு மாநிலம் மாறுவதில்லை. ஒரு சீரான உரிமைகள், சன்மானங்கள் என ஒரு சீரான தகுதியுடன் ஒரு சீரான பணி வடிவத்தினைப் பெற்றுள்ளது.

இதர கூட்டாட்சிகள் போன்றே இந்திய அரசமைப்பில் மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் எனும் அடிப்படையில் பிரிக்கப்பட்டு தமக்கான அரசுப் பணிகளை நிர்வகித்து வருகின்றன. பாதுகாப்பு, வருமான வரி,அஞ்சல் மற்றும் இரயில் போக்குவரத்து ஆகியத் துறைகள் மத்திய அரசு கட்டுப்பாட்டின் கீழ் வரும். இதற்கான பணியாளர்கள் மத்திய அரசின் கட்டுபாட்டில் வருவர். இதே போன்று, மாநில அரசு தனக்கென தனியான துறைகளைக் கொண்டுள்ளது.

12th_Political Science_Tamil_Unit_6.indd 150 04-06-2019 11:34:28

அனைத்து இந்தியப் பணிகள்



அனைத்து இந்தியப் பணிகள் மத்திய மாநில அரசுகளுக்குப் பொதுவாக உருவாக்க வேண்டும் என அரசமைப்பு விதிகள் கூறுகிறது. அனைத்து இந்தியப் பணிகள் சட்டம் 1951 மூலம் அனைத்து இந்தியப் பணிகளுக்கான நியமன விதிமுறைகள் மற்றும் பணி நிலைமை குறித்து மத்திய அரசு விதிமுறைகளை உருவாக்கலாம். தற்போது இந்தியாவில் மூன்று அனைத்து இந்திய பணிகள் உள்ளன. அவைகள் முறையே இந்திய ஆட்சிப் பணி (IAS), இந்தியக் காவல் பணி(IPS) மற்றும் இந்திய வனப் பணி(IFS). இ.ஆ.ப/இ.கா.ப/இ.வ.ப பதவி உயர்வு விதிகளின் படியே அனைத்து இந்தியப் பணிகள் கிளை கடைப்பிடிக்கிறது.

அனைத்து இந்தியப் பணி விதிமுறைகள் அடிப்படையில் இருவழிகளில் நியமிக்கப்படுகின்றனர்.

இரண்டு வழிமுறைகளில் அகில இந்தியப் பணிக்கு பணியமர்த்தப்படுகின்றன.

i. **நேரடி நியமனம்:** ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்தும் குடிமைப் பணிகள் தேர்வுகள் மூலம் செய்யப்படுகின்றது.

ii. **பணி உயர்வு:** அரசுத் துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளை பதவி உயர்வு அடிப்படையில் அனைத்து இந்தியப் பணிக்கு தேர்வு செய்தல்.

இந்திய ஆட்சிப் பணி(IAS):

இந்திய ஆட்சிப் பணி என்பது இந்திய குடிமைப் பணியிலிருந்து தோன்றியதாகும். அனைத்து இந்தியப் பணி எனும் அளவில் இறுதியில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வந்தாலும் உடனடியாக அவர்களின் எஜமான் மாநில அரசுதான். இந்த அலுவலர்களுக்கான ஊதியம், ஓய்வூதியம் மாநில அரசால் வழங்கப்படும். ஆனால் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம், அபராதம் விதிக்கும் அதிகாரம் மத்திய அரசிடமே உள்ளது. இது, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணைய ஆலோசனையின்படி வழிநடத்தப்படுகிறது. மாநிலப் பிரிவின் எண்ணிக்கை முடிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் பணி நியமனத்தின் போதே மாநிலப் பிரிவுகளாக நியமிக்கப்படுகிறார்கள். இருப்பினும், ஒன்று அல்லது இரண்டு பணிக்காலங்கள் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த மாநிலப் பிரிவு அலுவலர்கள் மத்திய அரசுப் பணிக்கு மாற்றப்பட முடியும். பெரும்பாலான அனைத்து இந்தியப் பணியாளர்கள் பணிக்காலத்தில் ஒரு முறையாவது மத்திய அரசுப் பணிக்கு மாற்றப்படும் வாய்ப்பு உள்ளது. பலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளும் இவ்வாய்ப்பு கிடைக்கின்றன. மூத்த அதிகாரிகளை செயலகத்துக்கு உள்ளும் வெளியிலும் மாற்றும் நடைமுறை அதிகாரபூர்வ நிறுத்தம் என்று அழைக்கப்படுகிறது.



இது மத்திய மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பணியைச் சார்ந்த அதிகாரியின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் மாநில அரசால் வழங்கப்படும். ஆனால், அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசணையின் பெயரில் மத்திய அரசால் மட்டுமே எடுக்க முடியும். இவ்வதிகாரிகள் நியமனம் செய்யப்படும் போது, மாநில

12th_Political Science_Tamil_Unit_6.indd 151 04-06-2019 11:34:28

அடிப்படையில் அவர்களுக்கு பணி ஒதுக்கப்படுகின்றது. மாநிலங்களில் பணிபுரியும் இவ்வதிகாரங்களில் மத்திய அரசிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதவி (Tenure) காலத்திற்கு பணிபுரியலாம். ஒரு பதவிக்காலம் என்பது மூன்று அல்லது நான்கு அல்லது ஐந்து ஆண்டாக இருக்கலாம்.

இந்திய ஆட்சிப் பணி பன்முகத் தன்மைக் கொண்டது. இப்பணியில் அமர்த்தப்படும் அதிகாரிகள் பல்வேறுபட்ட பணிகளை மேற்கொள்வார்கள். உதாரணமாக, சட்டம் ஒழுங்கு, வரிவசூல், வியாபாரங்களை ஒழுங்குமுறை செய்தல், வாணிபம் மற்றும்

குடிமைப் பணி தேர்வுக்கான தற்போதைய முறை

இப்பணிக்கான போட்டி தேர்வு மூன்று தொடர்ச்சியான கட்டங்களைக் கொண்டுள்ளது.

அ) குடிமைப் பணி (முதல் நிலை) தேர்வு

ஆ) குடிமைப் பணி (முதன்மை) தேர்வு, மற்றும்

இ) நேர்முகத் தேர்வு

அ) குடிமைப் பணி (முதல் நிலை) தேர்வு

இத்தேர்வு இரண்டு தாள்களை கொண்டுள்ளது. அவ்விரண்டிலும் தேர்ச்சி பெறுவது கட்டாயம். ஒவ்வொரு தாளுக்கும் தலா 200 மதிப்பெண்கள்.

i. கொடுக்கப்பட்டிருக்கும் பல விடைகளுள் ஒன்றை தேர்வு செய்யும் விதத்தில் இரண்டு தேர்வுகளும் அமைந்திருக்கும். இரண்டு தாள்களுக்கும் தலா இரண்டு மணித்துளிகள் வழங்கப்படும்.

ii. குடிமைப் பணி தேர்வில் CSAT தேர்வு ஒரு தகுதித் தேர்வாகும். அதில் குறைந்தபட்சம் 33% மதிப்பெண் பெறுவது அவசியமாகும்.

iii. கேள்விதாள்கள் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் அமைக்கப்பட்டிருக்கும்.

ஆ) குடிமைப் பணி (முதன்மை) தேர்வு.

முதன்மை எழுத்துத்தேர்வானது கீழ்கண்ட தாள்களை கொண்டிருக்கும்.

இரண்டு தேர்ச்சி தாள்கள்

தாள்–அ

(அரசமைப்பின் எட்டாவது அட்டவணையில் கூறப்பட்டுள்ள ஏதாவது ஒரு இந்திய மொழியினை தேர்வு எழுதுபவர் தேர்ந்தெடுக்க வேண்டும்) **300 மதிப்பெண்கள்**

தாள்–ஆ

- ஆங்கிலம்
- தகுதியடிப்படையில் கணக்கிடப்படும் மதிப்பெண்கள்

தரவரிசைக்கான ஏழு தாள்கள்

தாள்–1

- கட்டுரை **250 மதிப்பெண்கள்**

தாள்–2

- பொதுத் தாள் –1 (இந்திய மரபு மற்றும் கலாச்சாரம், சமூக மற்றும் உலக வரலாறு மற்றும் புவியியல்) **250 மதிப்பெண்கள்**

தாள்–3

- பொதுத் தாள் –2 (ஆட்சி, அரசியலமைப்பு, அரசியல், சமூக நீதி மற்றும் சர்வதேச உறவுகள்) **250 மதிப்பெண்கள்**

தாள்–4

- பொதுத் தாள் –3 (தொழில்நுட்பம், பொருளாதார மேம்பாடு, பல்லுயிர், சூழல், பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை) **250 மதிப்பெண்கள்**

தாள்–5

- பொதுத் தாள் –4 (அறநெறி, நாணயம் மற்றும் கூர்மதி) **250 மதிப்பெண்கள்**

தாள்–6

- விருப்பப் பாடம் – தாள் 1 **250 மதிப்பெண்கள்**

தாள்–7

- விருப்பப் பாடம் – தாள் 2 **250 மதிப்பெண்கள்**
- கூட்டுத்தொகை (எழுத்து தேர்வு) **1750 மதிப்பெண்கள்**
- ஆளுமை சோதனை **275 மதிப்பெண்கள்**

மொத்தம் **2025 மதிப்பெண்கள்**

12th_Political Science_Tamil_Unit_6.indd 152 04-06-2019 11:34:28

தொழில், மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு வளர்ச்சி பணிகள். காலனி ஆதிக்கக்கால குடிமைப் பணியை ஒப்பிடுகையில் நீதித்துறை சார்ந்த பணிகளை தவிர அனைத்து பணிகளையும் கையாளுகின்றனர். எனவே, இப்பணி பொதுமைப்பட்ட பணி என்றழைக்கப்படுகிறது. இப்பணியை சார்ந்த அதிகாரிகள் எந்த துறையிலும் பணியமர்த்தப்படலாம்.

இந்தியக் காவல் பணி (IPS)



இந்தியக் காவல் பணியானது, சுதந்திர காலக்கட்டத்திற்கு முன்பே தோன்றியது. இப்பணி இந்திய ஆட்சிப்பணியிலிருந்து இரண்டு வழிகளில் வேறுபடுகிறது.

i) பெரும்பான்மையான அதிகாரிகள் மாநிலத்திலேயே பணிபுரிகின்றனர். ஏனெனில், மத்தியில் காவல் துறை சார்ந்த மிகச் சில பணிகளே உள்ளன.

ii) இவர்களின் ஊதியம் மற்றும் நிலை இந்திய ஆட்சிப் பணியைவிடக் குறைவானது.

இவர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இ.ஆ.ப(IAS), இ.கா.ப(IPS), இ.வ.ப(IFS) ஆகிய பதவிகளுக்கு பொதுவான ஒரு தேர்வின் மூலம் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கின்றனர். இந்தியக் காவல் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் ஐந்து மாத அடிப்படைப் பயிற்சி பெற்ற பின்னர், சர்தார் பட்டேல் தேசிய காவல் பயிற்சி நிலையத்தில் (ஹைதராபாத்) சிறப்புப் பயிற்சி பெறுகின்றனர். குற்ற உளவியல், குற்றங்களை கண்டுணர்தல், ஊழல் தடுப்பு மற்றும் பேரிடர் கால செயல்பாடுகள் ஆகியவற்றில் பயிற்சி பெறுகின்றனர். அவர்களுக்கான பாடத்திட்டம் குற்ற உளவியல், குற்றங்களைத் தடுப்பதற்கான அறிவியல் உபகரணங்களைக் கையாள்வது, ஊழலைத் தடுப்பதற்கான முறைகள், நெருக்கடிகால நிவாரணங்களைக் கற்றல் ஆகியன உள்ளடக்கியதாக இருக்கும். ஓராண்டு பயிற்சியை நிறைவுசெய்த பின்னர் தகுதிகாண் நிலையினர் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். பின்னர் அந்த நபர் காவல்துறை உதவி கண்காணிப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஆனால், இதற்கு முன் அவர் ஓராண்டு பயிற்சி நிரலை நிறைவு செய்தாக வேண்டும். இக்கால கட்டத்தில் ஓர் இளநிலை அதிகாரி மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சி நிறைவுற்ற பின் உதவிக் காவல் கண்காணிப்பாளராக (ASP) பணியில் அமர்த்தப்படுகின்றனர்.


இந்தியக் காவல் பணி ஓர் அனைத்து இந்தியப் பணி என்பதால் அவர்கள் மத்திய அரசு கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றனர். அதே நேரம் மாநில பதவி நிலைகளில் அமர்த்தப்படுகின்றனர். இந்தியக் காவல் பணியானது, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் மேற்பார்வையிடப்படுகிறது. இருப்பினும், பணியாளர் கொள்கைகள் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தங்களின் மூலமே வரையறை செய்யப்படுகிறது.

இந்திய வனப் பணி

விடுதலைக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஒரே அனைத்து இந்தியப் பணி இந்திய வனப் பணி ஆகும். நாடாளுமன்ற சட்டம் 1963இன் கீழ் இது நடைமுறைக்கு வந்தது. இதன் ஊதியம் மற்றும் பணி தகுதி மற்ற இரு பணிகளுக்கும் –(இ.ஆ.ப., இ.கா.ப.,) கீழானவை ஆகும். இதற்கான தேர்வுகள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தனியாக நடத்தப்படும்; அவை, எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு என இரு நிலைகளைக் கொண்டவை. இது அனைத்து இந்தியப் பணி

12th_Political Science_Tamil_Unit_6.indd 153 04-06-2019 11:34:29

என்றபோதிலும் அதன் தன்மை பொதுவான குடிமைப் பணி போன்றதே. ஆனாலும், தனிச்சிறப்பு ஆக்கப்பட்டதும், அதிகாரம் கொண்டதுமாக இருக்கிறது. இப்பணிகள் பணியாளர் மற்றும் சீர்திருத்தத்துறை மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. அனைத்து இந்தியப் பணிகளுக்கான நியமனம், ஒழுங்குமுறைகள், பணி நிலைகள் ஆகியனவற்றை இத்துறையே உருவாக்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



நியமனம் பெற்றநபர்கள் இதர அனைத்து இந்திய மத்தியப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட நபர்களுடன் மூன்று மாத அடிப்படைப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அடிப்படை பயிற்சிகளை நிறைவு செய்த பின்னர் தகுதிகாண் நிலை பயிற்சிகளை டேராடூனில் உள்ள இந்திய வனத் துறை பயிற்சி மையத்தில் இரண்டு ஆண்டுகள் மேற்கொள்ள வேண்டும். அங்கு கடுமையான பயிற்சிகள் அளிக்கப்படும். பயிற்சியைத் தொடர்ந்து அதற்கான தேர்விலும் தேர்ச்சி பெற்ற பின்னரே பணி ஒதுக்கப்படும். அனைத்து இந்தியப் பணிகள் போன்றே இந்திய வனப் பணிகளும் பிரிவு அடிப்படையிலான பணி ஆகும். மத்திய பணிகளில் ஓராண்டு மாற்றுப்பணியாளராக பணி செய்த பின்னர் அவரவர் பிரிவு மாநிலங்களுக்கு அனுப்பப்படுவர்.

பிற அனைத்து இந்தியப் பணிகள் போல் இல்லாமல் மத்திய குடிமைப் பணிகள் மத்திய அரசின் தனிக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. இதன் உறுப்பினர்கள் மத்திய அரசில் இருந்தே நியமிக்கப்படுகின்றனர். மத்திய அரசின் குடிமைப் பணிகள் நிறுவப்பட்ட பணிகளான மத்திய குடிமைப் பணிகளும் நிறுவப்பட்ட குடிமைப் பணிகளுக்கு வெளியில் உருவாக்கப்படும் குடிமைப் பணிகளையும் உள்ளடக்கியது ஆகும்; இவை பொது மத்தியப் பணிகளாகத் தொகுக்கப்பெறுகின்றன. இவை இரண்டுமே பிரிவுகள் *1,2,3* மற்றும் *4* என கீழிறக்க நிலை பணிநிலையிடங்களைக் கொண்டுள்ளன.

இரண்டு குடிமைப் பணிகளுக்கும் நியமன அதிகார அமைப்பு ஒன்றுதான் என்பதால் அனைத்து இந்திய பணிகள், மத்திய குடிமைப் பணிகள் என இரு பிரிவுகள் வகைப்படுத்தல் ஏன் எனக் கேட்கலாம். ஆனால், ஒரே ஒரு முக்கிய வேறுபாடு காணப்படுகிறது. அது என்னவென்றால், அனைத்து இந்திய பணிகளின் கீழ் மத்திய அரசு, மாநில அரசுகள் இரண்டின் கீழும் பணியாற்ற நேரிடும். மேலும், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் எந்த பணிக்கும் நியமிக்கப்படலாம். ஆனால், மத்திய அரசு பொதுப் பணிகள் குறிப்பிட்ட பணிகளுக்கு மட்டுமே நியமிக்கப்படுகின்றன. இதன் மூலம் வேறுபாடு நியாயப்படுத்தப்படுகிறது,

பணி அமர்த்தல்

மத்திய அனைத்து இந்தியக் குடிமைப் பணித் தேர்வுகளால் வகுப்பு I மற்றும் II சார்ந்த அதிகாரிகள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்படுகின்றனர்.

இந்திய வெளியுறவுப் பணிகள்

மத்திய குடிமைப் பணிகள் வகுப்பு *1* – பிரிவின்கீழ் வரும் இந்திய வெளியுறவுப் பணிகள் நாட்டு விடுதலைக்குப் பின்னர் உருவாக்கப்பட்டவை ஆகும். இப்பணிகள் முழுமையும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வருபவை. அனைத்து இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுகளில் மேல் நிலைத் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மத்தியக் குடிமைப் பணிகளிலேயே மிக உயர்ந்த கவுரவமும், தகுதிநிலையும், ஊதியமும், ஆதாயமும் கொண்டவை இந்திய வெளியுறவுப் பணிகள் ஆகும். இப்பணிகளில்

12th_Political Science_Tamil_Unit_6.indd 154 04-06-2019 11:34:29

நியமிக்கப்படுபவர்கள் உள்நாட்டிலும் அயல் நாடுகளின் தூதரகங்களிலும் பணியாற்றக் கடமைப்பட்டவர்கள். இத்துறை இந்திய வெளியுறவு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்திய வெளியுறவுப் பணியாளர்கள் நிர்வாகத்தில் மத்தியப் பணியாளர் துறையும் பங்கெடுக்கிறது. மத்திய நிதி அமைச்சத்தின் பணியாளர்களையும் நிர்வகிக்கும் இத்துறை வெளியுறவுப் பணியாளர்களின் பணி வரைகளையும் ஊதிய அலகுகளையும் இதர நிதி அம்சங்களையும் வரையறை செய்கிறது. சலுகைகள், படிகளைப் பொறுத்தவரையில் இதர துறைப் பணியாளர்களைவிட வெளியுறவுப் பணியாளர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் ஆவர்.

அன்னிய நாட்டுப் படிகள் பெற இவர் தகுதியானவர்கள். இது கீழ்க்காணும் நிலைகளில் வழங்கப்படுகின்றன: அ) உள்ளூர் வாழ்க்கைச் செலவு ஆ) இதர தேவையான செலவுகளுக்கான படிகள் அவர்கள் உள்நாட்டில் பணியாற்றினாலும் அயல் நாட்டில் பணியாற்றினாலும் உள்நாட்டில் அவருக்கு நிகரான பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்க்களுக்கு அனுமதிக்கப்பட்ட விதத்திலேயே அனுமதிக்கப்படும்; கூடுதல் செலவினங்களைப் பணியாளர்களே ஏற்க வேண்டும். இ) அயல்நாடுகளின் பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்களின் பிரதிநிதித்துவ செலவினங்கள் அயல் நாடுகளில் ஒரு தனியாக எதிர்கொள்ளும் வீதத்திலேயே அவரது அலுவலக நிலைத் தகுதியினால் வழங்கப்படும்.

இந்திய வெளியுறவுப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மூன்று ஆண்டுகள் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்கு அவர் ஒரு மாவட்டத்தோடு இணைக்கப்பட்டு நடைமுறைப்பணிகளில் பயிற்சி மேற்கொள்வார். மேலும், செயலகப் பயிற்சியும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பெற வேண்டும்.

6.3.3 ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் – அமைப்பு, அதிகாரங்கள், பணிகள் மற்றும் விதிகள்



வரலாற்றுப் பார்வை

இந்தியாவில் அரசு பணியாளர் தேர்வாணையம் உருவாவதற்கான வித்து எப்போது நடப்பட்டது என்றால் 1919 மார்ச் 5 அன்று இந்திய அரசமைப்பு சீர்திருத்தப்பட்ட நாளை குறிப்பிடலாம். அப்போது அரசு அறிவித்த முதல் சீர்திருத்தங்களில் சில நிரந்தரமான அரசு பணிகளுக்கு ஒழுங்குமுறைகளுடன் கூடிய நியமன முறையின் தேவை உணரப்பட்டு, இதற்கான நிரந்தர பணி ஆணைய அமைப்பினை உருவாக்கப் பரிந்துரைக்கப்பட்டது. இதன்படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்க இந்திய அரசாங்கச் சட்டம், 1919 உறுப்பு 96(சி) வழிவகுத்தது. இதன்படி ஆளுநர்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு செயலர் உருவாக்கும் விதிகளின்படி இந்திய அரசு பணியாளர்கள் நியமனங்களும் கட்டுப்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அச்சட்டம் தெளிவுபடுத்தியது.

சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், தேர்வாணையம் அமைப்பு, செயல்பாடுகள், குறித்து பல மட்டங்களில் தொடர் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. தொடர்ந்து தீர்வுகாண லீ ஆணையம் என அழைக்கப்படும் ராயல் ஆணையம் உருவாக்கப்பட்டது. லீ ஆணையம் தமது அறிக்கையை 1924இல் வழங்கியது. ஒரு சட்டப்பூர்வ அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசாங்கச் சட்டம், 1919-இன் படி தாமதமின்றி உருவாக்கப்பட வேண்டும் என ஆணையம் ஆணையிட்டது.

12th_Political Science_Tamil_Unit_6.indd 155 04-06-2019 11:34:29

இந்திய அரசாங்கச் சட்டம் 1919 உறுப்பு 96(சி) படியும், உடனடியாக தேர்வாணையம் அமைக்க லீ ஆணையம் ஆணையிட்டதன் படியும் இந்தியாவில் முதல் முறையாக அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் 01. 10. 1926ல் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் ஒரு தலைவரும் நான்கு உறுப்பினர்களும் கொண்டிருந்தது. ஐக்கிய ராஜ்ஜியத்தின் உள்துறை குடிமைப் பணிகள் உறுப்பினர் சர்ராஸ் பார்க்கர் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்திய அரசாங்கச் சட்டம், 1919, உறுப்பு 96(சி)துணைப்பிரிவு(2)ன்கீழ்வழங்கப்பட்டுள்ள விதிகளின் படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் (பணிகள்) விதிகள், 1926 உருவாக்கப்பட்டது. இந்திய அரசாங்கச் சட்டம், 1935 மேலும் விரிவு படுத்தப்பட்ட கூட்டாட்சி (மத்திய) மற்றும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் உருவாக வழிவகுத்தது. இதன்படி அரசுப் பணியாளர் தேர்வாணையம் கூட்டாட்சி (மத்திய) பணியாளர் தேர்வாணையமாக 01. 04. 1937ல் மாறியது.

இந்திய அரசமைப்பு செயல்முறைக்கு வந்த ஜனவரி 26, 1950 அன்று கூட்டாட்சி பணியாளர் தேர்வாணையம் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் என பெயர் மாற்றப்பட்டது. அரசமைப்பு உறுப்பு 378 (1)ன் கீழ் கூட்டாட்சி பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்களாக ஆனார்கள்.

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசமைப்பு உறுப்பு 315இன்படி உருவாக்கப்பட்ட அரசமைப்பு நிறுவனம் ஆகும். தேர்வாணையம் ஒரு தலைவர், 10 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு ஆகும். போட்டித்தேர்வுகள், நேர்முகத் தேர்வுகள் மூலம் பணியாளர்கள் நியமனம், பதவி உயர்வு மற்றும் அயல்நாட்டுப் பணி மாறுதல்களுக்கான பொருத்தமான அறிவுரைகள் வழங்குவது, பல்வேறு அரசு பணிகள் நியமனங்கள் குறித்து அரசு கோரும் ஆலோசனைகள் வழங்குவது, நியமன விதிகள் உருவாக்கம், திருத்தம் மேற்கொள்வது, பல்வேறு குடிமைப் பணிகளுக்கான நடத்தை விதிகள் உருவாக்குவது, கூடுதல் சிறப்பு நிலை ஓய்வூதியம், வழக்குச் செலவுகள் அளித்தல் போன்ற விவகாரங்களில் ஆலோசனை வழங்குவது, விளக்கம் கோரி குடியரசு தலைவராலும் மாநில அரசுகளின் ஆளுநர்களும் அனுப்பப்படும் விவரங்களுக்கு ஆலோசனைகள் வழங்குவது, தவிர பணி நியமனம் தொடர்பாக அரசு கோரும் அனைத்து விவரங்களையும் வழங்குவது ஆகிய பணிகளை தேர்வாணையங்களுக்கு அரசமைப்பு பொறுப்பளித்துள்ளது.

அரசமைப்பு பொறுப்பளித்துள்ள அனைத்துக் கடமைகளையும் ஆற்ற ஒரு செயலர் தலைமையில் எண்ணற்ற அலுவலர்கள் / ஊழியர்களைக் கொண்ட ஒரு செயலகம் மூலம் தேர்வாணையங்கள் இயங்குகின்றன. ஆணைய செயலகத்தின் நிர்வாகச் செயல்பாடுகளுடன் ஆணையத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஆணைய அலுவர்கள்/ ஊழியர்கள் தொடர்பான அனைத்துப் பணியாளர் விவகாரங்களையும் ஆணைய நிர்வாகப் பிரிவு மேற்கொள்ள வேண்டும்.

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சட்டப்பூர்வ கடமைகள்

இந்திய அரசமைப்பு உறுப்புகள் 320, 321இன் படி வழங்கப்பட்டுள்ள ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சட்டப்பூர்வ கடமைகள் வருமாறு

1. போட்டித் தேர்வுகள் மூலம் நியமனங்கள்
2. நேர்காணல்கள் மூல நியமனங்கள்
3. பதவி உயர்வு மற்றும் அயல்நாட்டுப் பணி மாறுதல்களுக்கான பொருத்தமான அறிவுரைகள் வழங்குதல்
4. பல்வேறு அரசு பணிகள் நியமனங்கள் குறித்து அரசு கோரும் ஆலோசனைகள் வழங்குவது, நியமன விதிகள் உருவாக்கம், திருத்தம் மேற்கொள்வது, பல்வேறு

12th_Political Science_Tamil_Unit_6.indd 156 04-06-2019 11:34:29

குடிமைப் பணிகளுக்கான நடத்தை விதிகள் உருவாக்குவது,

5. பல்வேறு குடிமைப் பணிகள் தொடர்பான ஒழுங்கு நடவடிக்கைகள்

6. கூடுதல் சிறப்பு நிலை ஓய்வூதியம், வழக்குச் செலவுகள் அளித்தல்

7. குடியரசுத்தலைவரால் தேர்வாணையத்துக்கு அனுப்பப்படும் அனைத்து விவகாரங்கள் குறித்தும் ஆலோசனைகள் வழங்குவது

8. பணி நியமனம் தொடர்பாக அரசு மற்றும் மாநில ஆளுநர்கள் கோரும் அனைத்து விவரங்களையும் வழங்குவது

நியமனங்கள் கீழ்க்காணும் நான்கு வழிகளில் ஒன்றில் மேற்கொள்ள வேண்டும்

1. நேரடி நியமனம்
2. பதவி உயர்வு
3. இந்திய வெளியுறவுப் பணி / இணைப்பு
4. இரண்டும் இணைந்த முறை (வெளியுறவுப் பணி + இணைப்பு)

நேரடி நியமனம்

நேரடி நியமனங்கள் பெரும்பாலும் கீழ்க்காணும் இரு வழிகளில் நடைபெறுகின்றன

1. போட்டித் தேர்வுகள் மூலம்

2. தேர்வு மூலம் பல்வேறு குடிமைப் / பாதுகாப்புப் பணிகளுக்கு நாட்டின் பல இடங்களில் அமைந்துள்ள தேர்வு மையங்களில் கீழ்க்காணும் தேர்வுகளை ஆணையம் நடத்துகிறது.

i. குடிமைப் பணிகள் (அடிப்படை நிலை) தேர்வு

ii. குடிமைப் பணிகள் (முதன்மை நிலை) தேர்வு

iii. பொறியியல் பணிகள் தேர்வு

iv. ஒருங்கிணைந்த மருத்துவப் பணிகள் தேர்வு

v. இந்திய வனப் பணிகள் தேர்வு

vi. நிலவியலாளர் தேர்வு

vii. இந்திய பொருளியல் பணிகள் / இந்திய புள்ளியியல் பணிகள் தேர்வு

viii. சிறப்பு நிலை ரயில்வே பயிற்சியாளர் தேர்வு (ஒரு ஆண்டு விட்டு ஒரு ஆண்டு)

ix. ஒருங்கிணைந்த பாதுகாப்புப்படைகள் தேர்வு (ஆண்டு தோறும்)

x. தேசியப் பாதுகாப்பு அகாதமி, நேவல் (கடல் படை) அகாதமி தேர்வு (இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை)

xi. மத்தியக் காவல் படைகள் (உதவி கமாண்டென்ட்) தேர்வு

xii. பிரிவு அலுவலர் / சுருக்கெழுத்தர் (கிரேட் பி / கிரேட் 1)

xiii. துறைவாரி போட்டித் தேர்வுகள்

போட்டித் தேர்வுகள் கால அட்டவணை எம்பிளாய்மெண்ட் நியூஸ், ரோஜ்கர் சமாச்சார் இதழ்களில் வெளியாகிறது. எதிர்வரும் தேர்வுகளின் பெயர்கள், அறிவிப்பானை வெளியாகும் தேதி, விண்ணப்பிக்கும் கடைசி நாள், தேர்வு நாள் ஆகிய தகவல்கள் வெகு முன்பாக பெரும்பாலும் முந்தைய ஆண்டு அக்டோபர் மாதமே அறிவிக்கப்படுகிறது.

பெண் விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுக் கட்டணத்தில் இருந்து விலக்கு


15. 07. 2009 வெளியான டி.ஓ.பி.டி கடிதம் எண் 36020/ 03/ 2009 படி ஆணைய தேர்வுகளுக்கான கட்டணத்தில் இருந்து பெண் விண்ணப்பதாரர்களுக்கு கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

12th_Political Science_Tamil_Unit_6.indd 157 04-06-2019 11:34:29

அரசமைப்பு உறுப்புகள்	
உறுப்பு 315	ஒன்றிய, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள்
உறுப்பு 316	உறுப்பினர் நியமனம், பதவிக் கால வரம்பு
உறுப்பு 317	தேர்வாணையம் உறுப்பினர் நீக்கம் மற்றும் இடை நீக்கம்
உறுப்பு 318	தேர்வாணையம் உறுப்பினர்கள், ஊழியர்களுக்கான ஒழுங்குமுறைகளை உருவாக்குதல்
உறுப்பு 319	நடவடிக்கைக்குள்ளாகும் உறுப்பினர்கள் பணியில் தொடர்வதைத் தடுத்தல்
உறுப்பு 320	தேர்வாணையம் பணிகள்
உறுப்பு 321	தேர்வாணையம் பணிகளை விரிவாக்கம் செய்யும் அதிகாரம்
உறுப்பு 322	தேர்வாணையம் செலவினங்கள்
உறுப்பு 323	தேர்வாணையம் அறிக்கைகள்

6.3.4 மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்





மத்தியில் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் இருப்பதுபோல் ஒரு மாநிலத்தில் அரசுப் பணியாளர் தேர்வாணையமும் இயங்குகிறது. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைய வழிவகுத்த அரசமைப்பு உறுப்புகளே (315 முதல் 323 வரை) இதற்கும் வழி வகுக்கிறது. அமைப்பு, உறுப்பினர்கள் நியமனம், நீக்கம், அதிகாரம், பணிகள் மற்றும் சுதந்திரத்தன்மை அனைத்தும் அரசமைப்பு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களுக்கும் வழங்குகிறது.

அமைப்பு

ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆளுநரால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். ஆணையத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை அந்தந்த அரசுகளே நிர்ணயம் செய்துகொள்ள அரசமைப்பு அனுமதிக்கிறது. ஆனால், அது ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டது. மேலும், ஆணைய உறுப்பினர்களில் பாதி பேர் மத்திய மாநில அரசுகளின் நிர்வாகத்தில் 10 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்என்றநிபந்தனைதவிரஉறுப்பினர்கள் தகுதி குறித்து அரசமைப்பு எதுவும் கூறவில்லை. மேலும் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிலைகள் குறித்து ஆளுநரே வரையறை செய்துகொள்ள அனுமதி வழங்குகிறது.

மாநிலஅரசுப்பணியாளர்தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் அல்லது 62 வயது இதில் எது முந்தியதோ அது ஆகும். ஆனால் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் இந்த வயது

12th_Political Science_Tamil_Unit_6.indd 158 04-06-2019 11:34:29

வரப்பு 65 ஆகும். அதேநேரம் ஆளுநருக்கு முறைப்படி பதவி விலகல் கடிதம் அளிப்பதன் மூலம் பதவி விலக முடியும்.

கீழ்க்காணும் இரண்டு சூழ்நிலைகளில் தேர்வாணைய உறுப்பினர்களில் ஒருவரை தற்காலிக உறுப்பினராக ஆளுநர் நியமனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்:

அ. தலைவர் பதவி காலியாக இருக்கும் போது

ஆ. ஏற்கனவே தலைவர் பதவியில் இருப்பவரால் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அலுவல்களை நிறைவு செய்ய இயலாத சூழ்நிலை உருவாகும்போது. புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை அல்லது ஏற்கனவே பதவியில் இருக்கும் தலைவர் தனது அலுவல்களை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும் வரை தற்காலிக தலைவர் தலைவர் அலுவல்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்.

நீக்கம்

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையதின் தலைவர், உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்ட போதும் குடியரசுத்தலைவரால் மட்டுமே ஒருவரை நீக்க முடியும் (ஆளுநரால் அல்ல). ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர், உறுப்பினர்களை நீக்கும் முறையிலேயே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையதின் தலைவர், உறுப்பினர்களையும் குடியரசுத்தலைவர் நீக்கலாம். அவை வருமாறு:

அ. நொடித்துப்போதல் அல்லது கடனில் மோசடி

ஆ. தனது அலுவலகப் பணிகளுக்கு வெளியே ஊதியம் பெறும் ஊழியராகப் பணியாற்றும் போது

இ. உடல் நலம் குறைவு காரணமாக ஒருவரால் அலுவலகப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை என குடியரசுத்தலைவர் கருதும்போது.

இவைதவிர முறைகேடு குற்றத்தின் கீழும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அல்லது உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நீக்க முடியும். இருந்தபோதும் இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தின் கருத்துரை கேட்டும் குடியரசுத்தலைவர் செயல்படலாம். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் நீக்கத்துக்கான காரணத்தை உறுதி செய்தால் அதனடிப்படையிலும் குடிரசுத்தலைவர் நீக்கம் செய்வார். அரசமைப்பு வழங்கியுள்ள உறுப்புகளின் படி உச்ச நீதிமன்றம் இந்த விவகாரத்தில் வழங்கும் ஆலோசனை குடியரசுத்தலைவரின் முடிவைக் கட்டுப்படுத்தும். இருந்தபோதும், உச்ச நீதிமன்ற விசாரணை நடைபெறும் காலத்தில் மாநில ஆளுநர் குடிரசுத்தலைவரின் நீக்கத்தை நிறுத்தி வைத்து பணி இடை நீக்கம் மட்டும் செய்யலாம்.

மேலும், இப்பொறுத்தப்பாட்டில் அரசமைப்பு 'தவறான நடத்தை' எனும் சொல்லாடலைப் பயன்படுத்துகிறது. ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது ஏதேனும் உறுப்பினர்கள் தவறான நடத்தையில் ஈடுபடும் குற்றத்தில் ஈடுபடுவார்களானால் என கூறுகிறது. அவர் அ) மத்திய அல்லது மாநில அரசின் ஏதேனும் குறிப்பிட்ட ஒப்பந்தம், உடன்படிக்கையில் ஆர்வம் காட்டுபவரானால், ஆ) இத்தகைய ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையில் பங்கேற்பதன் மூலம் உறுப்பினர் வருவாய் அல்லாமல் கூடுதல் வருவாய் அல்லது இதர உறுப்பினர்களுடன் இணைந்து ஆதாயம் கிடைக்கும் என்று கூறுகிறது.

சுதந்திரத் தன்மை

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்றே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களும் சுதந்திரமாகச் செயல்படுவதை உறுதி செய்யவும் பாகுபாடான செயல்பாடுகளில் இருந்து பாதுகாக்கவும் அரசமைப்பு உறுப்புகளில்வழிவகைகள்செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

அ.) அரசமைப்பில் கூறப்பட்டுள்ள முறைகளில் அல்லது வழிகளில் நடந்துகொண்டால் மட்டுமே மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அல்லது உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நீக்க

12th_Political Science_Tamil_Unit_6.indd 159 04-06-2019 11:34:29

முடியும். இதனால் அவர்கள் பதவிக்காலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

ஆ.) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பணி நிலைகள் ஆளுநரால் முடிவு செய்யப்படுகின்றன எனினும் பதவி நியமனத்துக்குப் பின்னர் அவரது சாதகமற்ற நிலைமைக்கு ஏற்ப மாறுதல் செய்ய இயலாது.

இ.) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஊதியம், சலுகைகள், ஓய்வூதியம் என அனைத்தும் அரசின் தொகுப்பு நிதியில் இருந்து வழங்கப்பட வேண்டும். இதனால் சட்டமன்றங்களில் நிறைவேற்றப்பட வேண்டியதில்லை.

ஈ.) ஒரு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் (நீக்கப்படும்போது) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அல்லது ஏதேனும் ஒரு மாநிலத்தின் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது உறுப்பினராக நியமனம் பெரும் தகுதியுடையவராகிறார். ஆனால், அரசின் வேறு பதவிகளுக்கு நியமிக்கப்பட முடியாது.

உ.) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வாணையத்தில் ஒரு முறை பதவி வகித்தபின்னர் மீண்டும் அதே பதவியில் மறு நியமனம்செய்யப்பட முடியாது. அதாவது இரண்டாவது முறை அப்பதவியில் நியமிக்கப்பட முடியாது.

பணிகள்

மத்திய அரசுப் பணியிடங்கள் தொடர்பில் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேற்கொள்ளும் பணிகள் போன்றே மாநில அரசுப் பணியிடங்கள் தொடர்பில் அனைத்து பணிகளையும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழங்குகிறது. அவை பின்வருமாறு:

அ. மாநில அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகள் நடத்துவது

ஆ. பணியாளர் மேலாண்மை தொடர்பாக கீழ்க்காணும் ஆலோசனைகள் வழங்குகிறது

1. குடிமைப் பதவிகள், குடிமைப் பணிகள் தொடர்பான அனைத்து பணிகளுக்கான நியமன முறைகள்.

2. குடிமைப் பணிகள் மற்றும் பதவிகளுக்கான நியமனங்கள், பதவி உயர்வுகள், இதர துறைகளுக்கு பணியிட மாறுதல்கள் போன்றவற்றில் கோட்பாடுகள் கடுமையாகப் பின்பற்றப்படுதல்

3. குடிமைப் பணிகள் / பதவிகளுக்குப் பொறுத்தமான நபர்கள் நியமனம். மாறுதலிலும் இதே நிலை. அயல்நாட்டுப் பணிகள் மாறுதல்களிலும் பொறுத்தமான நபர்கள். பதவி உயர்வுக்கான பரிந்துரைகளை தொடர்புடைய துறைகள் தேர்வாணையத்துக்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டும்.

இ.) ஒரு மாநில அரசில் பணியாற்றும் பணியாளர்களின் பணியினைப் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள்

- எச்சரிக்கை விடுத்தல்
- ஊதிய உயர்வு பிடித்தம்
- பதவி உயர்வு நிறுத்தம்
- இழப்பை ஈடு செய்தல்
- கீழ்நிலைப் பணிக்கு இறக்குதல்
- கட்டாய ஓய்வு
- பணியில் இருந்து விலக்குதல்
- பணியில் இருந்து நீக்குதல்

ஈ.) ஒரு குடிமை ஊழியர் தமது கடமைகளில் இருந்து தவறியதற்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள அந்த ஊழியர் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கான செலவுகள்

உ.) பணியின் போது ஏற்படும் காயங்கள் காரணமாக ஓய்வூதியம் வழங்கக் கோரும் எவ்விதமான கோரிக்கைகள்; அல்லது தொடர்பில் கோரப்படும் ஏதேனும் தொகை.

ஊ.) பணியாளர் மேலாண்மை தொடர்பான இதர அனைத்து விவகாரங்கள்

12th_Political Science_Tamil_Unit_6.indd 160 04-06-2019 11:34:29

இந்த விவகாரங்களில் ஒரு மாநில அரசு தமது மாநில பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கவில்லை எனில் பாதிக்கப்பட்ட அரசு பணியாளருக்கு நீதிமன்றமும் தீர்வு வழங்க இயலாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதாவது, தேர்வாணையத்துடன் கலந்தாலோசிப்பது அல்லது தேர்வாணைய ஆலோசனை இல்லாமல் செயல்படுவது ஆகிய தருணங்களில் மாநில அரசின் நடவடிக்கைகளை நீதிமன்றங்களால் ரத்து செய்ய இயலாது என்பது இதன் பொருளாகும். இதனால், மேற்கூறியவை வழிகாட்டுதல்களாகக் கொள்ளப்பட வேண்டுமேயொழிய சட்டப்பூர்வக் கடமையாகக் கொள்ளப்படக் கூடாது. அதாவது மேலே குறிப்பிட்ட விவகாரங்களில் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசிக்க வேண்டும் என்பது வழிகாட்டு நெறிகள்தாம்; சட்டப்பூர்வ கடமைகள் அல்ல. இதேபோல, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்வு செய்துள்ளது என்பதாலேயே அந்த நபருக்கு பணி வழங்குவது உரிமை என்று கோர முடியாது என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருந்தபோதும் அரசு நியாயமாகவும் பாகுபாடற்றும் நடந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுப் பணிகள் தொடர்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கு ஒதுக்கப்படும் கூடுதல் பொறுப்புகளை மாநிலச் சட்டமன்றங்கள் முடிவு செய்கின்றன. மாநிலச் சட்டமன்றங்கள் மூலம் உள்ளாட்சி பணியாளர் நியமனம், பெருநிறுவன அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்வது தொடர்பான கூடுதல் பொறுப்புகளையும் ஒரு மாநில அரசு தமது தேர்வாணையத்துக்கு அளிக்க முடியும். மாநிலச் சட்டமன்றத்தில் சட்டம் இயற்றுவதன் மூலம் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அதிகார வரம்புகள் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

தமது செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையை ஆண்டுதோறும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் மாநில ஆளுநரிடம் அளிக்கிறது. இந்த அறிக்கையைப் பரிசீலித்து தேர்வாணையத்தின் ஆலோசனைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதற்கான காரண–காரிய விளக்கங்களுடன் கூடிய தமது விளக்கத்துடன் மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் ஆளுநர் முன் வைப்பார்.

வரம்புகள்

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நிர்வாக வரம்புக்கு வெளியிலும் சில விவகாரங்கள் நிறுத்தப்படுகின்றன. அதாவது இவ் விவகாரங்களில் மாநில அரசு தமது தேர்வாணையத்தின் ஆலோசனைகளைப் பெற வேண்டியதில்லை. அவை வருமாறு

அ.) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பதவிகள் நியமனங்கள் இட ஒதுக்கீடு செய்யப்படும்போது

ஆ.) பதவிகள், நியமனங்கள் ஒதுக்கீட்டில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் கோரிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது.

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்புக்குள் வராத பதவிகள், பணியிடங்கள், இதர விவகாரங்களை ஆளுநர் நீக்குகிறார். மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கத் தேவையில்லை எனக் கருதும் அரசு பணியிடங்கள், பதவிகள் தொடர்பாக ஆளுநரே ஒழுங்குமுறைகளை உருவாக்கிக்கொள்ள அரசமைப்பு அனுமதிக்கிறது. ஆனால், குறைந்தது 14 நாட்களுக்கு முன் மாநிலச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அவையின் ஒப்புதல் பெற்றே அறிவிக்கப்பட வேண்டும். இதில் சட்டமன்றம் எந்த திருத்தமும் மேற்கொள்ளலாம்; அல்லது நிராகரிக்கலாம். அதாவது, இறுதி முடிவை சட்டமன்றமே மேற்கொள்ளும்.

பங்களிப்பு

ஒரு மாநில அரசுப் பணியிடங்கள் தகுதி அடிப்படையில் நிரப்பப்படுவதைக்

12th_Political Science_Tamil_Unit_6.indd 161 04-06-2019 11:34:29

கண்காணிக்கும் அமைப்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைய வேண்டும் என அரசமைப்பு கருதியது. அரசு பணியிடங்களுக்கான நியமனம், மற்றும் பதவி உயர்வு, ஒழுங்குநடவடிக்கை விவகாரங்களில் ஆலோசனை கோரும்போது ஆலோசனை வழங்குவது ஆகியன தேர்வாணையத்தின் பணிகளாகக் கருதப்பட்டன. பணியிடங்களை வகைமைப்படுத்துதல், ஊதிய விகிதம், பணி நிலைகளை வகுத்தல், பதவி நிலை மேலாண்மை பயிற்சி போன்றவை தேர்வாணையத்தின் பொறுப்பல்ல. இந்த விவகாரங்களை மாநில அரசின் பொது நிர்வாகத் துறை அல்லது பணியாளர் (தனி) துறை மேலாண்மை செய்கிறது. எனவே, மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் என்பது மையப்படுத்தப்பட்ட நியமன முகமை மட்டுமே. மாநிலத்தின் பணியாளர்கள் மேலாண்மை என்பது மாநில அரசின் பணியாளர் (தனி) துறை அல்லது பொது நிர்வாகத் துறையின் பணிகள் ஆகும்.

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையப் பணிகள் வரம்புக்கு உட்பட்டவை மட்டுமல்லாமல் அவை அளிக்கும் ஆலோசனைகளும் அரசைக் கட்டுப்படுத்தாது. ஆணைய ஆலோசனைகளை ஏற்பதும் நிராகரிப்பதும் திருத்துவதும் அரசின் முடிவு ஆகும். ஆனால், இவ்வாறு நிராகரிப்பது அல்லது திருத்துவதும் ஏன் என்பதற்கு அரசு சட்டமன்றத்தில் விளக்கமளிக்க வேண்டும் என்பது ஆணைய ஆலோசனைகளுக்கு உள்ள ஒர் பாதுகாப்பு அம்சம் ஆகும். மேலும் ஒரு சட்டம் இயற்றுவதன் மூலமும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனை செயல்பாடுகளுக்கான விதிகளை உருவாக்க முடியும்.

1964இல் மாநில கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட்ட பின்னர் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பங்களிப்பு பாதிப்புக்குள்ளானது. ஏனெனில் ஒரு குடிமைப் பணியாளருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதில் இரண்டு அமைப்புகளும் ஆலோசிக்கப்படுகின்றன. அப்போது இரண்டு அமைப்புகளும் முரண்பாடான முடிவை மேற்கொள்ளும்போது பிரச்சனை எழுகிறது. இருந்தபோதும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைம் ஒரு சுயாட்சியான அமைப்பு என்பதால் அதன் முடிவுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இறுதியாக, நீதித்துறையில், மாவட்ட நீதிபதிகள் அல்லாத பிற நீதித்துறை பணியிடங்களுக்கான நியமன விதிமுறைகளை வகுக்க மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆலோசிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் மாநில உயர் நீதிமன்றமும் ஆலோசிக்கப்பட்டது.

6.3.5 பணியாளர் தேர்வு ஆணையம்



12th_Political Science_Tamil_Unit_6.indd 162 04-06-2019 11:34:29

பணியாளர் தேர்வாணையத்தின் பணிகள்

1. அ) மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான பதவிகளில் அதிகபட்சம் ₹ 10,500 அல்லது அதற்குக்கீழுள்ள குரூப் 'பி' பிரிவு பணியிடங்களுக்கான நியமனங்கள், ஆ.) மேற்கூறிய பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான பதவிகளில் பணியாளர் தேர்வாணைய (ஸ்டாப் செலக்சன் கமிஷன்) வரம்பிலிருந்து விலக்கப்பட்ட பதவிகள் நீங்கலாக தொழில்நுட்பம் சாராத குரூப் 'சி' பிரிவு பணியிடங்களுக்கான நியமனங்கள் மேற்கொள்ளுதல்.

2. தனது வரம்புக்குட்பட்ட பதவிகள்/ பணியிடங்கள் நியமனங்களுக்கான தேர்வுகள், நேர்காணல்கள் மேற்கொள்ளல் வேண்டும். இத்தேர்வுகள் கூடுமானவரை நாட்டில் பல இடங்களில் நடத்தப்பட வேண்டும். அதேபோல, நியமனங்களும் தொடர்புடைய தேர்ச்சிபெற்ற நபர்களின் சொந்த மாநிலம்/ பகுதிகளுக்கு அருகமைந்த பணியிடங்களில் அமர்த்தப்படுதல் வேண்டும்.

3. குறிப்பாக, கீழ்க்காணும் பணியிடங்களுக்கான நியமனம் திறந்த நிலை போட்டித் தேர்வுகள் மூலம் நியமிக்கப்பட வேண்டும்.

i. கீழ்நிலை பிரிவு எழுத்தர் (எல். டி. சி. லோயர் டிவிசன் கிளார்க்) பணியிடங்கள் – மத்திய அமைச்சரவைச் செயலக எழுத்தர் / இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலக பணியிடங்கள், ஆயுதப்படைகள் தலைமையகங்களின் எழுத்தர் பணியிடங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான எழுத்தர் பணியிடங்கள்.

ii. கிரேட் சி மற்றும் டி சுருக்கெழுத்தர் பணியிடங்கள் – மத்திய அமைச்சரவைச் செயலகம் / இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலகம், ஆயுதப்படைகள் தலைமையகங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள்,

துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான சுருக்கெழுத்தர் பணியிடங்கள். மேலும், முன்னர் குறிப்பிட்ட அலுவலகங்கள், துறைகள் அல்லாத பிற துறைகளிலும் மேற்குறிப்பிட்ட பணியிடங்கள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கியது இப் பட்டியல்.

iii. உதவியாளர்கள் – – மத்திய அமைச்சரவைச் செயலகம் / இந்திய வெளியுறவுத்துறை (பி) பணியிடங்கள், ரயில்வே வாரிய செயலகம், ஆயுதப்படைகள் தலைமையகங்கள் உள்ளிட்ட மத்திய அரசின் கீழுள்ள பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், கீழ்நிலை கிளைகளுக்கான உதவியாளர் பணியிடங்கள்.

iv. ஆய்வாளர்கள் –நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மத்திய கலால் வரி (எக்ஸைஸ்) துறை மாவட்ட அலுவலகங்கள், வருவான வரித்துறை மாவட்ட அலுவலகங்களின் ஆய்வாளர் பணியிடங்கள் மற்றும் பல்வேறு கலால் துறை அலுவலகங்களின் தடுப்பு அலுவலர்கள், சோதனையாளர்கள் (பிரிவெண்டிங் அலுவலர்கள் மற்றும் எக்ஸாமினர்கள்), அமலாக்கத் (என்போர்ஸ்மெண்ட்) துறையின் உதவி அமலாக்க அலுவலர்கள்

v. துணை ஆய்வாளர்கள் – மத்திய புலனாய்வுத் துறை மற்றும் மத்தியக் காவல்துறை அமைப்புகள்

12th_Political Science_Tamil_Unit_6.indd 163 04-06-2019 11:34:29

vi. பிரிவு கணக்காளர்கள், தணிக்கையாளர்கள், கணக்காளர்கள் – இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம், மற்றும் பிற கணக்காளர் துறைகள் ஆகியவற்றின் பிரிவு கணக்காளர்கள், தணிக்கையாளர்கள், கணக்காளர்கள், மத்திய அரசின் கீழ்நிலை அலுவலகங்கள், கிளைகளின் உயர் பிரிவு எழுத்தர் (அப்பர் டிவிசன் கிளார்க்) பணியிடங்கள்.

vii. துணை நிலை பொறியாளர் (சிவில், மின்னியல்) – பொதுப்பணித்துறை பணியிடங்கள், குரூப் 'சி' பிரிவு (தொழில்நுட்பம்). நான் கெஜட்டட், அமைச்சுத் துறை சாராத, பொது மத்திய பணிகள் சார்ந்த பணியிடம்

viii. புள்ளியியல் ஆய்வாளர் (ஸ்டேட்டிஸ்டிக்கல் இன்வெஸ்டிகேட்டர்) – புள்ளியியல் மற்றும் நிரல் (புரோக்கிராம்) அமலாக்கத் துறையின் குரூப் –'4' துணை நிலை புள்ளியியல் பணியிடங்கள் (எஸ்.எஸ்.சி) பணியிடம்

ix. வரி உதவியாளர் – நேரடி வரிகள் வாரியம் மற்றும் கலால், சுங்க வாரியத்தின் கீழுள்ள பல்வெறு ஆணையகங்களின் பணியிடங்கள். நான் கெஜட்டட், அமைச்சுத் துறை சார்ந்த பணியிடம்

x. பிரிவு அலுவலர் (வணிக தணிக்கை) – இந்தியத் தணிக்கை மற்றும் தணிக்கைத் துறை நான் – கெஜட்டட் குரூப் 'பி' பணியிடம்

xi. பிரிவு அலுவலர் (தணிக்கை) – தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் துறை நான் – கெஜட்டட் குரூப்' பி 'பணியிடம்

4. பதவி உயர்வுக்கான துறை சார் தேர்வுகளையும் ஆணையம் மேற்கொள்கிறது

(i) மத்திய அமைச்சரவை செயலக குரூப் டி பிரிவு பணிகள் மற்றும் இந்திய வெளியுறவு பணிகள், ரயில்வே வாரிய செயலக எழுத்தர் பணிகள் / ஆயுதப்படைகள் எழுத்தர் பணிகளிருந்து எல்.டி.சி ஆக பதவி உயர்வு பெற இத்தேர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) குரூப் 'சி' சுருக்கெழுத்தர்கள் - மத்திய அமைச்சரவைச் செயலக குரூப் 'டி' பிரிவு சுருக்கெழுத்தர்கள் பணிகள் மற்றும் இந்திய வெளியுறவு பணிகள், ரயில்வே வாரிய செயலக எழுத்தர் பணிகள் / ஆயுதப்படைகள் சுருக்கெழுத்தர்கள் பணிகளில் இருந்து குரூப் 'டி' பிரிவு சுருக்கெழுத்தர்கள் ஆக பதவி உயர்வு பெற இத்தேர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5. ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளுக்கான தட்டச்சுத் தேர்வுகள் கால இடைவெளியில் நடத்தப்படுகின்றன.

6. ₹9,300 முதல் 34,800 வரை ஊதிய அலகு கொண்ட ₹42,000வரை கிரேட் ஊதியம் பெறும் அனைத்து குரூப் 'பி' பணியிடங்களுக்கும் பல்வேறு மத்திய அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த கிளை அலுவலகங்களுக்கான குரூப் 'சி' பிரிவு தொழில்நுட்பம் சாராத பணியிடங்கள் நியமனங்களுக்கான திட்டங்களையும் உருவாக்குகிறது.

7. ₹10, 500 அதிகபட்ச ஊதிய அலகு கொண்ட குரூப் 'பி' பணியிடங்களுக்கும் அமைச்சகங்கள் / துறைகள் வாரியான தொழில்நுட்பம் சாராத குரூப் 'சி' பணியிடங்களுக்கும் அவ்வப்போது தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

8. அவ்வப்போது மத்திய அரசால் பணிக்கப்படும் இதர பணிகளையும் ஆணையம் மேற்கொள்கிறது.

12th_Political Science_Tamil_Unit_6.indd 164 04-06-2019 11:34:29

6.4 தேர்தல் ஆணையம்



நாட்டில் நியாயமான, நேர்மையான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்திட அரசமைப்பால் நேரடியாக உருவாக்கப்பட்ட நிரந்தரமான, சுயாட்சியான அமைப்பு தேர்தல் ஆணையம். அரசமைப்பு உறுப்பு 324, நாடாளுமன்ற இரு அவைகள், மாநிலச் சட்டமன்றங்கள், குடியரசுத்தலைவர், துணைக் குடியரசுத்தலைவர் தேர்தல்களைக் கண்காணித்தல், வழிகாட்டுதல், கட்டுப்படுத்துதல் ஆகிய அதிகாரங்களை தேர்தல் ஆணையத்துக்கு முழுமையாக வழங்குகிறது. இவ்வாறு, இந்திய தேர்தல் ஆணையம் மத்திய – மாநில அரசுகள் இரண்டுக்குமான பொது அமைப்பாக இயங்குகிறது.

மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகளான பஞ்சாயத்துகள், நகராட்சிகளுக்கான தேர்தல்களை இந்திய தேர்தல் ஆணையம் நடத்துவதில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. இதையொட்டி மாநிலத் தேர்தல் ஆணையங்கள் அமைத்துக்கொள்ள அரசமைப்பு வழி வகுத்துள்ளது.

6.5 இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம்

இந்திய அரசமைப்பு உறுப்பு 148, ஒரு சுயாட்சி அதிகாரம் கொண்ட இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம் (சி.ஏ.ஜி) அமைக்க வழிவகை வழங்கியுள்ளது. தலைமைக் கணக்குத் தணிக்கையாளரே இந்திய கணக்குக் மற்றும் தணிக்கைத் துறையின் தலைவர் ஆவார். அவரே அரசுக் கருவூலத்தின் பாதுகாவலர் எனலாம். மத்திய, மாநில அரசுகள் அனைத்தின் கீழ் இயங்கும் மொத்த நிதி அமைப்பினையும் கட்டுப்படுத்துகிறார்.



நிதி நிர்வாகம் தொடர்பில் இந்திய அரசமைப்பு வகுத்தளித்துள்ள விதிகள், இதனை அமலாக்கம் செய்ய நாடாளுமன்றம் இயற்றியுள்ள சட்டங்கள் ஆகியனவற்றின் படி கண்காணிப்பது இவர் கடமையாகும். இதனால் தான் அரசமைப்புப்படி "முக முக்கியத்துவம் கொண்ட அலுவலர் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்" என டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் கூறினார். இந்திய அரசின் மக்களாட்சி அமைப்பின் அரண்களில் அவர் ஒருவர். இதர அரண்கள்: உச்ச நீதிமன்றம். தேர்தல் ஆணையம், ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகும்.

6.6 நிதி நிர்வாகம்

நிதி நிர்வாகத்தின் நோக்கங்கள்:

வளர்ந்த நாடுகளின் கட்டுப்படுத்த இயலாத சந்தை வளர்ச்சி நிதி நிர்வாகத்துக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தியுள்ளது. இச்சந்தைகள் நிதி பற்றாக்குறைகள், பெரும் கடன்சுமை, மூலதன நிதி பற்றாக்குறை இவையே இதன் பண்புகளாகும். அதேநேரம், நிலைத்த பொருளாதாரம், வளர்ச்சி, சுய – சார்பு, வருவாய் – செல்வப் பகிர்வு வீதத்தில் சமநிலை அனைத்துப் பகுதிகளில் வளர்ச்சி போன்றவற்றை இலக்காக கொண்டு நிதி கொள்கைகள், நிர்வாகம் ஆகிய துறைகளில் ஊக்கங்களை ஏற்படுத்தும் முனைப்பில்

12th_Political Science_Tamil_Unit_6.indd 165 04-06-2019 11:34:30

வளரும் நாடுகள் உள்ளன. அரசு விவகாரங்கள் மேலாண்மையில் அரசியல் கொள்கைகள், பொருளாதார வல்லமை முக்கியம் என்ற போதிலும் நிதி நிர்வாகமும் முக்கியத்துவம் வாய்ந்த பங்கினைக் கொண்டுள்ளது.

அவை பின்வருமாறு:

1. பொதுத்துறை நிறுவனங்கள் நிதி மேலாண்மை
2. திட்டங்கள், நிரல்கள் அமலாக்கம்
3. பொது நலன் மற்றும் சமூக பணிகளுக்கான வழிகள்
4. வளர்ச்சி, வேலை வாய்ப்பு, விலைவாசி கட்டுப்பாடு
5. மூலதன உருவாக்கம்
6. தேசிய நிதியை படைப்பாக்கத்துடன் முதலீடு செய்தல்
7. நாடாளுமன்ற செயல்முறைகளை சீராக்குதல்
8. சமத்துவமும் சம பங்கும்

நிதி நிர்வாகக் கோட்பாடுகள்:

நிதி நிர்வாகத்தில் முக்கியக் கோட்பாடுகளாகக் கீழ்க்கண்டவற்றைப் பட்டியலிடலாம்.

1. பொது நலன், மக்கள் தேர்வு, மக்கள் கொள்கை ஆகியனவற்றை முதன்மையாகக் கொண்ட கொள்கை
2. அரசியல் வழிகாட்டுதல் மற்றும் கட்டுபாட்டுக் கோட்பாடு
3. தொடர்புக் கோட்பாடு
4. நிறுவனத்தினையும் மேலாண்மையையும் ஒருங்கிணைக்கும் கோட்பாடு
5. நீடித்த தன்மை, சமநிலை கோட்பாடு
6. எளிமை, நெகிழ்வுத்தன்மை கோட்பாடு
7. நடத்தை, ஒழுக்கம், சீர்மை கோட்பாடு
8. மக்கள் நம்பிக்கை, கடமைப்பாடு கோட்பாடு

இந்திய நிதி நிர்வாக வரலாற்றின் நான்கு முக்கியக் கால கட்டங்கள்:

காலகட்டம் 1 (1765 – 1858) – அமைப்பு உருவாக்கம் மற்றும் ஸ்திரப்படுத்துதல்

காலகட்டம் 2 (1860– 1919) – முறைமைகள், செயல்பாடுகள் மேம்பாடு

காலகட்டம் 3 (1919 – 1947) – மக்களாட்சிப் படுத்துதல், அதிகாரப்பரவலாக்கல்

காலகட்டம் 4 (1950 முதல் இன்றுவரை) – மக்கள்மயப்படுத்துதல்

புதிய வளரும் போக்குகள் – இந்திய நிதி நிர்வாகம்:

1. நிதிப்பற்றாக்குறையை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல்.
2. வளர்ச்சிசாரா செலவினங்களைக் குறைத்தல்.
3. பற்றாக்குறை இல்லா (ஜீரோ பேஸ்) நிதிநிலை கண்ணோட்டம் உருவாதல்.
4. பொதுத் துறை மீதான அழுத்தம் குறைத்தல்.
5. மக்கள் நலன்கள், பணிகளில் அதிகாரவர்க்க மனோநிலை நீக்கம்.
6. நிதி மேலாண்மை திட்டங்களில் மைய நீக்க பொறுப்புணர்வில் கவனப்படுத்துதல்.
7. தாராளமயம், கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

6.6.1 நிதிநிலை அறிக்கை தாக்கலும் அமலாக்கமும்

நிதிநிலை அறிக்கை சுற்று:

ஒரு நிதிநிலை அறிக்கையின் செயலாக்கம் அதற்கான சட்டம் இயற்றும் நடைமுறைகளைக் கணக்கில் கொண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் ஒரு காலச்சுற்று முறையைக் கணக்கில் கொள்கிறது. நிதிநிலை அறிக்கை நாடாளுமன்ற ஒப்புதல் பெறுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

காலச்சுற்று கீழ்க்காணும் கட்டங்களைக் கொண்டுள்ளது:

- தயாரிப்பு மற்றும் தாக்கல்
- ஒப்புதல்
- நிர்வாகம், தணிக்கை

12th_Political Science_Tamil_Unit_6.indd 166 04-06-2019 11:34:30

ஒரு குறிப்பிட்ட காலத்தில் பல சுற்றுகள் நடைபெறலாம். மீறப்படலாம். பல சுற்றுப்பிரிவுகள் வெவ்வேறு காலகட்டங்களைக் கொண்டுள்ளன.

நிதிநிலை அறிக்கை தாக்கல்:

நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் செயல்முறைகள், நிதிநிலை அறிக்கை தாக்கல் காலத்திலிருந்து ஆறு மாதங்கள் முன்பாக, பொதுவாக செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில், நிதி அமைச்சகத்திடமிருந்து சுற்றறிக்கை பெறப்பட்டதும் தொடங்குகிறது. அந்த சுற்றறிக்கை நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் திட்டம் சார் அம்சங்கள், திட்டம் சாரா அம்சங்கள், வழிகாட்டுதல்கள் என ஒவ்வொன்று குறித்தும் இறுதி மதிப்பீடுகள் சமர்பிக்க தொடர்புடைய துறைகளுக்கு ஒரு கால அளவை நிர்ணயம் செய்து அறிவிக்கும். பொதுவான விதி என்னவென்றால் யார் நிதியை செலவளிக்கப்போகிறார்களோ அவர்களே நிதிநிலை மதிப்பீடுகளையும் உருவாக்க வேண்டும் என்பது ஆகும். நிதி அறிக்கை முன்மொழிவுகள் கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டிருக்கும்.

1. கணக்குகள் வகைமைப்படுத்துதல்
2. நடப்பு ஆண்டின் நிதிநிலை மதிப்பீடுகள்
3. நடப்பு ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகள்
4. கடந்த ஆண்டின் அசல் செலவினங்கள்
5. அடுத்த நிதி ஆண்டுக்கான முன்மொழிவுகள் மதிப்பீடுகள்

நிதி ஆண்டு


1860 இல் முதல் நவீன நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது நிதி ஆண்டு என்பது மே 1 முதல் ஏப்ரல் 30 வரை என்பதாக இருந்தது. இது 1866-இல் இங்கிலாந்து அரசின் நடைமுறையை ஒட்டி ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை என மாற்றிக்கொள்ளப்பட்டது.

செயல்முறை

தமிழ்நாட்டின் சமூக வளர்ச்சி மற்றும் குறியீடுகளை மதிப்பீடு செய்யவும்.

அமர்த்தியா சென் – ஜெகதீஷ் பகவதி இரு மேதைகளின் விவாதம்


அமர்த்தியா சென்


ஜெகதீஷ் பகவதி

பொருளாதார கொள்கை குறித்த விவாதங்கள் இன்று நடப்பதுபோல் என்றும் நடந்ததில்லை. உலக பொருளியல் கல்விப் புலத்தில் இரு பெரும் வல்லுனர்கள் எனக் கருதப்படும் அமர்த்தியா சென் – ஜெகதீஷ் பகவதி இருவரும் இந்திய ஆளும் அமைப்பு எதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என கடும் விவாதங்களில் ஈடுபட்டனர். ஹார்வர்டு பல்கலைக்கழக பொருளாதார, தத்துவ துறை பேராசிரியர் சென் பொருளாதாரத்துக்கான நோபல் விருது பெற்றவர். கொலம்பியா பல்கலைக்கழக பொருளாதார பேராசிரியர் பகவதி உயர் விருதுகளுக்காகப் பல முறை பரிந்துரைக்கப்பட்டவர். இருவருடன் அவினேஷ் தீட்சித் என மூவரும் இந்தியாவின் தலைசிறந்த பொருளியல் அறிஞர்களாகக் கருதப்படுகிறார்கள்.


சென் – பகவதி விவாதங்கள் இந்திய அரசியல் தலைவர்கள் மத்தியில் பெரும் கேள்விகளை எழுப்பின.

மக்களின் உற்பத்தித் திறனும் வளர்ச்சியும் அதிகரிக்க வேண்டுமானால் இந்தியா தனது சமூக கட்டமைப்பில் அதிக முதலீடு செய்யவேண்டும் என சென் வலியுறுத்தினார். பொருளாதார வளர்ச்சி அதிகரித்தால் மட்டுமே போதும்; அதன்மூலம் சமூகத் திட்டங்கள் தொடங்கத் தேவையான மூலதனம் கிடைத்துவிடும் என பகவதி வாதிட்டார். மனித செயலாற்றலை அதிகரிக்க சுகாதாரம் மற்றும் கல்வியில் அதிக முதலீடு

12th_Political Science_Tamil_Unit_6.indd 167 04-06-2019 11:34:30

தேவை என்பது சென் சிந்தனையின் மையமாக இருக்கிறது. இத்தகைய முதலீடுகள் இல்லாமல் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க முடியாது என சென் நம்புகிறார். ஆனால் வளர்ச்சியால் தொடக்கத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரிக்கலாம்; ஆனால், தொடர் வளர்ச்சி மூலம் அரசுக்கு தேவையான வளங்கள் பெருகும். மறு பகிர்வு மூலம் தொடக்க ஏற்றத்தாழ்வினைக் கட்டுப்படுத்த முடியும் என பகவதி கூறுகிறார்.

6.6.2 இந்தியாவின் வரிவகைகள்



ஜி.எஸ்.டி அளவு:

ஜி.எஸ்.டி வரி அளவு 5% – *ஸ்கீம்மர், பால் பவுடர், மீன் உரங்கள், தேயிலை உள்ளிட்டவை.*

ஜி.எஸ்.டி வரி அளவு 12% – *வெண்ணெய், பாலாடைக்கட்டி, ஊறுகாய், பழச்சாறுகள், பற்பசை, மருத்துவம்.*

ஜி.எஸ்.டி வரி அளவு 18% – *பனிக்கூழ், கைப்பெட்டி, குடிநீர், கைகடிகாரம், கதவு.*


ஜி.எஸ்.டி வரி அளவு 28% – *பான் மசாலா, சலவை இயந்திரம், வெற்றிட சுத்தப்படுத்திகள், இயந்திர வாகனங்கள், இயந்திர மிதிவண்டி.*

ஜி.எஸ்.டி–க்குள் வராத பொருள்கள்

சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல், வான் எரிபொருள், இயற்கை எரிவாயு, மது ஆகியவை.

12th_Political Science_Tamil_Unit_6.indd 168 04-06-2019 11:34:30

பொருள்கள் விநியோகம் அல்லது சேவைகள் வழங்குதல்
(பொருள்கள் மற்றும் சேவை வரி – G.S.T)



அருஞ்சொற்பொருள்

❖ **குடிமைப்பணி:** சட்டமன்றம், நீதித்துறை, இராணுவம் இம்மூன்றும் அல்லாத அரசு பணிகள் குடிமைப் பணிகள் ஆகும். இப்பணிகளுக்கான நியமனங்கள் பொதுவாக போட்டி தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. வேலைகளும் மற்றும் பணி செய்வோரையும் அரசாங்கத்தின் மூலம் பணி அமர்த்தப்பட அனைத்து பணியாளர்கள் அரசின் குடிமைக் கிளைகள் மூலம் பணியமர்த்தப்படுகின்றன.

❖ **பணி நியமனம்:** இது தேர்ந்தெடுக்கபடாத அரசுப் பணி ஆகும். பல்வேறு விதமான நிர்வாகம் பதிவுகளின் கீழ் பல்வேறு விதமான நியமனங்கள் நடைபெறுகின்றன. போட்டியில்லா நியமனங்கள் அரசாங்கத்தின் மூலம் பெறப்படுகிறது. இது குடிமைப் பணி பதிவேடுகளில் இடம் பெறாது.

❖ **குடிமைப் பணி மறுசீரமைப்பு:** குடிமைப் பணி திறனை மேம்படுத்தவும், ஆள்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு, சம்பளம், பணியாளர்களின் எண்ணிக்கை, பணியாளரின் செயல்திறன் மதிப்பீடு போன்றவற்றில் உள்ள சிக்கல்களை களைந்து சீர் செய்வது. இதன் உண்மையாள பயன்பாடு பொருளாதாரத்திலிருந்தும், அரசியல் பொருளாதாரத்திலிருந்தும் பெறுகின்றது.

❖ **நேர்மைத் தன்மை:** பொது நிர்வாகத்தில் நேர்மைத் தன்மை என்பது ஒருவர் தன்

12th_Political Science_Tamil_Unit_6.indd 169 04-06-2019 11:34:30

கடமையை நிறைவேற்றுவதில் இருக்கும் நம்பகத்தன்மையை குறிக்கும். ஊழலுக்கும், அதிகார பாகுபாடுகளுக்கும் எதிரான கருத்தியல் போக்கைக் கொண்டது. இது பொறுப்புணர்வும், வெளிப்படை தன்மையையும் உள்ளடக்கியது ஆகும். மேலும் நேர்மைத் தன்மை என்பது தவறிழைக்க இயலாத, ஒரு சிதைவுறா நிலையாகும். நம்பிக்கை, நாணயத்தின் மறு பெயர்தான் நேர்மைத் தன்மை ஆகும்.

❖ **பொது நிர்வாகம்:** பொது நிர்வாகத்தின் உட்கருத்தானது அரசாங்க கொள்கைகளையும் திட்டங்களையும் அமைப்பது மேலும் அரசாங்க அதிகாரிகளின் நடத்தை மூலம் தங்கள் கடமைகளுக்குப் பொறுப்பேற்கச் செய்வது.

❖ **வெளிப்படைத் தன்மை:** மக்களுக்கு தேவையான தகவல்களை தடையில்லாமலும், சரியான நேரத்தில் உண்மையான தகவல்களையும், பொதுத்துறை நிறுவனங்களின் செயல் தகவல்களையும், பொதுத்துறை நிறுவனங்களின் செயல்திறனையும், அதில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகளையும் ஒளிவு மறைவு இல்லாமல் கொடுப்பதே வெளிப்படைத் தன்மை ஆகும். மேலும் அரசியல் ரீதியான அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகளையும், முடிவுகளையும், நடைமுறைகளையும் தெரிவிப்பது ஆகும்.

❖ **மக்கள் நல அரசு:** அரசியல் அமைப்பு என்பது மக்கள் நலவாழ்வில் அரசு காட்டும் அக்கறையிலிருந்து கட்டமைக்கப்படுகிறது. அவர்களுக்கு குறைந்தபட்ச தரமான வாழ்க்கையை வாழ வழி செய்ய வேண்டும். அதாவது தரமான இலவச கல்வி, சீரான சுகாதார வசதிகள், மருத்துவ வசதிகள், ஊனம், நோய், வருமானத்திற்கான ஊக்கத் தொகை, வேலையின்மை ஆகியனவற்றுக்கு எதிரான காப்பீடு, வருவாயை ஈடுகட்டும் குடும்ப சலுகைகள், முதியோர் ஓய்வூதியம் ஆகியனவற்றை இடையூறு இல்லாமல் வழங்க வேண்டும்.

❖ **அதிகார பரவலாக்கம்:** அதிகாரம், செயல்பாடுகள், வள ஆதாரங்கள் இவையெல்லாம் மத்திய அரசாங்கத்தில் இருந்து உள்ளூர் பஞ்சாயத்து வரை இடமாற்றம் செய்தலே ஆகும். நடைமுறையில் பரவலாக்கம் என்பது ஒருவிதமான சமநிலையை மத்திய அரசாங்கம் மற்றும் பஞ்சாயத்துக்கு இடையே ஏற்படுத்துவதே ஆகும்.

❖ **மின்–மக்களாட்சி:** மின்-மக்களாட்சி என்பது செயல் முறைகளை பரவலாக்கம் செய்யும் வகையில் இணையம் போன்ற மின்னனு தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது ஆகும். தேர்தல் மற்றும் பங்கேற்பு அமைப்புகள் உள்ளடக்கியது. ஒப்பீடு அளவில், புதிய அரசியல் வளர்ச்சி ஆகும். அரசு, குடிமைக் குழுக்கள், சமுதாயங்கள் இடையே விவாதங்களை உருவாக்க வல்லவை.

❖ **மின் ஆளுகை:** தகவல்கள், தொலைதொடர்பு மற்றும் தொழில்நுட்பக் கருவிகளை பயன்படுத்தி அரசாங்கம், மக்கள் மற்றும் அலுவல்கள் இவற்றிற்கிடையே எளிமையான உருவாக்க தொடர்புகளை செய்வது ஆகும். அரசு செயல்பாடுகளுக்கு இடையே மக்களாட்சிப்படுத்தப்பட்ட ஆளுகையை எளிமைப்படுத்தி, மேம்படுத்துவது ஆகும்.

❖ **உலகமயமாக்கல்:** இது உலக நாடுகளுக்கிடையே ஒருங்கிணைப்பையும், ஒன்றோடு ஒன்று சார்ந்து இருப்பதையும் அதிகரிக்கச் செய்கிறது. இது பன்முகத்தன்மை கொண்டது, அதாவது பொருளாதாரம், அரசியல், சமூகம் மற்றும் கலாச்சாரம் ஆகிய பண்புகளை கொண்டது இதற்குமுன் இல்லாத வகையில், சேவைகள், பொருள்கள் பரிமாற்றத்தை ஊக்குவிக்கிறது. தனியார் மூலதனம், கருத்துகளின் சுற்றோட்டம், ஊக்க உணர்வுகள், புதிய சமூக, பொருளாதார அசைவுகளை உருவாக்குகிறது.

12th_Political Science_Tamil_Unit_6.indd 170 04-06-2019 11:34:30

❖ **நல்லாட்சி:** நல்லாட்சிக்கு இன்றியமையாததாக இருப்பது சிறந்த வலுவான மேலாண்மை (திறன், செயல்திறன், பொருளாதாரம்) பொறுப்புணர்வு, தகவல் மற்றும் பரிமாற்றம், வெளிப்படைத்தன்மை, வளர்ச்சிக்கான சட்டபூர்வமான கட்டமைப்பு (நீதித்துறை, மனித உரிமைகள், சுதந்திரம்).

மதிப்பிடுதல்

I. சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்

694XWX

1. அனைத்து இந்தியப் பணிகளின் உறுப்பினர்களை யார் நியமனம் செய்வார்?

அ) குடியரசுத்தலைவர்
ஆ) மத்திய உள்துறை அமைச்சர்
இ) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுத் தலைவர்
ஈ) இந்தியாவின் அட்டார்னி ஜெனரல்

2. மத்தியில் குடிமைப் பணியிடங்கள் நியமனங்களுக்குப் பொறுப்பான ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு என்பது

அ) குடியரசுத்தலைவரின் அவசர சட்டத்தின் மூலம் 1950-இல் உருவாக்கப்பட்டது
ஆ) நாடாளுமன்றத்தால் நிறைவேற்று தீர்மானத்தின் மூலம் உருவாக்கப்பட்டது
இ) அரசமைப்பால் அனுமதிக்கப்பட்டது
ஈ) இந்திய சுதந்திர சட்டம் 1947-இன் மூலம் உருவாக்கப்பட்டது

3. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் உருவாக்கம்.

அ) அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது
ஆ) நாடாளுமன்றத்தால் முடிவு செய்யப்பட்டது
இ) குடியரசுத்தலைவரால் தீர்மானிக்கப்பட்டது
ஈ) உள்துறை அமைச்சகத்தால் முடிவு செய்யப்பட்டது

4. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவியின் முக்கிய செயல்பாடு என்ன?

அ) அனைத்து இந்திய மற்றும் மத்திய குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் மூலம் நியமனம் செய்தல்
ஆ) கடமையை நிறைவேற்றும் போது ஏற்படும் செலவுகளை ஏற்பதற்கான குடியரசுத் தலைவரிடம் அறிவுறுத்தல்
இ) குடிமைப் பணியாளர்களுக்கு எதிரான குடியரசுத்தலைவர் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல்
ஈ) இவை அனைத்தும்

5. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் உறுப்பினர்களின் பணிக்காலம் முடியும் முன்னே அவர்களை பணிநீக்கம் செய்வது?

அ) பிரதமர்
ஆ) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர்
இ) உச்ச நீதிமன்ற பரிந்துரையின் படி குடியரசுத்தலைவர்
ஈ) நாடாளுமன்றத்தின் பரிந்துரையின் படி குடியரசுத்தலைவர்

12th_Political Science_Tamil_Unit_6.indd 171 04-06-2019 11:34:30

6. கீழ் கண்டதில் எது அனைத்து இந்தியப் பணி அல்ல?

அ) இந்தியக் காவல் பணி
ஆ) இந்திய ஆட்சிப் பணி
இ) இந்திய வெளியுறவுப் பணி
ஈ) இந்திய பொருளாதார பணி

7. கீழ் கண்டதில் எது ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சட்டபூர்வமான பணி அல்ல?

அ) குடிமைப் பணியின் நியமனம், பதவிஉயர்வு, கட்டுபாடு ஆகியன தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்
ஆ) குடிமைப் பணியாளர்களின் நலன்கள், உரிமைகள் பேணுதல்.
இ) குடிமைப் பணியாளர்களின் குறைகளை கேட்டு தீர்த்து வைத்தல்
ஈ) மாநிலத் தேர்வாணையச் செயல்களைக் கண்காணித்தல்.

8. புதிய அனைத்து இந்தியப் பணியை இவ்வாறு உருவாக்கலாம்?

அ) அரசமைப்புத் திருத்தச்சட்டத்தின் மூலம்
ஆ) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் ஆலோசித்து
இ) நாடாளுமன்றத்தின் மூலம்
ஈ) மத்திய அமைச்சரவையின் பரிந்துரை பேரில் குடியரசுத்தலைவர்

9. யாருடைய விசாரணையின் அடிப்படையில் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு உறுப்பினர் பதவி நீக்கம் செயல்படலாம்?

அ) குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படும் குழு மூலம்
ஆ) உச்ச நீதிமன்றம்
இ) உயர் நீதிமன்றம்
ஈ) மாநில ஆளுநர் மூலம்

10. இந்திய தற்காலிக நிதியிலிருந்து ஏற்கப்படும் செலவுகள்

அ) இதர நிதிநிலை அறிக்கையிலிருந்து வரும் சேமிப்புகளை மாற்றுவதன் மூலம்
ஆ) நாடாளுமன்றத்தால் வழங்கப்படும் கூடுதல் மற்றும் துணை நிதிகளை மாற்றுவதன்மூலம்
இ) நிதி முழுவதும் தீரும்வரை மாற்றியமைக்கப்படாது
ஈ) பல மாநிலங்களில் இருந்து வரும் பங்களிப்புகளை ஈடுசெய்வதன் மூலம்

11. கீழ்கண்ட எந்த சட்ட முன்மொழிவு / தீர்மானம் மத்திய நிதிநிலை அறிக்கையோடு தொடர்புடையது?

அ) ஒத்திவைப்பு தீர்மானம்
ஆ) வெட்டு தீர்மானம்
இ) தணிக்கை தீர்மானம்
ஈ) இவையேதுமில்லை

12. மக்களவை வாக்குக் கணக்கில் வாக்களிகிறார்

அ) நிதி நிலை அறிக்கை அறிமுகத்தில் இருந்து அதன் தொடர்ச்சியாக ஏற்படும் செலவுகளை ஏற்பதற்கு
ஆ) இரகசிய பணிகளின் செலவிற்காக / உளவு
இ) எதிர்பாராத செலவுகளை ஏற்பதற்காக
ஈ) இவையேதுமில்லை

12th_Political Science_Tamil_Unit_6.indd 172 04-06-2019 11:34:30

13. கீழ்கண்டவற்றில் எந்த சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கையோடு சேர்ந்து அளிக்கப்படுகிறது?

அ) தற்காலிக சட்ட முன்வரைவு மற்றும் ஒதுக்கீட்டு சட்ட முன்வரைவு
ஆ) நிதி சட்ட முன்வரைவு
இ) நிதி சட்ட முன்வரைவு மற்றும் ஒதுக்கீட்டு சட்ட முன்வரைவு
ஈ) நேரடி சட்ட முன்வரைவு வரி மற்றும் மறைமுக வரி சட்ட முன்வரைவு

14. அரசமைப்பில் மத்திய அரசு பல வரிகளை விதித்து, வசூல் செய்து அதை மாநிலங்களோடு பகிர்ந்தளிக்கிறது. இதில் எந்த அரசமைப்பு அதிகாரம் மாநிலங்களுக்கு வரிகளை பகிர்வதற்கு முடிவெடுக்கிறது?

அ) மத்திய நிதி அமைச்சர்
ஆ) நிதி ஆணையம்
இ) திட்டக்குழு
ஈ) மத்திய அமைச்சரவை குடியரசுத்தலைவரோடு கலந்து ஆலோசித்தல்

15. நாடாளுமன்றம் பல்வேறு வழிகளில் நிதியை கட்டுப்படுத்துகிறது அவற்றில் கீழ் காணும் பட்டியலில் எது தவறு

அ) மத்திய நிதிநிலை அறிக்கை தயாரித்து தாக்கல் செய்தல்
ஆ) தீர்வைகள், வரி விதித்து வசூலிக்கிறது
இ) இந்திய பொது நிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கிறது

16. இரண்டு அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையிலான மாநிலங்களின் கூட்டுப் பணியாளர் தேர்வாணையம்

அ) எந்த சூழ்நிலையிலும் அமைவதற்கு வாய்ப்பில்லை
ஆ) நாடாளுமன்றமே அமைக்க முடியும்
இ) தொடர்புடைய மாநிலச் சட்டமன்றங்களின் ஒப்புதல் பெற்று நாடாளுமன்றம் மூலம் அமைத்திட முடியும்
ஈ) தொடர்புடைய மாநிலங்களின் அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் பரிந்துரையின் பேரில்
குடியரசுத்தலைவரால் அமைக்க முடியும்

17. ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முந்தைய அமைப்பான அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்ட ஆண்டு

அ) 1926
ஆ) 1930
இ) 1947
ஈ) 1950

18. நாடாளுமன்றம் பொதுவாக மூன்று கூட்டத்தொடர்களை கொண்டது, கீழ்வருபவற்றுள் தவறாக பட்டியலிடப்பட்டுள்ளது எது?

அ) நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தொடர்
ஆ) பருவக்காலக் கூட்டத்தொடர்
இ) இளவேனிர்க்காலம் கூட்டத்தொடர்
ஈ) மழைக்காலக் கூட்டத்தொடர்

12th_Political Science_Tamil_Unit_6.indd 173 04-06-2019 11:34:30

19. மக்களவை மாநிலங்களவையை விட உயர்ந்தது ஏனெனில்,

அ) மக்களவை நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு
ஆ) அமைச்சரவை குழு மக்களவைக்கு கட்டுப்பட்டது
இ) மக்களவை நிதிநிலை அறிக்கையை கட்டுப்படுத்துகின்றது.
ஈ) இவை அனைத்தும்.

20. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு கூட்டுத் தேர்வாணையம் என்பது

அ) எந்த நிலையிலும் தோற்றுவிக்க முடியாது
ஆ) நாடாளுமன்றம் தன்னிச்சையாக தோற்றுவிக்க முடியும்
இ) சம்பந்தப்பட்ட சட்டமன்றங்கள் கூட்டுத் தேர்வாணையம் உருவாக்க தீர்மானம் இயற்றிய பின் நாடாளுமன்றத்தால் உருவாக்க முடியும்
ஈ) சம்பந்தப்பட்ட மாநிலத் தேர்வாணையங்களின் தலைவர்களின் பரிந்துரையின் பெயரில் குடியரசுத்தலைவர் உருவாக்கலாம்.

21. **கூற்று (கூ)**: ஒரு அமைச்சகத்தின் அனைத்துக் கொள்கைகள் மற்றும் நிர்வாக விவகாரங்களில் முதன்மை ஆலோசகர் அந்த அமைச்சகத்தின் செயலாளர்

காரணம் (கா): குடிமைப் பணிகளின் தலைவர், அமைச்சக செயலாளர்

அ) கூற்றும், காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகளாகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

22. பொருத்துக

அ) கூடுதல் செயலாளர்	–	1. பிரிவு
ஆ) கீழ்நிலைச் (under) செயலாளர்	–	2. கோட்டம் (Division)
இ) துணைச் செயலாளர்	–	3. துறை
ஈ) செயலாளர்	–	4. கிளை
	–	5. பிரிவு

அ) 5 4 2 3
ஆ) 1 2 3 5
இ) 2 1 3 5
ஈ) 3 4 5 2

23. **கூற்று**: ஐந்தாண்டு திட்டங்கள் அடிப்படையிலான வளர்ச்சி மாதிரியை இந்தியா பின்பற்றுகிறது.

காரணம்: ஒவ்வொரு ஐந்தாண்டு திட்டத்திலும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு அந்த இலக்கை எட்டும் வகையில் அதிகாரிகள் பணியாற்றுமாறு முடுக்கிவிடப்படுகிறார்கள்.

அ) கூற்றும், காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகளாகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

12th_Political Science_Tamil_Unit_6.indd 174 04-06-2019 11:34:31

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

II. பின்வரும் கேள்விகளுக்கு குறுகிய விடையளிக்கவும்

1. பொது நிர்வாகம் வரையறுக்கவும்.
2. வெளியுறவு அமைச்சகம் வரையறுக்கவும்.
3. பணியாளர் நிர்வாகம் என்றால் என்ன.
4. இந்திய ஆட்சிப் பணி (இ.ஆ.ப) IAS வரையறுக்கவும்.
5 ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) வரையறுக்கவும்.
6. பணியாளர்த் தேர்வாணையம் என்றால் என்ன?
7. நிதி நிர்வாகம் விளக்குக.

III. குறுகிய விடையளிக்கவும்

1. சுயாட்சியான ஒழுங்குமுறை ஆணையம் விளக்குக.
2. பொருள்கள் மற்றும் சேவை வரி(GST) என்றால் என்ன?
3. ஆயுஷ் என்றால் என்ன?
4. முறை சாரா தகவல் தொடர்பு என்றால் என்ன?
5. அகில இந்திய பணிக்கு பணியமர்த்தும் இரண்டு முறைகள் குறித்து எழுதுக.

IV. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்

1. சட்டத்தின் ஆட்சியை விவரிக்க.
2. நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
3. பணியாளர் தேர்வாணையத்தின் பணிகள் குறித்து எழுதுக.
4. நிதி நிர்வாகத்தின் குறிக்கோள்களை விவரிக்க.
5. உள்துறை அமைச்சகத்தின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளை வரையறுக்க.

மேற்கோள் நூல்கள்

- Ramesh K Arora, Rajini Goel,- Indian Public Administration Wishwa Prakashan Publications, January 2010.
- Laxmikanth M, Public Administration, TATA McGRAWHILL'S Publications, 2011.
- Shriram Maheshwari ,Indian Administration: An Historical Account, Published by Jawahar (1994).

வலைத்தள இணைப்புகள்

- https://upsc.gov.in/
- https://cabsec.gov.in/
- https://www.pmindia.gov.in/en/prime-ministers-office/

12th_Political Science_Tamil_Unit_6.indd 175 04-06-2019 11:34:31

அலகு 7

தேச கட்டமைப்பின் சவால்கள்



கற்றலின் நோக்கங்கள்

I5QSLT

- விடுதலைக்கு முன்பிலிருந்து விடுதலைக்கு பின்வரை இந்தியாவின் சுதேச அரசுகளின் தோற்றம் மற்றும் மறைவு பற்றி கூறுதல்.
- நிர்வாகம் மற்றும் அரசியல் பகுதிகளை ஒன்றுபடுத்துவதில் சுதேச அரசுகள் இந்தியாவோடு இணைவதன் முக்கியத்துவம் குறித்து அறிதல்.
- மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் மறுசீரமைப்புக் குறித்த இந்திய அரசின் தயக்கம், குடிமக்களின் அழுத்தம் இவற்றிற்கான காரணங்களை ஒப்பிட்டு அறிதல்.
- மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் மறுசீரமைப்பு செய்யப்பெற்றதால் சுதேச அரசுகள் இணைக்கப்பட்டு இந்தியாவில் ஏற்பட்ட சிறந்த பயன்களை விவாதித்தல்.
- மாநிலங்களை மறுசீரமைப்பு செய்யும் நோக்கில் அரசு நியமித்த ஆணையங்கள், இயற்றப்பட்ட சட்டங்கள் குறித்து பகுப்பாய்வு செய்தல்.
- ஒரு நாட்டைக் கட்டமைப்பதில் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார, அரசியல், மொழி மற்றும் நிர்வாக சவால்களை புரிந்து கொள்ளுதல்.
- மொழி, இனம் மற்றும் அரசியல் தன்னாட்சி பெற வலுவான அடித்தளமிட்டதற்குக் காரணமாக தமிழ்நாடு மாநில அரசு உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்திய பல்வேறு கூறுகள் குறித்து விரிவாக அறிதல் கொள்ளுதல்.

செயல்பாடு

ஜேம்ஸ் மில் ஒரு ஸ்காட்லாண்டு பொருளாதார அறிஞர், அரசியல் கோட்பாட்டாளர் மற்றும் தத்துவ அறிஞர் ஆவார். இவர் பிரிட்டிஷ் இந்திய வரலாறு குறித்து 1817-ஆம் ஆண்டு மூன்று தொகுதிகள் கொண்ட ஒரு நூலினை எழுதி வெளியிட்டார். இந்து, முஸ்லிம் மற்றும் பிரிட்டிஷ் என்று மூன்று காலப்பகுதிகளாக இந்திய வரலாற்றைப் பிரித்து எழுதினார். மில்லின் கருத்துப்படி, இந்தியாவில் ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு இந்தியா, இந்து மற்றும் முஸ்லிம் கொடுங்கோன்மை அரசுகளால் ஆளப்பட்டது. மதச்சகிப்பின்மை, சாதிய ஒதுக்கல் மற்றும் மூட நம்பிக்கைகள் இந்திய சமூக வாழ்வில் ஆதிக்கம் செலுத்தியது. இந்தியாவில் இங்கிலாந்து நிறுவனங்கள், சட்டங்கள் மற்றும் பழக்கவழக்கங்களை அறிமுகம் செய்வதன் மூலம் பிரித்தானிய ஆட்சியால் இந்தியாவை நாகரிகப்படுத்த முடியும் என மில் உணர்ந்தார். அவரின் கருத்துப்படி, ஆங்கில அரசாட்சி இந்தியாவில் விழிப்புணர்வு மற்றும் முன்னேற்றம் ஏற்பட வழிவகுக்கும் என்பதாகும்.

மூளைக்கு வேலை


ஆங்கில ஆட்சிக்காலத்தையும், ஆங்கில ஆட்சி குறித்தும் மில்லின் கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறீர்களா?

12th_Political Science_Tamil_Unit_7.indd 176 04-06-2019 11:38:35

7.1 சுதேச அரசுகள் ஒன்றிணைப்பு

இந்தியாவில் சுதேச அரசுகளின் தோற்றம்

பெரிய அளவிலான நிர்வாக மாகாணத்தில் ஒரு சிறிய அரசியல் அமைப்பே சுதேச அரசு என்பதாகும். அது பெரும் முடியாட்சியில் நேரடியாகவோ அல்லது துணைக் கூட்டமைப்பாகவோ ஆட்சி செய்வதாகும். இந்த சிறிய நிர்வாகப் பகுதியானது அரசியல், கலாச்சார, மொழி மற்றும் பூகோள அமைப்பு அடிப்படையில் அமைந்திருக்கும் கி.பி.(பொ.ஆ) 200-ல் மத்திய ஆசிய பகுதியிலிருந்து இந்தியக் துணைக் கண்டத்திற்கு புலம் பெயர்ந்து வந்த இராஜபுத்திரர்களால் சுதேச அரசுகள் தொடங்கப்பட்டது. இராஜபுத்திரர்கள் என்றால் அரசர்களின் இளவரசர்கள் என்பது பொருளாகும். எனவே இந்தியாவில் சுதேச அரசுகள் முகலாயர் மற்றும் ஆங்கிலேயர் வருகைக்கு முன்னரே ஏற்படுத்தப்பட்டுவிட்டது. இராஜபுத்திரர்கள் அல்லாமல் நவாப் மற்றும் நிஜாம்களாலும் சுதேச ஆட்சிகள் நடைபெற்றன. மைசூர், திருவிதாங்கூர் மற்றும் புதுக்கோட்டை பகுதிகள் உள்ளூர் அரச வம்சங்களால் ஆட்சி செய்யப்பட்டன. இந்த அனைத்து வகை முடியாட்சி முறைகளும் பிரிட்டிஷ் இந்தியாவில் சுதேச அரசுகள் என்றழைக்கப்பட்டன. இந்த வகை அரசுகள் பிரிட்டன் ஆளுகைக்குகீழ் கட்டுப்பட்டது என்பதனை குறிக்க இந்த சுதேச அரசுகள் என்ற சொல் வேண்டுமென்றே கையாளப்பட்டது.



	மக்கள் தொகை	%	முஸ்லிம்கள்	%	பகுதி கி.மி^{2}	%
பிரிட்டிஷ் மாகாணங்கள்	292,164,791	76.82	79,055,078	27.09	2,623,330	62.05
மன்னராட்சி அரசுகள்	88,167,852	23.18	12,533,063	14.22	1,603,404	37.95
மொத்தம்	380,332,704	100	91,588,141	24.08	4,226,734	100

12th_Political Science_Tamil_Unit_7.indd 177 04-06-2019 11:38:36

சுதேச அரசுகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சிகள்

முன்பே குறிப்பிட்டது போன்று துண்டுதுண்டாகக் காணப்பட்ட சுதேச அரசுகளை ஒருங்கிணைக்கும் முயற்சி சுதந்திரத்திற்கு முன்பிருந்தே குறிப்பாக காலனிய ஆதிக்கத்திற்கு முன்பே நீண்ட வரலாற்றை கொண்டிருக்கிறது. பல சிறிய அரசுகளை இணைத்து பேரரசுகளாக மாற்றும் முயற்சியானது ஆறாம் நூற்றாண்டிலேயே தொடங்கியது. மகத பேரரசு காலத்தில் பிம்பிசாரர் மற்றும் அஜய்சத்ரு ஆகியோரால் இம்முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. பின்பு வந்த மௌரியர்கள் காலத்தில் அசோகர் மற்றும் 5 ஆம் நூற்றாண்டுகளுக்கு பின்னர் வந்த சந்திரகுப்தர், அவரது மகன் சமுத்திரகுப்தர் போன்றவர்களால் சிற்றரசுகள், தங்கள் பேரரசின் கீழ் செயல்படும் சுதந்திர அரசுகளாக நிர்வகிக்கப்பட்டனர். பல சுதேச அரசுகள் தங்களின் தன்னாட்சி உரிமையை முழுமையாக அனுபவிப்பதுடன் போர்க்காலங்களின் போது பேரரசுகளுக்கு விசுவாசமாக நடந்து கொண்டனர். இருந்தபோதிலும், பேரரசர்களுக்கும், சிற்றரசர்களுக்கும் இடையே அதிகாரப் போட்டி, பொறாமை மற்றும் வெறுப்புணர்ச்சி ஆகியன நம்பிக்கையின்மையையும், ஒற்றுமையின்மையையும் ஏற்படுத்தின. இதன் விளைவாக அரபு மற்றும் பாரசீக படையெடுப்புகளுக்கு வாய்ப்பளித்தன. வடஇந்தியா முழுவதும் முகலாய பேரரசு தனது ஆதிக்கத்தினை நிலைபெறச் செய்துக் கொண்டது.

பிரிட்டிஷ் ஆட்சியில் சுதேச அரசுகள்

அ) குண்டு முழங்கி மரியாதை செய்யும் முறை

இம்முறையானது ஐரோப்பியர்களின் காலனி ஆதிக்கத்தின்போது ஆங்கிலேயர்கள், போர்த்துகீசியர்கள் மற்றும் பிரெஞ்சுகாரர்களால் கடைபிடிக்கப்பட்டது. முதலில் தங்கள் வியாபாரத் தொடர்புப் பகுதிகளிலும் பின்பு பிறபகுதிகளிலும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வரப்பட்டதற்கான குறியீடாக இதனை பயன்படுத்தினர். குறிப்பாக இம்மூன்று காலனிய அரசுகளில் பிரிட்டிஷ் அரசானது சில சுதந்திர அரசுகளுக்கான இறைமை உரிமையை தங்கள் மன்னராட்சி முறைக்கு உள்பட்டு வழங்கின. சுதந்திரத்துக்கு முன்னர் இந்தியாவில் சுதேச அரசுகளின் எண்ணிக்கை 565 ஆக இருந்தது. இதன் அதிகாரமானது பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியால் வழங்கப்பட்ட குண்டு முழங்கும் மரியாதை அடிப்படையில் அமைந்திருந்தன. இவை இரண்டு விதமாக காணப்பட்டன. ஒன்று குண்டு முழங்கி மரியாதை செய்யும் சுதேச அரசுகள் என்றும், மற்றொன்று குண்டு முழங்கும் உரிமை அற்ற சுதேச அரசுகள் என்று பிரிந்திருந்தன.

ஆ) குண்டு முழங்கும் மரியாதை பெற்ற அரசுகள்


பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தால் குண்டு முழங்கும் மரியாதை வழங்கப்பட்ட சுதேச அரசுகளின் எண்ணிக்கை சுமார் 117-லிருந்து 120-வரை இருக்கலாம். இந்த அரசுகளின் தலைவர்கள், ஆட்சியாளர்கள் அல்லது இளவரசர்கள் அம்மரியாதைக்கு உட்பட்டவர்களாக இருந்தனர். இவர்களுக்கு வழங்கப்படும் இவ்வுரிமையானது முழங்கப்படும் குண்டுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதன் சிறப்பு நிலை அறியப்பட்டது. மிக அதிக மரியாதைக்குரிய சுதேச அரசுகளுக்கு 21 குண்டுகள் எனவும் அதனிலும் குறைவான சுதேச அரசுகளுக்கு 9 குண்டுகள் எனவும் இது அமைந்திருந்தது. சில சுதேச அரசுகள் 21 குண்டுகளை முழங்கும் உரிமை பெற்று இருந்தன. அவையாவன

- மாட்சிமை தாங்கிய மகாராஜா குவாலியர் மன்னர் சிந்தியா
- மாட்சிமை தாங்கிய பரோடா மகாராஜா கேக்வார்
- மாட்சிமை தாங்கிய ஜம்மு-காஷ்மீர் மகாராஜா
- மாட்சிமை தாங்கிய மைசூர் மகாராஜா

12th_Political Science_Tamil_Unit_7.indd 178 04-06-2019 11:38:36

- மாட்சிமை தாங்கிய ஐதராபாத் மற்றும் பிரார் நிஜாம்கள்
- சச்சின் நவாப்
- பாட்னா மகாராஜா
- வாத்வான் மகாராஜா
- லாகரு நவாப்

சில சுதேச அரசுகள் 9 குண்டுகள் முழங்கும் உரிமையை பெற்றிருந்தன. அவையாவன



இ) குண்டு முழங்கும் உரிமை பெறாத சுதேச அரசுகள்

565 சுதேச அரசுகளில் 117 முதல் 120 வரை மட்டுமே குண்டு முழங்கப்படும் உரிமையை பெற்றிருந்தன.

பிற சுதேச அரசுகள் பிரிட்டிஷ் அரசுகளுக்கு கீழ் இருந்தபோது குண்டு முழங்கும் உரிமை வழங்கப்படவில்லை. குண்டு முழங்கும் உரிமையோ அல்லது முழங்காத உரிமையோ, குண்டுகளின் எண்ணிக்கை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காணப்பட்டது அரசின் உண்மை நிலையை பிரதிபலிக்கவில்லை. சில சுதேச அரசுகள் எந்தவித குண்டு

12th_Political Science_Tamil_Unit_7.indd 179 04-06-2019 11:38:36

மரியாதையையும் பெறாமல் இருந்ததற்கான வேறு காரணங்களும் இருந்தன. அவையாவன:

1) சில சுதேச அரசுகள் இந்த முழுங்கும் முறையை ஏற்றுக்கொள்ளவில்லை.

2) சில சுதேச அரசுகள் இம்முறையை தங்களுக்கான மரியாதைக் குறைவாகக் கருதினர்.

3) சில சுதேச அரசுகளின் ஆட்சி மாறின. ஆனால் தங்களது அரசப் பட்டங்களையும் ஓய்வூதியத்தையும் பயன்படுத்தினர்.

செயல்பாடு

கீழ்க்கண்ட தலைவர்களை அடையாளம் கண்டு அவர்களின் பங்களிப்பு குறித்து உனது நண்பர்களுடன் விவாதம் செய்க.



இந்தியாவில் சுதேச அரசுகள்

விடுதலைக்கு முன்பு பல சுதேச அரசுகள் காலனிய பிரிட்டன் அரசின் ஆதரவுடன் இயங்கின. பிரிட்டிஷ் அரசின் கீழ் சுதேச அரசுகளாக இயங்கியதால் இதுவரை பெற்றிருந்த சலுகைகளை விட்டுக் கொடுக்க மனமில்லாமல் சுதேச அரசுகள் ஒருங்கிணைப்பு என்ற யோசனையை அவர்கள் ஏற்கவில்லை. பல அரசர்கள் விடுதலைக்குப் பின்னர் தன்னாட்சியுடன் கூடிய சுதந்திர அரசுகளை அமைத்துக்கொள்ளும் வாய்ப்புக்காக காத்திருந்தனர். இந்த சுதேச அரசுகள் ஒருங்கிணைப்பு என்பது பிரிட்டனின் ஆட்சிக்கு முடிவு கட்டவும். சுதேச அரசுகள் மற்றும் மாகாணங்கள் கலைக்கப்படுவதுடன் பிரிட்டிஷ் காலனிய ஆட்சிக்கு முடிவு கட்டுவதையும் நோக்கமாக கொண்டதாகும். அரசியல், இராஜதந்திர பேச்சு வார்த்தைகள் மற்றும் வன்முறை ஆகியவற்றுக்கு இடையே சுதேச அரசுகள் ஒருங்கிணைப்பு செயல்கள் 1947-இல் நிகழ்ந்தன. பிரிட்டனின் அன்றைய பிரதமர் கிளெமென்ட் அட்லி பொதுச்சபையில் மார்ச் 15, 1946 அன்று உரையாற்றும் போது இந்தியாவிற்கான விடுதலையை அங்கீகரித்தார். அப்போது விடுதலைப்

12th_Political Science_Tamil_Unit_7.indd 180 04-06-2019 11:38:36

போராட்டத்தையும், அதில் உயிர்த்தியாகம் செய்தோரையும் நினைவு கூர்ந்தார். மேலும் புதிய இந்தியாவில் அதன் பன்முகப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் கட்டிக்காப்பதில் ஏற்பட உள்ள சவால்களை குறிப்பிட்டு பேசினார். "இந்தியா பல இனங்கள், மதங்கள் மற்றும் மொழிகள் கொண்ட நாடு என்பதையும் அதனால் உருவாகும் பல்வேறு பிரச்சனைகள் குறித்தும் நன்கு அறிவேன். ஆனால், இத்தகைய தடைகளை இந்தியர்களே எதிர்கொண்டு வெற்றி பெறவேண்டும். சிறுபான்மையோர் உரிமைகள் எப்போதும் நமது சிந்தனையில் இருக்க வேண்டும். அவர்கள் அச்சம் இல்லாமல் வாழும் சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்" என்றார்.

செயல்பாடு


பங்கேற்ப்பு

சுதேச அரச குடும்பங்கள், காலனி ஆட்சியாளர் மற்றும் விடுதலை போராட்ட வீரர்கள் அடங்கிய ஒரு நேர்முகப் போட்டி நடத்தவும். இப்போட்டி சுதேச அரச குடும்பம் ஒரு குழுவாகவும், சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஒரு குழுவாகவும் காலனி ஆட்சியாளர் ஒரு குழுவாகவும் பத்திரிக்கையாளர் ஒரு குழுவாகவும் ஆக நான்கு குழுக்கள் அடிப்படையில் இப்போட்டியினை நடத்தவும்.

இருந்தபோதிலும் தேச கட்டமைப்பு செயல்பாடுகளும் சுதேச அரசுகள் ஒருங்கிணைப்பும் பேச்சுவார்த்தைகளும் ஏப்ரல் 1947-இல் தொடங்கின. தேச கட்டமைப்பின் போது மதக்கலவரம், தேசப் பிரிவினை மற்றும் அகதிகள் பிரச்சனை ஆகிய பிரச்சனைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. சர்தார் வல்லபாய் பட்டேல் துணை பிரதமராகவும் உள்துறை அமைச்சராகவும் பதவியேற்றவுடன் 565 சுதேச அரசுகளின் ஒருங்கிணைப்பு தொடங்கியது. மூன்று பிரிட்டிஷ் வைசிராய்களுடன் பணியாற்றிய வி.பி.மேனன் பட்டேலின் செயலாளராக பொறுப்பேற்று அதற்கான களப்பணிகளை மேற்கொண்டார்.

பட்டேலும், வி.பி.மேனனும் சுதேசி அரசர்களிடம் அரசியல் நிர்ணய சபையில் இணைய செய்தனர். அவர்களின் சுதேச அரசுகளின் சொத்துக்கள் உடமைகள் பறிமுதல் செய்யப்படாது என்று உறுதிமொழி அளிக்கப்பட்டது. பல சுதேச அரசுகள் இந்தியாவுடன் இணைய ஒப்புதல் அளித்தனர். ஜூனாகத், காஷ்மீர் மற்றும் ஐதராபாத் சுதேச அரசர்கள் தனித்திருக்க விரும்பினர்.

ஜூனாகத்



ஜூனாகத் நவாப் அல்லது அவரின் திவான் ஷா நவாஸ் (பாகிஸ்தான் முன்னாள் அதிபர் ஜில்பிகார் அலி பூட்டோவின் தந்தையார்) இணைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. ஜூனாகத்தை சுற்றியுள்ள மற்ற மூன்று அரசுகள் இந்தியாவின் அங்கமாக இருந்தன. நான்காவது பகுதி அரபிக்கடல் அந்த பகுதி மக்கள் பெரும்பாலோர் முஸ்லிம் அல்லாதோர். இருந்தபோதிலும் திவான் பூட்டோ பாகிஸ்தானோடு ஆகஸ்ட், 15 1947 அன்று இணைந்துவிட்டார். இதனைக் கண்டித்து பொதுமக்கள் எதிர்த்து போராட்டங்கள் நடத்தினர். ஜூனாகத் இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று கோரினார். திவான் தனது குடும்பத்தினருடனும் அரசு கஜானாவுடனும் பாகிஸ்தானின் அன்றைய தலைநகர் கராச்சிக்கு தப்பி சென்று விட்டார். நீண்ட போராட்டத்திற்கு பிறகு ஜூனாகத் இந்தியாவோடு இணைந்தது.

12th_Political Science_Tamil_Unit_7.indd 181 04-06-2019 11:38:37

ஐதராபாத்

நிஜாம் தலைமையிலான ஐதராபாத் மற்றோரு சுதேச அரசாகும். முஸ்லிம்கள் அல்லாதோர் பெரும்பான்மையினராக இருந்தனர். அவர் தன்னாட்சி உரிமையை எதிர்பார்த்தார். இது குறித்து நீண்ட வாதங்கள் நடைபெற்றன. மவுண்ட்பேட்டன் பிரவு "டொமினியன்" நிலை அளிக்க மறுத்து விட்டார். "டொமினியன்" என்றால் பிரிட்டிஷ் காமன்வெல்த் கூட்டமைப்பில் தன்னாட்சி அரசாக விளங்கும் நிலையைக் குறிப்பதாகும். உண்மையில் அப்போது காசிம் ரஷ்வி எனும் மதவாதத் தலைவரின் செல்வாக்குக்கு நிஜாம் அடிமைப்பட்டிருந்தார். ஆயுதம் தாங்கிய அமைப்பான இந்தேகத் –உல்- முசுல் மான் எனும் அமைப்பின் தலைவராக ரஷ்வி இருந்தார். இந்த அமைப்பினர் 'ரசாக்கர்' என அழைக்கப்பட்டனர். மேலும் 1943-இல் கம்யூனிஸ்ட் கட்சி மீதிருந்த தடையையும் நீக்கினார் நிஜாம். ராசாக்கார்களும் கம்யூனிஸ்ட்களும் இணைந்து வன்முறையில் முடிந்தது. ரயில் வண்டிகள் தாக்கப்பட்டது. இதன் பின்பு, செப்டம்பர் 1948-இல் இந்திய ராணுவம் ஐதராபாத்திற்குள் நுழைந்து கலவரத்தை அடக்கியது. இந்தியாவுடன் இணைவதாக நிஜாம் அறிவித்தார். நிஜாமுக்கு ஏராளமான செல்வமும் சலுகைகளும் அளிக்கப்பட்டன.


நிஜாமும் சர்தார் வல்லப்பாய் படேலும் சந்திப்பு

தெலங்கானாவில் நில உடைமையாளருக்கு எதிராக கம்யூனிஸ்ட்கள் கிளர்ச்சி செய்தனர். இதன் விளைவாக வினோபாபாவே ஆரம்பித்த பூமி தானம் இயக்கம் தொடங்கப்பட்டது. பூமி தானம் என்றால் அதிகமான நிலம் வைத்திருப்போரிடம் கோரிக்கை வைத்து தானமாக நிலம் பெறுவதாகும். மகாத்மா காந்தியின் சீடரான வினோபாபாவே இவ்வியக்கத்தினை ஆரம்பித்து அதன் மூலம் பலநிலங்கள் பெற்று நிலமற்றவிவசாயிகளுக்கு அளித்தார்.

ஜோத்பூர்

ஜோத்பூர் அரசு முதலில் இந்தியாவுடன் இணைவதாக இருந்தது. ஹன்வந்த் சிங் அரசு பொறுப்பேற்றதும் பாகிஸ்தானுடன் இணைய முடிவு செய்தது. பாகிஸ்தான் சார்பில் கராச்சி துறைமுகத்தை சுதந்திரமாக பயன்படுத்திக் கொள்ளவும், ஆயுதங்களை உற்பத்தி செய்து கொள்ளவும் மற்றும் ஆயுதங்களை இறக்குமதி செய்துக் கொள்ளவும் ஹன்வந்த் சிங்க்கு உரிமை வழங்குவதாக முகமது அலி ஜின்னா அறிவித்தார். இதனை அறிந்த பட்டேல், மகாராஜா ஹன்வந்த் சிங்கிற்கு சிறப்பு சலுகைகள் வழங்குவதாக கூறினார். அச்சலுகைகளின் படி ஆயுதங்கள் இறக்குமதி செய்து கொள்ளவும், ஜோத்பூர் – கத்திவார் இடையே இரயில் போக்குவரத்து அமைத்துக் கொள்ளவும், பஞ்சகாலங்களில் தமது விவசாயிகளுக்கு உணவு தானியங்களை விநியோகித்துக் கொள்ளவும் உரிமைகள் வழங்குவதாக அறிவித்தார், மேலும் இந்துக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஜோத்பூர் பாகிஸ்தானில் இணைந்தால் மதக்கலவரம் ஏற்படும் என்ற அச்சத்தின் காரணமாக இந்தியாவுடன் இணைய சம்மதித்தது.


ஐதராபாத் நிஜாம் படை

காஷ்மீர்

சுதந்திரத்திற்கு பின்பு இந்து மகாராஜா ஹரிசிங் ஆட்சி செய்த காஷ்மீர் மட்டுமே சுதேச

12th_Political Science_Tamil_Unit_7.indd 182 04-06-2019 11:38:37

அரசாக இருந்தது. காஷ்மீரில் பெரும்பான்மையாக முஸ்லிம் மக்கள் இருந்ததால் அப்பகுதி, தங்கள் நாட்டோடு இணைந்துவிடும் என்று பாகிஸ்தான் நினைத்தது. ஆகஸ்டு 15, 1947 அன்று மகாராஜா ஹரிசிங்கினால் முன்மொழியப்பட்ட நிரந்தர ஒப்பந்தமானது, பாகிஸ்தானில் மக்கள் குடியேறவும், பொருள்களை கொண்டு செல்லவும் அனுமதித்தது. இதனை இந்தியா கண்டித்த போதும், பாகிஸ்தான் அலட்சியம் செய்தது. காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் தொடர்ந்து அத்துமீறியது. இதனால் பதற்றமான சூழல் உருவாகியது.



மவுண்ட்பேட்டன் பிரபு

மகாராஜா ஹரிசிங் இந்தியாவிடம் இராணுவ உதவி நாடினார். இதனை அறிந்த மவுண்ட்பேட்டன் பிரபு பன்னாட்டு சட்டங்களின்படி இந்திய இராணுவத்தை அனுப்புவதற்கு இந்தியாவும், காஷ்மீர் மகாராஜாவும் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டார். இதன்படி 1954 அக்டோபர் 26-ம் நாள் ஹரிசிங் உடன்படிக்கை மேற்கொண்டார். அதற்கு மறுநாள் 1954 அக்டோபர் 27-ம் நாள், இந்திய இராணுவம் காஷ்மீருக்கு அனுப்பப்பட்டு அங்கு அமைதி ஏற்படுத்தப்பட்டது.

7.2 மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் மறுசீரமைப்பு


விடுதலைக்கு முன்பு

விடுதலைப் போராட்ட இயக்கத்தின் போது மக்களைத் திரட்டுவதில் மொழி உணர்வு குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தது. எனவே விடுதலைக்கு பின்னர் தேசத்தைக் கட்டியமைப்பதிலும் மொழிவாரி மாநிலங்கள் அமைப்பதன் இன்றியமையாமையை உணர்ந்து செயல்படுத்தப்பட்டது. அன்னிபெசன்ட் அம்மையார். தன்னாட்சி இயக்கம் (ஹோம் ரூல்) தொடங்கிய போதே தென்னிந்தியாவின் பங்கேற்பு அதிகமாக இருந்தது. மொழி அடிப்படையில் மறுசீரமைப்பு என்பது 1917-ல் காங்கிரஸ் கட்சியால் தொடங்கப்பட்டது. 1920-களில் மாநிலங்கள் மொழி அடிப்படையில் அமைய திட்டமிடப்பட்டது. நிர்வாகத்திற்கும் அடிப்படைக் கல்விக்கும் உள்ளூர் மொழிகளின் தேவை அப்போதே உணரப்பட்டது.

பல மாநிலத் தலைவர்கள் மொழிவாரி மாநிலங்களை விரும்பினர். குறிப்பாக, அன்றைய சென்னை மாகாணத்தில் தெலுங்கு தேச மக்களைக் கொண்ட பகுதிகளை இணைத்து தனி ஆந்திர பிரதேச காங்கிரசு குழு அமைக்கவேண்டுமென்று அப்பகுதி காங்கிரசு தலைவர்கள் கோரினர். மொழிவாரி மாநிலங்களுக்கான கோரிக்கைகள் அதிகரித்ததை கவனத்தில் கொண்டு மொழி அடிப்படையில் மாநிலங்களை மறுசீரமைக்கும் பணிகள் 1927-இல் தொடங்கின. நீண்ட போராட்டத்திற்கு பிறகு 1895-இல் ஒடிசா மாநிலத்திலிருந்து பீகார் தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்று போராட்டம் எழுந்தது. நீண்ட போராட்டத்திற்கு பின்னர் ஒரிசா மாகாணத்திலிருந்து பீகார் பிரிக்கப்பட்டது. ஆகவே விடுதலைக்கு முன்பு 1936-ஆம் ஆண்டு மொழி அடிப்படையில் ஒடிசா மாநிலம் அமைக்கப்பட்டது. இதுவே மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்ட முதல் மாநிலமாகும். லோகமான்ய திலகர், அன்னி பெசன்ட் மற்றும் மகாத்மா காந்தி ஆகியோர் மொழி வாரி அடிப்படை மாநிலங்களுக்கு ஆதரவு அளித்தனர்.



அன்னி பெசன்ட்



மகாத்மா காந்தி



பால கங்காதர திலகர்

12th_Political Science_Tamil_Unit_7.indd 183 04-06-2019 11:38:37

விடுதலையின் போது


இந்தியா விடுதலை அடைந்த போது, மொழி அடிப்படையில் மாகாணங்கள் அமைந்தால் மதப்பிரச்சினை போன்று இதுவும் பதற்றத்தை உருவாக்கிவிடுமோ என்று அச்சமுற்றனர். இறுதியில் 1948-ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில், மொழிவாரி மாகாண ஆணையம் (LPC) அமைத்து நீதிபதி எஸ்.கே.தர் தலைமையில், மொழிவாரி மாகாண அமைப்புக்கான நடைமுறை குறித்து மதிப்பீடு செய்யப்பட்டது. இந்த ஆணையமே "தர்" ஆணையம் என்றழைக்கப்பட்டது. ஆனால் தேச ஒருமைபாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதாலும் நிர்வாக சிக்கல் ஏற்படும் என்பதாலும் மொழிவாரிய மாநிலங்கள் பிரிக்கப்படுவதை தர் ஆணையம் ஆதரிக்கவில்லை.

ஆனால் இந்த முடிவினை இந்திய மக்கள் ஏற்கவில்லை. குறிப்பாக தனித்த மொழி அடையாளம் உள்ள மாநிலங்கள் இதனை விரும்பவில்லை. இதன் காரணமாக, 1948-ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவரான பட்டாபி சீத்தாராமையா ஆகியோரைக் கொண்ட ஜே.வி.பி (JVP) குழுவினை உருவாக்கி மொழிவழி மாநில அமைப்பு கோரிக்கை குறித்து பரிசீலிக்க உத்தவிட்டார்.

ஜே.வி.பி குழு

தொடக்கத்தில் இக்குழு மொழிவாரி அடிப்படையிலான மாநிலங்கள் உருவாவதை பிடிவாதமாக எதிர்த்தது. ஒற்றுமை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை காரணம் காட்டியது. ஆனால் மக்கள் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு இயக்கங்களும் எழுந்து 1960-கள் வரை நீடித்தது. ஆகவே இக்குழு பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு இணங்க மொழிவாரி மாநிலங்கள் அமைக்க பரிந்துரைத்து அறிக்கை தயாரித்தது.

முதல் மொழிவாரி மாநிலம்


பொட்டி ஸ்ரீராமலு

சுதந்திர இந்தியாவில் முதல் மொழிவழி மாநிலமாக ஆந்திரபிரதேசம், தெலுங்கு பேசும் மக்களின் விருப்பத்திற்கேற்ப உருவாக்கப்பட்டது. ஆந்திர மாநிலம் அமைக்கச் கோரி பொட்டி ஸ்ரீராமலு சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டார். போராட்டத்தின் 65-வது நாள் உயிர் நீத்தார். இதன் பிறகு போராட்டம் மேலும் தீவிரமானது. தெலுங்கு பேசும் மக்களின் நெருக்கடிக்கு நேரு பணிந்தார். தெலுங்கு பேசும் மக்களைக் கொண்ட ஐதராபாத், ஆந்திர பகுதிகளை இணைத்து 1956-இல் ஆந்திர மாநிலமாக ஜவஹர்லால் நேரு அறிவித்தார்.

மாநில மறுசீரமைப்பு ஆணையம்

மொழிவாரி மாநில கோரிக்கைகளுக்காக நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் பெரும் கலவரங்களும், எதிர்ப்பு இயக்கங்களும் நடைபெற்ற காரணத்தினால் பிரதமர் ஜவகர்லால் நேரு, தனி மாநில கோரிக்கைகளை பரிசீலிக்க பசல் அலி தலைவராகவும் ஹெச்.என். குன்ஸ்ரு மற்றும் கே.எம். பணிக்கர் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழுவை அமைத்தார். இக்குழு தனது அறிக்கையை 22.10.1953-அன்று சமர்ப்பித்தது. இக்குழு மொழிவாரி மாநிலம் அமைப்பதற்கு நான்கு அம்சங்களை வரையறுத்தது. இதற்கான பரிந்துரைகள் 1955 செப்டம்பரில் சமர்ப்பிக்கப்பட்டது.

1. மொழி மற்றும் பண்பாட்டு ஒத்த தன்மை

ஒரே மொழி பேசும் மக்களைக் கொண்ட மாநிலமாக இருப்பின் தனி மாநிலக் கோரிக்கையை நிராகரிக்கலாம். ஏனெனில், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் மாநிலங்கள் உள்ளன. மேலும், பல மாநிலங்களின் ஒரே மொழிப் பேசும் சமூகம்

12th_Political Science_Tamil_Unit_7.indd 184 04-06-2019 11:38:37

காணப்படுகிறது. உதாரணத்திற்கு, பல வடஇந்திய மாநிலங்களில் இந்தி மொழி பேசப்படுகின்றது.

2. நிதி, பொருளாதார மற்றும் நிர்வாக கருதுகோள்கள்

அரசியல் பொருளாதார மற்றும் நிர்வாக செயல்பாடுகள் அனைத்து பகுதி மக்களும் சரிசமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். ஏனென்றால் இந்திய அரசமைப்பு சட்டம், சம உரிமைகள் மற்றும் அனைவருக்குமான வாய்ப்புகள் என்ற நிலைப்பாட்டினை வலியுறுத்துகிறது. மொழி நிர்வாகப் பயன்பாட்டில் உதவிகரமானது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இருந்தபோதும் பிற நிர்வாக, நிதி மற்றும் அரசியல் போன்ற அம்சங்களைப் புறக்கணித்து விட்டு மொழியை மட்டுமே ஒருங்கிணைப்பு அம்சமாகக் கொள்ளக்கூடாது.

3. தேசத்தின் ஒற்றுமை மற்றும் பாதுகாப்பினை வலுப்படுத்தி பராமரித்தல்

மொழிவாரி மாநிலங்கள் அமைந்தால் குறிப்பிட்ட பிரிவு மீது மட்டும் அனுதாபம் கொள்ளும் நிலை உருவாகும் என்பதையும், நமது தேசிய உணர்வுக்கும், பன்மைத்துவத்துக்கும் எதிரானது என்பதையும் ஒற்றை மொழி பேசும் மாநிலங்கள் புரிந்து கொண்டால் தான் தேசப் பற்றினை ஆழமாக வளர்க்க முடியும்.

4. ஒரே மொழி பேசுபவர்களோ அல்லது பல மொழி பேசும் சமுதாயத்தினரோ குறிப்பிட்ட நிர்வாகத்தின் கீழ் வசித்தாலும் பல்வேறு மொழிகள் பேசும் சமுதாயங்களின் மக்கள் தகவல் தொடர்பு கல்வி மற்றும் கலாச்சார தேவைகளை மேம்படுத்தும் வகையில் மக்கள் நலத் திட்டங்களை அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒட்டு மொத்த நாட்டின் மக்களையும் கருத்தில் கொள்வதாக இருக்க வேண்டும்.

மாநில மறுசீரமைப்பு ஆணையம்

இறுதியாக இந்த ஆணையம் 16 மாநிலங்கள் மற்றும் மூன்று ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட மாநிலங்களை மறுசீரமைப்பு செய்ய பரிந்துரைத்தது. மத்திய அரசாங்கம் சிறு மாற்றத்துடன் இதனை ஏற்றுக்கொண்டு, 1956-இல் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தை இயற்றியது, இச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய பிறகு மத்திய அரசாங்கம் 14 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள் என்ற அளவில் மாநில மறுசீரமைப்பினை நம்பர் 1, 1956 அன்று நடைமுறைப்படுத்தியது.

அந்த மாநிலங்கள் வருமாறு, ஆந்திர பிரதேசம், அஸ்ஸாம், பீகார், பம்பாய், ஜம்மு காஷ்மீர், கேரளா, மத்திய பிரதேசம், சென்னை, மைசூர், ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்தர பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம். 6 யூனியன் பிரதேசங்களான, அந்தமான் நிக்கோபார் தீவுகள், தில்லி, இமாச்சல பிரதேசம், லட்சத்தீவு - மினிகாய் தீவு - அமிந்திவி தீவுகள், மணிப்பூர் மற்றும் திரிபுரா.

மேலும் உருவான மாநிலங்கள்

1956-க்கு பிறகும் மொழிவாரி மாநிலங்கள் அமைப்பது தொடர்ந்தது. குறிப்பாக மொழிவாரி அடிப்படையில் மட்டுமல்லாமல் வேறுபல அம்சங்களைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்றம் பரிசீலித்து புதிய மாநிலங்கள் உருவாக்கியது. 1956-க்குப் பின்னர் உருவான மாநிலங்களின் பெயர்கள் பின்வருமாறு

- பம்பாய் மறுசீரமைப்புச் சட்டம் 1960. குஜராத் மாநில உருவாக்கம்.
- நாகாலாந்து மாநிலச் சட்டம் 1962 - நாகாலாந்து மாநிலம் அசாம் மாநிலத்தில் இருந்து பிரிக்கப்பட்டது.
- பஞ்சாப் மறுசீரமைப்புச் சட்டம் 1966 - அரியானா மாநில உருவாக்கம்.
- புதிய இமாச்சல பிரதேச மாநிலம் சட்டம் 1970.

12th_Political Science_Tamil_Unit_7.indd 185 04-06-2019 11:38:37

- வடகிழக்கு மாநில மறுசீரமைப்புச் சட்டம் 1971 – மணிப்பூர், திரிபுரா, மேகாலயா, மிசோரம் மாநிலங்கள் உருவாக்கம். அருணாச்சலப் பிரதேசம், மிசோரம் ஆகிய யூனியன் பிரதேசங்கள் உருவாக்கம்.
- சிக்கிம் மாநிலச் சட்டம் 1975.
- அருணாச்சல பிரதேசம் சட்டம் மற்றும் மிசோரம் மாநிலச் சட்டம் 1986. மிசோரம், அருணாசல பிரதேசம் மாநிலங்கள் உருவாக்கம்.
- கோவா மாநிலச் சட்டம் 1987.
- மறுசீரமைப்புச் சட்டம், 2000 சத்தீஸ்கர் மாநில உருவாக்கம்.
- மறு சீரமைப்பு சட்டம் 2000, உத்தரகாண்ட் மாநில உருவாக்கம்.
- பீகார் மறுசீரமைப்புச் சட்டம் 2000, ஜார்கண்ட் மாநில உருவாக்கம்.
- ஆந்திரப் பிரதேசம் மறுசீரமைப்புச் சட்டம் 2014, தெலங்கானா மாநில உருவாக்கம்.

மீதமுள்ள மாநிலங்கள்

மேலும் பல பகுதி மக்களிடமிருந்து தனி மாநில கோரிக்கை எழுகின்ற காரணத்தினால் மொழிவழி மாநில சீரமைப்பு செயல்பாடுகள் தொடர்ந்து வருகின்றது.

- ஹாரித் பிரதேஷ் (மேற்கு உத்தரப் பிரதேசம்)
- பூர்வாஞ்சல் (கிழக்கு உத்தரப் பிரதேசம்)
- போடா லாண்ட் (வடக்கு அசாம்)
- சௌராஷ்டிரா (தெற்கு குஜராத்)
- கூர்க்கலாண்ட் (வட மேற்கு வங்காளம்)
- விதர்பா (கிழக்கு மகாராஷ்டிரா)
- கோசல் (ஒடிசா)

புதிய மாநிலங்கள் அமைப்பது இன்றும் சிக்கல்கள் நிறைந்ததாகவே இருக்கின்றது. பண்பாடு, சாதி, மதம், மொழி, இனம், குறிப்பிட்ட நில அமைப்பு என்று பல வடிவங்களில் சிக்கல்கள் எழுகின்றன. ஆகவே தனி மாநில கோரிக்கைகள் தனித்த அடையாள வெளிப்பாடாகவும், வளங்கள் பயன்பாடு சார்ந்ததாகவும் உள்ளது.

செயல்பாடு

மொழி அடிப்படையில்லாமல் வேறு காரணங்கள் அடிப்படையிலமைந்த ஒரு குழுவை அமைத்து பல ஆலோசனைகளை வெளிப்படுத்துக. அது எவ்வாறு தேச வளர்ச்சிக்கு பங்களிக்கிறது?

7.3 மாநிலங்கள் மறுசீரமைப்புக்கு பிறகு இந்தியா

1947–க்கும் பின்னர் சுதந்திர இந்தியா

பிரிட்டனின் காலனி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இங்கு சுமார் 600 நிர்வாக அமைப்புகள் சுதேச அரசுகள் என்ற பெயரில் இருந்தன. நிலவியல் அமைப்பு, கலாச்சார, மத முன்னுரிமையில் மக்கள் இந்தியாவிலோ அல்லது பாகிஸ்தானிலோ இருந்து கொள்ளலாம் என்ற நிலை ஏற்பட்டது. இதற்கிடையே பூட்டான் போன்ற சில நாடுகள் உருவானது. தற்போது உள்ள நிர்வாக அமைப்பு 1947–க்கும் 1950–க்கும் இடையே அமைக்கப்பட்டதாகும். ஒரு சில பகுதிகள் அதாவது மைசூர், ஹைதராபாத், போபால் ஆகியவை பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்தே தங்களது எல்லைகளை மாற்றம் செய்யாமல் தக்கவைத்துக் கொண்டன.

மத மோதல்களுக்கு மத்தியில் விடுதலைக்குப் பின்னர் இந்தியா இரண்டு நாடுகளை அதாவது இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் உருவாவதைக் கண்டன. இந்திய விடுதலை காலனி ஆட்சிக்கு முடிவுகட்டி, மாநிலங்கள் மறுசீரமைப்புக்கு வழிவகுத்தது. அது பெரும்பாலும் மொழி அடிப்படையில் அமைந்தது. நிலவியல் அடிப்படையிலும், கலாச்சார அடிப்படையிலும் சில மாநிலங்கள் அமைந்தன. இவ்வாறு புதிய இந்தியா மறு கட்டமைக்கப்பட்டு மறு சீரமைப்பும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் ஆட்சியும், நிர்வாகமும் எளிமைப் படுத்தப்பட்டது. புதிதாக மறுசீரமைக்கப்பட்ட இந்தியா, கலாச்சார பன்முகத்தன்மை, மொழிகள், உன்னத பாரம்பரியம் ஆகியவற்றை

12th_Political Science_Tamil_Unit_7.indd 186 04-06-2019 11:38:38

பராமரித்து வருகிறது. இந்திய மக்களிடையே, ஒற்றுமை உணர்வையும், இந்த நாடு நமது என்ற மனப்பாங்கினையும் ஊட்டுகின்ற பொறுப்பு இந்திய அரசாங்கத்திற்கு உள்ளது. விடுதலை இயக்கத்தின் போது, மக்களை அணி திரட்ட மாநில / வட்டார மொழிகள் ஆற்றல் மிக்க சக்தியாகத் திகழ்ந்தன என்பதனை காங்கிரசு இயக்கம் கவனத்தில் எடுத்துக் கொண்டது.

காலனிய ஆட்சியில் இந்திய வரைபடமானது உள்ளூர் மொழிகள், வரலாறு மற்றும் கலாச்சார பன்மைத்துவ நிலப்பகுதியை கணக்கில் கொள்ளாது அமையப் பெற்றிருந்தது. தற்போது மாநிலங்கள் உள்ளாட்சி அரசாங்கத்துடன் சீரமைக்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் மறுசீரமைப்பு என்பது மாநிலங்களின் சுயாட்சியை பாதுகாப்பதுடன் மத்திய-மாநில அரசுகளுக்கிடையில் அதிகார சமநிலையை நிலவச் செய்தது. இருந்த போதிலும் மொழிவழிப் போராட்டங்கள் பல நடந்ததன் விளைவாக மாநில அரசுகளைக் காட்டிலும் மத்திய அரசு வலிமையானதாக இருக்க வேண்டியிருந்தது. இதனால், தேசக் கட்டமைப்புப் பணிகள் புதிய சோதனையை எதிர் கொண்டது. மாநிலங்கள் அதிக அதிகாரங்களுடன் சுயாட்சி அந்தஸ்துடன் தங்களின் மொழி, இனம், நில எல்லைகள், மொழியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ஆகியவனவற்றையே விரும்பின.


ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல்

ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் உள்ளிட்ட தலைவர்கள் தேசக் கட்டமைப்புக்கு வழிவகுத்தனர். நாடு பிரிவினையைத் தொடர்ந்து எழுந்த வேதனைமிக்க சூழ்நிலைகள் அவர்களுக்குக் கடும் வலியை ஏற்படுத்தின. எனவே, நாடு மேலும் துண்டாடப்படுவதை விரும்பவில்லை. ஏனெனில், மேலும் ஒற்றுமை கொண்ட நாட்டினை உருவாக்கும் கனவு கொண்டிருந்தனர். எனவே, மொழி, இனம், மதம் அடிப்படையில் மக்கள் மத்தியில் மேலும் பிரிவினையோ, அடையாளப் பிரச்சனையோ உருவாகுவதை விரும்பவில்லை. கடந்த கால அனுபவத்தின் அடிப்படைகளைக் கணக்கில் கொண்டு மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். முன்பு காலனி ஆட்சிக்கு உட்பட்ட மாகாணங்கள் இன்று தனிச்சிறப்பு வாய்ந்த கலாச்சார அடையாளம், தனித்தன்மை வாய்ந்த மொழி, பொருளாதார, நிலவியல் அமைப்பு, அரசியல் மேம்பாடு, நிர்வாக வசதி பெற்ற மாநிலங்களாக அமைந்துள்ளன.

சவால்களும் பேச்சு வார்த்தைகளும்

பல மாநிலங்கள் உருவாக்கப்பட்ட பின்பும், சில தனி மாநில கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன. இந்திய அரசியல் மற்றும் நிர்வாக வரலாறானது மாநிலங்கள், மக்களாட்சி பிரதிநிதித்துவப்படுத்தலுக்கான இடத்தினை வழங்குகிறது. அரசமைப்பு சட்டப்படி அரசியல் தன்னாட்சிக்கான சட்ட ரீதியான உரிமையை கொண்டிருக்கிறது. புதிதாக மாநிலங்கள் அமைக்கப்பட்ட பிறகு, வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதும் அவ்வளங்களை பெறுவதற்கான உரிமைகளை அடைவதும் முன்னுரிமைப் பணியாக இருந்தன. பல மாநிலங்கள் பெரிதாகவும், சில மாநிலங்கள் சிறிய அளவிலும் இருந்தன. சில மாநிலங்கள் பெரிதோ, சிறிதோ ஆனால் பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது அதிக வலுவுடன் திகழ்ந்தன. வளர்ந்த மாநிலங்களுக்கும், வளர்ச்சி குறைந்த மாநிலங்களுக்கும் இடையே சமநிலைப் படுத்துதலை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. மாநிலங்களுக்கான முதலீடு செய்வது, வளர்ச்சி திட்டங்கள், வேலை வாய்ப்புகள் ஆகியவற்றில் முன்னுரிமையுடன் பாரபட்சமாக பகிர்வதன்மூலம் இச்சமநிலை உறுதி

12th_Political Science_Tamil_Unit_7.indd 187 04-06-2019 11:38:38

செய்யப்பட்டது. இருந்தபோதும் மாநிலங்கள் பல அளவுகளில் இருப்பதால் பெரிய மாநிலங்கள் வளங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முயலும் என்பதால் சிறிய மாநிலங்கள் வளங்களை அணுகும் உரிமைகள் பறிக்கப்படும் என சிறிய மாநிலங்கள் குரல் எழுப்பின. இதனால் ஒருவித வெறுப்புணர்ச்சி, பொருளாதார ஏற்றத்தாழ்வு, வளங்களை பயன்படுத்திக் கொள்வதில் முறையற்ற தன்மை ஆகிய மனப்பான்மை மாநிலங்களுக்கிடையே உருவாகியது.

விடுதலைக்குப் பிறகு குறிப்பிட்ட அரசியல் காரணங்களுக்காக சமூக கலாச்சார, அரசியல், பொருளாதார மற்றும் மொழி அடிப்படையில் கட்டமைப்பு செயல்பாடுகள் செயல்படுத்தப்பட்டன. மறு கட்டமைப்பு ஏற்பாடுகள் மொழி அடிப்படையில் மட்டும் செய்யப்படவில்லை. ஏனென்றால் இது தேச ஒருமைப்பாடு வழியில் நின்றது. சில மொழிகள் மற்ற மொழிகளைக் காட்டிலும் சிறப்பு நிலையில் இருந்தது. இது மற்ற மொழிகள் பேசும் மக்களிடையே ஆதிக்கம் செய்யும் நிலையும் இருந்தது. ஆகவே மாநில கட்டமைப்பு நடவடிக்கைகளுக்கு மொழியை அடிப்படையாகக் கொள்வது குறித்த விவாதங்கள் நடைபெற்றன.

தேசிய அடையாள மற்றும் மொழி, கலாச்சார அடையாளங்களுக்கிடையே உள்ள நிலை பற்றி இவ்விவாதங்கள் நடைபெற்றன. அஸ்ஸாமின் போட்டோ-வும் கர்நாடக கூர்க்கும் இதற்கு உதாரணமாக கூறலாம். ஒரே மொழி பேசும் இரண்டு மாநிலம் அருகருகே இருந்தாலும் அம்மாநிலங்களில் இருந்த சாதி, மத மற்றும் இன வேறுபாடுகள் தேசிய அடையாளம் பெறுவதற்கு பிரச்சினைகளாக இருந்தன. எனினும் 1956ஆம் ஆண்டு 12 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டன. பிறகு 22 மொழிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது மொழி-கலாச்சார சமுதாயங்களின் இடையே அரசியல் அடையாள கோரிக்கைகள் அதிகரித்து வருவதைக் காட்டுகிறது.

எல்லைகள்

விடுதலைக்கு முன்பு இந்த நாடு மாகாணங்கள், சுதேச அரசுகள், ராஜதானிகள் எனப் பிரிக்கப்பட்டிருந்தன. மாநிலங்கள் அமைப்பு அறிவிக்கப்பட்டவுடன் அதன் எல்லைகள் குறித்து விவாதிக்கப்பட்டன. குறிப்பாக கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா, மற்றும் குஜராத், அரியானா மற்றும் பஞ்சாப், ஒரிசா மற்றும் மேற்கு வங்கம், ஆந்திரா பிரதேசம் மற்றும் சென்னை மாகாணம் ஆகியவற்றிற்கிடையே எல்லைகள் குறித்து பேச்சு வார்த்தைகள் நடந்தன.


பல்வேறு வேறுபாடுகளைத் தாண்டி மொழியால் ஆதிக்கம் செலுத்தக் கூடிய சமுதாயங்கள் தங்களுக்கான தனித்த பிராந்திய மற்றும் கலாச்சார வடிவங்களை வலியுறுத்தினர். இந்த கலாச்சார மற்றும் மொழி ரீதியிலான அடையாளங்களை அந்த மாநில மக்கள் ஆதரித்தனர். இங்கே கலாச்சார, மொழி ரீதியிலான சிறுபான்மையினர் பேசும் மொழிகளும் அனுமதிக்கப்பட வேண்டியிருந்தது.

எதிர்பார்க்கப்பட்டதைப் போல மொழி அடிப்படையில் அமைந்த பெரும்பான்மை சமூகம், மொழி சிறுபான்மை சமூகத்தின் மீது நிர்வாகம், கல்வி, வேலைவாய்ப்பு, நீதி மற்றும் பொருளாதார துறைகளில் ஆதிக்கம் செலுத்தியதன் மூலம் பெரும்பான்மை சமுதாய மக்கள் ஆதிக்கம் செலுத்தினர். காலாச்சார ஆதிக்கத்தன்மை, மேம்பாடு குறித்த பிரச்சனைகள், மற்றும் வட்டார சமத்துவமின்மை ஆகியன தீர்க்கப்பட வேண்டியிருந்தன. மாநிலங்கள் அனைத்து பகுதி மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு நிரந்தரமான யுக்தியை கையாள வேண்டியிருந்தது. அரசாங்கம் இதனை நீக்க சீரான ஒற்றைத்தன்மை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டதில், மேல்தட்டு மக்கள் சாதாரண பொதுமக்கள் என இரு பிரிவுகள் தோன்றிவிட்டன.

12th_Political Science_Tamil_Unit_7.indd 188 04-06-2019 11:38:38

செயல்பாடு

கீழ்க்கண்ட கருத்துப்படத்தினை படித்து அதன் பொருளை அடையாளம் காண்க.



நன்றி தி இந்து நாளிதழ் 26.12.2011

செயல்பாடு: டி-சார்ட் (பட விளக்கம்)

டி-சார்ட் என்பது ஒருவித பட விளக்கம் தருகின்ற அமைப்பு. கீழ்க்கண்ட பத்தியினை படித்து அதில் உள்ள சாதக-பாதக அம்சங்கள், நன்மை-தீமைகள், தரவுகள், கருத்துகள் மேலும் பல பற்றி கூறுக.



நன்றி தி இந்து நாளிதழ் 19.02.2014

ஆந்திரபிரதேசம் இரண்டு மாநிலங்களாக, நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் ஜீன் 2, 2014 அன்று பிரிக்கப்பட்டது. இதன் மூலம் பல பத்தாண்டு கால கோரிக்கை நிறைவடைந்தது.

12th_Political Science_Tamil_Unit_7.indd 189 04-06-2019 11:38:39

❖ தெலங்கானா மாநிலம் பிரிக்கப்பட்டது குறித்து சாதக-பாதக அம்சங்களை மதிப்பிடுக.

நன்மைகள்	தீமைகள்

செயல்பாடு: குழு விவாதம்



தலைப்பு: தகவல் பெறும் உரிமை, கல்வி பெறும் உரிமை ஆகியன சட்டமாக வந்த பிறகு, பொது சுகாதார-உடல் நல பாதுகாப்பிற்கான உள் கட்டுமானத்தில் உள்ள பின் தங்கிய நிலை உயர, உடல் நல பாதுகாப்பு உரிமை சட்டம் இயற்றப்படுவதற்கான நேரம் வந்துள்ளது என்று எண்ணுகின்றீர்களா? விவாதிக்கவும்.

மண்டலக் கட்சிகளின் தோற்றம்

நாடு முழுவதும் மண்டலக் கட்சிகள் தோன்ற ஆரம்பித்தன. ஏனென்றால் தங்களின் சொந்த மண்ணின் மீதான விசுவாசமும் மண்டல அடிப்படையிலான அடையாள இயக்கங்களும் இத்தகைய மண்டலக் கட்சிகள் உருவாகுவதற்கு காரணங்களாக அமைந்தன. பெரும்பாலான கட்சிகள் உள்ளூர் அளவில் பலம் பெற்றன. மண்டலக் கட்சிகளின் தொடக்கம் மத்திய அரசாங்கத்திற்கு பெரும் சவாலாக அமைந்தது. ஏனென்றால் பிரச்சனைகளின் ஆணிவேர் நாடு முழுவதும் ஒரே விதமாக இல்லை.

மாநிலங்கள் உருவாக்கம்

அண்மைக்கால பொருத்தப்பாட்டில் ஒரு மாநிலத்தின் குறிப்பிட்ட நிலப்பகுதியைப் பிரிப்பதன்மூலம் நாடாளுமன்றம் புதிய மாநிலங்களை உருவாக்க முடியும். பெயர் மாற்றம் செய்வது, எல்லைகளை மாற்றியமைப்பது உள்ளிட்ட அதிகாரங்கள் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இருந்தாலும், இவை நாடாளுமன்றத்தில் முன்வரைவு மூலம் நிறைவேற்றப்பட்டு குடியரசுத்தலைவரின் ஒப்புதலை பெற வேண்டும். இது தொடர்புடைய மாநில அரசாங்கத்தின் கருத்துக்களும், அந்த மாநில அரசாங்கத்தின் சட்டமன்றத் தீர்மானமும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மாநில அரசாங்கம் இது தொடர்பாக முன்வரைவு நிறைவேற்றி குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பும் போது, குடியரசுத்தலைவர் இது தொடர்பான தனி முன்வரைவு ஒன்றினை நாடாளுமன்றத்தில் இயற்ற பரிந்துரை செய்வார். பிறகு நாடாளுமன்றத்தில் முன்வரைவு இயற்றி தனக்கு அனுப்பப்படும் போது குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளிப்பார். பின்பு தான் புதிய மாநிலங்கள் உருவாகும்.

செயல்பாடு



அரசியல் கட்சி உருவாக்குவது

இந்திய அரசமைப்புச் சட்ட விதிகளின்படி ஓர் அரசியல் கட்சியினை தொடங்குவது குறித்து மாணாக்கர் குழு அமைத்து கேள்விகள் எழுப்பவும்.

ஓர் அரசியல் கட்சி உருவாக்குவது, தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்வது, தேர்தல்களில் போட்டியிடுவது ஆகியவற்றிற்கான செயல்முறைகள் குறித்து கேள்விகள் கேட்கவும்.

12th_Political Science_Tamil_Unit_7.indd 190 04-06-2019 11:38:39

7.4 தேச கட்டமைப்பில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சவால்கள்

தேச கட்டமைப்பிற்கான சவால்களில் தேசத்திற்கும் அரசுக்கும் உள்ள வேறுபாடுகளை முதலில் ஆராயவேண்டும்.

அரசு

நிலப்பரப்பு, மக்கள், அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய நான்கு அலகுகளும் இருக்கும் போது அரசு என்பது உருவாகும். அதில் தேசிய உணர்வோ அல்லது நாம் அனைவரும் ஒருவரே என்ற உணர்வோ இல்லாமல் இருக்கலாம். ஆயினும் அது அரசு என்றழைக்கப்படுகிறது. நாட்டு மக்கள் அனைவரும் ஒருவரே என்ற உணர்வு அவர்களுக்கிடையே நிலவும் போது மற்ற வேறுபாடுகள் அனைத்தும் ஒருமைப்பாட்டிற்கு கீழானது என்றாகிவிடும். பொது நலமே மேலானது என்ற நிலை உருவாகும்.

தேசம்

தேசம் என்ற பொருள்படும் "Nation" என்ற சொல் லத்தீன் மொழியிலிருந்து வந்ததாகும். அனைவரும் ஒரு ரத்த பந்தம் உடையவர் என்ற பொருளில் இந்த கருத்துரு உருவாகியது. ஆகவே "Nationem" என்ற லத்தீன் சொல் "இனம்" என்ற பொருளில் தேசத்தை குறிப்பிட்டது. மக்களிடையே நிலவும் ஒற்றுமை என்பதனை குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது. பழமை கருத்துப்படி ஒரு தேசம் அரசாக இருக்க வேண்டிய தேவை இல்லை என்பதாகும்.

செயல்பாடு

தலைப்பு: இந்தியாவில் தேசம் என்ற கருத்துரு உருவாகுவதற்கு கலாச்சாரம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

தேசியம்

தேசியம் என்ற கருத்துருவை வரையறுப்பது சுலபம் அல்ல. தனிப்பட்ட ஒரு காரணியை வைத்து ஆராய முடியாது. முக்கியமாக ஒற்றுமை உணர்வு, பலதரப்பட்ட செயல்களின் முடிவு; இனம் மற்றும் மொழிக் குழுமம், பொது அரசியல் விருப்பம் எல்லாவற்றிற்கும் மேலாக வரலாற்று வளர்ச்சி ஆகியன தேசியம் அமைவதற்கு காரணமாகின்றன. அரசியல் கோட்பாடுகள், குறிப்பாக தேசியவாதம் மற்றும் தேசிய அடையாளம் ஆகிய அம்சங்களின் முன்னோடி ஆராய்ச்சியாளர் எர்னஸ்ட் ரெனான். தேசம் என்பது அறவியலின் ஒரு வடிவம் என்பதனையும் தனிமனித சுதந்திரத்தை அடக்கி நாட்டின் சமுதாய கொள்கையை நிறுவும் கோட்பாடு என்பதனையும் எதிர்க்கிறார் எர்னஸ்ட் ரெனான். தேசம் என்பது தனித்தன்மை வாய்ந்த வரலாற்று உணர்வியல் அடிப்படையின் ஒட்டுமொத்த தொகுப்பாகும்.

தேசமானது குறிப்பாக பொருளியல் வாழ்வு, மொழி மற்றும் நிலப்பரப்பு என பல அலகுகள் ஒருங்கே அமைக்கப்பட்டு தேசம் உருவாகியது என்று எர்ன்ஸ்ட் ரெனான் வாதிக்கிறார். இவரின் கருத்துப்படி "தேசம்" என்பது ஒரு ஆன்மா அது ஒரு ஆன்மீக கோட்பாடு – அதில் இரண்டு விதமான அம்சங்கள் அடங்கி உள்ளது. ஒன்று கடந்த கால அம்சம்; மற்றொன்று நிகழ்கால அம்சம் என்று விளக்கம் கூறுகிறார். ஒன்று கடந்த கால வளமிக்க மரபுகளின் நினைவுகள் மற்றொன்று நிகழ்காலத்திய நடப்புகள். கூடி வாழ வேண்டும் என்ற விருப்பம், பாரம்பரியத்திற்குமதிப்பளிக்கவேண்டுமென்ற எண்ணம் ஆகியன தேசிய உணர்வு அமைவதற்கு உள்ள பொது பங்களிப்பாகும்.

சவால்கள்

வழிவகை

உற்பத்தியை அதிகரிப்பது மட்டும் பிரச்சனை அல்ல மாறாக வேறுபாடுகளை களைவதும் ஆகும்.


நமது மக்களாட்சி மற்றும் கூட்டாட்சி ஆகிய அடிப்படையில் எந்தவித சமரசமும் கொள்ளாமல், திட்டமிட்ட மற்றும் கலப்பு

12th_Political Science_Tamil_Unit_7.indd 191 04-06-2019 11:38:39

பொருளாதாரம் மூலம் இந்தியாவை ஒரு சுய-சார்பு நவீன நாடாக உருவாக்குவதை ஜவஹர்லால் நேரு தேர்ந்தெடுத்தார். ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் ஏராளமான நீர்பாசன திட்டங்கள், அடிப்படை தொழில்களை நிறுவினார். விரைவான மின்மயமாக்கல் மற்றும் உள்கட்டுமான வசதிகளை விரிவுபடுத்துதல். மலேரியா போன்ற நோய்களை ஒழித்தல், உணவு உற்பத்தியில் சுய-தேவையை பூர்த்தி செய்தல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட நிலையை அடைதல் என்று பலவகை திட்டங்களை நிறைவேற்றினார்.

60-களின் இறுதியிலும் 70-களின் தொடக்கத்திலும் ஒரு மந்தமான சூழ்நிலை உருவாகியது. பல அரசியல் பிரச்சினைகள் எழுந்தன. பாகிஸ்தான் மற்றும் சீனா உடனான போர்கள் இந்தியாவின் பொருளாதாரத்தைப் பாதித்தது. இந்திரா காந்தி மேற்கொண்ட வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட நடவடிக்கை, ராஜீவ் காந்தி செய்த மின்னணுவியல் புரட்சி ஆகியன இந்தியாவில் நல்விளைவுகளை ஏற்படுத்தின. 1990-ஆம் ஆண்டுக்கு பிறகு இந்தியா சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி பயணிக்கத் தொடங்கியது. எனவே தா.த.உ (LPG) என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்ற தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் கொள்கைகளுக்கு இந்தியாவின் கதவு திறக்கப்பட்டது.

1953-ஆம் ஆண்டு எவரெஸ்ட் பயணம் வெற்றி பெற்றவுடன் தேசியவாதம் குறித்து முதலமைச்சர்களுக்கு நேரு எழுதிய கடிதம்.



"எவரெஸ்ட் உச்சியை அடைந்தது மாபெரும் சாதனை ஆகும். அது குறித்து நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளலாம். இங்கே சில மனிதர்கள் அற்பமான, குறுகிய தேசியவாத கண்ணோட்டத்தினை வெளிப்படுத்துகின்றனர்.

எவரெஸ்டை முதலில் அடைந்த டென்சிங் இந்தியரா அல்லது நேபாளியா என்று கேள்வி எழுப்பப்படுகிறது. மற்றவர் உதவி இன்றி எதையும் செய்து முடிக்க முடியாது.

உண்மையில் இருவரும் இணைந்தே இத்தகைய சாதனையை நிகழ்த்தியுள்ளனர். ஏற்கனவே பெறப்பட்ட அனுபவங்கள், உழைப்பு மற்றும் பயண தியாகங்கள் ஆகியன இவர்களின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தன.

மாபெரும் மனித சாதனைகள் யாவும் எண்ணிலடங்கா மக்களின் கடுமையான தொடர் முயற்சியின் விளைவே ஆகும். ஒரு மனிதனின் கடைசி படிக்கட்டு மற்றொருவரின் தொடக்கமாகும் என்பதனை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறு விவாதிப்பது இந்த விஷயங்கள் குறுகிய மற்றும் கண்டனத்திற்குரிய தேசியவாதம் ஆகும். இது நமது நாட்டிற்கு பெருமை சேர்க்காது என்பதனை உணர வேண்டும். மேலும் அது மக்களை குறுகிய மனப்பான்மையோடு ஒரு விதமான தாழ்வு மனப்பான்மைக்கு இட்டுச் செல்லும்.

வேளாண்மை

1990-களின் மத்தியில் வேளாண்மை துறையில் பின்தங்கிய நிலை உருவாகியது. ஏராளமான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். ஏற்றுமதி தொடர்பான விவசாயம் கடுமையாக பாதித்தது. குறிப்பாக மகாராஷ்டிரா மாநிலத்தின் விதர்பா பகுதியைச் சேர்ந்தப் பருத்தி விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகினர்.

இந்தியாவில் 60 விழுக்காடு மக்கள் விவசாய தொழிலில் ஈடுபட்டுள்ளனர். வேளாண்மைத்துறை வளர்ச்சிவீதம் 1996-97 முதல் 2004-05 வரை 1.65 விழுக்காடு

12th_Political Science_Tamil_Unit_7.indd 192 04-06-2019 11:38:39

செயல்பாடு

இந்தியாவின் கழிப்பறை கதை

சுவாஜ் கிராமத் திட்டத்தின் கீழ் தேசிய ஊரக சுகாதார ஆண்டு கணக்கெடுப்பு 2018–19 மேற்கொள்ளப்பட்டது. அதில் 90.7% கிராமங்கள் திறந்த நிலைக் கழிப்பிடங்ககளை பயன்படுத்துவதிலிருந்து விடுவிக்கப்பட்டது என்று உறுதி செய்யப்பட்டது. இவை அந்தந்த மாநிலங்கள், மாவட்டங்களால் ஏற்கனவே உறுதி செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



முக்கிய தரவுகள்

96.5%

இந்திய ஊரக வீடுகளில் கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டிருந்தது.

90.7%

கிராமங்கள் திறந்த நிலை கழிப்பிடங்கள் இல்லாதக் கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

92,040

வீடுகள் அரசு கணக்கெடுப்பு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

6,136

கிராமங்கள் அரசு கணக்கெடுப்பின் கீழ் ஒரு பகுதியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

50

மில்லியன் மக்கள் இன்றும் திறந்த வெளிக் கழிப்பிடங்களால் தொற்றுக்கு உள்ளாகின்றனர்.

5.5

லட்சம் கிராமங்கள் மத்திய அரசின் இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லா கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

615

மாவட்டங்கள் இக்காலத்தில் திறந்த வெளி கழிப்பிடங்கள் இல்லா மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

30

மாநிலங்கள் மற்றும் ஒன்றிய ஆளுகை பகுதிகள் இதே போன்று அறிவிக்கப்பட்டுள்ளன.

93.1%

கணக்கெடுப்பு காலத்தின்போது கழிப்பறையை பயன்படுத்திய வீடுகளின் விழுக்காடு.

96.5%

கழிப்பறைகளை பயன்படுத்திய நபர்களின் விழுக்காடு

2014

சுவாஜ் பாரத் திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு

500

மில்லியன் மக்கள் திறந்த வெளிக் கழிப்பிடங்களால் பாதிக்கப் படுவதிலிருந்து தடுக்கப்பட்டது.

கணக்கெடுப்பு விவரங்கள்

கணக்கெடுப்பு பணிக்குழு தனது அறிக்கையை தேசிய ஊரக சுகாதார ஆண்டுக் கணக்கெடுப்பினை மேற்பார்வையிடும் வல்லுநர் பணிக்குழுவிடம் தாக்கல் செய்தது.

உலக வங்கி, யூனிசெப், வாட்டர் எய்ட்டு, பில் & மெளிண்டா அறக்கட்டளை இந்திய சுகாதார கூட்டமைப்பு, நிதி ஆயோக் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை உள்ளிட்ட நிறுவனங்களில் பிரதிநிதிகளை வல்லுநர் பணிக்குழு உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

இரண்டாம் சுற்றுக் கணக்கெடுப்பின்போது திட்டம் அமலாக்கத்தில் பணிக்குழு திருப்தி தெரிவித்துள்ளது.
(சென்ற ஆண்டும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது)

95% நம்பகமான முடிவுகளை வழங்கக்கூடிய பிராபபல் கீ புரோபஷன் டூ சைஸ் (PPS) எனும் மாதிரி கணக்கெடுப்புமுறை பயன்படுத்தி இக்கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

வரைபட விளக்கம் கீழ்க்கண்ட தலைப்புகள் குறித்து நீங்கள் அறிந்தவற்றை வகுப்பறையில் விவாதிக்கவும். கணக்கெடுப்பின் முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கவும்.

12th_Political Science_Tamil_Unit_7.indd 193 04-06-2019 11:38:40

அதிகரித்தது. இந்தியாவில் இரண்டாவது விவசாய நெருக்கடி உருவாக இதுவே காரணம் ஆகும். (முதல் விவசாய நெருக்கடி 1960-களின் தொடக்கத்தில் நிகழ்ந்தது) பணக்கார மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கான மானியம், இலவச மின்சாரம், ஆதார விலை நிர்ணயம், இலவச பாசனம் மற்றும் இலவச உரம் ஆகியனவற்றுக்கான மானியம் குறைக்கப்படவில்லை, ஆனால் இத்துறையில் அரசு முதலீடு என்பது குறைக்கப்பட்டது.

2008-09 ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அமெரிக்க மதிப்பில் 15 பில்லியன் டாலர் மதிப்பிலான விவசாயிகள் கடன் ரத்து செய்யப்பட்டது. அதே சமயம் 80 சதவிதம் சிறு விவசாயிகளால் விவரசாயக் கடன்களைப் பெற முடியவில்லை. 60 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் தரிசாகப் போடப்பட்டதால் பஞ்சம் ஏற்பட்டது. அதே சமயத்தில் அது அளவுக்கதிகமான பொருளாதார இழப்பை ஏற்படுத்தும், விவசாயிகளை மேம்படுத்தும் அரசு உதவி குறைக்கப்பட்டது.

மத்திய அரசாங்கத்தின் கல்வி நிலையங்கள் மற்றும் மத்திய அரசு வேலைவாய்ப்புகளில் இதர பிற்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்குமாறு மண்டல் ஆணையம் பரிந்துரை செய்தது.

தொழிற்சாலை

தொழில்துறை தகராறு சட்டம் - ஆனது இந்தியாவில் பணியாற்றும் மொத்தத் தொழிலாளர்களில் 10 விழுக்காட்டுக்கும் குறைவான தொழிலாளர்களையே பாதுகாத்துள்ளது. 90 விழுக்காடு தொழிலாளர்கள் அமைப்பு ரீதியாகத் திரட்டப்படாத தொழில்களில் உள்ளனர். பொதுத்துறை நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தொழிற்சங்கம் அமைத்து கூட்டு பேரம் மூலம் பலனடைகின்றனர். பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைத்துக் கொள்ளவும் கூட்டுப் பேரத்தில் ஈடுபடவும் உரிமைக் கொண்டுள்ளனர். ஆனால் தனியார் தொழிற் துறைகளில் பணியாற்றும் ஊழியர்கள் தங்களுக்கென சங்கம் அமைக்கவும் தங்கள் பிரச்சனைகளுக்காக கூட்டுப்பேரத்தில் ஈடுபடவும் தனியார் நிறுவனங்களின் மேலாண்மை தடுத்து வருகின்றன. இந்திய தொழிற்துறையானது தொடர்ந்து முதலீட்டு நலன் சார்ந்த தொழிற்துறையாக இருப்பதால் அதிக வேலையில்லா திண்டாட்டம் நிலவுகிறது. இந்நிலையானது முறைசாரா மற்றும் தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கிறது.

செயல்பாடு

தகவல் பெறும் உரிமை சட்டம் பற்றி விவாதிக்கவும்.

நிலம் கையகப்படுத்துதல் என்பது முக்கியப் பெரும்பிரச்சனையாக உள்ளது. பழங்குடி மக்களை இடம்பெறச் செய்ய முடியவில்லை. தொழிற்சாலை அமைப்பதற்கு தேவையான நிலங்கள் கிடைக்கவில்லை. உள்ளூர் மக்களின் ஒப்புதலில் தான் நிலங்கள் பெற வேண்டிய நிலை உள்ளது. நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கைகளைத் தகுந்த இழப்பீடு வழங்குதல் மற்றும் நலத் திட்டங்கள் மூலம் நிறைவேற்ற வேண்டியுள்ளது. தற்போதைய சட்டம், அரசாங்கம் நிலம் கையகப்படுத்துவதற்குப் போதுமான அதிகாரங்களை கொடுத்துள்ளது. சில இடங்களில் வலுக்கட்டாயமாக இதனை செய்யும்போது வன்முறை நிகழ்வு வெடிக்கின்றன.

அரசியல் ரீதியிலான சவால்கள்

1990-ஆண்டுக்கு பின்னர் மாநிலங்களுக்கிடையே சமத்துவமின்மை அதிகரித்தது. மத்திய அரசாங்கத்தின் நிதி மாநிலங்களுக்கு அளிப்பது குறைக்கப்பட்டது. இதனால் மாநில அரசாங்கங்கள் தனியார் நிறுவனங்களை நாடவேண்டியுள்ளது. சில மாநிலங்கள் அன்னிய முதலீட்டை ஈர்க்க முயற்சிக்கின்றன. சில மாநிலங்களால்

12th_Political Science_Tamil_Unit_7.indd 194 04-06-2019 11:38:40

இதனைச் செய்ய முடியவில்லை. இதனால் மாநிலங்களிடையே ஏற்றத்தாழ்வான வளர்ச்சி உருவானது.

மத்திய – மாநில உறவுகள்

வறுமை ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதன் மூலம் சாத்தியமாகும். மத்திய மாநில உறவுகள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள், பிராந்திய கட்சிகளின் ஆட்சிக்குட்பட்டுள்ளன. இதனால் மத்திய மாநில உறவுகளில் தடங்கல் வந்துள்ளது.

முன்பு மாநிலங்களுக்கிடையேயான குழு அமைந்த அமைப்பில் மாநிலங்கள் தங்களுக்கு அதிக அதிகாரங்கள் கோரின. மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிக நிதி பங்கீட்டினை கேட்டனர். மத்திய மாநில உறவுகளில் நிதி உறவு மட்டுப்படுத்தப்படுகிறது.

பொருளாதார சவால்கள்

இந்தியாவில் வாழும் மக்களில் பெரும்பாலோர் நாள் ஒன்றுக்கு ஒரு டாலருக்கும் கீழ் வருமானம் உள்ளவர்கள் என்பதை டீட்டன் மற்றும் ட்ரெசி சுட்டிக்காட்டியுள்ளனர். இருந்தாலும், இந்தியாவில் வறுமை விகிதம் குறைந்து வருவதாக விவாதிக்கப்படுகிறது. *1993–94 – 1999–2000* காலகட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு டாலருக்கும் குறைவான வருமானம் ஈட்டுவோர் விகிதம் *36* விழுக்காட்டிலிருந்து *26* விழுக்காடாகக் குறைந்துள்ளதாக ஒரு மதிப்பீடு குறிப்பிடுகிறது. அதாவது இன்னமும் *270* மில்லியன் இந்தியர்கள் ஏழ்மையில் உள்ளதை இது குறிக்கிறது. சீனாவில் *110* மில்லியன் ஏழைகள்தான் உள்ளனர். அடிப்படைக் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் மனித மேம்பாடு இன்னமும் நிறைவுறாததாக இருக்கிறது. வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்கள் எண்ணிக்கை குறைந்தபோதிலும், உள் இணைக்கும் வளர்ச்சி எனும் செயல்திட்டத்தினை பயன்படுத்தி இன்னும் துரிதமாக வறுமை ஒழிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க முடியும்.

உலகமயமாதல்

1990 முதல் தாராளமயமாதல், தனியார்மயமாதல், உலகமயமாதல்(தா.த.உ / *LPG*) கொள்கைகளுக்கு மாறியதால் ஏற்றத்தாழ்வுகள் மேலும் அதிகரித்து நாட்டின் பல பகுதிகளில் சமூக- அரசியல் பதற்றநிலை எழுவதற்கு வழிவகுத்தது. நாட்டு ஒற்றுமை, சமூக ஒருமைப்பாடு ஆகியனவற்றை உறுதிப்படுத்த இதரபிற்படுத்தப்பட்ட மக்களுடன் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகிய பிரிவினர்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தும் அவசியம் உருவானது.

சமூக சவால்கள்

இந்த சீர்திருத்த காலத்தின் போது இந்தியா மேற்கொண்ட பொது உடல்நல ஆரோக்கியத்திட்டம் குறித்த அறிக்கை கவலை அளிக்கக்கூடிய சித்திரத்தை வழங்குகிறது. குழந்தை இறப்பு விகிதம் *1980*-களில் *30* சதவீதம் இருந்தது *1990*-களில் *12.5* சதவீதமாக குறைந்துள்ளது. இந்தியாவின் (*80/1000*) குழந்தை இறப்பு விகிதம், பங்களாதேஷ் (*91/1000*) நாட்டைக்காட்டிலும் குறைவாக உள்ளது. ஆனால் *1999*-ஆம் ஆண்டு பங்களாதேஷின் (*61/1000*) குழந்தை இறப்பு விகிதத்தை விட இந்தியா (*71/1000*) பின்னடைந்துள்ளது.

வகுப்புவாதம்

பிரிவினைக் காலத்தில் இருந்தே நாடு வகுப்புவாதத்தைச் சந்தித்து வருகிறது. தீய நோக்கம் கொண்ட அரசியல் கட்சிகள், அடிப்படைவாத குழுக்கள், வெறுப்பை உருவாக்கும் வதந்திகளை பல்வேறு சமுதாயத்தினரிடையே பரப்பி வருகின்றனர். இத்தகைய மத வெறுப்பு கட்டுக்கதைகளால் சமூகங்களுக்கு இடையே மோதல்கள் உருவாக்குகின்றன. இதனால் சிறு பான்மையினரே அதிகம் பாதிப்பு அடைவதுடன் தங்களின் வாழ்வாதாரத்தையும் சொத்துக்களையும் இழக்கின்றனர்.

12th_Political Science_Tamil_Unit_7.indd 195 04-06-2019 11:38:40

சாதி மற்றும் பால் பாகுபாடு

சாதிய மோதல்கள் சாதிய பாகுபாடுகள் தொடர்ச்சியாக தேசக் கட்டமைப்பிற்கு சவாலாக உள்ளன. தீண்டாமைக்கு எதிராக கடுமையான சட்டங்கள் இருந்தும் அது இன்றும் தொடர்கின்றது. கலப்பு திருமணம் செய்து கொள்வோர் ஆணவப் படுகொலைகளுக்கு உள்ளாகின்றனர்.

நடைமுறையில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக நடத்தப்படுவதில்லை. அரசியலில் அவர்களின் பிரதிநிதித்துவம் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது. பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் அதிகரித்துள்ளது. சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு இன்னும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது பெரும் சவாலாக உள்ளன. வளர்ச்சி என்பது அய்யத்துக்கு இடமில்லாமல் வறுமையைக் குறைத்து வாழ்க்கை நிலையை மேம்படுத்தியுள்ளது என்பது உண்மைதான். இருப்பினும், பலன்கள் ஏழை மக்களிடம் சென்றடைவதைகாட்டிலும் நடுத்தர மற்றும் பணக்கார பகுதி மக்களிடம் தான் அதிகமாகச் சென்றடைகின்றன. தகவல் தொடர்புத் துறை, வங்கிகள், பங்கு சந்தை, விமான போக்குவரத்து, வணிகம் மற்றும் தொழில் கொள்கை ஆகிய துறைகளில் செய்யப்படுகின்ற சீர்திருத்தங்கள், அளவுக்கு வேளாண்மை மற்றும் மனித மேம்பாட்டிற்குச் செல்லவில்லை. மூலவளங்கள் திரட்சியும், அறிவுப்பெருக்கமும் கொண்டு இந்திய தொழில்மயமாக்கல் தொடரும் அதே நிலையில் 250 மில்லியன் மக்கள் நாளொன்றுக்கு ஒரு டாலருக்கும் கீழ் வருமானம் உள்ள நிலையில் வாழ்கின்றனர்.

இதே நிலையில் தொடருமானால் இந்தியாவில் வறுமை, கல்லாமை, சரிவிகித உணவின்மை ஆகியவற்றை ஒழிப்பதற்கு மிகநீண்ட காலமாகும். மேலும் மனித மேம்பாட்டுக் கூறுகளான கல்வி மற்றும் பொது சுகாதாரம் போன்ற துறைகளின் வளர்ச்சி மேலும் காலதாமதமாகும்.

மேலே விளக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சவால்களே தேச கட்டமைப்பின் பெரும் சவாலாக நீடிக்கின்றன.

செயல்பாடு

வளர்ச்சித் திட்டங்கள்


அரசு மேற்கொள்ளும் வளர்ச்சித் திட்டங்கள் நான்கினைப் பட்டியிலிடுக. அதில் இரண்டு ஊரகப் பகுதிகளுக்கும், இரண்டு நகரப்பகுதிகளுக்கும் பொருந்த வேண்டும்.

7.5 தமிழ்நாடு மாநிலம் உருவாக்கப்படுதல்

1802-ஆம் ஆண்டு வெல்லெஸ்லி பிரபு சென்னை மாகாணத்தை உருவாக்கினார். 18-ஆம் நூற்றாண்டு இரண்டாவது பகுதி வரை தென்னிந்தியாவை பல்வேறு சிற்றரசர்கள் ஆட்சி செய்து வந்தனர். பிரிட்டிஷாரின் தென்னிந்தியப் படையெடுப்பின் விளைவாக இவைகள் ஒன்றிணைக்கப்பட்டன. பிரிட்டிஷ் இந்தியாவின் கீழ் ஒரு நிர்வாக அமைப்பாக சென்னை மாகாணம் இருந்தது.

இந்த நிர்வாக அமைப்பு இன்றைய தமிழகம், ஆந்திர பிரதேசம், ஒரிசாவில் சில பகுதிகள், கேரளா, கர்நாடகா மற்றும் லட்சத் தீவு ஆகிய பகுதிகளைக் கொண்டிருந்தது. விடுதலைக்கு பிறகு சென்னை மாகாணம் சென்னை மாநிலமாக மாறியது. நவம்பர் 1, 1956-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மொழிவாரி மாநில அமைப்பு நடவடிக்கைக்கு பின்பு தமிழர்களுக்கான தனி மாநிலமாக சென்னை மாநிலம் உருவாக்கப்பட்டது. நீண்ட போராட்டத்திற்கு பிறகு இதன் பெயர் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

12th_Political Science_Tamil_Unit_7.indd 196 04-06-2019 11:38:40



மொழி அடிப்படை தேசியவாதம் உருவாக்கம்

20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தேசிய உணர்வு வளர்ந்து வரும் போதே நாட்டின் பல பகுதிகளில், மாநில மொழிகள் பத்திரிகைகள் மற்றும் வட்டார அடிப்படையிலான அரசியல் இயக்கங்கள் மூலம் வட்டார விழிப்புணர்வு வளரத் தொடங்கியது. தேசிய இயக்கத்தில் முன்னணியில் இருந்த இந்திய தேசிய காங்கிரசு உருவாக்கிய 'தேசியம்' என்று கருதுகோள் பல பிரச்சனைகளை எதிர்கொண்டது. இந்தி மொழிக்கு முன்னுரிமை வழங்கியது முக்கியப் பிரச்சனையானது 20-ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பத்தாண்டுகளில் தமிழ்மொழி துணை தேசியவாதம் வளர்வதற்கு இது காரணமானது. காங்கிரசின் சாதிய கண்ணோட்டம் காரணமாக சாதிப்பிரிவினை, மொழிவாரி தேசியவாதம், வர்க்க போராட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய, பிராமண அல்லாதோர் இயக்கம் தொடங்கியது.


12th_Political Science_Tamil_Unit_7.indd 197 04-06-2019 11:38:40



தியாகராயர்



டி.மாதவன்



தந்தை பெரியார்



சங்கரலிங்கனார்


டி.மாதவன், தியாகராயர் மற்றும் பல பிராமணரல்லாதோர் தலைவர்கள் தென்னிந்திய நல உரிமை கூட்டமைப்பினை உருவாக்கினர். பிற்காலத்தில் இவ்வியக்கம் "நீதிக்கட்சி" என்ற பெயரில் புகழ் பெற்றது. 1920-ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாகாணத் தேர்தலில் நீதிக் கட்சி போட்டியிட்டு வெற்றிப்பெற்று ஆட்சி அமைத்தது. 1920 முதல் 1937 வரை நடைபெற்ற 5 தேர்தல்களில் நான்கு முறை வென்று அமைச்சரவை அமைத்தது. பின்பு 1937 தேர்தலில் காங்கிரசு கட்சியிடம் தோல்வியுற்றது. பிறகு பெரியார் ஈ.வே.ராமசாமி தலைமையில் சுய மரியாதை இயக்கமாக மாறியது. இந்த இயக்கம் தமிழ் மக்களின் பண்பாடு மற்றும் அரசியல் வாழ்வில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. தென்னிந்தியாவில் தமிழ் தேசியவாதம் வளர்வதற்கு இவ்வியக்கம் காரணமானது.

திராவிட நாடு சிந்தனை

ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் காங்கிரசு கட்சி தமிழகத்தில் தன்னை பலப்படுத்தியது. 1937-ஆம் ஆண்டு சென்னை சட்ட மன்றத் தேர்தலில் காங்கிரசு வெற்றி பெற்றது. ராஜாஜி முதலமைச்சராக பதவியேற்றார். அவர் இரண்டு அரசு கொள்கைகளை உருவாக்கினார். முதலாவதாக தீண்டாமை ஒழிப்பு, இரண்டாவது இந்தி மொழியை தேசிய மொழியாக அறிவிப்பது. பள்ளிகளில் இந்தி கட்டாய மொழிப்பாடமாக்கப்பட்டது. இது பிராமணரல்லாத தமிழர்/திராவிடர்களின் சுயமரியாதையை இழிவுபடுத்தியதாகக் கருதப்பட்டது. தந்தை பெரியார் மற்றும் பல சுயமரியாதை இயக்கத் தலைவர்கள் இந்தி எதிர்ப்பு மாநாடுகளையும், ஆர்ப்பாட்டங்களையும், நடத்தினர்.



மறைமலை அடிகள்



திரு.வி.கல்யாண சுந்தரம்

தமிழறிஞர்களான மறைமலை அடிகள், திரு.வி.கல்யாண சுந்தரம் மற்றும் பலர் இந்தி மொழிக்கு எதிராக கண்டனப் பொதுக்கூட்டங்களை நடத்தி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார். ஈ.வே.ரா பெரியார் இப்போராட்டத்துக்கு தனது மனப்பூர்வமான ஆதரவினை நல்கினார். "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கத்தினை எழுப்பும் அளவுக்கு இப்போராட்டத்தை ஆதரித்தார். 1939-ஆம் ஆண்டு "திராவிட நாடு" மாநாட்டினை நடத்தி "திராவிட நாடு" கோரிக்கையை முன்வைத்தார்.

காமராஜர் மற்றும் இராஜாஜி

தமிழர், தெலுங்கர், கன்னடர் மற்றும் மலையாளர் ஆகியோரை உள்ளடக்கிய திராவிடநாடு என்கிற தனி நாடு கோரிக்கை இயக்கம் பிராமணரல்லாதோர் மத்தியில் வளரத் தொடங்கியது. 1944-ஆம் ஆண்டு ஈ.வே.ராமசாமி, நீதிக் கட்சியினை திராவிடர் கழகம் என பெயர் மாற்றம் செய்யும்

12th_Political Science_Tamil_Unit_7.indd 198 04-06-2019 11:38:42

தீர்மானத்தினை சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நிறை வேற்றினார். தமிழர் வாழ்வினை மேம்படுத்துவதற்காக இதைச் செய்வதாகக் கூறினார். பொதுமக்கள் பெரும் அளவில் திரண்டது மற்றும் தொண்டர்களின் போர்க்குணம் இரண்டுக்குமாக சேலம் மாநாடு புகழப்பட்டது.




காமராஜ்



ராஜாஜி

திராவிட நாடு என்பது, சுய ஆட்சியும் அதிக அதிகாரங்களும், சுதந்திர இறையாண்மை உரிமையும் கொண்ட, மொழி அடிப்படையில் நான்கு அலகுகளை மாநில உரிமைகளுடனும் சுயாட்சியுடனும் கொண்ட கூட்டாட்சி குடியரசாக திராவிட நாடாகத் திகழும் என்று கூறப்பட்டது. இருந்தபோதிலும் திராவிட நாடு கோரிக்கை தமிழ் மொழி பேசுவோர் அல்லாத மக்களின் ஆதரவினைப் பெறவில்லை.

தட்சிண பிரதேசம் எனும் மாநிலக்கொள்கை



சி. சுப்பிரமணியம்



பக்தவத்சலம்

திராவிட கருத்தாக்கத்துக்கு எதிர்நிலையில் இருந்த தென்னந்தியாவைக் களமாகக் கொண்டு ஒரு புதிய அரசியல் நிலைக்கருத்தினை இராஜாஜி உருவாக்கினார். தட்சிண பிரதேசம் என்பது அதன் பெயர். இது தமிழ்நாடு மற்றும் கேரளாவை உள்ளடக்கியதாகும். சி.சுப்பிரமணியம், பக்தவச்சலம் போன்ற தனது சீடர்கள் மூலம் இக்கருத்தினைப் பரப்பினார். ராஜாஜியின் இந்த அரசியல் கருத்தினை பெரும்பாலான தென்னிந்திய அரசியல் கட்சியினர் எதிர்த்தனர்.



செ. அச்சுதமேனன்



N. ஸ்ரீகண்டன்



A.K.கோபாலன்

புரட்சிகர சோசலிச கட்சியை சார்ந்த ஸ்ரீகண்டன், கொச்சின் கம்யூனிஸ்ட் கட்சியை அச்சுதமேனன், திருவிதாங்கூர் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த ஏ.கே.கோபாலன் ஆகியோர் "தட்சிண பிரதேச" கோரிக்கையை கடுமையாக எதிர்த்தனர். விடுதலை பத்திரிகையில் பெரியார் இது குறித்து தலையங்கம் எழுதினார். அனைத்து தமிழர்களும் தட்சிண பிரதேச அமைப்பை எதிர்த்து முதலமைச்சருக்கு தந்தி அனுப்புங்கள் என்று அறைகூவல் விடுத்தார். இதற்கிடையே கர்நாடகாவும் எதிர்த்தது. குறிப்பாக கர்நாடகா மக்கள் கட்சியை சார்ந்த சர்தார் சரனா கவுடா இதனை எதிர்த்தார். இருந்தபோதிலும் 1956-ல் அமிர்தசரசில் நடைபெற்ற காங்கிரஸ்

12th_Political Science_Tamil_Unit_7.indd 199 04-06-2019 11:38:44

மாநாட்டில் இராஜாஜியும் அவரது ஆதரவாளர்களும் "தட்சிண பிரதேசம்" குறித்து பேசினர். ஆனால் அப்போதைய தமிழக முதல்வர் காமராஜர் அந்த மாநாட்டிலேயே இக்கருத்தினை கடுமையாக எதிர்த்தார். தமிழ்நாட்டிலும் தாம் கலந்து கொண்ட அனைத்து பொதுக் கூட்டங்களிலும் தட்சிண பிரதேச கருத்தினை எதிர்த்து முழங்கினார். இது தமிழ் மக்களிடையே பெரும் எழுச்சியை உருவாக்கியது. இக்கருத்திற்கு எதிராக போராடவும் தயாரானார். மக்களும் தட்சின பிரதேசம் உருவாவதற்கு எதிராகப் போராடத் தயாராகினர்.

விடுதலைக்கு பின்பு மொழிவாரி மாநிலங்கள் மறுசீரமைப்பு

விடுதலைக்கு முன்பே பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்திலேயே மொழிவாரி மாநிலங்கள் அமைக்கும் கோரிக்கைகள் எழுந்தன. விடுதலைக்கு பின்பு முதல் பத்தாண்டுகளில் (1947–1956) தேச கட்டமைப்பு குறித்து இரண்டு விதமான கொள்கை வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டன. ஒன்று அலுவல் மொழி பற்றியது. மற்றொன்று மாநிலங்கள் மறு சீரமைப்பு பற்றியது. அதாவது கூட்டாட்சி மறு கட்டமைப்பு. தேச கட்டுமானம் மற்றும் ஒருங்கிணைப்பு முயற்சியில் மொழி அடைப்படையில் மாநிலங்களை மறுசீரமைப்பு செய்வது விடுதலைக்கு பின் முதல் பணியாக ஆனது.

இருநூறு ஆண்டுகால பிரிட்டிஷ் ஆட்சியில், 1947-க்கு முன்பு மாகாணங்களில் எல்லைகள் சரிவர நிர்ணயிக்கவில்லை. மொழி மற்றும் பண்பாட்டுக்குக் கவனம் செலுத்தப்படாததால் மாகாணங்கள் பலமொழிகள் பேசக் கூடியதாகவும், பல பண்பாடுகளை உள்ளடக்கியதாகவும் இருந்தன.

மொழி என்பது மக்களின் பண்பாடு மரபுகள் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையது. மட்டுமல்லாமல் பெருமளவிலான கல்வி வளர்ச்சி மற்றும் அதிகளவிலான எழுத்தறிவித்தல் தாய்மொழி கல்வி மூலம் மட்டுமே நிகழ்ந்தன. அதிக மக்கள் பேசும் மொழி அடிப்படையில் மாநிலம் அமைக்கப்பட்டு, அரசியல் மற்றும் ஆட்சித்துறை அல்லது நீதித்துறை செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்போது மட்டுமே மக்களாட்சி உண்மையிலேயே அடித்தட்டு மக்களுக்கானதாக இருக்கும்.


தமிழ்நாடு மாநிலம் உருவாக்கம்

தமிழ்நாடு மாநிலம் அமைக்கப்பட்டது முக்கியமாக அப்போதைய அரசியல் நிகழ்ச்சி போக்கும் மொழிவழி அடிப்படையில் அமைந்த மறுசீரமைப்பும் ஆகும். சென்னை மாநிலத்தின் சமூக-பொருளாதார அரசியல் நிகழ்வு போக்கு மற்றும் அதன் வளர்ச்சி என்பது மொழி இயக்கத்தோடு நெருங்கிய தொடர்புடையது. தமிழ் மொழியின் பெருமை மற்றும் அதன் தொன்மை தமிழ் அறிஞர்களாலும் தமிழ் மக்களாலும் போற்றப்பட்டது. சுதந்திர இந்தியாவில் அவர்கள் ஒன்றிணைய ஏதுவானது. மாநில மறுசீரமைப்பு ஆணையம் தனது இறுதி அறிக்கையை 1955-ஆம் ஆண்டு சமர்பித்தது. அதில் சென்னை, மைசூர் மற்றும் கேரளா மாநிலங்கள் அமைய பரிந்துரை செய்தது. புதிய சென்னை மாநிலம் நவம்பர் 1, 1956-ல் உருவாக்கப்பட்டது.


ஆனால் மறு சீரமைப்பு ஆணையம் இதை ஏற்கவில்லை. பொதுவாக, ஒரு பகுதி வட்டத்தில் எந்த மொழி பேசுபவர்கள் அதிக விழுக்காட்டில் வாழ்கிறார்களோ அந்த மொழி மாநிலத்துடன் அப்பகுதி இணைக்கப்பட வேண்டும் என்பதை ஆணையம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், தேவிகுளம் உள்ளிட்ட நான்கு வட்டங்களைப் பொறுத்து வேறு அளவீட்டினைப் பயன்படுத்தியது. நிலப்பரப்பு காரணம் காட்டி அவை திருவிதாங்கூருடனே நீடித்தல் என அறிவித்தது. ஆனால் திருவிதாங்கூர் பகுதியில் தமிழ்மொழி பேசுவோர் சதவீத அடிப்படையில் நான்கு வட்டங்களான அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம் மற்றும் விளவங்கோடு சென்னை மாநிலத்தோடு சேர்க்க

12th_Political Science_Tamil_Unit_7.indd 200 04-06-2019 11:38:44


வேண்டுமென கோரினர். அதே அளவீடு செங்கோட்டை வட்டம் சென்னை மாநிலத்தில் அமைய கோரப்பட்டது. அதிக தமிழ் மொழி பேசும் மக்களிருந்தும் அந்தப் பகுதி சட்டமன்ற பிரதிநிதிகள் தமிழர்களாக இருந்தபோதிலும் புவியியல் காரணங்களுக்காக திருவிதாங்கூர் பகுதிகள் கொச்சின் மாநிலத்தோடு இணைக்கப்பட்டு விட்டன.



தமிழ்நாடு என பெயர் மாற்றப் போராட்டம்



மா. பொ. சிவஞானம்



ஜீவானந்தம்

தமிழர்களுக்கென தனிமாநிலம் அமைந்த பிறகும் அவர்கள் முழுவதுமாக திருப்தி அடையவில்லை. அவர்கள் தங்கள் மாநிலத்திற்கு சென்னை மாநிலம் என்றிருக்கும் பெயரை "தமிழ்நாடு" என்று மாற்ற விரும்பினர். இந்த பெயர் மாற்றத்திற்கான போராட்டம் பத்தாண்டுகளாக நடைபெற்றது. மாநில மறுசீரமைப்பு ஆணையம் இந்த பெயர் மாற்றத்திற்கு பரிந்துரைக்கவில்லை. மா.பொ.சி (மா.பொ.சிவஞானம்) அவர்கள் இடைவிடாத முயற்சியின் விளைவாக அனைத்து கட்சிகளின் மாநாடு ஜனவரி 27, 1956 அன்று ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. ஏராளமான ஆர்ப்பாட்டங்கள் முற்றுகை போராட்டங்கள் சென்னை மாநிலத்தில்

12th_Political Science_Tamil_Unit_7.indd 201 04-06-2019 11:38:44

நடத்தப்பட்டன. மகாத்மா காந்தியின் சீடரும், சுதந்திர போராட்ட வீரருமான விருதுநகர் சங்கரலிங்கனார் இந்த பெயர் மாற்றக் கோரிக்கைக்காக சாகும் உண்ணாநோன்பினை ஜூலை 27, 1956 அன்று ஆரம்பித்தார் அக்டோபர் 13, 1956 அன்று 76-வது நாள் காலமானார். சங்கரலிங்கனாரின் தியாகம் சென்னை மாநிலத்தின் பல பகுதிகளில் பெரும் எழுச்சியை உருவாக்கியது. கல்லூரி மாணவர்கள், தொழிலாளர்கள், பெண்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர் வெளிப்படையாக இந்த எழுச்சி இயக்கங்களில் பங்கு பெற்றனர். இது சென்னை மாநில அரசியலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் காங்கிரசு கட்சி மக்களிடம் செல்வாக்கினை இழந்தது. இறுதியில் 1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தோல்வியை தழுவியது. திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க) அரசியல் அதிகாரத்தை கைப்பற்றியது, சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது.

செயல்பாடு

தமிழ்நாடு உருவாக்கத்திற்காக தமிழ்நாட்டின் உள்பகுதியில் நடந்த பல்வேறு இயக்கங்களை ஆராய்க. பாடத்தில் குறிப்பிட்டதை தவிர, நடந்தேறிய வேறு பல எதிர்ப்பு இயக்கங்கள், ஊர்வலங்கள் யாவை?

பன்முக கலாச்சாரம், வேற்றுமை மற்றும் தேசக் கட்டமைப்பு செயல்பாடுகள்

புதிய இந்திய தேசம், முதல் சுதந்திரப் போருக்கு பிறகான காலனி ஆட்சியில் எழுந்த தேசிய எழுச்சி இயக்கத்தின் மூலம் உருவாகியது. இந்த தேசிய இயக்கமானது கடந்து வந்த பாதைகளின் ஊக்கத்தினாலும், சுதந்திரம், மக்களாட்சி மற்றும் கூட்டாட்சி கருத்துக்களின் அடிப்படையிலும் அமைந்தது. மன்னராட்சி காலமும், மத ஆட்சியும் மறைந்துவிட்டது. சுதந்திரம், மக்களாட்சி. மக்களின் விருப்பம், உரிமைகள், அவர்களின் மொழி மற்றும் கலாச்சார அடையாளங்கள் மற்றும் அவர்களின் பொருளாதார மேம்பாடு ஆகியன தேச கட்டமைப்புக்கு அடிப்படைகளாகக் கொள்ளப்பட்டன. மாபெரும் தேச கட்டமைப்பாளர்களான மகாத்மா காந்தியும், ஜவஹர்லால் நேருவும் மதவாத கலாச்சார தேசியவாதம் (இந்து தேசியவாதம் அல்லது முஸ்லிம் தேசியவாதம் இரு நாடுகள் கொள்கை) இரண்டுக்கும் எதிராக இருந்தனர். பன்மைச் சமூக அமைப்பை ஏற்றுக்கொண்டனர். ஆகவே அவர்கள் மக்களாட்சி, தாராளவாத கூட்டாட்சி இந்தியாவிற்காக வாதிட்டனர். ஆனால் பல அறிஞர்கள், இந்தியாவில் மாநிலங்களுக்கு போதிய நிதி மற்றும் அரசியல் அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டுகின்றனர். அதிகார குவியல், ஒரே தேசிய அலுவல் மொழியாக இந்தியை ஏற்றுக் கொண்டு ஆங்கிலத்தை நீக்கியது, மாநிலங்களின் கலாச்சார மற்றும் மொழி அடையாளங்களை சிதைப்பதாக அமைந்தது. ஜவஹர்லால் நேரு இந்த ஆபத்தை உணர்ந்த காரணத்தினால் இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகின்ற வரை இந்தி திணிப்பு இருக்காது. அதுவரை ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருக்கும் என்ற உறுதிமொழியினை வழங்கினார்.

அருஞ்சொற்பொருள்

- **பிரிட்டிஷ் காமன்வெல்த்:** ஐக்கிய பேரரசு (பிரிட்டன்) தலைமையிலான கூட்டமைப்பு பெரும்பாலும் இக்கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் முன்னாள் பிரிட்டிஷ் காலனிய நாடுகளாகும். விடுதலை பெற்ற பின்பு பிரிட்டனின் தலைமையில் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.
- **பண்பாடு ஓரினம்:** ஒருமுக தன்மை வாய்ந்த சமுதாயம் தங்களுடைய பழக்கவழக்கங்களில் ஒன்றுக்கொன்று தொடர்பில் அமைந்து அதனை அரசின் மூலம் நிலைப்புத்தன்மை ஏற்படுத்துவது. கலாச்சாரத் துறையில் வேறுபாடுகள் நீங்கியதாக இருக்கும் நிலை.
- **அரசியல் நிர்ணயசபை:** அரசமைப்பு வரையப்பட்டு பின்பு மக்கள் பிரதிநிதிகளால்

12th_Political Science_Tamil_Unit_7.indd 202 04-06-2019 11:38:44

விவாதிக்கப்பட்டு, பெரும்பான்மை கருத்துக்களால் இறுதி செய்யப்பட்ட மன்றமாகும். புதிய அரசாங்கத்தின் அடிப்படை கோட்பாடுகளை நிர்ணயம் செய்யப்பட்ட இடமாகும்.

- **டொமினியன்:** பிரிட்டிஷ் காமன்வெல்த் அமைப்பின் கீழ் சுய ஆட்சி உரிமை பெற்ற நாடு.
- **திராவிடர் கழகம்:** இது ஒரு பகுத்தறிவுவாத அமைப்பாகும். தமிழர் வாழ்வு நிலை உயர்த்துவதற்காக குரல் கொடுத்து அவர்களை சுயமரியாதை உள்ள மனிதர்களாக திகழ வைப்பதை நோக்கமாக கொண்ட இயக்கம்.
- **பொதுச்சபை:** பிரிட்டன் நாடாளுமன்றத்தின் கீழவையாகும். இந்த அவை உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாவர்.
- **மாநிலங்களுக்கு இடையேயான குழு:** மாநிலங்களுக்கிடையே ஒத்துழைப்பையும், ஒருங்கிணைப்பையும் மேம்படுத்தி மத்திய அரசாங்கத்துடன் இணக்கமான போக்கினை பேணும் குழு.
- **மன்னராட்சி:** அரசாங்கம் அரசு அல்லது அரசு பேரரசினை ஆள்வதாகும். அரசியல் சட்ட ரீதியாக அமைந்த மன்னராட்சி அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். அதே சமயத்தில் முழுமையான மன்னர் ஆட்சி நடைபெறும் நாட்டில் மன்னருக்கு அதிகாரங்கள் வரம்பற்றதாக இருக்கும்.
- **ராஜதானி:** பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் போது இருந்த பெரும் நிர்வாகப் பகுதி இப்பகுதி கவர்னர்-ஜெனரல் என்ற பொறுப்பாளரால் ஆளப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியின் போது இந்தியாவில் பம்பாய், கல்கத்தா மற்றும் சென்னை ஆகிய மூன்று ராஜதானி இருந்தன.
- **சுதேச அரசுகள்:** சுதேச அரசுகள் உள்ளூர் அரசு என்றும் அழைக்கப்படுகின்றது. சிறு சிறு பகுதிகளாக ஆட்சி செய்யப்பட்டது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் போது இத்தகைய சிற்றரசர்களால் ஆளப்பட்ட சுதேச அரசுகள் காலனி ஆட்சியாளர்களுடன் இணக்கமான போக்கினை கடைபிடித்தனர்.
- **மாகாணங்கள்:** பிரசிடென்சியை காட்டிலும் சிறிய நிர்வாக அமைப்புகள். இம்மாகாணங்கள் பிரிட்டனின் காலனி ஆட்சியின் கீழ் கட்டுப்பட்டிருந்தன.
- **வட்டம்:** சில தெற்காசிய நாடுகளில் உள்ள நிர்வாக அளவிலான ஒரு பகுதி. மாவட்டத்தின் கீழ் உள்ள நிர்வாக வடிவம் ஆகும்.
- **மத்திய நிதி நிலை அறிக்கை:** இதனை வருடாந்திர நிதி நிலை அறிக்கை என்றும் கூறுவர். மத்திய அரசாங்கத்தின் நிதி ஆண்டின் கணக்கு அல்லது மதிப்பீடு குறித்த அறிக்கையாகும். மத்திய அரசாங்கத்தின் ஒரு வருடத்திய (நிதி ஆண்டு) நிதி நிலை பற்றிய விரிவான அறிக்கையாகும். நிதி ஆண்டானது ஒவ்வொரு ஆண்டு ஏப்ரல் முதல் நாள் ஆரம்பித்து அடுத்தாண்டு மார்ச் 31 அன்று முடிவடையும். இது இரண்டு வகையிலான அறிக்கை என வகைப்படுத்தப்படுகின்றது. ஒன்று வருவாய் நிதிநிலை அறிக்கை மற்றும் மூலதான நிதிநிலைஅறிக்கை.
- **ஒன்றிய ஆளுகைக்குட்பட்ட பகுதிகள்:** மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள நிர்வாக அமைப்புகளாகும். மாநிலங்கள் மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது சில நிர்வாக அமைப்புகள் பலம் குறைந்து, பொருளாதாரரீதியாக நிலையற்ற தன்மையிலும் இருந்தன. இவைகள் பூகோளரீதியாக சிறிய அளவில் இருந்தன. இவைகள் பிரெஞ்சு மற்றும் போர்ச்சுகீசிய காலனி ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளாக இருந்து பின்பு விடுதலை அடைந்த நிலப்பகுதிகளாகும்.
- **வைஸ்ராய்:** காலனிய ஆட்சியின்போது குறிப்பாக 1858-ஆம் ஆண்டியிலிருந்து பிரிட்டன் பேரரசின் பிரதிநிதியாக இந்தியாவில் ஆட்சி செய்தவர். கவர்னர் ஜெனரல் என்ற பதவி வைசிராய் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

12th_Political Science_Tamil_Unit_7.indd 203 04-06-2019 11:38:45

I. சரியான பதிலைத் தேர்வு செய்யவும்

V2CMBP

1. காலனிய ஆட்சிக் காலத்தில் 21 குண்டுகள் முழங்கும் மரியாதை எத்தகைய சுதேச அரசுகளுக்கு வழங்கப்பட்டது?

அ. வலிமையான படை உள்ள சுதேச அரசுகள்
ஆ. பெரிய அளவிலான சுதேச அரசுகளின் மன்னர் வம்சம் சார்ந்தவர்
இ. பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியோடு நெருங்கிய உறவு வைத்திருந்த சுதேச அரசுகள்

2. இந்திய விடுதலைக்கான போராட்டம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ. ஹிராதனாத் குன்ஸ்ரா
ஆ. பேரா.பிபன் சந்திரா
இ. பட்டாபி சீதாராமையா

3. மாநில மறுசீரமைப்புச் சட்டம் 1956 இன் படி கீழ்கண்ட மாநிலங்களில் எவை மறுசீரமைக்கப்பட்டன?

அ. ஆந்திர பிரதேசம், பஞ்சாப், மணிப்பூர், திரிபுரா
ஆ. ஆந்திர பிரதேசம், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், பீகார்
இ. ஆந்திர பிரதேசம், இலட்சத்தீவுகள், ஒடிசா, மேற்கு வங்காளம்
ஈ. ஆந்திர பிரதேசம், திரிபுரா, மேற்கு வங்காளம், சென்னை

4. நிலம் கையகப்படுத்துதல் (நில ஆர்ஜிதம்) எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றது? எவ்வாறு இழப்பீடு அளிக்கப்படுகின்றது?

அ. பிரிவு அ

1. உள்ளூர் மக்களின் ஒப்புதல் பெற்று
2. நல்லத் திட்டங்களுடன் இழப்பீடு அளித்து

ஆ. பிரிவு ஆ

1. அரசாங்கத்திடம் அங்கீகாரம் பெற்று
2. புலம்பெயரும் பழங்குடி மக்களுக்கு இழப்பீடு அளித்து

இ. பிரிவு இ

1. அரசாங்கத்திடம் தொழிற்சாலை அமைப்பதற்கான ஒப்புதல் பெறப்பட்டு
2. தொழிற்சாலை அமைக்க நிலம் கொடுத்த அரசுக்கு இழப்பீடு அளித்து

5. பெரியார் ஈ.வெ.ராமசாமியின் சுயமரியாதை இயக்கம் கீழ்கண்டவைகளில் எதனைத் தூண்டியது?

அ. தமிழ்நாடு மாநில அமைப்பு
ஆ. சென்னை மாகாண ஒழிப்பு
இ. தமிழ் தேசியவாத விழிப்புணர்வை எழுப்பியது

12th_Political Science_Tamil_Unit_7.indd 204 04-06-2019 11:38:45

6. மாநில அரசாங்கங்கள் அன்னிய அல்லது தனியார் முதலீட்டை நாட வேண்டிய காரணங்கள் யாவை? ஒன்றுக்கும் மேற்பட்ட காரணங்களை ஆராய்க.

அ. தனியார் பெருமளவிலான முதலீடு செய்பவர்
ஆ. மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் மத்திய அரசு பாகுபாடுகாட்டுதல்.
இ. அதிகரிக்கும் வேலைவாய்ப்பின்மை
ஈ. மேற்கண்ட அனைத்தும்
உ. மேற்கண்ட எதுவும் இல்லை

7. மாபெரும் எதிர்ப்பு இயக்கம் மற்றும் வன்முறை சம்பவங்களுக்கு பிறகு 1956இல் ஜவகர்லால் நேரு மொழி அடிப்படையில் ஆந்திரப் பிரதேசம் தனி மாநிலமாக அறிவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார் அந்த நிகழ்வுஎது?

அ. இந்தியாவின் கோரிக்கையை ஹைதராபாத் நிஜாம் ஏற்றுக் கொள்ள மறுத்தார்.
ஆ. பொட்டி ஸ்ரீராமலு சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து மறைந்தார்.
இ. விசால ஆந்திரா போராட்டம்

8. 1950ஆம் ஆண்டு எத்தனை மொழிகள் அங்கீகரிக்கப்பட்டது.

அ. 26
ஆ. 22
இ. 12

9. ஜோத்பூர் இந்தியாவிலோ அல்லது பாகிஸ்தானிலோ இணைவதற்கு மகாராஜா ஹன்வந்த் சிங்கிற்கு அளிக்கப்பட்ட சலுகைகள் யாவை (ஏதேனும் இரண்டு விடைகள் தருக)

அ. சர்தார் வல்லபாய் பட்டேல்

1. கராச்சி துறைமுகத்தை பயன்படுத்துதல்
2. ஜோத்பூருக்கும் கத்தியவாருக்கும் ரயில் போக்குவரத்து அமைத்தல்

ஆ. முகமது அலி ஜின்னா

1. ஆயுதங்கள் தயாரித்துக் கொள்வது
2. பஞ்சத்தின் போது விவசாயிகளுக்கு உணவு தானியங்கள் வழங்குவது

இ. சர்தார் வல்லபாய் பட்டேல்

1. ஆயுதங்களை இறக்குமதி செய்து கொள்ள அனுமதி
2. பஞ்ச காலத்தின் போது விவசாயிகளுக்கு உணவு தானியங்கள் வழங்குவது

ஈ. முகமது அலி ஜின்னா

1. கராச்சி துறைமுகத்தை பயன்படுத்திக் கொள்வது
2. ஆயுதங்கள் உற்பத்தி செய்து கொள்வது மற்றும் இறக்குமதி செய்து கொள்வது

II. பின்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமாக பதிலளிக்கவும்

1. குண்டு முழங்கும் மரியாதை முறை எதைக் குறிப்பிடுகிறது?

2. ராஜதானி மற்றும் மாகாணங்கள் என்றால் என்ன?

3. பூமிதான இயக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக

4. முன்னாள் சென்னை மாகாணத்தில் இருந்து உருவான மாநிலங்கள் யாவை

12th_Political Science_Tamil_Unit_7.indd 205 04-06-2019 11:38:45

அலகு 6

நுகர்வோர் பாதுகாப்பு

16

அத்தியாயம்

நுகர்வோரியல்

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பாலவை.

–குறள் 659

M1N9J2

பொருள் :

பிறர் வருந்துமாறு செய்து பெற்ற பொருள் எல்லாம் பெற்றபின் வருந்துமாறு செய்து போய்விடும். நல்வழியில் வந்தவை இழக்கப்பட்டாலும் பிறகு பயன் தரும்.

கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

- நுகர்வோர் சுரண்டப்படல்
- நுகர்வோரியலின் பொருள் மற்றும் வரைவிலக்கணம் .
- நுகர்வோர் இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 ஆகியவற்றை அறிந்து கொள்ள இயலும்.

அத்தியாயம் சுருக்கம்

16.01. நுகர்வோர்
16.02. நுகர்வோர் சுரண்டப்படல்
16.03. நுகர்வோரியல் மற்றும் நுகர்வோரியலின் தேவை
16.04. நுகர்வோரியலின் முக்கியத்துவம்.
16.05. நுகர்வோரியலின் தோற்றம், பரிணாமம் மற்றும் வளர்ச்சி
16.06. நுகர்வோர் பாதுகாப்பு
16.07. நுகர்வோர் பாதுகாப்பின் தேவை
16.08. நுகர்வோர் சட்டங்கள்
16.09. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986
16.10. வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு வாங்குவோர்விழித்திரு கோட்பாடு
16.11. விற்பனையாளர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு தத்துவம்

தொழிற்புரட்சிக்கு முந்தைய காலங்களில் சமுதாய மக்களின் வாழ்வியல் அமைப்பு வெளித் தொடர்பு இன்மையின் காரணமாக அவர்களின் தேவை மிகக் குறைவாகவே இருந்தது. பெரும்பாண்மையான மக்கள் கிராமப்புறங்களிலேயே வசித்து வந்தனர், அவர்களுக்குத் தேவையான பொருட்களின் கணிசமான பகுதியை விவசாயிகள் உற்பத்தி செய்தனர். வணிகம் சிறிய அளவிலேயே நடைபெற்றுவந்தது. விவசாயத்தில் உற்பத்தி செய்ய முடியாத பொருட்களை மட்டுமே உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்தனர். நாடு தொழில்மயமாக்கப்பட்டபோது, சமுதாயம் பன்முகப்படுத்தப்பட்டபோது மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தின் மூலம் மூலப்பொருட்கள் தங்களது இயல்புகளை மாற்றிக் கொண்டன. புதிய பொருட்கள் தோற்றம் பெற்றன. நுகர்வோரின் வியாபாரச் சார்புத் தன்மை அதிகரித்தது. நுகர்வோர் சார்புத்தன்மை மற்றும் வணிகப் பொறுப்புணர்வு ஆகியவை இரண்டும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றது. உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் அரசாங்கம் ஆகியவை வணிகத்தின் மூன்று முக்கியக் கூறுகள் ஆகும். வணிக உலகில் அதிக சுரண்டலுக்கு உள்ளாவது நுகர்வோர்கள் ஆவர். இந்த அத்தியாயம் நுகர்வோர் சுரண்டப்படுவது பற்றியும், நுகர்வோர் பாதுகாப்பு குறித்தும் விவரிக்கிறது.

12th Commerce Tamil Unit 6.indd 138 27-03-2019 23:18:59

16.01. நுகர்வோர்

உற்பத்தியாளரிடமிருந்து அல்லது விற்பனையாளரிடமிருந்து பொருட்களை வாங்குவோர் அல்லது இயற்கை வளங்களை கொண்டு உருவாக்கப்பட்டு (காற்று, நீர் மற்றும் இயற்கை வளங்கள்) அல்லது பிறரால் உற்பத்தி செய்யப்பட்டு, விற்கப்படும் பொருட்களை பயன்படுத்துபவரே நுகர்வோர் ஆவார். வங்கிகள் போக்குவரத்து நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் போன்றவை வழங்கும் சேவைகளை ஏற்பவரும் நுகர்வோர் என்றே அழைக்கப்படுகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதனால் காற்று, நீர், நிலம் போன்றவற்றால் தோற்றுவிக்கப்பட்ட அல்லது நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்குவோர் மற்றும் அரசு அல்லது நிறுவனங்கள், மருத்துவ மனைகள், கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகளை பயன்படுத்தும் தனிநபரே நுகர்வோர் ஆவார்.

இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986ன் படி நுகர்வோர் என்பதன் பொருள்.

முழுமையாக அல்லது பகுதியாக செலுத்தப்பட்டு, அல்லது செலுத்துவதாக உறுதியளிக்கப்பட்டு அல்லது நீள்பயன் அடிப்படையில் செலுத்தப்பட்டு, மறுபயன் அடையும் வகையில் பொருட்களை அல்லது சேவைகளை வாங்கும் நபர் நுகர்வோர் என அழைக்கப்படுகிறார்.

மறுவிற்பனை செய்வதற்கோ அல்லது வணிக நோக்கத்திற்காகவோ பொருட்களை வாங்குபவர் நுகர்வோராகக் கருதப்படமாட்டார். ஆயினும் சுயவேலைவாய்ப்பின் மூலம் தனது வாழ்வாதாரத்திற்கு பொருள் ஈட்டும் நோக்கிற்காக மட்டுமே ஒரு நபர் பொருட்களை வாங்கி இருந்தால் அவர் நுகர்வோராகக் கருதப்படுவார்.

கருத்தியல் அடிப்படையில் அனைத்து வணிக நிறுவனங்களும் நுகர்வோர் திருப்தியையே தங்களின் முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. நுகர்வோரே வணிக உலகின் மன்னராகக் கருதப்படுகிறார். நுகர்வோருக்குச் சேவைகளை அளித்து அவர்களை திருப்திப்படுத்துவதையே வணிகர்கள் தங்களின் முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளனர். சுதந்திரமான பொருளாதாரத்தில் நுகர்வோர் மையப்புள்ளியாகத் திகழ்ந்தாலும், அவர்களின் தகுதியை எப்பொழுதும் நுகர்வோர்கள் பெறுவதில்லை. உண்மையில் நுகர்வோர் பலவழிகளிலும் ஏமாற்றப்பட்டு சுரண்டப்படுகிறார்கள். நடைமுறை உலக வாழ்வில் நுகர்வோர் இந்திய இறையாண்மையின்படி சுதந்திரமாக இல்லாமல் அடிமை என்ற நிலையிலேயே உள்ளனர்.

நுகர்வோர் தங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்று அதன் மூலம் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதே நுகர்வோரின் இயல்பான, சட்டப்பூர்வமான ஆர்வம் மற்றும் எதிர்பார்ப்பாக உள்ளது. நுகர்வோர் நலன் அல்லது நுகர்வோர் நலவாழ்வு இதன்மூலமே அமையும். ஒவ்வொரு வாடிக்கையாளரும் தங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகள் அவற்றின் தரம், அளவு, விலை, உரிய காலத்தில் கிடைக்கும் தன்மை போன்றவை குறித்த உண்மையான சரியான தகவல்களை அறிய முடியாத கவலை அவர்கள் உயிர்பிரிந்து மண்ணோடு மண்ணாகப் போகும் வரை தீர்க்கப்படாமலே போகிறது.

16.02. நுகர்வோர் சுரண்டப்படல்

நுகர்வோர் பின்வரும் பல வழிகளில் சுரண்டப்படுகிறார்கள்.

1. அதிக விலைக்கு விற்றல்.

விற்பனையாளர்கள் மற்றும் சேவைகளை அளிப்பவர்கள் தாங்கள் வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு அதன் தரத்திற்கு ஈடான விலையைக் காட்டிலும் கூடுதலான விலையை அளிப்பதற்கு பல்வேறு தருணங்களில் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பொருட்களை விற்பனை செய்பவர்களிடம் போதுமான அளவு சரக்கிருப்பு இருந்த போதிலும் பொருள்களின் விலையை அதிகரித்து கொள்ளை லாபம் ஈட்டும் நோக்கில் செயற்கையான பற்றாக்குறையை உருவாக்கி அதன் மூலம் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். இதன் விளைவாக நுகர்வோர் தங்களுக்குத் தேவையான பொருட்களை கள்ள சந்தையில் கூடுதலான விலை கொடுத்து வாங்க வேண்டிய கட்டாயத்திற்க்கு தள்ளப்படுகிறார்கள்.

2.கலப்படம்

கலப்படம் என்பது உணவுப்பொருட்களில் விரும்பத்தகாத பதிலிப் பொருட்களைச் சேர்ப்பதாகும். கலப்படப் பொருட்களை வாங்கிப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு உடல்ரீதியாகவும், பணரீதியாகவும் கடுமையான இழப்புகள் ஏற்படுகிறது. ஒரு சாதாரணமான, நியாயமான, விவேகமுள்ள வணிகர் தனது வணிகத்தின் மூலம் நியாயமான இலாபத்தை நேர்மையான முறையில் ஈட்ட விரும்புவார். ஆனால் கொள்ளை லாபம் ஈட்டவேண்டும் என்ற பேராசை பிடித்த வணிகர் பொருட்களில் கலப்படம் செய்து அதன்மூலம் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கிறார். பொதுவாக உணவுப் பொருட்களில் கலப்படம் என்பது சாதாரணமாக எங்கும் காணப்படும் நடைமுறையாகிவிட்டது. கலப்படம் நுகர்வோரது உடல்நலத்தை பெரிதும் பாதிப்பதால் அது ஒரு மன்னிக்க முடியாத குற்றமாகும்.

12th Commerce Tamil Unit 6.indd 139 27-03-2019 23:18:59



எடுத்துக்காட்டுகள்

1. பாலின் அடர்தன்மை மற்றும் வெளிர்நிறம் அதிகரிப்பதற்காக சோப்பு, சுண்ணாம்பு, யூரியா, காஸ்டிக்சோடா மற்றும் பல்வேறு வேதிப்பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.
2. உணவு தானியங்களில் சிறிய கற்கள் சேர்க்கப்படுகின்றன.
3. தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலக்கப்படுகின்றது.
4. தேனின் அளவை அதிகரிப்பதற்காக தண்ணீர் மற்றும் சர்க்கரை சேர்க்கப்படுகின்றது.
5. அரிசிமாவு மற்றும் கோதுமை மாவுகளில் ஸ்டார்ச் சேர்க்கப்படுகின்றது.
6. காபிப்பொடியுடன் புளி விதையின் பொடி (புளியங் கொட்டை) சேர்க்கப்படுகிறது.
7. மஞ்சள்தூள் போன்ற மசலாக்களுடன் மெத்தனால் சேர்க்கப்படுகின்றது.
8. கருப்பு மிளகுடன் பப்பாளி விதை கலக்கப்படுகின்றது.
9 மிளகாய்ப்பொடியுடன் செங்கல் பொடி கலக்கப்படுகின்றது.



3. போலியான பொருட்கள்

மக்கள் மத்தியில் பிரபலமடைந்த வணிகக் குறியுடைய பொருட்களுக்கு அதே போன்ற போலியான பொருட்கள் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்டு மோசடியாக விற்பனை செய்யப்பட்டுவருகின்றது. தானியங்கி (ஆட்டோமொபைல்) வாகன உதிரிபாகங்கள், பிளேடுகள், கைக்கடிகாரங்கள், பேனாக்கள், வானொலிப்பெட்டிகள், மருத்துவ மருந்துப் பொருட்கள், நகைகள், துணிகள் மற்றும் ரூபாய் நோட்டுக்கள் கூட கள்ளத்தனமாக, போலியாகத் தயாரிக்கப்பட்டு இமயம் முதல் குமரி வரை எங்கும் நீக்கமற தாராளமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அசல் எது? போலி எது? என இனம்காண இயலாத நிலையிலேயே இன்றளவும் நுகர்வோர் இருந்து வருகின்றனர். எனவே தரம் குறைந்த போலிப் பொருட்களுக்கு கூட அசல் பொருட்களின் விலையை பெற்றுக் கொண்டு நுகர்வோரை சுரண்டுகின்றனர்.

4. செயற்கையான பற்றாக்குறை


சில சூழ்நிலைகளில் வணிகர்கள் தங்களின் வணிக நிறுவனங்களின் சரக்குகளை இருப்பு வைக்கும் இடங்களில் போதுமான அல்லது தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர்ப்பலகையை வைக்கின்றனர். பெட்ரோல் விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் இந்நிலையை காண முடியும். இத்தகைய சூழ்நிலைகளில் நுகர்வோர் தங்களின் தவிர்க்க இயலாத தேவையின் அடிப்படையில் அப்பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதன் மூலம் வணிகர்கள் நேர்மையற்ற முறையில் பெருலாபம் ஈட்டுகின்றனர். திரையரங்குகளில் அரங்கம் நிறைவு (House Full)எனும் பெயரப்பலகை மாட்டப்பட்ட பின்னும் கள்ளச்சந்தையில் அதிக விலைக்கு தாராளமாக அனுமதி சீட்டுக்கள் (Tickets) கிடைக்கின்றன.

5. தரக்குறைவு

கட்டுமானம் செய்து முத்திரையிடப்பட்ட கொள்கலன்களை திறந்தால் அதில் அடைக்கப்பட்டுள்ள பொருட்கள் தரம் குறைந்ததாகவும், கெட்டுப்போனதாகவும், நிகர எடை கொல்கலனில் குறிப்பிடப்பட்டுள்ளதை விட குறைவாக இருப்பதையும் காணமுடிகிறது. நுகர்வோர் தாம் வாங்கிய குறைபாடுடைய அல்லது சேதமடைந்த பொருட்களை கொடுத்துவிட்டு புதிய பொருட்களை மாற்றிக்கொள்ள முயற்சிக்கும் போது நுகர்வோர் தமது கவனக்குறைவாலேயே அத்தகைய நிலை ஏற்பட்டதாக குற்றம் சாட்டப்படுகின்றனர். நுகர்வோர் தங்களின் தலைவிதி என்று கருதும் நிலைக்கு தள்ளப்பட்டு விடுகிறார்கள் பொருட்களை கடைகளில் விற்கும் போது விற்பனையாளர் அதற்குரிய இரசீது கொடுப்பது இல்லை. நுகர்வோரும் இரசீது கேட்டுப் பெறுவது தமது உரிமை என்று உணர்வதில்லை. இதன் காரணமாகவே நுகர்வோர் தாம் வாங்கிய தரக்குறைவான பொருட்களை மாற்றிக்கொள்ள இயலாத, புகார் அளிக்க இயலாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். பல விற்பனையாளர்கள் பொருட்கள் விற்கும் போதே அதற்கான இடாப்பில் விற்பனை செய்த பொருட்கள் மீண்டும் திரும்ப பெற்றுக் கொள்ள இயலாது என்ற வாசகம் இடம் பெற்றுள்ளதை காணமுடிகிறது. இதன் முலம் ஏமாற்றக்கூடிய நுகர்வோர்கள் எளிதாக சட்டப்படியே ஏமாற்றப்படுகிறார்கள்.

12th Commerce Tamil Unit 6.indd 140 27-03-2019 23:19:00

6. இடர்பாடு கொண்ட பொருட்கள்



பொருட்களின் தயாரிப்பாளர்கள், தங்களின் தயாரிப்பு பொருட்களை நுகர்வோர் பயன்படுத்தும் போது அவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் ஊறு விளைவிக்காமல் பொருட்களை முன்னெச்சரிக்கையுடன் எவ்வாறு பாதுகாப்புடன் பயன்படுத்த வேண்டும் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நுகர்வோரிடம் முன் வைக்க வேண்டும். இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இல்லாமல் நுகர்வோர் அத்தகைய அபாயகரமான பொருட்களை கையாளும் போது விபத்து ஏற்படுத்தும் வாய்ப்புகள் மிக அதிகம்

7. உத்தரவாதம் மற்றும் சேவைகள்

நீடித்துழைக்கும் வசதிப் பொருட்களான தொலைக்காட்சிப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மகிழ்வுந்துகள், இருசக்கர வாகனங்கள் மற்றும் குளிரூட்டிகள் போன்றவற்றிற்கு குறிப்பிட்ட காலத்திற்கு உத்திரவாதம் வழங்கப்பட்டு அக்காலம் வரை இலவச சேவை வழங்குவதாக உறுதியளிக்கின்றனர். ஆனால் உண்மையில் உத்தரவாத காலத்தில் கூட இலவச சேவைகள் மறுக்கப்படுகின்றது. தயாரிப்பாளர்கள் தாங்கள் வழங்கும் குறுகிய உத்தரவாதக்காலத்தில் குறிப்பிட்ட சில பொருட்கள் அல்லது பாகங்கள் உறுதியாக சேதமடையாது என்று கருதும் பொருட்கள் மற்றும் பாகங்களுக்கு மட்டுமே இலவச நுகர்வோர் சேவை வழங்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்கிறார்கள். விற்கப்படும் பொருட்களின் பல உதிரிபாகங்களுக்கு உத்தரவாதம் வழங்குவதில்லை. இதன் காரணமாக நுகர்வோர் மீது பழுதுபார்ப்புச் செலவு என்ற பெயரில் கட்டணங்கள் திணிக்கப்படுகின்றது. சில சூழ்நிலைகளில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பாகங்களுக்கு உத்தரவாத காலத்திலேயே பழுது ஏற்படின் அது நுகர்வோர் கவனக் குறைவால் விதிமுறைகளின் படி பயன்படுத்தப்படவில்லை என்று காரணம் கூறி இலவச சேவை மறுக்கப்படுகின்றது,

8. தகுதியற்ற பொருட்கள்

பொருளின் தரம், நீடித்த உழைப்பு, பொருத்தப்பாடு ஆகியவை பொருட்களின் தகுதி என்ற வகையின் கீழ் வரலாம். தயாரிப்பாளர்கள் தங்களின் தயாரிப்பு பொருட்களை விளம்பரம் செய்யும் போது அதில் தெரிவிக்கும் அம்சங்களை விளம்பரம் செய்யப்படும் பொருட்கள் கட்டாயம் உள்ளடக்கி இருக்கவேண்டும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு இல்லை. மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பொருட்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. உடையாது என்று சான்றளிக்கப்பட்ட பொருட்கள் உபயோகப்படுத்தும் காலத்தில் உடைந்து விடுகின்றது. கசியாது என்று சான்றளிக்கப்பட்ட மேல் அட்டை கொண்டுள்ள பேட்டரிகள் கசிகின்றன. இது போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் நுகர்வோர் பாதிப்படைகின்றனர். உற்பத்தியாளர்களும், தயாரிப்பாளர்களும் சட்டத்தில் காணப்படும் ஓட்டைகள் வழியே எளிதில் தப்பித்து விடுகின்றனர்.

9. பொய் விளம்பரங்கள்

விளம்பரத்தின் முக்கிய நோக்கம் நுகர்வோர் மற்றும் பொருளை பயன்படுத்துபவர்களுக்கு பொருள் அல்லது சேவை குறித்த தகவல்களை அளிப்பதே ஆகும். ஆனால் நடைமுறையில் விளம்பரங்களில் பொருள் குறித்த தகவல்கள் மிகச்சிறிய அளவிலேயே வெளிப்படுத்தப்படுகின்றது. விளம்பரங்கள் பொருளின் தரம், விலை, உள்ளடக்கம், பயன்பாடு, உத்தரவாதம், செயல்திறன் குறித்த தவறான கருத்துக்களை பரப்பப்படுகின்றன. இவ்வகையான பொய் விளம்பரங்களை நம்பி பொருள்களை வாங்கும் நுகர்வோர் ஏமாற்றப்படுகிறார்கள்.



ஆகவே இதுபோன்ற நுகர்வோர் சுரண்டல்கள், நுகர்வோர் இன்னல்கள் போன்றவற்றின் வெளிப்பாடே நுகர்வோரியல் ஆகும். நுகர்வோரியலின் நோக்கம் வணிக பயங்கரவாதம் மற்றும் சுரண்டல் நடைமுறைகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாத்து பொருட்களின் விற்பனையாளர்களுக்கு எதிரான நுகர்வோரின் உரிமைகளையும், அதிகாரங்களையும் நிலைநாட்டுவதே நுகர்வோரியலின் முதன்மை நோக்கம் ஆகும்.

12th Commerce Tamil Unit 6.indd 141 27-03-2019 23:19:01

16.03. நுகர்வோரியல் மற்றும் அதன் தேவைகள்

நுகர்வோரியலின் கருத்து

நுகர்வோரைப் பாதுகாக்கும் மற்றும் நுகர்வோருக்கு உதவும் வகையில் இருக்கும் சமூக உத்வேக செயல்பாடுகள் நுகர்வோரியல் ஆகும். வேறு வார்த்தைகளில் கூறினால், நியாயமற்ற, நேர்மையற்ற வணிக நடைமுறைகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சியே நுகர்வோரியல் ஆகும். வாங்குபவருக்கும், விற்பவருக்கும் இடையேயான பரிமாற்றத்தில் சமநிலையை ஏற்படுத்துவதற்கான சமுதாய முயற்சியே நுகர்வோரியல் ஆகும். பொதுவாக வாங்குபவர்களைக் காட்டிலும் பொருட்களை விற்பவர்களே பலமிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள்.

நுகர்வோரியல் எனும் சொல் 1960 களின் தொடக்கத்தில் மேற்கத்திய வணிக சமுதாயத்தில், குறிப்பாக அமெரிக்காவில் தோற்றம் பெற்றது. இது வாடிக்கையாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கான சமூக உத்வேகம் ஆகும். நுகர்வோரை வணிக உலகின் நெருக்குதல்களிலிருந்து பாதுகாக்க நுகர்வோரைக் கொண்டே வடிவமைக்கப்பட்ட அமைப்பே நுகர்வோரியல் ஆகும்.

உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் சேவை அளிப்பவர்கள் நுகர்வோருக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர், ஒருவிதத்தில் நாம் அனைவரும் நுகர்வோர்களே. தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் நிறுவனங்கள் எதுவாயினும் அனைவரும் ஒருவகையில் நுகர்வோர்களே. அவர்கள் ஒவ்வொரு நாளும் பல்வேறுவகையான பொருட்களையும் சேவைகளையும் பயன்படுத்துகின்றனர். மாணவர்கள் பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், பேனா மற்றும் பல்வேறு வகையான எழுதுபொருட்களை வாங்குகின்றனர். சில வேலைகளில் தாங்கள் வாங்கும் ஒரு குயர் நோட்டுப்புத்தகத்தில் 192 பக்கங்கள் இருப்பதில்லை. பென்சில்கள் நல்ல தரத்துடன் இருப்பதில்லை. நீங்கள் உரிய சரியான விலையை செலுத்தி பொருட்களை பெற்ற போதும் இத்தகைய காரணங்களால் நீங்கள் ஏமாற்றம் அடைவதில்லையா? அதிருப்தி அடைவதில்லையா? இதனால் ஒரு நுகர்வோர் என்பவர் மற்றவரால் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படும் பொருட்களை வாங்கி பயன்படுத்துபவர் ஆவார். சமதர்மம், பொதுவுடமை மற்றும் முதலாளித்துவம் போன்ற பல தத்துவங்களின் வரிசையில் 1960களின் மத்தியில் இணைந்த புதிய தத்துவம் மற்றும் சமூக இயக்கமே நுகர்வோர் இயல் ஆகும்.

"நுகர்வோரியல் என்பது விற்பனையாளர்களிடமிருந்து வாங்குபவர் தங்களது உரிமைகளையும், அதிகாரங்களையும் மேம்படுத்தும் முயற்சியாகும்"

– எல்.மெஸ்ஸி

"பொருள் பரிமாற்ற உறவில் எழும் நுகர்வோர் அதிருப்திக்கான விடையை தேடும் தனிநபர்கள் மற்றும் அமைப்பு (நுகர்வோர், அரசு மற்றும் வணிகம்) களின் செயல்பாடே நுகர்வோரியல் ஆகும்".

– வில்லியம் ஸ்டேன்டன்.

நுகர்வோரியல் என்பது ஒருங்கிணைந்த முயற்சிகள் மட்டும்மல்லாது விற்பனையாளருக்கு எதிரான வாங்குபவர்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் மேம்படுத்தும் ஒரு சமூக இயக்கமாகும்.

– பிலிப் கோட்லர்

"நுகர்வோரியல் என்பது நுகர்வோர் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதில் விளையும் அதிருப்தி மற்றும் இழப்புகளுக்கு தீர்வுகாணும் நுகர்வோர்களின் ஒருங்கிணைந்த முயற்சியே"

– ரிச்சர்டு புஸ்கிரிக் மற்றும் ஜேம்ஸ்

வேறு வார்த்தைகளில் கூறுவதனால் வணிக அநீதிகளுக்கு எதிராகவும், இத்தகைய அநீதிகளை சரிசெய்யும் முயற்சிகளுமே நுகர்வோரியல் ஆகும். நியாயமற்ற வணிக நடைமுறைகளையும், அநீதிகளையும் எதிர்த்து அவற்றை முழுமையாக நீக்கவும் அவ்வாறு இயலாவிட்டால் இயன்ற வரை அதனை குறைப்பதையுமே நுகர்வோரியல் நோக்கமாகக் கொண்டுள்ளது. வணிக உலகில் எண்ணற்ற அநீதிகளும், நேர்மையற்ற வணிக நடைமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டு லாபம் பெறும் நோக்குடன் நுகர்வோர் திருப்தி என்பது புறந்தள்ளப்படுகின்றது. பாதுகாப்பற்ற பொருட்கள் விற்பனை, கலப்படம், கற்பனையான விலை நிர்ணயித்தல், குறைபாடுடைய ஏமாற்றும் நோக்குடனான கட்டுமம், கள்ளச் சந்தை, பொய்யான தவறான வழிகாட்டும் விளம்பரங்கள் மற்றும் விற்பனை மொழிகள், பதுக்கல் கொள்ளை லாபமீட்டல், விலை உள்கூட்டுகள், வணிக பிராண்டுகளை தவறாகப்பயன்படுத்தல், திட்டமிட்டு வழக்கொழிவு செய்தல், அளவு எடை குறைபாடுகள், உண்மையில் நுகர்வோர் விரும்பும் பொருட்களை வழங்காமல் அவர்கள் விரும்பாத பொருட்களை வழங்குதல், பொருட்களை நோக்கி கவனத்தை திருப்புதல் போன்ற வற்றை வணிக அநீதிகளுக்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

12th Commerce Tamil Unit 6.indd 142 27-03-2019 23:19:01

16.04 நுகர்வோரியலின் முக்கியத்துவம்

1. நுகர்வோர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களை ஒருங்கிணைத்தல்.
2. நியாயமற்ற வணிக நடைமுறைகளை எதிர்த்தல்.
3. சுரண்டல்களிலிருந்து பாதுகாத்தல்.
4. அரசின் கவனத்தை ஈர்த்தல்.
5. நுகர்வோர் பாதுகாப்பு விதிகளை திறம்பட நடைமுறைப்படுத்தல்.
6. முழுமையான மற்றும் சமீபத்திய தகவல்களை தருதல்.
7. சமூகவிரோத நடவடிக்கைகளை எதிர்த்தல்.

16.05. நுகர்வோரியலின் தோற்றம், பரிணாமம், வளர்ச்சி

தோற்றம் :

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழில் மற்றும் பொருளாதாரம் ஏற்ற நிலையில் இருந்தது. எனவே இக்காலக்கட்டத்தில் பல்வேறு துறைகளில் மறுசீரமைப்பும் விரிவாக்கமும் காணப்பட்டது. தொழில் வளர்ச்சிக்கு மறுசீரமைப்பு மற்றும் விரிவாக்கத்தின் பெரும்பகுதியை விளம்பரமும் நுகர்வோரும் தீர்மானிக்கும் முக்கியக்காரணிகள் ஆனது. நுகர்வோர் சீராய்வு அமைப்புக்கள் விளம்பரத்தின் உண்மைத் தன்மை குறித்து குரல் கொடுத்தன. பொருட்களை வாங்கும் நுகர்வோர் பொருட்களை கூர்ந்து நோக்க ஆரம்பித்தனர். உழைக்கும் வர்க்கத்தினர் நல்ல பணிச்சூழல் வேண்டி குரல் கொடுத்தனர். தொழில் மற்றும் நுகர்வோர் திருப்திக்கு இடையே அமெரிக்கா ஒரு இணைப்பை ஏற்படுத்தியது. பொருள், விலை, நுகர்வோர் திருப்தி ஆகியவற்றிற்கிடையே எழுந்த சிக்கல்களுக்கு தொழில் மறுசீரமைப்பு விடையளிக்கும் விதமாக அமைந்தது. தேசத்தின் பொருளாதாரம் மற்றும் கொள்கைக்கு நுகர்வோரே மையப்புள்ளி எனும் கோட்பாட்டை அங்கீகரிக்கும் விதமாக நுகர்வோர் அலை வீசத்தொடங்கியது. நிறுவனங்கள் மிக அதிகமான அளவிளான நுகர்வோர் இலக்குகளை நோக்கி முயற்சிக்கத் தொடங்கின.

இதன்தொடர்ச்சியாக அமெரிக்க குடிமக்கள் நல்ல தரமான பொருட்களை பெறவேண்டி போராட வேண்டியதன் அவசியத்தை உணரத்தொடங்கினர். தொழில் நிறுவனங்கள் தங்களின் தாங்கள் உற்பத்தி செய்யும் உணவு மற்றும் மற்ற பொருள்களுக்கு தரத்திற்கு உத்தரவாதம் அளித்து தங்களின் பொறுப்புணர்வை வெளிப்படுத்தின. நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த பெண்கள், தேசிய நுகர்வோர் அமைப்பு (NCL) போன்ற அமைப்புகளை தோற்றுவித்து ஆபத்தைவிளைவிக்கும் உணவு மற்றும் இதர பொருட்களின் நிலை ஆகியவற்றிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கப் போராடினர்.

முன்னேறிய நாடுகளில் பெரும்பான்மையான நுகர்வோர்கள் படிப்பறிவு பெற்றவர்களாகவும், பொருட்கள் குறித்த விவரங்களை அறிந்தவர்களாகவும் இருந்ததால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நிலையில் இருந்தனர். போதுமான உற்பத்தி, திறம்பட்ட பகிர்வு என்ற நிலையில் இருந்த மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் நிலை முற்றிலும் மாறுபட்டிருந்தது. உற்பத்தியில் புதிய நுட்பங்களைப் பின்பற்றாமை, பற்றாக்குறை உற்பத்தி, கலப்படம், கள்ளச்சந்தை போன்றவை இந்தியாவில் காணப்பட்டது. இந்தியர்கள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறைந்த அளவில் செலவிடும் நிலையிலேயே இருந்தனர். வணிகத்தில் இலாப நோக்கம் மட்டுமே பிரதானமாக இருந்ததால் நியாயமான விலையில் பொருட்களை வழங்கவேண்டிய சமூகப் பொறுப்புணர்வு, தரமான பொருட்களையும் சேவைகளையும் வழங்குதல் போன்றவற்றில் தோல்வி ஏற்பட்டது சுருங்கக் கூறின், நுகர்வோர் நலன் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை கருத்தில் கொள்ளாமல் கொள்ளை இலாபம் ஈட்டவேண்டும் எனும் கொடிய நோக்கோடு மட்டுமே வணிகர்கள் செயல்பட்டதால் விளைந்த நுகர்வோர் சுரண்டல் மற்றும் இன்னல்களின் வெளிப்பாடே நுகர்வோரியல் ஆகும். எது எப்படி இருப்பினும் நுகர்வோரே சந்தையின் மன்னர் (A consumer is a King of the Market) எனும் கருத்து பெயரளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் உண்மையில் நுகர்வோரின் நிலை அவ்வாறில்லை கலப்படம், செயற்கைப் பற்றாக்குறை, அநியாயவிலை ஆகியவை இந்திய நுகர்வோரின் மாபெரும் பிரச்சனைகள் ஆகும்.

இந்தியா பல்வேறுபட்ட மதவழக்கங்கள், மொழிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நாடு ஆகும். இந்தியர்களில் நான்கில் மூன்று பகுதி மக்கள் உழவுத்தொழில் செய்து கிராமப்புறங்களில் வசித்து வருகின்றனர். அவர்களின் வருமானத்தில் பெரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. பெரும்பான்மையானவர்கள் படிப்பறிவற்றவர்களாகவும், குறைவான வருமானம் கொண்டவர்களாகவும் உள்ளனர். இவ்வாறான மக்களை நியாயமற்ற வணிக நடைமுறைகளில் இருந்து காக்க நுகர்வோரியல் தோன்றியது. நுகர்வோர்களின் நலனை பாதுகாக்கும் பாதுகாப்புச் சக்தியாக நுகர்வோரியல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நுகர்வோரியலின் பரிணாமம் :

விலை உயர்வு, பொருட்களின் மோசமான செயல் திறன், குறைந்த தரமுடைய சேவைகள், பொருள் பற்றாக்குறை, ஏமாற்று விளம்பரங்கள் மற்றும் பணவீக்கம் ஆகியவை இந்தியாவில் நுகர்வோரியலுக்கான

12th Commerce Tamil Unit 6.indd 143 27-03-2019 23:19:01

காரணங்களாக அடையாளம் காணப்பட்டன. சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மூலம் நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்வது அரசின் கடமையாகும். பொருளாதார அதிருப்தி பணவீக்கத்தை உருவாக்குகின்றது. தங்கள் உரிமைகளை பாதுகாக்க செயல்திறன் மிக்க அமைப்பின் மூலம் தங்களது குறைகளை நிவர்த்திசெய்ய நுகர்வோரியல் நுகர்வோருக்கு அவசியமாகிறது.

வளர்ச்சி

நுகர்வோரியல் அல்லது நுகர்வோர் இயக்கம் என்பது நுகர்வோரின் இன்னல்கள் மற்றும் ஏமாற்றுதல்களின் வெளிப்பாடு ஆகும். நுகர்வோர் இயக்கம் வணிக பயங்கரவாதம் மற்றும் ஏமாற்று நடைமுறைகளில் இருந்து நுகர்வோரை பாதுகாக்கும் கேடயமாகும். பொருட்கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது தங்களுக்குள்ள உரிமை மற்றும் அதிகாரத்தை நிலை நிறுத்துவதன் மூலம் தங்களின் நலனை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.

திரு.ரால்ப் நாடர் அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பெருநிறுமங்களின் முற்றுரிமை (சர்வாதீனம்) மற்றும் நியாயமற்ற வணிக நடைமுறைகளை எதிர்த்து பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தவர் ஆவார். திரு. ரால்ப் நாடர் அவர்கள் நுகர்வோர் இயக்கத்தின் தந்தை எனக் கருதப்படுகிறார். அவர் தொடக்கத்தில் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறிச் செயல்பட்ட மோட்டார் வாகன (ஆட்டோமொபைல்) நிறுவனத்தினை எதிர்த்துப் போராடினார். ஆனால் இன்று அனைத்து நாடுகளிலும் நுகர்வோர் இயக்கங்கள் நன்கு வளர்ந்து வலுப்பெற்றுள்ளது. பிரிட்டன், ஸ்வீடன், நெதர்லாந்து டென்மார்க் மற்றும் கென்யாவில் கூட நுகர்வோர் சுரண்டலுக்கு எதிரான கடுமையான சட்டதிட்டங்கள் இயற்றப்பட்டு நுகர்வோர் நலன் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஐக்கிய நாடுகள் அவை நுகர்வோர் பாதுகாப்பு குறித்த பொதுவான விதிமுறைகளை உருவாக்கியுள்ளது.



16.06 நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோர் பாதுகாப்பு என்பது நுகர்வோருக்காக, அவர்களின் நோக்கங்களை அடைய வடிவமைக்கப்பட்ட சமூக நடவடிக்கைகளின் வடிவம் ஆகும். இது நுகர்வோர் சமுதாயம் நல்வாழ்வு பெரும் நோக்கோடு வடிவமைக்கப்பட்டதாகும். சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தில் நுகர்வோரே மன்னராக மதிக்கப்படுகின்றார். இதற்கு முன்னர் வாங்குவோர் ஜாக்கிரதை – வாங்குபவர் கவனம் (Caveat Emptor – Let the Buyer Beware) என்றிருந்த அணுகுமுறை தற்போது விற்பனையாளர் ஜாக்கிரதை – விற்பனையாளர் கவனம் (Caveat venditor – Let the Seller Beware) என மாறியுள்ளது. இருந்தபோதிலும் வளர்ந்து வரும் போட்டி நிறைந்த சூழலில் சந்தையில் பொருட்களை உற்பத்தி செய்பவர்களும், சேவை அளிப்பவர்களும் தங்களது பங்கினைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில் குறைபாடுடைய மற்றும் பாதுகாப்பற்ற வழங்கல் முறை, ஏமாற்றுதல்மற்றும்நியாயமற்றவணிகநடைமுறைகளில் ஈடுபடுதல், கலப்படம், பொய்யான வாக்குறுதிகளை உள்ளடக்கிய விளம்பரங்கள், பதுக்கல், கள்ளச்சந்தை போன்ற நேர்மையற்ற வணிக நடைமுறைகளை மேற்கொள்ளலாம். இதன் விளைவாக நுகர்வோர் பாதுகாப்பற்ற பொருட்களை வாங்க வேண்டி இருக்கலாம். கலப்படம் காரணமாக பல்வேறு உடல்நலம் சார்ந்த இன்னல்களால் பாதிக்கப்படலாம். பதுக்கல் காரணமாக பொருட்களை அதிக விலைகொடுத்து வாங்க வேண்டி இருக்கலாம். மோசடியான வாக்குறுதிகள் அடங்கிய பொய் விளம்பரங்கள் மூலம் ஏமாற்றப்படலாம். இது போன்ற நிலையில் விற்பனையாளர்களின் தவறான செயல்களால் நுகர்வோர் பாதிக்கப்படாமல் இருக்க நுகர்வோருக்கு போதுமான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது.

நுகர்வோர் நலனைப் பாதுகாப்பதில் தன்னார்வ நடவடிக்கைகள் மற்றும் சட்டம் ஆகிய இரண்டும் முக்கிய கருவிகள் ஆகும். சுயக்கட்டுப்பாடு, நுகர்வோர் அமைப்புகள், நுகர்வோரை விழிப்புணர்வுடன் இருக்கச் செய்தல் மற்றும் அரசின் ஆதரவு ஆகியவை நுகர்வோர் பாதுகாப்பிற்கான வழிமுறைகள் ஆகும். இன்றைய நவீன உலகில் சுற்றுச் சூழல் பாதிப்புகள், தொழில் நுட்ப மாற்றங்கள், பெரு உற்பத்தி தொழில் நுட்பங்களை புகுத்துதல், பெருவளங்கள், மனித வளம் மற்றும் எரிச்சல் ஊட்டும் விளம்பரங்கள் போன்றவற்றின் காரணமாக பொருட்களின் உற்பத்தியாளர், விநியோகிப்பாளர் மற்றும் விற்பனையாளர்களின் ஏமாற்றுதல் மற்றும் அத்துமீறல் காரணமாக நுகர்வோர் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இத்தகைய தருணங்களில் நுகர்வோர் நலனைப் பாதுகாத்தல் மற்றும் மேம்பாடு அடையச் செய்தல் என்பது மிகவும்

12th Commerce Tamil Unit 6.indd 144 27-03-2019 23:19:01


முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அனைத்து வணிக நிறுவனங்களின் மிக முக்கிய நோக்கம் நுகர்வோர் திருப்தி மற்றும் நுகர்வோர் நலமே ஆகும். ஆனால் நடைமுறையில் நுகர்வோர் பாதுகாக்க நுகர்வோர் இயக்கங்களின் தேவை ஏற்படுகின்றது.

16.07 நுகர்வோர் பாதுகாப்பின் தேவை



நுகர்வோரே வணிகத்தின் மன்னராகக் கருதப்பட்டாலும் அவர்கள் நலன்கள் ஏறத்தாழ புறக்கணிக்கப்படுகின்றன. பொருட்களின் பற்றாக்குறை கிடைத்ததை மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு நுகர்வோரை தள்ளி விடுகின்றது. பொருட்களின் தரம் விட்டுக் கொடுக்கப்படுகின்றது. உத்தரவாதம் அர்த்தமற்றதாகின்றது. நுகர்வோருக்கு ஏற்படும் உடல்நலப் பாதிப்புகள் ஒரு போதும் கண்டுகொள்ளப்படுவதில்லை. வணிக நிறுவனங்களுக்கு கொள்ளை லாபமீட்டுதல் எனும் ஒற்றை நோக்கம் மட்டுமே மிக முக்கியமானதாக மாறி இருக்கின்றது. எனவே இத்தகைய சூழலில் நுகர்வோர் பாதுகாப்பு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

வணிக நடவடிக்கைகளில் அரசு, வணிகம் மற்றும் நுகர்வோர் என மூன்றுதரப்பினர் இடம் பெற்றுள்ளனர். நுகர்வோர் பாதுகாப்பிற்கு அவர்கள் என்ன பங்காற்ற வேண்டும் என்பதை இங்கே காணலாம்.



12th Commerce Tamil Unit 6.indd 145 27-03-2019 23:19:02

நுகர்வோர் பாதுகாப்பில் வணிகத்தின் பங்கு

நுகர்வோர் நலனைப் பாதுகாக்க வணிக நிறுவனங்கள் கீழ் கண்டவற்றை செய்ய வேண்டும்.

1. விலை உயர்வைத் தவிர்த்தல்

வணிக நிறுவனங்கள் தங்கள் வணிகத்தில் பொருட்களில் கடுமையான பற்றாக் குறை ஏற்படும் சூழலில் கூட பொருளுக்கான விலைகளை உயர்த்துவதை தவிர்க்க வேண்டும்.

2. பதுக்கலை தவிர்த்தல்

வணிக நிறுவனங்கள் தங்கள் வணிகத்தில் இயல்பான போக்கினை அனுமதிக்க வேண்டும். நுகர்வோர் பாதிக்கப்படும் வகையில் பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தை நடவடிக்கைகள் மூலம் அதிக இலாபம் ஈட்டும் நடவடிக்கைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

3. உயர் தரத்திற்கு உத்தரவாதம் அளித்தல்

வணிக நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு பொய்யான உத்தரவாதங்களை அளிக்கக்கூடாது. அவைகள் தங்களது பொருட்களின் உயர் தரத்தினை உறுதிப்படுத்த வேண்டும்.

4. பொருட்கள் குறித்த தகவல்கள் அளித்தல்

வணிக நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களின் தரம், அளவு மூலப்பொருட்கள் பயன்பாடு, பின் விளைவுகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், எடை, மாற்றிக் கொள்ளும் வசதி, பயன்படுத்தும் முறை ஆகியவை குறித்த மிகச்சரியான மற்றும் போதுமான தகவல்களை நுகர்வோருக்கு கட்டாயம் தரவேண்டும்.

5. விளம்பரங்களில் உண்மை (நேர்மை)

வணிக நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு விளம்பரம் செய்யும் போது அவ்விளம்பரங்களில் பொய்யான, உண்மைக்குப் புறம்பான, மோசடியான தகவல்களை அளித்து நுகர்வோருக்கு தவறான வழிகாட்டக் கூடாது.

6. தீங்குகளிலிருந்து பாதுகாத்தல்

வணிக நிறுவனங்கள் ஆபத்தான மற்றும் தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்களை சந்தைப்படுத்தக்கூடாது. சந்தைப்படுத்தும் முன் தனது உற்பத்தி மற்றும் விற்பனைப் பொருட்களை முறையாகவும், முழுமையாகவும் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். உணவுப் பொருட்களைப் பொருத்தவரை கெட்டுப்போன மற்றும் சுகாதாரமற்ற உணவுப் பொருட்களை திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

7. பணத்தை திருப்பிக் கொடுக்கும் உத்தரவாதம்

வணிக நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களில் குறைபாடுகள் காணப்படின் அக்குறைபாடுடைய பொருட்களை திரும்பப் பெற்றுக் கொண்டு புதிய பொருட்களை வழங்க வேண்டும் அல்லது அவற்றிற்குரிய பணத்தை திருப்பித்தரவேண்டும். தங்களின் உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்தியதால் நுகர்வோருக்கு விளைந்த காயம் மற்றும் தீங்குகளுக்கு உரிய செலவுகளையும், இழப்பீடுகளையும் வழங்க வேண்டும்.

8. நுகர்வோர் குறைபாடுகளைத் தீர்த்தல்

நுகர்வோரின் குறைகளுக்கு வணிக நிறுவனங்கள் தங்களது நுகர்வோர் குறைதீர்க்கும் பிரிவு மூலம் உடனடியாகவோ அல்லது குறிப்பிட்ட கால வரம்பிற்குள்ளோ தீர்வு காணப்படவேண்டும்.

நுகர்வோர் பாதுகாப்பில் அரசின் பங்கு


நுகர்வோர்களில் பெரும்பான்மையோர் கல்வியறிவு பெற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் தங்களின் உரிமைகள் குறித்து அறியாதவர்களாகவும், அறிந்திருப்பினும் செயலற்றவர்களாகவுமே உள்ளனர். அரசு நுகர்வோரைப் பாதுகாப்பதில் தனது பங்கை உறுதிசெய்ய வேண்டும். மத்திய மாநில அரசுகள் நுகர்வோரைப் பாதுகாக்க நாடு முழுவதும் பல்வேறு சட்டங்களை இயற்றி உள்ளன. இது குறித்த கூடுதல் தகவல்கள் இப்பாடத்தின் இறுதியில் அமைந்துள்ள "நீங்கள் அறிவீர்களா" பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. நுகர்வோரைப் பாதுகாக்க பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் நுகர்வோர் இன்னும் அது குறித்து அறியாதவர்களாகவும், செயலற்றவர்களாகவும் உள்ளனர். வெறும் சட்டங்கள் மாத்திரமே அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகளை தந்துவிடாது. சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் சட்டத்தை மீறுவோரை தண்டிப்பதை ஏட்டளவில் வைத்துக்கொண்டிருக்காமல் அச்சட்டங்களைப் பயன்படுத்தி கடுமையான தண்டனைகள் வழங்க வேண்டும்.

நுகர்வோரைப் பாதுகாப்பதில் நுகர்வோரின் பங்கு

நுகர்வோரால் மட்டுமே தங்களுக்கு எதிரான நேர்மையற்ற வணிக நடைமுறைகளுக்கு இறுதியாக முற்றுப் புள்ளிவைக்க முடியும். வணிக நிறுவனங்கள் விதிகளை மீறும் போது அரசாங்கம் சட்டங்களை ஏட்டளவில் வைத்துக் கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்காமல் அவற்றைச் செயல்படுத்துவதில் சிறிதளவேனும் கவனம் செலுத்தி நுகர்வோர் நலனைப் பாதுகாக்க வேண்டும். இத்தகைய சூழலில் நுகர்வோர் விழிப்புணர்வுடனும், நுகர்வோரை ஒன்றிணைத்து நுகர்வோர் இயக்கமாகச் செயல்பட்டு தங்களின் நலனைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் அப்பாவி நுகர்வோர்களிடம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் பற்றி எடுத்துக்கூறி அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

12th Commerce Tamil Unit 6.indd 146 27-03-2019 23:19:02

நுகர்வோர் நடவடிக்கை குழுக்களை செயல்படுத்துதல்



1. கிராம அளவில் நுகர்வோர் நடவடிக்கை குழுக்களை உருவாக்கி நுகர்வோரின் உரிமைகள் குறித்து கல்வி புகட்ட வேண்டும்.
2. நுகர்வோர் பாதுகாப்பு முகமைகள் மூலம் நுகர்வோரின் குறைகள் மற்றும் புகார்கள் மீது உரிய விசாரணை செய்து அவற்றிற்கு உரிய தீர்வுகாண ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும்.
3. தொழில்துறை விதிகளின்படி வணிக நிறுவனங்களை ஒழுங்குபடுத்த வேண்டும்.
4. தன்னார்வ நுகர்வோர் குழுக்கள் ஊடகங்கள் வாயிலாக நுகர்வோர் சட்டங்கள் குறித்த தகவல்களை வழங்கி நுகர்வோருக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு எதிரான கல்வியறிவு புகட்டப்பட வேண்டும்.
5. வணிகர்களின் தவறான வணிக நடவடிக்கைகளுக்கு எதிராக நுகர்வோர் இயக்கங்களை ஏற்படுத்துதல்.
6. நுகர்வோர் கூட்டுறவுகளைப் பலப்படுத்துதல்.
7. நுகர்வோர் குழுக்கள் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை அணுகி நுகர்வோரின் குறைகளை, பிரச்சனைகளை பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் பேசி அரசின் கவனத்தை ஈர்க்கச் செய்தல்.
8. பொருட்களின் தரத்தைப் பரிசோதிக்க மாவட்டந்தோறும் பரிசோதனைக் கூடங்களை உருவாக்குதல்.
9. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் ஊடகங்கள் மூலம் உற்பத்தியாளர் மற்றும் வணிகர்களின் தவறுகளை சுட்டிக்காட்டச் செய்தல்
10. நுகர்வோர் சட்டத்தை மீறிச் செயல்படுவோர் குறித்த புகார்களை சம்பந்தப்பட்ட சட்ட அமலாக்க அதிகாரிகளிடம் தெரிவித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கச் செய்தல்.

நுகர்வோர் நலன் பாதுகாப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டி நெறிமுறைகள்

ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்சபை ஏப்ரல் 9, 1985 அன்று அதன் உறுப்பு நாடுகள் நுகர்வோர் நலன் பாதுகாப்பில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகள் மற்றும் சட்டங்கள் குறித்து வழிகாட்டி நெறிமுறைகளை உள்ளடக்கிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அரசுகள் வலுவான நுகர்வோர் பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்கி, பராமரிக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்தளித்தது.

நுகர்வோர் நலன் பாதுகாப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள்

1. நுகர்வோருக்குப் போதிய பாதுகாப்பினை வழங்குவதில் உறுப்பு நாடுகளுக்கு உதவுவது.
2. நுகர்வோரின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கேற்ப உற்பத்தி மற்றும் விநியோக முறைகளை எளிதாக்குவது.
3. நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்பவர்கள் மற்றும் விநியோகிப்பவர்களுக்கு உயர்ந்த நன்னெறி சார்ந்த நடத்தைகளை ஊக்குவிப்பது.
4. நுகர்வோர் நலனை மோசமாகப் பாதிக்கும் வகையில் செயல்படும் தவறான வர்த்தக நடைமுறைகளை செயல்படுத்தும் வணிக நிறுவனங்களை எதிர்ப்பதில் உள்நாட்டளவிலும் மற்றும் பன்னாட்டளவிலும் உறுப்பு நாடுகளுக்கு உதவி புரிதல்.
5. சுதந்திரமான நுகர்வோர் குழுக்களை மேம்படுத்த உதவுதல்.
6. நுகர்வோர் பாதுகாப்பில் சர்வதேசக் கூட்டுறவினை செயல்படுத்துதல்.
7. நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை பெரிய அளவில் தேர்ந்தெடுத்து வாங்கும் வகையில் சந்தைகளை ஊக்குவித்தல்.

16.08. நுகர்வோர் சட்டங்கள்

1. இந்திய ஒப்பந்தச் சட்டம் 1982. இச்சட்டம் மக்கள் ஒப்பந்தங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதை உறுதி செய்கின்றது.
2. பொருட்கள் விற்பனைச் சட்டம் 1982. இச்சட்டம் விற்பனை ஒப்பந்தத்தில் வெளிப்படையான மற்றும்

12th Commerce Tamil Unit 6.indd 147 27-03-2019 23:19:02

உட்கிடையான உத்தரவாதங்களை விற்பனையாளர்கள் செயல்படுத்த மறுப்பதிலிருந்து நுகர்வோர்களைப் பாதுகாக்கின்றது.

3. அத்தியாவசியப் பொருட்களை விற்பனையாளர்கள் செயற்கையாக விலையேற்றம் செய்யும் நோக்குடன் பதுக்கிவைத்தல், செயற்கைப் பற்றாக் குறையை உருவாக்குதல், கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்தல் போன்றவற்றை தடை செய்ய அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955ல் உருவாக்கப்பட்டது.

4. வேளாண்பொருட்கள் தரப்படுத்துதல் மற்றும் விற்பனைச் சட்டம் 1937. இச்சட்டம் வேளாண்மை உற்பத்திப் பொருட்களை நல்ல தரத்துடன் வழங்குவதை உறுதி செய்கின்றது.

5. உணவுப் பொருட்கள் கலப்படத் தடைச்சட்டம் 1954. இச்சட்டம் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்வதை பரிசோதித்து தரமான உணவுப் பொருட்களை வழங்குவதன் மூலம் நுகர்வோர் உடல் நலத்தை பாதுகாக்கின்றது.

6. எடை மற்றும் அளவுகள் சட்டம் 1958. இச்சட்டம் எடை குறைவு மற்றும் அளவுக் குறைபாடுகளைப் போக்கி நுகர்வோரைப் பாதுகாக்கிறது. இச்சட்டம் அளவியல்சட்டம்2009ஆகதிருத்தியமைக்கப்பட்டது.

7. வணிகக் குறிகள் சட்டம் 1999. இச்சட்டம் பொருட்களில் மோசடியான வணிகக்குறிகளிடுவதை தடை செய்கின்றது.

8. போட்டி சட்டம் 2002. இச்சட்டம் ஆரோக்கியமற்ற வணிகப் போட்டிகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாக்கின்றது.

9. இந்தியத் தர நிறுவனச் சட்டம் (சான்றுக் குறிகள்) 1952 (இந்தியத் தர நிறுவனம் தற்போது இந்தியத் தரக்குழு என்றழைக்கப்படுகின்றது). இச்சட்டம் உற்பத்திப் பொருட்கள் பெற்றிருக்க வேண்டிய குறைந்த பட்ச தரநிலைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்கின்றது. நுகர்வோர்க்கு தரமான பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்கின்றது.

10. மருத்துவப் பொருட்கள் மற்றும் மாயச் சிகிச்சைகள் (விளம்பரங்கள்) சட்டம்,1954. இச்சட்டம் மாயச்சிகிச்சைகள் குறித்து விளம்பரப்படுத்துவதை தடை செய்கின்றது மற்றும் அதனால் விளைந்த தீங்குகளுக்கு தீர்வுகளைக் காண வகை செய்கிறது.

11. மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940. இச்சட்டம் இந்தியாவில் தரமான மற்றும் பாதுகாப்பான மருந்துப்பொருட்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்வதை உறுதி செய்கின்றது.

12. உணவுப் பாதுகாப்பு தரச்சட்டம் 2006. இச்சட்டம் உணவுப் பொருட்களை பாதுகாப்பாக மற்றும் முழுமையான நிலையில் உற்பத்தி செய்வது பாதுகாப்பது மற்றும் விநியோகம் செய்வதை ஒழுங்கு படுத்துகின்றது.

13. காற்று மாசுபடுதல் தடைச்சட்டம், 1981 இச்சட்டம் இந்தியாவில் காற்று மாசடைவதை தடுத்து சுற்றுச் சூழலைப் பாதுகாக்கின்றது.

14. பொது பொறுப்புக் காப்பீட்டுச் சட்டம், 1991. ஊறுவிளைவிக்கும் பொருட்களை கையாளும் போது ஏற்படும் விபத்துக்களுக்கு உடனடி நிவாரணம் பெறுவதை இச்சட்டம் உறுதி செய்கின்றது.

15. போதைப் பொருட்கள் மற்றும் மனவியல் பொருட்கள் சட்டம், 1985. இச்சட்டம் போதைப் பொருட்களை தயாரிப்பதை தடை செய்கின்றது.

16.09 நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 COPRA – Consumer Protection Act

இன்றைய காலகட்டத்தில் நுகர்வோர்களின் குறைகளும், அதிருப்திகளும் பெருமளவு அதிகரித்திருக்கின்றது. நுகர்வோர் தங்களுக்கு ஏற்பட்ட இடர்பாடுகளுக்கு விரைவாக தீர்வு பெற்றிட எந்த ஒரு திறம்பட்ட நுட்பமும், அமைப்பு ரீதியான ஏற்பாடுகளும் இதுவரை வகுக்கப்படவில்லை. சிறப்பான நுகர்வோர் இயக்கங்கள் இல்லாமையால் நுகர்வோர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களின் நிலை மேலும் மோசமாக உள்ளன. பல்வேறு நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் நுகர்வோரின் தொடர் அழுத்தத்தின் காரணமாக மைய அரசு "நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986" எனும் விரிவான சட்டத்தை இயற்றியது. இச்சட்டம் 15.04.1987 அன்று அமுலுக்கு வந்தது. இச்சட்டம் 1993ல் திருத்தியமைக்கப்பட்டது. இச்சட்டம் சுருக்கமாக "கோப்ரா" (COPRA) என்றழைக்கப்படுகிறது.

நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 1986 நுகர்வோர் நலன்களைப் பாதுகாத்து மேம்படுத்துகின்றது. இச்சட்டம் ஏமாற்று நோக்குடைய குறைபாடுடைய பொருட்கள், குறைபாடுடைய சேவைகள், நேர்மையற்ற வணிக நடைமுறைகள் மற்றும் பல்வேறு வகையான சுரண்டல்களிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கின்றது. நுகர்வோர் சச்சரவுகளுக்கு இச்சட்டம் நுகர்வோர் நீதிமன்றங்களை ஏற்படுத்தி அதன்மூலம் தீர்வுகண்டு நுகர்வோர் நலனைப் பாதுகாப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இது மிக சமீபமாக ஏற்படுத்தப்பட்டது ஆகும். இச்சட்டம் பொதுத்துறை, நிதி மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பொருந்தும்.

12th Commerce Tamil Unit 6.indd 148 27-03-2019 23:19:02

சமீபத்தில் மருத்துவ சேவைகளும் இதன் வரம்புகளுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சட்டம் அனைத்து பொருட்களுக்கும் சேவைகளுக்கும் பொருந்தும்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 நுகர்வோர்களுக்கு எந்தவித உரிமைகளையும் பொறுப்புக்களையும் உருவாக்கவில்லை மாறாக பொருட்கள் மற்றும் சேவைகள் விற்பனை செய்தல் தொடர்பான அனைத்து சச்சரவுகளையும் தீர்த்து வைக்கும் குழுக்களை ஏற்படுத்தியது. நுகர்வோர் கோரும் இழப்பீடானது குறைபாடுடைய பொருட்களையும், குறைபாடுடைய சேவைகளையும் ஏற்றதால் விளைந்த இழப்பிற்கான இழப்பீடாக இருக்கவேண்டும். இச்சட்டம் தேசிய குழுமம், மாநிலக் குழுமம் மற்றும் மாவட்டக் குழுமம் எனும் மூவடுக்கு நுகர்வோர் சச்சரவு தீர்வுக் குழுமத்தை ஏற்படுத்தியது. மேலும் இச்சட்டம் மாவட்ட மற்றும் மாநில அளவில், உயர்மட்ட அளவில் நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களை ஏற்படுத்தியது.

இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986ன் சிறப்பியல்புகள்

இந்திய நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், 1986ன் சிறப்பியல்புகள் பின் வருமாறு.

i. நுகர்வோர்களின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு எதிராக நுகர்வோரைப் பாதுகாத்தல்.

ii. உற்பத்தியாளர்கள் / விற்பனையாளர்களின் ஒப்பந்த மீறுகையில் இருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.

iii. சிறந்த தரத்தில் நுகர்வோருக்கு பொருட்கள் கிடைத்தலை உறுதி செய்தல்.

iv. பொய்யான மற்றும் தவறான வழிகாட்டும் செய்திகளை வெளியிடும் விளம்பரங்களிலிருந்து நுகர்வோரை பேணிக்காத்தல்.

v. நுகர்வோர் வாங்கும் பொருட்களுக்கு சரியான விலை நிர்ணயம் செய்வதை உறுதிசெய்தல்.

vi. தங்கு தடையற்ற பொருட்கள் விநியோகத்தை உறுதிசெய்தல்.

vii. பொருட்கள் சரியான தரத்தில், சரியான அளவைகளில் கிடைப்பதை உறுதி செய்தல்.

viii. நேர்மையற்ற வணிகர்களின் நியாயமற்ற வணிக நடைமுறைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.

ix. பல்வேறு வகையான மாசுபடல்களில் இருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.

x. வணிகப் போட்டிகளினால் விளையும் தீய விளைவுகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.

நுகர்வோர் பாதுகாப்பின் முக்கியத்துவம்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் விரிவான நிகழ்ச்சி நிரலை உள்ளடக்கியது. நுகர்வோருக்கு அவர்களது உரிமைகளையும் பொறுப்புகளையும் கற்பிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல் நுகர்வோரின் இடர்பாடுகளுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டது. இச்சட்டம், நுகர்வோர் நலனைப்பாதுகாக்க நீதித்துறை அமைப்பை உருவாக்கியது. இதன் மூலம் நுகர்வோர்களை ஒருங்கிணைத்து நுகர்வோர் அமைப்புகளை உருவாக்கி அதன்மூலம் நுகர்வோர் நலனை மேம்படுத்தியது. நுகர்வோர் பாதுகாப்பே வணிகத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த நோக்கமாகும்.

நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், 1986 ன் நோக்கங்கள்

பின்வருபவை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

i. நுகர்வோரின் உயிருக்கும் உடமைக்கும் ஊறு விளைவிக்கும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு எதிராக நுகர்வோரைப் பாதுகாத்தல்.

ii. நுகர்வோர் வாங்கும் பொருட்களின் தரம் அளவு, சுத்தத்தன்மை, விலை மற்றும் தரநிலை குறித்த உண்மையான மற்றும் முழுமையான தகவல்களை நுகர்வோருக்கு அளித்தல்.

iii. வணிகர்களின் நியாயமற்ற வணிக நடைமுறைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.

iv. சுரண்டல் நடைமுறைகளுக்கு எதிராக தீர்வுகளை தேட நுகர்வோருக்கு அதிகாரமளித்தல்.

v. நுகர்வோர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை அறிந்து கொள்ளச் செய்தல்.

vi. நல்ல தரமான பொருட்களை சரியான விலைகளில் கிடைக்கச் செய்வதன் மூலம் அவர்களின் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதிபடுத்துதல்.

vii. நுகர்வோர் தங்களது உரிமைகைளை நிலைநாட்ட நுகர்வோர் குழுக்கள் மற்றும் பிற அதிகார அமைப்புகளை ஏற்படுத்துதல்.

16.10. வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு வாங்குவோர்விழித்திரு கோட்பாடு Caveat Emptor

வாங்குவோர் ஜாக்கிரதை எனும் சொல் கேவியட் எம்ப்டர் எனும் இலத்தீன் மொழிச்சொல்லிலிருந்து பிறந்தது ஆகும். "உள்ளது உள்ளபடியே" என்ற சொற்றொடரைப்போன்று நுகர்வோர் வாங்கிய பொருட்கள் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை அல்லது குறைபாடுடையவை எனில் அத்தகு இடர்பாடுகளுக்கு வாங்குபவரே

12th Commerce Tamil Unit 6.indd 149 27-03-2019 23:19:02

பொறுப்பேற்க வேண்டும். வேறு வகையில் கூறுவதானால், பொருட்களை வாங்கியவர் அப்பொருள் தனது எதிர்பார்ப்புகளை ஈடுசெய்யவில்லை எனில் அதற்கு பொருட்களை விற்றவர் எந்தவகையிலும் பொறுப்பாக மாட்டார். பொருட்களை வாங்கியவர் அதற்கு நிவாரணம் தேட இயலாது என நுகர்வோரை எச்சரிக்கை செய்யும் தத்துவமே "வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு" எனும் கோட்பாடாகும்.

"வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு" எனும் கோட்பாட்டின் உண்மையான பொருள் மற்றொருவரிடமிருந்து ஒரு பொருளை வாங்கும்போது வாங்குகின்ற பொருளின் தன்மையைப் பற்றி அவர் அறியாதவராக இருக்கக் கூடாது. வாங்குபவர் ஒரு பொருளினை வாங்குமுன் அப்பொருளினை முழுமையாக பரிசோதித்து அப்பொருள் பெற்றிருக்க வேண்டிய தன்மைகளை முழுமையாக பெற்றிருக்கிறது என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பதை இக்கோட்பாடு உறுதிப்படுத்துகின்றது. எனினும் இக்கோட்பாடு எச்சூழ்நிலையிலும் பொருளை விற்பவரின் மோசடி நடவடிக்கைகளை அனுமதிப்பதாகாது.

நடைமுறையில் "வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு கோட்பாடு"

இக்கோட்பாட்டின்படி நுகர்வோர் ஒருவர் காபி குவளை ஒன்று வாங்குகிறார் எனில், வாங்கியபின் அக்குவளையில் காபி கசிகிறது என்று வைத்துக்கொண்டால் வாங்கிய நுகர்வோருக்கு அதனை திருப்பித்தர உரிமையில்லை அதனை தன்னிடமே வைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை ஏனெனில் இக்கோட்பாட்டின் படி பொருளை வாங்குபவர் அப்பொருளை வாங்கும் முன் அதனை முழுமையாக முன்னெச்சரிக்கையுடன் குறைகள் ஏதேனும் இருக்கிறதா என பரிசோதித்த பின்னரே அதனை வாங்க வேண்டும்.

இரண்டு நபர்கள் தங்களுக்கிடையே ஒரு பயன்படுத்தப்பட்ட கார் வாங்குவது குறித்த ஒப்பந்தம் செய்யும் போது காரை வாங்குபவர் ஒரு அனுபவமிக்க சிறந்த கார் தொழில்நுட்ப பணியாளரிடம் காரை எடுத்துச் சென்று அதனை முழுமையாக ஆய்வு செய்து திருப்தியடைந்த பின் தான் விற்பனை ஒப்பந்தத்தை நிறைவு செய்ய வேண்டும். விற்பவர் காரை விற்றபின் வாங்கியவர் அக்காரில் குறைகள் மற்றும் இடர்பாடுகளைக் கண்டறிந்தால் அதற்கு காரை விற்றவர் எவ்வகையிலும் பொறுப்பாகமாட்டார். ஏனெனில் காரை முழுமையாகப் பரிசோதித்து வாங்க வேண்டியது கார் வாங்கியவரின் கடமையாகும். அன்றி விற்றவர் எந்த விதத்திலும் பொறுப்பேற்க வேண்டியதில்லை. ஆனால் புதிய கார் ஒன்றை கார் விற்பனையகம் அல்லது காட்சியகத்தில் இருந்து வாங்கும்போது, அதனை வாங்கிய பின் ஏதேனும் குறைபாடுகளைக் கண்டறிந்தால் "வாங்குவோர் ஜாக்கிரதை" எனும் கோட்பாட்டின் அடிப்படையில் காரை விற்ற நிறுவனம் தப்பிக்க இயலாது. ஏனெனில் குறிப்பிட்ட ஆண்டுகள் உத்தரவாதமளித்து புதிய கார்கள் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே அக்குறிப்பிட்ட உத்தரவாத காலம் வரை விற்பனை செய்த நிறுவனம் தனது பொறுப்பில் இருந்து தப்பிக்க இயலாது.

16.11. "விற்பனையாளர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு தத்துவம்" Caveat Venditor

"வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு" எனும் கோட்பாடு தொழிற்புரட்சிக்கு முன் நடைமுறையில் இருந்தது. பெரும்பாலான பொருட்களின் விற்பனை மற்றும் நில விற்பனை இம்முறையில் செய்யப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய தினத்தில் விற்பனையாளர்களுக்கு தாங்கள் விற்பனை செய்யும் பொருட்கள் மீது மிக அதிகப் பொறுப்பு உண்டு. இன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பெரும்பான்மையான பொருட்கள் "விற்பனையாளர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்" (Let the Buyer Beware) என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. விற்பனையாளர்கள் தங்களது பொறுப்பிலிருந்து தப்பிக்க இயலாது. விளம்பரங்களில் "பொருட்கள் உள்ளது உள்ளபடி" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டாலொழிய, பொருட்களை வாங்குபவருக்கு, அப்பொருளை வாங்குவதற்கான நோக்கத்தை அப்பொருள் நிறைவேற்றும் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே விற்பனையாளர் அப்பொருளை விற்பனை செய்ய வேண்டும்.

12th Commerce Tamil Unit 6.indd 150 27-03-2019 23:19:02

பள்ளிகளில் நுகர்வோர் மன்றங்களின் செயல்பாடுகள் யாவை?

பள்ளிகளில் நுகர்வோர் மன்றங்களின் செயல்பாட்டிற்கு பின்வரும் அடிப்படைக் கட்டமைப்புகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

i. ஒவ்வொரு மாதத்தின் முதல் வியாழக்கிழமை பள்ளிவேலை நேரத்திற்கு பிறகு ஒரு மணி நேரம் கூட்டங்கள் நடத்துதல்மற்றும் செயல்விளக்கமளித்தல் ஒவ்வொரு மாதமும் ஒரு தலைப்பு/செயல்பாடு அளித்து மாதிரி நாட்காட்டியைத் அட்டவணைப்படுத்தலாம்.

ii. தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் நுகர்வோர் குறித்த முக்கித்துவம் வாய்ந்த தினங்களை பள்ளிகள் / கல்லூரிகளில் கொண்டாடுதல்/ நுகர்வோர் மன்றங்கள் மூலம் சுவரொட்டிகள் சொற்பொழிவுகள் பேச்சுப்போட்டிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து நுகர்வோர் தொடர்பான தினங்களின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணரச்செய்தல்.

iii. வருடத்திற்கு குறைந்த பட்சம் நான்கு நாட்களாவது உள்ளூர் சந்தைகளுக்குச் சென்று கள ஆய்வு செய்தல், அருகில் உள்ள நுகர்வோர் நீதிமன்றங்களுக்குச் சென்று அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காணல் மற்றும் பள்ளிப்பகுதிக்கு அருகாமையில் உள்ள வீடுகளுக்கு நேரில் சென்று நுகர்வோர் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். இயன்ற வரை உரிய முன்னனுமதி மற்றும் முன்னேற்பாடுகளுடன் சனிக்கிழமைகளில் மேற்கொள்ளலாம்.

iv. நுகர்வோர் மன்ற ஆசிரிய / மாணவ ஒருங்கிணைப்பாளர்கள் இந்நிகழ்வுகளை நிகழ்ச்சிக் குறிப்பாக (minute) உரிய முறையில் பதிவு செய்ய வேண்டும் அல்லது ஆவணப்படுத்த வேண்டும்.

நுகர்வோரியல் குறித்து காந்தியடிகள் கூற்று

"தான் விற்பனை செய்யும் பொருளின் விலையை எவ்வளவு உயர்த்தி விற்க முடியுமோ அவ்வளவு உயர்த்தி விற்கும் திருடன் ஒரு மனிதனா?"

–மகாத்மா காந்தியடிகள்

நமது சிந்தனைக்கு

மாணவர்கள் அருகாமையில் அமைந்துள்ள நுகர்வோர் நீதிமன்றங்களுக்கு களப்பயணம் சென்று அங்கு நிகழும் நிகழ்வுகளை கவனிக்கவும்.

எதிர்காலச் சிந்தனைக்கு

மாணவர்கள் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து கூடுதல் விவரங்களை திரட்டுதல் இதற்காக மாணவர்கள் தங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுத்தலைவர் மற்றும்தங்கள்பகுதியில்சிறப்பாகச்செயல்பட்டுவரும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் ஆகியோரைச் சந்தித்து நுகர்வோர் நலன்பாதுகாப்பதில் அவர்கள் மேற்கொள்ளும் அரிய பணிகள் குறித்த விவரங்களை சேகரிக்கலாம்.

சூழல் ஆய்வு

மும்பையைச் சார்ந்த நுகர்வோர் ஒருவர் மிகவும் பிரபலமான காலணி தயாரிப்பு நிறுவனம் அளித்த விளம்பரத்தில் 50% விலைத்தள்ளுபடி என்ற செய்தியினைப் பார்த்து ஒரு ஜோடி காலணி வாங்க காலணி விற்பனையகம் ஒன்றிற்கு சென்றார். அவர் அவ்விற்பனையகத்தில் காலணியை வாங்கி விட்டு 1345/– செலுத்தினார். வாங்கிய பிறகு அப்பொருளில் ரூபாய் 1345/– என ஒரு விலை அட்டையும், ரூபாய் 2690/– என மற்றொரு விலை அட்டையும் ஒட்டப்பட்டிருந்தது தெரிய வந்தது. பின்னர் இது குறித்து தனது புகாரை மின்னஞ்சல் மூலம் பொருளை விற்ற விற்பனையகத்திற்கு அனுப்பிவைத்தார். அதற்கு அந்த விற்பனையகம் அளித்த பதிலில் தள்ளுபடித் தொகையை பொருளின் அதிகப்பட்ச சில்லறை விலை (MRP) உள்ளடக்கியுள்ளதாகப் பதிலளித்திருந்தது. அப்பதிலில் திருப்தி அடையாத நுகர்வோர் நேரடியாக விற்பனையகத்திற்கே நேரில் சென்று விற்பனையாளரிடம் பேசி உரிய பணத்தை திரும்பப் பெற்றார்.

சூழ்நிலை ஆய்வு

திரு.நரசிம்மச்சாரி அவர்கள் புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றின் தயாரிப்பான குளிர்பதனப் பெட்டி ஒன்றினை மிகவும் பிரபலமான விற்பனையகத்தில் ஏழு ஆண்டுகள் உத்தரவாதத்துடன் வாங்கினார். அவர் அக்குளிர்பதனப் பெட்டியினை தயாரிப்பாளர்கள் வழங்கிய அறிவுரைகளின்படியே பயன்படுத்தி வந்தார். இரண்டு ஆண்டுகள்நிறைபெற்றநிலையில்அக்குளிர்பதனப்பெட்டி பழுதடைந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த அவர் பொருளை விற்பனை செய்த விற்பனையகத்தை அணுகி பொருள் பழுதடைந்த விவரத்தினை கூறி பழுதினை நீக்கித் தரக் கோரினார். ஆனால் பொருளை விற்பனை

12th Commerce Tamil Unit 6.indd 151 27-03-2019 23:19:02

செய்தவர் ஏழு ஆண்டுகள் உத்தரவாதம் தரப்பட்ட போதிலும், உத்தரவாத காலத்திற்குள்ளேயே பழுதடைந்த போதிலும், இலவசமாக பழுது நீக்கி சரி செய்து தர மறுத்து விட்டார். திரு.நரசிம்மச்சாரி அவர்களுக்கு இப்பிரச்சனை குறித்து தாங்கள் கூற விரும்பும் ஆலோசனை யாது?

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது

i. நுகர்வோர்களை கவருவதற்காக 50% தள்ளுபடி என பொய்யான விளம்பரம் செய்வது.

ii. பொருளின் விலை அட்டையில் குறிப்பிட்டுள்ள விலையை இரட்டிப்பாக்கி புதிய விலை அட்டை ஒட்டியது சட்டத்திற்கு புறம்பானது.

iii. தள்ளுபடி கழித்த விற்பனை விலைக்கே விலை அட்டை ஒட்டப்பட்டிருக்கிறது என்ற ஏமாற்று வாதத்தை தவிர்க்க வேண்டும்.

முக்கிய வார்த்தைகள் (Key words)

நுகர்வோர், நுகர்வோரியல், நுகர்வோர் இயக்கம், நுகர்வோர் பாதுகாப்பு, நுகர்வோர் சுரண்டல், நுகர்வோர் விழித்துக் கொள்க, விற்பனையாளர் எச்சரிக்கையுடன் இருக்க, வாங்குவோர் எச்சரிக்கையுடன் இருக்க

பயிற்சி

BTVXXT

I. விடையைத் தேர்ந்தெடு:

1. "நுகர்வோரியல்" எனும் சொல் தோன்றிய ஆண்டு

அ. 1960 ஆ. 1957

இ.1954 ஈ. 1958

2. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?

அ. மகாத்மா காந்தி ஆ. ஜான் எப். கென்னடி

இ. ரால்ப் நேடர் ஈ. ஜவஹர்லால் நேரு

3. பொருட்கள் விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ. 1962 ஆ.1972 இ.1982 ஈ.1985

4. அனைத்து வணிக நிறுவனங்களின் மிக முக்கிய முதன்மை நோக்கம்

அ.சேவை செய்வது

ஆ. நல்ல வாழ்க்கைத்தரத்தை அளிப்பது

இ.சமுதாயத்திற்கு தேவையானவற்றை அளிப்பது

ஈ.இலாபம் ஈட்டுவது

5. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்

அ .01.01.1986 ஆ. 01.04.1986

இ.15.04.1987 ஈ.15.04.1990

6. நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்ப்படுத்த ஒவ்வொரு ஆண்டும்..... நுகர்வோர் பாதுகாப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அ. ஆகஸ்டு 15 ஆ. ஏப்ரல் 15

இ. மார்ச் 15 ஈ. செப்டம்பர் 15

7. உரிய மறுபயன் அளித்து தனது சொந்த உபயோகத்திற்காகப் பொருட்களையும், சேவைகளையும் ஏற்றுக் கொள்ளும் நபர்

அ.வாடிக்கையாளர் ஆ. நுகர்வோர்

இ.வாங்குபவர் ஈ.உபயோகிப்பவர்

8. ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்சபை நுகர்வோர் பாதுகாப்பு வழிகாட்டும் நெறிமுறைகள் குறித்து தீர்மானம் இயற்றிய ஆண்டு.

அ.1985 ஆ. 1958

இ.1986 ஈ.1988

விடைகள் :

1	அ	2	இ	3	இ	4	ஈ	5	இ
6	இ	7	ஆ	8	அ				

II. குறு வினாக்கள்:

1. நுகர்வோர் என்பவர் யார்?

2. நுகர்வோரியல் என்பதை வரையறு.

3. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

4. "வாங்குவோர் ஜாக்கிரதை" என்றால் என்ன?

5. "விற்பனையாளர் ஜாக்கிரதை" என்றால் என்ன?

6. சிறு குறிப்பு வரைக. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986.

III. சிறு வினாக்கள்:

1. வணிகத்தின் மூன்று முக்கியக் கூறுகள் யாவை?

2. நுகர்வோரியல் குறித்து இயற்றப்பட்ட முக்கியச்சட்டங்கள் யாவை?

3. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?

4. நுகர்வோரியலின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

5. நுகர்வோர் பாதுகாப்பில் அரசின் பங்கு யாது?

12th Commerce Tamil Unit 6.indd 152 27-03-2019 23:19:02

IV. பெரு வினாக்கள்:

1. நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?
2. நுகர்வோர் பாதுகாப்பில் வணிகத்தின் பங்கினை விளக்குக?
3. நுகர்வோர் பாதுகாப்பின் தேவைகள் யாவை?
4. நுகர்வோர் பாதுகாப்பில் நுகர்வோரின் பங்கினை விளக்குக.
5. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், 1986ன் நோக்கங்கள் யாவை?
6. ஏதேனும் ஐந்து நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களை எழுதுக.
7. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 1986ன் சிறப்பியல்புகள் யாவை?
8. ஐ.நா.அவையின் நுகர்வோர் பாதுகாப்புக்குறித்த நோக்கங்கள் யாவை?

குறிப்பு நூல்கள்

1. Modern Marketing – S.A. Sherlekar
2. Modern Marketing – R.S. N. Pillai and Bagavathi.
3. Marketing Management – Dr. C.B.Gupta and Dr. N.Rajan Nair
4. Marketing management – S.A. Sherlaker
5. Marketing Management – R.S.N.Pillai and Bagavathi
6. Marketing–KSundar

12th Commerce Tamil Unit 6.indd 153 27-03-2019 23:19:03

அலகு 6

சந்தையிடுகையின் அடிப்படை கூறுகள்

17

அத்தியாயம்

சந்தை மற்றும் சந்தையிடுகையாளர்

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலந்துணீர் பெய்திரீஇ யற்று.

–குறள் 660

பொருள் :

வஞ்சனையான வழியால் பொருளைச் சேர்த்துக் காப்பாற்றுதல் பச்சை மண்கலத்தில் நீரை விட்டு அதைக் காப்பாற்றி வைத்தாற் போன்றது.

கற்றல் நோக்கங்கள்


இந்த அத்தியாயத்தை கற்றபின் மாணவர்களால்

- நுகர்வோரின் உரிமைகளை புரிந்து கொள்ள இயலும்
- நுகர்வோரின் கடமைகளை புரிந்து கொள்ள இயலும்
- நுகர்வோரின் பொறுப்புகளை புரிந்து கொள்ள இயலும்

அத்தியாயம் சுருக்கம்

17.01 நுகர்வோரின் கடமைகள்
17.02 நுகர்வோரின் பொறுப்புகள்
17.03 நுகர்வோரின் உரிமைகள்

நவீன சந்தையியல் கருத்து நுகர்வோரை முக்கிய புள்ளியாக கருதுகிறது. நுகர்வோரைச் சுற்றியே வியாபாரச் சூழல் நிலவுகிறது. நுகர்வோரை திருப்தியடையச் செய்வதே வியாபாரத்தின் தலையாய நோக்கமாகும். நுகர்வோர் தனது சொந்த நலன்களைப் பாதகாக்கும் பொருட்டு முதலில் தங்கள் உரிமையை வாங்குவோர் அறிந்திருக்க வேண்டும். நுகர்வோரின் கடமைகள், பொறுப்புகள் மற்றும் நுகர்வோரின் உரிமைகளைப் பற்றியும் இப்பாடத்தில் விரிவாக பார்க்கலாம்.



17.01 நுகர்வோரின் கடமைகள் Duties of Consumer

உரிமைகள் தவிர, நுகர்வோர் மீது சில கடமைகள் விதிக்கப்பட்டு உள்ளன. நுகர்வோர் தனது கடமைகளை உணர்ந்து கொள்ள வேண்டும். நுகர்வோர் வாங்குவதை நேர்மையாக செய்ய வேண்டும் மற்றும் அவரது உரிமைகளை தவறாக பயன்படுத்தக்கூடாது. பின்வருவன நுகர்வோரின் கடமைகளுக்கு ஆதாரமாக உள்ளன.

i) தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்குதல் Buying Quality Products at Reasonable Price

பொருட்களைப் பற்றிய முழுமையான அறிவுடன் அதன் விலை, தரம் மற்றும் அதன் அனைத்து விவரங்களையும் அந்த பொருளை வாங்குவதற்கு முன் தெரிந்து கொள்ள

12th Commerce Tamil Unit 6.indd 154 27-03-2019 23:19:03


வேண்டியது நுகர்வோரின் முக்கிய பொறுப்பாகும். நுகர்வோர் ஒரு பொருளின் விலை பற்றி கடைகளிலும் முடிந்தால் அரசு விற்பனையகங்களிலும் விசாரித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். நுகர்வோர் ஒரு பொருளைப் பற்றிய அறிவை தனது சொந்த அனுபவத்திலோ அல்லது அந்த பொருளை பயன்படுத்திய மற்றவர்களிடமோ அல்லது இணையதளம் மூலமாகவோ பெற்றிருக்க வேண்டும். எனவே ஒரு பொருளை வாங்கும்பொழுது நன்கு விசாரித்து வாங்குவதை கடமையாகக் கொள்ள வேண்டும்.

ii. பொருட்களை வாங்குவதற்கு முன் அதன் எடையையும் மற்றும் அளவையும் உறுதிப்படுத்துதல் Ensure the weights and measurement before making purchases

வியாபாரிகள் பெரும்பாலும் நியாயமற்ற எடைகள் மற்றும் மோசடி நடவடிக்கைகள் மூலம் நுகர்வோரை ஏமாற்றுகிறார்கள். நுகர்வோர் என்பவர் சரியான எடை மற்றும் சரியான அளவிலான பொருட்களை பெறுகிறோம் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். நுகர்வோர் ஒரு பொருளை வாங்கும்பொழுது அதன் உறையுடன் கூடியதான நிகர எடையாக வாங்கக் கூடாது. ஆகையால், நுகர்வோர் எப்பொழுதும் முன் எச்சரிக்கையாக பொருட்களை வாங்கும்பொழுது அதன் எடை மற்றும் அளவை கண்காணிக்க வேண்டும்.

iii. விவர அட்டையை கவனமாக படித்தல் Reading the Label carefully

பொருளின் மீது ஒட்டப்பட்டுள்ள விவர அட்டையை முழுமையாக படிக்க வேண்டியது நுகர்வோரின் கடமையாகும். பொருளின் விவரங்கள் முழுமையாகவும் சரியாகவும் மற்றும் உண்மையாகவும் இருக்க வேண்டும்.



iv. தவறான மற்றும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருத்தல் Beware of false and attractive advertisements

விற்பனையாளர்கள் பெரும்பாலும் பொருட்கள் மீதான கவர்ச்சிகரமான விளம்பரங்களை செய்கிறார்கள். எனவே, இத்தகைய மோசடி விளம்பரங்களால் தவறாக புரிந்து கொண்டு ஏமாறாமல் இருப்பதே நுகர்வோரின் தலையாய கடமையாகும்.

v) தவறான திட்டங்கள் Misleading schemes


பெரும்பாலும் விளம்பரங்கள் கவர்ச்சிகரமாகவும் உணர்ச்சிகரமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. அவைகள், ஏமாற்றும் வகையிலும் தவறாகவும் இருந்து நுகர்வோர்களை வழி நடத்தலாம். நுகர்வோர் எப்பொழுதும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மீது எச்சரிக்கையாகவும், தவறான விளம்பரங்களை தவிர்க்கவும் வேண்டும். தினந்தோறும் பொருட்களுக்கு சந்தையில் விற்பனையை அதிகரிக்க பரிசுப் பொருட்கள், தள்ளுபடி அல்லது இலவசப் பொருட்கள் வழங்குவதன் மூலம் நுகர்வோரை தூண்டிப் பொருட்களை வாங்க வைக்கிறார்கள். உதாரணமாக சோப்புடன் இலவச சீப்பு, சோப்பின் விலை மீதான தள்ளுபடி ஒரு பொருள் வாங்கினால் மற்றொன்று இலவசம் போன்ற விளம்பரங்கள். பெரும்பாலும் நுகர்வோர் சலுகைகளாலும் தள்ளுபடி போன்றவற்றாலும் மூர்க்கமாக இழுக்கப்படுகிறார்கள்.

இச்சூழ்நிலையில் நுகர்வோர்கள் ஒரு உண்மையை மறந்து விடக் கூடாது. அதாவது, நுகர்வோரிடமிருந்து விற்பனையாளர் ஏற்கனவே விலையை உயர்த்தி பொருட்களை விற்பனை செய்துவிட்டதினால், இலவச பொருட்கள் வழங்கினாலும் இத்திட்டத்தில் அப்பொருளின் விலையை திரும்ப பெற்றுவிட்டார். அதனால் நுகர்வோர் எப்பொழுதும் எச்சரிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும், இல்லையென்றால் இலவச பொருட்கள் மீதான பேராசையினால் தேவையில்லாத பொருட்களையும் வாங்கிவிட வாய்ப்புள்ளது.

vi. ரொக்க ரசீதை உறுதி செய்தல் Ensuring the receipt of cash bill

பொருட்களுக்கான இடாப்புடன் ரொக்க ரசீது உத்தரவாத அட்டை போன்றவற்றை பெறுவது நுகர்வோரின் சட்டப்படியான கடமையாகும். பொருட்களில் ஏற்படும் குறைபாடுகளை களைய குறைதீர்வகத்தில் முறையிட உத்தரவாத அட்டை உதவிடுகிறது. நேர்மையற்ற விற்பனையாளர்கள் இறுதியாக விலை குறைப்பு மூலமாக இடாப்பு ரசீது இல்லாமல், பொருட்களை விற்பனை செய்கிறார்கள். பெரும்பாலும் நுகர்வோர்கள் இந்த வழிகளில் இழுக்கப்படுகிறார்கள். இச்சூழலில் ரசீது இல்லாமல் வாங்கப்பட்ட பொருட்களில் ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் நுகர்வோர்கள் அக்குறைகளை களைய நுகர்வோர் நீதிமன்றத்தை அணுக முடியாது. ஆகையால் பொருட்களை வாங்கியதற்கான ரொக்க ரசீதையும் உத்தரவாத அட்டையையும் கேட்டுப் பெறுவதே நுகர்வோரின் முக்கிய கடமையாகும்.

12th Commerce Tamil Unit 6.indd 155 27-03-2019 23:19:03



vii. புகழ்மிக்க கடைகளிலிருந்து பொருட்களை வாங்குதல் Buying from Reputed Shops


நுகர்வோருக்குச் சிறப்பானது எதுவெனில் புகழ்மிக்க கடைகளில் அல்லது அரசு கடைகளில் பொருட்களை வாங்குவது சிறந்தது என அறிவுறுத்தப்படுகிறது. உதாரணமாக, கூட்டுறவு கடைகள், சிறப்பங்காடிகள் மற்றும் பிற. உற்பத்தியாளர்கள், கடைக்காரர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோரின் மோசடிகளிலிருந்து தப்பிக்க மேற்காணும் சிறப்புக் கடைகளில் பொருட்களை வாங்குவதே சிறந்தது.

viii. கள்ளச் சந்தைகளில் ஒருபோதும் பொருட்களை கொள்முதல் செய்யாமை Never Purchase from Black Market

நுகர்வோர் பொறுப்பான குடிமகனாக அவரது கடமைகளை நிறைவேற்ற வேண்டும். தனது அதிகப்படியான தேவைகளுக்காக கள்ளச் சந்தையில் பொருட்களை வாங்குவதை எப்பொழுதும் தவிர்க்க வேண்டும். பற்றாக்குறை நேரத்தில் நுகர்வோர் பீதியுடன் பொருட்களை வாங்குவது கூடாது. அதுமட்டுமல்லாமல் பொருட்களை அதிகம் வாங்கி சேமித்து வைக்கக் கூடாது. இந்தச் செயலால் மற்றவர்களுக்கும் தேவைப்படுகின்ற அளவிற்கு அத்தியாவசிய பொருட்களை பாதுகாக்க முடியும்.

ix. தரமான பொருட்களை வாங்குதல் Buying standardized products

பெரும்பாலும் நுகர்வோர் குறைந்த விலையிலான பொருட்களை அதிகம் வாங்குகிறார்கள். ஆனால் அவைகள் நீடித்த மற்றும் பாதுகாப்பானவைகளாக இருப்பதில்லை. ஆகையால் நுகர்வோரின் கடமை என்னவென்றால் தரமான பொருட்களையே வாங்குதல் மற்றும் உள்ளதையே ஆராய்ந்து தரக்குறியீட்டுடன் வாங்குதல் பாதுகாப்பானதாகும்.



x. உற்பத்தியாளர்களின் அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் Follow the Instructions of the Manufacturer

நிறுவனம் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களின்படி நுகர்வோர்கள் பொருட்களை பயன்படுத்த வேண்டும். உதாரணமாக மருந்துப் பொருட்களை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அதன்படி பின்பற்ற வேண்டும். இவ்வாறு முன் எச்சரிக்கையாக பாதுகாப்பதன் மூலம் மருந்து பொருட்களுக்கு எந்தவொரு சேதமோ மற்றும் தீங்கோ ஏற்படுவதிலிருந்து நுகர்வோர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளலாம்.

xi. நுகர்வோரின் உரிமைகள் பற்றிய அறிவு Knowledge of Consumer Rights

இன்றைய காலகட்டத்தில் விரைவாக இலாபம் ஈட்ட வேண்டும் என்ற நோக்கில் முடிந்தவரை கிடைக்கக்கூடிய பல வழிகளில் விற்பனையாளர்கள் நுகர்வோர்களை ஏமாற்றுவதை பார்க்க முடிகிறது. நுகர்வோர் தனது உரிமைகளை பற்றி எச்சரிக்கையுடன் இருப்பதே தலையாய கடமையாகும். ஒரு வியாபாரியினால் நுகர்வோர் ஏமாற்றப்படும்பொழுது அமைதியான பார்வையாளராக இல்லாமல் அவர் உடனடியாக ஒரு புகாரை வியாபாரியின் மீது நுகர்வோர் நீதிமன்றத்தில் ஆதாரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

17.02 நுகர்வோரின் பொறுப்புகள் Consumer Responsibilities

நுகர்வோர் தனது உரிமைகளை திறமையாக பாதுகாக்கவில்லையென்றால் தனது நோக்கத்தை அடைய முடியாது. தனது பொறுப்புகளை முழுமையாக புரிந்து கொள்ளவில்லையென்றால் நுகர்வோர் தனது நோக்கத்தை உரிய முறையில் அடைய இயலாது. நுகர்வோர் தனது பொறுப்பு என்னவென்பதை பொருட்களை வாங்கும்பொழுதும் பயன்படுத்தும்பொழுதும் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளை நுகரும்பொழுதும் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். நுகர்வோரின் உரிமைகளும் பொறுப்புகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். நுகர்வோர் தனது உரிமைகளை அனுபவிப்பது குறிப்பிட்ட பொறுப்பாகக் கொள்ள வேண்டும். நுகர்வோரின் பொறுப்புகள் பின்வரும் வகையில் பட்டியலிடப்படுகின்றன.

1. விற்பனை ஒப்பந்த சட்டத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்படி பொருளுக்கான விலையை நுகர்வோர்கள் செலுத்த வேண்டும்.

12th Commerce Tamil Unit 6.indd 156 27-03-2019 23:19:04

2. பொருட்களை நுகர்வோரின் இருப்பிடத்தில் வழங்குமாறு விற்பனையாளரை கேட்டுக் கொள்வது அவரின் பொறுப்பாகும். நுகர்வோர் அப்பொருட்களை குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்வது அவரின் கடமையாகும்.

3. ஒப்பந்தச் சட்டத்தின்படி குறித்த நேரத்தில் பொருட்களை நுகர்வோர் பெற்றுக் கொள்ளவில்லையென்றால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கு அவரே பொறுப்பாவார்.

4. நுகர்வோர் பொருட்களை பெற்றுக் கொண்டு தாமதமாக விற்பனையாளருக்கு பணம் செலுத்தினாலோ அல்லது பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்திவிட்டாலோ அதற்கான நஷ்டஈடு தர வேண்டியது நுகர்வோரின் கடமையாகும்.

5. நுகர்வோர் தங்களிடமிருக்கும் பொருட்களை அதன் விதிமுறைகளின்படி மற்றும் முன்னெச்சரிக்கையுடன் அப்பொருட்களை பயன்படுத்த வேண்டும்.

6. நுகர்வோர் பொருட்கள் மீதான தனது தேவையை தெளிவாக விற்பனையாளரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

7. நுகர்வோர் பொருட்களை வாங்குவதற்கு முன்பாக கட்டாயம் பொருட்கள் மீதான விலை, தரம் மற்றம் அளவு ஆகிய தகவல்களை முழுமையாக பார்க்க வேண்டும்.

8. நுகர்வோர் பொருட்களை வாங்கும்பொழுது விற்பனையாளரிடமிருந்து பொருட்களுக்கான ரொக்க ரசீதை பெற்றுக் கொள்ள வேண்டும். பொருட்களுக்கான உத்தரவாத காலத்தை அதன் உத்தரவாத அட்டையை பார்த்து தெரிந்து கொள்வதுடன் அதனை கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். உத்தரவாத அட்டையில் விற்பனையாளரின் கடை முத்திரையையும் மற்றும் கையெழுத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

9. நுகர்வோர் பொருட்களில் ஏதேனும் குறை ஏற்பட்டாலோஅல்லதுசேவைக்குறைவுஏற்பட்டாலோ நுகர்வோர் குறைதீர்வகத்தில் புகாரை சமர்ப்பிக்க வேண்டும்.



All India Consumer Council
Govt.Regd. Organisation engaged in implementation of
Ministry of Consumer Affairs, Food & Distribution's Consumer Rights Protection Programme
Mission: PROTECT Consumer - make BETTER INDIA

10. பொருட்களின் தரத்தில் நுகர்வோர் எவ்வித சமரசமும் செய்து கொள்ளக்கூடாது. நுகர்வோர் ISI, அக்மார்க், FPO போன்ற தரக்குறியீடு சான்றுகளை மற்றும் அடையாளக் குறியீடுகளை இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும.

11. விளம்பரங்கள் மூலம் பொருட்களின் தரம் மிகைப்படுத்தி காண்பிக்கப்பட்டால் அதை நுகர்வோர் ஏற்றுக் கொள்ளக்கூடாது. விளம்பரங்கள் மூலம் காண்பிக்கப்படும் அம்சங்களும் உண்மையான அம்சங்களும் வேறாக இருந்தால் அதுபற்றி விற்பனையாளரிடமோ அல்லது விளம்பரப்படுத்துவோரிடமோ அத்தகவலை தெரிவிக்க வேண்டும்.

12. நுகர்வோர் தனது உரிமைகளாக, பாதுகாப்பு, பொருட்கள் பற்றிய தகவல், தேர்ந்தெடுத்தல், குறைதீர்வகத்தில் தெரியப்படுத்துதல், பொருட்களைப் பற்றிய தகவல்களை கேட்டுப் பெறுதல் போன்றவை உள்ளது என்பதை கட்டாயம் புரிந்துகொள்ளவேண்டும்.மேற்காணும்உரிமைகள் மறுக்கப்பட்டால் 1986ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின்படி குறைதீர்வகத்தில் உடனே முறையிட வேண்டும்.

17.03 நுகர்வோர் உரிமைகள் Consumer Rights

வியாபார சுழற்சியில் நுகர்வோர்தான் முக்கிய புள்ளியாக கருதப்படுகிறார் என்று நவீன சந்தையியல் கருத்து அங்கீகாரம் வழங்குகிறது. நுகர்வோரின் தேவை மற்றும் விருப்பங்கள் குறித்தான திருப்தி வியாபாரத்தின் முதன்மையான மற்றும் தலையாய நோக்கமாகும். ஆனால், உண்மையில் நுகர்வோர் உணர்வது என்னவெனில் வியாபாரிகள் தரமற்ற பொருட்களை அடக்கவிலையைவிட அதிக விலைக்கு விற்பனை செய்வதாக எண்ணுகிறார்கள். நுகர்வோரின் விருப்பங்கள் மற்றும் தேவைகளை பாதுகாக்க வேண்டுமெனில் அவைகளை அவர்களுக்கான உரிமைகளை உணரவைப்பது மட்டுமே ஆகும்.

நுகர்வோர் உரிமை என்பதற்கு விளக்கமாக தரத்தின் மீதான பொருட்களைப் பற்றிய தகவல், இயல்பு, அளவு, தூய்மை, விலை, பொருட்கள் மற்றும் சேவை மீதான தரஅளவு ஆகியவை ஆகும். வியாபாரத்தில் மோசடியான செயல்களிலிருந்து நுகர்வோர் பாதுகாக்கப்பட வேண்டும். நுகர்வோர் தனது உரிமைகள் பற்றி உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தியாவில் நுகர்வோரின் உரிமைகள் பற்றி தெளிவாக சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. முக்கிய சட்டமாக 1986ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு சட்டமாகும். தனிநபர், நிறுவனம், இந்து கூட்டுக் குடும்ப நிறுவனம் மற்றும் கூட்டுப்பங்கு நிறுமம் ஆகியவற்றை உள்ளடக்கியதே இச்சட்டத்தின் முக்கிய அம்சமாகும். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு.ஜான் F கென்னடி அவர்கள், "அடிப்படையான நுகர்வோர் உரிமை

12th Commerce Tamil Unit 6.indd 157 27-03-2019 23:19:04

என்பது, பாதுகாப்பில் உரிமை, தகவல் பெறும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை மற்றும் கேட்கும் உரிமை" என்று கூறுகிறார்.

நவீன சந்தையின் மன்னர்களாக நுகர்வோர்கள் கருதப்படுகிறார்கள். ஆனால், உண்மையில் அவ்வாறில்லை. நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் நுகர்வோரின் பல்வேறு உரிமைகளாக உறுதியாக கூறப்பட்டுள்ளது. அவ்வுரிமைகளைப் பற்றி பின்வருமாறு விவாதிக்கலாம்.

i. உடல்நல பாதுகாப்பு உரிமை மற்றும் பாதுகாப்பிற்கான உரிமை Right to Protection of Health and Rights of Safety

சில தயாரிப்புப் பொருட்கள் நுகர்வோரின் உடல் நலம், சொத்துக்கள் மற்றும் வாழ்வு முறையில் அபாயத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கலாம். அத்தயாரிப்புகள் நுகர்வோரின் நலனுக்கு தீங்கு விளைவிக்க கூடியதாக இருக்கலாம். சிறந்த உதாரணமாக உணவு சேர்க்கைகள், நிறமிகள், உணவுப்பாதுகாப்பு இரசாயனங்கள் ஆகியவை ஆகும். உடல்நலக் கோளாறுகள் மற்றும் ஆராக்கிய அபாயங்கள் எழும் வாய்ப்புகள் முற்றிலும் அழிக்கப்பட வேண்டும் அல்லது முற்றிலும் குறைக்கப்பட வேண்டும். உணவுகள் மற்றும் மருந்துகள் நுகர்வோரின் உயிரைக் காப்பாற்றுவதாகவும் உயிருக்கு பாதுகாப்பு அளிப்பதாகவும் இருக்க வேண்டும். இன்றைய சூழலில் தற்போதைய சட்டங்கள் பாதுகாப்பில்லாத பொருட்களை தயாரிப்பதோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது என்ற கடமை விற்பனையாளர்களுக்கும் மற்றும் உற்பத்தி செய்பவர்களுக்கும் உள்ளது.

ii. தகவல் பெறும் உரிமை Right to be Informed

பொருட்களை வாங்கும்பொழுது நுகர்வோர் அப்பொருட்களைப் பற்றிய அனைத்து விதமான தகவல்களையும் கேட்டுப் பெற வேண்டும். விளம்பரம் மற்றும் பெயரிடல் செயல்மூலம் பொருட்களைப் பற்றிய விவரம் அதன் கட்டுமம் மீது தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். இதன் உட்பொருள் என்னவென்றால் பொருட்களை உற்பத்தி செய்பவரும் விநியோகிப்பவரும் அப்பொருட்களைப் பற்றிய தகவல்களை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும் என்று நுகர்வோர் எதிர்பார்க்கின்றனர். பொருட்களின் பெயர், அதன் கலவை, பயன்படுத்தும் அளவு, உற்பத்தி செய்த நாள், காலாவதியாகும் நாள், தயாரிப்பு பிரிவு எண், எச்சரிக்கை போன்ற விவரங்கள் கண்டிப்பாக அதன் கட்டுமம் மீது காணப்பட வேண்டும். மேலும், பொருட்களின் விலை, அதன் தயாரிப்பாளர் பெயர், வரியுடன் அல்லது வரியில்லாத விலை ஆகியவையும் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

iii. தேர்ந்தெடுக்கும் உரிமை Right to Choose

நவீன சந்தையியலின் தத்துவம் மற்றும் தலையாய நோக்கம் என்பது நுகர்வோரை திருப்தி செய்வது என்பதாகும். நுகர்வோரை உச்சபட்ச அளவில் திருப்திபடுத்துவதன் மூலம் ஒரு அறிவார்ந்த வியாபாரி அல்லது உற்பத்தியாளர் தனது இலாபத்தை அதிகப்படுத்திக்கொள்கிறார். நுகர்வோரை மனநிறைவு கொள்ள பரவலான பொருட்களின் தேர்வினை தருகிறார்கள். "தேர்வு" என்பது பரந்த வழிகளில் தரம், வியாபாரக் குறியீடு, நியாயமான விலை போன்றவற்றின் அடிப்படையில் பொருட்களை தேர்ந்தெடுப்பதாகும். சுருங்கக்கூறின் நுகர்வோர் பொருட்களை அதன் நிறம், தரம், வடிவமைப்பு மற்றும் அளவு ஆகியவற்றைக் கொண்டு விரும்பிய வழிகளில் தேர்ந்தெடுப்பதாகும்.

iv. செவிமடுக்கும் உரிமை Right to be Heard

நுகர்வோர் தனது அதிருப்தி மற்றும் கருத்து வேறுபாடுகளை முழுமனதுடன் வெளிப்படுத்துவதுடன் மற்றும் பதிவு செய்ய வேண்டும். வணிக நிறுவனங்கள் நுகர்வோரின் புகார்கள் மற்றும் குறைகளை திறந்த மனதுடனும் கருணை மனப்பான்மையுடனும் செவி மடுக்க வேண்டும். அனைத்து வணிக நிறுவனங்களும் நுகர்வோரின் குறைகளை கண்டறிய தனியான துறை அல்லது பகுதி அல்லது பிரிவை ஏற்படுத்த வேண்டும்.

v. நிவாரணம் காணும் உரிமை Right to seek Redressal

இந்தச் செயல் முந்தைய நடவடிக்கைக்கு மேலே உள்ளது. புகார்களும் அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் கேட்கப்பட வேண்டியவை அல்ல. ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய காலத்திற்குள் இழப்பீடு வழங்கப்பட வேண்டும். நுகர்வோரின் புகார்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை உடனடியாக சரிசெய்ய வேண்டும் குறைதீர்ப்பு செயலினால் நுகர்வோர் நம்பிக்கை அதிகரிக்கும் மற்றும் வாங்குபவர்களுக்கும் நியாயம் கிடைக்கும். ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் உண்மையான கூற்றுகளுக்கு நியாயமான மற்றும் உறுதியான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

vi. நுகர்வோர் கல்வி உரிமை Right to Consumer Education

நுகர்வோர் வாழ்நாள் முழுவதும் தன்னுடைய உரிமையைப் பற்றி அறிந்தவராக இருக்கிறார். நுகர்வோர் தன்னுடைய பொருட்கள் மீதான எதிர்பார்ப்பில் குறைபாடுகள் இருந்தால் தனக்கான உரிமையைப் பயன்படுத்தி அதற்கான நிவாரணத்தைப் பெறுவதில் முனைப்பாக இருக்க வேண்டும். பல நுகர்வோர் அமைப்புகள் மற்றும் சில சிறப்பு பெற்ற தொழில்கள் இந்த வகையில் நுகர்வோர் கல்வி வழங்குதல் சார்பாக பங்கெடுக்கின்றன.

12th Commerce Tamil Unit 6.indd 158 27-03-2019 23:19:04

vii. வாழ்க்கைத் தர உரிமை Right to Quality of Life

வாழ்வின் தரம் என்பது சமுதாயத்தில் மக்கள் நலமாக இருப்பதைக் குறிக்கும் மற்றும் மக்கள் வாழும் சூழலின் தனிப்பட்ட மற்றும் நல்வாழ்வைக் குறிக்கிறது. நுகர்வோரியல் என்பது வாழ்க்கையின் மேம்பட்ட தரத்தைக் குறிக்கும். இதன் பொருள் யாதெனில் நுகர்வோரின் வாழ்க்கைத் தரத்தை பாதிக்கின்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மற்றும் மக்கள் வாழும் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களையும் குறிக்கும். மாறாக கூறினால் காற்று மாசுபாடு, நீர் மாசுபாடு உணவு மாசுபாடு, ஒலி மாசுபாடு மற்றும் தொழில் மயமாக்கலால் அதிகமான மக்கள் வேலைவாய்ப்பிற்காக இடம்பெயர்தல் ஆகியவை ஆகும். இந்த சாமானிய மக்களின் சமூகச் செலவுகள் அவர்களின் சமூக நலன்களைவிட அதிகமாகும். மாற்றாக கூறவேண்டுமெனில் ஒவ்வொரு வகையான மாசுபாடும் சமூகத்தின் நலன்களை பாதிக்கின்ற வகையில் அமைகிறது.

வணிக நிறுவனங்கள் மனிதவர்க்கத்திற்கான சமூகப் பொறுப்புடன் உற்பத்தி மற்றும் வெளியீடு செய்யப்பட வேண்டும். உற்பத்தியாளர்கள் தவிர்க்க முடியாத கழிவுகள் மற்றும் சழிவுநீரை வெளியேற்றும் பொழுது சுற்றுப்புறச் சூழல் மற்றும் மனிதர்களை பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டும்.

viii. நுகர்வோர் பாதுகாப்பு உரிமை Right to Consumer Protection

நுகர்வோர் தனது உரிமைகள் மற்றும் பரிவர்த்தனைகளுக்கு அவரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவரின் குறைகளுக்கு தீர்வு காண ஊடகத்தின் மூலம் விளம்பரப்படுத்த வேண்டும். நுகர்வோர் தனது வாழ்க்கை மற்றும் ஆரோக்கியத்திற்கு அபாயகரமான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு எதிராக பாதுகாத்துக்கொள்ள உரிமை உண்டு. தரக்குறைவான கூறுகளுடன் உற்பத்தி செய்யப்படும் அல்லது பாதுகாப்பு விதிமுறைகளுக்கு இணங்காத நுண்ணலைக் கருவிகளைப் பயன்படுத்துவதால் அதைப் பயன்படுத்தும் பயனாளிகள் கடுமையான உடல் ரீதியான தீங்கினை அவர்களுக்கு ஏற்படுத்தலாம். நுகர்வோர் தனது பட்டறிவுடன் ஐ.எஸ்.ஐ குறியீடு உள்ள மின்சார உபகரணங்களை பயன்படுத்த வேண்டும். இதனால் உற்பத்தியாளர்கள் தரமான பொருட்களை மட்டுமே தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும்.

ix. அடிப்படை தேவைகளுக்கான உரிமை Right to Basic Needs

ஒவ்வொரு நுகர்வோருக்கும் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் சுத்தமான நீர் மற்றும் ஆரோக்கியமான சூழலுக்கான அடிப்படைகளை பெறுவதற்கு உரிமை உண்டு. இது புதிதாக சேர்க்கப்பட்ட நுகர்வோர் உரிமையாகும். இவை மனித வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துகிறது.

உங்களுக்கு தெரியுமா?

நுகர்வோர் பெயர்: திரு. சசிபூஷன், புதுடெல்லி
வங்கிக்கு எதிரான புகார்: பஞ்சாப் நேஷனல் வங்கி

புதுடெல்லி, K.G. மார்க், ECE ஹவுஸ்ல் உள்ள பஞ்சாப் நேஷனல் வங்கியில் சம்பளத்திற்காக கணக்கு வைத்துள்ளார். 2012, ஆகஸ்ட் 25ஆம் நாள் பஞ்சாப் நேஷனல் வங்கி தானியங்கி பணம் வழங்கும் எந்திரம் (ATM) ஒன்றில் பணம் எடுக்கும் முயற்சி குறித்து புகார் எழுப்பப்பட்டது. இரகசிய குறியீட்டு எண்ணாக இரண்டு இலக்க எண்ணை பதிவு செய்தார். சில நிமிடங்கள் வரை அவர் ATM செயல்முறைகளுக்காக காத்திருந்தார். மீண்டும் அதன் செயல்முறைகளில் பணம் எடுக்க முயற்சித்தார். ஆனால் அதன் செயல்பாடுகள் நின்றுவிட்டன. பின்னர் அவரின் கணக்கிலிருந்து ரூ.15,000 எடுக்கப்பட்டதாக ரசீது வெளிவந்தது. அவர் உடனே வாடிக்கையாளர் சேவை மையத்தை அழைத்து புகார் பதிவு செய்தார். புகார் எண்ணையும் பெற்றுக் கொண்டார். 2012, ஆகஸ்ட் 31ஆம் நாள் வங்கி அவரின் புகாரை நிராகரித்ததாக குறுஞ்செய்தி (SMS) அனுப்பியது. அவரின் நடவடிக்கை வெற்றிகரமாக செயல்பட்டு பணம் பெற்றதாக குறுஞ்செய்தியில் தகவல் கூறப்பட்டிருந்தது.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் ATM செயல்படவில்லை. வாடிக்கையாளர் முழுமையாக இரகசிய எண்ணை குறியீடு பதிவு செய்யவில்லை. அதனால் வங்கி மர்மமாக வாடிக்கையாளரின் கணக்கில் பணம் பெற்றுக் கொண்டதாக பற்று வைத்தது. இரண்டாவதாக வங்கி பரிவர்த்தனைகளின் காட்சிகளை காட்ட ஒப்புக்கொண்டு பின்னர் பின்வாங்கியது. இது ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளை அப்பட்டமாக மீறிய செயலாகும். வங்கியின் ATM ல் தோல்வியுற்ற பரிவர்த்தனைக்கு 7 நாட்களுக்குள் அதிகபட்சமாக பற்று வைப்பது மட்டுமல்லாமல் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகும் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளருக்கு வங்கியால் நிவாரணம் வழங்காத காரணத்தினால் வங்கி செலுத்த வேண்டிய தொகைக்கும் மற்றும் அத்தொகை செலுத்தாத ஒவ்வொரு நாளுக்கும் ரூ.100 அபராதம் செலுத்துமாறு நுகர்வோர் மன்றத்தால் ஆணை வழங்கப்பட்டது.

12th Commerce Tamil Unit 6.indd 159 27-03-2019 23:19:04

NCH கருத்துரை (தேசிய நுகர்வோர் குழுமத்தின் கருத்துரை / ஆலோசனை)

வாடிக்கையாளர் பஞ்சாப் நேஷனல் வங்கியின் (ATM பரிவர்த்தனை பதிவு செய்யப்பட்ட காட்சிகளையும்) பரிவர்த்தனை பதிவுகளை காண்பித்து ஒருமுறை நிரூபிக்க வைத்திருப்பார். இங்கே வாடிக்கையாளர் பணம் பெற்றிருந்தால் வங்கி பணம் எதையும் திருப்பி தரவேண்டியதில்லை. ஆனால், வாடிக்கையாளர் பணம் எதையும் பெறவில்லை என்று பதிவு செய்யப்பட்ட காட்சிகள் நிரூபிக்கின்றன. வாடிக்கையாளர் தவறாக பதிவு செய்யப்பட்ட ரூ.15,000/– பெறுவதோடு மேலும் கூடுதலாக ரூ. 5,000 அல்லது 2012 ஆகஸ்ட் 31ஆம் நாளிலிருந்து தினம் ரூ.100 பெற உரிமை பெற்றவராவார்.

திருமதி R. ஹேமலதா அவர்கள் பிரபலமான TV கண்காட்சி கடையில் L.E.D. தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை 5 வருட உத்தரவாதத்துடன் வாங்கி வீட்டில் பொருத்தினார். 18 மாதங்களுக்குப் பிறகு அத்தொலைக்காட்சியின் ஒலிபெருக்கியில் பிரச்சினை ஏற்பட்டது. திருமதி R. ஹேமலதா தொலைக்காட்சி விநியோகஸ்தரிடம் இதை பழுதுபார்ப்பு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். ஆனால் விநியோகஸ்தர் பழுதுபார்க்க மறுத்தார். நீங்கள் திருமதி R. ஹேமலதாவிற்கு வழங்கும் ஆலோசனை என்ன?

நமது சிந்தனைக்கு

மாணவர்கள் தங்கள் பள்ளியின் நுகர்வோர் கவுன்சிலின் நடவடிக்கைகளை பார்வையிட வேண்டும்.

எதிர்கால கற்றலுக்கு

மாணவர்கள் நுகர்வோர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை திரட்டுவதோடு நுகர்வோரின் உரிமைகளை தெரிந்துகொள்ள பின்வரும் இணையதள முகவரிகளை பார்வையிட வேண்டும்.

www.jagograhakjago.com

https://consumeraffairs.nic.in

கிழக்கு டெல்லியில் உள்ள உணவு விடுதியின் உரிமையாளர் ஒரு தண்ணீர் பாட்டில் அதிகபட்சவிலை ரூ.12க்கு மாற்றாக ரூ.34 தருமாறு கேட்டதற்கு, நுகர்வோர் அமைப்பிடம் பாதிக்கப்பட்ட நுகர்வோர் முறையிட்டார்.

கிழக்கு டெல்லி மாவட்ட நுகர்வோர் அமைப்பு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அக்குவாபினா தண்ணீர் பாட்டிலின் அதிகபட்ச (MRP) விலையான ரூ. 12க்கு அதிகமாக ரூ.34 ஐ கேட்டதனால் உணவு விடுதி உரிமையாளர் செய்த முறைகேடு காரணமாக ரூ.5,000/–ஐ அபராதமாக நுகர்வோருக்கு செலுத்த வேண்டும் என்று நுகர்வோர் அமைப்பினால் ஆணையிடப்பட்டது.

கலைசொற்கள்

நுகர்வோர் உரிமைகள், நுகர்வோர் கடமைகள், நுகர்வோர் பொறுப்புகள், ரொக்க ரசீது, பணக் குறிப்பானை

பயிற்சி

51SPJV

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் _____.

அ) அதிகமான இலாபம் ஆ) குறைவான இலாபம்

இ) நுகர்வோர் திருப்தி ஈ) சமுதாயத்திற்கு சேவை

2._____ என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்.

அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி

இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி

3. நுகர்வோரின் உரிமைகள் அவர்கள் கொண்டுள்ள நிலையில் _____ ஆகும்.

அ) அளவீடுகள் ஆ) விற்பனை அதிகப்படுத்துதல்

இ) பொறுப்புகள் ஈ) கடமைகள்

4. ஜான் F கென்னடி அவர்களின் கூற்றுப்படி பின்வருபவற்றில் நுகர்வோர் உரிமையல் இடம் பெறாதவை எது?

அ) பாதுகாப்பு உரிமை ஆ) தேர்ந்தெடுக்கும் உரிமை

இ) நுகரும் உரிமை ஈ) தெரிவிக்கும் உரிமை

12th Commerce Tamil Unit 6.indd 160 27-03-2019 23:19:04

5. நுகர்வோரின் பொறுப்பு என்பது அவர் பெற்றுள்ள _____ ஆவணமே பொருட்களை வாங்கியதற்கான அடையாளமாகும்.

அ) ரொக்க ரசீது ஆ) உத்தரவாத அட்டை

இ) இடாப்பு ஈ) மேற்காணும் அனைத்தும்

விடைகள்

1	இ	2	அ	3	இ	4	இ	5	ஈ

II. குறு வினாக்கள்:

1. தெரிவிக்கும் உரிமை (Right to be informed) பற்றி சிறு குறிப்பு வரைக.
2. பாதுகாப்பு உரிமை பற்றி நீவிர் புரிந்து கொண்டது என்ன?
3. ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
4. வணிகத்தின் தலையாய நோக்கங்கள் யாவை?
5. தரமுடைய பொருட்கள் வாங்கும்போது நுகர்வோர் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை?

III. சிறு வினாக்கள்::

1. நிவாரணத்திற்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிந்தது என்ன?
2. நுகர்வோர் உரிமைகள் – வரையறு.
3. ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்பு உரிமைகள் பற்றி நீவிர் அறிவது என்ன?

IV. பெரு வினாக்கள்:

1. நுகர்வோரின் உரிமைகள் யாவை?
2. நுகர்வோரின் கடமைகளை விளக்குக?
3. நுகர்வோரின் பொறுப்புகள் யாவை?

குறிப்பு நூல்கள்:

1. Modern Marketing – S.A. Sherlekar
2. Modern Marketing – R.S. N. Pillai and Bagavathi.
3. Marketing Management – Dr. C.B.Gupta and Dr. N.Rajan Nair
4. Marketing management – S.A. Sherlaker
5. Marketing Management – R.S.N.Pillai and Bagavathi

12th Commerce Tamil Unit 6.indd 161 27-03-2019 23:19:04